அனைத்திந்திய நூல் வரிசை

ஏணிப் படிகள்

தகழி சிவசங்கரன் பிள்ளை

தமிழாக்கம்
சி.ஏ. பாலன்

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

ISBN 81-237-2840-9

முதற் பதிப்பு 1977
மூன்றாம் பதிப்பு 1999 (*Saka* 1921)
© தகழி சிவசங்கரன் பிள்ளை, 1974
தமிழாக்கம் © நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா
Original: Eanippadikal (*Malayalam*)
Eanippadigal (*Tamil*)

ரூ. 75.00

வெளியீடு: இயக்குநர், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா
ஏ-5, கிரீன் பார்க், புதுதில்லி - 110 016

முன்னுரை

நாவல், மத்தியதர வர்க்கத்தினரின்—அல்லது பூர்ஷ்வா (முதலாளித்துவ) வர்க்கத்தினரின்—கலையுருவமாகத்தான் பிறவி எடுத்தது. மத்தியதர வர்க்கத்தினரின் உயர்வு தாழ்வுகள், கனவுகள், இவற்றின் சீரழிவு—ஆகியவற்றையே இந்தக் கலையுருவம் மீண்டும் மீண்டும் பிரதிபலித்து வந்திருக்கிறது. சமூகமென்ற பெரும் கோட்டையின் நடுவில் யுத்தத்துக்கு ஆயத்தமாக நின்ற தனி மனிதனே, பழைய நாவலின் இடையறாத பையக் கருத்து. பதினெட்டாம் நூற்றாண்டில் நடைபெற்ற தொழில் புரட்சியின் விளைவாக, இங்கிலாந்து, ஃபிரான்ஸ் ஆகிய நாடுகளில் புதியதொரு மத்தியதர வர்க்கம் உருப்பெற்றது; இன்றைய நாவல் இலக்கியம் பிறந்ததும் இந்நாடுகளில்தான். மாறுபட்ட சூழ்நிலையில், வாழ்வது என்பதே மத்தியதர வர்க்கத்தினருக்குச் சாகஸம் மிக்க ஒரு செயலாகிவிட்டிருந்தது. இந்தச் சாகஸங்களைச் சித்திரிப்பதில்தான் அன்றைய நாவலாசிரியர்கள் ஆர்வம் காட்டினார்கள். ராபின்ஸன் குரூஸோ, டான் க்விக்ஸாட், பிக்விக் ஆகியோர் இந்தச் சாகஸங்களின் பிரதிநிதிகளேயாவர்.

இலக்கியத்தில் தோன்றிய நாவல் என்ற இந்த நவீன இலக்கிய வடிவம் நம் நாட்டில் உதயமானபோது, அது புராணங்களின் சாயல் உடையதாக இருந்தது. மலையாளத்தில் எழுதப்பட்ட முதல் நாவலாகக் கருதப்படும் 'குந்தலதா' (1887), ஒரு புராணத்தின் பண்புகளை உடையதாகவே இருக்கிறது. அதில் பல சிறப்பம்சங்கள் இருக்கலாம்; ஆனால் கேரள நாட்டுப் பண்பாடு என்ற அம்சம் மட்டும் அதில் அறவே காணப்படவில்லை. அது கலிங்க நாட்டில் நடைபெற்ற ஒரு கதை என்று அந்த நாவலாசிரியர் நம்மை நம்ப வைக்க முயல்கிறார். கலிங்கம், அல்லது வங்கம், அல்லது மாளவம் ஆகிய எந்த ஒரு தேசத்தில் அது நடைபெற்றதாக இருந்தாலும் நமக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் கதை புனைய வேண்டுமென்ற நோக்கத்தைத் தவிர, அந்த ஆசிரியருக்கு வேறு எந்த நோக்கமும் இருந்ததாகத் தெரியவில்லை. இன்று எவரும் வாசிக்க விரும்பாததும், இலக்கிய வரலாற்றுப் பட்டியல்களில் மட்டுமே இடம் பிடித்துக் கொண்டிருப்பதுமான ஒரு நாவலாக 'குந்தலதா' விளங்குவதற்கு இதுவே காரணமாக இருக்கவேண்டும்.

அடுத்தாற்போல, குந்தலதாவை அடுத்து—1888ஆம் ஆண்டில் வெளிவந்த 'இந்துலேகா' என்ற நாவலை இன்றும் ஏராளமான மக்கள் விரும்பிப் படிக்கின்றனர். லார்ட் மீக்கன்ஸ்ஃபீல்ட் என்பவர் எழுதிய 'ஹென்ரீட்டா டெம்பிள்' என்னும் நாவலை முன்மாதிரியாகக் கொண்டே

இந்துலேகாவை அதன் ஆசிரியர் சந்து மேனன் உருவாக்கினரென்றாலும், அந்த நாவல் முழுக்க முழுக்கக் கேரளத் தன்மை கொண்டதாகவே விளங்குகிறது. பழையதொரு தாய்வழி உறவுக் குடும்பத்தின் கதையைத் தான் சந்து மேனன் அந்நாவலில் கூறுகிறார். வேறு எந்தச் சமூகத்திலும் நடைபெறாத ஒரு திருமண முறை, உயர் மட்டத்திலுள்ள, அன்றைய நாயர் குடும்பங்களில் நடைமுறையில் இருந்து வந்தது. ஜாதி உயர்வினை மட்டும் ஆதாரமாகக் கொண்டு நம்பூதிரிப் பிராமணர்களுக்கு நாயர் பெண்களை மணம் செய்து கொடுக்கும் முறையே அது. இப்படி மணந்து கொள்ளும் நம்பூதிரிகளில் பலர் வயோதிகர்களாகக்கூட இருப்பார்கள். அவர்களைப் பொறுத்த வரையில், இந்தத் திருமணம் வைதீகக் கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்ட ஓர் உறவு. அவர்கள் மனைவி வீட்டில் மிகவும் மதிக்கப்படுகின்ற விருந்தினர்களாக இருந்தார்கள். இந்தத் திருமண முறை அவ்விரு வகுப்பினரையுமே--குறிப்பாக அந்த வகுப்பைச் சேர்ந்த பெண்களை--சீரழிக்கத்தான் உதவிற்று என்பதைச் சமூக சீர்திருத்த வாதிகள் உணரவில்லை. உணர்ந்தவர்கள் பகிரங்கமாக அதைச் சொல்லவும் இல்லை. அவர்கள் மனத்திலே பதிந்துவிட்ட எண்ணங்களுக்குச் சக்தி மிக்க, மறைமுக வர்ணனைகளால் அழகியதோர் உருவம் கொடுத்தார் சந்து மேனன். அதுதான் இந்துலேகா!

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது அது மிகச் சாதாரணமான தொரு காதல் கதையாகவே தோற்றமளிக்கிறது. கதையைவிட எளிமையாக இருக்கிறது, அதைச் சொல்லப் பயன்படுத்தியுள்ள மொழி. ஓர் இலக்கியப் படைப்பினை உருவாக்குகிறோம் என்ற உணர்வே அவருக்கு இருக்கவில்லை என்று சொல்லத் தோன்றுகிறது. ஆனால் இந்த எளிமைக்கும் சாதாரணத் தன்மைக்கும் பின்னால் பிரமிப்பூட்டும் ஒரு வேகமும், என்றும் மங்காத ஒரு புதுமையும் மறைந்திருக்கின்றன. அதனால்தான் இன்றும் மக்கள் அந்த நாவலை ஆர்வத்துடன் படிக்கிறார்கள். அந்த நாவலில் சித்திரிக்கப்பட்டிருக்கிற பாத்திரங்கள் முக்கால் நூற்றாண்டுக்கு முன்னால் வாழ்ந்து மடிந்த மனிதர்கள் என்று நமக்குத் தோன்றுவதில்லை; மாறாக, நமது கிராமங்களில் ஆங்காங்கே இன்றுகூடப் பார்க்க முடிகிற, நமக்கு நன்கு அறிமுகமான சில மனிதர்களாகவே அவர்கள் காட்சி தருகின்றனர்.

மேற்கத்திய நாகரிகத்துக்கே உரிய அழகிய சில அம்சங்களைப் பலவந்த மாக இந்த நாட்டின் சூழலில் புகுத்தியிருக்கிறார் சந்து மேனன். பியானோ வாசிக்கிற ஒரு கதாநாயகியை எண்பது வருடங்களுக்கு முன்னால் கற்பனை செய்து பார்த்தார் அவர். இன்றைய நாவலாசிரியர்கள் தங்கள் கதா நாயகிகளை வீணைதான் வாசிக்கவைப்பார்கள்.

பஞ்சாலை, ஏலத் தோட்டம் ஆகியவைபற்றி இந்துலேகாவில் சொல்லப் பட்டிருக்கிறது. நாத்திக வாதத்தை ஆசிரியர் பகிரங்கமாக ஆதரிக்கா விட்டாலும், டார்வின், தாமஸ் ஹக்ஸ்லி ஆகியோரின் சிந்தனைகளையும்

கருத்துக்களையும் சர்ச்சை செய்திருக்கிறார். சுருங்கக் கூறின், சந்து மேனன் ஒரு புரட்சிவாதியாகவே இருந்திருக்கிறார்.

மலையாள நாவலாசிரியர்களிலேயே மிகப் பெரிய கற்பனைத் திறன் படைத்தவராயிருந்த சி. வி. ராமன் பிள்ளை (1858–1922), வரலாற்றுக் குக் கதை உருக்கொடுப்பதில்தான் தம் ஆற்றலைக் காண்பித்தார். ராமன் பிள்ளை ஒரு சீர்திருத்தவாதியாக இருக்கவில்லை. ஸ்ரீதனவாதியாக, ராஜபக்தராக, தம் ஜாதியைப்பற்றிப் பெருமையுள்ளவராக, பண்டைய அறநெறிகளைப் பின்பற்றுகிறவராக, வீரர்களை வணங்குபவராக இருந் திருக்கிறார். புதிய தலைமுறையினர் அவரை ஒரு பிற்போக்குவாதி என அழைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் சி. வி. ராமன் பிள்ளை அவருக்கு முன்னும் பின்னும் வாழ்ந்திருந்த, அல்லது வாழ்ந்து வருகின்ற, எந்த ஒரு நாவலாசிரியருக்கும் இல்லாத ஒரு திறன் படைத்தவராயிருந் தார்—அதுதான் ஒரே சமயத்தில் மூன்று காலங்களையும் பார்த்தறிய வல்ல கண்—all seeing eye. ஹென்ரி ஜேம்ஸின் வார்த்தைகள் இவை.

இருநூறு வருடங்களுக்கு முன்னேயுள்ள, நிகழ்ச்சிகள் நிறைந்த, திருவாங்கூரின் வரலாற்றைப் பெரும் பிரதாபசாலிகளான மாவீரர்களைச் சுற்றிப் புனையப்பட்ட, கதைகள் மூலம் வரைந்து காட்டினார் சி. வி. ராமன் பிள்ளை. கற்பனை வளம் மிக்க அந்தப் படைப்பாளியின் கண்ணெதிரில், புராதனமான நிகழ்காலம், ஆடை அணிகலன்களுடன் ஆடம்பர மேள தாளங்களுடன் நடனமாடியது. வியப்பைத் தருகின்ற எத்தனை எத்தனைக் காட்சிகள்! நிகழ்கால மென்னும் திரைக்குப் பின்னு லிருந்து வெளிப்பட்ட எத்தனை எத்தனை உக்கிரமான மூர்த்திகள்! மலையாளத்தில் மாபாணி (grand style) என்று ஒன்று உண்டானால் அது சி. வி.யின் பாணிதான். அவர் படைத்தது எல்லாமே மகத்தானவை; விரிவானவை. 'மார்த்தாண்டவர்மா', 'தருமராஜா', 'ராமராஜ பகதூர்' என்ற அந்த மூன்று படைப்புகளின் ஆழமும், வரலாற்றுப் பரப்பும், ஸ்காட்டையல்ல, டால்ஸ்டாயைத்தான் நமக்கு நினைவூட்டு கின்றன. குழந்தைபோல் தடுமாறித் தடுமாறி நடை பயின்றுகொண் டிருந்த மலையாள நாவல் இலக்கியத்தைப் பிரபஞ்ச இலக்கியத்தின் ராஜ தர்பாருக்கு அவர் அழைத்துச் சென்றார் எனலாம்.

இவ்விரு மாமேதைகளின் காலத்துக்குப் பிறகு பல வருடங்கள் வரையில் மலையாள நாவல் இலக்கியம் இரண்டாந்தர எழுத்தாளர்களின் விளை யாட்டு அரங்கமாக விளங்கியது. அப்பன் தம்புரான், கே. எம். பணிக்கர் முதலியோர் சில சரித்திர நாவல்களைப் படைத்தனர் என்றாலும், அவர்க ளால் சி. வி.யின் அருகில்கூட நெருங்க முடியவில்லை. 1930 ஆம் வருடத் துக்குப் பிறகுதான் புதிய சில அசைவுகள் தென்படத் தொடங்கின. புகழ்பெற்ற சிந்தனையாளரும், பத்திரிகை ஆசிரியருமான ஏ. பாலகிருஷ்ண பிள்ளை எழுதிய கட்டுரைகள் வாயிலாக, யதார்த்தவாதம், மனோ தத்துவம் போன்ற புத்தம் புதிய உத்திகளைப்பற்றி எழுத்தாளர்கள்

அறிந்துகொண்டனர். பாலகிருஷ்ண பிள்ளையின் மீடர் குழாமைச் சேர்ந்த சில இளம் எழுத்தாளர்கள் புதிய படைப்பு முறைகளைச் சோதித்துப்பார்க்கத் துணிந்து முன்வந்தனர். அவர்களில் ஒருவர்தாம் தகழி சிவசங்கரன் பிள்ளை. தொழிலாளர் இயக்கங்களிலே பங்கு பெற்றவரான கேசவதேவ், அவற்றின் வாயிலாகப் புதியதோர் இலக்கியப் பாதையை வகுத்துக்கொண்டார். பொட்டேகாட், பஷீர் ஆகியோர் மாறிவரும் காலத்தின் தவிர்க்க இயலாத தூண்டுதலால் சிறு கதைகளிலே புதிய உத்திகளைப் புகுத்திப் பார்க்க முயன்றுகொண்டிருந்தனர்.

இவர்கள் அனைவரும் சிறுகதைகளையும், குறுநாவல்களையுமே முதலில் எழுதினர். தகழியின் 'பதிதபங்கனும்', 'நியாயத்தின் பிரதிப் பயன்' ஆகிய கதைகள், நவீன உத்திகளாலும், உள்ளடக்கத்தின் விசேஷ குணாதிசயங்களாலும், சொல்முறையின் மேன்மையினாலும் மக்கள் கவனத்தை ஈர்த்தன. இவர்களைப் புகழ்ந்தவர்கள் இருந்ததுபோல இகழ்ந்தவர்களும் இருக்கத்தான் செய்தார்கள். நச்சு இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுகள், ஆட்சேபங்கள் பல கிளம்பின. தகழி மட்டுமன்றி, கேசவதேவ், பஷீர் போன்றவர்களும் இத்தகைய ஆட்சேபங்களுக்கு இலக்காயினர். இவர்களுடைய படைப்புகளிலே வறுமை, சமூகக் கொடுமை ஆகியவற்றின் சித்திரங்கள் சில சந்தர்ப்பங்களில் தேவைக்கதிகமான வண்ணங்களில் தீட்டப்பட்டவில்லை என்று சொல்ல முடியாது. இத்தகைய மிகைப்படுத்திக் கூறும் தன்மை, விக்டர் ஹ்யூகோ, எமிலி ஸோலா போன்றவர்களின் படைப்புகளில்கூட இருக்கத்தானே செய்கிறது?

மேற்சொன்ன நாவலாசிரியர்கள் எவருமே, பழங்காலத்து ஆசிரியர்களைப்போல, தங்கள் கதாபாத்திரங்களை வாழ்க்கை எனும் நாடகத்தின் துவக்கம் முதல் இறுதி வரையிலுமுள்ள எல்லாக் காட்சிகளையும் நடிக்க வைக்க முற்படவில்லை. சிறுகதையைவிடச் சற்றே அதிகமான விஸ்தாரத்தை இவற்றில் பார்க்கமுடியும், அவ்வளவுதான். ஏறத்தாழ 1945ஆம் வருடம் வரையிலும் நிலைமை இவ்வாறாக இருந்து வந்தது. பிறகு இலக்கியம் திசை மாறிச் சஞ்சரிக்கத் தொடங்கியது. முற்போக்கு இலக்கியம் உருவெடுக்கத் தொடங்கியது. விஷயங்களை விரிவாக, முன்னைவிடப் பகிரங்கமாக எடுத்துரைக்கலாம் என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. இந்தக் கால கட்டத்திலேதான் 'சாக்கடையிலிருந்து', 'இரண்டு படி', 'தோட்டி மகன்', 'குழந்தைப் பருவத் தோழி', 'விஷக்கன்னிகை' முதலிய புகழ்பெற்ற நாவல்கள் நமக்குக் கிடைத்தன. இந்த நாவல்கள் அனைத்திலுமே ஆசிரியர்களின் சொந்த அநுபவங்கள் பெருமளவில் கலந்திருக்கின்றன. வறுமை எனும் புதிய அம்சம் இந்த நாவல்களில்தான் முதல் முதலாகக் காட்சி தருவதை நாம் பார்க்கிறோம். நிக்ஷாக்காரன், நோட்டி, குட்டநாட்டு விவசாயத் தொழிலாளியான புலையன் ஆகியோர் இதற்கு முன்புள்ள காலகட்டங்களில் வெளிவந்த மலையாள நாவல்களில் இடம் பெறவில்லை. புதியதொரு வாழ்க்கை முறைக்காகத் தாகமுற்றுக்

குமுறி யெழுகிற தொழிலாளியும், விவசாயியும் சமூகத்தின் மேல் தட்டினை நோக்கி மெல்ல மெல்லக் கிளர்ந்தெழுந்து வரும் தோற்றத்தை இந்த நாவலாசிரியர்களே முதல் முதலில் வெளிக்காட்டினர். இந்தக் கைங்கரியத்தைச் சிறுகதைகள் வாயிலாக இவர்கள் ஏற்கனவே செய்த வர்கள்தாம். 'இந்துலேகா'விலிருந்து 'இரண்டு படி' வரையிலுமுள்ள தூரம், பிரமுக நாயர் குடும்பங்களின் மாடி வீட்டிலிருந்து விவசாயத் தொழிலாளியின் மண் குடிசை வரையிலுமுள்ள தூரமேயாகும்.

இங்குள்ள நாவல் இலக்கியப் பூர்ஷ்வா (முதலாளித்துவ) வாழ்க்கை முறையிலிருந்து புரட்டேரியன் (தொழிலாளி வர்க்க) வாழ்க்கை முறையை நோக்கி முழுதும் நடந்தேறிச் சென்றதென்று இதனால் அர்த்தம் கொள்ளக்கூடாது. இந்த நாவல் ஆசிரியர்களில் பெருவாரியினர் மத்தியதர வர்க்கத்தைச் சார்ந்தவர்களாக இருந்தமையால் இயற்கை யாகவே அந்த வர்க்கம் நாவலின் பின்னணியாகத் தோன்றிக்கொண் டிருந்தது. தகழி, பொட்டேகாட், உரூப் ஆகியோரின் நாவல்களிலே குறிப்பாக இந்தக் குணம்சத்தைப் பார்க்கலாம். ஆயினும், அவர்கள் புதிய அரங்கங்களை, சமூகத் துறைகளைக் கண்டுபிடிக்க நிரந்தரமாக முயன்றுகொண் டிருந்தனர். தகழி செம்பன் வர்களின் வாழ்க்கைத் துறைக்குள்ளும் (செம்மீன்), உரூப் மலபார் முஸ்லிம்களின் வாழ்க்கைத் துறைக்குள்ளும் (உம்மாச்சு), பொட்டேகாட் கோழிக்கோடு நகரத்தின் இருள் சூழ்ந்த கீழ்ப்பகுதிகளுக்குள்ளும் (தெருவின் கதை) நுழைந்து பார்த்தது இவ்வாறுதான்.

இந்த நாவல்களெல்லாம் வெவ்வேறு வகைகளில் இலக்கிய உலகிலே அரைவுகளை ஏற்படுத்தியிருக்கிற நிகழ்ச்சிகளாகப் பரிணமித்தன என்று சொல்வதில் தவறு இல்லை. ஒரு நாவலாசிரியருக்கு இரண்டு விதமான பார்வைகள் இன்றியமையாதவை எனச் சொல்லப்படுகிறது: பௌதீகமும் ஆன்மிகமுமான இரண்டு பார்வைகள். மேற்சொன்ன நாவல்களில் இவ்விரு பார்வைகளும் சிறப்பான முறையில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

தகழியின் 'செம்மீன்' நாவல் செம்படவர்களின் வாழ்க்கைப்பற்றிய ஒரு செய்திக் கதிர் (டாகுமெண்டரி) சித்திரமன்று. அவர்கள் வாழ்க்கை யின் எத்தனையோ துறைகளை அவர் அந்நாவலில் தொடவில்லை. அது அவசியமும் இல்லை. செம்மீன் செம்படவச் சமூகத்தைப்பற்றிய அடிப் படை உண்மையின் சாரம் என்று நம்மை நம்ப வைக்கத் தகழியால் முடிந்தது. அதுதான் அந்த நாவலின் வெற்றி. நான் குறிப்பிட்ட ஏனைய நாவல்களைப்பற்றியும் இதையே கூறலாம்.

உரூபின் 'சுந்தரிகளும், சுந்தரன்மார்களும்' என்ற படைப்பைப் பொறுத்தவரையில் ஒரு நகரல் திரைப்படத்தின் தன்மை இதில் அதிகம் காணப்படுகிறது. மலபாரில் நடைபெற்ற மாப்பிள்ளைக் கலவரத்தின் பின்னணியில் அங்குள்ள மக்களின் வாழ்க்கை எவ்வாறு சீர்குலைந்து தென்பதையும், அந்தச் சீர்குலைவிலே எத்தனையோ குடும்பங்கள் சின்ன

பின்னமாகி, எத்தனையோ நபர்கள் வேறு மதத்தைத் தழுவி மாறுபட்ட வாழ்க்கை முறையைத் தேடிக் கண்டுபிடித்தனரென்பதையும் உரூப் சித்திரித்துக் காட்டுகிறார். கண்ணிகள் அறுந்துபோகாமல், நேர்மையற்ற ஓட்டு வேலைகளைச் செய்யாமல், மனித மகிமையின் இனிமையுடன், மூன்று நான்கு தலைமுறையினரின் கதையை அவர் விவரித்துள்ளார். உரூபின் இந்த நவீனம், தேசச் சுதந்திரத்துக்குப் பின் படைக்கப்பட்ட மிகவும் அருமையான இலக்கிய சிருஷ்டி என்ற முறையில், இவ் வாசிரியருக்குச் சாகித்திய அகாதெமிப் பரிசைப் பெற்றுக் கொடுத்ததில் ஆச்சரியமில்லை.

* * *

சுதந்திரத்துக்கு முன்பே இலக்கிய அரங்கத்திலே வேரூன்றிவிட்டவர் களின் வரலாற்றையே இதுவரையில் சொல்லி வந்தேன். சுதந்திரத் துக்குப் பின் இலக்கிய அரங்கத்தில் காலெடுத்து வைத்த புதியதொரு தலைமுறை இருக்கிறது. இவர்களில் சிலர், நாவல் அரங்கத்தில் சினிமா நடிகர்களைப் போன்று நட்சத்திர மதிப்பைப் பெற்றவர்கள். எம். டி. வாசுதேவன் நாயர், 'பாரப்புரத்து' (மத்தாய்), கே. சுரேந்திரன், மலையாற்றூர் ராமகிருஷ்ணன், 'விலாஸினி' (எம். கே. மேனன்), ஜி. விவேகானந்தன், ஓ. வி. விஜயன், காக்கநாடன், முகுந்தன் ஆகி யோரையே நான் குறிப்பிடுகிறேன். மலையாளத்திலுள்ள அருமையான இருபது நாவல்களின் ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டால், அவற்றில் பெரும்பாலானவை மேற்சொன்னவர்களின் படைப்புக்களாகத்தான் இருக்கும் என்பது என் நம்பிக்கை. இன்னொரு முறையிலே கூறுவ தென்றால், 'இந்துலேகா' எழுதப்பட்ட காலகட்டத்துக்குப் பிறகுள்ள அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலகட்டத்தில் நமக்குக் கிடைத் திருக்கிற, இலக்கிய மதிப்பு வாய்ந்த நாவல்கள் எத்தனையோ, அத்தனை நவீனங்கள் கடந்து சென்ற பன்னிரண்டு ஆண்டுக் காலத்திலே நமக்குக் கிடைத்திருக்கின்றன என்று கூறலாம். இவர்களில் ஒவ்வொரு வரைப்பற்றியும் எடுத்துரைக்க நான் முயற்சி செய்யப்போவதில்லை. சில பொதுவான இயல்புகளைப்பற்றி மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

இரண்டாவது உலகப் போர் ஏராளமான வாலிபர்களை இராணுவ வாழ்க்கைக்கு அனுப்பிவைத்ததல்லவா? அவர்களிடமிருந்து இலக்கியத் துக்கு ஏதேனும் இலாபம் கிடைக்குமென்று அன்று யாருமே எதிர்பார்க்க வில்லை. ஆனால்—ஆச்சரியமென்றே சொல்லவேண்டும்—இராணுவ முகாம்களிலிருந்து அழகு பொருந்திய சில இலக்கியப் படைப்புக்கள், ஒவ்வொன்றாக வெளிவரத் தொடங்கின. முதலில் சிறு கதைகள், பின்னர் நாவல்கள்! அந்தப் படைப்பாளிகளில் முன்னணியில் இருப்ப வர்கள் பாரப்புரத்து, நந்தனார், கோவிலன் ஆகியோர்தாம். நந்தனரும், கோவிலனும் சற்றுக் கரடுமுரடான பாணியைக் கடைபிடித்தார்க

ளென்றால், பாரப்புரத்து போதையளிக்கிற எளிமையான நடையைக் கையாண்டார். ஒன்று காக்கித் துணிபோல் இருந்ததென்றால், இன்னொன்று நுரைத்தெழுகிற மதுபோல் இருந்தது. இந்த இராணுவக் கதைகள் முற்றிலும் புதியதொரு உலகத்தை அறிமுகப்படுத்தின. வேதனை அநுபவிக்கிற மனிதர்கள்; பிறருக்கு வேதனை அளிப்பதில் மகிழ்ச்சி காண்கிற இராணுவ அதிகாரிகள்; மூச்சுத் திணற அடிக்கும் அடிமைத்தனம் —ஆகியவை ஒருபுறம். மறுபுறம், அன்பு பெருகும் மனிதத் தன்மை, மனிதாபிமானம், இனிமையான அன்பின் அமுததாரை!

இந்தக் கதாசிரியர்கள் எழுதியவை அனைத்தும் இராணுவக் கதைகள் அல்ல. இன்று அவர்கள் இராணுவத்திலிருந்து பிரிந்து வந்து கிராம வாழ்க்கையுடன் ஒன்றிணைந்து வாழ்கிறார்கள். பாரப்புரத்தின் மிகப் புகழ் பெற்ற நாவல், 'அபநாழிக நேரம்' இராணுவக் கதையே அல்ல; கட்டுக்கோப்பான ஒரு குடும்பக் கதையாகும். வாழ்க்கையை வரவு செலவு கணக்கின் அடிப்படையில் பார்க்கிற சில மனிதர்கள் அன்பின் உன்னதமான உறவுகளைத் தகர்த்தெறிந்து அழிவின் ஆழக் குழியை நோக்கி விழுகிற சித்திரத்தை அந்த நாவலில் காணமுடியும்.

வாசகர்கள் எதிர்பார்ப்புடன் உற்று நோக்கிக்கொண்டிருக்கிற ஒரு நாவலாசிரியர், எம். டி. வாசுதேவன் நாயர். திறமையான ஒரு ஓவியத்தைக்காரன்போல, வாசுதேவன் நாயர் தம் ஒவ்வொரு படைப்பின் மூலமாகவும் புத்தம் புதிய கருத்துக்களையும் பாணிகளையும் மக்கள் முன் காணிக்கையாக வைப்பார் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர். குழந்தைப் பருவ வாழ்க்கையின் தாங்கொணா வேதனைகளும், நிறைவு பெறாத அபிலாஷைகளின் மூச்சுத் திணறல்களும் வாசுதேவன் நாயருடைய நாவல்களின் மையக் கருத்துக்களாகும். சமூகத்தையும், அங்கீகரிக்கப்பட்ட அறநெறிகளையும் புறக்கணித்துத் தான்தோன்றித் தனமாக அலைகிற சில வாலிபர்களை அநேகமாக, அவருடைய எல்லா நாவல்களிலும் காணமுடியும். அவர்கள் வாசுதேவன் நாயருடைய வேறு உருவங்களாக இருக்கலாம். உணர்ச்சியும் நளினமும் மிக்கக் கவிதை நடையையும், திரைப்படங்களை நினைவூட்டும் துரிதமான காட்சி மாற்றங்களையும் மலையாள நாவலுக்கு அறிமுகப்படுத்தியவர் வாசுதேவன் நாயர். ('நாலுகெட்டு', 'அசுரவித்து', 'மஞ்சு', 'காலம்' ஆகியவை அவருடைய முக்கியமான படைப்புக்கள்.)

நாவலை அறிவு பூர்வமான சர்ச்சைக்களனாகவோ அரங்கமாக மாற்றிய எழுத்தாளர் கே. சுரேந்திரன். சமுதாயம், காதல், திருமணம், பத்திரிகைத் தொழில், அரசியல், இலக்கியம், இசை ஆகிய பல விஷயங்களைப்பற்றிய சுவாரஸ்யமான சர்ச்சைகளினூடேதான் சுரேந்திரனுடைய நாவல் எப்போதும் முன்னேறிச் செல்கிறது. இவற்றில் முழு உருவத்துடன் திகழ்கிற கதாபாத்திரங்களும், பரபரப்பைத் தருகிற நிகழ்ச்சிகளும் உள்ளன. பி. விவேகானந்தன், மலையாற்றூர் ராமகிருஷ்ணன்

ஆகியோர் மக்களிடையே பெயரும் புகழும் படைத்த நாவலாசிரியர்கள் ஆவார்கள். ஏழை எளிய மக்களின் வாழ்க்கையைச் சித்திரிப்பதில் தலை சிறந்து விளங்குபவர் விவேகானந்தன். 'கள்ளு', 'கள்ளிச் செல்லம்மா' ஆகியவை கிராம வாழ்க்கையின் உண்மைகளை எடுத்துக்காட்டுவதற் காகக் குறிவைத்து வீசப்பட்ட வெளிச்சக் கற்றைகளைப்போல் தோன்று கின்றன (spotlight). ஆசையைவிடச் சோர்வையே அதிகம் எழுப்பும், துரதிருஷ்டம் பிடித்த நமது கிராமங்கள், அங்கே மங்கலான நிழல்களாக வாழ்ந்துவருகிற மனிதர்கள்—ஆகியவையே நம் நினைவிலே தங்கி நிற் கின்றன. ராமகிருஷ்ணன் பல துறைகளிலே சாதனை புரிந்துள்ள ஓர் எழுத்தாளர் ஆவார். மனோதத்துவம், கேலி அரசியல் முதலிய விஷயங் களை மிகத் திறமையுடன் தம் இலக்கியப் படைப்புக்களிலே அவர் புகுத்தி யிருக்கிறார். 'விலாஸினி' (எம். கே. மேனன்) மலேசியாவைச் சேர்ந்த ஒரு மலையாளியாவார். அந்த விசேஷக் குணாதிசயத்தைப் பிரகடனப் படுத்துகிற முறையிலேதான் அவருடைய முதல் நவீனம் தோன்றியது. கவிதை ததும்புகிற ஒரு பாணியிலே, அனேகத்து விஷயங்களையும் அலசி ஆராய்ந்து பார்த்தவாறு, நீண்ட கதைகளைச் சிறிதும் சிரமமின்றிச் சொல்லும் திறமையை அவர் வெளிக்காட்டியிருக்கிறார்.

இன்று திறமை மிக்க ஒரு கார்ட்டூனிஸ்ட் என்று அனைத்து இந்தியாவி லும் அங்கீகாரம் பெற்றுள்ள ஒ. வி. விஜயன், 'கஸாக்கின் இதிகாசம்' என்ற அபூர்வமான நாவலுடன் அன்று மலையாள இலக்கிய அரங்கத் திலே தோன்றியபோது, இலக்கிய உலகில் அது பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டது. மலையாள நாவலை மேற்கத்திய இலக்கியத்தின் நூதன ஆன்மிகவாதிகளிடம் அழைத்துச் சென்ற முதல் நாவலாசிரியர் விஜயன் தான் என்று சொல்லவேண்டும். மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது, காரணமில்லாத, தனக்குள்ளே குமுறுகின்ற துக்கத்தின் சூழலில் அகப்பட்டுத் தவிக்கிற, ஓர் இளைஞனின் அந்தரங்கமான ஆராய்ச்சி உருவத்திலுள்ள ஒரு வாழ்க்கைப் பிரயாணத்தையே இந்த நாவலில் விஜயன் சித்திரித்திருக்கிறார். மலையடிவாரத்திலுள்ள ஒரு பழைய கிராமத்திலுள்ள—ஹார்டியின் வெஸக்ஸ் போன்ற ஒரு கிராமம்தான் கஸாக்கு—ஒரு சில மனிதர்களின் நடுவிலே கதாநாயகன் போய்ச் சேரு கிறான். மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது யதார்த்தவாதத்தை (ரியலிஸம்) அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்ட ஒரு நாவலாக அது காட்சி தருகிறபோதிலும், அந்தக் கதை உண்மையில் குறியீட்டு முறையில் எழுதப்பட்ட, எக்காலத்துக்கும் பொதுவானதும், என்றும் நிலைத்திருக்கக் கூடியதுமான ஒரு படைப்பாகும்.

ஒரு கால கட்டத்தில் மலையாள இலக்கியத்தின் பலவீனமான பகுதிகளில் ஒன்றாக இருந்த நாவல், இன்று பலம் வாய்ந்ததோர் இயக்க மாக உருப்பெற்றிருக்கிறதென்பது இந்தச் சிறு வரலாற்றிலிருந்து புலப் படுகிறதல்லவா?

தகழியும் ஏணிப் படிகளும்

'செம்மீன்' (1956) என்ற நாவல் வழியாகத் தகழி சிவசங்கரன் பிள்ளை உலகப் புகழ் பெற்றார். முற்றும் ஒரு யதார்த்தவாதியாக அறியப்பட்டிருந்த தகழியின் காவிய அழகு பொருந்திய ஒரு காதல் கதைதான் இவ்வளவு புகழ் பெற்றது என்று எண்ணிப் பார்க்கும்போது சிறிது வேடிக்கையாகத்தான் இருக்கிறது. 'ஏணிப் படிகள்' (1964) அவரது பதின்மூன்றுவது நாவலாகும். ஏழைகளின் வாழ்வினைச் சித்திரித்துத் தழும்பேறிவிட்ட தகழியின் கை, இந்தத் தடவை அதிகாரவர்க்க உலகத்துக்குள்ளே புகுந்து சென்றிருக்கிறது. இந்த உலகைச் சித்திரிப் பதிலும் அவர் வெற்றியே பெற்றிருக்கிறார். திருவனந்தபுரத்திலுள்ள—ஒருவேளை அனைத்துத் தலைநகர்களிலுமுள்ள—அதிகார வர்க்கத்தின் மிகத் தெளிவானதொரு சித்திரத்தை இந்நாவலில் பார்க்கமுடியும். பொறுமை, வீண் பெருமை, பரஸ்பரத் துரோகம், ஆமாம் போடுவது போன்ற அனைத்தும் பின்னிப் பிணைந்து கிடக்கிற ஒரு பிரத்தியேக உலகம் அது. ஒரு சாதாரணக் கிராமீய இளைஞனை கேசவபிள்ளை, பி.ஏ. பட்டம் பெற்ற கையுடன் அந்த உலகத்திற்குள்ளேதான் நுழைந்து சென்றான். மிகவும் பாடுபட்டுத்தான் அவன் அந்த உத்தியோகத்தைச் சம்பாதித்துக்கொண்டான். அந்தச் சதுரங்க விளையாட்டிலே ஒவ்வொரு காயையும் அவன் மிகவும் கவனத்துடன் நகர்த்தினான். படிப்படியாக உயர்ந்து அவன் அரசாங்கத் தலைமைச் செயலாளராகிவிட்டான். சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல வேஷத்தை மாற்றுகிற அரசியல்வாதியும், எந்த ஓர் அரசியல்வாதியையும் திடீரென அங்கீகரிக்கிற அதிகாரியும், நமது காலகட்டத்திலே தோன்றியுள்ள இரண்டு புது ரகங்கள். கேசவ பிள்ளை இந்தப் புது ரகத்தைச் சேர்ந்த ஒரு 'மாதிரி மனிதன்' தான். மேலே ஏறிவிட்டால், மிதித்து ஏறப் பயன்படுத்தப்பட்ட ஏணியை உதைத்துத் தள்ள முயலுவது மனிதனின் பலவீனம். கேசவபிள்ளை அத்தகைய ஒரு மனிதனுவான். தனது பிடிக்குள் கிடைத்துவிட்ட ஒவ்வொரு நபரையும் அவன் தகுந்த முறையிலே பயன்படுத்தினான். காரியம் கைகூடியபோது அவர்களை எல்லாம் தயக்கமின்றி, உத்வேக மின்றி, சஞ்சலமின்றி அவன் உதறித் தள்ளிவிட்டான். மனைவி, காதலி, தாய் தந்தையர்கள், நண்பர்கள் ஆகியோர் எல்லாமே அவனுக்கு வெறும் கருவிகள் மட்டுந்தான். வெறும் உணர்ச்சியற்றதோர் இயந்திரம்போல் நடந்துகொள்ள அவனுக்குத் தெரியும். மனச்சாட்சி அவனுக்கு ஒரு பிரச்னையே அல்ல.

கேசவபிள்ளையின் மனைவி கார்த்தியாயினி வெறும் பட்டிக்காட்டுப் பெண். எழுத்தறிவில்லாதவள். ஆனால், படித்த பலரையும்விட உலக அநுபவம் உடையவள். எந்தச் சூழ்நிலையுடனும் அவள் ஒன்றி இணைந்து விடுவாள். இந்த நாவலிலுள்ள மனோகரமான பாத்திரப் படைப்புக்

களிலே ஒருத்தி கார்த்தியாயினி. அவளது பாத்திரப் படைப்பில் ஒரு 'டால்ஸ்டாயின்' எளிமை இருக்கிறது.

ஏணிப் படிகளின் மையக்கருத்து சமூக—அரசியல் அடிப்படையில் (இவை இரண்டும் சேர்ந்து) அமைந்தது. திருவாங்கூரில் நடைபெற்ற பொறுப்பாட்சிப் போராட்டத்திலிருந்து துவங்கி, கேரளாவில் ஏற்பட்ட கம்யூனிஸ்டு ஆட்சி வரையிலுமுள்ள கால் நூற்றாண்டின் வரலாறு அது! சம்பவங்கள் நிறைந்த, முக்கியமான மாறுதல்கள் ஏற்பட்ட, நிர்ணயிக்கப்படவேண்டிய ஒரு கால் நூற்றாண்டு! அதிகாரபூர்வமானதென்று சொல்லக்கூடிய முறையில், தகழி அந்தக் கதையைச் சொல்லியிருக்கிறார். பத்திரிகை ரிப்போர்ட் மாதிரி இருக்கிறது என்ற பழிச்சொல் ஏற்படக் கூடாதென்ற நோக்கம் ஆசிரியருக்கு இருந்திருந்தபோதிலும், சிற்சில இடங்களில் அத்தகையதொரு நிலைமையைத் தவிர்க்க அவரால் முடியவில்லை. ஆனால், ஆறுதல் அளிக்கிற ஒரு விஷயம் உண்டு.

கேசவபிள்ளை என்ற முக்கியப் பாத்திரத்தின் வாழ்க்கைப் பிரவாகத்துடன் தொடர்புகொண்ட முறையிலேதான், அரசியல் போராட்டங்கள் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. பாரபட்சமற்ற ஒரு பார்வையாளனைப் போல்தான் தகழி அரசியல் விமர்சனங்களை நடத்துகிறார். திவான் ஆட்சியாக இருந்தபோதிலும், காங்கிரஸ் ஆட்சியாக இருந்தபோதிலும், அல்லது கம்யூனிஸ்ட் ஆட்சியாக இருந்தபோதிலும் நிர்வாகச் சக்கரம், புரி ஜகந்நாதர் கோவில் ரதச் சக்கரம்போல் ஈவிரக்கமின்றி உருண்டு செல்கிறது. மக்கள் நலன்கள் மிதித்துத் தூளாக்கப்படுகின்றன. சந்தர்ப்பவாதிகளுக்கு எந்த அமைப்பிலும் இடம் கிடைத்துவிடுகிறது. ஏழைகள், புகார்களையும் விண்ணப்பங்களையும் எடுத்துக்கொண்டு நடந்து நடந்து அதிலேயே வாழ்க்கை முழுவதையும் வீணடித்துவிடுகிறார்கள். கோகோலின் 'இறந்த ஆத்மாக்கள்' (*Dead Souls*) எனும் நாவலைப் படித்துவிட்டுப் புஷ்கின் சொன்னாராம்: 'ஹா! ருஷ்யா எவ்வளவு துரதிருஷ்டம் படைத்த நாடு!' என்று. 'ஏணிப் படிகளை'ப் படித்து முடிக்கும்போது நாமும் அந்த வார்த்தைகளையே சொல்வோம்: 'நமது நாடு எவ்வளவு துரதிருஷ்டம் படைத்த நாடு' என்று.

மனோதத்துவ அடிப்படையிலுள்ள, தகழியின் சொல்திறன்தான் இந்த நாவலிலுள்ள எண்ணற்ற பாத்திரங்களை நம் நினைவிலிருந்து மறைந்து விடாமல் செய்கிறது. குறிப்பாக, பிரதான கதாபாத்திரங்களை! ஏணிப் படிகள் கேசவபிள்ளையின் கதையாக இருக்கிறபோதிலும், இரண்டு பெண்களின் கதையுமாகும். கார்த்தியாயினி, தங்கம்மா ஆகிய பாத்திரங்கள், ஒவ்வொரு முறையில் சிறப்பான குணம்சங்கள் கொண்ட படைப்புக்களாகும். மாறிவரும் சூழ்நிலைகளில் எல்லாம் மாறுபட்ட குணம்சங்களுடன் அவை காட்சி தருகின்றன. பொறுமை, தன்னடக்கம் ஆகியவற்றின் உருவகமான கார்த்தியாயினியிடமிருந்து முற்றும் மாறுபட்ட முறையிலே அமைந்துவிட்ட பாத்திரந்தான் தங்கம்மா. தணியாத

காமம், அடங்காத மோகம் ஆகியவை அவளுடைய குணாதிசயங்களாகும். ஆயினும், அவளைத் தகாத பாதையிலே சஞ்சரிக்கிறவள் என்று சொல்ல நாம் விரும்பமாட்டோம். கேசவபிள்ளையின் ஈவிரக்கமற்ற புறக்கணிப்புத் தான் அவளைத் தகாத பாதைக்கு இட்டுச் சென்றது. உண்மையான அன்பை அவளால் எந்நாளும் பெறமுடியவில்லை. தேவையை முன்னிட்டுப் பயன்படுத்தக்கூடிய ஒரு கருவியாகவே, கேசவபிள்ளை அவளைப் பயன் படுத்திக்கொண்டான். குமுறியெழுகிற காம உணர்ச்சி பெருக்கெடுத்து ஓடிற்றென்றால், அது அவளுக்குள்ளே மறைந்திருந்த, பிறரால் உணரப் படாத, ஒரு சக்தியின் காரணமாகத்தான். காவித் துணியாலும், ஜபதபங்களாலும் கட்டுப்படுத்த முடியாத அது கூலம்குத்திப் பாய்ந்தது. இயற்கையாக நடைபெறுகிற ஒரு டிராஜடி!

அறுபது வயது நிறைந்த தகழி இப்போதுங்கூட இலக்கியப் படைப்பிலே தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார். தம் மிகச் சிறந்த நாவல் இனிமேல்தான் எழுதப்பட இருக்கிறதென்று அவர் அடிக்கடி கூறி வருகிறார். அது உண்மையாகட்டுமென்று உண்மையுள்ளத்துடன் வாழ்த்துவோமாக!

எஸ். குப்தன் நாயர்

அத்தியாயம் 1

கல்யாண விஷயம்

அம்மா, மலர்ச்சி ததும்புகிற புன்னகையுடன் படிவாசலி*க் கடந்து வந்து வயலிலே இறங்கி, மகனை வரவேற்று அழைத்துச் செல்கிறாள். அப்பா வீட்டுத் திண்ணையின் தென் கோடியில் அமர்ந்தவாறு பல் துலக்கிக்கொண் டிருக்கிறார். அக்கா சமையலறைக் கதவோரமாக நிற் கிறாள். வடக்கு வீட்டு நாணிக்குட்டி வழக்கம்போல அன்றைய தினமும் சமையலுக்குத் துணைபுரிய வந்திருக்கிறாள். பார்த்தால் விசேஷமாக எது வும் நடைபெறுவதாகத் தெரியவில்லை. எதற்காகத் தன்னைத் தந்தி மூல மாக வரவழைத்திருக்கிறார்கள் என்று கேசவபிள்ளை வியப்படைந்தான்.

''எதுக்கம்மா, தந்தி அனுப்பினீங்க? ரொம்பமும் பயந்துட்டேன். அப்பாவுக்கு உடம்பு சரியில்லையோன்னு கவலையாயிருந்தது.'' அவன் அம்மாவிடம் விசாரித்தான்.

''எனக்கொன்றும் தெரியாது. அப்பாவிடம் கேள்.'' ஒன்றுமறியாத வள்போலக் கூறினாள் தாயார்.

அம்மாவின் முகத்தோற்றத்திலிருந்து ஒரு விஷயம் நன்றாக அறிந்து கொள்ள முடிந்தது. சங்கதி என்னவென்று அவளுக்குத் தெரியும்; அக்காவுக்கும் தெரியும். அக்காவின் முகத்திலேகூடப் புன்னகை தவழ் கிறது.

பல் துலக்கிய பின்னர் பப்புப்பிள்ளை கேசவபிள்ளையிடம் வந்தார்.

''நேற்றைக்கே நீ வந்துடுவேன்னு எதிர்பார்த்துக்கிட்டிருந்தோம்.''

''லீவு கிடைக்கணுமேப்பா. எங்க சூப்பிரண்டு ஒரு முரட்டு மனிதர். நான் தந்தியைக் காட்டினேன். இன்னைக்கு அப்ளிகேஷனை எழுதிக் கொடுத்துட்டு, லீவு அநுமதித்து வருமுன்னரே கிளம்பி வந்துட்டேன்'' என்று கேசவபிள்ளை சொன்னான்.

சிறிது நேரம் வரையில் யாரும் எதுவும் பேசவில்லை. குட்டியம்மா கணவரைப் பார்த்துக் கூறினாள்: ''அப்படீன்னு, அதைப்பற்றி அவன் கிட்டே சொல்றதுதானே?''

பப்புப்பிள்ளை ஒருமுறை முனகினார். இன்னும் சிறிது நேரங்கூடக் கடந்து சென்றது. அவர் மகனை நோக்கிக் கூறினார்: ''இந்த மாதம் முப்பதாம் தேதி விடிந்து ஐந்து நாழிகையளவில் உன்னுடைய

---

* கேரள வீடுகளின் அமைப்பின்படி வீட்டைச் சுற்றிலும் வேலியால் சூழப்பட்ட காம் பவுண்டு இருக்கும். இந்தக் காம்பவுண்டுக்குள் நுழைந்து வருவதற்காக விசேஷமான வாசலும், படியும், கதவுகளும்—வீட்டிலிருந்து தனிப்பட்டதாக—அமைக்கப்பட்டிருக்கும். இதுவே படிவாசல் அல்லது படிக்கட்டிடம் எனப்படுவது.

திருமணத்தை நடத்திவைக்கத் தீர்மானித்துள்ளோம். குட்டன்பிள்ளை யோட தங்கைதான் மணப் பெண்.''

ஒரு நிமிஷ நேரத்துக்குப் பின் அப்பா கேட்டார்: ''திருவனந்தபுரத்தி லேருந்து உன்னுடைய நண்பர்கள் எத்தனை பேர் வருவாங்க?''

''அதை இப்போ அவனுலே எப்படிச் சொல்லமுடியும்?'' என்றாள் குட்டியம்மா. பிறகு மகனை நோக்கித் தொடர்ந்து கூறினாள்: ''ரொம்பப் பேரை அழைச்சுக்கிட்டு வந்துடாதேப்பா. கல்யாணத்துக்குப் பதினஞ்சு நாள்தான் இருக்கு. பெரிய அளவிலே விருந்தை ஏற்பாடு செய்ய நேரமில்லே. அவ்வளவு ஆடம்பரமா நடத்தவும் திட்டமில்லே.''

மனைவி சொன்னது சரிதான் என்று அபிப்பிராயப்பட்டார் பப்புப் பிள்ளை. இதற்குச் சாதகமாகச் சில புதிய காரணங்களையும் கூறினார்: ''ரொம்பப் பேரை அழைச்சுக்கிட்டு வந்தாப் பிரயாணச் செலவை நீதானே ஏற்றுக்கவேண்டியிருக்கும்? அதனுலே கொஞ்சம் பேர் வந்தாப் போதும்.''

தொடர்ந்து பப்புப்பிள்ளை, திருமண வைபவத்தின்போது நடைபெற வேண்டிய காரியங்களைப்பற்றி விஸ்தரிக்கத் தொடங்கினார்: ''தாலி இங்கே தயாரிக்கப்படுகிறது; நுணிமணிகளும் வாங்கப்படுகின்றன. நீ வாங்கி வரவேண்டியதெல்லாம் இருநூறு எலுமிச்சம் பழங்கள் மட்டுமே. திருவனந்தபுரத்திலே நல்ல அருமையான எலுமிச்சம் பழத்துக்குப் பஞ்சமில்லை. கூடவே நான்கு ராத்தல் நல்ல புகையிலையும் வேண்டும்.''

''இவன்கிட்டே அதுக்கெல்லாம் பணம் இருக்குமா? பதினஞ்சு ரூபாய் தானே சம்பளம்? செலவு போக என்னதான் மிச்சம் இருக்க முடியும்?'' தாயார் குறுக்கே புகுந்து கேட்டாள்.

''அதுக்கெல்லாம் வேண்டிய பணத்தை நானே கொடுத்துடறேன்'' என்று அப்பா சொன்னார்.

கேசவபிள்ளை கற்சிலைபோல் நின்றுவிட்டான்.

பப்புப்பிள்ளை கஞ்சி குடிக்கச் சென்றார். அதைப் பரிமாறிக் கொடுக்கத் தாயாரும் அவருடன் சென்றாள்.

கேசவபிள்ளைக்குத் திருவனந்தபுரத்திலே ஒரு காதலி இருந்தாள்! அரசாங்கத்தின் தலைமையலுவலகத்திலுள்ள ரெவின்யூ இலாக்காவிலே தன் நாற்காலிக்குப் பக்கத்து நாற்காலியிலே அமர்ந்து பணிபுரிகிற தங்கம்மா என்ற பெண் குமாஸ்தாவின் காதலன், அவன்.

அக்கா கௌரியம்மா கேட்டாள்: ''பல் துலக்கினியா, தம்பீ?''

''இல்லே.'' கேசவபிள்ளை உணர்வு இல்லாதவன்போல் சொன்னான்.

''அப்படீன்னு பல் துலக்கிட்டு வந்து கஞ்சி சாப்பிடேன்!''

அவனுடைய மரத்துப்போன மனநிலையில் மாறுதல் ஏற்படத் தொடங் கியது.

''எனக்கு வேண்டாம் அக்கா!''

அந்த மறுப்பிலே உறுதி மிக்கதொரு சக்தி இருந்தது.

''அப்படீன்னு, காபி போட்டுத் தரட்டுமா?'' என்று அக்கா கேட்டாள்.

''வேண்டாம். நான் இப்பவே போயாகணும்.'' ஒரு நிமிஷத்துக்குப் பின் அவன் சொன்னான்: ''வேலே போயிடும்.''

கடுமையான வெறுப்பு, ஒருவிதமான எதிர்ப்பு ஆகிய இரண்டையும் தெளிவாகக் காட்டுவதுபோல் இருந்தன அந்த வார்த்தைகள்.

கேசவபிள்ளை திருவனந்தபுரத்திலே ஒரு பெண்ணின் காதலனாக இருந்து வரவில்லை என்றே வைத்துக்கொள்வோம். அவ்வாறுயின் இந்த வெறுப்பும் எதிர்ப்பும் அவனுக்கு ஏற்பட்டிருக்குமா? அவன் பி.ஏ. பட்டதாரி. அப்பா, அம்மா, அக்கா, மைத்துனர் ஆகிய அனைவரிடமும் எவ்வளவுதான் கடமைப்பட்டிருந்த போதிலும், திருமண விஷயத்திலே அவனிடம் ஒரு வார்த்தை கேட்கத்தான் வேண்டும். அவ்வாறு கேட்டிருந்தால், ஒருவேளை, அவன் அதை எதிர்க்காமல் இருந்திருப்பான். அந்த எதிர்ப்பு கௌரியம்மாவிடம் சந்தேகத்தைக் கிளப்பி விட்டது.

குட்டியம்மா கணவருக்குக் கஞ்சி பரிமாறிக் கொடுத்துவிட்டு மகனிடம் வந்தாள். மகனைக் கஞ்சி குடிக்க வற்புறுத்தினாள்: '' நீ கொஞ்சம் கஞ்சி குடிச்சு எவ்வளவு நாளாச்சுடா? நான் உனக்குக் கஞ்சி பரிமாறித் தந்து எவ்வளவு நாளாச்சுடா?''

தாயின் அந்த நிர்ப்பந்தத்துக்குப் பணிந்துவிட்டான் கேசவபிள்ளை.

அவன் கஞ்சி குடித்துக்கொண்டிருந்தான். அன்னை அவனோடு மிகவும் நெருங்கி அமர்ந்து திருமண விஷயமாகப் பேசிக்கொண்டிருந்தாள்.

''என் மகனே, இது நம்ப கடமையடா. எப்படீன்னு கேளு! குட்டன் பிள்ளை வந்து அப்பாகிட்டே இது விஷயமாப் பேசினாரு. 'போ'ன்னு நாம சொல்லமுடியுமா? அக்காளையும், குழந்தைகளையும் காப்பாற்றுகிறவரு. அந்த அன்பு மனிசரோட தங்கச்சிதானேடா, அந்தப் பொண்ணு! நானும், உங்கப்பாவும் அவரு சொன்னதை அப்படியே ஏற்றுக்கொண்டோமடா. இதிலே உனக்கு எந்தக் கெடுதலும் நேர்ந்துடாது அப்பனே! இது உனக்குப் பெரிய அதிருஷ்டத்தைக் கொண்டுவரப் போவுது.''

நீர் நிறைந்த கண்களோடு தாய் மகனை ஆசீர்வதித்தாள். பெண்ணைப் பற்றிக்கூட அந்தத் தாய்க்கு நிறையச் சொல்லவேண்டி இருந்தது.

''சாதுவான பொண்ணு; ரொம்பச் சாதுதாண்டா. நீ அவளைப் பார்த்திருக்கமாட்டே. பார்த்திருக்கியா? சின்னஞ் சிறுசிலே பார்த்திருப்பே; இல்லியா? இன்னொரு விசயம் கூடச் சொல்லவேண்டியிருக்கு. உங்கம்மாவுக்கு இந்த விசயத்திலே ரொம்பச் சந்தோஷம்தான்டா. அவள் உங்கப்பாவுக்கும், எனக்கும் வேளாவேளைக்குக் கஞ்சி காய்ச்சி ஊற்றிடுவா; குறும்புத்தனமாகவோ விஷமத்தனமாகவோ நடந்துக்கமாட்டா. காசும் பணமும் இல்லாட்டாக்கூட ராத்திரி சாப்பாட்டுக்காகக் கடையிலேருந்து அரிசி பொட்டலம் நீ கட்டிக்

கொண்டாந்து கொடுத்தாத்தான் உண்டு என்கிற நிலைமை இருக்கா தடா . . .''

அம்மா ஓயாமல் தொடர்ந்து பேசிக்கொண்டே யிருந்தாள். கேசவ பிள்ளை ஒரு வார்த்தைகூடப் பதில் கூறவில்லை. அவன் ஓர் இயந்திரம் போல் கஞ்சியை மொண்டு மொண்டு பருகிக்கொண் டிருந்தான். பருகி முடித்துவிட்டு யாரிடமும் எதையும் சொல்லிக்கொள்ளாமல் அவன் வெளியே போய்விட்டான்.

கேசவபிள்ளை கிளம்பிச் சென்றுவிட்டானென்று கௌரியம்மா சொன்ன பிறகே தாய் தந்தையர்கள் அறிந்துகொண்டனர். கௌரியம்மா, தனக்கு ஏற்பட்டிருந்த சந்தேகத்தை அன்னையிடம் சொன்னாள்; அப்பா விடம் சொல்லவில்லை. அவர் திருமண விஷயமாக மகனிடம் பேசிவிட்டு வழக்கம்போல் வெளியே சென்றிருந்தார்.

தாயாருக்குப் பயம் ஏற்பட்டுவிட்டது.

''அவன், அப்பா மூஞ்சியிலே கரி பூசிடுவானு, கௌரீ?'' அவள் மக ளிடம் கேட்டாள். ''எனக்குத் தெரியாது'' என்று மகள் கை விரித்தாள்.

ஆனால் கௌரியம்மா ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்பினாள்:

''இந்தத் திருமணத்துக்குச் சம்மதிக்கிறானு இல்லையாங்கிறதைப்பற்றி ஒரு வார்த்தைகூட அவன் சொல்லலையே.''

அப்போதுதான் குட்டியம்மாவுக்கு ஞானோதயம் ஏற்பட்டது.

''ஆமாம் . . . அவன் கிட்டே யாருமே அப்படிக் கேக்கவுமில்லையே.''

''அதைப்பற்றிக்கேட்டிருக்கணும்இல்லையா?''கௌரியம்மாகேட்டாள்.

குட்டியம்மாவின் சந்தேகம் உறுதிப்பட்டு வருகிறது. கவலை தருகிற எண்ணங்கள் பல அதிலிருந்து உருவெடுக்கின்றன.

''அப்போ . . . அவன் இந்தத் திருமணத்துக்கு வரமாட்டான் போலிருக்கு. ஒருவேளை இனிமே அவன் இந்த ஊரிலேயே காலெடுத்து வைக்காமல் இருந்துடுவானோ?''

''வந்தாக்கூட இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்கமாட்டானுங்கிறது திண்ணம்.'' அவளால் அழுத்தமாகச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

ஆறுதல் அடைவதற்கான காரியங்களைக் குட்டியம்மா ஆராய்ந்து பார்த்தாள்:

''வெட்கத்தினாலேதான் அவன் பேசாம இருந்துட்டானுனு ஏன் நினைச்சுக்கக்கூடாது?'' என்று அவள் கேட்டாள்.

''எப்படியிருந்தாலும் அவன்கிட்டே ஒரு வார்த்தை கேட்டுட்டு அப்புறம் இந்தக் கல்யாணத்தைப்பற்றிய வாக்குறுதி கொடுத்திருக்க லாம்; தேதியை நிச்சயம் பண்ணியிருக்கலாம்'' என்று கௌரியம்மா சொல்லி விட்டாள்.

குட்டியம்மா அது சரியென ஒப்புக்கொண்டாள். ஆனால், அன்று அதைப்பற்றி யாருமே நினைத்துப் பார்க்கவில்லை.

இரண்டு மணி நேரத்துக்குப் பின்பே பப்புப்பிள்ளை திரும்பி வந்தார். குட்டியம்மா கணவரை எதிர்பார்த்துக்கொண் டிருந்தாள்.

வாசல்படியைக் கடந்து வரும்போதே அவரை நோக்கி விரைந்து சென்று குட்டியம்மா கூறினாள்: ''ஆமாமாம் . . . எல்லாந்தான் தீர்மானிச்சுட்டீங்க. ஆனா பையன் கோவிச்சுக்கிட்டுத் திரும்பிப் போயிட்டான்.''

பப்புப்பிள்ளை அப்படியே நின்றுவிட்டார்: ''கோவிச்சுக்கிட்டுப் போயிட்டானா?''

''ஆமாம் . . . போயிட்டான்! திருவனந்தபுரத்துக்குத் திரும்பிப் போயிட்டான்!'' குற்றத்தைக் கணவர்மீது சுமத்தியவாறு அவள் மேலும் கூறினாள்: ''விதையை மடியிலே வச்சுக்க முடியும். மரமாயிட்டா அப்புறம் முடியுமா? அண்ணைக்கே நான் சொல்லலையா?''

பப்புப்பிள்ளைக்கு ஒன்றுமே புரியவில்லை. அவர் கேட்டார்: ''சுற்றி வளைக்காமெ விஷயத்தை நேரடியா வாய் திறந்து சொல்லித் தொலைக்கறதுதானே?''

குட்டியம்மா விட்டுக் கொடுக்கவில்லை: ''எம்மேலே எதுக்கு இப்படிச் சீறி விழறீங்க?''

பப்புப்பிள்ளை கேட்டார்: ''ஆமாம் . . . இங்கே என்ன நடந்தது?''

''பையன் ஆத்திரப்பட்டுக்கிட்டுப் போயிட்டான்.''

''என்ன சங்கதி?''

''கல்யாணத்தை உறுதிப்படுத்தவும், வாக்குறுதி கொடுக்கவும் அவன்கிட்டே ஒரு வார்த்தை கேட்டுட்டுத்தானே செஞ்சிருக்கணும்?''

பப்புப்பிள்ளையின் தலைக்குள்ளே ஒரு மின்னல் பாய்ந்தது: ''இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதமில்லேன்னு சொல்லிட்டுப் போயிட்டானா?''

''அப்படியொன்றும் சொல்லலை. உண்மையைச் சொல்லணும் இல்லையா? ஆனா அவன் போயிட்டான். எல்லாவற்றையும் மகள் கிட்டே கேட்டுத் தெரிஞ்சுக்குங்க! எனக்கென்றும் தெரியாது. நான் எல்லாம் அண்ணைக்கே சொன்னதுதான்.''

''நீ என்ன சொன்னே? பொடலங்காய்ன்னு சொன்னியா?''

பொறுமை இழந்தார் பப்புப்பிள்ளை. அவர் வீட்டை நோக்கி நடந்தார். எதை எதையோ முணுமுணுத்தவாறு குட்டியம்மா அவரை விடாமல் தொடர்ந்து வந்தாள்.

பப்புப்பிள்ளை கௌரியம்மாவை அழைத்து விசாரித்தார். முதலில் தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தையும், பின்பு நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் அவள் அவருக்குத் தெரியப்படுத்தினாள்.

''அவன் இனி எப்போ வருவான்னுச்சும் சொல்லிட்டுப் போனானா?'' என்று பப்புப்பிள்ளை அந்தப் பெண்களிடம் கேட்டார்.

''இல்லை, அவன் போனது யாருக்கும் தெரியாது'' என்று மகள் விடை அளித்தாள்.

''நீங்க யாரும் அதைப்பற்றிக் கேக்கவுமில்லே?''

அவர்கள் அதற்குப் பதில் சொல்லவில்லை. பப்புப்பிள்ளை ஆத்திர [illegible]

''அம்மாவும் சரி, மகளும் சரி, மகனும் சரி எல்லாருமே உருப்படாத கும்பல்தான். இதெல்லாம் எனக்கு முன்னமே தெரியும்.''

குட்டியம்மாவுக்குக் கோபம் வந்தது: ''எங்ககிட்டே ஏன் இப்படிக் கோவிச்சுக்கிறீங்க? இதென்ன கூத்து! நானுச்சு, என் தலைவிதியாச்சுன்னு பேசாமக் குந்திக்கிட்டிருந்தேன். இந்த விசயத்திலே எனக்கு எந்தவிதப் பங்கும் இல்லே. இதைப்பற்றிய பேச்சுவார்த்தைகள் நடந்துக்கிட்டிருந்தப்போ செய்யவேண்டியதெல்லாம் செய்யாமே போனதுக்கு, நானு ஜவாப்தாரி?''

பப்புப்பிள்ளை கையிலே வைத்திருந்த தடியை ஓங்கினார்: ''என்னடீ, உளர்றே? எதைச் செய்யாமெ விட்டுட்டேன்?''

குட்டியம்மா அடி விழுவதிலிருந்து தப்பித்துக்கொள்ள விலகிச் செல்லவில்லை. நின்ற இடத்திலேயே நின்றவாறு கூறினாள்: ''இப்படிப்பட்ட ஓர் ஆலோசனை வந்தப்பவே அவனை வரவழைச்சு அவன்கிட்டே யோசனை கேட்டுட்டுத் தீர்மானிச்சிருக்கணும். அப்புறம் வாக்குறுதி கொடுத்திருக்கணும். செய்யாமே விட்டது அதுதான்.''

பதில் சொல்லத் தெரியாத நிலையில், பப்புப்பிள்ளை கூச்சலிட்டார்: ''எனக்கு அது சம்மதமில்லேன்னு, என்னைக் கேக்க யார்?''

அவளும் படபடப்பாகவே பதில் கூறினாள்: ''அப்படீன்னு நல்லா அநுபவிச்சுடுங்க!''

''உருப்படாத கூட்டங்கள்! உன் குடும்பமே அப்படித்தானே?''

''என் குடும்பத்தைப்பற்றிப் பேசப்படாதுன்னு இன்னைக்கு நேற்றைக்கு அல்ல நான் சொல்றது.''

பப்புப்பிள்ளை நிலைமையைச் சரிவரப் புரிந்துகொண்டார். அவர் வீட்டு மனையின் மேற்குப் பகுதியிலுள்ள மாமரத்தடியில் சென்று வயிற்றைத் தடவியவாறு உலாவிக்கொண்டிருந்தார். குட்டியம்மா அவ்விடத்திலும் அவரைத் தனிமையிலே விட்டு வைக்கவில்லை.

பப்புப்பிள்ளை கேட்டார்: ''அவன் நமக்குத் துரோகம் செய்வானுடி?''

மனைவி ஆறுதல் கூறினாள்: ''அப்படிச் செய்வானு? அவன் நம்பக் கொழந்தையாச்சே! நம்ப மூஞ்சியிலேயே அவன் கரியைப் பூசிடுவானு?''

* * *

திருவனந்தபுரத்துக்கே திரும்பிவிடுவதென்று, யாரிடமும் சொல்லாமல் கிளம்பி வந்த கேசவபிள்ளைக்கு, அந்த வாயிற்படியைத் தாண்டி வந்தபோது, என்றென்றைக்குமாக அந்த வீட்டைவிட்டு வெளியேறி வருவதுபோன்ற எண்ணமே மனத்தில் தோன்றியது. அவ்வாறு யோசிக்கவில்லைதான்; இனிமேல் ஒருபோதும் திரும்பி வரமாட்டேன் என்று தீர்மானிக்கவும் இல்லைதான். ஆயினும் அத்தகையதோர் எண்ணமே மனத்தில் எழுந்தது. அந்த எண்ணத்தின் பிடியிலிருந்து தன்னை

விடுவித்துக்கொள்ள அவன் பெரிதும் முயன்று பார்த்தான். முயன்று பார்க்கப் பார்க்க உள்ளத்தை உலுக்குகிற காட்சிகளே அவன் மனக் கண்முன்னே தோன்றுகின்றன. பிறந்து வளர்ந்த வீட்டுக்கு இனிமேல் திரும்பி வரவேண்டாம்; பெற்றோர்களின் முகத்திலே இனிமேல் விழிக்கவேண்டாம் . . . ? ஒரு கணநேரம் திரும்பி நின்று, அந்த வீட்டை இன்னும் ஒருமுறைப் பார்த்துவிட்டுப் போகச் சொல்லி மனத்துக்குள் விருந்து யாரோ கட்டளையிடுவதாக அவனுக்குத் தோன்றியது. கால்கள் நகர மறுத்ததால் கேசவபிள்ளை ஒரு நிமிஷ நேரம் அங்கேயே நின்று விட்டான். பிரத்தைத் திருப்பக் கழுத்தினால் முடியவில்லை. ஏதோ நோயினால் அது மரத்துப் போய்விட்டதோ? இல்லை, அந்த எண்ணத் துக்கு வீட்டைவிட்டு வெளியேறிவிடுவதாகத் தோன்றிய எண்ணத் துக்கு—அடிமைப்பட அவன் மனம் சம்மதிக்கவில்லை.

கிட்டு மாமா எதிரே வருகிறார். தந்தையின் அத்தியந்த நண்பர். இருவரும் ஒரே வயதினர்தாம். இந்த காதுகளையும் தொட்டுத் தழுவி நிற்கும் தனது பெரிய வலையத் திறந்து கிட்டு மாமா ஒருமுறை சிரித்தார். அவருக்குக் கேசவபிள்ளையிடம் மிகுந்த அன்பும் பாசமும் உண்டு.

அவர் கேட்டார்: ''யாரு? கேசவனு? எப்போ வந்தே?''

கேசவபிள்ளை சிரிக்க முயன்றான்: ''காலையிலே, இப்போதான் வந்தேன். மாமா எங்கே போறீங்க?''

''தெருக்காட்டுக்குப் புறப்பட்டேன். அப்பா இருக்காரா, வீட்டிலே?''

அவன் உடனடியாகப் பதில் அளிக்கவில்லை: ''இருக்கார். இருக் கார்ன்னே நெனைக்கிறேன்.''

கிட்டுப்பிள்ளைக்கு, கேசவபிள்ளையின் அப்போதைய மனநிலை தெரிந் திருக்கவில்லை. எனவே அவனிடத்திலே ஏற்பட்டிருக்கிற மாறுதல் மாமாவின் கவனத்துக்கு வரவில்லை. அவர் நல்ல நோக்கம் கொண்டவர். பப்புப்பிள்ளையின் குடும்பத்தினுடைய நல்ல எதிர் காலத்தைமட்டும் விரும்புகிறவர். அவர் பேசத் தொடங்கினார்: ''கேசவா, இது ஒரு நல்ல கல்யாணம்ப்பா. அருமையான கல்யாணம்! அந்தப் பெண்ணின் ஜாதகமோ மிகச் சிறந்தது. அதாவது, இவ்வளவு சிறப்புடைய ஒரு ஜாதகத்தை இதுவரையில் நான் பார்த்ததே இல்லே. பஞ்ச மகாயோகங்களிலே மூணு, அதிலே தெளிவாத் தெரியுது. அவளோடு சேர்ந்து வாழுகிற ஆண் பின்னே மேலும் மேலும் சீரும் சிறப்பும் பெறுவான். அதிருஷ்ட ஜாதகம்னு அதையல்லவா, சொல்லணும்? அந்தமாதிரி ஒரு ஜாதகமும் உண்டோ? புருஷனுக்குத் தான் அந்தமே சித்திகளும் கிடைக்கப் போவுது.''

ஜாதகத்தைப்பற்றிச் சொல்லச் சொல்லக் கிட்டு மாமாவின் கண்களில் ஒளி படர்ந்தது. அவர் ஜாதகத்தைத் திடமாக நம்புகிறார்; அதிலே மகிழ்ச்சியடைகிறார். ஏன்? ஆனந்தம் கொள்கிறார் என்றே சொல்ல வேண்டும். அந்தகைய மனநிலையிலேகூட அந்தக் கிழவருடைய சந்தோஷத்தையும் ஆனந்தத்தையும் அவனால் பார்க்க முடிந்தது;

புரிந்துகொள்ள முடிந்தது. கிட்டு மாமா தன்மீது செலுத்துகிற அன்பைப்பற்றிக் கேசவபிள்ளைக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை. அந்தப் பெண்ணின் ஜாதகம் மோசமானதாக இருந்தால் மாமா அதை வாய் திறந்து சொல்லாமல் இருக்கமாட்டார். தனது குழந்தைப் பருவத்தி லிருந்தே அவன் அந்த அன்பைப் பார்த்திருக்கிறான்; அநுபவித்திருக் கிறான். அவர் தொடர்ந்து பேசலானார்:

''நீங்க, இந்தக் காலத்து இளைஞரெல்லாம் ஜாதகத்தை நம்ப மாட்டீங்க. ஆனா, ஜோசியமிருக்கே, அது பலிக்கத்தான் செய்யும்.'' பின்பு வாழ்த்துகிற கண்களுடன் கேசவபிள்ளையை நோக்கியவாறு அவர் கூறினார்: ''எல்லாம் உன் நன்மையைக் கருதியே நாங்க இந்த முடிவைச் செஞ்சிருக்கோம்.''

ஏதோ இரகசியம் கூறுபவர்போல் கிட்டு மாமா தன் குரலைத் தாழ்த் தியவாறு கேசவபிள்ளையின் காதருகில் முணுமுணுத்தார்:

''ஆனா, அந்தப் பெண்ணோட வாழ்க்கையிலே மனநிம்மதிங்கிற வண்ணைப் பார்க்கவே முடியாதப்பா. அதையும் அந்த ஜாதகத்திலே எழுதி வச்சிருக்காங்க.''

கேசவபிள்ளை எந்தப் பதிலையும் சொல்லவில்லை. அவரிடமிருந்து நழுவி விடவேண்டுமென்றே அவன் விரும்பினான். கிட்டு மாமா கேட்டார்:

''கருமாடியிலேருந்து யந்திரப் படகிலேதானே போகப் போறே?''

''ஆமாம்.''

''அப்படியானா போயி வாப்பா! இருபத்தொன்பதாம் தேதின்னு வச்சுக்காதே! இருபத்தெட்டாம் தேதியன்னைக்கே வந்து சேர்ந் திடணும். ஒரு விஷயத்தைமட்டும் நல்லா ஞாபகத்திலே வச்சுக்கோ! இது நம்ப உறவினர் வீட்டிலே நடக்கிற கல்யாணமாக்கும். செலவைச் சுருக்கிடணும். அந்த மங்கள காரியம் மட்டும் அழகா நடந்தேறிடணும். அதுவே போதும்.''

கிட்டு மாமா அவனுக்குச் சென்று வர விடையளித்தார்.

அந்தப் பெண்ணை மணந்துகொள்வதால் அதிருஷ்டம் ஏற்படும் என்கிறார். அந்த விஷயம் கேசவபிள்ளையின் மனத்திலே, எங்கேயோ ஓர் இடத்தில் சென்று பதிந்துவிட்டது. வாழ்க்கையிலே முன்னேற்ற மடைய, தெளிவாக இல்லாவிட்டாலும், தகுதியுடையதெனக் கருது கிற ஒரு திட்டம் அவனிடம் இருக்கிறது. அதன் மையமான புள்ளியாகத் திகழ்ந்து வருகிறாள் தங்கம்மா. அவள் மூலமாக வாழ்க்கை யில் முன்னேற்றம் ஏற்படலாம். இந்தப் பெண்ணின் புருஷன்கூடச் சீரும் சிறப்பும் பெற்றுவிடுவான் என்கிறார் கிட்டு மாமா. தங்கம்மா வுடன் உள்ள உறவை நிலைபெறச் செய்தவாறே, அதிருஷ்டக்காரியான இந்தப் பெண்ணின் கணவனுகவும் வாழ்க்கையில் முன்னேற்றமடைய லாம் என்று எண்ணலாமா?

'மற்றத்தின் வீட்டி'லுள்ள பாட்டியம்மா படிவாசலுக்கு வந்து கேட்டாள்: ''நீ போறியாடா, கேசவா?''

கேசவபிள்ளை அசட்டுச் சிரிப்புடன் கூறினான்: ''ஆம் . . . போறேன்.''

தெருவோரத்திலுள்ள அத்தனை வீட்டினருக்கும் அவனிடம் ஏதாவது ஒன்றைக் கேட்டறிய வேண்டும் என்றிருந்தது; ஆடவர்களுக்கும் பெண்டிருக்கும், அவ்வழியாக வருவோர் போவோர் அனைவருக்கும்! நாசமாப் போச்சு! சிலருடைய கேள்விகளுக்கு அவன் பதிலே சொல்ல வில்லை; சிலருடைய கேள்விகள் அவன் காதுகளில் விழவில்லை. இந்த அளவில் அனைவருடைய கவனமும் தன்மீது ஈர்க்கப்படுகிறதென்றால் அதற்குக் காரணம் அந்தத் திருமணந்தான் என்று அவனுக்குத் தோன்றியது.

படகுத் துறையில் சிறிது நேரங்கூடக் காத்து நிற்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. சென்றதும் படகு வந்துவிட்டது. பெரிய இரும்புப் படகு. அவன் அதிலே ஏறிக்கொண்டான்.

யந்திரப் படகு நகர்ந்தது. என்றென்றைக்குமாக வீட்டைவிட்டு வெளியேறி வருகிறேன் என்ற எண்ணம் எங்கிருந்தோ ஒரு கரிய நிழல் போன்று மீண்டும் ஊர்ந்து வந்தது. இதுதான் இவ்வழியாகக் கடைசிப் பிரயாணம் என்று அவனுக்குத் தோன்றியது. இனிமேல் இந்த வயலையும், ஏனைய இடங்களையும் ஒருபோதும் பார்க்கவேண்டி இராது. படகு நகர்ந்து சென்றுகொண்டிருக்கிறது. படகைக் கரையோரமாகக் கொண்டுசென்று நிறுத்த வேண்டுமென்று சொல்லலாமா? இங்கே இறங்கி விடவேண்டும். பாதிலே பிரயாணம் வேண்டாம்.

உள்ளத்தை உலுக்குகிற அந்த எண்ணத்திலிருந்து தப்பித்துக் கொள்ள அவன் மீண்டும் முனைந்து பார்க்கிறான். எங்ஙனம் தப்பித்துக் கொள்வது? வேறு எந்த எண்ணத்தைத்தான் தாவிப் பிடிப்பது? இந்தக் கரிய நிழலிலே வேறு எந்த எண்ணமும் தங்கி நிற்காது.

படகிலே பிரயாணிகளாக மிகச் சிலரே இருந்தனர். மிகப் பெரிய அதன் ஒரு மூலைப் பகுதியிலே நான்கு மனிதர்கள் அமர்ந்து சீட்டாடிக் கொண்டிருந்தனர். சிறிது தூரத்திலே ஒரு கிழவர் தன்னந்தனியாக அமர்ந்திருக்கிறார். பார்வையில் பப்புப்பிள்ளையின் பருவத்தினர். எதையோ நினைத்துக்கொண்டிருக்கிறார். முகத்திலே கவலைக் குறி தோன்றுகிறது. இன்னும் கவனமாகப் பார்த்தால் அவர் சோர்வடைந் திருப்பது தெரியவரும். சிரிப்பு என்பது என்னவென்று வாழ்க்கை யிலேயே அறியாதவர். அவருடைய சோர்வுக்குக் காரணம் என்ன? எந்தப் பிரச்னைதான் அந்த முகத்திலிருந்து சிரிப்பைத் துடைத்து மாய்த்துவிட்டது?

தனிமையிலே அமர்ந்திருந்த கேசவபிள்ளையை அந்த வயோதிகர் உற்றுப் பார்த்தார். அவர் கேட்டார்: ''உனக்குச் சீட்டாடத் தெரியாதா?''

தெரியும் என்றான் கேசவபிள்ளை.

''அப்புறம் ஏன் அவங்களோடு சேர்ந்து விளையாடாமே இருக்கிறே?''

''ஓ . . . விளையாடலே . . .''

''ஆம்; அது நல்லதுதான்'' என்றார் பெரியவர். அவர் மடியிலிருந்து ஒரு பொட்டலத்தை வெளியில் எடுத்தார்; அதை அவிழ்த்தார். அதற் குள்ளே வெற்றிலை, பாக்கு, புகையிலை ஆகிய பொருள்களும், ஒரு சிறு கத்தியும், ஒரு வெள்ளிப் பணமும், அரை ரூபாய் மதிப்புடைய பழைய திருவாங்கூர் நாணயத் துட்டுக்களான 'சக்கர'ங்களும் இருந்தன. அவ்வளவுதான்.

''பெரியவர் எங்கே போறீங்க?'' என்று கேசவபிள்ளை கேட்டான்.

''கொல்லத்துக்கு.''

''எதுக்கு?''

சிறிதுநேரம் வரையில் அவர் பேசவில்லை. பாக்கைத் துண்டித்துக் கொண்டிருந்தார். பிறகு சொன்னார்:

''அங்கேதான் என் மகன் . . .''

சொல்வதற்கு ஒரு பெரிய கதை அவரிடம் இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. அங்கேதான் தன் மகன் என்று சொல்லி விட்டுப் பேச்சை அத்துடன் அவர் முடித்துவிடப் போவதில்லை.

சிறிது நேரத்துக்குப் பின்னர் அவர் பேச்சைத் துவக்கினார்:

''எங்களுக்கு ஒரே ஒரு மகன்தான். அவனுக்கு அங்கேதான் வேலை, ரெயில் நிலையத்திலே. நாலு மாசமா அவன் கிட்டேருந்து கடிதம் இல்லே. அவன் அம்மா உடம்பு சரியில்லாமப் படுத்திருக்கிறு. பார்த்துட்டு வரலாம்னு போறேன்.''

வெற்றிலையையும் பாக்கையும் வாய்க்குள்ளே போட்டுக் கடித்து மென்ற வாறு, ஒரு புகையிலைத் துண்டைக் கையிலெடுத்துக் கொண்ட பின், அவர் அந்தப் பொட்டலத்தைக் கவனமாகக் கட்டி வைத்தார். வாழ்க்கையின் ஓர் உண்மை தன் முன்னே உருவெடுத்து நிற்பதுபோல் கேசவபிள்ளைக்குத் தோன்றியது. அவன் அந்த வயோதிகரிடம் பல விஷயங்களைக் கேட்டு அறிந்துகொள்ள ஆவல் கொண்டான்.

''மகன் பணம் அனுப்பி வைத்துக்கொண் டிருக்கிறானு?''

உண்மையில் கேட்கவேண்டுமெனக் கருதிய கேள்வி அது அல்ல. வேறு என்னவோதான். ஆனால், அது என்னவென்று சரியாகப் புலப்பட வில்லை. ஆயினும் அந்தக் கேள்வியே சில விஷயங்களை வெளியே கொண்டுவர உதவியது.

''முந்தியெல்லாம் அனுப்பிக்கிட்டிருந்தான். அதனாலே பார்த்தான் நாங்க உயிர் வாழ்ந்து வந்தோமப்பா. ஆனால், அதுக்குள்ளே அவன் ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டான். வாலிபத்துக்கு வந்தா அப்புறம் கல்யாணம் பண்ண வேண்டியதுதானே? அவனுவே பொண்ணையும் தேடிப் புடிச்சுக் கல்யாணத்தைப் பண்ணி முடிச்சுட்டான்.''

பெரியவர் பொட்டலத்தை மடியிலே வைத்துக்கொண்டார். அவரை யனிடம் அந்தத் தந்தைக்கு இப்போதுகூட அநுதாபம் இருந்து வருகிறது.

''அவனுலே தாங்கமுடியலே. மூணு கொழந்தைகள். அவங்களைக் காப்பாத்ற வேணுமா? கிடைக்கிற துட்டு அவனுக்குப் பத்தாது. முன்னேப் போல எங்களுக்கு அனுப்பிவைக்க முடியறதில்லே.''

அவருக்கு ஒரு விஷயத்தில் மட்டுந்தான் கவலே.

''அவனேப் பார்க்கக் கண் துடிக்குது. பார்த்து ஏழு வருஷமாச்சு. காசும் பணமும் தரவேணும். ஒருமுறை வந்து பார்க்கக்கூடாதா?''

''வந்து பார்க்காமல் இருக்க ஏதாவது காரணம் இருக்கா?'' கேசவ பிள்ளே கேட்டான்.

வயோதிகர் ஒருகணம் சிந்தித்துவிட்டுக் கூறினர்: ''இருக்குன்னும் சொல்லலாம்; இல்லேன்னும் சொல்லலாம். அது அப்படித்தான். அந்தக் கல்யாணம் அவனேட அம்மாவுக்கு அவ்வளவாப் புடிக்கலே. அவ வந்து, அவ அண்ணனேட பொண்ணேத்தான் அவன் கட்டிக்கணும்னு விரும்பினு. ஆனுக்கூட நான் அந்தக் கல்யாணத்துக்குப் போயிருந்தேன்.''

திடீரென ஒரு சித்திரம் கேசவபிள்ளேயின் மனக்கண்களுக்கு முன்னுல் வந்து நின்றது. சில வருஷங்களுக்குப் பிறகு, தன் தந்தையான பப்புப்பிள்ளே வாய்க்குள்ளே வெற்றிலேச் சாறுடனும், கையிலே பதினெட்டு 'சக்கிர'ங்களுடனும் தன்னேத் தேடி, இந்த வயோதிகரைப் போல், இதே படகிலே வருவதுபோன்ற ஒரு சித்திரம்! ஏன் அவ்வாறு நிகழக்கூடாதோ? அவன் கண்களே இறுக மூடிப் பார்த்தான். ஆனுல், அந்தச் சித்திரம் மட்டும் அவன் கண் முன்னுலிருந்து மாய்ந்து மறைய வில்லே.

வயோதிகர் தொடர்ந்து ஒரு கேள்வியைப் போட்டார்: ''அவளுக்கு —என் மகனேட மனேவிக்கு—எங்ககிட்டே அன்பும் ஆதரவும் ஏற்பட ஏதாச்சும் இருக்கா?''

கேசவபிள்ளே சுயமாக ஒரு கேள்வியைப் போட்டுப் பார்த்தான்: 'தங்கம்மாவுக்கு இருக்குமா?'

பெரியவர் தம் கேள்விக்குப் பதிலுரைத்தார். அது கேசவபிள்ளேயின் கேள்விக்குக்கூடப் பதிலாக அமைந்தது.

''அன்பு இருக்கும்னு சொல்ல முடியாது, இருக்காதுதான்.''

படகிலுள்ள வேலேக்காரன் உரத்த குரலில் கூவினன்: ''தோட்டப் பிள்ளி! தோட்டப்பிள்ளி! இறங்க ஆள் இருக்கா?''

கேசவபிள்ளே சுயநினேவு இழந்தவனேக் கூறிவிட்டான்: ''இருக்கு!''

படகு கரையோரத்தை அணுகியது.

பெரியவர் கேட்டார்: ''நீ இங்கே இறங்கப் போறியா, தம்பி?''

''ஆமாம்.''

இப்படியாக, கொல்லத்துக்கு டிக்கெட் வாங்கிய கேசவபிள்ளே தோட்டப்பிள்ளியில் இறங்கிவிட்டான்.

அத்தியாயம் 2

காதலும் சிவப்பு நாடாவும்

தாய் தந்தையர் அரும்பாடு பட்டுத்தான் கேசவபிள்ளையைப் பி.ஏ. பட்டதாரியாக்கினர். வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி அவனைப் படிக்க வைத்தனர். திருவனந்தபுரத்திலுள்ள ஒரு கல்லூரியிலேதான் அவன் படித்துத் தேறினான். பரீட்சையின் முடிவு தெரிந்ததும், ஏதாவது வேலை கிடைக்குமா என்று அவன் மீண்டும் திருவனந்தபுரத்துக்கே சென்றுவிட்டான்.

மனுக்கள் பலவற்றை அனுப்பிப் பார்த்தான். அதிகாரம் படைத்த எல்லா உத்தியோகஸ்தர்களுடைய அலுவலகங்களின் வாசற்படிகளிலும் ஏறி இறங்கினான். துணையில்லாதவன்; சிபாரிசு செய்ய யாரும் இல்லை. இதே சந்தர்ப்பத்தில்தான் அவனுடைய சகமாணவர்களில் சிலருக்கு வேலை கிடைத்துக்கொண்டிருந்தது. வகுப்பிலே மிகவும் உதவாக்கரை எனப் பெயர் பெற்ற ராமசந்திரன் நாயர் அரசாங்கத்தின் தலைமை அலுவலகத்திலே சீனியர் கிளார்க்காக நியமிக்கப்பட்டானென்ற செய்தி பரவியது. பிலிப்பு பணத்தைக் கொடுத்துத்தான் வேலையைப் பெற்றுக் கொண்டான். அவனும் அதே அலுவலகத்திலேதான். ஏதோ ஒரு பிரமுகரின் மகளை மணந்துகொள்வதாக ஒப்புக்கொண்டதனால்தான் பரமேசுவரன் நாயர் சர்க்கார் சர்வீஸிலே புகுந்தான். இன்னொரு சகமாணவனாக இருந்த ராகவன் நாயரைப் போலீஸ் இன்ஸ்பெக்டர் உடையில் புத்தன்சந்தையிலே கேசவபிள்ளை பார்த்தான். பிரசாதும், அப்துல்லாவும் பி.எல். படிக்கச் சட்டக் கல்லூரியிலே சேர்ந்து கொண்டனர். கேசவபிள்ளையைப் போன்று மனுக்களை அனுப்பிவிட்டுப் பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறவர்கள் ஏராளமாக இருந்து வருகிறார்கள். நளினாட்சன், ரவீந்திரன் . . . இத்தியாதி. ஆனால் அவர்களில் பெரும்பாலோருக்குச் சிபாரிசு செய்யப் பல நண்பர்கள் உண்டு. சின்னஞ்சிறு வேலைகள் கிடைத்ததனால் திருப்தியடையாதவர்களாக இருக்கிறவர்களைக்கூடக் கேசவபிள்ளைக்குத் தெரியும்.

நந்தன்கோடு என்ற இடத்திலுள்ள ஒரு தெரு மூலையிலே ஒரு சிறிய மண் குடிசையிலே லட்சுமியம்மாளும், அவளுடைய கணவரான சிவன்பிள்ளையும் சேர்ந்து ஒரு சோற்றுக் கடையை நடத்திக்கொண்டிருந்தனர். இழைக்கப்படாத மாமரப் பலகைத் துண்டு ஒன்றின்மீது அந்த வியாபார ஸ்தாபனத்தின் பெயர் எழுதி வைக்கப்பட்டிருந்தது. 'ஓம் சிவமயம் லட்சுமி ஓட்டல்!' கண்காட்சிச்சாலையில் பணிபுரிகிற

சில கீழ்த்தரச் சிப்பந்திகள், சாலைபோடும் வேலையில் ஈடுபட்டிருக்கிற வர்கள் போன்றேரே அந்த ஓட்டலிலே தங்கிவந்தனர். வேலையிலிருந்து நீக்கப்பட்டு, அதைத் திரும்பப் பெறுவதற்காகக் கோட்டயத்திலிருந்து வந்திருந்த ஒரு போலீஸ்காரனும் அங்கே தங்கி வருகிறன். இரண்டு இடங்களில் டியூஷன் சொல்லிக் கொடுத்து, அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தினல் நாட்களைக் கடத்திக்கொண் டிருந்தான் கேசவபிள்ளை.

மாணவனக இருந்தபோதுகூட அவனுக்கு அரிய பெரிய ஆசைகளோ, அபிலாஷைகளோ இருந்து வரவில்லை. எத்தகைய அந்தஸ்தையும் அடையவேண்டுமென்ற கனவுகளிலே அவன் சஞ்சரிக்கவில்லை; யோசிக்கவு மில்லை. ஆனல், அன்று அவனுடைய நண்பர்களில் பலர் அத்தகைய கனவுலக ஜீவிகளாக வாழ்ந்துவந்தனர். அவர்கள்கூட இப்போது வேலைதேடியலைந்துகொண் டிருக்கின்றனர். ஆனல், கேசவபிள்ளைக்கு அது வாழ்க்கைப் பிரச்னையாகிவிட்டது. அத்தகைய நிலைமை அவனுக்கு ஏற்பட்டுவிட்டது. அரசாங்கத்தின் தலைமைச் செயலாளராக இருந்து வருகிற திரு மேனன் அவர்கள் ஒரு நல்ல மனிதர் என்று, சிவமயம் லட்சுமி ஓட்டலில் தங்கி வந்த ஒரு நபர் அவனிடம் சொன்னர்.

அன்றைய தினத்திலிருந்து அவன் 'பார்க் வியூ'*வின் வாசலைக் காவல் புரியத் தொடங்கினன். தினசரி காலையிலும், மாலையிலும் அவன் அங்கே சென்று நிற்பான். தலைமைச் செயலாளர் அவ்வழியே வரும் போதும் போகும்போதும் அவரைச் சிரம் குனிந்து கும்பிடுவது அவனுடைய வழக்கமாகிவிட்டது. ஒரு நாள் அந்தப் படிவாசலைக் காவல் புரிந்து வருகிற ஒரு போலீஸ்காரன் அவனிடம் கூறினன்: ''கெட்டியாப் புடிச்சுக்கோ தம்பீ. அவர் ஒரு நல்ல மனிசர். அன்பு மனசு கொண்டவரு. சில சமயங்களிலே கோவிச்சுக்குவாரு. ஆனு காரியம் கைகூடும்ப்பா.''

நம்பிக்கை வளர்ந்தது கேசவபிள்ளைக்கு. வேறு ஒரு போலீஸ்காரன் ஒரு நாள் அவனுக்கு எச்சரிக்கை விடுத்தான்:

''நீ நிக்கறதெல்லாம் சரிதான். எசமானுக்கு ஆத்திரம் வந்து உன்னை இங்கிருந்து புடிச்சுத் தள்ளிவிடச் சொன்னு அப்புறம் நாங்களே மாறிடுவோம். இந்த அன்பையெல்லாம் அப்போது எங்களிடம் பார்க்க முடியாதுப்பா.''

இளைஞனை ஒரு காவலன் மிகக் கடுமையானவன். அவன் சொன்னன்:

''வேலை கிடைக்க நீ கடைப்பிடிக்கிற தந்திரம் வெகு ஜோராயிருக்கே. சொல்லி வைக்கிறேன், கன்னம் வீங்கிப் போறதுக்கு முன்னலே இந்தத் தந்திரத்தை விட்டுவிடு!''

ஆயினும், முதலிலே தன்னிடம் பேசிய போலீஸ்காரனின் வார்த்தை களையே அவன் பின்பற்றி நடந்தான்.

---

* ''பார்க் வியூ''—சீஃப் செக்ரடரி (தலைமைச் செயலாளர்)யின் பங்களா.

ஒரு நாள் தலைமைச் செயலாளரின் பார்வை கேசவபிள்ளைமீது விழுந்தது. அவர் காரை நிறுத்தச் செய்துவிட்டு அவனிடம் கேட்டார்: ''ஊம்? என்ன சங்கதி?''

ஒரு சில வார்த்தைகளால் மட்டும் அதற்குப் பதில் சொல்லமுடியுமா? ஒரு மணி நேரம் பேசினால் கூடத் தீர்ந்துவிடாது. நிலைமை அவ்வாறிருக்க ஒரே ஒரு வாசகத்திலே பேசிவிட்டால் எந்தப் பிரயோஜனமும் இருக்காது. அவனுடைய நாக்கு வறண்டுவிட்டது. நடுங்கிக்கொண்டிருந்தான் அவன். வார்த்தைகள் வெளியே வர மறுத்தன. ஆனால், மறு கணமே வாக்தேவதை அவனுக்கு அருள் புரிந்தாள்.

''நான் பட்டினி; பி.ஏ. பாஸ் பண்ணியிருக்கிறேன்.''

தலைமைச் செயலாளர் அவனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தார். அப்புறம் கேட்டார்: ''அதற்கு நான் என்ன செய்யவேண்டும்?''

திடீரெனப் பதில் அவனிடமிருந்து வந்தது: ''என்னைக் காப்பாற்ற வேண்டும்.''

அவர் ஒரு முறை முனகினார். கார் முன்னே நகர்ந்தது.

பின்பு ஒரு நாள் தலைமைச் செயலாளர் காரை நிறுத்திவிட்டு அவனைத் திட்டினார்: ''மூதேவி! அபசகுனமா வந்து நிக்கிறான்! வேலை காலியாகட்டும், உன்னை நியமிக்கிறேன்னு அன்னைக்கு உன்னிடம் நான் சொல்லலையா? இனிமேல் இந்தக் கேட்டிலே உன்னைப் பார்த்தால் . . . ஆ, நாசமாப் போனவங்க! சொன்னாலும் கூடப் புரிந்துகொள்ள மாட்டானுங்க.''

அந்தப் பேச்சைக் கேட்டவாறு நின்றுகொண்டிருந்த இளைஞனை அந்தக் காவலனும் கேசவபிள்ளையை விட்டுவிடவில்லை. செயலாளரின் கார் கிளம்பிச் சென்றவுடனே அந்தக் காவலன் அவனிடம் வந்து பய முறுத்தினான்: ''டேய்! சொன்னதைக் கேட்டாயா? இன்னுமொரு முறை இந்தக் கேட்டிலே உன்னைப் பார்த்தாக் கன்னம் வீங்கிப் போயிடும். சொல்லி வைக்கறேன், ஜாக்கிரதை!''

'வேலை காலியாகட்டும்; நியமிக்கிறேன்னு சொல்லலையா?' என்று அவர் கேட்கிறார். அவர் ஒருபோதும் அவ்வாறு சொல்லவில்லை. எந்த அதிகாரியும் அவனிடம் அப்படிச் சொன்னதில்லை. சென்ற இடங்களில் எல்லாம் 'வேலை காலியில்லை' என்ற பதில்தான் அவனுக்குக் கிடைத்திருக்கிறது. நம்பிக்கைக்கு இடமுண்டு என்று இப்போது அவனுக்குத் தோன்றியது.

சில நாட்களுக்குப் பின் ஒரு நாள் மாலை நேரம். தலைமைச் செயலாளர் கேசவபிள்ளையைத் தம் வாசலருகே பார்த்தார். அவனை உள்ளே வரச் சொன்னார். அவன் சொன்னதை எல்லாம் அவர் அமைதியாகக் கேட்டார். மறுநாள் தம் அலுவலகத்துக்கு வருமாறு அவனிடம் கூறினார்.

இவ்வாறாக, மாதம் பதினைந்து ரூபாய் சம்பளத்தில், ஒரு கீழ்த்தரக் குமாஸ்தாவாகக் கேசவபிள்ளை நியமிக்கப்பட்டான்.

தலைமைக் காரியாலயத்திலுள்ள ரெவின்யூ இலாக்காவிலேதான் வேலை கொடுக்கப்பட்டது. தந்தைக்குக் கடிதம் எழுதி இருபத்தைந்து ரூபாய் வரவழைத்தான். புதிதாக வேஷ்டி சொக்காய்கள் வாங்கினான். தம்பானூரிலுள்ள ஒரு லாட்ஜிலே வந்து தங்கினான். கேசவபிள்ளை இப்படியாக ஒரு புது வாழ்க்கையைத் துவக்கினான்.

அந்த இலாக்காவில் ஒரு சூப்பிரண்டின் தலைமையிலே கேசவபிள்ளை உள்பட ஐந்து குமாஸ்தாக்கள் வேலை செய்தனர். ஒரு பெண் குமாஸ்தாவும் இருந்தாள். ஹரிஹர ஐயர்தான் மிகவும் சீனியர். திராணியும் மதிநுட்பமும் உடைய நடுத்தரப் பருவத்தினரான ஒரு பிராமணர். அப்புறம் கோவிந்தன் நாயர். பிரபாகரன் நாயரும், மாத்யூவும் இளைஞர்கள். அவர்கள் வேலையில் அமர்ந்து மூன்று நான்கு வருஷங்கள்தான் ஆகின்றன. தங்கம்மா நியமிக்கப்பட்டு இரண்டு வருஷங்களே ஆகின்றன. அவள், அரசாங்கச் செயலாளர்களில் ஒருவரான கிருஷ்ணன் நாயருடைய அண்ணன் மகள். அவர்கள் மத்தியில் கேசவபிள்ளை மட்டுந்தான் பி.ஏ. பட்டதாரி.

சக மாணவர்களாக இருந்த ராமசந்திரன் நாயரையும் பிலிப்பையும், கேசவபிள்ளை சில சந்தர்ப்பங்களில் பார்ப்பதுண்டு. அப்போதெல்லாம் அவர்களுடைய இதழ்களிலே ஏளனப் புன்னகை தவழ்வதைப் பார்த்திருக்கிறான். முதலிலே அதன் பொருள் அவனுக்கு விளங்கவில்லை. எனவே மனத்தில் வருத்தமும் ஏற்பட்டதில்லை.

ஆனால், ஒரு நாள் அவனுடைய இதயத்தைப் பிளக்கிற நிகழ்ச்சி ஒன்று புத்தன்சந்தையிலே நடைபெற்றது.

அன்று கேசவபிள்ளை பிரசாத்தை அகஸ்மாத்தாக அங்கே சந்தித்தான். பிரசாத்துக்குப் பிரபலமான சிபாரிசுகள் இருந்தபோதிலும், இது வரையிலும் ஒரு வேலை கிடைக்கவில்லை. சின்னஞ்சிறு வேலை ஏதேனும் கிடைத்தால், அதனால் திருப்தியடையும் நிலைமையில் பிரசாத் இல்லை. கேசவபிள்ளையைக் கண்டதும் மிகவும் கடுமை நிறைந்த ஏளனத்துடன் அவன் சொன்னான்:

''உன்னைப் பார்த்து ஒரு விஷயமாகப் பேசவேண்டுமென்று வருகிறேன்.''

பழைய நண்பனின் குரலிலும் தோற்றத்திலும் ஏற்பட்டிருந்த மாறுதலைக் கேசவபிள்ளை கவனித்தான் என்றாலும், அதை வெளிக்காட்டவில்லை.

''ஊம்?. . . என்ன அது?''

பிரசாத் கடுமையான ஆத்திரத்துடன் கேசவபிள்ளையை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தான். கேசவபிள்ளைக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அவன் கேட்டான்: ''ஏம்ப்பா, என்னை இப்படித் தோலையுரித்துப் பார்க்கிறே?''

பிரசாத் கேட்டான்: ''வாழ வழியில்லேன்னு சுருக்குப் போட்டுக் கிட்டுச் சாகறதுதானே? ஏய்யா, மற்றவங்களுக்கு இப்படித் தொந்தரவு கொடுக்கிறே?''

விஷயம் விளங்காமல் கேசவபிள்ளை கேட்டான்: ''நான் என்ன செய்தேன்?''

தன்னுல் பிரசாத்துக்கு ஏதாவது தொந்தரவு ஏற்பட்டதாக அவன் நினைவிலே ஒன்றுமில்லை.

பிரசாத் விஷயத்தை நேரடியாகச் சொல்லி வைத்தான்:

''நீ பி.ஏ. பட்டத்துக்கு அவமானத்தைத் தேடி வைத்தாய். அதன் மதிப்பைக் கெடுத்துவிட்டாய். நீ மானத்தை விற்றுச் சாப்பிட்டு விடு! மற்றவர்கள் நாசமாஞர்கள்.''

அப்போது கூட கேசவபிள்ளைக்கு விளங்கவில்லை. அவன் தவறு இழைத்தவன்போல் கேட்டான்: ''நான் என்ன குற்றம் செய்தேன், நண்பா?''

''பதினைந்து ரூபாய் சம்பளத்துக்கல்லவா, நீ அந்த வேலையை ஏற்றுக் கொண்டாய்?''

அதனுல் தனக்கு என்ன நேர்ந்தது என்பதையும் எடுத்துரைத்தான் பிரசாத். இப்போது பி.ஏ. பட்டதாரிகளே பதினைந்து ரூபாய்க்குக் கிடைப்பார்கள் என்றல்லவா, அதிகாரிகள் கருதுகிறார்கள்? பிரசாத் அத்தகைய கேடு கெட்ட நிலைமைக்கு ஆளாகத் தயாராயில்லை.

கேசவபிள்ளைக்குச் சொல்லப் பதிலே இல்லை. அது மிகக் குறைவான சம்பளமென்றே, அந்தச் சம்பளத்துக்கு வேலை செய்ய ஒப்புக் கொண்டது அவமானமென்றே அவன் இதுவரையில் நினைத்துப் பார்த்த தேயில்லை. உயிர் வாழ ஒரு வழி என்று மட்டுமே எண்ணியிருந்தான். அதிலே அவன் மிகுந்த திருப்தியும் அடைந்திருந்தான்.

ஆனுல், பிரசாத் . . .! அவன் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த போதே வகுப்பிலே பெரிய துரை மாதிரி நடந்து வந்தவன். உயர்ரக உடைகள் அணிந்தே வகுப்புக்கு வருவான். பணம் ஏராளமாகச் செலவு செய்வான். பேச்சுத் திறமை கொண்டவனுகவும் இருந்தான். அத்தகைய ஒருவன், ஒருவேளை, இதைவிட அதிகமான சம்பளம் பெறக் கூடிய வேலையை எதிர்பார்க்கலாம்.

அடக்க முடியாத ஆத்திரத்துடன் பிரசாத் ஏளனமாகத் திரும்பவும் கேட்டான்: ''இப்போது, ஒரு நாளில் எத்தனை தடவை 'உத்தரவு' என்று வாய் பொத்திச் சொல்லிக்கொண்டிருக்கிறாய்?''

ஒன்றுமே பதில் சொல்லாமல் கேசவபிள்ளை நடந்து வந்தான்.

ஒருவேளை பிரசாத் சொன்னது உண்மையாக இருக்கலாம். பி.ஏ. பட்டத்தை மிகவும் குறைந்த விலைக்கு அவன் விற்றிருக்கலாம். ஆனுல், வாழ்க்கை ஒரு பிரச்னையாக இருந்ததே!

கிடைக்கிற சம்பளம் உயிர் வாழ்வதற்கு கூடப் போதுமானதாயில்லை. ஆயினும் அதைப்பற்றி அவனுக்குக் கவலையில்லை. அது மட்டுமல்ல; அதிலே அவனுக்கு ஆத்ம திருப்தியுங்கூட. இவ்வாறு ஆறேழு மாதங்கள் கழிந்துவிட்டன. வேலை முறைகளை அவன் பொதுவாகக் கற்றுக்கொண்டான். பி.ஏ. பட்டதாரி என்ற முறையில் அவனைக் கொண்டே முக்கியமான சில தஸ்தாவேஜுகளின் நகல்களை ஹரிஹர ஐயர் தயாரிக்கச்

செய்து வருகிறார். அவனுக்கு வேலையை நன்றாகக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஐயருக்கு இருந்து வருகிறது.

''கேசவபிள்ளை ஒரு பி.ஏ. பட்டதாரி. பெரிய உத்தியோகங்கூட அவாளுக்குக் கிடைக்கலாமோன்னே? இப்போ வேலை நன்னாக் கற்றுக் கொள்ளட்டும்'' என்று ஐயர் சில சந்தர்ப்பங்களில் சொல்லுவார்.

சக ஊழியர்களுக்கு அவனிடம் பொறுமையோ, வெறுப்போ இருந்ததில்லை. இந்த நிலைமையிலேதான், இலாக்கா சூப்பிரண்டான வையாபுரிப் பிள்ளை ஒரு மாத காலம் ஓய்வெடுத்துச் சென்றுவிட்டார். அவருக்குப் பதிலாகச் சூப்பிரண்டாக வந்தவர் கேசவபிள்ளையின் சக மாணவனாக இருந்த ராமசந்திரன் நாயர் என்பவர்தாம். கேசவபிள்ளையைத் தெரியுமென்றுகூட அவர் வெளியே காட்டிக்கொள்ளவில்லை. அவர் தம்முடன் படித்தவர் என்பதைக் கேசவபிள்ளையும் வெளியே காட்டிக்கொள்ளவில்லை.

* * *

ஒரு நாள் மதியவேளையில் ராமசந்திரன் நாயர் கேசவபிள்ளையைத் தம் முடைய அறைக்கு வரவழைத்தார். அவனை இதற்குமுன் ஒருபோதும் பார்த்திராதவர்போல், சூப்பிரண்டு தம் மேஜைமீது இருந்த ஒரு காகிதத்தைச் சுட்டிக் காட்டியவாறு கேட்டார்: ''யார் இந்த டிராப்டைத் தயாரித்தது?''

மேலதிகாரியின் அதிகாரபூர்வமான கேள்வி. கேசவபிள்ளைதான் அந்த நகலைத் தயாரித்திருந்தான்.

அந்த நகலின் பல்வேறு வரிகளைச் சூப்பிரண்டு அடித்திருந்தார். கோடுகள் பல கிழிக்கப்பட்டிருந்தன. பிள்ளையின் முகத்திலே வேர்வைத் துளிகள் அரும்பி நின்றன. அவன் வாய் திறக்கவில்லை. சிறிது நேரத்துக்குப் பின் ராமசந்திரன் நாயர் சொன்னார்: ''நீங்கள் போகலாம்.''

கலையிழந்தவனாகக் கேசவபிள்ளை அறையிலிருந்து வெளியே வந்தான். அது மேலதிகாரியின் கடுமையான தாக்கீது! ஒருவேளை தம்முடன் படித்தவன் என்ற முறையில் அவர் அதிகமாகப் பேசாமல் அனுப்பியிருக்கலாம்.

கேசவபிள்ளை தன்னுடைய இருப்பிடத்திலே வந்து அமர்ந்துகொண்டான். அவன் அழுதுவிட்டான். சக ஊழியர்கள் விசாரித்தனர். அவனால் வாய் திறந்து பேசமுடியவில்லை. சிறிது நேரத்துக்குப் பிறகு அந்த நகல் சூப்பிரண்டின் திருத்தங்களுடன் திரும்பி வந்தது. மதிநுட்ப முடைய ஹரிஹர ஐயர் அந்தத் திருத்தங்களைக் கவனத்துடன் படித்துப் பார்த்தார். அப்போது அவருடைய முகத்திலே புன்னகை பரவிக்கொண்டிருந்தது. கேசவபிள்ளை, தங்கம்மா ஆகிய இருவரைத் தவிர மற்றக் குமாஸ்தாக்கள் அனைவரும் ஐயரைச் சூழ்ந்துகொண்டனர்.

ஐயருக்கு விஷயம் அனைத்தும் புரிந்துவிட்டது. அவர் அந்தக் காகிதத்தைக் கோவிந்தன் நாயரிடம் கொடுத்தார்: ''படித்துப் பாருங்கோ! அப்புறம் சொல்லுங்கோ!'' என்றார் ஐயர்.

திருத்தங்களைப் படித்துக்கொண்டிருந்தபோதே கோவிந்தன் நாயருக்குச் சிரிப்பு வெடித்தெழுந்தது. நாயரைத் தொடர்ந்து மாத்யுவும், பிரபாகரன் நாயரும் அதைப் படித்துப் பார்த்தனர். தான் இழைத்த தவறுகளைப் பார்த்தே அனைவரும் சிரிக்கின்றனர் என்று கேசவபிள்ளை எண்ணினான். அவன் ஆத்திரத்தால் குமுறியவாறு கூறினான்: ''யாரும் அவ்வளவு சிரிக்கவேண்டாம்!''

அனைவரும் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தனர். கோவிந்தன் நாயர் சொன்னார்: ''இதை இப்படியே அனுப்பிவைக்கவேண்டும், ஐயர்வாள்! போகட்டுங்கிறேன்.''

எல்லாரும் தனக்கு எதிரிகளாகிவிட்டனர் என்பதுபோல், கேசவபிள்ளை அங்கேகூடக் குறுக்கே குதித்துவிட்டான். அவன் சொன்னான்: ''அனுப்பிவையுங்களேன். எனக்கு என்ன வந்துவிட்டது? பிரமோஷன் கிடைக்காமல் போகலாம் அல்லது வேலையிலிருந்து டிஸ்மிஸ் பண்ணிடுவாங்க. அவ்வளவுதானே?''

கேசவபிள்ளை சொல்வதை யாரும் கவனிக்கவில்லை. கோவிந்தன் நாயருடைய யோசனையை ஹரிஹர ஐயர் ஒப்புக்கொள்ளவில்லை. அவர் சொன்னார்: ''அது கூடாது, கோவிந்தன் நாயர். அது சரியில்லை. நம்மோட செக்ஷனுக்குத்தான் அவமானம். தவறு இல்லாம வாக்கியம் எழுதறவங்க இங்கே யாருமில்லை என்றுதானே இதுக்கு அர்த்தம்?''

கேசவபிள்ளை ஒரு சவாலுக்கே தயாராகிவிட்டான். கவலையும் ஆத்திரமும் கலந்த குரலில் அவன் கூறினான்: ''நான் தயாரித்த நகலில் எங்கே சென்டன்ஸ் மிஸ்டேக் ஏற்பட்டிருக்கு? கொஞ்சம் சொல்லுங்க, பார்க்கலாம். நான் கிராமர் படிச்சிருக்கேன்.''

கோவிந்தன் நாயர்தான் அதற்குப் பதில் அளித்தார்:

''சும்மா இருப்பா! விஷயம் தெரியாமல் . . . உன்னுடைய நகலில் அல்ல. திருத்தத்திலேதான் சென்டன்ஸ் மிஸ்டேக்.''

கேசவபிள்ளை விட்டுக் கொடுக்கவில்லை: ''காப்பியடிச்சுப் பரீட்சை பாஸ் பண்ணினவனுக்குத் தப்பில்லாமே ஒரு வரி எழுதத் தெரியுமா?''

கேசவபிள்ளை சிறிது உரத்த குரலிலேதான் கூறினான். அவ்வாறு பேசக் கூடாதென்று ஐயர் சமிக்ஞை செய்து காட்டினார். சூப்பிரண்டின் காதிலே அது விழுந்துவிடுமல்லவா? அவர் கோவிந்தன் நாயரிடம் கேட்டார்: ''சூப்பிரண்டு அவா எதுக்காகக் கேசவபிள்ளையைக் குற்றவாளியாக்கினார்னு உமக்குப் புரியுமோன்னோ?''

கோவிந்தன் நாயருக்குப் புரியவில்லை. ஹரிஹர ஐயர் தொடர்ந்து கூறினார்: ''இங்கே சென்டன்ஸிலே அல்ல மிஸ்டேக். அதுக்குள்ளே இருக்கிற விஷயத்திலேதான். சூப்பிரண்டு அவா திருத்தினப்போ

சென்டன்னிலே தப்பு வந்துவிட்டது. திருத்தப்பட்டது உள்ளடக்கந் தான். படிச்சுப் பாருங்களேன்.''

கோவிந்தன் நாயர் மீண்டுமொரு முறை அந்த டிராப்டைப் படித்துப் பார்த்தார். உள்ளடக்கத்திலே என்ன தவறை இழைத்துவிட்டோம் என்று அறியக் கேசவபிள்ளை ஆவலுற்றான்.

ஐயர் தொடர்ந்து பேசினார்: ''அந்தப் பைல் இருக்கே, அது ஹைட்ரோ எலக்டிரிக் ப்ராஜக்ட் சம்பந்தமானது தானே? அதுக்காகப் 'பொன்னின் விலை'க்கு நிலத்தை வாங்கறது சம்பந்தமானதுதானே? நாம் சீஃப் செக்ரடரியோட லெனிலே போறோம். சூப்பிரண்டு அவா 'பக்தி விலாஸம்' லெனிலே போறு. அது கேசவபிள்ளைக்குப் புரிய வில்லை. பிள்ளைவாள் பழைய முறைப்படி எழுதினார். அதுதான் விஷயம். மேலும் ஒரு முறை படிச்சுப் பாருங்களேன்.''

சீஃப் செக்ரடரி லென்? பக்தி விலாஸம் லென்? இரண்டு லென்களா? கேசவபிள்ளைக்கு ஒன்றுமே விளங்கவில்லை. கோவிந்தன் நாயருக்கு விஷயம் விளங்கிவிட்டது. ஹரிஹர ஐயர் பழைய நகலையும், திருத்தப்பட்ட நகலை யும் வாசித்துக் காட்டி வியாக்கியானம் செய்து வித்தியாசத்தைத் தெளிவாக எடுத்துரைத்தார். எந்த ஒரு முறையில் அந்த நகல் இருக்க வேண்டுமென்று சூப்பிரண்டு கருதினாரோ, அந்த முறையில் அது அமைய வில்லை. அந்தத் தவறுதான் ஏற்பட்டிருக்கிறது. அதாவது, உள்ளடக்கத் திலேதான் தவறு ஏற்பட்டிருக்கிறது.

கேசவபிள்ளை மிகவும் மனக்குழப்பமடைந்தான். பழைய தஸ்தா வேஜுகளைப் பார்த்துத்தான் அவன் அந்த நகலைத் தயாரித்திருந்தான். அதற்கு முற்றும் முரண்பட்ட ஒரு கொள்கை இருந்து வருகிற தென்றும், இரண்டுக்குமிடையில் கடுமையான போட்டி நடைபெற்று வருகிறதென்றும் அவன் அறிந்திருக்கவில்லை. எனவே, இயற்கையான ஒரு சந்தேகம் அவனுக்கு ஏற்பட்டுவிட்டது. அவன் கேட்டான்: ''சுவாமிகளே, பக்தி விலாஸத்துக்கும் சீஃப் செக்ரடரி அவர்களுக்கும் இடையில் போட்டி இருந்து வருகிறதா?''

''இந்த விஷயத்திலே இப்படித்தாம்பா.''

''ஐயர்வாள், அதெப்படி? திவான்ஜி நெனைச்சா . . .''

ஐயர் சொன்னார்: ''சீஃப் செக்ரடரி வெளியே போகவேண்டியதுதான். ஆனால் அப்படிக் கழுத்தைப் புடிச்சு வெளியே தள்ளிட முடியுமா? பத்திரிகைகள் சும்மாவிட்டுடுமா என்ன? சட்ட சபை இருக்குது. அங்கே ரகளை நடக்காதா? இப்போ, இந்த விஷயம் அப்படியல்ல. திவான்ஜிக்கு இது தெரியாது. சீஃப் செக்ரடரிக்கும், திவான்ஜியோட பிரைவேட் செக்ரடரிக்கும் இடையிலேயேதான் இந்த யுத்தம் நடைபெற்று வருது.''

கேசவபிள்ளைக்கு ஒரு குறையைப்பற்றிச் சொல்லவேண்டியிருந்தது:

''அப்படீன்னு, அந்த விஷயத்தையும் நீங்கதான் எனக்குக் கற்றுத் தந்திருக்கணும்.''

ஹரிஹர ஐயர் சொன்னார்: ''அதெல்லாம் ஃபைலைப் பார்த்துத்தான் கற்றுக்கணும். மற்றவங்க சொல்லித் தருவாங்கன்னு எதிர்பார்க்க வேணும்.''

கோவிந்தன் நாயர் யோசனை கூறினார்: ''திருத்தினதிலே ஏற்பட்ட இந்தத் தவறுகளை ஐயர்வாள்தான் சூப்பிரண்டின் கவனத்துக்குக் கொண்டு வந்திடணும்.''

ஹரிஹர ஐயர் அதை மறுக்கும் முறையில் தலையாட்டியவாறு கூறினார்: ''நமக்கு அந்தப் பொல்லாப்பெல்லாம் வேணும்ப்பா. அவா எல்லாம் பெரிய மனுஷா. தவறை எடுத்துக்காட்டினா 'நீ யார்டா'ன்னு கேட்டுட்டா? நாமதான் முட்டாள் ஆயிடுவோம். நமக்கு யாரோட பகைமையும் வேணும்ப்பா.''

அந்தக் கடிதம் அப்படியே செல்லட்டுமென்று கேசவபிள்ளை கூறினான். மேலே சென்றால் சூப்பிரண்டுதான் முட்டாள் ஆகிவிடுவார். அது அப்படி நடக்கட்டும். ஆனால் ஐயர் என்ன சொல்கிறார் தெரியுமா? செயலாளர் அல்லது உதவிச் செயலாளர் ஆகியோர் இந்தத் தவறுகளைப் பார்த்தால் கூட, இதையெல்லாம் ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளமாட்டார்களாம்.

''நீங்க ஒரு விஷயத்தைப் புரிஞ்சுக்கணும். சூப்பிரண்டு அவா பக்தி விலாஸத்திலுள்ள திவான்ஜியோட பிரைவேட் செக்ரடரியோட மனுஷா தான். அவாளை முட்டாளாக்கறதுக்கு யாராவது எண்ணினா அவங்க தான் கஷ்டத்துக்குள்ளாவாங்க.''

* * *

அன்று மாலை சூப்பிரண்டின் குறிப்பு ஒன்று வந்து சேர்ந்தது. கேசவ பிள்ளையை 'டெஸ்பாட்சிங்' கிளார்க்காக மாற்றியிருப்பதாக அதிலே குறிப்பிட்டிருந்தது. பிள்ளை அந்த வேலையை மட்டும் செய்தால் போதுமாம். இதுவரையில் அந்த வேலையைச் செய்து வந்தது தங்கம்மா தான். கேசவபிள்ளை செய்து வந்த வேலையை இனிமேல் தங்கம்மாதான் செய்யவேண்டும். தனது அந்தஸ்தைக் குறைப்பதற்காகச் செய்த வேலை இது என்று பிள்ளை எண்ணினான்.

கேசவபிள்ளைக்கு இது ஒரு படிப்பினையாக அமைந்தது. சர்க்கார் அலுவலகத்திலே வேலை உயர்வுக்காக மட்டும் அல்ல; இருக்கிற இடத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்குக்கூடப் பல விஷயங்கள் தெரிந்து கொள்ளவேண்டியிருக்கின்றன; கற்றுக்கொள்ளவேண்டியிருக்கின்றன. தங்கள் தங்கள் வேலைகளைச் சரிவரச் செய்வதாக இருந்தால்கூட அங்குள்ள ஒழுக்கினையும் அடியொழுக்கினையும் நன்கு அறிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. சுழல்களையும், குமிழ்களையும் தொலைவிலிருந்தே பார்த்துத் தெரிந்துகொள்ளவேண்டும்.

புதிய வேலை தங்கம்மாவுக்கு மிகுந்த சங்கடத்தைக் கொடுத்தது. 'பொன்னின் விலை' சம்பந்தமான ஃபைல்களைத்தான் அவள் கவனிக்க வேண்டியிருந்தது. வேலையில் அமர்ந்த நாள் முதற்கொண்டு 'டெஸ்பாட் சிங்'கைத் தவிர வேறு எந்த வேலையையும் அவள் செய்ததில்லை. மற்ற வேலைகள் தெரியவும் தெரியாது. ஏனெனில், அவள் கேசவபிள்ளையின் உதவியைத்தான் நாடினாள். ஹரிஹர ஐயரின் உபதேசங்களுக்கு இணங்க அவன் உதவியும் வந்தான்.

தங்கம்மா கேசவபிள்ளை இருவருடைய நாற்காலிகளும் நெருங்கி வந்தன. அவர்களுக்குப் பேசுவதற்குப் பல்வேறு விஷயங்கள் இருந்து வந்தன. சந்தேகம் ஏற்படும்போதெல்லாம் அவள் அவனிடம் கேட்பாள். அவன் அவற்றைத் தீர்த்துக் கொடுப்பான். சில விஷயங்கள் அவளுக்குப் புரியாது. ஹரிஹர ஐயர் விவரமாகச் சொல்லிக் கொடுத்தால்கூட அவள் மூளையில் ஏறாது.

அப்போது கேசவபிள்ளை இனிய புன்னகையுடன் கேட்பான்: ''இந்தத் தலைக்குள்ளே என்ன, களிமண்ணு?''

அப்போது அவளுடைய வதனம் சிவந்துவிடும். அவள் கூறுவாள்: ''ஓ... அப்படீன்னு, அப்படியே இருக்கட்டுமே! அதனாலே யாருக்கும் நஷ்டம் இல்லையல்லவா?''

அவன் கேட்டான்: ''யார் சொன்னுங்க, நஷ்டம் இல்லேன்னு?''

அவள் விட்டுக் கொடுக்கவில்லை.

''யாருக்குத்தான் நஷ்டம்?''

''எனக்குத்தான்.''

அந்தப் பதிலைத்தான் அவள் விரும்பினாள்.

தங்கம்மா பேசாமல் இருக்கும்போது அவன் கேட்பான்: ''என்ன, என்கிட்டே சண்டையா?''

''ஆம். சண்டைதான்'' என்று சொல்லிவிட்டு அவள் வதனத்தை உம்மென்று வைத்துக்கொண்டிருப்பாள்.

''அப்படியானு, நானும் சண்டைதான்.'' அவனும் முகத்தை உம்மென்று வைத்துக்கொள்வான்.

மாதங்கள் பல கடந்து சென்றன. சூப்பிரண்டு ராமசந்திரன் நாயர் போனார். வையாபுரிப்பிள்ளை வந்தார். ஆயினும் நிலைமையில் மாறுதல் ஏதும் ஏற்படவில்லை.

கேசவபிள்ளைக்கும், தங்கம்மாவுக்குமிடையில் ஏற்பட்ட நெருக்கமான உறவு அந்த இலாக்காவிலுள்ள அனைவருடைய கவனத்தையும் கவர்ந்தது. அங்கே மணமாகாதவர்கள் அவர்கள் இருவர் மட்டுந்தான். அவர்களுடைய பருவமும் உருவமும் பொருத்தமாயிருந்தன.

ஒரு நாள் கேசவபிள்ளையும், தங்கம்மாவும் நெடுநேரம் வரையில் எந்த வேலையும் செய்யாமல் இருந்துவிட்டனர். அவர்கள் இருவரும் தங்கள் தங்கள் சிந்தனையிலேயே மூழ்கியிருந்தனர்.

அப்போது ஐயருடைய கவனத்தை அந்தத் திசைக்கு ஈர்க்கும் முறையில் ஒரு குரல் இளம்பியது.

''திருமணமாகாதவர்களை ஒர் அலுவலகத்திலே அருகருகே அமர வைப்பதனால் ஏற்படுகிற விளைவைப் பார்த்தீர்களா, சுவாமிகளே?''

ஐயர் சொன்னார்: ''இளைஞர்கள்தானே? அவர்கள் கொஞ்ச நேரம் கனவுலகிலேயே சஞ்சரிக்கட்டும். அரசாங்க வேலையிலே சலிப்பு ஏற்படுகிறபோது கொஞ்சம் ஆனந்தத்தை அநுபவிக்கட்டும்! என்ன, அப்படித் தானே, தங்கம்மா?''

ஐயர் வாய் திறந்து ஒருமுறை நன்முகச் சிரித்தார். பின்பு கேசவபிள்ளையிடம் சொன்னார்: ''பிராமணனுடை ஆசீர்வாதம்! சகல சௌபாக்கியங்களும் ஏற்படட்டும்!''

தங்கம்மா வெட்கத்தினால் தலைகுனிந்து போனாள். கேசவபிள்ளையின் முகத்திலே செவ்வண்ணம் பரவியது. அதுவும் நாணத்தினாலேதான்.

கோவிந்தன் நாயர், அவர்களுடைய முகபாவங்களில் ஏற்பட்ட மாறுதலைக் கண்டு திடீரெனச் சொல்லிவிட்டார்: ''இன்று உங்கள் இருவருடைய திருமணமும் நடந்தேறியிருக்கிறது!''

கேசவபிள்ளை சொன்னான்: ''ஆகட்டும். தங்கம்மா, நீ என்ன சொல்றே? ஒப்புக்கொள்றியா? ஆயின் . . .''

அவளால் எதையும் பேசமுடியவில்லை. தலை குனிந்தபடியே அமர்ந்து விட்டாள்.

அங்கே உற்சாகம் கரைபுரண்டோடியது. திருமண மண்டபத்திலே மாப்பிள்ளையும் பெண்ணும் அமர்ந்திருப்பதுபோலவே கேசவபிள்ளையும், தங்கம்மாவும் அமர்ந்திருந்தார்கள்.

அலுவலக வேலைகளை நடத்தி வைக்கிற பொறுப்புடைய ஹரிஹர ஐயர் சொன்னார்: ''சரி, சரி! திருமணம் நடந்தேறியது! ஒப்புக்கொண்டோம். ஆனால், சர்க்கார் வேலைகள் ஒழுங்காக நடக்கட்டும்.''

மறுநாளிலிருந்து நாள் தவறாமல் கேசவபிள்ளை தங்கம்மாவிடம் கூறி வந்தான்: ''தங்கம்மா, நீ என் மனைவி. மறந்துடாதே!''

'அல்ல' என்று அவள் சொல்லவில்லை. அவ்வாறு கேட்கிறபோதெல்லாம் அவளுக்கு வெட்கம் ஏற்படுவது சகஜம். அவளுக்கு, அந்த வார்த்தைகள் ஆனந்தத்தை அளித்து வந்தன. யாருக்கும் தெரியாமல், யாரும் காணாமல் அவள் அவனை ஆவல் நிறைந்த கண்களுடன் பார்த்துக்கொண்டிருப்பாள். அந்தக் கண்களில் ஆர்வமும் மோகமும் ததும்பி நிற்பதைப் பார்க்க முடிந்தது.

ஒருதடவை கேசவபிள்ளை சொன்னான்: ''தங்கம்மா என் மனைவி.''

அப்போது அவள் கேட்டாள்: ''என்மீது அன்பிருக்கா?''

ஒரு நிமிஷத்துக்குப் பிறகு அந்தக் கேள்விக்குப் பதிலாக அவன் மற்றொரு கேள்வியைக் கேட்டான்: ''உனக்கு என்மீது?''

''முதலில் கேட்டது நான்தானே? அதுக்குப் பதில் சொல்லுங்க!''

கேசவபிள்ளை விட்டுக் கொடுக்கவில்லை: ''முதலில் என் கேள்விக்குப் பதில் சொல்! நீ என் மனைவிதானே?''

தங்கம்மாவின் தகுதி என்ன? முதலிலேயே அவள்தான் கேட்டாள், என்பது! எனவே அவளுக்குத்தான் முதலில் பதில் கிடைக்கவேண்டும்.

அந்த விவாதம், அங்கே, அவ்வாறே மாதேவன் பிள்ளையின் வருகையால் தடைபட்டுப் போயிற்று.

* * *

அன்று மாலை வேலை முடிந்து அலுவலகத்திலிருந்து கிளம்புகையில் அவள், அவன் காதருகில் மெல்ல முணுமுணுத்தாள்: ''நான் உங்களை நேசிக்கிறேன்.''

அவள் கண்கள் ஒருமுறை ஜொலித்தன. ஆம்— அந்த நயனங்கள் ஜொலித்துக்கொண்டே இருந்தன.

அவள் தான் முதலிலே கேட்டாள் என்ற உரிமை வாதத்தை விட்டு விட்டு அவனுடைய கேள்விக்குப் பதில் அளித்தாள். அவனுடைய பதிலுக்காக அவள் காத்திருப்பதாகத் தோன்றியது. அவன் மீண்டும் கேட்டான்: ''நீ என் மனைவிதானே?''

சமீபகாலமாக, மற்றவர்கள் அனைவரும் அலுவலகத்துக்கு வந்து சேருமுன் தங்கம்மா வருவது வழக்கமாகிவிட்டது., அவள் ஒரு நாள் அவனிடம் கேட்டாள்: ''ஆபீசுக்கு இவ்வளவு லேட்டா வந்தா . . . ?''

கேசவபிள்ளை ஒரு நாள்கூட ஆபீசுக்குத் தாமதித்து வருவதில்லை: ''நான் சரியான நேரத்திலே வந்துடறேனே. நான் லேட்டா வர்றேன்னு யார் சொன்னா?''

குறும்புப் புன்னகையுடன் அவள் கூறினாள்: ''நான்தான் சொல்லறேன்.'' அவனுக்கு அதன் பொருள் புரியவில்லை என்று அவளுக்குத் தோன்றியது: ''நான் அரைமணி நேரத்துக்கு முன்பே வந்துடறேனே.''

பொருள் படைத்த உணர்ச்சியை வெளிக்காட்டும் புன்னகையுடன் அவன் முகத்திலேயே பார்வையைச் செலுத்தியவாறு நின்றாள். சிறிது நேரம் அந்தப் பார்வையைக் கூர்ந்து கவனித்தால், அது பசியுள்ள ஒரு மிருகத்தின் பார்வைபோல் தோன்றும். அவன் மன்னிப்பு தொனிக்கிற குரலில் கூறினான். ''நாளையிலேருந்து நான் லேட்டா வரமாட்டேன்.''

அன்று மாதேவன்பிள்ளையும் கேசவபிள்ளையிடம் சொன்னார்: ''என்ன சார், அந்தக் கொழந்தை எவ்வளவு நாளா நேரத்திலே வந்து காத்துக் கொண்டிருக்கிறுன்னு தெரியுங்களா? நீங்களும் கொஞ்சம் நேரத்திலே வர்றதுதானே, சார்?''

பின்னர் அந்த வயோதிகர் அவனிடம் சொன்னார்: ''யாருக்கும் தெரியாமே உங்ககிட்டே ஏதாச்சும் சொல்ல வேண்டியிருக்கும்.''

அத்துடன் ஓர் எச்சரிக்கையும் விடுத்தார்: ''ஒரு விசயம் மனசிலே வச்சுக்கணும். இது ஸ்ரீ பத்மனுபனுடை ஆபீசு, இங்கே சுத்தம் கித்த மெல்லாம் வேணும்.''

மறுநாள் காலையில் கேசவபிள்ளை நேரத்திலே வந்தான்.

தங்கம்மாவின் சிற்றப்பாதான் அரசாங்கச் செயலாளரான கிருஷ்ணன் நாயர். அதனாலேதான் தங்கம்மாவுக்கு அங்கே வேலை கிடைத்தது.

கேசவபிள்ளை தங்கம்மாவின் இதயத்தை வசீகரிக்கவில்லை என்று திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை. வசீகரிக்கப்பட்டது இதயந் தானே, என்னவோ? அவனுடைய இதயத்தைத் தனதாக்கிக்கொள்ள அவளால் முடிந்ததா என்று கேட்டால்—அவனுக்கு அவள்மீது ஒருவிதமான ஆவேச உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறதெனச் சொல்லமுடியும். அது எந்தத் திசைக்கும் அவனை இழுத்துச் செல்லலாம். தங்கம்மாவுக்கு ஒரு கணவன் தேவையாக இருக்கலாம். அதற்குத் தகுதியுடைய ஓர் இளைஞனை அவள் சந்தித்துவிட்டாள். காதல் என்பது இதுதானே? அது இன்றி வேறு என்ன? அவனுக்கும் ஒரு மனைவி தேவையாக இருக்கலாம். தங்கம்மாவிடம் அவனுக்கு ஆவேச உணர்ச்சிகூட இருந்து வருகிறது. அவளை மனைவியாக அடைவதனால் நன்மை உண்டு. கேசவபிள்ளையின் அந்த ஆவேசத்தை இந்த அடிப்படையிலே பார்க்கும்போது காதல் எனச் சொல்லக்கூடாதா? ஆம்—அதுவும் காதலேதான். அவளை நோக்கி அவன் நெருங்கிச் செல்கிறான். அவனைத் தன்னிடம் நெருக்கிக்கொண்டிருக்கிறாள் அவள். இன்று அவர்களுக்கு இரகசியமாகச் சந்திப்பதற்கான இடங்கள் இல்லை. அண்மையிலேயே அவை உண்டாகலாம். உண்டாக்குவதற்காக அவள் முயன்று வருகிறாள். அப்போது, அங்கே, அவள் அவனுடைய மார்புமீது தனது சிரத்தைச் சாய்த்தவாறு ஆயிரமாயிரம் காரியங்களையும், கற்பனைகளையும் சொல்லுகிற வாய்ப்புகள் ஏற்படலாம். அவள் பல விஷயங்களை அவனிடம் ஆணையிட்டுக் கூறும்போது அவன்கூட அவ்வாறு செய்யவேண்டுமென்று வற்புறுத்துகிற சூழ்நிலை ஏற்படலாம். நாள் செல்லச் செல்ல அத்தகைய வாக்குறுதிகளை அவன் அவளுக்குக் கொடுத்துவிடலாம். அப்போது இருவரும் பரஸ்பரம் வாக்குறுதிகளைப் பரிமாறிக்கொள்கிற நிலைமை ஏற்படலாம். காதல், கல்யாணத்தை நோக்கி நகர்ந்து செல்வது இவ்வாறுதானே?

அத்தியாயம் 3

தவறுகள்

கேசவபிள்ளை படகிலே தோட்டப்பிள்ளியை வந்தடைந்தான். அங்கேயே இறங்கினான். கொல்லத்திலிருந்து ஆலப்புழையை நோக்கி ஒரு படகு வந்துகொண்டிருந்தது. அந்தப் படகிலே ஏறிக்கொண்டு அவன் கருமாடியில் இறங்கி வீட்டுக்குச் சென்றான்.

தான் இருபத்தொன்பதாம் தேதி திரும்பி வந்துவிடுவதாக அம்மாவிடமும் அக்காவிடமும் சொல்லிவிட்டு மீண்டும் கிளம்பிச் சென்றான்.

வெட்கத்தினால்தான் அவன் எதையும் சொல்லாமல் கிளம்பிச் சென்றான் என்ற தன் கருத்து சரியானதென்று குட்டியம்மாவால் வாதம் புரிய முடிந்தது.

மறுநாள் காலையில் கேசவபிள்ளை அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தான். அவன் கேஷுவல் லீவுக்காக மனுச் செய்திருந்தான். ஆயினும் சூப்பிரண்டு லீவு அனுமதிக்கவில்லை. அது ஒரு பிரச்னையாகிவிட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் அது மனத்துக்குத் தொந்தரவளிப்பதாக இருந்தது. ஹரிஹர ஐயர், கோவிந்தன் நாயர் முதலியோர் வீட்டு விசேஷங்களைப் பற்றி விசாரித்தனர். ஏதாவது பதில் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொன்னான்:

''ஓ . . . சும்மா. அம்மாவோட பைத்தியம் . . .''

அவர்கள் எல்லாரும் அதை நம்பினர் என்று தோன்றியது. ஆனால், இத்தகைய பதிலினால் தங்கம்மாவைத் திருப்தி செய்ய முடியுமென்று அவன் நினைக்கவில்லை. திருப்தியளிக்கிற பதிலைக் கொடுத்தால்கூட ஆயிரக்கணக்கான கேள்விக் கணைகளைத் தொடுக்கிற வழக்கம் அவளுடையது.

லீவு அனுமதிக்காமல், அலுவலகத்தில் ஆஜராகாமல் இருந்ததற்குச் சமாதானம் கூறவேண்டியிருக்கும். அந்த நாட்களில் கடுமையானதொரு கட்டளை அமலில் இருந்து வந்தது. லீவு எடுக்க உரிமை இருந்தாலும் முன் அனுமதியின்றி அந்த உரிமையைப் பயன்படுத்தக்கூடாது என்பதுதான் அது. எதிர்பார்த்ததுபோலவே சமாதானம் கூறவேண்டுமென்று சூப்பிரண்டு உத்தரவு போட்டிருந்தார்.

தந்தியைச் சூப்பிரண்டுக்குக் காட்டினான். 'லீவு அனுமதிக்க இயலாது' என்று அவர் நேரடியாகச் சொல்லியிருந்தார். நோய்வாய்ப்பட்டுப் படுத்திருந்தேன் என்று சமாதானம் கூறினால் அது பொய்யாகிவிடும். எல்லாருமாகச் சேர்ந்து யோசனை செய்து ஒரு சமாதானத்தைத்

தயார் செய்து சமர்ப்பித்தான் கேசவபிள்ளை. சிறிய அளவில் ஓர் அபராத மாவது செலுத்த வேண்டியிருக்குமென்று கோவிந்தன் நாயர் அபிப்பிராயப்பட்டார். எதை வேண்டுமானாலும் செய்யட்டும்.

இவ்வாறு சமாதானம் எழுதுவதிலே கொஞ்ச நேரம் செலவாயிற்று. சமாதானமோ, தண்டனையோ கேசவபிள்ளையைப் பயமுறுத்தவில்லை. தங்கம்மாவுக்குச் சமாதானம் அளிக்க வேண்டியிருக்கிறதே. அவளைச் சமாளிப்பது எப்படி? எதற்காக ஊருக்குப் போய் வந்தீர்கள் என்று கேட்பாள். விசேஷமாக என்ன நடைபெற்றது என்பது அவளுக்குத் தெரிய வேண்டும். அந்த உரிமை அவளுக்கு இருந்து வருகிறது. என்ன பதில் அளிப்பதென்று அவனுக்கு விளங்கவில்லை.

அந்தக் கேள்வி பிறக்கத்தான் செய்தது.

''வீட்டிலே என்ன விசேஷம்?''

''குறிப்பிடத்தக்க விசேஷம் ஏதுமில்லே.''

''அப்புறம் ஏன் தந்தி வந்தது?''

''அது அம்மாவோட பைத்தியம். . .''

''இங்கே மற்றவங்கக்கிட்டே சொல்லவேண்டிய பதில் இது. என்கிட்டே அப்படிச் சொல்ல வேணும்.''

''ஏன்?''

''என் முகத்தைப் பாருங்க.''

கேசவபிள்ளை அவள் முகத்தைப் பார்க்கவில்லை. அவசர அவசரமாக எழுதிக்கொண்டிருந்தான்.

ஒரு நிமிஷத்துக்குப் பின் அவள் சொன்னாள்: ''அப்பப்பா! பெரிய அவசர வேலைதான்!''

அவன் கம்பீரத்தைக் கைவிடவில்லை.

''உனக்காக நகலைத் தயாரிச்சுக்கிட்டிருக்கேன்.''

ஆத்திரமும் கவலையும் தோய்ந்த குரலில் அவள் சொன்னாள்: ''அறிந்து கொள்ள எனக்கு உரிமையில்லைதான், அப்படித்தானே? வேணும் சொல்லவேணும்.''

''ஆத்திரப்படாதே! சொல்றேன்.''

சிறிது நேரத்துக்குப் பின் அவள் அதே கேள்வியைத் திரும்பவும் கேட்டாள்: ''வீட்டிலே என்ன விசேஷம்?''

''சொல்றேன்னுதான் சொன்னேனே! அதோ பார்! அவங்கல்லாம் நம்மைக் கவனிக்கிறாங்க.''

''இல்லாட்டாலும் நாம்ப அரட்டையடிக்கிறவங்கன்னு அவுங்களுக்கெல்லாம் தெரியுமே. வீட்டிலே நடந்ததென்ன? சொல்லுங்க!''

''சொல்லறேன்னுதானே, சொன்னேன்?''

''அப்போ . . . அம்மாவோட பைத்தியம்னு சொன்னது பொய் தானே?''

அந்தப் பதில் பொய்யானதென்று நிரூபிப்பதுதான் அவளுடைய நோக்கம். அதிலே அவளுக்கு ஏதேனும் சந்தேகமுண்டா? தன்னைச்

சொல்ல வைப்பதற்கான முயற்சிதானே இது? கேசவ பிள்ளையின் சிந்தனை இவ்வாறு சென்றது.

அன்று மதியத்துக்குப் பின்பும் அவள் அதே கேள்வியை ஆறேழு தடவைகள் கேட்டாள். ஒரு சந்தர்ப்பத்தில் அவன் தன் ஆட்சேபத்தை வெளிப்படுத்தினான். அவன் சொன்னான்: ''எனக்குச் சொல்ல விருப்பம் இல்லே. நீ என்ன பண்ணப் போறே?''

அவள் வதனம் வாடியது. சிறிது நேரத்துக்குப் பின் அவளுடைய கண்களிலே ஈரம் கசிந்து வருவதாக அவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அவன் சொன்னான்: ''சற்று அமைதியாக அமர்ந்து சொல்லவேண்டிய விஷயம் அது. சொல்லறேன்னு சொன்னேனல்ல?''

அவள் பதிலுரைத்தாள்: ''வேணும்; எனக்குக் கேக்கவேணும். தேவையோ உரிமையோ எனக்கு இல்லாத இடத்திலே நான் தலையிடப் போவதில்லே.''

வசீகரிப்பதற்கான ஒரு புன்னகையை வரவழைத்தவாறு அவன் கூறினான்: ''அறிவுடைய பெண்கள் அப்படித்தான் நடந்துகொள்வாங்க, அவ்வளவுதான்.''

அவள், ''எனக்கு அறிவில்லாட்டா, அதன் விளைவுகளை நானே அநுபவிச்சுக்கறேன்'' என்றாள்.

''உனக்கு அறிவு இருக்குன்னுதானே, நான் சொன்னேன்.''

அன்று மாலை அலுவலகத்திலிருந்து வெளியே வரும்போது அவள் சொன்னாள்: ''நாளைக்குக் காலையிலும் சீக்கிரத்திலே நான் வருவேன்.''

அது ஓர் அழைப்பு! அல்ல, கோரிக்கை, அவனும் சீக்கிரம் வந்து சேரவேண்டுமென்று! வரமுடியாதென்று சொல்லலாமா என்று நினைத்தவாறு ஒரு நிமிஷம் அவன் பேசாமல் நின்றுவிட்டான். அவள் பதிலை எதிர்பார்த்து நின்றாள். அதை அவளுடைய முகத்தோற்றத்திலிருந்தே அறிந்துகொள்ளமுடியும். அவனுடைய ஆத்மாவுக்குள்ளே துருவிப் பார்ப்பவள்போல், அவனுடைய கண்களிலேயே தன் பார்வையைச் செலுத்திக்கொண்டு நின்றாள் தங்கம்மா.

இதற்குமுன் ஒருபோதும் அவள் அவனுடைய பதிலுக்காக இவ்வாறு காத்து நின்றதில்லை; இவ்வாறு உற்றுப் பார்த்ததும் இல்லை. ''நாளைச் சீக்கிரமாக வந்துடறேன்'' என்று சொல்லிவிட்டுப் போவதுதான் வழக்கம். அவனும் வந்துவிடுவான்.

மீண்டும் கேசவபிள்ளைக்குச் சந்தேகந்தான். அவளுக்கு ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறதா? சிறிது பதற்றத்துடன் அவன் சொன்னான்: ''சீக்கிரமா வந்துடறேன்.''

அந்த வேளையிலே அவள் மீண்டும் அதே கேள்வியை, வீட்டிலே என்ன விசேஷமென்ற கேள்வியைக் கேட்டிருந்தால், ஒருவேளை, நடந்தவை அனைத்தையும் சொல்லியிருப்பானோ? சொன்னாலும் சொல்லியிருப்பான். அது அத்தகைய பலவீனமான நிமிஷமாக இருந்தது. சொல்லியிருந்தால்? . . . அவன் பயந்து நடுங்கினான். அதே சமயத்திலே,

முட்டாள்தனமான ஒரு செயலிலிருந்து, சொல்வதற்கான சந்தர்ப்பத்திலிருந்து தப்பித்துக்கொண்டதைக் குறித்து அவன் பெருமிதம் அடைந்தான்.

* * *

அன்றிரவு கேசவபிள்ளைக்குத் தூக்கம் வரவில்லை. மறுநாள் அவன் அலுவலகத்துக்குச் செல்லுமுன் எவ்வளவு பெரிய பிரச்னையைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது! தோட்டப்பிள்ளையிலே இறங்கித் திரும்பவும் ஊருக்குச் சென்று அப்பாவிடமும், அம்மாவிடமும் தனக்கு அந்தக் கல்யாணம் சம்மதமல்லவென்று சொல்லிவிட்டு வந்திருந்தால்? அப்போது தாய் தந்தையர்களை நினைத்து வருந்தித் தூங்கமுடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். அவர்களுடைய அபிலாஷையைக் காற்றிலே பறக்கவிட்டு வந்ததாக நினைத்து, தங்கம்மாவுடன் இருந்து வருகிற உறவுமீதும் ஆத்திரம் ஏற்பட்டுவிடும். இப்போது இருந்து வருகிற ஆவல் நிறைந்த உணர்ச்சி மாய்ந்து மறைந்துவிடலாம். இந்த உணர்ச்சி தன்னிடமிருந்து போய்விட்டால் . . .? அவனால் அவ்வாறு சிந்திக்கவே முடியவில்லை. தளர்ந்து விழுந்துவிடுவான்போல் தோன்றியது. அவனுக்கு இருந்து வருகிற சக்தியெல்லாம் இந்த உணர்ச்சியால் ஏற்பட்டதுதானே? அப்படியானால், அந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்க அவனால் எவ்வாறு முடிந்தது?

ஆத்திரத்துடன் கன்னம் சிவந்து நிற்கிற அவளுடைய உருவம் அவன் முன்னே தோன்றியது. அவளுடைய புன்சிரிப்புக்குப் பிரத்தியேகமான ஒரு வசிய சக்தி இருந்து வருகிறது. அதற்குக் காரணம் அவளுடைய கன்னங்களில் ஏற்படும் குழிவுகளாக இருக்கலாம். அவள் நிற்கிறபோது அந்தக் கண்களிலே பிரத்தியேகமானதோர் ஒளி படர்கிறது. அவ்வொளி எதனுடையது? . . . ஒரு தாகம் முகத்திலே தென்படுகிறது. அவள் எவ்வளவுதான் ஆத்திரமடைந்து நிற்பவளாக இருந்தாலும், அதிலே ஓர் ஆனந்தம் ஏற்பட்டுவிடுகிறது. அது, அவள் தன்னை நேசிப்பதனால் ஏற்பட்டதாக இருக்கலாம். 'வீட்டிலே என்ன விசேஷம்?' என்று இன்று அவள் எத்தனை தடவைகள் விசாரித்துக்கொண்டிருந்தாள்? அவ்வாறு விசாரித்தறிய வேண்டிய தேவை ஏற்படக் காரணம் என்ன? உரிமையாக இருக்கலாம். திருப்தியளிக்கிற ஒரு பதில் கிடைக்கும் வரையில் அவள் மீண்டும் மீண்டும் அதே கேள்வியைக் கேட்டு வற்புறுத்திக் கொண்டிருப்பாள்.

நடந்தது நடந்தபடியே அனைத்தையும் அவளிடம் சொல்லிட்டால். . .? கேசவபிள்ளையால் அவ்வாறு சிந்திக்கவே முடியவில்லை. அந்தச் செய்தி அவளிடம் என்னென்ன பிரதிபலிப்புக்களை ஏற்படுத்தும்? ஆனால், என்றைக்காவது ஒரு நாள் அந்தச் செய்தியை அவள் அறியவே செய்வாள், அறிந்துதான் ஆகவேண்டும். இன்னும் சிறிது காலத்துக்குப்

பின், இந்த உறவு இன்னும் கூடுதலாக உறுதிப்படுவதற்கு முன்னர் அவள் அதை அறிந்துகொள்வதுதானே, நல்லது? திறந்து சொல்லிவிட்டால் என்ன? ஆனால், சொல்வதற்கான தைரியம் இல்லையே. அத்தகைய துணிச்சல் அவனுக்கு ஏற்படப் போவதில்லை. இன்றிலிருந்து எந்த நிமிஷத்திலும் அது வெடித்துக் கிளம்பி வெளிப்பட்டு விடலாம்.

அதன் எதிர்கால விளைவுகள் என்ன? ஓர் அன்புச் சங்கிலியின் கண்ணிகள் தகர்ந்துபோய்விடுமென்பது மட்டுந்தானே? இல்லை. அதுமட்டுமாக இருக்கமுடியாது. அது மிகுந்த வேதனையளிப்பதாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை. வேதனை இன்றி அதைப்பற்றி நினைக்கவும் முடியாது. வாழ்நாள் முழுவதும் இந்த உறவைக் குறித்து, இதன் கண்ணிகள் தகர்ந்து சூரணமாகிவிட்டாலும், நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியாது. ஒரு துளிக் கண்ணீருக்கு அவள் உரிமையுள்ளவள்தான்.

'திருமண நிச்சயதார்த்தம் நடந்துவிட்டது; திருமணம் நடந்தேறி விட்டது' என்றெல்லாம் அறியும்போது, பெரிய அளவில் இழப்பு ஏற்படாவிட்டாலும், கிடைக்கவேண்டிய லாபத்துக்கு இடையூறு ஏற்பட்டுவிடலாம். அந்தப் பட்டிக்காட்டுப் பெண்ணை மணம் புரிவதனால் என்ன நன்மை ஏற்பட்டுவிடப் போகிறது? கிட்டு மாமா சொன்னார், அவள் பெரிய அதிர்ஷ்டக்காரி என்று. அவ்வளவுதான். அதனால் என்ன லாபம் ஏற்படப் போகிறது?

இரண்டு வேளை உணவுக்கான தொகை மட்டும் கிடைத்தால் போதுமென்று கேசவபிள்ளை விரும்பிய காலம் ஒன்று உண்டு. பதினைந்து ரூபாய் சம்பளம் கிடைத்தபோது அது அவனுக்குத் திருப்தி அளித்திருந்தது. ஒரு பி.ஏ. பட்டதாரி அரசாங்கத் தலைமைக் காரியாலயத்தில் முதலில் ஏதாவதொரு வேலையில் அமர்ந்துவிட்டால் போதும்—வெகுதூரம் முன்னேறுவதற்கான சந்தர்ப்பம் அவனுக்கு இருந்து வருகிறது. ஆனால், அந்த முன்னேற்றத்துக்குத் துணைபுரியப் பிரமுகர்கள் யாராவது இருக்கவேண்டும். அத்தகைய ஒருவர் தனக்கில்லை என்று அவனுக்குத் தெரியும். எதிர்காலத்தில் யாராக வேண்டும், எத்தகைய பதவியை எட்டிப் பிடிக்க வேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் அவன் இதுவரையில் யோசித்ததில்லை. ஆனால், பிலிப்பு அல்லது ராமசந்திரன் நாயர் ஆகியோரின் பதவி—ஏன்? ஒரு செக்ரடரியின் பதவியேகூடத் தனக்குக் கிடைக்கக் கூடாதது அல்ல. அந்தப் பதவிகளிலே அமருவதற்கான தகுதி தனக்கு இருக்கிறது. தன்னைக் கீழான பதவிக்குத் தள்ளிவிட முடியுமென்று யாரும் எதிர்பார்க்க வேண்டியதில்லை. அதைப்போலவே, மேலே அந்தப் பதவியின் நாற்காலிகளைப் பார்த்துப் பார்த்து அவனுடைய கழுத்து வலிக்கவுமில்லை. ஆயினும், இன்றைய நிலைமையிலிருந்து அது ஒரு மாறுதல்தானே? அந்தப் பதவிகளைப்பற்றி அவன் கனவு காணவில்லை என்றாலும், அந்தப் பதவிகளை எட்டிப் பிடிக்கத் தகுதியில்லாதவன் அல்ல என்ற நிலைமைக்கு அவனுடைய சிந்தனை சென்றது. ஏறக்

குறைய சூன்னியமான நிலைமையிலிருந்து அந்த நிலைமைக்காவது வந்து விட்டானே!

செக்ரடரி கிருஷ்ணன் நாயருடைய அண்ணன் மகள் அவனைப் பார்த்து மனம் மலர்ந்து, ஆவல் நிறைந்து சிரித்தபோது, அந்தச் சிரிப்பின் வசிய சக்தி அவனை அவளோடு நெருங்கச் செய்தது, உண்மைதான். அவள், அவனைத் தன்னோடு நெருங்க வைக்க முயன்று வந்தாள். அவன் சுயமாக அவளோடு நெருங்கவும் செய்துகொண் டிருந்தான். நெருங்க வைக்கிற ஒவ்வொரு சிரிப்பையும் அவன் எதிர்நோக்கிக்கொண் டிருந்தான். அந்தக் கன்னங்களில் ஏற்படும் குழிவுகளுக்கு அவ்வளவு வசிய சக்தி இருந்தது. இவை எல்லாவற்றையும் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான்.

ஆனால், . . . ஆயினும் . . .

குழி விழும் அளவு கன்னங்கள் உள்ள வேறு ஒரு பெண்ணுக இருந்தால் அவனைத் தன்னோடு நெருங்க வைக்க முற்படுவாளே தவிர, அவன் சுயமாக அவளோடு நெருங்கியிருப்பானா? அவளை எதிர்பார்த்துக்கொண் டிருப் பானா?

ஆனால் . . .

அரசாங்கச் செயலாளரான கிருஷ்ணன் நாயருடைய அண்ணன் மகளிடம் உறவுகொள்ள, அரசாங்கக் காரியாலயத்திலுள்ள ஒரு கீழ்த்தரச் சிப்பந்திக்கு, அதுவும் எந்தவிதமான பக்கபலமும் இல்லாத, ஒருவனுக்கு, விசேஷமான அக்கறை ஏற்படுவது இயல்புதானே?

நிலைமை அவ்வாறிருக்க, கேசவபிள்ளை வேறு ஒரு பெண்ணை மணம் புரியப்போகிறான் என்று தங்கம்மாவுக்குத் தெரிந்துவிட்டால் அதன் விளைவு என்னவாக இருக்கும்? கேசவபிள்ளைக்குப் பெரிய நஷ்டமே ஏற்பட்டுவிடும். தங்கம்மா வெஞ்சினம் கொண்டெழுந்து காளிமாதேவி யாகத் தோன்றிவிடலாம் அல்லவா? அந்தக் கண்களிலே காணப்படுகிற ஒளிக்கதிர்கள் அந்தத் தேவியின் கண்களிலிருந்து கிளம்புகிற நெருப்புப் பொறிகளாக மாறிவிடலாம் அல்லவா? அவ்வாறு நேர்ந்துவிட்டால், ஒரு வேளை, அந்தக் காரியாலயத்துக்குள்ளே நுழைந்ததுபோலவே, வெளியேறி விடவேண்டிய நிலைமைகூட ஏற்படலாம் அல்லவா? அவனுடைய பிரச்னை யைக் கையிலெடுத்துப் போராட யார் இருக்கிறார்கள்? யாரும் இல்லை. அவள் காதலித்தாள் என்றால் அதற்கு அவன்தானே பொறுப்பாளி? அவளுடைய ஆவேச உணர்ச்சிக்கு அவன் பொறுப்பாளி அல்ல. ஆயினும் அவளை நேசிக்க, அவளுடைய நடை, உடை, பாவனைகள் தூண்டுதலாக இருந்திருக்கின்றன. அவனும் நேசித்தான்.

அவன் நினைவுகூர்ந்து பார்த்தான். அவளை நேசிப்பதாக அவன் சொல்லி இருக்கிறானா? இல்லை, அப்படிச் சொன்னதில்லை! அவளை மணம் புரிந்து கொள்வதாக வாக்குறுதி கொடுத்ததில்லை. வாக்குறுதியை மீறி விட்டான் என்று அவன்மீது குற்றத்தைச் சுமத்தமுடியாது. அவன் எந்த ஒரு வாக்குறுதியையும் கொடுத்ததில்லை என்று கண்டிப்பாகச் சொல்லமுடியும்.

ஆனால் அவள் அனைத்தையும் நம்பியிருக்கிறாள் என்று தோன்றுகிறது. அது கள்ளங்கபடமற்ற ஒரு நம்பிக்கை மட்டுந்தானு? அதற்கு அவனு பொறுப்பாளி? இல்லையா? அவன் தன் நடத்தையினால் அவளை அவ்வாறு நம்பச் செய்யவில்லையா? 'வீட்டிலே என்ன விசேஷம்?' என்ற அவளுடைய கேள்விக்குப் பதில் சொல்லவேண்டியிருப்பதனால் தானே, அவன் இரவிலே தூங்கமுடியாமல் தவிக்கிறான்? அவள் சிலவற்றை நம்பியிருக்கவேண்டுமென்ற விருப்பம் அவனுடைய உள்ளத்துக்குள்ளே இருந்துவருகிறது.

மறுநாள் காலையில் அவள் அலுவலகத்துக்கு வருவாள். அவனும் அங்கே செல்லவேண்டும்; வேண்டுமென்றே தாமதமாக அவன் அவ்விடத்துக்குச் சென்றான். காரணமாக எதைச் சொல்லவேண்டுமென்று அவனுக்குப் புலப்படவில்லை. எல்லாவற்றையும் ஒளிவுமறைவின்றிச் சொல்லிவிட்டால் என்னவென்று நிமிடத்துக்கு ஒருமுறை அவன் சிந்தனை செய்து பார்த்தான். அதன் விளைவுகளை அநுபவிக்கலாமே. எதற்காக மறைத்து வைக்கவேண்டும்? இது போதுமான அளவுக்கு வளர்ந்துவிட்டது. மேலும் வளர்ந்து பிரச்னை முற்றி நெருக்கடியாகி விடாமல் இப்போதே துண்டித்துவிடவேண்டியதுதான். இன்று, ஒருவேளை, செக்ரடரிக்குப் பகைமை ஏற்படாமல் போய்விடலாம். பல நாட்களுக்குப் பிறகுதான் நடைபெறுகிறதென்றால், அவர் பகைவராக மாறிவிடுவார் என்றே கருதவேண்டியிருக்கிறது. அத்தகைய ஒரு நிலைமை ஏற்படுவதற்கு முன்பே பிரச்னையை முடித்துவிடலாம்.

ஆனால், அதற்குக் கேசவபிள்ளையின் மனம் ஒப்பவில்லை. ஏதாவது பொய்யைக் கற்பனை செய்து சிருஷ்டிப்பதிலேதான் அது எந்நேரமும் செயல்பட்டு வருகிறது. அவனது பகுத்தறிவு அந்த ஒரே ஒரு பிரச்னையைச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

தங்கம்மா அலுவலகத்துக்கு வந்து சேரும் நேரம் கழிந்து மிகவும் தாமதமாகவே, தங்கும் விடுதியிலிருந்து கேசவபிள்ளை கிளம்பினான். அலுவலக நேரத்துக்கும் தாமதமாகத்தான் அங்கே போய்ச் சேரமுடியும். அப்படித்தான் நிகழ்ந்தது. தாமதமாக வந்ததனால் ஏற்படக்கூடிய திகைப்பு சற்றேனும் அவனிடம் காணப்படவில்லை. அனைவரும் தங்கள் தங்கள் வேலைகளைத் துவக்கியிருந்தனர். வாட்டமடைந்த வதனத்துடன் தங்கம்மா அமர்ந்திருந்தாள். தாமதமானதுக்குக் காரணம் கேட்டார் ஹரிஹர ஐயர். தங்கம்மா காதிலே கூட விழும்படியாக அவன் அதற்குப் பதிலுரைத்தான்.

''சொந்தக்காரங்க மூணுபேரு ஊரிலேருந்து வந்திருந்தாங்க. அவங்களுக்கு ஹைக்கோர்ட்டிலே ஒரு பிராது கொடுக்கவேண்டியிருந்தது. எனவே வக்கீலின் அலுவலகத்துக்குப் போகவேண்டியிருந்ததனாலே தாமதமாகிவிட்டது.''

அத்தகையதொரு பதில் அவன் முன்பே யோசித்து வைத்திருக்கவில்லை. அது திடீரென மனத்தில் உதித்ததுதான். அது வார்த்தையும்

பொருளும்போல் பொருத்தமாக அமைந்துவிட்டது. யாரும் அதை அப்படியே நம்பிவிடுவார்கள். அவன் தங்கம்மாவின் முகத்தைப் பார்த்தான். அவளும் அதை நம்பினாற்போல் தோன்றியது. அப்பா! என்ன ஆறுதல்! கேசவபிள்ளை தன்னையே பாராட்டிக்கொண்டான்.

அவன் தன் நாற்காலியில் அமர்ந்தவாறு வேலை செய்ய ஆரம்பித்தான். அவள் ஒரு காகிதத்திலே என்னவெல்லாமோ வரையவோ கிறுக்கவோ செய்துகொண்டிருந்தாள். அவள் தனது வேலையைச் செய்வதாக இல்லை.

சிறிது நேரத்துக்குப் பின் கேசவபிள்ளை கேட்டான்: ''என்ன சண்டையா?''

சிறிது நேரத்துக்குப் பிறகுதான் தங்கம்மா அதற்குப் பதில் சொன்னாள்: ''நான் எதுக்காகச் சண்டை போடணும்? எனக்கு அதுக்கு என்ன உரிமை இருக்கிறது?''

''அப்படியானா சண்டை வேண்டாம்'' என்று அவன் சொன்னான்.

அதற்குப் பதில் இல்லை.

மதிய உணவு முடிந்து மற்றவர்கள் வருமுன்பே கேசவபிள்ளை வந்து சேர்ந்தான். அவனைத் தொடர்ந்து தங்கம்மாவும் வந்து சேர்ந்தாள். இன்னும் சிறிது நேரத்துக்குப் பிறகுதான் ஏனைய சிப்பந்திகள் வந்து சேருவார்கள். பெரிய அலமாரிக்குப் பின்னால் குடையை வைக்க அவன் சென்றான். குடையை வைத்துவிட்டுத் திரும்பிப் பார்த்தபோது தங்கம்மா பின்னால் நின்றுகொண்டிருந்தாள்.

காலையிலே அவளது அழகு, காலைக் கதிர்கள்பட்டு மலர்கிற தாமரைப் பூவாக இருந்தது. குளித்துவிட்டு நுனியில் மட்டும் முடிச்சுப் போட்டிருந்த கூந்தல் இடுப்புவரையில் தொங்கிக்கொண்டிருந்தது. சின்னஞ்சிறு கரிய சுருள் முடிகளுக்குக் கீழே வைத்திருந்த சாந்துப் பொட்டு அவளுடைய நெற்றிக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது. வெள்ளை வெளேரென்ற, கறுப்புக் கரை போட்டிருந்த வேஷ்டியும், அங்க வஸ்திரமுமே அவள் அணிந்திருந்தாள். ஒட்டுமொத்தமான ஒரு தூய்மை அவளிடம் அப்போது காணப்பட்டது.

இப்போதோ அவள் முற்றும் மலர்ந்துவிட்ட ஒரு தாமரை மலர் போன்று இருக்கிறாள். கூந்தலை முழுதுமாக அழகுபடக் கட்டி வைத்திருக்கிறாள். சாந்துப் பொட்டுக்குப் பதிலாகக் குங்குமப் பொட்டை வைத்திருக்கிறாள். அந்த வேஷ்டியையும், அங்கவஸ்திரத்தையும் மாற்றிவிட்டு வேறு உடைகளைத் தரித்திருக்கிறாள். வெயிலில் நடந்து வந்ததனால் ஏற்பட்டதாக இருக்கலாம். முகத்திலே சிவப்பு வண்ணம் பரவி நிற்கிறது.

கேசவபிள்ளையின் மனத்துக்குள் ஓர் அசைவு ஏற்பட்டது. அவளுடைய அழகிய வதனத்தை அவன் கணநேரம் பார்த்தபடி நின்றான். அவளுக்கு ஏதோ ஒரு கோரிக்கை இருப்பதுபோல் தோன்றியது. அந்த வதனம் அதைக் கேட்பது போலவும் இருந்தது. கண்கள் எதையோ

வேண்டுவதுபோல் தோன்றியது: 'எனக்குத் தரமாட்டீங்களா?' அல்லது 'எனக்குத் தரணும்' என்று.

அவன் அதைக் கொடுத்தான். ஒரு முத்தம்! அதன் ஆனந்தத்தை அவன் அநுபவிக்கவும் செய்தான்.

கொஞ்ச நேரந்தான் கிடைக்கும். பெரிய அலமாரிகளுக்கிடையிலே தான் அது நடைபெற்றது. ஏனைய குமாஸ்தாக்கள் வந்து சேரும் நேரமாகிவிட்டது. அந்தக் காதலர்கள் தங்கள் தங்கள் நாற்காலிகளுக்குச் சென்று அமர்ந்துகொண்டனர். அதற்குள் மற்றவர்களும் வந்து சேர்ந்தனர்.

* * *

அன்று மாலை அலுவல் முடிந்து கிளம்பும் நேரத்தில் அவள் அவனிடம் சொன்னாள்: ''என் வீட்டுப் படிக் கட்டடத்தின் கதவு திறந்திருக்கும்.''

அவளுக்கு அதோடு மட்டும் திருப்தி ஏற்படவில்லை போல் தோன்றியது.

அன்றிரவு பத்து மணிக்குமேல் கேசவபிள்ளை, 'செட்டிக் குளங்கரை'யிலுள்ள கங்கம்மாவின் வீட்டுப் படிக் கட்டட வாசலுக்கு வந்து சேர்ந்தான். அவள், வீட்டு மனைக்குள்ளிருந்து அவனைக் கைவிரல்களைச் சொடுக்கி அழைத்தாள். பாபமடவெனத் துடிக்கிற நெஞ்சத்துடன் அவன் உள்ளே நுழைந்தான். அவள் அவனுடைய கையை இறுகப் பற்றிக்கொண்டாள். கரத்தின் எலும்புகள் அந்தப் பிடிப்புக்குள்ளே நொறுங்குவதுபோல் அவனுக்குத் தோன்றியது. அவர்கள் ஓர் அறைக்குள்ளே நுழைந்தனர். சத்தம் உண்டாக்காமல் அவள் கதவைச் சாத்தினாள்.

இவள் தன்னை ஆபத்துக்கு உள்ளாக்குகிறாளா? கேசவபிள்ளை பயந்துவிட்டான். அது மதியத்தில் நடைபெற்ற சங்கமத்தின் தொடர்ச்சியாக இருந்தது. அவள் அவன் காதருகில் முணுமுணுத்தாள்:

''என் கடவுளே, நான் செய்யும் இந்தக் காரியங்களெல்லாம் தவறுதான்'' என்று சொல்லியவாறு அவள் அவனை முத்தங்களால் திணற அடித்தாள்.

சிறிது இதய பாரத்துடன்தான் அவள் அதைச் சொன்னாளோ என்னவோ! அப்படியானால் அவள் அவனை ஏன் அவ்வாறு முத்தமிட்டாள்? அவள் சுவாசித்துவிட்ட காற்றுக்குச் சூடு கூடுதலாக இருந்தது. ஆயினும் அவள் போய் விடுவாளோ என்று பயந்தவன்போல், அவளுடைய இடுப்பைச் சுற்றி வளைத்திருந்த அவனுடைய கரம் மேலும் அதைச் சற்று இறுக்கிக்கொண்டது.

அவள் தொடர்ந்து கேட்டாள்: ''நாம் இப்படியெல்லாம் இரவு வேளையிலே சந்திப்பது சரிதானே?''

ஏன் சரியில்லை என்று அவன் கேட்டிருக்கவேண்டும். ஆனால், அந்தக் கேள்வி வெளிக் கிளம்பவில்லை. அவ்வாறு அவன் கேட்டான் என்று அவள் எண்ணியதுபோல் தோன்றியது; ''ஏன் சரியில்லை?'' என்று, அல்லது அத்தகைய ஒரு கேள்வி பிறந்ததுபோல் பாவித்து அவள் தொடர்ந்து கூறினாள்:

''ஐயோ! இது பெரிய தவறுதாங்க. திருமணத்துக்கு முந்தி . . . என் தெய்வமே, என்னால் முடியாதே . . . !''

அவள் 'என்னால் முடியாதே' என்று சொன்னது தவறைப் பற்றி நினைத்துத்தானா? அல்லது உணர்ச்சி மிகுதியினால், 'என்னால் பொறுத்துக்கொண் டிருக்க முடியாதே . . .' என்னும் பொருளிலே கூறினாளா?

ஏதாவது ஒரு பதில் சொல்லியாக வேண்டும். தான் எதுவும் பேசாமல் இருந்தால் அவள் தவறாக அதைப் புரிந்துகொள்வாள். ஒரு கேள்வி அவன் வாயிலிருந்து உதிர்ந்து விழுந்தது: ''நீ ஏன் இப்படியெல்லாம் பேசறே?''

அவள் சொன்னாள்: ''என்னவோ? எனக்குத் தெரியாது. எனக்குப் பயமாயிருக்குது; ரொம்பப் பயமாயிருக்குது. ஆயினும் உங்களை விட்டு விட மனம் சம்மதிப்பதில்லே.''

ஒரு நிமிஷத்துக்குப் பின் அவளே தொடர்ந்து கூறினாள்: ''அப்படியே செய்யலாம். அதான் . . . திருமணத்துக்குப் பிறகு . . . அது தான் நல்லா இருக்கும்.''

அவன் கேட்டான்: ''அப்படியானால், படிக் கட்டட வாசலைத் திறந்து வைப்பேன்னு ஏன் சொன்னே? அப்புறம் ஏன் என்னை எதிர்பார்த்துக் கிட்டு நின்னே?''

''சும்மா . . . ஆமாம் . . . சும்மாதாங்க.''

அவ்வளவு சரளமாக அவள் அவ்வாறு சொல்லவில்லை. அவனுடைய கழுத்தைச் சுற்றியிருந்த அவளுடைய கரங்கள் நன்றாக இறுகிக்கொண் டன. அவன் ஓடிவிடுவானா? அப்படியானால் பிடித்து இழுத்து நிறுத்த வேண்டும். அவள் அவனுடைய முகத்தைத் தன் முகத்துடன் சேர்த்து வைத்தாள். பின் கூறினாள்: ''என் கிட்டே பிரியமில்லை; கொஞ் சங்கூட இல்லை.''

''ஏன்? ஏன் அப்படி எண்ணுகிறே?''

எவ்வளவு உணர்ச்சியில்லாத கேள்வி இது? ஒரு காதலியிடம், தன்னிடம் காதலனுக்குப் பிரியமில்லை என்று அவள் சொல்லும் பொழுது, காதலன் அதற்கான காரணங்களைக் கேட்கிறான்! அவள் சொன்னது சரியல்ல என்றல்லவா உடனடியாகச் சொல்லியிருக்கவேண் டும்? அவளுக்கு இன்பப் பேதையூட்டிக் தனக்கு அவளிடம் ஆவேச உணர்ச்சி இருப்பதாக நினைத்துக் காட்டியிருக்க வேண்டாமா? பிரியம் உண்டு என்று ஆணையிட்டுச் சொல்லியிருக்க வேண்டாமா?

அவள் சொன்னாள்: ''எனக்கு அப்படித் தோணுது.''

ஒருவேளை, அவனுடைய முத்தம் அவளுக்குப் போதுமான சூட்டைப் பகிர்ந்து கொடுத்திருக்காது; தழுவுதல் தேவையான விறுவிறுப்பை அளித்திருக்காது. முத்தத்தில் இதைவிடக் கூடுதலான சூட்டையும், தழுவுதலில் மேலும் விறுவிறுப்பையும் அவள் விரும்பியிருக்கக்கூடும்.

அவள் கேட்டாள்: ''வீட்டிலே என்ன விசேஷம்?''

அவன் சற்றுத் திகைப்புடன் பதில் அளித்தான்: ''ஓ . . . ஒண்ணுமில்லே; அவ்வளவு பெரிசா ஒண்ணுமில்லே.''

அந்த ஒரு கேள்விக்கு என்ன பதிலைச் சொல்லி அவளைத் திருப்தியடையச் செய்வதென்று அவன் இன்னமும் ஒரு முடிவுக்கு வரவில்லை. தாயாரின் பைத்தியக்காரத்தனமென்று மட்டும் சொன்னால் போதாது. அத்துடன் வேறு சிலவற்றைக்கூடச் சேர்த்துச் சொல்ல வேண்டும். எதைச் சேர்த்துச் சொல்வது?

தங்கம்மா விட்டுக் கொடுப்பதாக இல்லை: ''அப்புறம் ஏன் தந்தி அனுப்பினீங்க?''

''அம்மாவுக்கு என்னை ஒருமுறை பார்க்கணுங்கிற ஆவல் ஏற்பட்டது'' என்று கேசவபிள்ளை சொன்னான்.

''அதுக்குக் கடிதம் எழுதியிருந்தாப் போதாதா?''

மேற்கொண்டு முப்பதாம் தேதியன்று ஊருக்குப் போகவேண்டியிருக்கிறது. அந்த விஷயத்தைக்கூட மனத்திலே வைத்துக்கொண்டு முன்யோசனையுடன் பதில் அளிக்கவேண்டும்.

தங்கம்மா தொடர்ந்து கூறினாள்: ''என்னவானாலும சரி; ஊருக்குப் போய் வந்த பிறகு உங்க கிட்டே அந்தப் பழைய சுறுசுறுப்பில்லே.''

அது உண்மை என்று ஒப்புக்கொள்வதுதான் நல்லது என்று அவனுக்குத் தோன்றியது. அவன் சொன்னான்: ''அது உண்மைதான்.''

''அதனால்தான் நான் கேட்டேன், வீட்டிலே என்ன விசேஷம்னு?''

திடீரென மன வருத்தம் தொனிக்கிற குரலில் அவள் கூறினாள்: ''அல்லாட்டா வேணுங்க. அதைப்பற்றித் தெரிஞ்சுக்க எனக்கு என்ன உரிமை இருக்குதுங்க?''

''அது அவ்வளவு பெரிய பிரச்னை அல்ல தங்கம்மா!''

''அப்படீன்னா அது என்ன விஷயம்னு சொல்றதுதானே?''

அந்த விஷயத்தைத் திறந்து சொன்னால் என்னவென்று அப்போதுகூடக் கேசவபிள்ளை யோசித்தான். ஆனால், அதற்கு அவனுக்குத் தைரியமில்லை.

அவள் பதிலை எதிர்பார்த்து நின்றாள். அறியாமலேயே என்று சொல்ல வேண்டும். ஒரு பதில் அவன் வாயிலிருந்து உதிர்ந்து விழுந்தது:

''ஒரு பூமி சம்பந்தமான பத்திரம் எழுதும் விஷயந்தான்.''

கேசவபிள்ளைக்கு ஆச்சரியம் ஏற்பட்டுவிட்டது. எவ்வளவு சூட்டிகையான, பொருத்தமான பதில் இது! அவன் தன்னைத்தானே பாராட்டிக் கொள்வது இது இரண்டாவது தடவை. அவனுடைய கற்பனை முற்றும் தெளிவான முறையில் இயங்கத் தொடங்கியது.

அவள் கேட்டாள்: ''அதுக்கு இவ்வளவு மனக்கவலே ஏன்?''

கேசவபிள்ளே ஒரு கதை சொல்லத் தொடங்கினன். மிக ஒழுங்காக, அழகாக அது அமைந்தது.

''எங்க குடும்பத்தின் பூர்விகச் சொத்தான ஒரு நிலம் இருக்குது. அதிலே மற்றவங்க குடியேறித் தங்கி வர்றுங்க. அவங்களே அதிலேருந்து வெளியேற்றிடணுங்கிறது என்னோட சிறு வயசிலேருந்து இருந்துவருகிற ஓர் ஆசை. அம்மா என்னே மடியிலே வச்சு அன்னேக்குச் சொன்னதெல்லாம் அந்த நிலத்தின் கதையேதான். அதிலேருந்து அவங்களே வெளியேற்றி அதைச் சுத்தமா எடுத்துக்கறது என்பது அம்மாவோட ஆசையுங்கூட. அம்மா தினசரி இந்தக் கதையைத்தான் சொல்லி வந்தாங்க.''

அந்தக் கதையைச் சொல்லிவந்த வேகம் சிறிது தணிந்தது. கதை ஒரு கட்டத்தில் வந்து நின்றது. அடுத்த கட்டமாக, அந்த நிலத்திலிருந்து அவர்களே வெளியேற்றப் போவதாகச் சொல்லலாமா? அல்லது வெளியேற்றப் போவதில்லே என்று சொல்லலாமா? தங்கம்மா ஆவலுடன் அதைக் காது கொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்தாள். அந்தக் கதையை அவள் நம்புகிறுற்போல் தோன்றியது. அவள் கேட்டாள்: ''அப்புறம்?''

அவன் சொல்லிவிட்டான்: ''அப்புறம் அவங்களே வெளியேற்றிச் சுத்தப்படுத்தி எடுக்கணும்னு எண்ணியிருந்த நிலத்தின் பரம்பரை உரிமையைக்கூட இப்போது எழுதிக் கொடுக்கணுமாம்.''

''எழுதிக் கொடுக்கணும், அதனால் என்ன?'' என்று அவள் கேட்டாள்.

''அரசாங்க வேலேகளின்மீது பரம்பரை உரிமையுள்ள உங்களுக்கு, திருவனந்தபுரத்துக்காரர்களுக்கு, அந்தக் கவலே என்னன்னு தெரிஞ்சுக்க முடியாது. விவசாயிகளின் பரம்பரையிலே வந்தவங்களால்தான் அதைப் புரிஞ்சுக்க முடியும்'' என்றுன் அவன்.

''நாங்க ஏழைங்க. நிலமோ மனேயோ ஒண்ணும் எங்களுக்குக் கிடையாது.'' அவள் விட்டுக் கொடுக்கவில்லே.

''ஆம். அது உண்மைதான்.''

கேசவபிள்ளே ஆறுதலடைந்தான் என்பது திண்ணம். அந்தக் கதையையே பயன்படுத்தியவாறு அவன் கூறினன்: ''முப்பதாம் தேதி பத்திரம் எழுதிக் கொடுக்கவேண்டிய நாள். நான் போயித்தானுகணும்.''

அன்று ஏறக்குறைய பொழுது விடிகிறவரையில் அந்தக் காதலர்கள் பிரச்னேயை மேலும் சிக்கலாக்கிக்கொண்டிருந்தனர். அவன் அவளேத் தன் வசமிழக்கச் செய்துகொண்டிருந்தான். ஆனல், அதே சமயத்தில் தன் வாலிப இரத்தத்தின் கடிவாளமற்ற போக்கை உணர்ந்து கொண்டவனுகவும் இருந்தான். அவளேத் தன்னேடு நெருங்கவைக்க வேண்டுமென்ற ஒரே ஒரு நோக்கம் மட்டுமே அவனுக்கு இருந்தது. ஆனல், அவளோ எல்லாவற்றையும் மறந்துவிட்டாள். அவளுடைய

வாலிப இரத்தம் கொதிநிலையை எட்டி, கரைகளைக் கடந்து பொங்கி வழிந்துகொண் டிருந்தது. அவளே பயப்படுகிறான், அவனுடைய ஆவேச உணர்ச்சி தணிந்துவிடுகிறது. அவன் கேட்டான்: ''என்ன இது?''

''ஊம்? . . . என்ன?''

''இது எங்கே போய் முடியுமென்று தெரியுமா? உனது நல்ல பெயர் . . . ''

அவள் சொன்னாள்: ''ஓ . . . நல்ல பெயர்! . . . அப்படியே ஏற்பட்டு விட்டாலும் அது யாருடையது?''

கேசவபிள்ளை தன்னை அதிகமாகக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண் டியதன் அவசியத்தை நன்கு உணர்ந்தான். அவளுக்கோ பயம் இல்லை. அவனுக்கு அது இருந்தது.

அத்தியாயம் 4

ஒரு திருமணம் நடந்தேறியது

இருபத்து ஒன்பது, முப்பது ஆகிய தேதிகளுக்கு லீவு கிடைக்கவேண்டும். லீவுக்கு முன் அநுமதி பெற்றுச் செல்வதுதான் சாலச் சிறந்ததாகும். சென்ற தடவை செய்ததுபோல் அப்ளிகேஷனை மட்டும் சமர்ப்பித்து விட்டுச் செல்வது சரியல்ல என்பதுதான் ஹரிஹர ஐயருடைய கருத்து. சூப்பிரண்டின் வீட்டிலே சென்று அவரைப் பார்த்துப் பேசி லீவுக்கு அநுமதி பெற்றுச் செல்வது என்ற நடைமுறையைக் கையாளவேண்டு மென்று ஐயர் யோசனை கூறினார்.

வையாபுரிப் பிள்ளை ஒரு மோசமான மனிதர் அல்ல. அவரும் ஒரு பி.ஏ. பட்டதாரி; பழைய காலத்துப் பட்டதாரி. அன்றைய தினத்துக்கு முப்பது வருஷங்களுக்கு முன் பி.ஏ. பட்டம் பெற்று, அரசாங்கக் காரியாலயத்தினுள் ஒரு குமாஸ்தாவாகப் புகுந்தவர். இப்போதுகூடச் சூப்பிரண்டு பதவியிலேதான் இருந்துவருகிறார். அவருக்குப் பின் வேலையில் நியமிக்கப்பட்டவர்களில் பலர் கலெக்டர்களாகவும், அரசாங்கச் செயலாளர்களாகவும் பதவி உயர்வை அடைந்திருக்கின்றனர். அந்த இலாக்காவிலுள்ள அனைத்து நாற்காலிகளிலும் அவர் அமர்ந்து வேலை செய்திருக்கிறார். வேலைத் திறமை இல்லாதவர் அல்ல வையாபுரிப் பிள்ளை. அறிவுத்திறன் உண்டு. ஆனால் யாருமே அவரை நினைத்துப் பார்த்ததில்லை. நினைத்துப் பார்க்க ஒருவரும் இல்லை. நினைத்துப் பார்க்கக்கூடிய ஒரு மனிதரின் நட்புறவைப் பெறவும் அவரால் முடியவில்லை. இந்த முப்பது வருட காலம் முழுவதும் அவர் ஓர் இயந்திரத்தைப் போன்று உத்தியோக வாழ்க்கையை நடத்தி வந்திருக்கிறார். சரியாகப் பதினேழு மணிக்கு அலுவலகத்துக்கு வந்து சேருவார். ஐந்து மணிக்குத் திரும்பிப் போய்விடுவார். அலுவலகத்தில் தம் இலாக்காவிலுள்ள சக ஊழியர்களிடமின்றி வேறு யாரிடமும் அவர் பேசிக் கண்டதில்லை. ஐந்து மணிக்குப் பின் மறுநாள் காலை பதினேழு மணிவரையில் அவரை, அவருடைய வீட்டிலே தவிர வேறு எந்த இடத்திலும் பார்க்கமுடியாது. பதினேழு மணி முதல் மாலை ஐந்து மணிவரையில் அலுவலகத்திலேதான். எட்டுமுழ வேஷ்டியை இடது பக்கமாகக் கட்டி, சாயம் போன ஒரு கோட்டை அணிந்து, நெற்றியில் விபூதி பளிச்சிட ஒரு மனிதர், பதினேழு மணியளவில் அரசாங்கத் தலைமையலுவலகத்தின் வாசலைக் கடந்து உள்ளே செல்வதைப் பார்க்கலாம். இந்த வழக்கம் தவறியதில்லை. இந்த முப்பது வருட காலமும் இவ்வாறே கழிந்திருக்கிறது.

வையாபுரிப் பிள்ளை என்ற ஓர் உத்தியோகஸ்தர் அந்த அரசாங்கத் தலைமையலுவலகத்தில் இருந்து வருகிறார் என்பது மேலதிகாரிகளுக்குத் தஸ்தாவேஜுகள் மூலமாகத் தெரியுமே தவிர, வேறு முறையில் தெரிந் திருக்காது.

வையாபுரிப் பிள்ளைக்குப் பத்துக் குழந்தைகள் இருக்கின்றன. வேலையில் அமர்ந்த நாள் முதற்கொண்டு யார் எதைக் கொடுத்தாலும் அதை வாங் கத் தவறமாட்டார். அதற்கு லஞ்சமென்ற பெயரைச் சூட்டிக்கொள்ள வேண்டியதில்லை. குறிப்பிட்ட காரியத்தைச் சாதித்துக்கொள்வதற் காகக் குறிப்பிட்ட தொகை கொடுக்கவேண்டுமென்ற கட்டாயம் அவரிடம் இல்லை. எவ்வளவு சிறிய தொகையாக இருந்தாலும் வாங்கிவிடுவார். தொகை குறைந்துவிட்டதென்ற புகார் ஒருபோதும் அவரிடமிருந்து கிளம்பியதில்லை. கணக்குச் சொல்லி வாங்குவதுமில்லை. எனவே, அவ ரிடம் மனச்சங்கடமோ, அவரைப்பற்றிய புகாரோ யாருக்குமே இல்லை. வையாபுரிப் பிள்ளையைப்பற்றி எந்தவிதமான புகாரும் கிளம்பிய தில்லை. அவருடைய மேற்சொன்ன நடைமுறையைப் பார்த்தால், லஞ்சம் என்பது சம்பளம் அல்லாமல் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வருவாய் என்றே தோன்றிவிடும். சம்பளம் என்பது லஞ்சம் உள்படக் கிடைக் கிற வருமானம் என்றாகிவிடுகிறது. ஆனால் இவ்வளவென்று சொல்லி வாங்குவதுதான் தவறு. அம்முறையிலேதான் பத்துக் குழந்தைகளுள்ள அந்தக் குடும்பம் உயிர் வாழ்ந்து வருகிறது. மிகக் குறைந்த அளவிலே லஞ்சம் கிடைக்கிற பதவியில் அமர்ந்துவிட்டதை நினைத்தே அவர் தம் அதிருஷ்டத்தைக் குறை கூறிவருகிறார். பிரமோஷனைப்பற்றிப் பிள்ளை அவர்களுக்குப் புகார் ஏதும் இல்லை.

வையாபுரிப் பிள்ளை மிகவும் முருக பக்தி படைத்தவர். அந்தப் பக்தி ஒன்றுதான் எந்தவிதமான நெருக்கடியுமின்றித் தம் வாழ்க்கையை இவ்வாறு நடத்திச் செல்கிறதென்று அவர் நம்பினார். இன்றுவரையில் எந்த ஒரு புகாரும் அவரைப்பற்றிக் கிளம்பியதில்லை; எந்தவிதமான நெருக்கடியும் ஏற்பட்டதில்லை. முருகன்தான் தமது ஏகத் துணைவன் என்றே சொல்லிவருகிறார். தம்மை எப்போதுமே அவன்தான் காப் பாற்றி வருகிறான் என்று நம்புகிறார்.

சூப்பிரண்டை அவருடைய வீட்டிலேயே சென்று பார்த்து லீவைப் பெற்றுவிடலாமென்று கேசவபிள்ளை தீர்மானித்துவிட்டான். அவர் வீட்டுக்கு முதல் முறையாகவே அவன் செல்கிறான். வெறுங் கையுடன் செல்வது நன்றாயிருக்காது. அவ்வாறு செல்வது அவருக்குப் பிடிக்குமென்று சொல்லமுடியாது. அப்படித்தான் சொல்லக் கேள்வி. பத்திரம் எழுத ஊருக்குச் செல்வதற்காகப் பத்து ரூபாய் கடனாக அளிப்ப தாகத் தங்கம்மா சொல்லியிருந்தாள். அதற்குமேல் மூன்று ரூபாய்கூட அவன் அவளிடம் கேட்டு வாங்கினான். சிறிது சர்க்கரையும், காபிக் கொட்டையும் வாங்கிக்கொண்டு வையாபுரிப் பிள்ளையின் வீட்டுக்குச் சென்றான். உயர் ரகமான காபிக்கொட்டை! வையாபுரிப் பிள்ளை

அதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தார். இவ்வாறு இருபத்து ஒன்பது, முப்பது ஆகிய தேதிகளுக்கு லீவைப் பெற்றுக்கொண்டு, தங்கம்மா கொடுத்த பத்து ரூபாயுடன் கேசவபிள்ளை இருபத்தெட்டாம் தேதி மாலை திருமணத்துக்காகக் கிளம்பிச் சென்றான்.

நெற்றியைச் சுளிக்கவேண்டாம். எதிர்காலத்தைப்பற்றி அவன் எதையும் தீர்மானித்திருக்கவில்லை. திருமணம் செய்துகொள்ள ஊருக்குப் போக வேண்டும். மாதக் கடைசி. கையிலே காசு இல்லை. பணம் அனுப்பி வைக்கவேண்டுமென்று அப்பாவிடம் கேட்கவில்லை. போகவும் வேண்டியிருக்கிறது. 'பத்திரம் எழுத, ஊருக்குப் போகப் பணம் வேண்டாமா?' என்று தங்கம்மா கேட்டாள். மறுக்கவில்லை. வேண்டும் என்றான். அவனுகவே அவளிடம் கடனுகக் கேட்கவில்லை. காதலன் வேறொரு பெண்ணை மணம் புரிய ஊருக்குச் செல்வதற்காகக் காதலியிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டான் என்று வேண்டுமானுல் சொல்லலாம். ஆனுல் அவன் அதைக் கேட்டு வாங்கினன் என்ற குற்றத்தைமட்டும் அவன்மீது சுமத்தக்கூடாது. இந்தப் பணத்தை வேறு யாராவது கொடுத்திருந்தால், ஒருவேளை, அவன் அவளிடமிருந்து அதை வாங்கியிருக்கமாட்டான்.

* * *

"ஏண்டா, ஒரு நண்பனையாவது அழைச்சுக்கிட்டு வராமே தனியா வந்தே?" என்று மகனைப் பார்த்ததும் பப்புப்பிள்ளை கேட்டார்.

கௌரியம்மா, தன் மனத்தில் இருந்ததை உடைத்துச் சொல்லிவிட்டாள்: "எனக்குப் பயமாக இருந்தது. நான் சொல்றேனே, நாம்ப கல்யாணத்துக்கு அத்தனை ஏற்பாடுகளையும் செஞ்சதுக்கப்புறம் மாப்பிள்ளை வராமே இருந்துடுவானேன்னு நான் பயந்துக்கிட்டிருந்தேன்."

"ப்ப்பூ!" குட்டியம்மா மகனைக் கடிந்துகொண்டாள்: "எம் பையன் அப்பா மூஞ்சிலே அப்படிக் கரி பூசமாட்டாண்டீ."

ஒரு விஷயத்தில், அம்மாவுக்கு மகனிடம் மன்னிப்பு கேட்கவேண்டியிருந்தது. "நீ பொண்ணுக்குப் போடற மாலை பொன் மாலையா இருக்கணும்னுதான் அப்பா நெனைச்சுக்கிட்டிருந்தாரு. பணத்துக்காக அவர் எவ்வளவோ சுற்றியலைஞ்சுப் பார்த்தாரு. நம்ப நிலத்தைக் குத்தகைக்கு விட்டுட்டு முன்பணம் வாங்கலாம்னுகூட நெனைச்சாரு. ஆனு, அப்படியாவது யாராச்சும் தரணுமே. அப்புறம் பூ மாலையே போதும்னு கடைசீலே தீர்மானிச்சுட்டோம்டா. இதை உங்கிட்டே சொல்றதுக்கு அப்பாவுக்கு ரொம்பச் சங்கடமா இருந்தது. என் மகன் கிட்டே நானே சொல்றேன்னு அவருகிட்டே நான் சொன்னேன்டா." அப்புறம் அவள் மிக்க அன்புடன் கேட்டாள்: "ஏண்டா, உனக்கு இதனுலே எதாச்சும் மனவருத்தம் இருக்குமாடா?"

"இல்லை." ஒரே வார்த்தையில் பதில் அளித்தான் கேசவபிள்ளை.

''சடங்கைச் சிறிய அளவிலே நடத்தலாம்னு நெனைச்சாக்கூடப் பெரிய செலவுதான்டா. அதுக்கெல்லாம் பணம் வேணுமா? எங்கிருந்து கிடைக்கும்? அப்பாவுக்கோ வயசாச்சு. குத்தக நிலத்தை உழுது அல்லவா, காலத்தைக் கடத்திக்கிட்டு வர்றோம்?'' குட்டியம்மா இடைவிடாமல் பேசிக்கொண் டிருந்தாள்.

அங்கே உற்சாகம் கரை புரண்டோடுகிறது. அந்தத் தாய் தந்தையர் களுக்கு இருக்கிற உற்சாகம் இவ்வளவு அவ்வளவென்று சொல்லுவதற் கில்லே. இத்தகைய உற்சாகத்துடன் அவர்களை எந்நாளும் கண்டதில்லே. அவர்களுடைய வாழ்க்கையிலேயே இது ஒரு மிகப் பெரிய நிகழ்ச்சி. இவ்வளவு அளவு கடந்த உற்சாகத்துக்கு என்ன காரணம் இருக்கிற தென்று யாருமே கேட்பார்கள்.

* * *

அன்று கிட்டு மாமா அந்தப் பெண்ணின் ஜாதகத்தைக் கையில் எடுத்துக்கொண்டுதான் வந்தார். கிட்டு மாமா, கேசவபிள்ளையைப் பலவந்தமாக இழுத்துக் கொண்டு வந்து அமரச் செய்து, அந்த ஜாதகத்தின் குணதோஷங்களை விளக்கிக் கூறத் தொடங்கினர். கேசவ பிள்ளைக்கு ஜாதகத்தைப்பற்றியோ, கிரக நிலைகளைக் குறித்தோ ஒன்றுமே தெரியாது. ஆனல் குணங்களைப்பற்றிச் சொல்லத் தொடங்கியபோது அவனல் கவனிக்காமல் இருக்க முடியவில்லே. ஆண்டு, மாதம், தேதிகளைத் திட்டவட்டமாகக் குறிப்பிட்டு, நல்ல காலத்தைப்பற்றியும் கெட்ட காலத்தைப்பற்றியும் அவர் சொல்லச் சொல்லக் கேசவபிள்ளை அவரிடம் கேள்விகளைக் கேட்கத் தொடங்கினன்.

கிராமத்தினர் ஒவ்வொருவராக வரத் தொடங்கினர். அதே முகூர்த்தத்தில் இன்னெரு திருமணம் நடைபெறுகிறது. கொச்சு நாணி யுடையது. கிட்டு மாமாவின் தீர்க்கதரிசனப் பேச்சுக்களுக்குச் சிறிதும் பலன் ஏற்படவில்லே என்று சொல்லமுடியாது. கேசவபிள்ளையிடம் சில மாறுதல்கள் தென்பட்டன. அவன்கூடக் கிராமத்தினரை வரவேற்க முன் வந்தான். அவர்களுக்கு வெற்றிலேப் பாக்கு முதலியவற்றை எடுத்துக் கொடுப்பது போன்ற காரியங்களில் ஈடுபடத் தொடங் கினன். தனக்கும் இந்தத் திருமணத்துக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லே என்ற நிலேமையில் அல்லவா, அவன் இதுகாறும் இருந்து வந்தான்! இப்போது தனக்குக்கூடச் சம்பந்தமுடைய ஒரு காரியந் தான் இது என்ற நிலேமை ஏற்பட்டிருக்கிறது.

நள்ளிரவுக்குப் பின்பே பிரயாணத்தைத் துவக்கினர். படகிலே தான் பிரயாணம். மாப்பிள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களிடையே கேசவபிள்ளையின் பருவமுடையவர் இருவர் மட்டுந்தான். அவர்கள் ஒருபோதும் கேசவபிள்ளையின் நண்பர்களாக இருந்ததில்லே. மற்றவர்கள் அனைவரும் பப்புப்பிள்ளையின் பருவத்தினர்கள். கிட்டு மாமா பாகவத

பாராயணத்தைத் துவக்கினர். இளைஞர்களைத் தவிர மற்றவர்கள் அனைவரும் அவருடைய பாராயணத்தையும் வியாக்கியானத்தையும் கேட்டுக்கொண் டிருந்தனர். இளைஞர்கள் சுகமாகப் படுத்துத் தூங்கினர். தனிமையிலே அமர்ந்திருந்த கேசவபிள்ளைக்குப் பேசக்கூட யாருமில்லை.

மணமகளின் இல்லத்துக்கு ஒரு பர்லாங் தொலைவிலே தென் பகுதி யிலுள்ள ஒரு வீட்டிலேதான் மாப்பிள்ளைக் கோஷ்டியினர் தங்குவதற் கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கேதான் காலை உணவு. அதன் பிறகு மணமகனுக்கு வரவேற்பு.

மணமகளின் உறவினர் மாப்பிள்ளையை வரவேற்க வந்தனர். ஆனால் அவனைக் காணவில்லை. ''கேசவன் எங்கே?'' என்று வயோதிகர்கள் திகைப் புற்று ஒருவரோடு ஒருவர் கேட்டுக்கொண்டனர். சிறிது நேரத்துக்கெல் லாம் அவ்விடம் அல்லோல கல்லோலப்பட்டது. பப்புப்பிள்ளை இருமுறை தொண்டை கிழியக் கத்தினார். கேசவபிள்ளை, அங்கே இருந்தவன் எங்கே போனான்? அந்த வீட்டு மனையின் ஒரு மூலையிலே வயலை நோக்கிச் சாய்ந்து நிற்கிற ஒரு புன்னைமரக்கிளையிலே ஆழ்ந்த சிந்தனை யுடன் அமர்ந்திருந்தான். அங்கே நடைபெற்ற கூச்சல்களும் கூக்குரல்களும் அவன் காதுகளிலே வந்து விழவில்லை. திகைப்புற்று அங்குமிங்குமாக ஓடித் தேடிய கிட்டு மாமாதான் அவனைக் கண்டு பிடித்து அழைத்து வந்தார். பப்புப்பிள்ளைக்குத் தாங்கமுடியாத ஆத்திரம். ஆயினும் தற்போதைக்கு அவர் அதை அடக்கிக்கொண்டார். அவர் கேட்டார்: ''மனிசனுங்க இருக்கிற இடத்தை விட்டுட்டு எந்தக் காட்டிலே போய் ஒளிஞ்சுக்கிட்டே?''

கிட்டு மாமாதான் பதில் கூறினார்: ''விட்டுடுங்க! அவனுடை வயசுப் பசங்க இல்லே. அப்புறம் அவன், நாம்ப கிழவனுங்க உட்கார்ந் திருக்கிற இடத்திலே இருப்பானு?''

முகூர்த்த நேரம் நெருங்கி வந்தது. ஒருவர் மாலையை அவன் கழுத்திலே அணிவித்தார். பெண்கள் மங்களக் குலவையிட்டனர்; ஆண்கள் ஆர்ப்பரித்தனர். அவ்வூர்க் கோவில் நாகசுர வித்வானை ஒரு பெரியவர் 'பிப்பிபீ' என்றும், தவில் வித்வான் 'டும் டும் டும்' என்றும் தங்கள் கைவரிசையைக் காட்டினர். ஊர்வலம் நகர்ந்தது. சம்பக்குளம் தோணி விளையாட்டிலே பாட்டுக்குத் தலைமை தாங்கு கிற பாடகர்களிலே மிகச் சிறந்தவரான கோவிந்தப் பிள்ளை உயர்ந்த குரலிலே பாடிக் கொடுத்தார்:

''பாஞ்சால பூபதியோட பொண்ணுக்கின்று கலியாணம் . . .'' என்று பாட, கூட வருகிறவர்கள் எல்லாருமாகச் சேர்ந்து தாளகதிகளுக்கு இசைந்த முறையில், 'தை தை தக தை தை தோம்' என்று ஆர்ப்பரிக்க ஊர்வலம் நகர்ந்தது.

பாதையோரங்களிலுள்ள வீடுகளுக்கு முன்னால் வந்து நின்ற பெண்கள், மாப்பிள்ளை கடந்து சென்றபோது மங்களக் குலவைக் குரல்களால் வாழ்த்தினர்.

ஓ . . . என்ன ஆர்ப்பரிப்பு! எத்தகைய கோலாகல நாதங்கள்! இந்த நாத அலைகள் திருவனந்தபுரம் நகரம் வரையில் சென்று மோதுமோ? இந்தக் கூச்சல்களும், கூக்குரல்களும் இல்லாமலேயே காரியத்தை நடத்தக் கூடாதா?

அலமாரியின் மறைவிலே ஒரு முத்தத்துக்காக முகத்தை நீட்டியவாறு நின்ற பெண் உருவம் ஒன்று அவன் முன்னே தோன்றியது! ஈரம் கசிகிற கூந்தலின் நுனியைக் கட்டிப் பின்னல் தொங்கவிட்டிருக் கிறாள். கறுப்புக் கோடுடைய மெல்லிய தூய வெள்ளை அங்கவஸ்திரத் தினால் அவள் மார்பை மறைத்திருக்கிறாள். அவன் கண்களை மூடிக் கொண்டான். ஆனால் அந்த உருவம் மறைந்து விடவில்லை. நாளைய தினமும் அவள் இவ்வாறே நின்றுகொண்டிருப்பாள்.

''பாஞ்சாலி பூபதியோட . . .''

அப்பப்பா! என்ன கர்ண கடூரமான சத்தம்! மேலும் மேலும் இது உச்சஸ்தாயியையும் கடந்து மேலே சென்றுகொண்டிருக்கிறதே! இதன் நோக்கமெல்லாம், இன்னுமொரு பெண் தனக்காகக் காத்திருக்க வேண்டாம் என்பதுதானே? தங்கம்மா சிக்கிரமாக அலுவலகத்துக்கு வந்து தனக்காகக் காத்திருக்க வேண்டாமென்றோ? பாழ்க் கட்டடக் கதவைத் திறந்து வைத்து வீட்டு *அங்கணத்திலுள்ள செம்பருத்திச் செடி மறைவிலே தனக்காகக் காத்திருக்க வேண்டாமென்றோ? . . . அந்த ஆனந்தம் என்றென்றைக்குமாகத் தன்னிடமிருந்து பறிக்கப்படுகிறது என்றுதானே இதன் பொருள்?

அவளுக்குப் பதிலாக யார்? இந்தப் பெண்ணோ இதுவரையில் அவன் பார்த்தது கூட இல்லை.

என்றுமே அவ்வாறு காத்திருப்பதென்றால்? இரண்டு மனைவிகள் என்றால்? அங்கே ஒருத்தி காத்திருப்பது; இங்கே வேறொருத்தி காத்திருப்பது!

மாப்பிள்ளை ஊர்வலம் பெண் வீட்டின் படிவாசலை அடைந்தது. ஒரு சிறுவன் வந்து அவன் பாதங்களைக் கழுவினான். அந்தச் சந்தர்ப்பத்தில் ஆர்ப்பாட்ட அரவங்கள் அவற்றின் உச்ச கட்டத்தை அடைந்தன. தோணிப் பாட்டு நின்றுவிட்டது.

வீட்டின் நடு அறை வாசலுக்கு முன்னால் 'முல்லைப் பந்தல்' போட்டிருப்பதைப் பார்க்க முடிந்தது. ஏழு பெரிய குத்து விளக்குகள் சுடர் விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்தன. †அரிசிப்பறை, நெல்பறை ஆகியவை நிறைத்து வைக்கப்பட்டிருந்தன.

---

* அங்கணம்—வீட்டின் முன்புறம், படி வாசலுக்கும் வீட்டுக்குமிடையேயுள்ள நிலப் பகுதி.

† திருமணம் போன்ற மங்களகரமான சடங்குகள் நடைபெறும்போது, பறைகளுக்குள்ளே தென்னம்பூக் குலை, கமுகுப்பூக் குலை ஆகியவற்றைக் குத்தி நிறுத்தி, நெல், அரிசி, மலர், பொரி ஆகியவற்றை அவற்றிலே நிறைத்துப் பந்தலுக்குள்ளே நடுமையத்தில் மாப்பிள்ளையை வரவேற்கும் முறையிலே வைப்பது வழக்கம். மரம், இரும்பு ஆகியவற்றால் நிர்மாணிக்கப் படுகிற தானிய அளவுப் பாத்திரங்களைத்தான் பறை என்கிறார்கள். (மொ—ர்.)

முல்லைப் பந்தல் எனப்படுகிற கல்யாணப் பந்தலுக்கு எந்தவிதமான அலங்காரமும் இல்லாமல் இருந்தது. ஒரு துண்டு வண்ணக் காகிதங்கூட ஒட்டியிருக்கவில்லை. ஆனால், அது தகுந்த இடத்திலேதான் அமைக்கப் பட்டிருந்தது.

முல்லைப் பந்தலுக்குள்ளே போட்டிருந்த, வெள்ளைத்துணி விரித் திருந்த பலகைமீது மாப்பிள்ளையை உட்கார வைத்தனர். அஷ்ட மங்கலியத்தையும், விளக்கையும் எடுத்துக்கொண்டு ஒரு பெண் முன்னால் வர, அவளுக்குப் பின்னால் மற்றொரு பெண்ணிடம் கழுத்தைப் பற்றியவாறு மணப் பெண் பந்தலுக்குள்ளே வந்தாள். வாழ்நாளிலே முதல் முறையாகவே கேசவபிள்ளை அவளைப் பார்க்கிறான். இல்லை... சில ஆண்டுகளுக்கு முன்னால் சின்னஞ் சிறிய பருவத்திலே அவன் அவளைப் பார்த்ததுண்டு. அந்த உருவம் இப்போது நினைவில் இல்லை.

அவனுக்கு அருகிலே அந்தப் பெண்ணை உட்கார வைத்தனர். யாரோ ஒருவர் அவன் கரத்திலே வெற்றிலைப் பாக்கை வைத்துக் கொடுத்தார். அவன் அப்பாவுக்குக் கொடுத்தான். அப்பா பப்புப்பிள்ளைக்குத் தட்சிணை கொடுத்தபோது அவன், அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினான்.

அவர் மஞ்சள் சரட்டிலே கோத்து வைத்திருந்த தாலியை மைந்த னிடம் கொடுத்தார். ஆர்ப்பரிப்பு, குலவைகள் ஆகிய பேரரவங் களுக்கு இடையில் அவன் நடுங்குகிற கரத்துடன் அவளுடைய கழுத்திலே தாலியைக் கட்ட முற்பட்டான். ஆனால், கட்டுச் சரியாக விழவில்லை. கைகள் நடுங்கின. பின்னால் நின்றுகொண்டிருந்த பெண்கள் சிரித்தனர். கடைசியில்தான் அந்தக் கட்டுச் சரியாக விழுந்தது. சரட்டின் தலைப்பை இழுத்தபோது, அது கழுத்தைச் சுற்றி இறுக்கிக் கொண்டது. பெண்ணின் கண்மணி வெளியே வந்தது. யாரோ உரத்த குரலில் கூறினான்: ''கட்டைத் தளர்த்து!''

யாரோ பெண்கள்தான் அந்தக் கட்டைத் தளர்த்திக் கொடுத்தனர்.

பின் 'புடைவை கொடுப்பது' என்ற சடங்கு நடைபெற்றது. பாணிக்கிருகண முகூர்த்தம் வந்தது. தன் வலக்கரம் எது, இடக் கரம் எது என்றறிய முடியாதவனைத் திணறுகிறான். எப்படியாவது அங்கிருந்து தப்பித்துவிட்டால் போதுமென்றாகிவிட்டது அவனுக்கு.

சடங்கு முடிந்தது. விருந்தும் நடந்தேறியது. பெண்ணை அன்றைக்கே ஊருக்கு அழைத்துச் செல்கிறார்கள்.

மாலை நான்கு மணிக்கு அவர்கள் அனைவரும் ஊர் வந்து சேர்ந்தனர்.

சிறிது நேரத்துக்குப் பிறகு வீட்டின் பின்புறப் பகுதியிலிருந்து வாய்ச் சண்டையின் ஓசைகள் கிளம்பி வந்தன. சில அண்டை வீட்டுப் பெண்க ளுக்கும் குட்டியம்மாவுக்கும் இடையிலேதான் சண்டை நடைபெற்றது. குட்டியம்மா கேட்டாள்: ''யாருக்குத்தான் நஷ்டம்ங்கறேன்? அதைச் சொல்லு! பொண்ணுக்கு க்ஷயரோகம்னு என் மகன் டாக்டரை வச்சுச் சிகிச்சை பண்ணி அவளைக் குணப்படுத்திடுவான்!''

அப்புறம் அம்மா தொடர்ந்து கூறினாள்: ''பொண்ணுங்களோட பொறுமை! ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணி அழைச்சுக்கிட்டு வந்தா அவளோட குறைங்களைப்பற்றிச் சொல்றதுதான் இவங்களோட வேலை. இதென்ன கூத்து!''

குட்டியம்மாவை அமைதிப்படுத்த கௌரியம்மாவும், கிட்டு மாமாவும் முயன்றனர். குட்டியம்மாவுக்குக் கோபம் வந்துவிட்டால், அது அவ்வளவு சீக்கிரத்திலே அடங்கிவிடாது. திருமண வைபவத்திலே பங்கெடுத்துக்கொண்ட யாரோ ஒருவன் பெண்ணுக்கு கூடியரோகம் என்றும், அவளுக்குப் போதுமான கூந்தல் இல்லை என்றும், பற்கள் சிறிது முன்னே தள்ளி நிற்கின்றன என்றும், கறுப்பு நிறம் என்றும் இன்னும் என்னவெல்லாமோ சொன்னானும். அது குட்டியம்மாவின் காதிலே விழுந்தது. அவளுக்குக் கோபம் வந்துவிட்டது.

கேசவபிள்ளை அன்றைய தினமே திருவனந்தபுரத்துக்குத் திரும்ப வேண்டும். லீவு இரண்டு நாட்களுக்கு மட்டுந்தான். அன்று மாலை நீராவிப் படகேறிச் சென்றுல்தான் மறுநாள் காலையில் அலுவலகத்துக்குப் போக முடியும்.

மகன் மறுநாள் போனால் போதுமென்ற எண்ணம் குட்டியம்மாவுக்கு. அவள் சொன்னாள்: ''பொறுமைக்காரங்க வாய்க்கு வந்தபடி இப்பவே சொல்றுங்கப்பா. அப்படியிருக்கிறப்போ இன்னிக்கே கிளம்பிப் போயிட்டா சனங்க இன்னும் சேர்த்துச் சொல்லுவாங்க.''

அன்றைக்கே கிளம்பிச் செல்ல வேண்டுமென்பது கேசவபிள்ளையின் நிர்ப்பந்தம். அவனைப் போன்ற இளைஞர்கள் யாராவது இருந்திருந்தால் அவர்களைக் கொண்டு அவனிடம் சொல்ல வைத்து அன்று அங்கேயே தங்க வைத்திருக்கலாம் என்பது குட்டியம்மாவின் திட்டம். அன்று 'அதற்கு' நல்ல நாள். கிட்டு மாமாவிடம் கேட்டுத் தெரிந்து வைத்திருந்தாள்.

அதைப்பற்றி ஒரு தாய் தன் மகனிடம் எங்ஙனம் கூறமுடியும்?

விருப்பமில்லாத திருமணம். தாய் தந்தையர்களுக்காகவே அந்தச் சடங்கு ஒப்புக்கொள்ளப்பட்டது. எனவே, இனிப் போய்விடலாம் என்பது தானே, அவனுடைய திட்டம்? இளைஞர்கள் இப்படியும் இருப்பார்களா? மெலிந்தவள்தான்; கூந்தலுக்கு நீளம் குறைவுதான்; சிறிது கறுப்பு நிறமுங்கூட. ஆயினும் இளமைப் பருவந்தானே? வசீகரமாகத்தான் இருக்கிறாள். தாயார் இதைப்பற்றியெல்லாம் நினைத்துப் பார்த்தாள். மகள் கௌரியம்மாவிடம் சொல்லவும் செய்தாள். அவன் அந்தப் பெண்ணைத் தொடாமல் இருந்துவிடுவானு? திரும்பிப் போவதிலேதான் அவசரம். இன்று, ஒருவேளை, ஒரு தடவை அவளோடு இணைந்துவிட்டால் போகப் போக எல்லாம் சரியாய்ப் போய்விடலாம். இன்னைக்கு அவனை அனுப்பாமல் இருக்க என்ன வழி?

குட்டியம்மா கார்த்தியாயினியை அணுகினாள். அவள் தனிமையிலே அமர்ந்திருந்தாள். அவன் அன்றைய தினமே திரும்பிப் போகத் தீர்மானித்திருந்ததைப்பற்றி அவளுக்குத் தெரியாது.

தாயார் சொன்னாள்: ''அவன் இன்னேக்கே போகணுமாம். லீவு இல்லேங்கறான்.''

கார்த்தியாயினியின் முகபாவத்திலே எவ்வித மாறுதலும் காணப்பட வில்லை.

ஆயின், அது அவளைப் பொறுத்த வரையில் எந்தவிதமான முக்கியத் துவமும் இல்லாத விஷயமா? அவ்விதம் இருக்க முடியாது. முதல் இரவைப் பற்றி அவளுக்கு ஆவேச உணர்ச்சிகள் மிருந்த கனவுகள் இல்லாமல் இருக்குமா? நிச்சயதார்த்தம் நடைபெற்ற அன்றைய நாளிலிருந்து முதல் இரவைத்தானே கனவு காண்பாள்? அதை அல்லாமல், மாலை அணிவிப்பதையும், தாலி கட்டுவதையுமா கனவு காண்பாள்? அவை வெறும் சடங்குகள் அல்லவா? ஆம், முதலிரவு என்ற உண்மையைப் பற்றியே அவர்கள் கனவு காண்பார்கள். அந்த இரவு நெருங்கி நெருங்கி வருவதையே விரும்புவார்கள். அவள்கூட முதலிரவைப் பற்றியே கனவு கண்டுகொண்டிருக்கிறாள் என்பது திண்ணம்.

குட்டியம்மா அவளிடம் கூறினாள்: ''நீ ஒண்ணு செய்யம்மா. அதோ பாரு! அந்தப் பக்கமா அவன் நிக்கறான். தனியாத்தான். இன்னேக்குப் போக வேணும்னு நீ போய் சொல்லம்மா!''

அவள் நாணத்தினால் சுருங்கிவிட்டாள்.

இப்படிக் குட்டியம்மாவுக்குப் பொது அறிவுகூட இல்லாமல் போய் விட்டது. ஒரு பெண், எவ்வளவுதான் ஆவேச உணர்ச்சி கொண்டவளாக இருந்தபோதிலும், திருமணம் முடிந்து ஒரு சில மணி நேரங்கள் முடியு முன்னரே தன் கணவனிடம் சென்று அவ்வாறு சொல்லுவாளா? அவர்கள் ஏற்கெனவே அறிமுகமான காதலர்களாகவே இருக்கட்டும். அப்படியிருந்தாலுங்கூட அவள் சொல்லமாட்டாள். ஆனால் மகனும் மருமகளும் பரஸ்பரம் நெருங்க வேண்டுமென்ற ஆவல் மிகுதியில் அந்தத் தாயார் இதையெல்லாம் மறந்துவிட்டாள். எதையும் சொல்லாமல் வெட்கி நின்ற கார்த்தியாயினியிடம் குட்டியம்மா சொன்னாள்: ''இல்லாட்டா வேணும்மா. அவன் இப்போ போயிடுவான்.''

இருந்தும் கார்த்தியாயினி அசையவில்லை. அவன் போகக்கூடாதென்று அவள் விரும்புகிறாள். ஆனால் சென்று சொல்ல அவளால் முடியாது.

திரும்பிப் போக வேண்டுமென்று அடம் பிடித்து நின்றான் கேசவ பிள்ளை. அதற்குப் பணிவதைத் தவிர வேறு வழியில்லை. என்றைக்குத் திரும்பி வருவானென்றும் அவன் சொல்லவில்லை. அது தாயாரின் கவனத் துக்கு வந்தது.

வேறு வழி காணுமல் பப்புப்பிள்ளை கேட்டார்: ''நீ என்னைக்கு வருவே?''

''அது அங்கே போய்ச் சேர்ந்த பிறகுதான் தீர்மானிக்க முடியும்.''

பப்புப்பிள்ளை கடுமையான முறையில் கட்டளையிட்டார்: ''ரெண்டு நாள் லீவு எடுத்துக்கொண்டு அடுத்த ஞாயிற்றுக்கிழமை நீ வந்து சேரணும்!''

கேசவபிள்ளை பேசவில்லை. கிட்டு மாமா அடுத்த நல்ல நாள் எது என்பதைக் கண்டுபிடிக்கக் கணக்குப் போட்டுப் பார்த்தார்.

கிட்டு மாமா கண்டுபிடித்ததுவும் அதேதான். அடுத்த திங்கட்கிழமை நல்ல நாள்தான்.

பப்புப்பிள்ளை மீண்டும் கேட்டார்: ''ஞாயிற்றுக்கிழமை வருவியா?''

''பார்க்கிறேன்.'' கேசவபிள்ளை ஒரே வார்த்தையில் கொடுத்த பதில்.

எல்லாரும் படிவாசல் வரையில் கேசவபிள்ளையைத் தொடர்ந்து சென்றனர். கூடத்தின் கதவோரமாக மறைந்து நின்றவாறு கார்த்தியாயினி பார்த்தாள். அவன் ஒருமுறை கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. அத்தகைய ஒருத்தி இருக்கிறாள் என்ற நினைவே அவனுக்கு இல்லைபோல் தோன்றியது.

அன்று இரவிலே தகர்ந்துவிட்ட கனவுகளுடன், தனிமையிலே படுத்தவாறு அவள் அழுவாளோ?

அத்தியாயம் 5

திறந்து வைத்த கதவு

திருவனந்தபுரத்துக்குத் திரும்புகையில், தங்கம்மாவின் முகத்திலே விழிப்பது எப்படி என்ற சிந்தனையே கேசவபிள்ளையின் மனத்தை உலுக்கியது. அவளிடம் எல்லாவற்றையும் ஒளிவுமறைவின்றித் திறந்து சொல்லிவிட்டால் என்ன? ஆனால், அத்தகைய முடிவுக்கு வர அவனால் முடியவில்லை. அத்தகைய பலவீனத்துக்குக் காரணம் என்னவென்று அவனுக்குப் புலப்படவில்லை.

இதயத் துடிப்புடன்தான் அவன் அலுவலகத்துக்கு வந்தான். அங்கே தனக்கு உதவியளிக்க யாருமில்லை என்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது. வேலை உயர்வுபற்றியோ, சிபாரிசுபற்றியோ இனிமேல் கவலை காண வேண்டியதில்லை என்றும் அவனுக்குத் தோன்றுமல் இல்லை. அதனால் ஏற்பட்ட சோர்வும் களைப்பும் அவன் மனத்திலே ஊடுருவியிருந்தன. தனக்குக் கரம் தந்து கரையேற்ற இனிமேல் யார் இருக்கிறார்கள்? தேடி வந்த அந்த அதிருஷ்டம் கைநழுவிப் போய்விட்டது அல்லது அதை இழந்துவிட்டான். ஏன்? இழக்கச் செய்தான்.

அரசாங்கச் செயலாளரான கிருஷ்ணன் நாயருடைய அண்ணன் மகள் தான் தங்கம்மா. அவளுடைய கணவன் ஆகப்போகிறவனுக்கு அரசாங்கக் காரியாலயத்திலே அபாரமான ஆதரவு இருந்துவருமென்பது திண்ணம். ஆனால், இப்போது? அந்த அதிருஷ்டதேவதை மரணதேவதையாக மாறி விடலாம். அண்ணன் மகளுக்குத் துரோகமிழைத்தவன் என்ற முறையிலே செயலாளர் கிருஷ்ணன் நாயர் அவனுடைய எதிரியாக மாறுவதற்கான சந்தர்ப்பம் உண்டு. எனவே, நுணையற்றவன் என்பது மட்டுமின்றி எதிரியையும் உடையவன் என்ற நிலைமையும் ஏற்பட்டுவிட்டது. ஒரு வேளை, இந்த வேலைகூடப் போய்விடலாம்.

உத்தியோகத்தில் நுழைந்தபோது அபிலாஷைகள் இல்லாமல் இருந்தன. அபிலாஷைகள் எழுந்தபோது அநுகூலம் அல்லாத சூழ்நிலைமைகள் ஏற்பட்டுவிடுகிற அளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டது. உத்தியோகத்தில் நுழைந்த அந்த நாள் போன்று இந்த நாளும் மிக முக்கியமான தாகிவிட்டதென்று கேசவபிள்ளைக்குத் தோன்றியது. இப்போது அவன் தகர்ந்துவிட்ட அபிலாஷைகளை உடையவன்.

இதற்குமுன் என்றுமே இல்லாத வசீகரக் களையுடன் தங்கம்மா இன்று காணப்பட்டாள். சந்தேகமில்லாமலே சொல்லமுடியும், அவள் அழகியென்று! ஓ! அந்த வதனத்தினுடைய வசீகரந்தான் என்ன!

அந்தப் புன்னகையில் இதற்குமுன் என்றுமே இல்லாத பிரகாசம் இன்று காணப்படுகிறது. அவள், ஏன் இவ்வளவு அழகியாக இருக்கிறாள்? திக்கற்ற, நாதியற்ற நிலைமையில் இருந்து வந்த தன் வாழ்க்கையிலே அவள் ஏன் வந்து நுழைந்தாள்? இந்த அழகுச் செல்வம் தனக்குச் சொந்தமாகும் அதிருஷ்டம் இல்லை. அதன்மீது ஏற்பட்டுள்ள ஆவேச உணர்ச்சி விலக்கப்படவேண்டியதுதான். விலக்கப்படுகிற பொருள் மீதுள்ள ஆசை நல்லதல்ல. அதை என்றென்றைக்குமாக விலக்கித் தான் வைக்கவேண்டும். எங்ஙனம்? அதற்கான சக்தியுண்டா? இந்தக் கொள்ளை அழகினையும், மிகப் பெரிய வசதிகளையும் உதறித் தள்ளிவிடத் தனக்குச் சக்தியுண்டா? ஆம், அந்தச் சக்தியை உருவாக்கியே தீர வேண்டும்.

கிட்டு மாமாவின் குரல் எங்கிருந்தோ அவன் காதுகளில் வந்து முழங்கியது. ''அவள் அதிருஷ்டக்காரிதாம்ப்பா!''

தங்கம்மா கேட்டாள்: ''பத்திரம் எழுதிக் கொடுத்திட்டீங்களா?''

அவன் புன்னகை புரிய முயன்றான். ஆனால் முடியவில்லை. கேள்விக்கு 'ஆம்' என்றோ, 'இல்லை' என்றோ பதில் அளிக்கவும் இல்லை.

அடுத்த கேள்வி பிறந்தது: ''தங்கியிருக்கிறவங்களை வெளியேற்றி நிலத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளணுங்கிற ஆசையிலே மண் விழுந்துடுச்சுங்களா? வாழ்நாளிலே கொண்டிருந்த அந்த ஒரே ஆசை தகர்ந்து போச்சேங்கிற மனவருத்தங்களா?''

'ஆம்' என்று பொருள்படும்படியாக அவன் ஒருமுறை சிரித்தான். அதற்கும் சிரிப்புத்தானா? போலிச் சிரிப்பு! சிரிப்பினுடைய பிசாசு! வெறும் நடிப்பு!

அவன் மிகப் பெரிய மனக்குழப்பத்துக்கு உள்ளாயிருக்கிறான் என்பதை அவள் புரிந்துகொண்டு சொன்னாள்: ''அதுக்காக இவ்வளவு வருத்தப் படறீங்களே? இதைவிடவும் பெரிய நிலத்தைச் சொந்தமாக்கிக் கொள்வதற்கான அதிருஷ்டம் ஏற்படாமலா போயிடும்? ஏன்? அந்த நிலத்தையே திரும்ப எழுதி வாங்கினாலும் வாங்கிடலாமே!''

கேசவபிள்ளை பதில் கூறவில்லை. அவன் கட்டிவிட்ட அந்தக் கட்டுக் கதை இப்போது அவனையே பார்த்து ஏளனப் புன்னகை புரிந்தது.

இரண்டு நாள் வேலை அப்படியே கிடக்கிறது. அதைச் செய்து முடிக்க வேண்டும் என்ற பாவனையில் கேசவபிள்ளை அவசர அவசரமாக அரசாங்க அலுவல் ஒளிலே மூழ்கிவிட்டவன்போல் பேசாமல் இருந்துவிட்டான். அவன் மிகவும் குழப்பமடைந்திருக்கிறான் என்பதை உணர்ந்து கொண்ட தங்கம்மாவும் பேசவில்லை. அவனை அவன் போக்கில் விட்டுவிடுவதே தற்போதைக்கு நல்லது என்று அவள் எண்ணியிருக்கக்கூடும், அல்லது அவனைத் தன்னுடைய எளிதில் உற்சாகப்படுத்தமுடியும்; இப்போது அவசரம் வேண்டாம் என்று நினைத்திருக்கக்கூடும். வேண்டுமானால் இப்போதே கூடக் கிச்சுக்கிச்சு மூட்டிச் சிரிக்கவைக்கலாம்.

* * *

சம்பளம் கிடைத்தபோது, அதிலிருந்து பதின்மூன்று ரூபாய் எடுத்துத் தங்கம்மாவின் மேஜைமீது வைத்தான் கேசவபிள்ளை. அது எதற்காக என்று கேட்பதுபோல் அவள், அவன் முகத்தைப் பார்த்தாள். அவன் ஒன்றுமே பேசவில்லை. அவள் சொன்னாள்: ''மீதி ஆறு ரூபாய் மட்டுந் தானே, உங்க கையிலே இருக்கு? இப்போ வேண்டாங்க.''

நெஞ்சுமீது அம்பு துளைத்ததுபோல் தோன்றியது அவனுக்கு அந்தப் பேச்சு. பொறுக்க முடியவில்லை. பொறுக்கக்கூடிய வேதனை அல்ல இது. திருமணத்துக்குக் கிளம்பிச் செல்வதற்காகப் பத்து ரூபாய் வாங்கியபோது அவனுக்கு இவ்வளவு வேதனை ஏற்படவில்லை. இப்போது திருமணத்தை முடித்துவிட்டு வந்தபோதே அதன் வேதனையை அறிந்துகொள்ள முடிகிறது.

தன் உண்மை நிலையை வெளிப்படுத்துபவன்போல், சுய நினைவு இழந்தவனைக் கேசவபிள்ளை கேட்டான்: ''அதுவும் வேணுமா?''

அவளுக்குப் புரியாமல் கேட்டாள்: ''அப்படீன்னா?''

சொன்னது, உண்மை நிலையை வெளிப்படுத்துகிற சமிக்ஞையாகி விட்டதென்று அப்போதுதான் அவனால் அறிந்துகொள்ள முடிந்தது. எதையும் வெளிப்படுத்தக்கூடாதென்ற உறுதியான எண்ணம் அவனை ஆட்கொண்டது. சுய உணர்வு பெற்றவனைக அவன் சொன்னான்: ''இல்லே . . . நீ பணமும் தரணுமான்னுதான் கேட்டேன்.''

அவள் வதனம் திடீரென வாட்டமடைந்ததுபோல் தோன்றியது. அவன் மீண்டும் சொன்னான்: ''சும்மாதான் சொன்னேன். இப்போ இதை வச்சுக்கோ! அப்புறம் நான் வாங்கிக்கறேன். வேடிக்கையாச் சொன்னக்கூட வாடித் தளர்ந்துடறதா?''

அவள சொன்னாள்: ''இது வேடிக்கையாக இருக்கமுடியாது. இப்போ உங்க மனநிலையிலே வேடிக்கை சொல்லமுடியாது. என்னமோ மனசில் இருக்கு. அதுமட்டும் உறுதி.''

சிரிப்பை வரவழைத்தவாறு அவன் கூறினான்: ''இல்லே.''

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவளுடைய அழகும், கவர்ச்சியும் அதிகரிப்பதாகக் கேசவபிள்ளைக்குத் தோன்றியது. ஒவ்வொரு நாளும் புதுதுபுதிதான வசீகரத் தோற்றத்துடன் அவள் வந்தாள். முற்றும் புதுமை! நேற்றைய தினம் பார்த்த தங்கம்மாவை அல்ல இன்றைய தினம் பார்ப்பது. இத்தகைய பிரத்தியேக நிலைமை இதற்குமுன் ஏற்பட்டதில்லை; அல்லது, அவனால் பார்க்கமுடியவில்லையோ என்னவோ? அவளைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும் என்ற ஆவேச உணர்ச்சி தினம் அபரிமிதமாக அதிகரித்து வருகிறது.

அவள் திட்டமிட்டுத்தான் இப்படி நடந்துகொள்கிறாளா? நேற்றைய சிகையலங்காரத்தை இன்று பார்க்கமுடியாது. தினுசை மாற்றிவிடுகிறாள். உடைகளையும் மாற்றி மாற்றி அணிந்துவருகிறாள். நேற்று நெற்றிமீது பொட்டு வைத்திருந்தாள் என்றால், இன்று சந்தனத்திலே நாமக்குறி

வரைந்திருக்கிறாள். ஆனால் இவை அனைத்தும் பெண்களுக்குச் சகஜமாக இருந்துவருகிற இயல்புகள்தான் என்றே வைத்துக்கொள்வோம். குறிப்பிடத்தக்கக் குணம்சங்கள் அவை அல்ல; அவை மட்டுமல்ல. நேற்றைய தினம் அவளது வதனம் மலர்ந்து வருகிற ஒரு பூப்போன்று தூய்மையுடையதாக இருந்ததென்றால், இன்றைய தினம் அது வாட்ட மடைந்திருக்கிறது; அதிலே களைப்புத் தட்டியிருக்கிறது. கண்களிலே கனவுகள் தோன்றுகின்றன. நாளைய தினம் மனவளர்ச்சி பெற்ற ஒரு பெண்ணின் துணிச்சல் அந்த முகத்திலே பிரதிபலிக்கிறது. அடுத்த நாள் ஒரு சிறுமியின் அறிவீனம் அதிலே பரவி நிற்கிறது. இன்னொரு நாள் இன்னல் நிறைந்த பிரச்னைகளால் துன்புறுகிற ஒரு பெண்ணின் பேதைமைத் தோற்றம் . . . மாறுதல்கள் இவ்வாறு இருந்தன.

கேசவபிள்ளையைச் சிந்தனைக் கழல்களிலிருந்து மீட்கவும் அவனுக்கு ஆறுதல் அளிக்கவும் அவள் முயன்றுகொண்டிருந்தாள். சில சந்தர்ப்பங் களில் அவனைச் சிரிக்க வைப்பதற்கென்றே வேடிக்கைப் பேச்சுக்களில் ஈடுபட்டுவந்தாள்; சில சமயங்களில் மௌனங்கியவள்போல் பேசாமல் இருந்துவிடுவாள்; வேறு சில நேரங்களில், அவனுக்கே உற்சாகமடை யட்டும் என்று கருதிப் பேசாமல் இருந்துவிடுவாள்.

தங்கம்மா திலசரி அலுவலக நேரத்துக்கு அரை மணி நேரம் முன்பே வந்துவிடுவாள். ஆனால், அவன் திலசரி ஒரு நிமிஷமாவது தாமதித்தே வந்து சேருவான். அது அவனுடைய வழக்கம் போல் ஆகிவிட்டது. அவள் அன்றுடம் கூறிவந்தாள்: ''நான் அரை மணி நேரத்துக்கு முந்தியே வந்துட்டேன்.''

அவன் அக்கறையில்லாதவன்போல் பதில் அளிப்பான்: ''ஆம். நான் கொஞ்சம் லேட்டாயிட்டேன்.''

ஒரு நாள் அவள் சொன்னாள்: ''இன்னைக்குப் படிக்கட்டடக் கதவைத் திறந்து வச்சிருப்பேன்.''

அவன் அன்று போகவில்லை. ஆனால், தங்கிவரும் விடுதியிலிருந்து இரண்டு மூன்று தடவை வெளியே கிளம்பி நடந்தவன்தான். தங்கம்மா வீட்டுக்கு மட்டும் போய்ச் சேரவில்லை. அவ்வளவுதான்.

இவ்வாறு ஆறேழு நாட்களாகக் கேசவபிள்ளை உண்மையிலேயே கடின மான ஒரு மனப்போராட்டத்தில் உழன்றுகொண்டிருந்தான்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமையன்று ஊருக்குப் போகவேண்டும். கட்டாயம் வந்துவிடுவதாகத் தாய் தந்தையர்களுக்கு உறுதியளித்திருந் தான். ஆனால், பிரயாணச் செலவுக்குக் கையிலே பணம் இல்லை. சம்பளம் கிடைத்துச் செலவு போக மிஞ்சியது வெறும் ஆறு ரூபாய் மட்டுந்தான். அதைக் கொடுத்துச் சாப்பாட்டுக்கான டிக்கெட்டை ஓட்டலிலிருந்து வாங்கியாகிவிட்டது. பாக்கி ஒரு காசுகூடக் கிடையாது. தங்கம்மா கொடுப்பாள். அவளிடமிருந்து வாங்க மனம் இல்லை. அது மட்டுமா? எதற்காக ஞாயிற்றுக்கிழமையன்று ஊருக்குப் போவதென்று கேட்டால் என்ன பதில் சொல்வது?

வீட்டுப் பிரச்னைகள் அவனைப் படாதபாடு படுத்திக்கொண்டிருந்தன. அங்கே அப்பாவுக்குக் கோபம் வந்துவிடும். அம்மா அழுவாள். அந்தப் பெண்! . . .அவளுடைய நிலைமை என்னவாக இருக்கும்? அதைக் கற்பனை செய்துகூடப் பார்க்க அவனால் முடியவில்லை. அழுதுகொண்டிருப்பாள்; அல்லது பிணங்கியிருப்பாள்! என்னவோ?

அந்தச் சனிக்கிழமையன்று அவன் மிகவும் களைப்படைந்திருந்தான். இரவில் தூக்கம் வரவில்லை. எப்படியாவது, யாரிடமிருந்தாவது ஐந்து ரூபாய் வாங்கி வைத்திருக்கவேண்டும். ஒரு நாள் லீவு எடுத்து ஊருக்குக் கிளம்பியிருந்திருக்கவேண்டும். ஆனால், போவதென்று முடிவெடுக்க அவனால் முடியவில்லை. போவதற்கான, போயே ஆகவேண்டுமென்பதற்கான காரணங்கள் அவன் மனத்திலே பலமாகச் செயல்பட்டு வருகின்றன. ஆனால், அந்தக் காரணங்கள் தோல்வியடைந்து வருகின்றன. அவனை அனுப்பி வைக்க அவற்றினால் முடியவில்லை.

* * *

அன்றிரவு அவன் தூங்கவில்லை. மறுநாள் காலை முதல் அவன் எந்த விதமான குறிக்கோளுமின்றித் திருவனந்தபுரம் நகரம் முழுதும் சுற்றி நடந்துகொண்டிருந்தான். தங்கம்மா வீட்டுப் படிவாசல் வழியாகவும் அவன் நடந்து சென்றான். சும்மா நடை, அவ்வளவுதான். பொழுது போனபின் விடுதிக்குத் திரும்பி வந்தான். வந்ததும் படுத்துத் தூங்கி விட்டான்.

''தூங்கீட்டீங்களா?''

ஒருவர் அறைக்குள்ளே வந்து கேட்டார். கேசவபிள்ளை கண் திறந்தான். அறிமுகமில்லாத, நடுத்தரப் பருவத்தினரான ஒரு மனிதர் முன்னால் வந்து நின்றார். அழுக்கு உடை! களைப்புற்று மெலிந்திருந்த உடல்! அந்த மனிதனுடைய தோற்றம் இவ்வாறு இருந்தது. அவர் கேசவபிள்ளையிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தார்.

''குட்டன்பிள்ளை அண்ணாவோட கடிதம்.''

கேசவபிள்ளை கடிதத்தை வாசித்துவிட்டுக் கேட்டான்:

''உங்களுக்கு என்ன காரியம் சாதிக்கணும்?''

அந்த மனிதர் கூறினார்: ''வாழ்நாள் முழுதும் சேர்ந்து உழைச்சுச் சம்பாதிச்சது இதுதான். இதல்லாமே வேற சொத்துன்னு சொல்ல எனக்கு ஒண்ணுமே இல்லே. அந்த மாபாவி எனக்குத் துரோகம் பண்ணிட்டான். அதோட பலனை அவன் அநுபவிச்சுக்கிட்டிருக்கான். அவனோட மகனுக்குப் பைத்தியம்! முழுப் பைத்தியம்! எனக்காவது வறுமைக் கஷ்டம் மட்டுந்தான். உழைச்சு நாலு துட்டு சேர்க்கலாம்னு அந்தக் காலமும் போச்சு. இனி இதில்லாமே எனக்கு வேற வழியில்லே. ராகு தசையாயிருந்தது. அது போயிடுச்சுன்னு வச்சுக்கோ. இப்போ

நல்ல காலம் வந்துக்கிட்டிருக்கு. எனக்குன்னு இருக்கிறது என் கையிலே வந்து சேரத்தான் செய்யும். சீஃப் செக்ரடரி மூலமா என் காரியம் கைகூடறதுக்கு இப்போ நல்ல சந்தர்ப்பம் இருக்கு. காரியம் கைகூடணும்னு அந்தப் பைஃல் அவருகிட்டே கிடைக்கணும். அந்தப் பைஃல் வேணும்னு சொல்லி உங்க இலாக்காவுக்கு எழுதியிருக்கார். நீங்க அதைக் கொஞ்சம் அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யணும். நீங்க செய்யவேண்டியது இவ்வளவுதாங்க.''

கோபாலன் நாயருக்கு ஓரளவு வாழ்க்கை நடத்தப் போதிய சொத்துக்கள் இருந்து வந்தன. ஏறத்தாழப் பத்து வருஷங்களுக்குமுன் அவர் நிலம் அரசாங்கத் தேவைக்காகப் 'பொன்னும் விலை'க்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. இன்னும் அந்த விலை அவர் கைக்கு வந்து சேரவில்லை. அன்று அந்தப் பொறுப்பை வகித்து வந்த தாசில்தார், நாயருக்குச் செய்த துரோகத்தினால்தான் அவ்வாறு நேர்ந்தது என்று சொல்லப்படுகிறது. வேண்டுமென்றே தடை செய்து வைத்திருந்தாராம். அந்த உத்தியோகஸ்தருடைய மகளுக்குத் திருமணம் நடைபெற்றபோது நாயரிடம் எதையோ கொண்டுவந்து தரச்சொல்லிக் கேட்டாராம். கோபாலன் நாயர் அதைக் கொடுக்கவில்லையாம். அதைத் தொடர்ந்து இன்றைத் தேதி வரையில் அவர் அந்தப் பணத்துக்காக நடந்துகொண்டிருக்கிறார். 'பொன்னும் விலைக்கு'க்* கொடுக்கப்பட்டது போக ஒரு துண்டு மனை இருந்து வருகிறது. அங்கேதான் அவர் வசித்து வருகிறார். இந்த முயற்சியில் அவர் அதை அடகு வைத்திருக்கிறார். அரசாங்கத்திலிருந்து கிடைக்கவேண்டிய அந்தப் பொன்னும் விலை மட்டுமே அவருக்கு இருந்து வருகிற சொத்து. இந்தக் காலகட்டம் முழுதும் முயன்று வந்தது, அது தம் கைக்கு வந்து சேருவதற்காகவேதான். வழக்கைத் தொடுக்க அவருக்குச் சக்தியும் இல்லை.

கோபாலன் நாயர் தொடர்ந்து கூறினார்: ''குட்டன்பிள்ளை அண்ணனும் நானும் ரொம்பமும் நெருங்கிய நண்பனுங்க. நீங்க நேற்றைக்கு ஊருக்கு வருவீங்கன்னு சொன்னுங்க. நான் உங்களை அங்கே எதிர் பாத்துக்கிட்டிருந்தேன், கூடவே சேர்ந்து வரலாம்னு. நீங்க வரலை. நான் இங்கே வந்துட்டேன். அம்மா அப்பா எல்லாரும் ரொம்பக் கவலையோடு இருக்காங்க. எதாச்சும் நோய் கீய் ஏற்பட்டிருக்குமோன்னு அவங்க பயந்துக்கறுங்க.''

கேசவபிள்ளை சொன்னான்: ''உடம்புக்குக் கொஞ்சம் சரியில்லை தான்.''

அவன் தொடர்ந்து கேட்டான்: ''மைஃபல் அனுப்பினு மட்டும் போதுமா?''

''போதும் போதும். ஆனு கொஞ்சம் சீக்கிரமா வேணும். அப்படீன்னு நாளைக்கே.''

---

* சர்க்கார் தேவைக்காக எடுக்கப்படும் பூமிக்குச் சர்க்கார் நிர்மானிக்கும் விலையையே 'பொன்னும் விலை' என்று சொல்லிருர்கள்.

''அந்தச் சூப்பிரண்டு ரொம்பப் பொல்லாதவனுக்கும்.''

கோபாலன் நாயருக்கு அது நன்றாகத் தெரியும். அவர் சொன்னார்: ''ஏதாவது செய்யலாங்க.''

இது பயன்படுத்தப்படவேண்டிய சந்தர்ப்பந்தான் என்ற எண்ணம் எப்படியோ கேசவபிள்ளையின் மனத்திலே இடம் பிடித்துக்கொண்டது. அவனுடைய மூளை மின்னல்போன்று இயங்கத் தொடங்கியது. அதனால் ஏற்பட்ட உற்சாகம் அவனிடம் காணப்பட்டது.

கோபாலன் நாயர் கேட்டார்: ''சார், உங்களுக்கும், சூப்பிரண்டு அவர்களுக்கும் எப்படீங்க?''

நெருங்கிய நட்புக்கொண்டவர்கள் என்று சொல்லலாமா? அல்லது, அதை மறுக்கலாமா? ஒருகணம் என்ன சொல்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. அலுவலகத்திலே கோவிந்தன் நாயர், பிரபாகரன் நாயர் போன்றோர் இத்தகைய சந்தர்ப்பங்களில் தங்கள் மதிநுட்பத்தைப் பயன்படுத்திப் பலன் அளிக்கும் முறையிலே பேசுவதையும், நடந்து கொள்வதையும் கேசவபிள்ளை பார்த்திருக்கிறான். இத்தகைய ஒரு காரியத்தைச் சாதித்துக் கொடுக்கவேண்டிய நிலைமை அவனுக்கு இப்போதுதான் ஏற்பட்டிருக்கிறது. எது சரி, எது தவறு என்பது அவனுக்குத் தெரியாது. கோபாலன் நாயர் பதிலை எதிர்பார்த்து நின்றார். கேசவபிள்ளையின் நாவிலே சரஸ்வதி தோன்றினாள்.

''மேலதிகாரிதானே? எங்களுக்குள்ளே அறிமுகமில்லேன்னு சொல்ல முடியுமா? ஆனை, பேராசை கொண்டவர்.''

தாம் அதற்கெல்லாம் தயார்தான் என்று கோபாலன் நாயர் மீண்டும் கூறினார். லைப்லைச் சீக்கிரமாக அனுப்பிவைக்கவேண்டியது, அவ்வளவுதான். அதற்காக என்ன செலவாகும் என்று கோபாலன் நாயர் அடுத்த படியாக விசாரித்தார். பலவேறு அலுவலகங்களுக்குச் சென்று பழகியவர். பல அலுவல்களை வெற்றிகரமாக முடித்திருக்கிறார். சில காரியங்கள் தோல்வியிலும் முடிந்திருக்கின்றன. லஞ்சம் கொடுத்தும் கொடுக்காமலும் காரியங்களைச் சாதித்திருக்கிறார். அனைத்து விதமான மந்திர தந்திரங்களையும் புரிந்துகொண்டிருப்பவர் நாம் கோபாலன் நாயர். அவர் சொன்னார்: ''ஒரு முறையிலே சொன்னா, இது அவ்வளவு பெரிய காரியமல்ல. எனக்குக் கிடைக்கவேண்டிய பணம் கிடைக்கணும், அவ்வளவுதான். ஒரு லைப்லை எடுத்துத் தூசி தட்டி அனுப்பி வைக்கணும். தாமதமாயிட்டதுன்னு இத்தனை மணிக்கு லைப்ல் அங்கே கிடைக்கணும்னு கட்டளைகூடப் போட்டுடுவார். சீஃப் செக்ரடரியை நான் அவ்வளவு கெட்டியாப் புடிச்சிருக்கேன் தெரியுமா?''

கேசவபிள்ளை விட்டுக்கொடுக்கவில்லை: ''ஓ! அப்படி வந்தா அதைச் சமாளிக்க எங்களுக்குத் தெரியும். இத்தனை மணிக்கு அனுப்பிவைக்கணும்னு கட்டளை வந்துட்டா, நாங்க நினைச்சா, ஆறு மாதத்துக்கு அந்த லைப்ல் அங்கே போகாது. சில சமயங்களில் லைப்ல் போகும். ஆனா அதிலே தேவையான காகிதம் இருக்காது.''

கோபாலன் நாயர் அதை ஒத்துக்கொண்டார். பிறகு கூறினார்: ஆனுக்கூட ஓர் இலாக்கா சூப்பிரண்டு என்கிற முறையிலே அவருக்கு என்ன செய்யணுமோ அதைச் செய்யறேன். பத்து ரூபாய் போதுமா?''

கேசவபிள்ளை கேட்டான்: ''அது போதுமா?''

''போதாதுன்னு நீங்க சொல்றீங்க?''

''பதினஞ்சு ரூபாய்.''

கோபாலன் நாயருடைய முகம் வெளிறிவிட்டது. அவர் தளர்ந்து விட்டார். அவரிடமுள்ள மொத்த ரூபாய் அவ்வளவுதான். அது முழுதும் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறானே, இந்தப் பிள்ளை. குறைந்தது நான்கு நாட்களாவது திருவனந்தபுரத்திலே தங்கியிருக்க வேண்டியிருக்கிறது. அந்தக் கதையை அவர் சொன்னார். இறுதியில் இவ்வாறு சொல்லி முடித்தார்: ''அப்புறம் என்கிட்டே ஒரு டீ குடிக்கக் கூட தம்பிடி இருக்காதப்பனே.''

பதிமூன்று ரூபாயாவது தேவைப்படுமென்கிறான் கேசவபிள்ளை. அந்தத் தொகையைப்பற்றி அவரிடம் சொன்னபிறகு அவனுடைய மனத்திலே சில சந்தேகங்கள் தோன்றிவிட்டன. தன்னுடைய மனத்தில் இருக்கிற இரகசியம் வெளிப்பட்டுவிட்டதா? ஒருவருக்கு லஞ்சமாகப் பத்து ரூபாய் கொடுக்கலாம்; பதினைந்து ரூபாய் கொடுக்கலாம். ஆனால் பதிமூன்று என்பது என்ன கணக்கு? அதிலே ஏதாவது கமிஷன் இருப்பது போல் தோன்றிவிடாதா? கோபாலன் நாயர் இந்த விஷயத்திலே பெரிய கெட்டிக்காரர் என்றல்லவா, சொன்னார்? இவருக்கு அது புரியாமல் போய்விடுமா? மைந்தனின் கடிதத்தையல்லவா, இவர் கொண்டு வந்திருக்கிறார்? இவரிடமிருந்து லஞ்சம் வாங்கியதாக ஊரிலே தெரிந்து விட்டால் மானம் மரியாதை எல்லாம் போய்விடுமே. பதினைந்து என்ற எண்ணிக்கையிலேயே உறுதியாக நிற்கவேண்டியிருந்தது. அப்புறம் கடனுக அளிப்பதுபோன்று இரண்டு ரூபாய் கொடுக்கலாம் அல்லவா?

கோபாலன் நாயர், அவருடைய அப்போதைய நிலைமையிலே அவ்வளவு தூரம் யோசித்ததாகக் கேசவபிள்ளைக்குத் தோன்றவில்லை. அவர் மடியிலிருந்து ஒரு பொட்டலத்தை வெளியில் எடுத்தார். அதிலிருந்து பதிமூன்று ரூபாய் எண்ணியெடுத்து அவனிடம் கொடுத்தார். அப்புறம் அந்தப் பணம் தமக்கு எங்ஙனம் கிடைத்ததென்று விரிவாக எடுத்துரைத் தார். அவருடைய சிறு குழந்தையின் அரைஞாணையும், மந்திரவாதி எழுதிக் கொடுத்த செப்புத் தகட்டை அடக்கம் செய்திருந்த தங்கக் கூடையும் விற்றுக் கிடைத்த பணந்தான் அது. அவை மட்டுமே, விற்றால் காசு கிடைக்கக்கூடியவையாக அவரிடம் மீதியிருந்த பொருள்கள். சர்வ மும் போய்விட்டது. இருக்கும் ஒரு துண்டு மனை அடகு வைக்கப்பட்டிருக் கிறது. கடைசியாக ஒரு முயற்சி செய்து பார்க்கிறார். ஒன்று, இந்தப் பணம் கிடைக்கவேண்டும், அல்லது தெருவுக்குத் தள்ளப்பட வேண்டும். இதுதான் இப்போதைய நிலைமை. அரசாங்கத்தால் நிர்ண யிக்கப்பட்ட விலையானாலும் போதும், அது கிடைக்கவேண்டும்.

அந்தி நேரத்துக்குப் பிறகு சூப்பிரண்டைச் சென்று பார்க்கலாமென்று தீர்மானித்தனர். இந்தக் காரியத்தை எப்படிச் சாதித்துக் கொடுப்பது என்பதுதான் கேசவபிள்ளையின் சிந்தனையாக இருந்தது. கோபாலன் நாயரைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு செல்லலாமா? மூன்று ரூபாய் தனக்குக் கிடைத்துவிட்டதாகக் கேசவபிள்ளை நினைத்துக்கொண்டான். கோபாலன் நாயர் தாமாகப் பிள்ளைக்கு ஏதாவது கொடுப்பாரென்று நினைப்பதற்கில்லை.

இருவருமாகச் சூப்பிரண்டின் வீட்டை அடைந்தனர். கோபாலன் நாயர் தமக்கு ஏற்பட்டிருக்கிற அவல நிலைமைபற்றிச் சூப்பிரண்டிடம் விரிவாக எடுத்துரைத்தார். வையாபுரிப்பிள்ளை அனைத்தையும் ஆறுதாபத்துடன் கேட்டார். அரசாங்கம் கொடுக்கவேண்டியதும், கோபாலன் நாயருக்குக் கிடைக்க உரிமையுள்ளதுமான பணத்தின் கதை அது. ஆவனச் செய்வதாக அவர் ஒப்புக்கொண்டார். கேசவபிள்ளை கூடவே வந்திருப்பதனால் அவ்வாறு ஒப்புக்கொண்டாரோ, என்னவோ? கேசவபிள்ளை, கோபாலன் நாயரைப் போகச் சொல்லி, சூப்பிரண்டு காணுமல் சமிக்ஞை செய்தான். சிரம் தாழ்த்திக் கரம் கூப்பியவாறு கோபாலன் நாயர் வெளியே சென்றுவிட்டார். அதன் பிறகு அந்தப் பொட்டலத்தைச் சூப்பிரண்டின் மேஜைமீது கேசவபிள்ளை எடுத்து வைத்தான்.

இவ்வாறு அவனுக்கு இந்த விஷயத்திலே மூன்று ரூபாய் கிடைத்து விட்டது. ஒரு காசுகூடக் கையிலே இல்லாதிருந்த சந்தர்ப்பத்திலேதான் அது கிடைத்தது. அவனைப் பொறுத்தமட்டில் அது மிகப் பெரிய காரியந்தான். கோபாலன் நாயருடைய காரியத்தைச் சாதித்துக் கொடுக்கவேண்டியிருந்ததனால் ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களிலே திருவனந்தபுரத்திலே தான் தங்கவேண்டியிருந்ததென்று ஊருக்கு எழுதி விடலாமென்பது அவனைப் பொறுத்தவரையில் ஆறுதல் அளிக்கிற காரியமாகத் தோன்றியது. ஊருக்குப் போகாமல் இருந்ததற்கு ஒரு காரணமும் கிடைத்துவிட்டதல்லவா? அதற்குச் சாட்சியுண்டு. சாட்சி கூடத் தேவைதான். அப்பா, அம்மா, அக்கா—ஆகியோரால் தன்மீது குற்றம் சுமத்த முடியாது. அவசியம் இருப்பின், குட்டன்பிள்ளைக்கு ஒரு கடிதத்தைக் கோபாலன் நாயரைக் கொண்டு எழுதவைக்கலாம்.

மறுநாள் அந்த ஸைபலை ஆஜர்படுத்தவேண்டுமென்று சூப்பிரண்டு உத்தரவிட்டார். ஸைபலைத் தேடியெடுத்து அன்றையதினமே அனுப்பி வைக்கவேண்டுமென்ற கண்டிப்பான உத்தரவு! அந்தப் பொறுப்பைக் கோவிந்தபிள்ளைதான் நிர்வகித்து வருகிறார். மத்தியான்னம் வரைக்கும் அவர் அதைத் தேடியெடுத்துக் கொடுக்கும் வேலையில் ஈடுபட்டதாகவே தெரியவில்லை. அதைப்பற்றி அவருக்கு நினைவுபடுத்திப் பார்க்கலாமா? சிந்தித்துப் பார்த்தான் கேசவபிள்ளை. ஆனல், அதற்கு அவனுக்குத் துணிவு ஏற்படவில்லை. தனக்கு அக்கறையுள்ள ஒரு காரியம் என்று மற்றவர்கள் நினைக்கக்கூடும் அல்லவா? சூப்பிரண்டுக்கு அக்கறையுள்ள

காரியந்தான் இதுவென்று சொன்னால்? அப்படியானால் அது சக ஊழியர் களைப்பற்றிப் புகார் சொல்லுகிற தன்மையுள்ளதாக ஆகிவிடும்.

ஐந்து மணிவரையில் அந்த ஃபைலைத் தேடியெடுப்பது சம்பந்தமான எந்த ஒரு முயற்சியும் அங்கே நடைபெறவே இல்லை. அலுவலக ஊழியர்கள் அனைவரும் கலைந்து சென்றனர். கேசவபிள்ளை ஏதோ ஒரு விஷயத்தில் ஆவல் கொண்டிருப்பதாகத் தங்கம்மாவுக்கு மட்டும் புலப் பட்டது. அது என்னவென்று அவள் அவனிடம் கேட்கவும் செய்தாள்.

கேட்டிலே கோபாலன் நாயர் காத்து நின்றார். நடந்தவை அனைத் தையும் கேசவபிள்ளை அவரிடம் கூறினான். கோபாலன் நாயருக்குப் பதிலே வரவில்லை. அவர் தளர்ச்சியுற்றுக் கீழே உட்கார்ந்துவிட்டார். அவருக்கு எல்லாமே தகர்ந்துவிட்டதுபோல் தோன்றியது.

கேசவபிள்ளை அவரைப் பிடித்து எழுந்து நிற்கவைத்துச் சொன்னான். ''அண்ணன் கவலைப்படவேணும். நான் இன்னைக்குச் சூப்பிரண்டைச் சந்திக்கப் போறேன். இன்னைக்கே பணத்தை வாங்கி வச்சுக்கிட்டு இந்தமாதிரி அயோக்கியத்தனம் பண்ணினது ஏன்னு கேக்கறேன்.''

கோபாலன் நாயர் ஒன்றுமே சொல்லவில்லை. அவர் நடைப்பிணம் போல் நடந்தார். இந்தப் புலி வாலைப் பிடித்திருக்கக்கூடாதென்று கேசவபிள்ளைக்குத் தோன்றியது.

அவன் சொன்னான்: ''நாளைக்கு அனுப்பிவைச்சாப் போதுமே. அதனாலே எந்தக் கெடுதலும் நேராது. ஒரு நாள்தானே? ஒரு நாளிலே என்ன வந்துடப் போவுது? என் உடம்பிலே உயிர் இருந்தா நாளைக்கே அனுப்பி வைப்பேன்.''

அந்தக் காரியத்தைச் சாதித்துத் தர முடியுமென்று கோபாலன் நாயரை எப்படி உணரச் செய்வது என்பதிலேதான் அவனுடைய சிந்தனை செயல் பட்டது. உணரச் செய்தே ஆகவேண்டும். அவன் நூறு தடவை அதற் காக ஆணையிட்டுக் கூறினான்.

ஒரு பிணம் சொல்வதுபோல் கோபாலன் நாயர் சொன்னார்: ''சார், நீங்க எனக்காகச் செய்வீங்கன்னு எனக்குத் தெரியும்.''

கேசவபிள்ளை சொன்னான்: ''அண்ணன் என்னைத் தம்பின்னு கூப்பிட் டாப் போதும்.''

எப்படியும் அவரை ஆறுதலடையச் செய்வதுதான் அவனுடைய நோக்கம். அவன் சொல்வதைக் காதிலே வாங்கிக்கொள்ளாமல் அவர் சொன்னார்: ''இப்போதைய சீஃப் செக்ரடரிமீது எனக்கு ஒரு பிடிப்பு ஏற்பட வழியுண்டு. அவர் என் காரியத்தைச் சாதித்துத் தருவார். ஆனா, அவர் நாற்காலி இப்போ ஆடிக்கிட்டிருக்கு. அவரோட பதவி எப்போப் போயிடும்னு சொல்ல முடியாது. அவர் பதவி போனா . . . அப்புறம் நான் . . .''

அவர் எல்லையில்லாத வெளிவானத்தைப் பார்த்தார்.

கேசவபிள்ளைக்கு அந்தச் செய்தி அதிர்ச்சியைத் தந்தது. சீஃப் செக்ரடரியின் பதவிக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறதென்ற விஷயம்

இதுவரை யாருக்கும் தெரியாது. அவன் கேட்டான்: ''என்ன? சீஃப் செக்ரடரிப் பதவிக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கா?''

''ஆமாங்க, அது எப்போ ஏற்படும்னு சொல்லமுடியாதுங்க. அதனுத் தான் நான் இப்படி ஓடியலைஞ்சுக்கிட்டிருக்கேனுங்க.''

இப்போது கேசவபிள்ளைக்கு முக்கியமாகப் பட்டது. கோபாலன் நாயருடைய அவல நிலைமை அல்ல. அது பின்னுக்குத் தள்ளப்பட்டது. அவன் கேட்டான்: ''அண்ணனுக்கு இது எப்படித் தெரியும்?''

அவர் பதில் அளித்தார்: ''நான் எத்தனை வருஷமா இப்படி இங்கே அலைஞ்சுக்கிட்டிருக்கேன்னு தெரியுமா? சீஃப் செக்ரடரிக்குக்கூட இந்த விஷயம் தெரியாதுங்க. அவர் பதவியிலேருந்து போறதுக்கு முந்தி இந்தக் காரியம் நடக்காட்டா, அப்புறம் என்னை உயிரோடு பார்க்க முடியாதுங்க.''

கேசவபிள்ளைக்குத் தெரியவேண்டிய விஷயம் வேறு. இந்தக் காரியதரிசி போனால் அப்புறம் அந்தப் பதவிக்கு யார் வரப்போகிறார்? அவ்வாறு கேட்கவும் செய்தான்.

''கிருஷ்ணன் நாயர்னு ஒரு செக்ரடரி இருக்காரா? அவர்தான் வரப்போறாரும்.'' கோபாலன் நாயர் சொன்னார்.

கேசவபிள்ளை ஸ்தம்பித்து நின்றுவிட்டான்.

கோபாலன் நாயர் தம் காரியத்தையே சொன்னார்:

''அவரிடத்திலே எனக்கு எந்தப் பிடிப்பும் கிடையாது. அவரிடத்திலே கூடச் சற்று முயற்சி செஞ்சு பார்க்கலாம்னு முடியாதுங்க. ஒடம்பும் மனசும் ஒண்ணைச் சேர்ந்து வேலை செய்ய முடிஞ்சாத்தானே? இந்தக் காரியம் கைகூடாமப் போனு, இந்தக் கோபாலன் நாயர் ஏதாவது மாமரத்துக் கிளையிலே, கயிற்றிலே தொங்கிக் கிடக்கறதைத்தான் பார்க்க முடியுங்க.''

புதிய சீஃப் செக்ரடரி மூலமாகவும் காரியத்தைச் சாதிக்க முடியு மென்று சொன்னால் என்னவென்று கேசவபிள்ளை ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தான். ஆனால் அவன் அப்படிச் சொல்லவில்லை. மறைபொருளாகக் காப்பாற்றப்படவேண்டியவற்றை மறைத்து வைக்கவேண்டியதுதானே?

அத்தியாயம் 6

அசைகின்ற நாற்காலிகள்

அந்திப் பொழுது போயிற்று. கேசவபிள்ளை தனியாகத்தான் சூப்பிரண்டைப் பார்க்கச் சென்றான். ஸைபல் தேடியெடுத்து அனுப்பப்படவில்லை என்று அவன் அவரிடம் புகார் கூறினான்.

''நான் செய்யவேண்டியதைச் செஞ்சுட்டேன்'' என்ற பதில்தான் அவரிடமிருந்து வந்தது. சிறிது நேரத்துக்குப் பின் அவர் கேட்டார்: ''நானே சென்று ஸைபலைத் தேடியெடுத்துத் தூசி தட்டிக் கவரிலே போட்டுக் கொண்டு போய்க் கொடுக்கணுமா? நீங்க என்ன சொல்றீங்க?''

சூப்பிரண்டுக்குச் சிறிது ஆத்திரம் ஏற்பட்டு விட்டதோ என்று கேசவபிள்ளைக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அவன் சற்றுத் திகைத்தவாறு பதிலளித்தான்: ''உத்தரவு! இல்லிங்க. நடந்ததை ஞாபகிட்டே சொன்னேனுங்க. அவ்வளவுதாங்க.''

சிறிது நேரத்துக்குப் பின் சூப்பிரண்டு சொன்னார்: ''நீங்கள் புறப்படுங்க. அநாவசியம் போதாது. அதனால்தான் என்னிடம் வந்து புகார் சொல்றீங்க.''

''புகார் இல்லீங்க.''

விஷயத்தைப் புரியவைக்கும் முறையில் அவர் தொடர்ந்து கூறினார்: ''அந்தச் சென்ஷனுக்குப் பொறுப்பான கிளார்க்கைப் பார்த்துச் செய்யவைக்கணும். அப்புறம் டெஸ்பாட்ச் பண்ணிப் பியூனிடம் சொல்லி அஸிஸ்டெண்டு செக்ரடரியிடம் ஒப்படைக்கணும். அங்கேகூடப் பொறுப்பானவங்களைப் பார்த்துச் செக்ரடரிக்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செஞ்சுக்கணும். அங்கிருந்துதான் அந்த ஸைபல் சீஃப் செக்ரடரிக்குப் போய்ச் சேரணும். இப்போ புரியுதா? ஸைபலை விடாமே தொடர்ந்து போகணும். அதுதான் செய்யவேண்டியது. இல்லாட்டா ஒரு வருஷமானாலும் ஸைபல் அங்கே போய்ச் சேர்ந்துடாது.''

''உத்தரவு!''

''சரி. அப்படியே செஞ்சுடுங்க!''

அந்த ஸைபல் தேடியெடுக்கப்பட்டதா என்று கேட்கக்கூட சூப்பிரண்டு தயாராயில்லை. இந்த முறையிலே போனால் கோபாலன் நாயருக்கு அந்தப் பணம் கிடைக்குமென்று சொல்வதற்கில்லை. அவர் அந்த முயற்சியையும், எண்ணத்தையும் கைவிடுவதே நல்லதெனத் தோன்றியது. எப்படியாவது இங்கிருந்து அந்த ஸைபலை அனுப்பிவைக்க வேண்டியதுதான். அந்தப் பொறுப்பிலிருந்து தான் தப்பித்துக்கொள்ள வேண்டும். புதிய சீஃப் செக்ரடரியைப் பார்த்துக் காரியத்தைச் சாதித்துக்கொடுப்பதாகக் கூறியிருந்தால், அந்த மனிதர் புளியெறும்பு

போல் விடாப்பிடியாகப் பிடித்துக்கொண் டிருப்பார். அது அன்றுடம் பெரிய தொந்தரவாக இருந்துவரும். நல்ல வேளை, அப்படிச் சொல்ல வில்லை. அந்த விஷயத்தில் கேசவபிள்ளை தன்னைத்தானே பாராட்டிக் கொண்டான்.

என்ன ஆனாலும் சரி, மறுநாள் அந்த லைபிலை அனுப்பிவைக்கவேண்டிப் பிரத்தியேக முயற்சி எடுத்துக்கொள்வதென்று அவன் தீர்மானித்துக் கொண்டான்.

* * *

மறுநாள் கேசவபிள்ளை சீக்கிரமாகவே அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தான். தங்கம்மாவும் வந்து சேர்ந்திருந்தாள். இவ்வாறு, ஒரு வாரத்துக்குப் பின்னர் அந்த வழக்கம் மீண்டும் அன்றைய நாளிலிருந்து துவங்கியது.

அவள் கேட்டாள்: ''ஹ அப்பப்பா! மனக்கவலையெல்லாம் தீர்ந்துட்ட துங்களா? இன்னைக்குச் சீக்கிரமா வந்துட்டீங்களே?''

அவன் சொன்னான்: ''அப்படிச் சீக்கிரமா வரவேணும்னுதான் நினைச் சுக்கிட்டிருந்தேன்.''

சிறிதுநேரம் மௌனமாக இருந்துவிட்டு அவன் தொடர்ந்து கூறினான்: ''தங்கம்மா, நீ கொஞ்சம் மாறி இருக்கிறப்பலேருக்கே?''

அவள் வியப்புடன் கேட்டாள்: ''என்ன மாறுதல்? நான் பழைய தங்கம்மாவேதான். மற்றவங்கதான் மாறியிருக்காங்க.''

''நான் ஓர் ஏழைக் குமாஸ்தா. உதவியளிக்க யாரும் இல்லாதவன். இப்போ தங்கம்மாவின் நிலைமை அதுவா?''

''எனக்கென்ன அப்படிப்பட்ட நிலைமை வந்துவிட்டது?''

அவன் அவளுடைய வதனத்தை ஒரு விநாடி நேரம் பார்த்துவிட்டுக் கேட்டான்: ''ஒண்ணும் இல்லையா?''

ஆனால் தொடர்ந்து அவள் வதனத்திலேயே பார்வையைச் செலுத்த அவனால் முடியவில்லை. அதற்கான துணிச்சல் அவனிடம் இல்லை.

தங்கம்மாவுக்குப் புரியவில்லை. கேசவபிள்ளை வெறும் விளையாட்டுத் தனமாகப் பேசுவதாக அவளுக்குத் தோன்றவில்லை.

''தங்கம்மா, நீ ரொம்ப கெட்டிக்காரிதாம்மா. மறைபொருளாக் காப்பாற்றி வைக்கவேண்டியதை மறைச்சு வச்சுக்க உனக்கு நல்லாத் தெரியுது'' என்று அவன் சொன்னான்.

தங்கம்மா திகைத்துப் போய்விட்டாள். அவளுக்கு ஒன்றுமே புரிய வில்லை.

''சிற்றப்பா சீஃப் செக்ரடரியாகப் போறார் எங்கிறதை என்கிட்டே சொன்னியா?'' என்று அவன் கேட்டான்.

''ஓ! அதுவா? அது ரொம்ப இரகசியம். அதனால்தான் நான் சொல்லாமே இருந்தேன். ஆனா, நாலஞ்சு தடவை அதை உங்க கிட்டே சொல்லணும்னு நான் வாயெடுத்தது உண்மை.''

அவன் ஒருமுறை முனகினான்: ''ஊம் . . . அப்புறம் சொல்ல வேண்டாம்னு மறைச்சு வச்சே? அப்படித்தானே?''

அவள் மன்னிப்புக் கோரும் குரலிலே கூறினாள்: ''உண்மையிலேயே நான் அதை உங்ககிட்டே சொல்லணும்னு நெனைச்சதுதாங்க. இப்பல்லாம் இங்கே நீங்க நேரத்திலே வரதில்லே. நெருங்கிப் பேசச் சந்தர்ப்பமும் அளிக்கலே. அதுக்குத்தான் சண்டை போட்டுப் பேசாமே இருந்துட்டீங்களா?''

சென்ற வாரத்தில் அவன் அவ்வாறு நடந்துகொண்டதற்கு அதுதான் காரணமென்று நடிக்கும் முறையிலே கூறினான்: ''நான் எதுக்குச் சண்டை போடணும்?''

''வருத்தப்படறீங்க போலிருக்கு.''

''எனக்கென்ன வருத்தம்?''

''இருக்கு. எனக்குத் தெரியும்.''

அவன் பேசவில்லை.

அவள் சொன்னாள்: ''இன்னைக்கு நான் படிக்கட்டடக் கதவைத் திறந்து வச்சிருப்பேன். என்னைச் சும்மாப் பனியிலே நிற்கவைக்கக் கூடாது. எல்லாவற்றையும் நான் சொல்லிடறேன்.''

அதற்குள் குமாஸ்தாக்கள் வரத் தொடங்கினர்.

கேசவபிள்ளை அந்த ஃபைலைப்பற்றிக் கோவிந்தன் நாயரிடம் சொன்னான். அவர் உடனடியாகப் பதில் அளித்தார்: ''உம் . . . பார்த்தெடுத்தாப் போச்சு.''

அந்தப் பதிலின் பொருள் என்ன? இன்றைக்கோ நாளைக்கோ அது நடக்கப்போவதில்லை என்பதுதான்.

''என் காரியந்தான் அண்ணை இது'' என்று கேசவபிள்ளை சொன்னான்.

''ஓஹோ . . . மனுக் கொடுத்திருக்கிறவன் நீதானே?''

''அவர் என்னோட உறவினர்தாங்க.''

''அவரே வரட்டுமே.''

கேசவபிள்ளை, கோபாலன் நாயரைப்பற்றிய எல்லா விவரங்களையும் எடுத்துரைத்தான். கோவிந்தன் நாயர் சொன்னார்:

''பரிதாபகரமானதுதான். எனக்குக்கூட வேதனை தோணுது. என்ன செய்வது பிள்ளை? அதுக்கு முன்னே செஞ்சு முடிக்கவேண்டிய வேலை நிறைய இருக்கு. அதெல்லாம் கொஞ்சம் முடியட்டும். ஃபைலைத் தேடியெடுத்துத் தர்றேன்.''

எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த ஹரிஹர ஐயர் இரண்டுக்கும் மத்தியிலுள்ள ஒரு பாதையைக் காட்டினார்:

''மனுதாரரை, இன்னைக்கு மத்தியானத்திலே கேசவபிள்ளை பார்த்து விஷயத்தைச் சொல்லட்டும். ஃபைலைக் கொண்டு போய்க்கொடுக்கிறவன் மாதவன்பிள்ளைதானே? இரண்டு பேருக்குமாக ஒரு கணக்கைப் போட்டு அவாகிட்டேருந்து பிள்ளைவாள் வாங்கி வரட்டும்.''

மாத்யூ, பிரபாகரன் நாயர் ஆகியோர் அந்த அபிப்பிராயத்தை ஆமோதித்தனர்.

கோபாலன் நாயரிடம் இருப்பதெல்லாம் இரண்டு ரூபாய்தான். அதிலே அரை ரூபாயாவது செலவு செய்திருப்பார். மத்தியான்னம் கோபாலன் நாயரைச் சந்தித்தபோது, தான் போட்ட கணக்குச் சரிதான் என்பதைப் உணர்ந்தான் கேசவபிள்ளை. தம்மிடம் மீதியிருந்ததிலிருந்து ஒரு ரூபாய் தான் கோபாலன் நாயரால் கொடுக்க முடிந்தது. கேசவபிள்ளைக்குக் கிடைத்த மூன்று ரூபாயிலிருந்து இரண்டை அவன் இழக்கவேண்டிய தாயிற்று. எனவே, அந்தப் பளுவைத் தலைமேல் தாங்கியதற்காகக் கேசவபிள்ளைக்குக் கிடைத்தது ஒரு ரூபாய் மட்டுமே—பதினாறு அணா! ஆயினும் பரவாயில்லை. காரியம் நடக்கட்டும் என்று அவன் திருப்தியடைந்தான்.

இவ்வாறாக, அன்று மாலையிலே அந்த மீனைல் அரிஸ்டண்டு செக்ரடரியின் மேஜைமீது போய்ச் சேர்ந்தது. அவ்வாறு அந்தப் பிரச்னை கேசவபிள்ளையிடமிருந்து விலகிப் போயிற்று.

இரண்டு நாட்களாக மன அமைதியைக் கெடுத்து வந்த அந்தப் பிரச்னை தீர்ந்துவிட்டாலும், கேசவபிள்ளைக்கு இன்னொரு பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டியிருந்தது. படிக் கட்டடக் கதவைத் திறந்து வைத்தவாறு அவள் பணியிலே தனக்காகக் காத்திருப்பாள்! அங்கே போகவேண்டுமா; வேண்டாமா? ஒரு முறையிலே பார்த்தால் அன்றைத் தினம் சீக்கிரமாக அலுவலகத்துக்குச் சென்றது தேவையற்ற செயலாகிவிட்டது.

கிருஷ்ணன் நாயர் சீஃப் செக்ரடரியாகிவிடுவதால் அவனுக்கு என்ன லாபம்? ஆனால், அவ்வாறு நினைக்க அவனால் முடியவில்லை. அதனால் ஏதாவது பிரயோஜனம் ஏற்பட வேண்டுமென்று அல்லது ஏற்படுத்த வேண்டுமென்று அவன் மனம் சொல்லிக்கொண்டிருந்தது. அந்த நோக்கமே அவனை அவ்விடத்துக்கு இழுத்துக்கொண்டு சென்றது. அந்த எண்ணத்துக்கு இப்போது சக்தியுண்டு. அந்தச் சக்தி அதிகரித்து வருகிறது. அவளிடம் அதிகமாக நெருங்குவதற்கான ஆவேச உணர்ச்சி அதனால் கிளர்ந்தெழுந்திருக்கிறது. ஒரு வாரகாலமாகத் தடை போட்டு நிறுத்தியிருந்த அந்த உணர்ச்சி இப்போது அவனை அடிமைப்படுத்தத் தொடங்கியிருக்கிறது.

ஆயினும், அன்றிரவு போவதில்லை என்று அவன் தீர்மானித்துக்கொண்டான். அந்தத் தீர்மானத்திலே உறுதியாக நிற்கவும் எண்ணினான். அவ்வாறு உறுதியாக நிற்பதென்பது மிகக் கடுமையான சோதனையாக இருந்தது. மூன்று நான்கு தடவைகள் அவன் விடுதியைவிட்டு வெளியே வந்தான். ஆனால், அவள் வீட்டுப் பக்கமாகத் தனது பாதங்கள் திரும்பாமல் பார்த்துக்கொள்ள அவனால் முடிந்தது. இன்றும் அவள் தன்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கட்டும்; அலுப்புக் கொள்ளட்டும். பிணங்குவதாக இருந்தால் . . . அந்தக் கட்டம் வரையில் தனது சிந்தனையைச் செலுத்த அவனால் முடியவில்லை. ஆயினும் அவன் போகவில்லை.

மறுநாள் காலையிலிருந்தே அவளுக்கு என்ன பதில் சொல்வது என்ற சிந்தனையிலேதான் மூழ்கியிருந்தான் கேசவபிள்ளை. ஃபைல் சம்பந்தமான பிரச்னைபற்றித் தங்கம்மாவுக்கும் தெரியும். கோபாலன் நாயர் அன்றிரவு தன்னுடைய அறையிலேயே தங்கியிருந்தார் என்று சொல்லிவிடலாம். அது நம்பக்கூடியதொரு கதையாக இருக்கும்.

வழக்கம்போல் அன்றைய தினமும் காலை பதினேழு மணியளவில் அரசாங்கத் தலைமைச் செயலகத்துக்கு உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் வந்து சேர்ந்தனர். பதினேழரை மணியாயிற்று. ஐந்து நிமிடத்துக்குப் பின்பே ஸீஃப் செக்ரடரி மிஸ்டர் மேனன் காரிலே வந்தார். அவர் தம் அறைக்குச் சென்றார்.

சிறிது நேரம் சென்றது. தலைமைக் காரியதரிசியின் டபேதார் திகைப் புற்று அறையிலிருந்து வெளியே வந்து கூவினார்: ''ஓடி வாங்க! ஓடி வாங்க! . . . சேமான் . . .''

அதற்குமேல் அவரால் எதையும் சொல்ல முடியவில்லை. எல்லாரும் அறைக்குள்ளே விரைந்து சென்றனர். தலைமைக் காரியதரிசி சாய்வு நாற் காலியிலே கண்களை மூடியவாறு படுத்துக் கிடந்தார். முகமெங்கும் வேர்வைத் துளிகள் அரும்பி நின்றன. முகம் வெளிறியிருந்தது. ஒரு நிமிஷ நேரத்துக்குள் காரியாலயச் சிப்பந்திகள் அனைவரும் அங்கே விரைந்து வந்து குழுமினர்.

அந்த மயக்கம் வெகுநேரம் வரைக்கும் நீடித்து நிற்கவில்லை. முகத் திலே நீரைத் தெளித்ததும் அவர் கண் திறந்தார். மிஸ்டர் கிருஷ்ணன் நாயரைத் தவிர அனைவரும் அந்த நாற்காலியைச் சூழ்ந்து நின்றுகொண் டிருந்தனர். கிருஷ்ணன் நாயர் அறைக்கு வெளியே நின்றுகொண் டிருந்தார்.

சிறிது நேரத்துக்குப் பின் சமாசாரம் என்னவென்று அனைவராலும் அறிய முடிந்தது. அவர் பதவியிலிருந்து மாற்றப்பட்டிருக்கிறார். அவருக் குப் பதிலாக கிருஷ்ணன் நாயர் நியமிக்கப்பட்டிருக்கிறார். மிஸ்டர் மேனனுக்கு எந்தப் பதவியென்று குறிப்பிடப்படவில்லை. பொறுப்பை உடனடியாக ஒப்படைத்துவிட வேண்டும் என்று மட்டுமே பதவி நீக்க உத்தரவில் குறிப்பிட்டிருந்தது.

நான்கு வருஷ காலமாக அரசாங்கத் தலைமைச் செயலகத்தையே நடுநடுங்கச் செய்தவாறு ஆட்சி நடத்தி வந்தவர் மிஸ்டர் மேனன். வழக்கம்போல் அன்றைய தினமும் செயலகத்துக்கு வந்தார். ஆனால், அவர் இப்போது அங்கே யாரும் அல்ல!

டாக்டர் விரைந்து வந்தார். பெரிய அளவிலே நோய் எதுவும் இல்லை. அவர் வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டார். அந்த வீட்டையும் காலி செய்து கொடுக்க வேண்டியிருக்கும்.

அன்று மத்தியானத்துக்குப் பின்புகூடத் தலைமைச் செயலகத்தி லுள்ள எந்த ஓர் இலாக்காவிலும் எந்த வேலையும் நடைபெறவில்லை.

காரியதரிசிகள்கூட அசைவின்றி அமர்ந்திருந்தனர். மேனன்மீது இருந்து வந்த அன்பினால் அல்ல; அநுதாபத்தினாலும் அல்ல! என்ன காரணத்தினாலோ தெரியவில்லை. ஆனால், அந்த நிகழ்ச்சி அனைவரையும் ஓர் உலுக்கு உலுக்கிவிட்டதுபோல் தோன்றியது; அல்லது அது அனைவரையும் நடுங்கச் செய்திருக்கிறது.

இன்று அமர்ந்திருக்கிற நாற்காலியிலே நாளைய தினமும் அமர்ந்திருக்கமுடியுமா? எப்படிச் சொல்லமுடியும்? எல்லாச் செயலாளர்களும் சுயமாகக் கேட்டுக்கொண்டிருந்த கேள்வி அது. அடுத்த நிமிஷத்திலேயே பதவியிலிருந்து கீழே இறங்கும்படியான உத்தரவுகள் வந்தாலும் வரலாம். ஒருவேளை அத்தகையதொரு பீதியைக் கிளப்பிவிடுவதற்காகவே தலைமைச் செயலாளரையே பதவியைவிட்டு நீக்கியிருக்கலாம். ஆனால், அந்தப் பீதியைப்பற்றி எவருமே பரஸ்பரம் பேசிக்கொள்ளவில்லை. எவருக்குமே மற்றவர்மீது நம்பிக்கை இல்லை.

மிஸ்டர் மேனன்மீது சுமத்தியிருந்த குற்றந்தான் என்ன? அடுத்த படியாக அவரை எந்தப் பதவியில் நியமிக்கப் போகிறார்கள்? அரசாங்க உத்தியோகத்திலிருந்தே அவரை நீக்கிவிடுவார்களா? இதனால் தலைமைச் செயலகத்திலே என்னென்ன மாறுதல்கள் ஏற்படப்போகின்றன? எவருக்குமே ஒன்றும் தெரியாது.

* 'டெவலப்மென்டு செக்ஷனி'லிருந்து ஒரு வதந்தி கிளம்பியது: † 'ஹைட்ரோ எலக்டிரிக் ப்ராஜக்டி'னுடைய ஒரு கான்டிராக்டுக்காக ஓர் அயல்நாட்டுக் கம்பெனி முன்வந்திருக்கிறது. 'லெவலிங்' கம்பெனி! அந்தக் கம்பெனியாருக்குத் திவான்ஜியுடைய பிரைவேட் செக்ரடரியின் அருளும் ஆசீர்வாதமும் இருந்துவருகின்றன. தலைமைச் செயலாளரான மேனன் அந்தக் கம்பெனிக்கு எதிராக நின்றார். அந்தக் கான்டிராக்டை மூன்று நான்கு சுதேசிக் கம்பெனிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்பதே அவருடைய நோக்கம். இவ்வாறாக, ‡பக்தி விலாஸத்துக்கும், தலைமைச் செயலகத்துக்குமிடையில் நீண்ட நாட்களாக ஒரு மோதல் இருந்துவந்தது. இந்த மோதல், சம்பந்தப்பட்ட அனைத்து இலாக்காக்களிலும் அதன் பிரதிபலிப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. குமாஸ்தாக்கள்கூட இரு பகுதியினராகப் பிரிந்திருப்பதைப பார்க்கலாம். இந்த மோதலின் உச்சகட்டத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளின் பரிணமந்தான் தலைமைச் செயலாளருடைய வீழ்ச்சி. ஆனால், ஒரு விஷயம் புரியாத புதிராக இருந்துவந்தது. மேனனுக்கு அரண்மனையிலே அபரிமிதமான ஆதரவும் செல்வாக்கும் உண்டு. அரண்மனைக்குத் தெரியாமல் இந்தக் கட்டளை பிறந்திருக்க முடியாது.

---

* அபிவிருத்தி இலாக்கா.

† நீர் மின் திட்டம்.

‡ பக்தி விலாஸமென்பது திவான்ஜியின் பங்களா. (மொ . . . ர்.)

ஒருவேளை, மிஸ்டர் மேனன், அரண்மனையில் தமக்கிருந்து வருகிற செல்வாக்கை இழந்திருப்பாரோ?

மேனனுடைய வீழ்ச்சியிலே மகிழ்கிறவர்கள், வருந்துகிறவர்கள் என்று தலைமைச் செயலகமே இரு கூறுகப் பிரிந்திருக்கிறது. மராமத்து, அபிவிருத்தி, ரெவின்யூ, வனம், மின்சாரம்—ஆகிய அனைத்து இலாக்காக் களிலுமுள்ள சிப்பந்திகள் எதிரும் புதிருமாக இரு தரப்பினராகப் பிரிந் திருந்ததை அன்றுதான் பார்க்க முடிந்தது. மேனனின் வீழ்ச்சியைக் கண்டு ஒரு பகுதியினர் மகிழ்ச்சிக் குரல்களை எழுப்பியபோது, சோர்வுற்ற மறுபகுதியினர் போட்டி மனப்பான்மைக்குள்ளாகிக் கொண்டிருந்தனர். அப்படியானால், அந்த லெவலிங் கம்பெனி இந்தத் திட்டத்தை நிறை வேற்றுவதை ஒருகை பார்த்துவிடுவோம் என்று அவர்கள் முடிவெடுத்த னர்.

மாலை நேரம் நெருங்க நெருங்க, இரு பிரிவினராகிவிட்ட சிப்பந்திகளுக் கிடையே வெளிப்படையான வாய்ச் சண்டை தொடங்கியது.

நீர் மின் திட்டத்தை அமலாக்க முற்பட்ட காலம் முதல், லெவலிங் கம்பெனியினர் ஒரு பக்கமும், மூன்று சூப்பர் கான்டிராக்டர்கள் சேர்ந்து மறுபக்கமுமாகத் தலைமைச் செயலகத்தில் இயங்கிவந்தனர். இரு பகுதியினரும் தங்கள் தங்கள் பணியாட்களாகச் சிப்பந்திகள் பலரை யும் சம்பாதித்துக்கொண்டனர். இன்று ஒரு பகுதியினர் தோல்வியுற் றிருக்கின்றனர்; மறுபகுதியினர் தாற்காலிக வெற்றியடைந்திருக்கின்ற னர். தனித் தனியாகிவிட்ட இரு முகாம்களை இப்போது கண்கூடாகவே பார்க்க முடிந்தது. இந்தப் போராட்டத்திலே திரு கிருஷ்ணன் நாயர் எந்தப் பக்கம்? அவரை எந்த முகாமிலும் இதுவரையிலும் யாரும் பார்த்த தில்லை. ஆனால், அவர் திவான்ஜியுடைய பிரைவேட் செக்ரடரியின் அந்தரங்க நண்பர். அதைப்பற்றிச் சொல்லும்போது அவருடைய இதழ்களிலும் பொருள் படைத்த புன்னகை ஒன்று நெளிவதைப் பார்க்க லாம். அந்தரங்க நண்பர் என்று சொல்வதிலே பெரியதொரு பொருள் அடங்கியிருக்கிறது.

அது எப்படி வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும். அன்று, கிருஷ்ணன் நாயர் தம்முடைய அறையிலிருந்து வெளியே வரவில்லை, யாரிடமும் பேசவில்லை. ஏறக்குறைய தனிமையிலேதான் இருந்து வந்தார். அவருக்குப் பதவி உயர்வு கிடைத்ததை முன்னிட்டு ஒரு சிலர் அவரிடம் சென்று தங்கள் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்ட னர். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், தமக்குத் தகுதியில்லாத ஒரு பதவி கிடைத்திருக்கிறதென்ற ஓர் எண்ணம் அவருக்கே இருந்தது போல் தோன்றியது.

அரசாங்கத் தலைமையகத்தில் மட்டுமின்றி, நகரமெங்கிலும் ஜனங்கள் இந்தப் பதவி உயர்வைப்பற்றியே பேசிக்கொண்டனர். பல காரணங்களை அனுமானித்துப் பார்த்தனர். காரியதரிசிகளிலே கூடுதல் சர்வீசுடையவர் மிஸ்டர் போத்தன்தான். பார்க்கப் போனால்,

மேனனுக்கு முன்பே அவரைத்தான் அந்தப் பதவியில் அமர்த்தியிருக்க வேண்டும்.

இப்போதும் அவர் பின் தள்ளப்பட்டிருக்கிறார். சரி. ஒருவேளை, அவர் கிறிஸ்தவர் என்பதனால் அவ்வாறு ஏற்பட்டிருக்கலாம். *ஆனால், மேனனுக்குப் பதிலாக கிருஷ்ணன் நாயரை எப்படி நியமிக்க முடியும்? இந்தக் கேள்விதான் அனைவரையும் வியப்பில் ஆழ்த்திவிட்டது. கிருஷ்ணன் நாயர் அந்த அளவு சீனியர் அல்ல.

* * *

அன்று மாலை கேசவபிள்ளையும், நண்பர்களும் தங்கியிருக்கும் விடுதிக்குச் சென்றபோது, அங்கே விடுதியின் சொந்தக்காரன் கொச்சுவேலுப் பிள்ளை வந்திருந்தார். அவர் அரைமணி நேரமாக அவர்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

கொச்சுவேலுப் பிள்ளை ஏற்றுமானூரிலே பிறந்து வளர்ந்தவர். திருவனந்தபுரத்திலே வன இலாக்கா அலுவலகத்திலே உத்தியோகம் பார்த்து இப்போது பென்ஷன் பெற்றுவருகிறார். திருமணமெல்லாம் திருவனந்தபுரத்திலேதான். இப்போது குடும்பத்துடன் அங்கேயே வாழ்நாளைக் கழித்து வருகிறார்.

அவர், தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைத் தெரிந்து கொள்ள வந்திருக்கிறார். அந்த விடுதியிலே தங்கிவருகிற செயலகச் சிப்பந்திகளும், கொச்சுவேலுப் பிள்ளையும் வட்டமாக அமர்ந்து பேசத் தொடங்கினர். கேசவபிள்ளை மட்டும் வாய் திறக்கவில்லை. வாய் திறப்பதென்றால் ஒரே ஒரு விஷயம் பற்றுமே அவனுக்குப் பேசுவதற்காக இருந்தது. எந்த விதமான பிராரப்தமின்றித் தனக்கு உத்தியோகத்தைத் தந்தவர்தான் திரு மேனன் அவர்கள். ஆனால், அவன் அதை வெளியிடவில்லை.

கொச்சுண்ணி நாயர் என்ற குமாஸ்தா, புதிய தலைமைச் செயலாளரான கிருஷ்ணன் நாயருடைய குடும்ப வரலாற்றைப்பற்றிக் கொச்சுவேலுப் பிள்ளையிடம் கேட்டார். அந்தப் பென்ஷன்காரர் ஒரு சிரிப்புடன் ஒரு கதையைச் சொல்ல ஆரம்பித்தார்: ''அதைப் பற்றி ஒன்றும் கேட்கக்கூடாது! அந்தக் காலத்திலே இந்த மாதிரியான உத்தியோகங்களிலே எல்லாரையும் நியமிக்கமாட்டாங்க. நல்ல குடும்பத்திலே பொறந்தவனுயிருக்கணும்; பரம்பரை மரபுகளெல்லாம் வேணும்; ஒசந்த ஜாதிக்காரனுயிருக்கணும் . . . இப்படியெல்லாம் இருந்து வந்தது. இப்போ காலமெல்லாம் மாறிப் போச்சல்லவா?''

மேனனின் ஆதரவாளரான கொச்சுண்ணி நாயருக்குக் கதையை இப்படி இழுத்துக்கொண்டு செல்வது ரசமாக இருந்தது. அவர் கேட்

---

* மேனனும் நாயரும்—நாயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான். (மொ . . . ர்.)

டார்: ''இதெல்லாம் மிஸ்டர் கிருஷ்ணன் நாயர் அவர்களுக்கு இல்லேயா?''

''அதெல்லாம் இருந்துவருகிறது'' என்று ஏளனக் குரலிலே கூறினார் கொச்சு வேலுப் பிள்ளே.

''கதையைக் கேளுங்க! நாயர் பட்டாளத்திலே சிப்பாய்களாக ரெண்டு பேரு இருந்தாங்க. குமாருப் பிள்ளே; அனந்தன் பிள்ளே—ரெண்டு பேரும் அண்ணன் தம்பீங்க. அவங்களே எனக்கு நல்லாத் தெரியும். ரெண்டு பேருக்குமாச் சேர்ந்து ஒரே ஒரு மனேவிதான் இருந்துவந்தா. இப்படி நம்ப சீஃப் செக்ரடரிக்கு ரெண்டு தகப்பனுங்க இருந்தாங்க. பெரியவரு செத்து ரெண்டு மூணு வருஷந்தான் ஆவுது. இளேயவரு இருக்கார்னு நினேக்கிறேன். உறுதியாச் சொல்லமுடியாது. இந்தக் கிருஷ்ணன் நாயரோட அண்ணனுக ஒருவர் இருக்கார். அவரு செட்டிக்குளங்கரையிலே தங்கியிருக்காரு. அவரோட மகளுக்குச் செக்ரடேரியெட்லேதான் வேலே.''

கொச்சுண்ணி நாயர் கேசவபிள்ளேயிடம் கேட்டார்: ''உங்க செக்ஷனிலே வேலே செய்யறுளே, அந்தப் பொண்ணுதானே?''

கேசவபிள்ளே ''ஆம்'' என்று தலேயசைத்தான். கொச்சுவேலுப் பிள்ளே கதையின் அடுத்த அத்தியாயத்துக்குச் சென்றார்.

''இவர் எந்த இடத்திலேருந்து கல்யாணம் பண்ணினார்ன்னு தெரியுமா? சொல்றேன். வெகு நாட்களுக்கு முன்னே இங்கே பிரதாபசாலியான ஒரு *பேஷ்காரு இருந்தாரு. ஒரு தெலுங்கு நாட்டுக்காரரு. பெயர் கோவிந்தராயரு. பெரிய கிருதா மீசை, உடம்பு எலுமிச்சம்பழ நிறம், ஆஜானுபாகு, பெரிய சிவப்புக் கண்ணு—ஆளேப் பார்த்தாக் கம்பீரத் தோற்றம். அவரோட குதிரையைப் பாத்துப் பாலிச்சு வந்தவரு, கௌரீச பட்டத்திலே இருந்து வந்த ஒரு மனிசரு. அவருக்கு அழகியான ஒரு மனேவியிருந்தா. அந்தப் பொண்ணு சாலே அங்காடியிலுள்ள ஒரு பட்டாணித் துலுக்கனுக்குப் பொறந்தவள்ளுதான் சொல்றுங்க. ராயருக்கு, குதிரைக்காரரோட அந்த மனேவிக்குப் பொறந்த மகள்தான் இப்போ சீஃப் செக்ரடரியா வந்திருக்கும் கிருஷ்ணன் நாயரோட மனேவி.''

கொச்சுண்ணி நாயர் கேட்டார்: ''அப்போ கலப்புத்தான்?''

கொச்சுவேலுப் பிள்ளே தொடர்ந்து கூறினார்: ''பொண்ணு ரொம்பக் கெட்டிக்காரி. கிருஷ்ணன் நாயருக்குப் படிப்படியாப் பதவி உயர்வு கிடைக்கிறது எப்படீன்னு நினேக்கிறீங்க? அவளுக்குத் தாளமும் மேளமும் நல்லாத் தெரியும்ப்பா.''

---

* பேஷ்கார் = கலெக்டருக்குச் சமமான உத்தியோகஸ்தர். (மொ . . . ர்.)

அன்று திருவாங்கூர் சம்ஸ்தானம், ஆட்சி நடத்தும் சௌகரியத்துக்காக நான்கு டிவிஷன்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒரு டிவிஷனே ஆட்சி நடத்துகிற உத்தியோகஸ்தரைப் பேஷ்கார் என்று அழைத்து வந்தனர். பேஷ்கார்களுக்கெல்லாம் தலேவராக இருப்பவரே திவான். இவருடைய பிரதிநிதிகளாக ஆட்சி நடத்துவதனால் அவர்களேத் திவான் பேஷ்கார் என்றும் கூறுவார்கள். (மொ . . . ர்.)

ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் கிருஷ்ணன் நாயருக்கு எப்படி எப்படிப் பதவி உயர்வுகள் கிடைத்துவந்தன என்பதைப்பற்றிக் கொச்சுவேலுப் பிள்ளை சாங்கோபாங்கமாக விளக்கிக் கூறினார்: ''இனி அடுத்தாற்போல் அவரு திவான்ஜிகூட ஆயிடுவார்போலிருக்கு.''

அந்த வரலாறு, கேசவபிள்ளைக்குச் சிறிது சிந்திப்பதற்கான உணர்வைக் கொடுத்தது. அண்ணன் தம்பிகளான பட்டாளச் சிப்பாய்கள் அவன் கண்முன்னே வந்து நிற்பதாகத் தோன்றியது. மறுநாள் தங்கம்மாவிடம் ஒரு கேள்வி கேட்பது மகிழ்ச்சிகரமாக இருக்கும்:

''உன் பாட்டனாரின் பெயரைச் சொல்லு!''

நிச்சயமாக அவளது வதனம் வெளிறிவிடும். பாட்டனார்களின் பெயர்களை அவளால் சொல்லமுடியும்; பாட்டனாரின் பெயரைச் சொல்ல முடியாது. அந்தக் கேள்வியோ, பதிலோ ஒன்றும் வேண்டாம். அந்த இரண்டு பட்டாளச் சிப்பாய்களின் பெயர்களைச் சும்மாவாவது சொன்னால் கூட அவள் முகம் வாட்டமடைந்துவிடலாம். இவ்வாறு அவளுக்கு வேதனை அளிக்கிற, அவளை அவமானப்படுத்துகிற விஷயங்களைப்பற்றி எதற்காகச் சிந்திக்க வேண்டுமென்று அவன் யோசித்துப் பார்த்தான். ஆனால், அவசியம் ஏற்பட்டால் ஒரு முறை கேட்கவேண்டியதுதான்.

அத்தியாயம் 7

அதிருஷ்டத்தின் ஆரம்பம்

தலைமைச் செயலகத்தில் புதிய தலைமைக் காரியதரிசி ஆட்சியில் அமர்ந்து கொண்டதும், இடங்களை மாற்றிப் பிரதிஷ்டை செய்யும் பல நடவடிக்கைகள் ஆரம்பமாகுமென்ற வதந்திகள் உலாவின. காரிய தரிசிகளில் சிலரை வெளியிடங்களுக்கு மாற்றிவிடுவாராம். அங்கே ஒரு களையெடுப்பு நடந்துவிடுமாம்! சிபாரிசு செய்யப் பிரமுகர்கள் இருந்தால், சில நபர்களுக்குப் பதவி உயர்வுகள் கிடைக்கலாம். இது ஒரு தகுந்த சந்தர்ப்பம்.

கேசவபிள்ளைக்கு அவ்வாறு யோசிக்கக்கூடச் சாத்தியமில்லை. அவன் ஒரு கீழ்த்தரச் சிப்பந்தி. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதற்கான பரிசயமோ பரிபக்குவமோ அவனுக்கு ஏற்படவில்லை. வேலையில் சிறிது உயர்வு பெறுவதற்குக்கூடக் காலமாகவில்லை. விடுதியிலே தங்கிவருகிற பத்மநாபப் பணிக்கர், பார்க்வியூவிலுள்ள காரியதரிசியின் அந்தரங்கச் சிப்பந்திகளில் ஒருவனுக நுழைந்துவிட முயற்சி செய்து கொண்டிருக் கிறார். அது விரும்பத் தகுந்ததுதான். கொச்சுண்ணி நாயர் வேறு இலாக்காவுக்கு மாறிவிடவேண்டு மென்று விரும்புகிறார். இவர்கள் எல்லாரும் வேலையில் பயிற்சி பெற்றவர்கள். வழிகள் நன்கு தெரிந்த வர்கள். இனி ஒரு முறை இத்தகைய நிலைமை ஏற்படுமானால் கேசவ பிள்ளைகூட இவ்வாறெல்லாம் விரும்பி முயன்று பார்க்கலாம். ஆனால் இப்போது முடியாது. உட்காருமுன் கால்களை நீட்டிவிடமுடியுமா? ஆயினும், ராமசந்திரன் நாயருக்குச் சூப்பிரண்டின் பதவி கிடைக்கலா மென்றால், தனக்கு இந்த நிலையிலிருந்து சற்று உயர்ந்த நிலையில் ஒரு சீனியர் கிளார்க்கின் பதவியாவது கிடைக்கக்கூடாதா?

ஒரு நாள் பியூன் மாதேவன்பிள்ளை கேட்டார்: ''தம்பி, நீங்க ஏனுங்க பேசாமெ இருக்கிறீங்க?''

ஆதரவற்றவன்போல் கேசவபிள்ளை சொன்னான்: ''நான் என்ன செய்யணும் அண்ணே?''

மாதேவன் பிள்ளை வெற்றிலைக்கறை படிந்த பற்களை வெளியே காட்டிச் சிரித்தவாறு கூறினார்:

''என்ன செய்யணும்னு கேக்கறீங்க? நீங்க இப்போ நினைச்சீங்கன்னா, உங்களுக்குத்தான் நல்ல காலம் வரப்போவுது.''

''எனக்கா?''

''ஆம். உங்களுக்குத்தான்.''

''அதெப்படி அண்ணு?''

மாதேவன்பிள்ளை சொன்னார்:

''மாதேவன்பிள்ளை இந்தத் தலைமைச் செயலகத்திலே வேலை செய்ய வந்து நாற்பது வருசமாச்சு. எத்தனை திவான்ஜிங்க வந்தாங்க; போனுங்க! எத்தனை சீஃப் செக்ரடரீங்க வந்தாங்க, போனுங்க! காரியதரிசிங்க விசயத்திலே பார்த்தாக் கணக்கே கிடையாது. சமத்தான எத்தனையோ பசங்க உட்கார்ந்த இடத்திலேயே இருந்து தலை நரைச்சுச் செத்துப் போயிருக்கிறுங்க. உள்ளே நுழைஞ்சாங்க, கண்ணை மூடித் திறக்கறதுக்கு முந்தி அங்கே மேலே எட்டிப் புடிச்சாங்க, என்கிறவர்களும் உண்டு. எல்லாம் இந்த மாதேவன்பிள்ளை சொந்தக் கண்ணாலே பார்த்திருக்கிறேன். அதெல்லாம் குறுக்கு வழீங்க.''

ஒரு விநாடிக்குப் பிறகு மாதேவன்பிள்ளை மீண்டும் சில கதைகளைக் கூறினார். ஒரேவிதமான கல்வி அந்தஸ்து படைத்த இருவர் ஒரே நாளில் வேலையில் அமர்ந்தனர். முதலில் குமாஸ்தாக்களாகத்தான். பின்பு ஒருவர் செக்ரடரியாகிவிட்டார். இன்னொருவர் டெபுடி தாசில்தாராகி விட்டார். ஒரு சமயத்தில் ஒருவர் அரண்மனைக்குள் புகுந்தார். திரும்ப இந்த அலுவலகத்துக்கு வந்தது, இங்குள்ள அவருடைய அனேத்து நண்பர்களுடைய தலைவராகவேதான். அது யாரென்று தெரிய வேண்டுமா? இப்போது திடீரெனப் பதவியிழந்த அந்தச் செக்ரடரியே தான். ஆனால் மாதேவன்பிள்ளை இன்னொரு விஷயத்தை உறுதியாகச் சொல்ல விரும்பினார்:

''பத்துப் பணம் சேர்க்கணுமா? இந்த ஆபீசிலேருந்து வெளியே போகணும். அதுக்கு, சார் இங்கேயே உட்காந்திருந்தா முடியாது.''

கேசவபிள்ளைக்கு ஒன்றுமே புரியவில்லை. அவன் கேட்டான்:

''அதுக்கு நான் என்ன செய்யணும் அண்ணு? எனக்கு உதவியளிக்க யார் இருக்கிறுங்க? எனக்குச் சர்வீசும் ஆகலையே.''

''சர்வீசாவது, பொடலங்காயாவது? அதெல்லாம் தம்பிக்கு ஒண்ணும் வேணும். நீங்க பி. ஏ. பட்டதாரிதானே?''

''அதனாலே?'

மாதேவன்பிள்ளை கேசவபிள்ளையின் காதிலே ஒரு மந்திரத்தை ஓதிக் கொடுத்தார்.

''புதிய சீஃப் செக்ரடரிகிட்டே பார்க் வியூ பங்களாவிலே போய்ச் சேர்ந்துடுங்க. அஞ்சு வருசத்துக்குள்ளே இங்கே ஒரு மேலான இடத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பி வாங்க. அப்புறம் இங்கிருந்து ஒரு பேஷ்காராக வெளியே போங்க! பத்துப் பணம் சேர்த்து வச்சுக்குங்க. கூடவே அண்ணைக்கு இந்த மாதேவன்பிள்ளை உயிரோட இருந்தா என் பக்கமும் ஒரு பார்வை செலுத்திடுங்க!''

அப்புறம் மாதேவன்பிள்ளை இதயம் குளிர ஒரு முறை சிரித்தார். திடீரென முகத்திலே கம்பீரத்தை வரவழைத்தவாறு கூறினார்: ''சேகர

பிள்ளையண்ணனையும் அழைச்சுக்கிட்டு இன்னைக்கே போய்ப் பாருங்க. அது தான் வேணும். தாமதமானு அது ஆபத்தா முடியும்.''

இந்தச் சேகர பிள்ளையண்ணன் யாரென்று கேசவபிள்ளைக்குத் தெரியும். மாதேவன்பிள்ளை சொல்லிமுடிக்கவில்லை.

''சார், ஒரு அதிருஷ்டக்காரரு, பெரிய அதிருஷ்டக்காரருங்க. நல்ல வேளையா எல்லாம் சேர்ந்து வந்திருக்கு.''

ஒரு விநாடி நகர்ந்தது. மாதேவன்பிள்ளை கேசவபிள்ளையின் நன்மையை விரும்புகிறவர்தான். அவர் ஆசீர்வாதம் பண்ணினார்: ''அவள் நல்ல அருமையான பொண்ணு, மானம் மரியாதை உள்ளவள், அழகி. நீங்க ரெண்டுபேரும் நல்ல பொருத்தம். சேகரபிள்ளையண்ணனே, நல்ல மனிசரு. சீஃப் செக்ரடரியும், சேகரபிள்ளையண்ணனும் ஒரு தாய் வயிற்றிலே பிறந்த அண்ணன் தம்பீங்க. சேகரபிள்ளையண்ணன் சொன்னு செக்ரடரி அவங்க மறுக்க மாட்டாங்க.''

கேசவபிள்ளையின் கண்முன்னால் முன்னேற்றத்தின் ராஜபாதை தெளிவாகத் தென்பட்டது. அந்தப் பாதை அவனைக் கைவீசி அழைக்கிறது. வளைவில்லாத நேரான பாதை. பாதை நெடுகிலும் பல இடங்கள். தங்குவதற்கு வசதி பண்ணித்தவையாக அமைந்திருக்கின்றன. அனைத்துமே கண்ணுக்குத் தெரிவிலே தான் இருக்கின்றன. தலைமைக் காரியதரிசி பதவிக்குக்கூட இனி அவன் ஆசைப்படலாம். இந்தச் சந்தர்ப்பம் அவன் வாழ்க்கையில் நல்ல சந்தர்ப்பந்தான்; அதிருஷ்ட காலத்தின் ஆரம்பக் கட்டந்தான்! அவனுடைய சிந்தனை இந்தக் கட்டத்தை அடைந்தபோது கிட்டு மாமாவின் சொற்கள் காதுகளிலே ரீங்காரம் செய்தன: ''அவள் அதிருஷ்டக்காரி தாம்பா.''

முன்னேற்றத்தின் அந்தப் பாதையிலே பரவியிருந்த பிரகாசம் சிறிது மங்கலாகிவிட்டதெனத் தோன்றியது. தொடர்ந்து அந்தச் சொற்கள் அவன் காதுகளிலே எதிரொலித்துக் கொண்டிருந்தன:

''அவள் அதிருஷ்டக்காரிதாம்பா!''

மாதேவன்பிள்ளை தொடர்ந்து கூறலானார்: ''இந்தக் கால அளவிலே இந்த மாதேவன்பிள்ளை எத்தனை பேருக்குச் சமிக்ஞை செய்து கொடுத்திருக்கார்னு தெரியுமா? சமயமும் சந்தர்ப்பமும் மாதேவன்பிள்ளைக்குத் தெரியும். ஆனா . . .ஒரு விசயம் . . . அவங்க அப்புறம் இந்தப் பிள்ளையை மறந்துடுவாங்க.''

''நான் எந்தப் பதவிக்கு வந்தாலும் அண்ணனை மறந்துடமாட்டேன்.''

''ஆனா அன்னைக்கு மாதேவன்பிள்ளையை, சார் இந்த இடத்திலே பார்க்க முடியாது.''

தங்கம்மா வருவதை மாதேவன்பிள்ளை பார்த்தார். அந்தப் பக்கமாகக் கண்ணைச் சிமிட்டிக் காட்டியவாறு அடக்கமான குரலில் அவர் சொன்னார்: ''அதோ! வந்துட்டா, புடிச்சுக்கோ சார்; கெட்டியாப் புடிச்சுக்குங்கோ! காரியம் கைகூடினமாதிரிதான்.''

மாதேவன்பிள்ளை குறும்புத்தனமாக எதையோ பேசிவிட்டுப் போவ தாகத் தங்கம்மாவுக்குப் பட்டுவிட்டது. அவள் சொன்னாள்: ''நான் பந்தயம் கட்டறேன், அண்ணன் ஏதோ குறும்புத்தனம் பண்ணி வச்சுட்டுத்தான் போறார்.''

மாதேவன்பிள்ளை திரும்பி நின்றவாறு தங்கம்மாவிடம் கூறினார்: ''உங்க ரெண்டு பேருக்கும் நல்ல காலம் பிறக்க வழி சொல்லிக் கொடுத் துட்டுத்தான் போறேன். என்னன்னு பிள்ளை சார் கிட்டேயே கேட்டுப் பாரேன்.''

இன்னும் ஒரு விஷயத்தையும் அவர் அவளிடம் சொல்ல விரும்பினார் ''அப்பாவை அழைச்சுக்கிட்டுச் சிற்றப்பா கிட்டே போகணும்! அவரிடம் சொல்லணும் . . . சொந்தமான மனுஷரை . . . ஆ . . . இந்த ஸாரைப் பார்க் வியூவிலே அப்பாயிண்ட் பண்ண . . .''

அதைக்கூட மாதேவன்பிள்ளையே சொல்லிவிட்டார். கேசவபிள்ளைக்குச் சொல்லவேண்டிய வேலை இல்லாமற் போய்விட்டது. ஒரு முறை கண்ணை இறுக்கிக் காட்டியவாறு மாதேவன்பிள்ளை தொடர்ந்து கூறினார்: ''ஆனா . . . ஒரு விசயம் . . . பக்கத்தும், பக்கத்து நாற்காலிகளிலே அமர்ந்து அரட்டைக் கச்சேரி வச்சுக்கறதுக்கும், எல்லாரும் வருமுன்னே சீக்கிரமா வந்து அலமாரிக்குப் பின்னால் மறைஞ்சு நின்னுக்கிட்டிருக் கவும் . . . அதுக்கும் ஒண்ணும் அங்கே சாத்தியப்படாது. ஆ . . . அங்கே சாத்தியப்படாட்டாத்தான் என்ன?''

மாதேவன்பிள்ளை நடந்து சென்றார். கேசவபிள்ளையும் தங்கம்மாவும் பரஸ்பரம் முகத்தோடு முகம் பார்த்துப் புன்னகை புரிந்தனர்.

தெளிவாகப் புரிந்துகொள்வதற்காகத் தங்கம்மா கேட்டாள்: ''அந்தப் பெரியவர் சொன்னது என்ன?''

கேசவபிள்ளை ஒரு வார்த்தைகூட விடாமல் விரிவாகச் சொன்னான். பின் அவன் ஆதரவற்றவன்போல் கூறினான்: ''எனக்குத் துணைபுரிய யார் இருக்காங்க? நான் வடக்கேயுள்ள ஓர் ஊரிலே பிறந்து வளர்ந்தவன். திருவனந்தபுரத்துக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லே. பெரியவங்க மனசிலே என்னைப்பற்றிய நினைவு ஏற்படுவதற்கான சந்தர்ப் பமும் இல்லே.''

தங்கம்மா கீழ்இதழைச் சற்று முன்னே நீட்டியவாறு சொன்னாள்: ''ஐயோ பாவம்! யாருமே இல்லே!'' அவள் அடங்கிய முறையில் குலுங்க நகைத்தாள். சிரிப்பை முடித்துக்கொண்டு அவனை உற்றுப் பார்த்தாள். அவள் கண்கள் இரை கண்ட ஓநாயினுடையதுபோல் ஜொலித்தன.

''அந்தச் சாதுவோட முகத்தைக் கொஞ்சம் பார்க்கலாமா?''

அவள் பேனுமுனையினால் அவன் கன்னத்திலே மெள்ள ஒரு முறை குத்தினாள். கேசவபிள்ளை கேட்டான்: ''உண்டா? எனக்கு உதவியளிக்க யாரேனும் உண்டா?''

அப்போதுதான் ஹரிஹர ஐயர் அங்கே வந்தார். ஐயர் இருவரையும் உற்றுப் பார்த்தவாறு கூறினார்: ''கொழந்தைகாள், இது நன்னு இல்லே.''

கேசவபிள்ளே கேட்டான்: ''எது நல்லா இல்லேங்கிறீங்க?''

''ஒண்ணுமில்லே. நான் சொன்னேன். அவ்வளவுதான்.''

அலுவலக வேலே ஆரம்பமாகிவிட்டது. கோவிந்தன் நாயர் கேட்டார்: ''பார்க்வியூவிலே 'பெர்சனல் ஸ்டாப்'பின் நியமனமெல்லாம் முடிஞ் சுட்டதா, தங்கம்மா?''

அவள் ஒரே ஒரு வாசகத்தில் பதில் அளித்தாள்: ''எனக்கு ஒண்ணும் தெரியாது.''

கேசவபிள்ளே தங்கம்மா முகத்தைப் பார்த்தான்.

கோவிந்தன் நாயர் தொடர்ந்து கூறினார்: ''பலரும் அதுக்காக முனேஞ்சு செயல்படறுங்க. கேட்டீங்களா, ஐயர்வாள்? எதுக்காக இந்த மனுசனுங்க இப்படி நான் முந்தி நீ முந்தீன்னு முண்டியடிச்சுக்கறுங்க?''

ஐயர் பதில் அளித்தார்: ''அங்கேதானே, 'கீ டொஸிஷன்ஸ்' இருக்கு!''

கோவிந்தன் நாயர் நம்பத் தயாராயில்லே.

''என்ன, கீ பொஸிஷன்ஸ்?''

பிரபாகரன் நாயர் கேட்டார்: ''யாரெல்லாம் முயற்சி செய்கிறுங்க?''

கோவிந்தன் நாயர் சொன்னார்: ''ரொம்பப் பேர்—திருவனந்தபுரத் திலுள்ள பிரமுகர்கள், எம். எல். சிக்கள்—எல்லாரும் நாலுகால் பாய்ச்சலிலேதான் ஓடிக்கிட்டிருக்காங்க. இதெல்லாம் வெறும் பைத்தியக் காரத்தனம்னுதான் நான் நினேக்கிறேன்.''

தங்கம்மா மிகுந்த கவனத்துடன் எதையோ எழுதிக்கொண்டிருந்தாள். யாருக்கும் தெரியாமல் ஒரு காகிதத் துண்டை அவள் கேசவபிள்ளேயின் மேஜைமீது வைத்தாள்.

அதிலே இவ்வாறு எழுதப்பட்டிருந்தது: ''யார் வேண்டுமானாலும் முயன்று பார்க்கட்டும். நாம் பார்த்துக்கொள்வோம். எதற்கும் கவலே வேண்டாம்.''

கேசவபிள்ளேயின் முகத்திலே களே பரவியது. அதற்குக் காரணம் இருக்கத்தானே, செய்கிறது? நல்ல காலத்தைக் கையிலே எட்டிப் பிடிக்க லாம் என்ற நிலேமை ஏற்படுகிறபோது யாருக்குமே உற்சாகம் பிறந்து விடும் அல்லவா? ஆனால் அந்த உற்சாகத்துக்கு ஒரு கம்பீரமுண்டு. அவன் அந்தப் பெரிய ராஜபாதையை நோக்கிக் காலெடுத்து வைத்துவிட்டான்.

எதிர்காலத்தைப்பற்றிய தெளிவான உருவம் தென்படுவதில்லே. ஒரு வேளே, ஏன்? உறுதியாகவென்றே வைத்துக்கொள்வோம்—பார்க் வியூவிலே வேலே கிடைத்துவிடலாம். அது ஒரு சந்தர்ப்பந்தான். சந்தேகம் இல்லே. பக்திவிலாசத்திலும், அரண்மனேயிலும் உள்ளவர்களின் அன்புக்குப் பாத்திரமாகிவிடலாம். அவ்வாறு பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் அதிகரித்து விடலாம். ஆனால், கேசவபிள்ளே என்ற மனிதன் ஒருகாலும் அவிழ்க்கப்பட முடியாத ஒரு சுருக்கிலே அகப்பட்டுத் தவிக் கிறானே!

தங்கம்மாவைத் திருமணம் செய்வான் என்ற நம்பிக்கையிலேதான் அவனுக்கு இவ்வளவு வசதிகளை எல்லாம் செய்து கொடுக்கப் போகின்றனர். சேகரபிள்ளை தம்பியிடம் என்ன சொல்லப் போகிறார்?

''நம்ம தங்கம்மாவை மணம் புரிய இருக்கிற அந்தப் பையனை நீ அருகிலேயே உட்காரவைத்து நல்லாக் கற்றுக் கொடுத்துப் பெரிய மனிதனப் பண்ணிடணும்.''

சின்னம்மாவிடம், ஸ்டீப் செக்ரடரி கிருஷ்ணன் நாயருடைய மனைவி யிடம் சென்று, ஒருவேளை, தங்கம்மாவும் பேசிவைப்பாள்.

இப்போது வேறு ஒரு சிந்தனை அவனைத் துன்புறுத்திக்கொண் டிருந் தது. அன்று தோட்டப்பிள்ளையிலே இறங்கித் திரும்பவும் ஊருக்குப் போகாமல் இருந்திருக்கலாம். அந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்க மாட்டேன் என்று அப்பாவிடம் ஒரேயடியாகச் சொல்லியிருக்கலாம். அது அப்பாவை நடுங்க வைத்திருக்கும் என்பது திண்ணம். அப்பா மிகவும் ஆத்திரப்பட்டிருப்பார் என்பதிலும் சந்தேகமில்லை. அம்மா அழுதிருப்பாள். மைத்துனருடன் உள்ள உறவிலே சிறிது தகராறு ஏற்பட்டிருக்கலாம். அவர் அக்கா மீது வசைமாரி பொழிந்திருப்பார். ஊரிலே ஒரு பகுதியினர் தனக்கு ஆதரவாக நின்றிருப்பார்கள். பெரிய விவாதம் நடைபெற்றிருக்கும். அத்தகையதொரு புயலுக்குப் பின் நிச்சயமாக அமைதி ஏற்பட்டிருக்கும். ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் உறுதியாகச் சொல்லிவிடமுடியும். நீடித்து நிற்கிற கருத்து வேற்று மையோ, வெறுப்போ தாய்தந்தையர்களுக்குத் தன்னிடம் ஏற்பட்டுவிட முடியாது. ஒரே ஒரு மகன்! செல்வமகன்! அக்காளுக்கு ஒரே ஒரு தம்பி! நாள் செல்லச் செல்ல எல்லாம் சரியாகப் போயிருந்திருக்கும். குறிப்பாக, இவ்வாறு படிப்படியாக உத்தியோகத்திலே முன்னேற்றம் ஏற்படுகிற போது, நல்ல நிலைமையை அடைகிறபோது தந்தையின் அபிமானத்தின் மீது ஏற்பட்ட களங்கம் மாய்ந்துபோயிருக்கும். எல்லாமே மங்களகர மாகப் பரிணமித்திருக்க முடியும்.

அந்தப் பலவீனத்தை நினைந்து அவன் மிகவும் வருந்தினான். பரிதாப கரமான காரியந்தான். இதெல்லாம் நடந்திருக்க வேண்டியதில்லை. முப்பதாம் தேதி திருமணம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதென்று சொன்னபோது, வாட்டமடைந்த முகத்துடன் இரண்டு துளிக் கண்ணீரை விட்டிருந்தால் அதைப் பார்த்து அம்மாவின் மனம் மாறுதல் அடைந் திருக்கும். அவள் எனக்காக வாதம் புரிந்திருப்பாள். இதெல்லாம் நடந்திருக்காது.

தலையெழுத்துத்தான்! அந்தப் பெண் தன்னுடைய மனைவியாக வேண்டு மென்று தலைவிதி இருந்திருக்கிறது.

''அவள் அதிருஷ்டக்காரிதாம்ப்பா!''

அந்தச் சொற்கள் மிகத் தெளிவாகக் காதுகளுக்குள்ளே முழங்கு கின்றன! ஒருக்காலும் மாய்ந்து விடாதபடி கிட்டு மாமாவின் அந்தச் சொற்கள் இதயமென்ற பலகையில் ஒலிப்பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

அவள் அதிருஷ்டக்காரியாக இருக்கலாம். அது உண்மையாக இருக்கலாமென்றே கேசவபிள்ளைக்குத் தோன்றியது.

ஒருத்தியுடைய கழுத்திலே தாலிகட்டி, *அவளுக்குப் புடைவை கொடுத்து, வீட்டுக்கு அழைத்து வந்து விட்டுவிட்டுத் திரும்பிக்கூடப் பார்க்காமல் கிளம்பி வந்தவன்தான் அவன். அந்தப் பெண்ணுக்கு ஏற்படும் கவலை குறித்து அவன் சற்றேனும் கவலைப்படவில்லை. எதிர்காலத்தில் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய முன்னேற்றங்களைப்பற்றிய கனவுகளால் அவனுடைய இதயம் நிறைந்திருந்தது. எனவே இன்னொரு மனித ஜீவியின் இதய உணர்ச்சிகளுக்கு அவனுடைய இதயத்திலே இடம் இல்லாமல் போய்விட்டது.

அன்று கேசவபிள்ளை திருவனந்தபுரத்துக்கு வந்தபோது இதைப்பற்றி ஏதும் சிந்தித்தவன் அல்ல. வேலை கிடைத்ததே அதிருஷ்டம். இன்று இத்தகைய சந்தர்ப்பம் உருவாகி வருவதும் அதிருஷ்டமே. அவனுக்கு இப்போது ஒருவிதமான துணிச்சல் ஏற்பட்டிருக்கிறது. தனது அதிருஷ்டத்திலே அவனுக்கு நம்பிக்கை பிறந்திருக்கிறது. அதுதான் இந்தத் துணிச்சல். இந்தப் பிரவாகத்திலே மிதந்து செல்லவேண்டியதுதான். அங்குமிங்கும் பார்த்து, அதையும் இதையும் நினைத்துப் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. இந்தப் படகு செல்லுமிடத்திலே சென்று சேரட்டும்.

பாதி வழியிலே சுழலிலே அகப்பட்டு அமிழ்ந்துபோவதென்றால், போகட்டும். அனைத்து விஷயங்களும் தங்கம்மாவுக்குத் தெரிந்துவிடப் போகிறதென்றால், தெரியட்டும். சீஃப் செக்ரடரி அவர்கள் இந்தச் செய்திகளை அறிந்து தன்னை மோசக்காரன் என்று நினைக்கப் போகிறார் என்றால், அதுவும் நடக்கட்டும். தனது அதிருஷ்டத்தினால், அன்று தங்கம்மாவின் சிற்றப்பா தலைமைச்செயலாளர் பதவியிலிருந்து தலை குப்புறக் கவிழ்ந்துவிடக்கூடாதா? அப்போது தன்னை எதிர்நோக்குகிற நெருக்கடிகள் அனைத்தும் பஞ்சாய்ப் பறந்துபோய்விடலாம் அல்லவா? பார்க்கலாம். எந்த ஆபத்து வேண்டுமானாலும் வரட்டும். தைரியத்துடன் சமாளிப்பதென்ற மன உறுதி அவனுக்கு ஏற்பட்டுவிட்டது.

அப்போதுகூட கிட்டு மாமாவின் அந்த அன்புக் குரல் அவன் காதுக்குள்ளே ரீங்கரித்தது.

''அவள் அதிருஷ்டக்காரிதாம்ப்பா!''

அப்படியா? இவை அனைத்தும் அதன் அறிகுறிகள் அல்ல என்று எப்படிச் சொல்ல முடியும்?

படிக் கட்டடக் கதவைத் திறந்துவைக்கவேண்டுமென்று இன்று கேசவபிள்ளையே தங்கம்மாவிடம் வேண்டினான். இன்றைக்கு என்ன?

---

*நாயர் ஜாதியில் பெண்ணுக்குத் தாலி கட்டினால் மட்டும் போதாது. புடைவையையும் கொடுக்கவேண்டும். அன்று, அந்தச் சமுதாயத்தில் நடைபெறும் திருமணத்துக்கு 'புடைவைக் கொடை'' என்று தான் பெயர் (மொ. . .ர்).

என்றைக்குமே! அவள் சம்மதித்தாள். அதிலே அவளுக்கு ஆனந்தந் தான். தங்கம்மாவைத் தன்னிடம் நெருங்க வைக்கக் கேசவபிள்ளை இன்று வரை மனப்பூர்வமாக முயன்றதில்லை. இன்று அவன் அவளைத் தன்னிடம் நெருங்க வைக்கிறான். அவளைத் தன்னோடு கட்டுண்டு கிடக்கச் செய்யத் துணிந்து முயற்சி செய்கிறான். விழித்தெழுந்தது, அவளது பெண்மை. எட்டாமல் இருந்து வந்த கனி இன்று புசிக்கக் கிடைத்ததும் அவளுக்கு வெறி ஏற்பட்டுவிட்டது. அவளிடம் தனக்கு ஏற்பட்டிருந்த ஆவேச உணர்ச்சி, புத்தியினுல் கணக்குப் போட்டுக் கிளர்ந்தெழச் செய்து பெரிதுபடுத்தியதாக இருந்தபோதிலும், அவன் அவளுக்கு மதி மயக்கம் ஏற்படச் செய்துவிட்டான். இன்று அவள் மலர்ந்து வருகிற ஒரு மலர்—மொட்டு அல்ல. பூரணமாக மலர்ந்து வண்டை எதிர்நோக்கி என்றென்றும் தாகம் கொண்டு நிற்கிற ஒரு பூவாகிவிட்டாள் அவள். அவளுக்கு வாக்குறுதிகள் வேண்டாம். அவன் மட்டும் போதும். அவன் அணையைத் திறந்துவிட்டிருக்கிறான். இந்தப் பிரவாகம் இனி எந்த இடத்துக்குச் சென்று மோதி நிற்கப் போகிறதோ, என்ன ஆகுமோ? அந்த உறவு இந்த நிலைமைக்கு வந்திருக்கிறது. அவன் அவளைத் தனதாக்கிக்கொண்டுவிட்டான். அவள் அவனுக்காக எதையும் செய்யத் துணிந்துவிட்டாள்.

இந்த விளையாட்டின் இறுதியான பரிணமம் எதுவாக இருக்கும் என்பதைப்பற்றிக் கேசவபிள்ளை கவலைப்படவில்லை. வாழ்க்கையில் மனைவி என்ற அந்தஸ்துக்குத் தகுதி படைத்தவள் யாராக இருப்பாள்? அங்கே, ஊரிலே தாயாரை உபசரித்தவாறு நாட்களைக் கழிக்கிற கார்த்தியாயினியா? அல்லது தனது முன்னேற்றத்துக்கான ஒரு கருவியாகப் பயன்பட்டு வருகிற தங்கம்மாவா? யாராக வேண்டுமானுல் இருந்துவிட்டுப் போகட்டும்! இந்தப் போக்கிலே விதி யாரைத் தேர்ந்தெடுக்குமோ அவளே மனைவியாக இருக்கப்போகிறாள். விட்டு விடப்பட்டவளைப்பற்றி அவனுக்கு எவ்விதமான அநுதாபமும் ஏற்படப் போவதில்லை. அவனுடைய மூளையிலே வெளிச்சம் ஏற்பட்டுவிட்டது. தனக்குத் திறமைகள் இருக்கின்றன என்பதை அவன் உணர்ந்து கொண்டான். மனத் துணிச்சல், அவனுள் பொதிந்து கிடந்திருந்த திறமைகளைத் தட்டியெழுப்பிற்று. எந்த இடம் வரையில் போகவேண்டுமானுலும், இப்போது அவனுக்குப் பயம் இல்லை. எங்கே சென்றாலும் வெற்றி ஏற்படுமென்ற நம்பிக்கையில் திளைத்தான் அவன்.

ஒரு காலத்தில் இரண்டு வேளை உணவுக்காக ஏங்கிய கேசவபிள்ளையின் மானசிக அமைப்பிலே ஏற்பட்ட மாறுதல் இது. அவனுடைய திறமைகள் விழித்தெழுந்தன. ஏதேதோ ஆசைகள் மனத்தில் துளிர்த்திருப்பதுடன், புதிய பாதையும் முன்னே தென்படுகிறது. எனவே மானசிக அமைப்பில் மாறுதல் ஏற்படத்தானே செய்யும். இந்த நிலைமையிலே, தாலி கட்டின மனைவியையும், தனது முன்னேற்றங்களுக்கு முதற் படிக்கல்லாக விளங்குகிற காதலியையும் வெறும் கருவிகளாகக்

கருதுமளவுக்கு உணர்ச்சிகளின் மதிப்பீட்டிலே உருவ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றால், அதை அவனுடைய துணிச்சலுக்கு ஓர் இலக்கணமாகவே கொள்ளவேண்டும். கார்த்தியாயினி அதிருஷ்டக்காரி என்று கிட்டு மாமா சொல்கிறார். அந்த அதிருஷ்டத்தை அநுபவிக்கப் போகிறவன் அவளுடைய கணவனேதான் என்றும் கூறிவருகிறார். அவள் அதிருஷ்டக்காரியென்றால் அந்த அதிருஷ்டம் அவனுடைய முன்னேற்றத் துக்காகவேதான். எந்நாளும் தணிந்துவிடாத ஆவேச உணர்ச்சி தங்கம்மாவை வாட்டுகிறது. அந்த உணர்ச்சியும் அவனுடைய முன் னேற்றத்துக்காகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது. உணர்ச்சியால் வெறி கொண்ட அவளை அநுபவிக்கிறவனும் அவளுடைய காதலனுகிய அவனேதான். இவ்வாறுக, அவ்விரு பெண்களும் அவனுடைய முன் னேற்றத்துக்கும், மன இன்பத்துக்குமாகவே படைக்கப்பட்டிருக் கின்றனர்!

ஊரிலிருந்து அப்பா கடிதம் எழுதியிருந்தார். கிட்டு மாமா பஞ்சாங்கம் பார்த்துக் கணக்குப் போட்டு நல்ல நாளெனத் தீர்மானித்திருந்த தேதி யன்று அவனால் ஊருக்குப் போக முடியவில்லை. கோபாலன் நாயருடைய லீவ்பல் விஷயமாகத் திருவனந்தபுரத்திலேயே தங்கியிருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டதென்று காரணம் காட்டிப் பதில் எழுதினான் கேசவபிள்ளை.

இரண்டு வாரங்களுக்குப் பின் திரும்பவும் அப்பா கடிதம் எழுதியிருந் தார். வியாழக்கிழமை கண்டிப்பாக ஊருக்கு வரவேண்டுமாம். அந்தக் கடிதத்தில் அவர் அவனை மிகவும் குறை கூறியிருந்தார்; ஊர் ஜனங்கள் என்ன சொல்லுவார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டுமென்று உபதேசம் செய்திருந்தார்; ஊர் பழக்கவழக்கங்களை அனுசரித்து நடக்க வேண்டுமென்று கோரியிருந்தார். தந்தைமீது பழிச்சொல் விழ வழி ஏற்படக்கூடாதென்று சூசகமாகச் சொல்லியிருந்தார். வியாழக்கிழமை என்று நிர்ணயித்துச் சொன்னது கிட்டு மாமாவாக இருக்கலாம். பஞ்சாங்கம், ஜாதகம் ஆகியவற்றை எடுத்து வைத்து, தேதி, கிரகநிலை முதலியவற்றைப் பார்த்து முதலிரவுக்கு நிச்சயிக்கப்பட்ட தினமாக இருக்கலாம், இந்த வியாழக்கிழமை.

ஆனால், இப்போதைய நிலைமையில் அவன் வியாழக்கிழமையன்று ஊருக்குச் செல்லமுடியாது. அதுமட்டும் நிச்சயம். அந்த நாட் களிலேதான் அந்த ஏணியின் முதற்படி தயாராகிவருகிறது. அந்த நேரத்தில் இங்கே தங்கியிருக்கவேண்டியது, தவிர்க்கமுடியாதது. தாய் தந்தையர்களின் பெரிய பிரச்னை அவன் அந்த நாட்களில் ஊரில் இருக்கவேண்டுமென்பது. ஆனால் கேசவபிள்ளையைப் பொறுத்த வரையில் இங்கேயே தங்கியிருந்து காரியத்தைக் கைகூடவைப்பதே பெரும் பிரச்னை. வியாழக்கிழமையன்று இருந்துவருகிற முதலிரவு முகூர்த்தத்தைத் தங்கம்மாவுடன் சேர்ந்து கொண்டாட வேண்டியது தான்.

கேசவபிள்ளை தந்தைக்குப் பதில் அனுப்பினான். பதவி உயர்வுக்குத் தகுந்த சந்தர்ப்பம் வரப்போகிறதென்றும், அந்த நாட்களில் ஊரிலே தங்கியிருக்கக்கூடாதென்றும், என்றைக்குத் தான் வரமுடியுமென்று தற்போதைக்குச் சொல்ல இயலாதென்றும், அவன் அந்தப் பதிலில் விளக்கமாக எழுதியிருந்தான். கார்த்தியாயினிக்கு இந்தச் செய்திகள் அனைத்தையும் தெரியப்படுத்தவேண்டுமென்று எழுதவேண்டுமா, வேண்டாமா என்பதைப்பற்றி அவன் நீண்டநேரம் யோசித்துப் பார்த்தான்; இறுதியில் அவ்வாறு எழுதவேண்டியதில்லை என்று முடிவெடுத்தான். செய்திகள் அனைத்தும் அவளுக்குத் தெரிந்துவிடும் அல்லவா? அது போதுமே! ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் அந்த உறவை முறித்துக்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டால் . . . ? அவளுடைய வாழ்க்கையின் இந்தப் பிரவாகத்தில் அத்தகைய உறவுகள் முறிந்துவிடலாம். எத்தனையோ நபர்கள் விவாகரத்து செய்துகொள்கின்றனர்! அந்த நிலைமையிலே அவளைப்பற்றி எதையும் இந்தக் கடிதத்தில் குறிப்பிடாமல் விட்டுவிடுவதுதானே நல்லது?

அவள் அதிருஷ்டக்காரியாக இருக்கிறாளென்றால், தன்னுடைய மனைவியாக வாழ்ந்து வருவதற்கான அதிருஷ்டம் அவளுக்கு இருக்கிறதென்றால், வாழ்க்கையில் தனக்கு முன்னேற்றம் ஏற்படத்தான் செய்யும். அவள் மனைவியாகத் தன் வாழ்க்கையிலே தொடர்ந்து நீடிக்கவும் செய்வாள். இல்லாவிட்டால் அந்தப் பட்டிக்காட்டுப் பெண் தாய் தந்தையர்களை உபசரித்தவாறு உயிர் வாழட்டும். அதுவும் இல்லாவிட்டால் அவள் தன்னுடைய சொந்த ஊருக்குப் போகட்டும். தங்கம்மா அப்போது அதிருஷ்டக்காரியாகிவிடுவாள்.

* * *

அடுத்த ஞாயிற்றுக்கிழமை மத்தியான்னத்துக்குப் பிறகு, கேசவ பிள்ளை செட்டிக் குளக்கரையிலுள்ள தங்கம்மாவின் வீட்டுப் படிக்கட்டட வாசலைக் கடந்து உள்ளே நுழைந்தான். பகல் வேளையில், இவ்வாறு பகிரங்கமாக உள்ளே நுழைவது இதுதான் முதல்தடவை. இவ்வாறு அங்கே சென்று நுழைவதைத் தவிர்க்கவேண்டுமென்றே அவன் நினைத்து வந்தான். ஆனால் தங்கம்மா வற்புறுத்தினாள். அவளுடைய தாய் தந்தையர்களுக்கு அவனைப் பார்க்கவேண்டுமாம்! அந்தச் சந்தர்ப்பத்தில் அவளுடைய வேண்டுகோளை அவனால் புறக்கணிக்க முடியுமா?

தங்கம்மாவைத் திருமணம் செய்துகொள்வது சம்பந்தமாக, அவள் தந்தையோ, தாயோ தன்னிடம் கேட்டால் என்ன பதில் சொல்வதென்று கேசவபிள்ளைக்குத் தெரியவில்லை. அவர்கள் அது விஷயமாகக் கேட்காமல் இருக்கமாட்டார்கள். அதைக் கேட்டு உறுதிப்படுத்திய பிறகுதானே, சீஃப் செக்ரடரியிடம் அவனுடைய உத்தியோக உயர்வு

சம்பந்தமாகப் பேசுவார்கள்? திருமணத்தை நடத்திவிடலாமென்று சொல்வதா? அவ்வாறு சொல்ல அவனுக்குத் தயக்கமில்லை. ஆனால், அவ்வாறு சொல்லிவிட்டுப் பின் அதற்கு நேர்முரணாக நடந்து கொண்டால், அதன் விளைவுகள் என்ன? அவையே அவனைப் பயமுறுத்தின. நெருக்கடிகள் பல ஏற்படலாம். கல்யாண விஷயமாகக் கண்டிப்பான முறையில் சொல்லாமல் இருந்தாலோ, அப்புறம் எந்தக் காரியமும் கைகூடாது போய்விடும். இவை அனைத்தும் அந்தப் பட்டிக் காட்டுப் பெண்ணின் கழுத்திலே தாலி கட்டியதன் விளைவுகள்தான். அப்பா, அம்மா ஆகியோரின் முன்னிலையில் ஏற்பட்ட பலவீனத்தினால் ஏற்பட்டவை!

கேசவபிள்ளையின் இதயம் படக் படக்கென அடித்துக்கொண்டது. மனத்தை உலுக்குகிற சிந்தனைகளைத் தெளிவாக வெளிக் காட்டி விடுவோமோ என்று அவன் பயந்தான். பெரியதொரு திருட்டுத் தனத்தை மனத்திலே மறைத்தவாறு செல்வதாகப் பார்வையிலேயே யாரும் கண்டுகொள்வார்கள். அதை மறைத்து வைக்க அவன் ஒரு புன்னகையை வரவழைத்தான். அதுவும் கபடப் புன்னகையாகவே இருந்தது.

படிவாசலைத் தாண்டி வந்த கேசவபிள்ளையைச் சேகரம்பிள்ளை களை மிகுந்த சிரிப்புடன் வரவேற்றார். அந்த மனிதர் தம்முடைய எதிர்கால மருமகனை வரவேற்றார். அந்தப் பாசம் அந்தச் சிரிப்பிலே காணப் படுகிறது. கேசவபிள்ளை இப்போது கூடுதலான குழப்பத்துக் குள்ளாகினான். அங்கணத்தில் நின்றுகொண்டிருந்த தங்கம்மா விரைந்து சென்று வீட்டுக்குள்ளே நுழைந்தாள். ''அவர் வந்துவிட்டார்'' என்று தாயிடம் சொல்வதற்காகவா? தாய் கதவோரமாக மறைந்து நின்றவாறு தன்னை உற்றுப் பார்க்கிறாளா?

வாழ்க்கையிலே எண்ணற்ற சங்கடங்களை அநுபவித்தவர் சேகரம் பிள்ளை என்பது யாரும் சொல்லாமலே விளங்கிவிடும். ஆனால் இப்போது ஒருவிதமான மனஉறுதி ஏற்பட்டிருப்பதாகத் தோன்றியது. உறுதி படைத்த நெஞ்சினர்தான். ஒருகால் வாழ்க்கை கற்றுக் கொடுத்த படிப்பினைகள் அந்த மனிதரை அவ்வாறு ஆக்கியிருக்கலாம்.

கேசவபிள்ளை எங்கே தங்கிவருகிறாரென்று சேகரம்பிள்ளை கேட்டார். ஊர் விஷயங்களைப்பற்றியெல்லாம் விசாரித்தறிந்தார். க்ஷேமலாபங் களைப்பற்றி விசாரித்த பின் சேகரம்பிள்ளை தம் மனைவியை அழைத்தார்:

''பாகீரதி!''

பாகீரதியம்மா அறைக்குள்ளே கதவோரமாக மறைந்து நின்றாள். அவள் பதிலுக்குக் குரல் கொடுத்தாள். சேகரபிள்ளை சொன்னார்:

''ஏம்மா, நீ உள்ளே நிக்கறே? வெளியே வாம்மா!''

பாகீரதியம்மா வெளியே வரவில்லை. அவர் கேசவபிள்ளையிடம் கூறினார்:

''நாங்க திருவனந்தபுரத்துக்காரங்க. இங்கே ஒரு வழக்கம் இருந்துவருது. மாமியாரும் மருமகனும் பரஸ்பரம் முகத்தோடு முகம் பார்க்கக்கூடாது. அதனால்தான் அவ மறைஞ்சு நிக்கறு.''

சேகரபிள்ளை சிரித்தார். கேசவபிள்ளை சிரிக்கவில்லை. அந்த வார்த்தைகள் அவனுடைய இதயத்தை நெரிப்பதுபோல் இருந்தது. தப்பியோடிவிடமுடியாதபடி ஒரு மூலையில் அகப்பட்டுக்கொண்டதாக அவனுக்குத் தோன்றியது. சேகரபிள்ளை மனைவியிடம் சொன்னார்:

''இந்த வழக்கமெல்லாம் மலையேறிப் போச்சு பாகீரதீ. எல்லாம் தவறு. அர்த்தம் இல்லாதது. நீ வெளியே இப்படி வாம்மா!''

பாகீரதியம்மா உள்ளேயே நின்றவாறு கூறினாள்:

''நான் அந்த வழக்கத்தையெல்லாம் மீறமாட்டேனுங்க.''

சேகரபிள்ளை ஒப்புக்கொண்டார்:

''அப்படியானு, வேணும்மா.''

அதற்குள் தங்கம்மா காபி தயாரித்துக்கொண்டு வந்தாள். அவனை இதற்கு முன் அறிமுகமில்லாதவள்போல் நடித்தாள். ஒரு குடும்ப மகள் போலவே நடந்துகொண்டாள். அறிமுகமோ, பரிசயமோ ஏற்படாத ஒரு மனிதனுக்குக் காபி கொண்டு வந்து கொடுப்பவள் போல் இருந்தது. கேசவபிள்ளையும் அறிமுகமில்லாதவன்போல் அமர்ந்திருந்தான்.

காபி சாப்பிட்டாய்விட்டது. அந்தப் பிரச்னை? கேசவபிள்ளை ஒவ்வொரு விநாடியும் நடுங்கிக்கொண்டிருந்தான்.

சிறிது நேரம் வரையில் சேகரபிள்ளை ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தார். ஏதோ பெரிய விஷயத்தைப்பற்றித்தான். சந்தேகம் இல்லை. அந்த நேரத்திலே நிசப்தம் அங்கே தங்கி நின்றது. அந்தப் பிரச்னைதான் வெளிக்கிளம்பி வரப்போகிறது. கேசவபிள்ளைக்குச் சந்தேகமில்லை. சேகரம்பிள்ளை திடீரெனத் தலையைத் திருப்பியவாறு கூறினார்:

''கேட்டுக்குங்க பிள்ளை . . . எங்களோட ஒரே பொண்தான் தங்கம்மா. நீங்க செக்ரடரியேட்டிலே வேலைக்குப் போன அன்னை விருந்தே இவ இங்கே வந்து உங்களைப்பற்றிப் புகழ்ச்சியாப் பேசிக்கிட்டிருக்கா.''

பேச்சு திடுமென நின்றுவிட்டது. அவர் ஏதோ குழப்பமடைந்தார் போல் தோன்றியது. இனி என்ன சொல்வதென்று அவருக்குப் புரியவில்லை. சேகரபிள்ளை கண்டிப்பான ஒரு மனிதராகக் காட்சியளித்த போதிலும், இத்தகைய விஷயங்களில் அவருக்குப் போதுமான பரிசயம் இல்லை என்றே தோன்றியது. சிறிது நேரத்துக்குப் பிறகு அவர் மீண்டும் பேச்சைத் துவக்கினார்: ''இப்போதைய சீஃப் செக்ரடரி என் தம்பி. உடன்பிறப்பு. அவன்கிட்டே நான் இதுவரை கிளார்சு கிளார்சன்னு போனதில்லே. உங்களை அவன் இருக்கிற இடத்துக்கு மாற்றிட்டா அப்புறம் உங்க முன்னேற்றத்தை நீங்களே கவனிச்சுக்கு வீங்கன்னு தங்கம்மா சொன்னு. அவள் எதைச் சொன்னாலும்

கேட்டாலும் அதை நான் மறுத்துப் பேசியதில்லே. அப்போ நான் தம்பி கிட்டே போயி அப்படிச் சொல்லலாம்ணு நினைக்கிறேன்.''

கேசவபிள்ளையின் நெஞ்சம் குமுறிக்கொண் டிருந்தது. சேகரபிள்ளை தொடர்ந்து கூறினார்:

''அவன்கிட்டே போயி இதுவரை எதையும் நான் சொன்னதில்லே. இப்போ இதைச் சொல்லலாம்னு தீர்மானிச்சுட்டேன். அவன் நான் சொன்னபடி கேட்டு நடப்பான்.''

சிறிது நேரம் அங்கே நிசப்தம் நிலவியது. கேசவபிள்ளையின் மனத்திலே பூகம்பமே நிகழ்ந்துகொண் டிருந்தது. இவருடைய சிபார்சினுல் ஏற்படுகிற முன்னேற்றம் வேண்டியதில்லே என்ற முடிவுக்கு வந்தால் என்ன? ஒருவேளை, பிற்காலத்தில் இது பெரிய ஆபத்தாக மாறிவிடலாம். தன்னுடைய இரகசியங்கள் என்றைக்காவது ஒரு நாளைக்கு அம்பலமாகி விடலாம் அல்லவா? இப்போதே திருமண விஷயமாகத் தனது முடிவைச் சொல்லச் சொன்னுல்? அதற்குப் பிறகே சீஃப் செக்ரடரியிடம் சென்று சொல்ல முடியுமென்று இவர் கூறினுல்? அதற்கு இந்த மனிதரை, ஏன்?— வேறு எந்த மனிதரையாவது குறை கூற முடியுமா? திருமணம் நடந்த பின்பேதான் செக்ரடரியிடம் சொல்ல முடியுமென்று சொன்னுல்கூட இவர்மீது குற்றத்தைச் சுமத்த முடியாது. தெளிவான பதிலுக்கான கேள்வி எந்நேரத்திலும் பிறக்கலாம். அதைக் கேசவபிள்ளை எதிர் பார்த்துக்கொண் டிருந்தான்.

சேகரபிள்ளை கேட்டார்:

''உமக்கு அப்பா அம்மா எல்லாரும் இருக்காங்கல்ல? அவங்ககிட்டே விஷயத்தைச் சொல்லி அநுமதி பெற்றுக்கணும். ஜாதகப் பொருத்தம் இருக்குதான்னுகூடப் பார்த்துக்கணும். அது ரொம்ப முக்கியம். நட்சத்திரம் என்ன?''

கேசவபிள்ளை சொன்னுன்: ''ரேவதி.''

''தங்கம்மாவோட நட்சத்திரம், பரணி.''

சேகரபிள்ளை சில கணக்குகளைப் போட்டுப் பார்த்தார். பெரிய தகராறுகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லேபோல் தோன்றியது. அவர் கேட்டார்:

''அப்பாவை வரவழைக்க முடியுமா?''

அது அவனை ஸ்தம்பிக்கச் செய்துவிட்ட ஒரு கேள்வியாக இருந்தது. அவனுடைய இரத்த ஓட்டமே நின்றுவிட்டதுபோல் தோன்றியது. ஆனல், பதில் ஒன்று அவன் வாயிலிருந்து உதிர்ந்து விழுந்தது:

''வேலே ஏராளமா இருக்கிற காலம். அறுவடை நடக்குது.''

அப்போது உள்ளேயிருந்து பாகீரதியம்மா சொன்னதைத் தெளிவாகக் கேட்க முடிந்தது:

''நீங்க காலம் கடத்தாமே சீஃப் செக்ரடரிகிட்டே போய்ச் சொல்லாம இருந்தா, அங்கே வேறு ஆளை நியமிச்சிடுவாங்க. நாளும் நட்சத்திரமும்

பார்த்து நிச்சயம் பண்ணிக்கிட்டப்புறம் போனு . . . நீங்க போற வரைக்கும் உத்தியோகம் அங்கே உங்களுக்குக் காத்து நிக்காது.''

நிச்சயமாக அது பாகீரதியம்மா சுயமாகப் பேசிய வார்த்தைகளாக இருக்கமுடியாது. தங்கம்மாதான் சொல்ல வைக்கிறுள். அப்பாடா! கேசவபிள்ளை மிகவும் ஆறுதலடைந்தான்.

சேகரபிள்ளை சற்றுக் கோபத்துடன் கூறினர்:

''அப்படியா, நான் சொன்னேன்? நீ சொல்றதைப் பார்த்தா கல்யாணம் நடந்து முடிஞ்சப்புறந்தான் நான் கிருஷ்ணன் கிட்டே போவேன்னு சொன்னப்பலே யல்லவா, இருக்கு? நடக்கவேண்டிய காரியங்களைப் பற்றியே நான் சொல்லிக்கிட்டிருந்தேன்.''

அவர் கேசவபிள்ளையிடம் சொன்னர்: ''கேட்டீங்களா பிள்ளை, நாளைக்கே நான் கிருஷ்ணன் கிட்டே சொல்லிடறேன். மற்ற விஷயங்களெல்லாம் அப்புறமா யோசிச்சு முடிவு செய்யலாம்.''

'ஆகட்டும்' என்று சொல்வதுபோலிருந்தது கேசவபிள்ளையின் முகத் தோற்றம்.

தங்கம்மா வெளியே வரவேயில்லை. ஆஹா! எவ்வளவு அடக்கமான பெண்! ஏதோ ஒருவன் பெண்ணைப் பார்க்க வந்ததுபோல் அவள் நடந்து கொண்டாள். சேகரபிள்ளை பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். எப்படியாவது அங்கிருந்து தப்பித்துக்கொண்டால் போதுமென்றிருந்தது கேசவபிள்ளைக்கு. ஒரு தீச்சூளையில் அமர்ந்திருப்பது போல் அவனுக்குத் தோன்றியது.

கேசவபிள்ளை விடைபெற்றுக் கிளம்பியபோது கதவோரமாக மறைந்து நின்றவாறு பாகீரதியம்மா கூறினுள்:

''நீங்க ரெண்டு பேரும் செழுமையா ஒற்றுமையா இருந்து வாழ்ந்தாப் போதும்.'' அவன் முகத்திலே எந்நேரமும் தவழ்ந்துகொண்டிருந்த புன்னகை அந்த ஆசீர்வாதத்தை அங்கீகரிப்பதுபோல் ஒரு தோற்றத்தை அளித்தது.

படிக் கட்டட வாசலைக் கடந்து சென்றபோது அவன் திரும்பிப் பார்த்தான். தங்கம்மா அங்கணத்துக்கு இறங்கி வந்தாள்.

அத்தியாயம் 8

மனைவி

கார்த்தியாயினி நேரத்திலேயே சமையல் வேலைகளையெல்லாம் முடித்து விட்டுக் குளிக்கச் சென்றாள். அப்போது குளத்தின்* துறையில் பாப்பியம்மா, மற்றத்தில்† ஜானகி, குற்றிக்காட்டு† மாதவியம்மா ஆகியோர் இருந்தனர். துறையில் யாருமில்லாத நேரம் பார்த்தே கார்த்தியாயினி குளிக்கச் செல்வது வழக்கம். பெண்கள் ஆயிரம் கேள்விக் கணைகளைத் தொடுத்துவிடுவார்கள். அவற்றிலே பலவற்றுக்கும் பதில் சொல்ல அவளால் முடிவதில்லை. அதற்குப் பயந்துதான் யாருமில்லாத வேளையிலே குளிக்கச் செல்வாள். ஆனால் இன்று கெட்ட நேரமென்று சொல்லவேண்டும். மூன்று பெண்கள் அங்கே வந்திருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவராகக் கேள்விகளைத் துவக்கினர்.

முதலில் ஜானகிதான் கேட்டாள்:

''ஏம்மா, கேசவன் கிட்டேருந்து கடிதம் கிடிதம் வருதா?''

''ஆம்'' என்றாள் கார்த்தியாயினி. அவள் சொல்லி முடிக்கு முன்பே பாப்பியம்மா சொன்னாள்: ''அவன் பெரிய பி.ஏ. படிச்சவன்டீ. நல்ல பையன். ஆனா, பாவம், இந்தப் பொண்ணைக் கட்டிக்கிட்டு வந்து இங்கே போட்டுச் சித்திரவதை செய்யறானே.''

மாதவி கேட்டாள்: ''கல்யாணம் பண்ணிக்கிட்டுப் பொண்ணை அழைச்சுக்கிட்டு வந்து வூட்டிலே விட்டுட்டு உடனே கிளம்பிப் போனானே, அன்னைக்கு ராத்திரியாவது பொண்ணு கிட்டே படுத்துத் தூங்காமப் போயிட்டானே!''

அதற்கான பதிலையும் சேர்த்தே பாப்பியம்மா சொன்னாள்: ''இந்தப் பொண்ணு அவனைப் பார்த்ததில்லே. அவனுடை குரல்கூடக் கேட்டதில்லே.'' பின் கார்த்தியாயினி பக்கமாகத் திரும்பிக் கேட்டாள்: ''ஏம்மா, அப்படித்தானே?''

மாதவியும் ஜானகியும் ''ஐயோ பாவம்!'' என்று ஏக காலத்தில் கூறினர். உண்மையிலேயே இதயம் கனிந்த அநுதாபத்துடன்தான் அவர்கள் அவ்வாறு கூறினர்.

---

* மலையாளக்கரையில் குளிப்பதற்கென்றே பொதுவான குளங்கள் இருந்துவருகின்றன. கோவில் குளங்களும் அவ்வகையில் சேர்ந்தவையே. பெண்களுக்கும் ஆண்களுக்கும் வெவ்வேறான குளிக்கும் துறைகள் இருக்கின்றன. (மொ–ர்.)

† நாயர் சமூகத்தில் ஒவ்வொருவரையும் குடும்பப் பெயருடன் சேர்த்து அழைப்பார்கள். (மொ–ர்.)

மணம் முடிந்து நீண்ட நாட்கள் ஆகிவிடாத ஒரு பெண்ணின் உள்ளத்திலே தீயை மூட்டிவிட இதைவிட வேறு என்ன வேண்டும்? அப்போதே அந்தக் குளத்து நீரிலே இரண்டு துளிக் கண்ணீர் உதிர்ந்து விழுந்தது. அதைப் பாப்பியம்மா கண்டுவிட்டாள்.

''பார்த்தியா, பொண்ணு அழுது!''

கார்த்தியாயினி கோ என்று அழுதுவிட்டாள்.

பாப்பியம்மாவின் அநுதாப உணர்ச்சி தருண ரோஷமாக மாறி விட்டது.

''பாவம் பொண்ணு! உங்களுக்கெல்லாம் தெரியாது. பக்கத்து வீட்டிலேதான் நான் இருக்கேன். கொஞ்ச நேரமாவது குந்திக்கிட் டிருக்க இவளுக்கு அவகாசம் கிடைக்கணுமே. அந்த வூட்டு வேலை பூரா செய்யணும்னு ஒரு நாளைக்கு இருபத்திநாலு மணி நேரம் போதாது. எல்லா வேலையையும் இந்தப் பொண்ணு நான் செஞ்சுக்கணும். இவளுக்குச் சொல்ல வாயுண்டா? பாவம்! அந்த வூட்டு எசமானியம்மாவுக்கு ஒரு வேலைக்காரி வேணும். அதுக்காகக் கொண்டாந்து நிறுத்தியிருக்காங்க, துரோகிங்க!''

மாதவி அறிய விரும்பியது அதுவல்ல. கணவனிடமிருந்து கார்த்தியாயினிக்கு ஏதேனும் இன்பம் கிடைத்திருக்கிறதா என்பதுதான். கேசவ பிள்ளை அவளைத் தொடக்கூட இல்லையா? பாப்பியம்மா ரோஷத்துடன் கூறினாள்: ''நீங்க பாருங்க! இவளோட உடல் கட்டுக் குலைஞ்சிருக்கான்னு பாருங்க!''

கார்த்தியாயினி ரவிக்கையைக் கழற்றிவிட்டுத் திறந்த மார்புடன் நின்றுகொண்டிருந்தாள்.

மாதவி, ஜானகியால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

ஜானகி சொன்னாள்: ''இந்தப் பாப்பியக்கா நாக்கிலே எதும் பேசவே யாது. என்னென்னமோ சொல்லு பாருங்க! அப்படியெல்லாம் சொல்லா திங்க!''

பாப்பியம்மா விட்டுக்கொடுக்கவில்லை: ''நான் பொய் சொல்லறேங் கிறியா? இவளோட மார்பைப் பாரு! கொஞ்சமாவது சாஞ்சிருக் கான்னு பாரு!''

மாதவியும் ஜானகியும் காதுகளைப் பொத்திக்கொண்டனர்:

''எங்களுக்கெல்லாம் பார்க்கவேணும்.''

பாப்பியம்மா கனமான குரலில் கூறினாள்: ''நான் உங்களையுந் தான் சொன்னேனம்மா. கல்யாணம் முடிஞ்சது. இப்போ இவளுக்குள்ளே தெருப்பல்லவா கூடுது! ஒரு ஆண் பிள்ளை புடைவைகந்து நம்ப பாளோட கையையும் புடிச்சதுண்டோ? அந்தக் கவலை என்னென்னு நம்பளுக்குந் தெரியாதா? அதுகூடத் தெரியலேன்னு நாம்ப பெண் பிள்ளைங்களா?''

மாதவி சற்று நிதானமுகூர்ந்து பார்த்துக் கூறினாள்: ''நிதானிச்சுப் பார்த்தா, அது உண்மைதான்.''

ஜானகி அது சரிதான் என்று ஆமோதித்தாள். பாப்பியம்மா தொடர்ந்து கூறினாள்: ''அந்தக் கெழவியிருக்காளே, அவளைத்தான் சொல்லணும். பையனுக்குச் சம்மதமான்னு கேட்டப்புறம்தானே, இந்தப் பொண்ணைக் கட்டிவச்சிருக்கணும்? அதைச் செய்யலே.''

பாப்பியம்மா மேற்கொண்டு பேசக்கூடிய சொற்கள் மிகக் கடுமையானவையாக இருக்குமென்று ஜானகிக்குத் தோன்றியது. அவற்றைப் பேசவிடாமல் தடுப்பதுதான் நல்லது. எனவே, ஜானகி அவளைப் பார்த்துக் கண்ணை இறுக்கிக் காட்டினாள். பாப்பியம்மாவை விடப்போகிறாள்? விட்டுக் கொடுக்கும் நிலைமையில் அவள் இல்லை. அவளுடைய ரோஷம் பற்றியெரிந்துகொண்டிருந்தது:

''ஏம்மா ஜானகீ, எதுக்காகக் கண்ணை இறுக்கிக் காட்டறே? சொல்ல வேண்டியதைச் சொல்லாமே வுட்டுட்டா என் வயிறு மூச்சுத் திணறி வெடிச்சுப் போயிடும். இந்தப் பொண்ணோட கஷ்டங்களைக் கொஞ்ச நாளா நானும் பாத்துக்கிட்டு வர்றேன். பாத்துப் பாத்துப் பொறுக்க முடியலே. குட்டியம்மா கிட்டேயே சொல்லிடலாம்னு பல தடவை யோசித்ததுண்டு. இது சரிதானும்மா? நம்ப ஊரிலே இந்த வழக்கத்தை வச்சுக்கலாமா? நான் ஒளிவு மறைவில்லாமே சொல்லிடறேனே. அவனுக்கு இந்தக் கல்யாணத்துக்குக் கொஞ்சங்கூடச் சம்மதம் இல்லாமல் இருந்தது. அவனுக்கு ஏன் இந்தப் பொண்ணைக் கட்டி வச்சாங்க?''

ஜானகியும், மாதவியும் பதில் சொல்லட்டும் என்ற முறையிலே கேட்ட கேள்விதான் இது. ஜானகி பதிலளித்தாள்: ''அப்படியானு அது தவறுதான்.''

''என்ன அப்படீன்னு? பரவாயில்லையே. எதுக்காக ஆனான்னு சொல்றே? அது அப்படித்தான் நடந்தது.''

பாப்பியம்மா அடுத்த கட்டத்துக்குச் சென்றாள்:

''போகட்டும். பெற்று வளர்த்த மகன். அவனுக்காக ரொம்ப அவங்க பாடுபட்டிருக்காங்க. அவனைப் படிக்கவைக்க அவங்க பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. வயிற்றைக் கட்டி வாயைக் கட்டித்தான் படிக்க வச்சாங்க. கம்மா சொல்லப்படாது. குட்டியக்காளும் பப்புப்பிள்ளையண்ணனும் அவனுக்காகப் பாடுபட்டதுபோல இந்த ஊரிலே எந்த ஒரு தகப்பனும் தாயும் ஒரு மகனுக்காகப் பாடுபட்டிருக்கமாட்டாங்க.''

அது உண்மைதான். ஜானகியும் மாதவியும் ஒப்புக்கொண்டனர். பாப்பியம்மா தொடர்ந்து கூறினாள்: ''அப்போ அவனோட விருப்பத்தைப் பார்க்காமே கல்யாணத்தை நடத்தி வச்சாக்கூட, இவங்க ரெண்டு பேரும் ஒத்துவாழ அவங்கதான் சந்தர்ப்பத்தை உண்டுபண்ணிக் கொடுக்கணும். அதுதான் மரியாதி. இல்லையா?''

ஜானகிக்கும் மாதவிக்கும் அது புரியவில்லை. ஜானகி கேட்டாள்:

''பாப்பியக்கா, அது எப்படி?''

''நான் சொல்லறேன். நம்ப கல்யாணம் நடந்திருக்கு. நம்ப தகப்பனும் தாயும் நம்பகிட்டே சம்மதம் கேட்டுத்தானு, நடத்தி வச்சாங்க? என்னுடை விஷயத்தைப்பற்றிச் சொல்றேன். நான், என் மகன் கொச்சுகுட்டனுடை அப்பாவை முதமுதலாப் பார்த்ததே முகூர்த்த நேரத்திலேதான். எனக்கு அழுகை வந்துவிட்டது. கறுப்பாப் பருமனான ஒரு மனிசன். உடம்பெல்லாம் முள்ளுமுள்ளா ரோமங்கள் எழுந்து நிக்குது. உங்களுக்கெல்லாம் தெரியுமே? இப்போ முப்பது வருசமாச்சு. அஞ்சு கொழந்தைகளுமாச்சு. நாங்க ரொம்ப அன்பா வாழ்ந்துக்கிட்டிருக்கோம். கசப்பான ஒரு வார்த்தைகூட இதுவரைக்கும் என் கிட்டே சொன்னதில்லே. நான்தான் ஏதாச்சும் முரட்டுத்தனமாப் பேசிக்குவேன்.''

பாப்பியம்மாவின் முகத் தோற்றத்திலே மாறுதல் தென்பட்டது. பக்தி நிறைந்த உள்ளத்துடன் கரம் குவித்தவாறு அவள் தொடர்ந்து கூறினாள்:

''கடவுளே, நீ ஒண்ணுமட்டும் செஞ்சாப் போதும். அந்த முகத்தைப் பார்த்துக்கிட்டே என் கண்ணு மூடினுப் போதும்.''

ஒரு நிமிடம் கடந்து சென்றது. பாப்பியம்மா பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள். பின் அவள் பழைய விஷயத்துக்கே திரும்பி வந்தாள்:

''அப்போ . . . அது என்ன? நான் சொல்றேனே. சின்ன வயசிலே கொஞ்சம் நாணம் கீணமெல்லாம் இருக்கும்.'' குரலைக் குறைத்துக் கொண்டு சிரத்தைச் சிறிது முன்னே நீட்டிப் பாப்பியம்மா கேட்டாள்:

''கொஞ்சம் நினைச்சுப் பாருங்க. நாம்பல்லாம் பெரிய மனிசிங்களானப்போ நம்பளுக்கு வரப்போற கணவனுங்க எப்படிபிருக்கணும்னு நம்பளுக்குத் தோணலியா? நல்ல சிவப்பாயிருக்கணும். மீசை வேணும். அதெல்லாம் என்னத்துக்கு மறைச்சு வச்சுக்கணும்? நான்கூட மனக் கோட்டை கட்டியிருக்கேன். ஆம்புளேங்களுக்கும் அப்படி யெல்லாம் தோணுதா? பொண்ணு சிவப்பாயிருக்கணும். அழகான கரிய நீண்ட கூந்தல் இருக்கணும். சிலருக்கு அவங்க அதிருஷ்டம் அந்தமாதிரி பொண்ணுகளைத் தேடிக் கொடுக்கும். சிலருக்குக் கிடைக்காது. அப்படீன்னுக்கூட இந்த உலகத்திலே கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க எல்லாம் ஒற்றுமையாகத்தானே வாழ்ந்துக்கிட்டிருக்காங்க? அதெப்படி? நினைக்கிற மாதிரி பொண்டாட்டீங்களும் புருஷன்களும் எப்பவுமே கிடைச்சுடுதா? அப்படி யெல்லாம் கிடையாது. கல்யாணம் நடந்தது. ஒருத்தருக்கொருத்தரு புரிஞ்சிக்கிட்டாங்க. ஒற்றுமையா வாழ்ந்தாங்க. விளையாடினுங்க. சிரிச்சாங்க. ஒருத்தருக்கொருத்தரைத் திருப்திப் படுத்தணும்னு தோணித்து. அப்படி இப்படி மனசும் இணங்கிப் போச்சு.''

மாதவியும் ஜானகியும் சிரித்தார்கள். பாப்பியம்மா கேட்டாள்: ''ஊம்? ஏன் சிரிக்கிறீங்க? நான் சொன்னது உண்மைதானே? அப்புறம் எப்படித்தான் மனசு இணங்குவது?''

அது ஒரு பெரிய வாழ்க்கை உண்மை. அதை ஒப்புக்கொள்ளாமல் இருக்க அந்த இளம் பெண்களால் முடியவில்லை. பாப்பியம்மா கார்த்தியாயினியின் விஷயத்துக்குத் திரும்பி வந்தாள்.

''கேசவனுடை மனசுகூட இணங்கியிருக்கும். அதுக்கு அவனுடை அம்மா சந்தர்ப்பத்தை உண்டுபண்ணிக் கொடுக்கலே. எனக்கு அவர் கிட்டே ஏற்பட்டிருக்கிற ஆத்திரத்துக்கு அதுதான் காரணம்.''

மாதவி வியப்புடன் கேட்டாள்:

''அதுக்கு அவங்க என்ன செஞ்சாங்க? அவங்களுக்கு இந்தக் கல்யாணம் சம்மதமாயிருந்ததது. இதை முடிச்சு வைக்கணும்னு அவங்கதானே, ஒற்றைக் காலிலே நின்னுங்க?''

பாப்பியம்மா ஒப்புக்கொண்டாள்.

ஜானகி மீண்டும் கேட்டாள்: ''பொண்ணும் மாப்பிள்ளையும் சேர்ந்து வாழ ஒப்புக்கொள்ளலியா?''

புத்தியில்லாத ஒருவனுக்கு விஷயத்தைச் சொல்லிக் கொடுத்துப் புரிய வைக்கின்ற சிரமத்துடன் பாப்பியம்மா கூறினாள்:

''அதல்லம்மா, அதுவல்ல. அதைப்பற்றிச் சொல்லப் போனா பொழுது போயிடும். கல்யாணம் முடிஞ்சு பொண்ணையும் அழைச்சுக்கிட்டுப் பொழுதோட ஊருக்கு வந்தாங்க. வந்த உடனே மாப்பிள்ளை கிளம்பிப் போயிட்டான். அந்த அம்மா இருக்காளே அவள், அவன் போக்குக்கு வுட்டுட்டா. அப்படியா நடந்துக்கணும்? பையனுடை விருப்பமில்லாமே அந்தக் கல்யாணம் நடந்தது. அன்னைக்கு அவனை இங்கேயே தங்கும்படியார் செஞ்சிருந்தாப் பொண்ணும் மாப்பிள்ளையும் ஒருத்தருக்கொருத்தர் மனசு இணங்கி வாழ்ந்திருப்பாங்க. கேசவன் அன்னைக்குப் போனவன்தான். அப்புறம் திரும்பி வரவேயில்லே. அன்னைக்கு இந்தப் பொண்ணோடு சேர்ந்து முதலிரவைக் கழிச்சிருந்தா, அவன் அடுத்த வாரத்திலே வந்திருப்பான்.''

ஜானகி தன்னுடைய கருத்தை வெளியிட்டாள்: ''அது . . . அவனுக்குத் திருவனந்தபுரத்திலே எதாவது பொண்ணு இருக்கும். அதனால்தான் வராமே இருக்கிறான்.''

பாப்பியம்மா அந்த அளவு யோசித்திருக்கவில்லை, சொன்னாள்: ''ஆமாமாம்; அப்படியும் இருக்கலாம். திருவனந்தபுரத்தானே? அங்கே பெண் பிள்ளைகள் ஆண் பிள்ளைகளைத் தூக்கிக்கிட்டுப் போவாங்கன்னு சொல்லறாங்க. ஆண் பிள்ளைங்களும் அவங்க வலையிலே சிக்கிக்குவாங்க. பெரிய நாகரிகமான இடம்அல்லவா? அங்குள்ள பெண் பிள்ளைகள் நம்பளைப் போல அழகில்லாத அசடுங்களா? கட்டழகிகள் தெரியுமா? ஆனா ஒரு விஷயம் . . . ஒரு ஆண் பிள்ளை அங்கே ஒரு பெண் பிள்ளைகிட்டே சிக்கிக்கிட்டா அப்புறம் அவன் சொந்த ஊருக்குத் திரும்பி வரவே மாட்டான்.''

மாதவி திகைப்புடன் கூறினாள்: ''ஐயோ! . . . அப்படீன்னு நம்பக் கேசவண்ணு அங்கே எங்காச்சும் அகப்பட்டிருப்பான் போலிருக்கே.''

கார்த்தியாயினி தண்ணீரிலே இறங்கி நின்றவாறு இந்தப் பேச்சுகள் அனைத்தையும் காது கொடுத்துக் கேட்டுக்கொண் டிருந்தாள். பல புதிய விஷயங்கள் அவளுக்குப் புரியலாயின. விருப்பமின்றியேதான் இந்தக் கல்யாணம் நடைபெற்றது. ஆயினும், ஒற்றுமையுடன் வாழ்ந்து வரலாம். ஒருநாள் சேர்ந்து வாழ்ந்திருந்தால், ஒன்றுபட்டிருந்திருப் போம்; அடுத்த வாரத்திலே வந்திருப்பார். திருவனந்தபுரத்திலே அவ ருக்குப் பெண் இருப்பாளோ? அதைமட்டும் கார்த்தியாயினியால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

வாய்விட்டு அழுதவாறு அவள் வீட்டுக்குச் சென்றாள். சமாசாரம் என்னவென்று குட்டியம்மா விசாரித்தபோது அவளால் எதையும் சொல்லமுடியவில்லை. தேம்பித் தேம்பி அழுதுகொண் டிருந்தாள். குட்டி யம்மா திகைத்துப் போனாள். குளிக்கச் சென்ற பெண் வாய்விட்டுக் கதறி அழுதவாறு திரும்பி வருகிறாள். காரணம் என்னவென்று அறியவும் முடியவில்லை.

குட்டியம்மா காரணத்தைப் புரிந்துகொள்ளப் புறப்பட்டாள். அவ ளுக்கு நடந்ததெல்லாம் புரிந்துவிட்டது. ஆத்திரத்தினால் நடுங்கியபடி அவள் திரும்பி வந்தாள். மருமகளுக்கு ஆறுதல் கூறுவதெல்லாம் அப்புறம். இப்போது இந்த அவதூறுகளைப் பரப்பிவிட்ட பாப்பியம்மா விடம் கேட்டுவிட்டே மறுவேலை. தென்பற வேலிப் பக்கமாகச்சென்று நின்றவாறு குட்டியம்மா கூவியழைத்தாள்:

''அடி பாப்பீ! எங்களைப்பற்றி ஏண்டீ இப்படி அவதூறு பரப்பிக்கொண் டிருக்கிறே?''

ஒன்றுமே அறிந்திராதவள்போல் பாப்பியம்மா வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்து கேட்டாள்: ''நான் என்னடீ, சொன்னே?''

''எங்களைப்பற்றி இப்படிப் பொய்யும் புரட்டும் சொன்னே . . . ஆ . . . சொல்லி வைக்கிறேன் . . . ''

''நீ என்னடீ பண்ணுவே?'' பாப்பியம்மா நிறுத்தவில்லை: ''உங்க பி.ஏ.க்காரன் மவனுக்கு விருப்பமில்லாத பொண்ணைக் கட்டிவச்சே. அதுக்குப் பக்கத்து வீட்டுக்காரங்களையா குற்றம் சொல்லறே? இது நல்ல கூத்து!''

குட்டியம்மா விட்டுக் கொடுக்கவில்லை: ''என் மவன் பி.ஏ. படிச்சுப் பாஸ் பண்ணினான்னு அதுக்கு நாங்க போன ஜன்மத்திலே செஞ்ச புண்ணியத்தினாலேதான்டீ. அப்பப்பா! என்ன பொறுமை பாரு!''

பாப்பியம்மா எள்ளளவுகூட விட்டுக் கொடுக்கவில்லை.

''வூட்டுக்குப் பெரிய புண்ணியந்தான்டீ சம்பாதிச்சு வச்சுக்கறே. ஒரு பேதைப் பொண்ணைக் கட்டிக் கிட்டு வந்து அந்தப் பொண்ணோட கண்ணீ ரினாலே பெரிய புண்ணியம் சேர்த்து வச்சுக்கிட்டிருக்கிறே.''

குட்டியம்மாவின் வீரம் செறிந்தது: ''கட்டிக்கிட்டு வந்தா, அவள் வீட்டுக்குள்ளே அடக்கமாத்தான் படுத்துக்கிட்டிருக்கா.''

பாப்பியம்மாவுக்குக் கார்த்தியாயினியைக் குறித்து எந்தக் குறையும் சொல்வதற்கில்லை. ஆயினும் அவள் விட்டுக் கொடுக்கவில்லை: ''அதைத் தான் குடும்பத்துக்குப் பாவத்தைத் தேடி வச்சுக்கறேன்னு சொன்னேன்; தெரியுமா?''

இவ்வாறு பரஸ்பரம் விட்டுக்கொடுக்காமல் பேசிக்கொண் டிருந்த போதும் கார்த்தியாயினி அழுதுகொண் டிருந்தாள். கௌரியம்மா விரைந்து வந்து குட்டியம்மாவை இழுத்துக்கொண்டு போனாள். ஆயினும் அவள் வாய்க்கு வந்தபடி அண்டை வீட்டுக்காரியைத் திட்டிக்கொண் டிருந்தாள்.

குட்டியம்மா மருமகளுக்கு ஆறுதல் சொல்ல முயன்றாள். கார்த்தி யாயினி நெஞ்சைப் பிளக்கும் முறையில் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள். குட்டியம்மா அவள் கண்ணீரைத் துடைத்தாள். ''நீ அழாதேம்மா. இந்தக் கவலையெல்லாம் தீர்ந்துவிடும். உனக்கு நல்லது வருமம்மா. நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து சௌக்கியமா வாழப் போறீங்கம்மா.''

அந்த ஆசீர்வாதம் எவ்வளவுதான் இதயபூர்வமாக இருந்தபோதிலும் கார்த்தியாயினிக்கு அதனால் மட்டும் ஆறுதல் ஏற்பட்டுவிடுமா? குட்டி யம்மா தொடர்ந்து கூறினாள்:

''அவன் வராமே இருக்கிறதினால் அல்ல. அது அன்பில்லாமே இருக்கிறதினால் அல்ல. உன்னை விட்டுடுவான்னு நெனைச்சுக்காதே. அவன் சர்க்கார் உத்தியோகஸ்தன் அல்லவா? நெனைக்கிறப்போ ஓடியாந்திடமுடியுமா? இந்தத் தெல்லவாரிப் பெண்பிள்ளைங்களுக்கு அதைப்பற்றி ஏதாச்சும் தெரியுமா? அவங்களுக்கு என்ன தெரியும்? அவங்க சொல்றதைக் கேட்டு நீ கவலைப்படாதேம்மா. அவங்களுக்குப் பொறுமை. நீ அழாதேம்மா!''

குட்டியம்மா வாக்குறுதி அளித்தாள்: ''பத்து நாளைக்குள்ளே அவனை நான் இங்கே வரவழைச்சுத் தராட்டிப் போனா, பார்!''

ஆனால் இந்த வாக்குறுதியெல்லாம் கார்த்தியாயினியை ஆறுதலடையச் செய்துவிடுமா? அவனுக்குத் திருவனந்தபுரத்திலே இன்னொரு பெண் இருந்து வருகிறாள் என்றல்லவா சொன்னார்கள்? அது அவளுடைய இதயத்திலே ஆழ்ந்த வேதனையை உண்டுபண்ணியது.

சண்டை நடந்தபோது பப்புப்பிள்ளை வயலில் இருந்தார். சிறிது நேரத்துக்குப் பின்பே அவர் வந்து சேர்ந்தார். அவர் படிவாச லுக்கு வந்ததும் குட்டியம்மா ஒரு பெரிய தாக்குதலைத் துவக்கிவிட்டாள். குரலை அடக்கியவாறுதான் அவள் கேட்டாள் என்றாலும், அந்தக் கேள்வியில் ஆத்திரம் குழறிக்கொண் டிருந்தது.

''அவனுக்குத்தான் விருப்பமில்லாமே இருந்ததல்லவா? அப்புறம் ஏன் இந்தப் பொண்ணை கல்யாணம் பண்ணி வச்சீங்க? ஒரு பேதைப் பெண்ணின் கண்ணீராலே இந்தக் குடும்பம் எரிஞ்சு போறதுக்கா?''

பப்புப்பிள்ளைக்கு ஒன்றும் புரியவில்லை. அவர் அப்படியே நின்று விட்டார். அவர் கேட்டார்: ''ஊம்?. . . என்ன நடந்தது?''

''என்ன நடந்ததுன்னு கேக்கறீங்க?''

பப்புப்பிள்ளைக்குக்கூட ஆத்திரம் வந்தது: ''ப்பூ! கழுதை! பேசாமே அங்கே எங்காவது போய்ப் படுத்துடு?''

அண்டை வீட்டினரைப்பற்றி எதை எதையோ முணுமுணுத்தவாறு, பப்புப்பிள்ளையை ஏசிப் பேசினாள். அவள் கணவரைத் தொடர்ந்து வந்தாள். கணவருடைய ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டுக்கொண்டிருந்தாள்.

நான்கைந்து தடவை கணவர் மனைவியை அடிக்கக் கை ஓங்கினார். ஆனால் அடிக்கவில்லை. மனைவி ஆத்திரப்படுத்தும் முறையிலே பேசிக் கொண்டிருந்தபோதிலும், பேசினவற்றை எல்லாம் சேர்த்து வைத்துப் பார்க்கையில் கணவருடைய இதயமும் நெருப்புப் பற்றி எரிந்தது. தாமும் தவறு செய்திருப்பதாக அவருக்குத் தோன்றத் தொடங்கியது. ஆனால் அதைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ள அவர் தயாரில்லை. அந்தப் பெண்ணின நிலைமையோ பரிதாபமானது. எல்லாவற்றுக்கும் மேலாக அவரைப் பயமுறுத்துகிற ஒரு விஷயம் உண்டு. அந்த விஷயம் குட்டியம்மாவின் கேள்வியினூடே வெளிவந்தது: ''திருவனந்தபுரத்திலே அவனுக்கு வேறு பொண்ணு எவளாச்சும் இருக்குதா?''

''ப்பூ!'' அந்தக் கேள்வியிலே ஆத்திரந்தான் பப்புப்பிள்ளைக்கு. ஆயினும் மனைவியின் அந்தக் கேள்வி அவருடைய இதயத்தின் மையப் பகுதியைத் துளைத்துவிட்டது. அவருடைய மன அமைதி குலைந்தது. ஆம். அப்படியும் ஒன்று சம்பவிக்கலாம். அதனால்தானே, அவன் வராமல் இருக்கிறான்?

வரவு செலவுகளைக் குறித்து வைக்க, பப்புப்பிள்ளை ஒரு நோட்டுப் புத்தகத்தை வாங்கி வைத்திருந்தார். கூரையில் செருகி வைத்திருந்த அந்தப் புத்தகத்தை எடுத்து, அதிலிருந்து ஒரு காகிதத்தைக் கிழித்தெடுத்தார். தினசரிப் பாராயணம் செய்து வருகிற பாகவத புத்தகத்துக்கு இடையிலிருந்து மூக்குக் கண்ணாடியை எடுத்துக் காதிலே சரட்டினால் கட்டிக்கொண்டார். அந்தத் தந்தை மைந்தனுக்குக் கடிதம் எழுதுகிறார்.

அந்தக் கடிதத்தின் ஆரம்பம் இவ்வாறிருந்தது:

''அன்பும் பிரியமும் உள்ள மகனுக்கு அப்பா எழுதுவது என்னவென்றால், நீ அப்பாவைப் பழிச்சொல்லுக்கு ஆளாக்கிவிடாதே. . .''

அவர் காகிதத்தின் இரு பக்கங்களிலும் எழுதி நிறைத்துவிட்டார். சொல்லவேண்டியதை முழுதும் எழுதிவிட்டார்.

கடிதம் எழுதி முடிந்தபோது அங்கே மீண்டுமொரு சண்டை நடந்தது. அந்தக் கடிதம் முழுதையும் வாசித்துக் கேட்கவேண்டும் குட்டியம்மாவுக்கு. பப்புப்பிள்ளை கடிதம் எழுதத் தொடங்கியதிலிருந்தே அவள் அதையே உற்றுப் பார்த்தவாறு கணவர் பக்கம் அமர்ந்திருந்தாள். அதற்கிடையில் இரண்டு தடவை அவள் கணவருக்கு வெற்றிலையில் சுண்ணாம்பு தடவி மடித்துப் பாக்குடன் சேர்த்துக் கொடுத்தாள். பப்புப்

பிள்ளைக்கு வாசித்துக் கேட்கவைக்கப் பிரியமில்லை. அதை வாசித்துக் கேட்க வேண்டுமென்று குட்டியம்மா அடம் பிடித்தாள்.

''அதைக் கொஞ்சம் படிச்சுக் காட்டுங்க!''

''வேணும்.''

''ஏன்? எனக்குப் படிச்சுக் கேட்கணும். நான்தான் அவனைப் பத்து மாசம் சுமந்து பெற்றெடுத்தேன்.''

''படிச்சுக் காட்ட மனசில்லே.''

குட்டியம்மாவுக்குக் கோபம் வந்தது.

''அட மாபாவி! என் மவனைச் சபித்துக் கொன்றிருப்பே!''

பப்புப்பிள்ளை அதைக் கவனிக்கவில்லை. குட்டியம்மா தொடர்ந்து கூறினாள்: ''அந்தப் பையன் அசலூரிலே போய்ப் பாடுபட்டுக்கிட்டிருக்கான். அதையும் இதையும் எழுதி அவன் மனசைப் புண்படுத்தக் கூடாது. சாதுப் பையன்தான் அவன்.''

அவரிடமிருந்து கடிதத்தைப் பிடுங்கக் குட்டியம்மா முயன்று பார்த்தாள். அது நடக்கவில்லை. ஆத்திரமுற்ற மனைவி எதை எதையோ பேசினாள். கணவர் அதை ஒன்றும் காதிலே போட்டுக்கொள்ளவில்லை.

* * *

கார்த்தியாயினியின் விவாகம் நடைபெற்ற அன்றைய தினத்திலேதான் நாணிக்குட்டியின் விவாகம் நடைபெற்றது. நாணிக்குட்டி இப்போது கர்ப்பிணி. கார்த்தியாயினிக்கு இன்னொரு சிநேகிதிகூட இருந்து வருகிறாள். கொச்சுகுஞ்ஞி. அவளுடைய கல்யாணம் அண்மையில் நடைபெற இருக்கிறது. இன்று அவர்கள் இருவரும் வந்து வீட்டு வேலைகளில் கார்த்தியாயினிக்குத் துணைபுரிகிறார்கள்.

கார்த்தியாயினி நிமித்தமாகக் குட்டியம்மாவுக்கும், அண்டை வீட்டினருக்கும் இடையில் சண்டை சச்சரவுகள் நடைபெற்ற அன்று, அந்தச் சிநேகிதிகள் இருவரும் அங்கே வந்திருந்தனர். அன்பு கனிந்த உள்ளம் கொண்ட அந்தப் பெண்கள் கார்த்தியாயினிக்கு ஆறுதல் அளித்தனர். கேசவபிள்ளை நல்லவன் என்ற நம்பிக்கைதான் நாணிக்குட்டிக்கு. நினைவு வந்த நாள் முதல் அவளுக்குக் கேசவண்ணனை நன்றாகத் தெரியும். கேசவண்ணனுக்குத் திருவனந்தபுரத்திலே இன்னொரு பெண் இருக்க முடியாதென்று அவள் உறுதியாக நம்பினாள். இந்த ஊரிலுள்ள பொறாமைக் காரிகளும் வாயாடிகளுமான பெண்கள் கட்டிவிட்ட கதைதான் அது. எதை முன்னிட்டும் கார்த்தியாயினி கவலைகொள்ளவேண்டிய அவசியமே இல்லை. நாணிக்குட்டி அவளுடைய கண்ணீரைத் துடைத்தாள்.

ஆனால் குஞ்ஞிக்குட்டியின் கருத்து வேறாக இருந்தது. அவள் சொன்னாள்:

''கேசவண்ணனுக்கு அங்கே இன்னொரு பொண்ணு இருக்காள்ன்னே வச்சுக்குங்க. அதனாலே என்ன? ஆண்பிள்ளைங்க? சிலர் அப்படியும் நடந்துக்குவாங்க. ஆனா ஒரு விசயம். அங்கிருந்த புடி விட்டா அப்புறம்

இங்கேதான் வந்து விழுவாங்க. கேசவண்ணன் வராமே இருக்க மாட்டான்.''

கொச்சுகுஞ்ஞிக்குக் கேசவபிள்ளையின் சுபாவத்தைப்பற்றிப் பெரிய மதிப்பு இருந்து வருகிறது. இவ்வளவு நல்ல சுபாவமுள்ள இளைஞன் அந்த ஊரிலேயே கிடையாதென்ற அபிப்பிராயந்தான் அவளுக்கு. அவள் கேட்டாள்:

''இங்கே பேசறுங்களே, இந்தப் பெண்களோட கணவனுங்களிலே யார் தான் உண்மையா, மற்றப் பெண்களோட உறவு வச்சுக்காம இருக்கான்?''

நடந்துவிட்ட சண்டைக்குக் காரணகர்த்தர்களாக இருந்த பெண்களின் கணவன்மார்களைக் குறித்துக் கொச்சுகுஞ்ஞி தெரிந்து வைத்திருந்த சில கதைகளைக் கூறினாள். ஆனால் நாணிக்குட்டி தன்னுடைய கருத்திலேயே உறுதியாக நின்றாள்.

''கேசவண்ணன் அப்படிப்பட்ட ஆள் அல்ல. அவருக்குப் படிப்பு இருக்கு, அறிவு இருக்கு.''

ஆனால், கார்த்தியாயினிக்கு ஆறுதல் ஏற்படவேயில்லை. வெள்ளை உள்ளம் கொண்ட அந்த இளம் பெண்கள், தங்களுக்குத் தெரிந்தமட்டில், தங்கள் சினேகிதிக்கு ஆறுதல் அளிக்க முயன்றார்கள். கார்த்தியாயினியின் திருமணம் நடந்தேறிய அன்றைய தினத்திலேதான், அதே முகூர்த்தத்திலேதான், நாணிக்குட்டியின் திருமணமும் நடந்தேறியது. திருமணம் முடிந்த மறுநாள் நாணிக்குட்டி அங்கே வந்திருந்ததைக் கார்த்தியாயினி நினைவுகூர்ந்து பார்த்தாள். நாணிக்குட்டியின் முகத்திலே பிரத்தியேக மான களை விளையாடிக்கொண்டிருந்தது. அவளுடைய கணவன் தினசரி மாலையிலே வந்து விடுவானும். ஏதாவதொரு பொருளை அவளுக்காகக் கொண்டு வராமல் இருக்க மாட்டானும். ஒரு நாள் பலகாரப் பொட்டலமாக இருந்தால், மறுநாள் ரவிக்கைத் துணியாக இருக்கும். அதுவும் இல்லாவிட்டால் அருமையான வாசனைச் சோப்பைக் கொண்டு வந்து கொடுப்பானும். முந்திய நாள் கொண்டு வந்தது என்ன வென்று அடுத்த நாள் வரும்போது நாணிக்குட்டி கார்த்தியாயினியிடம் சொல்லி வந்தாள். அவனுகவே விரும்பி வாங்கிக்கொண்டு வந்த பொருள் அவளுக்குப் பிடிக்காமல் இருந்தால், வீசியெறிந்து விடுவாளாம்!

''நான் வீசியெறிஞ்சுட்டேன். அப்புறம் சண்டை போட்டுக்கொண்டு பாயை விரிச்சுப் படுத்துக்கிட்டேன்.''

அந்தக் காட்சியைப்பற்றிய அவளுடைய வருணனை இவ்வாறு இருக்கும். பின்னர் வெட்கம் கலந்த சிரிப்புடன் கூறுவாள்:

''அப்புறம் கண்ணே, மணியே, அழகே... இப்படீன்னெல்லாம் சொல்லிக்கிட்டு வந்தான். ராத்திரிபூரா என்னைத் தூங்கவிடலே. நான் வாய் திறந்து பேசவே இல்லே.''

அப்புறம் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தவாறு கேட்பாள்.

''சும்மா என்கிட்டே நெருங்கிப் படுத்துக் கிசுகிசுக்கச் செஞ்சா அப்புறம் நான் என்ன செய்வேன்?''

கொச்சுநாணியுடைய இந்த அநுபவ வருணனையைக் கார்த்தியாயினி நினைவுகூர்ந்து பார்க்கமாட்டாளா? அவள் மாமியார் பக்கத்திலேதான் படுத்துத் தூங்குகிறாள். படுப்பதற்குள்ளே தூங்கி விடுவாள். ஆயினும், சில சமயங்களில் கணவனை நினைத்துப் பார்ப்பதுண்டு. பல சந்தர்ப்பங்களில் இரவிலே திடீரெனக் கண்விழித்து எழுவாள். அப்போது நாணிக்குட்டிதான் அவள் நினைவிலே வந்து நிற்பாள். இரவிலே, தான் படுத்துத் தூங்குவது எப்படி என்பதைப்பற்றி ஒரு நாள் நாணிக்குட்டி கார்த்தியாயினியிடம் சொல்லியிருந்தாள். அவள் கணவனுடைய கரத்துக்குக் கீழே. ஆனால் அவனிடம் ஒரு கெட்ட வழக்கமுண்டு. அவள் மீது அவன் காலை எடுத்து வைப்பான். அவளுக்கு ஆத்திரம் வந்துவிடும். அந்தக் காலைத் தூக்கியெறிவாள். காலை உடம்பு மீது எடுத்து வைப்பது அவளுக்குப் பிடிக்காதாம். அவ்வாறு அந்தத் தம்பதிகள் இரவைக் கழிப்பது அவள் நினைவுக்கு வந்துவிடும். 'இல்லை. நான் அவ்வாறு அவருடைய காலைத் தூக்கியெறியமாட்டேன். கணவன் மனைவியைக் கிசுகிசுக்கச் செய்வதிலுள்ள ஆனந்தந்தான் என்னே!'

கார்த்தியாயினி அப்போது கூடக் கண்ணீரை விட்டுக்கொண்டிருந்தாள். அநுதாபம் நிறைந்த உள்ளத்துடன் கொச்சுநாணி அவளுக்கு ஆறுதல் மொழி கூறினாள்:

''அழாதேம்மா! உனக்கு நிச்சயமா நல்லது வரும்.''

இரவு வீட்டு வேலைகளெல்லாம் முடிந்தன. கார்த்தியாயினி குத்து விளக்கு முன்னால் அமர்ந்திருந்தாள். அவள் ஒரு பெரிய வேலையைத் துவக்கியிருந்தாள். பல்பாப்பின்னையின் கணக்குப் புத்தகத்திலிருந்து யாருக்கும் தெரியாமல் ஒரு காகிதத்தைக் கிழித்தெடுத்து அந்தப் பென்சிலையும் எடுத்திருந்தாள். அவளுக்கும் எழுதியனுப்ப விஷயங்கள் இல்லையா? இதயம் நிறைய உண்டு. வாழ்க்கையளவு பெரிய விஷயங்கள்! அவற்றை முழுதும் எழுதியனுப்பிவிட வேண்டும்.

அன்றைய தினம் வரையிலும் அவள் யாருக்குமே கடிதம் எழுதியதில்லை. எல்லா எழுத்துக்களும் அவளுக்குத் தெரியாது. ஒரு கடிதம் எப்படி எழுதவேண்டுமென்று அவளுக்குத் தெரியாது. ஆயினும் அவள் எழுதுகிறாள். நாக்கு இல்லாத மனிதன் இதய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில்லையா, அது போன்று? ஒரு பெருமுயற்சியிலேதான் அவள் ஈடுபட்டிருந்தாள். அந்தப் பேதைப் பெண்ணுக்குக் கடிதம் எழுதுவதற்கான சந்தர்ப்பம் நேர்ந்துவிட்டது, இந்த நிலைமையிலேதான். மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் அல்ல.

அவள் எழுதத் தொடங்கினாள்:

''அன்பு ரவுனுக்கு. என்னவென்றால் நான் இப்படியே இருந்தா செத்துப் போவேன். அங்கே உங்களுக்கு ஒரு பெண் உண்டென்னு எல்லாரும் சொல்லுறாங்க. ஆனா என் நாத்தனார்களான கொச்சுநாணியும் கொச்சுகுஞ்ஞியும் அப்படி இல்லேங்கிறாங்க. அது பொய் என்கிறாங்க. அவங்க என்னை அழக்கூடாதுன்னு சொல்லுறாங்க. நான் பேதைப்

பொண்ணு. உங்களை எனக்கு ரொம்ப பிரியமுண்டு. . .'' அந்தக் கடிதம் இவ்வாறு சென்றுகொண் டிருந்தது. எண்ணியிருந்ததை எல்லாம் அவள் எழுதிஞள். இருப்பினும் அவளுக்குத் திருப்தி ஏற்படவில்லை. இன்னும் எழுதலாமென்றுல் காகிதம் தீர்ந்துவிட்டது. பென்சில் முனையும் தேய்ந்து விட்டது. என்ன செய்வது?

அறைக்குள்ளே பரவியிருந்த வெளிச்சத்தைக் கண்டு குட்டியம்மா மெள்ள நடந்து வந்து கதவிலுள்ள ஓட்டை வழியாக எட்டிப் பார்த்தாள். கார்த்தியாயினி அதைப் பார்க்கவில்லை. அவளுடைய கவனமெல்லாம் கடிதம் எழுதுவதிலேதான் இருந்தது. வெளியே என்னதான் நடை பெற்றுலும் அவளால் தெரிந்துகொள்ள முடியாது.

குட்டியம்மா, கணவர் அறைக்குச் சென்று அவரை அழைத்தாள். ''தூங்கீட்டீங்களா?''

பப்புப்பிள்ளை தூங்கியிருக்கவில்லை. ஏன்?. . . அவருக்குத் தூக்கமே வராது. அவருக்குத் தூக்கம் வரக்கூடிய நாளாக அன்றைய தினம் இல்லை. அமைதியற்ற, நிச்சயமற்ற தன்மை என்றுல் என்னவென் றறியாத அந்த மனிதர் அதை முதல் முறையாக அநுபவித்தறிகிறர்: நூறு நூறு கேள்விகளை அவர் தாமாகவே கேட்டுக்கொண் டிருந்தார். திருவனந்தபுரத்திலே அவனுக்குக் காதலி இருக்கிறுளா? கார்த்தி யாயினியை அவன் அங்கீகரிப்பானு? இந்த மணவாழ்க்கை எவ்வாறு அமையப்போகிறது?. . .இத்தகைய கேள்விகளை அவனிடம் கேட்டுப்பதில் அறிந்தபின் கல்யாண நிச்சயம் செய்திருந்தால் நல்லது என்று அவருக்கு இப்போது தோன்றுகிறது. அது தீர்க்கதரிசனம் இல்லாத ஒரு செயலாகி விட்டது. பப்புப்பிள்ளை அவ்வளவு எளிதிலே குற்றத்தையோ, தவறையோ ஒப்புக்கொள்ளக்கூடிய ஆள் அல்ல.

பப்புப்பிள்ளை கேட்டார்: ''தூங்கலே, என்ன வேணும்?''

''கார்த்தியாயினி கடிதம் எழுதுறு.''

''அந்தக் கடிதமும் அங்கே போய்ச் சேரட்டும்.'' அப்புறம் மனைவியிடம் கேட்டார்: ''அவன் வராமே இருந்துடுவானு?''

குட்டியம்மா சொன்னுள்: ''அவன் வருவான். கண்டிப்பா வந்துடுவான்.''

பப்புப்பிள்ளை கேட்டார்: ''அவனுக்கு அங்கே எதாச்சும் பொண்ணு இருக்காளா?''

குட்டியம்மா எதிர்த்துக் கூறினுள்: ''அது இந்த ஊரிலுள்ள பொறுமை புடிச்ச பெண்பிள்ளேங்க கட்டிவிட்ட கதையல்லவா?''

சிந்தனைக்குப் பிறகு பப்புப்பிள்ளை கூறினுர்: ''பெரிய தவறு நேர்ந் துட்டது.''

''ஊம்? அதென்ன?''

''அவன்கிட்டே கேட்டிருக்கணும்.''

''ஓ. . . அதெல்லாம் எனனத்துக்கு? எந்தக் கெடுதலும் நேர்ந்துடா துங்க.''

மறுநாள் காலையில் ஒரு யோசனையுடன் நாணிக்குட்டி வந்தாள். முந்திய இரவில் தன் கணவனிடம் அவள் நிலைமையை விளக்கிக் கூறினாளாம். அவனுக்குத் திருவனந்தபுரம் நகரத்திலே நல்ல பழக்கம் இருந்து வருகிறது. பல வருஷங்களுக்கு முன் ஏதோ ஓர் உத்தியோகஸ்த னுடைய வேலைக்காரனாக அவன் திருவனந்தபுரத்திலே இருந்திருக்கிறான். கொச்சுநாணி கூறினாள்:

''கேசவண்ணனுக்கு அங்கே பொண்ணு கிண்ணுன்னு இருந்தா அங்கே போயி உண்மை என்னங்கிறதைத் தெரிஞ்சுக்கிட்டு வந்துடறதாகச் சொன்னாரு. போயித் தெரிஞ்சுக்கிட்டு வரட்டும். என்ன? கார்த்தி யாயினிக்குச் சம்மதம்னு போனாப் போதும்னு சொல்லி நான் வந்திருக் கேன்.''

கார்த்தியாயினிக்கு அது விஷயமாகக் கொஞ்சமும் யோசிக்க வேண்டியதில்லை. அவள் கண்டிப்பாகச் சொன்னாள்:

''வேணும். அதை விசாரித்தறிய யாரும் போகவேணும்.''

ஆயினும் இந்தப் பரமுகந்தின் இரகசியத்தை அறிந்துகொள்ள முடியு மல்லவா என்று கார்த்தியாயினி யோசித்துப் பார்க்காமல் இல்லை. ஆனால் அது சரியல்ல என்று அவளுடைய ஆத்மா குரல் எழுப்பியது.

அத்தியாயம் 9

அழகியான அரக்கி

சென்ற சில நாட்களாக அரசாங்கத் தலைமைக் காரியாலயத்தில் பல்வேறு மாறுதல்கள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. சில காரியதரிசிகளின் பதவிகளுக்கு அசைவு ஏற்பட்டிருக்கிறது. சிலர் பேஷ்கார்களாக நியமிக்கப்பட்டு வெளியே அனுப்பப்பட்டிருக்கின்றனர். முக்கியமான பொறுப்புக்கள் வகித்து வந்த பலர் முக்கியம் அல்லாத இலாக்காக்களுக்கு மாற்றப்பட்டிருக்கின்றனர். காரியதரிசி போத்தன், வாழை, மிளகு நோய் நிவாரண அலுவலராகக் காரியாலயத்துக்கு வெளியே தள்ளப் பட்டிருக்கிறார். முன்னாள் பிரதமக் காரியதரிசி மிஸ்டர் மேனன் லீவிலே போய்விட்டார். சில உதவிக் காரியதரிசிகள்; காரியதரிசிகளாகி விட்டனர். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் லவலிங் கம்பெனியார் தான் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றே தோன்றுகிறது. ஆனால், அந்தப் போட்டி அவ்வாறு முடிவு பெறுதென்று நிபுணர்கள் கூறுகிறார்கள். 'நிவர்த்தன' வாதிகள்* சம்ஸ்தானத்திலுள்ள கான்டிராக்டர்களுக்காக வாதித்தனர். சில பத்திரிகைகள் பிரதமக் காரியதரிசியையும், அவருடைய புதிய ஏற்பாடுகளையும் ஆமோதித்து எழுதின. வேறு சில பத்திரிகைகள் கடுமையாக விமர்சித்தன. அந்தப் பத்திரிகைகள்மீது ராஜத் துரோகக் குற்றம் சுமத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப் போவதாக வதந்திகள் உலாவுகின்றன.

இத்தனை மாறுதல்களுக்கும் இடையில்தான் சூப்பிரண்டு வையாபுரிப் பிள்ளை தாசில்தாராக நியமிக்கப்பட்டு மூவாற்றுப்புழைக்கு மாற்றப் பட்டார். இவ்வாறு, அலுவலகத்திலுள்ள அறைகளிலிருந்து அவர் பரந்த உலகத்துக்குப் போகப் போகிறார். ஸஹ்ய பர்வதத்தின் சாரல்களிலிருந்து கிளம்பி வருகிற சுத்தமான காற்றை இனிமேல் வையாபுரிப் பிள்ளை சுவாசிக்கலாம். மச்சு விசிறியின் காற்றைச் சுவாசித்தார். சுத்தமான காற்றைச் சுவாசிக்கக்கூடிய இடத்துக்குச் செல்வதை அவர் விரும்புவாரோ, என்னவோ?

---

* விநாசார அடிப்படையில் எல்லா ஜாதி–மத–சமுதாயத்தினருக்கும் அரசாங்க உத்தியோகங்கள் அளிக்கப்படவேண்டுமென்ற இயக்கத்தை நடத்துபவர்கள். அந்தக் காலத்தில் திருவாங்கூரில் ஜாதி ஹிந்துக்கள்தான் பொறுப்பான அரசாங்கப் பதவிகளில் நியமிக்கப்பட்டு வந்தனர். (மொ–ர்.)

எப்படியிருப்பினும் தனக்கு இருந்துவருகிற புகாருக்கு ஒரு நிவாரணம் ஏற்பட வழி பிறந்திருப்பதுபோல் அவருக்குத் தோன்றியது. உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற இனி மூன்று வருஷங்களே இருக்கின்றன. அவர் வேலையில் நுழைந்தபோது அவருடன் 20—10 சம்பள விகிதத்தில் வேலைக்கு அமர்ந்திருந்தவர்கள் 80—120 என்ற விகிதத்துக்கு உயர்த்தப்பட்டபோது, அவருக்கு 100—150 என்ற சம்பள விகிதமே நிர்ணயிக்கப்பட்டபோதிலும், அந்த 80—120 விகிதத்தில் இருந்தவர்கள் 150—200க்கு உயர்த்தப்பட்டபோது, தாம்மட்டும் 150லேயே வைக்கப் பட்டார் என்பதே அவருடைய முக்கியமான புகார். மேலும், புகார்கள் இருந்துவருகின்றன.

அவருடன் வேலையில் அமர்ந்த ஒருவர் இப்போது கோட்டையம் பேஷ்கார். வையாபுரிப் பிள்ளை பொறுப்புணர்ச்சியுடன் விசுவாசமாகப் பணிபுரிந்து வந்தவர். அவர் விண்ணப்பங்கள் பலவற்றைச் சமர்ப்பித்துப் பார்த்தார். மாதம் ஒருமுறை பிரதமக் காரியதரிசியைச் சென்று பார்க்காமல் இருக்கமாட்டார். வரும் துவரமுல் தோசியார்களைச் சந்தித்துத் தமது கிரக நிலைகளைப்பற்றி அறிந்துகொண்டார். அண்மைக் காலமாக அன்றாடமும் தைக்காட்டிலுள்ள சுப்பிரமணியர் கோவிலுக்கும், சாஸ்தா கோவிலுக்கும் சென்று முறையாக வழிபாடுகளைச் செய்யவும் தவறுவதில்லை. தாக்க நல்ல காலம் வரப்போகிறதென்று சமீபகாலமாக அவர் அறிந்திருக்கிறார். அதனால்தான் இந்தப் புதிய பதவி அவருக்குக் கிடைத்திருக்கிறது.

தலைவிலுள்ள மூவாற்றுப்புழைக்கு இடமாற்றம் வாங்கிச் செல்லப் பிரத்தியேகமான காரணம் உண்டு. அங்கே செல்ல விருப்ப முடைய நான்கைந்து பேர்கள் தலைமையலுவலகத்திலேயே இருந்து வந்தனர். அவ்விடத்துக்கே செல்ல அனுமதி கிடைத்தது நல்ல காலத் தின் துவக்கந்தான் என்று வையாபுரிப் பிள்ளை நம்பினார். மூவாற்றுப் புழையிலுள்ள வணிகங்கள் பதிவு செய்து கொடுக்கப்பட இருந்தன. அவ்வாறு சர்க்காரால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அது ஒரு நல்ல காரியந்தான். கோட்டையம் பேஷ்காராக இருக்கிறவர் அவருடைய பக்கத்து நாற்காலியில் அமர்ந்து பணியாற்றியவர். இந்த நான்கு வருஷங்களுக்குள் தமக்கென ஒரு வீட்டைக் கட்டிவிட முடியும்.

இந்தச் சந்தர்ப்பத்திலேதான் பார்க் விழுவில் 'பார் ஸனல் ஸ்டாப்'பின் நியமனமும் நடைபெற்றது. 40—80 ஸ்கேலிலே கேசவ பிள்ளை நியமிக்கப்பட்டான். இப்போது கிடைத்து வருகிற சம்பளத் தைப்போல இருமடங்கு அதிகத் தொகையில்!

அன்றைய தினத்திலிருந்துதான் கேசவபிள்ளையின் பெயரைத் தலைமை யலுவலகத்தில் உள்ளவர்கள் அறியத் தொடங்கினர். அவனை இது வரையில் பலருக்குத் தெரியாது. இப்போது அவர்கள் எல்லோரும் அவனைப்பற்றி விசாரித்து அறிந்துகொண்டனர். ஹரிஹர ஐயர், கோவிந்தன் நாயர், பிரபாகரன் நாயர் ஆகியோரால் இந்த நியமனம்

எவ்வாறு நடைபெற்றது என்பதை அநுமானித்து அறிய முடிந்தது. ஆயினும் அவனிடம் அவர்கள் சிலவற்றைச் சொல்ல விரும்பினர்கள். கோவிந்தன் நாயர் சொன்னார்: ''நீ ரொம்பப் பொல்லாத மனிதன் அப்பா! பேசாமடந்தை மாதிரி அமர்ந்தவாறு காரியத்தைச் சாதித்துக் கொண்டாயே. மற்றச் சிலர் முயற்சி செய்து பார்த்தாங்க. அதெல்லாம் எங்களுக்குத் தெரியும். ஆனா, நீ மட்டும் எங்களோடவே இருந்துக் கிட்டு யாருக்கும் தெரியாமே காரியத்தைச் சாதித்துக்கொண்டாயே?''

ஹரிஹர ஐயர் சொன்னார்: ''ஆமாம் பிள்ளாவாள், நானும் சொன்னதை வாபஸ் வாங்கிக்கொள்றேன். நீங்களும் தங்கம்மாவும் அருகருகாக அமர்ந்து வேலை செய்யறது சரீல்லேன்னு நேக்குப் பட்டது. இப்போ அது சரின்னு படுது. நீங்க ரெண்டு பேரும் நல்லாயிருக்கணும். ஒரு பிராமணனோட ஆசீர்வாதம்!''

ஐயர் காவிக் கறை படிந்த பற்கள் முழுதையும் வெளிக் காட்டியவாறு குலுங்கக் குலுங்கச் சிரித்தார்.

தங்கம்மா, ஒரு மணப் பெண்போல் நாணத்தினால் தலை குனிந்தாள். அவ்வாறு சிரம் குனிந்து அமர்ந்தவாறு அவள் அவனை ஓரக்கண்ணால் பார்த்துப் புன்னகை புரிந்தாள். கேசவபிள்ளை ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

ஐயர் விளையாட்டான ஒரு கம்பீரத்துடன் தங்கம்மாவிடம் கூறினார்: ''பார் தங்கம்மா, இனிமேல் அந்த நாற்காலியிலே நீ தனியா அமர்ந்து வேலை செய்யணும். பக்கத்திலே பிள்ளாவாள் இல்லியேன்னு எண்ணக் கூடாது. அதுக்குத்தான் விரகம் விரகம்னு சம்ஸ்கிருத மொழியிலே சொல்வாங்க. சர்க்கார் வேலைகள் முறையா ஒழுங்கா நடக்கணும். பிள்ளாவாள் நினைவிலேயே இருந்துடக்கூடாதுன்னு நாம் சொல்றோம்.''

ஐயர் மீண்டும் சிரித்தார்.

அவருக்கு ஒரு கருத்து இருந்து வருகிறது, அந்தச் சிறிய இலாக்காவில் உள்ளவர்கள் சேர்ந்து பிள்ளைக்கு ஒரு விடை அனுப்புதல் விழாவை நடத்தவேண்டுமென்று. அந்த விஷயத்தில் யாருக்குமே கருத்து வேற்றுமை இல்லை.

''கேசவபிள்ளாவாளுக்கு இதைவிடப் பெரிய பெரிய விடையளிப்பு விழாக்கள் நடக்கப் போவது. சந்தேகம் இல்லை. ஆனால் முதல் முதலில் நாம் நடத்தும் விழாதான் நடக்கணும். இது பிள்ளாவாள் நினைவிலே எப்போதும் இருக்கணும். இந்தக் குறுக்கு வழியிலேயே போயி பிள்ளாவாள் செக்ரடரி பதவியிலே ஏறும்போது எங்களை மறந்துடக்கூடாது. கேட்டீங்களா, பிள்ளாவாள்? கேட்டியா, தங்கம்மா?'' என்றார் ஐயர்.

கோவிந்தன் நாயர் ஐயரிடம் கேட்டார்: ''ஐயர்வாள் அப்போக்கூட இப்படியே இருந்துடுவீங்களா? உங்களுக்குப் பென்ஷன் கின்ஷன் ஒண்ணும் ஆயிடாதா?''

எல்லாம் தெரிந்தவர்போல் ஐயர் கூறினார்: ''உங்களுக்கென்ன தெரியும், நாயர்வாள்? அதுக்கெல்லாம் அவ்வளவு காலம் ஆயிடுமா,

என்ன? கேசவபிள்ளைவாள் செக்ரடரியானபின் இந்த ஐயர்வாளுக்குப் பென்ஷன்! பிள்ளைவாளின் அதிருஷ்டத்திலும் அறிவுத் திறமையிலும் இந்தப் பிராமணனுக்கு அளவு கடந்த மதிப்புண்டு.''

இந்தச் சந்தர்ப்பத்தில் மாதேவன் பிள்ளை அங்கே வந்து சேர்ந்தார். அவர் கேட்டார்: ''மாதேவன் பிள்ளைக்கு எதாச்சும் சம்மானம்?''

''அண்ணனுக்கு என்ன வேண்டும்?'' கேசவபிள்ளை கேட்டான்.

மாதேவன் பிள்ளை ஐயர் பக்கமாகத் திரும்பி நின்றவாறு சொன்னார்: ''கேட்டீங்களா, சுவாமீ! இன்னைக்கு மாதேவன் பிள்ளை அண்ணன். சுவாமீ, நீங்களும் கேட்டீங்கல்ல? நாளைக்குப் பார்க் வியூவிலும், அதுக்கு அடுத்த நாள் பக்தி விலாசத்திலும் கேசவபிள்ளை உத்தியோகம் பார்க்கிறப்போ. . .?''

ஐயர் கேட்டார்: ''அப்போதைக்கு என்ன மாதேவன் பிள்ளை?''

''அப்போ மாதேவன் பிள்ளை இடியட்! அல்லாட்டா ராஸ்கல்! தொலைச்சிடுவாரு.''

கேசவபிள்ளை பேசவில்லை. அசட்டுத்தனமாகச் சிரித்தவாறு நின்றான். தான் யாராக இருந்தாலும், எந்தப் பதவியில் இருந்தாலும் இன்றைய கேசவபிள்ளையாகவே இருந்துவருவேனென்று ஒரு பேச்சுக்காவது அவன் சொல்லியிருக்கவேண்டாமா? அந்த மரியாதைகூட அவனுக்குத் தெரியாதா? ஹரிஹர ஐயர் கூறினார்: ''பலே! பலே! அப்படித்தான் இருக்கணும் பிள்ளை! நாளைக்கு நாம் எப்படி இருப்போம்னு இன்னைக்கு எப்படிச் சொல்லமுடியும்? அகஞலே வெறும் வாய்ப் பேச்சுக்காகவும் எதையாவது பேசாமல் இருப்பதுதான் நல்லது. அதுதான் சரி!''

* * *

அன்றைய தினம் அந்த இலாக்காவிலே சிறிய அளவில் ஒரு தேநீர் விருந்து நடைபெற்றது. அதன் பின் கேசவபிள்ளை விடை பெற்றுக் கொள்வதற்காகச் சூப்பிரண்டின் வீட்டுக்குச் சென்றான். முகமலர்ச்சியுடன் வீற்றிருந்தார் ஐயாபுரிப் பிள்ளை. கேசவபிள்ளை அவரை அத்தகைய நிலையிலே முதல் முதலாக அன்றைக்குத்தான் பார்க்கிறான். அவர், கூப்பிய கரங்களுடன் நிற்கிற கேசவபிள்ளையை அணுகி, அவனுடைய இரு கரங்களையும் பற்றிக்கொண்டார். பின் தோள்மீது தட்டிக் கொடுத்துவிட்டுக் கூறினார்: ''அன்னைக்கு உங்களைப் பார்த்த போதே, நீங்க உயர்ந்த பதவிக்கு வருவீங்கன்னு எனக்குத் தெரிஞ்சுப் போச்சு. அப்படி உங்க முகத்திலேயே எழுதி வச்சிருக்கார் கடவுள். 'சாமுத்ரிகா சாஸ்திரம்' அவ்வாறு சொல்கிறதப்பா!''

சூப்பிரண்டு அவனை உட்காரச் சொன்னார். அவன் உட்காரவில்லை. அவர் அவனைப் பிடித்து உட்கார வைத்தார். அப்போதுகூட அவன் நாற்காலியில் தொடாமலிருந்தபடி உட்கார்ந்துகொண்டான்.

வையாபுரிப் பிள்ளை கேட்டார்: ''கேசவபிள்ளையோட நட்சத்திரம் என்ன?''

''ரேவதி.''

சூப்பிரண்டு அவர்கள் சில கணக்குகளைப் போட்டுப் பார்த்தார். நல்ல காலத்தையும், கெட்டகாலத்தையும் திட்டவட்டமாக வரையறுத்துப் பார்த்து, ''இப்போது சுக்கிரதசை. அவ்வளவு நல்லகாலம்னு சொல்ல முடியாது. ஆனால், நல்ல காலத்துக்கு வேண்டிய முன்னேற்பாடெல்லாம் இந்தத் தசையில் நடந்துவிடும்'' என்றார்.

புன்னகையுடன் அவர் தொடர்ந்து, ''இந்தக் காலத்தில் திருமணமும் நடந்தேறிவிடும்'' என்று கூறினார்.

சில விநாடிகளுக்குப் பின் அவர் மேலும் கூறினார்:

''பார்யா ஸ்தானம் மிகுந்த பாக்கியமுள்ளதாக இருக்கிறது. சந்தேகமே வேண்டாம். பார்யாள் பரம பாக்கியவதியாக இருப்பாள்.''

தங்கம்மாவை மனத்தில் கொண்டுதான் சூப்பிரண்டு அவ்வாறு கூறுவதாகக் கேசவபிள்ளைக்குத் தோன்றியது. ஆனால், மறுவிநாடியிலேயே கிட்டு மாமாவின் குரல் அவன் காதுகளிலே முழங்கிற்று:

''அவள் அதிருஷ்டக்காரிதாம்ப்பா!''

சூப்பிரண்டு கேட்டார்: ''கேசவபிள்ளைக்கு ஜாதகம் இருக்கா?''

''ஊரிலே கணக்கர் ஒருவர் எழுதியோ குறித்து வச்சிருக்கார்.''

வையாபுரிப் பிள்ளை அழுத்தமாகச் சொன்னார்: ''அது போதாது. ஒரு ஜாதகம் இருக்கவும். தெளிவான ஒரு ஜாதகம். புளிமூட்டிலே ஒரு ஜோசியர் இருக்கார். அவர் ஜாதக விஷயத்திலே பெரிய கெட்டிக்காரர். அவரை வைத்து ஜாதகம் எழுதிக்கணும். அதைப் பின்பற்றி வாழ்க்கையை நடத்தணும். சீஃப் செக்ரடரி அவர்களுடைய பிரமோஷன் தேதியைக்கூட அந்த ஜோசியர் சொல்லியிருக்கிறார்.''

தனது ஜாதகத்தையும் அந்த ஜோசியரையே எழுதவைக்கலாம் என்று கேசவபிள்ளை ஒப்புக்கொண்டான்.

''கேசவபிள்ளை, உங்க தலைதை சனீசுவரன்; சாஸ்தாவு! அதனாலே சரியாக ஐயப்ப சேவை செய்து வரணும். சீஃப் செக்ரடரி அவர்களுக்கு இந்த மாதிரியான பதவி உயர்வெல்லாம் கிடைத்தது எப்படீன்னு தெரியுமா? சனீசுவரனைச் சேவிச்சதனாலேதான். இப்போ திவான்ஜிகூட அதை உணர்ந்திருக்கிறார்.''

வையாபுரிப் பிள்ளை மேலும் சில உபதேசங்களை வழங்கினார். சர்க்கார் அலுவல்களை எப்படி நடத்திச் செல்வது என்பன போன்ற உபதேசங்கள்.

கேசவபிள்ளை விடை பெற்றுக்கொள்ள எழுந்தான். சூப்பிரண்டு அவர்களுக்குத் தனது சொந்த காரியங்களைப்பற்றிப் பேசவேண்டியிருந்தது. ''எனக்கு எப்பவுமே கெட்ட கிரகந்தான் கேசவபிள்ளை. இரண்டு நான்கைந்து வருஷங்கூடச் சர்வீஸ் உண்டு. பதினெட்டாவது வயசிலே செக்ரடரியேட்டின் அடிமட்டங்களுக்கிடையிலே புகுந்துகொண்டவன்.

இப்போத்தான் வெளியே போகச் சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. சில சமயங்களிலே என் சம்பந்தப்பட்ட சில கடுதாசிகள் அங்கே வரலாம். அதைக் கொஞ்சம் கவனிச்சுப் பார்த்துக்கோப்பா!''

சூப்பிரண்டு அவர்கள், அந்தக் காகிதங்கள் எத்தன்மையுடையனவாக இருக்குமென்பதையும் எடுத்துரைத்தார்.

''காலம் கெட்டுக் குட்டிச்சுவராப் போச்சு, கேசவபிள்ளே! இன்னேக்கு அதிகாரத்தை எதிர்க்கிற காலம் வந்தாச்சு. இந்தத் தலேவர்கள் இருக்காங்களே, ரொம்பவும் தொந்தரவு கொடுப்பானுங்க. அரசன் என்றே, சக்கிரவர்த்தியென்றே சொன்னுக்கூட அவங்களுக்கு ஒரு மதிப்பும் இல்லே. அப்புறம் ஒரு தாசில்தார் நிலேபற்றிச் சொல்லவா வேணும்? அந்தத் தலேவனுங்க எந்தவிதமான காரணமுமின்றிச் சும்மா புகார் கடுதாசிகளே அனுப்பிவைப்பாங்க. அப்போது சீஃப் செக்ரடரிக்குப் பக்கத்திலே என்னுடை மனுஷாளிலே ஒருவர் இருக்கிறான்னு எனக்கு அது ஆறுதல் அளிக்கிற விஷயந்தானே? அதுவும் நான் தலேநகரிலிருந்து தூரத்தில் இருக்கிறபோது! அதெல்லாம் உங்களுக்கு இப்போ புரியாது.''

மலர்ந்த சிரிப்புடன் அவர், ''கேசவபிள்ளே தாசில்தாரோ, பேஷ்காரோ ஆகிறப்போ அதென்னன்னு புரியும்'' என்றார்.

சூப்பிரண்டுகூட மற்றவர்கள் சொல்வதுபோல் சொல்கிறரே, அவன் பேஷ்கார் ஆகிவிடுவான் என்று.

கேசவபிள்ளே விடை பெற்றுச் சென்றான். நடந்து செல்லும்போது அவன் பலவற்றைப்பற்றிச் சிந்தித்துப் பார்த்தான். விடுதியை அடைந்தபோது அங்குள்ளவர்கள் அனைவரும் அவனேப் பாராட்டக் காத்து நின்றார்கள். அங்கே அவனுக்கு ஒருவிதமான தாழ்வு மனப்பான்மையே ஏற்பட்டது. அங்கேகூட அவர்கள் சொன்னதெல்லாம் அவனுக்கு ஏற்பட இருக்கிற பதவி உயர்வுகளேப்பற்றித்தான். காரியதரிசி பதவி கூடக் கையெட்டுமளவு தூரத்திலேதான் என்கிறார்கள். அவனுக்குச் சற்று அவநம்பிக்கைதான். இனிமேல் யாருமே இவ்விதம் சொல்லாமல் இருந்தால் போதுமென்று அவன் விரும்பினன். தனக்கு அத்தகைய தகுதியுண்டா என்ற சந்தேகங்கூட அவனுக்கு ஏற்பட்டுவிட்டது. அவனுடைய தைரியம் கொஞ்சம் கொஞ்சமாகச் சிதைந்துபோவதுபோல் தோன்றியது.

பத்மநாபப் பணிக்கர் நேரடியாகவே, ''விவாக நிச்சயம் முடிஞ்சுட்டதா?'' என்று கேட்டுவிட்டார்.

இதயத்தைத் துளேக்கிற இத்தகைய கேள்வியை இதுவரையில் யாரும் கேட்டதில்லே. பத்மநாபப் பணிக்கருடைய கேள்வியில் சிறிது விஷம் கலந்திருந்தது. அவரும் பார்க் விழுவுக்குள்ளே நுழைய முயற்சி செய்தவர் தாம். ஆனல், அது பலிக்கவில்லே. அதன் காரணமான பகைமை அவர் மனத்திலே புகைந்துகொண் டிருந்தது.

கேசவபிள்ளை பதில் சொல்லவில்லை. கொச்சுண்ணி நாயர் ஒரு முன் எச்சரிக்கை செய்தார்.

''ஜாக்கிரதையா இருக்கணும். இங்கே எச்சரிக்கையா நடந்துக்க லேன்னு அது ஆபத்தாகி விடும். பெரிய ஆசாமிங்களோடப் பழகப் போறே. எசமானர்களுக்கு அதிருப்தி ஏற்படறது எப்போன்னு யாராலும் சொல்ல முடியாது.''

பத்மநாபப் பணிக்கர் அதற்குப் பதிலளித்தார்: ''கேசவபிள்ளைக்குப் பயப்படவேண்டிய அவசியமே இல்லே. சீஃப் செக்ரடரி சொந்தக்காரர் அல்லவா?''

ஆனால் கொச்சுண்ணி நாயருக்கு அதிலே அவ்வளவு நம்பிக்கையில்லை.

''பணிக்கர் சார், நமக்குத் தெரியாதா, இங்குள்ள எசமானர்களை? அந்தப் பெரிய மனிதர்களுக்குச் சொந்தமென்றே பந்தமென்றே ஏதாச்சும் உண்டா?'' என்றார்.

எல்லாவற்றையும் காது கொடுத்துச் கேட்டுக்கொண் டிருந்த உண்ணி கூறினான்: ''கேசவபிள்ளை இன்னும் பார்க் வியூவுக்குள்ளே நுழையலே. அதுக்குள்ளே வாய் மூடி மௌனியாயிருக்கக் கற்றுக்கொண்டு விட்டானே.''

''நல்லாக் கற்று வந்தவன்தாம்ப்பா, கேசவபிள்ளை'' என்றார் பணிக்கர்.

ஒரே ஒரு நாளுக்குள்ளே அந்த விடுதியில் தங்கியிருந்த நண்பர்களிடம் ஏற்பட்ட மாறுதலைக் கேசவபிள்ளை அறிந்தான். அங்கே மட்டும் என்ன? எந்த இடத்திலும் அந்த மாறுதலைப் பார்க்கமுடிந்தது. இன்று வரையில் வாழ்ந்து வந்த சூழ்நிலையிலிருந்து ஏறக்குறைய தனிமைப் பட்டதுபோல் அவனுக்குத் தோன்றியது. அவன் சிறிது உயர்ந்த மண்டலத்துக்குச் சென்றுவிட்டான் என்று அனைவரும் எண்ணு கின்றனர். அங்கே அவனுக்கு நண்பர்கள் யாரும் இல்லை.

தன்னுடைய சம்பளம் நாற்பது ரூபாயாக உயர்ந்துவிட்டது என்று மட்டும் ஊருக்கு எழுதினான். எங்கே, என்ன வேலை என்பதைப்பற்றித் தாயாருக்கோ தகப்பனுருக்கோ தகவல் அறிவிக்கவில்லை..

ஜோசியரைச் சந்தித்து, புதிய உத்தியோகத்தில் அமர்ந்திட, எது நல்ல நேரம் என்பதை விசாரித்து அறிந்துகொண்டான். பார்யா ஸ்தானம் மிகவும் நன்றுயிருக்கிறது என்றல்லவா அந்த ஜோசியரும் கூறு கிறார்? அந்த ஸ்தானத்திலே யார் இருக்கிறாள்? கார்த்தியாயினியா? தங்கம்மாவா?

* * *

அன்றிரவு அந்தக் காதலர்கள் இரகசியமாகச் சந்தித்தனர். வழக்கத்தைவிட அதிகமான உற்சாகத்துடன் காணப்பட்டாள் தங்கம்மா. ஆவேசமும் ஆனந்தமும் அந்த வதனத்திலே அலைமோதிக் கொண்டிருந்தன. ஆனால், கேசவபிள்ளை களைப்புடன் காணப்பட்டான்.

அவனுடைய சுறுசுறுப்பு மட்டுமின்றி, களைகூட மங்கிவிட்டதாகத் தோன்றியது. அவளுடைய கரங்களுக்கிடையிலே குளிர்ந்து வாடிவிட்ட அந்தக் காதலன் அகப்பட்டுக்கொண்டான்.

அவள் சிறிது ஆத்திரத்துடன் கேட்டாள்: ''என்ன இது?''

கேசவபிள்ளை தனக்கேற்பட்ட பலவீனத்தின் கதையைச் சொல்லத் தயங்கவில்லை. அண்மைக் காலமாக அனைவரும் அவனை ஓர் உயர்ந்த உத்தியோகஸ்தன் என்ற முறையிலேதான் பார்க்கிறார்கள். ஏதோ ஒரு விதமான பயம், திகைப்பு—அதுதான் என்று அவன் சொன்னான்.

'தன் சுகபோகக் கருவி அவன்' என்ற முறையில் அவள் கூறினாள்: ''அப்படியா? நான் எனது பழைய குமாஸ்தாவைப் பழைய குமாஸ்தாவாகவே திரும்பிப் பெறலாமா? எனது அந்தப் பழைய குமாஸ்தாவுக்குப் போதிய மனோபலம் இருந்தது. எனக்கு எனது பழைய குமாஸ்தாவே போதும்.''

அதைச் செய்யமுடியும் என்ற மமதையோடுதான் அவள் அவ்வாறு கூறுவதாகக் கேசவபிள்ளைக்குத் தோன்றியது. அவள், ஒருவேளை, அவனைப் பழைய குமாஸ்தாவாக்கி விடலாம்.

கேசவபிள்ளை மீண்டும் ஏதோ பதில் அளித்தான். ஆனால், அவள் அதைக் காதிலே போட்டுக்கொண்டதாகக்கூடக் காட்டிக்கொள்ளவில்லை. அவள் செவிடாகி விட்டாளா? முன் எப்போதுமே அவளை இத்தகைய தீவிர உணர்ச்சியுடன் அவன் பார்த்ததில்லை. அவள் மானிட பலத்தை விட அதிக பலமுடைய ஒரு ராட்சஸியாக மாறியிருந்தாள். அவனுடைய எலும்புகள் நொறுங்கிவிடும்போல் தோன்றியது. உணர்ச்சியிலே அவளை எட்டிப் பிடிக்க அவனால் முடியவில்லை.

அவ்வாறு, அந்த உணர்ச்சியின் உருவம், அன்று அவனை வழக்கமான நேரத்துக்கு முன்பே வெளியே போகச் சொல்லுவது போலிருந்தது. 'போ!' என்று அவள் சொல்லிவிட்டாளா? ஒன்றுக்கும் ஆகாதவன் என்ற முறையிலே வெளியே தள்ளிவிட்டாளா?

மனமும் உடலும் களைப்படைந்து சோர்வையிலே குளித்தவாறு கேசவபிள்ளை அங்கிருந்து திரும்பி வந்தான். இவ்வளவு தூரம் மனநிம்மதி யற்ற ஓர் இரவு அவனுக்கு ஏற்பட்டதே இல்லை. அன்று பகல் முழுதும் அவனுக்குக் கிடைத்த பாராட்டுதல்கள் அவனுடைய மனோதைரியத்தைத் தகர்த்து விடுவதாக இருந்தன. தகுதியற்ற ஓர் இடத்தை அடைந்துவிடும்போது ஏற்படக்கூடிய 'என்ன செய்வது?' என்ற அச்சம்! அதைத் தொடர்ந்து, தனக்குக் கிடைத்த அந்த இடத்தை இழந்து விடுவேனே என்ற பீதி! அவள் சொன்னது அப்போதுகூட அவனுடைய காதில் முழங்கிக்கொண்டிருந்தது. அவளுக்குத் தனது பழைய குமாஸ்தாவே போதுமாம்!

கேசவபிள்ளை ஓர் உண்மையைக் கண்டுகொண்டான். தங்கம்மாவின் விசுவரூபம்! அது இந்த அளவு பயங்கரமானதென்று அவன் ஒருபோதும் அறிந்ததில்லை. அவன் பீதியுற்றான். அவள் இதைவிடக் கொடிய

ராட்சஸியாக மாறிவிடலாம். உணர்ச்சியிலே திருப்தியடையாத அவள் நாளைய தினம் என்ன செய்யமாட்டாள்?

மறுநாள், ஒருவேளை, இன்று கிடைத்திருந்த பாராட்டுதல்கள் முழுதுமே பயனற்றுப் போய்விடலாம். அவன் பழையபடி இருபது ரூபாய் சம்பளம் பெறுகிற அலுவலகக் குமாஸ்தாவாகி, அந்தப் பழைய நாற்காலியிலேயே அமர்ந்துவிடலாம். அவள்தான் பதவி உயர்வுக்குக் காரணமாயிருந்தவள். தாழ்வுக்கும் அவளே காரணமாகிவிடலாம். அவளுக்குத் தேவை அந்தப் பழைய குமாஸ்தாவேதான். ஆனால் அந்தப் பழைய குமாஸ்தா இன்றைக்கு ஒன்றுக்கும் லாயக்கற்றவனாகி விட்டான்.

அங்கே, கிராமத்தில் விவாகம் நடந்து முடிந்து நாட்கள் பல சென்ற பின்புங்கூட முதலிரவை அநுபவிக்காமல் அந்தப் பட்டிக்காட்டுப் பெண் குப்புறப் படுத்து அழுதுகொண்டிருப்பாள் அல்லது பகல் முழுதும் வீட்டு வேலைகளைச் செய்து களைப்படைந்தவளாகத் தூங்கிக்கொண்டிருப்பாள்! ஆயினும் தனிமையிலே தாழம்பாய்மீது படுத்துக் கிடக்கும்போது ஒரு நெடுமூச்சு அவளிடமிருந்து கிளம்பாமல் இருக்கமுடியாது. ஒரு துளிக்கண்ணீர் அவளுடைய கண்ணிலிருந்து உதிர்ந்து விழுந்திருக்கலாம். அந்தச் சுடும் நெடுமூச்சு காம உணர்ச்சியால் ஏற்பட்டதாக இருக்காது. அந்தச் சூடான கண்ணீர், அவமதிக்கப்பட்ட பெண்மையினுடையது. தனது கழுத்திலே தாலியைக் கட்டியவனுக்கு அவள் வேண்டாமென்றால்...? ஒருவேளை, அவளுடைய சாபத்தின் பலன் தானே இது? ஓர் இரத்தப் பேயின் பிடியிலே நெரிந்து கிடப்பதும், எலும்புகள் முறிந்துவிடுவதும்—அப்பப்பா, அவனுடைய உடல் வலிக்கிறது.

அவள் அழகிதான். சந்தேகம் இல்லை. அடக்கமும் ஒடுக்கமுமுடைய ஒரு குடும்பப் பெண்ணின் இயற்கையழகுபோல முதற்பார்வையிலே தோன்றுகிறது. இரண்டாவது பார்வையில்தான் அந்தக் கண்களுக்குள்ளே பற்றி எரிகிற நெருப்பைக் காணமுடியும். இவ்வளவு தீவிரமான உணர்ச்சி என்ற நாகப்பாம்பு, அழகிய அந்த உருவத்துக்குள்ளே குடியிருந்து வருவதாக அவன் உணர்ந்திருக்கவில்லை. சென்ற சில நாட்களிலே அவளைத் தன் சொற்படி நடந்துகொள்ளச் செய்ததிலே அவனுக்கு இப்போது ஆச்சரியம் ஏற்பட்டது. அந்தத் திறமை தனக்கு எவ்வாறு ஏற்பட்டது? மேற்கொண்டு அத்தகைய திறமை தனக்கு ஏற்படுமா? அந்த விஷயத்திலே அவனுக்குச் சந்தேகம் இல்லை—அது சாத்தியமில்லாதது தான்!

அப்படி நிகழ்ந்துவிட்டால்? அப்போதுகூட அவன் காதில் கிட்டு மாமாவின் அந்தச் சொற்களே முழங்கின. மேலும் சூப்பிரண்டு, ஜோசியர் ஆகியோர் 'பார்யா ஸ்தான'த்தின் மகிமையைக் குறித்துச் சொன்ன தீர்க்கதரிசனங்கள் அவன் காதுக்குள்ளே ரீங்கரித்தன. அவன் மீண்டும் தன்னுடைய பழைய தீர்மானத்தின்படி பிரவாகத்தோடு

பிரவாகமாகத் தான் அடித்துச் செல்லப்படுவதை அநுமதித்தான். பாதி வழியிலே மூழ்கிவிட்டால்? போகட்டுமே!

ஆனால் தங்கம்மாவுடன் இருந்து வருகிற உறவு ஒரு பிரச்னையாகவே இருந்துவரும் அல்லவா? அதிலேதான் அவனுக்குப் பயம். அந்த உணர்ச்சிப் பிரவாகத்தை அணை போட்டுத் தடுத்து நிறுத்த அவளால் முடியுமென்று அவன் நம்பவில்லை. அவள் தன்மீது வெறுப்புக் கொள்ளலாம். அந்த வெறுப்பு தன்னுடைய வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கப் போகிறது?

எப்படியிருப்பினும், ஒரு விஷயத்தில் அவனுக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை. நாளை அல்லது மறுநாள் அனைத்து இரகசியங்களும் வெளிப்பட்டு விடத்தான் செய்யும். அப்போது ஏற்படப் போகும் வெறுப்பு மிகக் கடுமையானதாகவே இருக்கும். வாழ்க்கையில் நெருக்கடிகள் பிறந்த கட்டமும் அதுவாகத்தான் இருக்கும். இவற்றை எல்லாம் சமாளித்தே யாகவேண்டும்.

மறுநாள் கேசவபிள்ளை புதிய வேலையில் அமரப்போகிறான், காலை பதினேழு மணியளவில். எனவே தங்கம்மாவை மறுநாள் காலையில் சந்திக்கமுடியாது. ஒருவேளை இனிமேல் அவனைச் சந்திக்கவே வேண்டாமென்று அவள் எண்ணினாலென்ன? தனக்கு விடை கூறி அனுப்பி வைத்த முறையைப் பார்த்தால் அவ்வாறுதான் நினைக்கவேண்டியிருக்கிறது. எதிர்காலம் எவ்வாறு அமையப் போகிறதென்று அவன் சிந்தித்துப் பார்த்தான். அவள் தன்னை என்றென்றைக்குமாகச் சந்திக்காமல் விட்டுவிட்டால்...? ஒரு முறையிலே பார்த்தால், அது ஆறுதல் அளிக்கிற விஷயந்தான். இன்னொரு முறையிலே பார்த்தால் அது ஆத்திரத்தை விளைவிக்கக் கூடியதாகவும் தோன்றுகிறது.

கேசவபிள்ளை அப்போதுகூடத் தனது அதிருஷ்டத்தின் மீதுதான் நம்பிக்கை வைத்தான். எதுவந்தாலும் வரட்டும், அதிருஷ்டம் இருந்தால் எல்லாம் சரியாய்ப் போய்விடும்.

அத்தியாயம் 10

* எஜமானியம்மா

பார்க்வியூவில் வேலைக்கு அமர்ந்ததும், முதல் முதலில் கடவுளின் அருளைப் பெறுகிற ஒரு செயலில்தான் ஈடுபட்டான் கேசவபிள்ளை. பிரதமக் காரிய தரிசி அவர்கள் ஐயப்பன் கோவிலில் பெரிய அளவில் ஒரு 'புஷ்பாஞ்சலி'யை நடத்தத் தீர்மானித்திருந்தார். அதற்கு வேண்டிய பூக்கள் முழுதும் செங்கோட்டையிலிருந்து கொண்டுவரவேண்டியிருந்தது. செங்கோட்டை தாசில்தாருக்கு அந்தப் பொறுப்பை அளித்துப் பூக்கள் வாங்கித் தயாராக வைக்கச் சொல்லி முன்பே கடிதம் எழுதப்பட்டிருந்தது. எஜமானியம்மாதான் அந்தக் கட்டளையைப் பிறப்பித்திருந்தாள். புஷ்பாஞ்சலி மிகவும் ஆடம்பரமாகவே நடைபெற்றது. அதை நடத்தி வைப்பதற்கான பொறுப்பு அநேகமாகக் கேசவபிள்ளையின் தலைமீதுதான் வந்து விழுந்தது. நினைத்திராமலேயே தனக்குக் கிடைத்த பாக்கியமாகவே அவன் அதை எண்ணிக்கொண்டான்.

புஷ்பாஞ்சலியன்று, திவான்ஜி, அவருடைய அந்தரங்கக் காரியதரிசி, மகாராஜா திருமேனியுடைய காரியதரிசி முதலிய பிரமுகர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். சந்தர்ப்பங்கள், கேசவபிள்ளைக்குப் பிரமுகர்களிடம் நெருங்கிச் செல்லவும், பேசவும் வாய்ப்பளித்தன. இத்தகைய அறிமுகங்கள் அவ்வளவு இலேசானவை அல்ல. பணிக்கர், கொச்சுண்ணி நாயர், கோவிந்தன் நாயர் முதலியோர் தொலைவில் நின்றவாறு இந்தக் காட்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்களுக்குக் கேசவபிள்ளையிடம் பொறுமை ஏற்பட்டிருக்குமென்பது திண்ணம். வேலை மும்முரத்தினால் அவர்களிடம் சென்று நலன்களை விசாரித்தறிய அவனால் இயலவில்லை. அவர்கள் ஏதாவது நினைத்துக்கொள்வார்களோ, என்னவோ!

தங்கம்மாவை அன்றிரவு சந்தித்தபின் இதுவரையிலும் சந்திக்கவில்லை. அவன் புஷ்பாஞ்சலி அலுவல்களிலே மூழ்கியிருந்தான். அவள் கோவிலுக்குள் வந்திருக்கிறாளா என்று கேசவபிள்ளை சுற்றுமுற்றும் பார்த்தான். அவள் வந்திருந்தாள். எஜமானியம்மாவின் பின்பக்கமாக நின்றுகொண்டிருந்தாள். அவன் உள்ளத் துடிப்புடன்தான் அவளைப் பார்த்தான். அவள் எஜமானியம்மாவிடம் ஏதாவது சொல்லிவிடுவாளோ என்று அவன் பீதியுற்றான்.

---

* திருவாங்கூரில் அரச ஆட்சி நடைபெற்று வந்த காலத்தில் மேலதிகாரிகளை, அவர்களுக்குக் கீழுள்ள அதிகாரிகளும் சிப்பந்திகளும் எஜமானன் என்று சொல்லியே அழைப்பது வழக்கம். எஜமானனுடைய மனைவி எஜமானியம்மாவாகி விடுகிறாள். (மொ–ர்.)

புஷ்பாஞ்சலி முடிந்துவிட்டது. பிரதமக் காரியதரிசியும் அவர் மனைவியும் சென்று விட்டார்கள். அவன் அவளிடம் சென்றான். ஒன்றும் நடைபெறாததுபோல் அவள் சிரித்தாள். கேசவபிள்ளை மன்னிப்புக் கோரும் குரலில் கூறினான்: ''பூக்கொண்டுவரச் செங்கோட்டைக்குப் போயிருந்தேன். நிறைய வேலை இருந்தது.''

அந்தக் கண்ணின் ஆழத்திலே ஜொலிக்கும் தீக்கனலைக் கண்டான் அவன். பீதியளிக்கிற காட்சி! அவள் கேட்டாள்: ''இன்று?''

அவன் உடனடியாகச் சொன்னான்: ''இல்லை; நாளை.''

''நாளை'' என்ற வார்த்தையைக் கூறிய பின்னரே அவனுக்குத் தோன்றியது, இன்னும் இரண்டொரு நாட்கள் கூடத் தள்ளி வைத்துச் சொல்லியிருக்கலாமே என்று.

பிரதமக் காரியதரிசியும் அவர் மனைவியும் கேசவபிள்ளையை வெகுவாகப் பாராட்டினர். புஷ்பாஞ்சலி பூஜை கம்பீரமாகவே நடைபெற்று முடிந்தது. பாயசம், ரொம்பப் பேஷ்! சடங்கு நடைபெற்றபோது பார்த்த சகுனங்களும் அருமையாகவே இருந்தன.

அன்று கேசவபிள்ளைக்குப் பிரத்தியேகமானதோர் உற்சாகம் ஏற்பட்டது. மறுநாள் இரவில் அவன் தங்கம்மாவைச் சந்தித்தான். எப்படியும் அவளை விடாமல் பிடித்துக்கொண்டிருக்கவேண்டுமென்று அவன் எண்ணினான். அவளை வெறுப்புக்குள்ளாக்குவது முட்டாள்தனமான செயலாகும்.

பார்க் விலூவில் வேலை மிகக் கடினம். மற்ற அரசாங்க ஊழியர்களைப் போன்று சரியாகப் பதிலொரு மணிக்கு வந்து ஐந்து மணிக்குப் போவதல் போதாது. காலையில் ஆறு மணிக்கே வந்துவிடவேண்டும். அநேகமாக எல்லா நாட்களிலும் இரவு இரண்டு மணிக்குத்தான் திரும்பிப் போக முடியும். கேசவபிள்ளை பழைய விடுதியை விட்டு, அங்கேயே பக்கத்திலிருந்த இன்னொரு விடுதியில் வந்து தங்கிக்கொண்டான். பார்க் விலூவிலுள்ள ஓர் உத்தியோகஸ்தன் அல்லவா? முன்போல் மலிவான வேஷ்டி சட்டைகள் போதா. ஆனால், அவனுக்கு அதுவும் லாபமாகிவிட்டது. பார்க் விலூ பங்களாவில் துணிமணிகள் சப்ளை செய்கிற சாலையங்காடியிலுள்ள ஒரு மொத்த வியாபாரி, முதல் தரமான ஆறு வேஷ்டிகளையும் சட்டைகளையும் அவனுக்குச் சப்ளை செய்தான். அதற்குப் பணம் கொடுக்கவேண்டாம்.

பக்தி விலாசத்தில்—ஏன்? அரண்மனையிலேகூட—அவனுக்கு நல்ல அறிமுகம் ஏற்பட்டது. எல்லாக் காரியதரிசிகளுக்கும் அவனைத் தெரியும். பரிசயத்தை நேரடியாகக் காண்பிக்கவும் செய்வார்கள்.

ஒரு நாள் ராமசந்திர நாயர் பார்க் விலூவுக்கு வந்தார். வையாபுரிப் பிள்ளைக்குப் பதிலாக ராமசந்திர நாயர் சூப்பிரண்டாக இருக்கிறார். கேசவபிள்ளை அவரைப் பார்த்தபோது ஒரு மேலதிகாரிக்குக் கொடுக்கிற மதிப்புடன் வரவேற்றான். அப்போது ராமசந்திர நாயர் கூறினார்:

''என்னுப்பா கேலி செய்யிறியா? ஒண்ணுமில்லாட்டிப் போனுக்கூட நாம்ப ஒண்ணு உட்கார்ந்து படிச்சவங்கதானே?''

ஓஹோ . . . அந்த அளவுக்கு வந்துவிட்டானு? ராமசந்திர நாயர் சும்மா வரவில்லை. அவர் மாமாவுடைய ஒரு காரியத்தைச் சாதிக்கக் கேசவபிள்ளையின் உதவி தேவை. அது மனத்திருப்தி அளிக்கிற ஒரு நிகழ்ச்சியாக இருந்தது.

கேசவபிள்ளைக்கு வீட்டு வேலைகள் மட்டுமின்றிச் சர்க்கார் வேலைகளும் இருந்தன. பார்க் விழுவுக்கு வருகிற முக்கியமான தஸ்தாவேஜுகள் எல்லாவற்றையுமே பிரதமக் காரியதரிசிக்குச் சமர்ப்பிக்க வேண்டும் கழுதையைப் போன்று பாரத்தைச் சுமந்தால் மட்டும் போதாது. எல்லாவற்றையும் படித்துப் புரிந்துகொள்ளவும் வேண்டும். அவர் ஏதாவது சந்தேகம் கேட்டால், தருந்த பதில் அளிக்கவேண்டும்.

ஒரு மாத காலம்வரை எஜமானனும், எஜமானியம்மாவும் கேசவ பிள்ளையை உற்றுக் கவனித்து வந்தனர். கேசவபிள்ளை எப்படிப்பட்டவன் என்பதை அறியவேண்டாமா? அவன் அதை நன்கு புரிந்துகொண்டான். அதனுலே மிகவும் சாமர்த்தியமாகவும், எச்சரிக்கையுடனும் நடந்து கொண்டான்.

இந்த ஒரு மாத காலத்துக்குள்ளே அந்த நடப்பாலை பலவற்றை அறிந்துகொண்டான். லலலிங் கம்பெனியாரின் பிரதிநிதி அங்கே நான்கு தடவை வந்து போனுன். அப்புறம் ஒரு செல்வந்தர் ஒரு மலைப் பிரதேசத்தைப் பதிவு செய்து வாங்கும் காரியமாக அங்கே வந்தார். அவர்கள் வந்து பேசிக் கிளம்பிச் சென்ற பிறகு எஜமானியம்மா கேசவ பிள்ளைக்குக் கட்டளையிடுவாள்: இன்று எஜமானர் வரும்போது, அவர்களுடைய லைபல்களை, அவர் மேஜைமீது கொண்டு சென்று வைக்க வேண்டும்! அப்புறம் சொல்லுவாள்: ''பயப்படாதே. அவற்றை அப்படி அவர் மேஜைமீது கொண்டு போய் வச்சா அவர் கோவிச்சுடு வார்னு நெனைச்சுக்காதே!''

அவன் அவ்வாறு செய்து வருகிறுன். மலைப் பிரதேசத்தைப் பதிவு செய்து கொடுப்பது சம்பந்தமான லைபலை அவர் முன் வைத்தபோது, எஜமானர் அவனை ஒருமுறை நோக்கி ஏதற்கோ முனகினுர். அவ்வளவு தான். அதற்குள்ளே எஜமானியம்மா அங்கே வந்துவிட்டாள். பிரச்னை புரிந்துவிட்டது; தீர்ந்துவிட்டது.

எஜமானர் இப்போது சஞ்சரிக்கிற கார் ஒரு பஸ் சொந்தக்கார ருடைய அன்பளிப்புத்தான். சம்ஸ்தானத்திலுள்ள ஒரு முக்கிய சாலையில் அந்தப் பஸ் சொந்தக்காரருடைய பஸ்களன்றி வேறு எந்தப் பஸ்ஸும் ஓடக்கூடாதென்று சர்க்கார் பிரகடனம் செய்திருக்கிறது!

வேறு சிலவற்றையும் அவன் பார்த்தான். திவான்ஜியுடைய காரியதரிசி அவர்கள் பகல் இரண்டு மணிக்குப் பிறகுப் பல நாட்களில் அங்கே வந்து போவதை அவன் பார்த்திருக்கிறுன். எஜமானர் அடிக்கடி எங்கேயோ பிரயாணம் செய்துகொண் டிருப்பது

மட்டும் அவனுக்குப் புரியவில்லை. ஆனால், இத்தகைய நிகழ்ச்சிகளைக் கண்டதாக அவன் வெளியே காட்டிக்கொள்ளவில்லை.

ஒரு மாதத்துக்கு மேலாகிவிட்டது. இன்னும் சேகரபிள்ளையையோ, தங்கம்மாவையோ ஒருவரையும் அங்கே காணவில்லை. சேகரபிள்ளை, பிரதமக் காரியதரிசியின் சொந்த அண்ணன் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர் இங்கே வருவதில்லை. அண்ணன் தம்பிமார்களுக்கிடையில் இருந்து வரவேண்டிய உறவில் ஏதேனும் தகராறு ஏற்பட்டிருக்கிறதா?

ஒரு நாள் மத்தியான்ன வேளையில் சமையற்காரன் வந்து, எஜமானியம்மா அழைப்பதாகச் சேவபிள்ளையிடம் சொன்னான். எஜமானியம்மா ஆடுகின்ற நாற்காலியிலே அமர்ந்து கேட்டாள்: ''உங்க திருமண விஷயம் என்னாச்சு?''

சேவபிள்ளை உடனடியாகப் பதில் அளிக்கவில்லை. என்ன சொல்வ தென்று அவனுக்குப் புரியவில்லை. ஆனால், பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

''ஒன்றுமாகவில்லை.''

''எல்லாம் முடிவானதுக்கப்புறந்தானே, இங்கு வந்தே?''

''இல்லை.''

''ஓஹோ . . . திருமண நிச்சயதார்த்தத்துக்கு முந்தியே தம்பிக்கிட்டே பிணங்கி சென்சாரா?''

அவளுக்குச் சேகரபிள்ளையிடம் ஏதோ ஒருவிதமான கசப்புணர்ச்சி இருப்பதாக அந்தக் கேள்வியிலிருந்து தெரிந்தது. அந்தக் குரலும், அவளுடைய முகபாவமும் அதையே தெளிவுபடுத்தின.

சேவபிள்ளை பேசவில்லை.

எஜமானியம்மா தொடர்ந்து கேட்டாள்: ''நீங்க திருமணம் செய்யற தாக அவங்கிட்டே ஒப்புக்கொண்டிருக்கிறீங்களா?''

அந்தக் கேள்விக்கு அவனால் பதில் சொல்ல முடியும். ஆனால், அதன் பிரதிபலிப்பு என்னவாக இருக்கும்? தனது உண்மை நிலையைப் புரிந்து கொள்ள இவள் முயன்று பார்க்கிறாளா? எப்படியிருப்பினும், தங்கம்மா இவளுடைய கணவரின் அண்ணன் மகள். இரத்த பாசம் இருக்கத்தானே செய்யும்? தான் சதிகாரனு என்பதை அறிய குரலையும், முகபாவத்தை யும் மாற்றியவாறு கேள்விகளைக் கேட்கலாம் அல்லவா?

''அதைப்பற்றியொன்றும் பேசவில்லை'' என்றான் அவன்.

''உங்கிட்டே அவளோட அப்பா எதைப்பற்றியும் கேக்கலையா? நீங்க ஒண்ணுமே சொல்லவும் இல்லையா?''

சேவபிள்ளை அழுத்தமாகச் சொன்னான்: ''இல்லை!''

எஜமானியம்மா சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். அவள் ஏதேதோ சொல்ல விரும்புவதுபோல் தோன்றியது.

அவள் முகத்தைக் கனித்தவாறு, ''கேடு கெட்ட வர்க்கங்கள்! சேவ பிள்ளை, அவங்க ரொம்பக் கேடு கெட்டவங்க. மல்லாக்கப் படுத்து நானே மேலே நுப்பிக்கிறமாதிரி இருக்கு, நான் சொல்றதுன்னு எனக்குத்

தெரியும். மானம் மரியாதையில்லாத வர்க்கங்கள். உங்களைப்பற்றி எஜமானருக்குப் பெரிய மதிப்புத்தான். நீங்க அந்த வர்க்கத்துக்குள்ளே போய் அகப்பட்டுக்கிட்டா நாசமாப் போயிடுவீங்க'' என்றாள்.

கேசவபிள்ளையின் நாக்கிலிருந்து, ''உத்தரவு'' என்ற வார்த்தை உதிர்ந்து விழுந்தது. எஜமானியம்மா தொடர்ந்து, ''அந்தத் திருமணத்தைப்பற்றிச் சொல்லித்தான் உங்களை இங்கே வேலைக்கு வச்சாங்க. ஆனா நீங்க ரொம்ப நல்லவன்னு தெரிஞ்சதனாலேதான் உண்மையைச் சொல்லிட்டேன். எல்லாம் நல்லாச் சிந்திச்சுப் பாருங்க!'' என்றாள்.

அவன் மீண்டும் ''உத்தரவு!'' என்று சொல்லிவிட்டான். அவள் அவனுக்கு விடையளித்தாள்.

கேசவபிள்ளையின் சிந்தனை, சுழலில் அகப்பட்டுக்கொண்டது. தான் கேட்டதும் புரிந்துகொண்டதும் உண்மைதானா என்ற சந்தேகம் அவனுக்கு ஏற்பட்டுவிட்டது.

சிறிது நேரத்துக்குப் பின்பே அவனுடைய சிந்தனை, சுழலிலிருந்து விடுபட்டது. எஜமானியம்மா என்ன சொல்லுகிறாள்? தங்கம்மாவை மணம் புரியக்கூடாதென்றல்லவா? அப்படிச் செய்தால் நாசமாகிப் போய்விடுவேன் என்று சொல்கிறாள். அதன் பொருள் என்ன? இங்கிருந்து துரத்தப்படுவேன் என்பதுதானே?

அவனுக்கு ஒரு விஷயம் உறுதியாகிவிட்டது. ஒருவேளை, தங்கம்மாவை மணம் செய்துகொள்ளாமல் இருந்தால், தன்னை இங்கிருந்து துரத்திவிடப் போவதில்லை என்பதுதான் அது.

இத்தகைய ஒரு நிலைமை ஏற்பட்டுவிடுமென்று கேசவபிள்ளை நினைக்கவேயில்லை. இதற்கு மாறாக அந்தக் கல்யாணம் நடைபெறவில்லை என்றால் தன் வேலை போய்விடுமென்று அல்லவா அவன் நடுங்கிக் கொண்டிருந்தான்! இப்போது அவளை மணம் புரிந்துகொண்டால் வேலை போய்விடுமோ என்று பயப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அப்பப்பா, என்ன ஆறுதல்! அப்போதுகூடக் கிட்டு மாமாவின் அந்த வார்த்தைகள் நூதனமானதோர் அர்த்தத்தில் அவன் காதில் முழங்கின: ''அவள் அதிருஷ்டசாலிதாம்ப்பா!''

அன்று அவன் ஊருக்கு ஒரு கடிதம் எழுதினான். தன்னுடைய உத்தியோகம் இன்னதென்றும், இன்ன இடத்தில்தான் என்றும் அதில் விவரமாகக் குறிப்பிட்டிருந்தான். ஆனால் அந்த இன்ன இடத்தில் எவ்வாறு புகுந்துகொள்ள முடிந்தது என்பதைப்பற்றி மட்டும் எழுதவில்லை. அது வெளியே சொல்லக்கூடாததல்லவா? அந்தக் கடிதத்தில் அவன் கார்த்தியாயினியைப்பற்றிக் குறிப்பாக விசாரித்திருந்தான். அவளுடைய நலன்களை விசாரித்துக் கடிதம் எழுதுவது இதுதான் முதல் தடவை. அவள் அதிருஷ்டக்காரியல்லவா? கார்த்தியாயினியின் உருவத்தை மனத்திலே உருவாக்கிப் பார்க்க அவன் பெரிதும் முயன்று பார்த்தான். ஆனால் தெளிவாகத் தெரியவில்லை. அவன் அவளைச் சரியாகப் பார்த்ததே இல்லையல்லவா?

அன்றைய தினம் அவன் அசாதாரணமான ஒரு சுறுசுறுப்பை உணர்ந்தான். மனத்திலே மகிழ்ச்சி பொங்கியது. என்றுமில்லாத மகிழ்ச்சி! அன்று மாலை கோவிந்தன் நாயருடைய ஒரு கடிதத்தை எடுத்துக் கொண்டு மாதேவன்பிள்ளை பார்க் வியூவுக்கு வந்தார். கடிதம் கேசவ பிள்ளைக்குத்தான். அவன் அதைப் பிரித்துப் படித்தான். மறுநாள் மாலை ஐந்து மணிக்குப் பார்க்கிலே சந்திக்கவேண்டுமென்றும், அவசரத் தேவையுள்ள சில விஷயங்கள்பற்றிப் பேசவேண்டுமென்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது. தான் வேலை செய்திருந்த பகுதியிலுள்ள விசேஷங்களைப்பற்றிக் கேசவபிள்ளை கேட்டான். புதிய சூப்பிரண்டாக ராமசந்திர நாயருடைய ஆட்சி மிகக் கடுமையாக இருக்கிறதென்று மாதேவன்பிள்ளை கூறினார். முன்பெல்லாம் ஒரு மணி நேரத்தில் முப்பது தடவை தங்கம்மாவைத் தம்முடைய அறைக்கு வரவழைத்துக் குற்றம் குறைகள் சொல்லித் திட்டிக்கொண்டிருந்தார். இப்போது அது சற்றுக் குறைந்திருக்கிறது. எல்லாருக்கும் இதுபோன்ற தொந்தரவுகளைக் கொடுத்து வருகிறார்.

கேசவபிள்ளை இரண்டாவது தடவையாக அந்தக் கடிதத்தை வாசித்தான். ஏதோ மிகவும் முக்கியமான ஒரு விஷயத்தைப்பற்றிப் பேச வேண்டுமாம். என்ன விஷயம் அது? எவ்வளவோ யோசித்துப் பார்த்த போதிலும் ஒன்றுமே அவனுக்கு விளங்கவில்லை.

* * *

மறுநாள் மாலை நான்கு மணிக்கே அலுவல்களை முடித்துக்கொண்டான் கேசவபிள்ளை. அநுமதி பெற்று வெளியே சென்றான். கோவிந்தன் நாயர் ஐந்தரை மணிக்குத்தான் பார்க்குக்கு வந்து சேர்ந்தார். அவர் சொல்ல இருக்கிற முக்கிய விஷயத்தைக் கேட்க அவன் ஆவலாக இருந்தான். ஆனால் அவரோ மிகச் சாதாரண முறையிலே பேச்சைத் துவக்கினார். அசாதாரணமாகச் சொல்ல ஏதும் இல்லாதவர்போல்.

''நீங்க இவ்வளவு சீக்கிரம் எங்களை எல்லாம் மறந்துட்டீங்களே, நண்பரே? ரொம்பக் கெட்டிக்காரர்தான்.''

கேசவபிள்ளை தனது அலுவல்களைப்பற்றி விளக்கமாக எடுத்துரைத்தான். ஞாயிற்றுக்கிழமையிலே ஓய்வுகூடக் கிடைப்பதில்லை.

கோவிந்தன் நாயர் நலன்களை விசாரித்தறிவதிலேதான் முனைந்து நிற்கிறார். சொல்லவேண்டிய முக்கிய விஷயம் என்னவென்று கேசவ பிள்ளை கேட்டான்.

''ஓ . . . அப்படியொன்றுமில்லை . . . சொல்றேன்'' என்றார் நாயர். முக்கியமாக ஏதோ சொல்வதற்கு உண்டு என்பது நன்றாகத் தெரிகிறது. அதை வெளிப்படுத்த அவர் தினறுகிறார் என்றும் தெரிகிறது.

கோவிந்தன் நாயர் மிகச் சாதாரண முறையிலே கேட்டார்: ''திருமண விஷயமா முடிவு செஞ்சுட்டீங்களா?''

துணிச்சலுடன் பதில் அளித்தான் கேசவபிள்ளை: ''இல்லை. ஏன் கேட்டீங்க?''

''இல்லே . . . ரொம்ப நாளாச்சே . . . இன்னும் ஒரு முடிவுக்கு வரலியான்னுதான் கேட்டேன்.''

அவர் சொன்னதுபோல் சும்மா கேட்பதற்காகக் கேட்ட ஒரு கேள்வி அல்ல அது. சொல்லத் தயங்குகிறார். தொடர்ந்து அவர் என்ன சொல்லப் போகிறார் என்று அவன் எதிர்பார்த்தான். கோவிந்தன் நாயர் சொன்னார்: ''உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். இல்லாட்டாலும் பரவாயில்லை. எங்கள் கடமையை நிறைவேற்ற வேண்டியிருக்கு. நீங்க அவளை மணந்துகொள்ள வேண்டாம் என்பதே எங்கள் கருத்து. இந்த விஷயத்திலே எங்கள் விருப்பு வெறுப்புகளுக்கு இடமில்லேங்கிறது எங்களுக்குத் தெரியும். நீங்கள் எவ்வளவுதான் பதவி உயர்வு பெற்றிருந்தாலும் இந்தக் கல்யாணம் நல்லதல்ல. அதைவிட நல்லது இப்போது இருந்து வருவதுபோல் இருந்துவிடுவதுதான்.''

அது ஒரு பிரசங்கம்போல் இருந்தது. உண்மை உள்ளத்துடன் பேசுவதாக இருந்தது. உணர்ச்சி எதையும் வெளிக்காட்டாமல் அவன் அதைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

அந்தப் பிரசங்கப் பிரவாகத்தின் முதல் முற்றுப்புள்ளியின்போது கேசவபிள்ளை கேட்டான்: ''விஷயம் என்ன? அதைச் சொல்லுங்க!''

''இந்தக் கல்யாணம் நடக்கக் கூடாதுன்னுதான் நாங்க சொல்றோம்.''

''அவள் நிமித்தமா இவ்வளவு வசதிகள் கிடைச்சிருக்கு. அப்புறம் இது கூடாதுன்னு சொன்னே . . . ?''

கேசவபிள்ளை சொல்லி முடிக்குமுன் கோவிந்தன் நாயர் இடைமறித்துக் கேட்டார்: ''நீங்க சமீப நாட்களாக அவளைச் சந்திப்பதுண்டா? அங்கே போவதுண்டா?''

''இல்லை.''

''அவள் பழைய தங்கம்மா அல்ல. நாம் பார்த்த அந்தப் பெண் அல்ல. அவள் மிகவும் பொல்லாதவள்—பயங்கரி!''

பொறுமையிழந்தவன்போல் நடித்த கேசவபிள்ளை கேட்டான்: ''அவளுக்கு என்ன நேர்ந்தது? என்ன மாறுதல் ஏற்பட்டிருக்கு?''

பெரிய இரகசியம் ஒன்றை வெளியிடுவதுபோல் அடக்கமான குரலில் அழுத்தமாகச் சொன்னார் கோவிந்தன் நாயர்: ''அவள் இப்போது சூப்பிரண்டு ராமசந்திர நாயரோட காதலி!''

'கேசவபிள்ளை பிரக்ஞையிழந்து கீழே விழுவான் அல்லது கோவெனக் கதறியழுவான் அல்லது கேசத்தைப் பிய்த்துக்கொள்வான்' என்றெல்லாம் கோவிந்தன் நாயர் எண்ணியிருந்தார். அந்தச் செய்தி அவனுடைய தலைமீது விழுகிற ஒரு பேரிடியாக இருக்குமென்றே அந்த நண்பர் கருதினார். ஆனால் அமைதியாக, உணர்ச்சியற்றவனைக, முகத்திலே எந்த விதமான பாவமுமின்றி நின்றான் கேசவபிள்ளை. தன் முன்னால் நிற்பது

கேசவபிள்ளைதானே? உண்மையில் கோவிந்தன் நாயர்தான் இப்போது திகைத்து நின்றார். கேசவபிள்ளை அல்ல.

கோவிந்தன் நாயர் கேட்டார்: ''இந்த விஷயம் உங்களுக்கு முன்பே தெரியுமா?''

''இல்லை.''

''அப்புறம்?''

''அப்புறம் என்ன?''

''நீங்க இப்படி உணர்ச்சியின்றி நிக்கறீங்களே?''

''நான் என்ன செய்யணும், அது அப்படியானுக்கூட?''

கோவிந்தன் நாயருக்குப் பதில் இல்லை. கேசவபிள்ளை சொல்வது சரிதானே? அவர் கேட்டார்: ''நீங்க அவளை நேசிக்கலையா?''

அதற்குப் பதிலாக ஒரு கேள்விதான் பிறந்தது: ''நேசிச்சேன்னு?''

மீண்டும் அவருக்கு வாயடைத்துப் போயிற்று. சிறிது நேரத்துக்குப் பின் கேட்டார்: ''நீங்க அவளைக் கல்யாணம் செய்வீங்களா?''

கேசவபிள்ளை கூறினான்: ''கல்யாணக் காரியம் இருக்கட்டும். அதைப் பற்றிப் பிறகு யோசிப்போம். உங்களுக்கு இந்த விஷயம் எப்படித் தெரிஞ்சுது?''

அந்தக் கதையை விவரமாகக் கூறினார் கோவிந்தன் நாயர்: ''ராம சந்திர நாயர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அந்த நாள் முதல் தங்கம்மாவைப்பற்றிய குற்றங்களையும் குறைகளையும் மட்டும் கூறி அவளைத் திட்டி வந்தார். ஒரு நாள் நூறு தடவை அவளைத் தன் அறைக்குள்ளே அழைத்துப் பேசித் துன்புறுத்தி வந்தார். முதலிலெல்லாம் அவள் அழுதபடி திரும்பி வந்துகொண்டிருந்தாள். எப்படித் திட்டினார் தெரியுமா? இப்போ அதெல்லாம் மாறிப்போச்சு. சமீப நாட்களாக அவங்க ஆபீஸ் நேரத்துக்கு முன்பே ஆபீசுக்கு வந்துகொண்டிருக்கிறாங்க. அவள் வீட்டுக்கு முன்னாலுள்ள பாதை வழியாகச் சுப்பிரண்டு போய் வருவதையும் நாலஞ்சு தடவை பார்த்திருக்கிறோம்.''

இதுதான் அந்தக் கதை.

தான் ஏறி இறங்கிக்கொண்டிருந்த அந்தப் படிக் கட்டட வாசல் வழியாக இப்போது ராமசந்திர நாயர் ஏறியிறங்கி வருகிறார் என்றே கேசவபிள்ளை எண்ணினான். அதைத் தொடர்ந்து தனக்கு ஏற்பட்ட அநுபவங்களைப்பற்றியும் அவன் நினைத்துப் பார்த்தான். ஒருவேளை, தன்னுடைய ஆவேச உணர்ச்சியைத் தணிக்கத் தகுதி படைத்த ஒருவனை அவள் தேடிக் கண்டுபிடித்திருக்கலாம்.

இவ்வளவுக்குப் பிறகும் உணர்ச்சியில்லாதவன்போல் நின்று கொண்டிருந்த கேசவபிள்ளை, கோவிந்தன் நாயருக்குச் சிந்தனைக்குரிய ஒரு பிரச்னையாகவே தோன்றினான். அவருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அதை அவர் வாய்விட்டுக் கூறினார்:

''நீங்க ஒரு பொல்லாத மனிதர்தான்ய்யா!''

''ஊம் . . . ?''

''அவளிடம் நீங்க காட்டிய அன்பு எல்லாம் வெறும் நடிப்புத்தானு?''

கேசவபிள்ளை சிறிது கோபத்துடன் கேட்டான்: ''அதைப்பற்றி யெல்லாம் உங்களுக்கு ஏன் தெரியணும்?''

''நீங்க அவளை ஏமாற்றிக்கிட்டிருந்தீங்களா?''

கேசவபிள்ளைக்கு மேலும் கோபம் வந்தது. அவன் சொன்னான்: ''அவசியம் இல்லாத பிரச்னைகளிலே நீங்க தலையிடறீங்க. அதெல்லாம் என்னோட சொந்த விஷயம்.''

கோவிந்தன் நாயர் விட்டுக் கொடுக்கவில்லை: ''அதை ஒப்புக் கொள்றேன். பரவாயில்லை. உண்மையான ஓர் உள்ளம் இருக்கிற தனாலேதான் வந்து உங்ககிட்டே கேட்டுட்டேன். இங்கே பேசியதை எல்லாம் என்னை இங்கே அனுப்பி வச்சவங்களிடம் போய்ச் சொல்லிட றேன். இனிமே இந்தமாதிரி முட்டாள்தனத்துக்கு இரையாகாமே நாங்க பார்த்துக்கறேம்.''

அவளிடம் நடந்துகொண்டது முழுதும் நடிப்புத்தான் என்ற கருத் துடன்தான் நாயர் திரும்பிச் செல்கிறாரா? அவளை, தான் வஞ்சித்து விட்டதாக ஓர் எண்ணமும் இவருக்கு ஏற்பட்டிருக்கக்கூடும். அவ்வாறு ஏற்படக்கூடாது. நாளைய தினம் அது ஓர் ஊர் வதந்தியாகப் பரவி விடுமே. கண்டிப்பாக அவ்வாறு நிகழக்கூடாது. அவள்தான் குற்றவாளி யாகவேண்டும். அவன் தந்திரத்தை மாற்றிக்கொண்டான்:

''அப்படியெல்லாம் போயிச் சொல்லிடக்கூடாதன்னு!''

''அப்புறம் என்ன சொல்லணும்? என் நண்பர்கள்தாம் என்னைச் சொல்லி யனுப்பி வச்சாங்க.''

''வேறு ஏதாச்சும் போயிச் சொல்லிடுங்க!''

''எனக்கெல்லாம் புரிஞ்சுட்டது. நான் புரிஞ்சுகொண்டதை என் நண்பனுங்ககிட்டே சொல்லிடுவேன். அதல்லாமே வேறெண்ணும் என்னால் சொல்லமுடியாது.''

கேசவபிள்ளை ஒரு சிரிப்புடன் கூறினான்: ''அண்ணனுக்கு வண்டன் மேட்டுக்கு டிரான்ஸ்பர் போக நேரம் வந்துட்டதுபோலிருக்கே.''

கோவிந்தன் நாயர் திகைத்து நின்றுவிட்டார். பயத்தினால் அல்ல. கேசவபிள்ளையிடம் காணப்பட்ட மாறுதலினால்!

பின் அவர் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை; சென்றுவிட்டார். அவர் அந்த இலாக்காவிலுள்ள சிப்பந்திகளிடம் என்னென்ன சொல்லப் போகிறாரோ? அவனுக்கும் அதெல்லாம் தெரிந்துவிடும். சரி; சிறிது சீக்கிரமாகவே அறிந்துகொள்ளப்போகிறாள்; அவ்வளவுதான்! அவள் அறியட்டுமே! கேசவபிள்ளை ஆறுதல் அடைந்தான்.

அத்தியாயம் 11

அண்ணனும் தம்பியும்

கேசவபிள்ளையின் பதவி உறுதிப்பட்டுக்கொண்டே இருந்தது. எஜமானன், எஜமானியம்மா ஆகியோரின் மதிப்பை அவன் பெற்று விட்டான். தங்கம்மாவை மணம் செய்துகொள்ளாவிட்டாலும் அவனுக்கு எந்தவிதமான ஆபத்தும் நேர்ந்துவிடப் போவதில்லை. 'எல்லா முன்னேற்றங்களுக்கும் காரணமாக இருந்த தங்கம்மாவை ஏன் விட்டுவிட்டாய்?' என்று யாராவது கேட்டால் அதற்கும் அவனிடம் பதில் இருக்கிறது. அவள் நடத்தை கெட்டவள். தங்கம்மா ஏன் அவ்வாறு நடந்து கொள்கிறாள் என்பது கேசவபிள்ளைக்கு நன்றாகத் தெரிந்த விஷயந்தானே? மாறாக நிகழ்ந்திருந்தால்தான் ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். அவளுக்கு அன்றாடம் ஓர் ஆண்பிள்ளை தேவையாக இருக்கலாம்.

அலுவலக வேலைகளில் கேசவபிள்ளை மிகவும் நிபுணனாகி விட்டான். எஜமானனுடைய கொள்கை என்னவென்று அவனுக்கு நன்றாகப் புரிந்து விட்டது. அதை மனத்தில் இருத்தியவாறே உத்தரவுகளுக்காகப் ஃபைல்களை மேஜைமீது வைப்பான். உத்தரவுகள் எவ்வாறு இருக்க வேண்டுமென்று சூசகமாகத் தெரிவிக்கும் முறையிலே ஃபைல்களைப் பற்றிய விளக்க உரைகளை நிகழ்த்தும் திறமையையும் அவன் பெற்று விட்டான். பிரதமக் காரியதரிசிக்கு அலுவலக வேலைகள் விஷயமாக மிகுந்த ஆறுதல் ஏற்பட்டது. தலைமைக் காரியாலயத்தில் தலையான காரியங்கள் எதையும் அவரே பார்த்துச் செய்யவேண்டுமென்ற நிலைமை இப்போது இல்லை என்றே கூறவேண்டும்.

கேசவபிள்ளைக்குச் சுறுசுறுப்பு உண்டு; புத்திக்குத் தெளிவுண்டு. இவ்வளவெல்லாம் இருந்தபோதிலும் தம் நிலை உறுதியானதென்ற நம்பிக்கை அவனுக்கு ஏற்படவில்லை. இன்னும் சிறிதுகூட உறுதிப்பட வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. சமீபகாலமாகத் தனது பதவிகூடப் பாதுகாப்பானது தானா என்ற சந்தேகம் பிரதமக் காரியதரிசிக்கே உள்ளது. அவ்வாறிருக்கக் கேசவபிள்ளையின் நிலை பாதுகாப்பானது என்று எப்படிச் சொல்ல முடியும்?

பிரதமக் காரியதரிசி எப்போதும் பயந்து நடுங்கியவாறுதான் இருந்துவருகிறார். அவரைப் பயந்து நடுங்கவைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். எந்த நிமிஷத்திலும் அந்த நாற்காலியிலிருந்து கீழே விழுந்து விடக்கூடிய அபாய நிலைமையிலேதான் அவர் இருந்து வருகிறார். பக்திவிலாசத்திலிருந்து நாள் தவறாமல் அவருக்கு எச்சரிக்கை கிடைக்

கிறது. ரிப்போர்ட் செய்ய அங்கே போகிறவர் வாட்டமடைந்தே திரும்பி வருகிறார். என்றும் ஒரே விஷயத்தைப் பற்றியே கூறுகிறார்.

''இந்தப் பிரமோஷன் வேண்டியிருந்ததில்லே.''

கிருஷ்ணன் நாயர் அவர்களுக்கு வாழ்க்கையிலேயே அலுப்புத் தட்டி விட்டது.

தினசரி இப்படிச் சொல்வதைக் கேட்டுப் பொறுமையிழந்த எஜமானி யம்மா ஒரு நாள் ஒருவித ஏளனக் குரலில் கணவரிடம் கேட்டாள்:

''அப்புறம் எதுக்காக இத்தனே பெரிய விலே கொடுத்து இந்தப் பதவியை வாங்கினீங்க?''

தலேமை காரியதரிசி மனேவியை ஒருமுறை கடுமையாகப் பார்த்தார். ஆத்திரமேலிட, ''நீ என்னேத் தொந்தரவு பண்ணிப் பண்ணி, இதுவரை சம்பாதிச்ச சொத்துக்களே எல்லாம் கொடுக்க வச்சே. . . இப்போ இப் படியா என்னேக் கேக்கறே? நீதானே கொடுத்தே? சீஃப் செக்ரடரி யோட மனேவியா அதிகாரம் பண்ணனுங்கிற ஆசை உனக்குத்தானே இருந்தது?'' என்று கூறினர்.

எஜமானியம்மா விட்டுக் கொடுக்கவில்லே:

''அதனுல்தான் நான் கேக்கறேன், இவ்வளவு தூரம் பயப்படறதுக்கு என்ன இருக்குதுன்னு? பணத்தை அள்ளிக்கொடுத்தோம், பாருங்க! துணிச்சல் வேணும். திறமை இல்லாமே இருக்கிறதினுலேதான் பயந்து சாவறீங்க.''

காரியதரிசியின் மனம் கலக்கமுற்றது. அடக்க முடியாத ஆத்திரமும் கவலேயும் அவரை ஆட்கொண்டன. அந்தப் பயங்கர மனிதன், நிமிஷந் தோறும் தன்னேத் திறமையில்லாதவன் என்று சொல்லிப் பயந்து நடுங்க வைத்துக்கொண்டிருக்கிறன். இந்தப் பக்கம் சொந்த மனேவிகூடத் திறமையில்லாதவன் என்று சொல்லி அவமதித்துக்கொண் டிருக்கிறள். என்ன சொல்வது? அவர் சிறிது நேரம் பேசாமல் இருந்தார். எஜமானி யம்மா தொடர்ந்து கணவருடைய திறமையின்மையைக் குறித்துக் கடுமையாக விமர்சனம் செய்தாள்.

கிருஷ்ணன் நாயர் பொறுமை இழந்து கூறினர்.

''பார்! நீ இப்படிச் சொல்லலாம். தினசரி என்ன நடக்கிறதென்று உனக்கு என்ன தெரியும்? இன்னேக்கு அந்த ஹைட்ரோ எலக்டிரிக்கல்ஸ் சம்பந்தமான ஒரு ஃபைலின் பிரச்னே கிளம்பியது. சட்டப்படி அதுக்கு அரண்மனே உத்தரவு இருந்திருக்கணும். அரண்மனேக்கு அனுப்பாமல் திவான்ஜியே அநுமதி அளித்து, அதை அமலாக்கணும்னு சொல்லி இங்கே அனுப்பி வைச்சார். அரண்மனே உத்தரவு இருக்கவேண்டிய விஷயம் அதுன்னு ஒரு முறை சொல்லிட்டேன்; அவ்வளவுதான். எனக்கு டிஸ்மிஸ்ன்னு உடனே சொல்லிட்டாங்க. நான் அதை உடனடியாக அமலாக்கணும்னு அப்புறந்தான் என்கிட்டே சொன்னுங்க.''

ஒரு விநாடிக்குப் பிறகு அவர் தொடர்ந்து கூறினர்: ''இப்போது நான் வாய்மொழி மூலமா டிஸ்மிஸிலிருந்து வர்றேன். நாளேக்கு எழுத்து

மூலமா டிஸ்மிஸ் உத்தரவு வந்துட்டா? வராதுன்னு நினைக்கவேணும்.''
பிறகு அவர் கேட்டார்: ''நான் என்ன துணிச்சலைக் காண்பிக்கணும்? நீயே சொல்லு! திவான்ஜி அவர்கள் உத்தரவு போட்டா அவரை எதிர்த்துக் கேக்க யார் இருக்காங்க?''

அதை உணர்ந்து கொள்ளாதவள்போல், ''அது முதலிலிருந்தே துணிச்சலைக் காண்பிக்காமே இருந்ததனால்தான், நீங்க இவ்வளவுதான்னு அவங்களுக்குப் புரிஞ்சுட்டது. இனி என்ன வேணும்னாலும் செஞ்சுடலாம்னு நினைக்கிறுங்க'' என்றாள்.

''நீ இப்படிச் சொல்லலாம். மகாராஜா திருமேனியைக்கூட மதிக்காத பயங்கர மனிதன் திவான்ஜி. பணத்தைக் கொடுத்தோங்கிற துணிச்சலைக் காட்டியிருந்தா, இதுக்குள்ளே வீட்டுக்கே அனுப்பியிருக்கலாம்.''

கிருஷ்ணன் நாயர் சொன்னது எஜமானியம்மாவைத் திருப்திப்படுத்தவில்லை. ஆயினும் தினசரி நடந்துவருகிற இந்தக் கெடுபிடி அவ்வளவு நல்லதல்ல என்று அவளுக்குத் தோன்றியது. திவான்ஜி கணவனை எதற்காக இவ்வாறு பயமுறுத்தி நடுங்கச் செய்கிறார்? பணத்துக்காக என்றால் அதைக் கொடுத்து வருகிறோமே!

* * *

இரண்டு நாட்கள் சென்றன. ஒரு நாள் பகல் இரண்டு மணிக்கு ஒரு கார் திடீரென அந்த வீட்டை நோக்கி வந்து நின்றது. காரிலிருந்து திவான்ஜியுடைய காரியதரிசியே இறங்கினார். கேசவபிள்ளை சிரம் தாழ்த்தி வணங்கிவிட்டு விலகி நின்றான். அவர் ''என்ன கேசவபிள்ளாய்!'' என்று நலம் விசாரிப்பவர்போல் கேட்டுவிட்டு உள்ளே சென்றார்.

கேசவபிள்ளை ஃபைல்களைப் புரட்டிப் பார்த்தவாறு அமர்ந்திருந்தான். யாரோ ஒருவர் முன்னால் வந்து நிற்பதாக அவனுக்குத் தோன்றியது. சிரம் உயர்த்திப் பார்த்தான். சேகரபிள்ளை! கேசவபிள்ளை பார்க் வியூவுக்கு வந்தபின் சேகரபிள்ளையை முதல் முதலாக அங்கே பார்க்கிறான். முற்றும் எதிர்பாராதது. கேசவபிள்ளை சிறிது திகைப்படைந்தான். திருமண விஷயமாகப் பேச வந்திருக்கிறாரோ? அப்படியானால் அந்த விஷயத்தை எப்படிச் சமாளிப்பது? அவன் இன்னமும் யோசித்து ஒரு முடிவுக்கு வராத விஷயம் அது. அதைப்பற்றி எவ்வாறு பேசவேண்டுமென்று முன்பே யோசித்து முடிவெடுத்திருந்திருக்க வேண்டும்.

அசட்டுத்தனமாகச் சிரித்தவாறு கேசவபிள்ளை எழுந்து நின்றான்.

சேகரபிள்ளை கேட்டார்: ''என்ன பிள்ளை, க்ஷேமம்தானே?''

''ஆமாங்க. உட்காருங்க!''

சேகரபிள்ளை அமர்ந்தார். தன் மகனைப் பாசமுடன் பார்ப்பதுபோல் கேசவபிள்ளையை அவர் ஒரு முறை தலையோடு கால்வரையில் பார்த்து,

''கிருஷ்ணனுக்கு உன்னைப்பற்றி நல்ல திருப்திதான். இரண்டு மூன்று தடவை நான் அவனை இங்கே வந்து சந்திச்சேன். நீ இல்லை அப்போ'' என்றார்.

கேசவபிள்ளை அப்போதுகூட அசடு வழியச் சிரித்தவாறு நின்றுகொண்டிருந்தான். எந்த நிமிஷத்தில் அந்தக் கல்யாணக் காரியத்தைப் பற்றிச் சொல்லப் போகிறாரோ என்று உள்ளூற நடுங்கிக்கொண்டிருந்தான். சேகரபிள்ளை கேட்டார்: ''பகவதிக் குட்டி இங்கே இல்லையா?''

பகவதிக் குட்டி என்று சொன்னது எஜமானியம்மாவைத்தான். கேசவபிள்ளை சிறிது தயங்கினான். ஆயினும் அவன் சொன்னான்: ''இருக்கார்.''

இந்த மனிதர் அந்தக் குடும்பத் தலைவனுடைய அண்ணனுவார். எந்த நேரத்திலும், யாரிடமும் கேட்காமல் இவருக்கு வீட்டுக்குள்ளே எங்கு வேண்டுமானாலும் போகலாம்.

இவர் உள்ளே போகிறார் என்றால் அது தன்னை எவ்வாறு பாதிக்கும் என்று அவன் யோசித்தான். எஜமானியம்மாவுக்குத் தன்னிடம் ஏற்பட்டிருக்கும் நல்லெண்ணம் முழுவதும் போய்விடுமே. பெரிய வரை வேண்டுமென்றே, தான் உள்ளே அனுப்பிவிட்டதாக அவள் நினைப்பாள். சேகரபிள்ளையையும், குடும்பத்தினரையும்பற்றி எஜமானியம்மாவுக்கு அளவு கடந்த வெறுப்பு இருக்கிறது. சேகரபிள்ளையின் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவனைத் தன்னை அவள் எண்ணி விடுவாள். தங்கம்மாவை மணம் புரிய நினைத்தவன் அல்லவா? இந்த வேலை தனக்கு வாங்கித் தந்தது சேகரபிள்ளையல்லவா? நிலைமை அவ்வாறிருக்க, 'இதோ பாருங்கள்! இந்த வீட்டிலே நண்பகலில் என்ன நடைபெறுகிறது என்று பாருங்கள்' என்று சேகரபிள்ளையை உள்ளே அனுப்பிவிட்டதாக எஜமானியம்மா நினைத்துவிடுவாள். சேகரபிள்ளை உள்ளே போவதைத் தடுக்க வேண்டுமா? இவரைத் தடுத்து நிறுத்துவது சரிதானா? இங்கே வேலை கிடைப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டது சேகரபிள்ளையினால் தானே? அப்படிப்பட்டவரை, உள்ளே போகக்கூடாதென்று தடுத்து நிறுத்துவது சரிதானா?

கேசவபிள்ளை உடனே ''தூங்கறுங்க'' என்றான்.

''ஓ. . .அது சரி.''

சேகரபிள்ளை உள்ளே போகப் போவதில்லை என்று கேசவபிள்ளைக்குத் தோன்றியது.

சேகரபிள்ளை தன்னுடைய கருத்தை வெளியிட்டார்:

''பெண்கள் பகல் நேரத்தில் தூங்குவது லட்சுமிகரமானதல்ல. அது தவிர்க்கப்பட வேண்டும். இந்தக் காலத்துப் பெண்களுக்கு அதிலே நம்பிக்கை இல்லை. ஆனால் என் வீட்டில் இந்த மாதிரியெல்லாம் நடக்க அநுமதிக்க மாட்டேன்.''

சேகரபிள்ளை குரலைத் தாழ்த்தித் தம் சொந்த உறவினனிடம் சொல்வதுபோல் தொடர்ந்து கூறினார்: ''எஜமானியம்மாதானே? ஏதாவது வேறு வேலை இருக்கா? சாப்பிடணும், தூங்கணும். வீட்டிலே

ஏதாவது வேலையிருந்தா தூக்கம் வருமா, என்ன? கடுமையான களைப்பு ஏற்பட்டுவிட்டாக்கூடப் படுத்துத் தூங்கிடுவாளா?''

கேசவபிள்ளை அப்போதுகூட அசட்டுச் சிரிப்புச் சிரித்தபடி நின்று கொண்டிருந்தான். சேகரபிள்ளை அவனை உட்காரச் சொன்னார். அவன் உட்காரவில்லை. அவர் வற்புறுத்தினார்:

''உட்கார் தம்பீ, உட்கார். அப்படி யொண்ணும் பார்க்க வேணும். உட்கார்!''

சேகரபிள்ளை மருமகனிடம் சொல்வதுபோல்தான் கூறினார்.

''வேணுங்க. நான் நின்னுக்கறேன்.''

''இதென்ன தம்பீ, உட்காருவதுலே கெடுதல் ஒண்ணும் நேர்ந்து டாது. குருத் துரோகம் வந்துடாது. உட்கார்!''

ஆயினும் அவன் தயங்கினான். சேகரபிள்ளைக்கு மகிழ்ச்சி ஏற்பட்ட தென்று தோன்றியது.

அவர் தமக்குத் தாமே சொல்வதுபோல் கூறிக்கொண்டார்:

''இந்தக் காலத்திலே இந்த மாதிரியான பையன்களைப் பார்க்கவே முடியாது. பரவாயில்லையே.''

அப்புறம் அவனிடம் சொன்னார்: ''தங்கம்மாவோடத் தாயார் இருக்காளே, அவ இந்தமாதிரி மூதேவித்தனமா நடந்துக்கமாட்டா.''

வாய் திறவாமல் நின்றிருந்த கேசவபிள்ளை ஏதாவது சொல்ல வேண்டு மென்பதற்காகச் சொன்னான்: ''ஆமாம்.''

சேகரபிள்ளைக்குத் தங்கம்மாவைப்பற்றிக்கூடச் சில சொல்ல வேண்டி யிருந்தது.

''தங்கம்மாகூட மூதேவித்தனமா எதையும் செய்யமாட்டா. நாங்க அவளை வளர்த்து வந்தது அப்படித்தான். திருவனந்தபுரத்திலே வளக் கறதைப் போல் அல்ல. இங்கே சுத்தம் கித்தம் கிடையாது. எல்லாம் நாகரிகந்தானே? மாதவிடாயின்போது வீட்டை விட்டு விலகியிருக் கணுங்கிறதிலே அவளுக்கும் அம்மாவுக்கும் பெரிய கவனம் இருந்து வருது. நீங்க வடக்குப் பிராந்தியக்காரங்க இருக்கீங்களே, உங்களைப் போன்ற பழக்க வழக்கங்கள்தான் என் சம்சாரத்துக்கும், மகளுக்கும்! எவ்வளவு அடக்க ஒடுக்கமாக நடந்துக்கறுங்கன்னு நீயே பார்! இந்த ஊர் பெண் பிள்ளைங்களைப் போல அல்ல அவங்க.''

அதற்கும் கேசவபிள்ளை, ''ஆமாம்'' என்று பதில் அளித்தான். அப் போது, அடக்க ஒடுக்கங்களும், சுத்தமும், ஸ்ரீகரமும் இன்ன பிற குணங் களும் கொண்ட தங்கம்மாவைப்பற்றி, ஒருவேளை அவர் நினைத்திருக்க லாம். அந்தத் தகப்பனுருக்கு மகளுடைய மற்றக் குணம்சங்களைப்பற்றித் தெரியுமா?

சிறிதுநேரம் வரையில் இருவரும் பேசவில்லை. சேகரபிள்ளை, சில விஷயங்கள்பற்றி இதயம் திறந்து பேச விரும்புவதாகக் கேசவபிள்ளைக்குத் தோன்றியது. அவர் சிந்தனையில் மூழ்கியவாறு காணப்பட்டார். எதைப் பற்றிய சிந்தனையாக இருக்குமோ, என்னவோ? திவான்ஜியுடைய

காரியதரிசி வீட்டுக்குள்ளே இருக்கிறார். அவர் வெளியே வரும்போது இந்த வயோதிகர் இங்கே இருந்தால்...? அதைப்பற்றிக் கேசவபிள்ளை யோசித்துக் கொண்டிருந்தான். இந்தக் கிழவன் இங்கே இருக்கிறான் என்று உள்ளே தெரிய வைக்க என்ன வழி?

''நான் யோசிச்சுக்கிட்டிருந்தேன்... கிருஷ்ணன் இப்போ இங்கே சீஃப் செக்ரடரியாக இருக்கிறான். நாளையதினம் அவன் பக்தி விலாசத் திலே திவான்ஜி பதவிக்கு வந்தாலும் வரலாம். அங்கே பல வருஷங் களுக்கு முன்னாலே என்னுடை தகப்பன்மார்கள் காவலுக்கு நின்னிருக் கிறாங்க. அன்னைக்கு நாங்க குழந்தைங்களா இருந்தோம். நாங்க வளர்ந்து வந்த வீட்டைப்பற்றியும், அந்தக் காலத்தைப்பற்றியும், எங்கள் தகப்பன்மார்களைப்பற்றியும், தாயைப்பற்றியும் எல்லாம் யோசிச்சுக்கிட்டிருந்தேன். நான் உங்ககிட்டே சொல்றேனே, கிருஷ்ணன் நாயர் எங்கெல்லாம் தங்கியிருந்திருக்கிறானே, அங்கெல்லாம் போகும்போது எனக்குப் பழையகால நினைவுகள் வந்துவிடும். ஏழையான என் தாயார் எவ்வளவு பாடுபட்டிருக்கிறார் தெரியுமா? இன்னைக்குக் கிருஷ்ணனுக்கு வந்திருக்கிற அதிருஷ்டங்களைப் பார்க்க அவர் கொடுத்து வைக்கவில்லை. தகப்பன்மார்கள் இவன் படிப்படியா உயர்ந்து வருவதைப் பார்த்திருக்கிறாங்களான்னு! அந்தச் சுகத்தை அவங்களும் அநுபவிக்க வில்லை.''

சேகரபிள்ளை உணர்ச்சி வசப்பட்டார். அவருடைய கண்களிலே ஈரம் கசிந்தது. அந்த மாறுதலைக் கேசவபிள்ளை கவனித்தான். தாய் தந்தையர் களைப்பற்றிய நினைவுதான். அவனால் அதைப் புரிந்துகொள்ளமுடியும். அவனுக்குக்கூடப் பெற்றோர் மிகவும் பெரிது. அவன் சொன்னான்:

''தாய் தந்தையர்கள் எல்லாக் காலத்திலும் உயிர் வாழ்ந்துகொண் டிருப்பார்களா?''

சேகரபிள்ளை கண்களைத் துடைத்தவாறு கூறினார்: ''இருக்க மாட்டாங்க தம்பீ, இருக்கமாட்டாங்க. இருந்தாலும் தாயும் தந்தையும் எவ்வளவுதான் வயோதிகர்களாக இருந்து இறந்துட்டாலும், அவங்க இறந்துட்டாங்களே என்ற துக்கம் இருக்கத்தான் செய்யும். அவங்களைப் பற்றி நினைக்கிறபோது கண்ணு நிறைஞ்சு போயிடும்ப்பா.''

''அது உண்மைதான். ஆனா அப்படி நினைத்துக் கவலைப்படறதனாலே என்ன புண்ணியம்?'' என்று கேசவபிள்ளை கேட்டான்.

சேகரபிள்ளை கூறினார்: ''நாளைய மறுநாள் எங்க தாயாரோட *'சிராத்த தினம்.' அதைக் கிருஷ்ணனுக்கு நினைவுபடுத்தலாம்னுதான் வந்தேன். அவன் பலி கருமங்கள் நடத்தறதா இருந்தால் நடத்தட்டும்.

---

* ஒருவர் இறந்துவிட்டால், எந்தத் திங்களிலே நட்சத்திரத்திலே அவர் இறந்து விட்டாரோ, அடுத்த ஆண்டில் அதே திங்களில் வரும் அந்த நட்சத்திரத்தைச் சிராத்த தினம் என்பார்கள். ஒவ்வோர் ஆண்டிலும் அதே திங்கள் நட்சத்திரத்தில் இறந்தவருடைய ஆத்ம சாந்திக்காகச் சில பலிகர்மாக்கள் செய்வதுண்டு. இறந்தவரின் தகனயர்கள் எல்லா ரும் சேர்ந்து நடத்தவேண்டிய கிரியை அது. (மொ—ர்.)

அது நடக்காதுன்னு எனக்குத் தெரியும். அவன் அந்தக் கருமங்கள் ஒண்ணும் செய்யாம விட்டு இப்போ பல வருசங்களாச்சு. பெரிய பதவியில் இருக்கிற உத்தியோகஸ்தர் அல்லவா? மறந்திருப்பார். செத்துப் போன தாய் தந்தையர்களைப்பற்றி எதுக்காக நினைக்கணும்?''

சிறிது ஆத்திரத்துடனும் கவலையுடனுந்தான் அவர் சொல்லி முடித்தார்.

''இவங்களோட நினைப்பு என்னன்னு தெரியுமா? எங்கிருந்தோ பிறந்தோம், எப்படியோ வளர்ந்தோம்ன்னுதான். இவன் இந்த நிலைக்கு வர்றதுக்கு அவங்க எவ்வளவு பாடுபட்டிருக்காங்கன்னு இவனுக்கு என்ன தெரியும்? அதைப்பற்றியெல்லாம் நினைச்சுப் பார்க்கிறானா?''

கேசவபிள்ளை, சில விநாடி வரையில், தன்னுடைய தாய் தந்தையர்களைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தான். அவர்கள் தனக்காகப் பாடுபட்டதைப் பற்றி! அவர்களை மறந்து வாழ்வது தருமம் அல்ல. ஆயினும் தன்னுடைய எஜமானனுக்காகப் பரிந்து பேசவேண்டியது அவனுடைய கடமைதானே?

''இப்போ வேலை ரொம்ப அதிகம். எஜமானுக்கு ஓய்வோ அமைதியோ இல்லை. சம்ஸ்தானத்திலேகூட இப்போ அமைதியற்ற நிலைமைதானே நிலவுது. எல்லாம் பிரைவேட் செக்ரடரி அவர்கள் பொறுப்பிலேதான் விட்டிருக்காங்க. *'நிவர்த்தனவாதி'கள் இப்போ காங்கிரசாக மாறியிருக்காங்க. முன்பெல்லாம் நாயர்கள் அரசனுக்கு ஆதரவா, அரசாங்கத்துக்குப் பக்கபலமா இருந்தாங்க. இப்போ அவங்களும் மாறிட்டாங்க. பெரிய நெருக்கடியான காலந்தான் இப்போ.''

சேகரபிள்ளை சொன்னார்: ''அப்படீன்னு, அம்மா சிராத்த கர்மத்துக்குக் கூட நேரம் கிடைக்காதா, தம்பீ?''

எஜமானனுக்கு இருந்துவரும் நெருக்கடிகளைப்பற்றி விரிவாக எடுத்துரைக்கத் தொடங்கினான் கேசவபிள்ளை. சேகரபிள்ளை சொல்வது நியாயந்தான் என்றாலும் காரியதரிசியை எதிர்த்துக்கொள்ளலாமா? அதனால்தான் அவருக்குப் பரிந்து பேச அவன் முற்பட்டான். அதனால் சேகர பிள்ளைக்கு ஏக ஆத்திரம். அவர் குரல் உயர்ந்தது:

''சும்மா அதையும் இதையும்பற்றிச் சொல்லாதே தம்பீ. நீ உன்னோட எஜமானுக்காக வாதம் பண்ணறே. அது உன் கடமைதான். அப்படிச் செய்யாமே இருந்தாத்தான் தவறு. ஆனா நீ அப்படிச் சொல்றது எனக்கு வெறியை உண்டாக்குது. அவன் பெரிய உத்தியோகஸ்தன்.

---

*நிவர்த்தனவாத இயக்கத்தில் கிறிஸ்தவர்கள், ஈழவர்கள், ஏனைய தாழ்த்தப்பட்ட வகுப்பினரே பெருவாரியாக இருந்து வந்தனர். நாயர் வகுப்பினர் அரசாங்க உத்தியோகங்களில் பெருவாரியாக இருந்து வந்தனர். தேசிய இயக்கம் சம்ஸ்தானங்களிலும் அபிமோதிக் கிளர்ந்தெழுந்தபோது தேசிய நலன்களை முன்னிட்டு நாயர் சமூகத்தினரும் அரசாட்சியை எதிர்த்துப் பொறுப்பாட்சிப் போராட்டத்திலே குதித்துவிட்டனர். நிவர்த்தனவாதிகள் காங்கிரஸ்வாதிகளாகி விட்டனர். காங்கிரஸ் நாயர் சமூகத்தினரையும் தழுவிக்கொண்டது. (மொ—ர்).

ஆனு பிறந்து வளர்ந்ததையெல்லாம் மறந்துட்டானே. சிறுசிலேகூட அவன் இப்படித்தான் இருந்தான். சொந்தக் காரியந்தான் அவனுக்குப் பெரிசு. தாயாரிடத்திலோ, தகப்பனிடத்திலோ அவனுக்குக் கொஞ்சம் கூட அன்பில்லே. ஆனு அவங்க மூணு பேருக்கும் இவன்னு உயிர். இவன் தான் அவங்களுக்கு எல்லாமாக இருந்தது.''

சேகரபிள்ளேக்கு நிறையச் சொல்லவேண்டியிருந்தது. இப்போது அந்த அணே உடைந்து பெருக்கெடுத்தோடுகிறது. அவருடைய குரல் படிப் படியாக உயர்ந்து வந்தது .அது கேசவபிள்ளேக்கு ஆறுதலாக அமைந்தது. ஏனென்றுல் இந்தக் குரல் வீட்டுக்குள்ளே சென்று மோதிவிடும். வெளியே யாரோ வந்திருக்கிறார்கள் என்று திவான்ஜியுடைய அந்தரங்கக் காரியதரிசிக்கும், சீஃப் செக்ரடரியுடைய மனேவியான தன்னுடைய எஜமானியம்மாவுக்கும் புரிந்துவிடும். பிரைவேட் செக்ரடரி திடீரென வெளியே வந்துவிடமாட்டார்.

சொல்லி வந்ததை உறுதிப்படுத்துவதுபோல் சேகரபிள்ளே கூறினர்: ''எனக்குக் கிருஷ்ணனே விடப் பதினஞ்சு வயசு அதிகம். பள்ளிக்கூடத் திலோ, கல்லூரியிலோ சேர்ந்து படிக்க எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்த தில்லே. நானும், தகப்பனும் தாயும் சேர்ந்து ரொம்பவும் கஷ்டப் பட்டே அவனேப் படிக்க வச்சோம். என்னேட வாலிப நாட்களிலே என் வேலே அதுவாக இருந்தது. நான் கல்யாணம் பண்ணிக்கொண்டது கூட அவனேட படிப்பு முடிஞ்சப்புறம்தான். தகப்பனுக்குப் பென்ஷ னுச்சு, வயசுமாச்சு. அப்புறம் அவங்களாலே என்ன பண்ணமுடியும்? ஒரு குடும்பத்தைக் காப்பாற்றணும்; அவனேப் படிக்க வைக்கணும். நான் பாடுபட்டதெல்லாம் அதுக்காகவேதான்.''

அண்ணனுக்குத் தம்பி மீது இருந்து வந்த புகார்கள் ஒவ்வொன்றுக வெளிவந்தன. சேகரபிள்ளே தொடர்ந்து கூறினர்: ''உன் கிட்டே சொல்றேன் தம்பீ. நீ இதை எல்லாம் தெரிஞ்சுக்கணும். இப் போதைய நிலேமையும் அதுதானே? அவன் இப்போ பெரிய ஆளாயிட் டான். அதனுலே எனக்கு ஏதாவது பிரயோஜனம் இருக்குன்னு நினேக் கிறியா? இல்லே தம்பீ, இல்லே. நான் அவன் கிட்டே எதையும் கேக்கப் போறதில்லே. நான் உழைக்கிறேன், உயிர் வாழறேன். ஒரு தம்பிடிக்குக் கூட அவனுலே எனக்குப் பிரயோஜனமில்லே. தாயாரையும், தகப் பனேயுங் கூட மறந்து போனவன் அவன். என்னே மட்டும் நினேச்சுக்கு வானே?''

கணநேரத்துக்குப் பிறகு குரலேத் தாழ்த்திச் சேகரபிள்ளே தொடர்ந்து கூறினர்:

''உனக்குத்தான் தெரியுமே, எனக்கு மூணு குழந்தைகள். பசங்களில் யாருக்கும் சர்க்கார் வேலே கிடையாது. ஒருவன் வக்கீல் குமாஸ்தா. இன்னெருவன் கடற்கரையிலுள்ள ஒரு பாக்டரீலே தொழிலாளி. அவங்க ரெண்டு பேருக்குமே என் தம்பி கிருஷ்ணனுலே ஓர் அநுகூலமும் கிடைக்கலே. கிருஷ்ணன் மனசு வச்சா அவங்களுக்குச் சர்க்கார் வேலே

கிடைச்சிருக்காதா? தங்கம்மாவுக்கு வேலை வாங்கிக் கொடுத்தது கிருஷ்ணன் அல்ல. பேஷ்கார் வடிவேலுப்பிள்ளைதான். அப்புறம் செக்ரடரியேட்டுக்கு மாற்றியது கிருஷ்ணன்தான். அவளுக்கு வேலை கிடைத்ததுகூட ஒரு கதைதாம்ப்பா! வடிவேலுப்பிள்ளை செக்ரடரியேட்டில் குமாஸ்தாவாக இருந்தபோது தம்பானூரிலேதான் தங்கினார், அவர் தங்கியிருந்த இடத்துக்குப் பக்கத்திலேதான் என்னுடை வெற்றிலை பாக்குக் கடை இருந்தது. அவர் பேஷ்காராக உயர்வு பெற்றபோது நான் போய்ச் சொன்னேன். அவர் அவளுக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுத்தார். அன்னைக்கு என்னுடை தம்பி செக்ரடரியாக இருந்தான். இருந்துங்கூட நான் அவன் கிட்டே போய்ச் சொல்லலே. அவளே போய்ச் சொல்லித்தான் செக்ரடரியேட்டுக்கு மாற்றிக்கொண்டது.''

எஜமானனுக்கும், அவருடைய அண்ணனுக்குமிடையில் இருக்கிற உறவின் தன்மையைப் புரிந்துகொள்வது கேசவபிள்ளைக்குத் தேவையான ஒரு விஷயந்தான். அந்த முறையிலே அவர் பேசுவதை எல்லாம் கேசவ பிள்ளை ஆர்வத்துடன் கேட்டுக்கொண் டிருந்தான். அவற்றை எல்லாம் அவன் நினைவிலே பதித்து வைத்துக்கொண்டான். இனிமேல் தங்கம் மாவின் தகப்பனாரான சேகரபிள்ளைக்குப் பயப்படத் தேவையில்லை என்று அவனுக்குத் தோன்றியது.

சேகரபிள்ளையின் புகார்கள் அத்துடன் நிற்கவில்லை. கிருஷ்ணன் நாயரைப்பற்றிய புகார்களைவிடப் பகவதிக் குட்டியம்மாவைப்பற்றிய குறைகள் அவருக்கு இருந்து வருகின்றன. நம் குடும்பத்திலே மூத்த மருமகளாக வந்து சேர்ந்தவளாக எண்ணி, அவர் கேசவபிள்ளையிடம் எல்லாவற்றையும் திறந்து சொன்னார். கேசவபிள்ளையும், அவர் குடும்பத் தினரும் கிருஷ்ணன் நாயருடைய பங்களாவுக்கு வருவது, மனைவியான எஜமானியம்மாவுக்குப் பிடிக்காது. அதை ஓர் அவமானமாகக் கருதி வருகிறாள் அவள். அண்ணன், அண்ணி என்றெல்லாம் சொல்லிச் செல்வது அவளுடைய பெருமைக்குப் பொருந்தாத விஷயம். சேகர பிள்ளை தொடர்ந்தார்:

''வீட்டுக்காரி இருக்காளே—தங்கம்மாவோட அம்மா—அவள் எள்ளளவும் தலை வணங்கிக் கொடுக்கிறவள் அல்ல. அவள் நல்லதொரு குடும்பத்திலே பிறந்தவள். வட்டியூர்காவிலுள்ள பனங்குரல் குடும்பத்தைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறியா? அந்தக் குடும்பத்திலே பிறந்து வளர்ந்தவள். அந்தக் குடும்பத்திலுள்ள ஆண்பிள்ளைகளெல்லாம் பட்டாளத்திலே பெரிய பெரிய பதவிகளை வகிக்கிறவங்க. அவள் இவளோட இந்த வீட்டிலே காலெடுத்து வச்சு வருஷம் பதினைந்து ஆச்சு. இவள் ரொம்பப் பெரியவள்னு இருந்தா, அது இவளோட இருக்கட்டும்னு என் வீட்டுக்காரிச் சொல்லு.''

இவ்வளவும் சொல்லிவிட்டு, சேகரபிள்ளை இன்னொரு வாசகத்தைச் சொன்னார்: ''இவளோட பெருமை . . .! அதைப்பற்றிச் சொல்லாமல் இருப்பதுதான் நல்லது.''

அந்தப் பெண்களுக்கிடையில் இருக்கிற பிணக்கைப்பற்றிய இரு கதைகளை விளக்கினார் சேகரபிள்ளை. அவருடைய மனைவி, சீஃப் செக்ரடரியின் மனைவியைப் 'ப்ப்பூ' என்று முகத்திலே காறி உமிழ்ந்திருக்கிறாள்.

சங்கதிகள் மிகவும் தெளிவு பெற்று வருகின்றன. உறுதியான இடத்திலேதான் கேசவபிள்ளை நிற்கிறான். அண்ணன்–தம்பிகளுக்குள்ளே நிலைபெற்றிருக்க வேண்டிய உறவு இத்தகைய நிலைமையில் இருக்கிறபோது, தனக்கு இந்தப் பதவி எப்படிக் கிடைத்தது என்று அவன் வியப்புற்றான். அப்போது கிட்டு மாமாவின் குரல் அவன் காதுக்குள்ளே முழங்கியது:

''அவள் அதிருஷ்டக்காரிதாம்ப்பா!''

சேகரபிள்ளை தொடர்ந்து கூறினார்:

''இப்படி எல்லாம் இருந்தபோதிலும் நாங்க பரஸ்பரம் சந்திக்கிறபோது, அவள் இல்லாமே இருந்தா, அவன் தளந்திடுவான். ஒரு தாயின் வயற்றிலே படுத்துக் கிடந்தவங்ஙதானே, நாங்ங? ஒரே தாய்ப்பாலைத் தானே குடிச்சோம்? அவனை இடுப்பிலே வச்சுக்கொண்டு நடந்த தழும்பு இப்போதுகூட என் இடுப்பிலே உண்டு தம்பீ. அன்பாகத்தான் நான் அவனை வளர்த்து வந்தேன். நான் பார்க்கிறபோது அவன் வாலைச் சுருட்டுற நாய்போல் ஆயிடாரன். அதுதான் கஷ்டமான விஷயம்.''

அப்புறம் அவர் வேறு ஒரு கதையை விவரமாகக் கூறினார். கேசவபிள்ளை பதவி உயர்வு பெற்ற கதை. பாசமுள்ள அந்தத் தந்தை அந்தக் கதையை இவ்வாறு விளக்கினார்:

''தம்பீ, உன் கிட்டே நான் எல்லாவற்றையும் மறைக்காமச் சொல்லிடறேன். நீ என் மகனைப் போலத்தானே? நான் பலவற்றைச் சொல்லிட்டேன். தம்பீ, எனக்கு ஒரே ஒரு மகள்தான். அவளுக்கு என் உயிர். எனக்கு ரெண்டு பையன்களும் இருங்கிறாங்க. அவங்கமீதும் எனக்குப் பிரியந்தான். ஆயினும் மகளிடம் எனக்குப் பிரத்தியேகமான ஓர் அன்பு உண்டு. அவளை நான் பெண்ணாக வளர்க்கலை, பொன்னாகத்தான் வளர்த்தேன். அவள் முகம் ஒளியிழந்து காணப்பட்டால் என் வீட்டிலே இருள் சூழ்ந்துவிடும். அவள் வதனம் மலர்ந்து காணப்பட்டால் என் வீடு ஒளிமயமாகிவிடும். தம்பீ, நீ அவளுக்குக் கவலை கொடுக்காதே! அவளை நீ அன்போடு வச்சுக்கணும்! அவள்மீது உன் கருணை இருக்கணும்!''

அந்த வயோதிகத் தந்தை கெஞ்சிக் கேட்கிறார். அவருடைய மங்கலான விழிகளிலே மகள்மீது கொண்ட பாசம் ததும்பி நின்றது.

''இனிமேல் எங்கள் குடும்பவிளக்கு நீதான் தம்பீ.''

அந்தப் பாசமும், அன்பும் ஆனந்தக் கண்ணீராக உருப்பெற்று விட்டதுபோல் தோன்றியது. சேகரபிள்ளை எழுந்து நின்று கேசவபிள்ளையைத் தழுவிக்கொண்டார். கேசவபிள்ளை தலை குனிந்தவாறு நின்றான். சேகரபிள்ளையின் கண்களிலிருந்து இரண்டு துளிக் கண்ணீர் உதிர்ந்து விழுந்தது. தழுதழுத்த குரலில் அவர் கூறினார்:

''நீ என் மகளைக் கவலைக்குள்ளாக்க மாட்டாய் என்று எனக்குத் தெரியும்.''

அவர் தன்னிடமிருந்து ஒரு வாக்குறுதியைக் கேட்பாரா என்று பிள்ளை பயந்தான். எனினும் அவ்வாறு கேட்கவில்லை.

கண்களைத் துடைத்துவிட்டு அந்த வயோதிகர் தாம் அமர்ந்திருந்த நாற்காலியிலேயே அமர்ந்து தொடர்ந்தார்:

''ஏன் இப்படிச் சொல்றேன், தெரியுமா? உன்மீது அவளுக்கு அவ்வளவு பிரியம் இருக்குது. அவள் என்னை நிம்மதியா இருக்க விடல்லியே! நான் உறுதியா ஒரு தீர்மானத்திலே இருந்து வந்தேன், என் தம்பி கிருஷ்ணன் நாயரிடத்திலே எதையும் போய்க் கேக்கிற தில்லேன்னு. தங்கம்மா அழத் தொடங்கினு. அழுகையேதான். நான் அசைஞ்சிட்டேம்ப்பா! செக்ரடரியேட்டுக்குக் கிளம்பினேன். தம்பி கிருஷ்ணனைச் சந்திச்சேன். உன்னோட வேலை விஷயமாப் பேசினேன். இங்கே வந்து பார்த்தாக் காரியம் கைகூடாதுன்னு எனக்குத் தெரியும். இந்தப் பகவதிக்குட்டி இருக்காளே, இவ ஒப்புக்கொள்ளமாட்டா. அவன் முகத்திலே சிறிது பிரியமின்மைதான் காணப்பட்டது. முடியாதுன்னு சொல்லிட்டான்னு முகத்தை நோக்கி நாலு பேச்சுப் பேசணும்னு நினைச்சுக்கிட்டுத்தான் போயிருந்தேன். அவன் பியூனைக் கூப்பிட்டு என்னைப் புடிச்சு வெளியே தள்ளச் சொல்லிட்டா, அதுவும் நடக்கட்டும்னு நினைச்சுத்தான் போயிருந்தேன். முகத்திலே அந்த மாறுதலைப் பார்த்த போது நான் சொல்லத் தொடங்கினேன். அவன் ஏதாவது பதில் சொல்லணுமே! கொஞ்ச நேரம் கேட்டுக்கிட்டிருந்ததுக்கப்புறம் 'அண்ணனுக்கு என்ன வேணும்? அவனை நியமிச்சுடறேன்'னான். நினைத்து வந்ததை அப்படியே நிறுத்திட்டேன். தம்பீ, இப்படித்தான் உனக்கு இந்த வேலை கிடைச்சது. அன்னைக்குத் தங்கம்மா, வீட்டிலே குதி குதின்னு குதிச்சுக்கிட்டிருந்தா, தெரியுமா?''

ஓர் அண்ணன், தனது வாழ்நாள் முழுதும் உழைத்ததும், முயன்றதும் —சேகரபிள்ளை சொன்னதுபோல் இருந்தால்—தனது தம்பியை உயர்ந்த அந்தஸ்துக்குக் கொண்டுவருவதற்காகவேதான். அந்த அண்ணன் அதற்குப் பிரதிபலனைப் பெற்றுவிட்டான். ஆனால், அந்தப் பலனை அந்த அண்ணனால் அனுபவிக்கமுடியுமா?

கேசவபிள்ளை அசைவின்றி நின்றுகொண்டிருந்தான். மகள்மீது அபரிமிதமான பாசத்தை வைத்துக்கொண்டிருக்கிற அந்த வயோதிகரின் வேண்டுகோள் அவனுடைய இதயத்திலே பதிந்துவிடவில்லை என்று சொல்லமுடியாது. அந்தக் கிழவனார் எஞ்சியிருக்கும் தமது வாழ்நாள் முழுவதும், தன்னைப் பின்தொடர்ந்து வந்துகொண்டிருப்பார் என்று அவனுக்குத் தோன்றியது. இவர் இறந்துவிட்டாலும், அவருடைய ஆவி தன்னைத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும்.

நீர் நிறைந்த கண்களுடன் அவர் அவனை ஆசீர்வதித்தார்:

''நீங்க ரெண்டுபேரும் நல்லமுறையா, ஒற்றுமையா வாழணும். எனக்கு அதுமட்டும் போதும்.''

தீக்கனலை அள்ளிக் கொட்டியதுபோல் அவனது உள்ளம் வெந்து உருகியது.

எஜமானியம்மா அங்கே வந்தாள். அவள முகத்திலே வெறுப்பு படர்ந்திருந்தது.

சேகரபிள்ளை அவளிடம் சொன்னார்: ''நாளைய தினம் அம்மாவோட சிராத்த விரத தினம்னு அவன் கிட்டே சொல்லு!''

சேகரபிள்ளை தடியைக் கையிலெடுத்துத் தரைமீது ஊன்றிச் சிரத்தை உயர்த்தியவாறு அங்கிருந்து நடந்து சென்றார்.

எஜமானியம்மா பிள்ளையிடம் கேட்டாள்:

''வந்து ரொம்ப நேரமாச்சா?''

''கொஞ்ச நேரமாச்சு.''

''குரல் கேட்டது.'' விநாடிக்குப் பின் அவள் கேட்டாள்: ''அவர் இங்கே இருக்கார்னு சொன்னீங்களா?''

''இல்லை; சொல்லவில்லை.''

''நல்லது. நாங்க ரெண்டு பேரும் கேரம் விளையாடிண்டிருந்தோம். அந்தக் கிழவனை வெளியே போவச் சொல்லிடறதுதானே?''

கேசவபிள்ளை ஒரு தந்திரத்தைக் கையாண்டான்:

''நினைத்ததுதான். அப்படியே நான் சொல்லி வெளியே அனுப்பி விட்டா, அப்புறம் எஜமானனுக்கும், அம்மாவுக்கும்...''

அதைப் பூர்த்தி செய்தது எஜமானியம்மாதான்.

''எனக்கு ஒண்ணுமே தோணுது. அவருக்கும் தோணுது. கழுத்தைப் புடிச்சு வெளியே தள்ளியிருக்கணும். பிச்சைக்காரக் கூட்டம்!''

கேசவபிள்ளை வாய் திறக்கவில்லை. எஜமானியம்மா கேட்டாள்: ''கல்யாண விஷயமாக ஏதாச்சும் சொன்னாரா?''

கேசவபிள்ளைக்கு உண்மையைச் சொல்லத் தடை இல்லை:

''இல்லை.''

எஜமானியம்மா முன்பு செய்த எச்சரிக்கையை மீண்டுமொரு முறை செய்தாள். ''நீங்க அந்தக் கூட்டத்திலே போய்ச் சேர்ந்துடக் கூடாது.''

ஒரு நல்ல சந்தர்ப்பத்தை வீணுக்கிவிட்டான் என்ற முறையில் அவள் சொன்னாள்: ''இன்னைக்கு மட்டும் நீங்க அந்தக் கிழவனைப் புடிச்சு வெளியிலே தள்ளிவிட்டிருந்தீங்கன்னு, அப்புறம் ஒருகாலும் அந்த கல்யாணக் காரியத்தைச் சொல்லிக்கொண்டு இங்கே வந்து உங்களுக்குத் தொந்தரவு கொடுக்கமாட்டார்.''

பிரைவேட் செக்ரடரி அப்போது அங்கே வந்து சேர்ந்தார். அவர் ஒளிவீசும் புன்னகையுடன் கேட்டார்: ''என்ன கேசவபிள்ளை?''

''உத்தரவு!''

பிரைவேட் செக்ரடரி பகவதிக்குட்டியம்மா பக்கம் திரும்பியவாறு சொன்னார்: ''கேசவபிள்ளை ஃபைல்களெல்லாம் நன்னாப் பார்க்கிறானுன்

சீஃப் செக்ரடரி அவா சொன்னு. அந்தப் பேமானி சீஃப் என்ஜினீயர் இருக்கானே, அவன் அந்த ஹைட்ரோ எலக்டிரிக்கல் பிராஜக்ட் சம்பந்த மான ரிப்போர்ட்டிலே பண்ணி வச்சிருந்த அயோக்கியத்தனத்தை நம்ம கேசவபிள்ளேதான் கண்டுபுடிச்சான். அப்படிக் கண்டுபுடிக்காமே இருந் திருந்தா அந்த லவலிங் கம்பெனிக்கு அனுகூலமா ஆர்டரைப் பாஸ் பண்ண முடிஞ்சிருக்காது. பிள்ளேதான் காப்பாற்றினார்.''

எஜமானியம்மா கேட்டாள்: ''அப்புறம் அந்த சீஃப் என்ஜினீயரை என்ன பண்ணினீங்க?''

''அவனேயா? அவனைத் துரத்திடணும். அவனுக்கு நான் வச்சிருக் கேன். அவன் நம்ம லவலிங் கம்பெனியோட எதிரி. மற்றவங்களிடத் திலேருந்து லஞ்சம் வாங்கித்தான் அப்படி நடந்திருக்கான்.''

அந்த எஞ்ஜினீயர் பெரிய 'நிவர்த்தனவாதி' என்ற கருத்தை பகவதிக் குட்டியம்மா வெளியிட்டாள்.

''ஆகட்டும். நீர் உம்ம வேலேயைச் சரியாக் கவனியும். திவான்ஜி அவாளுக்குக்கூட உம்மைப்பற்றி ரொம்ப மதிப்புத்தான்.''

திவான்ஜியின் காரியதரிசி விடைபெற்றுச் சென்றார்.

கேசவபிள்ளேயிடம் எஜமானியம்மா எதையோ சொல்ல விரும்பினாள். ஒருவேளே, பிரைவேட் செக்ரடரி அங்கே வந்து போனதை யாரிடமும் சொல்லக்கூடாது என்று இருக்கலாம்.

அத்தியாயம் 12

முதல் இரவு

கேசவபிள்ளை கருமாடியூரிலே படகிலிருந்து இறங்கினான். மூட்டைகளை ஒரு கூலியாளைத் தூக்கிக்கொண்டு வரச் செய்தவாறு கேசவபிள்ளை ஊருக்கு வந்தான். பாதையோரங்களிலுள்ள வீடுகளிலிருந்து பெண்கள் வெளியே இறங்கி வந்தனர். ''இப்பத்தான் வர்றியா, தம்பீ?'', ''மூட்டை முடிச்சுக்களெல்லாம் பலமாயிருக்கே'', ''கொஞ்சம் அப்படி நில்லப்பா! உன்னைக் கொஞ்சம் பார்க்கட்டும்.'' பெண்களிடமிருந்து பல கேள்விகள்! அவர்கள் அவனுடைய கேஷம நலன்களை விசாரித்தனர். அன்பினால், பாசத்தினால்! ஆசீர்வாதங்கள் பல!

கேசவபிள்ளையின் வருகை அவ்வூரிலே ஒரு முக்கியமான செய்தியாகி விட்டது. அங்கே பிறந்து வளர்ந்த ஓர் உத்தியோகஸ்தன் வருகிறான் என்பதால் மட்டுமின்றி, திருமணத்துக்குப் பின் முதல் முதலாகத் தான் அவன் ஊருக்கு வருகிறான் என்பதனாலும் அந்தச் செய்தி முக்கியத்துவம் பெற்றுவிட்டது. கேசவபிள்ளை வந்துவிட்டான் என்ற செய்தியை நாணிக்குட்டி விரைந்து சென்று கார்த்தியாயினிக்கு அறிவித்தாள்.

கேசவபிள்ளை, ராஜாமாதிரி மாறி வந்திருக்கிறான் என்றே எல்லாரும் சொன்னார்கள். ஒரு விதமான கம்பீரத் தோற்றமும், ஓர் அதிகாரியின் களையும் அவனிடத்திலே காணப்படுகின்றனவாம்! என்ன இருந்தாலும் ஸ்ரீபத்மநாபனுடைய 'பத்து சக்கிரம்'* கையில் கிடைத்து விடும்போது எவ்வளவுதான் பரட்டையனாக இருந்தபோதிலும் அவனுக்குப் பிரத்தியேகமான தேஜஸ் ஏற்பட்டு விடுகிறதாம். கேசவபிள்ளை முன்னரே தேஜஸுடையவனாகவே இருந்திருக்கிறான்.

குட்டியம்மா படி வாசலுக்கு விரைந்து வந்து மகனை ஆசீர்வாதங்களால் முழுகடித்துவிட்டாள். அவன் வரும்போது கிட்டு மாமா வீட்டுக்குள்ளே இருந்திருக்கிறார். அம்மா, அப்பா, அக்கா, கிட்டு மாமா—அனைவரும் படிவாசலை நோக்கிப் பாய்ந்து சென்றனர். குட்டியம்மா உற்சாகத்தில் மெய்ம்மறந்துவிட்டாள். அவள் சொன்னாள்:

''என் செல்வ மகன் வந்துவிட்டான்! பரமத் துரோகிங்க என்னென்ன கதைங்களைக் கட்டிவிட்டாங்க!''

பப்புப்பிள்ளைக்குக் கோபம் வந்தது.

---

* அந்தக் காலத்தில், ஸ்ரீபத்மநாபக் கடவுளின் தாசனாக அரசன் ஆட்சி நடத்தி வந்த காலத்தில், அரசாங்கம் அளிக்கிற சம்பளத்துக்கு ''ஸ்ரீபத்மநாபக் கடவுளின் சக்கிர'' மென்று ஜனங்கள் பேசி வந்தார்கள். ஒரு சக்கிரம் என்பது பழைய ஏழு பைசா. இருபத்தெட்டரை சக்கிரம் ஒரு ரூபாய்.

''பொடலங்காய்க் கதைகளைக் கட்டிவிட்டாங்க. உன் வாயிலே நாக்கு சும்மா கிடக்காதா?''

குட்டியம்மா விட்டுக் கொடுக்கவில்லை:

''நான் அதுக்கு இப்போ என்ன சொல்லிட்டேன்? இது நல்ல கூத்து!''

கார்த்தியாயினி கதவோரமாக வந்து நிற்கிறாளா என்று ஆவலுடன் பார்த்தான் கேசவபிள்ளை. அவள் அங்கே காணப்படவில்லை. அவள் தன்னுடைய சொந்த ஊருக்கே போய்விட்டாளா? அவள் எங்கே என்று கேட்கமுடியுமா?

குட்டியம்மா மூட்டை முடிச்சுக்களை அவிழ்த்துப் பார்த்தாள். பப்புப் பிள்ளையின் அக்கறை எல்லாம் மகன் கொண்டு வந்த நல்ல புகையிலை மீதுதான். அவன் துணிமணிகளையும் வாங்கி வந்திருந்தான். அப்பாவுக்கு வேஷ்டிகள், கறுப்புக் கோடு போட்ட சன்னரக அங்க வஸ்திரங்கள்; அம்மா, அக்கா இருவருக்கும் புடைவைகள் அங்கவஸ்திரங்கள்; கிட்டு மாமாவுக்கு ஒரு மல்வேஷ்டி, அங்கவஸ்திரம்—ஆகியவற்றை வாங்கி வந்திருந்தான். அதென்ன? ஒரு தனிப் பொட்டலம்! அதிலே மூன்று ஜரிகைப் புடைவைகள்! நான்கு விரல் அகலமுடைய ஜரிகைக் கோடுடைய அங்கவஸ்திரங்கள். இவை யாருக்காக? சொல்லவேண்டுமா? குட்டியம்மா உற்சாகத்தினால் மெய்ம்மறந்து கூவினாள்:

''கார்த்தியாயினீ, எம் மருமவளே! இந்தா, இந்தப் பக்கம் வாயே! இதெல்லாம் கொஞ்சம் பார்த்துட்டுப் போயே!''

ஒரு சிறு குழந்தைபோல் தன்னுடைய மனைவி அமர்க்களம் செய்வதைப் பார்த்த பப்புப்பிள்ளை கூறினார்: ''இந்தப் பெண் பிள்ளைக்குப் பைத்தியம் புடிச்சுட்டதா?''

கார்த்தியாயினி வரவில்லை. பப்புப்பிள்ளை சொன்னதைக் குட்டியம்மா பொருட்படுத்தவில்லை. அவள் மீண்டும் கார்த்தியாயினியைக் கூவியழைத்துச் சொன்னாள்:

''அவள் சமையக்கட்டிலேருந்து வெளியே வரமாட்டேங்கறாளே. குளிக்கக்கூட வெளியே வர்றதில்லே. பேய் புடிச்சவ மாதிரி அடுக்களைக் குள்ளேயே ஒரு மூலையிலே எப்போ பார்த்தாலும் இருந்துடறா. பெண் பிள்ளேங்கன்னா, இப்படியா இருப்பாங்க?''

மருமகள் அப்படி இருக்கிறாள் என்றால் அதற்கு மாமியார்தான் காரணம் என்று பப்புப்பிள்ளை குட்டியம்மா மீது குற்றம் சாட்டினார். அதற்குக் குட்டியம்மா கேட்டாள்:

''அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்லறீங்க? குளத்துக்குக் குளிக்கப் போனா இந்த ஊர்ப் பெண் பிள்ளைங்க அதை விட்டாத் தானே? அதையும் இதையும் பேசத் தொடங்கிடுவாளுங்க. வீட்டு மனைக்குள்ளே எங்காவது போயி நின்னா எல்லாப் பெண் பிள்ளைங்களும் ஓடியாந்திடுவாங்க. அவள்தான் என்ன செய்வாள்? அதனாலே அடுக்களையிலேருந்து வெளியே கிளம்பறதே இல்லை. இதுக்கெல்லாம் என் மேலே குற்றம் சொல்றீங்களா?''

கிட்டு மாமா தம் கருத்தை வெளியிட்டார்:

''அவள் நல்ல குடும்பத்திலே பிறந்த பெண்! அதுதான் விஷயம்.''

கார்த்தியாயினி சமையல் வேலையில் வெகு தீவிரமாக ஈடுபட்டிருந்தாள். துணைக்குக் கொச்சுநாணி. கணவன் வந்திருக்கிறான். நல்ல சாப்பாடு செய்து கொடுக்கவேண்டும். ஓட்டலிலேதான் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான். ஓட்டல் சாப்பாட்டின் தன்மையைப்பற்றி அவள் அறிந்து வைத்திருந்தாள். அவனுக்குப் பிரியமான பதார்த்தங்கள் என்ன என்ன என்று அவள் மாமியாரிடம் கேட்டுத் தெரிந்து வைத்திருந்தாள். இவ்வாறுக அவனுக்கு ருசியான உணவை வழங்குவதற்காக அவள் தீவிரமாக முனைந்து செயல்பட்டாள்.

ஆயினும் அந்தப் பொட்டலத்தில் என்னென்ன இருக்கின்றன என்பதை அறிய அவளுக்கு ஆவல் எழுந்தது. தனக்காகக் கொண்டுவந்திருப்பவற்றைப் பார்க்க அவளுக்கு அடக்கமுடியாத ஆசைதான். திருவனந்தபுரத்திலிருந்து தனக்காக வாங்கி வந்திருப்பவற்றைப் பார்க்க அவளுக்கு ஆசை பிறக்காதா, என்ன? ஆசை வலுத்துவிட்டதென்றாலும் அவள் அடுக்களையிலிருந்து வெளியே வரவில்லை.

குட்டியம்மாவே அந்த ஜரிகைப் புடைவைகளை அடுக்களைக்கு எடுத்துச் சென்றாள். உண்மையிலேயே அவளது கண்கள் மயங்கிவிட்டன. அவ்வளவு அழகான புடைவைகளை அவள் இதுகாறும் பார்த்ததில்லை. நாணிக் குட்டியும் அவற்றைப் பார்த்துத் தம்பித்து நின்றுவிட்டாள். அவளும் இத்தகைய புடைவைகளைப் பார்த்ததில்லை. கல்யாணத்துக்குப் பிறகு அவன் இன்றுதான் வந்திருக்கிறான் என்றாலும், அதனால் இப்போது என்ன குறை ஏற்பட்டுவிட்டது?

குட்டியம்மா சொன்னாள்: ''அக்காளுக்கும், அம்மாவுக்கு அவன் வேறு புடைவைகளைக் கொண்டாந்திருக்கிறான். இதெல்லாம் என் மருமகளுக்குத்தான்.''

அந்தப் பேச்சு பிரத்தியேகமானதொரு பொருள் படைத்ததாகும். அன்றுவரையில் ஊர் ஜனங்கள் பேசி வந்ததும், ஒருவேளை கார்த்தியாயினி கூட எண்ணியிருந்ததுமான அனைத்தும் பொய்யானது என்பதைப் புரியவைப்பதுதான் அந்தப் பொருள். சிறிது நேரத்துக்குப் பின் அவள் அதை நாணிக்குட்டியிடம் திறந்து சொல்லவும் செய்தாள்:

''அந்தத் துரோகிங்க என்னென்ன கதைகளைக் கட்டிவிட்டாங்க? அவன் வரமாட்டான், இந்தப் பெண்ணை ஒப்புக்கொள்ளமாட்டான், அவனுக்குத் திருவனந்தபுரத்திலே வேறு பொண்ணிருக்கு—அப்படி இப்படீன்னு சொன்னுங்கல்ல? இப்போ அவளுங்க இதைக் கொஞ்சம் வந்து பார்க்கட்டும்.''

இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தப் பக்கத்திலே கிட்டு மாமா, அன்றைய தினம் முதலிரவுக்கு ஏற்ற நாள்தானா என்பதைப்பற்றிப் பஞ்சாங்கம் பார்த்துக் கணக்கைப் போட்டுக்கொண்டிருந்தார்.

இன்று இங்கே வர முடியுமென்று கேசவபிள்ளை அறிந்திருக்கவில்லை. இரண்டு நாட்களுக்காவது லீவு கிடைக்க அவன் வெகு பாடுபட்டான். லீவு கிடைத்தது. ஓடி வந்துவிட்டான். கிட்டு மாமா கணக்கைப் போட்டுப் பார்ப்பதைப் பார்த்த கேசவபிள்ளைக்குச் சிரிப்பு வந்தது.

''நானே ஜோசியரைச் சந்திச்சு நல்ல நாள் முகூர்த்தமெல்லாம் தெரிஞ்சுக்கிட்டுத்தான் வந்திருக்கேன்'' என்றான் கேசவபிள்ளை.

கிட்டு மாமா மிக்க மகிழ்ச்சியடைந்தார்:

''அப்போ மருமகனுக்கு ஜோசியத்திலே நம்பிக்கை பிறந்திருக்குன்னு சொல்லு! பரவாயில்லை. அது நல்லதுதாம்ப்பா. கெட்டகாலம் வர இருந்தா, அதைத் தெரிஞ்சுக்கிட்டு ஜாக்கிரதையாக இருக்கலாம் அல்லவா? அப்படித்தான் செய்யணும். என்ன செய்யறதா இருந்தாலும் ஈசுவராதீனமா நல்ல நேரம் பார்த்துத்தான் செய்யணும்.''

கேசவபிள்ளை திருவனந்தபுரத்திலே நடைபெறும் நிகழ்ச்சிகளைப்பற்றிச் சொன்னான். அங்கே திவான்ஜியிலிருந்து பியூன் வரைக்கும் ஜோசியத்திலே நம்பிக்கையுள்ளவர்கள். எல்லாருக்கும் தமக்கென்று ஒவ்வொரு ஜோசியர் இருந்துவருகிறார். ஒவ்வொரு மாசத்தினுடைய பலன்களையும் முன்பே தெரிந்து வைத்துக்கொள்கின்றனர்.

''அரசாங்க உத்தியோகந்தானே, கிட்டு மாமா? எப்போதான் வேலை நீக்க உத்தரவு வந்திடும்னு சொல்லமுடியாது. அதனால்தான் நல்ல காலத்தையும், கெட்ட காலத்தையும் முன்பே பார்த்துத் தெரிஞ்சு வச்சுக்கறாங்க.''

அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கல்வியறிவு பெற்றவர்களாக இருப்பதனால்தான் அவ்வாறு செய்கிறார்கள் என்று கிட்டு மாமா சொன்னார்.

அண்மைக் காலமாகத் திருவனந்தபுரத்திலே நடைபெற்று வருகிற மற்றொரு நிகழ்ச்சியைக்கூடக் கேசவபிள்ளை சொன்னான்:

''நான் கல்லூரியிலே படித்துக்கொண்டிருந்தபோது திருவனந்தபுரத்திலே சபரிமலைன்னு சொன்னா அவ்வளவா யாருக்கும் தெரியாது. அன்னைக்குப் பெரிய அளவிலே யாரும் மலைக்குப் போகமாட்டாங்க. இன்னைக்குக் கார்த்திகை மாதம் பிறந்தாப் போதும். அந்த 'மண்டலக் கால'த்திலே தாடியும், ருத்திராட்சக் கொட்டையுமாகச் செக்ரடரியேட்டின் பாதி ஆட்களைப் பார்க்கமுடியும். இந்த வருஷம் திவான்ஜிகூட 'இரு முடிச்சும் கட்டு'மாகச் சபரிமலைக்குப் போகப் போகிறார். எனவே, இந்த வருஷம் மகர(தை) விளக்கு விழாவின்போது திருவனந்தபுரம் நகரமே திரண்டு சபரிமலைக்குப் போயிடும்போல் தெரிகிறது.''

கிட்டு மாமாவுக்கு அது ஒரு முக்கியமான செய்தியாகப் பட்டது. அந்தச் செய்தியை இன்றைய தினமே வீடு வீடாக அவர் பரப்பிவிடுவார். உத்தியோகஸ்தர்கள் அனைவரும் ஐயப்பப் பக்தர்களாகிவிட்டனர்! கேசவபிள்ளை தொடர்ந்து கூறினான்:

''ஒரு விஷயம் மட்டும் கட்டாயந்தான் மாமா. இந்தச் சபரிமலை விஷயம் இருக்கே, அதை நம்பாமல் இருக்கமுடியாது.''

கிட்டு மாமா அதை ஒப்புக்கொண்டார்.

''சந்தேகம் இருக்கா? அங்குள்ள உக்கிரமூர்த்தி அப்படிப்பட்ட தல்லவா?''

கேசவபிள்ளை இரண்டு மூன்று உத்தியோகஸ்தர்களுடைய அநுபவங் களைப்பற்றிக் கூறினான். தனக்குப் பிரமோஷன் கிடைத்துவிட்டால் சபரிமலைக்குச் சென்று அர்ச்சனை நடத்த இருப்பதாக ஓர் உத்தியோகஸ்தர் மனத்திலே தியானித்துக்கொண்டார். பிரமோஷன் கிடைத்துவிட்டது. 'விளக்கு விழா'வினையும் விரதச் சடங்குகளையும் ஆடம்பரமாக நடத்தி விட்டு அவர் மலைக்குச் சென்றார். ஒருவர் பதவியிலிருந்து தாழ்த்தப்பட் டார். அவரும் மலைக்குச் சென்றார். அவருக்குத் திரும்பவும் பிரமோஷன் கிடைத்துவிட்டது. புகார்களும், மேலதிகாரியின் கோபமும் எல்லாம் பஞ்சாய்ப் பறந்துபோன கதைகளும் உண்டு. கேசவபிள்ளை சொன்னான்:

''சர்க்கார் உத்தியோகம் அல்லவா, கிட்டு மாமா? செலவுக்குப் போதா மல் வரும்போது எல்லாருமே ஏதாச்சும் 'கிடைச்சதை' வாங்கிடுவாங்க. எல்லாருக்கும் தெரிஞ்ச விஷயந்தான் அது. அப்படி வாங்கறபோது சிலவங்களுடைய மனம் பற்றியெரிஞ்சுடும். அந்த நெருப்பிலிருந்து காத்துக்கொள்ளவும், மேற்கொண்டு கெடுதல் ஒண்ணும் ஏற்படாமே பார்த்துக்கொள்ளவுமே 'சாமியே சரணமையப்பா'ன்னு கோஷித்துக் கொண்டு மலைக்குப் போறுங்க.''

கிட்டு மாமா ஓர் உபதேசம் பண்ணினார்:

''என் மருமகன் ஒருமுறை மலைக்குப் போகணும்.''

கேசவபிள்ளை சொன்னான்:

''நான் போயி சாமி தரிசனம் பண்ணத்தான் போறேன். எனக்கு ஒரு நல்ல பிரமோஷன் கிடைச்சுட்டா கண்டிப்பா நான் போவேன். மனசிலே தியானிச்சு வச்சிருக்கேன் மாமா.''

''விளக்கு விழாவும், விரதச் சடங்குகளும் எல்லாம் தடபுடலா இருக்கணும்.''

''அது திருவனந்தபுரத்திலேதான் நடக்கணும். எ ஜ மா ன னும், செக்ரடரிகளும், திவான்ஜியோட பிரைவேட் செக்ரடரியும்—எல்லாரும் வருவாங்க. ஒருவேளை திவான்ஜிகூட வரலாம்.''

கிட்டு மாமா ஆச்சரியத்தினால் வாய் திறந்தவாறு அசையாமல் உட் கார்ந்து விட்டார்:

''அப்போ, என் மருமகனுக்குத் திவான்ஜியோடு அறிமுகமுண்டா?''

கேசவபிள்ளை புன்னகை புரிந்தான். அறிமுகம் உண்டு என்றுதான் அதன் பொருள். இப்போது கிட்டு மாமாவுக்கு வீடு வீடாகச் சென்று சொல்ல இன்னுமொரு செய்தி கிடைத்துவிட்டது. இன்றைக்கு மட்டு மின்றி நான்கைந்து நாட்கள் வரையில் ஊர் முழுதும் நடந்து பிரசாரம் செய்வதற்கான செய்திகள் அவருக்குக் கிடைத்திருக்கின் ன. கேசவ பிள்ளை வாங்கி வந்திருக்கிற துணிமணிகளைப்பற்றி வருணித்துக் கூறும் போது தனக்குத் தந்திருக்கும் வேஷ்டி அங்கவஸ்திரங்களை அனைவரும் நம்

காட்டிவிடவேண்டும். கேசவனுக்குத் திவான்ஜியோடு நல்ல அறிமுகம் உண்டு. எனவே, அவனுடைய சபரிமலைப் பிரயாணச் சடங்கு திருவனந்த புரத்திலேதான் நடைபெறப் போகிறது ... இத்தியாதி ... இத்தியாதி ... என்ன என்ன சொல்லவேண்டியிருக்கிறது!

கேசவபிள்ளைக்குத் திவான்ஜியுடன் அறிமுகம் உண்டு என்று சொன்ன போது கிட்டு மாமா மீண்டும் அந்த வார்த்தைகளைக் கூறிவிட்டார்:

"எல்லாம் அவளோட அதிருஷ்டம்! அவள் அதிருஷ்டக்காரிதாம்ப்பா!"

நல்லவளான நாணிக்குட்டி அளவுக்கு மீறிய உற்சாகத்துடன் அங்கேயும் இங்கேயுமாக விரைந்து நடந்தவாறு விவரங்களைக் கேட்டறிந்துகொண் டிருந்தாள். முதலிரவுக்கான நல்ல நாளைப்பற்றிக் கிட்டு மாமாவும், கேசவபிள்ளையும் பேசியதை அவள் மறைந்து நின்று கேட்டாள். சில வற்றைத்தான் அவளால் புரிந்துகொள்ள முடிந்தது; அல்லது கவனிக்க முடிந்தது. அவள் விரைந்து சென்று கார்த்தியாயினிடம் கூறினாள்:

''இன்னைக்கு நல்ல நாள்தான்!''

கார்த்தியாயினிக்குப் புரியவில்லை.

''குளிச்சுச் சுத்தமா ஸ்ரீகரமா நில்லு!''

கார்த்தியாயினி நாணத்தினால் நாணிக்குட்டியின் கன்னத்திலே ஒரு குத்துக் குத்தினாள்.

அவள் கார்த்தியாயினியின் காதருகில் எதையோ முணுமுணுத்தாள். தொடர்ந்து, அநுபவம் பெற்ற அவள் பல உபதேசங்களைச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அப்போது அடுக்களையில் சுடுகு தாளித்ததன் மணம் அங்கெல்லாம் பரவிவிட்டது. ஏதோ ருசிகரமான பதார்த்தத்தின் மணம்!

* * *

மதிய நேரம். அம்மா ஏதோ அண்டை வீட்டுக்குச் சென்றிருந்தாள். கௌரியம்மா குளிக்கச் சென்றுவிட்டாள். அப்பா கூடத்திலே படுத்துத் தூங்குகிறார்.

கார்த்தியாயினிக்கு மட்டும் சமையற்கட்டிலிருந்து வெளியே வர நேர மாகவில்லை. மாலை உணவைத் தயாரிக்கும் வேலையிலேதான் அவள் ஈடுபட்டிருந்தாள்.

அன்று, கேசவபிள்ளை அவளை இரண்டு மூன்று தடவை பார்த்திருக் கிறான். ஆனால், ஆங்காங்கு வேலை நிமித்தமாக விரைந்து சென்றபோது அவளை, மின்னி மறைகிற ஒரு மின்னலைப் போலவே அவனால் பார்க்க முடிந்தது.

அவன் அடுக்களைக்குள்ளே நுழைந்ததை அவள் பார்க்கவில்லை. காபிக்கொட்டை வறுத்துக்கொண் டிருந்தாள். அவள் கவனமெல்லாம் அடுப்புமீதுள்ள காபிக்கொட்டைமீதுதான். திடீரெனத் திரும்பிப் பார்த்தாள். கணவன்! நடந்து வந்த அவன் அப்படியே நின்றுவிட்டான்.

அவள் புடைவை எங்கும் கரி, மஞ்சள் முதலியவை படிந்து அழுக்கேறி யிருந்தது. ரவிக்கையின் முதுகுப்புறத்திலும் கழுத்துப் பகுதியிலும் எண்ணெயும் அழுக்கும் சேர்ந்து கெட்டி தட்டி நிற்கிறது; கன்னத்திலே கரி; கூந்தலிலே சாம்பல்; மேனியெங்கும் வேர்வைத் துளிகள்! நெருப் பருகில் அமர்ந்திருந்து வந்ததனால் ஏற்பட்டதாக இருக்கலாம்.

அவள் கை தளர்ந்துவிட்டதுபோல், காபிக்கொட்டையைச் சட்டுவத் தினால் வறுப்பது நின்றுவிட்டது. அவள் சிரம் குனிந்தது.

என்ன கேட்பதென்று அவனுக்குத் தெரியவில்லை. ஏதாவது கேட்டுத் தானாகவேண்டும்!

''சட்டியிலே என்ன?'' கேட்டுவிட்டான்.

அவள் வாய்திறக்கவில்லை. சிரிப்பு வருகிறது.

''அடுக்களேலேருந்து எப்போதான் வெளியே வருவே?''

அதற்கும் பதில் இல்லை.

''நீ குளிக்கிறதில்லேயா?''

நிசப்த நிலை.

யாருமில்லாத சந்தர்ப்பத்தைப் பார்த்து அவன் அவளிடம் சென் றிருப்பது எதற்காக? அவளை ஒருமுறை அள்ளித் தழுவிடவா? ஒரு முத்தம் அவளிடமிருந்து பெற்றிடவா? இல்லாவிட்டால் அவளுக்கு ஒரு முத்தம் கொடுத்திடவா? ஏதாவது வேடிக்கைப் பேச்சுக்களில் ஈடுபடவா? அவளை எவ்வாறு அள்ளித் தழுவுவது? கரி, அழுக்கு, எண்ணெய், வேர்வை ஆகியவற்றால் வழவழவென்றிருக்கிற அவள் வதனத்திலே முத்தமிடுவ தென்றால், அது அவன் முகத்திலேயே கரி பூசிக்கொள்வதாகிவிடும். அப்புறம் சோப்புத் தேய்த்துக் குளிக்கவேண்டியதுதான்.

இத்தகைய சுபநாட்களில் இளம் பெண்கள் இப்படித்தான் இருப்பார் களா? 'அந்த முதல் முத்தம் அளித்திடத் தன் கணவன் எந்தச் சந்தர்ப்பத் தில்தான் வந்திடுவானே?' என்று நினைத்துத் தயாராகக் குளித்துச் சுத்த மாக, புதுத் துணிகள் அணிந்து பொட்டும் பூவுமாகத் தயாராக நிற்க வேண்டாமா?

அவனுடைய ஆவேச உணர்ச்சி திடீரெனத் தணிந்துபோயிருக்கலாம். இதயம் நடுங்கியவாறு அவளைப் பின்னடையச் செய்திருக்கலாம். அவ ளுடைய தற்போதைய உருவம் அத்தகைய அருவருப்பினை ஏற்படுத்தி யிருக்குமா? அதனால்தானே, வந்த வேகம் தணிந்து அருகில் நெருங்காமல் அப்படியே நின்றுவிட்டான்?

அருமையான பதார்த்தங்களுடன் உணவைச் சமைத்து அளிப்பது மட்டுந்தான் ஒரு மனைவியின் கடமை என்று அந்தப் பட்டிக்காட்டுப் பெண் எண்ணியிருக்கிறாள் போலிருந்தது. அதற்குமேல் ஏதாவது இருக்குமானால், அது இந்த நண்பகலிலே நடைபெறுமென்று அவள் கருதி யிருக்கமாட்டாள் அல்லவா? அவன் சமையற்கட்டுக்குள்ளே சந்தடி செய்யாமல் நுழைந்து வந்திடுவான் என்று அவள் நினைத்திருக்கவே மாட்டாள்.

கணவனுக்குச் சம்மதம் இல்லாத கல்யாணந்தான் இது என்று அண்டை வீட்டினர் சொல்லி அவள் அறிந்திருந்தாள். அத்தகைய ஒரு கணவனைத் தன்னிடம் நெருங்கிப் பழகச் செய்ய எந்த ஒரு பெண்ணும் முயன்று பார்ப்பாள் அல்லவா? சிங்காரப் பார்வை பார்க்கவேண்டிய தில்லை. தன்னை அலங்கரித்துக்கொண்டாவது நிற்கவேண்டாமா? அலங் கரித்துக்கொண்டு நிற்பது என்பது பெண்களின் இயல்புதானே? இயற்கைச் சுபாவந்தானே?

அவன் அங்கே அருவருப்போடுதான் நின்றானா? அவன் கேட்ட கேள்வி கூட அத்தகையதொரு மனப்பான்மையின் பிரதிபலிப்புத்தானா? இத்தகையதோர் அசட்டுப் பெண்ணுடன்தானே, வாழ்நாள் முழுதை யும் கழிக்கவேண்டுமென்ற வெறுப்புணர்ச்சி நிச்சயமாக அவனுக்கு ஏற் பட்டிருக்கலாம் அல்லவா? அவன் அடிக்கடி ஊருக்கு வராமல் இருந்து விட்டால்கூட அதிலே ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாணிக்குட்டி, குட்டியம்மாளிடம் சென்று ஏதோ முக்கியமான விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண் டிருந்தாள். கேசவபிள்ளை அடுக்களைக்குள்ளே நுழைந்திருக்கிறான் என்பதை அறிந் திராத குட்டியம்மா அங்கே சென்றாள். அவன் அங்கிருந்து வெளியே குதித்துவிட்டான். குட்டியம்மா கார்த்தியாயினியைக் குறை கூறினாள்:

''இப்படியுண்டா ஒரு அறிவும் தன் நினைவும் ஊக்கமும் இல்லாத இளம் பெண்! நான் காலையிலிருந்தே சொல்லுகிறேன், அவளைப் போய்க் குளித்து உடுத்துக்கொள்ளும்படி. அவளானால் வறுவலும் புளிசேரியும் செய்துகொண்டிருக்கா.''

மாமியார் அடுக்களைக்குள்ளே வந்துவிட்டார். கேசவபிள்ளை நழுவிப் போனதைக் கார்த்தியாயினி அறியவில்லை. சட்டுவம் இரும்புச் சட்டியில் போட்டது போட்டமாதிரி கிடக்கிறது. கால் முட்டிகளுக்கிடையிலே வதனத்தைப் புதைத்தவாறு அவள் அப்படியே உட்கார்ந்திருந்தாள். குட்டியம்மா சொன்னாள்: ''என்னடி பெண்ணே, இப்படி உட்கார்ந் திருக்கிறே?''

கார்த்தியாயினி சிரத்தை உயர்த்தினாள். காபிக்கொட்டை கரிகிப் போயிருந்தது.

''ஐயையோ! காபிக்கொட்டை எல்லாம் கரிகிப் போச்சே! உனக்கு என்ன வந்துவிட்டது?''

அவள் பதில்சொல்ல வில்லை. அவளுக்கு என்ன வந்துவிட்டதென்பதைப் பற்றிச் சொல்லமுடியுமா? சொன்னாலும் அது தவறெனச் சொல்வதற் கில்லை. ஆயினும் சொல்ல முடியுமா?

''உனக்கு மயக்கம் ஏதாவது வந்துட்டதாம்மா?'' அவர் அவளுடைய முகத்தை உற்றுப் பார்த்தார். மயக்கம் ஏற்படவில்லை. சிரிப்பு அந்த முகத்திலே இப்போதுகூடத் தங்கி நிற்கிறது.

குட்டியம்மா எதையோ யூகித்துக்கொண்டாள்.

''நீ போயிக் குளியம்மா. *இஞ்சை நாரிணை எடுத்துக்கிட்டுப் போ! முடி முழுதும் அழுக்கேறியிருக்கு. *தாளி தேய்த்துக் குளி! போ! என் தங்க மல்ல? போயிக் குளித்துவிட்டு வா!''

அப்போது நாணிக்குட்டி அங்கே வந்தாள்.

குரலைத் தாழ்த்தியவாறு குட்டியம்மா கூறினாள்:

''அவனுக்கு உன்னை நாற்றமடிக்காதா, மகளே? ஏன் இப்படி நிற்கறே?''

குட்டியம்மா கார்த்தியாயினிக்கு இஞ்சையினைக் கிழித்து நாராக்கிக் கொடுத்தாள். தாளியையும் தயார் செய்து கொடுத்தாள். அவளைத் தானே சென்று குளிப்பாட்டலாமா என்றும் அவள் நினைக்காமல் இல்லை. ஆனால் அந்த வேலையை நாணிக்குட்டி செய்வதாக ஏற்றுக்கொண்டாள்.

* * *

மாலை நேரத்தில் வீட்டு மனையின் மேற்குப் பகுதியில் கேசவபிள்ளை உலாவிக்கொண்டிருந்தான். அது குடும்ப தேவதையின் கோவில் மனை. ஒரு பெரிய தேன் மாமரம் அங்கே உண்டு. பாழடைந்துவிட்ட கந்தர்வக் கோவிலின் முன்னாலுள்ள ஒரு பெரிய 'கிளிஞ்சல்' மரத்தைச் சுற்றி முல்லைக்கொடி படர்ந்து கிடந்தது. சிறு வயதிலே, அந்த முல்லைக் கொடியிலிருந்து கூடைக் கணக்கிலே பூக்களைப் பறித்தெடுத்திருக்கிறான் கேசவபிள்ளை. இன்றுகூட அந்தக் கொடி பூத்துக் குலுங்குகிறது. யாராவது ஒருவன் அதிலிருந்து ஒரு மொட்டினையாவது கிள்ளியெடுப்பதாகத் தெரியவில்லை. அன்றுடம் கிளிஞ்சல் மரத்தடியிலே 'புஷ்ப விருஷ்டி' நடந்து பூக்கள் குன்றெனக் குவிந்து கிடக்கிறது. வாட்டமடைந்தவை, சருகுபோல் ஆகிவிட்டவை எல்லாம் உண்டு. கடவுளே! இந்த நறுமலர்களைப் பறித்தெடுத்து மாலை தொடுத்துக் கூந்தலிலே சூடிக்கொள்ள ஒரு பெண்ணாவது இந்த ஊரிலே இல்லையா?

அங்கே, வீட்டுக்குள்ளே மருமகளோடு சண்டை போடுகிறார் மாமியார். குளித்துவிட்டு வந்த மருமகளுடைய கூந்தலைச் சீவியெடுத்துச் சிங்காரித்துக் கட்டிவைக்கிறார். அழுக்கும் எண்ணெயும் முழுதும் போய் விடவில்லை என்பதுதான் அவருடைய குற்றச்சாட்டு. கழுத்துக்குப் பின்னாலுள்ள அழுக்கு அப்படியே இருக்கிறதாம். அவள் நன்றாகத் தேய்த்துக் குளிக்கவில்லையாம்!

---

*இஞ்சை, தாளி: அந்தக் காலத்தில் சோப்பு பரவலாகப் பயன்படுத்தப்பட்டதில்லை. முட்கள் உள்ள ஒரு காட்டுக் கொடிதான் இஞ்சை. அதன் தோலை உரித்துக்கிழித்து விட்டால் நார்களாகக் கிடைத்துவிடும். அதைச் சுருட்டி உடம்பிலே தேய்த்துவிட்டால் எண்ணெய், அழுக்கு ஆகியவை போய்விடும். தாளி: அரைத்து நீரில் குழைத்துவிட்டால் கொழுப்பு போல் ஆகிவிடுகிற இலைகளும், கொடித்தண்டுகளும் இருக்கின்றன. அதைத் தலையில் மட்டுந்தான் தேய்ப்பார்கள். எண்ணெய், அழுக்கு ஆகியவற்றை அது எடுத்துவிடும். (மொ—ர்.)

''ஸ்ரீபத்மநாபா, நான் என்ன செய்வேன்? இந்தப் பொண்ணு இப் படியாயிட்டாளே . . . !'' அவருக்கு மனச்சங்கடம் ஏற்பட்டுவிட்டது.

அன்று கேசவபிள்ளை கொண்டு வந்திருந்த ஜரிகைப் புடைவை ஒன்றை மருமகளை அணிய வைத்தார். நல்ல ரவிக்கையாகப் பார்த்தெடுத்து அணியச் சொன்னார். கேசவபிள்ளை வீட்டு மனையின் மேற்குப் பகுதியில் தனிமையிலே நின்றுகொண்டிருப்பதைக் குட்டியம்மா பார்த்துவிட்டாள். அவனிடம் செல்லும்படி அவளிடம் அவ்வண்ணமாயால் சொல்ல முடியுமா? அவள் சுயமாக அங்கே செல்ல வேண்டாமா? புருஷனின் மனத்தை மயக்கி யெடுப்பது அப்படி யல்லவா? பக்கத்து வீட்டிலுள்ள தேவகியம்மாவை அதைப்பற்றி அவளிடம் சொல்ல வைத்துப் பார்த்தாள். தேவகியம்மா சொன்னபோது கார்த்தியாயினி ''ச்சீ போ'' என்று சொல்லிவிட்டாள். இருப்பினும், அன்று மாலை அடுக்களைக்குள்ளே போக அநுமதிக்கவில்லை குட்டியம்மா. கௌரியம்மாதான் சமையல் முழுதையும் நிர்வகித்துக் கொண்டாள்.

* * *

வீட்டின் வடக்குப் பகுதியிலுள்ள, சாய்த்துக் கட்டிய கூரையின் கீழுள்ள அறையிலேதான் முன்பு கேசவபிள்ளை படுத்துவந்தான். இரவு உணவை முடித்துக்கொண்டு அவன் அந்த அறைக்கே படுக்கச் சென்றான். அறைக்குள்ளே வெளிச்சமுண்டு. கதவு பாதியளவு மூடப்பட்டிருந்தது. அதைத் திறந்து அவன் உள்ளே நுழைந்தான். வீட்டிலுள்ள பெரிய குத்துவிளக்கு நிறைய எண்ணெய் ஊற்றிப் பற்றவைக்கப்பட்டிருந்தது. அந்தப் பழைய கயிற்றுக் கட்டில்மீது ஒரு புதிய மெத்தைப் பாய் விரித்துப் புதிய தலையணை ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது. அவற்றின்மீது தூய வெள்ளைத் துணி யொன்று போடப்பட்டிருந்தது. கீழே தரைமீது அழுக்கேறிய தாழம்பாய் ஒன்றைப் போட்டு, எண்ணெயும் அழுக்கும் சேர்ந்து கெட்டி தட்டி, தையல் அறுந்துவிட்டதனால் கிழிந்து வெளியே பஞ்சு தள்ளி நிற்கிற பஞ்சுடைய தலையணையும் வைக்கப்பட்டிருந்தது. ஒரு பார்வையில் அங்கே யாராவது இருக்கிறார்களா என்று தெரிந்து கொள்ளமுடியாது. அதுதான் அவனது மணியறை. அவ்வாறுதான் மணிமஞ்சம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேலே சிலந்தி வலைகள் இல்லை எனச் சொல்லமுடியாது. அவ்வறையிலே வாசனைப் பொருள்களின் நறுமணம் கமழவில்லை. சந்தன ஊதுவர்த்திகள் பரிமளம் பரப்பவில்லை. பாய்மீது மலர்கள் சிரிக்கவில்லை. மூலையிலே சுவரைப் பார்த்தவாறு சுவருடன் ஒட்டி நிற்கிறாள் கார்த்தியாயினி. அவன் கதவை உள்ளிருந்து சாத்திக்கொண்டான். கட்டில்மீது அமர்ந்தான். மெல்லிய குரலில் அழைத்தான்:

''இங்கே வா!''

அசைவில்லை.

''இங்கே வரச் சொன்னு . . . ''

கிஞ்சித்தும் அசைவில்லே.

கேசவபிள்ளே எழுந்தான். அவளே நோக்கிச் சென்றான். அவளேப் பிடித்து இழுக்கக் கை நீட்டினான். ஆனல் அவன் அவளேப் பிடிக்கவில்லே. அவன் அறியாமலேயே அந்தக் கை பின் வாங்கிக்கொண்டது. ஒருவேளே மதிய நேரத்தில் அவனுக்கு ஏற்பட்டிருந்த அருவருப்பினல் அப்படியாயிற்ருே?

அவன், அவள் கையைப் பிடித்துக் கட்டில் அருகில் அழைத்து வந்து, அதன்மீது உட்காரவைத்தான். அவள் கள்ளம் கபடமற்ற ஒரு குழந்தை போல் சிரித்துக்கொண் டிருந்தாள்.

அவள் கழுத்தைச் சுற்றிக் கைபோட அவன் ஒருகண நேரம் தயங்கினுன்; கேட்டான்:

''நீ ஏன் குளிக்காமே இருக்கிறே?''

அதற்கும் சிரிப்பேதான் பதில்.

அவன் திருவனந்தபுரத்திலிருந்து கிளம்பி வரும்போது, அவள் ஆயிர மாயிரம் கேள்விகளால் தன்னேத் திணறடித்துவிடுவாள் என்று பயந்து கொண்டிருந்தான். கேட்க அவளுக்கு உரிமையுள்ள கேள்விகள்; பதில் அளிக்காமல் தப்பித்துக்கொள்ளமுடியாத கேள்விகள்! அந்தக் கேள்விகளுக்கான பதில்களேயும் அவன் கண்டுபிடித்து வைத்திருந்தான், திருவனந்தபுரத்திலே அவனுக்கு அழகான பெண் ஒருத்தி இருந்துவருகிருளா? அவள் கேட்கக்கூடிய கேள்வி. ஏன் இவ்வளவு நாட்களாக வராமல் இருந்தீர்கள்? அவள்மீதுதான் உங்களுக்குக் காதலா? இத்தகைய எத்தனே எத்தனே கேள்விகள்! அவள் எதையும் கேட்கவில்லே. கேட்பதற்கான அறிகுறிகளும் தென்படவில்லே.

மறுநாள் காலேயில் அவள்தான் காபி கொண்டுவந்து கொடுத்தாள். உணவு பரிமாறிக் கொடுத்ததும் அவளேதான். அவன் சாப்பிட்டு முடிந்து எழுந்தபோது, அவள் அந்தக் கிண்ணத்திலேயேதான் சாப்பிடவும் சோற்றைப் பரிமாறிக்கொண்டாள்.

''ஏன் எச்சைக் கிண்ணத்திலே சாப்பிடறே? அதைக் கொஞ்சம் கழுவி அப்புறம் அதிலே சாப்பிடக்கூடாதா?''

அதற்கு அவள், ''எங்கப்பா சாப்பிட்ட கிண்ணத்திலேதான் எங்கம்மா சாப்பிடரு'' என்ருள்.

குட்டியம்மாவுக்குப் பெருமகிழ்ச்சி ஏற்பட்டது. அவர் கணவரிடம் கூறினுர்:

''அவங்களுக்குள்ளே இருக்கிற அன்பைப் பாருங்க! பெரிய அன்பு தானுங்க.''

பப்புப்பிள்ளேயும் ஆறுதலடைந்தார். நாணிக்குட்டி அண்டை வீடுகளுக்கெல்லாம் சென்று அந்தச் செய்தியைத் தெரிவித்தாள்:

''அவங்க அன்பா ஒற்றுமையாப் பழகருங்க.''

* * *

அன்று மாலை கந்தர்வன் கோவில் மனைக்குச் சென்றபோது அவன் அவளை அழைத்துக்கொண்டு சென்றான். அவளுக்கு எண்ணற்ற வேலைகள் உண்டு. ஆயினும் அவள் சென்றாள்.

அண்டை வீட்டினரில் சிலர் இந்தக் காட்சியைப் பார்க்கவும் செய்தனர்.

அவன் கேட்டான்: ''நீ ஏம்மா இப்படிக் குளிக்காமே கொள்ளாமே இருந்து வந்தே?''

அவள் கள்ளமில்லா உள்ளத்துடன், ''சும்மா ஏன் குளிக்கணும்?'' என்று திருப்பிக் கேட்டாள்.

அவன் முல்லைப் பூக்களைப் பறித்தெடுத்து மாலை தொடுத்துக் கொடுத்து, ''இதைச் சூடிக்கொள்!'' என்றான்.

''ஓ . . . எதுக்கு?''

அவன் எதற்கென்று சொல்வது?

அன்பு மயிலான அந்தத் தோழி நாணிக்குட்டி முந்திய நாள் இரவில் நடைபெற்ற காரியங்களைத் தெரிந்துகொள்ளும் ஆவலுடன் மறை முகமான பொருள் படைத்த பல கேள்விகளைக் கேட்டாள். ஆவலால் மட்டும் அல்ல; கேசவபிள்ளைக்குக் கார்த்தியாயினியிடம் அன்பு இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவும் கூடத்தான். பொறுமையிழந்த கார்த்தியாயினி கேட்டாள்:

''உங்க முதலிரவு முடிஞ்ச அன்னைக்கு அந்தக் காரியங்களைப்பற்றி நீ என் கிட்டே சொன்னியா?''

''நீ என் கிட்டே கேட்கலை. இருந்தாக்கூட நான் உன் கிட்டே சொல்லியிருக்கேனே.''

''அப்படீன்னா, இப்போ உன் கிட்டே சொல்ல எனக்கு மனசில்லே.''

''கொஞ்சம் சொல்லேன், கார்த்தியாயினீ!''

''அப்படீன்னா . . . ஊம் . . . அப்படீன்னா . . . எல்லாம் . . . நீங்க நடந்துட்டதைப் போலத்தான்.''

கார்த்தியாயினி வெட்கமுற்றுச் சிரித்துவிட்டாள்.

அன்றிரவுகூட முந்திய நாள் இரவிலே கேட்காத கேள்விகளை அவள் அவனிடம் கேட்கவில்லை. இனிமேல் எப்போதாவது அவள் அந்தக் கேள்விகளைக் கேட்பாளென்றும் சொல்வதற்கில்லை. அன்று அவள் விரித்து வைத்திருந்த மெத்தைப் பாய்மீது முல்லை மலர்கள் சிரித்துக் கொண்டிருந்தன.

மறுநாள் அவன் திருவனந்தபுரத்துக்குப் பயணமானான். கதவோரமாக மறைந்து நின்றவாறு அவள் அவனைப் பார்த்தாள். கேசவபிள்ளை கண்ணினாலாவது விடை கேட்கவில்லை. அவள் அவ்வாறு அங்கே நிற்கிறாள் என்பதைக் கவனித்ததாகக்கூடத் தெரியவில்லை.

அன்றிரவு சாப்பிட்டுக்கொண் டிருந்தபோது அவள் மாமியாரிடம் கேட்டாள்: "இனி என்னைக்கு வருவாங்கன்னு சொல்லிட்டுப் போனுங்க, மாமீ?''

''ப்ப்ப்பூ!'' குட்டியம்மாவுக்குக் கோபம் வந்தது. ''ஏண்டீ, நீதானேடீ, கேட்டுப் புரிஞ்சு வச்சிருக்கணும்?''

அவள் சொன்னுள்: ''நான் கேக்கவுமில்லே; என் கிட்டே சொல்லவு மில்லே.''

''நல்ல புருஷனும் பொண்டாட்டியும்! போங்க!'' என்றுள் குட்டி யம்மா.

அத்தியாயம் 13

அழுகின்ற தந்தை

தலைமைச் செயலகத்திலிருந்து வந்த பின் கேசவபிள்ளை தங்கம்மாவை இரண்டொரு முறையே சந்தித்திருக்கிறான். 'புஷ்பாஞ்சலி' நடை பெற்ற நாளில் ஒருமுறை. பின், கோவிந்தன் நாயர், அவளுக்கும் சூப்பிரண்டு ராமசந்திர நாயருக்குமிடையில் ஏற்பட்டிருந்த உறவைப் பற்றிச் சொன்னபோது, அதன் பின் ஒருமுறை. இந்த இரண்டு தடவை களிலும் அவளோடு பேசுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படவில்லை. சந்தித்தான் என்பது மட்டுந்தான். அவளுக்கு அவனிடம் ஏதாவது சொல்ல இருந்ததாகக்கூடத் தோன்றவில்லை. அவனுக்கும் அப்படியே தான். ஆனால், அவள் ஏதாவது பேசத் தொடங்கியிருந்தால், அவனுக்குப் பேசி முடிக்கப் பல விஷயங்கள் இருந்திருக்கும். அவ்வளவு தான். ஏறக்குறைய, வாழ்க்கையிலே முடிந்துவிட்டதோர் அத்தியாயம் போலவேதான் அந்த உறவு இருந்துவந்தது. இனிமேல், ஒரு வேளை, கணக்கைச் சொல்லி முடிக்கவேண்டியதுதான் பாக்கி. அதல்லாமல் வேறு ஏதேனும் உண்டா? அவளே அந்த உறவை உதறித் தள்ளிவிட்டாள் அல்லவா? முறிந்திருக்க வேண்டுமென்றுதான் நினைக்க வேண்டியிருக் கிறது.

சில சமயங்களில் அந்த உறவைப்பற்றிய நினைவுகள் அவன் மனத்திலே தோன்றிவிடும்; மனச்சாட்சியே அதற்காக வலியுறுத்துகிறது என்று வேண்டுமானால் சொல்லிவிடலாம். அந்த உறவு பூரணமாக மறதியிலே மாய்ந்துவிடவில்லை; மாய்த்துவிடப் போவதும் இல்லை. அவனுடைய இன்றைய நிலைக்கு அஸ்திவாரமாக இருந்தவள் அவளேதான். அல்லது, இம்முறையிலேகூட அதைப் பார்க்க முடியுமா? அவனுடைய அல்லது கார்த்தியாயினியுடைய அதிருஷ்டத்தினால் அவளுக்கு அவன் மீது ஒருவிதமான ஆவேச உணர்ச்சி ஏற்பட்டது என்று சொல்ல முடியாதா? மகள்மீது பாசம் கொண்டிருக்கிற சேகரபிள்ளை, ஒரு சுக்கிராசாரியர்போல் சில காரியங்களைச் செய்தார். கசனுக்கு ஏற்பட்டதுபோல் சில காரிய லாபங்கள் அவனுக்கு ஏற்பட்டுவிட்டன. அப்படித்தானே, அந்தக் கதை சொல்லப்பட்டு வருகிறது? அவ்வாறே இந்த உறவைக் கேசவபிள்ளை பார்க்கிறான். ஆயினும் அவன் சேகர பிள்ளைமீது அன்பு செலுத்தக் கடமைப்பட்டவன்தான். பூரணத்துவம் பெற்றுவிட்ட ஒரு மனிதராகவே அவன் அவரைப் பார்க்கிறான்.

தலைமைச் செயலகத்திலுள்ள அந்த நாற்காலியிலே அடக்க ஒடுக்கமாக அமர்ந்திருந்த அந்தப் பெண், சில சந்தர்ப்பங்களில் முடிவு காண முடியாத ஒரு பிரச்னையாக அவன் மனக்கண் முன்னே உருவெடுப்ப துண்டு. அவள் அவனை அந்த வீட்டிலிருந்து திட்டி வெளியேற்றினுள். பிரத்தியேகமான சூழ்நிலையில்தான் அவ்வாறு நடைபெற்றதென்றே வைத்துக்கொள்வோம். காம உணர்ச்சி திருப்தியுறுத ஒரு பெண்ணின் சுபாவந்தான் அது என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனல், நடந்தவை அனைத்தையும் மறந்துவிட்டு அவள் எப்படி ராமசந்திர நாயருக்கு அடிமைப்பட்டாள் என்பதுதான் புரிந்துகொள்ள முடியாத புதிராக இருந்தது. அந்தப் புதிருக்குக்கூட விடை காணமுடியுமென்றலும், அவளுடைய எதிர்காலம் எவ்வாறு அமையப் போகிறது என்பதற்கு விடை காணவேண்டியிருக்கிறது. ராம சந்திர நாயர் அவளை மணந்துகொள்வாரா? ராமசந்திர நாயர் அவளை மணந்துகொள்ளத் தயாராஞல்கூடச் சேகரபிள்ளையின் அங்கீ காரமும் ஆசீர்வாதமும் அதற்குக் கிடைக்குமா? அந்த விஷயத்திலே கேசவபிள்ளைக்குச் சந்தேகம் உண்டு. சேகரபிள்ளை அதற்குச் சம்மதிக்க மாட்டார்.

ஒருவேளை சம்மதித்தாலும் சம்மதிக்கலாம். அவள் அந்தச் சம்மதத் தைப் பெற்றுவிட்டாலும் விடலாம். ஆயினும் அந்த வாழ்க்கை எதிர்காலத்தில் எவ்வாறு அமையும்?

அந்தக் கணக்கைப் பார்த்து முடிக்க ஒரு முறை அவளைச் சந்திக்க வேண்டுமென்ற விருப்பம் அவனுக்கு இருக்கிறது. அங்ஙனம் அதை முடிக்காமல் இருந்தால், தங்கம்மாவை மணம் புரியப் போகிற நபர் என்ற முறையிலேதான் ஜனங்கள் அவனைப் பார்ப்பார்கள். ஜனங்களின் அந்தப் பார்வையை அகற்றிவிடவேண்டும். ஒரு வேளை கணக்கைப் பார்த்து முடிக்க அவள்கூடத் தயாராக இருக்கலாம். அவளுக்குக்கூடத் தான், கேசவபிள்ளை மணம் புரிய இருக்கிற பெண் என்று மக்கள் பேசு வதை நிறுத்திவிடவேண்டுமென்ற விருப்பம் இருக்கலாம்.

பார்க் வியூவிலே கேசவபிள்ளையின் இன்றைய நிலை மிகவும் பாதுகாப் பானதாகிவிட்டது. லவலிங் கம்பெனியினர் போன்ற நபர்களிடம் நேரடியாகப் பேச்சு வார்த்தைகள் நடத்த இப்போது அவனுக்கு உரிமை இருக்கிறது. பிரதமக் காரியதரிசிக்காக மட்டுமின்றி, திவான்ஜியுடைய பிரைவேட் செக்ரடரிக்காகவும்கூட அவன் பேச்சுவார்தைகள் நடத்தி வருகிறன். அவனுடைய இந்த ஈடுபாட்டிலே எஜமானனுக்கும், எஜமானியம்மாவுக்கும் திருப்தியே. பெரிய பெரிய காரியங்கள் பல நடைபெற்று வருவது கேசவபிள்ளை மூலமாகத்தான். தேவையான முறை யிலே லைபல்களைத் தயார் செய்யவும் அவன் கற்றுக்கொண்டு விட்டான்.

ஆனல், ஐயப்பாடு, அவதூறு, தவருகப் புரிந்துகொள்ளுதல் முதலிய வற்றுக்குச் சிறிதும் இடம் கொடுக்காமல் அவன் ஜாக்கிரதையாக இருந்துவந்தான். ஒரு பரிசு. அல்லது ஓர் அன்பளிப்பு என்று அவன்

கையினுலே இன்னொருவருக்கு வாங்கிக் கொடுத்ததில்லே. யாராவது ஏதாவது அன்பளிப்பை அவனிடம் ஒப்படைத்துவிட்டால், அதைப் பேரம் பேசாமல் வாங்கி வைப்பான். அந்தத் தகவலே எஜமானியம்மாவுக்குத் தெரிவிக்கவும் செய்வான். தனக்கென ஒரு தேவைக்காக அவன் எஜமானே இதுவரையில் அணுகியதில்லே.

பார்க் வியூ, பக்திவிலாசம் ஆகிய பெரிய இடங்களிலே அவன் ஓரளவு செல்வாக்கைப் பெற்றுவிட்டான். ஆயினும் அவனுக்கு இன்னும் ஒரு பிரமோஷன்கூடக் கிடைக்கவில்லே. எஜமானன் உற்சாகத்துடன் இருந்து வரும்போது அந்த விஷயத்தை ஒருமுறை சூசகமாக உணர்த்தினுல் என்ன என்றுகூட அவன் யோசித்ததுண்டு. ஆனுல் அவன் அதைச் செய்யவில்லே.

ஒரு நாள் எஜமானியம்மா அவனிடம் ஒரு முக்கியமான செய்தியைத் தெரிவித்தாள். அந்தச் செய்தியினுல் எஜமானியம்மாவுக்குக்கூடச் சற்று மகிழ்ச்சி ஏற்பட்டிருப்பதுபோல் தோன்றியது. தங்கம்மா சண்டை போட்டுக்கொண்டு வீட்டிலிருந்து வெளியேறியிருக்கிருள். இப்போது பால்க் குளக்கரையிலோ, பெருந்தாந்நியிலோ உள்ள ஒரு வீட்டிலே தனியாகத் தங்கி வருகிருள். எஜமானியம்மா சொன்னுள்: ''அந்தச் சுமை உங்க தலேயிலேருந்து இறங்கிவிட்டதல்லவா? ராமசந்திர நாயர்னு ஒரு சூப்பிரண்டு அவளேக் கல்யாணம் பண்ணிக்கப் போருனும். தன்னேக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி அவள் இனிமே உங்ககிட்டே வரமாட்டாள் அல்லவா?''

அந்தக் கதையை விவரமாகத் தெரிந்துகொள்ள அவனுக்கு ஆவல் பிறந்தது. ஒருவேளே எஜமானியம்மாவுக்கு அது தெரிந்திருக்கலாம். ஆயினும் அவளிடம் அதைப்பற்றி எப்படிக் கேட்கமுடியும்?

எஜமானியம்மா தொடர்ந்து கூறினுள்: ''நாணமும் மானமுமில்லாத எச்சைக்கலேக் கூட்டங்கதான் அவங்க. உங்க அதிருஷ்டத்தினுல்தான் அது உங்க தலேயிலேருந்து நழுவிப்போனது. உண்மையிலேயே நீங்க அதிருஷ்டக்காரர்தான். இல்லாட்டா அந்தச் சாக்கடைக் கூட்டத்திலே விழுந்து நீங்க நாசமாப் போயிருப்பீங்க. இங்கே எஜமானனுக்குன்னு அண்ணன்கிட்டே ரொம்பப் பயம். அந்தக் கிழவன் வந்து சத்தம் போட்டா அப்புறம் அந்தக் கழுதை சொல்றதுக்கெல்லாம் கட்டுப்பட்டுடுவாரு. நான் பக்கத்திலேருந்தா அந்தக் கிழவனேட ஜம்பம் இங்கே சாயாது. தம்பிகிட்டே வந்து, மகளேக் கல்யாணம் பண்ணணும்னு உங்ககிட்டே சொல்லச் சொன்னு, அவரு உங்களேக் கேட்பாரு. உங்களாலே தப்பிவிடவும் முடியாமே போயிடும். அந்த ஆபத்து உங்களுக்கு வந்திருக்கும். எப்படியோ நீங்க தப்பிச்சிட்டீங்க.''

இதுதான் எஜமானியம்மாவின் வாதம். ஒருவேளே அவ்வாறு அது நிகழ்ந்திருக்கலாம். சேகரபிள்ளே தனக்குப் பார்க் வியூவில் உத்தியோகம் வாங்கித் தந்தது அவ்வாறுதானே? அந்த வயோதிகர் சொன்னதும் அவ்வாறுதான்.

தங்கம்மாவின் வீட்டிலே நடந்தது என்னவென்று அறியக் கேசவ பிள்ளைக்கு மிகுந்த ஆவல் பிறந்தது. கேட்காமல் இருப்பதே நல்லதென்று அவனுக்குத் தெரியுமென்றாலும் ஆவல் மிகுதியால் அவன் கேட்டு விட்டான்: ''அவள் சண்டை போட என்ன காரணமோ? அப்பாவுக்கு அவளிடம் எல்லையற்ற பாசம் இருந்ததே.''

எஜமானியம்மா, அவர்களிடம் தனக்கு இருக்கிற கடுமையான வெறுப்பை வெளிக்காட்டிக் கூறினாள்: ''என்னவோ! அதைச் சொல்ல எனக்கு அவமானமாப் படுது. அந்த அம்மாவோட மகள்தானே? பிசாசுகள்!''

அந்தக் கதையை எப்படியும் தெரிந்துகொண்டாகவேண்டும். தெள்ளத் தெளிவாக அதை எவ்விதம் அறிவது என்பதைப்பற்றியே அவன் யோசித்தான்.

எஜமானியம்மா புன்னகையுடன் கூறினாள்: ''நீங்க அந்தச் சேற்றிலே போய் விழவேண்டிய ஆளல்ல. உங்களுக்கு, ஒரு நல்ல குடும்பத்திலே பிறந்து மானமும் மரியாதையுமா வாழற ஒரு பெண்ணை நாம்ப கண்டு பிடிக்கலாம்.''

கேசவபிள்ளை நடுங்கிவிட்டான். அனேத்துத் தடைகளும் நீங்கி, பாதை தெளிவாகிவிட்டபோது, பெரியதொரு தடையின் கரிநிழல் முன்னே பரவுகிறதே! முதலிலிருந்தே, எஜமானியம்மா தங்கம்மாவின் கல்யாணத்தைப்பற்றி வெறுப்புடன் பேசியதெல்லாம் இப்படி ஒரு எண்ணத்தை மனத்திலே வைத்துக்கொண்டுதானா? அது மிக ஆபத்தானது. இவள் மனத்திலே எனக்காக ஒரு பெண்ணை எண்ணி வைத்திருக்கிறாள். தன் உண்மை நிலையைத் திறந்து சொல்லிவிட்டால் என்னவென்று கேசவபிள்ளைக்குத் தோன்றியது. அதுதான் நல்லது. அதனால், அதாவது, தான் திருமணமாகிவிட்டவன் என்று தெரிந்தால் தன்னிடம் இவளுக்கு இருக்கிற பிரியத்துக்குக் குறைவு ஏற்பட்டுவிடுமா? இவள் இவ்வளவு தூரம் தன்னிடம் நெருங்கிப் பழகுவது, இவள் எண்ணி இருக்கிற பெண்ணை மணம் புரிய வைக்கலாம் என்ற நோக்குடன்தானா? அவன் மனத்திலே கலக்கம் ஏற்பட்டது. அது மட்டும் அல்ல, திருமண மானவன் என்று சொல்லிவிட்டால், 'எப்போது?' என்ற கேள்வி கிளம்பும். இங்கே வருவதற்கு முன் என்று சொன்னால், தங்கம்மாவையும், சேகரபிள்ளையையும் தான் ஏமாற்றிவிட்டதாக இவள் நினைக்க மாட்டாளா? 'பார்ப்பதுபோல் அல்ல இவன்; பெரும் திருடன்' என்ற முடிவுக்கு வரமாட்டாளா? தன்மீது ஏற்பட்டிருக்கிற பிரியத்துக்குக் குறைவு ஏற்பட்டுவிட்டாலும் பரவாயில்லை. இப்போதே சொல்லிவிடுவது தான் நல்லது. ஒருவேளை பிரமோஷன் கிடைக்குமாயின், அதன் பிறகு சொல்லலாமா?

ஒரு நிமிஷம் கூட எஜமானியம்மா அங்கே இருந்திருந்தால், கேசவ பிள்ளை தன்னையும் அறியாமலே எல்லாவற்றையும் திறந்து சொல்லியிருப்

பான். அதற்குள்ளே அவள் ஒரு பாட்டை முனகியவாறு உள்ளே சென்றுவிட்டாள்.

கேசவபிள்ளை சிறிதுநேரம் வரையில் ஒரு கற்சிலைபோல் அங்கேயே நின்றுவிட்டான். அவன் சிந்தனை இழந்துவிட்டிருந்தான் என்று சொல்லலாம். அவன் புத்தியே மறத்துவிட்டது.

அப்போதுதான் கோபாலன் நாயர் ஒரு பிசாசுபோல் முன்னால் வந்து நின்றார். காவலரை ஏமாற்றி அவர் எங்ஙனம் உள்ளே வந்தார்? என்ன உருவம் இது? சுந்தல் வேஷ்டியும் சட்டையும், அதுவும் அழுக்குப் படிந்திருக்கிறது. கிணற்றிலே விழுந்துவிட்டவைபோல் இரு விழிகளும் பிரகாசிக்கின்றன. சடை பிடித்த தலைமுடி. அந்தப் பழைய குடையும் காகிதக் கட்டும் கையிலே இருந்தன. அவர் ஓர் எலும்புக் கூடாக மாறியிருந்தார். பார்வையிலே ஒரு பைத்தியக்காரனின் தோற்றம். ஆம், அவர் பைத்தியமாகிவிட்டார். சந்தேகமே இல்லை. அவர் பார்க்கும் பார்வையைக் கண்டு பிள்ளை பயந்து விட்டான். படிவாசலில் காவல் காக்கும் காவலரிடம் அவரை உள்ளே நுழைய விட்டது ஏன் என்று கேட்கலாமா என்று அவனுக்குத் தோன்றியது. மேஜைமீது இருக்கிற ஃபைல்களைப் பிடுங்கியெடுத்துக் கிழித்து விடவோ, தன்னைத் தாக்கவோ செய்வதற்குமுன் போலீஸை அழைக்கலாமா? மூச்சு விடுவதும், இழுப்பதும் எவ்வளவு அழுத்தமாயிருக்கிறது! அறிமுகத்தைக் காட்டுகிற முறையில் சிரிக்கிறார். இல்லை. அது மனிதனுடைய சிரிப்பு அல்ல. பற்களை இளித்துக் காட்டுவதுதான். பைத்தியம் பற்களை இளித்துக் காட்டுகிறது. நாற்றம் அடிக்கிறதே . . . அன்று . . . அன்றைய தினமே மறந்துவிட்ட அந்த மனிதர்தாம் இவர்!

கேசவபிள்ளை கேட்டான்: ''ஊம்? என்ன வேணும் உங்களுக்கு?''

அவர் முதுகை வளைத்துச் சிரத்தைக் குனிந்து தொழுதவாறு கூறினார்: ''அந்த ஃபைல் உதவிக் காரியதரிசியோட மேஜைமீது இருக்குது.''

இல்லை; அவருக்குப் பைத்தியம் பிடித்துவிடவில்லைபோல் தோன்றுகிறது.

கேசவபிள்ளை கேட்டான்: ''அதுக்கு நான் என்ன செய்யணும்?''

பதில் இல்லை. சிறிது நேரத்துக்குப் பின் அவர் சொன்னார்: ''என் வீட்டை ஜப்தி செய்து ஏலம் போட்டிருக்காங்க. ரெண்டு குழந்தைங்கள் செத்துப் போயிட்டாங்க. பட்டினி கிடந்துதான். நான் ஊருக்குப் போகல்லே. இந்தப் பணம் கிடைக்கக்கூடியதுதான்னு சொல்றுங்க. ஃபைலைக் கீழ் செக்ரடரி பார்த்தாப் போதும்.''

பொறுமை இழந்த கேசவபிள்ளை திரும்பவும் கேட்டான்: ''உதவிக் காரியதரிசியிடமிருந்து அந்த ஃபைல நான் பிடுங்கியெடுத்துக்கொண்டு வரணுமா?''

அது உண்மையாகவே கேட்ட கேள்விதான் என்று எண்ணியவர் போல் அவர் சொன்னார்: ''இல்லிங்க. நிலைமை அப்படித்தான் இருக்குதுன்னு சொல்ல வந்தேன்.''

கடந்த ஒன்றரை வருஷமாக அந்த ஃபைலை அங்கிருந்து நகர்த்த அவரால் முடியவில்லை. அவர் பார்க்கவேண்டியவர்களைப் பார்க்காமல் இருக்கவில்லை; போகவேண்டிய இடங்களுக்கு நடந்து செல்லாமலும் இல்லை. அவர் எல்லாரிடமும் சொல்லி வருகிறார்; எல்லா இடங்களிலும் நடந்து செல்கிறார். அவருக்கு வேறு வேலை இல்லை. அவர் தொடர்ந்து கூறினார்:

''ஏலம் போட்டிருக்காங்க, ஏலம்! ஏலம் முடிந்து முப்பது நாளைக்குள் பணம் கட்டினுப் போதும்.''

கேசவபிள்ளை மேஜையிலிருந்து இரண்டு ரூபாய் எடுத்து அவரிடம் நீட்டினான். கோபாலன் நாயரிடமிருந்து தான் பெற்றுக்கொண்ட தொகையில், சூப்பிரண்டுக்குக் கொடுத்தது போகப் பாக்கியாகத் தான் அபகரித்தது அவ்வளவுதான். ஒரு விநாடிக்குப் பிறகு அதற்கு வட்டி போல் ஓர் அரை ரூபாய்கூட எடுத்துச் சேர்த்து நீட்டினான்.

கோபாலன் நாயர் சொன்னார்: ''வேணும்; வேணும். எனக்கு வேணும். என் ஃபைல் இங்கே . . .''

அவர் சித்தப்பிரமையின் திசையை நோக்கி நகர்ந்து செல்வதுபோல் தோன்றுகிறது. அவர் பேச்சு அவ்வாறு இருந்தது. அவருடைய பார்வையும் முகத்தோற்றமும் திடீரென மாறிவிட்டனவா? அவர் கண் விழிகள் ஒரே நிலையில் நிற்பதில்லை. இது பெருகிவிடலாம்.

கேசவபிள்ளை சொன்னான்: ''எல்லாம் நான் சரி பண்ணித் தர்றேன். இதை வாங்கிக்கிட்டுப் போங்க!''

''ஓ . . . ஓ . . .''

அவர் நடந்தார், அந்தப் பணத்தை வாங்காமல்.

அவர் வெளியே சென்ற பிறகு, கேசவபிள்ளை கேட்டுக்குச் சென்று காவலனிடம் கேட்டான்: ''அவர் உள்ளே எப்படி வந்தார்?''

காவலன் திகைத்துவிட்டான். கேசவபிள்ளை சற்றுக் கனமான குரலிலே தான் கேட்டான்.

தவறு புரிந்த காவலன் சொன்னான்: ''அவர் ரொம்ப நேரம் அழுது கெஞ்சினார், உங்களை வந்து சந்திச்சாக் காரியம் கைகூடும்னு! நான் அவரை உள்ளே அனுப்பி வச்சேன்.''

''அது பைத்தியம்.''

''அது புரியலை.''

''ஊம் . . .!''

கேசவபிள்ளை ஒருமுறை முனகி உறுதிப்படுத்தினான்.

''இனிமேல் அவரை உள்ளே அனுப்பிவிடக்கூடாது!''

''விடமாட்டோம்.''

அன்று இதே படிவாசல் பக்கம் வந்து நின்று, உள்ளே நுழைந்து பிரதமக் காரியதரிசி மேனனைப் பார்க்கத் தான் பட்ட பாட்டை அவன் மறந்து விட்டான்போல் தோன்றியது.

* * *

விசாரித்துப் பார்த்தபோது, தங்கம்மா பால்க் குளக்கரையிலேதான் தங்கிவருகிறுள் என்பது புலனுயிற்று. ஒருவேளை, தாம் சுதந்தரமாக வந்து போக ராமசந்திர நாயர் அவ்வாறு சொல்லிக் கொடுத்திருக்கலாம் என்று தோன்றியது. காதலன் ஒருவனுக்காக எதையும் செய்யத் துணிபவள் அல்லவா, அவள்? அது கேசவபிள்ளைக்கே நன்கு தெரிந்த விஷயமாயிற்றே. கூடுதலான தகவல்கள் அவனுக்குக் கிடைக்கவில்லை. பல வதந்திகள் பரவியிருக்கின்றன. உண்மையிலே நடைபெற்றது என்னவென்று அறிந்துகொள்ள முடியவில்லை. தங்கம்மா தாய் தந்தையர்களிடம் சண்டை போட்டுக்கொண்டு பிரிந்து சென்று வேறு இடத்திலே தங்கி வருகிறுள் என்பது மட்டும் உண்மை.

ஒரு நாள் சேகரபிள்ளையின் கடிதம் கேசவபிள்ளைக்குக் கிடைத்தது. ஒரு நாள் சௌகரியமிருக்கும்போது செட்டிக் குளக்கரையிலுள்ள தம் வீட்டுக்குக் கேசவபிள்ளை வரவேண்டுமென்பதே அவருடைய கடிதத்தின் முக்கிய சாரம். உடலும் உள்ளமும் களைப்படைந்திருந்ததனுல் பார்க்வியூவுக்கு வந்து சந்திக்காமல் இருக்கிறுராம். அவசர, அவசியமான சில காரியங்களைப்பற்றிப் பேசவேண்டியிருக்கிறதாம்.

அந்தக் காரியங்கள் என்னவென்று கேசவபிள்ளைக்குத் தெரியும். சேகரபிள்ளை என்ன கோரிக்கையைக் கேட்கப் போகிறுர் என்பதிலேதான் அவனுக்குச் சந்தேகம். தங்கம்மாவைக் கல்யாணம் செய்யவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைப்பாரா? அவ்வாறு கோரினுல் முடியாதென்று உறுதியாகச் சொல்லிவிடமுடியும். அப்படிச் சொல்வதற்குப் போதிய காரணங்கள் இருக்கின்றன.

அன்றைத் தினம் அங்கே போகமுடியவில்லை. மறுநாள் போகலாமென்று கருதினுன். மத்தியான்னத்துக்குப் பிறகு சிறிது நேரம் கிடைத்து விடும்.

கேசவபிள்ளை கிளம்பிச் சென்றுன். ஒரு விஷயத்தைத் திட்டவட்டமாகப் பார்த்து முடிப்பதற்காகவே கிளம்பிச் செல்வதாக அவனுக்குத் தோன்றியது. வாழ்க்கையிலே ஓர் அத்தியாயம் முடியப்போகிறது. சரியான முறையில் லாப நஷ்டங்களைக் கணக்குப் போட்டுப் பார்ப்பது சாத்தியமாகப் போகிறது. அது சம்பந்தமாக ஆறுதல் ஏற்பட்டிருந்த போதிலும், அந்த வயோதிகர்மீது அவனுக்கு மிகவும் அநுதாபம் ஏற்பட்டது.

பல இரவுகளில் அவன் அந்தப் படிக் கட்டட வாசலைக் கடந்து சென்றிருக்கிறுன். இப்போது வராந்தாவிலே சேகரபிள்ளை அமர்ந்திருந்தார். அவரைச் சந்தித்து அதிக நாட்களாகிவிடவில்லை. ஆனுல் இப்போது பத்து வயசு அதிகமாகி விட்டதா? திடீரென ஏற்பட்டுவிட்ட இந்த மாறுதலுக்கான காரணம் மிகத் தெளிவானது.

கேசவபிள்ளை வீட்டுக்கு வருவதைக் கண்ட அந்த வயோதிகர் கோவென அழுதுவிட்டார். பிறகு தேம்பித் தேம்பி அழுதார். சொல்ல

விரும்பியதைச் சொல்ல அவரால் முடியவில்லை. இதயம் வெடிக்கிறது. மிகுந்த ஆயாசத்துடன் அவர் ஒருவாறு சொல்லி முடித்தார்:

''அந்த மாபாவி நம்மை ஏமாற்றிவிட்டாள்டா தம்பீ. அவள் ஒரு காலும் நல்லாயிருக்கமாட்டாள்.''

இந்தச் சமயத்தில் தங்கம்மாவின் தாய் வந்து கதவோரமாக மறைந்து நின்றாள். சேகரபிள்ளைக்கு ஆறுதலாகக் கேசவபிள்ளை கூறினான்:

''அழாதீங்க மாமா. இப்படி அழுதா . . .?''

சேகரபிள்ளை தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ளச் சிறிது நேரம் பிடித்தது. மேல் வேஷ்டியின் தலைப்பால் கண்களைத் துடைத்துவிட்டுச் சேகரபிள்ளை கூறினார்: ''உம் முகத்திலே எப்படி விழிப்பேன்னு கவலைப்பட்டுக்கிட்டிருந்தேன். அவள் என் முகத்திலே மட்டும் அல்ல, உங்க முகத்திலேகூடக் கரியைப் பூசிட்டாள் தம்பீ. மாபாவி! நான் என்னோட பையன்களை அவ்வளவா நேசிக்கலை. அவங்களைக் கவனிக்கலை. என்னோட எல்லாமா அவளாத்தான் இருந்ததுடா, தம்பீ!''

சேகரபிள்ளை ஒரு நெடுமூச்சு விட்டார். பாகீரதியம்மா தன்னை உற்றுப் பார்க்கிறாளா என்ற சந்தேகம் கேசவபிள்ளைக்கு ஏற்பட்டது. தன் முகத்திலே ஏதாவது மாறுதல்கள் தோன்றுகின்றனவா என்பதை அவள் கவனிக்கிறாளா? அவள் கணவனிடம் சொன்னாள்: ''இவங்களுக்குள்ளே ஏதாவது சண்டை கிண்டை ஏற்பட்டிருக்கான்னு கேளுங்க!''

அவர் மனைவியிடம் சொன்னார்: ''நீ எதுக்காக இப்படி மறைஞ்சுக் கிட்டு நிக்கறே? இனிமே இப்படி நிற்கவேண்டியிருக்கா?''

அப்போதுகூட அவர் அழுதுவிட்டார். பாகீரதியம்மாவும் அழுதாள். சேகரபிள்ளை தொடர்ந்து கூறினார்: ''இனிமேல் இந்தப் பிள்ளையாண்டான்தான் நமக்கு மகன். ஒரு மகள் நம்மைவிட்டு ஓடிப்போயிட்டாள்னு நமக்கு ஒரு மகன் கிடைச்சுட்டான்னு நினைச்சுக்கோ. இவன் நமக்கு மருமகன் அல்ல; மகன்! நீ வெளியே வா!''

கணவன் சொன்னதை ஏற்றுக்கொண்டவள்போல் அந்த மனைவி கதவைத் திறந்துகொண்டு நின்றாள். அவள் தன் கேள்வியைக் கேசவ பிள்ளையிடம் கேட்டாள்: ''உங்களுக்குள்ளே ஏதாவது சண்டை சச்சரவு ஏற்பட்டதா, மகனே?''

''இல்லை'' என்று அவன் பதில் அளித்தான். ''எங்களுக்குள்ளே எந்த விதமான சண்டையும் இல்லை.''

பாகீரதியம்மா வியந்து போனாள்: ''அப்புறம் ஏன் இப்படி வந்தது?''

ஒரு தாய்க்கும் தகப்பனுக்கும் அது வியப்பைத் தருகிற நிகழ்ச்சி. ஆனால் கேசவபிள்ளையைப் பொறுத்தவரையில் எந்தவிதமான வியப்பும் அவனுக்கு ஏற்படவில்லை. எவ்வாறு அந்த நிகழ்ச்சி ஏற்பட்டது என்பதை அவனால் கற்பனை செய்து காணமுடியும். வீட்டிலிருந்து வெளியேறி விட்டாளே, அந்தச் சம்பவத்தைப்பற்றி மட்டுந்தான் அவனுக்கு அறிய வேண்டியிருந்தது. அந்தத் தாய் தொடர்ந்து பேசலானாள்: ''தம்பீ, உன்மீது அவளுக்கு இருந்து வந்த அன்பு இவ்வளவு அவ்வளவுன்னு

சொல்லிமுடியாது. இங்கே அப்பாவுக்கு அவள் கொஞ்சமாவது மன நிம்மதி கொடுத்திருக்கணுமே. அவள் இப்படி மாறினது எப்படீன்னு தான் புரியலே. என் கொழந்தையை மயக்க மருந்து கொடுத்து மயக்கி இருக்கலாம்ப்பா. அல்லாமே இப்படி ஏற்பட்டிருக்க முடியாதுப்பா. திடீர்னுதானே இப்படி மாறிட்டா?''

கேசவபிள்ளே கேட்டான்: ''என்ன நடந்தது?''

சேகரபிள்ளே தான் கூறினார்: ''அது வா, தம்பீ, சொல்றேன்!''

அவர் அந்தக் கதையைச் சொல்லத் தொடங்கினார்.

சிறிது நாட்களாக அவள் கேசவபிள்ளையைப்பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசுவதில்லே. முதலில் அவள் அப்படி இருந்தவள் அல்ல. அவள் இதயத்திலே நிறைந்து நின்றவன் அவனுக மட்டும் இருந்தான். அவள் பார்ப்பதெல்லாம் கேசவபிள்ளே மயமாக இருந்தது. திடீரென்று ஒரு நாள் கேசவபிள்ளையை அடியோடு மறந்துவிட்டாள். சிறிது வியப்புடன்தான் கதையின் அந்தக் கட்டத்தைச் சேகரபிள்ளே சொன்னார்.

ஆனால், அந்த நாள் எதுவென்று கேசவபிள்ளேக்குத் தெரியும். அன்றிரவு அவனே அவள் வெளியேற்றினாளே, அதற்கு மறுநாள் முதற்கொண்டுதான் அவனைத் தன்னுடைய வாழ்விலிருந்து அவள் துடைத்தெறிந்திருக்க வேண்டும். யாராவது, எந்தக் காரணத்தை முன்னிட்டாவது கேசவனின் நாமத்தை உச்சரித்தால் போதும்—அவள் அந்த விஷயத்தையே மாற்றிவிடுவாள்; இல்லாவிட்டால் அங்கிருந்து எழுந்து போய்விடுவாள். அதைப்பற்றி யாருமே கவனிக்கவில்லே. அப்புறம் அவள் ராமசந்திர நாயரைக் குறித்துப் பேசத் தொடங்கினாள். முதலிலெல்லாம் அவர் அவளுக்குத் தொந்தரவு கொடுத்து வந்தாராம்! அவள் எதைச் செய்தாலும் அவற்றைக் குறை கூறி வந்தாராம். பிறகு அவர் திறமை வாய்ந்த ஓர் உத்தியோகஸ்தர் என்று ராமசந்திர நாயரைப் புகழத் தொடங்கினாள். இந்தக் குறைந்த அளவு காலத்திலே அவளுடைய வாழ்க்கையில் ராமசந்திர நாயர் புகுந்துவிட்டார். அவரால் அவளுடைய வாழ்க்கை நிறைவு பெற்றதாம். அவரைப்பற்றிய பேச்சுத்தான் எந்நேரமும். கதை இந்தக் கட்டத்துக்கு வந்த பிறகு அதைத் தொடர்ந்தது பாகீரதியம்மாதான்.

''கேட்டியா, தம்பீ! அன்னைக்குத் தங்கம்மா அந்த நாயரைப்பற்றிச் சொல்லத் தொடங்கியபோது என் மனத்திலே என்னமோ மாதிரி இருந்தது. நான் அவளே ஒருநாள் கூப்பிட்டு ரகசியமாகக் கேட்டேன்: 'என்னடியம்மா இது? அந்த ராமசந்திர நாயரைப்பற்றி ஏன் இப்படி வெறி புடிச்சு அலையறே? கேசவனுக்குத் தெரிஞ்சு போயிடுச்சுன்னு பெரிய ஆபத்தாச்சே!' கொஞ்சமாவது தயக்கம் வேணுமே அவளுக்கு! அவள் திருப்பிக் கேட்டாள், 'என்ன ஆபத்து?'ன்னு. அசட்டுத்தனமாப் பேசறுள்ளுதான் மொதல்லே நான் நெனச்சேன். அவள்தான் விட்டாளா? அந்த நாயரைப்பற்றிய புகழ்ச்சிதான் எந்நேரம் பார்த்தாலும். உண்மையைச் சொல்றேனே தம்பீ, நான் பயந்துட்டேன்.

நான் அவளைத் திட்டினேன், அப்படியெல்லாம் பேசக்கூடாது என்று. அதுக்கு அவள் கேட்டா, 'ராமசந்திர நாயர் ரொம்ப நல்ல மனிசர். அவருக்கு என்ன குறை?'ன்னு. இது முறை இல்லேம்மான்னு நான் சொன்னேன். அப்பாவுக்கு இதெல்லாம் தெரிஞ்சிருக்கலே. இதெல்லாம் அப்படி ஆண்பிள்ளைங்களிடத்திலே சொல்லலாமா?''

இதைத் தொடர்ந்து அந்தக் கதையைச் சேகரபிள்ளைதான் கூறினார்.

இந்த நிகழ்ச்சிகள் ஒன்றும் சேகரபிள்ளைக்குத் தெரியாது. பாகீரதியம்மா அவரிடம் அதைப்பற்றிச் சொல்லவுமில்லை. தமக்குத் தெரிந்திருந்தால் முளையிலேயே கிள்ளியெறிந்திருப்பேன் என்றே அவர் சொல்லுகிறார். அவர் சொன்னார்: ''இந்தப் பேதைப் பெண்பிள்ளைக்கு என்ன தெரியும்? கிழட்டு மூதேவி!''

பாகீரதியம்மா கூறினாள்: ''அவள் இப்படிப்பட்டவள்னு நெனைச்சேனா, நான்? இப்பவும்கூட அவளை நான் குறை சொல்லமாட்டேன். அவளை மயக்க மருந்து கொடுத்து மயக்கிட்டாங்க. ஒரு நாள் அவள் என்கிட்டே சொன்னா: 'ராமசந்திர நாயர் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்லறாரு. அவரு நல்ல மனிசரு. ஃபாரஸ்டு (Forest) கன்சர்வேட்டரோட மகன், சூப்பிரண்டு'ன்னு. எனக்குப் பயம் வந்துட்டது. நான் கேட்டேன்: 'நீ என்னடி பேசறே? உனக்குப் பைத்தியமா புடிச்சுப் போச்சு?'ன்னு. அப்போ தங்கம்மா ஒரு சிரிப்புச் சிரிச்சா, பாரு, தம்பீ! அந்தச் சிரிப்பு இப்போகூட என் காதிலே கேக்குது. பொல்லாத சிரிப்பு! அதான் தம்பீ, நான் சொல்றேன், அவளை மந்திரவாதம் பண்ணி மயக்கிட்டாங்கன்னு. எம்பொண்ணோட சிரிப்பு எவ்வளவு அழகாயிருந்தது தெரியுமா? பாக்கறவங்க மனசிலே நிலா வீசிடும் தம்பீ. ஆனா அந்தச் சிரிப்பிருக்கே, அது அப்படிப்பட்டதல்ல. சிரிக்கிறப்போ அவள் முழிமுழின்னு முழிக்கிறா. அப்போ அவளைப் பார்த்தா ஒரு பைத்தியக்காரின்னுதான் தோணும். அப்போ அவள் சொன்னா: 'நான் சும்மா தான் சொன்னேம்மா. அவரு என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறாரான்னு கேட்டாரு. அதைத்தாம்மா நான் உன்கிட்டே சொன்னேன்.' நான் சொன்னேன்: 'என் மவள் கனவிலேகூட அப்படி யோசிக்கக்கூடாது. அந்தப் பையன் ரொம்ப நல்லவன். அவனுக்கு இது தெரிஞ்சா செத்தே போயிடுவான். அழகிருக்கிறவளைப் பார்த்து அப்பான்னு கூப்பிடுற வழக்கம் நம்பக் குடும்பத்திலே இல்லை, மகளே. ஒருவளை நிச்சயம் பண்ணினா அவன்தான் புருசன். அதுதான் நம்பக் குடும்பத்தோட வழக்கம். நம்பக் குடும்பத்தில் எந்த ஒரு பொண்ணும் இரண்டாவதொரு முறை கல்யாணம் பண்ணினதே கிடையாது. நீயும் அப்படியே நடந்துக்கணும்'ன்னு.''

அப்போது சேகரபிள்ளை குறுக்கிட்டுக் கூறினார்: ''தம்பீ, அப்படியெல்லாம் இவங்க பேசினாங்களே, அந்தச் சமயத்திலே என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லியிருந்தா இவ்வளவு தூரம் போயிருக்காது. அவளை அடிச்சாவது நான் சரி பண்ணியிருப்பேன்.''

மீதியுள்ள கதையை அவரே சொன்னார்.

ஒரு நாள் (மாதமும் தேதியும் சரியாகக் கூறப்பட்டன.) இரவு சகிக்கமுடியாத உஷ்ணமாக இருந்தது. தூக்கம் வரவில்லை. சேகர பிள்ளை வராந்தாவுக்கு இறங்கி வந்தார். அப்போது ஒருவன் படிக் கட்டட வாசல் வழியாக வீட்டுக் காம்பவுண்டுக்குள்ளே நுழைந்து வந்தான். அங்கே வேறோர் உருவம் நின்றுகொண் டிருந்தது. இரு வரும் சேர்ந்து கொல்லைப் பக்கமாக நடந்து சென்றனர். ''யார் அது?'' என்று கேட்டவாறு சேகரபிள்ளை அவர்களை நோக்கி விரைந்து சென்றார். அவர் ஓங்கி அடித்தார். தங்கம்மாமீதுதான் அடி விழுந்தது. அவள் அவன் முன்னால் வந்து நின்றாள், அடி அவன்மீது விழாதிருக்க. அதற் குள்ளே பாகீரதியம்மா விளக்கை எடுத்துக்கொண்டு வந்தாள். சேகர பிள்ளை ஆத்திரத்தினால் தன்னையே மறந்துவிட்டார். கண்டபடி அடிக்கத் தொடங்கினார். ஆனால் ஓர் அடிகூட ராமசந்திர நாயர்மீது விழவில்லை. அந்த அடிகள் முழுதையுமே மாறி மாறி நின்றவாறு அவளே வாங்கிக் கொண்டாள். சேகரபிள்ளை சொன்னார்: ''அவன்மேலே அடி விழாமல் இருக்க அவள் என்ன என்ன செய்தாள் தெரியுமா? அவளோட சர்க்கஸ் வித்தைகள்தான் என்னே? எனக்கா ஆத்திரம் ஆத்திரமா வந்தது. அந்தப் பக்கமோ, இந்தப் பக்கமோ பார்க்காமே போடுபோடுன்னு போட்டுக்கொண் டிருந்தேன். அப்போ அவள் அலறுப்பலே பேசினாள்: 'இனி அடிக்கக்கூடாது. இவருமேலே ஓர் அடி விழுந்தா . . .?' நான் கேட்டேன்: 'நீ என்னடி பண்ணுவே?' அவள் என் முகத்தைப் பார்த்துச் சொன்னாள்டா தம்பீ: 'நானும் அடிப்பேன்; அப்பான்னு யோசிக்க மாட்டேன்'னு. அப்புறம் நான் தொடவேயில்லை தம்பீ. நான் வீட்டுக் குள்ளே போயிட்டேன். அடுத்த நாள் மாலை வந்து அவளோட சாமான்களை எல்லாம் மூட்டையாக் கட்டி எடுத்துக்கிட்டுப் போனாள்.''

கேசவபிள்ளை எதையோபற்றி நினைத்துக் கொண் டிருந்தான். பாகீரதி யம்மா பேசாமல் இருந்தாள். அந்த வயோதிகர் அமர்ந்திருப்பதைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது. மகள்மீது உயிரையே வைத்திருந்த ஒரு வாழ்க்கை அது. அது தகர்ந்து பொடிப் பொடியாகிவிட்டது. இப் போது அதிலே இருள் சூழ்ந்து நிற்கிறது. நினைந்து நினைந்து தேம்பிக் கதறி அழப் போகிறார். அவருடைய சக்தியும் தைரியமும் எல்லாம் போய் விட்டன. அவர் களைப்படைந்து விட்டார்.

பாகீரதியம்மா சொன்னாள்: ''இப்படிக் கவலைப்படுவதனாலே என்ன பிரயோஜனம்? நமக்கு ஆகாததை வெளியிலே தள்ளிடவேண்டியது தானே? இப்போ நான் என்ன நினைக்கிறேன் தெரியுமா? இரண்டு குழந்தைங்களை மட்டும் நான் பெற்றெடுத்தேன்னு.''

சேகரபிள்ளை அவள் சொன்னதைக் காதாரக் கேட்டிருக்கலாம். ஆனால் அது அவருடைய மூளையை எட்டிற்றா?

சேகரபிள்ளை நீர்த்ததும்புகிற கண்களால் கேசவபிள்ளையை நோக்கி, ''பொறு தம்பீ, பொறு! இந்தக் கிழவனை மன்னித்துவிடு!'' என்றார்.

கேசவபிள்ளை ஆறுதல் கூறினான்: ''நீங்க எந்தத் தவறும் செய்யலியே மாமா!''

அது அப்படியல்லவென்று பொருள்படும்படியாகத் தலையாட்டினார் சேகரபிள்ளை. தழுதழுக்கும் குரலில் கூறினார்: ''உன் முகத்திலே கரியைப் பூசினேன்; உன்னை அவமானத்துக்குள்ளாக்கினேன்.''

''அதை எண்ணிக் கவலைப்படவேணும் மாமா!''

சேகரபிள்ளை, ''எனக்கு இந்தப் பிறவியிலே ஒரே ஒரு மருமகன்தான். அது நீயேதான் தம்பீ'' என்றார்.

அவர் தொடர்ந்து கூறினார்: ''வேறு யாரும் இல்லை. நீ மாதமொரு முறையாவது என்னை வந்து சந்திக்கணும். நீண்ட காலம் வரைக்கும் அப்படிச் செய்யவேண்டியிருக்காது. தம்பீ, நீ எவ்வளவு உயர்ந்த பதவிக்கு வந்துவிட்டாலும், எவ்வளவுதான் அலுவல்கள் இருந்தாலும் நீ இதைச் செய்யணும். எனக்கு ஒண்ணுமே நீ தரவேணும். உயிர் வாழப் போதிய சொத்து எனக்கு இருக்கு. நீ என்னை வந்து பார்த்துக் கொண்டிருந்தா மட்டும் போதும் தம்பீ.''

சிறிது நேரத்துக்குப் பின் அந்த முதுவர் கதறியழுதவாறு கூறினார்:

''தம்பீ, எனக்காக இன்னும் ஒரு காரியத்தைக்கூட நீ செய்யணும். இறுதி மூச்சு இழுக்கிற வேளையிலே, கண்கள் இறுதியாக மூடிவிடும்போது வறண்டு கிடக்கும் என்னுடைய தொண்டையிலே ஒரு துளி நீரை நீ ஊற்றணும். அன்னைக்கு நீ எங்கிருந்தாலும் ஓடியாந்துடணும்.''

அழுகை மேலீட்டதால் அவர் சாய்ந்து விழத் தொடங்கினார். கேசவ பிள்ளை அவரைத் தாங்கிப் பிடித்துக்கொண்டான்.

கேசவபிள்ளைக்கு உத்தியோக வாழ்க்கையில் ஏதாவது உயர்வு கிடைப்ப தென்றால் அதற்கு அடிக்கல் நாட்டியவர் சேகரபிள்ளைதான். அந்தப் பெரிய கடனுக்குப் பதிலாக அவன் அளிக்கவேண்டியது ஒரு துளி நீர் மட்டுந்தான். நிச்சயமாக அவன் அதைச் செய்யத் தயார். அதைவிட எவ்வளவோ மேலான காரியங்களை, அந்தக் கடனுக்குப் பதிலாகச் செய்யவேண்டிய கடமை அவனுக்கு இருக்கிறதல்லவா?

மேலே அடர்த்தியாக வந்து குழுமிய கார்முகில் கூட்டம் ஒரு கண நேரத்திலே சிதறடிக்கப்பட்டு வானம் தெளிவுற்றதுபோல், அவன் மனம் தெளிவுற்றது. அன்றைத் தினம் அவனுக்கு ஏற்பட்ட மன அமைதிபோல் வாழ்க்கையில் ஒரு நாளும் ஏற்பட்டதில்லை. அப்பாடா!

நடந்து சென்றுகொண்டிருக்கையில் அவனுடைய காதுக்குள்ளே கிட்டு மாமாவின் அந்தச் சொற்கள் ரீங்கரித்தன:

''அவள் அதிருஷ்டக்காரிதாம்ப்பா!''

அழுக்கு, எண்ணெய், வேர்வை ஆகியவை சேர்ந்த துர்நாற்ற முடைய அந்தப் பெண்தான் அவள்! நாணிக் குட்டியின் சிநேகிதி!

அத்தியாயம் 14

நாக்கின் நுனியிலே அதிருஷ்டம்

பல ஃபைல்கள், இதுவரையில் பார்த்துச் சமாளித்திராத வகைகள், கேசவபிள்ளையின் மேஜை மீது வரத்தொடங்கின. அவற்றிலே பல, முறையாகத் தலைமைச் செயலகத்திலே ஏறி இறங்கி வந்தவை அல்ல. மிகவும் அவசரத் தன்மை கொண்டவை; இரகசியமானவை. அவற்றை எவ்வாறு செயல்படுத்த வேண்டுமென்று அவனுக்குத் தெரியாது. உதவிக் காரியதரிசி வரையிலுள்ளவர்களுடைய குறிப்புக்களைப் படித்துப் புரிந்துகொண்டு பிரதமக் காரியதரிசிக்குப் புரியவைக்கும் பணியிலேதான் அவன் அண்மைக் காலமாக ஈடுபட்டு வருகிறான். உண்மைக்கும், அந்தக் குறிப்புக்களுக்குமிடையில் ஏதேனும் வேறுபாடுகள் இருந்தால் அவற்றைத் தலைமைச் செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்கான அதிகாரமும் இப்போது அவனுக்கு இருக்கிறது. அவனுடைய திறமையில் அவருக்கு அந்த அளவு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில், அவனுடைய கருத்துக்கள், விருப்பு வெறுப்புக்கள் ஆகியவற்றின் நிழலாட்டத்தை ஒவ்வோர் உத்தரவிலும் பார்க்க முடியும். காரியதரிசிகளின் சிபாரிசுகள் மறுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல—பல! ஆனால் வெகு சமீப நாட்களாகச் சில பிரத்தியேகமான ஃபைல்களைப் பொறுத்தவரையில் அவன் திக்குமுக்காடுகிறான்.

பொறுப்பாட்சி வேண்டும் என்பது ஸ்டேட் காங்கிரஸின் கோரிக்கை. அந்தக் குறிக்கோளை அடைய அது மாபெரும் இயக்கத்தை நடத்துகிறது. அரசாங்கம் அந்தக் கிளர்ச்சியை அடக்க முயல்கிறது. அது சம்பந்தமான ஃபைல்கள்தாம் அவை. அந்த ஃபைல்களை அப்படியே பிரதமக் காரியதரிசியின்முன்னால் வைப்பதைத் தவிர, வேறு என்ன செய்வது என்று கேசவபிள்ளைக்குத் தெரியாது. அவற்றைப் படித்தறிய அவன் முயன்று பார்த்தான். ஆனால், சில விஷயங்களைப் புரிந்துகொள்ள முடிந்ததேயன்றி, பிரச்னைகளுக்குத் தீர்வு காண அவனால் முடியவில்லை. பிரதமக் காரியதரிசிகூட அந்த நிலைமையிலேதான் இருக்கிறார்போலும். ஃபைலைக் கட்டவிழ்த்துப் பிரதமக் காரியதரிசி மேஜைமீது வைத்து விட்டுப் பேசாமல் நின்று விடுவான் கேசவபிள்ளை.

''என்ன இது?''

தலைமைக் காரியதரிசியின் கேள்வி இது. இதற்கு முன் இத்தகைய கேள்விகள் அவரிடமிருந்து வந்ததில்லை. ஃபைலை அவிழ்க்கும்போதே,

அதன் அனைத்து வரலாற்றையும், ஒவ்வொரு குறிப்புக்களின் உள்ளடக்கத் தையும் கேசவபிள்ளை சொல்லிக் கொடுப்பது வழக்கமாயிருந்தது. அப்புறம் அடக்கமாகத் தாழ்ந்த குரலில், ''இப்படிச் செய்தால்கூடப் போதுமானது'' என்று தனது கருத்தைக்கூட வெளியிடுவான். அந்த வழக்கத்திலே பழகிய பிரதமக் காரியதரிசி இப்போது அலுப்புடன் கேட்கிறார்:

''என்ன இது?''

அவனுல் என்ன சொல்லமுடியும்? ஃபைலைப் படித்துப் பார்த்தவன் தான். ஆனல் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமெனச் சொல்லத் தெரியவில்லை. ஆயினும் அவன் கூறினன்:

''காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்களின் பழைய வரலாறுகள் இவை.''

பிரதமக் காரியதரிசி கேட்டார்: ''அதுக்கு?''

கேசவபிள்ளை பதில் சொல்லவில்லை.

அவருக்குக் கோபம் வந்தது. திட்டினர்.

''உங்களை எதுக்காக இங்கே நியமிச்சிருக்காங்க?'' அவர் அவனைக் கடுமையாக ஒரு முறை பார்த்தார்.

கேசவபிள்ளை வேர்வையிலே குளித்துவிட்டான். என்ன பதில் சொல்வது? ஃபைல்களைத் தகுந்த முறையில் புரிந்துகொள்ளவில்லை என்ற உண்மையைச் சொல்லிவிடலாமா? ஆனல், அப்படிச் சொல்லி விட்டால் அவன் அந்த வேலைக்குத் தகுதியற்றவன் என்றல்லவா ஆகிவிடுகிறது? எஜமானனுக்கு அலுப்பு ஏற்பட்டு ஆத்திரம் வந்திருக் கிறது. அவர் அந்தப் பருமனை ஃபைலிலுள்ள காகிதங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்க்கிறார். அவருக்குத் தாங்கமுடியாத கோபம். அவர் அவனைப் பார்த்துக் கேட்கிறார்:

''இதென்ன இளவு? தடியாட்டம் நிக்கறியே!''

கேசவபிள்ளை நடுங்கிவிட்டான். அந்த நடுக்கத்திலிருந்து இரு வாச கங்கள் அவனுக்கே தெரியாமல் உதிர்ந்துவிட்டன.

''காங்கிரஸ் பிரசிடண்டு ஜட்ஜ் பதவிக்காகப் பல தடவை விண்ணப் பித்திருக்கிறார். அப்புறம் அந்தக் குழு உறுப்பினர்கள் கடனுக்காகவும், வேலைக்காகவும் விண்ணப்பங்கள் பலவற்றை அனுப்பியிருக்கிறார்கள். அந்த விஷயங்களெல்லாம் அந்த ஃபைலிலே உள்ளன.''

தலைமைக் காரியதரிசி அலறினர்! ஆமாம், அவர் அலறத்தான் செய்தார்:

''அதுக்கு?''

அவனுக்கு ஏற்பட்ட பயம் அப்போது ஒரு பதிலை வெளியே தள்ளிவிட்டது.

''குறிப்புக்கள் ஒன்றும் கிடையாது.''

அந்தப் பதில் கேசவபிள்ளையின் வேலை என்ன என்பதைத் தெளிவு படுத்துவதாக இருந்தது. ஆனல், எஜமானனுல் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

அவர் மேலும் ஃபைலைப் புரட்டிப் பார்த்துக்கொண் டிருந்தார். சும்மா புரட்டிக்கொண் டிருந்தார். அவ்வளவுதான். கசமுசவென்றிருந்த காகிதங்கள் உள்ள அந்த ஃபைலை அவர் கீழே வீசிப் போட்டார். கேசவபிள்ளை அதை எடுத்து ஒழுங்குபடுத்தி வைத்தான்.

இன்னொரு ஃபைல். எஜமானன் கேட்டார்:

''ஊம்? இதென்ன?''

அது என்னவென்று கேசவபிள்ளைக்குத் தெரியும். அதைப் படித்திருக் கிறான். அது சரியான முறையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் குறிப்புகளுடன் வந்திருக்கிறது. ஆனால் முன்பு நடந்த நிகழ்ச்சியால் திகைத்திருந்தான் அல்லவா? சொல்வதற்கு வார்த்தைகள் கிடைக்க வில்லை. பிரச்னைகளைக்கூட மறந்து விட்டான்போல் தோன்றியது.

காரியதரிசி கேட்டார்:

''இங்கே என்ன செய்துகொண் டிருக்கிறாய்?''

சமாளித்துக்கொண்டு பேசினான்.

''அது ஒரு கடன் பாக்கியை ஈடு செய்வது சம்பந்தமானது. மீனச்சல் தாலூகாவிலுள்ள ஒரு காங்கிரஸ்காரன் ஒரு பெரிய தொகை சர்க் காருக்குச் செலுத்தவேண்டியிருக்கு. அதை முழுதையும் உடனடியாக வசூல் செய்ய 'பக்தி விலாஸ்'த்திலிருந்து கட்டளை வந்திருக்கிறபடியால் நடவடிக்கைகள் வெகு துரிதமாக எடுக்கப்பட்டுப் பூர்த்தியாகி வருதுங்க.''

அதை விவரமாகத் தெரிவிக்க அவனால் முடிந்தது. மேலும் சொன்னான்:

''இப்படிக் காங்கிரஸ்காரங்கமீதுள்ள மூணு நாலு வழக்குகள்கூட இன்னைக்கு இருக்குதுங்க.''

அந்த ஃபைல்கள்மீது உத்தரவுகளைப் பாஸ் பண்ணியனுப்ப பிரதமக் காரியதரிசிக்கு அதிகச் சிரமம் ஏற்படவில்லை. எஜமானன் சற்றுத் தணிந்துவிட்டவர்போல் காணப்பட்டார். ஆத்திரம் அடங்கியிருந்தது. ஆனாலும் அவர் நெருக்கடியிலேதான் இருக்கிறார். அவருக்குத் திருப்தி ஏற்படாமல் இருப்பதற்கான காரணம் அதுவாக இருக்கலாம்.

இன்னுமொரு ஃபைல்! நடுங்குகிற விரல்களினால் அதைப் பிரித்து வைத்தான். ஏதாவது சொல்ல வேண்டுமானால், அதைச் சொல்வதற் கான தைரியம் அவனுக்கு இப்போது இருந்தது. வழக்கமான அந்தக் கேள்வியை அவர் கேட்டார். கேசவபிள்ளை பதிலளித்தான்:

''நிவர்த்தனவாதிகளாக இருந்த அந்த வங்கியினரைப் பற்றியது தான் இது. அவர்கள் இப்போது காங்கிரஸ்வாதிகளாக மாறியிருக் கின்றனர்.''

''அதுக்கு?''

அதற்கு என்ன பதில் அளிப்பது? ஆயினும் அவன் சொன்னான்:

''அந்த பாங்கின் (Bank)டைரக்டர்கள் பாங்கு நிதி முழுதையும் மோசடி செய்ததாக ரிப்போர்ட் வந்திருக்கிறது.''

பிரதமக் காரியதரிசி ஒருமுறை முனகினார். அவ்வளவுதான். அதற்கு என்ன செய்வதென்ற வழக்கமான கேள்வி அவரிடமிருந்து பிறக்கவில்லை.

எஜமானனுக்குத் தன்னைப்பற்றிக் கொஞ்சங்கூடத் திருப்தி ஏற்பட வில்லை என்ற எண்ணத்துடன்தான் கேசவபிள்ளை அன்று பார்க் வியூவிலிருந்து கிளம்பிச் சென்றான். அன்று மட்டும் என்ன? அண்மைக் காலமாகவே, வெறுக்கத் தக்க இந்தக் காங்கிரஸ் செயல் காரணமாக அவன் அவருக்கு முன்னால் பதற்றமடைந்து விடுகிறான். அவருக்கும் அத்தகைய பதற்றம் இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. இந்தக் குழப்பமான சூழ்நிலையினால்தான் அவருக்கு அவன்மீது ஆத்திரம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

* * *

அன்று இரவு கேசவபிள்ளை சிறிதும் தூங்கவேயில்லை. பிடிப்பு தளர்வ தாக அவனுக்குத் தோன்றியது.

பிரதமக் காரியதரிசிக்குத் தொடர்ச்சியாகத் தன்மீது அதிருப்தி ஏற்பட்டுவருகிறது. ஒரு நாள், திறமையில்லை என்று காரணம் கூறித் தன்னை வெளியே அனுப்பிவிடலாம். அப்படிச் செய்து விட்டால் யாரால் அதைப்பற்றிக் கேட்கமுடியும்? கேட்டால்கூட யார் பதில் சொல்லப் போகிறார்கள்? வந்ததுபோலவே திரும்பிவிடவேண்டியது தான். ஒருவேளை சீஃப் செக்ரடரியே திறமையில்லாதவர் என்று கூறித் திவான்ஜி வேலையிலிருந்து நீக்கிவிட்டால்? அதுவும் நிகழக் கூடியதுதான். உறுதியான, பாதுகாப்பான நிலைமைக்கு வந்து விட்ட தாக ஒரு சந்தர்ப்பத்தில் எண்ணியிருந்த கேசவபிள்ளையின் எண்ணத்திலே மண் விழுந்துவிட்டதுபோல் தோன்றியது. அந்த எண்ணத்தின் அஸ்தி வாரமே ஆட்டம் கண்டுவிட்டதுபோல் தோன்றியது.

ஒருவேளை இந்த வேலைக்குத் தான் தகுதியற்றவனோ என்ற சந்தேகம் கேசவபிள்ளைக்குத் தோன்றுமல் இல்லை. அருகதையற்ற இடத்தைப் பிடித்திருக்கிறேனோ? பி. ஏ. பட்டத்தின் மதிப்பைக் கெடுத்துவிட்டவன் என்று, அன்று அங்காடியில் பார்த்தபோது பிரசாத் கூறினானே! கேசவ பிள்ளை அந்த வார்த்தைகளை நினைத்துப் பார்த்தான். பட்டதாரியானா லும், ஒரு பட்டதாரிக்கு ஏற்ற பிடிப்பு, திறமை முதலியவை தனக்கு இல்லையோ? அந்தப் பழைய குமாஸ்தாவாக இருந்து வாழ்நாளைக் கழிப்ப தற்கான திறமை மட்டுந்தான் தனக்கு இருக்கிறதா?

இங்கிருந்து திரும்பிச் சென்றால்? தலைமைச் செயலகத்துக்குத்தான். அப்புறம் மீண்டுமொரு முறை முன்னேறி வரமுடியுமா? சந்தர்ப்பம் ஒரு முறைதான் வாய்க்கும். இனிமேல் தங்கம்மா இல்லை, சேகரபிள்ளை இல்லை. இன்னொரு தங்கம்மா வழியாக மிதித்து ஏறிச்செல்வதற்கான வாய்ப்பு ஏற்படுமா? அவதூறுகளின் ஒரு மூட்டையைச் சுமந்தவாறு, முகம் கறுகித் தளர்ந்தவனாக அங்கே போகலாம். ஆனால் அங்கே போவ தற்கான தெம்பு ஏது? வாழவேண்டாமா? அதுதான் பிரச்னை. எனவே அங்கே போயித்தானாகவேண்டும். எதிர்காலத்தைப்பற்றிய

இன்பக் கனவுகள் எதுவுமின்றி அங்கே அமர்ந்துவிடலாம், பழைய கறுப்பன் பழைய கறுப்பனுகவே மாறிவிட்டான் என்றுசொல்வதுபோல். அத்தகைய பரிதாபமான நிலைமையை அவன் கற்பனைக் கண் கொண்டு தெளிவாகப் பார்த்தான்.

அவ்வளவு தூரம் எண்ணி மனத்தைப் புண்படுத்தவேண்டிய அவசியம் இருக்கிறதா? அத்தகைய மோசமான நிலைமையைக் குறித்துச் சிந்திப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கவில்லை. பிடி தளர்ந்துவிடுமோ என்ற பயம் மட்டுந்தானே ஏற்பட்டிருக்கிறது? கேசவபிள்ளையின் சிந்தனை இந்தக் கட்டத்தை அடைத்தபோது, சீஃப் செக்ரடரி அவர்களாலும், அவருடைய மனைவியாலும் தன்னை இங்கிருந்து அப்படி வெளியேற்றிவிட முடியுமா என்ற கேள்வி சுயமாக எழுந்தது. முடியாது, அந்தத் துணிச்சல் அவர்களுக்கு ஏற்பட்டு விடமுடியாது! திருப்பியனுப்பி விடுகிற உத்தரவிலே கையெழுத்துப் போடும்போது, அவர் ஒரு கணநேரம் சிந்திக்கமாட்டாரா? அந்த விரல்கள் நின்று போய்விடாதா? அவர் மனைவி அதை அறிந்தால் 'கொஞ்சம் பொறுங்கள்' என்று ஒருமுறை சொல்ல மாட்டாளா? 'சின்னப் பாம்புதான்; ஆயினும் அதனைச் சும்மா நோக வைத்து விடுவார்களா?' நீதிசாரத்திலுள்ள இந்த வாசகத்தைப்பற்றி அறியாதவர்கள் யாராவது உண்டா?

பிரதமக் காரியதரிசியைப்பற்றிய பல கதைகள் அவனுக்குத் தெரியும். அவற்றைப்பற்றி நினைத்தபோது அவனுக்கு ஒருவிதமான தைரியமும் துணிச்சலும் ஏற்பட்டுவிட்டன. தளர்ந்துவிட்டதாக எண்ணிய பிடி இறுகி வருவதாக அவனுக்குத் தோன்றியது. காரியதரிசி, அவ்வளவு எளிதில் தன்னை நீக்கிவிடத் துணிந்துவிடுவாரோ என்ற கேள்வியைக் கேட்டுப் பார்க்கிற கட்டம் வரையிலும், அவனுடைய தன்னம்பிக்கை வளர்ந்துவிட்டது.

சம்ஸ்தானம் முழுதும் காங்கிரஸ்வாதிகள் ஆட்சியைக் குறை கூறிப் பிரசாரம் செய்து வந்தனர். திவான்ஜியும் ஏனைய அதிகாரிகளும் நடத்தி வருகிற லஞ்ச ஊழல்கள், அக்கிரமங்கள் ஆகியவைதான் பிரசங்க விஷயங்கள். அவர்கள் அரண்மனையைக்கூட விட்டுவைப்ப தில்லை. தனக்குத் தெரிந்த சில இரகசியங்களை அவர்களுக்குத் தெரி வித்துவிட்டால்...? கேசவபிள்ளைக்கு அன்றுவரையில் ஏற்பட்டிராத துணிச்சல் வந்துவிட்டது. பகைமைக்குப் பாதை வகுத்துத் தருகிற துணிச்சல்!

''இங்கிருந்து வெளியேற்றுவதென்றால் செய்யட்டும்!''

சிறிது உரத்த குரலிலேதான் அவன் அந்த வாசகத்தை உச்சரித்தான். அது யார் காதிலாவது விழுந்திருக்குமா? அடுத்த நிமிஷமே அவன் பயந்துவிட்டான். இல்லை, அறையில் யாரும் இல்லை. பக்கத்து அறை வரை அந்த வாசகம் எட்டிவிடுமா? மணி இரண்டாகிவிட்டது. எல்லாரும் தூங்குகிறார்கள்.

ஆனால், அதனுடைய விளைவுகள்? இல்லாமலா போய்விடும்? அந்தச் செயலின் விளைவுகள் ஒவ்வொன்றுக அவனுடைய பகுத்தறிவு மண்டலத்தைச் சுற்றி வட்டமிடத் தொடங்கின. அந்தப் பகைமை ஆபத்துக்குத்தான் வழி வகுத்துத் தரும். இனிமேல் யாராவது ஒரு மேலதிகாரி அவனை நம்புவாரா? எதிர்காலத்தில் இத்தகைய வாய்ப்புக்கள் கிடைக்காமல் போய்விடுமே! உத்தியோகங்கூட இல்லாமல் போய்விடலாம். மேலதிகாரிக்கு, கீழ்ச் சிப்பந்தியை வேலையிலிருந்து நீக்குவதில் அவ்வளவு கஷ்டம் இருக்கிறதா?

நாசமாய்ப் போக! இந்தக் காங்கிரஸ்காரர்கள் செய்த வினை இது! அவர்களுடைய இந்தக் கிளர்ச்சி மட்டும் நடைபெறுமலிருந்தால், எந்த வித நெருக்கடியுமின்றி எல்லாமே சரியான முறையில் நடக்கும். முன்னாலே தெளிவாகக் காணப்படுகிற பாதையினூடே எளிதில் முன்னேறியிருக்கலாம். இந்தக் குழப்பமான சூழ்நிலை வாழ்க்கையை எந்தப் பக்கமாக இட்டுச் செல்லுமோ, என்னவோ?

இந்தக்காங்கிரஸ்காரர்கள் கோருவதுஎன்னவென்று கேசவபிள்ளைக்குப் புரியவில்லை. வட இந்தியாவில் காந்தியின் தலைமையிலே சுதந்தரப் போராட்டம் நடைபெறுகிறது. அப்பா, கிட்டு மாமா உள்பட வயது முதிர்ந்தவர்கள் அனைவரும் அதை எதிர்த்துப் பேசுவதைக் கேசவ பிள்ளை கேட்டிருக்கிறான். ஆயினும் அந்நிய நாட்டினர் நம்மை ஆள்வ தென்றால் . . . ? அது அவனுக்குப் பிடிக்காத விஷயம். வெள்ளையர் வெளியேறவே வேண்டும். அந்தப் போராட்டத்தை அவனால் புரிந்து கொள்ளமுடிந்தது. ஆனால், திருவாங்கூர்க் காங்கிரஸ்காரர்கள் சொல்வதை அவனால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. அரசனின் ஆதிக்க உரிமைக்கு உட்பட்ட பொறுப்பாட்சி வேண்டுமாம். அப்படியானால் அரசன் இருப்பதில் அவர்களுக்கு எதிர்ப்பு இல்லை. திவான்ஜியைத்தான் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அப்படியானால் அவர்கள் அதை நேரடியாகச் சொல்லலாமே? நேரடியாகச் சொல்லிவிட்டால் தங்கத் தம்பிரான் அதைக் கேட்காமல் இருக்கமாட்டார். திவான்ஜியை நீக்கியிருக்கமாட்டாரா?

அந்தப் பிரச்னையைப்பற்றிக்கூட அவ்வளவு திட்டமாகச் சொல்லிவிடமுடியாது. ஏனென்றால், அரண்மனையையே திவான்ஜியின் பக்தி விலாசம் அவமதிப்புக்குள்ளாக்கிய நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றிருக்கிறது. கேசவபிள்ளைக்கு அந்த நிகழ்ச்சியைப்பற்றிய நினைவு வந்தது.

அரண்மனையின் அநுமதி பெற்று அமல் நடத்தவேண்டிய ஒரு பிரச்னை பக்தி விலாசத்தின் உத்தரவுடன் வந்துவிட்டது. விதிமுறைகளைப் பற்றிய அறிவு படைத்த காரியதரிசி அந்த விஷயத்தைத் திவான்ஜியின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். அதற்காக அவருக்குக் கிடைத்தது திவான்ஜியுடைய கடுமையான எச்சரிக்கைதான். தலைமைக் காரியதரிசி பயந்து நடுங்கிவிட்டார். விதிமுறைகளை மீறிய முறையில் அந்தப் பிரச்னையை அமலாக்கவேண்டிய பொறுப்பு தன் தலைமீது

இருப்பதை நினைத்து இன்னமும் அவனுடைய உள்ளம் நடுங்கிக்கொண்டிருக்கிறது. திவான்ஜியை வெளியேற்றிவிட ஒருவேளை மகாராஜாவுக்கே தைரியமில்லைபோல் தோன்றுகிறது. அந்த உண்மை காங்கிரஸ்காரர்களுக்குத் தெரிந்திருக்கலாம். திவான்ஜி வெளியேறவேண்டுமென்று அவர்கள் வேறெருரு முறையில் சொல்லலாம். ஒருவேளை, இந்தத் திவான்ஜி வெளியேறினால் காங்கிரஸ்காரர்களின் இந்தக் கிளர்ச்சியே முற்றுப் பெறலாம்.

கேசவபிள்ளை தான் படித்திருந்த திருவாங்கூர் வரலாற்றினை நினைவு கூர்ந்தான். இந்த மாதிரியான சந்தர்ப்பங்கள் இதற்கு முன்பு ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், அந்தச் சந்தர்ப்பங்களிலேகூட ஜனங்கள் பொதுவாக அரசன்மீது பற்றுக் கொண்டவர்களாகவே இருந்திருக்கிறார்கள். ஆயினும், இந்தப் பொறுப்பாட்சி என்று சொல்வது என்ன? காங்கிரஸ் தலைவர்களில் சிலர் அதைப்பற்றிப் பேசுகிறார்கள். அவர்களுக்கே அது எப்படியிருக்குமென்று தெரியுமோ, என்னவோ! ஆனால் எல்லாருமே பொறுப்பாட்சிவேண்டும் என்று சொல்லிக் கத்துகின்றர்.

அது எப்படியிருந்தாலும் இருக்கட்டும். அன்றுகூட அதிகாரிகள் இருக்கவே செய்வார்கள். இந்த நிலைமையிலே செல்வாக்கை இழக்காமல் வேலை செய்வது எப்படி? அதற்காக இத்தகைய பிரச்னைகள்பற்றிப் புரிந்துகொண்ட பின்பே மறுவேலை என்று கேசவபிள்ளை எண்ணினான். அது சம்பந்தமான ஃபைல்கள் எல்லாம் பார்க் வியூவுக்கு வந்து படித்துப் பார்த்த பிறகே இறுதியான முடிவுக்கு வரவேண்டும். அந்தப் பிரச்னைகள் அனைத்தையும் புரிந்துகொள்ளவேண்டும்.

அது தூக்கமில்லாத இரவாக அமைந்தது. சிறியதும் பெரியதுமான பல பிரச்னைகள் அவனுடைய மூளைக்குள்ளே எரிச்சலைக் கிளப்பின. மூளையை இவ்வளவு தூரம் உலுக்கிவிட்ட ஒரு தினம், இதற்குமுன் அவனுடைய வாழ்நாளில் ஏற்பட்டதே இல்லை. எதிர்காலத்தைப் பற்றிய நிச்சயமற்ற நிலை தெளிவாகத் தெரிகிறது. அடுத்த நாள் பார்க் வியூவிலிருந்து வெளியேறவேண்டிய நிலை ஏற்படலாம். பின் அங்கே திரும்பிச் செல்ல முடியுமா? மனம் ஒரு பாறைமீது மோதுகிறது. அந்த நிலையில் கடிவாளமற்ற அவனுடைய சிந்தனை திசைமாறிச் செல்கிறது. இன்று சம்ஸ்தானம் முழுதும் நடைபெறுகிற பொதுக்கூட்டங்களைக் கலைத்து விடவேண்டும். கூச்சல்களையும் ரகளைகளையும் கிளப்பி விட்டுப் பேசுவதைத் தடைப்படுத்தவேண்டும். இந்தத் தலைவர்கள் அனைவரும் வேலைக்காக விண்ணப்பித்திருக்கிறவர்கள்தான். இவர்களுக்கெல்லாம் வேலை கொடுத்துவிடவேண்டும். பின்பு இயக்கத்துக்காக முன்வருகிறவர்களைப் பிடித்துச் சிறையில் அடைத்து விடவேண்டும் . . . அந்தப் பாங்கை உடைத்தெறிய வேண்டும் . . . பக்குவமடையாத அவனுடைய சிந்தனைகள் இத்தகைய திசைகளை நோக்கிச் சென்றன.

கேசவபிள்ளை தூங்காமல் படுத்தவாறு இங்ஙனம் சிந்தனை செய்து கொண்டிருந்தபோது பார்க் வியூவிலும் தூங்காமல் இருந்தனர்.

பிரதமக் காரியதரிசி நாதியற்றவர்போல் மனைவிமீது குற்றம் சாட்டிக் கொண்டிருந்தார்.

''இந்த வேலை வேணும்னு நான் அன்னைக்கே சொல்லலையா? கொஞ்ச மாவது மன நிம்மதி கிடைக்காதுன்னு?''

இதே கேள்வி இன்றைத் தினம் பகவதிக்குட்டியாம்மாவின் காதுகளைப் பன்முறைப் புண்படுத்தியது. சென்ற சில தினங்களாகத் திவான்ஜி, தலைமைக் காரியதரிசியைப் பெரிதும் பயமுறுத்தி வருகிறார். எப்போது வேலையிலிருந்து நீக்கிவிடுவாரோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. நீக்கி விட்டாலும் மனநிம்மதியுடன் வாழவும் அநுமதிக்கமாட்டார் என்றும் சொல்லப்படுகிறது. நிலைமை அவ்வளவுதூரம் முற்றியிருக்கிறதென்று கிருஷ்ணன் நாயர் சொல்கிறார். இந்தத் தகராறுகள் முழுதையும் தலைமீது ஏற்றி வைத்தவள் பகவதிக்குட்டியம்மாதான். சீஃப் செக்ரடரியின் மனைவியாகப் பார்க் வியூ பங்களாவில் வாழ்ந்தே ஆகவேண்டுமென்று அவள் விரும்பினாள். அதுபேராசை என்று இப்போது கிருஷ்ணன் நாயர் என்ற சீஃப் செக்ரடரி சொல்கிறார்.

''பார்! என்ன விலை கொடுத்து நீ இந்தப் புலிவாலை வாங்கியிருக் கிறாய்? இன்றுவரை சேர்த்து வைத்ததெல்லாம் துடைத்தெடுத்து நீ காணிக்கை வைக்கலையா? இனி மீதி என்ன இருக்குது?'' என்று அவர் மனைவியைக் கேட்டார்.

உடனே பதில் அளித்தாள் பகவதிக்குட்டி:

''இவ்வளவு தூரம் முதுகெலும்பு இல்லாதவர்னு நான் என்னத்தைக் கண்டேன்?''

அந்தத் தவறைக் கிருஷ்ணன் நாயர் அங்கீகரிக்கத் தயங்கவில்லை:

''நான் அன்னைக்கே உன்கிட்டே சொல்லலையா? செக்ரடரியேட்டிலோ, அல்லது ஏதாவது டிவிஷனிலே பேஷ்காராகவோ வேலை செய்வதுபோதும் அல்லவா? வாழ்க்கையிலே அமைதியும், மன நிம்மதியும்தான் வேணும்.''

ஒரு விநாடிக்குப் பின் கிருஷ்ணன் நாயர் கேட்டார்:

''எதுக்காக இந்தப் பேராசை?''

ஏஜமானியம்மாவின் உள்ளம் நிறைந்த ஏளனம் ஏதோ கடுமையான ஒரு வாசகத்தைக் கழுத்துவரையில் தள்ளிக்கொண்டு வந்தது. ஆனால் அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்:

''என்னை அதைப்பற்றி ஒண்ணும் சொல்ல வைக்காதீங்க.''

இருந்தும் அவளால் அடக்கிவைக்க முடியவில்லை. சொல்ல வேண்டியது வெளியே குமுறி வரத் துடித்தது. அவள் கணவனை ஏளனத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாள். 'நான் தேடித் தந்தேன். அதைச் சரிவரப் பாதுகாக்க முடியவில்லை என்றால் கீழே இறக்கி வைத்து விடுங்கள்' என்று அவளுடைய அந்தப் பார்வை சொல்வதுபோல் தோன்றியது. அந்தப் பார்வையில் இன்னும் சில விஷயங்கள்கூட மிதந்தன. பட்டாளத்திலுள்ள ஒரு சாதாரண சிப்பாயின் மகன் பார்க் வியூவில் நுழைய விரும்பமாட் டான் என்ற வாசகம் அவளுடைய இதழ்களைத் துடிக்கச் செய்தது.

கிருஷ்ணன் நாயர் பேசவில்லை. ஆதரவற்றவர்போல் சிரத்தைக் கரத்தில் தாங்கியவாறு அமர்ந்திருந்தார். அவருடைய நிலைமை பரிதாபமாக இருந்தது. ஒன்றுமே பேசுவதற்கில்லை. அவர் தலைமைக் காரிய தரிசிப் பொறுப்பை விரும்பியவர் அல்ல. அதை வேண்டாமென்று சொல்லவில்லை என்பது உண்மைதான். அதற்குக் காரணம் உண்டு. பொதுவாகக் குழப்பமின்றியே அந்த வேலையை நிர்வகித்து வரலாம். அதற்கான பயிற்சியும், பரிசயமும், விதிமுறை அறிவும் அவருக்கு இருந்தன ஆனால், இத்தகைய அசாதாரணமான ஒரு சூழ்நிலை ஏற்படுமென்று அவர் அறிந்திருக்கவில்லை. தெரிந்திருந்தால், அதை வேண்டாமென்று அன்றைத் தினமே சொல்லியிருப்பார். துவக்கத்திலேயே மனவியை அந்த முயற்சியிலிருந்து விலகும்படி செய்திருப்பார். நிவர்த்தனவாதிகளின் கிளர்ச்சி அவருக்கு ஒரு பெரிய பிரச்னையாகப் படவில்லை. ஆனால் இப்போது என்ன செய்யவேண்டுமென்று அவருக்குத் தெரியாது. திவான்ஜி அவரிடமிருந்து, இன்றைய இயக்கத்தை ஒடுக்குவதற்கான தந்திரங்களை எதிர்பார்க்கிறார்.

அவர் தம் நெருக்கடியைப்பற்றிப் பத்தாவது தடவையாகச் சொல்கிறார்:

''திவான்ஜிக்கு என்மீது ஆத்திரம். என்னை நம்புவதில்லை. நான் இன்னைக்கு ராஜிநாமாச் செய்யப் போவதாக அவரிடம் கூறிவிட்டு வந்திருக்கேன்.''

பகவதிக்குட்டியம்மாவின் மனமும் நிம்மதியற்றிருந்தது. திருவனந்தபுரத்திலுள்ள ஒரு காரியதரிசியின் மனைவி, தன்னுடைய கணவன் தலைமைக் காரியதரிசியாக வரவேண்டுமென்று விரும்புவது இயற்கை. அதிலே என்ன தவறு இருக்கிறது? திருவனந்தபுரத்திலுள்ள, திறமை படைத்த ஓர் உத்தியோகஸ்தர் மனைவி, கணவனின் பதவி உயர்வுக்காக முயற்சி செய்வது இயற்கைதான். அது நெடுநாளைய வழக்கமாகவும் இருக்கிறது. பியூன் குமாஸ்தாவாக விரும்புவான். குமாஸ்தா தலைமைக் குமாஸ்தாவாக விரும்புவான். தலைமைக் குமாஸ்தா சூப்பிரண்டாக விரும்புவான். இவை எல்லாம் நடைபெறுபவைதான். வழி முறைகள் பற்றியுள்ள நுண்ணறிவு படைத்த பகவதிக்குட்டியம்மா இடத்தையும் ஏவலையும் புரிந்து செயலாற்றினாள். கணவன் அந்த வேலைக்கு லாயக்கற்றவன் என்று அவள் கருதவில்லை. சற்றுத் திறமைக் குறைவு இருக்கிறதென்பதை அவள் அறிவாள். முன்பு இத்தகைய திறமையற்றவர்கள் திவான்ஜிகளாகக்கூட இருந்திருக்கின்றனரே!

ஒரு விஷயம் அவளுடைய மனத்தைத் துன்புறுத்தியது. இந்தப் பதவி உயர்வுக்காகக் கொடுத்த விலை மிகப் பெரியது. அன்று வரையில் சேர்த்து வைத்திருந்தது அனைத்தையுமே அதற்குக் காணிக்கையாக அளித்திருக்கிறார்கள். அப்படியிருக்கையில் திடீரென்று இந்த வேலையிலிருந்து விலகிச் செல்வதென்பது மிகக் கொடுமையல்லவா? போட்ட பணத்துக்கு லாபம் சம்பாதிக்கவில்லை. கணவனின் திறமையின்மை

குறித்துள்ள உணர்வும், ஏளனமும் ஒரு பக்கத்தில்; எல்லாவற்றையும் காணிக்கையாக அர்ப்பித்தபின் பக்திவிலாசம் அதைப்பற்றிப் பராமுக மாக இருந்து வருகிற நிலைமை மற்றொரு பக்கத்தில்; எதிர்காலத்தைப் பற்றிய நிச்சயமற்ற தன்மை இன்னொரு பக்கத்தில்—இவ்வாறாக அனேத்துமே குட்டியம்மாவுக்குத் தெளிவாகப் புரிகின்றன. அவள் கேட்டாள்:

''பிரைவேட் செக்ரடரியைச் சந்திப்பதில்லையா?''

தலைமைக் காரியதரிசி சொன்னார்:

''ஓ. . . சந்திக்கிறேனே. அவன்தான் துரோகி, திருடன்!''

அவர் அவ்வாறு இருக்கமாட்டாரே என்ற நம்பிக்கைதான் குட்டியம்மாவுக்கு. பிரைவேட் செக்ரடரி தனக்குத் துரோகம் செய்வார் என்று அவளால் நம்பமுடியவில்லை. மேலும் பணம் வேண்டுமென்பதற்காகப் பயமுறுத்துகிறார்களோ என்ற சந்தேகம் அவளுக்கு ஏற்பட்டது. அவள் கணவனிடம் அதைப்பற்றிக் கேட்டாள்.

''எனக்குத் தெரியாது'' என்றார் அவர்.

பகவதிக்குட்டிக்கு ஆத்திரம் வந்தது. உண்மைநிலை என்னவென்று அவளுக்குத் தெரியவேண்டும். காரணத்தைக் கண்டுபிடித்துப் பரிகாரம் காண்பதற்காக அவளுடைய மூளை செயல்படத் தொடங்கியிருந்தது. அதற்குக்கூடக் கணவர் உதவும் நிலையில் இல்லை என்று அறிந்து அவள் கேட்டாள்:

''அப்புறம் என்னதான் உங்களுக்குத் தெரியும்?''

''நான் எதை அறியணும்? திவான்ஜிக்கும் பிரைவேட் செக்ரடரிக்கும் என்மீது நம்பிக்கை இல்லை.''

''நம்பிக்கை இல்லேன்னு சொல்றீங்க?''

''ஆமாம், நம்பிக்கை இல்லை.''

பகவதிக்குட்டியம்மாவுக்குப் பரிகாரத்துக்கான பாதை தெளிவாகி விட்டதுபோல் தோன்றியது. அவள் கேட்டாள்:

''அப்படீன்னு?''

''அப்படீன்னு. . . திவான்ஜி இப்போ ஒரு பைத்தியக்காரனுட்டம் ஆயிருக்கிறாரு. அவ்வளவுதான். அவரை அப்படிச் செஞ்சு வச்சிருக்காங்க.''

''யாரது?''

''பிரைவேட் செக்ரடரி.''

''நம்பிக்கை இல்லேன்னு சொன்னீங்களே, அது என்ன?''

தலைமைக் காரியதரிசி ஆத்திரத்துடன் சொன்னார்:

''நம்பிக்கை இல்லேன்னுதான்.''

பகவதிக்குட்டியம்மாவும் விடாமல், ''அதான் என்னன்னு கேக்கறேன்'' என்றாள்.

''அது அப்படித்தான். எல்லாருமே—இந்தச் சம்ஸ்தானத்திலே பிறந்த எல்லாருமே--காங்கிரஸ்காரங்கதான்னு சொல்லி நம்ப வச்சிருக்காங்க.''

நுண்ணறிவு மிக்கக் குட்டியம்மாவுக்கு ஒரு வெளிச்சம் கிடைத்து விட்டது. அவள் அதற்கான யோசனையைக் கூறினாள்:

''அப்படியில்லேன்னு சொல்லணும்; சொல்லி உணர்த்தணும்!''

''நாசமாப் போக! நான் சொல்லாமலா இருக்கேன்? உணரவைக்க முயற்சி செய்யாமலா இருந்துவர்றேன்? உனக்கு அதெல்லாம் புரியாது.''

பகவதிக்குட்டியம்மா அதற்குப் பதில் சொல்லவில்லை. சிறிது நேரத்துக்குப் பின் தமக்கு இருந்து வருகிற நெருக்கடிகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கூறத் தொடங்கினார்:

''அன்றாடம் ஐந்நூறு பொதுக்கூட்டங்கள், சதியாலோசனைக்கூட்டங்கள் ஆகியவற்றின் ரிப்போர்ட்டுக்கள் நேரடியாக வந்து குவிகின்றன. வரி கொடா இயக்கம், பள்ளிக்கூடத்துக்குச் செல்லும் மாணவர்களைத் தடுப்பது, அரசாங்க அலுவலகங்களுக்கு முன்னால் மறியல் செய்வது, சட்டங்களை மீறுவது—போன்றவையே அவர்களுடைய திட்டங்கள். இவை எல்லாம் ஒரே காலத்தில் நடக்கும்னுதான் நினைக்க வேண்டியிருக்கு. எல்லாவற்றையும் சமாளிக்க வேண்டியிருக்கு. அதுக்காக ஏதாவது எழுதியனுப்பவோ, அனுப்பாமல் இருக்கவோ முடியாத நிலையிலிருந்து வர்றேன். எழுதியனுப்பினால் அது தவறாகவும் போய்விடலாம். எழுதியனுப்பாமல் இருந்தால் மறைப்பதாகவும் சொல்றாங்க. எனக்கு மூளைக் கோளாறுதான் ஏற்படுறது.''

முடியைப் பிடித்துப் பிய்த்திழுத்து, பற்களை நறநறவெனக் கடித்தவாறு அவர் சொல்லி முடித்தார்:

''நாசமாப் போன இந்த வேலை வேண்டியிருந்ததில்லே. எல்லாமே நீ செஞ்சுவச்ச வினையேதான். நாளைக்குப் பக்திவிலாசத்துக்கு அனுப்பி வைக்க வேண்டிய கடுதாசிகள் சம்பந்தமான வேலைகள் ஒன்றும் செய்யலே. ஒண்ணுமே செய்ய முடியறதில்லே.''

பகவதிக்குட்டியம்மா ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினாள். கணவர் சொன்னது எதுவுமே அவள் மனத்தில் பதிந்துவிட்டதாகத் தோன்றவில்லை. நிகழ்ச்சிப் போக்குகளின் உண்மைச் சித்திரங்களைத் தெளிவாகக் கண்டறிய அவள் முயன்றாள். கணவருக்கு இருக்கிற திறமைக் குறைவைப்பற்றி அவளுக்குத் தெரியும். அது ஓர் உண்மை; முற்றும் உண்மை! கிருஷ்ணன் நாயர் இந்த வேலைக்கு லாயக்கற்றவர். அவருடைய இந்தத் திறமைக் குறைவைப்பற்றி மற்றவர்களைவிட அவளுக்குத்தான் நன்றாகத் தெரியும். சம்ஸ்தானம் முழுவதும் இதற்கு முன் என்றுமே நடந்திராத மாபெரும் இயக்கம் கொந்தளித்து எழுந்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் எந்த அலை மோதலையும் தடுத்துச் சமாளிப்பதற்கான துணிச்சல் வேண்டும். அது தன்னுடைய கணவருக்கு இல்லை என்பது திண்ணம். அவர் பயப்படுவதும் சரியேதான். எந்த நிமிஷத்திலும் கால் தவறிக் கீழே விழுந்து பிரவாகத்தில் அகப்பட்டு விடலாம். திவான்ஜியே பதற்றமடைந்திருக்கிறார். தளர்ந்து தகர்ந்து

விட்ட இந்த மனிதருள் துணிச்சலையும், தைரியத்தையும் உருவேற்றிவிட முடியுமா?

அன்று வரையில் சேர்த்து வைத்தது அனைத்தையும்—கிருஷ்ணன் நாயர் சொன்னதுபோல்—காணிக்கையாக அர்ப்பித்தாகிவிட்டது. பணமும் பொன்னும் மட்டுந்தானே, காணிக்கையாகச் செலுத்தப்பட்டன? பகவதிக்குட்டியம்மா நினைத்துப் பார்த்தாள். விரும்பிச் செய்யப் பட்டது அல்ல. ஆயினும் அதற்கு மேலானதுகூடக் காணிக்கையாகச் செலுத்தப்பட்டிருக்கிறது. அதைப்பற்றிச் சற்று அருவருப்புடன்தான் அவளால் நினைத்துப் பார்க்க முடிந்தது. அந்தப் பிரைவேட் செக்ரடரி ஒரு மிருகம். அவனுடைய வாடைகூட அவளுக்குப் பிடிக்காது. அவனுக்கு இடமென்றே காலமென்றே ஒன்றுமே கிடையாது. மரியாதையே கிடையாது. ஒரு பெண் மீது அன்பு செலுத்த, அவளிடம் அன்புமொழி கூற அவனுல் முடியுமா? தாம் நடத்துகிற இந்த லீலா விநோதங்களை நான்கு பேர்களாவது அறியவேண்டுமென்ற எண்ணம் அந்த மிருகத்துக்கு இருந்து வருகிறது. அவர் அதிலே ஆனந்தமடைகிறார். புதிய ஒரு செய்தி பகவதிக்குட்டியம்மாவை இப்போது பயமுறுத்தியது. அவருடைய நண்பர்கள் பலர் சென்னையிலிருந்து வரப்போகிறார்கள் அவள் அவர்களுக்குக்கூடப் 'பணிவிடை' செய்து கொடுக்கவேண்டுமாம். அந்த மிருகம் அவளிடம் அதைச் சொன்னபோது, அவள் தனது அருவருப்பை வெளிக்காட்டினுள். அப்போது அவர் சொன்ன வார்த்தைகள் அவளை மிகவும் துன்புறுத்தின. அவர்மீது அவள் கொண்டிருந்த வெறுப்பைப் பன்மடங்காக்கி விட்டன.

''என்ன ஆனாலும் நீ ஒரு மலையாளப் பெண்தானே?''

பகவதிக்குட்டியம்மா சிரித்தாள். அந்தச் சிரிப்புக்குப் பின் ஏளனமும், வெறுப்பும் இருந்துவந்தன. அந்த மிருகத்தின், மிருக நண்பன் வந்து விட்டால் . . .? அவளை அலைக்கழித்த கேள்வி இது. எந்த நேரத்திலும் அந்த நண்பனுடன் இந்த மிருகம் இங்கே வந்து சேரலாம். அத்தகைய நிலைமையை எப்படிச் சமாளிப்பதென்ற சிந்தனைதான் அவளுக்கு எந்நேரமும். அவளால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. முன்பின் அறிமுகம் இல்லாத மிருகங்கள் முன்னுல் குழைந்தாடுவது. . . அப்பப்பா! அப்புறம் நடைபெற இருக்கிற காரியங்களைப்பற்றி நினைக்கவே அவளால் முடியவில்லை.

கணவர் சொன்னதுபோல் இந்த வேலை வேண்டியிருந்ததில்லை. அந்தப் பேராசைதான் தன்னை இப்போது அலைக்கழிக்கிறது. சின்னஞ்சிறிய பருவத்திலிருந்தே இந்தப் பார்க்வியூ பங்களா அவளைக் கவர்ந்து வந்திருக்கிறது. அந்தக் கவர்ச்சி எவ்வாறு ஏற்பட்டதென்று அவளுக்குத் தெரியவில்லை. மிருகக்காட்சிசாலைக்குப் போகும்போதும், அந்தப் பாதை வழியாக நடந்துசெல்லும்போதும் இந்த மாளிகையைப் பார்ப்பாள். இதன் உள்பக்கம் எவ்வாறு இருக்குமென்பதைக் கண்டறிய அவள் உள்ளம் துடித்ததுண்டு. அதிலே ஓர் உத்வேக உணர்ச்சியே அவளுக்கு ஏற்பட்

டிருந்தது. அவள் அந்தக் காலத்தைப்பற்றி நினைவுகூர்ந்து பார்த்தாள். அந்த உத்வேக உணர்ச்சியே அவளுடைய பலமாக இருந்து வந்தது. ஆனால், அது அவளைப் பல தவறுகளுக்கு இட்டுச் சென்றிருக்கிறது. மிகப் பெரிய தவறு இப்போதுதான் அவளை எதிர்நோக்கி நிற்கிறது. இன்றைய அந்தஸ்தைப் பாதுகாத்துக்கொள்ள மேலும் எத்தனை எத்தனை தவறுகளைச் செய்யவேண்டியிருக்குமோ?

பகவதிக்குட்டியம்மா தன் வாழ்க்கையைப்பற்றி மதிப்பிட்டாள். அப்படிச் செய்வது இதுதான் முதல் தடவை. இத்தகைய சோதனைக்குரிய சந்தர்ப்பம் அவளுக்கு எப்போதுமே ஏற்பட்டதில்லை. இதற்கு முன் வாழ்க்கை மிக வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. அந்த வேகம் அவள் கணவரைக்கூட இழுத்துச் சென்றுகொண்டிருந்தது. இன்று கணவர் மட்டுமின்றி மனைவியும் தளர்ந்துவிட்டாள். அந்தத் தளர்ச்சி காரணமாகவே தன்னைச் சுய விமர்சனம் செய்து பார்ப்பதற்கான எண்ணம் உருவாயிருக்கவேண்டும். இதுவரையில் வாழ்ந்து வந்த வாழ்க்கை சரியானதா? ஒரு பெண்ணின் பெருமைக்குப் பொருத்தமாக இருந்ததா? முறை தவறிச் சறுக்கி விழுந்த சம்பவங்களை அவள் நினைத்துப் பார்த்தாள். இத்தகைய நினைவுகள் முன்பே ஏற்பட்டிருக்குமாயின் . . .

கணவர் வெள்ளை உள்ளம் கொண்டவர். அவர் மேஜைமீது தலை வைத்துக் குனிந்துவாறு அமர்ந்திருக்கிறார். இழுக்கப்பட்டு வேகமாகப் பாய்ந்து சென்று இப்போது தளர்ந்துவிட்டார். இந்த நெருக்கடியைத் தாண்டிச் செல்ல அவருக்குச் சக்தியில்லை. ஒரு முறையாவது அந்தப் புருஷன் தன் மனைவியைத் திட்டியது கிடையாது. எந்த விஷயத்திலும் அவர் தடையாக நின்றதில்லை. மனைவியின் நடத்தையைப்பற்றிக் கவனித்ததில்லை. தன்னைக் கவனித்துப் பார்க்கிறார் என்ற சந்தேகங்கூட அந்த மனிதருக்கு ஏற்பட்டதில்லை. அவளுக்கு அவரிடம் பயந்திருக்கவேண்டிய ஒரு சந்தர்ப்பங்கூட நேர்ந்ததில்லை. ஒருவேளை, ஒரு கண்ணையும் ஒரு காதையும் பொத்தியவாறு நாட்களைத் தள்ளிக்கொண்டிருந்தாரா? அல்லது எல்லாவற்றையும் அறிந்தும் அறியாதவர்போல் நடந்துகொண்டிருந்தாரா? பகவதிக்குட்டியம்மா கிருஷ்ணன் நாயரையே உற்றுப் பார்த்தவாறு அமர்ந்தாள்.

இவ்வாறு தவறிழைத்த சந்தர்ப்பங்கள் ஏராளமென்று சொல்லமுடியாது. ஆனால், அந்தத் தவறுகளைக்கூட எதற்காகச் செய்திருக்கிறாள்? உயர்வுக்காக. உயர்வுக்காக மட்டுந்தானா? பகவதிக்குட்டியம்மாவால் அதையும் உறுதியாகச் சொல்லமுடியாது. ஏனென்றால், அவள் ஒருவனை நேசித்திருந்தாள். அது அன்று. அந்த உணர்ச்சியின் கிறுகிறுப்பு இன்றுகூட அவளுடைய நாடி நரம்புகளை விட்டு அகலவில்லை. அவள் நெடுமூச்சுவிட்டாள்.

அந்த மிருகம் தன்னை விழுங்கிட வாய் பிளந்து நிற்கிறது. அதன் வாய்க்குள்ளே மீண்டும் விழுந்துவிடுவோமோ என்று அவள் பயந்தாள். எல்லாவற்றையும் இழந்திருக்கிறாள். அந்த மிருகத்தின் கடுமையான

பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ள வழியேதும் தென்படவில்லை. மறுத்து விட்டால் அது ஒரு கருநாகமாகப் பரிணமித்துவிடும்.

அவளுடைய சிந்தனை அந்தக் கட்டத்தை அடைந்தபோது, 'காங்கிரஸ் காரர்கள் வெற்றி பெற்றுவிட்டார்கள் என்றால் . . .' என்று எண்ணும் அளவுக்கு வந்துவிட்டாள். அப்போது இந்தத் திவான்ஜி போய் விடுவார். அந்தப் பிரைவேட் செக்ரடரியும் போய்விடுவார். ஆனால், அதற்கு முன்னால் கால் சறுக்கிக் கீழே விழுந்து விடுமே!

• • •

மறுநாள் கேசவபிள்ளை அதிகாலையிலேயே பார்க் வியூவுக்கு வந்தான். தலைமைக் காரியதரிசி லைப்ரரியைப் புரட்டிப் பார்த்தவாறு அமர்ந்திருந்தார். அருகிலே பகவதிக்குட்டியம்மா அமர்ந்திருந்தாள். அவள் வதனம் வாட்டம் அடைந்திருந்தது. சிறிதுநேரம் வரையில் கேசவபிள்ளை அங்கே நின்றுகொண்டிருந்தான். காரியதரிசி எதையும் பேசவில்லை. தன்னால் ஆகவேண்டியது ஒன்றுமில்லைபோல் தோன்றியது அவனுக்கு. எஜமானர் தன்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டாரா? வேலை நீக்க உத்தரவைக் காகிதத்தில் எழுதும் வேலைதான் பாக்கி என்பதுபோல் இருந்தது.

கேசவபிள்ளைக்கு அந்த நிசப்தமும் செயலற்று நிற்கும் நிலையும் சகிக்க முடியாததாகி விட்டன. அந்த நிலைமையிலே அவன் சொன்னான்:

''ஒரு விஷயத்தை உணர்த்த வேண்டியிருக்கிறது.''

தலைமைக் காரியதரிசி சிரத்தை உயர்த்தினார்:

''ஊம்?''

''காங்கிரஸ்காரர்கள் இப்போது கிராமம் கிராமமாக் கூட்டங்களை நடத்திக்கிட்டு வர்றாங்க. அந்தக் கூட்டங்களைக் கலைத்து விடணும்; பேசமுடியாதபடி செய்திடணும்.''

தலைமைக் காரியதரிசியும் மனைவியும் சிந்திக்கிறார்கள்போல் தோன்றியது. அவர்களுடைய மௌனத்தை அது தொட்டுவிட்டது. கேசவபிள்ளை அந்தத் திட்டத்தின் அங்கீகாரத்துக்காகக் காத்து நிற்கவில்லை.

அவன் தொடர்ந்து கூறினான்:

''தலைவர்கள் எல்லாம் அரசாங்க வேலைக்கு விண்ணப்பித்துக்கொண்டவர்கள். அவர்களுக்கெல்லாம் வேலை கொடுத்திடணும்.''

எஜமானனுக்கு இன்னொரு பிடிகூடக் கிடைத்துவிட்டது.

அவன் சொன்னான்: ''திரும்பவும் இயக்கத்தில் ஈடுபடுகிறவர்களைப் பிடித்துச் சிறையில் அடைக்கணும். பகிரங்கமாகப் போலீஸ்காரைக் கொண்டு உதைக்க வைக்கணும்.''

எஜமானர், எஜமானியம்மா ஆகியோரின் முகங்களிலே சிறிது பிரகாசம் பரவி வருவதாகத் தோன்றியது. அவர்கள் பரஸ்பரம் முகத்தோடு முகம் பார்த்துக்கொண்டனர்.

ஆயினும், கேசவபிள்ளையின் பேச்சு திடீரென நின்றுவிட்டது. பேச வந்ததை மறந்துவிட்டவன்போல் தோன்றியது.

வேறொரு விஷயம் திடீரென அவன் நினைவுக்கு வந்தது:

''காங்கிரஸுக்குப் பணம் கொடுக்கிறவர்களை அழிக்கணும். அந்த மாதிரியான ஆசாமிகளின் ஜாபிதா ஒன்று போலீஸ் கமிஷனர் அலுவலகத்திலிருந்து வந்திருக்கிறது.''

எஜமானர் சிறிதுநேரம் யோசித்துக்கொண் டிருந்தார். கேசவபிள்ளையின் யோசனைகள் அவருடைய சிந்தனைக்கு உணவை அளித்தன.

அவர் கேட்டார்: ''உங்களுக்கு இந்த யோசனைகள் எங்கிருந்து கிடைத்தன?''

அப்பப்பா! கேசவபிள்ளை ஆறுதலடைந்தான்.

''நேற்றிரவு நானே சிந்தித்து உருவாக்கிக் கொண்டவைதான்.''

தலைமைக் காரியதரிசி மனைவியிடம் கூறினார்: ''எல்லாம் நல்ல யோசனைகள்தான். ஆனால் அமலாக்கணுமே?''

பகவதிக்குட்டியம்மா கூறினாள்:

''அமலாக்கணும். சும்மா இருந்தா முடியுமா?''

சிறிது நேரத்துக்குப் பின் கிருஷ்ணன் நாயர் கூறினார்:

''நீதிக்கும் தருமத்துக்கும் பொருந்தாதவைதான் எல்லாம்.''

பகவதிக்குட்டியம்மா திட்டினாள்:

''நீதியும் தருமமும் பார்த்துக்கொண் டிருந்தா ஹர ஹரான்னு போயிடவேண்டியதுதான்.''

கிருஷ்ணன் நாயர் எதையோ யோசித்துக்கொண் டிருந்தார். பகவதிக்குட்டியம்மா சொன்னாள்:

''நல்லா யோசனை பண்ணி விரிவா ஒரு ரிப்போர்ட்டை அனுப்பி வச்சிடுங்க! நம்மோட கடமை நல்லா நிறைவேற்றினப்பல இருக்கும்.''

கேசவபிள்ளை சொன்னான், உணர்வு பூர்வமாக அல்ல, ''ஆமாம்'' என்று.

'அவள் அதிருஷ்டக்காரிதாம்ப்பா' என்றகிட்டு மாமாவின் சொற்கள் அப்போதுகூட அவன் காதுகளுக்குள்ளே முழங்கின.

அத்தியாயம் 15

களத்திலே குதித்துவிட்டான்

பொதுவாகச் சமூக வாழ்க்கையை உலுக்குகிற நிகழ்ச்சிகள் சில மனிதர்களைக் கீழே தள்ளிவிடுகின்றன; வேறு சிலரை மேலே உயர்த்தி விடுகின்றன. யுத்தம், பல லட்சக்கணக்கான மக்களை அழிவின் ஆழப் படுகுழியில் தள்ளும்போது, சிலரைச் செல்வச் செழிப்பின் உயர்நிலைக்குத் தூக்கிவிடுவதில்லையா? அத்தகையோருக்கு யுத்தமென்பது மகிழ்ச்சி தருகிற விளையாட்டு ஆகும். ஊர்வலங்களையும், பொதுக் கூட்டங்களையும் அரசாங்கம் தடை செய்தது. அதற்கான காரணத்தைக் காட்ட அரசாங்கத்திடம் ஏராளமான தகவல்கள் இருந்தன. காங்கிரஸின் அறைகூவலுக்கு இணங்க நடந்த பொதுக் கூட்டங்களில் ரகளைகளும், கல்வீச்சுக்களும் நடைபெற்றன. காங்கிரஸின் கொள்கைத் திட்டங்களை பொதுமக்களில் ஒரு பகுதியினர் எதிர்த்தனர். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டப் போலீஸ் தலையிடவேண்டியதாயிற்று. அதனால்தான் தடியடிப் பிரயோகங்களும், துப்பாக்கிப் பிரயோகங்களும் நடைபெற்றன. பல்வேறு இடங்களில் மரணங்களும் ஏற்பட்டன. காங்கிரஸ்காரர்களும் விட்டுக் கொடுக்கவில்லை. அவர்கள் தடையுத்தரவுகளை மீறினர். தலைவர்கள் உள்பட பல்லாயிரக்கணக்கானவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். கையில் கிடைத்தவர்களை அரசாங்கம் சும்மா விட்டுவைக்கவில்லை. சம்ஸ்தானத்திலே அமைதியான வாழ்க்கை அஸ்தமித்துவிட்டது. ஆனால், கேசவபிள்ளைக்கு அது ஒரு நல்ல காலத்தின் உதயமாகிவிட்டது.

பிரசாத்தை அரசின் பக்கமாகத் திருப்ப அவனால் முடிந்தது. அது எப்படிச் சாத்தியமாயிற்று என்றால், கிட்டு மாமா சொல்வதுபோல் 'அவளுடைய அதிருஷ்ட'த்தினால் என்றே சொல்லமுடியுமென்று அவனுக்குத் தோன்றியது. பிரசாத் பெரிய புரட்சிவாதி. காங்கிரஸை எதிர்த்து அவன் அறிக்கை வெளியிட்டான். கேசவபிள்ளைதான் அவனை அவ்வாறு அதை வெளியிடச் செய்தது. பெரிய அளவிலுள்ள முயற்சி ஏதும் அதற்குத் தேவைப்படவில்லை. மாணவர் இயக்கத்தின் நான்கைந்து மணிகள்கூடப் பிரசாத்துடன் சேர்ந்து வந்தனர். அவ்வாறு அந்த இயக்கம் தற்போதைக்குச் சற்றுத் தளர்ச்சியுற்றது. தலைவனைத் தன் பக்கம் இழுத்துக்கொண்டு, தலைமைக் காரியதரிசி மூலமாகத் திவான்ஜி முன்னால் கொண்டு நிறுத்தினான் பிள்ளை. திவான்ஜிதான் அந்த அறிக்கையை எழுதியவர். காங்கிரஸின் உண்மை உருவத்தை, அதன்

அந்தரங்கச் செய்திகள் யாவற்றையும் தெரிந்து வைத்திருக்கிற ஒரு நபர் வரைந்து காட்டிய முதல் தஸ்தாவேஜுதான் அது.

அந்த நாள், கேசவபிள்ளையின் வாழ்க்கையிலே மிக முக்கியமான ஒரு தினமாக அமைந்திருந்தது என்பதில் சந்தேகமே இல்லை. கேசவ பிள்ளைமட்டும் அல்ல, தலைமைக் காரியதரிசிக்கு, அவர் மனைவிக் குங்கூட நல்ல தினந்தான். திவான்ஜி மகிழ்ச்சியடைந்தார். ஒரு விஷயத்தில், நன்றியறிவுடன் தலைமைக் காரியதரிசியை நினைத்துப் பார்த் தார். பிரசாத்தையும் தோழர்களையும் அரசின் பக்கமாகத் திருப்பியது தம் திறமையினால்தான் என்று தலைமைக் காரியதரிசி சொல்லவில்லை; நடிக்கக்கூட இல்லை. மற்றொரு மேலதிகாரியாக இருந்திருந்தால் அப்படித் தான் சொல்லியிருப்பார், நடித்திருப்பார்! அதற்கான பாராட்டுதல்கள் அனைத்தையும் கேசவபிள்ளையே பெற்றுக்கொண்டான். ஒருவேளை, தலைமைக் காரியதரிசி பயந்து போயிருக்கலாம்: அந்த நடவடிக்கை பெரிய தவறு என்று திவான்ஜி சொல்லிவிட்டால்? திவான்ஜிக்கு மகிழ்ச்சி தான். அவருக்குக் கேசவபிள்ளைமீது நம்பிக்கை பிறந்தது.

இன்னொரு முறையிலேகூட அவன் மனப் பூரிப்படைந்தான். அத்தகைய ஒரு பூரிப்போ, ஆத்மதிருப்தியோ இதுவரையிலும் அவ னுடைய வாழ்க்கையிலேயே ஏற்பட்டதில்லை. அவனைப் பெரிதும் மன வேதனைக்கு உள்ளாக்கியவன் இந்தப் பிரசாத். பல்கலைக்கழகப் பட்டத் தின் மதிப்பை இரண்டு துட்டுக்கு விற்றவன் என்று கேசவபிள்ளையின் முகத்திலே காறி உமிழ்ந்தவன் இந்தப் பிரசாத். அன்றைத் தினம் பிள்ளையின் மனத்தில் ஏற்பட்ட புண் இன்னமும ஆறிவிட வில்லை. ஏனென தெரியவில்லை, பிள்ளை அந்தச் சொற்களைத் தினசரி நினைவு கூர்ந்து பார்ப்பதுண்டு. அப்போதெல்லாம் வேதனை பெருகிக் கொண்டே வந்தது. அவ்வாறு, இரண்டு துட்டுக்குப் பட்டத்தை விற்றவன், பிரசாத்தினுடைய பட்டத்தின் முழு விலையையும் வாங்கிக் கொடுக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது! ஆனால், அந்தக் கருத்து அவன் உள்ளத்திலே முளைக்கவில்லை. பிரசாத்துக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுக்கத் தன்னால் முடிந்ததே என்ற எண்ணந்தான் அவன் உள்ளத்திலே உருவானது. அது பிரசாத்திடம் தோன்றிய அன்பினால் அல்ல; அவன் ஒரு புரட்சிக்காரனாக இருந்து, தலைமறைவும் சிறையுமாக வாழ்க்கையை வீணுக்குகிறானே என்ற அநுதாபத்தினால் அல்ல; தன்னை அவமதித்ததனால் ஏற்பட்ட பகைமையைத் தீர்த்துக்கொள்வதற்காகவு மல்ல—தனது சொந்த நலனைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான் என்பதே உண்மை. அந்தச் சொந்த நலனைப்பற்றிய நிறைவே அவனுக்கு ஆத்மதிருப்தியைக் கொடுத்தது. ஏனென்றால், திவான்ஜியைப் பார்த்து விட்டுத் திரும்பி வருகையில் அவன் பிரசாத்திடம் கூறினான்:

''நண்பனே, நீ உயர்வு பெற்று மேலே மேலே சென்றிடுவாய். அப்போது என்மீதுகூட உனது பார்வை இருக்கணும். என்னையும் நீ தாங்கிக் கொள்ளணும்.''

இவ்வாறு சொல்லக் காரணம் உண்டு. பிரசாத்துக்குத் திவான்ஜி அமர ஆசனம் அளித்தார்; மரியாதை கொடுத்துப் பேசினார். அவனும் வினயத்துடன் நடந்துகொண்டான். பிரசாத்துக்குச் சூப்பிரண்டு அந்தஸ்துடைய பதவியைத்தான் கொடுக்கப்போகிறார். கேசவபிள்ளை அப்போது ஒரு கீழ்த்தரக் குமாஸ்தாவாகவே இருப்பான்.

கேசவபிள்ளையின் கொள்கையைத் தலைமைக் காரியதரிசியும் பின் பற்றினர். அவர் அதிலே வெற்றியடைந்தார். காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்களில் இருவரை அவரால் வலை போட்டுப் பிடிக்க முடிந்தது. அவர்கள் பிடிவாதமும் துணிச்சலுமுடைய பெரும் தலைவர்களாக இருந்தனர். கேசவபிள்ளையும் சில இரைகளைத் தேடிப் பிடிக்காமல் இல்லை. அவர்கள் காங்கிரஸின் இரண்டாவது வரிசையிலுள்ள தலைவர்களாக இருந்தனர்.

பலாத்காரமற்ற பாதையிலே இயக்கத்தை நடத்திக்கொண்டு செல்ல வேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் பேசினாலும், கிளர்ச்சியின் போக்கு அத்தகையது அல்ல என்று ருசுப்பித்தது. தலைமைக் காரியதரிசி அர்ப்பித்த ரிப்போர்ட்டைத் திவான்ஜி ஏற்ற பிறகு அமல் நடத்த வேண்டிய காரியங்கள்தான் அவை. அமலாக்கவேண்டிய பொறுப்பு தலைமைக் காரியதரிசியினுடையது. பேஷ்கார்கள், உயர்தரப் போலீஸ் அதிகாரிகள் ஆகியோரை வரவழைத்து, கலந்து பேசித் திட்டங்களைத் தயாரித்தார் அவர்.

நெய்யாற்றின் கரையிலே, காங்கிரஸ் ஒரு மாபெரும் ஊர்வலத்தையும், சம்மேளனத்தையும் நடத்தத் திட்டமிட்டிருந்தது. அங்கேதான் முதல் முதலாகத் தம் திட்டத்தைச் சோதித்துப் பார்க்க தலைமைக் காரியதரிசி திட்டம் தீட்டியிருந்தார். அதற்கான அனைத்தையும் அதிகாரிகள் செய்து வருவதாகத் தகவல்கள் கிடைத்திருந்தபோதிலும் தலைமைக் காரியதரிசிக்கு மன நிம்மதி ஏற்பட்டுவிடவில்லை. குறிப்பாக, முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட், இன்ஸ்பெக்டர் ஆகியவர்கள் கிறிஸ்தவர்கள். அவர், கேசவபிள்ளையை ஒரு சி.ஐ.டி.போல் அந்த அதிகாரிகளைக் கண்காணிக்க அங்கே அனுப்பிவைத்தார்.

உண்மையிலேயே கேசவபிள்ளைக்கு முக்கியத்துவம் அளிக்கிற ஒரு நடவடிக்கை அல்லவா, இது? உயர்தர அதிகாரிகளைக் கண்காணிப்பதற்காக என்று சொல்ல முடியாவிட்டாலும், அவர்களின் நடவடிக்கைகளை உற்றுக் கவனிப்பதற்காக அவனை அனுப்பிவைப்பது ஒரு சாதாரண விஷயமா? அவன் அளிக்கிற தகவல் பார்க்க வியூவிலும், பக்தி விலாசத்திலும் அங்கீகரிக்கப்பட்டுவிடும். தேவையான பணத்தைக் கொடுத்தனுப்பியிருப்பது கேசவபிள்ளையிடந்தான். அதற்கும் ஒரு பொருள் இல்லையா? இவ்வாறுக, உயர்தர அதிகாரிகளின் மத்தியிலே அவனுக்கு அபரிமிதமான முக்கியத்துவம் ஏற்பட்டுவிட்டது. ஆனால், அவன் அதை வெளிக்காட்டவில்லை. ஒரு குமாஸ்தாவாக, இடுப்பிலே துண்டு வேஷ்டியைக் கட்டியவாறு, அதிகாரிகள் முன்னிலையில் அடக்கமாகவே பழகி

வந்தான். அவர்கள் சொல்வதற்கெல்லாம் 'உத்தரவு' அல்லது 'ஆமாம்' சொல்வதிலே அவனுக்கு எந்தவிதத் தயக்கமும் இருந்ததில்லை. அவர்கள் தன்னை 'மிஸ்டர் கேசவபிள்ளை' என்று அழைத்தாலும், அவன் அடக்கத்தைக் கைவிடவில்லை.

சர்க்கார், பணத்தைக் கொடுத்து ஏராளமான நபர்களைக் கைக்கூலி களாக அமர்த்திக்கொண்டது. அவர்கள் ஊர்வலங்கள்மீது கற்களை வீசினர்கள். ஊர்வலத்தினர் திருப்பித் தாக்கினர். காவல் துறையினர் பலர் காயமுற்றனர். துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. மூவர் இறந் தனர். ஏராளமானவர்கள் காயமடைந்தார்கள். அதுவே போதும்; சர்க்கார் வென்றது.

தலைமைக் காரியதரிசி உற்சாகத்தினால் துள்ளிக் குதித்தார். அவர் கேசவபிள்ளையைத் தழுவிக்கொண்டார். உண்மையிலேயே இந்தத் திட்டத்துக்கான பரிசைப் பெறவேண்டியவன் கேசவபிள்ளைதானே?

பகவதிக்குட்டியம்மாவுக்கும் சந்தேகம் இல்லை. அவளுக்கும் அதே கருத் துத்தான். கணவரிடம் கேட்டாள்: ''இதெல்லாம் உங்க கெட்டிக்காரத் தனத்தினாலேயா?''

அவர் மறு கேள்வி கேட்டார்: ''என்று நான் சொன்னேனு?''

அந்தக் கேள்வியால் திருப்தியடையவில்லை பகவதிக்குட்டி: ''கேசவ பிள்ளையோட மூளையிலே இந்த மாதிரியான ஒரு திட்டம் உருவாகாமே இருந்திருந்தா இப்போ எப்படி இருந்திருக்கும்?'' என்று கேட்டாள்.

ஒரு விநாடிக்குப் பிறகு அவள் தொடர்ந்து கேட்டாள்: ''உங்க சொந்தத் திறமைன்னு திவான்ஜி கிட்டே சொல்லி வச்சிருக்கீங்களா?''

அதை மறுக்காமலேயே கிருஷ்ணன் நாயர் கூறினார்:

''கேசவபிள்ளையின் திறமையைப்பற்றித் திவான்ஜி அவர்களுக்குத் தெரியும். கெட்டிக்கார இளைஞன்னு அவர் சொன்னார். திவான்ஜியிட மிருந்து அந்த மாதிரியான ஓர் அபிப்பிராயத்தைப் பெறுவது ரொம்பக் கடினம். நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டுவிட்டால்கூட அவர் வெளியே சொல்லமாட்டார், தெரியுமா?''

அவள் கேட்டாள்: ''அதுக்காகக் கேசவபிள்ளைக்கு என்ன கொடுக்கப் போறீங்க?''

''ஒரு நல்ல பிரமோஷன் கொடுப்போம். வேலையை இப்பத்தானே துவக்கியிருக்கான்?''

இதுவரைக்கும் வெற்றிதான். அது கேசவபிள்ளைக்குத் தெரியும். வெற்றி என்றுமட்டும் சொன்னால் போதாது; அசாதாரணமான வெற்றி என்றே சொல்லவேண்டும். திவான்ஜிக்குக்கூட எல்லையற்ற திருப்தி ஏற் பட்டிருக்கிறது. அவன் சுயமாகத் தப்பித்துக்கொண்டான் என்பதுடன் தலைமைக் காரியதரிசிகூடத் தப்பித்துக்கொண்டார். பழக்கமும், பரிசய மும், அறிவுக் கூர்மையுமுடைய தலைமைக் காரியதரிசிகூட என்ன செய்வது என்று தத்தளித்தபோது, இந்தத் திட்டங்கள் எப்படி தன் மூளையிலே மலர்ந்தன என்று நினைத்து வியப்புற்றான் கேசவபிள்ளை.

ஏதோ ஒரு மின்னல்போன்று திடீரெனத் தோன்றிய ஒரு பிரகாசமேயன்றி இவ்வளவு கூர்மையான மதிநுட்பம் தனக்கு இல்லை என்று அவன் நம்பினான். என்னவாக இருந்தாலும் சம்ஸ்தானக் காங்கிரஸின் கிளர்ச்சியைச் சமாளிப்பதிலே அது வெற்றி பெற்றிருக்கிறது.

விதியென்ற ஒன்றைமட்டுமே இதற்குக் காரணமாக அவனால் உணர முடிந்தது. அத்துடன் கிட்டு மாமா சொல்கிற அந்த வாசகத்தின் பொருள் கூடச் சேர்ந்திருக்கலாம்: 'அவள் அதிருஷ்டக்காரிதாம்ப்பா!' இல்லாவிட்டால் இவ்வகைக் கருத்துக்கள் தன் மூளையிலே தோன்றியிருக்க முடியாது. இந்தப் பௌதீகப் பிரபஞ்சத்திலிருந்து அப்பாற்பட்ட ஏதோ ஒரு தெய்விகச் சக்தி தன் வாழ்க்கைப் பிரயாணத்தின் பாதையைச் செப்பனிட்டுத் தந்துகொண்டிருக்கிறது. அது விபத்துக்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துவருகிறது. முக்கியமான சந்தர்ப்பங்களில் தன் வாழ்க்கையைப் பாக்கியத்தின் பக்கமாகத் திருப்பிவிடுகிறது. எதிர் காலத்திலேகூட அதே சக்தி தனக்குத் துணையாக இருந்துவரும் என்பதில் அவனுக்கு நம்பிக்கை உண்டாயிற்று.

கேசவபிள்ளைக்குப் பிரமோஷன் கிடைத்தது. திறமையை எண்ணி அளித்த பதவி உயர்வுதான் அது. முக்கியமான மூன்று நான்கு இடங்களிலேகூட நெய்யாற்றங்கரைத் தந்திரம் திரும்பத் திரும்பக் கையாளப் பட்டது. எல்லா இடங்களிலும் மக்கள் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டார்கள் என்பதை நிரூபிப்பதற்கான அத்தாட்சிகள் இருந்தன. ஆத்திரமடைந்த சம்ஸ்தான காங்கிரஸின் தலைவர்கள் திவான்ஜிமீது குற்றம் சாட்டினார்கள்; தனிப்பட்ட முறையில் அவரைத் திட்டினார்கள். கிளர்ச்சியை வாபஸ் வாங்கவேண்டுமென்று காந்திஜி யோசனை கூறினார். எனவே, அந்தப் பெரிய கிளர்ச்சி சிறிது மந்தமாகிவிட்டது.

* * *

சென்ற சில வாரங்களாக—ஏன்? மாதங்களாக—கேசவபிள்ளைக்கு ஏராளமான வேலைகள் இருந்துவந்தன. அவன் எல்லாவற்றையும் ஒழுங்காக நிர்வகித்து வந்தான். நினைத்ததை அடையவும் செய்தான். அவனுடைய கண்ணோட்டத்தில், காங்கிரஸ் இறந்துவிட்டது. சில நாட்களுக்கு லீவு எடுத்துக்கொண்டு அவன் ஊருக்குச் சென்றான். அந்தப் பயணத்துக்குப் பிரத்தியேகமான ஒரு பொருள் உண்டு. முன்பு அங்கே சென்ற கேசவபிள்ளை அல்ல, இப்போது செல்வது. தந்தையின் பார்வையிலே, தனயன் ஒரு போராட்டம் நடத்தி வெற்றி பெற்றுத் திரும்பியிருக்கும் ஹீரோ. அவன் இன்று சம்ஸ்தானம் முழுவதிலும் அறியப்படுகிற ஒரு நபர். அவனுக்குப் பெரிய உத்தியோகப் பதவி இல்லை என்பது உண்மைதான். இருந்தும், எல்லாப் பேஷ்காரர்களும், இலாக்காக்களின் அதிகாரிகளும் மதிக்கிற ஓர் இடத்தை அவன் பெற்றிருக்கிறான். இதற்கிடையில் ஊரிலே தன் வீட்டுக்கு முன்னாலுள்ள ஒரு மனையையும்

அவன் விலைக்கு வாங்கிவிட்டான். காங்கிரஸ் இயக்கத்தை முன்னிட்டுக் கேசவபிள்ளை அடைந்த உருப்படியான சொத்து இதுதான்.

ஆனால், தாயார் திகைப்புடன்தான் இருந்துவருகிறாள். தந்தைக்கும் திகைப்பு இல்லாமல் இல்லை. ஆனால், அதை அவர் வெளிக்காட்டுவதில்லை. காங்கிரஸ் கிளர்ச்சி ஆரம்பித்தபோது தனயன் என்ன செய்கிறான் என்பதை முதலில் அந்தத் தாய் தந்தையர்கள் அறிந்திருக்கவில்லை. ஒரு குமாஸ்தாவுக்கு அந்த விஷயத்திலே எந்தப் பொறுப்பும் இருக்கமுடியாது அல்லவா? பப்புப்பிள்ளையின் கேள்விதான் அது. அவரே பதில் அளிப்பார், அதெல்லாம் போலீஸாரின் கடமைதான் என்று.

''கடவுளே, என் மகனுக்குப் போலீஸில் வேலை கிடைக்காமே போனது எங்க பாக்கியந்தான்.'' முதலில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தைப்பற்றிக் கேள்வியுற்ற குட்டியம்மா சொன்னாள். ஆனால் நாள் செல்லச் செல்ல அவர்கள் அவனைப்பற்றிக் கூடுதலாக அறியத் தொடங்கினார்கள்.

மகன் வந்ததும் அம்மா கேட்ட கேள்வி இதுதான்: ''மகனே, கொஞ்சங்கூட ஈவிரக்கமில்லாமலே ஏண்டா இப்படிச் செய்ய வச்சே?''

அந்தக் குரலில் கடுமையிருந்தது, பரிவும் இருந்தது. மகன் செய்த காரியங்கள் அனைத்தும் தவறுக இருந்திருக்கின்றன என்று அந்தத் தாயார் கருதுகிறார்.

''நான் என்ன செஞ்சுட்டேம்மா?''

மகன் மறு கேள்வி கேட்டான்.

தெரிந்த தகவல்கள் ஒவ்வொன்றாக வெளியே வரத் தொடங்கின. குட்டியம்மா சொல்லத் தொடங்கினாள்:

''ஜனங்களைச் சுட்டுக் கொல்லவச்சே! தடியடிக்கும் காச நோய்க்கும் இலக்காக்கினே! கால் எலும்பு முறிய வைச்சே!''

கேசவபிள்ளை சும்மா சிரித்தவாறு நின்றுவிட்டான்.

அம்மா தொடர்ந்து கூறினாள்:

''இதெல்லாம் பெரிய பாவமப்பா! ஸ்ரீபத்மனாபனுடைய பத்து 'சக்கரம்' வாங்கறது இதுக்காக அல்ல மகனே! மக்களைப் பாதுகாக்கறதுக்குத் தாண்டா.''

அப்போது பப்புப்பிள்ளை குறுக்கிட்டார்:

''அதை விட்டுத் தள்ளு! ஜனங்களுக்குத் தம்பிரான்மீது பக்தியில்லாமே போயிட்டா?''

குட்டியம்மா விரசமாகக் கூறினாள்:

''ஜனங்க அப்படியில்லே. எனக்கொண்ணும் நீங்க கற்றுத் தரவேணும். திவான்கிட்டேதான் மக்களுக்கு வெறுப்பு.''

''ப்ப்ப்பூ! ச்சி போடி கழுதை! உனக்கென்ன தெரியும்?''

கணவர் சொன்னதைக் கவனியாதவள்போல் அன்னை மகனிடம் பேசத் தொடங்கினாள்: ''குடும்பத்துக்குப் பாபத்தையும் சாபத்தையும் தேடி

வச்சுக்காதடா. அதுவும் அந்தப் பெண் பிள்ளே நெறைஞ்சு நிக்கறப்போ.''

அது உண்மைதான். அதைப் பப்புப்பிள்ளே ஏற்றுக்கொண்டார். பொருள்படக்கூடிய வகையிலே அவர், குறுக்கு விசாரணே நடத்துபவர் போல் கேள்வி கேட்கத் தொடங்கினர்:

''ஏண்டா, உனக்கு வேலே போலீஸிலேயா? என்ன?''

கேசவபிள்ளே பதில் சொல்லவில்லே. பப்புப்பிள்ளே கேட்டார்:

''என்ன, அப்படித்தானு?''

''இல்லே.'' இயந்திரம்போல் அவன் பதில் அளித்தான்.

பப்புப்பிள்ளேயின் அழுத்தமான குரல்:

''அப்புறம் ஏண்டா, இப்படி யெல்லாம் செய்ய வச்சே?''

சொல்வதென்ருல் நிறையச் சொல்லவேண்டியிருக்கிறது. 'பார்க் வியூவிலுள்ள வேலே முறை, இந்த விஷயத்தில் தலேயிடவேண்டிய நிர்ப்பந்த நிலேமை ஏன் ஏற்பட்டது?' என்பன போன்ற ஏராளமான விஷயங்கள் சொல்லவேண்டியிருக்கின்றன. ஒரே நாளில் சொல்லி முடிக்கமுடியாது. ஆயினும் அவன் சொன்னுன்:

''அதெல்லாம் நல்லதுக்குத்தாம்ப்பா! திவான்ஜிக்கு என்மீது ரொம்பப் பிரியம்.''

பப்புப்பிள்ளே ஒரு நீதிபதியைப் போன்றே அடுத்த கேள்வி கேட்டார்:

''அப்போ . . . இதெல்லாம் நீ செய்யவச்சே! அப்படீன்னு ஒப்புக் கொள்ளறியா?''

கேசவபிள்ளேக்குச் சொல்லவேண்டியிருந்தது ஒரே ஒரு விஷயந்தான்:

''அப்புறம் இந்த ராஜத் துரோகிகளே என்ன செய்யணும்?''

காங்கிரஸ்காரர்கள் செய்தவை முழுதும் அரசத் துரோகமும், போக்கிரித்தனமும்தான் என்ற விஷயத்தில் பப்புப்பிள்ளேக்குக் கருத்து வேற்றுமையில்லே. அரசன் கண்கண்ட தெய்வம். அரசன் இல்லாவிட்டால் நிலேமை எவ்வாறு இருக்கும்? கூடவே தீண்டாமையை ஒழித்துவிட வேண்டுமென்று சொல்கிற காந்திஜியைப்பற்றிக்கூட அவருக்குப் புகார் இருந்துவருகிறது. அரசாங்கம் இந்த விஷயத்தில் கடுமையாக நடந்து கொள்ளாவிட்டால் குடிமக்களுக்கு என்ன பாதுகாப்பு? ஆனல் பப்புப் பிள்ளேயின் கேள்வி அது அல்ல:

''எல்லாம் சரிதாண்டா! ஆனு நீயே இதை யெல்லாம் செய்ய வைக்கணுமோ? இந்தக் கொடூரமான செயலிலேருந்து நழுவி விலகி நின்னுக்கணும்.''

அப்போது கேசவபிள்ளே ஒரு விஷயத்தை அறிய விரும்பினுன்: ''இதெல்லாம் இங்கே வந்து சொன்னது யார்?''

குட்டியம்மாதான் அதற்குப் பதிலுரைத்தாள்: ''பார்! அந்தக் கால் வாய்க் கரையிலே ஒரு கடை இருந்ததல்ல? அன்னேக்குத் தேவஸ்யாதான் அங்கே வியாபாரம் பண்ணிக்கிட்டிருந்தான். இப்போ அங்கே வியா

பாரம் நடக்கிறதில்லே. அங்கே இப்போ . . . என்ன . . . என்னங்கோ?'' அவள் கணவரிடம் கேட்டாள்: ''என்னுங்க அது?''

கிட்டு மாமா சொல்லிக் கொடுத்தார்: ''வாசகசாலே.''

தாயார் தொடர்ந்து பேசினார்:

''ஆ . . . இந்த ஊரிலே இருக்கிற வாலிபப் பசங்கள்ல்லாம் பொழுது சாயற நேரத்திலே அங்கே வந்து சேர்ந்துடுவாங்க. ஈழவன் இருப்பான், நாயர் இருப்பான், கிறிஸ்தவன் இருப்பான். எல்லாச் சாதிக்காரங்களும் வந்து சேர்ந்திடறுங்க. கொஞ்ச நாளைக்கு முன்பு, அந்த வாசக சாலைக்கு முன்னுலே ஒரு பெரிய கூட்டம் நடந்தது. அசலூர்க்காரங்க எல்லாம் பேச வந்திருந்தாங்க. அவங்களிலே ஒருத்தன் பேசினான், நீதான் சுடவச்சது, அடிச்சு எலும்பை முறிக்க வச்சது . . . அப்படி இப்படீன் னெல்லாம். அவன் உன்னைப்பற்றி என்னென்னவோ அவதூறுங்கள்ல்லாம் சொன்னுண்டா! இன்னொருத்தன் பேசினான், உன்னைப் புடிச்சுத் தூக்கிலே தொங்கவிடணும்னு. நீ நிலத்தை வாங்கினது சர்க்கார் பணம் திருடி யெடுத்துத்தான்னு சொன்னான்.''

அவன் கிட்டு மாமாவிடம் கேட்டான்: ''அவன் பெயர் என்ன மாமா?''

''செங்கன்னூர் மாத்யூ. அவன்தான் சொன்னான், நீதான் சுட வச்சேன்னு. அவன் பேச்சிருக்கே, பொல்லாத பேச்சு தம்பீ. அதைக் கேட்டா ஜனங்க கிளர்ந்தெழுந்திடுவாங்க. அவன் திவான்ஜியைப்பற்றித் திட்டுத் திட்டுன்னு திட்டினான்.''

கேசவபிள்ளை கேட்டான்: ''என்னைத் தூக்கிலே தொங்கவிடணும்னு பேசினது யார் மாமா?''

''அது கோபீங்கிற ஒருத்தன். அப்புறம் ஏதோ ஒரு நாராயணன் நாயரும் அப்படிப் பேசினான்.''

கிட்டு மாமா ஓர் உண்மையைச் சொல்லிவிட்டார்: ''அந்த ஒரே ஒரு பிரசங்கத்தினுலே இந்த ஊரே கிளர்ந்தெழுந்தது தம்பீ.''

பப்புப்பிள்ளை தமது கருத்தைத் தெரிவித்தார்:

''இவங்களை எல்லாம் புடிச்சுச் சிறையிலே போடணும். சாகிறவரைக் கும் அங்கேயே போட்டு வைக்கணும். பிரசங்கம் பண்ண வெளியிலே விடக்கூடாது.''

கிட்டு மாமா சொன்னார்: ''பிரசங்கக்காரங்க எக்கச்சக்கமாயிருக் காங்க. அவங்க எல்லாரையுமே புடிச்சு ஜெயிலிலே போட்டு வைக்க முடியுமா?''

''போட்டு வச்சுக்கணும். அப்படித்தான் செய்யணும்.''

தாயாருக்கு மேலும் பல விஷயங்களைப்பற்றிப் பேசவேண்டியிருந்தது:

''ஊரிலே யாருக்கும் நம்ம கிட்டே பிரியமில்லே தம்பீ. உன்னைப்பற்றி இப்படியெல்லாம் திட்டிப் பேசறதைக் கேட்டுக்கிட்டிருந்தும், நம்ம ஊர்க் காரனே இப்படித் திட்டறுங்களேன்னு எவனைச்சும் ஒரு வார்த்தையாவது கேட்டிருக்கணுமே . . . ஊஹூம்! தூக்கிலே தொங்கவிடணும்னு பேசினப்போகூட இல்லே மகனே, இல்லே!''

பப்புப்பிள்ளை அத்துடன் சேர்த்துக்கொண்டார்: ''அந்தப் பேச்சை நம்ம ஊர் ஜனங்க கரகோஷம் செஞ்சு வரவேற்றுங்க.''

குட்டியம்மா இன்னொன்றைக்கூட வெளியிட்டார்:

''அன்னைக்கு ஒரு நாள் கொடிதடியெல்லாம் தூக்கிப் புடிச்சு நம்ப வீட்டுக்கு முன்னாலே ஊர்வலமாப் போனுங்க. நம்ம படிவாசலுக்கு வந்தப்போ அவங்க உன்னைத் தூக்கிலே போடணும்னு உரக்க உரக்கக் கத்தினுங்கடா.''

தன்னைப்பற்றிப் பொதுமக்கள் மத்தியிலே என்ன கருத்து நிலவுகிறதென்பதைப்பற்றி அவன் முதல் முதலாக இப்போதுதான் கேள்விப்படுகிறான். துப்பாக்கிப் பிரயோகம், தடியடிப் பிரயோகம், கூட்டங்களைக் கலைத்துவிடுதல் போன்ற காரியங்களில் தனக்கு இருந்த பங்கைப்பற்றி யாருக்குமே தெரியாதென்றுதான் அவன் எண்ணியிருந்தான். தான் பிறந்து வளர்ந்த ஊரிலேயே வந்து இவ்விதம் உணர வைத்திருக்கும் போது, சம்ஸ்தானத்தின் நாற்றிசைகளிலும், பட்டிக்காடுகளிலும் நிலைமை எவ்வாறிருக்கும் என்பதை அவன் யூகித்துக்கொண்டான். தான் தளர்ந்துவிடுவதுபோல் அவனுக்குத் தோன்றியது. ஒருவிதமான பீதி அவனை ஆட்கொண்டது.

தாயார் பேச்சை நிறுத்திவிடவில்லை:

''எல்லோருக்கும் பொறுமைதான்டா. அதுவும் இந்த நிலத்தை வாங்கினதுக்கப்புறம்தான்டா. ஒரு வீடுகூடக் கட்டினு அப்புறம் சொல்லிக்க வேண்டியதில்லே. காங்கிரஸ்காரங்க ஆட்சிக்கு வந்துட்டா, இதை எல்லாம் பறிமுதல் செஞ்சுடுவாங்களாம். அந்த நாணிக்குட்டியோட புருஷன் அன்னைக்கு இங்கே வந்திருந்தப்போதான் அப்படிச் சொன்னான்.''

கிட்டு மாமாவுக்கு உண்மையிலேயே சந்தேகம் ஏற்பட்டது. அதைத் தீர்த்துக்கொள்வதற்காக அவர் கேட்டார்:

''அப்படி நடந்திடுமா தம்பி?''

அலட்சியமாகக் கூறுவதுபோல் கேசவபிள்ளை சொன்னான்:

''ஓ . . . அதெல்லாம் சும்மா.''

ஆயினும், அத்தகைய ஒரு பயம் அவனுக்கு ஏற்படவில்லை எனக் கூற முடியாது. காங்கிரஸ் பிரமுகர்கள் அவ்வாறு பேசிவருவதாக அவனுக்குத் தெரியும். காங்கிரஸ் செயற்குழு நிறைவேற்றியிருக்கிற தீர்மானத்திலே, என்ன என்ன காரியங்களை நடைமுறைக்குக் கொண்டுவருவதாகச் சபதம் எடுத்திருக்கிறார்களோ, அந்த ஜாபிதாவிலே, மக்களைச் சித்திரவதை செய்யவைத்தும், சுடவைத்தும் கொன்ற சமூகத் துரோகிகளை விசாரணை செய்து அவர்களுக்குத் தக்கபடி தண்டனை அளிக்கப்படுமென்றும், சர்க்கார் பணத்தை அபகரித்தும், பொதுமக்களைக் கொள்ளையடித்தும், லஞ்சங்கள் வாங்கியும் சம்பாதித்த சொத்துகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்படுமென்றும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

இப்போது கிராமத்திலுள்ளவர்கள்கூட அவ்வாறே சொல்கிறார்கள். அமல்படுத்தக்கூடிய திட்டந்தானு, அது?

பப்புப்பிள்ளே கேட்டார்: ''இவனுங்க எவ்வளவுதான் குதிகுதின்னு குதிச்சாலும் துரைத்தனத்தாருங்க விட்டுக் கொடுப்பாங்களா?''

கேசவபிள்ளே அதற்குக்கூட அலட்சியமாகக் கூறுவதுபோலவே பதில் கூறினுன்:

''ஓ . . . அதெல்லாம் சும்மா.''

குட்டியம்மாவுக்குத் தெரிந்த தகவல்கள் ஒவ்வொன்றுக வெளியே கிளம்பி வந்தன:

''அவங்க என்ன தீர்மானம் செஞ்சிருக்காங்கன்னு தெரியுமா? இந்தக் கிராமத்திலுள்ளவங்க யாரும் நம்ப வீட்டுக்கு வரக்கூடாதாம். எல்லாரையும் விலக்கி வச்சிருக்காங்க. வண்ணுன், நாசுவன்னு இருக்கிறவங்க யாரும் இங்கே வரக்கூடாதுன்னு . . .''

ஆனல், பப்புப்பிள்ளேக்கு அந்த விஷயத்தில் பயம் கிடையாது.

''அவங்கல்லாம் வரத்தான் போருங்க. ஏதாவது வேலேயிருந்தாக் கொடுங்கோன்னு கேட்டுக்கிட்டு வரத்தான் போருங்க. இந்த விலக்கி வக்கிற வேலே ஒண்ணும் இந்த ஊரிலே நம்பகிட்டே வீலே போவாது.''

''அப்படீன்னு இதுக்கு முன்னே அந்தக் கோவிந்தனும், பப்பனுவனும், ஒளசேப்பும் இங்கே வந்துக்கிட்டிருந்தவங்கதானே? அவங்க இப்போ இந்த வீட்டு வழியாப் போனுக்கூட இந்தப் பக்கம் திரும்பிப் பார்க்கமாட்டேங்கிறுங்களே. உன்னேட நண்பனுயிருந்தானே அந்தப் பாச்சு, அவனுக்கு இப்போ என்ன திமிர்னு தெரியுமா? பொம்பிள்ளேங்ககூட இந்தப் பக்கம் எட்டிப் பாக்கறதில்லேடா. ஏதோ தப்பித் தவறி அந்தக் கொச்சுநாணி மட்டும் வந்துட்டுப் போரு. அவள் வந்து கார்த்தியாயினிகிட்டே சிரிக்கறதும் விளேயாடறதும் உண்டு. அது அவளுக்கு ஓர் உதவியாச்சு. மற்றவங்களுக்கெல்லாம் நம்ப மேலே பொருமை தான்டா, பொருமை!'' என்ருள் தாயார்.

ஊரில் எல்லாருக்கும் தங்கள்மீது பொருமைதான் என்கிற விஷயத்தில் பப்புப்பிள்ளேக்குச் சந்தேகம் இல்லே.

குட்டியம்மா மேலும் கூறினுள்: ''இந்தக் கிட்டு மாமாவும், கோபாலக் குருப்பண்ணனும் மட்டுந்தான் இங்கே வர்ருங்க.''

இவற்றை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்த கேசவபிள்ளே கேட்டான்:

''இந்தத் தகவல்களெல்லாம் உங்க கிட்டே யார் சொன்னுங்க?''

''கோபாலக் குருப்பும், அந்தோனியுந்தான் அவரிடம் இந்தச் செய்திகளேப்பற்றிச் சொன்னுர்கள். அவர்கள் இந்த ஊரிலுள்ள எல்லா வீடுகளுக்கும் சென்று வருகிறவர்கள். வாசகசாலேக்கும் போய் வருவதுண்டு.'' குட்டியம்மா தொடர்ந்து கூறினுள்:

''நீ கார்த்தியாயினி கிட்டே கேட்டுப் பாரு! அவள் சொல்லுவாள். கொச்சுநாணி அவள் கிட்டே எல்லாவற்றையும் சொல்லியிருக்கிருள். பெண் பிள்ளேங்கல்லாம்கூடத் தீர்மானிச்சு வச்சிருக்காங்க. இங்கே ஒரு

பெண் பிள்ளையாவது வரணுமே. நான் அக்கம்பக்கம் போனா ஒருத்தியாவது என் கிட்டே பேசணுமே. இப்போ நான் எங்கேயும் போறதில்லேடா. நான் செத்துப் போனாக்கூட எந்தப் பெண் பிள்ளையும் இங்கே காலெடுத்து வைக்கப் போறதில்லையாம். அப்போ நீ என்ன பண்ணுவேடா?''

ஒரு விநாடி பேச்சை நிறுத்திவிட்டு அவள் மேலும் தொடர்ந்து கூறினாள்:

''இங்கே வந்ததுக்கு அந்தக் கொச்சுநாணியோட புருஷன் அவளை உதை உதைன்னு உதைச்சிருக்கான். அப்படியிருந்தும் அவள் வந்து கிட்டிருக்காள். பாவம் பொண்ணு. அவள் மட்டும் இல்லாமே இருந்தா, பேச விளையாட யாருமில்லாமே உன் கார்த்தியாயினிக்குப் பைத்தியமே புடிச்சிருக்கும். கொச்சுநாணி ரொம்ப நல்லவள்டா.''

''என் மகன் இவ்வளவு கொடுமை செய்யறப்பலே நடந்துக்கக்கூடாது. அது பெரிய பாவம்டா. கார்த்தியாயினிக்கு அடுத்தது பத்தாவது மாசம்னு நினைவிருக்காடா, உனக்கு? உன்னோட குழந்தை வயிற்றிலே இருக்கிறப்போதான்டா, நீ மக்களைச் சுடவச்சே. செத்துப் போனவங்களுக்குக்கூடப் பொண்டு பிள்ளைங்க இருக்கிறுங்கன்னு நினைச்சுக்க வேணுமா?'' என்றாள் தாய் மகனிடம்.

பொதுமக்களுடைய ஆத்திரம் எவ்வளவு தூரம் பொங்கி எழுந்திருக்கிறது என்பதைக் கேசவபிள்ளை உணர்ந்துகொண்டான். சம்ஸ்தானம் முழுதிலும் நிலைமை இவ்வாறுகவே இருக்கும். தன்மீது இவ்வளவு வெறுப்பு ஏற்படக் காரணமென்ன என்பதைப்பற்றி அவன் சிந்தித்துப் பார்த்தான். தான் வெறும் கருவி மட்டுந்தானே? போலீஸார் உதைத்தனர்; சுட்டனர். என்ன நடைபெறுகிறது என்பதைக் கண்டறிந்து ரிப்போர்ட் செய்யக் கொஞ்சம் பணத்துடன் தான் அங்கெல்லாம் போனது உண்மை. எந்த ஒரு தடியடிப் பிரயோகமோ, துப்பாக்கிச் சூடோ தனது உத்தரவின்படி நடைபெறவில்லையே. அந்தச் சந்தர்ப்பங்களில் அங்கெல்லாம் சென்றிருந்தது உண்மைதான். தான் அங்கே நிற்பதைக் கண்ட போலீஸார், தங்கள் அக்கறையையும் சுறுசுறுப்பையும் எடுத்துக் காட்டுகிற முறையிலே சற்று அதிகமாகவே கடுமையாகச் செயல்பட்டிருக்கின்றனர். அதிகாரபீடத்தின் உத்தரவுகளைச் சிறிதும் தவறுமல் நடைமுறைக்குக் கொண்டுவந்தது மட்டுந்தானே, தான் செய்திருப்பது? தன்னுடைய நிலையிலுள்ள வேறு எந்த ஊழியனும் இப்படித்தானே நடந்திருப்பான்? எனவே, தன்மீது மக்கள் ஏன் இப்படிச் சீறி விழவேண்டும்?

கிட்டு மாமா ஓர் உண்மையைச் சொல்லிவிட்டார்:

''முன்னே இங்கெல்லாம் அவங்க நினைச்சபடி ஆட்டம் போட்டுக் கிட்டிருந்தாங்க. தினசரி ஊர்வலமும் பொதுக்கூட்டமும்தான். இப்போ அதெல்லாம் கூடாதுன்னு காந்தி சொல்லிட்டாரல்ல? இப்போ குதிக்கறதுக்கும் துள்ளறதுக்கும் வழியில்லாமே போச்சு. அதனாலே

வந்திருக்கிற ஆத்திரந்தான் இது. இன்னும் கொஞ்சகாலம் போனு எல்லாம் தானுகவே தணிஞ்சு போயிடும் தம்பீ.''

அதுவும் சரிதான் என்று கேசவபிள்ளைக்குத் தோன்றியது. பொது ஜனக் கிளர்ச்சி அணை போட்டுத் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. அது தனி நபர்கள்மீதுள்ள வெறுப்பாக உருமாறியிருக்கிறது.

ஆனல், வேறு ஒரு விஷயம் பப்புப்பிள்ளையின் மனத்தைத் துன் புறுத்திக்கொண் டிருந்தது. செய்யக்கூடாததை யாரும் செய்யக்கூடா ததுதான். சம்ஸ்தானம் முழுதிலுமே மக்கள் கிளர்ந்து எழுந்திருக் கிறார்கள். இப்போது சிறிது தணிந்திருக்கலாம். அதை அவ்வளவு தூரம் கணக்கில் எடுக்கவேண்டாம். இந்த உத்வேக உணர்ச்சியிலே கடிவாளமற்ற போக்குடையவர்களும் இருப்பார்கள். அவர்கள் ஏதாவது துணிகரமான செயலில் ஈடுபட்டால் . . .?

பப்புப்பிள்ளை, குட்டியம்மாவிடம் கூறினர்:

''நீ போயி அவனுக்குக் கஞ்சியோ தண்ணியோ ஊற்றிக் கொடம்மா!''

குட்டியம்மா அதைக்கூட மறந்து நின்றுகொண் டிருந்தாள். அவள் சென்றபோது பப்புப்பிள்ளை கேட்டார்:

''உங்க அம்மா காதிலே இது விழவேணும். அவங்க வெறி புடிச்சு அலையருங்க. உன்னை அவமானம் செய்தால் . . .?''

அவமானப்படுத்தினுல் என்று இலேசாகக் குறிப்பிட்டு நிறுத்தினர். மனத்துக்குள்ளே இருந்து வருகிற பயத்தை அப்படியே முழுதும் சொல்ல அந்த முதியவருக்கு மனம் இல்லை.

''ஓ . . . அப்படியொன்றும் நடந்துவிடாது.''

கேசவபிள்ளை சொன்னன். அப்போது அவனுடைய மனத்திலும் அத்தகைய பயம் இருந்து வந்தது. மக்கள் அவனைப் பொது எதிரியாகக் கருதுகிறார்கள். யாராவது ஒருவன் கொல்லத் துணிந்துவிட்டால்? தெய்வ கோபமும் சாபமும் இருந்து வருவதாகத் தாய் தந்தையர்கள் சொல்கிறார்கள். மக்களுடைய எண்ணங்கள் எவ்வாறெல்லாம் செயல் படலாம் என்பதுபற்றி இதுவரையில் அவன் எண்ணிப் பார்த்ததே இல்லை.

காங்கிரஸ் வெற்றி பெற்றுவிடுமா? ஜனங்கள் யாவரும் அதன் பக்க மாகவே இருந்து வருகிறார்கள். அது வெற்றி பெறத்தான் செய்யும். கேசவபிள்ளையின் சிந்தனை இவ்வாறு செயல்படுவது இதுதான் முதல் முறை. கிளர்ச்சி இதோடு நின்றுவிடாது. இன்னும் பொங்கியெழ லாம். அவ்வாறு காங்கிரஸ் வெற்றி பெற்றால்? முதல் எதிரி அவனுகவே இருப்பான். திவான்ஜி போய்விடுவார். தலைமைக் காரியதரிசியும் தப்பித்துக் கொண்டு விடுவார். அவனுக்குத்தான் வேறு வழியில்லை. மேற்கொண்டும் இதே வேலையைத்தான் செய்யவேண்டியிருக்கும்.

தேடிக்கொண்டதைக் கொண்டு திருப்தியடைந்து விலகி நின்றால் என்ன? அப்போது அவனுடைய உள்ளத்திலிருந்து இன்னொரு கேள்வி உயர்ந்து வந்தது.

''எதைத் தேடிக்கொண்டேன்?''

தேடிக்கொண்டது ஏதாவது இருந்தால், அது அதிருஷ்டத்தினால் ஏற்பட்டதுதானே? அந்த அதிருஷ்டம் மேற்கொண்டும் தன்னைப் பாதுகாக்காதா?

அத்தியாயம் 16

முதலில் ஏற்பட்ட நடுக்கம்!

நகரிலுள்ள பட்டம் என்ற பகுதியில் ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்து, ஒரு சமையற்காரனை ஏற்படுத்திக்கொண்டு கேசவபிள்ளை அங்கே தங்கி வந்தான். சிறிது நாட்கள் அவ்வாறு சென்றன. அவன் இப்போது காங்கிரஸின் முதல் எதிரியாகிவிட்டான் என்பது அரசாங்கத்தின் கவனத்துக்கு வந்திருக்கிறது. சி.ஐ.டி. ரிப்போர்ட்டுக்கள் அவ்வாறு கூறின. பாதுகாப்பு அளிக்கப்படவேண்டியவர்களின் ஜாபிதாவில் கேசவபிள்ளையின் பெயரும் பதிவாகிவிட்டது. ஊருக்குச் சென்றிருந்தபோது தனக்குக் கிடைத்த தகவல்களை அவன் திவான்ஜியிடம் நேரடியாக அறிவித்தான்.

திவான்ஜி கேட்டார்: ''உங்களுக்குப் பயமுண்டா?''

''இல்லை.''

பிரத்தியேகமான போலீஸ் பாதுகாப்பு அவனுக்கு இருந்துவருகிறது. ஆயினும் உள்ளூற ஏற்பட்டிருந்த பயம் அவனுடைய உற்சாகத்தைத் தணியச் செய்தது.

கேசவபிள்ளை இப்போது சூப்பிரண்டின் அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டிருந்தான். புதிதாக அமைந்த அரசியல் இலாக்காவின் பொறுப்பு அவனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

ஆயினும் மனத்துக்குள் ஊடுருவிய பீதி அவனை வெகுவாகச் சிந்திக்கச் செய்தது. சிந்தித்துச் சிந்தித்து இறுதியில் அவன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான். அவனை இந்த வேலையில் அமரச் செய்தது அல்லது பிரவாகத்தில் இழுத்து இந்த இடத்துக்குத் தள்ளிக்கொண்டு வந்தது எல்லாம் விதிதான்; தலைவிதி! இதிலிருந்து பயந்து போகவேண்டிய அவசியமில்லை. உத்தியோக முறையில் மட்டுமின்றித் தன் சொந்த முறையிலேகூட இனிமேல் தனக்குத் தரப்பட்டிருக்கிற வேலையில் முழுக் கவனத்தையும் செலுத்தவேண்டியதுதான். காங்கிரஸைத் தகர்த்துவிடவேண்டும். அதை ஒருகாலும் வெற்றியடைய விடக்கூடாது. அது வெற்றி பெறுகிறதென்றால் அது கேசவபிள்ளையின் அழிவு என்றே பொருள். 'கேசவபிள்ளையைத் தூக்கிவிடவேண்டும்!', 'அவனுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்யவேண்டும்!' என்பவையே அதன் கோஷங்கள். காங்கிரஸ் வெற்றி பெறுமா என்ற சந்தேக எண்ணங்கூட மனத்திலே தோன்றிவிடக்கூடாது. அது தோல்வியடைந்தே ஆகவேண்டும்.

இவ்வாறு காங்கிரஸுடன் நடத்துகிற போராட்டம் அவன் வாழ்க்கைப் பிரச்னையாகியபோது, கடமையை நிறைவேற்றுவது என்பதுகூட அவன்

சொந்த விஷயமாக மாறியது. அவனுடைய அறிவுத்திறன் சுறுசுறுப்படைந்தது. பல திட்டங்கள் அதிலே உருவாகிவிட்டன. அவை தாமாகவே தோன்றியவைதாம். என். எஸ். எஸ்.; எஸ். என். டி. பி.* முதலிய வகுப்புவாத ஸ்தாபனங்களை அரசாங்கத்தின் செல்வாக்கின் கீழ் கொண்டுவரவேண்டும். அதற்காக உணர்வு பூர்வமாகச் செயல்பட வேண்டும். அத்துடன் காங்கிரஸைக் காப்பாற்றி வருகிற அந்தப் பாங்கைத் தகர்த்துவிடவேண்டும். அதை முக்கியப் பிரச்னையாக எண்ணி வேலை செய்யவேண்டும். 'நாட்டுப் பற்று அல்ல; திவான்ஜியிடம் கொண்டுள்ள வெறுப்பே சம்ஸ்தான காங்கிரஸ் தலைவர்களுக்கு இருந்து வருகிறது' என்பதைத் தெளிவு படுத்தவேண்டும். அதற்காகச் சம்ஸ்தானத்துக்குள்ளேயும், வெளியேயும் தொடர்ச்சியாகப் பலன் அளிக்கிற முறையில் பிரசாரம் செய்யவேண்டும். பிரசாரத்தின் மையக் கருத்தாக அதுவே இருந்துவரவேண்டும். அதற்கான வாதங்கள்கூட அவன் மூளையிலே உதயமாயின.

காந்திஜியை இகழ்கிறவர்களும், மதத்தின் பெயரால் ஆங்கிலேய அரசாங்கத்தின்மீது பற்றுதல் கொண்டிருந்தவர்களுமான ஒரு பகுதியினரே சம்ஸ்தான காங்கிரஸைக் கட்டுப்படுத்திவருகின்றனர். காங்கிரஸ், அவர்களுடைய சொந்தச் சொத்தாகும். அவர்களுக்குத் திவான்ஜிமீது ஆத்திரம் இருந்து வருகிறது. அதற்குப் போதுமான அத்தாட்சிகள் உண்டு. ஏனைய மக்களில் சோர்வுற்றிருக்கிற சிலர் அதோடு சேர்ந்து கொண்டனர்.

இவ்வாறெல்லாம் தெளிவுபடுத்தி அவன் ஒரு ரிப்போர்ட்டைச் சமர்ப்பித்தான். ஒரு புதிய ஸ்தாபனத்தை அமைக்கவேண்டிய அவசியத்தைப் பற்றியும் அவன் அதிலே வற்புறுத்தியிருந்தான். ரிப்போர்ட் திவான்ஜியுடைய கவனத்தை ஈர்த்தது.

கேசவபிள்ளையின் அலுவல் பக்தி விலாசத்துக்கு மாற்றப்பட்டது. திடீரென வந்த உத்தரவுதான் அது. அதைப்பற்றித் தலைமைக் காரிய தரிசியிடம்கூட யோசனை கேட்கவில்லை. திவான்ஜிக்கு அப்படிப்பட்ட ஓர் எண்ணம் தோன்றிவிட்டது. உத்தரவைப் பார்த்தபோது கிருஷ்ணன் நாயர் தளர்ந்துவிட்டார். இனி என்ன செய்வதென்று அவர் கலக்க முற்றார். அதற்கு அவர் மனைவிமீதுதான் குற்றம் சாட்டினர்.

''மேலே மேலே தூக்கி வச்சியே. அதோட பலனைப் பார்த்தியா? இப்போ நம்மிடத்திலேருந்து போயிட்டானே. அவனைப்பற்றித் திவான்ஜி கிட்டே சொல்லணும்னு சொல்லி ஒற்றைக்காலிலே நின்னியே? இப்போ நீயே அநுபவிச்சுக்கோ!''

---

* N.S.S. : நாயர் சர்வீஸ் சொஸைட்டி, S.N.D.P. : ஸ்ரீ நாராயண தரும பரிபாலன யோகம். முதலாவது நாயர் வகுப்பினரின் ஸ்தாபனம்; இரண்டாவது ஈழவர்கள் ஸ்தாபனம். (மொ–ர்.)

பகவதிக்குட்டியம்மாவால் அந்தத் தவறை ஒப்புக்கொள்ளாமல் இருக்கமுடியவில்லை. தேவைக்கும் மேலாகப் பாராட்டியதன் மூலமாகவே கேசவபிள்ளை தங்கள் பிடியிலிருந்து நழுவிப் போக நேர்ந்தது. இது ஒரு பெரிய இழப்பு.

''நமக்குப் பல விஷயங்களிலே நஷ்டம் ஏற்பட்டிருக்கு. அவன் சொந்த மூளையைப் பயன்படுத்திப் பல காரியங்களைச் செஞ்சிருக்கான்.'' தொலைவிலே கண்களை நட்டவாறு கூறினாள் பகவதிக்குட்டி.

கிருஷ்ணன் நாயர் அவளை விமர்சிப்பதுபோல் குற்றம் சாட்டினார்: ''என்ன செய்வதாக இருந்தாலும் முன் யோசனையோடுதான் செய்யணும்.''

பகவதிக்குட்டியம்மா விட்டுக்கொடுக்கவில்லை:

''நான் மட்டுமா தவறு செஞ்சேன்? எல்லாரும் அப்படி நடந்திருக்காங்க. நெய்யாற்றங் கரைத் துப்பாக்கிச் சூடு நடந்து முடிஞ்சப்போ அவனைக் கட்டித் தழுவல்லீங்களா?''

கேசவபிள்ளை, தலைமைக் காரியதரிசிக்கு உறுதுணையாக இருந்து வந்தான். அவர் அதை நினைத்துப் பார்த்தார். ஹைட்ரோ எலக்டிரிக் புரோஜக்ட், பஸ் கம்பெனியார் ஆகியோரிடமெல்லாம் அவன் சாமர்த்தியமாகப் பழகிவந்த விஷயங்களைப்பற்றிப் பகவதிக்குட்டியும் நினைத்துப் பார்த்தாள். அவள் சொன்னாள்:

''இவ்வளவு அன்பும் வினயமும் உண்மை உள்ளமும் கொண்ட வேறொருவன் நமக்குக் கிடைப்பது அரிது. அது நிச்சயம்.''

தலைமைக் காரியதரிசி அதை ஒப்புக்கொண்டார். அவர் சொன்னார்: ''அவன் திவான்ஜிக்கு அனுப்பி வச்சானே, அந்த ரிப்போர்ட்டை என் பேரிலே அனுப்பியிருந்தாப் போதுமாயிருந்தது.''

ஒரு விநாடிக்குப் பிறகு அவர் தொடர்ந்து கூறினார்: ''ஏற்பட்ட தவறைப்பற்றிச் சொல்லாமே இருப்பதுதான் நல்லது.''

இவ்வளவு கெட்டிக்காரனை ஒருவன் கிடைப்பதே அரிது என்ற கருத்தே பகவதிக்குட்டிக்கு. அத்தகைய இன்னொரு நபரைக் கண்டு பிடிப்பது இன்றியமையாத தேவையாகிவிட்டது, தலைமைக் காரியதரிசிக்கு. எங்கே போனாலும், எந்தப் பதவியில் இருந்தாலும் கேசவபிள்ளை தங்களிடம் நன்றியுடன் இருந்து வருவான் என்ற விஷயத்தில் அந்தத் தம்பதிகளுக்கு நம்பிக்கை உண்டு.

கேசவபிள்ளை பக்தி விலாசத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறான் என்ற செய்தி திவான்ஜியுடைய பிரைவேட் செக்ரடரியைக்கூடத் திடுக்கிடச் செய்தது. திவான்ஜியிடம் அபரிமிதமான செல்வாக்கு படைத்தவர்தாம் அந்த மனிதர். தாம் ஏதாவது ஒரு கருத்தைத் தெரிவிக்கக்கூட இயலாதபடி திவான்ஜி உத்தரவு போட்டுவிட்டார். எந்தச் செல்வாக்கின் அடிப்படையில் இந்த நியமனம் நடந்திருக்கிறது? அந்த மனிதர் திகைப்புற்றார். எவ்வளவோ யோசித்துப் பார்த்தார். ஒன்றுமே விளங்கவில்லை. இது எப்படி நேர்ந்தது? பிரைவேட் செக்ரடரி, கேசவபிள்ளையைப்

பாராட்டினார். ஆனால், அது உண்மையான உள்ளத்துடனா? தமக்குத் தெரியாமல் ஒருவன் பக்தி விலாசத்துக்குள்ளே புகுந்து விடுவதா? அது ஒருகாலும் பிரைவேட் செக்ரடரி விரும்புகிற நிகழ்ச்சி அல்ல.

அந்த வங்கி சம்பந்தமான பிரச்னையிலேதான் கேசவபிள்ளையின் முழுக் கவனமும் ஈர்க்கப்பட்டிருந்தது. அதற்காக அவன் பல இடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்யவேண்டியதாயிற்று. காங்கிரஸ் கிளர்ச்சி நடை பெற்றபோது சுற்றுப் பிரயாணம் செய்த கீழ்த்தரச் சிப்பந்தியல்ல இன்று கேசவபிள்ளை. இன்று அவன் வருகையை எதிர்பார்த்துப் பேஷ்கார்கள் காத்து நிற்கிறார்கள். இலாக்கா அதிகாரிகள் அவனைப் பார்க்க நேரம் காலம் பார்த்து நிற்கிறார்கள். எங்கே சென்றாலும் அவனுடைய காரியந் தான் முதலிடம் பெறுகிறது. அவன் முன்வைக்கிற பிரச்னைக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அதுதான் அவசரத் தன்மை வாய்ந்தது. ஆனால், கேசவபிள்ளை ஒரு சூப்பிரண்டு என்ற முறையிலே தான் நடந்துகொள்கிறான். எந்த ஒரு பேஷ்கார் முன்னிலையிலும் அவன் உட்காரவில்லை. முன்போல் 'உத்தரவு!' என்று சொல்வதில்லை என்பது உண்மையே. இடுப்பிலே துண்டு வேஷ்டியைக் கட்டுவதுமில்லை. அந்த ஒரு வித்தியாசந்தான் ஏற்பட்டிருக்கிறது.

ஆயினும் அவனுடைய வாழ்க்கையில் அமைதி இருந்ததென்று சொல்ல முடியாது. அவன் நன்றாகத் தூங்கி வெகு நாட்களாகிவிட்டன. யோசனைகள் பல செய்தவாறு படுத்திருப்பான்; ஏதோ சற்று நேரம் கண் மயங்கிவிட்டால்கூடக் கெட்ட கனவுகள் கண்டு நடுங்கியவாறு விழித்தெழுவான். யாரைத்தான் நம்புவது? உண்மை உள்ளம்உடையவன் யார்? நண்பர்கள் யாரும் இல்லை. சிறிது நேரம் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருக்க சிநேகிதர்கள் யாரும் இல்லை. சமையற்காரன் உணவிலே விஷத்தைக் கலந்து தந்தால்? கார்த்தியாயினியை அழைத்து வந்தால் என்ன என்று அன்றாடம் அவன் யோசிப்பதுண்டு. ஆனால் . . . அந்த 'ஆனால்' என்பதன் பின்பு எண்ணற்ற அச்சங்கள் பதுங்கியிருக்கின்றன. அவற்றைப் பகிர்ந்துகொள்ள தனக்கு ஒரு துணை தேவை. அதற்காக அவன் உழன்றுகொண் டிருந்தான்.

வாழ்க்கையில் ஏற்படுகிற அனேத்து அதிருஷ்டங்களுக்கும் தகுந்த காலம் தானாக உருப்பெற்று வருபவைதாம். காங்கிரஸ் போராட்டம் நடைபெறாமல் இருந்திருந்தால் தனக்கு இத்தகைய அந்தஸ்து கிடைத் திருக்க முடியுமா என்று கேசவபிள்ளை எண்ணிப் பார்ப்பதுண்டு. ஒரு முறையில் பார்த்தால், அவனுடைய நல்ல காலத்துக்காகவே காங்கிரஸ் பிறந்திருக்கிறது. மக்களின் கிளர்ச்சி முறைகளைப்பற்றி அவனுக்கு ஒன்றுமே தெரியாது. அரசாங்கம் அதை எப்படிச் சமாளித்து வந்தது என்பதைப்பற்றியும் தெரியாது. ஆனால், அன்று தலைமைக் காரியதரிசிக்குத் தன்னால் யோசனைகள் கூற முடிந்தது, அதிருஷ்டத் தினால்தான். அன்றி, அவனுக்கு அதைப்பற்றிய அ றி வு த் தி ற ன் இருந்து வந்ததனால் அல்ல. அதைப் போலவேதான், அவன் அனுப்பி

வைத்த ரிப்போர்ட்டும் அமைந்துவிட்டது. தனது நிலை அபாயத்துக் குள்ளாகக் கூடாது என்பதற்காகக் காங்கிரஸ் தோல்வியுற்றே தீர வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டபோது தன்னையும் அறியாமல் எழுதிய ரிப்போர்ட் அது. அந்தத் துப்பாக்கிச் சூடு போன்றவற்றிலும் வெற்றி பெற்றது அதிருஷ்டத்திலைன்றி வேறு எதனால்?

ஆனால், கடலில் எழுகிற அலை வரிசைபோல் அதிருஷ்டங்கள் ஒவ்வொன்றாக உருண்டு திரண்டு வருவதைப் பார்த்தபோது அவனுக்குப் பயம் ஏற்பட்டுவிட்டது. நல்ல காலம் என்பது இவ்வாறு அடுக்கடுக்காக வரக்கூடாததுதான். அது தவறு, கெட்ட சகுனம். இவ்வாறு அதிருஷ்டம் ஏற்படுகிறதென்றால் அது எதிர்காலத்தில் நிகழக்கூடிய துரதிருஷ்டத்தின் முன்னோடியாகும். அந்தத் துரதிருஷ்டம் என்ன வாக இருக்கும்? அதுவும் கேசவபிள்ளையின் மனத்தை உலுக்கி வருகிற ஒரு கேள்விதான். சில சந்தர்ப்பங்களில் அவன் மின்னி மறைகிற மின்னல்களைப்பற்றி நினைத்துப் பார்ப்பான். மக்கள் அனைவரும் அவ னுடைய எதிரிகள்!

* * *

ஒரு நாள் காலையில் விழித்தெழுந்த கேசவபிள்ளை கதவைத் திறந்த போது கண்ட காட்சி பயங்கரமாக இருந்தது. அவன் நடுங்கி விட்டான். முன்னால் நின்ற மாமரத்தின் கிளையிலே ஒரு மனிதன் தொங்கிக் கிடந்தான். கிழிந்த சட்டையும், சடை பிடித்த முடியும் கொண்ட ஒரு மனிதன். கட்டியிருந்த வேஷ்டியைத்தான் சுருக்குக் கயிறுகப் பயன்படுத்தியிருந்தான். கிழிந்த குடை ஒன்றை மாமரத்தடி மீது சாய்த்து வைத்திருந்தான். ஒரு காகிதக் கட்டின் விளிம்பு குடைக் குள்ளிருந்து வெளியே நீண்டு நின்றது. கேசவபிள்ளை குரல் எழுப்பினான்.

ஆட்கள் வந்து குழுமினர்கள். உயிரை மாய்த்துக்கொண்டவர் கோபாலன் நாயர்தான். அந்தக் காகிதக் கட்டைப் போலீஸ் சோதித் துப் பார்த்தது. ஒரு மனைக்குப் 'பொன்னின் வலை'க் கொடுப்பதற்கான அரசாங்க உத்தரவு முதற்கொண்டு அனைத்துத் தஸ்தாவேஜுகளும் அதிலே இருந்தன. பல வருடங்கள் பயன்படுத்திய ஒரு கணக்குப் புத்தகம். அதிலே அந்தப் 'பொன்னின் வலை'க்குரிய தொகை கிடைப்பதற்காகச் செலவு செய்த செலவு இனங்கள் எழுதியிருந்தன. நிச்சயமாக, அந்தக் குறிப்புக்களுக்கிடையிலே 'சூப்பிரண்டுக்குக் கொடுப் பதற்காகக் கேசவபிள்ளையிடம் கொடுத்த ரூபாய் பதிமூன்று' என்று எழுதி வைத்திருப்பார். அந்த லைபல் இன்னமும் உதவிக் காரியதரிசியின் மேஜைமீது இருக்கலாம்.

அந்தக் காகிதக் கட்டைத் தன் மகன் முகுந்தனிடம் ஒப்படைக்க வேண்டுமென்று ஒரு குறிப்பையும் கோபாலன் நாயர் எழுதிவைத் திருந்தார். தகப்பன், தனயனுக்காகச் சேர்த்து வைத்திருக்கிற சொத்து!

சென்ற சில நாட்களாக இந்த மனிதன் பார்க் வியூ, பக்தி விலாசம் ஆகியவற்றின் படிவாசல்களிலே, உள்ளே நுழையச் சந்தர்ப்பம் பார்த்தவாறு சுற்றிக்கொண் டிருந்தான் என்று காவலர்கள் கூறினர் கள். அவரைப் பல தடவை போலீஸ் துரத்திவிட்டதுண்டு. சிறிது சித்தப்பிரமை அவருக்கு இருந்ததாகத் தோன்றியதாம். இரவு நேரங் களில் 'மஃப்படி'யில் சுற்றுகிற பந்தோபஸ்துப் படையினர், கேசவ பிள்ளை தங்கி வருகிற வீட்டுக்கு முன்னுலுள்ள பாதை வழியாக இரவு எட்டுமணியளவில் அவர் போனதைப் பார்த்திருக்கின்றனர். அவனைச் சந்திக்க அவர் முயன்றிருக்கலாம். எல்லா முயற்சிகளும் தோல்வியுற்ற பின் தற்கொலை செய்துகொண் டிருக்கலாம்!

இவ்வளவு பயங்கரமான ஒரு காட்சியைத் தன் வாழ்நாளில் கேசவ பிள்ளை இதுவரையிலும் கண்டதில்லை. நாக்கைக் கடித்து, கண்களை உருட்டி விழித்து, தலையை ஒரு பக்கம் சாய்த்து, அந்தப் பிணம் அவனையே பார்த்தவாறு தொங்கியது. ஓ! இந்தக் காட்சியை எந்நாளும் மறக்கமுடியாது.

கேசவபிள்ளை தம்பானூரிலுள்ள விடுதியில் தங்கியிருந்தபோது குட்டன்பிள்ளையின் கடிதத்துடன் அவர் வந்தார். படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த அவனை எழுப்பி அவர் அந்தக் கடிதத்தைக் கொடுத்தார். கையிலே தம்பிடிக் காசு இல்லாத சமயம். சற்றுத் தயக்கமும் இருந்து வந்த நேரம். அந்த அலுவலிலே அவனுக்குக் கிடைத்த பங்கு மூன்று ரூபாய். பின்னல் அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டான் என்பது உண்மை ஆயினும் ஒரு காசுக்குக்கூட வழியில்லாமல் இருந்த அந்தச் சந்தர்ப்பத்தில் கடவுளாகவே கொண்டு வந்து தந்த ரூபாய் அது. பாருங்கள், இன்று அது வாழ்க்கையிலேயே மறக்க முடியாத ஒரு பயங்கரக் கனவாக உருமாறியிருக்கிறது!

இந்த மனிதன் எதற்காகத் தன் வீட்டு மனையிலே புகுந்து தற்கொலை செய்துகொண்டான்? அந்த மூன்று ரூபாயை அன்றைக்கு இவரிடமிருந்து வாங்கிக்கொண்டதற்காகவா? அப்படியானால் இதை விடப் பெரிய தொகைகளை இவர் வேறு பலருக்கும் வீணாகக் கொடுத் திருக்கவேண்டுமே. அவர்களில் ஒருவருடைய வீட்டுக்குச் சென்றல்லவோ தற்கொலை செய்துகொண் டிருக்கவேண்டும்? ஒருவிதமான குற்ற உணர்வு கேசவபிள்ளையின் மனச்சாட்சியைத் துன்புறுத்திற்று. இவரைப் பாதுகாத்திருக்கலாம். பரிதாபமான முறையில் இவர் உயிரை மாய்த்துக் கொண்டிருக்கவேண்டாம். மைத்துனரிடமிருந்து கடிதத்தைப் பெற்றுக் கொண்டு வந்தபோது எப்படியும் காரியத்தைச் சாதித்துவிடலாம் என்ற நம்பிக்கையுடன்தான் இவர் வந்திருக்கவேண்டும். அந்த நம்பிக்கை தகர்ந்துவிட்டதனால், இவர் தற்கொலை செய்துகொண் டிருக்கலாம்.

கோபாலன் நாயர் என்ற பெயருடைய ஒரு மனிதன், கேசவபிள்ளையின் வீட்டு மனையிலுள்ள ஒரு மாமரக் கிளையில், சந்தேகத்துக்குரிய முறையில் தூக்குப் போட்டுக்கொண்டு இறந்தான் என்ற செய்தி காங்கிரஸ்

ஆதரவான பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது. கேசவபிள்ளை, கோபாலன் நாயரைக் கொன்றுவிட்டான் என்று அந்தச் செய்தி முழுதையும் படித்துப் பார்ப்பவர்களுக்குத் தோன்றும்.

அது ஏதோ கெட்டகாலத்தின் துவக்கம் என்று கேசவபிள்ளைக்குத் தோன்றியது. அதன் கரிய நிழல் முன்பே பரவியிருந்தது. இப்போது அந்தக் காலம் ஆரம்பமாகிவிட்டதா என்று அவன் சந்தேகம் கொண்டான். ஒவ்வொரு நிமிஷத்திலும் அவன் ஒவ்வொரு கெட்ட செய்தியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அவனுடைய சிந்தனைகள் கடிவாள மற்ற குதிரைகள்போல் பாய்ந்து சென்றன. காங்கிரஸ்காரர்களில் யாராவது ஒருவன் தன்னைக் கொல்லச் சந்தர்ப்பத்தை எதிர் பார்க்கவில்லை என்று எங்ஙனம் கூறமுடியும்? பந்தோபஸ்துப் படையினர் இருந்துங்கூட கோபாலன் நாயர், தன்னுடைய வீட்டு மனைக் குள்ளே நுழைந்து தற்கொலை செய்துகொண்டார் அல்லவா? சிந்தனைகளின் இறுதியில் கோபாலன் நாயர் தற்கொலை செய்துகொண்ட அன்றிரவு தன் வீட்டுக் காவலுக்குப் பொறுப்பாயிருந்தவர்களுக்கு வேலை நீக்க உத்தரவு கொடுப்பதென்ற முடிவுக்கு அவன் வந்துவிட்டான். அவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யவில்லை என்ற ரிப்போர்ட்டை எழுதியனுப்பினான். இவ்வாறுக மேலும் இரண்டு குடும்பங்கள் தெருவில் தள்ளப்பட்டன. அவர்கள் இருவரும் தங்கள் குழந்தைகளை அழைத்து வந்து கேசவபிள்ளையிடம் கேட்டனர்:

''எஜமானே, இந்தக் கொழந்தைங்களை நாங்க என்ன செய்யணும்னு சொல்லுங்கோ?''

அந்தக் குழந்தைகள்கூடத் தன்னுடைய எதிரிகளாகிவிட்டனர் என்று தான் கேசவபிள்ளைக்குத் தோன்றியது. அவர்கள் எதிரிகளாகிவிட் டார்கள் என்றால் அதிலே ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

சம்ஸ்தானம் முழுதிலும் எத்தனை எத்தனை குடும்பங்கள் அவன் எதிரிகளாக மாறியிருக்கிறார்கள்! துப்பாக்கிச் சூடுகளில் உயிரிழந்தவர் களைப்பற்றி அவன் நினைத்துப் பார்த்தான். அவர்களுடைய குழந்தைகள், தாய் தந்தையர்கள், மனைவிகள்—அவர்களைச் சார்ந்து உயிர் வாழ்ந்து வந்தவர்கள்—ஒவ்வொருவராக இப்படித் தூக்குப் போட்டுக் கொண்டு தற்கொலை செய்துகொள்ளத் துவங்கிவிட்டால்...? மாமரக் கிளையிலே தொங்குகிற பிரேதங்களையல்லவா, தினசரி காலை வேளையில் விழித் தெழும்போது பார்க்கவேண்டியிருக்கும்?

பயந்தான் அவனை இவ்வாறெல்லாம் சிந்திக்க வைத்தது.

ஆனால், நடப்பவை அனைத்துக்கும் அவன் மட்டுந்தானே பொறுப் பாளி? அல்லது ஏதாவது ஒரு நிகழ்ச்சிக்காவது? அவன் தன் கடமை யைத்தானே நிறைவேற்றியிருக்கிறான்? அவனுடைய நிலையிலே வேறு எந்த நபர் இருந்தாலும் அவர்களும் இப்படித்தானே செய்திருப்பார்கள்?

'குடும்பத்துக்குப் பாபத்தையும் சாபத்தையும் தேடிவச்சுக்காதடா!' தாயார் சொன்னதைக் கேசவபிள்ளை அடிக்கடி நினைத்துப் பார்ப்பதுண்டு.

கார்த்தியாயினி பூரண கர்ப்பிணியாக இருந்து வருகிறாள். அவளைப் பற்றிய எந்தச் செய்தியும் எந்த நிமிஷத்திலும் எட்டலாம். ஏதோ விபத்து தன்னை எதிர்பார்த்து நிற்கிறது என்று அவனுக்குத் தோன்றியது.

அவன் பட்டம் பகுதியிலுள்ள வீட்டைக் காலி செய்துவிட்டுச் சாஸ்தமங்கலத்திலுள்ள ஒரு பெரிய கட்டடத்தை வாடகைக்கு எடுத்துக் கொண்டான். முன்பு அந்தக் கட்டடத்தில் அரசாங்கக் காரியதரிசி ஒருவர் வசித்து வந்தார். சுற்றிலும் உயர்ந்த சுவர்களுடைய உறுதியான கட்டடம் அது. ஆனால் வீட்டை மாற்றிக்கொண்டதனால் பயம் அவனைவிட்டு விலகிப் போய்விட்டதா? அதுதான் இல்லை. அவ்வளவு சுலபமாக நீங்காத ஒரு சித்திரத்தைத்தான், கோபாலன் நாயர் அவனுடைய மனப்பலகைமீது தீட்டிவைத்துச் சென்றிருக்கிறாரே!

ஜோதிடர் என்ன சொல்கிறார்? கேசவபிள்ளையை இப்போது பாதித்திருப்பது 'கண்டகச் சனி' தானும். பதவி மாற்றம், மான நஷ்டம் போன்ற பல கெட்ட பலன்களையே அவர் ஆருடம் பார்த்துச் சொல்லியிருக்கிறார். ஆனால், பண லாபம் இருக்குமாம். இந்தக் கெடுதல்கள் எல்லாம் இருந்தாலும், கிரக நிலைகளை வைத்துப் பார்க்கும்போது அடிப்படையிலே அவ்வளவு தூரம் தோஷம் ஏதும் ஏற்படாதாம். ஆயினும் சனீசுவரனுக்கு அர்ச்சனை போன்ற சில சாந்திகள் தேவை என்று ஜோசியர் சொல்லியிருக்கிறார்.

இப்போது கேசவபிள்ளை காரியாலய அலுவல்களைமட்டும் ஒழுங்காகச் செய்து வருகிறான். அதைவிடக் கூடுதலான காரியங்களைச் செய்யக் கடமைப்பட்டவன்தான் அவன். காந்திஜியின் யோசனைக்கிணங்க சம்ஸ்தான காங்கிரஸ் போராட்டத்தை நிறுத்தி வைத்திருக்கிறதல்லவா? ஆயினும் அதன்மீது இருந்து வந்த தடை நீக்கப்படவில்லை. காங்கிரஸ் காரர்கள் கொச்சி சம்ஸ்தானத்துக்குள்ளே நுழைந்துகொண்டனர். அவர்கள் அங்கே தங்கியிருந்தவாறு துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டுத் திருவாங்கூருக்குள்ளே இரகசியமாக விநியோகம் செய்வதோடு நின்றனர். பிரமுகர்கள் பலர்மீது வாரண்டுகள் இருந்தன. காலதாமதமின்றி ஆட்சி முறையில் சில சீர்திருத்தங்களைப் பிரகடனம் செய்கிற அறிக்கை ஒன்றை வெளியிட்டு, அதன் அடிப்படையில் ஒரு தேர்தலை நடத்திவிட்டுச் சம்ஸ்தானப் பிரஜைகள் சர்க்கார் பக்கமாகவே இருக்கிறார்கள் என்பதை நிரூபித்துக் காட்டிவிடவேண்டுமென்பதுதான் திவான்ஜியுடைய திட்டமாக இருந்தது. அதற்கு முன் கேசவபிள்ளை திட்டமிட்டிருந்த புதிய ஸ்தாபனத்தை மிகப் பரவலாக அமைத்துவிட வேண்டும். பிறகு தேர்தலை நடத்தவேண்டும். ஆனால், கடந்த சில நாட்களாகக் கேசவபிள்ளை அந்தக் காரியங்களில் கவனம் செலுத்தாமல் இருந்து வந்தான்.

அவனுக்கு முயற்சி எடுத்துச் செயல்படத் தெரியாது. மனத்துக்கு அத்தகைய திராணியும் கிடையாது. செய்கிற வேலை மிகக் கடுமை

யானது என்று மட்டும் தெரியும். எவ்வாறு துவங்குவதென்றும் மட்டும் புரியவில்லை. துவக்கவேண்டிய காலம் கடந்துவிட்டது என்பது அவனுக்குப் புலனுயிற்று. திவான்ஜியும் தன்னைக் கெட்டிக்காரன் என்கிறார். அத்தகைய பெயரைப் பெற்றுவிட்டது தனது அறிவுத் திறமையாலோ கற்பனைத் திறனுலோ அல்ல என்பதுபற்றி அவனுக்குச் சந்தேகமேயில்லை. ஆனுல் ஒரு விஷயம். ஆபத்து நெருங்கி வருகிறபோதுதான் அறிவு செயல்படுகிறது. அதிருஷ்டம் கைகொடுப்பதுகூட அப்போதுதான். அது சுயமாகவே ஏற்பட்டுவிடுகிறது.

நாளைய தினம் திவான்ஜி அவனை அழைத்து வேலையிலிருந்து நீக்கிவிட்டதாகச் சொன்னுல்? அத்தகைய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடாது என்று சொல்வதற்கில்லை. அப்படிப்பட்ட நெருக்கடியான கட்டத்திலே கூட அதிருஷ்டம் இருந்தால், அறிவிலே ஏதாவது தோன்றிவிடலாம். அறிவு செயல்படலாம். இல்லாவிட்டால் கடமையாற்றத் திராணியற்றவன் என்ற கெட்டப் பெயருடன் வெளியேற வேண்டியிருக்கும். தலைவிதி அப்படித்தான் இருக்கிறதென்றுல் அப்படியே நடக்கட்டும்!

உத்தியோகஸ்தர்களுக்கிடையிலேகூடக் கேசவபிள்ளைக்கு அவ்வளவாக மதிப்பு இருந்து வருவதாகச் சொல்வதற்கில்லை. ஏனென்றுல் இந்தப் பதவிக்கு அவன் ஒரே அடியாக எட்டிக் குதித்து வந்தவன் அல்லவா? படிப்படியாக அல்ல. அவர்கள் தலைக்கு மேல் வழியாகப் பறந்து சென்று அமர்ந்தவன்தானே? திவான்ஜியுடன் நெருக்கமான நிரந்தரத் தொடர்புடைய ஒரு நபர் என்பதனுல் அவனைப் பார்க்கிறபோது வெளியே பல்லைக் காட்டுகிறார்கள். உள்ளூற நற நறவெனப் பற்களைக் கடிக்கிறார்கள். பொறுமை! பொறுமையேதான்! ஏளன மனப்பான்மை! திவான்ஜியுடைய பிரைவேட் செக்ரடரிகூடக் கழுகைப் போன்று சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். அவருக்குத் தெரியாமல் முக்கியமான ஒரு பதவியிலே கேசவபிள்ளை நியமிக்கப்பட்டிருக்கிறன். இத்தகைய ஒரு காரியம் இதற்கு முன்னுல் நடைபெற்றதில்லை. 'திருவாய்க்கு எதிர்வாய் இல்லை' என்கிறபடி அவர் பேசாமல் இருந்து வருகிறார். திவான்ஜி தன்னை ஏன் இந்தப் பதவியிலே நியமித்திருக்கிறார்? அவருக்கு இதற்குமுன் இருந்திராத, இப்போது ஏற்பட்டிருந்த பலவீன உணர்ச்சிதான் அதற்குக் காரணமா? அல்லது வேறு ஏதாவது காரணம் இருக்கிறதா? அவனுல் புரிந்துகொள்ள முடியவில்லை. பலவீனமேதான் காரணம். ஒரு வாய்ப்பு கிடைத்துவிட்டால் பிரைவேட் செக்ரடரி தன்னை நெருக்கடிக்குள்ளாக்கிவிடுவார் என்பதில் அவனுக்குச் சந்தேகம் இருக்கவில்லை.

அது நிகழ்ந்துவிட்டது. திவான்ஜி கேசவபிள்ளையை வரவழைத்துக் கண்டித்தார். சிறிது காலமாக என்ன செய்துகொண்டிருக்கிறய் என்று கேட்கவும் செய்தார். பழைய கறுப்பன் திரும்பவும் பழைய கறுப்பனுகி விடலாமென்ற எச்சரிக்கைகூட அதிலே தொனித்திருந்தது. கேசவ

பிள்ளை என்ன பதில் சொல்வது? தனக்குப் பயம் ஏற்பட்டிருக்கிறது என்றல்லவா சொல்லவேண்டும்? சொல்லத் தகுந்த பதிலா, அது?

பிரைவேட் செக்ரடரிதான் இப்படியெல்லாம் திவான்ஜியைப் பேச வைத்திருக்கிறான் என்ற சந்தேகம் கேசவபிள்ளைக்கு. அது தவறானது என்று சொல்வதற்கில்லை. பிரைவேட் செக்ரடரி முதல் முதலாக அவனுடைய பல்லைப் பிடித்துப் பதம் பார்த்துவிட்டார். அவ்வளவு தான். அந்த மனிதர் செயல் திட்டங்களை அப்படித்தான் தொடங்குவது இயல்பு.

திவான்ஜியுடைய அறையிலிருந்து கேசவபிள்ளை வெளியே வந்தான். அப்போது பிரைவேட் செக்ரடரி அவனை அணுகினார். அவனுடைய நலன்களில் அக்கறை கொண்டவர்போல் பேச்சைத் துவக்கினார்:

''திவான்ஜி ரொம்பமும் ஆத்திரப்படுகிறாரே! உனக்கு என்னப்பா நேர்ந்துடுத்து?''

உடனடியாகப் பதில் கூற அவனால் முடியவில்லை. ஆயினும் எதையாவது சொல்லித்தான் ஆகவேண்டும். சொல்லாவிட்டால் தம்மைச் சிறுமைப்படுத்தியதாக அவர் எண்ணிவிடுவார். அது மட்டும் அல்ல; திவான்ஜியிடம் பதில் சொல்லக் கடமைப்பட்டிருப்பது போன்று, அவரிடமும் அவன் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். தலைமைக் காரியதரிசியும் இதர இலாக்கா அதிகாரிகளும் அவரிடம் நடந்துகொள்ளும் முறையைப்பற்றி அவனுக்கு நன்றாகத் தெரியும். அனேத்து விஷயங்களின் பொறுப்பும் அவரிடந்தான் இருந்துவருகிறது. பெரிய பெரிய வில்லாதி வில்லர்கள்கூட அவருடைய விருப்பங்களை நிறைவேற்றிக் கொடுக்கக் காத்து நிற்கிறார்கள். அதற்காக அனேத்தையும் அவருக்குப் பாதகாணிக்கையாக அர்ப்பிக்கவும் தயாராகி நிற்கிறார்கள். பூனை எலியைப் பிடிப்பதுபோன்று அவர் அவனுடைய கழுத்திலே பிடித்திருக்கிறார்.

சிரத்தைக் குனிந்துக் கரத்தைக் குவித்தவாறு தழுதழுத்த குரலில் கேசவபிள்ளை மன்னிப்பைக் கோரினான்: ''ஐயாதான் என்னைக் காப்பாற்றணும்!''

அப்பப்பா! நிம்மதியாயிற்று. அந்தப் பதில்தான் அவருக்குத் தேவை. அதுவே அவன் வாயிலிருந்து வந்திருக்கிறது. அங்கேகூட அதிருஷ்ட தேவதை அவனைக் காப்பாற்றினாள். கேசவபிள்ளையின் கண்கள் நிறைந்தன. பேசியது வெகு பொருத்தமாகிவிட்டது.

பிரைவேட் செக்ரடரி கூறினார்: ''நான் என்னத்தைக் காப்பாற்றுவது, மிஸ்டர் கேசவபிள்ளை? அது திவான்ஜி நேரடியா கவனிக்கிற டிபார்ட்மெண்டு. அவாளோட சொந்தக் கருத்துப்படிதான் எல்லாம் அங்கே நடக்கும். நம்மோட யோசனை ஒண்ணும் அங்கே எடுபடாதப்பா!''

கேசவபிள்ளை இன்னொரு முறையிலேதான் பிரச்னைகளைப் பார்க்கிறான்:

''சென்ற சில மாதங்களாக மனநிம்மதியே இல்லீங்க. குடும்ப விஷயங்கள் பல மனசைத் துன்புறுத்திக்கிட்டிருக்குதுங்க. இதோ பாருங்க, இன்னிலேருந்து நான் களத்திலே குதிக்கப் போறேங்க.''

ஒரு விநாடிக்குப் பிறகு அவன் பொருள்படும்படியாகப் பேசினான்:

''ஐயாவை நான் அங்கே வந்து பார்த்ததே இல்லீங்க. ஏழை ஒருவன் கொஞ்சம் கொஞ்சமா முன்னேறிக்கிட்டிருக்கானுங்க. வேண்டிய முறையிலே வந்து பார்க்க வசதியில்லாமே இருந்ததுங்க.''

பிரைவேட் செக்ரடரிக்கு விஷயம் புரிந்துவிட்டது. அவர் சொன்னார்:

''ஹேய் . . . அதனாலே ஒண்ணும் நான் பேசலேப்பா.''

அவர்கள் இருவரும் வெகு நேரம் வரையில் பேசிக்கொண் டிருந்தனர். இனிமேல் அவனுடைய செயல் முறைகள் என்ன என்று அவர் கேட்டார். வேறு ஓர் அரசியல் கட்சியை உருவாக்க இருக்கிறான். அதன் கொள்கை, ஸ்தாபன அமைப்பு முறை ஆகியவைபற்றி அவர்களுக்கிடையில் சர்ச்சை நடைபெற்றது.

பிரைவேட் செக்ரடரி யோசனை கூறினார்: ''நல்ல குடும்பங்களிலே பொறந்தவாளோட ஸ்தாபனமாயிருக்கணும். அந்தஸ்தும் அபிமானமு முள்ள பெரிய மனுஷன் அதில் இருக்கணும். முதலிலே அவாளோட ஒரு ஜாபிதாவைத் தயாரிக்கணும்.''

கேசவபிள்ளை அதைத் தயாரித்து வைத்திருக்கிறான். இனிமேல் வேலையைத் துவக்கினால் போதும். அவ்வளவுதான்.

பிரைவேட் செக்ரடரி கேட்டார்: ''உமக்குத் திருமணம் ஆயிடுச் சோன்னே?''

இந்தக் கேள்வி, தெளிவான காரணம் எதுவுமின்றிக் கேசவபிள்ளையைச் சிறிது திகைக்க வைத்தது. ஒரு விநாடி யோசித்தான். இவர் அதைப் பற்றி ஏன் கேட்கிறார்? இவரை அவனுக்கு நன்றாகத் தெரியும்.

பிரைவேட் செக்ரடரி தொடர்ந்து கூறினார்:

''அரசாங்க வேலைகள் ஒழுங்காக நடக்கணும்னா வாழ்க்கையிலே சில ஒழுங்கு முறைகள் எல்லாம் இருக்கணும். பொண்டாட்டியை அழைச் சிண்டு வந்து தங்கிடணும்.''

பிறகு அசட்டுத்தனமாகச் சிரித்தவாறு அவர் சொன்னார்:

''எப்போவாச்சும் உங்க வீட்டுக்கு வந்தா ஒரு கப் காபி கிடைக்கு மோன்னே?''

கேசவபிள்ளை ஒப்புக்குச் சிரித்தான். சிறிது நாட்களுக்குள் அவன் அவரைப் பார்க்கவேண்டிய முறையிலே சென்று பார்த்தான்.

வருவதெல்லாம் வரட்டும். துணிச்சலுடன் களத்திலே குதிக்க வேண்டியதுதான். அங்கே மரணமென்றால் அதுவும் நிகழட்டும். தயங்கி நிற்கவேண்டிய அவசியம் இல்லை. காங்கிரசின் நிரந்தர எதிரியாகவே இருந்துவரலாம். உத்தியோக வாழ்விலே என்ன செய்தாய் என்று யாராவது கேட்டால், காங்கிரசைக் கடைசிவரையில் எதிர்த்து நின்றேன் என்று சொல்லலாம் அல்லவா?

கிளர்ச்சி மேற்கொண்டும் நடைபெறலாம். அப்படி நிகழ்ந்துவிட்டால் அதைச் சமாளிக்கவேண்டும். அரசாங்கம் அதற்கான தயாரிப்புக்களைத் தக்க முன்யோசனையுடன் செய்து வருகிறது. கேசவபிள்ளை துணிந்து

செயல்படத் தொடங்கினான். ஒருநாள், அன்றைத் தபாலில் அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. அழுக்குப் படிந்த கவர். அவன் அதைக் கூர்ந்து கவனித்தான். விலாசம் எழுதியிருக்கிற முறையைப் பார்த்தால், அது ஒரு துவக்கப் பள்ளி மாணவனுடையதாகத் தோன்றியது. கேசவபிள்ளை அதைப் பிரித்துப் பார்த்தான். அழுக்குப் படிந்த ஒரு காகிதத்தில் எழுதிச் சமர்ப்பித்த ஒரு கோரிக்கை அது. எழுத்துக்கள் எல்லாம் கோணல்மாணலாக இருந்தன. அடித்தல் திருத்தல்கள் ஏராளம். ஒரு பக்கம் முழுதும் எழுதப்பட்டிருந்தது. ஆயினும் ஒரு சில வாசகங்களே இருந்தன:

"என் அப்பா நாராயணன் நாயர் ஒரு காங்கிரஸ். அப்பா எரணாகுளத்திலே இருக்கிறாரு. அம்மா நோயாப் படுத்திருக்கா. ஜ்வரமும் இருமலும் அம்மாவுக்கு. அப்பா இங்கே வந்தா போலீஸ்காரங்க பிடிப்பாங்க. அடிப்பாங்க. எங்களுக்கு யாரும் துணையில்லே. நான் பள்ளிக்கூடத்துக்குப் போறதில்லே. அம்மாகிட்டேதான் இருக்கிறேன். தங்கச்சிக்குப் பேதி. அப்பாகிட்டே, வரச்சொல்லி நான் எழுதியிருக்கேன். அவரு வருவாரு. அப்பா வந்தா போலீஸ் அடிக்கக்கூடாது."

இப்படிக்கு
வாசு.

அந்தக் கடிதத்தின் மூலமாக ஒரு குடும்பத்தின் பரிதாபச் சித்திரம் ஒன்றைப் பார்த்தான் கேசவபிள்ளை. ஆனால் அங்கே ஒரு நியாயவாதம் குறுக்கிட்டது. இப்படிப்பட்டவர்கள் ஏன் காங்கிரஸில் சேர்ந்தனர்? அவன் தனது மனைவி மக்களை நேசிக்காதவனாக இருப்பான்.

அந்தக் கடிதம் எந்த ஊரிலிருந்து வந்திருக்கிறதென்று பார்த்தான். அந்தச் சிறுவன் அதைக் குறிப்பிட்டிருந்தான். மாவேலிக்கரையிலிருந்து. திடீரென அவன் நினைவிலே 'நாராயணன் நாயர்' என்ற பெயர் தெளிவாயிற்று. நாராயணன் நாயர்! 'கேசவபிள்ளையைத் தூக்கிலே போட்டுக் கொல்லவேண்டும்' என்ற கோஷத்தை, தான் பிறந்து வளர்ந்த ஊரிலுள்ள ஜனங்களை உச்சரிக்கச் செய்த ஒரு நாராயணன் நாயர் உண்டு. அம்மா அவரைப்பற்றி அவனிடம் சொல்லியிருக்கிறாள். அம்மா சொன்னதை அவன் நினைவுகூர்ந்து பார்த்தான். 'செங்கன்னூர் மாத்யூ! மாவேலிக்கரை நாராயணன் நாயர்!' இந்த இரு பெயர்களை அவனால் மறக்கமுடியாது. அந்த நாராயணன் நாயர்தானா, இந்தச் சிறுவனின் தந்தை?

கேசவபிள்ளை மீண்டும் ஒருமுறை அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்தான்.

யாருமே சொல்லிக் கொடுத்து எழுதவைத்தது அல்ல அந்தக் கடிதம். நோய்வாய்ப்பட்டிருக்கும் தாயின் அண்மையில் அமர்ந்தவாறு எவருடைய தூண்டுதலுமின்றித் தனயன் சுயமாக எழுதிய கடிதம் அது.

அவனுக்கு வேண்டியது ஒரே ஒரு விஷயந்தான். அது அந்தக் குடும்பத்தின் கோரிக்கையாகும். எர்ணகுளத்திலே தலைமறைவாக வசித்துவருகிற ராஜத் துரோகி; வாழ்க்கையின் நிமிடங்கள் ஒவ்வொன்றையும் இருமி இருமி உதிர்த்துவிடுகிற நோயாளி மனைவி; இடைவிடாத பேதியால் வாடித் தளர்ந்து படுத்திருக்கிற தங்கை; பள்ளிக்குச் செல்ல வழியின்றித் தவிக்கிற அந்தச் சிறுவன்—ஆகிய அந்தக் குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களுடைய கோரிக்கையாகும், நாராயணன் நாயர் தடையின்றி வரவேண்டுமென்பது. அவர் வந்தால் எல்லாம் சரியாகிப் போய்விடும், நிம்மதி ஏற்பட்டுவிடும். ஆனால், கேசவபிள்ளை முன்னால் அந்தக் கோரிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டுமென்று அந்தச் சிறுவனுக்கு எப்படித் தெரிந்தது?

நாராயணன் நாயரைச் சம்ஸ்தானம் முழுவதிலும் போலீஸ் தேடிக் கொண்டிருக்கிறது. அது கேசவபிள்ளை என்ற நபருடைய தூண்டுதலினால் நடைபெறுகிறதா? ஊர் மக்கள் அவ்வாறு நம்புகிறார்களா? அந்த நோயாளித் தாயும், அவளுடைய மகனும் அப்படித்தான் நம்புகிறார்கள் போல் தோன்றுகிறது. கேசவபிள்ளை நினைத்தால் போலீஸார் நாராயணன் நாயரைப் பிடிக்கமாட்டார்கள் என்று அந்த வீட்டுக்குச் செல்லுகிற அண்டை வீட்டுப் பெண்டிர் அவளிடம் சொல்லியிருக்கலாம். தாயார் இருமி இருமித் துப்புகிறபோது, குழந்தைகள் பசியால் வாடித் தளர்ந்து அழுகிறபோது, தங்கை பேதியால் வாடித் தளர்ந்து படுத்திருக்கிறபோது அந்தச் சிறுவன், கேசவபிள்ளை என்ற ராட்சதனை மனதாரச் சபித்திருப்பான். இத்தகைய 'வாசு'க்கள் எத்தனை பேர்கள் இந்தத் திருவாங்கூரிலே இருப்பார்கள்! அவர்களுடைய சாபங்கள், அம்மா வலியுறுத்திச் சொல்லிய பாபங்களும் சாபங்களும்! அவர்கள் என்ன சாபமிடுவார்கள் என்பதை முதல் முதலாகக் கேசவபிள்ளை அறிந்தான். இதற்கு முன்னால் சாத்விகப் போராட்டக் காலத்தில், அதிலே பங்கெடுத்த குடும்பத்தினரின் கதைகளைப்பற்றி அவன் கேள்விப் பட்டிருந்தான். அந்த மாத்யூவின் குடும்பமே சீரழிந்துவிட்டது. அது போல் எத்தனை எத்தனைக் குடும்பங்கள்! அதெல்லாம் இப்படித்தான் என்று கேசவபிள்ளை முன்னால் அறிந்திருக்கவில்லை. அவற்றைப்பற்றி அறிந்துகொள்ள அவன் முயற்சி எடுத்ததும் இல்லை; யோசிக்கக்கூட இல்லை.

ஆயினும், நாராயணன் நாயர் கோஷித்த கோஷம் அவனுடைய காதுகளுக்குள்ளே முழங்குவதாகத் தோன்றியது. நெருப்புக் கனல்கள்போல் ஜொலிக்கிற கண்களுடன், சுருட்டிய கரத்தை உயரத் தூக்கி, தொண்டை வெடிக்குமாறு நாராயணன் நாயர் அலறுகிறார்:

'கேசவபிள்ளையைத் தூக்கிலே போட்டுக் கொல்லவேண்டும்!'

அவன் அந்தக் காட்சியை மனக்கண் முன்பு கண்டான்.

அப்போது மற்றொருவன்—மாத்யூ—கர்ஜிக்கிறான்:

'லஞ்சமாகப் பெற்ற சொத்துக்களைப் பறிமுதல் செய்யவேண்டும்!'

ஆனல், மாத்யூவின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுவிட்டன. அவருடைய குழந்தைகள் நடுத்தெருவிலே தள்ளப்பட்டார்கள். அந்தக் குழந்தைகளுக்குத் தாயின் பிறந்தகம் அபயமாக இருக்கிறது போலும்!

இவ்வாறெல்லாம் சிந்தித்தவாறு கேசவபிள்ளை சிறிது நேரம் அமர்ந்துவிட்டான். வேறு கவர்களைப் பிரித்துப் பார்க்கவில்லை. அவன் அந்தச் சிறுவனின் கோரிக்கைக் கடிதத்தை வேறொரு பக்கமாக எடுத்து வைத்தான். பின் மற்றக் கவர்களைப் பிரித்துப் பார்த்தான். அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. என்ன செய்வது? சிறுவன் வாசுவின் கடிதத்தைத் திரும்பவும் கையிலெடுத்துக்கொண்டான். இதற்கு ஒரு முடிவைச் சொன்ன பிறகுதான் ஏனைய கடிதங்களைப் பார்க்கவேண்டுமென்று அந்தக் கடிதம் வலியுறுத்துவதுபோல் தோன்றியது. அந்தச் சிறுவனும், தாயும் முன்னல் வந்து நிற்பதுபோல் தோன்றியது. அந்தச் சிறுமியும், சிறுவனும் சேர்ந்து தன் கரத்தைக் கெட்டியாகப் பிடிக்கிறார்களே!

நாராயணன் நாயர் திருவாங்கூர் சம்ஸ்தானத்துக்குள்ளே வந்தால் அவரைக் கைது செய்யவேண்டாமென்று போலீசுக்கு இரகசியமாக யோசனை கூறினல் என்ன? அவர் வந்து அந்தக் குடும்பத்துக்கு ஆறுதல் அளிக்கட்டுமே! அவரைப் பார்த்து அந்தக் குடும்பம் ஆனந்திக்கட்டுமே! ... ஆனல் . . . தன்னைத் தூக்கிலே போட்டுக் கொல்லவேண்டுமென்று கோஷித்தவர்தானே? மனிதனுக்குள்ளே இயல்பாக இருக்கிற பகைமை எண்ணம் தலை தூக்கிற்று. யாரோ ஒருவன் உள்ளேயிருந்து சொல்வது போல் தோன்றியது:

'அவ்வாறு கோஷித்தவர்கள் எத்தனை எத்தனை? அவர்களிடமெல்லாம் வெஞ்சினம் கொள்ளப் போகிறாயா? அதற்கு நீ யார்? வாழ வழியின்றி அலைந்து நடந்த நீ இவ்வாறு செயல்படுமளவுக்கு வளர்ந்துவிட்டாயா?'

அது ஒரு பெரிய கேள்விதான். அத்தகைய கேள்விகள் பல ஒன்றோடொன்று அலை மோதி எழுகின்றன:

'கொடும் செயல்கள் பலவற்றிற்கு நீ துணையாக இருந்திருக்கிறாயே! பணத்தைச் சேர்த்துவைக்கவும் இல்லையா? அவதிப்படுகிற மக்களுக்கு அவற்றைப்பற்றிக் கோஷங்களை எழுப்பக்கூட உரிமையில்லையா? நீ அவ்வளவு தூரம் வளர்ந்துவிட்டாயா? அத்தனை பெரிய மனிதனுகிவிட வேண்டாம்!'

கேசவபிள்ளை தொலைபேசியைக் கையிலெடுத்தான். அப்போது யாரோ அவன் கரத்தைப் பிடிப்பதுபோல் தோன்றியது. தினசரி இத்தகைய கோரிக்கைக் கடிதங்கள் வந்துவிட்டால்? . . . அப்போது என்ன செய்வாய்? ஒருமுறை தவறிவிட்டால் அதைத் தொடர்ந்து ஏராளமான தவறுகள் நேர்ந்துவிடும். சம்ஸ்தானத்தைவிட்டுத் தலைமறைவாக வெளியேறினவர்கள் எல்லாரும் திரும்பி வந்துவிடுவார்கள்.

அவன் ரிஸீவரைக் கீழே வைத்தான். காங்கிரஸை அழித்திட அமர்த்தப்பட்ட அதிகாரி அவனுக்குள்ளே இருந்து தலை தூக்கினன்.

'நாராயணன் நாயரைத் திருவாங்கூருக்குள்ளே வர அனுமதிப்பது, வீட்டுக்குள்ளே நுழையும்போது கைது செய்வது' என்ற யோசனையைப் போலீஸுக்குக் கொடுக்கலாம்.

ஓ! என்ன பாவம் இது! இறக்கும் தறுவாயிலுள்ள துணைவியிடமிருந்து கணவனைக் கைது செய்துகொண்டு போவது! துணையற்ற குழந்தைகள் தந்தையைக் கட்டித் தழுவி அணைப்பது! போலீஸார், அவர்களைக் கண்ணைக் காட்டிப் பயமுறுத்தி அல்லது பிடித்துத் தள்ளி விலக்கிவிடுவது!

கேசவபிள்ளை என்ன செய்வது என்று அறியாமல் நாற்காலியிலே அமர்ந்து விட்டான்.

மறுநாள் திரும்பவும் வாசுவின் கடிதமொன்று வந்தது.

"அம்மா அசையவில்லே. தங்கை மயங்கிப் படுத்துக் கிடக்கிறு. அப்பா வரல்லே.''

அத்தியாயம் 17

நடத்தை கெட்டவளா?

சேகரபிள்ளை மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தார். கேசவபிள்ளை அநேக மாக எல்லா நாட்களிலும் அங்கே சென்றுவருகிறான். அவர் அந்த நோயிலிருந்து தப்பித்துக்கொள்ளமாட்டார். ரொம்ப நாட்கள் படுத் துக் கிடந்து துன்புறுமல் முடிந்துவிட்டால் போதும்.

தங்கம்மாவைப் பார்க்கவேண்டுமென்று அவர் விரும்பினர். அவள் வந்தாள்.

ராமசந்திரன் நாயருடைய திருமணம் நடந்து முடிந்திருந்தது. கொச்சி சம்ஸ்தானத்திலிருந்து வந்தவள்தான் மணப் பெண்! ஆட்ட பாட்டங்களைக் கற்றிருக்கிற ஒரு கட்டழகி! பணக்காரியுங்கூட. தன்னை மணந்துகொள்ளவேண்டுமென்று தங்கம்மா ஒருபோதும் கேட்டுக் கொள்ளவில்லை என்று ராமசந்திரன் நாயர் சொன்னார். அவள் நேசத்தை மட்டுமே நாடினளாம்! அந்த நிலைமையிலே அவருடைய அப்பா வற்புறுத்தினராம். அதனால்தான் மணம் புரிந்துகொண்டாராம். தங்கம்மா மட்டும் ஒரு வார்த்தை கேட்டிருந்தால் அந்தத் திருமணத் துக்கு அவர் சம்மதித்திருக்கமாட்டாராம். இவை எல்லாம் எவ்வளவு தூரம் உண்மையோ? நெருங்கிய நண்பர்களிடம், தாம் இப்போதுகூடத் தங்கம்மாவை நேசிப்பதாக ராமசந்திரன் நாயர் சொல்லி வருகிறாராம்! அவளை நேசிக்காமல் இருக்க அவரால் முடியவில்லையாம்!

இவ்வாறுக, திருமணத்தை விரும்பாத, நேசத்தினால் மட்டும் திருப்தி யடைகிற ஒரு பெண்ணாக வாழ்ந்துவருகிறாள் தங்கம்மா. முறைப்படி கிடைக்கவேண்டிய பிரமோஷன் அவளுக்குக் கிடைத்திருக்கிறது. அந்தச் சம்பளத்தினால் அவளால் நன்றாக வாழமுடியும்.

மகளைப் பார்த்த தகப்பனார் கதறியழுதுவிட்டார். அந்த அழுகையி லேயே அவர் முடிந்துவிடுவார்போல் அனைவரும் பயந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் கேசவபிள்ளையும் அங்கிருந்தான்.

மகளைக் கட்டில்மீது வந்து அமருமாறு சேகரபிள்ளை சமிக்ஞை செய்தார். கேசவபிள்ளையை நெருங்கிவரச் சொன்னார். மனைவி பாகீரதி யம்மா ஓரமாக நின்றுகொண்டிருந்தாள். மகளைத் தடவியவாறு அவர் கேசவபிள்ளை முகத்தைப் பார்த்துக் கண்ணீர் வடித்தார்.

அந்தச் சூழ்நிலை, தன்னை நெருக்கடியானதொரு கட்டத்துக்கு இட்டுச் செல்லுமோ என்று கேசவபிள்ளை பயந்தான். மகளுடைய பிரச்னையிலே ஒரு தீர்வைக் காண, கணவர் இந்த மரணப் படுக்கையிலே படுத்தவாறு

முயற்சி எடுப்பாரென்று பாகீரதியம்மாவுக்குத் தோன்றியது. அவள் அவ்வாறு விரும்பவும் செய்தாள். மகளின் கரத்தைப் பிடித்துக் கேசவபிள்ளையின் கரத்திலே வைத்துவிட்டு, 'இவளை நான் உன்னிடம் ஒப்படைக்கிறேன்' என்று சேகரபிள்ளை கூறினால், அவன் அந்தக் கரத்தைப் பின்னுக்கு இழுத்துவிடுவானா? மாட்டான் என்ற கருத்துத்தான் பாகீரதியம்மாவுக்கு. அவன் நல்லவன், நன்றியுள்ளவன், தங்கம்மாவை நேசித்திருந்தவன்! அவளும் ஒரு சந்தர்ப்பத்தில் அவனை நேசித்திருந்தாள். அதைப்பற்றி அவனுக்குச் சந்தேகம் இருக்கமுடியாது. அப்புறம், இடைக் காலத்தில் அவளை ஏதோ ஒரு கெட்ட கிரகம் ஆட்கொண்டது. அவள் நடத்தை கெட்டுப் போனதால் அப்படி ஏற்பட்டது அல்ல. மகள் கெட்டவள் என்று ஒரு தாய் கருதுவாளா? 'கூடதந்திர'த்தினால் மயக்கமுற்று, சுயப்பிரக்ஞை இழந்து அவள் ராமசந்திரன் நாயருடன் சேர்ந்துகொண்டவள்தான். அந்த வகையிலே, ஏற்பட்டுவிட்ட தவறை மறந்து கேசவபிள்ளை அவளை ஏற்றுக்கொள்ளமாட்டானா? அவனுடைய நற்குணங்களிலே அந்த மாது நம்பிக்கை வைத்தாள். அந்த நம்பிக்கைப்படி காரியம் நடந்துவிட்டால் கிழவர் மகிழ்ச்சியுடன் இறந்து விடுவார். மரணப் படுக்கையிலே அந்தத் திருமணம் நடைபெறுமென்று ஒவ்வொரு கணமும் பாகீரதியம்மா எதிர்பார்த்து நின்றாள்.

அவர் அப்படி தன்னிடம் சொல்லிவிட்டால் என்ன செய்வது என்பதைப் பற்றியே கேசவபிள்ளை யோசித்தான். கரத்தைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டால் என்ன? ஒருவேளை அவளே பின்னுக்கு இழுத்து விட்டால்? அப்படியும் நடக்கலாம். அவள் அவனை நோக்குவதுகூட இல்லை. தன்மீது அவளுக்கு வெறுப்பு இருக்கலாம் அல்லவா?

சேகரபிள்ளையின் பேச்சு தெளிவற்றிருந்தது. ஆயினும் புரிந்துகொள்ள முடிந்தது. அவர் கேசவபிள்ளையிடம் சொல்கிறார்:

''நீ எல்லாவற்றையும் மறந்திடணும் தம்பீ!''

கேசவபிள்ளை பேசவில்லை.

''இறக்கும் தறுவாயிலிருக்கிற ஒருவருடைய விருப்பம் இது தம்பீ! நீ இவளை ஏற்றுக்கொள்ளணும்.''

தங்கம்மா தலைகுனிந்து அமர்ந்திருந்தாள்.

கேசவபிள்ளை இதற்குப் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். சேகர பிள்ளை மிகுந்த சிரமத்துடன் மீண்டும் கூறினார்: ''இவளுக்கு ஏதோ சித்தப்பிரமை ஏற்பட்டு அப்படியெல்லாம் நடந்துபோச்சு தம்பீ. விதவை களையும், விவாகரத்து செய்தவர்களையும் மறுமணம் செய்கிறதில்லையா, தம்பீ? அதுபோல் இவளை நீ ஒரு விதவையாக நினைத்துக்கொள். மற்றவை எல்லாவற்றையும் மறந்திடணும்.''

உதவி செய்யமுடியாத நிலைமையில் இருப்பவன்போல் கேசவபிள்ளை கூறினான்: ''எனக்குத் திருமணமாகிவிட்டது. ஒரு குழந்தையும் இருக் கிறது.''

பாகீரதியம்மா நடுங்கிவிட்டாள். இந்த விஷயம் இதுவரையில் அவளுக்குத் தெரியாது. தங்கம்மா, அதைக் காதிலே பட்டதாகக்கூடக் காட்டிக்கொள்ளவில்லை. அது சேகரபிள்ளையை நடுங்கவைக்கவில்லை. பாகீரதியம்மா கூறினாள்:

''நீ அதை இதுவரையில் எங்க கிட்டே சொல்லலியே தம்பீ. என்னைக்கு நடந்தது?''

''கொஞ்ச காலமாச்சு.''

பாகீரதியம்மா கேட்டாள்: ''இவள் இங்கிருந்து போன பிறகா?''

''ஆம்'' என்ற முறையில் அவன் முனகினான். பாகீரதியம்மாவின் குரலிலே நம்பிக்கையின்மை நிழல் வீசியது. அவள், அவன் சொன்னதை நம்பத் தயாராயில்லை. அவளுடைய கேள்விக்கு அவன் அளித்த பதில் அத்தகையதாகத்தானே இருந்தது?

பாகீரதியம்மா கேட்டாள்: ''பெண் எந்த ஊர்?''

''என் சொந்த ஊரிலிருந்துதான்.''

''என்னைக்கு அது நடந்தது? நீ அதை எங்கிட்டே சொல்லவே இல்லியே.''

''சொல்லவில்லை.''

சேகரபிள்ளை சோர்வுடன் கூறினார்:

''கருமம்! தலைவிதி! அதுதானே நடக்கும்?''

சிறிது நேரத்துக்குப் பிறகு சேகரபிள்ளை பாகீரதியம்மாவிடம் கூறினார்:

''என்னென்னைக்கும் காத்திருக்கமுடியுமா? அது போகட்டும்.''

பாகீரதியம்மாவின் சந்தேகம் இன்னமும் தீரவில்லை. அவள் கேட்டாள்: ''திடீர்னு நடத்திட்டியா?''

''ஆமாம்.''

கேசவபிள்ளை சொல்வது பொய் என்று கண்டிப்பாகச் சொல்வதற்கும் அவர்களுக்குத் தைரியம் இல்லை.

பேச்சு இப்படி நடந்தபோதிலும், தங்கம்மா அவற்றைக் காதாரக் கேட்டதாகக்கூடக் காட்டிக்கொள்ளவில்லை. திருமணம் நடந்தது, ஒரு குழந்தைக்குத் தகப்பனாகிவிட்டான்—என்றெல்லாம் சொன்னபோதிலும், அவள் முகத் தோற்றத்தில் எவ்வித மாறுதலும் காணப்படவில்லை. அவளுக்கு அதெல்லாம் ஒரு பிரச்னையே அல்ல. எங்கெங்கோ யார் யாரோ எல்லாம் மணம் செய்துகொள்கிறார்கள்! அதனால் அவளுக்கு என்ன?

தங்கம்மாவின் அந்த நிலை ஆச்சரியம் அளிப்பதாக இருந்தது. அவன் இப்போது அவளுக்கு யாரும் அல்ல. அவள் அவனுடையவளும் அல்ல. ஆனால் முன்பு இப்படித்தான் இருந்ததா? அவனுடைய திருமணச் செய்தி அவளுடைய ஆர்வத்தையாவது தூண்டிவிட்டிருக்கவேண்டாமா? வெறும் அறிமுகம் மட்டுமுடைய ஒருவர் திருமணம் செய்துகொண்டார் என்று சொன்னால்கூடக் கேட்பவர்கள் ஆர்வத்துடன் கவனிப்பார்களே!

கேசவபிள்ளை அந்தப் பழைய நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றாக நினைவு கூர்ந்து பார்த்தான். ஒவ்வொரு சிறு சம்பவமும் அவனுடைய நினைவிலே

பிரதிபலித்தது. முன்போல் அவள் ஒருமுறை சிரிக்கமாட்டாளா? கன்னத்தின் குழிவுகளை தெளிவாக எடுத்துக் காட்டுகிற அந்தச் சிரிப்பு. நெருங்கிப் பக்கமாக அமர்ந்து அவளுடன் நீண்ட அரட்டைக் கச்சேரிகளை நடத்த அவன் விரும்பினான். இந்தப் படிக்கட்டட வாசல் வழியாக நுழைந்து வந்து, அவள் அறைக்குச் சென்று ஓர் இரவைக்கூட அங்கே கழித்துவிட ஆவல் கொண்டான். அந்தப் பழைய காலம் இனிமேல் திரும்பி வராதவாறு மறைந்துவிட்டது. ஒரு சந்தர்ப்பத்தில் அவள் அவனுடையவளாக இருந்தாள். சிரத்தைத் தாழ்த்தியவாறு அந்தக் கட்டிலின் மீது அமர்ந்திருந்த அவள் இப்போது எதைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறாள்? அவன் விரும்புவதை எல்லாம் அவளும் விரும்புகிறாளா? அவளால்கூட அந்த நிகழ்ச்சிகளை மறந்துவிடமுடியுமா? அவ்வாறு முடியுமென்று நினைக்கமுடியாது.

அவளிடம் சிறிது நேரம் பேசவேண்டுமென்ற ஆவல் அவனுக்குப் பிறந்தது. எங்கே, எப்படிப் பேச்சைத் துவக்குவது? விளங்கவில்லை. அவளை ஒருமுறை தொடவேண்டும். அது ஓர் ஆவேச உணர்ச்சி.

நேரமாகிவிட்டது. கிளம்பிப் போக வேண்டியிருந்தது. அன்று மாலை திவான்ஜியிடம் ஒரு ரிப்போர்ட்டைச் சமர்ப்பிக்க வேண்டும். கேசவ பிள்ளை, சேகரபிள்ளையிடம் கேட்டான்:

''நான் வரட்டுமா?''

அவர் அநுமதி அளித்தார்.

''நாளைக் காலையில் வந்துடறேன்.'' கேசவபிள்ளை சொன்னான். அப்புறம் தங்கம்மாவிடம் கூறினான்: ''நான் வரட்டுமா, தங்கம்மா? நாளைக் காலையில் வந்துடுவேன்.''

அவள் அழுதுகொண்டிருந்தாள். சிரத்தை உயர்த்தியவாறு அவனைப் பார்த்து ஒரு முறை முனகினாள்.

திரும்பவும் அவளிடம், தான் நெருங்கி வருவதாக அவனுக்குத் தோன்றியது. தன்னிடம் எவரையும் நெருங்கவைக்கிற ஒரு சக்தி அவளிடம் இருக்கிறது. உண்மையிலேயே அவள் அழகியல்லவா? அநுபவிக்க வேண்டிய அழகு. ஆடவனைத் தன்னிடம் இழுத்து நிறுத்தச் சக்தி படைத்தவள் தான் அவள். மனைவி இருக்கையிலேயே காதலியுடன் வாழ்கிற ஆடவர்கள் இல்லையா? தன்னைக் கைவிடாதே என்று தங்கம்மாவிடம் கெஞ்சிக் கேட்கவேண்டுமென்று கேசவபிள்ளைக்குத் தோன்றியது. எந்த நிமிஷத்திலும் அவளுடைய பாதங்களைக் கட்டித் தழுவியவாறு அவன் கேட்டுவிடுவான்போல் தோன்றியது.

* * *

சேகரபிள்ளை அபாய நிலைமையில் இருக்கிறார் என்ற செய்தியறிந்து கேசவபிள்ளை சென்றபோது, தலைமைக் காரியதரிசி, அவர் மனைவி, தங்கம்மா முதலிய அனைவரும் அங்கே இருந்தார்கள். சேகரபிள்ளை

தன்னுணர்வை இழந்துவிடவில்லை. மூச்சு விடுவதற்குச் சிரமப்பட்டார். ஆயினும் அவர் பேசினார். கேசவபிள்ளையைப் பக்கத்தில் வந்து அமரும்படி சமிக்ஞை செய்தார். அவன் அவர் அருகிலே அமர்ந்துகொண்டான். அவர் அவனுடைய கரத்தைப் பிடித்துத் தமது நெஞ்சின்மீது வைத்துக் கொண்டார்.

உண்மையிலேயே அவர் அனைவரிடமும் விடைபெற்றுக் கொள்கிற காட்சிதான் அது. பகவதிக்குட்டியம்மாவை அருகிலே வரவழைத்து விடை கேட்டார். ஏதாவது தவறான வார்த்தைகளை எப்போதாவது பயன்படுத்தியிருந்தால் அவற்றை எல்லாம் மன்னித்துவிட வேண்டு மென்று கோரினார். தம்பி கிருஷ்ணன் நாயரை நன்றாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவன் ஒரு சாது! பகவதிக் குட்டியம்மாவின் கண்கள் கண்ணீரால் நிறைந்தன. மரணம் நெருங்கி வருகிறபோது ஏற்படுகிற குளிரைத் தாங்க முடியாமல் பாகீரதியம்மா வைத் தம் அருகிலே வந்து படுக்குமாறு கேட்டுக்கொண்டார். தாயாரைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பை ஆண்மக்களிடம் ஒப்படைத்தார். தங்கம்மாவைக் கேசவபிள்ளை அருகில் அமரச் செய்தார். அவர்கள் இரு வரும் நெருங்கி அமர்ந்திருப்பதைச் சிறிதுநேரம் பார்த்தவாறு படுத்திருந் தார். மணம் முடித்துக்கொண்ட மகள், மருமகனுடன் தம் மரணப் படுக்கையின் அருகில் அமர்ந்திருப்பதைக் காண்பதுபோல் அவருக்குத் தோன்றியது. வாழ்க்கையிலே மற்றொரு மருமகன் தமக்கில்லை என்று சேகரபிள்ளை ஏற்கனவே சொல்லியிருக்கிறார் அல்லவா?

தங்கம்மாவிடம் அவருக்கு நிறையச் சொல்லவேண்டியிருந்தது. மரணம் அவருக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுத்தது. அதன் மத்தியிலே அவர் சொன்னார்:

''இந்தப் பிறவி இப்படியே முடிந்துவிடட்டும் மகளே! அடுத்த பிறவியி லாவது நல்லா அமையணும்னு பிரார்த்திச்சுக்கோ!''

அத்துடன் அவர் வாய் திறந்தார். முதலில் கேசவபிள்ளைதான் இரண்டு துளி நீரை வாய்க்குள் செலுத்தினான். அந்தப் பாத்திரத்தை அவன் தங்கம்மாவிடம் கொடுத்தான்.

அவ்வாறு அந்த வாழ்க்கை முற்றுப் பெற்றது. யாரிடமும் மனவருத்தம் இல்லாமல், யாருக்கும் துரோகம் செய்யாமல் வாழ்ந்தார். ஆனால் மகளைப்பற்றிய மனக்கவலையுடன்தான் அவர் உயிர் நீத்தார் என்றே சொல்லவேண்டும்.

கடமையாற்றினேன் என்ற எண்ணம் கேசவபிள்ளைக்கு இருந்தது. இறுதி நிமிஷத்தில் அருகில் அமர்ந்து அவருக்கு நீரை ஊற்றிக் கொடுத் தான். தன்னுடைய அனைத்து முன்னேற்றத்துக்கும் காரணகர்த்தாவாக இருந்த அந்த மனிதருடைய இறுதி அபிலாஷையை நிறைவேற்றிக் கொடுத் தான். ஆனால் கடமையை முழுமையாகப் பூர்த்தி செய்து விட்டதாக அவனுக்குத் தோன்றவில்லை. ஏதோ ஒன்று பாக்கி இருக்கிறது. அது தங்கம்மாவைப் பற்றியதாகும்.

ஈமக்கிரியைகள் முடிந்துவிட்டன. அனைவரும் சென்று விட்டனர். அங்கே கேசவபிள்ளையும் தங்கம்மாவும் மட்டுமே இருந்தனர். அவன் அவளிடம் பேசக் காத்து நின்றான்.

அந்தக் கேள்வியை அவனே நேரடியாகக் கேட்டுவிட்டான்:

''தங்கம்மா, நான் ஏதாவது செய்யவேண்டி இருக்குதா?''

ஒரு விநாடிக்குப் பிறகு தங்கம்மா பதில் அளிக்குமுன்பு அவன் தொடர்ந்து கூறினான்:

''தவறுக எண்ணக்கூடாது. ஒரு பெரிய மனிதன் என்கிற முறையிலே கேக்கறதாகவும் நினைச்சுக்கக்கூடாது. அஸ்திவாரத்தை நான் மறந்துடலே. ஏதாவது நான் செய்யவேண்டியிருந்தாச் சொல்லு!''

தங்கம்மா உணர்ச்சியற்றவள்போல் கூறினாள்:

''இல்லே. ஒண்ணுமே செய்யவேண்டியதில்லே.''

மீண்டும் அவன் கேட்டான்:

''என்மீது வெறுப்பு உண்டா?''

''அதுவும் இல்லே.''

கேசவபிள்ளையிடம் பேசப் பிரியமில்லாதவள்போல் தங்கம்மா அங்கிருந்து கிளம்பிச் சென்றாள். பாகீரதியம்மா அதைப் பார்த்தவாறு நின்றுகொண்டிருந்தாள். அவள் மகளிடம் கேட்டாள்: ''என்னம்மா அந்தப் பிள்ளையாண்டான் உன்கிட்டே பேச வந்தபோது நீ விருப்பம் காட்டாம வந்துட்டே?''

தங்கம்மா அதற்குப் பதில் கூறவில்லை. கேசவபிள்ளை பாகீரதியம்மாவிடம் விடைபெற்றுச் சென்றுவிட்டான்.

பாகீரதியம்மா ஆசையைக் கைவிடவில்லை. கேசவபிள்ளை மணமானவன் என்று சொன்னதை அவள் அப்படியே நம்பத் தயாராயில்லை. எல்லாவற்றையும் மறந்து அவன் மகளை ஏற்றுக்கொள்வானென்றே அந்தத் தாய் எண்ணினாள். ஆனால், தங்கம்மாவின் சுபாவத்திலே மாறுதல் தென்படவில்லை. அதை எண்ணி அம்மா கவலையுற்றாள்.

அநேகமாக எல்லா நாட்களிலும், கேசவபிள்ளை, செட்டிக்குளங்கரையிலுள்ள தங்கம்மாவின் வீட்டுக்குச் சென்று வருவான். தங்கம்மா சில நாட்களாக லீவிலிருந்து வருகிறாள். அந்த வீட்டுக்குச் செல்வதென்பது அவனைப் பொறுத்தவரையில் அவள்மீது கொண்டிருந்த ஒருவித ஆவேச உணர்ச்சியால் ஏற்பட்டதென்றே சொல்லவேண்டும். போனால் ரொம்ப நேரம்வரையில் அவன் அங்கே தங்கியிருப்பான். முதலில் சில நாட்கள் வரையிலும் அவள் அவனைக் கவனியாதவள்போல் நடந்து கொண்டாள். ஏதோ அறிமுகம் இல்லாதவனொருவன் வந்திருக்கிறான் என்பது போல் நடந்துகொண்டாள்.

ஒரு நாள் அவளே காபி கொண்டு வந்தாள். அன்றுதான் இருவருடைய விழிகளும் பரஸ்பரம் மோதிக்கொண்டன. அந்தக் கண்கள் பனல் தக்கியதில்லை. அறிமுகம் இல்லாதவைபோல் நடிக்கவில்லை. புகார்கள்தான்

நிழல் வீசியிருப்பதாகத் தோன்றியது. அவனுக்கு அது மிகப் பெரிய ஆறுதலாக இருந்தது. நெஞ்சிலே குளிர் பரவுவதாகத் தோன்றியது.

அவள் மேஜைமீது காபியை வைத்துவிட்டுக் கோப்பைக்குள் ஊற்றினாள். அப்போது சிரம் குனிந்துதான் நின்றுகொண் டிருந்தாள். காபியைப் பகிர்ந்துவிட்டுச் சிறிதுநேரம் வரையில் அப்படியே நின்று கொண்டாள். கேசவபிள்ளை சொன்னான்:

''அதை எடுத்து என் கையிலே தந்துவிட்டால் குடிக்கலாம் அல்லவா?''

அவள் அவன் முகத்தை நோக்கினாள். அவளது இதழ்கள் வறட்சி யுற்றிருந்தன; முகத்திலே சோகக் குறி தென்பட்டது; கண்களிலே உதவி யற்ற தன்மை காணப்பட்டது. புகார்கள் பலவற்றைக் கூறத் துடிக்கிற ஒரு பெண்ணின் வதனமாகத் தங்கம்மாவின் முகம் காட்சி தந்தது.

அவள் காபியை எடுத்து அவன் முன்னே நீட்டினாள். அவள் வதனத் தையே பார்த்துக்கொண் டிருந்த அவனுடைய உதடுகள் திறந்தன. அவள் அந்தக் கோப்பையை அந்த உதடுகளுக்கிடையிலே வைத்துக் கொடுத்தாள். அவன் அதிலிருந்து சிறிது பருகினான். அவள் கோப்பையை மேஜைமீது வைத்தாள்.

அவள் போகத் திரும்பினாள். அவன் அவளுடைய கரத்தை எட்டிப் பிடித்தான். அவள் நின்றுவிட்டாள்.

அவன் கேட்டான்: ''என்மீது வருத்தமா? வெறுப்புண்டா?''

சுற்றுமுற்றும் பார்த்த கேசவபிள்ளை தங்கம்மாவைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக்கொண்டான். அவள் அதற்கு இணங்கிக் கொடுத் தாள்.

அதிக நேரம் வரையில் அவர்கள் அவ்வாறு நிற்கவில்லை. அவன் எதையும் கேட்கவில்லை. அவள் எதையும் சொல்லவும் இல்லை. அவன் அவளை விட்டுவிட்டான். அவள் திரும்பிச் சென்றாள்.

மறுநாள் அவள் திலகமிட்டிருந்தாள். முகத்திலே களை கட்டியிருந்தது. கண்களுக்கு, தங்கம்மாவின் கண்களுக்குரித்தான உயிரொளி இருந்தது. அவள் பழைய தங்கம்மாவாக மாறிக்கொண் டிருந்தாள்.

தங்கம்மாவின் புகார் என்ன? அவன் அவளை, அவள் எண்ணியபடி நேசிக்கவில்லை என்பதுதான். அதைப் புரிந்துகொள்ளாதவன்போல் கேசவபிள்ளை நடித்தான். அவள் கண்டிப்பான குரலில் கூறினாள்:

''என்னிடம் நீங்கள் விருப்பம்கொண் டிருக்கவில்லை. என்னிடம் பேசிக்கொண் டிருந்தபோதும், என்னிடம் வந்தபோதும் உங்கள் மனத் திலே வேறு சிந்தனைகள்தான் இருந்துவந்திருக்கு. உண்மையான உள்ளத் துடன் நீங்கள் என்னிடம் பழகியதில்லை.''

அது உண்மை அல்லவென்று கேசவபிள்ளை வாதம் புரிந்தான்: ''அது உனது கற்பனைதான்.''

தங்கம்மா ஒப்புக்கொள்ளவில்லை. அந்த அறையிலே, அலுவலகத்திலே எல்லாம் அவளுக்கு அநுபவமானதுதான் அது. அவனுடைய உடல் மட்டுந்தான் அவளுக்குக் கிடைத்தது. அவனது உள்ளம் அவளுக்குக்

கிடைக்கவில்லையாம்! சிரிப்பும் விளையாட்டும் செயற்கையானதாகவே இருந்து வந்திருக்கின்றன. நடிப்பதுபோல்தான் அவளுக்குத் தோன்றி வந்தன. முத்தத்தில் சூடு இருக்கவில்லை. தழுவுதலில் இறுக்கம் இருக்க வில்லை. அவள் கேட்டாள்: ''என்னிடம் உண்மையைச் சொல்லுங்கள்! 'தங்கம்மா அழைத்திருக்கிறாள், போகாமல் வேறு வழியில்லை! அவள் வருத்தப்படுவாள்; தொலைந்து போகட்டும்' என்று எண்ணித்தானே, நீங்கள் இந்த வீட்டுக்கு வந்துகொண்டிருந்தீர்கள்?''

''அது உண்மை அல்ல.''

இதற்குமேல் அவனால் எதையும் பேசமுடியவில்லை. அவள் சொன்னாள்:

''பாருங்கள்! இப்போதுகூட உங்களிடம் உண்மை இல்லை. எனக்குத் தேவையானது உங்களிடம் இல்லை. வெறும் வார்த்தைகள் மட்டுந்தான்.''

அவன் சொன்னான்: ''நீ அப்படி எண்ணுகிறாய்.''

'அல்ல' என்று பொருள்படும்படியாக அவள் தலையசைத்துவிட்டுக் கூறினாள்:

''நான் தவறி நடந்தவள்தான். அதற்காக என்னை மன்னித்துவிட வேண்டுமென்று நான் சொல்வதாக நினைக்கவேண்டாம். ஒருவேளை, அந்த மன்னிப்பைப் பெற எனக்குத் தகுதி இல்லாமல் இருக்கலாம். அந்தத் துரோகி எனக்குப் பல வாக்குறுதிகளைத் தந்துவிட்டு இறுதியில் என்னை ஏமாற்றினான். உண்மை உள்ளத்தையோ, அன்பையோ அவனிடம் என்னால் பார்க்கமுடியவில்லை. நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள் என்றுதான் நான் கருதி வந்தேன். அந்த நேசத்தை உங்களிடமும் என்னால் பார்க்க முடியவில்லை. அப்போதுதான் நான் இன்னொருவனுடைய இனிய சொற்களைக் கேட்டு ஏமாந்து விட்டேன்.''

ஒரு விநாடிக்குப் பின் அவள் தொடர்ந்து கூறினாள்: ''இன்று எனக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது, உங்கள் உள்ளத்தில் இன்னொருத்தியுங்கூட இருந்து வந்திருக்கிறாள் என்று; என்னிடம் நீங்கள் பேசிப் பழகியபோது கூட அவளைப்பற்றிய நினைவு உங்கள் உள்ளத்தை ஆளுக்கிக்கொண்டிருந் திருக்கிறதென்று!''

இந்தக் குற்றச்சாட்டை அவனால் மறுக்கமுடியவில்லை. மறுக்கமுடியாத குற்றச்சாட்டு! தங்கம்மா மட்டும் நெஞ்சத்திலே நிறைந்து தங்கியிருக்கிற நிலைமையிலே அவன் இதுவரையில் அவளிடம் பழகியதே இல்லை. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு நோக்கம் அவன் மனத்திலே இருந்து வந்திருக்கிறது. அவள் சொன்னாள்:

''நமக்குள்ளே மறைத்து வைத்துப் பேசவேண்டிய அவசியம் இல்லை யல்லவா? நீங்கள் நிறைந்த அன்புடன் என்னை ஒருமுறையாவது முத்த மிட்டிருக்கிறீர்களா? நான் எல்லாவற்றையும் உங்கள்முன் அர்ப்பித் திருந்தேன். நீங்கள் எனக்கு . . .''

தொடர்ந்து பேசமுடியாமல் தொண்டை அடைத்துவிட்டதுபோல் அவள் பேச்சை நிறுத்திக்கொண்டாள்.

அப்போது அவனுக்கு ஒரு கேள்வி கேட்பதற்கான துணிச்சல் ஏற்பட்டது. ''அன்று, நாம் இறுதியாக அந்த அறையிலே சந்தித் தோமே! நீ என்னை ஏன் காலால் மிதித்து வெளியே தள்ளினாய்?''

அவள் அதை ஒப்புக்கொள்ளத் தயாராக இருந்தாள்:

''ஆம்! நான் அப்படிச் செய்தேன். அன்று உங்களிடம் ஓர் ஆடவனுக்கு இருக்க வேண்டிய எழுச்சி, சுறுசுறுப்பு, ஆணவம், உயிர்க்களை ஆகிய ஒன்றையும் பார்க்கமுடியவில்லை. வெறும் பொம்மையாக இருந்தீர்கள். என்னிடம் அன்பெனச் சொல்லும் உணர்ச்சியை நீங்கள் காட்டவில்லை. உங்கள் மனத்தில் வேறு என்ன என்னவோ சிந்தனைகள்தான் அலை மோதிக்கொண் டிருந்தன. என்னை வெறிக்குள்ளாக்கிவிட்டு . . . அப் பப்பா, என்னால் அன்று அந்த வெறியுணர்ச்சியைத் தாங்கிக்கொண் டிருக்க முடியவில்லை. அதனால்தான் அவ்வாறு செய்துவிட்டேன்.''

அவள் தொடர்ந்து கூறினாள்: ''நீங்கள் என்னை ஒருபோதும் நேசித் திருக்கவில்லை. இனிமேல் என்னை நேசிக்கவும் உங்களால் முடியாது. உங்களுக்கு மனைவியும் குழந்தையும் உண்டு.''

நிசப்த நிலை! அந்தப் பேச்சு இந்த நிலைக்குத்தான் இட்டு வந்தது. அவளுக்குச் சொல்லவேண்டியிருந்ததெல்லாம் சொல்லியாகிவிட்டது. உணர்ச்சிப் பரவசத்தினால் அலைக்கழிக்கப்பட்ட ஒரு பெண், தனக்குச் சொல்லவேண்டி இருந்ததை எல்லாம் கொட்டியளந்தாள். அவை அனைத்தும் உண்மைதான். இப்போது தவறு இழைத்தவன் யார்? கேசவ பிள்ளையேதான். இதுவரையில் தவறு இழைத்தவள் அவளாகத்தான் இருந்தாள்.

கேசவபிள்ளை கேட்டான்: ''என்னாலே இனிமே நேசிக்கமுடியாதுன்னு வச்சுக்குவோம். உன்னால் முடியுமா?''

''என்னால் என்னென்னைக்கும் நேசிக்கமுடியும். ஆனா என் நேசத்துக்கு மதிப்பில்லை. அதன் மதிப்பைத் திரும்பப் பெறவும் முடியாது.''

''என் மனசுக்குள்ளே என் மனைவியும் குழந்தையும் இருக்கிறப்பலே, உன் மனசுக்குள்ளே ராமசந்திரன் நாயர் இல்லையா?''

''இல்லை. நான் அவனை மறந்துவிட்டேன்.''

''அவனால் உன் இதயத்திலே எந்தவிதமான நினைவுச் சின்னத்தையும் பதியவைக்க முடியல்லேன்னு சொல்லறே?''

அவள் முகபாவத்திலே சிறிது மாறுதல் காணப்பட்டது. அவள் அவன் முகத்தைப் பார்த்தவாறு சற்று அழுத்தமான குரலில் கேட்டாள்:

''என்னைக் குறுக்கு விசாரணை செய்யறீங்களா?''

அந்தத் துணிச்சல் புதுவிதமானது. இதுவரையிலும் அத்தகைய துணிச்சல் அவளிடம் ஒருபோதும் கண்டதில்லை. அந்தத் துணிச்சலுடன் தான் அவள் நின்றுகொண் டிருந்தாள். அவள் நேரடியாகக் கேட்டு விட்டாள்:

''நான் உங்கள் மனைவி விஷயமாகச் சிலவற்றைக் கேட்கட்டுமா? உங்கள் மனைவியால் உங்கள் இதயத்திலே எந்தவிதமான நினைவுச் சின்னத்தையும் பதியவைக்க முடியவில்லை என்று சொல்கிறீர்கள்?''

கேசவபிள்ளை ஒருமுறை சிரித்தான். வரவழைக்கப்பட்ட சிரிப்பு! அவள் சிரிக்கவில்லை. சிரிப்பை வரவழைக்கவும் இல்லை. பேசிப் பேசி எங்கே வந்து சேர்ந்திருக்கிறார்கள்? அழுத்தமானதொரு மனநிலைக்கு! இருவருக்கும் தங்கள் தங்கள் நிலைமைகள்பற்றி யோசிக்கவேண்டியிருந்தது. இருவரும் ஆழ்ந்த யோசனையில் மூழ்கிவிட்டார்கள். ஒரு முடிவுக்கு வந்துவிட அவர்களால் முடியவில்லை. ஒருவேளை அவளை அள்ளியெடுத்து அணைத்துக்கொண்டால், அவள் உதறித் தள்ளமாட்டாள் என்றும், ஒரு முத்தம் கொடுக்க முயன்றால் முகத்தைத் திருப்பிக்கொள்ளமாட்டாள் என்றும் அவனுக்குத் தோன்றியது. ஆனால், அந்த அணைப்புக்கு அவளுக்குத் தேவைப்படுகிற சூடும் இறுக்கமும் கிடைத்துவிடுமோ, என்னவோ!

''நான் போய் வரட்டுமா?'' அவன் கேட்டான்.

''போறதாயிருந்தா போங்கோ!'' அவள் திடீரெனப் பதில் அளித்தாள்.

அவன் அங்கணத்தில் இறங்கினான்; கேட்டான்: ''நீ திலகமிட்டிருக்கிறாயே?''

அவள் முனகினாள்.

அவன் சொன்னான்: ''இன்று உன் முகத்திலே பிரத்தியேகமான ஒரு களை தென்படுகிறது.''

அவள் புன்னகை செய்தாள். அவ்வளவுதான்.

''நாளை வருகிறேன்.''

''வாங்கோ!''

அவன் போனான். அவள் வீட்டுக்குள்ளே போனாள்.

அத்தியாயம் 18

தேர்தல்

எடுத்துக்காட்டும் முறையில் ஏதாவது ஒன்றைத் தங்கம்மாவுக்காகச் செய்யவேண்டுமென்று கேசவபிள்ளை முடிவெடுத்திருந்தான். வாழ்க்கையில் அவன் அவளிடம் அந்த அளவு கடன்பட்டிருந்தான். மனை வாங்கி வீட்டைக் கட்டிக் கொடுத்தால் என்ன என்றே முதலில் அவன் யோசித்தான். அந்த யோசனையை அவன் அவளிடம் தெரிவித்தான். குறிப்பிடத்தக்க விருப்பமோ வெறுப்போ அவளிடம் காணப்படவில்லை. தனக்கு ஒரு வீடு கிடைக்கப் போகிறது என்பதனால் வதனத்தில் ஒளி படரவோ, வெறுப்பினால் அதை வேண்டாமென்று சொல்லவோ அவள் செய்யவில்லை. அப்போதுகூட அவள் விரும்பியது அவனுடைய அன்பைத்தான். அந்த அன்பு எத்தகையதாக இருக்கவேண்டும் என்பதுதான் அவனுக்குப் புரியாமல் இருந்து வந்தது.

கேசவபிள்ளையிடம் கொஞ்சம் பணம் சேர்ந்திருந்தது. தங்கம்மாவின் அநுமதியின்றி அவள் பேரில் மனை வாங்குவது எப்படி? அவள் நிலையைப் பாகீரதியம்மாவால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவனுக்கு ஏற்பட்டிருந்த முன்னேற்றமும் சொத்து சுகங்களும் எல்லாம் அவள் நிமித்தமாக உண்டானவை. அதற்காக அவளுக்கு எந்த ஒரு பிரதிபலனும் கிடைத்ததில்லை. ஒரு வீடும் மனையும் கிடைப்பதென்றால் கிடைக்கட்டுமே. எனவே, அதற்குச் சம்மதிக்க வேண்டுமென்று அம்மா அவளை வற்புறுத்தினாள். தங்கம்மா 'ஊம்' கொட்டினாள். இவ்வாறாக அவளுக்கு ஒரு மனை கிடைத்தது. ஒரு கட்டடத்துக்கான மாதிரி நகலும் தயாராகி விட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் சம்ஸ்தான சட்டசபைக்கான தேர்தலை நடத்தப் போவதாக அரசாங்கம் பிரகடனம் செய்தது. காங்கிரஸின் சவாலை சர்க்கார் ஏற்றுக்கொண்டிருந்தது. திவான்ஜி, கேசவபிள்ளையை அழைத்தார். தேர்தலின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியுமா என்று அவனை விசாரித்தார். இழந்துவிட்ட நன்மதிப்பைப் பெறுவதற்கு இதுதான் தகுந்த சந்தர்ப்பம் என்பதை உணர்ந்துகொண்டான் கேசவபிள்ளை.

''தங்கள் ஆசீர்வாதம் இருந்தால் அந்தப் பொறுப்பை நிர்வகிக்கச் சித்தமாயிருக்கிறேன்.''

அவனிடமிருந்து வருகிற துணிச்சலைக் கண்டார் திவான்ஜி. இவ்வாறுகக் களத்திலே குதிக்க அவனுக்கு மீண்டும் சந்தர்ப்பம் கிடைத்தது.

முதல் முதலில் சம்ஸ்தானம் முழுவதிலும் அவன் ஒரு முறை சுற்றுப் பிரயாணம் செய்தான். என். எஸ். எஸ்.; எஸ். என். டி. பி. ஆகிய ஸ்தாபனங்களை தன்னுடைய கருத்துப்படி இயங்கவைக்க அவனால் முடிந்தது. பணக்காரர்களின், பெருநிலச் சொந்தக்காரர்களின் ஆதரவை அவன் பெற்றுவிட்டான். புதிதாக ஒரு ஸ்தாபனம் உருவாயிற்று. ஆரம்ப வேலைகள் கண்டு திவான்ஜி மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

வேட்பாளர் மனுக்களின் பரிசோதனையை ஒரு நல்ல வாய்ப்பாகக் கருதினான் கேசவபிள்ளை. காங்கிரஸ் பிரமுகர்கள் பலருடைய வேட்பு மனுக்களைச் சில சில்லறைக் குறைபாடுகளைக் காரணமாகக் கூறி நிராகரிக்க வைத்தான். பலர் சிறைவாசம் அநுபவித்திருக்கிறவர்கள். சிலர் தாங்களாகவே வாபஸ் வாங்கிக்கொண்டனர். இவ்வாறு இரண்டாவது சுற்றிலும் அவனுக்குக் கணிசமான வெற்றி கிடைத்தது.

எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவு செய்யலாம். அதற்கான அநுமதி கேசவபிள்ளைக்கு உண்டு. திவான்ஜியிடம் கணக்கை மட்டும் காட்டினால் போதும். பணத்தைப்பற்றி அவருக்கு அக்கறை இல்லை.

தங்கம்மாவின் கட்டடம் உயர்ந்துகொண்டிருந்தது. வேலை முடிவுறும் போது அந்தக் கட்டடம் திருவனந்தபுரம் நகரத்திலுள்ள முதல் தரமான கட்டடங்களில் ஒன்றாக இருக்கும். எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவு செய்வதில் கேசவபிள்ளைக்குக் கஷ்டம் இருக்கவில்லை.

சம்ஸ்தானம் முழுவதிலும் நடைபெற்று வந்த பொதுக்கூட்டங்களில் கேசவபிள்ளையின் பெயர்தான் அதிகமாக முழங்கியது. அவனுடைய அநீதியான செயல்களைப்பற்றியே தலைவர்கள் பேசினார்கள். பேச்சுக்கு வேறு விஷயமே இல்லைபோல் தோன்றியது. கேசவபிள்ளையின் அறநெறி களுக்குப் புறம்பான செயல்கள்!

''இந்த மனிதன் இங்கேதான் வாழப்போகிறானா? அல்லது *ஸஹ்ய மலைக்கு அந்தப் பக்கமா?'' இந்தக் கேள்விதான் எங்கும் கேட்கப் பட்டது.

பெயர் இல்லாத மொட்டைக் கடிதங்கள் பல அவனுக்கு வந்தன. 'கைகால்களை ஒடித்து நொறுக்குவோம்', 'கொலை செய்து துண்டு துண்டாக்கிப்போடுவோம்' என்பன போன்ற கடிதங்கள்! பொறுப்பாட்சி கிடைத்துவிட்டால், அவன் சொத்துக்களைப் பறிமுதல் செய்யப் போவ தாகவும், ஜனத்துரோகக் குற்றத்தைப் புரிந்தமைக்காக நீதிமன்றத்திலே நிறுத்தப்போவதாகவும் எச்சரிக்கைகள் பல வந்தன. 'கேசவபிள்ளை யைச் சிறையிலடை!' என்ற கோஷம் வானைப் பிளந்தது. முதலாவது பொதுஜன எதிரி இப்போது கேசவபிள்ளைதான்.

கேசவபிள்ளை சிறிதும் சஞ்சலம் அடையவில்லை. அவன் மாறிவிட்டான். பழைய கேசவபிள்ளை அல்ல. அவனுடைய மூளை சுறுசுறுப்படைந்தது.

---

*மேற்கு மலைத்தொடரின் திருவாங்கூர் மலைப்பகுதியை அவர்கள் ஸஹ்ய மலை என்று அழைக்கிறார்கள். (மொ–ர்.)

செயல்திறன் அதிகரித்தது. அரசாங்க இயந்திரத்தின் பிரதான உறுப்பாக அவன் மாறியிருந்தான்.

இரண்டு மூன்று இடங்களில் ஆத்திரமடைந்த மக்கள் ஆக்கிரமிப்பு நோக்குடன் அவனைச் சுற்றி வளைத்தனர். தைரியம் ஒன்றே அவனைக் காப்பாற்றியது என்று சொல்லவேண்டும்.

ஆனால், ஒரு கடிதம் அவனைக் கலக்கவே செய்தது. தளர்ந்து கீழே விழச் செய்யவில்லை. முகுந்தன் என்ற கையெழுத்திட்டு வந்த கடிதம். அந்தக் கடிதத்திலே முகுந்தன் கேட்டிருக்கிறான்: 'எதற்காக என் தந்தையை அடித்துக் கொன்று விட்டு மரக்கிளையிலே கட்டித் தொங்க விட்டீர்கள்? நாதியற்ற ஒரு குடும்பத்தை அழித்துவிட்டீர்கள்? . . .' என்பன போன்ற கேள்விகள்! கேசவபிள்ளை, கோபாலன் நாயரை அடித்துக் கொன்றுவிட்டதாக அந்தக் கடிதம் எழுதிய இளைஞன் நம்பு கிறான். அவன் பயமுறுத்தலாக எதையும் எழுதவில்லை. பழிக்குப் பழி என்று சபதம் எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால், தன் தந்தையைக் கொலை செய்தவன் கேசவபிள்ளைதான் என்று அவன் நம்புகிறான். எதற் காகக் கொலை செய்யப்பட்டது என்பதைப்பற்றி மட்டும் அவன் அறிய வேண்டும். அவ்வளவுதான்.

அப்பா சேர்த்து வைத்த சொத்தாகத் தனக்குக் கிடைத்த காகிதக் கட்டுடன் சுற்றியலைகிற ஒரு நபரை அல்ல, கேசவபிள்ளை அந்தக் கடிதத்திலேயே பார்த்தது. 'பயங்கரமான ஆயுதத்துடன் ஒரு மனிதன் முன்னே வந்து நிற்கிறான்! தான் செல்கிற இடங்களிலெல் லாம்—ஜனக்கூட்டங்களுக்கிடையிலும், ஜன நடமாட்டமில்லாத இடங் களிலும், வீட்டிலும், அக்கம்பக்கத்து இடங்களிலும்—சந்தர்ப்பத்தைப் பார்த்தவாறு ஒரு மனிதன் மறைந்து பதுங்கி ஒளிந்து கொண்டிருக்கிறான்' என்றே கேசவபிள்ளைக்குத் தோன்றியது. வாழ்க்கையில் அந்த ஒரே ஒரு குறிக்கோளை மட்டும் கொண்டவன் அந்த ஓர் இளைஞன். அத்தகைய ஒருவனிடமிருந்து தப்பித்துக்கொள்ள முடியவே முடியாது.

அந்தப் பயம் மட்டும் கேசவபிள்ளைக்கு எப்படி வந்ததென்று தெரிய வில்லை. பயமுறுத்தல் கடிதங்கள் அவனைப் பயமுறுத்தவில்லை. ஆனால் இந்தக் கடிதம் அவனைப் பயமுறுத்தவே செய்தது.

ஒரு நிமிஷ நேரம் வரையில் என்ன செய்வது என்று அறியாமல் கேசவ பிள்ளை உட்கார்ந்து விட்டான். முகுந்தன் இங்கே எங்கேயாவது வந்து பதுங்கியிருக்கிறானா? கேசவபிள்ளை சுற்றுமுற்றும் பார்த்தான். இறுதியில் அவன் ஒரு முடிவுக்கு வந்தான். அந்த இளைஞனைச் சிறையிலே தள்ளி விடுவது என்பதுதான் அது! எவ்வளவு காலம் வரைக்கும் சாத்தியமோ அவ்வளவு காலம் வரைக்கும். அத்தகைய ஒரு வழக்கில் முகுந்தனைச் சிக்க வைக்கவேண்டியதுதான். அந்த ஊர் போலீஸுக்கு இப்படி ஒரு யோசனை எழுதியனுப்புவது. கேசவபிள்ளை எழுதியனுப்பவும் செய்தான். ஆனால் மனச்சாட்சி அவனைத் துன்புறுத்தியது. மன அமைதிக்கு வழி ஏது?

அலுவல்களின் குவியல்களுக்குள்ளே அந்த நிகழ்ச்சி புதைக்கப் பட்டது.

கேசவபிள்ளை ராஜ்யத்தில் அங்குமிங்குமாக அலைந்துகொண் டிருந்தபோது, அதன் மத்தியில் ஒரு நாள் ஊருக்குச் சென்றான். தாயும் தகப்பனும் தனயனை எதிர்பார்த்துக்கொண் டிருந்தனர். அந்தக் கிராம வயோதிகர்களுக்கு ஏராளமான காரியங்கள் அவனிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியிருந்தன. மகன் இதுவரையில் சம்பாதித்துச் சேர்த்த சொத்துக்களை போதுமென்ற அடிப்படையில் தாயார் கேட்டாள்:

''இனி இந்த வேலை போதும்ப்பா! ஊருக்கு வந்து சாப்பிட்டுக் கிட்டிருந்தாப் போதாது?''

''அதென்னம்மா, இப்படிச் சொல்லறே?''

அம்மாவுக்கு நிறையப் பேச வேண்டியிருந்தது. அப்பா முகம் வாட்டம் அடைந்திருந்தது. அம்மா இன்னொரு கேள்விகூட மகனிடம் கேட்டு விட்டாள்: ''நீ திருவனந்தபுரத்திலே ஒரு பெரிய வீடு கட்டறியாமே?''

முகத் தோற்றத்திலே எவ்வித மாறுதலையும் காட்டாமல் கேசவபிள்ளை பதில் அளித்தான்: ''இல்லை, நான் எதுக்காகத் திருவனந்தபுரத்திலே வீடு கட்டணும்?''

குட்டியம்மா கேசவபிள்ளையை ஒருமுறை தலையோடு கால்வரையில் பார்த்தாள். கடுமையான பார்வை! அதைப் பார்த்தால் கேசவபிள்ளை ஒரு பத்து வயதுச் சிறுவனாகவே இருந்து வருகிறான்போல் தோன்றி விடும். தண்டனை அளிக்கத்தான் அவள் கேட்கிறாள். மகன் இன்னொரு தவறைக்கூடச் செய்கிறான். பொய்யைச் சொல்கிறான். கேசவபிள்ளை அப்படியே சுருங்கிவிட்டான். அம்மா அதட்டுகிற முறையிலே கேட்டாள்: ''நீ கட்டவில்லையா? டேய், நீ என் முகத்தைப் பார்த்துப் பொய் சொல்லக்கூடத் துணிஞ்சிட்டியா?''

கணவரை நோக்கி அவள் கேட்டாள்: ''பார்த்தீங்களா, இவன் என் முகத்தைப் பார்த்துப் பொய் சொல்லறதைக் கேட்டீங்களா?''

பப்புப்பிள்ளை வேதனையுடன் சொன்னார்: ''பார்த்தேன். கேட்டேன்.''

கேசவபிள்ளை குற்றமற்றவன்போல் கூறினான்: ''நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து என்னென்னமோ சொல்லிக்கிட்டிருக்கிறீங்க?''

''நான் என்ன சொல்லறேன்னுகிறியா?'' ஒரு விநாடிக்குப் பிறகே அவள் மேற்கொண்டு பேசினாள்.

''உனக்கு ஸ்ரீபத்மனாபனோட பத்து சக்கிரம் சம்பளமாக்கிடைக்கணும்னு தான் நாங்க ரெண்டு பேரும் பிரார்த்திச்சுக்கிட்டிருந்தோம். அதுக்காக நாங்க படாத கஷ்டங்கள் இல்லே. கடவுள் எங்க பிரார்த்தனையைப் புறக்கணிக்கல்லே. எதுக்காக நாங்க அந்தச் சம்பளத்துக்காகப் பிரார்த் திச்சோம் தெரியுமா? அதுக்கு ஒரு ஸ்ரீகரம் இருக்குதடா! பெருமை இருக்குதடா! நான்னு, அதிலே கபடமோ, வஞ்சனையோ, துரோகமோ ஒண்ணுமே இருக்காதுண்ணு நினைச்சுக்கிட்டிருந்தேன். அந்தச் சக்கிரம்

ரொம்பமும் புனிதமானதடா. ஆனு, உன்னைப் பொறுத்தவரைக்கும் அதெல்லாம் தலைகீழாப் போச்சேடா?''

அதைப்பற்றிப் பப்புப்பிள்ளைக்கும் சிறிது பேசவேண்டியிருந்தது.

''சம்பளம் அல்லாமே மற்ற விஷயங்களிலே நாலு சக்கிரம் வாங்கினைக் கூடக் குற்றமில்லே. சர்க்கார் வேலைன்னு அது இருக்கவே இருக்கு. ஆனு, துரோகம் செய்யக்கூடாது.''

தன்னுடைய தற்போதைய மன நிலையிலே இத்தகைய பேச்சுக்களைக் கேட்க அவன் விரும்பவில்லை. அவன் கேட்ட கேள்வியிலே அது நிழல் வீசவும் செய்தது.

''நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து என்னென்ன சொல்லிக்கொண்டிருக்கிறீங்க? ஊர் முழுதும் என்னைத் திட்டறுங்க. நீங்களும் அதையே ஆரம்பிச்சுட்டீங்களா? நான் என்ன செய்யணும்?''

அம்மா சொன்னாள்: ''இதைவிட அதிகமா இனிமே நீ ஒண்ணும் செய்யவேண்டியதில்லே. பத்திரிகைங்க பூராவும், ஜனங்க பூராவும் அப்படித்தான் சொல்றுங்க. நான் அதெல்லாம் பாக்கறதாகவோ, கேக்கறதாகவோ இல்லே. எனக்குப் படிப்பாத் தெரியும்? யாராவது சொன்னு அதைத்தானே தெரிஞ்சுக்க முடியுது? அதைக் கேக்கறப்போ என் நெஞ்சம் வெடிக்குதடா.''

மகனுடைய பருவத்தையோ, நிலையையோ, அந்தஸ்தையோ எண்ணுமல் அந்தத் தாய் அவனுக்கு இதயம் கனிந்த தருமோபதேசம் செய்தாள்:

''மகனே, சத்தியத்தையும் தருமத்தையும் நீதியையும் தவறி நடந்தா நமக்கு அது கெடுதல்தானடா.'

குட்டியம்மா அவனுடைய முகத்திலேயே பார்வையைச் செலுத்திய வாறு கேட்டாள்: ''நீ ஒரு பொண்ணுக்காகவா, திருவனந்தபுரத்திலே அத்தனை பெரிய கட்டடத்தைக் கட்டறே?''

இந்தக் கேள்வியை இலேசாகச் சமாளித்துவிட முடியாது. களங்க மற்றவன்போல் நடிக்கவும் முடியவில்லை. தாயார் தொடர்ந்து கேட்டாள்: ''உனக்கு வேலை வாங்கித் தந்தது அவளா? ஏதோ ஒரு பெரிய உத்தியோகஸ்தரின் மகள்தான் அவள்னு சொல்றுங்களே?''

''எதுக்காக உங்களுக்கு இந்த வம்பெல்லாம்? அவசியம் இல்லாத விஷயத்திலே தலையிடக்கூடாது.'' கேசவபிள்ளை திடீரெனச் சொல்லி விட்டான்.

பப்புப்பிள்ளை துள்ளி எழுந்தார்: ''டேய் டேய், நீ ரொம்பப் பெரிய மனிசன்தான்டா. ஏற்றுக்கறேம். ஆனு, உங்க கோவத்தையெல்லாம் அங்கே மூட்டை கட்டி வச்சுக்கோ! சொல்லிட்டேன்.''

குட்டியம்மாவும் விட்டுக் கொடுக்கவில்லை: ''அப்போ இந்தப் பொம்பளேங்க சொன்னதெல்லாம் உண்மைன்னு சொல்லு! அட துஷ்டப் பயலே, அதைக் கொஞ்சம் முன்னாலே சொல்லியிருந்தா இந்த ரெண்டு பொம்பளேங்களும் நாசமாப் போயிருக்கமாட்டாங்களேடா!''

கேசவபிள்ளைக்குச் சுய உணர்வு அற்றுப் போயிற்று. இந்த விஷயங்களைப்பற்றியெல்லாம் அவனுக்கே தெரிந்திருக்கவேண்டும். இதைப் பற்றியெல்லாம் அவனே யோசித்திருக்கவேண்டும். ஆனால், அன்னை தன் முகத்தைப் பார்த்து அந்தக் கேள்வியைக் கேட்டபோது, அவ்வாறெல்லாம் கூறியபோது, அவனால் அவற்றைச் சகிக்கமுடியவில்லை. இத்தகைய ஒரு நிலைமை அவனுக்கு இதற்குமுன் எப்போதுமே ஏற்பட்டதில்லை. தவறு செய்தோமென்ற உணர்ச்சியைத் தாங்கியவாறு வாழ்நாள் முழுவதும் ஒருவனால் நடந்துகொள்ளமுடியும். ஆனால், அந்தத் தவறைப்பற்றி வேறு யாராவது நினைவுபடுத்தினால் அந்த உணர்ச்சி பெருக்கெடுத்துவிடலாம். ஆத்திரமும், தன்னடக்கமின்மையும் அவனுக்குத் தோன்றிவிடலாம். கேசவபிள்ளை குரலைச் சிறிது உயர்த்தியவாறு கேட்டான்:

''நான் முன்னேற நீங்க ஒருபோதும் சம்மதிக்கலை. இனிமேலும் சம்மதிக்கமாட்டீங்களா?''

ஒரே ஒரு மகன். அவனை இதுவரையில் இந்தத் தோற்றத்தில் அந்தத் தாய் தந்தையர்கள் கண்டதே இல்லை. அவன் அவர்கள் முன்னால் நின்று இவ்வளவு உரத்த குரலில் பேசியதும் இல்லை. அவர்கள் தம்பித்து நின்றுவிட்டார்கள். அந்தத் தம்பித நிலையிலிருந்து பப்புப்பிள்ளைதான் விழித்துக்கொண்டார்.

''நில்லு! நீ என்ன சொன்னே?''

குட்டியம்மாதான் அதைப் பூர்த்தி செய்து பேசினாள்:

''ஆமாண்டா, நாங்கதாண்டா, உன் முன்னேற்றத்துக்குத் தடையாயிருந்தோம்!''

கதறியழுதவாறு அவள் மீண்டும் கூறினாள்: ''ஆமாண்டா! நாங்கதான் தடையாயிருந்தோம்டா! இப்படிச் சொல்ல உன்னாலே எப்படி முடிஞ்சதுடா?''

''தருமசாஸ்தாவே! ஐயப்பா! இந்த மாதிரி பேசறதைக் கேக்கறதுக்கான தலைவிதி எனக்கு ஏற்பட்டுவிட்டதே!'' அந்த வயதான கிராமஸ்திரீ கதறியழுதவாறு முஷ்டியைச் சுருட்டி நெஞ்சுமீது இடித்துக்கொள்ளத் தொடங்கினாள். பப்புப்பிள்ளை அவள் கையைப் பிடித்துக்கொண்டார். அந்தக் கிழவரும் அழுதுவிட்டார்.

''அட மாபாவி! நீ இப்படித்தாண்டா சொல்லணும்!''

இத்தகைய ஒரு நிகழ்ச்சியைக் கேசவபிள்ளை எதிர்பார்த்திருக்கவில்லை. அவன் அங்கிருந்து நழுவிச் சென்றான். அறைக்குள்ளே நுழைந்து படுத்துக்கொண்டான்.

இந்தப் பேச்சுக்களையும், கூச்சல்களையும் கேட்டு அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் ஓடி வந்துவிடுவார்களோ என்று கேசவபிள்ளை பயந்தான். அப்புறம் இந்தக் கதை பல வண்ணங்களுடன் நீட்டப்பட்டு ஊரெல்லாம் பரவிவிடும். நாளைய பத்திரிகைகளில் தாயாரை உதைத்துவிட்ட மகனின் கதை பிரசுரமாகிவிடும்.

தொட்டிலுக்குள்ளே மகள் படுத்துத் தூங்கிக்கொண் டிருந்தாள். அம்மாவின் அழுகைக் குரல் அறைக்குள்ளே வந்து முழங்கிக்கொண் டிருந்தது. அப்பா ஆறுதல் சொல்லிக்கொண் டிருந்தார். கூடவே அவனைத் திட்டவும் செய்தார்.

''போவட்டும். எப்படியாவது போய்த் தொலையட்டும்! அவனுடை அரண்மனையும், சொத்தும், பணமும், பெருமையும் ஒண்ணும் நமக்கு வேணும்மா! போய்த் தொலையட்டும்! நமக்கு உயிர் வாழத் தேவையான தெல்லாம் இங்கே இருக்கு'' என்று தகப்பனார் கூறினார்.

தந்தையின் சுபாவத்தைப்பற்றி மகனுக்கு நன்றாகத் தெரியும். வேண்டாமென்று எதையாவது அவர் உதறித் தள்ளிவிட்டால் அது தமக்கு வேண்டாத பொருள்தான்! உறுதி படைத்த ஒரு விவசாயியின் மனோபாவந்தான் அது.

தன்னடக்கம் எப்படித் தன்னிடமிருந்து விலகிப் போனதென்று கேசவ பிள்ளை யோசித்தான். கடுமையாகப் பேசிவிட்டோமோ? அவர்கள் மனத்தைப் புண்படுத்தும்படியாக என்ன பேசினேன்? முன்னேற்றத் துக்குத் தடையாக இருந்தீர்கள் என்று மட்டுந்தானே, சொன்னேன்? அதைப்பற்றி இவ்வளவுதூரம் வருந்துவதற்கு என்ன இருக்கிறது? . . .

அவ்வாறு சொன்னபோது தன் மனத்திலே என்ன இருந்ததென்று கேசவபிள்ளை யோசித்துப் பார்த்தான். திருமணத்தைப்பற்றி யோசித் தானா? தங்கம்மாவுடன் கொண்டிருக்கும் உறவைப்பற்றியும், திருமணத் தைப்பற்றியும் மறு பரிசீலனை செய்து பார்க்கும் நிலைக்கு அவன் அடித்துச் செல்லப்பட்டிருந்தான். அன்று இந்தத் திருமணம் நடைபெறாமல் இருந் திருந்தால், வாழ்க்கை இன்றிருப்பதைவிட நன்றாக அமைந்திருக்குமா? அவன் நன்றாக ஆராய்ந்து பார்த்தான். அமைந்திருக்குமா இல்லையா என்று திட்டவட்டமான ஒரு முடிவுக்கு அவனால் வர முடிய வில்லை. இந்தத் திருமணம் முன்னேற்றத்துக்குத் தடையாக இல்லாமல் இருந்திருக்கலாம். தங்கம்மாவை மணந்துகொள்ளாமல் இருந்ததால் என்ன கெடுதல் ஏற்பட்டுவிட்டது? கெடுதல் ஒன்றும் ஏற்படவில்லை என்பது உண்மைதான். ஆனால், இதைவிடக் கூடுதலான லாபம் ஏற்பட் டிருக்காது என்று எப்படிச் சொல்லமுடியும்? இன்று அதை நேரடியாகப் பார்க்க முடியவில்லை. ஒருவேளை சூழ்நிலை அதிகப்படியான வசதிகளைச் செய்து தந்திருக்கலாம் அல்லவா? காரியதரிசி பதவிகூடக் கிடைத்தா லும் கிடைத்திருக்கலாம்.

சிந்தனைப் பிரவாகத்திலே அவன் மிதந்து சென்றுகொண் டிருந்தான். அம்மாவின் குரல் இப்போது காதில் விழவில்லை. முன்னேற்றத்துக்கு ஒருவேளை தாய்தந்தையர்கள் தடையாக இருக்கவில்லை என்றே வைத்துக் கொள்வோம். ஆயினும், ஏதோ ஒரு விஷயத்துக்கு அவர்கள் நடை யாகத்தான் இருந்திருக்கின்றனர். வாழ்க்கை முழுமை பெற்று விட்ட தாக அவனுக்கு ஒருபோதும் தோன்றவில்லை. அத்தகைய முழுமையைப் பெறுவதற்குத்தானே, அவன் திரும்பவும் தங்கம்மாவிடம் சென்றது?

இல்லை! . . . இவ்வளவு ஆழமாகத் தன் வாழ்க்கையைப்பற்றி அவன் பரிசீலனை செய்து பார்த்ததே இல்லை.

கார்த்தியாயினி தன் வாழ்க்கையிலே வந்து நுழைந்து விட்டாள். இல்லாவிட்டால் இந்த இதயத்தில் தங்கம்மாதான் நிறைந்து நின்றிருப் பாள். தங்கம்மாவுக்குத் தனது அன்புள்ள உள்ளம் கிடைக்க வில்லை. அவள் சொன்னது உண்மைதான். முதல் முதலாகத் தன் இதயத்திலே நுழைந்துகொண்டவள் அவள்தான், தங்கம்மா! பின்பே அவளுக்கு அதிலே இடம் இல்லாமற் போயிற்று.

ஒவ்வொரு நாளும் அவளிடம் ஒருவிதமான புதுமையைக் காண முடியும். இன்றுகூட அது இருந்து வருகிறது. அவள் அருகில் அமர்ந் திருந்தால் பொழுதுபோவது தெரியாது. வாழ்க்கை தகர்ந்துவிட்ட இந்த நிலைமையிலேகூட அவளைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம். கோப்பை யைக் கையில் வைத்தவாறே அவள் காபியருந்தச் செய்வாள். அவ ளுடைய சிரிப்புக்கு இருந்து வருகிற வசிய சக்திதான் என்னே! அவள், அவனுடைய வாழ்க்கைத் துணைவியாக இருந்திருந்தால் தன் வாழ்க்கைப் பிரயாணத்தின் திசையே மாறிப் போயிருக்கலாம். சுறுசுறுப்புக்கும் துணிச்சலுக்கும் குறைவு நேராமல், வாழ்க்கை என்றென்றும் உற்சாகத் துடன் முன்னேறியிருக்கும். வாழ்நாள் முழுதுமே சிரிப்பும் விளையாட்டு மாக முடிந்திருக்கும். அந்த முறையில் சொந்தமான உழைப்புத் திறமை யால் வாழ்க்கை இன்றிருப்பதைவிட முன்னேறியிருக்கும்.

இன்றைய வாழ்க்கைதான் என்ன? ரசம் இல்லாதது. தனக்கு ஒரு மனைவி இருக்கிறாளா என்று கேசவபிள்ளை யோசித்துப் பார்த்தான். கட்டிய பெண் ஒருத்தி ஊரிலே இருக்கிறாள் என்ற நினைவு பல மாதங்கள் வரை இல்லாமல் போய்விடுகிறது. புளிய மரத்தடியிலுள்ள ஜோசியர், 'உங்கள் மனைவி அதிருஷ்டக்காரி' என்று சொல்கிறபோதுதான் ஏதாவ தொரு சமயத்தில் அவளைப்பற்றிய நினைவு வருகிறது. அவள் அருகே சென்றால் வேர்வை நாற்றம் அடிக்கிறது. தொட அருவருப்பாக இருக்கிறது. அவளும் ஒரு மனைவிதான்! உண்மையிலேயே அவள் என் வாழ்க்கையைத் தகர்த்துவிடவில்லையா?

இவ்வளவு திட்சண்யமான ஆவேச உணர்ச்சி, கேசவபிள்ளைக்குத் தங்கம்மாவிடம் இதுவரையில் ஒருபோதும் ஏற்பட்டதில்லை.

* * *

கரியும் அழுக்கும் படிந்த வேஷ்டியும், வேர்வை கொட்டுகிற உடலும், சிரத்தில் ஒரு பக்கமாகக் கட்டி வைத்திருக்கிற கூந்தலுமாக அவள் அந்த அறைக்குள்ளே வந்தாள். அவள் கையிலே ஒரு கரண்டியும் இருந்தது.

அவளது உடல் சற்றுப் பருத்திருந்தது. வண்ணப் பொலிவு ஏற்பட்டிருந் தது. அடர்த்தியான நீண்ட கூந்தல், இரண்டு கைகளிலுமாக ஏழெட்டு

வளையல்கள், கழுத்திலே தங்க நகைகள்!—அவள் பழைய கார்த்தியாயினி அல்ல.

அவள் கேட்டாள்: ''அப்பா அம்மாகிட்டே சண்டை போட்டீங்களா?''

அவனுடைய பதில் விறுவிறுப்பில்லாத ஒரு மறு கேள்வியாக இருந்தது: ''ஊம்? என்ன?''

அவள் கேட்டாள்: ''அம்மா அப்பாகிட்டே எல்லாம் இப்படிப் பேசலாங்களா?''

''எனக்குப் புத்தி சொல்ல வந்திருக்கிறியா?'' அவனுடைய அப்போதைய நிலையை அவள் புரிந்துகொள்ளவில்லைபோல் தோன்றியது.

''இதெல்லாம் நல்லது இல்லிங்க.''

அவள் தொட்டிலில் படுத்திருக்கிற குழந்தையைச் சுட்டிக் காட்டிக் கூறினாள்: ''இந்தக் கொழந்தை வளர்ந்து பெரிசானதுக்கு அப்புறம் நம்மகிட்டே இப்போ நீங்க பேசற மாதிரி பேசினா நமக்கு எப்படி இருக்குமுங்க? அதைப்பற்றி ஏன் யோசிக்காமே இருக்கிறீங்க?''

அந்தக் கேள்வி அவனுடைய இதயத்தில் எங்கேயோ ஓர் இடத்தில் சென்று பதிந்தது. கார்த்தியாயினி தொடர்ந்து கூறினாள்: ''திருவனந்தபுரத்திலே பொண் இருக்காளான்னு அம்மா கேட்டபோது இல்லேன்னு ஒரு வார்த்தை பேசினா தீர்ந்திருக்குமே. என்கிட்டே கூட அம்மா எப்போதும் கேட்பா, உங்களுக்குத் திருவனந்தபுரத்திலே பொண் இருக்காளான்னு. அப்போ எல்லாம் அப்படி இல்லேன்னு நான் கண்டிப்பா மறுத்துக்கிட்டு வந்தேன். 'உங்களுக்கு அங்கே பெண்ணிருக்கு; அவளுக்கு அங்கே வீடு கட்டிக் கொடுக்கிறீங்க'ன்னு பத்திரிகைகளிலே செய்தி வந்துக்கிட்டிருக்கு. கட்டிக் கொடுக்கிற வீட்டின் படத்தையும் பிரசுரிச்சிருந்தாங்க. பக்கத்து வீட்டிலுள்ள பெண் பிள்ளேங்கதான் இதையெல்லாம் சொன்னுங்க. அப்போ நான் அவங்ககிட்டே சொன்னேன், 'அதனாலே உங்களுக்கு ஒண்ணும் நஷ்டமில்லையே'ன்னு. இந்த ஆளுங்கல்லாம் ரொம்பப் பொறுமை புடிச்சவங்க. அம்மாகிட்டே 'இல்லே'ன்னு ஒரு வார்த்தை சொல்லியிருந்தாப் போதாதுங்களா?''

கேசவபிள்ளை அவளை உற்றுக் கவனித்துப் பார்த்தவாறு சிலைபோல் அசையாமல் படுத்துவிட்டான். இது கார்த்தியாயினிதானா? இவளா இப்படிப் பேசுவது? நம்ப முடியவில்லையே. கனவு காண்கிறேனா?

கார்த்தியாயினி மேலும் பேசினாள்: ''இனியும் அம்மா இப்படிக் கேட்டுக்கிட்டிருந்தா என்னாலே என்ன பதில் சொல்லமுடியும்? பக்கத்து வீட்டுப் பொம்புளேங்க யாராச்சும் கேட்டா 'இல்லே'ன்னு ஒரு வார்த்தை சொல்லியிருந்தாப் போதுமுங்க.''

ஒரு விநாடிக்குப் பிறகு அவள் மீண்டும் கூறினாள்: ''அப்பா அம்மாகிட்டே போயி சமாதானப்படுத்துங்க. நான் போறேன். பொரியல் கரிஞ்சிருக்கும்.''

அவள் போனாள். திரும்பிப் போகிற அந்தப் பெண் உருவத்தை வியப்புடன் பார்த்தவாறு படுத்திருந்தான் கேசவபிள்ளை. அப்போது குழந்தை

கண் விழித்து அழத் தொடங்கியது. அவன் எழுந்து சென்று தொட்டிலை ஆட்டினான். கார்த்தியாயினி அறை வாசலுக்கு வந்தபோது அவன் குழந்தையைத் தூங்கவைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதைக் கண்டாள். கலை மிகுந்த சிரிப்புடன் அவள் கேட்டாள்: ''தூங்கியாச்சா?''

''தூங்கத் தொடங்குது.''

''நான் இதோ வந்துடறேன். பப்படம் பொரிக்க எண்ணெய் சட்டியிலே ஊற்றியிருக்கேன்.''

* * *

அப்பா, அம்மா ஆகியோரிடம் மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று அன்றிரவு கார்த்தியாயினி மிகவும் வற்புறுத்திச் சொன்னாள். அதைச் செய்யாமல் திரும்பிப் போகக்கூடாதென்றும் சொன்னாள். ஆனால் கேசவ பிள்ளைக்குப் பயம். தன்னை நேரடியாகப் பார்க்கும்போது அப்பா சபித்து விட்டால் . . . ? அந்தச் சாபத்துக்கு இரையாகாமல் போவதல்லவா, நல்லது? கார்த்தியாயினி அதை ஒப்புக்கொள்ளவில்லை.

''காலில் விழுந்துவிட்டுத்தான் போவணும். அப்படியொண்ணும் சபிக்கமாட்டாங்க. அதெல்லாம் வெறும் நினைப்புத்தாங்க. நம்ம குழந்தை கெட்டுப் போயிடணும்னு நாம் விரும்புவோமா? இனி ஒருவேளை அம்மா அப்பா சபிச்சாக்கூட ஒண்ணும் வராது. நமக்கு ஏதாச்சும் ஆபத்து ஏற்படணும்னு நினைச்சுக்கிட்டா, அவங்க சபிக்கிறாங்க?''

இவ்வளவு தூரம் இக்கட்டான ஒரு நிலைமை அவனுக்கு ஏற்பட்டதில்லை. களங்கம் இல்லாத ஒரு சிரிப்புடன் அவள் கேட்டாள்: ''ஆமாம் . . . நான் ஒண்ணு கேக்கட்டுமா? ஆத்திரப்படக்கூடாது. என்மீது கோவிச்சுக்கக் கூடாது. இந்தப் பொம்புளைங்களும், பத்திரிகைக்காரங்களும் சொல்லறாங்களே, அப்படித் திருவனந்தபுரத்திலே உங்களுக்கு ஏதாவது பொண்ணு கிண்ணுனு இருக்கா?''

களங்கமற்றவன்போல் நடித்தவாறு கேசவபிள்ளை சொன்னான்: ''அதெல்லாம் இந்தக் காங்கிரஸ்காரங்க பரப்பிவிடுகிற அவதூறுதான் கார்த்தியாயினீ.''

''அப்படீன்னு, நேக்கறவங்ககிட்டே - 'இல்லே'ன்னு சடார்னு சொல்லறதுதானே?''

''நான் சொல்லலை. அவ்வளவுதான்.''

கார்த்தியாயினி நம்பினாள். அவள் கேட்டாள்: ''அப்பாவும் அம்மாவும் திருவனந்தபுரம் பார்க்கணும்னு ரொம்ப நாளா சொல்லிக்கிட்டு வர்றாங்களே, ஏன் அவங்களை அழைச்சுக்கிட்டுப் போகாமே இருக்கீங்க?''

''அழைச்சுக்கிட்டுப் போறேன். அதுக்கும் நேரம் காலம் வர வேணுமா?''

அவள் சொன்னாள்: ''எனக்குக்கூடத் திருவனந்தபுரம் பார்க்கணும்னு ஆசைதாங்க.''

அது கார்த்தியாயினியின் ஆசைதான். அதை நிறைவேற்றிக் கொடுக்க முடியுமா? ஐயோ! அந்தப் பாழாய்ப் போன பிரைவேட் செக்ரடரி இருக்கானே!

தொட்டிலை ஆட்டிக்கொண்டிருந்த அவளை உற்றுப் பார்த்தவாறு அவன் கேட்டான்: ''நீ ஏன் சுத்தமா இருக்கிறதில்லே? உன்னிடம் வேர்வை நாற்றம் அடிக்குதே!''

''ஆமாம், எனக்கு வேர்வை ரொம்ப ஜாஸ்தி. எப்பவும் வேர்வையிலே குளிப்பேன். வேலை இல்லீங்களா? எப்பவும் சிங்காரிச்சுக்கிட்டிருக்க முடியுங்களா?''

ஒரு விநாடிக்குப் பிறகு அவள் சொன்னாள்: ''சொத்துப் பெருகினதும் வேலையும் ஜாஸ்தியாப் போச்சு.''

கள்ளங்கபடமற்ற வெள்ளை உள்ளம் கொண்ட அந்த மனிதப் பிராணியைப் பார்த்துக் கேசவபிள்ளை சொல்லிவிட்டான்:

''என்ன இருந்தாலும் நீ அதிருஷ்டக்காரிதாம்மா!''

பெருமையளிக்கிற பேச்சு! அவள் சிரித்தபடி சொன்னாள்: ''எப்போ பார்த்தாலும் கிட்டு மாமா இப்படித்தான் சொல்லுறு.''

அவள் தொடர்ந்து கூறினாள்: ''ஆமாம் . . . நம்ம மகளோட ஜாதகம் கொண்டாந்திருக்காங்க. பார்த்தீங்களா? இவள்கூடப் பெரிய அதிருஷ்டக்காரின்னுதான் சொல்றாங்க. இந்த மாதிரி ஒரு ஜனனமே வேறு இல்லேன்னுங்க.''

மேற்சொன்ன நிகழ்ச்சிகள் காரணமாக மறுநாள்தான் கேசவபிள்ளையால் திருவனந்தபுரத்துக்குத் திரும்பிச் செல்ல முடிந்தது. தாய் தந்தையர்களிடம் அவன் மன்னிப்பைக் கேட்டான். அவனைப் பொறுத்தவரையில் அது அமைதியில்லாத ஒரு காலகட்டமாக இருந்தது. காங்கிரஸ்காரர்கள் ஏதாவதொன்றைக் கிளப்பிவிட்டுக்கொண்டிருந்தனர். திவான்ஜி அவன் முன்னால் சவுக்குடன் நின்றுகொண்டிருக்கிறார். இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் பெற்றோர்களிடம் ஏதோ கடுமையாகப் பேசியதற்காக அவர்கள் காலைப் பிடித்து அவன் மன்னிப்பைக் கேட்டுவிட்டான். அந்த வயோதிகத் தம்பதிகள் அதைப் பார்த்துத் தேம்பித் தேம்பி அழுதனர்.

அடுத்த நிமிஷத்திலிருந்து அவன் மீண்டும் தேர்தல் வேலைகளில் ஜரூராக இறங்கிவிட்டான்.

கேசவபிள்ளை, காங்கிரஸ்காரர்களுக்கு மிகப் பெரியதொரு தலைவலியாகவே இருந்தான். பல இடங்களில் காங்கிரஸ்காரர்கள் மத்தியிலே ஆழமான பிளவை ஏற்படுத்த அவனால் முடிந்தது. தேர்தலில் இருபத்தைந்து சதவீத இடங்களைக்கூடக் காங்கிரஸினால் கைப்பற்ற முடியவில்லை. அரசாங்க ஆதரவு பெற்ற வேட்பாளர்களின் பெட்டிகளிலே, எண்ணுதல் நடைபெறுமுன்பே, முத்திரையிட்ட ஓட்டுச் சீட்டுக்

களைப் போட்டு நிரப்பிவிட்டதாக ஒரு பெரிய குற்றச்சாட்டுப் பிறகு கிளம்பியது.

திவான்ஜி கேசவபிள்ளையைத் திறந்த மனத்துடன் புகழ்ந்து பாராட்டினார். ''கேசவபிள்ளை செக்ரடரி பதவிக்குத் தகுதி படைத்தவராகிவிட்டார்'' என்று பகிரங்கமாக அவர் பறைசாற்றினார். கேசவபிள்ளை இதற்கு முன் அந்தத் தகுதியைப் பெற்றிருக்கவில்லை.

தேர்தல் முடிவு பெற்ற அதே சந்தர்ப்பத்தில் தங்கம்மாவின் கட்டடமும் பூர்த்தியாகிவிட்டது. தம்பானூர்ப் பகுதியிலுள்ள மிகச் சிறந்த கட்டடங்களில் ஒன்றாக இருந்தது அது. அதற்குச் 'சேகர விலாசம்' என்று கேசவபிள்ளை பெயர் சூட்டினான். தங்கம்மா சேகர விலாசத்தில் குடியேறி விட்டாள்.

அத்தியாயம் 19

வெற்றி முரசு

அரசாங்கம் சில ஆட்சிச் சீர்திருத்தங்களைப் பிரகடனம் செய்தது. சம்ஸ்தான காங்கிரஸ் நடத்துகிற கிளர்ச்சியின் பல முனைகளை மழுங்கச் செய்கிற பிரகடனமாக இருந்தது அது. கேசவபிள்ளை தயார் செய்த ஒரு ரிப்போர்ட்டின் அடிப்படையிலேதான் சர்க்கார் அத்தகைய சீர்திருத்தங்களைச் செய்யத் தயாராகியது. கேசவபிள்ளையின் ரிப்போர்ட் மிகச் சிறந்த தஸ்தாவேஜு என்று திவான்ஜியே ஒப்புக் கொண்டார். நிலைமைகளைச் சரிவரப் புரிந்துகொண்டு நன்முக அலசி ஆராய்ந்து பார்த்துத் தெளிவாகத் தயாரித்த ஒரு ரிப்போர்ட்டாக அது இருந்த தாம். கேசவபிள்ளையின் மதிநுட்பத்தையும், யதார்த்த அடிப்படையில் நிலைமையைப் புரிந்துகொள்ளும் திறமையையும் திவான்ஜி வெகுவாகப் புகழ்ந்தார்; திறமை படைத்த ஓர் உத்தியோகஸ்தர் என்று பகிரங்க மாகப் பிரகடனம் செய்தார்.

ஆட்சிச் சீர்திருத்தம் சம்பந்தமாக முதலாவதாகக் குறிப்பிட்டிருந் தது பொது நிர்வாகத்தைப் பற்றியதாகும். பொது நிர்வாகத்துக்கான நியமனங்களுக்காகச் சட்டங்களை இயற்ற ஒரு குழுவைச் சர்க்கார் நியமித்தது. இரண்டாவதாக, ஊழலை ஒழிக்கப் புதிதாக ஓர் இலாக் காவை ஏற்படுத்துவது சம்பந்தமானது. மூன்றுவது, விவசாய முன் னேற்றம் சம்பந்தமானது. அதிலே கூறப்பட்ட முக்கியமான யோசனை, நீர் மின் திட்டத்தை உடனடியாகத் துவக்கிப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பது. அதைத் தொடர்ந்து பல தொழில்களை ஆரம்பிப்பது. கல்வித் துறையிலும் பல்வேறு சீர்திருத்தங்களுக்கான யோசனைகள் கூறப்பட் டிருந்தன.

இந்த அறிக்கை வெளிவந்ததும் தலைநகரிலுள்ள 'உத்தியோகஸ்தர் உலகம்' சுறுசுறுப்படைந்தது. உயர் மட்டத்திலே பல மாறுதல்கள் நிச்சயமாக ஏற்படப் போகின்றன. அத்தகைய மாறுதல்களில் உயர்ந்த பதவிகளைக் கைப்பற்றுவதற்கான தீவிர முயற்சி ஆரம்பமாகியது. விவசாய முன்னேற்றத்துக்கான அபிவிருத்தி இலாக்காவின் காரியதரிசிப் பதவிதான் பிரமுகர்களின் குறிக்கோளாக இருந்தது.

எல்லாரும் முயன்று பார்த்தனர். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் திறமைகள் அத்தனையும் பயன்படுத்திப் பார்த்தனர். கேசவபிள்ளை மட்டும் அசையவில்லை. அந்தச் சித்திரத்தில் கேசவபிள்ளை காணப்பட வில்லை. திவான்ஜி தம்மை வாழ்த்திப் பாராட்டிப் பேசியதால் அந்தப்

பதவி தமக்கே வந்து சேருமென்ற நம்பிக்கையினால் அவர் முயன்று பார்க்காமல் விட்டுவிட்டார் என்று சொல்வதற்கில்லை. அந்தப் பதவி தமக்கு வேண்டாமென்று கருதவும் இல்லை. அந்தப் பதவி மிகச் சிறந்த தென்பதை அவர் நன்கு அறிவார். ஆனால் எப்படி முயற்சி செய்வது? கேசவபிள்ளைக்காகச் சிபாரிசு செய்ய யார் இருக்கிறார்கள்? தலைமைக் காரியதரிசி இல்லையா? இருக்கிறார். ஆனால், அவரைப்பற்றிய திவான்ஜியுடைய கருத்துத்தான் என்ன? ஒரு மணி நேரத்தில் அறுபது தடவை அவரைப்பற்றித் திறமையற்றவன், கையாலாகாதவன் என்றெல்லாம் திவான்ஜி பேசி வருகிறார். ஏளனக் கண் கொண்டுதான் அவரை அனைவரும் பார்த்து வருகின்றனர். ஒரு பொம்மைபோல் தலைமைக் காரியதரிசியின் இருப்பிடத்தில் அமர்ந்திருக்கிறார், அவ்வளவுதான். அவ்வாறு அமர வைத்திருப்பது—கருங் கூந்தலுக்கிடையிலே வெள்ளிக் கம்பிகள் முளைக்கத் தொடங்கியிருந்தபோதிலும்—பகவதிக் குட்டியம்மாவேதான்.

நிலைமை இவ்வாறு இருக்க, தலைமைக் காரியதரிசி சிபாரிசைச் செய்தால் திவான்ஜி காது கொடுத்துக் கேட்பாரா, என்ன? இப்போது, பகவதிக் குட்டியம்மாவுக்கு இருந்து வந்த மதிப்புக்கூடப் போய்விட்டது. அப்புறம் யார் இருக்கிறார்கள்? தலைமைக் காரியதரிசி ஜி. என். நாயர் இருக்கிறாரே அவர், சென்னையிலுள்ள, திவான்ஜியாலேகூட மறுக்கமுடியாத அளவுக்குச் செல்வாக்குடைய ஒருவரைத் தமக்காகச் சிபாரிசு செய்யப் பிடித்திருக்கிறார். செக்ரடரி அலெக்ஸாண்டர் இருக்கிறாரே அவர், ரோமாபுரியில் தங்கி வருகிற தமது சகோதரரான ஒரு பாதிரி மூலமாகப் போப்பாண்டவரைக் கொண்டு வைசிராய்க்குத் தந்தியனுப்ப வைத்திருக்கிறாராம்! தம்பி என்பவர் அரண்மனையின் சொந்த நபர். இப்படிப்பட்ட பெரிய பெரிய பிரமுகர்களின் மத்தியில் கேசவபிள்ளை மிகவும் சாமானியரான ஒரு மனிதர்தான். எனவே முயன்று பார்ப்பதில் பயன் இல்லை.

முன்பு சிறிய சிறிய பதவிகளுக்கான முயற்சிகளிலேதான் கேசவபிள்ளை ஈடுபட்டு வந்தார். இன்று அப்படி அல்ல. திவான்ஜியிடமே நேரடியாகக் கேட்டுப் பார்க்கலாமா? அவர் கேசவபிள்ளையை வெகுவாகப் புகழ்ந்திருக்கிறார்? ஆயினும், திவான்ஜியிடம் ஏற்படக்கூடிய விளைவு எத்தகையதாக இருக்கும்? அதைப்பற்றி நிர்ணயித்துக் கொள்ளமுடியாது. எனவே, அந்தப் பதவிமீது ஆசை வைக்காமல், எந்தவிதமான முயற்சியிலும் ஈடுபடாமல் இருப்பதுதான் சிறந்தது என்று கேசவபிள்ளையின் பகுத்தறிவு உபதேசித்தது.

திவான்ஜி பாராட்டியதனால் கேசவபிள்ளை ஆத்ம திருப்தியடைந்திருந்தார். இந்த அந்தஸ்தே போதுமானது என்பதனால் அல்ல. சிறிது நிலத்தையும், வீட்டு மனையையும் ஊரிலே சம்பாதித்து வைத்திருக்கிறார். மூவாற்றுப்புழையிலுள்ள வனபூமி பாதிக்குமேல் தோட்டமாகிவிட்டது. ஏனைய பகுதி பண்படுத்தப்பட்டு வருகிறது. கொஞ்சம் பணமும் தம்மிடம் இருக்கிறது. நிறமையுள்ள உத்தியோகஸ்தர் என்ற பெயரையும்

பெற்றிருக்கிறார். தற்போதைக்கு இவை அனைத்தும் ஆத்ம திருப்தி அளிப்பவைதானே? மற்றவர்களைப் போன்று வீணாக ஏன் அலைந்து திரிய வேண்டும்? கேசவபிள்ளையின் சிந்தனை இவ்வாறு சென்றது.

அவருடைய வாழ்க்கையில் ஒருவிதமான ஒழுங்கும் அமைதியும் அண்மைக் காலமாக ஏற்பட்டிருக்கின்றன. இவை ஆத்ம திருப்தியின் அறிகுறிகள் தானே? தினசரி சாஸ்தா கோவிலுக்குச் சென்று வணங்கி வருகிறார். சேகர விலாசத்தில் இரவைக் கழித்து வருகிறார். மாதமொரு முறை ஊருக்குச் சென்று வருகிறார். அடிக்கடி ஜோசியரை வரவழைப்பதில்லை. நன்றாகத் தூங்க முடிகிறது.

ஒரு மாறுதல், அதைக் கேசவபிள்ளை விரும்பினாரா? இல்லை! ஒரு வார கால லீவிலே அவர் ஊருக்கும், மூவாற்றுப்புழைக்குமாகக் கிளம்பினார். அந்த நாட்களில்தான் புதிதான நியமனங்கள் நடைபெறுவது.

அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியவாறு நியமன உத்தரவு வெளி வந்தது. அன்றையத் தினம் காலையில்தான் கேசவபிள்ளை தலைநகரத்துக்குத் திரும்பி வந்தார். அவர் அபிவிருத்தி இலாக்காக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்! அவராலேயே அதை நம்பமுடியவில்லை. ஒரு நிமிஷ நேரம் வரையில் அவர் தம்பித்து நின்றுவிட்டார்.

அவர் மனம் துள்ளிக் குதிக்க முற்பட்டது. உரத்த குரலில் கூச்சல் போடவேண்டுமெனத் தோன்றியது. அந்த வீட்டிலே மாதுபிள்ளை என்ற ஒரு சமையற்காரன் மட்டுந்தான் இருந்தான். சூழ்நிலையை மறந்து, தம்மை மறந்து அவர் அடுக்களையை நோக்கி ஓடினார்.

''மாதுபிள்ளை, அதிருஷ்டம்! . . . அதிருஷ்டம்! என்னை அபிவிருத்தி இலாக்காச் செக்ரடரியாக நியமித்திருக்கிறார்கள்!''

ஒன்றுமறியாத அந்த வயோதிகர் வாயைப் பிளந்து நின்றுவிட்டார். அவருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. எஜமானனுக்கு அதிருஷ்டம் வந்திருக்கிறது என்பது மட்டும் விளங்கியது. கேசவபிள்ளை அப்போதுதான் சுற்றுப்புறத்தைப் புரிந்துகொண்டார். அவர் முகத்திலே அசடு வழிந்தது. இதற்கு முன் அவர் மாதுபிள்ளையிடம் இந்த மாதிரியான விஷயங்களைப் பேசியதில்லை. பெருமைக்கு இழுக்கு ஏற்பட்டுவிட்டதோ?

அவருடைய இந்த ஆனந்தத்திலே பங்கெடுத்துக்கொள்ள யார் இருக்கிறார்கள்? யாரும் இல்லை. அந்த வீட்டுத் தூண்கள் அவருக்கு நித்திய அறிமுகமாக நின்று வருகின்றன. 'என்னை அபிவிருத்தி இலாக்காச் செக்ரடரியாக நியமித்திருக்கிறார்கள்' என்று அவற்றிடம் சொல்லவேண்டுமென்று அவருக்குத் தோன்றியது. திடீரென்று கார்த்தியாயினியின் நினைவு வந்தது. இது என்னவென்று அவளுக்குப் புரியுமா? இந்தப் பேரானந்தத்திலே பங்கெடுத்துக்கொள்ள அவளால் முடியுமா? இவ்வாறு துள்ளிக் குதித்திட! கூச்சல் போட! ஆனந்தக் கூத்தாட! அவர் ஆனந்தக் கூத்தாடுகிறபோது அவள் கேட்பாள்; ''இதென்ன, உங்களுக்குப் பைத்தியம் புடிச்சுப் போச்சா?'' என்று.

தொடர்ந்து பல்வேறு நபர்களைப்பற்றிய நினைவுகள் அவர் மனத்திலே தோன்றின. ஹரிஹர ஐயர், கோவிந்தன் நாயர், பிரபாகரன் நாயர், மாத்யு, மாதேவன் பிள்ளை! அவர்கள் எல்லாரும் முன்பு ஒருமுறை கேசவபிள்ளையைப் பாராட்டியவர்கள்தாம். ஆனால், அவர்களால் ஆனந்திக்கமுடியுமா? முடியாது. ஆயினும் அவர்கள் மகிழ்வார்கள். திடீரென்று கேசவபிள்ளைக்குத் தம் அதிகாரத்தின் பெருமைபற்றிய நினைவு வந்தது. மாதுபிள்ளையிடம் புத்தி கெட்டுச் சொன்னதுபோல், அரசாங்கத் தலைமைச் செயலகத்தில் தம் கீழ் வேலை செய்யும் சிப்பந்திகளிடம் இப்படிச் சொல்லலாமா? கேசவபிள்ளைக்கு வேண்டியது என்ன? அவரைப்போல் மதியிழந்து கூத்தாடுகிறவர்களைத்தான். தங்கம்மா!

தொலைபேசி மணி அடித்தது. அவர் விரைந்து சென்று ரிசீவரைக் கையிலெடுத்தார். தலைமைக் காரியதரிசியின் மனைவி பேசினாள். அவள் கேசவபிள்ளையைப் பாராட்டினாள். வெறும் வார்த்தை ஜாலங்களால் அல்ல. இதயத்திலிருந்து கிளர்ந்தெழுகிற பாராட்டுதல்கள்! இந்த முன்னேற்றத்துக்கு மூல காரணமாயிருந்தவள் அவளேதான் என்று கேசவபிள்ளை நன்றியறிதலுடன் தெரிவித்துக்கொண்டார்.

ஆனால், அவருடைய பெரு மகிழ்ச்சியின் அளவை அவளால்கூடப் புரிந்துகொள்ள முடியவில்லை. எத்தனை பேர்கள் எவ்வாறெல்லாம் முயன்று பார்த்தனர்! அவர்களால் இந்தப் பதவியை அடையமுடியவில்லை. அவர்களுக்கெல்லாம் தொலைபேசி மூலமாக இந்தச் செய்தியைப்பற்றித் தெரிவித்தால் என்ன? அவர்கள் அறிந்திருப்பார்கள். ஆயினும், ஜி. என். நாயர், அலெக்ஸாண்டர், தம்பி ஆகியோரையாவது கூப்பிட்டுச் சொல்லவேண்டியதுதான். அந்த விஷயத்தில் கேசவபிள்ளைக்கு ஒருவிதமான மகிழ்ச்சி ஏற்பட்டது. மற்றவர்களைப் பரிகாசம் செய்வதில் ஏற்படுகிற ஒரு சுகம் அதிலிருந்து கிடைக்கும். 'வைசிராயின் சிபாரிசு எங்கே போய்விட்டது?' என்று கேட்பதற்குச் சமமல்லவா, அது? அவர்கள் எல்லாரும் இப்போது எப்படி இருப்பார்களோ?

திடீரென்று தொலைபேசி மணி முழங்கியது. பக்தி விலாசத்திலிருந்துதான். திவான்ஜி கேசவபிள்ளையிடம் பேசுகிறார்.

நினைத்துக் கொதித்தெழுந்த உற்சாகம், ஏனென்று தெரியவில்லை, ஒரு நிமிஷத்துக்குள் தணிந்துவிட்டது. அதற்குள் ஒரு ஜட்காவண்டி வந்து நின்றது. அவர் கிளம்பிச் சென்றார்.

எதற்காக அழைத்திருக்கிறார்? பயமாக இருக்கிறது. கொல்லவா, வளர்க்கவா? ஏதாவதொரு தவறு வாயிலிருந்து உதிர்ந்துவிட்டால், எல்லாமே நழுவிப் போய்விடும். இன்று அபிவிருத்தி இலாக்காக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த நியமன உத்தரவை வாபஸ் வாங்குவதென்று மறு நிமிஷத்தில் தோன்றியிருக்கலாம் அல்லவா? வரவழைத்துப் பேசிக்கொண்டிருக்கும்போதே யாரை வேண்டுமானாலும் முட்டாளாக்கி விடுவதற்கான மதிநுட்பம் திவான்ஜிக்கு இருக்கிறது. அந்த முறையில் தன்னை முட்டாளாக்கி, கையாலாகாதவனாகச் செய்து

இந்த உத்தரவை ரத்துச் செய்வதற்காகவா அழைத்திருக்கிறார்? கேசவ பிள்ளையின் மூளை இவ்வாறே சிந்தித்தது. இரவிலே பட்டினி போட்டுப் படுத்துத் தூங்குகிறவனை அழைத்து வந்து சோற்றுக்கு முன்னால் உட்கார வைத்த பின் அதை எடுத்து விடுவதுபோன்ற காரியத்தைத்தான் அவர் செய்யப் போகிறாரா?

கேசவபிள்ளையின் மனம் தரும சாஸ்தாவைச் சரணடைந்தது. சமீப காலமாக அந்த ஜோசியரைச் சந்திப்பதில்லை. அப்போதுகூடக் கிட்டு மாமாவின் சொற்கள் காதுகளிலே முழுங்கின:

''அவள் அதிருஷ்டக்காரிதாம்ப்பா!''

கேசவபிள்ளைக்குச் சுய நம்பிக்கை பிறந்தது. இந்தப் பதவிமீது ஆசை வைத்திருக்கவில்லை. இது தானாக வந்திருக்கிறது. தம்மிடமிருந்து விலகிப் போவதாக இருந்தால் போகட்டும். அதற்காக என்ன செய்ய முடியும்? ஆனால், அவ்வாறு நிகழ்ந்துவிட்டால் அதைத் தாங்கிக்கொள்வ தற்கான சக்தி அவருக்குக் கிடையாது.

உற்சாகம் நிமித்தமாகப் பைத்தியக்காரத்தனமாக நடந்துகொண்டது மாதுபிள்ளையிடம் மட்டுந்தான். அவர் மட்டுமே அதைப் பார்த்திருக் கிறார். ஒருவேளை அந்தத் தூண்கள், தோல்வியுற்று வருகிற தன்னைப் பார்த்து ஏளனப் புன்னகை பொழியலாம். ஜி. என். நாயர், அலெக் ஸாண்டர் ஆகியோரைக் கூப்பிட்டுச் சொல்லாமல் இருந்தது நல்லதாகி விட்டது. தனக்கு அவ்வாறு ஏதாவது நேர்ந்துவிட்டால் பகவதிக் குட்டி. யம்மா நிச்சயமாக அநுதாபப்படுவாள்.

இல்லை, அப்படியொன்றும் நேர்ந்துவிடாது. தரும சாஸ்தா அதற் கெல்லாம் அநுமதிக்கமாட்டார். கார்த்தியாயினியின் அதிருஷ்டம் தம்மை எக்காலமும் காத்து நிற்கும்.

திவான்ஜியின் முன்னிலையில் நடுங்காமல் நிற்க அவர் அரும்பாடு பட்டார். திவான்ஜியின் முகத்தோற்றம் ஆறுதல் அளிப்பதாக இருந் தது. ஆனால், உள்ளத்தினுள் வந்து துளைக்கிற அந்தப் பார்வைக்கு முன்னால் நிற்பது மெத்தக் கடினமான காரியந்தான்.

திவான்ஜி கேட்டார்: ''உத்தரவு போட்டிருப்பதைப் பார்த்தீரா?''

வினயமுடன் கேசவபிள்ளை பதில் அளித்தார்: ''உத்தரவு. பார்த்தே னுங்க.''

ஒரு விநாடிக்குப் பிறகு திவான்ஜி சொன்னார்: ''உமது ரிப்போர்ட்டின் அடிப்படையிலே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்தான் இதெல்லாம். மிகவும் பலன் அளிக்கக்கூடிய முறையிலே, விரைவிலே, செய்து முடிக்கக் கூடிய சில காரியங்களின் பொறுப்பையே, அரசாங்க உத்தரவு உம்மிடம் ஒப்படைத்திருக்கிறது. உமது பொறுப்பிலே விட்டிருக்கிற திட்டங்களின் முக்கியத்துவத்தை உம்மால் உணர்ந்துகொள்ள முடிகிறதல்லவா?''

கேசவபிள்ளை மிகுந்த கவனத்துடன் கேட்டுப் பதில் அளிக்கிறார்: ''உத் தரவு! உணர்ந்துகொள்ள முடிகிறதுங்க.''

திவான்ஜி தொடர்ந்து கூறினார்: ''உமது பாதையிலே எந்தவிதமான குறுக்கீடும் இருக்காது. தேவையான பணம் அநுமதிக்கப்பட்டுக் கிடைத்து விடும். காலதாமதமோ, வேறு தடைகளோ எதுவும் இருக்காது. உம்மிடம் ஒரு பிளாங்க் செக்கை ஒப்படைத்திருக்கிறோம் என்று வைத்துக் கொள்ளும். உமது விருப்பம்போல் செயலாற்றலாம்.''

திவான்ஜிக்கு மேற்கொண்டு கூறுவதற்கு எதுவுமில்லை. அவர் கேசவ பிள்ளைக்குப் போக விடையளித்தார். கேசவபிள்ளையின் மூச்சு ஒழுங்காக இயங்கத் தொடங்கியது. திவான்ஜி சொன்னதன் பொருள் முழுதும் அவருக்குப் புரிந்துவிட்டதா என்பது சந்தேகந்தான். வெளியே வந்த போது பிரைவேட் செக்ரடரி அவரைப் பாராட்டத் தயாராகக் காத்து நின்றிருந்தார்.

பெருக்கெடுத்த உற்சாகத்துடன்தான் கேசவபிள்ளை திரும்பி வந்தார். இந்தச் சம்ஸ்தானத்திலே தம்மைப் போன்ற அதிருஷ்டசாலிகள் யார் இருக்கிறார்கள்? அங்கே, தொலைவிலே காணப்படுகிற மூக்குந்நிமலை தன்னைக் கைவீசிக் காட்டி அழைக்கிறது. எதற்காக என்று கேட்கிறீர்கள்? அதன் உச்சிமீது ஏறி நின்று உலகத்தின் முகத்தை நோக்கி அந்தக் கேள்வியை உரத்த குரலால் வீசியெறிய! 'நான் இருக்கிறேன்!' என்று துணிச்சலாகப் பதிலளிக்க ஒரு மனிதப்பிராணி இருப்பானா? இல்லை!

எவ்வளவு ஒளிமயமான உலகம்! எங்கும் சிரிப்புக்களும், விளையாட்டுக்களுந்தான்! கடைத் திண்ணையில் அமர்ந்தவாறு அரட்டையடிக்கிற பொறுக்கிச் சிறுவர்கள்கூடச் சிரிக்கிறார்கள். தலைமீது கூடையேந்தி நடந்து செல்கிற காய்கறி விற்பவளான அந்தப் பெண், தோள்மீது மண் வெட்டி ஏந்திய தன்னோடு சேர்ந்து நடந்துவருகிற ஆடவனுடன் எதைப் பற்றிப் பேசுகிறாள்? நிச்சயமாக ஏதோ மகிழ்ச்சிக்குரிய ஒரு விஷயத்தைப் பற்றித்தான். அவர்களும் சிரிக்கிறார்கள். கடைத் தெருவிலே ஏராளமான மக்கள் குழுமி நிற்கிறார்கள். இன்று ஏதோ ஒரு பண்டிகை நாள் போல் தோன்றுகிறது. அதைக் கொண்டாடுவதற்கு வேண்டிய சாமான்களை வாங்க வந்திருக்கிறார்கள்.

* * *

கேசவபிள்ளை தம் ஜாகைக்கு வந்துவிட்டார். அவரால் அங்கே அடங்கியிருக்க முடியவில்லை. உற்சாகமும் ஆனந்தமும் பெருக்கெடுத்து வந்தன. அந்தப் பெருக்கிலே மிதந்து விளையாட யார் இருக்கிறார்கள்? எங்கே போகலாம்?

அவர் சேகர விலாசத்துக்குப் போன் செய்தார். பாகீரதியம்மாதான் பதில் அளித்தாள். தங்கம்மா அங்கே இல்லை. அன்று காரியாலயம் இல்லை. அதிகாலையிலேயே எங்கேயோ கிளம்பிச் சென்றாள். எங்கே போனாள் என்று தெரியாது.

கேசவபிள்ளை சொன்னார்: ''ஒரு நல்ல செய்தி. என்னை டெவலப்மென்டு செக்ரடரியாக நியமித்திருக்கிறார்கள்.''

பாகீரதியம்மாவுக்குப் புரியவில்லை. அவள் கேட்டாள்: ''அது என்ன வேலையப்பா?''

கேசவபிள்ளை பதில் அளிக்காமல் ரிஸீவரைக் கீழே வைத்தார்.

சொன்னால் தங்கம்மாவுக்குப் புரியும். திவான்ஜி ஒரு பிளாங்க் செக்கைத் தம்மிடம் ஒப்படைத்திருக்கிறாரென்று சொன்னால் அவளால் அதைப் புரிந்துகொள்ளமுடியும். ஆனால் . . . நாசமாப் போக . . . அவள் எங்கே சென்றிருக்கிறாள்?

அந்தச் சிறிய வீட்டுக்குள்ளே அடைபட்டிருக்கச் சகியாமல் அவர் ஒரு ஜட்காவில் ஏறிக் கிளம்பினார். அன்றைத் தினம் முழுவதும் அந்த ஜட்கா நகரத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சஞ்சரித்துக்கொண்டிருந்தது. கடற்கரையில் மட்டுந்தான் சிறிது நேரம் அது நின்றது. குதிரைக்கு ஓய்வு கொடுக்கவேண்டுமென்று வண்டிக்காரன் சொன்னபோது, ''அது சாகட்டும்'' என்றார் கேசவபிள்ளை. அவர் ஒரு கார் வாங்க நிச்சயித்துக் கொண்டார்.

மாலை நேரமாகிவிட்டது. வண்டி வழுதைக்காட்டிலுள்ள ராமவர்மா கிளப்புக்கு முன்னால் வந்து சேர்ந்தது. இலாக்கா மேலதிகாரிகள், காரியதரிசிகள், அவர்களுடைய மனைவிமார்கள் அனைவரும் கிளப்பிலே இருந்தார்கள். கட்டடமும், சுற்றுப்புறமும் ஒளியிலே குளித்து நிற்கின்றன. வண்டியை அந்த மனைக்குள்ளே செலுத்தக் கட்டளை யிட்டார் கேசவபிள்ளை.

அவர் அந்தக் கிளப்பு உறுப்பினர் அல்ல. அதன் காரியதரிசி கேசவ பிள்ளையை உறுப்பினராக்கப் பல வருஷங்களாக முயன்று வருகிறார். ஆயினும் அவர் உறுப்பினராகச் சேர்ந்துகொள்ளவில்லை. அது பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களுக்கானது என்றே கேசவபிள்ளை சொல்லி வந்தார். சில வருஷங்களாக அவர்கூட நகரத்திலுள்ள ஒரு பெரிய உத்தியோகஸ்தர்தான். ஆயினும், அவர் கூறியதன் அர்த்தம் என்ன தெரியுமா? தான் அப்படி ஆகிவிட்டவர் என்பதே. அந்த ஸ்தாபனம், பெரிய உத்தியோகஸ்தர்களுக்காகப் பிறந்து, அவ்வாறு பெரிய உத்தி யோகஸ்தர்களாகிவிட்டவர்களுக்காகவே இருந்து வருகிறது. அவர் ஒரு சாமானியர். எனவே இன்றுவரையில் அதிலே உறுப்பினராகவில்லை.

பூங்காவிலுள்ள புல்தரைமீது ஆங்காங்கு மூன்று நான்கு குழுக்களாக அமர்ந்து பிரமுகர்கள் பலர் பேசிக்கொண்டிருந்தார்கள். சற்றுத் தொலைவிலே இரு குழுக்கள் டென்னிஸ் விளையாடிக்கொண்டிருந்தன. கட்டடத்துக்குள்ளே உத்தியோகஸ்தர்களின் மனைவிமார்கள் பொழுது போக்கில் ஈடுபட்டிருந்தார்கள். கேரம், டேபிள் டென்னிஸ் ஆகிய விளையாட்டுக்கள்தான் அவர்களுடையது. சிலர் மேல்மாடிமீது ஏறி நின்றார்கள். அவர்கள் 'மாலைப் பான'த்தை அருந்தினார்கள். பெரிய வெள்ளை மேலங்கியணிந்து தலைப்பாகை தரித்துக்கொண்ட சேவகர்கள்

அலுவல்கள் நிமித்தமாக ஆங்காங்கு விரைந்து நடந்துகொண்டிருந்தனர். அன்றைத் தினம் முக்கியமான பேச்சுக்கு விஷயமாயிருந்தவர் கேசவபிள்ளைதான் என்பதிலே சந்தேகமில்லை. அவருடைய புதிய பதவியைப் பற்றித்தான்!

ஜட்கா, உள்ளேயிருந்த பெண்கள் உள்பட அனைவருடைய கவனத்தையும் கவர்ந்தது. கீழே இறங்கிய கேசவபிள்ளையை அனைவரும் அடையாளம் கண்டுகொண்டனர். பூங்காவிலிருந்தவர்களே முதலில் அடையாளம் கண்டுகொண்டார்கள். அது குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சி. பெண்கள் உள்பட, டென்னிஸ் விளையாடிக்கொண்டிருந்தவர்கள் உள்பட, அனைவரும் விரைந்து வந்து கேசவபிள்ளையைச் சூழ்ந்து நின்றனர்.

நகரில் அன்றைப் பேச்சுக்கு விஷயமாயிருந்தவர் கேசவபிள்ளை அல்லவா? அவர் ஒரு ஜனக் கும்பல் மத்தியில் அகப்படுவது இதுதான் முதல் தடவை. ஆயினும் சமாளித்துக்கொண்டார். உற்சாக மிகுதிதான் அந்தத் துணிச்சலுக்குக் காரணமாக இருந்தது. எல்லாரும் கைலாகு கொடுத்து அவரைப் பாராட்டினர். அவர் களை சொட்டும் வதனத்துடன் களைப்பின்றித் தமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டார்.

கிளப் காரியதரிசி தாமஸ் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார். ''அப்போ . . . இந்தச் சுபமுகூர்த்த வேளையிலே கேசவபிள்ளை இந்தக் கிளப்பிலே உறுப்பினராகிவிடலாம் அல்லவா?''

கேசவபிள்ளை சிரித்தவாறு ஒப்புக்கொண்டார்.

அங்கே குழுமியிருந்தவர்கள் அனைவரையும் கேசவபிள்ளைக்கு அறிமுகமில்லை. தாமஸ் அவர்களை எல்லாம் அறிமுகம் செய்து வைத்தார். தாமஸ் கூறினார்: ''இங்கே மனைவிமார்கள்கூட உறுப்பினர்கள்தான்.''

கேசவபிள்ளை சிறிது வெளிறிவிட்டார். அது அவருடைய சிரிப்பிலே கூடப் பிரதிபலித்தது.

''என் மனைவி இங்கில்லை. இருந்தால்கூடக் கிளப் வாழ்க்கையில் பங்கெடுக்கிறவளும் அல்ல. ஒரு பட்டிக்காட்டுப் பெண்.''

உதவிக் காரியதரிசியான கிருஷ்ணபிள்ளையின் மனைவியும், சூப்பிரண்டு கௌரியம்மாவும் பரஸ்பரம் முகத்தோடு முகம் பார்த்துப் பொருள் பொதிந்த புன்சிரிப்புச் சிரிப்பது கேசவபிள்ளையின் பார்வையில் பட்டது. அவர்களுடைய மனத்துக்குள்ளே தங்கம்மாவின் கதை ஊடுருவிப் பாய்ந்து சென்றிருக்கலாம்.

சர்க்கார் செயலாளர் ஜான் கேட்டார்: ''திவான்ஜியைப் பார்த்தீர்களா?''

கேசவபிள்ளை சொன்னார்: ''பார்த்தேன். இன்று காலையிலேதான் நான் ஊரிலிருந்து வந்தேன். ஒரு வாரம் லீவிலே போயிருந்தேன். காலையில் திரும்பிவந்ததும் பக்தி விலாசத்திலிருந்து போனிலே அழைத்தார்.''

தாம் சொல்வதை யாருமே நம்பவில்லைபோல் கேசவபிள்ளைக்குத் தோன்றியது.

அப்போது காரியதரிசிகளான ஜி. என். நாயர், அலெக்ஸாண்டர், தம்பி ஆகியோர் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தனர். அவர்கள் கைகளில் விஸ்கி கிளாஸ்கள் இருந்தன. அவர்கள் சுமாராகக் குடித்திருந்தார்கள். கேசவபிள்ளை அவர்கள் மூவரையும் கரம் கூப்பி வணங்கினார்.

அலெக்ஸாண்டர்தாம் முதலில் பேச்சைத் துவக்கினார். அவர் கேசவபிள்ளையைப் பாராட்டினார். அனைவரும் பரஸ்பரம் புன்சிரிப்புடன் முகத்தோடு முகம் நோக்கினர். போட்டியில் பங்கெடுத்துத் தோல்வியுற்ற ஒரு நபர், தம் தோல்வியை மறந்த பாவனையுடன் பாராட்டிப் பேசுகிறார் அல்லவா? அலெக்ஸாண்டர் கேட்டார்: ''ஒரு பெக் குடிக்கலாம் அல்லவா?''

அவர் கேசவபிள்ளையின் பதிலுக்காகக் காத்திராமல் 'போய்'யை அழைத்து விஸ்கி, சோடா ஆகியவற்றைக் கொண்டுவரக் கட்டளையிட்டார். சற்றுத் திகைப்புடன் கேசவபிள்ளை கூறினார்: ''நன்றி! நான் குடிப்பதில்லை; குடித்ததில்லை.''

தம்பிதான் அதற்குப் பதில் அளித்தார்: ''அப்புறம், நீங்க என்ன டெவலப்மென்டு செக்ரடரீங்கிறீங்க?''

எல்லாரும் சேர்ந்து சிரித்தனர்.

ஜி. என். நாயர் சிறிது பரிகாசத்தை மனத்திலே அடக்கியவாறு சொன்னார்: ''மிஸ்டர் பிள்ளை அவர்களுக்குக் கள்ளுதான் பிரியம்போல் தெரிகிறது.''

''இல்லை. நான் எந்த மதுவையும் அருந்துவதில்லை.''

கேசவபிள்ளையின் முகம் வெளிறிவிட்டது. அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கான தகுதி தமக்கில்லை என்று அவருக்குத் தோன்றியது. அங்கே குழுமியிருந்த பெண்கள்தான் அவரைக் கூடுதலாகக் குழப்பினர். அவர்களில் பலருடைய சிரிப்பிலே ஒருவிதமான ஏளனத் தன்மை கலந்திருப்பதாகத் தோன்றியது. ஏதோ ஒருவிதமான தீண்டாமை அவரை விலக்கி வைத்தது.

ஒருவர் சொன்னார்: ''இன்று ஒரு புது மெம்பர் சேர்ந்திருக்கிற நாள் அல்லவா? ஆகவே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பெக் ஆவது சப்ளை செய்யவேண்டியதுதான்.''

இன்னொருவர் அதை ஆமோதித்தார். அதற்குள் ஒரு சேவகன் விஸ்கி, சோடா ஆகியவற்றுடன் வந்து சேர்ந்தான்.

தம்பி அப்போது ஒரு யோசனை சொன்னார்: ''புதிதாகச் சேர்ந்திருக்கிற அங்கத்தினரைத்தான் நாம் உபசரிக்க வேண்டும். ஆனால் புதிதாகச் சேர்ந்திருக்கிற இந்த அங்கத்தினருக்கு ஒரு பெரிய அதிருஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அவர் சிறிய அளவிலாவது ஒரு பார்ட்டியை நடத்த வேண்டும்.''

இந்த யோசனையை பெருவாரியினர் ஏற்றுக்கொள்ளவில்லை. அவருக்குத் தான் வெகுமதி அளிக்கவேண்டுமென்பதே பொதுவான கருத்தாக அமைந்துவிட்டது.

கேசவபிள்ளை விஸ்கி குடித்ததில்லை. முன்பு இரண்டு மூன்றுதடவை பீர் அருந்திப் பார்த்திருக்கிறார். எனவே ஒரு கிளாஸ் பீரை மட்டும் அவர் எடுத்தார். பெண்களில் பலர் பீர் குடித்துப் பழகினவர்களாக இருந்தனர். அந்தப் பார்ட்டி ஹாலிலிருந்து தோட்டத்துக்கும், மாடிக்குமாகச் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து சென்றது. கேசவ பிள்ளையும், ஃபாரஸ்டு கன்சர்வேட்டரான மரகதம்பிள்ளையும் தங்கள் தங்கள் கிளாஸ்களுடன் தோட்டத்துக்குச் சென்றனர். சீமைப் பனை மரத்தடியில், உதவிக் காரியதரிசியின் மனைவியும், கௌரியம்மாவும் அமர்ந்து பேசிக்கொண் டிருந்தனர். தங்கம்மாவின் கதையைப் பற்றியே அவர்கள் பேசுகிறார்கள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும்.

கேசவபிள்ளை நேரடியாக அவர்களிடம் சென்றார். அவர் அதைக் கேட்டுவிடவும் தயங்கவில்லை:

''நீங்கள் என்னைப்பற்றித்தானே பேசிக்கொண் டிருந்தீர்கள்?''

அவருக்கு துணிச்சல் ஏற்பட்டிருந்தது. மேலதிகாரி வந்திருக்கிறார் என்ற வினயத்துடன் கௌரியம்மா சிறிது விலகி நின்றாள். பானுமதியம்மா பதில் உரைத்தாள். அவள் கவர்ச்சியான புன்சிரிப்புடன் கூறினாள்:

''உங்களைப்பற்றி ஏதாவது சொல்வதற்குண்டா?''

''இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன்.''

''அப்படியானால் உங்களைப்பற்றி நாங்க எதையும் பேசவில்லை.''

கௌரியம்மா பானுமதியம்மாவுக்குப் பின்னால் மறைந்து நின்றவாறு கூறினாள்: ''கொழந்தைங்களையும், அவங்களோட தாயாரையும் இப்படி மறைச்சு வச்சிருக்கீங்களே. இது சங்கடமான விஷயந்தானுங்க.''

கேசவபிள்ளை ஒரு முறை சிரித்துவிட்டுக் கூறினார்: ''அவங்க கிராம வாழ்க்கையைத்தான் விரும்பறாங்க.''

பானுமதியம்மா விட்டுக் கொடுக்கவில்லை.

''இல்லை! இது ஒரு கண்ணாமூச்சி விளையாட்டுதானுங்க.''

இந்தச் சந்தர்ப்பத்தில் எக்ஸைஸ் கமிஷனரும், உதவிக் காரியதரிசியும் அங்கே வந்து சேர்ந்தனர். அத்துடன் அந்தப் பேச்சு நின்றுவிட்டது.

மரகதம்பிள்ளையும், எக்ஸைஸ் கமிஷனரும் வயோதிகப் பருவத்தை நெருங்கிக்கொண் டிருந்தவர்கள். அரசாங்கத்தின் புதிய பிரகடனத் தைப்பற்றிய சில விஷயங்களைக் குறித்துப் பிள்ளையிடம் பேச வந்திருந் தார்கள். சர்க்காரின் இந்த அறிக்கை சம்ஸ்தான காங்கிரஸ் தலைவர் களின் வாயை மூடச் செய்துவிடுமென்று உதவிச் செயலாளர் கிருஷ்ண பிள்ளை தம் கருத்தைத் தெரிவித்தார். அதைப்பற்றிக் கேசவ பிள்ளைக்குச் சொல்வதற்கு ஒன்றுமில்லை.

உள்ளே ஹாலிலே அரசாங்கச் செயலாளர் அலெக்ஸாண்டர், ஜி. என். நாயர், தம்பி ஆகியோர் உரத்த குரலில் சர்ச்சை செய்துகொண் டிருந் தனர். மூவரும் நன்றாகக் குடித்திருந்தார்கள். சம்ஸ்தான காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தே தீரு மென்று அலெக்ஸாண்டர் சொன்னார். நாயர் வகுப்பினர் சேர்ந்துவிட்டதால் இயக்கம் வெற்றி

யடைய முடியுமென்பதுதான் ஜி. என். நாயர் அவர்களுடைய வாதம். அது இன்று அல்லது நாளை நிகழத்தான் போகிறது. தம்பி தலையும் வாலுமின்றி எதை எதையோ உளறிக்கொண் டிருந்தார். இன்று அவர்கள் இப்படிக் குடித்துக் குடித்து, பேசிப் பேசிப் போதை தலைக் கேறி மயக்கமுற்றுப் பிரக்ஞை இழந்து கீழே விழுந்துவிடுவார்கள்.

கேசவபிள்ளை அனைவரிடமும் விடை பெற்று ஜட்காவுக்குள்ளே ஏறிக்கொண்டார். மற்றவர்கள் யாரும் கலைந்து போகவில்லை. இன்னும் அங்கே ஒரு மதுபான மகோற்சவம் நடைபெற இருந்தது.

அது ஒரு புதிய அநுபவம். காரணம் இல்லாமலேயே கௌரியம்மா வின் அழகு, கேசவபிள்ளையின் இதயத்திலே பதிந்துவிட்டது. அந்தப் பெண்ணிடம் ஒரு பிரத்தியேகத் தன்மை நிலவியது. சிறிது நேரம்கூட அவளிடம் பேசிக்கொண் டிருக்க அவர் விரும்பினர். ஆனால் அப்போது தான் இரண்டு கிழவர்கள் அவர்களுக்கிடையில் வந்து நுழைந்தனர்.

கேசவபிள்ளை நேரடியாகச் சேகரவிலாசத்துக்கே சென்றார். வழக்கத்தைவிடச் சற்றுத் தாமதமாகவே இன்று சென்றார். தினசரி அவர் அங்கே சென்றுகொண் டிருந்தார். தங்கம்மா அவருக்கு இணங்கியே நடந்துகொண்டு வந்தாள். அந்த உறவு தெளிவாக உருவாகிவிட்டதுபோல் இருந்தது. இருவருக்கும் அந்த உறவைப்பற்றி எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆயினும், தன் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒருவராகக் கேசவபிள்ளையைத் தங்கம்மா எண்ணி வருகிறாளா? கேசவபிள்ளைக்குக்கூட அந்தச் சந்தேகம் இருக்கிறது. அவள் அவருக்கு இணங்கி நடந்து வருகிறாள் என்பது உண்மை. கேசவ பிள்ளை நேரம் கழித்துச் சென்றாலும், ஏன் நேரமாயிற்றென்று அவள் கேட்கமாட்டாள், அவருக்காகக் காத்திருப்பாள். அவள் தமக்கு மட்டும் சொந்தமானவள் என்ற எண்ணம் அவருக்கு இதுவரை ஏற்பட்ட தில்லை. ஆனால் இப்போது தங்கம்மா தமக்கு மட்டும் சொந்தமாயிருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஆம், தமக்கு மட்டும் சொந்த மானவள்! ஏன் கூடாது? அந்த வீட்டைக் கேசவபிள்ளைதான் கட்டிக் கொடுத்தார். அவள் தவறி நடந்தவளாக இருந்தபோதிலும் அவளை மீண்டும் ஏற்றுக்கொண் டிருக்கிறார் அவளுக்குக்கூட ஒரு கடமை இருக்கிற தல்லவா? அந்த முறையிலே தங்கம்மா கேசவபிள்ளைக்கு மட்டும் சொந்தமாயிருக்கவேண்டும்.

கிளப்பில் உள்ளவர்கள் அனைவரும் அவரைப் பாராட்டினர்கள். அது வெறும் ஒரு சடங்குதான். மனம் கனிந்த பாராட்டுதலா, அது? தமது பதவி உயர்விலே உள்ளூற ஆனந்தம் கொள்ள யாராவது இருக்கிறார்களா? காலையில் உள்ளத்தில் உதயமான அந்த ஆசை இப்போது மீண்டும் மிகத் தீவிரமாகத் தலைதூக்கிற்று. அவர் எல்லா ரிடமிருந்தும் அப்பாற்பட்டு நிற்கிற ஒரு தனி நபர்தானே? அவருடைய மகிழ்ச்சியிலே பங்கெடுத்துக்கொள்ள யாருமே இல்லை. துக்கத்திலேகூடப் பங்கெடுத்துக்கொள்ள யாரும் இல்லையா? இல்லை! அவர் தனி மனிதர்!

ஒரு சந்தர்ப்பத்தில் தங்கம்மா கேசவபிள்ளையுடன் சேர்ந்து மகிழ்ந்திருந்தாள். அவர் முன்னேறியதால்தான் அவளுக்கு இந்தச் சேகர விலாசம் என்ற பங்களா கிடைத்திருக்கிறது. மேற்கொண்டும் ஏற்பட்டால் அதிக லாபத்தைப் பெற முடியுமென்ற எண்ணமாவது அவளுக்கு இருக்கவேண்டாமா? லாபத்தின் அடிப்படையிலாவது அவள் அவருடன் சேர்ந்து மகிழவேண்டாமா?

ஜட்கா அங்கணத்தில் வந்து நின்றது. வரவேற்க அவளைக் காணவில்லை. அவர் வரவேற்பு அறைக்குள்ளே சென்றார். ஓர் இளைஞன் அங்கே நின்றான். கேசவபிள்ளை அவனை உற்றுப் பார்த்துக் கேட்டார்: ''நீ யாரப்பா? உனக்கு இங்கே என்ன வேலை?''

இளைஞன் சற்றுப் பதற்றமடைந்தவன்போல் காணப்பட்டான்.

அப்போது தங்கம்மா அங்கே வந்து சேர்ந்தாள். அவள்தான் கேள்விக்குப் பதில் அளித்தாள்.

''என்னோட உறவினன்.''

''ஊ. . .ம்ம். . .'' கேசவபிள்ளை அழுத்தமாக முனகினார்.

பாகீரதியம்மா அங்கே வந்து சேர்ந்தாள். தெளிந்த சிரிப்புடன் அவள் கேட்டாள்: ''உங்களுக்குப் பெரிய உத்தியோகம் கிடைச்சுதுன்னு சொல்றுங்களே. . . உண்மைதானு?''

இந்த அளவிலாவது உண்மை உள்ளத்தை அவர் அன்றைத் தினம் வேறு எங்கேயும் பார்க்கவில்லை. இந்த அம்மாவாவது மகிழ்கிறளே! இத்தகைய ஒருத்தியைத் தேடியே கேசவபிள்ளை இங்கே வந்திருந்தார். ஆனால் அவர் மற்றோர் இக்கட்டான நிலைமையிலே இங்கே அகப்பட்டுக் கொண்டார். பாகீரதியம்மாவுக்கு அது புரிந்து விட்டது. கேசவபிள்ளை, அவள் கேள்விக்குப் பதில் அளிக்கவில்லை.

நெருக்கடியான ஒரு சந்தர்ப்பந்தான் இது என்று பாகீரதியம்மா அறிந்துகொண்டாள். தங்கம்மாவுக்கும், கேசவபிள்ளைக்குமிடையில் ஒரு சொற்போர் எந்த நிமிஷத்திலும் வெடித்துவிடலாம். இருவரும் பொருமியவாறு நின்றுகொண்டிருந்தனர். அத்தகைய ஒரு வெடிப்பினால் அவர்கள் பரஸ்பரம் விலகிப் போய்விடலாம். இக்கட்டான நிலைமைதான். இந்தக் கெடுபிடி நிலைமையைச் சற்றுத் தணிக்க எண்ணிப் பாகீரதியம்மா கூறினாள்: ''நின்னுக்கிட்டிருக்கிறியே தம்பீ, உட்காரு! அப்புறம் அந்த உத்தியோகம் என்ன, சம்பளம் என்ன? அதைப் பற்றியெல்லாம் சொல்லு!''

கணக்கு சொல்லித் தீர்க்கத் தயாராகி நிற்பவர்போல் கேசவபிள்ளை நின்றுகொண்டிருந்தார். அதை அங்கீகரிக்கத் தயாரானவள் போல் தங்கம்மா காணப்பட்டாள். அவளுக்கு எந்தவிதமான மனக் கிளர்ச்சியும் இருப்பதாகத் தோன்றவில்லை. இந்த நேரத்தில் அந்த இளைஞன் எப்படியோ அவ்விடமிருந்து நழுவி மறைந்து விட்டான்.

ஓர் இளைஞன் அங்கே இருந்தான் என்பதற்காகக் கேசவபிள்ளை இவ்வளவு தூரம் கொதிப்படைய வேண்டிய அவசியம் என்ன? ஒருவேளை, தங்கம்மா சொன்னதுபோல், அவன் அவளுடைய உறவினனாக இருக்கலாம் அல்லவா? நிர்ப்பந்தமாக ஒரு வாழ்க்கையை ஏற்றுக் கொள்ளக் கூடியவள் அல்ல தங்கம்மா. அவர்களுடைய இப்போதைய வாழ்க்கை எந்தவிதமான நிபந்தனையும் இல்லாமல்தான் துவக்கப்பட்டிருந்தது. பழைய தவறுகளையெல்லாம் மறந்து மன்னித்துவிட வேண்டுமென்று அவள் கேட்டுக்கொள்ளவில்லை. மேற்கொண்டு தவறுகள் ஏற்படாதென்று அவள் வாக்குறுதி அளிக்கவும் இல்லை. தான் அவருக்கே சொந்தம் என்றும் சத்தியம் செய்யவில்லை. கேசவபிள்ளை அவ்வாறெல்லாம் கோரவும் இல்லை. ஏன்? அந்த வீட்டைக் கட்டிக் கொடுத்தது கூட அவளுடைய கோரிக்கையின்படி அல்ல. அப்படியிருக்க, இந்த ஆத்திரமும், மனக்கிளர்ச்சியும் நியாயமானவைதானா?

ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் கேசவபிள்ளை அங்கிருந்து சென்றார். தங்கம்மாவின் தோற்றத்திலே எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. பாகீரதியம்மா கவலையுற்றாள். அவர் ஆத்திரப்பட்டுத்தான் சென்றிருக்கிறார்.

அம்மா கேட்டாள்: ''என்னடியம்மா இது? அவன் கோவிச்சுக்கிட்டுப் போறானே? சண்டையா?''

மகள் அலட்சியமாக விடையளித்தாள்: ''எனக்கு என்ன தெரியும்?''

அம்மாவால் சகித்துக்கொள்ள முடியவில்லை. ஆத்திரமும் சோர்வும் கொண்ட அவள் சொன்னாள்: ''ஏண்டியம்மா இப்படிப் பண்ணறே?''

தயக்கமின்றிக் கேட்டாள் தங்கம்மா: ''ஊம்? நான் என்ன பண்ணறேன்?''

''என்ன பண்ணறேன்னா, கேக்கறே? மானத்தோடு மரியாதையோடு உனக்கு வாழத் தெரியாது. அதுதான் அந்தப் பையன் இங்கே வர ஆரம்பிச்சபோதே நான் சொன்னேன்; இது நமக்கு ஆகாது, தகராறுயிடும்னு. இப்போ பார்த்தியல்ல? உனக்கு நாணமும் மானமும் இல்லாமெப் போச்சேடீ. என்னாலே இதெல்லாம் பார்த்துக்கிட்டிருக்க முடியாது. நான் போறேன்.''

தங்கம்மா எந்தவிதமான உணர்ச்சி மாறுதலுமின்றிக் கூறினாள்: ''போ! நானு வேணுங்கறேன்?''

பாகீரதியம்மாவால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ''அப்புறம் உன்னோட கூத்துக்கெல்லாம் யாரும் குறுக்கிட மாட்டாங்கல்ல? நீ சொல்லுவேடீ! உங்கப்பாவையே அடிக்கத் தயாரா நின்னவளாச்சே நீ? எனக்கெல்லாம் தெரியுமடீ! பத்மனுபக் கடவுளே, இந்தப் பொண்ணு இப்படியாயிட்டாளே!''

பாகீரதியம்மா அழுதுவிட்டாள். தங்கம்மாவுக்குக் கிஞ்சித்தும் சஞ்சலம் ஏற்படவில்லை.

அந்த இரவிலேயே, பாகீரதியம்மா மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு அந்த வீட்டிலிருந்து கிளம்பிச் சென்றாள். போகவேண்டா மென்று தங்கம்மா சொல்லவில்லை.

பாகீரதியம்மா வெளியே போனதும் அந்த இளைஞன் தோன்றினான். அவன் திகைப்புற்றிருந்தான். ஒளி வீசுகிற ஒரு புன்னகையுடன் தங்கம்மா அவனை நோக்கி நடந்தபடி கூறினாள்: ''தொல்லைகள் எல்லாம் அடியோடு நீங்கிப் போச்சு!''

அத்தியாயம் 20

சுதந்தரத் திருவாங்கூர்

மிக முக்கியத்துவம் வாய்ந்த நிமிஷங்கள்! கேசவபிள்ளை அறைக்குள்ளே அங்குமிங்குமாக நடந்துகொண்டிருந்தார். மற்றவர்கள் பேச்சு மூச்சின்றிச் சிலைகள்போல் நின்றிருந்தனர். பூரண நிசப்தம் நிலவியது. வெளியிலிருந்து பறந்து வந்து விளக்கைச் சுற்றி வட்டமிட்ட ஒரு வண்டின் ரீங்காரந்தான் அந்த நிசப்தத்தைக் குலைத்தது.

அதிகார வல்லமை படைத்த ஓர் உத்தியோகஸ்தரின் தோற்றமும், கம்பீரமும் இப்போது கேசவபிள்ளையிடம் காணப்பட்டன. இன்று அவர் பழைய கேசவபிள்ளை அல்ல. முன்பெல்லாம் அவரிடத்திலே ஒரு வித எளிமைத் தோற்றம் இருந்தது. இப்போது அதெல்லாம் மறைந்தது. கன கம்பீரம், இச்சாசக்தி, ஆதிக்க உணர்வு ஆகிய வையே இப்போது அவரிடத்திலே காணப்படுகின்றன. அவர் ஆட்சி செலுத்துபவர். கட்டளையிடுகிற சக்தி அவரிடம் உண்டு. அங்கே நிற்பவர்களிடம் ஏதோ முக்கியமான கட்டளை ஒன்றைப் பிறப்பித்தார். அவ்விதம் கட்டளையிடும் திறமை அவருக்கு இருந்தது. அவருடைய குரல்கூட அதிகாரத் தொனியாக மாறிவிட்டது.

கேசவபிள்ளை சிரத்தை உயர்த்தி, அவர்கள் முகத்திலே பார்வையைச் செலுத்தியவாறு கேட்டார்: ''என்ன சொல்கிறீர்கள், மிஸ்டர் மாத்யூ? ஒரு முடிவுக்கு வரவேண்டிய கட்டம் இது.''

அவர்கள் நால்வரும் தளர்ந்து நின்றனர். அவர்களால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. முடியவும் முடியாது. அவர்கள் யோசிக்கும் திறனை இழந்து விட்டிருந்தனர். நடைப்பிணங்களாக நின்றுகொண்டிருந்தனர். இதெல்லாம் கேசவபிள்ளைக்கு நன்றாகத் தெரியும்.

கேசவபிள்ளை தொடர்ந்து கூறினார்: ''சர்க்கார் இறுதியாக எடுத்துக் கொண்ட தீர்மானம் இது. நாட்டுப் பற்று என்றால் என்னவென்று மக்களுக்குத் தெரியுமா என்று அறியவேண்டியிருக்கிறது. மைதானங்கள் தோறும் நாட்டுப் பற்று என்று கூச்சல் போட்டுக்கொண்டு திரிவதல்ல நாட்டுப் பற்று என்பது. அது ஒரு கள்ள நாணயம். உண்மையான நாட்டுப் பற்று யார் யாருக்கெல்லாம் இருக்கிறது என்பதை அறிய வேண்டும். அதற்கான தருணம் வந்திருக்கிறது.''

ஒரு விநாடிக்குப் பிறகு சுயமாகப் பேசிக்கொள்வதுபோல் தொடர்ந்து பேசினார்: ''அரசனிடமும், சம்ஸ்தானத்திடமும் பற்றுதல் யார் யாருக்கு இருக்கிறதென்பதைத் திட்டவட்டமாக அறியவேண்டும். இந்த இரண்டு

பற்றுதல்கள்பற்றிச் சம்ஸ்தானத்தின் எல்லா இடங்களிலும் பேசப்பட்டு வருகின்றன.''

திரும்பவும் அங்கே சிறிது நேரத்துக்கு நிசப்தம் நிலவியது. மறுவிநாடி உடனேயே பதில் கிடைக்கவேண்டுமென்ற கெடுபிடியான தொனியில் கேசவபிள்ளை கேட்டார்: ''முடிவு எடுங்கள்! உம்! என்ன சொல்கிறீர்கள்?''

உண்மையிலேயே அந்த நான்கு பேராலும் எந்தப் பதிலையும் சொல்ல முடியவில்லை. நாக்கு உலர்ந்து போயிற்றென்றே சொல்லலாம். அறிவை இழந்தனர்; சக்தியை இழந்தனர்! ஆனால் காரியதரிசியின் ஆக்கினை மிகக் கடுமையாக இருந்தது. ஏதாவதொரு முடிவைச் சொல்லியே ஆகவேண்டும்.

மாத்யூ சொன்னார்: ''நாங்க என்ன சொல்வதுங்க?''

அது காதில் விழவில்லை. புரியவில்லை என்று பொருள்படும்படியாக கேசவபிள்ளை கேட்டார்: ''இம் . . . என்ன?''

அவர்கள் நால்வரும் ஒருமுறை நடுங்கினர். ஓர் இந்திரஜாலக்காரனின் மாய சக்தியில் கட்டுண்டவர்கள்போல் நின்றனர். அவர் சொல்வதை அவர்கள் ஒருவேளை செய்யலாம். ஆனால் அது தன் நினைவுடன் செய்கிற காரியமாகாது. கேசவபிள்ளையின் செல்வாக்கு அந்த அளவில் வளர்ந்திருக்கிறது. அவரிடம் துணிச்சல் உண்டு, யாரையும் எதை வேண்டுமானாலும் செய்ய வைப்பார்.

* * *

கேசவபிள்ளை அபிவிருத்தி இலாக்காக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டுச் சில வருடங்களாகிவிட்டன. நியமித்த சில மாதங்களுக்குள் பல நிகழ்ச்சிகள் நடந்துவிட்டன. அபிவிருத்தித் திட்டங்களைப்பற்றிய அரசாங்கத்தின் பிரகடனத்துக்குப் பலன் ஏற்படவில்லை என்று சொல்ல முடியாது. குறிப்பாகக் கல்விச் சீர்திருத்தத் திட்டத்துக்கு!

இலவசமானதும், கட்டாயமானதுமான ஆரம்பக் கல்வியை அரசாங்கமே ஏற்று நடத்தும் திட்டம் காங்கிரஸுக்குள்ளே ஆழமான பிளவை ஏற்படுத்திவிட்டது. அது அந்த ஸ்தாபனத்துக்குள் வகுப்புச் சண்டையைத் தோற்றுவிக்கச் செய்தது. உறுதி மிக்க முற்போக்குவாதிகள் காங்கிரஸுக்குள் முன்பே இடது சாரியினராகச் செயல்பட்டு வந்தனர். கல்விச் சீர்திருத்தத் திட்டத்தைக் கொள்கையளவில் காங்கிரஸ் அங்கீகரிக்கத் தயங்கியதை முன்னிட்டு அவர்கள் அந்த ஸ்தாபனத்தை விட்டு விட்டுத் தொழிலாளிகளை ஸ்தாபனரீதியாக ஒன்று சேர்க்கும் வேலையில் ஈடுபட்டனர். இவ்வாறு, காங்கிரஸ் கணிசமான அளவில் பலவீனமடைந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தைச் சர்க்கார் வீணுக்கவில்லை. தலைமைச் செயலகத்தின் மூலைமுடுக்குகளில் கரையான் அரித்துக் கிடந்த ஃபைல்களை

எல்லாம் கேசவபிள்ளை வெளியிலே எடுக்க வைத்தார். மிஸ்டர் பிலிப்பு உட்பட, காரியதரிசிகள் பலரிடமிருந்து எல்லாக் காரியங்களுக்கும் தடைகள் ஏற்பட்டு வந்தன. ஆனால் கேசவபிள்ளையின் பாதையில் குறிப்பிடத்தக்க அளவிலே தடைகளை ஏற்படுத்த யாராலும் முடியவில்லை. கேசவபிள்ளை எதை எழுதி அனுப்பினாலும், பக்தி விலாசம் அதை உடனடியாக அங்கீகரித்துவிடும். ராமசந்திரன் நாயர் உட்பட நான்கு பேர்களைத் தாற்காலிக வேலை நீக்கம் செய்தது கேசவபிள்ளை எழுதிய ரிப்போர்ட்டின் அடிப்படையிலேதான் என்று கூறினார்கள். அதன் பின் அனைவருக்குமே பயம் ஏற்பட்டுவிட்டது. ஒரு சில மாதங்களுக்குள்ளே நீர் மின் திட்ட வேலை துவக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஓர் உர உற்பத்தித் தொழிற்சாலை உட்பட மூன்று நான்கு பெரிய தொழிற்சாலைகளின் நிர்மாண வேலையும் ஆரம்பமாயிற்று. எல்லா வேலைகளையும் ஒழுங்காக ஒருங்கே செயற்படுத்தக் கேசவபிள்ளையால் முடிந்தது.

காங்கிரஸ், கேசவபிள்ளைக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்களைக் கிளப்பிவிட்டது. உர உற்பத்தித் தொழிற்சாலையின், தனியார்த் துறைக்கு ஒதுக்கியிருந்த பங்குகளில் கணிசமான பகுதி கேசவபிள்ளையின் மனைவி பேரில் வாங்கப்பட்டிருக்கிறதாம். அதைப் பணம் கொடுத்து வாங்கவில்லையாம், இயந்திரங்களை விநியோகிக்கிற கம்பெனியினர் அளித்து வருகிற கமிஷன் தொகைதான் அந்தப் பங்குகளாக மாறியதாம். ரப்பர்த் தொழிற்சாலையில் அவருடைய மைத்துனருக்குப் பங்குகள் இருந்து வருகின்றனவாம். நாஞ்சில் நாட்டிலே நிலம் வாங்கப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய பணம் எங்கிருந்து கிடைத்தது? தொழில் மயமாக்குவது சம்பந்தமான திட்டத்துக்காக வரவழைத்த நிபுணர்களின் திறமைபற்றியும், அவர்கள் வாழ்க்கையிலுள்ள முற்காலச் செய்திகள் பற்றியும் ஆய்ந்தறியவேண்டுமென்று காங்கிரஸ் பிரச்னையை எழுப்பியது. அவர்களில் பலரும் ஊழல் மன்னர்களாக இருந்திருக்கிறார்களாம். நீர் மின் திட்டம் மிகப் பெரிய தோல்வியிலே முடியுமாம். ஆங்காங்கு அமலாக்கப்படுகிற சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அனைத்தும் கவைக்கு உதவாதவையாம். சுருங்கக்கூறின், காங்கிரஸ் அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தையும் எதிர்த்தது. ஆனால், என்னவெல்லாமோ நடை பெற்று வருகின்றன என்ற எண்ணம் மக்கள் மத்தியிலே பரவலாக இருந்து வந்தது.

கேசவபிள்ளை, அவருடைய உற்றார் உறவினர்களின் சொத்துக்களை மதிப்பீடு செய்யவேண்டுமென்றும், அவற்றைப்பற்றி விசாரணை நடத்த வேண்டுமென்றும் முன்னணியில் ஊர் ஊராகச் சென்று பிரசாரம் செய்து வந்தவரும், காங்கிரஸ் செயற்குழு உறுப்பினராக இருந்தவருவான மிஸ்டர் மாத்யூதான், இன்று, மானம், ரோஷம், தீவிரம், திறமை ஆகிய அனைத்தையும் இழந்து கேசவபிள்ளை முன் வாய் பொத்தியவாறு நின்றிருந்தவர். அன்றைத் தினம் மாத்யூவின் ஒரே குறிக்கோள் கேசவ

பிள்ளையின் ஊழல்களை அம்பலப்படுத்துவது என்பதே. மாத்யூ ஒரே எதிரி! ஆனால், கேசவபிள்ளை கெட்டிக்காரன் என்பதைத் திவான்ஜி புரிந்து கொண்டார். கேசவபிள்ளையின் முழுத் திறமையையும் காண முடிந்தது இப்போதுதான்.

இப்போது காங்கிரஸுக்குப் பெரிய சரிவுகூட ஏற்பட்டிருந்தது.

அந்த ஸ்தாபனத்தின் நெடுநாளையப் போராட்ட சரித்திரத்திலே பலர் பல கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் இரையாகியிருந்தனர். அதை ஒரு ஸ்தாபனமென்று சொல்வதைவிட, மக்கள் இயக்கமென்று சொல்வதே சரியானது. அது சம்ஸ்தானம் முழுதையும் தழுவிய இயக்கம்; விதிமுறைகளால் மட்டும் கட்டுப்படுத்திவிட முடியாதது; கட்டுறுதி யற்றது! எனவே, அந்த இயக்கத்தில் விரும்பத்தகாத பல நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. காங்கிரஸ் நிதி வசூல் செய்தது. அந்தப் பணம் செலவும் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், ஒழுங்கான வரவு செலவு கணக்கு அதற்கு ஒருபோதும் இருந்ததில்லை. பலர் நிதி வசூல் நடத்தி யிருக்கின்றனர். பிரமுகர்களுக்குக் கூடுதலான தொகை கிடைக்கும். கொடி பிடிக்கிற ஊழியனுக்குக் குறைவான தொகை கிடைக்கும். அந்தத் தொகைகளிலே கொஞ்ச நஞ்சம் இயக்கத்துக்காகச் செலவு செய் திருப்பார்கள். ஊழியர்களில் சிலர், அந்த அறைகூவலைக் கேட்டுத் தமது சொந்தத் தொழில்களை விட்டு வந்தவர்கள்; அனைத்தையும் இழந்து நிற்பவர்கள். ஊழியம் புரிவதற்காகவாவது அவர்கள் சாப்பிடவேண் டாமா? உயிர் வாழவேண்டாமா? இந்த வகையில், வசூலில் ஒரு பகுதி செலவாயிருக்கும். இந்த வசூலினால் சொத்துச் சேர்த்தவர்களும் இருக் கிறார்கள். ஆனால், எதற்கும் கணக்கு வைத்தல் என்பது துவக்கத்தி லிருந்தே இல்லாமல் இருந்தது.

தேர்தல் நிதி வசூலைப்பற்றி எண்ணற்ற புகார்கள் கிளம்பின. ஏதோ ஒரு தலைவன் வீடு கட்டினானும். இன்னொருவன் நிலத்தை வாங்கினானும். வேறொரு தலைவன் தன் தனயனை இங்கிலாந்துக்குப் படிக்க அனுப்பி னானும். தேர்தல் நடந்து முடிந்தபின் நடைபெற்ற நிர்வாகக் குழுக் கூட்டத்தில் நிதி வசூல் சம்பந்தமாகப் பெரிய விவாதம் நடந்தது. தோல்வியுற்ற வேட்பாளர்கள்தான் பெரிய குற்றச்சாட்டுக்களைக் கொண்டு வந்தனர். அவர்களுக்காக எதையும் செய்யவில்லையாம்! பத்திரிகைகளில் குற்றச்சாட்டுக்களும், எதிர்க் குற்றச்சாட்டுக்களும் வந்தன. அனைத்தும் ஊழலைக் கிளப்பும் பிரச்னைகள்! காங்கிரஸின் நிதி வசூல் பிரச்னை அங்காடிகளிலே பாட்டாகப் பரிணமித்தது. யாருக்கும் யார்மீதும் நம்பிக்கை கிடையாது. கதர் அணிந்து நடப்பவர்களை மக்கள் ஏளனக் கண் கொண்டு பார்க்கத் தொடங்கினர். காங்கிரஸ் காரன் என்றால் வாழ வழியின்றி நிதி வசூல் நடத்துகிறவன் என்று மக்கள் சொல்லுமளவுக்கு இழிந்துவிட்டான். இந்த நிலைமை காங்கிரஸ் காரர்களைத் துன்புறுத்திற்று. அவர்களில் ஒருவராக இருந்தார் மாத்யூ.

மாத்யூ பொதுவாகப் பணவசதி படைத்தவர். நல்ல வசதியுள்ள இடத்தில் மணம் செய்துகொண்டவர். காங்கிரஸின் சிறந்த உறுதிமிக்க ஆரம்பக் கால ஊழியர். நிர்வாகக் குழு உறுப்பினராக இருந்து நீண்ட நாட்கள் உழைத்திருக்கிறார். மாத்யூ காங்கிரஸுக்காகப் பணியாற்று வதை மனைவியின் உறவினர்கள் விரும்பவில்லை. அவர்களில் சிலர் கேரளத்துக்கு வெளியே உயர்ந்த அரசாங்க உத்தியோகஸ்தர்களாகப் பதவி வகித்தவர்கள். வேறு சிலர் வெள்ளையரின் கம்பெனிகளிலே பெரிய தொகை சம்பளமாகப் பெற்றவர்கள். மாத்யூ அரசியலிலே செயலாற்று வதை மனைவியும் விரும்பவில்லை. ஆனால், அந்தத் தேசபக்தன் அதை எல்லாம் பொருட்படுத்தவில்லை. அவர் சிறைவாசம் அநுபவித்திருக் கிறார். அடி உதை பட்டதற்குக் கணக்கே கிடையாது. மாத்யூவின் கதை பொறுப்பாட்சிப் போராட்டத்தின் இதிகாசமாகும். தடை உத்தரவுகளை மீறியதையும், தலைமறைவாக இருந்ததையும் முன்னிட்டு அவருடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. மாத்யூ வின் பெயரை மக்கள் அன்புடன் நினைவுபடுத்திக்கொள்வார்கள். அந்தத் தேசபக்தனின் வீர வரலாறுகள் எத்தனை எத்தனையோ!

நீண்டதொரு சிறைவாசத்துக்குப் பின் உடல் நலம் குன்றி மாத்யூ வெளியே வந்தார். அதற்குள்ளே மனைவி, குழந்தைகளை அழைத்துக் கொண்டு பிறந்தகத்துக்குச் சென்று விட்டாள். சொத்துக்கள் அனைத்தையும் அரசாங்கம் பறிமுதல் செய்துகொண்டது. பிறந்தகத்தார் ஓர் ஓட்டாண்டியுடன் அவளை அனுப்பி வைக்கத் தயாராக இருக்கவில்லை. அந்த ஓட்டாண்டி அவளை எங்கே அழைத்துச் செல்வார்? மீண்டும் என்றைக்கு அவர் சிறைக்குச் செல்வார் என்றும் அந்தப் பெண்ணுக்குத் தெரியாது. மாத்யூவுக்கும் தெரியாது. எல்லாரும் ஒரு நிபந்தனையை வற்புறுத்திக் கூறினர்: 'மனைவி மக்களைக் காப்பாற்றுவதாக உறுதியளிக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்துமுடிக்கும் வரையில் அன்னம்மா பிறந்தகத்தில் தங்கியிருப்பாள்.' போதும். அத்தகைய ஒரு பாதுகாப்பான நிலைமை ஏற்பட்டபிறகு, அவளை அனுப்பிவைப்பதாக மாமனாரும் மைத்துனர்களும் சொல்லிவிட்டார்கள். அவர்கள் சொல் வதை மறுத்துக் கூறுவதற்கில்லை. உண்மைதானே? மனைவி மக்கள் வந்தால் அவர்களை எங்கே தங்கவைப்பது? சாப்பாட்டுக்கு என்ன செய்வது? என்ன இருக்கிறது? போலீஸ் அவரை எப்போது மீண்டும் கைது செய்து அழைத்துச் செல்லுமென்று யாருக்கும் தெரியாது. ஒரு நாள் காலையிலே எழுந்து வெளியே சென்றால், அப்புறம் எப்போது அவர் திரும்பி வருவார் என்பதே புரியாத மாத்யூ, நிலைமையை நன்கு உணர்ந்து கொண்டார். எனவே அவருக்கு மனைவியிடமோ, மாமனாரிடமோ, மைத்துனர்களிடமோ கோபம் ஏற்படவில்லை.

இனிமேல் எப்படி வேண்டுமானாலும் செயலாற்றலாம். ஒரு சுதந்தரப் புருஷர். ஆனால், அது ஓர் அழுத்தமுள்ள 'ஆனால்' தான். பொதுஜனத் தொண்டின் உற்சாகத்தின் மத்தியிலே சில சந்தர்ப்பங்களில் திடீரென்று

அவருடைய தெளிந்த உள்ளத்தில் கலக்கம் ஏற்படுவதுண்டு . . . அன்னம்மா! அன்புமயமான பெண்! தம்மைப் பின்பற்றி நடப்பவள்! ஆனால், அவளும் சில சொல்கிறாள். அது உண்மையுங்கூட. பாவம்! அவள் அவ்வாறெல்லாம் கஷ்டப்பட்டதால் சொல்லிவிட்டாள். சொல்ல வேண்டிய நெருக்கடியில் மாட்டிக்கொண்டாள். மாத்யூவைக் குப்புறப் படுக்க வைத்து, அவருடைய முதுகில் போலீஸார் தடியால் தாக்கியிருக் கிறார்கள். எதற்கென்று கேட்கிறீர்கள்? காங்கிரஸ் தலைவர் திருடன் தான் என்று சொல்ல வைப்பதற்காக. மாத்யூ சொல்லவில்லை. இனிமேல் போலீஸார் அவ்வாறு முயன்று பார்த்தால், அன்னம்மா தம்மைவிட்டுச் சென்றதுபோல், தாம்கூடத் தம் தலைவரை விட்டுச் செல்லும் நிலைமை ஏற்படலாம். அத்தகைய சந்தேகம் மாத்யூவின் மனத்தில் தோன்றுவ துண்டு. சில சமயங்களில் அந்தச் சந்தேகம் பயமாகக்கூடப் பரிணமிப்ப துண்டு. அவருக்குத் தம்மீது நம்பிக்கை இல்லை. அன்னம்மாவின் நீர் நிறைந்த கண்கள் அவர் முன்னால் தோன்றுகின்றன. குழந்தைகள் அவர் பக்கம் நெருங்கி வருவதில்லை. இல்லை! மன உறுதியை இழக்க லாகாது.

வீறு கொண்டார் மாத்யூ. உணர்ச்சி கொந்தளித்தது, அது கடிவாள மற்ற குதிரைபோல் அவரை எங்கோ கொண்டு சென்று சேர்த்தது. எதிர் காலத்தைப்பற்றி எண்ணிப் பார்க்க முடியாதவராகிவிட்டார். எதையும் செய்துவிடும் ஒருவித வெறி தலைக்கேறியிருந்தது. அந்த நிலைமையிலே அவர் எதைப்பற்றியும் யோசிக்கவில்லை. அந்த ஆவேசம் தணிந்துவிடா மல் செயலில் இறங்கினார்.

தேர்தல் காலத்திலும் அதற்குப் பின்பும் மாத்யூ சூறாவளிக் காற்றுப் போல் செயல்பட்டார். பட்டிக்காட்டில் அவர் பேசினாலும் மக்கள் அதைக் கேட்க ஆயிரமாயிரமாக வந்து குழுமிவிடுவார்கள். மாத்யூ தைரியமாக எதையும் மனம் திறந்து பேசுவார். கடுமையாகப் பேசத் தான் அவருக்குத் தெரியும். அதனால்தான் கேசவபிள்ளை, மாத்யூவின் பகைவரானார். காங்கிரஸின் முதல் எதிரியாகத் தோற்றமளித்தவர் கேசவபிள்ளைதான்.

தேர்தல் முடிந்து நிதி வசூல் சம்பந்தமான பிரச்னையை விவாதித்த போது திருட்டு முதலிய குற்றச்சாட்டுக்கள் கிளம்பின. மாத்யூ துணிச்ச லோடு தவறு இழைத்தவர்களை விமர்சித்தார். அந்த விமர்சனம் கடுமையாக இருப்பது இயற்கைதானே? அனைத்தையும் நாட்டுக்காக அர்ப்பித்து ஒரு மாபெரும் கிளர்ச்சியை நடத்தியவர்கள், மனைவி மக்களுக்காகச் சொத்து சேர்க்கப் பயன்படுத்தியவர்களைச் சும்மா விட்டு விடுவார்களா? மாத்யூவின் விறுவிறுப்பும், பிடிவாத குணமும் மிகப் பயங்கரமாக இருந்தன. திருடர்கள் விரித்த வலையில் அகப்பட்டுக் கொண்டோமே என்றுதான் அவருக்குத் தோன்றியது.

மாத்யூ ராஜினாமாச் செய்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு நாள் அவர் அகஸ்மாத்தாகக் கேசவபிள்ளையைச் சந்தித்தார். சிறிது நாட்

களுக்குள் அவர் நீர் மின் திட்டத்திலுள்ள அரசாங்க ஆதரவு பெற்ற ஒரு கான்டிராக்டராகி விட்டார்.

இழந்த சொத்துக்களைத் திரும்பப் பெறுவதற்கும், போதுமான பணத்தைக் கையிலே சேர்த்துக்கொள்ளவும் அவருக்கு அதிக நாள் தேவைப்படவில்லை. அன்னம்மாவும், குழந்தைகளும் மீண்டும் அவரிடம் வந்து சேர்ந்தனர்.

இன்று, இப்போது, ஆல்வாயிலுள்ள பிரயாணிகள் விடுதியிலுள்ள ஓர் அறையில் உட்காரக்கூடச் சொல்லாமல் நிற்கவைத்துக்கொண்டே கேசவபிள்ளை எந்த மாத்யூவிடம் பேசுகிறாரோ, அந்த மாத்யூவைத் தவிர அங்கே நின்ற மற்ற மூவருங்கூடச் சரித்திரம் உள்ளவர்களே. அவர்கள் சம்ஸ்தான காங்கிரஸ் இயக்கத்திலே சுறுசுறுப்புடன் பங்கெடுத்துக் கொண்ட பிரமுகர்கள்தாம். அவர்கள் பட்ட துன்பங்களைப்பற்றி ஜனங்கள் இப்போதுகூடப் பேசிக்கொள்கிறார்கள். அவர்களில் ஒருவரே நாராயணன் நாயர். அடுத்தவர் லூக்கோஸ். போலீஸ் லாக்கப்பிலே பட்ட அடி உதைகள் காரணமாக அவர் க்ஷயரோகியானவர். அன்று இவருக்குச் சிகிச்சையளிக்கக்கூட யாரும் துணை புரியவில்லை. இன்னொருவர் கோபிநாதன். வயது வந்த, தம் தாய் தந்தையர்களைக் காப்பற்ற இவர் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்றார். அவருடைய தம்பி போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் இறந்துவிட்டான்.

அத்தகைய வரலாறு படைத்தவர்கள் இன்று கேசவபிள்ளையின் எதிரில் நடுங்கி நின்றனர். இவர்களுடைய சென்றகால வரலாற்றைப்பற்றி நினைத்துப் பார்த்தபோது, இவர்கள் இப்படி நடுங்கி நிற்பதைப் பார்த்து ஆச்சரியம் ஏற்படுவது இயற்கைதானே? அவர்கள் பயந்தவர்கள் அல்ல; பயம் என்றால் என்னவென்றே அறியாதவர்கள். அவர்கள் புரிந்திருக்கிற சாகஸச் செயல்கள்தான் என்னே!

இது எவ்வாறு நேர்ந்தது? துன்பத்தின் கசப்பை உணர்ந்த தனால் நிகழ்ந்ததா? இன்பத்தின் இனிப்பை ருசித்துப் பார்த்ததனால் ஏற்பட்டதா? அன்று துன்பம் கசப்பானதென்று இவர்கள் நினைக்காமல் இருந்திருக்கலாம். வீடு, நிலம், பணம் ஆகிய எல்லாமே இன்று அவர்களிடம் இருக்கின்றன. அவற்றை இவர்கள் நேசிக்கிறார்களா? ஜீவ களை அனைத்தும் மங்கிப் போயிற்று? என்ன ஆனாலும் அந்த நால்வரும் கேசவபிள்ளையிடம் மறுக்கமுடியாத கடமைப்பட்டிருந்தனர்.

இருந்தும், அவர் சொன்னதையெல்லாம் கண்மூடித்தனமாக ஏற்றுச் செயல்படுவதற்கு அவர்களுடைய மனம் இணங்கவில்லை. ஒரு கால கட்டத்தில், எந்த இலட்சியத்துக்காகத் தங்கள் உயிரைக்கூட அர்ப்பிக்கத் தயாராக இருந்தார்களோ, அந்தப் புனிதமான இலட்சியத்துக்கு எதிராகச் செயல்பட வேண்டுமென்றே கேசவபிள்ளை அவர்களிடம் கோரினார். அவர்கள் காங்கிரஸிலிருந்து விடை பெற்று வந்தனர். ஆனால், எந்தக் கொள்கைக்காகக் காங்கிரஸ் செயல்பட்டதோ, அந்தக் கொள்கை இவர்களுக்கு இப்போதுகூட மகத்தானது. பணமும், சொத்துக்களும்

சேர்ந்ததும், இவர்கள் காங்கிரஸுக்கு நன்கொடை வழங்கினர். இப்போது காந்திஜியைக்கூட எதிர்த்துப் பேசவேண்டுமாம். ஒப்புக் கொள்ள முடியாத காரியம் அது.

இந்தியா சுதந்தரமடையப் போகிறதென்பது உறுதியான காலகட்டம் அது. வெள்ளையர் வெளியேறிவிடுவார்கள். அதற்கான ஏற்பாடுகளெல் லாம் பூர்த்தியாகின. இந்தியாவின் ஏனைய பகுதிகளிலிருந்து தனியாகச் சுயேச்சையான, சுய உரிமை கொண்ட தனி நாடாகத் திகழவேண்டுமாம், திருவாங்கூர். அதை ஆதரிக்க வேண்டும். அதைத்தான் கேசவபிள்ளை கேட்கிறார்.

மாத்யூவுக்கும், மற்றவர்களுக்கும் உண்டான மனச்சங்கடத்தைக் கேசவபிள்ளை அறிவார். அவர் சொன்னார்: ''ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டும்.''

அந்தப் பிரச்னைபற்றி விவாதிக்க யாரும் தயாராக இல்லை. விவாதிப்ப தற்கான முக்கியத்துவமோ, விவாதிக்கத் திறமையோ, விருப்பமோ. இல்லாததால் அவர்களில் யாருமே வாதம் புரிய முன் வரவில்லை.

மாத்யூ சொன்னார்: ''மக்கள் எங்களை விடமாட்டார்கள்.''

கேசவபிள்ளையின் பதில் திடீரென வெளிவந்தது: ''ஆம், திருவாங் கூரை நேசிக்க நீங்கள் கற்றுக்கொள்ளவில்லை. அந்தப் பாவத்தின் பலனை அநுபவித்தே ஆகணும்.''

பிறகு அவர் தொடர்ந்து கூறினார்:

''இது ஒரு பெருமுயற்சி. சிறிய பிரச்னை அல்ல. உயிருக்குக்கூட ஆபத்து ஏற்படலாம். எனக்குத் தெரியும், யாரோ ஒருவன் என்னைக் குறி வைத்திருக்கிறான் என்று. அவன் நோக்கம் என்னவென்று தெளிவாகத் தெரியவில்லை. அவன் யாரென்றுகூடத் தெரியாது. அவன் காங்கிரஸ் காரனாகவோ கம்யூனிஸ்டாகவோ இருக்கலாம். இந்த மாதிரியான சம்பவங்களைச் சமாளிக்கத் தயாராக இருக்கவேண்டும். இயறகைச் செழிப்பு வாய்ந்த இந்தச் சிறுநாடு சுதந்தரமாவதைப்பற்றிச் சிறிது சிந்தித்துப் பாருங்கள்! நீங்கள் எல்லாம் ஏன் அம்முறையிலே சிந்திக்க மறுக்கிறீர்கள்? நமது போன்ற சுதந்தரச் சிறு நாடுகள் இவ்வுலகில் வேறு இல்லையா? இங்கே எல்லா வசதிகளும் உள்ளன. எல்லாம் நமக்கே சொந்தம். பிரஜைகளை மக்களைப்போல் நேசிக்கிற, வழி வழியாக வந்த ஓர் அரச வமிசத்தினர் நமக்கு இருக்கின்றனர். அவர்களுடைய வாழ்க்கை எவ்வளவு எளிமையானது என்பதைப் பாருங்கள்! அவர்களுக் காக இந்த நாடு என்ன செலவு செய்கிறது? அப்படிச் சொல்ல ஒன்று மில்லை. அந்த அரச வமிசத்தினர் நீண்ட நாள் வாழட்டும். நாம் நம் நாட்டையும், அரசனையும் நேசிப்போம்.''

திடீரென்று ஒரு முடிவுக்கு வர மாத்யூவாலும், நண்பர்களாலும் முடிய வில்லை.

அவர்கள் மத்தியிலே தந்திரசாலியான லூக்கோஸ் பேசினார்: ''எஜமானர் சொன்னதெல்லாம் உண்மைதாங்க. எளிதிலே தள்ளிவிடக்

கூடிய கருத்துக்கள் அல்ல, எஜமானர் சொன்னது. ஆனால் திடீரென்று அவற்றைப்பற்றிக் கேட்டபோது இடி விழுந்தது போன்ற அதிர்ச்சி ஏற்பட்டுவிட்டதுங்க.''

அது உண்மைதான் என்று கேசவபிள்ளை சொன்னார். யாருக்குமே அப்படித் தோன்றலாம். யாரையுமே நடுங்க வைக்கிற செய்திதான், திருவாங்கூர் சுயேச்சையான சுய உரிமை பெற்ற நாடாகிவிடுவதென்பது!

கேசவபிள்ளை தொடர்ந்து கூறினார்:

''உண்மையான சுதந்தரம் என்னவென்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். காங்கிரஸ்காரர்கள் பிரசாரம் செய்வதும், கம்யூனிஸ்டுகள் சொல்வதுமா உண்மையான சுதந்தரம்? இப்போது நீங்கள் நடுங்கினீர்கள். இந்த நடுக்கத்தைவிட்டு ஆற அமரச் சிந்தித்துப் பார்த்தால்தான் உண்மையான தேசபக்தனுக்குச் சுதந்தரத் திருவாங்கூர் என்ற கொள்கையின் பெருமை தெரியும். நமது குடும்பத்தைத்தானே முதலில் நேசிக்க வேண்டும்?''

கேசவபிள்ளை மிகவும் நாசூக்காகத் தொடுத்த கேள்விக் கணைதான் அது. அத்துடன், அவர் தம் முன் நின்றவர்களின் முகத் தோற்றங்களைக் கவனித்துத் தொடர்ந்து கூறினார்: ''நமது குடும்பம் என்பது நம் சம்ஸ்தானமேதான். நம் திருவாங்கூர்.''

அதுவரையில் வாய் திறக்காமல் நின்ற நாராயணன் நாயரிடம் கேசவபிள்ளை கேட்டார்: ''என்ன, நாராயணன் நாயர்! பேசாமல் நிற்கிறீங்களே?''

''நாடு முழுவதும் இதுவரையில் கண்டிராத நெருக்கடி நிலைமை ஏற்பட்டுவிடும்.'' நாராயணன் நாயர் யோசனை செய்து கூறிய பதில் அல்ல இது. ஏதோ திடீரெனச் சொல்லிவிட்டார்.

கேசவபிள்ளை அலட்சியமாகப் புன்சிரிப்புச் சிரித்தார்: ''ஓ . . . அதொன்றும் பெரிய காரியம் அல்ல. நெருக்கடி ஏற்பட்டால் அதைச் சமாளிக்கும் சக்தி அரசாங்கத்துக்கு உண்டு. அடக்கி ஒடுக்கி விடுவோம். ரவிரக்கம் இல்லாமல் நசுக்கிவிடுவோம். எதிர்க்கிறவன் திருவாங்கூரில் உயிர் வாழவேண்டாம். அவன் ஸஹ்ய மலைக்கு அப்பால் போகட்டும். அவன் இந்தச் சம்ஸ்தானத்தில் தங்கியிருக்க லாயக்கற்றவன்; திருவாங்கூரின் பிரஜையும் அல்ல.''

ஒரு விநாடி நிறுத்திவிட்டு அவர் மீண்டும் பேசத் தொடங்கினார்: ''ஆனால், அந்த மாதிரியான காரியங்கள் ஒன்றும் நடக்கப் போவதில்லை. நம் சம்ஸ்தான மக்கள் புத்திசாலிகள், பிரச்னைகளைப் புரிந்துகொள்ளும் சக்தி படைத்தவர்கள். காங்கிரஸ்காரர்களின் பிரசாரத்திலே மயங்கி வழிதவறிச் சென்றிருக்கிறார்கள். அவர்களுக்கு வெளிச்சம் கிடைத்து விட்டால் போதும். நேரான வழியிலே செல்வார்கள். அவர்களைப்பற்றி எந்தப் பயமும் சர்க்காருக்குக் கிடையாது. இப்போது உங்களுக்கு ஏற்பட்டது போன்ற அதிர்ச்சி, முதலில் அவர்களுக்குக்கூட ஏற்படலாம்.

அதனால் ஒன்றும் ஆகப்போவதில்லை. அதை எல்லாம் சமாளித்தே ஆகவேண்டும்.''

எதிர்ப்பைச் சமாளிப்பதற்கான திட்டத்தைப்பற்றி யோசிப்பதுபோல் சிறிதுநேரம் பேசாமல் நின்றுவிட்டுப் பிறகு கேசவபிள்ளை தொடர்ந்து கூறினார்: ''புன்னப்பராவிலும், வயலாறிலும் சில பேர் செத்தார்கள் அல்லவா? அதுபோல் ஆங்காங்கே சிலர் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாக லாம். அது ஒரு பிரச்னையே அல்ல. இப்படிப்பட்ட ஒரு நல்ல காரியத்துக் காகச் சில சமயங்களில் 'இரத்த பலி' தேவையாக இருக்கும்.''

கேசவபிள்ளை தொடர்ந்து ஒரு மணி நேரம் பேசினார். சுதந்தரத் திருவாங்கூரை அடைய, அந்த நால்வருடைய ஆதரவும், ஒத்துழைப்பும் தமக்கு இருக்கவேண்டும் என்றே அவர் எதிர்பார்த்தார்.

அன்றிரவு அவர்கள் அந்தப் பிரயாணிகள் விடுதியிலேயே தங்கினார்கள். கேசவபிள்ளை அன்றைத் தினம் அவர்களுக்குச் சிந்திக்கச் சந்தர்ப்பம் அளித்தார். நன்றாக ஆற அமர யோசித்து, மறுநாள் காலையில் உறுதி மொழிப் பத்திரத்தில் கையெழுத்திட்டால் போதுமென்று அவர்களிடம் கூறினார். அவர்கள் அந்த அறையிலிருந்து கலைந்து சென்றனர். இத்தகைய ஒரு நெருக்கடி அவர்களுக்குத் தங்கள் வாழ்நாளில் இதுவரையிலும் ஏற்பட்டதில்லை. சுதந்தரத் திருவாங்கூர்! அதைப்பற்றி நாராயணன் நாயராலும் கோபியாலும் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியவில்லை. சுயேச்சையான, சுய உரிமை கொண்ட ஒரு நாடு என்ற முறையில் திருவாங்கூர் இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து பிரிந்துத் தனிப்பட்டு நிற்பதா? அது எத்தகையதாக இருக்குமென்றோ, அதை எப்படி அடைய முடியுமென்றோ அவர்களால் சிந்திக்கக்கூட முடியவில்லை.

கேசவபிள்ளையின் கருத்தை மாத்யூ புரிந்துகொண்டார். திருவாங் கூருக்கு எல்லைகள் இருக்கும். ஆக்கிரமிப்பு ஏற்பட்டுவிட்டால் அவற்றை எதிர்க்க அங்கெல்லாம் இராணுவம் நிறுத்தப்படும். விமானப்படையும் கடற்படையும் இருக்கும். நமது தூதர்கள் அயல்நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். சுதந்தரத் திருவாங்கூர் என்று சொல்வது இத் தகையதாக இருக்கலாம். சில சந்தர்ப்பங்களில் தமிழகத்துடன் சண்டை மூண்டுவிடலாம். அவர் கேட்டார்: ''அது என்னவென்று புரிந்துகொள்ள முடிகிறதா?''

லூக்கோஸுக்கு மேலும் ஒரு யோசனை தோன்றியது. ''திருவாங்கூர் சுதந்தர நாடாகிவிட்டால் என்ன கெடுதல்?''

லூக்கோஸ் அவ்வாறு யோசித்தார். ஆனால் அவ்வளவு தூரம் எண்ண மாத்யூவால் முடியவில்லை. 'கெடுதல் உண்டு. இந்தியா முழுமையான ஒன்று. திருவாங்கூர் முழுமையான அந்த ஒன்றின் ஒரு பகுதியாகும். தனித்து நின்றால் எப்படி முன்னேற முடியும்?' அவர் கேட்டார்:

''எப்படிக் காந்திஜியை எதிர்த்துக் கூற முடியும்?''

நாராயணன் நாயர் சற்று உணர்ச்சி வசப்பட்டார்.

''என்னால் முடியாது. வாழ்நாள் முழுதும் சொல்லி வந்த விஷயம் இது. உயிர் மூச்சாக இருந்து வந்தது. வேறு வழியின்றி இப்படி வந்து விட்டேன். இன்று நாம் மன்னிப்புக்குரியவர்கள். மக்கள் நம்மை மன்னிக்கவும் செய்கின்றனர். முடியாது. இப்படிச் செய்ய என்னால் முடியாது.''

கோபிகூட அவ்வாறே சொல்லிவிட்டார்.

''அப்போதே, அவர் முன்னிலையிலேயே சொல்லலாம் என்று நினைத்தவன்தான். நான் ஓர் இந்தியனாகப் பிறந்தேன். எனக்கு இந்தியனாகவே இறக்கவேண்டும்.''

இப்படித் தீர்மானித்துவிட்டால், அதன் விளைவுகளைப்பற்றி யோசிக்க வேண்டாமா? லூக்கோஸ் சிந்தித்து விட்டுச் சொன்னார்:

''அவர் நம்மை நசுக்கிவிடுவார். அவருக்கு நம்மிடம் மிகப் பெரிய பகைமை இருக்கும்.''

இந்த விஷயத்தில் மாத்யூவுக்குச் சந்தேகமே இல்லை.

''அதைப்பற்றி அவர் மிகத் தெளிவாகவே சொல்லிவிட்டார். மறைக்கவில்லை. நம்மை நசுக்கிவிட அவர் தயங்கவும் மாட்டார்.''

சிறிது நேரம் வரையில் அங்கே நிசப்தம் நிலவியது. அவசரத்தில் சில நிமிஷங்கள் சென்றன. லூக்கோஸ்தான் மறுபடி பேச்சைத் துவக்கினார்:

''மாத்யூவுக்குக் கொஞ்சம் நிலமும் வீடும் மீதியாக இருக்கும். என்னிடமிருப்பது அனைத்துமே கிழக்கேயுள்ள மலைக் கற்களும் சுண்ணும்புமே!''

மாத்யூ சொன்னார்: ''நிலத்தைப் பறிமுதல் செய்யலாம் அல்லவா? கேசவபிள்ளையை நாம் எதிர்க்கத் துணிந்தால் நமக்கு ஒன்றுமே மீதியாகாது.''

நாராயணன் நாயர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டவர்போல் தோன்றியது.

''ஒரு சந்தர்ப்பத்தில் எனக்கு ஒரு குடும்பம் இருந்தது. அது அழிந்து போனதை நான் கண்டேன். அதன் பலனை அநுபவித்தேன். பின் இப்போது ஒரு குடும்பத்தை நிர்மாணித்துக்கொண்டிருக்கிறேன். அதுவும் போய்விட்டால், அந்தத் துக்கம் எனக்கு ஒரு புதிய துக்கமாகிவிடாது.''

கோபிக்குக்கூட இதே கருத்துதான். தம் தம்பி இறந்தபோது தாய் தந்தையர்கள் அநுபவித்த துக்கத்தை அவர் கண்டிருக்கிறார். அண்ணன் இறந்துபோவதையும் அவர்கள் காணட்டும். அவர் சொன்னார்:

''என்னுடைய தம்பி இதைப் பொறுத்துக்கொள்ள மாட்டான்.''

லூக்கோஸ் பிரச்னையின் பல அம்சங்களையும்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தார்.

''இந்தச் சுதந்தரத் திருவாங்கூர் என்பது அமலுக்கு வந்துவிடுமா, மாத்யூ?''

மாத்யூ கூறினார்: ''எனக்குச் சந்தேகந்தான். மக்கள் அதை அங்கீகரிக்க மாட்டார்கள்.''

''அப்புறம்?''

''நாட்டில் கலவரம் நடக்கும். ஏராளமானவர்கள் கொல்லப் படுவார்கள்.''

லூக்கோஸின் நடைமுறை அறிவு வேலை செய்யத் தொடங்கியது.

''அப்படியானால் ஆமோதிக்கிறேம் என்று சொல்லித் தந்திரமாக நடந்துகொண்டால் என்ன? அப்படிச் சொன்னால் கஷ்டங்கள் ஏற்படப் போவதில்லை. கேசவபிள்ளை சொல்கிற காரியமும் கைகூடாது. அது தானே புத்திசாலித்தனம்?''

''அது புத்திசாலித்தனமான யோசனைதான்'' என்றார் மாத்யூ.

லூக்கோஸ் சொன்னார்:

''இந்த ரகளைகளிலிருந்து விலகி நிற்கலாம். எதிலும் சுறுசுறுப்பாகப் பங்கெடுத்துக் கொள்ளவேண்டாம். அந்த முறையில் நடந்துகொள்வதற் கான சாமர்த்தியம் இருந்தால் மட்டும் போதும். என்ன நாராயணன் நாயர், நான் சொல்வது எப்படி?''

அந்தக் கேள்வி காதில் விழுந்ததாகக் காட்டிக்கொள்ளவில்லை நாராயணன் நாயர். கோபியும் பதில் சொல்லவில்லை. லூக்கோஸ் கேட்டார்:

''அப்படியானால் உறுதிமொழிப் பத்திரத்திலே கையெழுத்துப் போட்டுக் கொடுத்துவிட்டு நாம் பேசாமல் இருந்துவிட்டால் என்ன?''

மாத்யூ அந்த யோசனைக்கு நேரடியாகப் பதிலளிக்கவில்லை.

''நாளைக் காலையில் நாம் அவரைச் சந்தித்தால், உறுதிமொழிப் பத்திரத்திலே நாம் கையெழுத்துப் போட்டு விடுவோம் என்பது திண்ணம். பள்ளிக்கூடத்திலே என்னுடன் படித்து வந்த அந்த அசட்டுப் பையன், இவ்வளவு உயர்ந்துவிட்டானே என்று நினைக்கும்போது ஆச்சரியம் ஏற்படுகிறது. இதுக்கு முன்புகூட எனக்குச் சில அநுபவங்கள் ஏற்பட்டிருக்கு. அவருக்கு ஏதோ ஒரு சக்தி இருக்கு. நம்மால் அவரை எதிர்க்கமுடியாது.''

''நான் அவரை நாளைக் காலையில் சந்திக்கப் போவதில்லை.'' கோபி கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

''நான் எல்லாவற்றையும் தியாகம் செய்யத் தீர்மானித்துவிட்டேன். நானும் அவரைச் சந்திக்கப் போவதில்லை.'' நாராயணன் நாயர் சொன்னார்.

லூக்கோஸ் முன்னெச்சரிக்கை செய்தார்:

''அவர் நாளை உங்களைத் தகர்த்துவிடுவார். அந்தத் திட்டத்துடன் தான் இன்று நம்மைச் சந்தித்தார்.''

நாராயணன் நாயரும் கோபியும் உறுதியுடன் நின்றனர். விளைவுகளைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை.

ஒற்றுமையுடன் இருந்த அந்த நால்வரும் பிரிந்து செல்கிற கட்டத்தை அடைந்துவிட்டனர். காங்கிரஸிலிருந்து ஒன்றுசேர்ந்து வெளியே வந்த வர்கள் அவர்கள். இன்றுவரை ஒற்றுமையுடன்தான் இருந்தார்கள். அவர்கள் வெவ்வேறான வேலைகளும் செயல்முறைகளும் கொண்டவர்

களாக இருந்திருந்த போதிலும், கான்டிராக்டுகளை ஏலத்தில் எடுப்பது, வனங்களிலிருந்து மரங்களை வெட்டியெடுப்பது போன்ற காரியங்களில் தனித் தனியாக இயங்கிவந்த போதிலும், அவற்றை நிர்வகித்து வருகிற விஷயங்களில் ஒன்றுகவே இருந்து வந்தனர். அவர்களை இணைபிரியா நண்பர்களாகவே அனைவரும் பார்த்து வந்தனர். இன்று அவர்கள் பரஸ்பரம் பிரிந்து செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

லூக்கோஸ் அந்த விஷயத்தைப் பகிரங்கமாகவே சொல்லிவிட்டார்:

''அப்படியானால் நமது கணக்குகளையெல்லாம் பார்த்துச் சரிக்கட்ட வேண்டியிருக்கிறதே?''

மாத்யூ ஒரு யோசனை கூறினார்:

''இருக்கட்டும். யோசிக்கச் சிறிது நாட்கள்கூட அவகாசம் கேட்டுப் பார்த்தால் என்ன?''

மிகவும் பயங்கரமான கூக்குரல் அந்தப் பிரயாணிகள் விடுதியிலுள்ள ஏதோ ஓர் அறையிலிருந்து கேட்டது. பயந்து நடுங்க வைக்கிற கூக்குரல்! நான்கு நண்பர்களும் வெளியே வந்தனர். அனைத்து அறைகளிலும் தங்கியிருந்தவர்கள் விளக்கைப் போட்டார்கள். விடுதிக் காவலர்கள் விழித்தெழுந்து விரைந்து சென்றனர்.

கேசவபிள்ளையின் அறையிலிருந்தே அந்தக் கூக்குரல் கிளம்பியது.

கேசவபிள்ளை தூங்கவில்லை. தூக்கத்துக்கான மயக்கம் கொள்ளத் தொடங்கினார். அவ்வளவுதான். திறந்திருந்த ஜன்னல் அருகே யாரோ ஒருவன் வந்து நிற்பதாகத் தோன்றியது. ''யாரது?'' என்று அவர் கேட்ட குரல்தான் அது.

கனவு கண்டிருப்பார் என்றே முதலில் சிலர் கூறினர். ஆனால் பக்கத்திலுள்ள ஓர் அறையில் தங்கியிருந்த ஒரு நபர், 'யாரோ ஒருவன் விரைந்தோடிச் சென்று வெளிச் சுவரைத் தாண்டிக் குதித்துப் போனதைக் கண்டேன்' என்றார். கூக்குரல் சத்தம் கேட்டு விழித்தெழுந்து முதலில் வெளியே வந்தவர் அவர்தான். அப்படியானால் ஜன்னல் அருகில் யாரோ வந்து நின்றான் என்பது உண்மைதான். திருடனாக இருக்கலாம் அல்லவா?

என்ன ஆனாலும், யாராலானாலும் தமக்கு எவ்விதமான பதற்றமும் இல்லை என்பதை வெளிக் காட்டுகிற முறையில் கேசவபிள்ளை அறையிலேயே நின்றுகொண்டிருந்தார்.

அறைக்குத் திரும்பி வந்தபோது கோபி தம் கருத்தை வெளியிட்டார்:

''ஒரு சந்தர்ப்பத்தில் காங்கிரஸ்காரர்களில் ஒரு பகுதியினர் அவரைக் கொன்றுவிட யோசித்தார்கள் அல்லவா? பிரஸிடண்டு அதை எப்படியோ தெரிந்துகொண்டு அந்த முயற்சியிலிருந்து அவர்களைப் பின்வாங்கச் செய்யவில்லையா?''

மாத்யூ சொன்னார்: ''நானே தனியாகச் சென்று அந்தக் காரியத்தை முடித்துவிட வேண்டுமென்று யோசித்ததுண்டு.''

''இன்றுகூட யாராவது அப்படித் திட்டமிட்டு வந்திருக்கலாம். திட்டம் நிறைவேறியிருந்தால் நாம் தப்பித்துக்கொண்டிருப்போம் அல்லவா?'' என்று கேட்டார் லூக்கோஸ்.

நாராயணன் நாயர் கேட்டார்: ''அதெப்படி? அவர் செத்துப் போனாலும், சர்க்கார் இருக்கத்தானே செய்கிறது?''

''ஓ . . . சர்க்கார் இருந்துவிட்டுப் போகட்டும். இவர்தாமே நமக்குத் தொந்தரவு கொடுக்கிறார்? வேறு யார் வந்தாலும் நாம் தப்பிப் போய் விடலாம்.''

அத்தியாயம் 21

சோதனைகள்

இந்தியாவை இரண்டாகப் பிரிவினை செய்வதாகக் கூறுகிற, இங்கிலாந்துப் பிரதமரின் பிரகடனம் வெளிவந்தது. வெள்ளையர் இந்தியாவை விட்டு வெளியேறுகிற தேதியும் நிர்ணயிக்கப்பட்டது. சுதந்தரத் திருவாங்கூர் என்ற கோஷம் முழங்கத் தொடங்கியது. சிறிது காலமாகச் சுறுசுறுப்பாக இயங்காமல் இருந்த சம்ஸ்தான காங்கிரஸ் மீண்டும் புத்துயிர் பெற்றெழுந்தது. பண மோசடி உட்பட எல்லாக் குற்றச்சாட்டுகளும் அவதூறுகளும் மக்கள் மனத்திலிருந்து மறைந்து விட்டன. நாட்டு மக்கள் உணர்ச்சி பெற்றுக் கிளர்ந்தெழுந்தனர். எங்கும் கண்டனக் குரல்கள்!

பெரிய பெரிய கண்டன ஊர்வலங்கள்! பொதுக்கூட்டங்கள்! நகரங்களில் மட்டுமின்றி, தாலுக்கா தலைநகர்களில் மட்டுமின்றிப் பட்டி தொட்டிகளில் எல்லாம் நடைபெற்றன. அபிவிருத்தி இலாக்காக் காரிய தரிசிக்கு அரசியல் இலாக்காப் பொறுப்பையும் நிர்வகித்து வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது.

கோட்டயம் நகரில் நடைபெற்ற கண்டன ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கியவர் நாராயணன் நாயர்தான். நீர் மின்திட்டத்தில் வேலை செய்துகொண் டிருந்த தொழிலாளிகளில் சிலர் உள்பட ஒரு கும்பல் ஊர்வலத்தின்மீது கற்களை வீசியது. போலீஸாரின் உதவியுடன்தான் அந்தக் கல் வீச்சு நடைபெற்றது. கல் வீசியவர்களில் பலரையும் நாராயணன் நாயருக்குத் தெரியும். அவர்கள் எல்லாரும் லூக்கோஸின் ஆட்கள். அவர்களில் சிலர், நாராயணன் நாயர் தங்களை உன்னிப் பாகப் பார்ப்பதைக் கண்டதும் ஓடிவிட்டனர். மாத்யூவுக்குச் சொந்த மான நான்கு லாரிகள் சற்றுத் தொலைவிலே நிற்பதும் தெரிந்தது. அவற்றில்தான் அந்தத் தொழிலாளிகள் ஏற்றிக்கொண்டு வரப் பட்டனர்.

கொல்லம் நகரில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் கோபி பேசினார். நகரிலுள்ள ரேஷன் கடைக்காரர்கள் ஏவிவிட்ட ஒரு கும்பல் தாரைத் தப்பட்டைகளைக் கொட்டிச் சத்தம் செய்தும், கற்களை வீசியும் அந்தக் கூட்டத்தை அலங்கோலப்படுத்தியது. ரகளை நடைபெறும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. கூட்டத்தில் பங்கு கொண்ட மக்களின் ஆத்திரம் உச்சகட்டத்தை அடைந்தது. தொலைவில் துப்பாக்கிகளைக் குறி வைத்தவாறு போலீஸ் படை நின்றது. கோபியின் பிரசங்கம்

தொடர்ந்து நடைபெற்றது. மக்களை அமைதிப்படுத்த அவரால் முடிந்தது.

இத்தகைய நிகழ்ச்சிகள் சம்ஸ்தானம் முழுதும் நடைபெற்றன. கூட்டங்களைக் கலைப்பது, கற்களை வீசியெறிவது போன்ற சம்பவங்கள் நடைபெற்றன. சில இடங்களில் ரகளைகள்கூட வெடித்தன. தடியடிப் பிரயோகங்கள் கணக்கிலடங்கா. இரண்டு இடங்களில் துப்பாக்கிப் பிரயோகமும் நடந்தது. மக்களில் பலர் மாண்டனர்.

இவ்வாறுக, நாராயணன் நாயரும் கோபியும் மீண்டும் இயக்கத்தில் ஈடுபட்டனர். அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட களங்கம் மாய்ந்துவிட்டது. இன்று அவர்கள் உறுதி மிக்கப் போராட்ட வீரர்கள்.

எதிர்பார்த்ததுபோல் நடைபெற்றது. நீர் மின்திட்டத்துக்குச் செல்கிற பாதையை நிர்மாணித்தவர் கோபிதான். வேறு சில பொருட்களைக் கொள்முதல் செய்து சேர்த்து வைக்கிற பொறுப்புக்கூட அவரிடமே இருந்தது. அவர் இப்போது கான்டிராக்டின் நிபந்தனைகளை மீறியிருக்கிறார். செய்து முடித்த வேலைகளில் பல குறைகள் இருக்கின்றன என்பன போன்ற குற்றச்சாட்டுக்கள் கொண்ட நோட்டீஸைச் சர்க்கார் அவருக்கு அனுப்பியது. போர்க்களத்திலிருந்த கோபி அதைப் பொருட்படுத்தவில்லை. தமக்குப் பாக்கியாகக் கிடைக்கவேண்டிய முப்பதாயிரம் ரூபாயை அவர் இழந்திருக்கிறார். வேண்டுமென்றேதான் அவ்வாறு செய்தார்.

திட்ட அலுவலர்கள் தங்கும் கட்டடங்கள், அணைக்கட்டின் ஒரு பகுதி ஆகியவை நாராயணன் நாயரின் கான்டிராக்டிலிருந்து வந்தன. நாராயணன் நாயருக்கும் நோட்டீஸ் வந்தது. அவர்மேல் ஒரு ஸிவில் வழக்குத் தொடர ஏற்பாடாகியது.

சம்ஸ்தானத்திலே ஏறக்குறைய அமைதி நிலவி வந்த ஒரு கட்டத்தில்தான் இந்தப் போராட்டம் வெடித்திருக்கிறது. சுதந்தரத் திருவாங்கூர் என்ற கோஷம் கிளம்புமென்று யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை. மகாராஜாவின் ஆதிக்கத்தின்கீழ்ப் பொறுப்பாட்சி என்ற சம்ஸ்தான காங்கிரஸின் கோஷத்தில் இத்தகைய விபத்து மறைந்திருந்ததை யாருமே கவனிக்கவில்லை. எண்ணியிராத ஒரு நிலையில் நாட்டு மக்கள் இந்த விபத்தைக் கண்டனர்.

ஆயிரக்கணக்கான, காங்கிரஸ் போராட்ட வீரர்களின் குடும்பங்களிலே சிறிது காலமாக அமைதி நிலவி வந்தது. தந்தை, வீட்டில் இருந்துவருகிறார் என்பதனால் தனயர்கள் இன்புற்றிருந்தனர். கணவர் அருகில் இருக்கிறார் என்பதனால் மனைவி மகிழ்ந்தாள். மகன், அருகில் இருந்து தன்னைக் காப்பாற்றுகிறான் என்று அன்னை ஆனந்தமடைந்தாள். பல குடும்பங்களின் பொருளாதார நிலைமை சீரழிந்திருந்தது. அன்றுட வாழ்க்கைகூட நெருக்கடியான நிலைமையில் இருந்து வந்த குடும்பங்கள் எண்ணற்றவை. ஆனால், கதர்த் துணிக்கு மட்டும் பிரத்தியேகமான மதிப்பு இருந்தது.

இப்போது ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மீண்டும் சஞ்சலமடைந்தன. வீட்டிலிருந்து வெளியே சென்ற கணவன், மகன், சகோதரன், தகப்பன் ஆகியோர் எப்போது திரும்பி வருவார்கள் என்று சொல்வதற்கில்லை. திரும்பி வராமலே போய்விடலாம். ஏனென்றால் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறது அரசாங்கம். 'தடியடி வேண்டாம், துப்பாக்கிச் சூடே போதும்' என்பதுதான் அரசாங்கக் கட்டளையாம்! இது ஒரு முடிவு காணும் போராட்டம். துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகாமல் தப்பிச் சென்றுவிட்டால்கூடச் சிறையிலிருந்து திரும்பி வருவது மிகக் கடினமான காரியம். அரசாங்கத் தின் திட்டம் அத்தகையது.

அன்னம்மாவுக்கு இன்று ஒரு வீடும் நிலபுலன்களும் உள்ளன. அருமை யான வீடு! பணம் சேர்ந்திருக்கிறது, கார் இருக்கிறது, உற்றார் உறவினர்கள் வந்து போகிறார்கள்.

குழந்தைகள் பள்ளிக்குச் செல்கின்றனர். அவர்கள் உற்சாகமாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கிறார்கள். மாத்யூவுக்கும், அன்னம்மாவுக்கும் எதிர்காலத் திட்டங்கள் பல உள்ளன. மெதுவாக அந்தக் குடும்பம் முன்னேறி வருகிறது. எதிர்பார்த்ததைவிடக் கூடுதலான தொகை மாத்யூவிடமிருந்து காங்கிரஸுக்குக் கிடைத்து வருகிறது. சுதந்தரத் திருவாங்கூர் கோஷம் அந்தக் குடும்பத் தலைவியையும், குழந்தைகளையுங் கூட நடுங்க வைத்தது.

அன்று ஆல்வாய்ப் பிரயாண விடுதியில் மாத்யூ அந்த உறுதிமொழிப் பத்திரத்தில், ஓர் இயந்திரம் போன்றே கையெழுத்துப் போட்டார். நாராயணன் நாயரும், கோபியும் விடியுமுன்பே விடுதியிலிருந்து கிளம்பி விட்டனர். அவர்கள் சென்றபோது, அவர்களைப் பின்தொடர்ந்து செல்லவேண்டுமென்று மாத்யூவுக்குத் தோன்றியது. லூக்கோஸ்தான் அவரை இழுத்துப் பிடித்து நிறுத்தினார். குடும்பம் என்கிற பலவீனமான இடத்தைத்தான் அவர் மாத்யூவுக்குத் தொட்டுக் காட்டினார். காங்கிரஸின் பெயரைச் சொல்லிப் பணம் சம்பாதித்தவர்கள், வாழ்க்கை யைச் செப்பனிட அந்த ஸ்தாபனத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிற வர்கள் ஆகியோரின் பட்டியலை அவர் மாத்யூவிடம் சமர்ப்பித்தார்.

சுதந்தரம் என்ற மகத்தான லட்சியத்துக்காக அவர்கள் தங்களுடைய இளமைப் பருவத்தைச் சமர்ப்பித்திருக்கின்றனர். குடும்பங்களுக்குத் துன்பங்களைக் கொடுத்திருக்கின்றனர். அந்த லட்சியம் வெற்றி பெறத் தான் செய்யும். கொடியேந்திக் கோஷங்கள் போடுவது மட்டுமல்ல, பண உதவி அளிப்பதுகூட மிகப் பெரிய சேவையாகும். பணத்தைச் சேர்த்துக்கொண்டே காங்கிரஸ்காரனை இருக்கமுடியும். குடும்பத்திட முள்ள கடமையை மறக்க முடியுமா? அதை மறுக்க முடியுமா? சுதந்தரத் திருவாங்கூர் கோஷத்தை எதிர்த்து முறியடிக்கக்கூடப் பணம் வேண் டாமா? லூக்கோஸின் தர்க்க வாதம் இவ்வாறு சென்றது.

இன்றுவரையில் சேர்த்து வைத்ததை எல்லாம் உதறிவிடுவதென்றால் குடும்பத்தின் நிலைமை என்ன ஆகும்? அன்று அன்னம்மா பிறந்தகத்துக்குச் சென்றாள். மீண்டும் அங்கே செல்வதா? மாத்யூவின் குழந்தைகளுக்கு அந்த வீடு சொந்த வீடாகிவிடுமா? தவிரவும், அண்ணியரும் தங்கையரும் அன்னம்மாவை மீண்டும் அந்த வீட்டுக்குள்ளே காலெடுத்து வைக்க அநுமதிப்பார்களா?

மாத்யூவின் மூளை மழுங்கிவிட்டது. லூக்கோஸின் தர்க்க வாதங்களுக்கு எதிராகச் சில பதில்கள் கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் அவருக்கு உண்டு. ஆனால் எதைச் சொல்வது? ஒவ்வொன்றுக்கும் எதிர்மறை உண்டு. ஒன்றுக்கு மட்டும் அல்ல, ஒவ்வொன்றுக்கும்! குழந்தைகள் சம்பந்தமான பிரச்னைகளுக்கு; மனைவி சம்பந்தமான காரியங்களுக்கு!

லூக்கோஸ், மாத்யூவை இழுத்துக்கொண்டு வந்து கேசவபிள்ளை முன் நிறுத்தினார் என்பதுதான் உண்மை. மாத்யூ உணர்வு இழந்து நிற்பதைக் கேசவபிள்ளை அறிந்துகொண்டார். மாத்யூவின் குழப்ப நிலைமையைத் தம்மால் புரிந்துகொள்ள முடிகிறதென்று கேசவபிள்ளை கூறினார். மாத்யூ லட்சிய வெறி கொண்டவர். நடைமுறை வாழ்க்கைக்கு இப்போதுதான் வந்திருக்கிறார். இந்த உறுதிமொழிப் பத்திரத்திலே கையெழுத்துப் போடுவதென்றால், நடைமுறை வாழ்க்கையைப் புரிந்து கொள்வது என்பதே பொருள். மாத்யூவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அவர் கையெழுத்துப் போட்டார். அவர் கரம் நடுங்கியது.

களையிழந்து வாட்டமடைந்து களைப்புடன்தான் மாத்யூ வீட்டுக்குச் சென்றார். ஏதோ ஒரு பெரும் விபத்து நேர்ந்துவிட்டதுபோல் இருந்தது. அன்னம்மாவும், குழந்தைகளும் திகைத்துப் போயினர். அந்தக் குடும்பமே களையிழந்து காணப்பட்டது. மாத்யூவினால் எதைப்பற்றியும் சிந்தனை செய்ய முடியவில்லை. ஆனால், அவர் எந்நேரமும் எதைப்பற்றியோ நினைத்துக்கொண்டிருப்பதாகத் தோன்றியது. பேசுவதில்லை. மனைவி எதையாவது வலியுறுத்திச் சொன்னால், தம்மைத் தொந்தரவு செய்யாதே என்று சொல்லுவார். குழந்தைகளைப் பார்க்கும்போது அவருடைய கண்களிலே நீர் நிறைந்துவிடும்.

* * *

நாட்கள் சில கழிந்துவிட்டன. திவான்ஜியின் 'சுதந்தரத் திருவாங்கூர்ப் பிரகடனம்' வெளிவந்துவிட்டது. அதை அங்கீகரித்த பிரமுகர்கள் வரிசையிலே மாத்யூவின் பெயரும் காணப்பட்டது.

அன்று அவர் கதறி அழுதுவிட்டார். அவர் ஒரு புலிபோல் அன்னம்மாவை நோக்கிப் பாய்ந்து சென்றார். அவருடைய ஆத்திரமெல்லாம் அவள்மீதுதான். அவரைச் சீரழித்தது அவளாம்! அந்தப் பெண் அவர் வாழ்க்கையில் ஏற்பட்ட சாபக்கேடாம்! அன்னம்மாவைத் தாலி கட்டிய

நாள் அவருடைய வாழ்க்கையிலே பாவ நாளாம். அவள் ஒரு கருநாகப் பாம்பின் சந்ததியாம்! இவ்வாறுக, ஒரு பெண்ணுல் எந்நாளும், ஒரு போதும், எந்தச் சூழ்நிலையிலும் சகித்துக்கொள்ள முடியாதவற்றை எல்லாம் மாத்யூ சொல்லிவிட்டார். அன்னம்மா அழுதாள். அல்லாமல் என்ன செய்யமுடியும்?

எத்தனை எத்தனை சோதனைகள்! எத்தனை எத்தனை தடைகள்! இல்லற வாழ்க்கையிலே அவற்றையெல்லாம் அந்தத் தம்பதிகள் தாண்டி வந்திருக்கின்றனர். இதைவிடக் கூடுதலான வசைமொழிகளைக் கூறவேண்டிய சந்தர்ப்பங்கள் எத்தனையோ ஏற்பட்டிருக்கின்றன. சிறை வாசம் முடிந்து வெளியே வந்த மாத்யூ, அன்னம்மாவை அழைத்த போது 'வரமுடியாது' என்று முகத்தில் அறைந்ததுபோல் கூறினுள். அப் போதுகூட அவருக்கு அவள்மீது ஆத்திரம் ஏற்பட்டதில்லை. 'முடியாது' என்ற வார்த்தைக்குப் பின்னலிருந்த காரணங்களை அவர் அறிந்திருந் தார். அன்று அன்னம்மா அதைச் சொன்னபோது அவர் பொறுமை யுடன் அதைக் கேட்டார்.

அந்த மனக்கிளர்ச்சி தணிந்தபோது மாத்யூ அழுதார்; வாய்விட்டுக் கதறி அழுதார். அன்னம்மா அவருக்கு ஆறுதல் கூறினுள்.

வெகுநாட்களுக்கு முன், திருமணம் முடிந்து பல வருஷங்கள் ஆகி விடவில்லை. ஒரு குழந்தை பிறந்திருந்தது. மண வாழ்க்கையின் இனி மையைச் சரிவர நுகர்ந்து வந்த காலகட்டம். அன்று ஒரு நாள், திருவனந்தபுரத்திலுள்ள சயன்ஸ் கல்லூரி மனைக்குள்ளே போலீஸார் புகுந்து, மாணவர்களைத் துரத்தித் துரத்திச் சென்று அடித்தனர் என்ற செய்தி, காலைப் பத்திரிகையில் வந்தது. மாத்யூ அதைப் படித்தார். அன்று சம்ஸ்தான காங்கிரஸ் உருவாகியிருக்கவில்லை.

அந்த நாள் இன்றுகூட அன்னம்மாவின் நினைவிலே இருக்கிறது. மாத்யூ காலை உணவை அருந்திக்கொண் டிருந்தார். அப்போதுதான் பத்திரிகை வந்தது. ஆப்பமும் முட்டையுந்தான் அன்றைப் பலகாரம். ஓர் ஆப்பத்தை முழுதையும் சாப்பிட்டு முடிக்கவில்லை. செய்தியைப் படித்த தும் எழுந்து நின்றவாறு காபியை மடக் மடக்கெனக் குடித்துவிட்டு, ''நான் திருவனந்தபுரத்துக்குப் போகிறேன்'' என்று சொல்லிப் புறப் பட்டார். அன்று அது ஒரு பெரிய விவகாரமாக அன்னம்மாவுக்குத் தோன்றவில்லை. துன்பங்கள் நிறைந்த ஒரு காலகட்டத்தின் துவக்கம் அது என்றும் அந்த இளம் பெண்ணுக்குப் புரியவில்லை. அவர் போனது சிறையை நோக்கித்தான் என்பதையும் அவள் அறியவில்லை. அதைத் தொடர்ந்து எல்லாத் துன்பங்களையும் அந்தப் பெண் அநுபவித்து விட்டாள். ஒரு பெண்ணுக்குப் பொருந்தாத வகையில், அவள் தன் கணவனைப் புறக்கணித்துக் கூறும் நிலைமைக்குக்கூட ஆளாகிவிட்டாள்.

இன்று அத்தகையதொரு சூழ்நிலை திரும்பவும் வந்துவிட்டதாக அன்னம்மாவுக்குத் தோன்றியது. இன்று, ஒருவேளை, அவர் கிளம்பிச் சென்றுல் திரும்பி வருவது சந்தேகந்தான்.

ஆனால் இன்று, அன்னம்மா அந்தப் பழைய இளம்பெண் அல்ல; அநுபவமுள்ளவள்; படிப்பினைகளைக் கற்றுக்கொண்டவள். கணவரைக் கடிவாளமிட்டு நிறுத்திவைக்க அவளுக்குத் தெரியும். இன்ன சமயத்தில் இன்னமாதிரி நடந்துகொள்ளவேண்டுமென்று அவளுக்குத் தெரியும். கணவரை லகானிட்டுப் பிடித்து நிறுத்தவேண்டிய விஷயத்தில் உதவி புரியக் குழந்தைகள் இருக்கிறார்கள். மாத்யூவிடம்கூட மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. சாப்பிடுவதற்காகக் கொண்டு வைத்த உணவை அப்படியே போட்டுவிட்டு பாய்ந்து ஓடி விடமாட்டார். ஆயிரம் சங்கிலிகள் அவரைப் பிணைத்திருக்கின்றன.

இவ்வாறு, அன்னம்மா அவரைப் பிடித்து நிறுத்தியிருந்தாள். நாள் செல்லச் செல்ல அவருக்கு ஏற்பட்ட கவலையும், பயமும் சிறிது சிறிதாகக் குறைந்து வந்தன. சுகந்தரத் திருவாங்கூர் இயக்கத்தில் சுறுசுறுப்பாகக் கலந்துகொள்ளாமல் இருப்பதற்கான நியாயங்களைச் சொல்லத் தொடங்கினாள். எல்லாம் லூக்கோஸ் முன்னால் சொன்னவைதாம். ஆனால், மாத்யூ வீட்டிலிருந்து அதிகமாக வெளியே போவதில்லை. மாத்யூவை யாருமே அதிகமாக விமர்சிக்கவும் இல்லை. ஆனால் அவரைப் போன்றவர்களைப்பற்றிப் பிரசங்க மேடைகளிலும், அறிக்கைகளிலும் காங்கிரஸ்காரர்கள் விமரிசித்து வந்தார்கள். அவ்வளவுதான்.

நாராயணன் நாயருக்கும், கோபிக்கும் அரசாங்கம் நோட்டீஸ் அனுப்பியிருந்ததல்லவா? அந்தச் செய்தி அறிந்த லூக்கோஸ் மாத்யூவைச் சந்திக்க வந்தார். அது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாக இருந்தது.

அவர்கள் தங்களுக்குள் கணக்குகளையெல்லாம் பேசித் தீர்த்திருந்த போதிலும், தங்கள் நட்பை அடியோடு புறக்கணித்துவிட நண்பர்களின் மனம் ஒப்புக்கொள்ளவில்லை.

மாத்யூவின் மனத்திலே ஒரு புதிய கருத்து உருப்பெற்றது. ஆறுதல் அளிக்கிற கருத்து! அவர் மனதார நேசிக்கிறலட்சியத்துக்காக அனைத்தையும் தியாகம் செய்யத் தயாராகிவிட்ட மற்ற இரண்டு நண்பர்களுக்கும் உதவியளிப்பது என்பதே அது. அதை ஒரு தொண்டாக ஏற்றுக்கொள்வது இன்றைய நிலைமையில் மிகச் சிறந்ததாக இருக்குமென்று பகுத்தறிவு அவருக்குக் கூறியது. மாத்யூ உணர்ச்சியுடன் கூறினார்: ''என்ன செய்வது லூக்கோஸ்? எதை வேண்டுமானாலும் நான் செய்யத் தயார். நீங்கள் சொல்லுங்கள்! என் சொத்துக்கள் அனைத்தும் அழிந்துவிட்டால் கூட, அவை முழுவதையும் அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று சொன்னாலும்கூடச் செய்யச் சித்தமாயிருக்கிறேன். நீங்கள் சொல்லுங்கள், என்ன செய்வதென்று! என் மனத்தில் ஒன்றும் தோன்றவில்லை. என் மனத்துக்கு ஆறுதல் வேண்டும்.''

லூக்கோஸ் புன்சிரிப்புடன் கூறினார்: ''நான் எதற்காக வந்தேன் என்று நினைக்கிறீர்கள்? என் மனத்துக்குக்கூட அமைதி ஏற்படவேண்டும் என்பதற்காகத்தான். நாம் செய்த காரியம் நியாயமானதென்று நான் கூட நினைப்பதில்லை. நாம் நமது 'ஆத்மாவின் அறைகூவலைப் பொருட்

படுத்தவில்லை. அந்த நண்பர்கள் அந்த அறைகூவலுக்கு இணங்க நம்மிட மிருந்து பிரிந்து சென்றனர். அவர்களுடைய நலன்களை நாம்தான் காப்பாற்றவேண்டும். அது நமது கடமையாகும்.''

மாத்யூ கேட்டார்: ''அதுக்கென்ன செய்வது? உங்களால் ஏதாவது சொல்ல முடியுமா?''

லூக்கோஸ் ஓரளவு அதைப்பற்றி யோசனை செய்துவிட்டே வந்திருந் தார். நோட்டீஸில் கூறியிருந்த கான்டிராக்டு வேலைகள், நாராயணன் நாயரும் கோபியும் தங்கள் தங்கள் பெயர்களில் ஏற்றுக்கொண்டவை தான். மாத்யூ, லூக்கோஸ் ஆகியோரின் பெயர்களில் தனியாக ஏற்றுக் கொண்டிருந்த வேலைகளும் உண்டு. அப்போது மாத்யூ கூறினார்: ''அவற்றை நாம் தொடர்ந்து நடத்தி முடித்துக் கொடுக்கவேண்டும். அதற்கு முதலீடு செய்து லாபம் முழுதையும் அவர்களுக்கே கொடுத்துவிட வேண்டும்.''

''அது அவ்வளவு கஷ்டமான காரியமல்ல. அது அவ்வளவு பெரிய தொகை அல்ல. மிகச் சிறிது'' என்றார் லூக்கோஸ்.

மாத்யூ கேட்டார்: ''அப்புறம் நாம் என்ன செய்யவேண்டும்?''

லூக்கோஸ் அதற்கான வழியையும் கண்டுபிடித்து வைத்திருந்தார். நோட்டீஸில் குறிப்பிட்டிருக்கிற அந்த வேலைகள் அனைத்துமே செய்து முடிக்கப்பட்டவைதான். அரசாங்கம் பழிவாங்கவே அத்தகைய நோட்டீஸை அனுப்பி வைத்திருக்கிறது. முற்றுப் பெறுமலிருக்கிற வேலைகளை மாத்யூவும் லூக்கோஸும் சேர்ந்து செய்து முடித்துவிட்டு, நாராயணன் நாயரும் கோபியும் போட்டிருக்கிற முதலீட்டையும், அவர் களுக்குச் சேர வேண்டிய லாபத்தையும் போட்டுக் கொடுப்பது. இந்த வழியைத்தான் லூக்கோஸ் கண்டுபிடித்திருந்தார். அவர் உற்சாகத் துடன் கேட்டார்:

''எப்படியிருக்கிறது, என் திட்டம்?''

''எந்தத் தகராறும் இல்லை. குறிப்பிடத்தக்க ஒரு தொகை ஒவ்வொரு வருக்கும் கிடைத்துவிடும். லாபம் உண்டு. சுகமாக வாழ்நாளைக் கழிக்க லாம்.'' மாத்யூ அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டார். லூக்கோஸ் உபதேசிக்கத் தொடங்கினார்:

''சொன்னதை அப்படியே ஏற்றுக்கொண்டீர்களே. என் திட்டம் அவ்வளவு எளிதில் நிறைவேறக்கூடியதல்ல. நாராயணன் நாயரும், கோபியும் செய்து முடித்திருக்கிற வேலைகளை உடைத்தெறிந்துவிட்டு நாமே செய்து முடித்ததாக ரிப்போர்ட் போகவேண்டும். கணக்கை யும் அப்படித்தான் காட்டவேண்டும். உண்மையில் அவர்கள் செய்த அதே வேலைகள்தான். இதற்கெல்லாம் என்ஜினீயர்களின் உதவியும் ஆதரவும் இன்றியமையாதவை. இந்தக் கஷ்டங்களைப்பற்றியெல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.''

மாத்யூவின் அறிவு செயல்படத் தொடங்கியது. அவர் சொன்னார்: ''மேஸ்திரியிலிருந்து அனைவருக்கும் கைநிறையக் கொடுக்கவேண்டும்.''

''அதெல்லாம் செய்துவிடுவோம். வனத்துக்குள்ளே நடக்கிற விஷயந் தானே?''

மாத்யூ சொன்னார்: ''நமது திட்டத்தையும் நோக்கத்தையும்பற்றிக் கேசவபிள்ளைக்குத் தெரிந்துவிட்டால், நம்மை அவர் அடியோடு நசுக்கி விடுவார்.''

அப்படி நடந்துவிட்டால் அதைச் சமாளிப்பதற்கான திட்டமும் லூக்கோஸிடம் இருந்தது. மாத்யூவுக்கும், லூக்கோஸுக்கும் லாபம் ஏற் படுவதற்கான வழிதான் இது என்ற முறையில் கேசவபிள்ளையை அணுக வேண்டும். நாராயணன் நாயரையும், கோபியையும் அழிக்கத் திட்ட மிட்டிருப்பதுபோலும் மாத்யூவையும் லூக்கோஸையும் செழிக்கவைப்பது போலவும் திட்டம். ஒரு நல்ல தொகையை அவருக்கு அன்பளிப் பாகக் கொடுக்கவேண்டியிருக்கும். பிரச்னை அது அல்ல. லூக்கோஸ் கூறினார்:

''பொதுப்பணித் துறை இலாக்காக் காரியதரிசி மிஸ்டர் பிலிப்பு கேசவ பிள்ளையிடம் பகைமை உள்ளவர். கேசவபிள்ளையை எப்படிப் படுகுழியில் தள்ளுவது, வலையிலே சிக்கவைப்பது என்ற யோசனைதான் அவருக்கு. அதற்குத் தக்க தருணத்தை எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறார். அவர் உள்ளுக்குள்ளே ஒரு காங்கிரஸ்காரர்கூட. இந்த வேலைத் திட்டத்தி னால் லாபமடைவது நாராயணன் நாயரும் கோபியுந்தான் என்பதை அறிந்துகொண்டால் அவர் நமக்கு உதவியளிப்பார். ஆனால் துரோகிகள் என்ற முறையில் அவருக்கு நம்மிடம் அதிக வெறுப்பு இருக்கிறது.''

அது உண்மைதான். மாத்யூவுக்கு அது நன்றாகத் தெரியும். ஏதாவ தொரு முறையில் பிரச்னையைச் சமாளிக்கவேண்டும். சமீப காலமாக மாத்யூ வெளியே வரத் தயங்கினார். வந்தால்கூட எந்தக் காரியமும் அவரால் சாதிக்கமுடிவதில்லை. அந்த அளவில் அவருடைய தன் னம்பிக்கை, துணிச்சல், திறமை எல்லாமே மறைந்துவிட்டன. அவர் எல்லாக் காரியங்களையும் லூக்கோஸிடம் ஒப்படைத்தார். நாராயணன் நாயர், கோபி ஆகியோருடைய குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டு மென்ற பிரச்னையிலும் அவர்களுக்கு ஒருமித்த கருத்து இருந்தது.

உண்மையிலேயே மாத்யூ ஆறுதலடைந்தார். 'இந்தச் சந்தர்ப்பத்தில் இயக்கத்துக்காக இந்த அளவாவது உதவமுடிகிறதே. நாட்டுக்காக உயிர் துறக்கத் தயாரான இரு நண்பர்களுக்காக ஏதாவது செய்யமுடி கிறதே!' என்ற திருப்தி.

சுதந்தரத் திருவாங்கூர் இயக்கமும், அதை எதிர்த்து நடைபெற்ற இயக்கமும் ஒன்றோடு ஒன்று பலம் பெற்று வந்தன. அந்த நிலைமையில் அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தாற்காலிகமான மந்த நிலை ஏற்பட்டிருந்தது. ஆனால் உடனடியாகத் திரும்பவும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

லூக்கோஸ், கோபிக்கும் நாராயணன் நாயருக்கும் உதவச் செயல்பட்டு வந்தார். இதற்குள்ளே கோபியும் நாராயணன் நாயரும் சிறையில்

அடைபட்டுவிட்டார்கள். மாத்யூவுக்கு மலேக்குப் போகவேண்டிய நிலேமை ஏற்பட்டது. அங்கே இயக்கத்தின் அலேகள் வந்து மோதுவது இல்லே. செய்வதற்கு நிறைய வேலேகள் உண்டு. வெளியுலகத்துடன் எந்தவிதமான தொடர்பும் இல்லே. இவை மாத்யூவுக்கு ஆறுதலே அளித்தன. அன்னம்மாவும் குழந்தைகளும் கூடவே தங்கினர்கள்.

சிறிது நாட்களுக்குள் லூக்கோஸ் திரும்பி வந்தார். ஏறக்குறைய காரியங்கள் கைகூடிவிட்ட மகிழ்ச்சியுடன் திரும்பி வந்தார்.

வந்ததுமே முக்கியச் செய்தியாக, ''இந்தச் சுதந்தரத் திருவாங்கூர் நடைமுறையில் சாத்தியமில்லே'' என்றார்.

மாத்யூவின் காதுகளிலே அமுத தாரை பொழிவதுபோல் இருந்தது அந்தச் செய்தி. 'ஏன் இப்படிச் சொல்கிறார்? இவருக்கு இது எப்படித் தெரிந்தது?' என்பன போன்ற கேள்விகள் எழுந்தன.

லூக்கோஸ் விளக்கினர்:

''மக்களில் எந்தப் பகுதியினருமே இந்தச் சுதந்தரத் திருவாங்கூரை விரும்பவில்லே. என். எஸ். எஸ்.; எஸ். என். டி. பி. ஆகிய ஸ்தாபனங்களின் தலேவர்கள் தங்களுக்கு அரசியலே கிடையாது என்று சொல்லிக் கொண்டு சர்க்காருக்கு ஆதரவாக இருந்துவந்தார்களே, அவர்கள் இப்போது இந்தக் கோஷத்துக்கு எதிராகிவிட்டனர். ஒரு சில ரேஷன் கடைக்காரர்களும், நம்மைப் போன்ற சில கான்டிராக்டர்களுமே 'சுதந்தரத் திருவாங்கூர் கீ ஜய்!' என்று கோஷித்துக்கொண்டு கூலிக்கு மாரடிக்கின்றனர். அவர்களுடைய உள்ளக்கிடக்கையும் வேறுதான். நம்மைப் போலவே வெளிவேஷம் போடுகிறார்கள். ஆனல் நம்மால் இன்று தெருவிலே இறங்கி நடக்கமுடியாது. நான் பகல் வேலேயில் வெளியே வருவதே இல்லே. வெட்கம் மட்டுமல்ல காரணம். பைத்தியம் பிடித்த நாயைப்போல் நம்மை மக்கள் துரத்தித் துரத்தி அடிப்பார்கள்.''

லூக்கோஸ் தமக்கேற்பட்ட சில அநுபவங்களே விளக்கிக் கூறினர்: ஓர் இடத்தில் சிறுவர்கள் அவரைக் கண்டபோது கூச்சல் போட்டுத் துரத்தினர்கள். அவரை அவர்கள் எப்படி அடையாளம் கண்டு கொண்டனர் என்று தெரியாது. இன்னுமோர் இடத்தில் லூக்கோஸை மக்கள் பார்த்தபோது தகர டப்பாவைக் கொட்டி வரவேற்றார்கள். அவர் ஓர் ஓட்டலுக்குச் சென்றபோது சாப்பாடு தரமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். அவருடன் சென்றவர்களுக்குச் சாப்பாடு போட்டார்கள்.

ஆனல், இரகசியமாக ஒரு விஷயத்தை லூக்கோஸ் கூறினர்:

''காங்கிரஸ் மேலிடத்தில் உள்ளவர்களில் யாருக்குமே நம்மிடத்தில் பகைமை உணர்ச்சி கிடையாது. இந்த ஜனங்கள்தான் நம்மைப் பார்த்தால் விடமாட்டோமென்கிறார்கள். நம்மை அரைத்துக் கலக்கிக் கொடுத்துவிட்டால், அவர்கள் மடக் மடக்கென்று குடித்து விடுவார்கள். தலேவர்கள் அப்படியில்லே. இக்கட்டானதொரு நிலேமையிலே அவர்கள் மாட்டிக்கொண்டிருக்கின்றனர். தப்ப வழியின்றித்

தத்தளிக்கின்றனர். எல்லாருக்கும் ஒவ்வொரு தொழில் இருந்து வருகிறது. மற்றவர்களுடைய பெயர்களிலேதான் அவை நடக்கின்றன. அவ்வளவுதான்.''

மாத்யூவுக்குப் பல விஷயங்களைப்பற்றி, தலைவர்களைப்பற்றி அறிய வேண்டும். அவர் ஒவ்வொன்றாக, ஒவ்வொருவரைப்பற்றியும் கேட்டு விசாரித்தார். லூக்கோஸ் அத்தனை கேள்விகளுக்கும் திறம்பட, தெளிவுபட விடையளித்தார். உண்மையிலேயே ஒரு பெரும் சுமை தம் தலைமீதிருந்து இறங்கி விட்டதாக மாத்யூ ஆறுதலடைந்தார். அவருடைய இதயம் சாதாரணமான நிலைமைக்கு வந்துவிட்டது. பல நாட்களுக்குப் பின் அப்போதுதான் அவர் ஒருமுறை சிரித்தார். நன்றாகச் சிரித்தார். மாத்யூ கேட்டார்: ''அதெல்லாம் இருக்கட்டும். அந்தக் காரியத்தை எப்படிச் சாதித்தீர்கள்?''

அது ஒரு பெரிய கதை. லூக்கோஸ் கேசவபிள்ளையைச் சென்று பார்த்தார். கடந்த சில நாட்களாகக் கேசவபிள்ளையிடம் ஏற்பட்டிருக்கிற மாறுதல்கள்தான் என்னே! அவற்றைச் சொல்லி மாளாது என்றும், புரியவைக்க முடியாது என்றும் லூக்கோஸ் சொன்னார். பார்த்தே தெரிந்துகொள்ள வேண்டும். அவருடைய முகம் இன்று ஒரு ராட்சதனுடையதுபோல் காட்சி தருகிறது. ஒருமுறை பார்த்தாலே அது தெரிந்துவிடுகிறது. எந்தக் காரியத்தையும் செய்யத் தயங்கவில்லை. யாரை வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும், எந்தச் சமயத்தில் வேண்டுமானாலும் செய்துவிடுவார். இதயம், மனிதத் தன்மை, அன்பு —என்றெல்லாம் சொல்லுகிறோமே அவை எல்லாம் அவரிடம் இப்போது கிடையா. அவர் ஏதோ ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார். திவான்ஜிகூட இப்போது இந்த மாதிரி இருக்கமாட்டார்.

லூக்கோஸ் சொன்னார்: ''அவர் மட்டும் ஒரு ஜில்லா மாஜிஸ்டிரேட், டி. எஸ். பி., போலீஸ் கமிஷனர் ஆகிய ஏதாவது ஒரு பதவியில் இருந்தால் பத்து மனிதர்கள் சேர்ந்து நிற்பதைக் கண்டால் உடனே துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவு போட்டுவிடுவார் என்பது திண்ணம. திவான்ஜிக்குத் திறமை பற்றாது என்றுகூட அவருக்கு அபிப்பிராயம் இருந்து வருவதாகத் தோன்றுகிறது.''

மாத்யூ கேட்டார்: ''அப்போ . . . இந்தச் சுதந்தரத் திருவாங்கூர் கோஷம் வெற்றி பெற்று விடுமென்று அவர் நம்புகிறாரா?''

அது லூக்கோஸுக்குத் தெரியாது. ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்ல முடியும். இருபத்துநாலு மணி நேரமும் அவர் உழைத்து வருகிறார். ஒவ்வொரு கிராமத்திலும், பட்டியிலும் நடைபெறுகிற இயக்கங்கள் பற்றி அவர் அறிந்து வருகிறார். இப்படி உழைப்பதைப் பார்த்தால் சுதந்தரத் திருவாங்கூர் கோஷம் வெற்றி பெறுமென்று அவர் நம்புவதாகத் தோன்றுகிறது.

லூக்கோஸ் தொடர்ந்து கூறினார்: ''அவர் வீட்டைச் சுற்றிப் பட்டாளம் காவல் காத்து வருகிறது. அந்தப் பக்கம் எட்டிப் பார்க்கக்

கூட முடியாது. கேட்டிலே காவல், அறை வாசலிலே காவல்; அப்புறம் பந்தோபஸ்துப் படையினர்! அங்கே யாராலுமே நுழைந்துவிட முடியாது. என் பெயரைச் சொல்லியனுப்பி ஒரு மணி நேரம் வரையில் வெளியே நின்றிருந்தேன். உள்ளே போகும்போது அங்கே நிற்பவர்கள் எப்படி உற்றுப் பார்த்தார்கள் தெரியுமா? அவர்கள் பார்ப்பதைப் பார்த்தால் பயந்து நடுங்கிவிட வேண்டியதுதான். பார்வையாளர்களைச் சோதனை செய்த பின்பே உள்ளே அநுமதிக்கிறார்கள். பக்கி விலாசத்திலே கூட இந்த அளவு காவல் இருக்காது.''

மாத்யூ கேட்டார்: ''அன்று ஆல்வாய்ப் பிரயாணிகள் விடுதியிலே ஒருவன் ஜன்னல் பக்கமாக வந்து எட்டிப் பார்த்தான் அல்லவா? அது போல் யாராவது அவரைத் தீர்த்துக் கட்டத் திட்டம் போட்டிருப்பான்.''

அந்தச் சந்தேகம் லூக்கோஸுக்கும் இருந்து வந்தது. எல்லார் பார்வையும் கேசவபிள்ளைமீதுதான் திரும்பியிருந்தது. அப்படி யாராவது தீர்த்துக் கட்டியிருந்தால் தொந்தரவே ஒழிந்திருக்கும்.

கேசவபிள்ளையின் குறிக்கோள் என்னவாக இருக்கும் என்பதைப் பற்றியே மாத்யூ சிந்தித்துப் பார்த்தார். சுதந்தரத் திருவாங்கூரினால் அவருக்கு என்ன நன்மை ஏற்படப் போகிறது? திவான்ஜியின் பிரியத்தைச் சம்பாதித்துக்கொள்ளவா?

லூக்கோஸ் கேட்டார்: ''இந்தத் திவான்ஜியே இன்னும் எத்தனை நாள் இருக்கப் போகிறார்? நிலைமையைப் பார்த்தால் அவருடைய நிலையும் இங்கே பாதுகாப்பானது அல்ல.''

''அதைப்பற்றிப் பிறகு பேசுவோம்'' என்றார் மாத்யூ. லூக்கோஸ் கதையைத் திரும்பவும் சொல்ல ஆரம்பித்தார்:

''நான் அவர் முன்னிலையில் வணங்கி நின்றேன். முகத்திலே விழிக்கக் கூடப் பயமாயிருந்தது. அவ்வளவு கடுகடுப்பு அந்த முகத்தில். ஆயினும் ஒருமுறை அவர் பல்லைக் காட்டினார். சொல்லவேண்டியவற்றை நன்முக யோசித்துவிட்டே சென்றிருந்தேன். 'நமக்குப் பத்துச் சக்கிரம் கிடைப்பதற்கான வழி இது. வேலையைத் தொடர்ந்து நடத்தினால் செய்து முடித்த வேலையின் பணம் உடனடியாகக் கிடைத்துவிடும் . . .' என்றெல்லாம் விளக்கமாக எடுத்துரைத்தேன். அவருடைய கண்களுக்கு இப்போது பிரத்தியேகமான ஒரு சக்தி இருந்து வருகிறது. அவர் அந்தக் கண்களால் என்னைப் பார்த்தபோது, அந்தப் பார்வை என்னைத் துளைத்து, என் இதயத்துக்குள்ளே புகுந்து அங்குள்ள இரகசியங்களை எல்லாம் தோண்டி எடுப்பதாக எனக்குச் சந்தேகம் உண்டாயிற்று. நான் சொல்லி முடித்தபோது, உண்மையிலே நாம், நாராயணன் நாயருக்கும் கோபிக்குமாக ஒரு தந்திரத்தைக் கடைபிடித்து வருவதாக அவர் அறிந்து கொண்டார்போல் எனக்குத் தோன்றியது. இதற்கு முன் அறிமுகமில்லாத ஒருவனிடம் பேசுவதுபோல் ஒரே வார்த்தையில் 'முடியாது' என்று கூறிவிட்டார். என்ன காரணமென்று சொல்லவில்லை. நானு

விடுவேன்? மூவாயிரம் ரூபாய் ஒரு பையிலே எடுத்துக்கொண்டு சென்றிருந்தேன். அதை எடுத்து மேஜைமீது வைத்துவிட்டேன். அப்போதல்லவா, பார்க்கவேண்டும்? நாம் மேஸ்திரியிலிருந்து சீஃப் என்ஜினீயர் வரையிலுள்ள அனைவருக்கும் அளந்துகொண்டிருக்கிறோமே—அது அவர்களுடைய உரிமையல்லவா? அவர்கள்கூட, நாம் அதைக் கொடுக்கும் போது, 'இதெல்லாம் என்னத்துக்குங்க?' 'இதொண்ணும் தேவையில்லையே' என்று சம்பிரதாயமாகக் கூறிக்கொண்டல்லவா வாங்குவது வழக்கம்? அப்புறம், பணத்தைக் கையிலே வாங்கிவிட்டு, 'நான் இதுக்காகச் சொல்லலீங்களே!' என்றுகூடச் சொல்வார்கள். ஆனால் கேசவபிள்ளையிடம் ஏதாவது மாறுதலைப் பார்க்கவேண்டுமே. ஊஹூம்! ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. பணத்தை எடுத்து மேஜைக்குள்ளே போட்டுக்கொண்டார். ஒரு நன்றி வார்த்தைகூட இல்லை! அவர் வாங்கியதாகவோ, நான் கொடுத்ததாகவோ காட்டிக்கொள்ளவில்லை. சுதந்தரத் திருவாங்கூர் இயக்கத்துக்காக நாம் என்னென்ன செய்து கொண்டிருக்கிறோமென்று மட்டும் கேட்டார். நாம் நமது வேலையாட்களை டிரக்குகளில் அனுப்பிவைத்திருந்ததையெல்லாம் அவர் அறிந்திருக்கிறார். இன்னும் சுறுசுறுப்பாகச் செயலாற்ற வேண்டுமென்று யோசனை கூறினார்!''

''பணத்தை வாங்கிக் கொண்ட பின்னும் அந்தக் காரியத்தைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லையா?'' மாத்யூ குறுக்கே புகுந்து கேட்டார்.

''அரைமணி நேரம் பேசிக்கொண்டிருந்தும் அதைப்பற்றிப் பேச்சு மூச்சில்லை. திடீரென்று 'எனக்கு வேலை இருக்கிறது, லூக்கோஸ் போகலாம்' என்று நாடக பாணியில் கூறினார். எனக்கு அவரிடம் திறந்து சொல்ல பயம். அவரோ சொல்லவில்லை. மூவாயிரம் ரூபாயை அடுப்பிலே தான் போட்டுவிட்டேனே என்று அச்சமுற்றேன். நான் எழுந்து வாசலிலே வந்தபோது 'என்ஜினீயர்கள் தொந்தரவு பண்ணுமல் பார்த்துக்கொள்ள வேண்டும்' என்று அப்போதுதான் சொன்னார். நான் சற்று ஆறுதல் அடைந்தேன்.''

கதை முழுவதையும் கேட்டு முடிந்தபோது மாத்யூவுக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது: ''பணத்தை வாங்கிக்கொண்டு நன்றி கெட்டத்தனமாக நடந்துகொள்வாரா, என்ஜினீயர்கள்மீது குற்றத்தைச் சுமத்திவிட்டு?''

அப்படி நடக்காதென்று லூக்கோஸினால் உறுதியாகச் சொல்ல முடியாது. அவருடைய இன்றைய சுபாவத்தை வைத்துப் பார்த்தால், அப்படியும் நடக்கலாம். அந்தப் பணம் ஆற்றிலே போட்டதுபோல் போனாலும் போகலாம். அதையாவது சொன்னாரே! அதுகூடச் சொல்லாமல் இருந்திருந்தால்?

பின்பு லூக்கோஸ், பிலிப்பின் இணக்கத்தைச் சம்பாதிக்க முயன்றார். ஒரு பெரிய காங்கிரஸ் தலைவரின் வீட்டுக்குள்ளேயே நள்ளிரவில் சென்று நுழைந்துகொண்டார். மாத்யூ ஆவலுடன் கேட்டார்: ''அது யார்?''

''சொல்லுகிறேன். அவசரப்பட வேண்டாம். இரண்டு நாட்கள் வரையில் அங்கேயே தலைமறைவாகத் தங்கியிருந்தேன். காங்கிரஸ்காரர்கள் அங்கே எந்நேரமும் வந்துகொண் டிருந்தனர். சி. ஐ. டி.க்கள் அந்த வீட்டைச் சுற்றி வட்டமிட்டனர். யார் கண்ணுக்கும் தென்படாமல், அங்கே இரண்டு நாட்கள் தங்கியிருந்தது எப்படி என்பது எனக்கும் கடவுளுக்குந்தான் வெளிச்சம். மிகவும் கஷ்டமாக இருந்தது. அவர் உங்களைப்பற்றியும் விசாரித்தார். பரஸ்பரம் நேச பாவத்துடன் நடந்து கொண்டோம். நாம் செய்கிற உதவிகள்பற்றி அவர்களுக்கெல்லாம் நம்மிடம் நன்றியுண்டு. இதனிடையில் இரண்டு தடவை அவர் பிலிப்பைச் சென்று பார்த்தார். நமது உண்மை நிலைமையைச் சிறிதும் மறைக்காமல்தான் அங்கே போனேன். அது நல்லது என்று அந்தத் தலைவரே ஒப்புக்கொண்டார். நாராயணன் நாயர், கோபி ஆகியோர் மீது அவர்கள் அளவற்ற பற்று வைத்துக்கொண் டிருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பத்துக்கும், எதிர்காலத்துக்கும் அறநெறிகளுக்குப் புறம்பாக இருந்தாலும், உதவுவது தவறு அல்ல என்றே அந்த தலைவர் கருதுகிறார். அந்த விஷயத்துக்காக எங்கே வேண்டுமானாலும் அவர் போகத் தயாராக இருந்தார். ஆனால், ஒரு முடிவுக்கு வரக்கூடிய சந்தர்ப்பத்தில் ஆயிரம் ரூபாய் செலவு ஒன்று வந்தது. செக்ரடரி பிலிப்புக்குக் கொடுப்பதற்காகத்தான் அது.''

மாத்யூ கேட்டார்: ''அப்புறம், நீங்கள் அதைக் கொடுத்தீர்களா?''

''ஆம். கொடுத்தேன். கொடுக்காமல் இருக்க முடியுமா? மூவாயிரம் ஏற்கெனவே செலவாயிருக்கிறது. காரியம் கைகூடவேண்டாமா? என்னால் பிலிப்பை நேரடியாக அணுகவும் முடியாது. நான் நேரடியாகச் சென்றால் பிலிப்பு நேர் எதிராக மாறிவிடுவார். ஒரு வேலையும் நடக்காது. நம்மை ஐந்தாம் படையினராகவும், கருங்காலிகளாகவும், துரோகிகளாகவுமே அவர் மதிப்பிட்டிருக்கிறார். இருப்பினும் பிலிப்பு என்ன சொன்னார் தெரியுமா? அவரைப் பொறுத்தவரையில் எந்தத் தகராறும் நேர்ந்து விடாதென்றுதான். இனி என்ஜினீயர்களை நம் கைக்குள்ளே கொண்டுவர வேண்டிய வேலைதான் பாக்கி.''

அது ஒரு பெரிய காரியமாக மாத்யூவுக்குத் தோன்றவில்லை.

லூக்கோஸ் சொன்னார்: ''இல்லை. அவ்வளவு இலேசாகக் கருதவேண்டாம். கேசவபிள்ளை, பிலிப்பு ஆகியோருடைய குறுக்கீடு ஏற்படாதென்று உறுதியாகவேண்டும். அந்த அதிகாரிகள் குறுக்கிட்டால் தங்கள் வேலை போய்விடும் என்று என்ஜினீயர்கள் கருதுகிறார்கள்.''

அந்தத் தலைவர் யார் என்று அறிய மாத்யூவுக்கு அளவுகடந்த ஆவல். லூக்கோஸ் கேட்டார்: ''அவரை ஏன் நீங்கள் அறியவேண்டும்?''

''நான் அறிந்துகொண்டால் என்ன?''

லூக்கோஸ் அந்தத் தலைவரின் பெயரைச் சொன்னார். மாத்யூவின் முகத்தோற்றத்திலே மாறுதல் தென்பட்டது. அவர் சொன்னார்:

''அப்படியானால் நாம் ஏமாந்துவிட்டோம். பணம் வேண்டுமென்று பிலிப்பு கேட்டிருக்கமாட்டார். அந்தத் தலைவர் கொடுத்திருக்கவும் மாட்டார். அது தலைவரின் சட்டைப் பைக்குள்ளே போய்விட்டது. அவர்தாமே, தேர்தலுக்காக வசூல் செய்த பணம் முழுதையும் அபேஸ் செய்தது? கணக்கு வழக்கொன்றும் அவரிடம் இருக்காது. முன்பே அவர் அப்படித்தான்.''

லூக்கோஸ் மாத்யூவை ஆறுதலடையச் செய்தார்: ''போனால் போகட்டுமே. நமக்கு ஆகவேண்டியது என்ன? காரியம் நடக்கவேண்டும். அவ்வளவுதானே?''

மாத்யூ ஒரு மறுகேள்வி கேட்டார்:

''பிலிப்புக்கு இந்த விஷயம் தெரியுமென்றுவது உறுதியாகச் சொல்ல முடியுமா? தலைவர் அவரிடம் சென்று சொல்லியிருக்கமாட்டார்.''

லூக்கோஸுக்குக்கூடச் சிறிது சந்தேகந்தான். ஆயினும், அவர் சொன்னார்: 'சேசே! அப்படி இல்லையப்பா! அவர் சென்று சந்தித்துச் சொல்லியிருப்பார். அந்தக் காரியம் கைகூடுவது உறுதி.''

மாத்யூ கேட்டார்: ''அவ்வாறு நடைபெறவில்லை என்றால், உங்களால் அவர் கன்னத்திலே இரண்டு அறை விடமுடியுமா?''

லூக்கோஸ் தயக்கமின்றிப் பதில் அளித்தார்: ''சந்தேகம் என்ன? தலைவரைச் சும்மா விட்டு வைப்பேனா? ஆனால் மாத்யூ, நீங்கள் சந்தேகக் கண் கொண்டு பார்க்கிறீர்கள். அந்தக் காரியம் கைகூடத்தான் செய்யும்.''

மாத்யூவுக்கு என்னவோ, சந்தேகந்தான். அவர் அந்தத் தலைவரோடு மிகவும் நெருங்கிப் பழகியவர்.

லூக்கோஸின் மனத்திலே இன்னொரு திட்டமும் இருந்து வந்தது. அது நடைமுறைக்குக் கொண்டுவருவதற்குரியதுகூட. இந்தச் சர்க்கார் நிலைக்காது. இதன் ஆயுள் சிறிது நாட்கள் வரையிலும்தான். பின் ஆட்சிக்கு வரப்போவது காங்கிரஸேதான். உண்மையிலே நாராயணன் நாயரும், கோபியும் முறைப்படி நிர்மாணித்து வைத்திருப்பதைத் தகர்த்துவிட்டோம் என்றல்லவா, ரிப்போர்ட் தயாரிக்கப்பட்டிருக்கிறது! அது காங்கிரஸ் தலைவர்களுக்குத் தெரிந்த விஷயமேதான். இன்று செய்யப்படுகிற அநீதிகளுக்கெல்லாம் நஷ்டபரிகாரம் பெற நாராயணன் நாயருக்கும் கோபிக்கும் உரிமை இருக்கத்தான் செய்கிறது. அன்று அவர்களால் சர்க்காரிடம் அதைக் கோரவும் முடியும்.

அது ஓர் அருமையான திட்டமாக மாத்யூவுக்குத் தோன்றியது. நாளைய தினம் ஆட்சிபீடத்தில் அமரப் போகிற அமைச்சர்கள் அநுதாபத்துடன் அதைப் பரிசீலனை செய்வார்கள் என்பது திண்ணம். வீரப் போராட்டத்தில் அனைத்தையும் தியாகம் செய்த தியாகிகளின் பிரச்னையல்லவா?

அத்தியாயம் 22

பழிக்குப் பழி

சில நாட்களாகக் கேசவபிள்ளையை ஊர் அழைத்தது. அங்கே சென்று உறவினர்களைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம், மற்றவை அனைத்தை யும்விட அதிகமாக, எந்நேரமும் சுமையாக அவர் மனத்தை அழுத் தியது. இப்படி ஒரு நிலைமை அவருடைய வாழ்நாளில் ஒருபோதும் ஏற்பட் டதே இல்லை. இதற்குக் குறிப்பிடத் தக்கக் காரணமும் இல்லை. ஆனால், போவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தால்தானே? ஓய்வின்றி உழைத்துக் கொண்டிருந்தார் கேசவபிள்ளை.

ஒரு நாள் காலையில், அன்று ஊருக்குப் புறப்படுவதென்று தீர்மானித்து விட்டார். அப்போது போலீஸ் மூலமாக ஒரு செய்தி கிடைத்தது. உடனடியாக ஊருக்குக் கிளம்பி வரவேண்டுமென்று. என்ன சமாசாரம் என்று முதலில் சொல்லவில்லை. வற்புறுத்திக் கேட்டபோதுதான் தகவல் தெரியலாயிற்று.

பப்புப்பிள்ளை இறந்துவிட்டார்; கொலை செய்யப்பட்டிருக்கிறார். கொலையாளி அகப்படவில்லை. அடையாளம் கண்டுகொள்ளவும் முடிய வில்லை. அந்தி நேரம். நாமஜபம் செய்தவாறு பப்புப்பிள்ளை வீட்டு அங்கணத்தில் உலாவிக்கொண் டிருந்தார். குட்டியம்மா அருகில் இருந் தாள். கொலைகாரன் எங்கிருந்தோ ஓடிவந்து, கத்தியால் குத்திவிட்டான். பப்புப்பிள்ளை ஒரு வார்த்தைகூட உச்சரிக்கவில்லை. குப்புற விழுந்து விட்டார். குற்றவாளி ஓடிவிட்டானும்! இதுதான் சமாசாரம்.

குட்டியம்மா பிரக்ஞை இழந்து விழுந்துவிட்டாள். இன்னமும் அப்படியே படுத்துக் கிடக்கிறாள். காங்கிரஸ்காரர்கள் செய்த வேலை என்று போலீஸ் சந்தேகிக்கிறது. கேசவபிள்ளையையே கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் யாரோ ஒருசிலர் அவரைப் பின்தொடர்ந்து வரு கின்றனர். அந்த இரகசியக் குழுவினரில் ஒரு பகுதியினரே இந்தக் கொலை யைப் புரிந்திருக்கின்றனர் என்ற முடிவுக்கே போலீஸ் வந்திருக்கிறது. அந்தக் குழுவினரைக் கூண்டோடு கைது செய்யவேண்டுமென்ற கடுமை யான கட்டளை பக்தி விலாசத்திலிருந்து வந்திருக்கிறது. காங்கிரஸ் ஊழியர்கள் அல்லது காங்கிரஸின் ஆசியைப் பெற்றிருக்கிற கம்யூனிஸ்டு கள்தான் இந்தக் கொலையைச் செய்திருக்கிறார்கள். இருபத்துநான்கு மணி நேரத்துக்குள் அந்தக் குழுவினரைக் கைது செய்யவேண்டும்.

போலீஸ் படை சூழக் கேசவபிள்ளை ஊருக்குக் கிளம்பினார். வயோதி கரான கிட்டு மாமாவும், பப்புப்பிள்ளையின் நண்பர்களான மூன்று

நான்கு பேருமே அங்கே இருந்தனர். மற்றப்படி அந்தக் கிராமத்தைச் சேர்ந்த யாருமே அந்த வீட்டுக்கு வரவில்லை. பப்புப்பிள்ளை அருகே கண்ணீரும் கம்பலையுமாக அமர்ந்திருந்த கிட்டு மாமா கடவுள் நாமங்களை உச்சரித்துக்கொண்டிருந்தார். அண்டை வீட்டினரான மூன்று நான்கு பெண்களும், கௌரியம்மா, கார்த்தியாயினி, மகள் விஜயா ஆகியோரும் பிரக்ஞையற்றுக் கிடந்த குட்டியம்மாவை உபசரித்துக்கொண்டிருந்தனர். டாக்டர் வந்து பார்த்துவிட்டுத் திரும்பிச் சென்றார். குட்டியம்மாவுக்குப் பிரக்ஞை மட்டும் வரவில்லை. அந்த வீட்டில் மட்டுமின்றிக் கிராமம் முழுவதிலும் சீருடை அணிந்தவர்களும் அணியாதவர்களுமாகப் போலீஸார் நிரம்பியிருந்தனர்.

அன்று அந்தக் கிராமத்தில் போலீஸின் ஏகபோக ஆட்சிதான். காங்கிரஸ் அலுவலகம் சோதனையிடப்பட்டது. ஏராளமான தஸ்தாவேஜுகள் கிடைத்திருக்கின்றனவாம்! ஒரிரு நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டார்கள். துப்புத் துலக்க, விசாரணை நடத்த அண்டை வீடுகளிலுள்ள பெண்கள் உள்பட ஏராளமான பேர்களைப் போலீஸ் அழைத்துச் சென்றது. சில வீடுகள் சோதனையிடப்பட்டன.

கொலைகாரன் யார்? அவன் எங்கிருந்து வந்தான்? எங்கே போனான்? தகவல் வேண்டும். அந்த ஊரிலேயே யாராவது இந்தக் கொலையைச் செய்திருக்க வேண்டும் என்பதே போலீஸின் முடிவு. இந்த ஊர் மக்களுக்குத் தெரியாமல் போகாது. இவர்கள் சொல்லாமல் இருக்கிறார்கள்.

சில நாட்களுக்கு முன் சுதந்தரத் திருவாங்கூர் கோஷத்தைக் கண்டனம் செய்வதற்காக இந்த ஊரில் ஒரு பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. அந்தக் கூட்டத்தில் இந்த ஊரைச் சேர்ந்த ஓர் இளைஞன் பேசினான். அந்தப் பிரசங்கத்தில் கூறப்பட்ட சில பகுதிகள், இந்தச் சந்தர்ப்பத்தில் பொருள் படைத்தவையாக இருந்தன. 'இந்தக் கிராமத்தின் சந்ததி ஒருவன் பிணம் தின்னும் பேயாகிவிட்டது பரிதாபத்துக்குரியது. அந்த மனிதப் பிசாசின் பிறவிக்குக் காரணகர்த்தர்களாக இருக்கிறவர்கள் வெட்கித் தலைகுனியவேண்டும். அவர்கள் மாபாவிகள்!' இவ்வாறு இருந்தது அந்தப் பேச்சு.

ஆவேச மிகுதியால் துடித்துக்கொண்டிருந்த அந்த இளைஞன் இன்னும் பல விஷயங்களைப்பற்றிப் பேசினான். எங்கோ நடந்த ஒரு துப்பாக்கிச் சூட்டில் இறந்துவிட்ட ஒரு நபரைப்பற்றிப் பேசியபோது, அங்கே இறந்து கிடந்த போர்வீரனின் புதல்வன், தன் தகப்பனார் இறந்து கிடப்பதைப் பார்த்து எப்படிப் பொறுத்துக்கொண்டிருப்பான் என்று கேட்டான். அந்தச் சோகம் எப்படிப்பட்டது என்பதைக் கேசவபிள்ளை அறியவேண்டுமென்று அவன் உரத்த குரலில் சொன்னபோது கூட்டத்தினரில் ஒருவன் கூறினான், 'கேசவபிள்ளைக்கு இதயமே இல்லை' என்று. தொடர்ந்து நீடித்த கரகோஷம் முழங்கியது. அந்தப் பேச்சாளனைக் கடந்த இரண்டு நாட்களாக ஊரில் காணவில்லை. போலீஸ் அவனைத் தேடியது.

எல்லா வீடுகளிலும் அழுகையும், கூக்குரலுந்தான். போலீஸ், அழைத்துச் சென்றவர்களில் சிலரைக் கடுமையாக அடித்து உதைத்துத் துன்புறுத்தியிருக்கிறது. சிலர் கொலைவழக்கில் எதிரிகளாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றனராம்! போலீஸ் நிலையத்துக்குச் சென்று தகவல் அறிந்து வரக்கூட முடியாத நிலைமை. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் அந்தக் கிராமத்தில் மிகவும் பயங்கரமான நிலைமை நிலவுகிறது. அன்றைத் தினம் எந்த வீட்டிலும் சமையல்கூட நடைபெறவில்லை!

கேசவபிள்ளையின் முகம் கறுத்துப் போயிருந்தது. அவர் வாய்விட்டு அழாத குறைதான். மனத்துக்குள்ளே ஏதோ உருண்டு திரண்டு வெடித் தெழும் தருவாயில் இருப்பதுபோல் தோன்றியது. சீருடை அணிந்த போலீஸார் வந்து சலாம் செய்தனர். போலீஸ் அதிகாரிகள் சத்தம் செய்யாமல் வழிவிட்டு விலகி நின்றனர். யாரையும் கவனியாதவர்போல் பப்புப்பிள்ளையின் சடலத்தை நோக்கி நடந்து சென்றார். மூடியிருந்த துணியைச் சடலத்திலிருந்து அகற்றினார். தந்தை முகத்தை ஒருமுறை பார்த்தார். கிட்டு மாமா கதறியழுதார். பீறிட்டு வந்த அழுகையை அடக்குவதற்காகக் கேசவபிள்ளை உதடுகளை இறுகக் கடித்தவாறு நின்று கொண்டார்.

பின் அம்மாவிடம் சென்றார். கௌரியம்மா சொன்னாள்: ''அம்மா, கண்ணைத் திறந்து பாருங்கம்மா! கேசவன் வந்துட்டான்.''

'கேசவன்' என்ற வார்த்தை ஒரு தெய்விக மந்திரம்போல் இருந்தது. குட்டியம்மா கண்ணைத் திறந்தாள்.

கேசவபிள்ளை கூறினார்: ''அம்மா, இது நான்தாம்மா.''

பதில் திடீரென்று வந்தது: ''நீ கொண்ணுட்டே! உங்கப்பாவை நீதான் கொண்ணுட்டே. ஏண்டா, அந்த நல்ல மனுஷனை இப்படிக் கொண்ணுட்டே? எனக்கு இனி யாருமே இல்லேடா. என் தலை போச்சேடா.''

அந்தக் கண்கள் திரும்பவும் மூடிக்கொண்டன. கேசவபிள்ளையால் அங்கே நிற்கமுடியவில்லை. சிறிதுநேரம் அழுதுகொண்டிருக்க விரும்பினார். இரண்டு துளிக் கண்ணீரையாவது சிந்த வேண்டும், இல்லாவிட்டால் இதயமே வெடித்துவிடும்போல் இருந்தது.

கேசவபிள்ளை வீட்டு மனையின் மேற்குப் பகுதிக்குச் சென்றார். கற்சிலை போல் நின்றுகொண்டார். போலீஸ் அதிகாரிகள்கூட அவரிடம் செல்ல வில்லை.

வீட்டுக்குள்ளே கௌரியம்மா கார்த்தியாயினியிடம் கூறினாள்: ''நீ அவன்கிட்டே போயி நில்லு! அம்மா தலையை என் மடிமேல் வச்சுக்க றேன்.''

''இல்லை. இப்போ அவர்கிட்டே போவப் போவதில்லை. நான் அசைஞ்சா அம்மாவோட அமைதி கெட்டுப் போயிடும்.''

சில நிமிஷங்கள் கடந்து சென்றன. குட்டியம்மா கண் திறந்தாள். சிறிது வாய் திறந்தாள். நீருக்காக! கார்த்தியாயினி நீரை ஊற்றினாள். அந்தக் கண்கள் என்றென்றைக்குமாக மூடிக்கொண்டன.

வீட்டுக்குள்ளே இருந்து அழுகைக் குரல்கள் வெடித்துக் கிளம்பின. கேசவபிள்ளையின் உதடுகள் துடித்தன. அடக்க முயன்றும் அவை அடங்க வில்லை. கண்களிலிருந்து அவர் அறியாமலேயே கண்ணீர்த் துளிகள் உதிர்ந்து விழுந்தன. ஆனால், அந்த நிலை தொடர்ந்து நீடிக்க அவர் அநுமதிக்கவில்லை. முகத்தைத் துடைத்துவிட்டுச் சாதாரண நிலைக்கு வரமுயன்றார். வெளித் தோற்றத்தில் அவர் அவ்வாறு காட்சியளித் தார். ஆயினும், அவர் அழுதார் என்பதில் சந்தேகம் இல்லை.

பப்புப்பிள்ளையின் பிரேதப் பரிசோதனை நடந்தது. இன்னொரு பக்கத்தில் குட்டியம்மாவின் சடலத்தைக் குளிப்பாட்டிக்கொண் டிருந்தனர். குட்டி யம்மா, எடுத்ததற்கெல்லாம் நிமிஷத்துக்கு நிமிஷம் யார் யாருடன் சண்டை போடுவதும், உடனே நேசமாவதுமாக இருந்தாளோ, அத் தகைய மூன்று நான்கு கிழவிகளும், கௌரியம்மாவும், கார்த்தியாயினி யுமே அவளைக் குளிப்பாட்டினர்கள். அந்தக் கிராமத்தில் யாராவது இறந்துவிட்டால், குட்டியம்மா 'இளவு வீட்டு'க்கு விரைந்து செல்வது வழக்கம். ஈமக் கிரியைகள் அனைத்தும் முடிந்த பின்பே அவள் திரும்பி வருவாள். ஏன் அப்படி என்கிறீர்களா? மகளிடத்திலும், மகனிடத்திலும் அதைப்பற்றி அவள் சொல்லுவாள்:

''நான் செத்துப் போனா, என்னைக் குளிப்பாட்டணும். விபூதி, சந்தனம் அணிவிக்கணும். அதுக்கெல்லாம் கிராமத்துப் பொம்புளேங்க வரணும். இந்தக் கட்டையைச் சுட்டெரிக்கக் கட்டைங்களை அடுக்கிச் சிதையைக் கூட்டி வச்சுக்க ஆம்புளேங்க வரணும். அதுக்குத்தான் யாராச்சும் செத்தா, நான் அங்கே போயிட்டு வர்றேன். நீயோ, தம்பியோட பொண்டாட்டியோ மட்டும் நெனச்சா அது நடக்குமா?''

இவ்வாறுக, தான் செத்துக் கிடக்கும்போது தேவையான கருமாதி களைச் செய்ய கிராமத்துப் பெண்களும், ஆண்களும் திரளாக வரவேண்டும் என்பதற்காக அவள் வாழ்நாள் முழுவதும் உழைத்ததெல்லாம் வீணாகி விட்டது. குட்டியம்மாவின் சடலத்தைக் குளிப்பாட்டுவதற்காக எடுத்துச் சென்றவர்கள் கௌரியும், கார்த்தியாயினியும் மட்டுந்தான். மற்றவர்கள் படுகிழவிகள்.

பப்புப்பிள்ளைகூட 'இளவு வீடு'களுக்குத் தவறாமல் சென்று வந்தவர் தாம். போகாமல் இருந்தால் அவரைக் குட்டியம்மா திட்டிவந்தாள். அத்துடன் ஓர் எச்சரிக்கைகூட: ''எல்லாருக்கும் உள்ளதுதான் இது என்பதை ஞாபகத்திலே வச்சுக்குங்க!''

ஆனால், அந்த இழவு வீட்டுக்குக் கிராமத்துப் பெண்களோ, ஆண் களோ செல்லவில்லை. போலீஸ் படைதான் சென்றிருந்தது. வேறு சில சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் சென்றிருந்தனர். அவர்கள் எல் லாரும் சேர்ந்து வீட்டுமனையின் தென்முனையில் ஓர் இடத்தில் பக்கம்

பக்கமாக இரண்டு சிதைகளைக் கூட்டி வைத்தனர். மாமரத்தை* வெட்டி விறகாக்கிடும் வேலையைப் போலீஸ் படை மேற்கெண்டது.

பப்புப்பிள்ளை காலையில் எழுந்து வயலுக்குச் செல்லும்போதும், திரும்பும்போதும் பாதையோரத்திலுள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று க்ஷேமநலன்களை விசாரித்து வருவார். பப்புப்பிள்ளை அனைவரையும் நேசித்தார். அனைவரும் அவரை நேசித்தனர். யாரிடமும் சண்டை சச்சரவுகளுக்குப் போனதில்லை. யாரும் அவரிடமும் வந்ததில்லை. எந்த உதவி தேவைப்பட்டாலும் செய்து கொடுப்பார். அவரைப் பொறுத்தமட்டில் உதவியளித்த கதைகள் அனந்தம். பப்புப்பிள்ளை உயிர் வாழ்ந்த காலத்தில் அவருக்காக எதை வேண்டுமானாலும் செய்து கொடுக்கக் கிராமத்து மக்கள் தயாராக இருந்தனர்.

இப்போது, அவர் செய்த தவறுதான் என்ன? ஒரு மகன் பிறந்தானே, அதுவா? கடவுளுக்கு நன்றி சொல்லியவாறு குட்டியம்மா அடிக்கடி சொல்வதுபோல், சூரியன்போன்று ஒரு மகன் பிறந்தானே, அதுவா? அந்த மகன் இந்தக் கிராமத்திலே தங்கியிருந்தான் என்றால் . . . ? வேண்டாம், அதைப்பற்றியொன்றும் சிந்திக்கவேண்டாம்.

* * *

சிதைகள் சுடர்விட்டு எரிந்தன. நெருப்பின் நாக்குகள் பரஸ்பரம் இணைந்தன. கறைபடியாமல் புனிதமாயிருந்தது அவர்கள் வாழ்க்கை என்று சொல்ல யாரும் இல்லை. பச்சைநிறப் போர்வையை போர்த்தி, துண்டு வேஷ்டியைத் தலையிலே கட்டித் தடியை ஊன்றியவாறு வயல் வரப்பு வழியாக நடந்துசென்ற அந்த உருவத்தை நாளையிலிருந்து யாருமே பார்க்கமுடியாது. எங்கேயாவது ஒரு பெண்ணுக்குப் பிரசவ வேதனை என்று கேள்விப்பட்டால் அங்கவஸ்திரத்தை எடுத்துப் போர்த்தியவாறு அந்த இடத்துக்கு விரைந்துசென்ற கிழவித் தாயை இனிமேல் யாராலும் பார்க்கமுடியாது.

சிதைகள் அடங்கிவிட்டன. கார்த்தியாயினி இதயம் வெடிக்குமாறு 'அம்மா! அப்பா!' என்று கதறியழுதுகொண்டிருந்தாள். அதற்குப் பதிலளிப்பது போன்று சிதைகளின் நெஞ்சுப் பகுதிகளிலுள்ள நெருப்புக் கனல்கள் ஜொலித்துக்கொண்டிருந்தன. சிறிது நேரத்துக்குப் பின் அவையும் சாம்பலாகிவிடும்.

அப்போது அங்கே தபால்காரர் ஒருவர் வந்தார். கேசவபிள்ளையிடம் ஒரு கவரைக் கொடுத்து வணங்கிவிட்டுச் சென்றார். கேசவபிள்ளையின் வீட்டு விலாசத்துக்கு வந்த கடிதம் அது. கடிதத்தைப் பிரித்துப் படித்தார்.

---

* நாயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் யாராவது இறந்துவிட்டால், பச்சை மாமரத்தை வெட்டி விறகாக்கிச் சிதை அமைத்துச் சடலத்தை அதில் வைத்தே சுட்டெரிக்க வேண்டுமென்ற ஒரு சம்பிரதாயம் இருந்துவருகிறது. (மொ–ர்).

'இந்தக் கடிதம் எழுதுகிறவனுடைய பெயர் முகுந்தன். என்னுடைய தந்தையின் பெயர் கோபாலன் நாயர். நீங்கள் அடித்துக் கொன்றுவிட்டு மரக்கிளையில் கட்டித் தொங்கவிடவில்லையா? அந்தக் கோபாலன் நாயர்! நீங்கள் ஒருமுறை என்னை ஒரு திருட்டு வழக்கில் சிக்க வைத்துச் சிறைக்கு அனுப்பினீர்கள். நான்தான் உங்கள் தந்தையைக் கொன்றது. அந்தச் சோகம் எப்படியிருக்கும் என்பதை நீங்களும் அறியவே உங்கள் தந்தை யைக் கொன்றேன். நான் உணர்ந்ததுபோல் நீங்கள் அறியமாட்டீர்கள். ஆயினும், எனக்கு அதிலே ஒரு திருப்தி. யாரையும் சந்தேகப்படவேண் டாம். உங்களைக் குறி பார்த்து நான் பல நாட்கள் நடந்தேன். நான் விரும்பியது அதைத்தான். ஆனால், இந்தச் சுமையைத் தாங்கி நடக்க என்னால் இயலவில்லை. உங்கள் தந்தைக்குத்தான் இந்தத் தலைவிதிபோல் இருக்கிறது. கடிதத்தை முடித்துக் கொள்ளுகிறேன்.'

கேசவபிள்ளைக்குத் தலை சுற்றுவதுபோல் தோன்றியது. நிற்க முடிய வில்லை. ஆனால், அவர் கீழே விழுந்துவிடவில்லை. சற்றுத் தொலைவில் நின்றிருந்த டி. எஸ். பி.யைப் பார்த்து அந்தக் கடிதத்தை நீட்டினார். டி. எஸ். பி. அதை வாங்கினார். உயர் ரகப் போலீஸ் அதிகாரிகளும் அப்போது நெருங்கி வந்தனர்.

நீண்டு நீண்டு சென்ற சிவப்பு நாடா, நிரபராதியான பப்புப்பிள்ளையின் கழுத்திலேதான் காலன் கயிறாக வந்து விழுந்தது. அரசாங்கத்தின் கிராம அலுவலகம் முதற்கொண்டு, திருவனந்தபுரத்திலுள்ள தலைமைச் செயலகம் வரையிலுள்ள அத்தனைக் காரியாலயங்களிலும் குடிபுகுந்து வெளியேறிய எத்தனை எத்தனையோ எசமானர்களும், ஐயாமார்களும், ஸார்மார்களும் கட்டவிழ்த்துவிட்ட சிவப்பு நாடா அல்லவா, அது? அதன் ஒரு நுனியைக் கேசவபிள்ளை ஸாரும் தொட்டுப் பார்த்திருக்கிறார். அந்த நாடா இன்னும் நீண்டு போகுமா?

மறுபக்கத்தில், போலீஸ் அதிகாரிகள் குழுவாக அமர்ந்து, பிரச்னையை ஆழமாகச் சர்ச்சை செய்தனர். முகுந்தன் என்பவனையும், அவனுடைய தகப்பனாரையும்பற்றிய கூடுதல் விவரங்கள், அரசியல் இலாக்காப் பொறுப்பையும் வகித்து வரும் அபிவிருத்தி இலாக்காக் காரியதரிசியான கேசவபிள்ளைக்குத் தெரியும். ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தில் அவரை எவ்வாறு அணுகிக் கேட்பது?

ஓர் இன்ஸ்பெக்டர், கோபாலன் நாயர் தற்கொலை செய்துகொண்டது விஷயமாகப் பேசினார்.

இந்த முகுந்தன் என்பவன் ஒரு காங்கிரஸ்காரன் என்பது ஏ. எஸ். பி.க்குத் தெரியும். இங்குள்ள காங்கிரஸ்காரர்களின் ஆதரவும் ஆசியும் இல்லாமல் இருந்தால் அவனால் இந்தக் கொலையைச் செய்திருக்க முடியாது. இது இங்கே நடைபெற்ற ஒரு சதியாலோசனை. காங்கிரஸ் தலைவர்களுக்கு இது சம்பந்தமான தகவல் தெரிந்திருக்கவேண்டும். அவர்களுடைய தூண்டுதல்கூட இந்த விஷயத்தில் இருந்திருக்கவேண்டும். எல்லா அதிகாரிகளும் இந்த முடிவுக்கு வந்துவிட்டனர்.

இன்னொரு விஷயந்தான் டி. எஸ். பி.யை அலைக்கழித்துக்கொண் டிருந்தது: 'அவன் தலைமறைவாகச் சென்றிருக்கிறான். அவனுக்கு இந்தக் கொலையால் மட்டும் திருப்தி ஏற்பட்டிருக்காது. அவனுடைய குறிக்கோளெல்லாம் ஐயாமீதுதான். அவனை எப்படியாவது பிடிக்க வேண்டுமே.'

அவன் வெகுதூரம் சென்றிருக்கமாட்டான் என்றே ஏ. எஸ். பி. கருதினர். இந்தக் கிராமத்திலோ, பக்கத்துக் கிராமத்திலோதான் இருப்பான். ஊர் முழுதும் அவனுக்கு ஆதரவு அளிக்கிறது. எனவே, ஒளிந்திருக்க அவனுக்குக் கஷ்டம் இல்லை?

ஆலப்புழையிலிருந்தே கடிதத்தைத் தபால் பெட்டியில் போட்டிருக் கிறான். சம்ஸ்தானம் முழுவதிலுமுள்ள போலீஸ் நிலையங்களுக்கெல்லாம் குற்றவாளி சம்பந்தமான தகவலை அனுப்பியாகிவிட்டது.

நாட்டை நடுங்க வைத்த கொலை இது. யாருக்கும் எந்தவிதமான தீங்கையும் இழைக்காத ஒரு நல்ல மனிதன் கொலை செய்யப்பட்டிருக் கிறான். பத்திரிகைகள் மிகவும் முக்கியத்துவம் அளித்து இந்தச் செய்தி யைப் பிரசுரித்தன. போலீஸின் முயற்சியின்றியே, காதகன் ஒரு காங்கிரஸ்காரன்தான் என்ற கருத்து ஊர் முழுவதும் பரவியது. அது காங்கிரஸின் மதிப்பைக் குறைக்கிற ஒரு காரியமுமாகும். பாவம்! அந்தப் படுகிழவன் என்ன தவறு செய்தான்? அவரைக் கொன்றிருக்கக் கூடாது என்றே அனைவரும் கூறினர். கொலையாளியின் பெயர் முகுந் தன் என்பதைப் பிறகே அறிந்துகொண்டனர்.

காங்கிரஸ் தலைமை ஓர் அறிக்கையை வெளியிட்டது. இந்தக் கொலைக் கும், காங்கிரஸுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றும், முகுந்தன் காங்கிரஸ்காரன் அல்ல என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிட் டிருந்தது. இந்தக் கொலையைக் காங்கிரஸ் கடுமையாகக் கண்டித்தது. இறந்தவரின் ஆத்மா நித்திய சாந்தியடைய வேண்டுமென்று பிரார்த்தித் தது. குற்றவாளியைப் பிடித்துக் கொடுக்கப் போலீஸுக்கு உதவி செய்வ தாகவும் வாக்குறுதி அளித்தது. பொதுக் கூட்டங்களில் தலைவர்கள் இவ்வாறெல்லாம் பேசவும் செய்தனர். ஆயினும், மக்கள் இந்த அறிக்கை யையும், பிரசங்கங்களையும் அவ்வளவு தூரம் நம்பத் தயாராகவில்லை.

பப்புப்பிள்ளை, குட்டியம்மா ஆகியோருடைய 'அஸ்தி பெருக்குதல்' (ஸஞ்சயனம்)* முடிந்தது. 'புலை'† முடிந்துதான் கேசவபிள்ளை திருவ னந்தபுரத்துக்குப் போவார். சம்பிரதாய முறையிலுள்ள கருமாதி

---

* எரிக்கப்பட்ட பிணத்தின் அஸ்திகள் சாம்பலாகிவிடாதல்லவா? மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று ஆகிய தகனக்கிரியைக்குப் பின்னருள்ள ஒற்றை நாட்களில் சிதையி லிருந்து அஸ்திகளைப் பெருக்கியெடுத்து, கங்கா போன்ற புண்ணிய தீர்த்தங்களில் சௌகரியம் போல் சென்று கரைப்பதற்காக கமுகுப் பட்டையில் கட்டி, பலா மரத்தடியிலே புதைத்து வைப்பார்கள் (மொ–ர்).

† ''புலை.'' பதினறு நாட்கள் வரையில் இதை அனுஷ்டிப்பார்கள். இந்தச் சமயத்தில் இழவு வீட்டைச் சேர்ந்தவர்கள் கோவில் குளங்களுக்குச் செல்லக்கூடாது (மொ–ர்).

கள், சடங்குகள் அனைத்தும் கவனத்துடன் நடந்துவந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக மேலாளராக நின்று அனைத்துக் கருமாதிகளையும் நடத்தியவர் கிட்டு மாமாதான். போலீஸார் கொலைகாரனையும், கொலையையும்பற்றிய தகவல்களைச் சேகரிக்க முடிந்த அளவு முயன்றனர். அந்தக் கிராமத்தில் போலீஸார் அழைத்துச் சென்று விசாரிக்காத ஆடவனே இல்லை. சில நபர்களைச் சில நாள் அடைத்தும் வைத்திருந்தனர். பெண்களைக்கூட விசாரிப்பதற்காக அழைத்துச் செல்லவேண்டும் என்று யோசித்தார்கள். பெண்கள் உண்மையைச் சொல்லிவிடுவார்களாம். எட்டு, பத்து வயதுள்ள சிறுவர்களைக்கூடப் போலீஸ் விட்டு வைக்கவில்லை.

* * *

அந்த ஊருக்கு வந்த அன்றைத் தினத்திலிருந்தே கார்த்தியாயினிக்கு மிகவும் நெருங்கிய சிநேகிதியாக இருந்தவள் காலாப்புறத்து வீட்டு நாணிக்குட்டி. அவர்களுக்கிடையே இரகசியம் ஏதும் இல்லை. பத்து நிமிட நேரம் ஓய்வு கிடைத்தால் போதும், நாணிக்குட்டி கார்த்தியாயினி வீட்டுக்கு வந்துவிடுவாள். கார்த்தியாயினியும் அவ்வாறே நடந்து வந்தாள். தினசரி பத்துத் தடவையாவது அவர்கள் இருவரும் சந்திப்பது வழக்கம். இவ்வளவு நேரம் பேச விஷயந்தான் என்னவோ? பலர் கேட்டனர். வெறும் கேசவனுடைய மனைவியாகக் கார்த்தியாயினி அந்த ஊருக்குக் காலெடுத்து வைத்த நாள் முதல் திருவாங்கூர் சம்ஸ்தானத்தில் திவான்ஜிக்கும் அடுத்தப் பிரமுகராகத் திகழும் கேசவபிள்ளையின் மனைவியாக வாழ்கிற இன்றைத் தினம் வரையிலும் அவ்விரு பெண்களின் நட்புறவிலே எந்தவிதமான மாறுதலும் ஏற்பட்டதில்லை. நாணிக்குட்டியின் நிலைமை சற்று மோசமடைந்தது. ஆயினும், தொடக்கம்போலவே ''வாடீ!'' ''போடீ'' என்றுதான் ஒருவரை மற்றவர் அழைத்து வந்தார்கள்.

நாணிக்குட்டியின் கணவனுக்குக் குறிப்பிட்ட வேலை எதுவுமில்லை. ஒரு துண்டு நிலம் இருந்தது. ஆலப்புழையிலுள்ள கயிறு தொழிற்சாலையில் வேலை செய்யும் ஒரு தொழிலாளி அவர்களுடைய மூத்த மகளை மணந்திருக்கிறான். புன்னப்பரா—வயலாறு போராட்டத்தில் அவன் பங்கெடுத்திருந்தானும். ஆனால் அன்று போலீஸ் கையில் சிக்காமல் தப்பித்துக் கொண்டான். அன்று அவன் ஒரு தீவிரக் கம்யூனிஸ்டாக இருந்தான். பின்பு காங்கிரஸ்காரனாக மாறிவிட்டான் என்று சொல்லுகிறார்கள். போலீஸார் அவனுடைய பழைய வரலாற்றின் அடிப்படையில் சந்தேகப்பட்டு அவனை விசாரித்தனர். ஒரு துப்பும் துலங்கவில்லை. உதைக்கவுங் கூடச் செய்தனராம்.

பப்புப்பிள்ளை இறந்த மறுநாள் நாணிக்குட்டி கார்த்தியாயினி வீட்டுக்குச் சென்றிருந்தாள். சோகமே உருவாகியிருந்த சிநேகிதிக்கு

ஆறுதல் மொழிகள் கூறினாள். அன்று மாலை பாச்சன்பிள்ளையைப்—நாணிக்குட்டியின் மருமகனை—போலீஸ் அழைத்துச் சென்றது. கார்த்தியாயினியைப் பார்த்து இந்தச் செய்தியைப்பற்றிக் கூறவேண்டுமென்று அன்றிரவே கிளம்பினாள் நாணிக்குட்டி. ஆனால், இரவு வேளையில் அந்தப் போலீஸ் முகாமுக்குப் போகவேண்டாமென்று மற்றவர்கள் யோசனை கூறி, தடுத்து நிறுத்தினார்கள். மறுநாள் காலையில் நாணிக்குட்டியைப் போலீஸ் அழைத்துச் சென்றது.

ஊர் மக்கள் யாருமே கார்த்தியாயினி வீட்டுக்குச் செல்லமாட்டார்கள். போலீஸுக்குப் பயந்தே அவர்கள் வராமல் இருக்கின்றனர் என்று கார்த்தியாயினி எண்ணிக்கொண்டாள். அவளுக்கு ஊரில் என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை. கிட்டு மாமா இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் ஒருமுறை வெளியே சென்று வந்தார். ஒவ்வொரு வீட்டிலும் நடைபெறுகிற நிகழ்ச்சிகளைப்பற்றிச் சொன்னார். அப்போதுதான் நாணிக்குட்டியைப் போலீஸ் அழைத்துச் சென்ற தகவல் கார்த்தியாயினிக்குக் கிடைத்தது.

கார்த்தியாயினி நடுங்கிவிட்டாள். கிட்டு மாமா சொன்னார்: ''இந்தக் கிராம மக்களுக்குத் தெரியாமே இந்தக் கொலை நடந்திருக்காதென்றே போலீஸ்காரங்க சொல்றுங்க.''

கார்த்தியாயினி உணர்ச்சியுடன் கூறினாள்: ''பொய்! பொய்! பச்சைப் பொய்! அப்பாவைக் கொலை செஞ்சது யாருன்னு என்னோட நாணிக்குட்டிக்குத் தெரியும்னு சொல்றுங்க?''

கிட்டு மாமாவுக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது. கிடைத்த தகவலைச் சொன்னார். போலீஸார் இந்த ஊரிலுள்ள யாரையும் விட்டுவைக்க மாட்டார்கள். பெண்களை மட்டுமின்றிக் குழந்தைகளைக் கூட அழைத்துச் செல்லத் தொடங்கியிருக்கின்றனர். அவர் இவ்வாறு சொல்லி முடித்தார்: ''நாணிக்குட்டி நல்லவளாக இருக்கலாம். ஆனா அந்தப் பாச்சன் இருக்கானே, அவன் படுமோசம்! உனக்குத் தெரியாதம்மா! அவன் புன்னப்பராவிலே மூங்கில் ஈட்டியாலே எத்தனை பேரைக் குத்திக் கொலை செஞ்சிருக்கான் தெரியுமா?''

கார்த்தியாயினி அதை ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை. அவள் சொன்னாள்: ''கிட்டு மாமா, நீங்க என்ன சொன்னாலும் சரி, இந்த ஊரில் பிறந்து வளர்ந்தவங்களில் ஒருவன்கூட, அப்பா முகத்தைப் பார்த்து இப்படிச் செய்யமாட்டான். அப்பாகிட்டே யாருக்குமே பகை இருக்க முடியாது. அப்படிப் பகை ஏற்பட அவர் என்ன செய்தார்? அவருக்குக்கூட யார் கிட்டேயும் பகைமை கிடையாது. இந்தப் போலீஸ் பிசாசுங்க சும்மா கொடுமைப்படுத்தறுங்க.''

ஒரு விநாடிக்குப் பின் கார்த்தியாயினி தொடர்ந்து கூறினாள்: ''நான் ஒண்ணு கேக்கறேன், இந்த ஏழை ஜனங்களை ஏன் இப்படிச் சித்திரவதை செய்றுங்க? அப்பாவோ இறந்துட்டாரு. இனிமே இந்த ஊர் மக்களை எதுக்காக எதிரிகளாக்கறுங்க?''

மகளே அருகே அமரவைத்து கொஞ்சிக்கொண் டிருந்தார் கேசவ பிள்ளை. கார்த்தியாயினி துணிச்சலுடன் அவர் முன்னால் சென்று கேட்டாள்: ''என்ன நெனைச்சுத்தான் இப்படிச் செய்ய வைக்கிறீங்க?''

கேசவபிள்ளை மனைவி முகத்தைப் பார்த்தார். இந்தத் தோற்றத்தில், அதட்டுகிற குரலில் அவள் வாழ்நாளில் ஒரே ஒரு தடவைதான் அவரிடம் பேசியிருக்கிறாள். சில வருஷங்களுக்கு முன்னால், அப்பாவும் அம்மாவுமே தன் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கிறார்கள் என்று அவர் சொன்னபோது, ''என்ன சொன்னீர்கள்?'' என்று அதட்டும் குரலில் கார்த்தியாயினி கேட்டாள். தாய் தந்தையரின் பாதங்களில் விழுந்து மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று அவள் கட்டளையிட்டாள். அன்றுதான், எழுதப் படிக்கத் தெரியாத, உலகமே அறியாத, நாகரிகப் பழக்க வழக்கங்களையும், அறநெறிகளையும் கற்றிராத அந்தக் கிராமப் பெண் முதல் முதலில் தன் மனவலிமையை வெளிக்காட்டினாள். அந்த மனவலிமைக்கு அடிப்படையான பண்பும் வாழையடி வாழையாக வந்த வைதான். இன்றும் அதே வலிமை, கட்டளையிடுகிற சக்தியாகப் பொங்கி எழுந்திருந்தது.

கேசவபிள்ளை, அவள் கேள்விக்குமுன் சற்றுச் சுருங்கிவிட்டார் போல் தோன்றியது. அவர் நிமிர்ந்து நின்று விடையளிக்கவேண்டிய கேள்வி அது. கார்த்தியாயினி திரும்பவும் கேட்டாள்: ''என்ன நெனைச்சுக் கிட்டுத்தான் இப்படியெல்லாம் பண்ணறீங்க?'' குரல் மிகக் கடுமையாக இருந்தது. கேசவபிள்ளை கேட்டார்: ''ஊம்? என்ன?''

''ஊர் மக்களைப் பூராவும் உதைச்சுக் கொல்ல வைக்கப் போறீங் களா?''

கேசவபிள்ளைக்கு விஷயம் புரிந்துவிட்டது. அதுதான் விஷயமென்றால் அவரால் பதில் சொல்லமுடியும். துணிச்சல் பிறந்தது.

''நீ போய் உன் வேலையைப் பார்! இது அரசாங்கம் சம்பந்தப்பட்ட விஷயம். இதிலே நீ தலையிடவேணும்.''

வாழ்க்கையிலேயே முதல் முறையாக அவள் கணவரிடம் வாதம் செய்யத் தயாரானாள். ஏதாவது வேறு விஷயமாக இருந்திருந்தால், வேறு சந்தர்ப்பமாக இருந்திருந்தால், தனக்குப் புரியாத, தலையிடத் தகுதியற்ற ஒரு காரியமாகக் கருதி அவள் அத்துடன் நின்றிருப்பாள். இது அந்தக் கிராமத்திலுள்ள ஆண், பெண் அனைவரும் சம்பந்தப்பட்ட காரியமாகும். அவளுடைய அருமைத் தோழி நாணிக்குட்டி சம்பந்தப் பட்ட காரியம். சும்மா இருக்கமுடியுமா? அவள் சொன்னாள்:

''இந்தப் போலீஸ் சொல்லறதெல்லாம் பொய். இந்த ஊரிலுள்ள யாருமே இதைச் செய்யமாட்டாங்க. இப்படிச் செய்ய நெனைச்சுக்கூடப் பார்க்கமாட்டாங்க. அப்பா அப்படித்தான் வாழ்ந்து வந்தார். மக்களும் அவரை அப்படித்தான் பார்த்து வந்தாங்க.''

கேசவபிள்ளையின் முகம் சிவந்தது. கணவர் என்பதைவிட அதிகாரம் படைத்த ஓர் உத்தியோகஸ்தர் அவர்.

''உம்! நிறுத்து! நீ உன் வேலையைப் பார்!''

கார்த்தியாயினி விட்டுக் கொடுக்கவில்லை.

''ஏழை மக்களை எல்லாம் இப்படிக் கொல்லவச்சா கடவுள் விடமாட்டாரு. குடும்பத்துக்குத்தான் அந்தச் சாபம் வந்து விழுந்துடும். எல்லாரும் சேர்ந்துதான் அனுபவிக்கணும். அதனாலே இது என் விஷயமும் கூடத்தான்.''

கேசவபிள்ளை காதில் அது விழவில்லைபோல் தோன்றியது. அவர் சுயமாகப் பேசுவதுபோல் பேசினார்:

''என் தந்தையைக் குத்திக் கொலை செய்தபின் . . .''

கார்த்தியாயினி கேசவபிள்ளையிடம் கேட்டாள்: ''யார் அதைச் செஞ்சாங்க? செஞ்சவங்களை உதைச்சுக் கொல்லச் சொல்லுங்கோ. நாணிக்குட்டி செஞ்சாளா? கல்யாணிக்குட்டி செஞ்சாளா? நான் நம்ப மாட்டேன்.''

கேசவபிள்ளை அவளை ஒரு முறை மிகக் கடுமையாகப் பார்த்தார். அது ஒரு கணவருடைய பார்வை. தொந்தரவு செய்கிற மனைவியைப் பார்க்கின்ற பார்வை. அந்தப் பார்வைக்கு முன்னால் அவள் சிறிது பயந்துவிட்டாள். அவள் கண்களில் நீர் நிறைந்தது.

''நான் இங்கே வந்த நாளிலேருந்து இந்த நாணிக்குட்டி, கல்யாணிக்குட்டி, குஞ்ஞீக்குட்டி ஆகியவங்க என்னோட சிநேகிதிங்களா இருந்து வர்றுங்க. எங்களுக்கு உடல் மூணு. ஆனா உயிரு ஒண்ணுதாங்க. எனக்கு வீடும் நிலமும் எல்லாம் இருக்கு. என் குழந்தையோட அப்பா பெரிய உத்தியோகஸ்தரு. அதனாலே என் சிநேகிதிங்களுக்குத்தான் ஆபத்தாப் போச்சு. பாவம், நாணிக்குட்டி இப்போ ஜயில்லே . . .''

கார்த்தியாயினி பேசி முடிக்கவில்லை. அதற்குள் கணவரின் கடுமையான ஆக்கினை கிளம்பியது:

''உம்! நிறுத்து!''

அவள் நிறுத்திக்கொண்டாள். சொல்லவேண்டியது முழுதும் சொல்லி முடிக்கவில்லை.

இந்த நிலைமையில் இன்னொரு பெண்ணாக இருந்திருந்தால், அவள் இந்தப் பிரச்னையை எப்படிச் சமாளித்திருப்பாளோ, என்னவோ? ஆனால் கார்த்தியாயினிக்கு இப்படித்தான் சொல்லத் தெரிந்தது, நடந்து கொள்ளத் தெரிந்தது. அவர், அவள் சொல்வதைப் புரிந்துகொள்ளக் கூடிய கணவரும் அல்ல. அந்தச் சிநேகிதிகளுக்கும், அவளுக்குமிடையில் இருந்துவந்த நட்பை அவருக்கு எப்படி உணர்த்தவேண்டுமென்று அவளுக்கு விளங்கவில்லை. அழுதபடி சொன்னாள்: ''இனிமேல் எனக்கு யார்தாங்க ஒரு துணை? அப்பா போயிட்டாரு, அம்மா போயிட்டாங்க. நாணிக்குட்டி, கல்யாணிக்குட்டி, குஞ்ஞீக்குட்டி ஆகியவங்களும் இப்போ எதிரிகளாயிட்டாங்க. இனிமேல் அவங்க என்னைப் பார்த்தாப் பேசவே மாட்டாங்க. நான் இப்படித் தனியாயிட்டேனேன்னு நினைப்பாங்க. என்னை நம்புவாங்களா? எனக்கு யாருமில்லையே . . .''

அவளுடைய இந்த நாதியற்ற நிலைமையைக் கேசவபிள்ளையால் புரிந்துகொள்ள முடியவில்லை. அது அவருக்குப் புரியவும் செய்யாது. அவருக்குத்தான் யார் இருக்கிறார்கள்? அன்பே உருவான தாய் தந்தை யார்கள் இருந்தார்கள். அந்த அன்பிலிருந்து கிடைத்த ஆறுதலை அவர் ஒருபோதும் கோரியதில்லை. நேசிக்கிற மனைவி இருக்கிறாள். அவளது ஆறுதல் மொழிகளையும் புறக்கணிக்கிறார். ஊர் முழுதும் அவருக்குப் பகை. அவருக்கு இது தெரியுமா?

கார்த்தியாயினி உருக்கமாக வேண்டினாள்:

''என்னோட நாணிக்குட்டியை விடுவிச்சுத் தாங்க! இந்தக் கொழந்தையை எண்ணி . . . மேலே இருந்து நம்மைப் பார்த்துக் கிட்டிருக்கிற அப்பாவையும் அம்மாவையும் எண்ணி . . .''

கேசவபிள்ளை உறுமினார். ''நீயும் உன்னோட நாணிக்குட்டியும். அந்தத் தரித்திரங்களோடுதான் உனக்குச் சகவாசம்!''

நாணிக்குட்டியுடன் உள்ள நட்பு தவறானதென்று கணவர் கருதுகிறார். அதற்குப் பதில் சொல்லவேண்டுமா? அவள் சொன்னாள்:

''நான் இங்கே வந்தப்போ மொத மொதல்லே அவங்களோடதான் அறிமுகமானேன். நேசிக்க வேறு சினேகிதிங்க எனக்குக் கிடைக்கல. அவங்களும் என்னோட நேசமாயிருந்தாங்க. அது என்னோட தவறு இல்லே. நானுத் தேடிப் போயி சினேகிதம் பண்ணிக்கிட்டதும் அல்ல.''

மனிதத் தன்மையற்ற கொடூரத்துடன் கேசவபிள்ளை கூறினார்:

''உன்னுடைய நாணிக்குட்டி சிறையிலேயே படுத்துச் சாகிறதா யிருந்தா, அங்கேயே செத்துத் தொலையட்டும். ஊர்க்காரங்களும் தொலையட்டும்.''

கார்த்தியாயினி நடுங்கிவிட்டாள். அந்த நடுக்கத்துடன் அவளுடைய ஆத்மாவிலிருந்து ஏதோ ஒன்று கிளர்ந்தெழுந்தது. அவளுக்குத் தெரியாமலேயே அவள் வாயிலிருந்து ஒரு கேள்வி உதிர்ந்து விழுந்தது: ''இந்தச் சொத்தும், பணமும், அதிகாரமும் எல்லாம் எதுக்காக? நான் கேக்கறேன், எதுக்காகன்னு?''

கார்த்தியாயினி நிறுத்திக்கொள்ளவில்லை: ''அப்பா இங்கே எப்பவும் சொல்லிக்கிட்டிருப்பாரு, இதெல்லாம் மற்றவங்களுக்கு நல்லதைச் செஞ்சு கொடுக்கறதுக்காகன்னு!''

நம் செயல்கள் எப்படி அமைந்திருக்கவேண்டும் என்பதைக் குறிப்பாக உணர்த்தியாகி விட்டது என்ற திருப்தி அவளுக்கு ஏற்பட்டது. அவள் தொடர்ந்து கூறினாள்: ''இந்தப் பாவத்துக்கெல்லாம் என்னென்ன பலன் அநுபவிக்க வேண்டியிருக்குமோ, கடவுளே! . . . எனக்குத் தெரியாது.''

கார்த்தியாயினி கதறியழுதவாறு மறுபக்கம் போனாள்.

கேசவபிள்ளை அங்கேயே உலாவிக்கொண்டிருந்தார். ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்தார். சிறிது நேரத்துக்குப் பின் ஒரு போலீஸ்

காரனை அழைத்தார். ''ஒரு பெண்ணை—அவள் பெயர் நாணிக்குட்டி என்று நினைக்கிறேன்—அவளை விசாரித்து முடித்தார்களா?''

''உத்தரவு! விசாரித்து இன்னைக்கு அனுப்பிச்சுட்டாங்க.''

''உம்! சரி. போகலாம்.''

நாணிக்குட்டியை விடுதலை செய்துவிட்டதை அறிந்ததும், அவளை ஒரு முறை பார்க்கவேண்டுமென்ற ஆவல் பிறந்தது கார்த்தியாயினிக்கு. அதை வெறும் ஆவல் என்பதைவிட ஓர் உத்வேகம், ஆவேசம் என்று கூடச் சொல்லலாம். அவளைச் சந்திக்கவேண்டும், கட்டித் தழுவ வேண்டும், நடந்தவற்றை எல்லாம் அவளிடம் சொல்லவேண்டும். நாணிக்குட்டியின் கணவரான கொச்சுகுட்டன் நாயர் போன்று அல்ல தன் கணவர் என்று சொல்லவேண்டும். நாணிக்குட்டி சில சந்தர்ப்பங் களில் சொல்லி வந்திருந்ததுபோல், 'கேசவபிள்ளை அவ்வளவாக அன்பு உள்ளம் கொண்டவரல்ல, களங்கமற்றவர் அல்ல' என்பதைப்பற்றி யெல்லாம் சொல்லவேண்டும். நடந்தது ஒன்றுமே தனக்குத் தெரியாது; யாரும் சொல்லக்கூட இல்லை என்றெல்லாம் சொல்லவேண்டும். தான் சொன்னால் நாணிக்குட்டி அதை நம்புவாள். 'கேசவபிள்ளை நல்லவர்; அன்புள்ளம் கொண்டவர்' என்றெல்லாம் சொல்லி இந்த நாணிக்குட்டி எத்தனை தடவை தன்னைத் தேற்றியிருக்கிறாள்! தன் கணவரைப்பற்றி ஏதாவது குறை கூறினால், அப்படிச் சொல்லக்கூடாதென்று புத்திமதி சொல்லி வந்தாள் நாணிக்குட்டி. இந்த விஷயத்தில் அவள் தவறு செய்துவிட்டதாக அவளிடம் கூறவேண்டும்.

கார்த்தியாயினி துண்டு வேஷ்டியை எடுத்துத் தோள்மீது போட்டுக் கொண்டு படிவாசலை நோக்கி நடந்தாள்.

''எங்கே போகிறாய்?''

ஓர் ஆக்கினை இடி முழக்கம் போன்று அவளது காதுகளுக்குள்ளே முழங்கிற்று. அவள் நின்றுவிட்டாள்.

''எங்கும் போகவேண்டாம். இங்கேவா!''

கார்த்தியாயினி அசையாமல் நின்றுவிட்டாள். சிறிதுநேரம் சென்றது.

''படிவாசலில் அப்படி நிற்காதே! இங்கே வந்துவிடு!''

அவள் ஒரு பொம்மைபோல் திரும்பி வந்து அவர் முன்னால் நின்று கொண்டாள்.

அவளைத் தலையேர்டு கால் வரையில் பார்த்துவிட்டு அவர் கூறினார்: ''இங்கிருந்து வெளியே போகக்கூடாது!''

சிறிது நேரத்துக்குப் பின் திரும்பவும் சொன்னார்: ''அபிமானத்தையும் அந்தஸ்தையும் காற்றிலே பறக்கவிட்டு நினைத்த இடத்துக்கெல்லாம் போய் வர்றது சகஜமாப் போச்சு, இல்லே?''

''அப்படியெல்லாம் நான் நடந்துக்கறதில்லை.''

''உம்! நீ யார் மனைவியென்று உனக்குத் தெரியுமா?''

அவள் வாய் திறக்கவில்லை. கேசவபிள்ளை கூறினார்: ''இனிமேல் இந்த மாதிரி பிச்சைக்காரிபோல் முடியெல்லாம் பரட்டையா வச்சுக்கிட்டுப்

பேய்மாதிரி சுற்றியலையச் சம்மதிக்கமாட்டேன். நடந்ததெல்லாம் போதும்.''

சிறிது நேரம் வரையில் அங்கே நிசப்தம் நிலவியது. கேசவபிள்ளை கூறினார்: ''தனியாகப் போனால் யாராவது குத்திக் கொலை செய்து விட்டால் என்ன செய்வது?''

அதற்குப் பதில், ''என்னை யாரும் அப்படிச் செய்யமாட்டாங்க. நான் என்னோட நாணிக்குட்டியைப் பார்க்கத்தான் போயிக்கிட்டிருந்தேன்'' என்றாள்.

''உன்னோட நாணிக்குட்டி! யார் அவள்?''

''நான் வந்த நாளிலேருந்து என்னை நேசிச்சவள். என் மனசு புண்படற போதெல்லாம் எனக்கு ஆறுதல் அளிச்சவள். எனக்காக அவள் கடவுளை வேண்டினாள். அப்படிப்பட்டவள் நாணிக்குட்டி. எனக்கு வேறு யாருமே துணையில்லே.''

கேசவபிள்ளை கட்டளையிட்டார்: ''போதும், போதும்! நிறுத்து! இனி மேல் எங்கும் போகக்கூடாது! அந்தப் பக்கம் போ!''

அவள் அந்தக் கட்டளைக்குச் செவிசாய்த்தாள்.

இந்த அநுபவம் அவளுடைய வாழ்நாளில் முதல் தடவையாக ஏற்பட்டது. புதியதோர் எதிர்கால வாழ்க்கையின் துவக்கமுமாக இருந்தது அது. இதுவரை அவளுக்கு உற்றார் உறவினர், சிநேகிதிகள் எல்லாரும் இருந்தனர். அவளுடைய தாய் தந்தையர்களாகவே இருந்து வந்த மாமனாரும், மாமியாரும், மூன்று சிநேகிதிகளும், மகளும், தொலைவிலே, திருவனந்தபுரத்திலே நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக உயர்ந்து முன்னேறி வந்த, சூரியன் போன்ற கணவரும் இருந்தனர்! அந்த வாழ்க்கை இன்பமாக இருந்தது. நிறைவு பெற்றிருந்தது. அவள் ஒரு குழந்தைக்குத் தாயாகி விட்டாள். நடுத்தரப் பருவத்தில் காலெடுத்து வைத்திருக்கிறாள். ஆயினும் அண்மைக்காலம் வரையிலும் பப்புப்பிள்ளை, குட்டியம்மா இருவருடைய செல்ல மகளாகவே இருந்து வந்தாள். ஒரு விளையாட்டுப் பெண்ணைப் பூம்பாற்றைப்போல் துள்ளிக் குதித்துப் பறந்து நடந்தாள். பத்து நிமிஷ நேரம் ஓய்வு கிடைத்தால் போதும், அவள் நாணிக்குட்டியின் வீட்டுக்குப் பறந்து செல்வாள். அவள் வந்திருப்பதை மோப்பம் பிடித்தவர்கள்போல் கல்யாணிக்குட்டியும் குஞ்ஞிக்குட்டியும் அங்கே வந்து சேருவார்கள். ஒரு குடும்பத்தை நடத்திச் செல்ல வேண்டிய பளுவை அவள் ஒருபோதும் அறிந்ததில்லை. வருமானத்துக்குத் தக்கபடி எப்படிச் செலவு செய்வது என்று அவளுக்குத் தெரியாது. இவ்வாறு வாழ்க்கை அமைதியாக நடந்தபோதுதான் தாய் தந்தையர்கள் போய்விட்டார்கள்; சிநேகிதிகள் அகன்றுவிட்டார்கள்.

இன்று மகள் இருக்கிறாள். கணவர் அருகே வந்திருக்கிறார். அந்தக் கணவர் அருகே இருக்கும்போது ஏற்பட்ட அநுபவம் எவ்வளவு வேதனை யளிப்பதாக இருக்கிறது!

இனிமேல் அவள் வாழ்க்கையில் அம்மா இல்லை, அப்பா இல்லை, சிநேகிதிகள் இல்லை. புதிய சிநேகிதிகளைச் சம்பாதிக்கவும் முடியாது.

சமையற்கட்டின் ஒரு மூலையிலே அமர்ந்து கார்த்தியாயினி மனம் வருந்தி அழுதுகொண் டிருந்தாள். அவளுக்கு யாருமே துணையில்லை. கேசவபிள்ளை சமையலறையை நோக்கி மெதுவாக நடந்து வந்தார்.

''இனிமேல் இந்த மோசமான பெண்களுடன் சேர்ந்து பொய்யும் புரட்டும் பேசிக்கொண்டு ஊரெங்கும் சுற்றியலைந்து நடக்க முடியாது.''

கார்த்தியாயினி சொன்னாள்: ''அவங்க பொய் பேசறவங்க அல்ல.''

''அல்லேன்னு அப்படியே இருக்கட்டும். ஆனால் அந்த அழுக்குப் பெண்களுடன் இருந்து வருகிற உன் சிநேகத்தை நிறுத்திக்கொள்.''

''அப்புறம் நான் எப்படி இங்கே வாழ்வது? எனக்குத் துணையா யார் இருக்காங்க?''

''உம். . .'' கேசவபிள்ளை அங்கிருந்து சென்றார்.

நாணிக்குட்டி இப்போது தன்னைப்பற்றி என்ன நினைத்துக்கொண் டிருப்பாளோ? கார்த்தியாயினியின் மனம் வெந்து உருகியது. நாணிக் குட்டிக்கு அவளிடம் ஆத்திரம் இருக்கும். அது நியாயந்தானே? அவளுக் குக் கஷ்டமான ஒரு நிலைமை ஏற்பட்டபோது ஆறுதல் அளிக்கக் கார்த்தியாயினி அங்கே போகவில்லையே.

நாணிக்குட்டியை ஒரு முறை சந்திக்க வேண்டும். அதற்காகக் கிட்டு மாமாவை அவளிடம் கார்த்தியாயினி அனுப்பியிருந்தாள்.

அவள் நாணிக்குட்டிக்காகக் காத்திருந்து, பொறுமை இழந்தாள். சற்று நேரம் தாமதித்தே கிட்டு மாமா வந்தார். நாணிக்குட்டி வரவில்லை.

''என்ன கிட்டு மாமா?''

ஒரு நெடுமூச்சுடன் கிட்டு மாமா விடையளித்தார்: ''இந்தக் கிராமத்தி லுள்ள ஒரு குஞ்சுகூட இனிமே இந்த வீட்டுக்குள்ளே நுழையமாட்டாங்க. அவங்க எல்லாரும் சேர்ந்து அப்படித் தீர்மானிச்சிருக்காங்க.''

''அதிருக்கட்டும் மாமா, நாணிக்குட்டி என்ன சொன்னாள்?''

''அவளுக்கும் வருத்தந்தான். நீகூட இப்படி ஆயிட்டியேன்னுதான் அவள் சொல்றாள். நீ முயற்சி செஞ்சிருந்தா, அவள் சிறைக்குப் போயிருக்க மாட்டாளாம். நீ அப்படிச் செய்யலேன்னுதான் ஊர் ஜனங் களும் பேசிக்கிறாங்க.''

''நீங்க ஒண்ணும் சொல்லலீங்களா, மாமா?''

''நான் சொன்னேன். ஆனா எவனுச்சும் நம்பணுமே.''

''நாணிக்குட்டி என்ன சொன்னாள்?''

''அவள் சொன்னதைப்பற்றிக் கேக்கிறியா? அவள் சொன்னாள், 'போதும், போதும். நேசிச்சதனாலே கிடைச்சதெல்லாம் போதும். நாங்க ஏழைங்க. ஏழைங்களாவே இருந்துடறோம்'ன்னு.''

''அவள் வருவாளா, மாமா?''

''வரமாட்டாள்.''

அத்தியாயம் 23

தங்கம்மாவின் ராஜிநாமா

பப்புப்பிள்ளை அவ்வாறு மரணமடைந்தது கேசவபிள்ளைக்கு நல்லதாக முடிந்தது. திவான்ஜி உண்மையிலேயே அநுதாபப்பட்டார். பப்புப் பிள்ளையின் மரணம் சம்ஸ்தானம் எங்கும் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தி யது. கொடூரமான இந்தக் கொலைக்கும் காங்கிரசுக்கும் எந்தவிதச் சம்பந்தமுமில்லை என்று ஜனங்களுக்குப் புரியவைக்கும் பொறுப்பு தலைவர்கள்மீது வந்து விழுந்தது. இவ்வாறுக, அவர்கள் கேசவபிள்ளைக்கு எதிராகத் தொடுத்துவிட்ட விமரிசன பாணங்களின் வேகம் சற்றுத் தணிந்தது.

கேசவபிள்ளை தலைமைக் காரியதரிசியாக நியமனம் செய்யப்பட்டார்.

ஒரு நாள் மாலைப் பொழுதில்தான் அவருக்கு இந்தச் செய்தி கிடைத் தது. அதுவும் பக்தி விலாசத்திலிருந்து!

அவர் வீட்டுக்கு வந்து மனைவியைக் கூப்பிட்டார். கார்த்தியாயினி திருவனந்தபுரத்துக்கு வந்து அன்றைக்கு மூன்று நான்கு நாட்களே ஆகின்றன.

''கார்த்தியாயினீ, எனக்குப் பிரமோஷன் கிடைத்திருக்கிறது, சீஃப் செக்ரடரியாக!''

அவள் ஒன்றும் புரியாதவளாக நின்றுவிட்டாள். ஆனால், ஏதோ ஒரு புதிய பதவி கிடைத்திருக்கிறதென்று மட்டும் அவளால் அனுமானிக்க முடிந்தது. அவள் முகத்திலே ஒரு பிரகாசம் தோன்றியது.

இன்று அவள் அடுப்புக் கரி படர்ந்து அழுக்குப் படிந்து நிற்கிற அடுக்களை வேலைக்காரியான கார்த்தியாயினி அல்ல. கள்ளமற்ற உள்ளத்துடன் கேட்டாள்:

''அப்படீன்னு?''

அந்தச் செய்தியைக் கேட்டு ஆனந்தப் பரவசமடைய ஒரே ஒரு மனிதப் பிராணிதான் இருந்துவருகிறது. கார்த்தியாயினி! அந்த நல்ல செய்தியைச் சூட்டோடு சூடாக, வேறு யாருக்குத்தான் தெரிவிக்கப் போகிறார் கேசவபிள்ளை? வேறு ஒரு பெண்ணாக இருந்திருந்தால் எப்படி ஆனந்தக் கூத்தாடியிருப்பாள்! இந்தப் பெண் மரக்கட்டைபோல் நின்றவாறு கேட்கிறாள், 'அப்படீன்னு?' என்று.

கேசவபிள்ளையின் உற்சாகம் சிறிது தணிந்திருக்காதா? நிச்சயமாகத் தணிந்திருக்கும். அவர் கேட்டார்: ''உனக்குத் தெரியாதா? சீஃப் செக்ரடரீன்னு நீ கேள்விப்பட்டதில்லையா?''

''எனக்கு அதைப்பற்றியெல்லாம் எப்படித் தெரியுமுங்க? எனக்கு ஒண்ணுமே தெரியாதுங்க. எனக்கு ஏதாச்சும் சொல்லித் தந்திருக்கிறீங்களா?''

அதை விளக்கிக் கூறுவதென்றால் அது மிகவும் கடினமான வேலை. கேசவபிள்ளை சொல்லி வைத்தார்: ''இப்போது இருக்கிற பதவியைவிட மிக உயர்ந்த பதவி.''

அந்தப் பட்டிக்காட்டுப் பெண் கேட்டாள்:

''சம்பளம் எவ்வளவு ஜாஸ்தி கிடைக்குங்க?''

''இருநூறு ரூபாய்க்குமேல் கிடைக்கும்.''

அவள் முகம் மலர்ந்தது. ''இனிமே ஜனங்களை உதைக்க வைக்கறதும், துப்பாக்கியினாலே சுடச் செய்யறதும், எதிரிங்களாப் பண்ணறதும் ஒண்ணும் வேணுமல்ல? இந்தப் பதவியில் இருக்கிறப்போ அதெல்லாம் செய்ய வேணுமே!''

இரும்பு மனிதன் என்று சொல்லப்படுகிற கேசவபிள்ளையின் முகத்தைப் பார்த்து இதுவரையிலும் யாருமே இவ்வாறு கூறியதில்லை. அன்று பப்புப்பிள்ளையும், குட்டியம்மாவும் அவரிடம் இந்த விஷயத்தைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். ஆனால், அது இந்த மாதிரியல்ல. கேசவபிள்ளையே மக்களை உதைக்கவும், சுடவும் காரணமாக இருந்திருக்கிறார் என்று தீர்மானமாகக் கார்த்தியாயினி சொல்லுகிறாள்.

அவர் அவளை உற்றுப் பார்த்தார். அந்தப் பெண்ணிடம் என்ன சொல்வது? பிரமுகரான ஒரு காங்கிரஸ் உறுப்பினர் தம் முன்னே நின்று பேசுவதுபோல் அவருக்குத் தோன்றியது. அவர் சொன்னார்: ''நீ போயிடு!''

தான் சொன்ன விஷயத்திலே ஏதோ கோளாறு இருப்பதாகக் கார்த்தியாயினிக்குத் தோன்றியது. அவள் சொன்னாள்: ''இல்லே... இந்த மாதிரி தகராறுங்களிலே இனிமே போயித் தலையிடாம இருக்கலாமல்ல? இனிமே யாரும் உங்களைத் திட்டிப் பேசமாட்டாளுங்களல்ல?''

கேசவபிள்ளை கடுமையான குரலில் கூறினார்: ''உம்! போதும்!''

சொந்த மனைவிகூடக் காங்கிரஸின் பிரசாரத்தை நம்புகிறாள்.

அபிவிருத்தி இலாக்காக் காரியதரிசியாக நியமனம் செய்யப்பட்ட போது, அந்த உயர்ந்த பதவியைக் குறித்து மகிழ்ச்சியடைகிற ஒருவரைத் தேடியலைந்தார் கேசவபிள்ளை. இன்றும் அத்தகைய ஒரு மனிதரைச் சந்திக்க விரும்பினார்.

பலர் கேசவபிள்ளையைப் பாராட்டினர்; பாராட்டுக் கடிதங்கள் அனுப்பினர். நேரடியாக வந்து மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். அவை அனைத்தும் சம்பிரதாய முறையில் அமைந்திருந்தன.

பலர் பொறுமை கொண்டவர்களாக இருந்தனர். சிலர் உள்ளூறப் பற்களைக் கடித்துக்கொண்டனர். வேறு சிலர் அதை ஒரு கடமை என்று எண்ணிப் பாராட்டினர். இவை எல்லாம் கேசவபிள்ளைக்குத் தெரிந்ததுதான். ஆயினும், இந்தப் பதவி உயர்விலே மானசீகமாக மகிழ்ச்சி

யடைகிற ஒரு ஜீவனை அவர் தேடிக்கொண் டிருந்தார். வாழ்நாளிலே சந்தித்த, அறிமுகமான பலரையும் அவர் நினைத்துப் பார்த்தார். ஒருவர் கூட அத்தகைய மகிழ்ச்சியடைகிறவராகக் காணப்படவில்லை. கார்த்தி யாயினிக்கு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பது திண்ணம். ஆனால், அந்த மகிழ்ச்சியிலே அவள் துள்ளிக் குதிக்கவில்லையே.

இது ஒரு குறைபாடுதான். இதன் பொருள் என்ன? ஆத்மார்த்தமாக ஆனந்தமடைகிறவர்கள் ஒருவர்கூட இல்லை என்பதுதானே? வாழ்க்கை யிலே, தாம் தனி மனிதனாக இருந்துவருகிறோம் என்பதுதானே? இந்தப் புதிய பதவியிலே தெளிந்த உள்ளத்துடன் சந்தோஷமடையக் கேசவ பிள்ளையால் முடியவில்லை.

வேண்டாம். தம்மீது உள்ளன்பு கொண்டவர்கள் யாரும் வேண்டாம். தாமும் மற்றவர்களிடம் அவ்வாறே நடந்துகொண்டால் என்ன? யாராவது உள்ளன்பு காட்டினால் அவரிடம் கடமைப்பட்டிருக்கவேண்டும் அல்லவா?

* * *

ஒரு நாள் ஹரிஹர ஐயரும் கோவிந்தன் நாயரும் கேசவபிள்ளையைப் பார்க்க வந்தனர். ஐயர் படுகிழவராகிவிட்டார். அவர் ஒய்வு பெற்றுப் பல வருஷங்களாகின்றன. கோவிந்தன் நாயரும் ஒய்வு பெற்றிருந்தார். மகிழ்ச்சியால் உந்தப்பட்டே அவர்கள் வந்தார்கள். வேறு எந்த நோக்க மும் இல்லை. ஐயருக்கு ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்லவேண்டியிருந் தது. அவர் சொன்னார்:

''அன்னைக்கு நம்ம செக்ஷனிலேருந்து பார்க் வியூவுக்குப் போனபோது நான் சொன்னேனே இல்லையோ, பிள்ளைவாள் சீஃப் செக்ரடரியா பார்க் வியூவிலேயே தங்கியிருக்கப் போறேள்னு? அது உண்மையாச்சோன்னே? அதைப் பார்க்கத்தான் வந்திருக்கோம்.''

கோவிந்தன் நாயர் அந்தப் பேச்சில் ஒரு பகுதியை ஒப்புக்கொள்ள வில்லை: ''கேசவபிள்ளை சார் சீஃப் செக்ரடரியாயிடுவார்னு நீங்க சொல்லலீங்களே, சாமிகளே! செக்ரடரியாகலாம்னுதான் சொன்னீங்க.''

'அப்படியல்ல. சீஃப் செக்ரடரியாகிடுவாரென்றே' தாம் சொன்னதாக ஐயர் சொன்னார். அவர் திருப்பிக் கேட்டார்: ''சீஃப் செக்ரடரி யாயிடுவார்னு நாயர்வாள் சொன்னீளோ?''

''நான் சொல்லலே. ஆயினும் அப்படியாயிடுவார்னு எனக்குத் தெரிஞ்சிருந்தது.''

''சரி, அப்படியே வச்சுக்குவோம். எனக்கும் தெரிஞ்சிருந்தது.''

அந்த வாதம் ஒருவரை ஒருவர் குறைத்து மதிப்பிடுவதற்காக நடை பெறவில்லை. ஐயர் தன்னலம் கருதி அவ்வாறு கூறுகிறார். பிள்ளையின் அன்பைப் பெற முயற்சி செய்கிறார். எனவே அவருடைய உண்மைச் சொரூபத்தைப் பகிரங்கப்படுத்திவிடலாம் என்ற நோக்கோடு கோவிந்தன்

நாயர் அவ்வாறு கூறவில்லை. மாறுக இருவரும் மகிழ்ச்சியால் அவ்வாறு கூறிக்கொண்டனர், அவ்வளவுதான்.

கோவிந்தன் நாயர் சொன்னார்: ''இதைப் பார்க்க நாம் கொடுத்து வச்சிருக்கிறேமே. இதுவே போதும்.''

ஐயர் அதை ஆமோதித்தார்.

வாழ்நாளில் முதல் முறையாக, இதயபூர்வமான அன்பின் இனிமையைக் கேசவபிள்ளை நுகர்ந்தார். அவர்களுக்கு ஏற்பட்ட உற்சாகம், அந்த அன்பின் பகிரங்கமான உயர்ந்த பிரதிபலிப்புத்தான். கேசவபிள்ளை சொன்னார்:

''ஸ்வாமீ, இந்த மாதிரியான நோக்கம் எதுவும் எனக்கு இருக்கவில்லை. இன்ன இடத்தில், இன்ன முறையில், இன்ன நேரத்தில் வந்து சேரவேண்டுமென்ற முன்யோசனையுடன் நான் இயங்கி வரவில்லை. ஓர் இடத்துக்கு வந்து சேர்ந்தேன். மகிழ்ந்தேன். அப்புறம் அதுக்கும் மேலே வந்துவிட்டேன். அந்த விஷயத்திலும் எனக்கு மகிழ்ச்சியேதான். முன்யோசனையுடன் திட்டமிட்டு இந்த ஏணிப் படிகள் வழியாக நான் ஏறிவரவில்லை. உண்மையாகச் சொல்லுகிறேன் ஸ்வாமீ, திரும்பிப் பார்க்கிறபோது, நான் எவ்வாறுதான் இந்த இடத்துக்கு வந்து சேர்ந்தேன் என்று வியப்படைகிறேன்.''

ஐயர் கவனத்துடன் அவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தார். ''எல்லாம் கடவுள் கிருபாகடாட்சந்தான்!'' என்றார் ஐயர்.

கோவிந்தன் நாயர் அத்துடன் இன்னொரு விஷயத்தைக்கூடச் சேர்த்துச் சொன்னார்:

''அநுபவிக்க இருக்கிறவங்க கொடுத்து வச்சதனாலும்கூடத்தான் ஸ்வாமீ!''

கிட்டு மாமா சொன்னது கேசவபிள்ளையின் காதுகளிலே முழங்கியது: ''அவள் அதிருஷ்டக்காரிதாம்ப்பா!''

அந்தச் சொற்கள் ஐயர், நாயர் காதுகளிலும் விழுகின்றனவா என்ற சந்தேகங்கூடக் கேசவபிள்ளைக்கு ஏற்பட்டது. அன்று கிட்டு மாமா சொன்னது அத்தகைய உரத்த குரலிலேதான். சில வருஷங்களுக்கு முன்னால், சீஃப் செக்ரடரி மேனனைக் காண்பதற்காகப் பார்க் வியூவின் படிவாசலிலே நின்றிருந்தபோது போலீஸார் தம்மை விரட்டியோட்டிய விஷயம் அவர் நினைவுக்கு வந்தது.

''அவள் அதிருஷ்டக்காரிதாம்ப்பா!''

அந்த அதிருஷ்டக்காரி இப்போது இந்தப் பெரிய கட்டடத்தின் ஓர் அறையில் சுருண்டு அடங்கி அமர்ந்திருக்கிறாள், பாச்சையைப் போல, வெளிச்சத்துக்கு வராமல்!

ஐயர் கேட்டார்: ''என்ன நாயர்வாள், இது இத்தோடு நின்னுட்டதுன்னு நினைக்கிறீங்க? இது *பக்தி விலாசம் வரையில் செல்லாதா?''

---

* பக்தி விலாசத்திற்குச் செல்வது: திவானுவது.

நாயர் கேட்டார்: ''பக்தி விலாசமா?''

ஐயர் உறுதியாகச் சொன்னார்: ''ஆம், பக்தி விலாசமேதான்! உங்களுக்குச் சந்தேகமா, என்ன?''

''எனக்குச் சந்தேகம் இல்லே. ஆனால் எதிர் காலத்திலே *மந்திரீங்க வரப்போறுங்கன்னு சொல்றுங்களே?''

ஐயர் தலையாட்டினார்: ''ஓ! அது சரிதான். ஆனால் மந்திரீங்கறதும், திவான்ங்கிறதும் எல்லாம் ஒண்ணுதானே?'' அவர் தொடர்ந்து கூறினார்: ''ஆனால் அதைப் பார்க்க நான் உயிரோடு இருப்பேனா, நாயர்வாள்?''

நாயர் சொன்னார்: ''இதைப் பார்க்க நீங்க உயிரோடு இருக்கமாட்டிங்கன்னுதானே, அன்னைக்குச் சொன்னீங்க?''

ஐயர் தம்மையே ஆசீர்வதித்துக் கொண்டார்: ''சரி; அப்படியே நடக்கட்டும்!''

கேசவபிள்ளை அப்போது அந்த நல்லவரான கிழவர் மாதேவன் பிள்ளையை நினைத்துப் பார்த்தார். சில வருஷங்களுக்குப் பின் இப்போதுதான் பிள்ளை அவரை நினைவு கூர்ந்து பார்க்கிறார். நிகழ்ச்சிகளின் துரிதப் போக்கின் மத்தியிலே அவரால் அந்த நல்லவரை நினைத்துப் பார்க்க முடியவில்லை. பாவம்! இறந்து போயிருப்பார்! இல்லாவிட்டால் அவர் இங்கே வந்திருப்பார். ஆயின், உள்ளன்புடன் பாராட்ட மூன்று மனிதர்கள் இருந்திருப்பார்கள். அப்பாவும் அம்மாவும் உயிருடன் இருந்திருந்தால் கார்த்தியாயினியைப் போன்று அவர்களுக்குக்கூட இது என்னவென்று புரிந்திருக்காது.

* * *

கேசவபிள்ளை, அரசாங்கத் தலைமைக் காரியதரிசியாகப் பதவியேற்பு நிகழ்ச்சி மறுநாள் நடக்க இருந்தது. ஐயப்பன் கோவிலில் புஷ்பாஞ்சலி நடத்துவது உள்பட அனைத்துக் கோவில்களிலும் அர்ச்சனைகளை நடத்தினார். ஜோசியரைச் சந்தித்து நல்ல முகூர்த்தம் பார்த்தே அவர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

அன்று தலைமைக் காரியாலயத்திலே புதியதோர் அசைவு, சுறு சுறுப்பு ஆகியவை ஏற்பட்டிருந்தன. தலைமைக் காரியதரிசிகளின் பதவி யேற்புக்களின் போதெல்லாம் நடைபெறுகிற நிகழ்ச்சிதான் அது.

தலைமைக் காரியதரிசியின் கவனத்துக்கு வரவேண்டிய காகிதங்களும், தஸ்தாவேஜுகளும் மேஜைமீது வைக்கப்பட்டிருந்தன. கடவுளை வணங்கி விட்டு அவர் பேனாவைக் கையிலெடுத்தார். எல்லாவற்றுக்கும் மேலே வைக்கப்பட்டிருந்த கைப்பிலைப் பார்த்தார். அது ஒரு ராஜிநாமாக் கடிதம். படித்துப் பார்த்தார். மரத்து அசைவின்றி அமர்ந்துவிட்டார்.

அது தங்கம்மாவின் ராஜிநாமாக் கடிதம்!

---

*பொறுப்பாட்சி வந்தால் திவான் இருக்கமாட்டார். (மொ–ர்.)

என்ன செய்வதென்று விளங்கவில்லை. அப்படியே பொம்மைபோல் அமர்ந்துவிட்டார். பதவியேற்றதும் முதலில் முடிவு செய்யவேண்டிய விஷயம் இதுவா? அந்தரங்கக் குமாஸ்தாவின் குறும்புத்தனமாக இருக்குமோ? அல்லது அகஸ்மாத்தாக நிகழ்ந்துவிட்டதா? உண்மையை அறிந்த ஒருவன் வேண்டுமென்றே செய்த குறும்புபோல் கேசவபிள்ளைக் குத் தோன்றியது. சிறிது அவமானப்படுத்துவது அல்லது சற்று மனக் கவலையை உண்டாக்குவது என்ற நோக்கோடு செய்திருக்கலாம்.

குமாஸ்தாவைக் கூப்பிட்டார். அவன் ஓர் இளைஞன். மிகவும் பாடு பட்டுத்தான் இங்கே நுழைந்திருக்கிறான். கேசவபிள்ளை அவனை ஒருமுறை மேலும் கீழும் பார்த்தார். ஏதோ தவறு நேர்ந்துவிட்டதாக அந்த இளைஞன் திகைத்தான். வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்ற நோக்கோடு அங்கே நுழைந்த இளைஞனுக்கு, தான் காலை ஊன்றி நின்ற தரை ஆடியசைந்து கீழே இறங்கிச் செல்வதுபோல் தோன்றியது. கேசவ பிள்ளை இளைஞனை, அவனைப் போன்று ஒரு குமாஸ்தாவாக இருந்தபோது ஏற்பட்டிருந்த அச்சமும், ஐயப்பாடுகளும் அவனுக்கும் ஏற்பட்டன. அவ்வாறு ஏற்படத்தான் செய்யும். என்ன தவறு நேர்ந்துவிட்டதென்று அவனுக்குப் புரியவில்லை. அவன் வதனம் வெளிறியது.

''ஓர் உத்தியோகஸ்தரின் ராஜிநாமாக் கடிதத்தின் மீதுதானே, நான் முதல் முதலாக உத்தரவு போடவேண்டும்?'' கேசவபிள்ளை கேட்டார்.

''எனக்குத் தெரியாதுங்க.'' அவன் உண்மை நிலையை வெளிப் படுத்தினான்.

''ஊம். நீ போகலாம்.''

அவன் போனான்.

கேசவபிள்ளை எதையும் செய்யாமல் வெகுநேரம் வரையில் அவ்வாறே அமர்ந்துவிட்டார். அவளுக்கு வேலை வேண்டாமென்றால், இதற்கு முன்பே இந்த ராஜிநாமாக் கடிதத்தை அனுப்பியிருக்கலாம் அல்லவா? கேசவபிள்ளைதான் அவளை வேலையிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்ற நிர்ப்பந்தம் அவளுக்கு இருந்திருக்கலாம்.

அவளிடம் என்ன தவறு செய்தோம்? கேசவபிள்ளை நினைத்துப் பார்த் தார். அந்த உறவின் வரலாற்றை, ஒவ்வொரு நாள் நிகழ்ச்சிகளையும் எண்ணிப் பார்த்தார். எல்லாம் தெளிவாகவே தெரிந்தன. இது அவள் வேண்டுமென்றே செய்த வேலை.

'நான் உங்களை ஓர் ஏணியின் முதற்படி மீது ஏற்றி நிறுத்தினேன். நீங்களாகவே ஒருபோதும் அதன்மீது ஏறியிருக்கமுடியாது. ஒவ்வொரு படிகளாக ஏறி ஏறி நீங்கள் இன்று கடைசிப் படிமீது ஏறி நிற்கிறீர்கள். உங்களிடம் இப்போது அதிகாரம் இருக்கிறது. நீங்களே என்னை வேலையி லிருந்து நீக்கிவிடுங்கள்!' அவள் இவ்வாறு சொல்வதுபோல் அவருக்குத் தோன்றியது. புண்பட்டதோர் இதயம் போன்று அந்தக் காகிதம் அவர் முன் கிடந்தது. அந்த எழுத்துக்கள் துள்ளுவதுபோல் அவருக்குத் தோன்றியது.

அறிவு சிறிது மரத்துவிட்டது. என்ன என்ன உதவிகளை அவள் செய்து தந்திருக்கிறாள்! ஊஹூம்! முடியாது. அந்த ராஜிநாமாவை ஏற்றுக் கொண்டு உத்தரவு போடமுடியாது. உத்தரவு போடுவதற்கான வார்த்தைகள் அவருக்குத் தெரியாது.

வேலை வேண்டாமென்று கருதியா அவள் எழுதியிருக்கிறாள்? பிறகு வாழ வழி ஏது? அந்தக் கட்டடத்தைத் தவிர அவளுக்கு வேறு சொத்துக்கள் எதுவுமில்லை என்று கேசவபிள்ளைக்குத் தெரியும். யாராவது பணக்காரன் ஒருவன் வந்து சேர்ந்திருப்பானோ? அவனுடைய யோசனைப்படி இந்தக் காரியத்தைச் செய்திருப்பாளா?

அவர் மீண்டும் அந்த ராஜிநாமாக் கடிதத்தைப் படித்துப் பார்த்தார். இல்லை! தன் வாழ்க்கை எனும் குடத்தை அவர் முன்னிலையிலேயே உடைத்துத் தகர்த்துவிடவேண்டுமென்று அவள் முடிவெடுத்திருப்பது போல் தோன்றியது. கடிதத்திலுள்ள சொற்கள் அவ்வாறு அமைந் திருந்தன. ஏறக்குறைய வாழ்க்கையிலிருந்து விடை பெறுவதுபோல் இருந்தன.

அவளைப்பற்றி விசாரித்தறிந்து வெகு நாட்களாகிவிட்டன. எந்தத் தகவலும் இல்லை. அன்று அந்த வாலிபனைக் கண்டு, அந்த வீட்டிலிருந்து வெளியே வந்த பின் அவர் அந்தப் பக்கமாக எட்டிப் பார்த்ததுகூட இல்லை. அந்தச் செயல் சரியானதா என்று கேசவபிள்ளை தம்மையே கேட்டுக் கொண்டார். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவரை அவள் அவமதித்தே வந்திருக்கிறாள். அவர் அவளுக்கு இன்றி யமையாத ஒருவராக ஒருபோதும் இருந்ததில்லை. ஆனால், கேசவபிள்ளை தம்மையே கேட்டுக்கொண்ட கேள்விக்குச் சுயமாக அளித்த விடை மேற் கண்ட நிலைக்கேற்றதாக இருக்கவில்லை. 'அலுவல்கள் ஏராளம், நேரம் கிடைப்பதில்லை! எனவே, அங்கே போகவில்லை' என்பன போன்று மன்னிப்பைக் கேட்கும் முறையிலேதான் அந்த விடை அமைந்தது.

என்ன என்ன நடைபெற்றிருக்கின்றன என்பதை அறிய அவர் மனம் ஆவல் கொண்டது. அவளுடைய எதிர்காலம் எவ்வாறு இருக்கும்?

அந்த ராஜிநாமாக் கடிதத்தை எடுத்து இன்னொரு பக்கமாகத் தள்ளி வைத்தார். மேஜைமீது ஃபைல்கள் குன்றெனக் குவிந்து கிடந்தன. எதுவும் மனத்தை ஈர்க்கவில்லை. செயல்திறன் அற்றுப் போய்விட்டது போல் தோன்றியது. பதவியை ஏற்றுக்கொண்ட முதல் நாள் நிகழ்ச்சி இது. இது ஒரு கெட்ட சகுனம்போல் கேசவபிள்ளைக்குத் தோன்றியது. இந்த அரியணைமீது அமர்ந்துகொண்டு இவ்வாறுதான் செயல்பட்டப் போகிறோமா? ஜோசியன் மிக நன்முகப் பார்த்து நிர்ணயித்த நல்ல நாள், நல்ல முகூர்த்தம் அல்லவா இது?

ஒன்றரை மணி நேரத்துக்குமேல் ஆயிற்று. அமர்ந்தபடியே இருந்தார். எழுந்தார். அலுவலகத்திலிருந்து வெளியே வந்து காரிலே ஏறிக்கொண் டார். பார்க் வியூவுக்குச் சென்றார். வந்து சிறிது நேரத்துக்குப் பிறகே அவர் வந்ததைக் கார்த்தியாயினி அறிந்துகொண்டாள்.

தங்கம்மாவைச் சென்று பார்க்கவேண்டுமா, வேண்டாமா? அவர் மனப் போராட்டத்தில் சிக்கியிருந்தார். முடியுமானால் ராஜிநாமாக் கடிதத்தை வாபஸ் பெறச் செய்யவேண்டும். வேறு காரணங்களால் அல்ல. கேசவபிள்ளை தான் உத்தரவு போடவேண்டும் அல்லவா? அந்த மனச் சங்கடந்தான் காரணம். என்ன காரணமோ, அவரால் அதைச் செய்ய முடியவில்லை.

கார்த்தியாயினி ஒரு கோப்பை காபி கொண்டு வந்து கொடுத்தாள். கேசவபிள்ளை அதை வாங்கிக் குடித்தார். அவர் அந்த நேரத்தில் அலுவலகத்திலிருந்து வந்திருப்பது குறிப்பிடத்தக்க ஒரு காரியமாக அவளுக்குத் தோன்றவில்லை. எப்போது அலுவலகத்துக்குப் போவது, திரும்பி வருவது போன்ற விஷயங்கள் அந்தப் பெண்ணுக்குத் தெரியாது. உத்தியோக வாழ்க்கையுடன் அவளுக்கு எந்த விதமான சம்பந்தமும் இல்லையல்லவா? காபி கொடுத்துவிட்டு மறுபக்கம் வந்தபோது சிப்பாய் கேட்டான்:

''ஏம்மா, எஜமானரு ஆபீசிலேருந்து ரொம்பச் சீக்கிரமா வந்திருக்கிறாரு?''

''ஊம்? அதென்ன நீ அப்படிக் கேக்கறே? அவர் எப்போ வரணும்?'' கார்த்தியாயினி கேட்டாள்.

''மாலை அஞ்சு மணிக்கு.''

அப்போதுதான் அவளுக்குத் தெரிந்தது.

சிறிது நேரத்துக்குப் பின் காவலன் ஒருவன் வந்து, ஒரு கிழவியம்மா எஜமானரைச் சந்திக்கப் படிவாசலில் காத்து நிற்பதாகத் தெரிவித்தான். அவளை உள்ளே அனுப்பும்படி கூறினார் கேசவபிள்ளை.

பாகீரதியம்மா! தங்கம்மாவின் தாயார்! முற்றும் எதிர்பாராத நிகழ்ச்சி! பாகீரதியம்மாதான் பேச்சைத் துவக்கினாள். இதயம் தகர்ந்த நிலையில் அந்த அம்மா கூறினாள்: ''அவளைப் பொடி போட்டு மயக்கிட்டானே அந்த மாயாவி!''

கேசவபிள்ளைக்கு அது புரியவில்லைபோல் தோன்றியது. அவர் அவள் முகத்தைப் பார்த்தார். அவள் தொடர்ந்து கூறினாள்: ''அவள் வேலையிலேருந்து ராஜிநாமாச் செஞ்சுட்டாள்.''

அவர் சொன்னார்: ''பார்த்தேன். கடிதம் என்னிடம் வந்திருக்கிறது.''

''அப்புறம் நீ அவளை வேலையிலேருந்து நீக்கிட்டியா?''

''இல்லை. என்ன நடந்தது?''

''அன்னைக்கு நீ அங்கே ஒரு வாலிபனைப் பார்த்தியோல்லியோ? அவன்தான் காரணம். அவன் பெரிய மாயைக்காரன். இந்தத் திருவனந்தபுரத்திலே எல்லா ஆபீசருங்களுக்கும், ஆபீசுகளிலே வேலை செய்யற பொம்புளேங்களுக்கும் அவன் சொந்தம். எல்லாரையும் அவன் மாயப் பொடி போட்டு மயக்கி வச்சிருக்கான்.''

அவள் சொல்கிற விஷயம் என்னவென்று தமக்குப் புரியாமல், கேட்டார்: ''மாயைப் பொடியால் மயக்கி வைத்திருக்கிறானு?''

கிழவி அழுத்தமாகச் சொன்னாள்:

''ஆமாம்; அப்படித்தான்.''

''அப்படியென்ரூல்?''

''அவன் பஜனேயும், பாட்டும், பூஜையுமா நடத்துகிருன். அவன் ஒரு பெரிய சாமியாருக்குச் சீடனும். அந்தச் சாமியாரு மூணு நாலு தடவை திருவனந்தபுரத்துக்கு வந்திருக்காரு. ஆபீசருங்க வீடுகளிலேதான் பூசை கீசை எல்லாம் நடந்தது. சாமியாரு அருள் புரிஞ்சா ஒசந்த வேலே கிடைச்சிடுமாம். கல்யாணமாகாத பொம்புளேங்களுக்குக் கல்யாணம் நடக்குமாம். சம்பளம் கிம்பளமெல்லாம் ஜாஸ்தி கிடைக்குமாம். அவரு வட நாட்டுக்காரரு. இந்தப் பொம்புளேங்களேயெல்லாம் அந்தப் பையனும் சாமியாருமாச் சேர்ந்து மயக்கிப் போட்டிருக்காங்க.''

சிறிது காலத்துக்கு முன்பு ஒரு நாள், தலேமைக் காரியாலயத்திலுள்ள சில பெண் சூப்பிரண்டுகளும், பெண் குமாஸ்தாக்களும், சில அதிகாரிகளின் மனேவிமார்களும் சேர்ந்து, ஏதோ ஒரு பூஜை நடத்தவேண்டுமென்றும், ஒரு மடத்தைக் கட்டவேண்டுமென்றும் கூறிக்கொண்டு நிதி வசூலுக்கு வந்த நிகழ்ச்சி கேசவபிள்ளேயின் நினேவுக்கு வந்தது. காங்கிரஸ் கிளர்ச்சி பூதாகாரமாய் உருவெடுத்திருந்த காலம் அது. ஏதோ ஓர் ஆனந்தனேப்பற்றி அவர்கள் என்னவெல்லாமோ சொன்னர்கள். அந்தச் சொற்கள் ஒன்றுமே கேசவபிள்ளேயின் மனத்திலே பதியவில்லே. இப்போதுகூடச் சில சமயங்களில், ஓர் ஆனந்தனின் 'கீதாப் பிரவசனம்', 'உபநிடத வியாக்கியானம்' என்ற தலேப்புக்களில் சில பத்திரிகைகளில் செய்திகள் வருவதுண்டு. இவை அனேத்தையும் ஒன்று சேர்த்த ஒரு கதையைத்தான் பாகீரதியம்மா சொல்கிருளென்று கேசவபிள்ளேக்குத் தோன்றியது.

அவள் தொடர்ந்து கூறினுள்: ''உத்தியோகஸ்தர்களோட மனேவீங்களும், உத்தியோகமுள்ள பொம்புளேங்களும் அந்தச் சாமியார் பின்னுலே சுற்றிக் கிட்டிருக்காங்க. அவரோட ஒரு பூசை அந்த வீட்டிலே கூட நடந்தது. அவரு நடுமத்தியிலே கண்ணே மூடிக்கிட்டு உக்காந்திருப்பாரு. பொம்புளேங்கல்லாம் அவரைச் சுற்றி நிப்பாங்க. எல்லாப் பொம்புளேங்களும் மயங்கிப் போயிட்டாங்கப்பனே.''

கேசவபிள்ளே கேட்டார்: ''அன்றைக்குப் பார்த்தேனே, அந்த வாலிபன் இப்பவும் அங்கேதான் தங்கியிருக்கிருனு?''

சற்று நேரம் பொறுத்துப் பாகீரதியம்மா பதில் அளித்தாள்:

''அதெல்லாம் என்னுலே எப்படித்தாம்ப்பனே, சொல்ல முடியும்? என்னேட மானம் மரியாதியெல்லாம் போச்சு. அந்த நிலேயிலேதான் நான் அங்கே தங்கி வந்தேன். நான் இப்படியெல்லாம் வாழ்ந்ததில்லேப்பனே! கோவில்களான கோவிலுங்களுக்கெல்லாம் போயி, செய்யமுடியாத ஜபமும் தபமும் பண்ணித்தான் என் வயிற்றிலே அவள் பொறந்தாள். அவள் பொறந்ததனுலே என்னேட மானமும் மரியாதியும் போச்சு. என்னென்ன பார்க்கவேண்டியிருக்கு; கேக்கவேண்டியிருக்கு. வீட்டுக்கு ஆகாதவனே விட்டுடுங்கம்மான்னு என்னேட பசங்க சொன்

ஞ்ங்க. இந்த மாதிரி ஒரு சகோதரி இல்லேன்னு அவங்க விட்டுட்டாங்க. என்னோட வயிற்றிலே பொறந்தவள்தானேன்னு பசங்களை விட்டுட்டு இவளோட வந்து தங்கிக்கிட்டேன். எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்துப் பொறுமை இழந்து போச்சு!''

கேசவபிள்ளை திரும்பவும் கேட்டார்: ''இப்போதைய சமாசாரம் என்ன?''

பாகீரதியம்மா தொடர்ந்து கூறினாள்: ''அவன் அங்கேதான் தங்கியிருக்கான். இருந்தாக்கூட அவனுக்கு இந்தத் திருவனந்தபுரத்திலுள்ள அத்தனை வீடுங்களுக்கும் போய்வரணும். அங்கெல்லாம் பஜனையும் பூசையுந்தான். ஒரு வீட்டுக்குப் போனா அப்புறம் அவனைப் பொம்புளேங்க விடமாட்டாங்க. அப்போ தங்கம்மாவுக்கு ஆத்திரம் வந்துடும். அவன் வந்தாச் சண்டைதான் அப்புறம். இதுதான் அவளோட பக்தியும் பூசையும். வாய் திறந்து என்னாலே எதாச்சும் பேசமுடியுமா?''

அந்தப் பழைய கதைகளை நினைவுகூர்ந்து பாகீரதியம்மா தொடர்ந்து பேசலானாள்: ''மொதல்லே மானத்தோடு உனக்குக் கலியாணம் பண்ணி வைக்கணும்னு யோசிச்சோம். அப்போதான் அவள் அந்த ராமசந்திரன் நாயரோடு சேர்ந்து போனாள். நீ திரும்ப அவளை விரும்பி வந்தே. அப்போ திருந்துதான் இப்படியெல்லாம் நடக்குது. இனிமே, என் தெய்வமே, இந்தக் கண்ணாலே என்னென்ன பார்க்கவேண்டியிருக்குமோ? எனக்குத் தெரியாதே. இந்தப் பொம்புளேங்களோட பக்தியும் பூசையும் இப்படித்தான் இருக்கும்போலிருக்கு.''

கேசவபிள்ளை கேட்டார்: ''வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டு என்ன பண்ணலாம்னுதான் அவளோட நோக்கம்?''

''ஆ, அதைத்தான் சொல்ல வந்தேன். இங்கே ஸ்திரமாத் தங்கியிருக்கிறதுக்காக அந்தப் பெரிய சாமியாரு வரப்போறாரு. அந்த வீட்டைச் சாமியாரோட ஆசிரமமாக்கப் போறாள். அப்புறம் அவள்கூடத் துறவியாகப் போறாளாம். என்னமோ ஓர் அம்மான்னு பெயரை மாற்றி வச்சுக்கப் போறாளாம்.''

கேசவபிள்ளை ஒரு கற்சிலைபோல் சிறிதுநேரம் உட்கார்ந்து விட்டார். பாகீரதியம்மா ஏதேதோ சொல்லிக்கொண்டிருந்தாள்.

''அவளோட ஒரு துறவறம்! அது என்னன்னு எனக்குத் தெரியும். அவள் எதுக்காகக் காவித் துணி கட்டிக்கிறாள்? எதுக்காக ருத்திராட்சக் கொட்டை போடறாள்? விபூதி பூசறாள்? இதனாலெல்லாம் அவளோட சுபாவம் மாறிடுமா, என்ன? நான் எப்படியாவது உயிர் வாழறதுன்னு கேட்டப்போ அவள் சொன்னாள், அந்த ஆசிரமத்திலேயே தங்கிக்கிட்டிருக்கலாம்னு. காவித் துணி உடுத்தி ருத்திராட்ச மாலை போட்டுக்கிட்டுப் பண்ணற அயோக்கியத்தனத்தைப் பார்த்துக்கிட்டிருக்க என்னாலே முடியாதப்பனே!''

தங்கம்மாவின் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கிற திசை திருப்பத்தைப் பார்த்துக் கேசவபிள்ளை அசைவின்றி அமர்ந்துவிட்டார். பாகீரதியம்மா கேட்டாள்:

''அவளை நீயே ஒருமுறை பார்த்து இதைப்பற்றியெல்லாம் கேக்க முடியுமா?''

''அதனாலே என்ன பயன்?''

சிறிது நேரம் யோசனை செய்த பின் பாகீரதியம்மா சொன்னாள்: ''அது சரிதாம்ப்பா, நீ சொன்னக்கூட அவள் மாறப் போறதில்லே. உன்னை அவள் ஒரு பொருட்டாவே மதிக்கல்லே.''

அவள் ஒருமுறை நெடுமூச்சு விட்டாள். ''எல்லாம் தலைவிதிதான்'' என்றாள். கேசவபிள்ளை ஆறுதல் கூறினார்:

''ஒருவேளை உண்மையாகவே பக்தியினால் அவள் இவ்வாறு நடந்து கொள்கிறாள் என்று நினைக்கலாம் அல்லவா?''

''பக்தி! ஆமாமாம், நல்ல பக்திதான். நான் சொன்னது ஒண்ணுமே நீ கேக்கல்லேபோல் தோணுது. பக்தியும் கிடையாது; பொடலங்காயும் கிடையாது! என்னமோ வெறிபுடிச்சு அலையற பொம்புளேங்களுக்கா, பக்தி? எல்லாரும் வெறி புடிச்சு அலையறாங்க.''

சிறிது நேரத்துக்குப் பின் அவள் திரும்பவும் கூறத்தொடங்கினாள்:

''உனக்குத் தெரியணுமா? ஒரு சமயத்திலே அவளுக்குப் பைத்தியமே புடிச்சுப் போச்சு. பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பிச்சுடலாமான்னுகூட யோசிச்சேன். எப்படீன்னு கேளேன். பேசிக்கிட்டே இருக்கிறப்போ அவளுக்குச் சில சமயங்களிலே மயக்கம் வந்துடறது. மயக்கத்துக்கப்புறம் சிரிச்சுக்கிட்டிருப்பாள். சிரிப்பை நிறுத்தவே அவளால் முடியாது. அப்புறம் உரிச்சு வச்சிருக்கிற தேங்காயை எடுத்து, அதைக் குளிப்பாட்டி, விபூதி சந்தனம் எல்லாம் பூசிப் படுக்கையிலே கூடவே படுக்கவைப்பாள். அவளோட மாயைப் பொடிதான் இந்த மாதிரியெல்லாம் செய்ய வைக்கிறது. ரொம்பநாள் வரைக்கும் லீவெடுத்துக் கிட்டு வீட்டிலேயே உட்கார்ந்திட்டாள். இப்போ ராஜிநாமாகூடச் செஞ்சுட்டா.''

கேசவபிள்ளை கேட்டார்:

''இப்போதும் அந்தப் பைத்தியம் இருக்கிறதா?''

''அந்தப் பைத்தியத்தைக் குணப்படுத்தியதுகூட அவனேதான்'' என்றாள் பாகீரதியம்மா. ஆனால் அந்த முகத்துக்கு ஒரு தனித்தன்மை ஏற்பட்டிருக்கிறதாம். பழைய முகமன்று. அந்த முகத்திலே, ஆத்திரம், சந்தோஷம், சோகம் முதலிய உணர்ச்சிகள் திடீர் திடீரென்று மாறி மாறித் தோன்றி மறைவதைப் பார்க்கலாமாம். ''அவன் அங்கே இருந்து போக அவள் சம்மதிக்கவே மாட்டாள்.''

இருவரும் தங்கள் தங்கள் சிந்தனையிலேயே மூழ்கியவாறு சிறிது நேரம் அப்படியே நின்றிருந்தனர். பாகீரதியம்மா சொல்வது உண்மை என்றால், அந்தக் கட்டடத்தைக் கட்டி அவளிடம் நிபந்தனை ஏதுமின்றி ஒப்படைத்

தது தவறுகிவிட்டதென்று கேசவபிள்ளைக்குத் தோன்றியது. அது இப்போது பிறர் கைக்கு மாறப்போகிறது.

தாம் அதைப்பற்றி ஏன் கவலைப்பட வேண்டுமென்று கேசவபிள்ளை சிந்தித்துப் பார்த்தார். அந்தக் கடன் தீர்ந்தது என்று தள்ளிவிட வேண்டியதுதானே? அவள் உதவி செய்தாள், அதற்குப் பிரதிபலனை அளித்தோம். பெற்றுக்கொண்டவர்கள் அதை எவ்வாறு பயன்படுத்து கிறார்கள் என்று அறியவேண்டிய அவசியம் என்ன? அது எப்படிப் போனாலும் போகட்டுமே. ஆயினும் கேசவபிள்ளையின் இதயத்திலே எங்கோ ஓர் இடத்தில் சஞ்சலம் இருந்துவருகிறது.

உரித்த தேங்காயைக் குளிப்பாட்டி, விபூதி சந்தனங்கள் அணிவித்துப் படுக்கைமீது தன்னுடன் படுக்க வைத்திருந்தாள்! எதற்காக அப்படிச் செய்தாள்? ஒருவேளை ஒரு குழந்தை வேண்டுமென்ற தாய்மைத் தாகமாக இருக்கலாம் அல்லவா?

இந்தத் தகவல்களைத் தெரிவிக்கத்தானே பாகீரதியம்மா வந்தாள். இல்லை. மேலும் ஏதோ ஒரு நோக்கம் இருக்கவேண்டும். அதை அவள் வெளியிடவில்லை. தங்கம்மாவைச் சந்தித்துப் பேசவேண்டுமென்று அவள் சொன்னாள். ஆனால், மறுநிமிஷத்திலேயே அதனால் எந்தவித நன்மையும் ஏற்படப் போவதில்லை என்று அவள் உணர்ந்து கொண்டாள். அவ்வாறு தங்கம்மாவைத் தடுத்து நிறுத்தக்கூடிய செல்வாக்கு கேசவபிள்ளைக்கு எந்நாளும் இருந்ததில்லை. இனிமேல் ஏற்படப் போவதும் இல்லை என்று பாகீரதியம்மாவுக்குத் தெரியும்.

சிறிது நேரம் மௌனம் நிலவியது.

பாகீரதியம்மா கேட்டாள்: ''நான் என்ன செய்யறது அப்பனே?''

விடையளிக்க முடியவில்லை. கேசவபிள்ளை அவளையே பார்த்தார். மகளுடன் சேர்ந்து வாழத் தன்னால் இயலாதென்று அந்தத் தாய் திரும்பத் திரும்பக் கூறினாள்: ''இனிமே அங்கே வாழறதுன்னு ஓர் அநாதை விடுதியிலே வாழறது போலத்தான் அப்பனே. அதைவிட நல்லது, ஏதாவது கோவிலுக்கு முன்னாலே உட்கார்ந்து பிச்சை எடுக்கறது. இனிமே அந்த இடத்திலே அநாதைப் பொம்புளேங்களையும், விதவைங் களையும், நடத்தை கெட்டுத் திரியற பொம்புளேங்களையும் அழைச்சுக் கிட்டு வந்து தங்க வைக்கப் போறுங்களாம். அப்புறம் அந்த வீட்டை அந்தச் சாமியாரு பேருக்கு எழுதி வைக்கப் போறுளாம், தங்கம்மா. நானும் அவங்களோடு சேர்ந்து வாழணுமாம். அப்புறம் அங்கே நடக்கப் போகிற கூத்தாட்டம் எப்படியிருக்கும்னு யாருக்குத் தெரியும்? என்னாலே அப்படி வாழமுடியாதப்பனே!''

கேசவபிள்ளை அந்த அறைக்குள்ளே சிந்தனையில் மூழ்கியவாறு உலாவிக் கொண்டிருந்தார். இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண அவரால் முடிய வில்லை. அன்றொரு நாள் சேகரபிள்ளை, பார்க் வியூவுக்கு வந்து பேசிய தெல்லாம் கேசவபிள்ளை நினைவுக்கு வந்தது. அந்த மனிதர் இறந்த காட்சியும்! வாழ்க்கையிலே எந்நாளும் அவரால் மறக்க முடியாத ஒரு

நபர் உண்டு என்றால் அது சேகரபிள்ளைதான்! அவருடைய விதவை மனைவி வேறுவழியின்றித் தம் முன்னால் வந்து நிற்கிறாள். இறக்கும் தறுவாயில் அவர் இவளைத் தம்மிடம் ஒப்படைத்தாரா? கேசவ பிள்ளைக்கு ஞாபகமில்லை. இவளைக் கவனித்துக் காப்பாற்ற வேண்டு மென்று சொல்லவில்லையா? அப்படிச் சொன்னார் போலிருக்கிறதே . . . இல்லை! அப்படியொன்றும் சொல்லவில்லை. அத்தகைய பொறுப்பு ஒன்றையும் தாம் ஏற்றுக்கொள்ளவும் இல்லை. ஆயினும் கடமை என்ற ஒன்று இல்லையா? சேகரபிள்ளையைப் பொறுத்தவரையில் தாம் ஆற்ற வேண்டிய கடமைகள் எல்லாம் முடிந்துவிட்டனவா? முடிந்துவிட்டன என்று நினைக்க ஏனோ முடியவில்லை.

கேசவபிள்ளை கேட்டார்: ''என்னை என்ன பண்ணச் சொல்லறீங்க?''

கிழவி அழுத்தம் திருத்தமாகக் கூறினாள்: ''அதைப்பற்றி எனக்குத் தெரியாது. நீயல்லாமே எனக்கு வேறு துணை இல்லையப்பனே. எப்படி வேணும்னாலும் செஞ்சுக்கோ!''

ஒரு விநாடிக்குப் பின் சோர்வுடன் அவள் கூறினாள்: ''ஆனா, நீண்ட நாள் வரைக்கும் நான் உனக்கு ஒரு பளுவாயிருக்கப் போறதில்லே. அவ் வளவு நாள் வரைக்கும் நான் உயிரோடு இருக்கமாட்டேன். கடவுள் அவ்வளவு தூரம் என்னைக் கஷ்டப்படுத்த மாட்டாரு.''

என்ன செய்வதென்று கேசவபிள்ளைக்குப் புரியவில்லை. இன்னது வேண்டுமென்று குறிப்பாக அந்தத் தாய் சொல்லவில்லை. கேசவபிள்ளை கேட்டார்: ''நான் மாதமாதம் ஏதாவது பணம் தந்தால் போதுமா?''

''நான் எங்கே போய்த் தங்குவேன்? என் பசங்களோடு சண்டை போட்டு வந்தவள் நான். அங்கே போனா. . .''

''அங்கே போனால் உங்களைப் பையன்கள் ஏற்றுக்கொள்ள மாட்டாங்களா?''

''என்னமோ! எனக்குத் தெரியாதப்பனே.''

''வேறு உறவினர்கள் வீடு ஒன்றும் இல்லையா?''

''இல்லேன்னு சொல்ல முடியாது. ஆனா, அவங்களுக்கு என்கிட்டே எப்படி அன்பு இருக்க முடியும்? இருக்காது அப்பனே, இருக்காது! காசைக் கொடுத்துச் சாப்பிட்டுக்கிட்டிருக்கலாம்.''

கிழவி தொடர்ந்து கூறினாள்:

''மனநிம்மதியாய்ப் படுத்துக் கிடக்க எனக்கு ஓர் இடமும் இல்லே.''

கேசவபிள்ளையின் வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டுமென்பதே அந்தக் கிழவியின் எண்ணம் என்று புரிந்தது. இந்த வாழ்க்கையில் தனக்கு ஒரே ஒரு மருமகன்தான் இருக்கிறானென்று பாகீரதியம்மா அன்றொரு நாள் சொன்னது கேசவபிள்ளை நினைவுக்கு வந்தது. அதை இவள் இறுகப் பிடித்துக்கொண் டிருக்கிறாள்.

தன் மகளைக் கேசவபிள்ளை மணம் புரிந்துகொள்ளாவிட்டாலும், இன்னமும் அவரைத் தன் மருமகனாகவே பாகீரதியம்மா எண்ணி வரு கிறாள். அவளுடைய எண்ணத்தைக் கேசவபிள்ளை புரிந்துகொண்டார்.

'இது ஒரு பெரிய கட்டடம். இதன் ஏதாவதொரு மூலையில், வேலையாட்கள் தங்கியிருக்கும் அறையில் சுருண்டு படுத்தவாறு எஞ்சியுள்ள சிறிது காலத்தைக் கழிக்கச் சம்மதிக்க வேண்டும். தினசரி கொஞ்சம் கஞ்சித் தண்ணி ஊற்றித் தந்தால் போதும்' என்று அந்தத் தாய் சொன்னாலும் சொல்லக்கூடும். சொற்கள் நாமுனையிலே வந்து நின்றன. கேசவபிள்ளை இன்னும் ஒரு கேள்வி கேட்டால் போதும், அந்தச் சொற்கள் உதிர்ந்துவிடும்.

என்ன செய்வது? அவளை இங்கேயே தங்கியிரு என்று சொல்லிவிடலாம். சொல்ல வேண்டியதுங்கூட. ஆனால் கார்த்தியாயினி இங்கே இருக்கிறாளே? கூடாது. அவ்வாறு ஒப்புக்கொள்ளக் கூடாது. கார்த்தியாயினியும், பாகீரதியம்மாவும் ஒரே வீட்டில் தங்கியிருக்கக் கூடாது.

அப்போது கார்த்தியாயினி வாசல் பக்கம் வந்தாள். நன்றாகச் சிரித்து விட்டுப் பாகீரதியம்மா கூறினாள்: ''அடியம்மா. . .! பொண்டாட்டி இங்கே வந்திருக்காளா? என்கிட்டே சொல்லவே இல்லியே? எப்போ வந்தா?''

கேசவபிள்ளை பதில் கூறவில்லை. சிறிது தயங்கினார். அவள் சொன்னாள்: ''அப்படியானா நான் இதோ வந்துடறேன்.''

பாகீரதியம்மா, கார்த்தியாயினி நிற்குமிடத்துக்கு விரைந்து சென்றாள். இரண்டு பெண்களும் உள்ளே சென்றுவிட்டார்கள்.

'கூடாது' என்ற வார்த்தை அவருடைய உதடுவரை வந்தது. ஆனால் தவழ்ந்து வெளியே வரவில்லை. ச்சி! இது என்ன சனியன் பிடித்த நாள்?

அத்தியாயம் 24

இல்லற வாழ்க்கையின் துவக்கம்

அந்தக் கிழவி கார்த்தியாயினியிடம் என்னென்ன பேசிக்கொண்டிருந்தாள் என்று கேசவபிள்ளைக்குத் தெரியவில்லை. அவர் நிம்மதி இழந்திருந்தார். அவர்கள் பேசும்போது மத்தியிலே நுழைந்துவிட்டால் என்ன வென்று அவருக்குத் தோன்றியது. தாம் அருகிலேயே நின்றால் அந்தக் கிழவி எல்லாவற்றையும் திறந்து சொல்லமாட்டாள். சொல்ல ஆரம்பித்திருந்தால்கூடப் பேச்சை மாற்றிவிடுவாள்.

ஆனால், இப்போது கேசவபிள்ளைக்கு ஒரு குற்றவாளிக்கு இருக்கும் இதயச் சுமை ஏற்பட்டிருந்தது. அந்தப் பெண்கள் அமர்ந்து பேசுகிற அரங்கத்தைப் பார்த்துச் சமாளிக்கிற மனவலிமை தமக்கு இல்லை என்று அவருக்குத் தோன்றியது. 'கிழவி எதற்காக இங்கே வந்திருக்கிறாள்? அவள் யார்?' என்பன போன்ற கேள்விகளுக்கு விடையளிக்கிற நேரத்தில், மேற்கொண்டு விரிவான அடிப்படையில் பிரச்னைகளைக் கேட்டுப் புரிந்துகொள்ளும் நுண்ணறிவு கார்த்தியாயினிக்கு இருக்கிறதா? இல்லை என்ற நம்பிக்கையே கேசவபிள்ளைக்கு ஆறுதலைத் தந்தது. அந்தப் பட்டிக்காட்டுப் பெண் அவ்வளவு மதிநுட்பம் படைத்தவளாக இருக்கமாட்டாள்.

என்னவாயினும் தலைமைக் காரியதரிசிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அந்த நாள் நன்னாளாக அமையவில்லை. அன்றுதான் அவருடைய அந்தரங்க வாழ்க்கையின் நெருக்கடி மிகுந்த கட்டங்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது. ஓ . . . என்ன கஷ்டகாலம் இது! இன்னும் பல விஷயங்களைப் புரிந்துகொள்கிற கார்த்தியாயினி எப்போது காளிமாதேவியாகக் காட்சியளிக்கப் போகிறாளென்று தெரியவில்லை. அவளுடைய சுய உருவத்தைப் பார்க்க வேண்டியிருக்கும். இன்றுவரையில் அவளுடைய அந்தரங்கத்தில் ஒளிந்திருக்கிற உண்மை உருவம் வெளித் தோன்றவில்லை.

உள்ளே, தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். சொல்ல வேண்டியதையும் சொல்லக் கூடாததையும் வேறுபடுத்திப் பார்த்துச் சொல்ல அந்தக் கிழவிக்குத் தெரியாது. எதைப்பற்றியும் கேட்காவிட்டாலும் தங்குத் தடையின்றி எல்லாவற்றையும் அவள் சொல்லிவிடுவாள். கார்த்தியாயினிக்குத் தெரியாத எந்தத் தகவலும் இல்லை என்ற நிலைமை ஏற்பட்டுவிடலாம்.

கார்த்தியாயினி அலுவலக அறைக்குள்ளே வந்தாள். அவளுடைய தோற்றத்திலே எந்தவித மாறுதலும் தென்படவில்லை. அது கேசவ பிள்ளைக்குச் சிறிது ஆறுதலைத் தந்தது.

அவள் கேட்டுக்கொண்டாள்: ''அந்த அம்மா இந்த வீட்டிலேயே தங்கியிருக்கலாமல்ல?''

அந்தக் கேள்வி அவரை வியப்பில் ஆழ்த்தியது. சென்றகால நிகழ்ச்சிகளைப்பற்றி அவளுக்கு ஒன்றும் இன்னும் தெரியவில்லைபோல் இருக்கிறது.

அவள் தொடர்ந்து கூறினாள்: ''நமக்கு ஏற்பட்டிருக்கிற முன்னேற்றத்துக்குக் காரணமாயிருந்தவங்களை மறந்துடலாங்களா? அடித்தளத்தை மறந்துடக்கூடாதுங்க. தெய்வக் கோவம் ஏற்பட்டுடும்.''

கேசவபிள்ளை பேசாமல் இருந்தார்.

''ஏனுங்க, இப்படிப் பேசாமே இருக்கிறீங்க?''

அநுமதியைப் பெறவே கார்த்தியாயினி அங்கே நின்றிருந்தாள். அவளுக்கு முழு விஷயங்களும் தெரியாதுபோல் இருக்கிறது.

என்ன பதில் சொல்லவேண்டுமென்று கேசவபிள்ளைக்குத் தெரியவில்லை. ஆயினும், ஓர் அதிகாரி தம் சிப்பந்தியிடம் அதிகாரமாக, ஆணைக் குரலில் கேட்பதுபோல் கேட்டார்:

''நன்றாக யோசித்துத்தான் கேக்கறியா?''

உடனடியாகப் பதில் வந்தது, துணிச்சல் கலந்த குரலில்!

''ஆம். அவ்வளவு தூரம் யோசிக்க என்ன இருக்குது?''

''உனக்கு இன்று அந்தக் கிழவியிடம் ஏற்பட்டிருக்கிற அநுதாப உணர்ச்சி நாளைக்கோ அல்லது இன்று மாலையோ தணிந்துவிட்டால்...''

அவர் சொல்லி முடிக்கு முன்பே அவள் அதைப் பூர்த்தி செய்தாள்: ''நான் அவங்களை அடித்துத் துரத்தமாட்டேன். செஞ்ச உதவிக்கு நன்றி வேணுமா? அதுக்காகத்தான். மற்றப்படி எல்லாம் எனக்குத் தெரியுமுங்க. அன்னைக்கு ஊர் ஜனங்க சொன்னதெல்லாம் இப்போ சரியாப் போச்சு.''

கேசவபிள்ளையின் நாடி நரம்புகளில் திடீரென்று குளிர் பரவியது. அந்த மனிதர் உடல் மரத்துவிட்டது. கார்த்தியாயினி தொடர்ந்து கூறினாள்: ''அதெல்லாம் போகட்டுங்க. இது நம்ம கடமைதாங்க. அந்தக் கிழவியை நான் கவனிச்சுக் காப்பாற்றுவேன். எனக்கு உங்க கிட்டே எந்தவிதமான வருத்தமும் இல்லீங்க.''

அவள் மேலும் அநுமதிக்காகக் காத்து நின்றாள். 'வேண்டாம்' என்று சொல்லத்தான் கேசவபிள்ளை எண்ணினார். பாகீரதியம்மா அங்கே தங்கியிருக்க வேண்டாம். கேசவபிள்ளைக்கு ஒருவிதமான, இனம் புரியாத ஒரு பயம் ஏற்பட்டது. ஆனால், மனைவியின் முகத்தைப் பார்த்து, கிழவி அங்கே தங்க வேண்டாமென்று சொல்வதற்கான துணிச்சல் அவருக்கு இல்லாமல் போய்விட்டது.

''உன் இஷ்டப்படியே நடந்துகொள்!''

அத்தகைய அநுமதியை அல்ல கார்த்தியாயினி கோரியது. அவள் சொன்னாள்: ''அப்படீன்னு இங்கே சௌகரியப்படாதுன்னு அந்தக் கிழவி கிட்டே சொல்லியனுப்பலாமல்ல?''

''அப்படி நான் சொன்னேனு?''

''அப்புறம் என்னவாம்? உன் இஷ்டப்படி நடந்துக்கோன்னு சொன்னு, என்ன அர்த்தம்?''

சிறிது நேரத்துக்குப் பின் கேசவபிள்ளை, ''அந்தக் கிழவி இங்கே தங்கியிருக்கட்டும்'' என்றார்.

தொடர்ந்து எதையோ பேச விரும்பினார் கேசவபிள்ளை. அதற்காக அவர் சிரத்தை உயர்த்தினர். ஆனால் அதற்குள் அவள் அங்கிருந்து சென்றுவிட்டாள். அவர் கூப்பிட்டார்:

''கார்த்தியாயினீ!''

''என்னுங்க?'' உள்ளேயிருந்து குரல் கொடுத்தபடி அவள் வந்து நின்றாள். அவளது மனத்திலே ஏற்பட்ட பூரிப்பு முகத்திலே பரவி நின்றது. அதற்கப்பால், அந்த மனத்தின் உள்ளுக்குள்ளே, உண்மையை அறிந்த ஒரு மானவியின் ஆத்திரம் என்ற நெருப்பு பற்றியெரிகிறதா என்பதை அவரால் கண்டுகொள்ள முடியவில்லை. அந்தக் கணவர் அவளை உற்றுப் பார்த்தார். அந்தப் பட்டிக்காட்டுப் பெண்ணின் இதயத்துக் குள்ளே ஆழமாக ஊடுருவிப் பார்க்க அந்த உத்தியோகஸ்தரின் கண்களுக்குச் சக்தி இருக்கவில்லை.

கார்த்தியாயினி கேட்டாள்: ''எதுக்காக என்னைக் கூப்பிட்டீங்க?''

''சும்மா.''

''சும்மாவா?''

''நீ அந்தக் கிழவியிடம் சொன்னியா?''

''சொன்னேன். ஊம்? என்னங்க?''

''சும்மா தான் கேட்டேன்.''

''அந்த அம்மாவுக்கு எவ்வளவு ஆறுதல்னு தெரியுங்களா? நாம் செய்ய வேண்டியது இதுதானுங்க. இது மட்டுந்தான். அல்லாமே. . .''

அந்த மானவி கணவரின் முகத்தைக் கடுமையாக உற்றுப் பார்த்தாள். அவள் சொல்லி வந்த விஷயத்தைப் பூர்த்தி செய்தது அந்தப் பார்வை தான். அதைத் தாங்குவதற்கான சக்தி அவரிடம் இல்லை. அவர் சிரம் குனிந்துகொண்டார். இல்லை, சிரம் சுயமாகக் குனிந்துவிட்டது! ஆனால், அவர் திரும்பவும் ஒரு கணவன் என்ற உரிமையுடன், உயர்ந்த உத்தியோகஸ்தர் என்ற மதிப்புடன் கட்டளையிட்டார்.

''உம்! சரி!''

கார்த்தியாயினி உள்ளே போனாள்.

கேசவபிள்ளை ஒரு சாய்வு நாற்காலியிலே படுத்துக்கொண்டார். பல வருஷங்களுக்கு முன் மனமில்லாமல் மணம் புரிந்து வீட்டுக்கு இட்டு வந்து விட்டுத் தன் சௌகரியத்தை முன்னிட்டு மறந்துவிட்ட அந்தப் பட்டிக்காட்டுப் பெண்ணை இன்று புரிந்துகொள்ள முயன்று பார்த்தார்,

அந்தக் கணவர். ஆம், அவளை நினைவு கூர்ந்து பார்த்த சந்தர்ப்பங்கள் இருந்திருக்கின்றனவா? தம் வாழ்க்கையுடன் ஒரு பெண்ணும் இணைந் திருக்கிறாள் என்றே அவர் எண்ணியதில்லை. மனைவி இருக்கிறாள் என்ற உணர்வுகூட இல்லாமல் அல்லவா வாழ்ந்து வந்திருக்கிறார்? ஊருக்குச் சென்றபோது மட்டுந்தான் தனக்கு ஒரு மனைவி இருக்கிறாள் என்ற ஞாபகம் அவருக்கு ஏற்பட்டு வந்தது. மணம் முடித்துக்கொண்ட பின்னும் மனைவி ஒருத்தி இருக்கிறாள் என்று எண்ணுமல் இருந்ததால் அந்த மனைவியைப்பற்றி அறிந்துகொள்ள முடியவில்லை.

தனக்கு ஒரு கணவர் இருக்கிறார் என்ற உணர்வுடன் ஒரு பெண் தமக் காகவே இவ்வுலகில் வாழ்கிறாள் என்ற உண்மை கேசவபிள்ளையின் மனத்தில் எப்போதாவது தோன்றியிருந்ததா? இப்போது அவர், அவளை உயிர்க் களையுடன் தம் முன்னே பார்க்கிறார். ஒரு வாழ்க்கைத் துணைவியை! ஆனால், அவளைப் புரிந்துகொள்ள அவரால் முடியவில்லை. எதற்காக மணம் முடித்துக்கொண்டோமென்று கேசவபிள்ளை இதுவரை யில் சிந்தித்துப் பார்த்ததில்லை. அத்தகைய ஒரு கேள்வியை வேறு யாராவது கேட்டிருந்தால், சொல்வதற்கு ஒரே ஒரு விடைதான் இருந்தது. 'தாய் தந்தையர்கள் வற்புறுத்தலுக்காக;' அவ்வளவுதான்! இந்த உறவுக்கு வேறு பொருள் இருப்பதாக அவர் எண்ணவில்லை. ஆனால் இன்று திருமணம் என்பதற்கு வேறு பொருள் இருக்கிறதென்று கேசவ பிள்ளைக்குத் தோன்றியது. ஒரு புதிய வாழ்க்கை துவங்க இருக்கிறது. மனைவியுடன் ஒரு மனிதனுடைய வாழ்க்கை!

கேசவபிள்ளை எழுந்தார். சிந்தனையில் மூழ்கியவாறு உலாவிக்கொண் டிருந்தார். கார்த்தியாயினி மேலும் பல கேள்விகளைக் கேட்கலாம். அதற்கெல்லாம் விடையளிக்க வேண்டியிருக்கலாம். எல்லா விஷயங் களும் அவளுக்குத் தெரிந்துவிட்டன. தெரிந்துகொண்ட விஷயங்கள் அவளுக்குக் கவலை அளிக்கவில்லையா? அதைக் கண்டுகொள்ள அவரால் முடியவில்லை. கார்த்தியாயினி ஓர் இரகசியக் களஞ்சியமாகக் கேசவ பிள்ளைக்குத் தோன்றினாள். ஒருவேளை, மனைவி என்பதற்குப் பொருள் அதுவாக இருக்கலாமோ?

* * *

மாத்யூ, லூக்கோஸ் ஆகிய இருவர் சந்திக்க வந்திருப்பதாக ஒரு காவலன் வந்து சொன்னான். கேசவபிள்ளை அவர்களை உள்ளே வர அனுமதி அளித்தார். தற்போதைய நிலையிலிருந்து சீஃப் செக்ரடரி என்ற நிலைக்கு வர அவருக்குச் சிறிது நேரம் பிடித்தது.

அவர்கள் வந்தது வேறு எந்தக் காரியத்துக்காகவும் அல்ல, தங்கள் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்வதற்காகவே. அன்றுதான் கேசவபிள்ளை புதிய பதவியை ஏற்றுக்கொள்ளப் போகிறார் என்று அவர் களுக்குத் தகவல் கிடைத்திருந்தது. அன்றையதினமே வந்து தங்கள்

பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்று மாத்யூவும் லூக்கோஸும் தீர்மானித்திருந்தனர். நாராயணன் நாயர், கோபி ஆகியோருடைய கான்டிராக்டு சம்பந்தமான காரியங்களும் கேசவபிள்ளையின் உதவியால் மங்களகரமாகவே நிறைவேறியிருக்கின்றன என்றும் அவர்கள் சொன்னார்கள். லூக்கோஸ் சொன்னார்:

''இதனால் அரசாங்கத்துக்குப் பிரத்தியேக நஷ்டம் எதுவும் ஏற்பட வில்லை.''

கேசவபிள்ளை ஒரு முறை புன்னகை செய்தார். அவ்வளவுதான்.

லூக்கோஸ்தான் அன்றைக்கு முக்கியப் பேச்சாளராகக் காட்சி யளித்தார். ''இன்றுகூட அரசாங்கத்தை ஆதரிப்பதனால் தங்களுக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள், சகித்துக்கொண்ட அவதூறுகள் எண்ணற்றவை'' என்றார். ஒன்றுமறியாத அப்பாவிபோல் லூக்கோஸ் கேட்டார்: ''இதெல்லாம் எப்படி முடியுமோ என்னவோ?''

கேசவபிள்ளை லூக்கோஸின் முகத்திலே ஓங்கியடிப்பதுபோல் கூறி னார்: ''மிஸ்டர் லூக்கோஸ், என்னை ஒரு முட்டாளென்று எண்ணவேண் டாம். எனக்கு உங்களைத் தெரியும். புரிந்ததா?''

லூக்கோஸ் சிறிது திகைத்துப் போனார். மன்னிப்பைக் கேட்கும் முறை யில் அவர் விரைந்து கூறினார்: ''ஐயோ! அது . . .''

கேசவபிள்ளை குறுக்கிட்டார்: ''போதும்! நிறுத்துங்க! நிறுத்துங்க! எல்லாம் எனக்குத் தெரியும். இதே முறையில் முன்னேறிச் செல்வோம். நான் உங்களைப் புரிந்துகொண்டுதான் பேசுகிறேன்.''

நாராயணன் நாயர், கோபி ஆகியோரின் கான்டிராக்டு சம்பந்தமான இரகசியம் கேசவபிள்ளைக்குத் தெரிந்துவிட்டதோ என்றே லூக்கோஸ் முதலில் பயந்தார்.

லூக்கோஸ் கேட்டார்: ''நாங்கள் என்ன தவறு செய்தோம்?''

கேசவபிள்ளை சிரித்தவாறு பதிலுரைத்தார்: ''நீங்கள் எந்தத் தவறும் செய்யவில்லை மிஸ்டர் லூக்கோஸ். எனக்கு உங்களைப்பற்றி எந்தவித மான தவறான கருத்தும் இல்லை.''

கேசவபிள்ளை சொல்வது என்னவென்று மாத்யூ புரிந்துகொண்டார்.

''ஒன்றுமில்லை லூக்கோஸ். அவர் சொல்வது சரிதான். அதுதான் சரியானது. நீங்கள் விஷயம் புரியாமல் திகைக்கிறீர்கள்'' என்றார் மாத்யூ.

இவ்வாறு அந்தப் பேச்சுவார்த்தைகள் முற்றுப் பெற்றன. விடை பெறுவதற்காக எழுந்து நின்றபோது லூக்கோஸ் ஒரு சிறிய பெட்டியைக் கையிலெடுத்துக் கேசவபிள்ளை முன்னால் மேஜைமீது வைத்தார்.

''இது எங்களுடைய ஒரு சிறிய அன்பளிப்பு.''

சம்பிரதாயம் என்ற முறையில் கேசவபிள்ளை கூறினார்: ''ஓ! இதெல்லாம் எதுக்கு? நீங்கள் வந்து பாராட்டினீர்களே, அதிலேயே நான் மகிழ்ச்சி யடைந்தேன்.''

அதற்கு மாத்யூ பதிலளித்தார்: ''சீஃப் செக்ரடரியாகிவிட்டீர்கள். அதற்காக நாங்கள் செலுத்துகிற பாராட்டுக்களின் சின்னம் இது. என்றும் எங்களைப்பற்றிய நினைவு இருக்கும் அல்லவா?''

அதுவும் ஒரு சடங்கு என்ற முறையிலே பேசப்படுவதாக உணர்ந்து கேசவபிள்ளை கூறினார்: ''நான் ஏற்றுக்கொண்டுவிட்டேன்.''

மாத்யூ, லூக்கோஸ் ஆகியோரிடம் இன்னொரு விஷயத்தைப்பற்றிக் கூடக் கேசவபிள்ளைக்குப் பேசவேண்டியிருந்தது:

''கிளர்ச்சி சிறிது தணிந்திருப்பதனால், அது அடியோடு அழிந்து விட்டது என்று நினைக்கவேண்டாம். அது புதிய உருவத்தை எடுக்கப் போகிறது. ஆகட்டும். அப்போது தெரிவிக்கிறேன்.''

அவர்கள் விடைபெற்றுச் சென்றனர்.

அவர் மேஜைமீதிருந்த பெட்டியைக் கையில் எடுத்தார். அது ஒரு நகைப் பெட்டி. திறந்தார். கற்கள் பதித்த நெக்லேஸ். விலை உயர்ந்தது, அழகானதுகூட.

கேசவபிள்ளை கார்த்தியாயினியைக் கூப்பிட்டார். அவள் பாகீரதி யம்மாவுடன் இடைவிடாமல் பேசிக்கொண்டிருந்தாள். குரல் கொடுத் தாள்.

''கொஞ்சம் இங்கே வந்துவிட்டுப் போ!''

டாலடிக்கும் கற்கள் பதித்த அந்தத் தங்க நகையைக் கையிலேயே தூக்கிப் பிடித்து அழகு பார்த்தவாறு நின்றுகொண்டிருந்தார் கேசவ பிள்ளை. கார்த்தியாயினி கணவர் முன்வந்து கேட்டாள்:

''இது ஏது? நம்ம மகளுக்குப் போட்டால் நல்லாயிருக்கும்.''

''இது உனக்காகத்தான்.'' இனிமையான புன்னகையுடன் அவர் அவளை அணுகியவாறு கூறினார். அதை அவள் கழுத்திலே அணிவிக்கப் போனார்.

''ஓ . . . எனக்கு வேணும். இந்த மாலையைப் போட்டுக்கிட்டு நடந்தா மானக்கேடுதான் ஏற்படும். வேணும். எனக்கு வெட்கமா இருக்கு துங்க.''

அவள் கேசவபிள்ளையின் முகத்தைப் பார்த்தாள். அது மகிழ்ச்சியால் மலர்ந்திருந்தது. கணவரை இந்நிலையில் அவள் கண்டதே இல்லை. அந்தக் கண்களிலே ஆவேச உணர்ச்சி; முகமெங்கும் அது பரவி நிற்கிறது.

''இந்த மாலையைக் கழுத்திலே அணிந்து உன்னை நான் பார்க்க வேண்டும்.''

''எதுக்கு?''

''எதற்கென்ன கேட்கிறாய்? இந்த நெக்லேஸைக் கழுத்தில் அணிந்து உன்னை நான் பார்க்கவேண்டும். அதுக்காகத்தான்.''

அவள் சம்மதத்துடன் நின்றாள்: ''என்னங்க, இந்தப் பருவத்திலேதானே நீங்க எனக்கு மாலை அணிவிச்சு அலங்காரம் பண்ணிப் பார்க்கப் போறீங்க?''

''அதுக்கு என்ன?''

''இது மானக்கேடுதாங்க. இதையும் போட்டுக்கிட்டு நிக்கறதைப் பார்த்தா நம்ம மகள் கைகொட்டிச் சிரிப்பாள்.''

நெக்லேஸை அணிவித்துவிட்டார். அது நெஞ்சுக்கு நேராகத் தொங்கியது. நெக்லேஸை அணிந்து நின்ற மனைவியின் அழகைப் பார்த்துக் கொண்டு அவர் நின்றார்.

கார்த்தியாயினியைப் பொறுத்தவரையில் அது ஒரு புதிய அநுபவந்தான். கேசவபிள்ளை அவளைப் பார்த்து இவ்வளவு இனிமையாகப் புன்னகை செய்ததே இல்லை; காதலுடன் பார்த்ததில்லை! பார்த்துப் பார்த்து லயித்து நின்றதில்லை. இவை அனைத்தும் சேர்ந்து கிளப்பிய கிளுகிளுப்பிலே அவளுக்கு மயிர்க்கூச்செடுத்தது. முகம் குனிந்தாள். அந்த முகத்திலே செவ்வண்ணம் பரவியது.

அவள் நாணத்துடன் சிரத்தை உயர்த்தி நோக்கினாள். அவளுடைய கண்களிலே இதற்குமுன் கண்டிராத அழகு ஜொலித்தது; வசிய சக்தி வசீகரித்தது. அவை எதையோ கோருவதுபோல் தோன்றியது. அவள் இதயம் எதையோ விரும்பிக் கேட்டது. வாழ்க்கையில் இதுகாறும் தனக்கு இன்னது வேண்டுமென்று அவள் கோரியதில்லை. வார்த்தைகளாலோ, தோற்றங்களாலோகூட இல்லை. இன்று அவள் வேண்டுகிறாள். செவ்வண்ணம் படர்ந்த வதனம், நாணத்தின் சிறு புன்னகை, உணர்ச்சி மிகுதியால் குறுகிவிட்ட நயனங்கள்—எல்லாம் கேசவபிள்ளைக்குப் புதுமையாக இருந்தன. கார்த்தியாயினி அழகி. பெண்மையின் ஜீவகளை அவளிடம் இருந்தது; வசியமும் உண்டு. அவள் எதை வேண்டுகிறாள் என்பதைக் கேசவபிள்ளை புரிந்துகொண்டார்.

பல வருஷங்களுக்கு முன்னால், தலைமைக் காரியாலயத்திலுள்ள ரெவின்யூ இலாக்காவின் அலுவலகத்திலே, பெரிய அலமாரி ஒன்றின் மறைவிலே, ஒரு முத்தத்துக்காக ஏங்கி நின்ற அந்த வதனத்தை அவர் கற்பனைக் கண் கொண்டு பார்த்தார். அந்த வதனத்தின் உணர்ச்சியும் இப்படித்தான் இருந்தது. அது ஒரு தாகம்; மோகம்! பெண்களெல்லாம் முத்தத்தை வேண்டி நிற்பது இப்படித்தானா? அன்று முத்தத்தை வேண்டி நின்ற வதனத்தையும், இன்று முத்தத்தை வேண்டி நிற்கிற முகத்தையும், கேசவபிள்ளை ஒரு நிமிடம் ஒப்பிட்டுப் பார்த்தார். அப்படி ஒப்பிட்டுப் பார்த்தது அவருக்கே தெரியாமல் திடீரென்று ஏற்பட்ட உணர்ச்சி.

யாரோ ஒருவர் தமக்குள்ளிருந்து கிளம்பி வந்து பலவந்தமாகப் பிடித்து நிறுத்தி, 'பார், அந்த அலமாரியின் மறைவிலே தென்படுகிற வதனத்தைப் பார்!'' என்று அவரை வற்புறுத்துவதுபோல் தோன்றியது. அந்த வதனம் தென்படாமல் இருக்க அவர் கண்களை மூடிக்கொண்டார். ஆனால் பார்க்கமுடியாமல் போனது கார்த்தியாயினியின் முகந்தான்.

யாரோ ஒருவன் உள்ளிருந்து கேட்டான்: 'யார்தான் அழகி?'

அந்த நிலையிலுள்ள ஓர் ஆடவனுக்கு ஏற்படுகிற இக்கட்டான நிலைமை அதுவாகத்தான் இருக்கும். இரண்டு பெண்கள்மீதும் தன் கவனத்தை ஏககாலத்தில் உறுதிப்படுத்த முடியாமலும், ஒப்பிட்டுப்

பார்க்கும் மனவலிமை இல்லாமலும் இருக்கும் நிலைமை. ஒரு பெண்ணிடம் வெறுப்பு ஏற்பட்டிருந்தபோதிலும் அவளை நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியாத ஒரு நிலை.

கார்த்தியாயினியின் முகத்திலே ஒருவிதச் சோர்வு பரவுவதுபோல் தோன்றியது. அந்தக் கோரிக்கை நிறைவேற அவள் எவ்வளவு நேரமாகக் காத்து நிற்கிறாள்! 'எனக்குத் தரமாட்டீர்களா?' என்று தழுதழுத்த குரலில் அவள், வேண்டுவதுபோல் இருந்தது. கேசவபிள்ளை கைகள் இரண்டையும் முன்னால் நீட்டியவாறு முன்னே நகர்ந்து சென்றார்.

பார்க் வியூவிலுள்ள அலுவலக அறையின் கதவின் மறைவிலே, நீட்டப் பட்ட கைகளுக்கிடையிலே கார்த்தியாயினி, கேசவபிள்ளையின் மார்பு மீது அழுந்தியிணைந்து நின்றாள். அவளுடைய கோரிக்கை நிறைவேறியது. பல வருஷங்களாக நீடித்து நின்ற அந்த இல்லற வாழ்விலே, அவள் ஒரு முத்தத்தை வேண்டிக் கேட்டதில்லை. ஏதோ சில சந்தர்ப்பங்களில் கிடைத்திருக்கலாம். ஆனால் இன்று வேண்டிக் கேட்டு வாங்கினாளே, அதன் ருசிதான் என்னே! கேட்டால் கிடைத்துவிடும் என்ற உறுதி இல்லாமலேயே கேட்டபோது கிடைத்துவிட்டதனால் ஏற்பட்ட ருசியே அலாதி.

ஆயினும் ஏதோ ஒரு குறை இருப்பதாகக் கேசவபிள்ளைக்குத் தோன்றியது. தம் கரங்களுக்கிடையில் ஒட்டியிணைந்து நின்று ஆசையுடன் தன் முகத்தை உற்றுப் பார்ப்பது கார்த்தியாயினிதான். ஆனால் ஒரு விநாடி தம் கண் இமை ஒருமுறை மூடிவிட்டால் போதும், அவள் தங்கம்மாவாக மாறிவிடுகிறாள். கார்த்தியாயினியின் முகத்துடன் தம் முகத்தைச் சேர்த்து முத்தமிடும்போது தங்கம்மாவை முத்தமிடுவதுபோல் தோன்றிவிடுகிறது. கார்த்தியாயினியின் கரங்கள் இறுக அணைக்கும்போது கேசவபிள்ளைக்குப் பயம் ஏற்பட்டுவிடுகிறது. அன்றொரு நாள் அவர் தங்கம்மாவின் கரங்களிடையில் சிக்கி மூச்சுத் திணறியிருக்கிறார்! அந்தப் பயந்தான்.

அவர்களுடைய இல்லற வாழ்வில் தங்கம்மா இவ்வாறு நுழைந்து வந்தாள். அதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியிலே ஈடுபட்டார் கேசவபிள்ளை. அவள் இனிமேல் அவர்களுக்கிடையில் வந்து குழப்பத்தை விளைவிக்கவேண்டாம்!

* * *

கேசவருக்கு நாற்பத்தைந்து வயதாகிவிட்டது. திருமணத்துக்குப் பிறகு, பல வருஷங்களுக்குப் பிறகு இந்தப் பார்க் வியூ பங்களாவில்தான் கார்த்தியாயினி தேனிலவைப் பருகுகிறாள்; கொண்டாடுகிறாள்.

அன்று மாலை அவள் முல்லைப் பூச் சூடினாள். கேசவபிள்ளை சொல்லி அவ்வாறு செய்யவில்லை. திருமணம் முடிந்து வீட்டுக்கு முதல் முதலாகக் கேசவபிள்ளை வந்திருந்தபோது பூக்களைக் குறித்து அவர் சொன்ன விஷயங்கள் அவள் மனத்தில் பதிந்திருந்திருக்கலாம். தினசரி படுக்கைமீது

முல்லைப் பூக்களை உதிர்த்து வைத்தாலும், இன்றுதான் அவள் முல்லை மாலையைச் சூடியிருக்கிறாள். அது கணவன் மனைவி உறவை உறுதிப் படுத்தும் என்றஎண்ணத்தை அவள் மனத்தின் அடித்தளத்திலே உருவாக்கி யிருக்கலாம். அன்று மன உறுதியுடனும் அவள் காணப்பட்டாள்.

இந்தத் தேனிலவுக்கு ஒரு தனித்தன்மை இருக்கலாம். பொருளில் லாத விஷயங்களை அன்று அந்தத் தம்பதிகள் பேசிக்கொண் டிருக்க மாட்டார்கள். மணிநாதம் போன்ற சிரிப்பொலிகளும், வெறும் வேடிக்கைப் பேச்சுக்களும் அன்று நடைபெறப் போவதில்லை. உண்மை யைப் பேசித் தீர்த்துவிடுவதுதான் நல்லது என்ற முடிவுக்கு வந்துவிட்டாளோ?

கார்த்தியாயினி பல விஷயங்களைப் புரிந்துகொண்டு விட்டாள் அல்லவா? அது கேசவபிள்ளைக்குத் தெரியும். அவள் கேள்விக் கணைகளைத் தொடுத்துவிடப் போகிறாள். நிமிர்ந்து நின்று பதில் அளிக்கவேண்டும். கேசவபிள்ளை ஒரு முடிவுக்கு வந்தே தீரவேண்டும். உண்மையைச் சொல்லுவதென்றால் அந்தத் தம்பதியின் வாழ்க்கை இனியே ஆரம்ப மாகப் போகிறது.

கார்த்தியாயினிக்குப் பாகீரதியம்மாவைக் குறித்து அநுதாப உணர்ச்சி தான். கள்ளங் கபடமற்ற ஒரு பெண் என்றுதான் அவளுடைய மதிப் பீடு. ஒளிவு மறைவு இல்லாத, நெளிவுசுளிவில்லாத நேரான பாதைதான் அந்தக் கிழவியுடையது. கார்த்தியாயினி சொன்னாள்: ''பாவம்! இந்த வயது வந்த காலத்திலே அந்த அம்மாவுக்கு இந்த மாதிரியான கஷ்டம் ஏற்பட்டதே!''

கார்த்தியாயினிக்கு ஏற்பட்டுள்ள இந்தக் கருத்து நீடித்திருந்தால் போதும் என்றார் கேசவபிள்ளை. பாகீரதியம்மா தந்திரக்காரி, கெட்டவள்' அதனால்தான் அவளுக்கு இந்தத் துன்பம் நேர்ந்தது என்று சிறிதுகாலம் கழித்துச் சொல்லக்கூடாதென்று அவளை எச்சரிக்கை செய்தார் அவர்.

அந்த முன் எச்சரிக்கையைக் குறித்துச் சிந்திப்பவள்போல் கார்த்தி யாயினி சிறிது நேரம் பேசாமல் படுத்துக் கிடந்தாள். கேசவபிள்ளை கட்டில்மீது அமர்ந்திருந்தார். அவர் அவளுக்குச் சிந்தித்துப் பார்க்கச் சந்தர்ப்பம் கொடுத்ததுபோல் தோன்றியது.

உண்மையை மட்டும் தெரிந்துகொள்ள அவள் கணவனின் இதயத்தைத் தொட்டுக் கேட்பதுபோல் கேட்டாள்:

''நான் ஒரு விஷயத்தைப்பற்றிக் கேக்கட்டுமா? உண்மையைச் சொல்லுவீங்களா?''

'கேள்! சொல்கிறேன்' என்ற பதில் அவரிடமிருந்து வரவில்லை. மாறுக, ''ஊம்? என்ன அது?'' என்ற மறுகேள்விதான் பிறந்தது.

சிறிது நேரம் கார்த்தியாயினி பேசவில்லை. ஒருவேளை, அந்தக் கேள்வியை எப்படிக் கேட்பதென்று சிந்திக்கிறாளோ என்னவோ?

''நீங்க என்னை விரும்பலை அல்லவா?''

கூரிய கேள்விக் கணை! அவர் அதை எதிர்பார்த்திருக்கவில்லை. திகைக்க வைப்பதாக இருந்தது. 'உன் திருமணத்தைப்பற்றி நாங்க நிச்சயம் பண்ணியிருக்கிறோம்' என்று பப்புப்பிள்ளை அன்று அழுத்தமான குரலில் அதட்டிச் சொன்ன அந்த நிமிடத்திலிருந்து இன்றுவரையில், அவள்மீது விருப்பம் இருந்து வருகிறது என்று தெளிவாகச் சொல்லமுடியாது. இல்லை என்றும் சொல்லமுடியாது. இந்த நிலையில் அந்த வினவுக்கு எப்படி விடையளிக்க முடியும்?

அவருடைய பதில் மீண்டும் கேள்வியாகவே இருந்தது: ''அப்படி யென்றால். . . ?''

''அப்படீன்னா—நான் வேணுங்கிற கருத்து உங்களுக்கு இருந்து வந்ததான்னுதான் கேக்கறேன். திருமணத்தைப் பண்ணிக்கிட்டதும் வேண்டா வெறுப்போடதானே? எந்நேரத்திலே வேணுமானாலும் ரத்து பண்ணறதுக்குக் கஷ்டமும் இருந்திருக்காதல்லவா?''

அவள் ஒரு விநாடி நிறுத்திவிட்டு மீண்டும் கூறினாள்: ''நான் செத்துப் போயிருந்தாக்கூட நீங்க கவலைப்பட்டிருக்கமாட்டீங்க. நான் ஒருத்தி இருக்கிறேன் என்கிற நினைப்பே இல்லாமே இருந்துட்டீங்களே?''

கார்த்தியாயினி கணவரின் முகத்தை உற்றுப் பார்த்துக் கேட்ட கேள்வி இது. அவர் பதில் அளித்தார்: "நீ என்ன பைத்தியம் பிடித்து உளர்றே?''

''எனக்குப் பைத்தியம் இல்லே. உண்மையைத்தான் சொல்லிக்கிட்டிருந்தேன். உண்மை! என்னோட அநுபவத்தை வச்சுப் பார்த்துத் தெரிஞ்சுக்கிட்ட உண்மை. இல்லேன்னுச் சொல்லுங்க!''

கேசவபிள்ளை, ''அது உண்மையாக இருந்திருந்தால், இன்று, இங்கே, இந்த மெத்தைமீது இவ்வாறு நீ படுத்திருப்பியா? நான் இப்படி உன் அருகே உட்கார்ந்திருப்பேனா?'' என்று கேட்டார்.

அதற்கான பதில் உடனே கார்த்தியாயினியிடமிருந்து வந்தது. அந்தப் பட்டிக்காட்டுப் பெண்ணின் நிரந்தர நம்பிக்கையிலிருந்து உருவான பதில்! ''அப்படிச் சொல்ல வேணும். அது தலையெழுத்து! விதி! அதை மாற்ற யாராலும் முடியாதுங்க!''

கேசவபிள்ளையால் பதில் சொல்லமுடியவில்லை. சிறிது நேரம் இருவரும் வாய் திறக்கவில்லை.

''நான் என்னோட அநுபவத்தைப்பற்றி யோசிச்சுக்கிட்டிருந்தேன்'' என்றாள் கார்த்தியாயினி.

''யோசனை எல்லாம் இப்போதானா?''

''இல்லே . . . அன்னைக்கெல்லாம் நான் இதைப்பற்றி ஒண்ணும் அதிகமா யோசிக்கலே. ஆனாக்கூட நீங்க என்கிட்டே ஏன் வராமே இருக்கிறீங்க என்ற நினைப்பு வந்ததுண்டு. எக்கச்சக்கமா வேலே இருக்கிறதனாலேன்னு மற்றவங்க சொல்லுவாங்க. உண்மைதான்னு நிம்மதியாயிருப்பேன். அசலூரிலே வேலே செய்யறவங்களாலே மனைவியைப்பற்றி மட்டும் நினைச்சுக்கிட்டிருக்க முடியுமா? சில சந்தர்ப்பங்

களிலே, ஏதாவது தகராறு இருக்குமோன்னுகூட யோசிச்சதுண்டு. இன்னேக்குத்தான் எல்லாவற்றையும் புரிஞ்சுக்கிட்டேன்.''

ஓ! அதெல்லாம் அவ்வளவு பிரமாதமான விஷயமா? பிரமாதப் படுத்திப் பார்க்கவேண்டாம் என்கிற முறையிலே, அவர் தலை குனிந்து கொண்டு அவளுடைய கன்னத்திலே மெதுவாக ஒரு கிள்ளுக் கிள்ளினார்.

''நீ என்னத்தைப் புரிஞ்சுக்கிட்டாய்? மண்ணுங்கட்டி! எதை யெல்லாமோ கேள்விப்பட்டு மனசைப் புண்படுத்திக்காதே!''

அவள் கேட்டாள்: ''அப்போ வேடிக்கையாப்பேசறதும், வேடிக்கையா நடந்துக்கறதும் உங்களுக்குத் தெரியும்! இல்லீங்களா?''

அதைக்கூட வேடிக்கையாகத்தான் அவர் எடுத்துக்கொண்டார்: ''என்ன கிரகமிது! கன்னத்திலே கிள்ளவும் கூடாதா?''

''நான் எண்ணியிருந்ததெல்லாம் இப்படி இல்லிங்க. ஜனங்க என்னென்னமோ எல்லாம் பேசினுங்க. அப்போகூட நான் அதை ஒண்ணும் நம்பலே. இப்பத்தானே புரியது; கல்யாணத்துக்கப்புறம் ஏன் என்னைத் திரும்பிப் பார்க்காமே இருந்தீங்கன்னு!''

''அந்தக் கிழவி வந்து தகராறைக் கிளப்பிவிட்டிருக்கிறுள்போல் தோணுது.''

அவள் அதை மறுத்துக் கூறினுள்: ''இல்லே, இல்லே. அவங்க ஒண்ணுமே சொல்லலே. சும்மா குற்றம் சொல்லக்கூடாது. அந்த அம்மா கள்ளங்கபடம் இல்லாதவங்க.''

இதயத்தைப் புண்படுத்துகிற பல தகவல்கள் அவளுக்குக் கிடைத்திருக் கின்றன. அவளுடைய மனம் தவிக்கிறது என்று கேசவபிள்ளைக்குத் தெரிந்தது.

கனமான நிமிஷங்கள்தான் நகர்ந்துகொண்டிருந்தன. கார்த்தியாயினி அசைவின்றிப் படுத்துக் கிடந்தாள். புதிதாகக் கிடைத்திருக்கிற அறிவின் அடிப்படையில் அவள் தன் சென்ற கால வாழ்க்கைபற்றி நினைத்துக் கொண்டிருந்தாளா? அந்த நாட்களில் கேசவபிள்ளையைப்பற்றி அங்கு மிங்குமாகக் கேள்விப்பட்ட அவதூறுகளையெல்லாம் இப்போது அந்த அந்தச் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு பொருத்திப் பார்த்துக்கொண் டிருந்தாள். கல்யாணம் நடைபெற்ற அன்றைக்கே தாலி கட்டிய பெண்ணை ஒருமுறை ஏறெடுத்துக்கூடப் பார்க்காமல் கணவன் போகிறு னென்றால் . . . அதுமாதிரி எங்கேயாவது நிகழ்ந்ததுண்டா? பலருடைய திருமணங்களைப்பற்றியும் அவள் நினைத்துப் பார்த்தாள். அந்த நாட் களிலேகூடச் சில சந்தர்ப்பங்களில் அவள் இவ்வாறு நினைத்துப் பார்த்த துண்டு. ஓர் இடத்திலும் நிகழ்ந்ததில்லை. தன் விஷயத்தில் மட்டும் ஏதோ கோளாறு இருப்பதாக அவள் எண்ணினுள். ஆயினும் பொறுமையாக இருந்து வந்தாள். திருவனந்தபுரத்திலேதான் வேலை. அது போகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அப்பாவும் கிட்டு மாமாவும் மேற்கண்டவாறு சொல்லி வந்தார்கள். இன்றைய புதிய சூழ் நிலைமையில், புதிதாக ஏற்பட்டிருக்கிற அறிவின் ஒளியில் அந்தச் சொற்

கூட அவள் எண்ணிப் பார்த்தாள். கணவனுக்கு, தான் வேண்டாத பொருளாக இருந்திருக்கிறோம். அதுதான் உண்மை. விருப்பம் இல்லாத திருமணமாக இருந்தது. அப்புறம் எத்தனை மாதங்களுக்குப் பிறகு வந்தார்! அண்டை வீட்டுப் பெண்கள், வெறும் யூகத்தின் அடிப் படையிலாக இருந்தாலும், சொன்னதெல்லாம் உண்மையாகிவிட்டது. 'அங்கே திருவனந்தபுரத்திலே அவருக்குப் பொண்ணிருக்கு.' குளிக்கப் போகும்போதும், வரும்போதும் அவர்கள் பேசிய பேச்சுக்கள் அனைத்தும் இப்போது அவள் காதுகளில் ரீங்காரமிட்டன. வெள்ளையுள்ளம் கொண்ட அம்மா அவர்களோடு எந்நேரத்திலும் சண்டை போட்டுக்கொண் டிருந் தாள்.

கார்த்தியாயினியின் சிந்தனைகள் மாமனாரையும் மாமியாரையும் பற்றிச் சென்றன. மாமியார் அல்ல, அம்மாவேதான். மாமனார் அல்ல, அப்பாவேதான். அவர்களைப்பற்றி இனிய நினைவுகள் மட்டுமே அவளுக்கு இருந்துவருகின்றன. 'மகளே, கார்த்தியாயினீ!' என்ற அன்பழைப்பு இன்னமும் அவளுடைய காதுகளிலே மூரளீநாதமாக ஒலிக்கிறது. அதிலே அன்பும் பாசமும் மட்டுமே ஊடுருவியிருந்தன. அந்தத் தாய் தன் வயிற்றிலே அவளுக்கு இடம் அளிக்கவில்லை என்ற ஒரே ஒரு குறைதான். அந்த வயோதிகத் தம்பதி பரஸ்பரம் எவ்வளவு தூரம் நேசித்தனர்! அந்த நேசந்தான் கணவன் மனைவி உறவு என்பது. தினசரி பத்துத் தடவையாவது சண்டை போட்டுக்கொள்ளாமல் இருக்கமாட்டார்கள். பெரிய கூக்குரல் எழுப்புவார்கள். ஆனால் மறுகணமே அப்பா உரத்த குரலில் சொல்வதைக் கேட்கலாம்:

''கொஞ்சம் வெற்றிலை பாக்கு இடிச்சுத் தர இங்கே யாருமில்லையா?'' என்று.

அதைக் கேட்டால் போதும், மனைவி ஓடி வந்துவிடுவாள். வெற்றிலை பாக்கை இடித்துத் தூள் பண்ணிக் கொடுத்துவிடுவாள். சில சமயங்களில் இருவரும் அமர்ந்து மணிக்கணக்கில் பேசுவார்கள். புருஷன் மனைவிக் கிடையே இவ்வளவு நேரம் பேச என்னதான் இருக்கிறதோ என்று கார்த்தியாயினி சிந்தித்துப் பார்த்ததுண்டு. அம்மா, எந்நேரமும் அப்பாவைத் தொடர்ந்து செல்வதாகப் பார்க்கலாம். அம்மா பின்னால் இல்லை என்றால், அப்பா அழைப்பார். அந்த அன்பு இணைப்பு எந்தக் காலத்திலும் அடங்காத ஓர் உணர்ச்சிப் பிழம்பாகவே இருந்தது. இளமையிலேகூட அவர்கள் அப்படித்தான் வாழ்ந்திருந்தார்களா என்று கார்த்தியாயினி யோசித்ததுண்டு. இளமையிலே சதிபதிகள் அவ்வளவு அந்நியோந்நியமாக இருப்பார்களா? எப்போதும் அவளுக்கு ஏற்பட்டு வந்த ஒரு சந்தேகந்தான் அது.

திரும்பிப் பார்த்தபோது அவளுக்குத் தோன்றியது, அந்த வாழ்க்கை கவலையற்றதாக இருந்தது என்று. மாமனார், மாமியாருடைய அன் பெனும் குளிர் நிழலில் அந்த வாழ்க்கை அவ்வாறு நடந்து வந்தது. புகார் சொல்ல ஒன்றுமில்லை. திருமணத்துக்கு முன்பு இருந்த வாழ்க்கையின்

தொடர்ச்சியாகவே இருந்தது அது. எதற்கும் குறை ஏற்பட்டதில்லை. நிலமும், மனையும், சொத்துக்களுமாக, நாளுக்கு நாள் செழிப்படைந்து வந்தது. மகிழ்ச்சிக் கொந்தளிப்பு நிறைந்த அநுபவமாக இருந்தது. அவர்கள் இறந்த பின்பே இதயம் பற்றியெரியத் தொடங்கியது. இன்று அது பெரு நெருப்பிலே விழுந்து உருகுவதுபோல் தோன்றியது.

கேசவபிள்ளைகூடச் சிந்தனைகளிலே மூழ்கி அருகிலேயே அமர்ந்திருந்தார். கார்த்தியாயினி அவரை நோக்கினாள். அதை அவர் பார்க்கவில்லை. இதோ, அருகில் அமர்ந்திருக்கிறானே, இந்த மனிதன் தன் காவலன், தனக்கு எல்லாமானவன். இந்தப் புருஷன் தன்னைக் காப்பாற்றமாட்டானா? அவருக்குத் தன்மீது விருப்பம் இருக்கிறதென்று தோன்றக்கூடிய முறையில் இவர் ஒருபோதும் நடந்துகொண்டதில்லை. இன்று மட்டுமே நகையணிந்து காண விரும்பினார்; கன்னத்திலே கிள்ளினார்; கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தார்.

இன்றுபோல் ஒரு நாளும் இவர், தன்னை இந்த அளவு இறுக அணைத்துத் தழுவிக்கொண்டதில்லை. இவ்வளவு சூடான முத்தம் தந்ததில்லை. இது ஓர் அநுபவந்தான். இவர் தங்கம்மா என்ற பெண்ணை இவ்வளவு இறுக்கமாக அணைத்துத் தழுவியிருப்பாரா? இவ்வளவு சூடான முத்தத்தைக் கொடுத்திருப்பாரா? அவளை நகையணிவித்து அழகு பார்த்திருப்பாரா? அவளுடன் நீண்ட பேச்சுக்களில் ஈடுபட்டிருப்பாரா?

இவ்வாறுகக் கேள்விகள் ஒவ்வொன்றுகக் கிளம்பின.

கார்த்தியாயினி கேட்டாள்: ''அந்தத் தங்கம்மா இப்படிப் படுத்திருக்கிறப்போ நீங்க இப்படிப் பக்கமா உட்காந்திருப்பீங்களா?''

திடீரென்று பதிலளித்தார்: ''ஆம்!'' அந்தப் பதிலில் குற்ற உணர்வு தொனித்தது.

''என்னைக் கலியாணம் பண்ணினதுக்கு அப்புறமா?''

கார்த்தியாயினியின் கரங்களைத் தம் கைக்குள்ளே எடுத்துவைத்துத் தடவியவாறு கேசவபிள்ளை சொன்னார்: ''இல்லை, அதுக்கு முன்பு. நான் உன்னிடம் உண்மை அனைத்தையும் மறைக்காமல் கூறிவிடுகிறேன். நடந்ததெல்லாவற்றையும் நீ மறக்கவேண்டும், என்னை நம்பவேண்டும். எனக்கு இனிமேல் நீ மட்டுந்தான். நீயல்லாமல் வேறு யாரும் இல்லை.''

இதைப்பற்றியே கேசவபிள்ளை யோசித்துக்கொண்டிருந்தார்; 'அந்தப் புதிய வாழ்க்கை எங்ஙனம் துவங்கவேண்டும்? எல்லாவற்றையும் மறைத்து வைக்கவேண்டுமா? திறந்து சொல்லவேண்டுமா?' என்று. அந்த மனிதர் சென்ற காலத்தைத் திரும்பிப் பார்த்தார். தன்னை நேசிக்கிற ஒரே ஒருவரை மட்டுமே இந்த வாழ்நாளில் அவர் பார்த்திருக்கிறார். ஒருவரையே அவர் கண்டிருக்கிறார். இறக்கும் தருவாயில் பக்கத்தில் அமர்ந்திருந்து ஒரு துளி நீரை ஊற்றித் தர! அது கார்த்தியாயினிதான். வேறு யாரும் அல்ல. அந்தப் பாதையில் வேறு யாரும் இல்லை. அந்தப் பாதையினூடே ஒருத்தி மட்டுந்தான் தன்னைப் பின்பற்றி வந்துகொண்டிருக்கிறாள்.

அவ்வாறு செய்யவேண்டுமென்று அவளிடம் கேட்டுக்கொண்டதில்லை. தானுகவே வந்திருக்கிருள். இவளிடம் எதற்காக மறைத்து வைக்க வேண்டும்? எல்லாவற்றையும் திறந்து சொன்னுல் என்ன? மன்னிக்கத் தான் செய்வாள்.

கேசவபிள்ளை கேட்டார்: ''என்னை நீ நம்புவாயா?''

நம்புவேனென்று பொருள்படும்படியாக அவள் தலையாட்டினுள். பிள்ளை தொடர்ந்து கூறினர்: ''நீ என்ன என்னவெல்லாம் தெரிந்து கொள்ள விரும்புகிருய்? கேள்! சொல்கிறேன். எல்லாவற்றையும் திறந்து சொல்லிவிடுகிறேன்.''

''எதைக் கேக்கணும்னு எனக்குத் தெரியாது. நீங்க சொன்னுப் போதும்.''

கேசவபிள்ளை, தாம் உணர்ந்துகொண்ட ஓர் உண்மையைச் சொன்னர்.

''அவளுக்கு என்மீது அன்பு இருந்ததில்லை.'' !

அதைக் கார்த்தியாயினி அறிந்திருந்தாள். அவள் அறிய விரும்பியது அது அல்ல. கேசவபிள்ளை தங்கம்மாவை நேசித்திருந்தாரா என்பது தான். இக்கட்டான ஒரு கேள்விதான் அது. நேசித்திருந்ததாகவோ, இல்லை என்றோ சொல்வது கடினம்.

''உன்னை மணம் செய்துகொள்ளுமுன் நாங்கள் பக்கத்துப் பக்கத்து நாற்காலிகளில் அமர்ந்து பணியாற்றியவர்கள். அப்போது எனக்கு அவள் மீது ஒருவிதமான உணர்ச்சி இருந்தது. வெறும் உணர்ச்சி மட்டுந்தான்.''

கார்த்தியாயினி கேட்டாள்: ''கலியாணத்துக்குப் பிறகு அப்படிப் பட்ட உணர்ச்சி இருந்ததில்லையா?''

''இல்லை!''

அவள் நம்பவில்லை. ஒரு கபடப் புன்னகையுடன் சிறிது சிங்காரத்தை வரவழைத்தவாறு கார்த்தியாயினி சொன்னுள்:

''பாத்தீங்களா, பாத்தீங்களா, பொய் சொல்றீங்க? நீங்க அப்புறம் அவகிட்டே போயிருந்தீங்களே?''

அவர் கிளிப்பிள்ளைபோல் கூறினர்: ''ரொம்ப நாட்களுக்குப் பிறகு மணம் முடிந்து வந்ததும் நான் அவளிடம் போகவில்லை. அவள் ராம சந்திரன் நாயர் என்ற ஒருவனுடன் போய்விட்டாள். அப்புறம் இன்னெரு விஷயம். அவள் ரொம்பவும் பொல்லாதவள், பயங்கரி, ராட்சனி. நான் உன்னிடம் சொல்லட்டுமா, அவள் என்னைக் காலால் மிதித்து வெளியே அனுப்பிவிட்டாள். அப்புறம் நான் போகவே இல்லை.''

கார்த்தியாயினி அதையும் நம்பவில்லை. கேசவபிள்ளை அந்த நிகழ்ச்சியை விளக்கிக் கூறினர். அது பொய் என்றுதான் அவளுக்குத் தோன்றியது. ஆனுல் அதை நம்புவதாக வெளியே காட்டிக் கொண்டாள். அவள் கேட்டாள்:

''திரும்பவும் அங்கே போயிருந்தீங்களே?''

கேசவபிள்ளை சொன்னார்: ''ஆம், போயிருந்தேன், ரொம்ப நாளைக்குப் பிறகு. அன்று நான் உதவிக் காரியதரிசியாக இருந்தேன். சேகர பிள்ளை இறக்கும் தருவாயிலிருந்தபோது நான் அங்கே போனேன். அது என் கடமையாக இருந்தது. சேகரபிள்ளை ஒரு நல்ல மனிதராகத் திகழ்ந்தவர். நான் இன்று இந்த இடத்திலே இருப்பதற்குக் காரண கர்த்தா அவரேதான். இல்லாவிட்டால் ஏறக்குறைய ஒரு நூறு ரூபாய் சம்பளம் பெறுகிற ஓர் உத்தியோகஸ்தனாக இருந்திருப்பேன். அவ்வளவு தான். நம்மால் அந்த நல்ல மனிதரை மறக்க முடியுமா?''

கார்த்தியாயினி கேட்டாள்: ''நமக்கு அவரு எதுக்காக அப்படி உதவி செஞ்சாரு? மகளை உங்களுக்குக் கலியாணம் செஞ்சு தர்றதுக்குத் தானே?''

''ஆம். ஆனால் அவளுக்கு நான் போதாது என்று தோன்றியது. அவள் ராமசந்திரன் நாயருடன் சென்றுவிட்டாள். அது நல்லதாப் போச்சு. உண்மையிலேயே கிட்டு மாமா சொன்னது சரிதான். நீ அதிருஷ்டக்காரிதான். மற்ற ஜோசியர்கள் கூட அப்படித்தான் சொன்னார்கள்.''

கார்த்தியாயினிக்கு அந்த விஷயங்களில் அவ்வளவு அக்கறை இல்லை. அவள் கேட்டாள்: ''அப்புறம்?''

''அப்புறம் என்ன?''

கேசவபிள்ளை, ஒரு சிறு குழந்தையுடன் விளையாடுவதுபோல், அவளுடைய மூக்கைப் பிடித்துத் திருகினார்.

அவள் கேட்டாள்: ''அப்புறம் அவளுக்கு நீங்க வீடு கட்டிக் கொடுக்கலையா?''

''சேகரபிள்ளை இறந்துவிட்டார். நமக்குச் செய்து தந்த உதவிக்குப் பிரதிபலனாக நான் அதைச் செய்தேன். ஏதாவதொன்று செய்து கொடுக்காமல் இருப்பது சரியல்ல என்று என் மனம் தூண்டிக்கொண் டிருந்தது.''

''திரும்பவும் நீங்க அங்கே போயிக்கிட்டிருந்தீங்களே?''

கேள்விகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கிளம்பி வந்துக்கொண் டிருந்தன. எழுதப் படிக்கத் தெரியாத அந்தப் பட்டிக்காட்டுப் பெண், அவர் கருதி யிருந்ததுபோல் அவ்வளவு முட்டாள் அல்ல. மேலும் மேலும் அவள் கேள்விக் கணைகளைத் தொடுத்துக்கொண் டிருந்தாள். அவ்வாறு செய்ய அவளுக்கு உரிமை இருந்தது. அவள் அவருடைய மனைவி. வேடிக்கை போல், அது ஒரு பெரிய பிரச்னை அல்ல என்ற முறையிலேதான் அவர் அந்தக் கேள்விக்குப் பதில் அளித்தார்:

''சும்மாதான் போனேன். நீதான் இங்கில்லையே. ஊரில்தானே இருந்தாய்? நானும் ஓர் ஆண்பிள்ளைதானே? அப்போது சும்மா வேடிக்கைக்காகப் போனேன். ஆனால் அவள் ஒரு ராட்சஸி! ஓ! இப்படியும் பெண்கள் இருப்பார்களா? பயங்கரம், பயங்கரம்! அடங்காத வெறி கொண்டவள்! அப்பப்பா!''

அவள் கேட்டாள்: ''சும்மா வேடிக்கைக்காக? இல்லியா?''

''ஆமாம்.''

அதை அவள் நம்பவில்லை. எந்த ஒரு பெண்ணும் நம்பமாட்டாள் அல்லவா? வெறும் ஒரு வேடிக்கைக்காக என்று கணவன் சொன்னால் அதை ஒரு மனைவியால் ஏற்கமுடியுமா?

கேசவபிள்ளை தொடர்ந்து கூறினார்: ''என்ன ஆனாலும் அதெல்லாம் முடிந்த கதை. அவள் துறவியாகப் போகிறாள். நாம் கட்டிக் கொடுத்த அந்த வீடு ஆசிரமமாகப் போகிறது. எல்லாம் முடிந்துவிட்டது. உனக்கு நானும், எனக்கு நீயும் மட்டுந்தான். வேறு யார் இருக்கிறார்கள்?''

கேசவபிள்ளை முகம் குனிந்தார். தம் முகத்தைக் கார்த்தியாயினியின் முகத்தோடு சேர்த்துக் கொண்டார். அவள் அந்த முத்தத்தின் சூட்டை அறிந்துகொள்ளாமல் அசைவின்றிப் படுத்துக் கிடந்தாள்.

அவளுக்குத் தெரிய வேண்டியிருந்த தெல்லாம் தெரிந்துவிட்டனவா? சொல்லவேண்டி இருந்த தெல்லாம் அவர் சொல்லிவிட்டாரா? இனி பாக்கி இருப்பது என்ன? ஒருவேளை, ஒரே ஒரு விஷயம் மட்டுந்தான் பாக்கி. அதுதான், அந்த உறவினால் ஏற்பட்ட இலாபம். அதைப்பற்றி நினைத்தபோது, கார்த்தியாயினியால் எல்லாவற்றையும் மறந்து பொறுத்துக்கொள்ளவும் முடியும்.

முகத்தோடு முகத்தைச் சேர்த்து வைத்தவாறு கேசவபிள்ளை உண்மை அனைத்தையும் சொல்லிவிட்டார்: ''நாம் இந்த நிலைக்கு உயர்ந்திருக்கிறோம். நிலமும் சொத்தும் என்னால் சேர்த்து வைக்க முடிந்திருக்கிறது. இதெல்லாம் என்னுடையது மட்டும் அல்ல; உன்னுடையதும்கூட எனக்கு முன்னால் வேலைக்குச் சேர்ந்தவர்கள், என்னைவிடக் கூடுதலான அறிவும் திறமையும் படைத்தவர்கள் நிறைய இருக்கிறார்கள். இன்றுகூட வெறும் நூற்றைம்பது ரூபாய் சம்பளம் பெற்று வருகிறார்கள். இவை எல்லாம் வந்து சேர்ந்தவை. அப்புறம் நான் உனக்குத் தவறு இழைத்திருக்கிறேன். அதுவும் நமது முன்னேற்றத்துக்காகத்தான். என் கண்ணே, நீ என்னை மன்னிக்கமாட்டாயா?''

கேசவபிள்ளை கார்த்தியாயினியை முத்தங்களால் திணறடித்தார். அவள் அசைவின்றிப் படுத்துக் கிடந்தாள். அவள் அவற்றை உணரவேயில்லை. அவர் திரும்பவும் கேட்டார்: ''என்னை மன்னிக்கமாட்டாயா?''

அவள் அவருடைய முகத்தை உற்றுப் பார்த்துக் கேட்டாள்: ''அவளோடு சேர்ந்து இன்பமாக வாழத்தானே, நீங்க என்னைத் திருவனந்தபுரத்துக்கு அழைச்சு வராமே இருந்தீங்க?''

இன்னும் ஒரு புதிய விஷயத்தைக்கூடச் சொல்ல வேண்டியிருந்தது. அதைக் கார்த்தியாயினியிடம் அவசியம் சொல்லவேண்டும். அவள் அதை அறியவேண்டும். அவர் சொன்னார்: ''அப்படியல்ல, நீ தவறாக அதைப் புரிந்து கொண்டிருக்கிறாய். நீ ரொம்பச் சாது. நீ அதெல்லாம் அறிய வில்லை. வேலை உயர்வுக்காக அந்தக் கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடினேன். வேண்டுமென்றே உன்னை அழைத்து வராமல் இருந்தேன். இன்று

நாம் படுத்திருக்கிறமே, இந்த அறை, இதுக்கு மட்டும் நாக்கு இருந்தால் என்ன என்ன கதைகள் சொல்லும் தெரியுமா? உனக்கு அதெல்லாம் தெரியாது.''

கேசவபிள்ளை பெரிய ஒரு கதை சொல்லத் தொடங்கினார். சிறிது அவநம்பிக்கையுடன் கார்த்தியாயினி கேட்டாள்: ''ஊம்? அதென்ன?''

''நான் இவ்விடத்தில் சீஃப் செக்ரடரியின் அந்தரங்கக் குமாஸ்தாவாக வேலை செய்தபோது பலவற்றைப் பார்த்திருக்கிறேன். திவான்ஜிக்கு ஒரு பிரைவேட் செக்ரடரி இருந்தார். இன்று அவர் இல்லை. அவர் இங்கு அன்றுடம் பகல் வேளையில் வந்து போவார். அப்புறம் . . . அப்பப்பா! என்ன என்ன பார்த்திருக்கிறேன்! நான் பார்த்துப் பயந்துப் போயிருக்கிறேன்!''

கேசவபிள்ளை, பகவதிக் குட்டியம்மாவின் கதையை விளக்கமாகக் கூறினார். கிருஷ்ணன் நாயர் உயர்ந்த பதவிக்கு வந்தது பகவதிக்குட்டியம்மாவுடைய சாமர்த்தியத்தினால்தான். தொடர்ந்து பல உத்தியோகஸ்தர்களின் மனைவிமார்களுடைய கதைகளையும் கேசவபிள்ளை கார்த்தியாயினிக்குச் சொன்னார்.

''நான் திறந்து சொல்லட்டுமா? பயத்தினால்தான் உன்னை இங்கே அழைத்து வராமல் இருந்தேன். என் மனைவி புனிதவதியாக இருக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் எனக்கு இருக்கிறது. நான் ஆடிவிட்ட அந்த விளையாட்டிலே நீ கூடக் கால் சறுக்கி விழுந்திருப்பாய். இங்கே பதவி உயர்வும் முன்னேற்றமும் மனைவிமார்கள் மூலமாகத்தான். சிப்பந்தியின் மனைவி மேலதிகாரியின் பார்வையில் பட்டால் போதும்—அப்புறம் அவ்வளவுதான். முன்னேற்றம் அடைந்திருக்கிற ஒவ்வோர் உத்தியோகஸ்தனுடைய வாழ்க்கையைப்பற்றிச் சிறிது சிந்தித்துப் பார்த்தால், அந்த வாழ்க்கைக்குப் பின்னே மனைவியின் திறமை மறைந்திருப்பதைப் பார்க்கலாம்.''

இந்த நிகழ்ச்சிகள் கார்த்தியாயினியைச் சிறிது பயமுறுத்தின. அவள் கேட்டாள்: ''அப்புறம் நீங்க என்னை ஏன் இந்த நாசமாப் போன இடத்துக்கு இட்டு வந்தீங்க?''

கேசவபிள்ளை சிரித்தவாறு பதில் அளித்தார்:

''நீ பயப்படவேண்டாம். உன்னைத் தொந்தரவு செய்ய யாருக்கும் துணிச்சல் இருக்காது. என்னுடைய நிலையில் அத்தகைய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலைகூட இப்போது மாறியிருக்கிறது. உன் கணவனுக்குப் பதவி உயர்வு கிடைக்கவேண்டுமென்றோ, நீ எஜமானியம்மாவாக வீற்றிருக்கவேண்டுமென்றோ உனக்கு ஆசையில்லையல்லவா?''

''அம்மம்மா! எனக்கொண்ணும் வேணும். ஊரிலே, வீட்டிலே அடுக்களை மூலையில் சோறும் பதார்த்தங்களும் சமைச்சு அந்த இருட்டிலே காலத்தைக் கழிச்சுட்டாப் போதும்னு இருக்கேன். இங்கே வந்தப்புறம் எனக்குத் தூக்கமே வர்றதில்லே. என்னை அங்கே அழைச்சுக்கிட்டுப் போய் விட்டுட்டு வந்தாப் போதும். எஜமானியம்மா ஆகவும் வேணும், இந்தப்

பெரிய வீட்டிலே தங்கியிருக்கவும் வேணும். போலீஸ்காரன் காவல் காத்துவர்ற இடத்திலே தங்கியிருக்கணுங்கிறது இல்லிங்க.''

கார்த்தியாயினியைக் கிளுகிளுக்கச் செய்தவாறு கேசவபிள்ளை கேட்டார்: ''ஏதாவதொரு பட்டிக்காட்டு விவசாயியின் மனைவியாக இருக்க முடிந்தால் போதும் என்கிறியா?''

அவள் திறந்த உள்ளத்துடன் கூறினாள்: ''விவசாயியோட மனைவியாயிருக்கணுங்கிறதில்லே. என்னோட குழந்தையோட அப்பா ஒரு பட்டிக்காட்டு விவசாயியாயிட்டாப் பரவால்லேன்னு விரும்பறேனுங்க.''

கேசவபிள்ளை கேட்டார்: ''சீஃப் செக்ரடரியின் மனைவியாக இருக்க விருப்பம் இல்லையா?''

''அப்படியெல்லாம் ஆகணுங்கிற விருப்பம் எனக்கு இல்லே. எனக்கு இந்த மாதிரியான உத்தியோகஸ்தனோட மனைவியாயிருக்கத் தெரியாது.''

ஒரு விநாடிக்குப் பிறகு அவள் கேட்டாள்: ''அதனால்தானே, அப்படிப்பட்ட பொம்புளேங்களைத் தேடிப் போனீங்க?''

ஒரு பெருமூச்சுக்குப் பிறகு மீண்டும் அவள் கேட்டாள்: ''மேற்கொண்டு போகமாட்டீங்கன்னு எப்படி நம்பமுடியும்?''

''இல்லை, கண்ணே, போகமாட்டேன்!''

கார்த்தியாயினி கதறியழுதுவிட்டாள். அவ்வளவு நேரம் அவள் அதை அடக்கிக்கொண்டிருந்தாள்.

கேசவபிள்ளை அவளுக்கு ஆறுதல் கூறினார்; சற்று வருத்தத்துடன் கேட்டார்: ''எல்லாவற்றையும் திறந்து சொன்னதுதான் ஆபத்தாக முடிந்திருக்கிறதோ?''

அத்தியாயம் 25

புயலடித்த நாட்கள்

தங்கம்மாவின் ராஜிநாமாக் கடிதத்தை ஏற்றுக்கொண்டு, அவளை வேலையிலிருந்து விலகிச் செல்ல அநுமதியளிக்கிற உத்தரவில் கையெழுத்துப் போடுகிற அலுவலைத்தான், மறுநாள் காலையில் கேசவபிள்ளை முதல் முதலாகச் செய்து முடித்தார். அவர் கை நடுங்கவில்லை. மனச்சாட்சி அவரை உறுத்தவில்லை. வழக்கமாகக் கையெழுத்துப் போடுவதுபோலத் தான் இருந்தது.

அவர் தலைமைக் காரியதரிசியாகப் பொறுப்பேற்றுக்கொண்டு முதல் முதலாகச் செய்து முடித்தது அந்த வேலைதான். மனத்தை அலைக் கழித்த ஒன்று ஒழிந்துவிட்டது. அமைதி ஏற்பட்டுவிட்டது போன்ற ஓர் ஆறுதலை அவர் அநுபவித்தார்.

அன்று ஒரு சூப்பிரண்டு, ஓர் அலுவலக நிர்வாகி ஆகிய இரண்டு பெண்களுடைய ராஜிநாமாக் கடிதங்களைக்கூட ஏற்றுக்கொள்ளவேண்டி யிருந்தது. அவர்கள்கூடத் துறவிகள் ஆகப் போகிறார்களா என்ன?

செய்தி அறிந்த பாகீரதியம்மா அழுது கண்ணீர் வடித்தாள். அவளை எப்படி ஆறுதலடையச் செய்வது என்று கார்த்தியாயினிக்குத் தெரிய வில்லை. கேசவபிள்ளை வேடிக்கையாகக் கேட்டார்: ''என்ன, அந்தக் கிழவியை இங்கே தங்க வைத்தது தொந்தரவாகிவிட்டதா?''

''மாமியாளைக் கூடவே தங்க வைக்கணும்னுதானே, உங்க மனசி லிருக்கு? அதை மறைச்சு வைக்கத்தானே, இப்படிக் கேக்கறீங்க?''

கேசவபிள்ளை சொன்னார்: ''அம்மா, தாயே, உனக்கு எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம். நான் காதிலே வாங்கிப் பொறுமையா இருந்துடறேன்.''

இந்த மாதிரியான பேச்சுக்கள் அங்கே அடிக்கடி நிகழ்வது வழக்கம். கேசவபிள்ளை மனைவியின் பேச்சுக்குப் பணிந்து நடந்தார். அதனால் அந்தக் குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கியது. மனத்தைக் கவர்ந்த அந்தக் காட்சிகளைத் தொலைவிலே நின்று பார்த்து வந்தாள் பாகீரதி யம்மா. அதற்குள்ளே நுழைய அவளுக்கு உரிமை ஏது? அவள் வருவ தில்லை. அந்த வீட்டிலே இப்படி வாழ வேண்டியவள் தங்கம்மாதானே? பாகீரதியம்மாவால் இவ்வாறு நினைத்துப் பார்க்காமல் இருக்க முடிய வில்லை. தங்கம்மா எல்லாவற்றையும் தகர்த்துத் தூள் தூளாக்கி விட்டாளே!

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் பக்தி விலாசத்திலே இரகசியமாக ஒரு மாநாடு நடைபெற்றது. இந்தியா சுதந்தரமடைய இனி நீண்ட நாட்கள் இல்லை. சுதந்தரத் திருவாங்கூரை அடைவதற்கான இறுதி முயற்சியிலே ஈடுபட்டிருந்தார்கள். ஹைதராபாத், மைசூர் முதலிய சம்ஸ்தானங்களுடன் அரசாங்கம் இரகசியமாகத் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தது. அந்த மாநாடு இறுதி நடவடிக்கைகளுக்கான உருவம் கொடுத்தது.

சுதந்தரத் திருவாங்கூர் அடிப்படையில் வேறு சில சம்ஸ்தானங்களுக்கும் திருவாங்கூருக்குமிடையில் கருத்து ஒற்றுமை ஏற்பட்டுவிட்டதாகப் பரவலாகப் பேசிக்கொண்டார்கள். பாகிஸ்தான் சந்தேகமற்ற உண்மையாக உருவெடுத்து வந்தது. திருவாங்கூர் சுயேச்சையாக இயங்குவதற்குத் துணையாக நிற்பதென்ற அடிப்படையில் அதனுடன் வர்த்தக உறவு களைக்கூட ஸ்தாபித்து விட்டதாக வதந்திகள் உலாவின. சம்ஸ்தானங்களைப் பொறுத்தவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்காமல் வெள்ளையன் வெளியேறுகிறவரை. இந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, எல்லாத் துறைகளிலும் அனுகூலமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்றும் தீர்மானித்தார்.

சம்ஸ்தானம் முழுவதிலும் ஒரே பரபரப்பு. ஆகஸ்டு பதினைந்தாம் தேதியன்று இந்திய நாட்டிலிருந்து பிரிந்து திருவாங்கூர் சுய உரிமையுள்ள சுயேச்சை நாடாகி விடுவதென்றால் . . . அதைச் சம்ஸ்தான மக்களால் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியவில்லை.

அன்றுகூட ரேஷன் கடைக்காரர்களும், கான்டிராக்டர்களும் 'சுதந்தரத் திருவாங்கூர் கீ ஜய்!' என்று கோஷித்தனர். அவர்களுக்கு ஒரு கொடிகூட இருந்தது. போலீஸ்காரர்களும், அரசியல் வாழ்க்கையிலிருந்து தடம் புரண்டு விழுந்த சில தலைவர்களுந்தான் அதற்குத் தலைமை தாங்கினர்.

சம்ஸ்தானம் முழுவதிலுமுள்ள கல்வி ஸ்தாபனங்களில் சலசலப்பு ஏற்பட்டது. மாணவர்கள் சுதந்தரத் திருவாங்கூர் கோஷத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர். போலீஸ் ஏவிவிட்ட சில குண்டர்கள் வேண்டுமென்றே அமைதியைக் குலைத்தார்கள். அப்போதுகூட அரசாங்கத் தரப்பில் நடைபெற்ற இயக்கத்தின் பொறுப்பைத் தலைமைக் காரியதரிசி வகித்து வந்தார். இயக்கங்களைச் சமாளித்து அநுபவம் பெற்றவர் தானே, கேசவபிள்ளை? அந்தப் பொறுப்பைத் தட்டிக் கழிக்க அவரால் முடியவில்லை. அந்த நாட்களில் அவர் மிகுந்த சிந்தனையில் மூழ்கியவாறு காணப்பட்டார்.

மியூசியம் சாலை வழியாக நகர்ந்து சென்ற மாபெரும் ஊர்வலங்களை, பார்க் வியூ பங்களாவின் மேல் மாடியிலுள்ள ஜன்னல் அருகே நின்றவாறு கார்த்தியாயினி பார்ப்பது வழக்கம். வெளியே, இந்தப் பரந்த உலகத்தில், கம்பீரமான நிகழ்ச்சிகள் பல நடப்பதாக அவளுக்குத் தோன்றியது. முன்பு, ஊரிலிருந்தபோது காங்கிரஸ் குமுறி எழுகிற

தென்று அவள் கேள்விப்பட்டிருந்தாள். இப்போதுகூடக் காங்கிரஸ் தான் குமுறியெழுந்திருக்கிறது. சந்தேகம் இல்லே!

ஒரு நாள், உரத்த குரலில் உச்சரிக்கப்பட்ட ஒரு கோஷம் அவளே நடுங்க வைத்தது.

''சீஃப் செக்ரடரி கேசவபிள்ளையைத் தூக்கிலே தொங்க விடுங்கள்!''

மாணவர்கள்தாம் கோஷித்தனர். பார்க் வியூவுக்கு முன்னால் வந்த போதுதான், ஆயிரக்கணக்கான மக்கள் ஒருமித்து அந்தக் கோஷத்தைக் கிளப்பினர். கார்த்தியாயினியம்மா நன்றாகக் கேட்கட்டும் என்று ஊர் வலத்தினர் எண்ணினரோ, என்னவோ?

''சீஃப் செக்ரடரி கேசவபிள்ளையைத் தூக்கிலே தொங்க விடுங்கள்!''

கேசவபிள்ளை இவர்களுக்கு என்ன தீங்கு இழைத்தார்?

பயம் கார்த்தியாயினியைக் கவ்வியது. காரிலேதான் போகிறார் என்றாலும், வழிமறித்து யாராவது அபாயம் விளைவித்தால்? அப்பா வைக் கொன்றவன் இதுவரையிலும் அகப்படவில்லே. இந்த ஊர்வலத் தினரிடையில் அவன் இல்லே என்று எப்படிச் சொல்லமுடியும்? இருப்பான், சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருப்பான். இந்த வீடு பாதுகாப்பானதா?

* * *

விஜயா பள்ளிக்கூடத்திலிருந்து சீக்கிரமாகவே வந்திருந்தாள். அவள் முக்கியமான செய்தி ஒன்று சொன்னாள். வகுப்புக்களிலிருந்து மாணவர் கள் எல்லாருமே வெளியேறிவிட்டார்கள்.

''காலேஜில் படிக்கிற ஒருவன், பள்ளிக்கூட மாணவர்களே எல்லாம் வெளியே வரச் சொன்னான். எல்லாரும் வெளியே வந்தனர். கால்ப் பந்தாட்ட மைதானத்தில் மாணவர்கள் கூட்டம் நடைபெற்றது. அவன் தான் அந்தக் கூட்டத்தில் ஒரு மணி நேரம் எப்படிப் பேசினான் தெரியுமா? எல்லாரும் ஆவேசமுற்றனர். அப்புறம் மாணவர்கள் எல்லாரும் சேர்ந்து ஊர்வலமாகக் கிளம்பினர்.''

கார்த்தியாயினியம்மா கேட்டாள்: ''நீயும் ஊர்வலத்தில் கலந்துக் கிட்டியா?''

விஜயா சொன்னாள்: ''நாங்களும் சேர்ந்தோம். ராதை, திரேஸ்யா, நான் எல்லாருந்தான் கலந்துகொண்டோம். திரேஸ்யாதான் என்னே இழுத்துச் சென்றாள். எல்லாரும் ஊர்வலமாகப் போகும்போது நான் மட்டும் விலகி நிற்க முடியுமா, அம்மா?''

அம்மா திகைப்புடன் கேட்டாள்: ''ஊர்வலத்தில் அவங்க போட்ட கோஷத்தை நீ கேட்டியா?''

விஜயா அந்தக் கேள்வியைப் புரிந்துகொண்டாள்:

''அந்தக் கோஷத்தை மட்டும் நான் போடவில்லே. திரேஸ்யா அதுக்காக என்னே வற்புறுத்தினாள். ஆனால் நான் போடவில்லே.''

''யாரம்மா, அந்தத் திரேஸ்யா?''

''செக்ரடரி பிலிப்பின் மகள்'' என்று சொல்லிவிட்டு விஜயா கேட்டாள்: ''அப்பா, ஏம்மா இப்படியெல்லாம் செய்கிறார்? அப்பாவிடம் இதைப்பற்றிக் கேக்கணும் அம்மா!''

''அப்பா என்ன செய்யறார்?''

''நமது நாட்டுக்குக் கெடுதல் ஏற்படுகிற விஷயத்தில் அப்பா தலையிட்டு செய்கிறார். அவன் எல்லா விஷயங்களைப்பற்றியும் தெளிவாகப் பேசினான். அவன் பேச்சு முடிந்தபோது அப்பா செய்வதெல்லாம் தப்பு என்று எனக்குத் தோன்றியது, அம்மா!''

கார்த்தியாயினி, மகள் வாயைப் பொத்தினாள்: ''மகளே, நீ அப்படிச் சொல்லக்கூடாது. அப்பாவைப்பற்றித் தவறாகப் பேசக்கூடாது.''

விஜயா விட்டுக் கொடுக்கவில்லை: ''சுதந்தரத் திருவாங்கூர் வேண்டுமென்று நீ கூடச் சொல்கிறாயா, அம்மா?''

கார்த்தியாயினிக்குத் தன் அறியாமையை ஒப்புக்கொள்ள எந்தவிதமான தயக்கமும் இல்லை.

''எனக்கு அதெல்லாம் தெரியாது மகளே! ஆனா, நீ வந்து அப்பா மேலே தவறு சொல்லக்கூடாது. அது தப்பு.''

விஜயா பேசவில்லை. அம்மா தொடர்ந்து கூறினாள்: ''அப்பாவைத் தூக்கிலே போடணும்னு அவங்க சொல்றாங்க. அப்பாவைத் தூக்கிலே போட்டுக் கொல்லணும்னு சொல்லறவங்களோடு மகள் சேர்ந்துக்கலாமா?''

விஜயா சொன்னாள்: ''அந்தத் திரேஸ்யா வற்புறுத்தினதால்தான் நான் ஊர்வலத்தில் கலந்துகொண்டேன். இல்லாவிட்டால் நான் கலந்திருக்கமாட்டேன். அந்தக் கோஷத்தைச் சொல்லத் தொடங்கியதும் நான் விலகி வந்துவிட்டேன்.''

விஜயா பல விஷயங்களைக் கேட்டறிய விரும்பினாள். அவள் உயர்தரப் பள்ளியில் படிக்கும் ஒரு மாணவி. அவள் ஊரிலுள்ள உயர்நிலைப் பள்ளியில்தான் படித்து வந்தாள். அம்மா திருவனந்தபுரத்துக்கு வந்தபோது அவளும் வந்தாள். இப்போது இங்குள்ள பள்ளியில் சேர்ந்து படித்து வருகிறாள். இயற்கையாகவே அவள் அறிவுத் திறன் மிக்கவள். அம்மாவுடன் அவளுக்கு இருந்துவருகிற நெருக்கம் அப்பாவுடன் இல்லை. அவள் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அப்பாவுடன் நெருங்கிப் பழகுகிறாள். சென்ற காலத்திய வாழ்க்கை அத்தகையதாகத்தானே இருந்தது?

மாலையில் அலுவலகத்திலிருந்து கேசவபிள்ளை திரும்பி வந்தார். கார்த்தியாயினி அவரை எதிர்பார்த்திருந்தாள். அவளுக்கு மிகுந்த ஆவல். வழக்கமில்லாத ஒரு நிகழ்ச்சி அன்று நடந்தது.

கேசவபிள்ளை காரிலிருந்து கீழே இறங்கியபோது கார்த்தியாயினி அருகே நின்றுகொண்டிருந்தாள். அவள் கேட்டாள்:

''பசங்க போடற கூச்சலைக் கேட்டீங்களா?''

கேசவபிள்ளை ஒருமுறை முனகினார். அவ்வளவுதான்.

கார்த்தியாயினி கேட்டாள்: ''என்ன, அது அவ்வளவு முக்கியம் இல்லீங்களா?''

அவளுடைய ஆவலை அவரால் புரிந்துகொள்ள முடிந்தது. அவர் சொன்னார்: ''நான் இந்த டிரஸ்ஸைக் கொஞ்சம் மாற்றட்டும். அப்புறம் பேசுவோம். இதென்ன, இன்று வழக்கமான காபிகூட இல்லையா?''

அப்போதுதான் காபி கொண்டுவரவில்லை என்பதை அவள் உணர்ந்து அடுக்களைக்குச் சென்றாள்.

கேசவபிள்ளை காபி அருந்திக்கொண்டிருந்தபோது, கார்த்தியாயினி அன்றைத் தினம் பார்த்த ஊர்வலத்தைப்பற்றி வருணித்தாள். அவள் சொன்னாள்: ''அதுக்குப் பிறகு நான் ரொம்பவும் பயந்துக்கிட்டிருந்தேன். வாசல்லே காவல் நிக்கற போலீஸ்காரன், தோட்டக்காரன், டிரைவர்—இப்படி யாரைப் பார்த்தாலும் எனக்குப் பயமா இருந்தது. இவங்களையெல்லாம் எப்படி நம்பமுடியும்? அந்த ஊர்வலத்திலே இவங்களோட பசங்ககூட இருந்திருப்பாங்க.''

இருந்திருப்பார்கள் என்ற முறையில் தலையாட்டினார் கேசவபிள்ளை. விவரம் அறியாத கார்த்தியாயினி கேட்டாள்: ''ஏனுங்க, பேசாமே இருக்கிறீங்க? இதெல்லாம் பெரிய காரியங்கள் இல்லையா? கொஞ்சம் சொல்லுங்க!''

கேசவபிள்ளை புன்னகையோடு, ''சொன்னால் உனக்குப் புரியுமா?'' என்று கேட்டார்.

தான் சொல்வது அவரைத் துன்புறுத்தும் என்பதை அறியாமல் கார்த்தியாயினி சொன்னாள்: ''இதெல்லாம் எனக்கு யார் கற்றுத் தந்தாங்க? அப்புறம் எனக்கு எப்படிப் புரியும்?''

அவர், அவளுடைய வெள்ளை உள்ளத்தைப் புரிந்துகொண்டார். எதையும் பேசவில்லை. அவள் புதல்வியின் கதையைச் சொல்லத் தொடங்கினாள்: ''நம்ம மகள்கூட இன்னைக்கு அந்த ஊர்வலத்தில் சேர்ந்தாள். திரேஸ்யா என்கிற ஒரு பொண்ணு அவள்கிட்டே உங்களைத் தூக்கிலே போடணும்னு கூச்சல் போடச் சொன்னளாம். ஆனால், விஜயா அப்படிச் செய்யலே.''

கேசவபிள்ளைக்கு அது ஒரு செய்தியாகத்தான் இருந்தது. அவர் விஜயாவை அழைத்து விஷயங்களை விசாரித்தறிந்தார். அப்புறம் அவளை வாசிக்கச் சொல்லியனுப்பினார். மகள் நடந்துகொண்டது தவறு என்றும், இனிமேல் அப்படி நடந்துகொள்ளக்கூடாதென்றும் கண்டிக்காமல் விட்டுவிட்டாரே! அது ஏன்? அந்தக் கேள்விக்குக்கூட ஒருமுறை முனகிவிட்டுத் தலையாட்டினார் கேசவபிள்ளை.

பெரிய பளுவைச் சுமந்துகொண்டிருந்தது இதயம். இவ்வளவு பெரிய சுமை இதுகாறும் அவருக்கு ஏற்பட்டதில்லை. அது அவருடைய உற்சாகத்தைத் தணித்துவிட்டது. களையிழந்தார்; ஒளியிழந்தார். சுறுசுறுப்பு இல்லாமற் போயிற்று. ஆத்திரங்கூட வருவதில்லை. புத்தி மந்தமாகி

விட்டது. இத்தகைய நிலைமையில்தான் இப்போது கேசவபிள்ளை இருக்கிறார்.

சொந்தத் திறமையில் நம்பிக்கையற்று, சமாளிக்கவேண்டிய பிரச்னையின் கடுமையைப் பார்த்து முன்னொரு நாள் அவர் திகைத்து நின்றிருந்தார். தாம், அன்று ஒருவிதமான கீழ்நிலைக்குத் தள்ளப்படுவதுபோன்று எண்ணிக் கலங்கினர். தேர்தல் என்ற புதியதொரு வேலை வந்துவிட்டபோது அவருடைய அறிவும் திறமையும் மீண்டும் புத்துணர்வு பெற்றுச் செயல்பட்டன. பல மடங்கு பெருகிய துணிச்சலுடன் சம்ஸ்தானம் முழுதும் புயல்போல் இயங்கிச் செயலாற்றினர். அன்று செய்ததெல்லாம் அறிவு பூர்வமானது, குறி தவறாதது. பயமுறுத்தல்களைக் கண்டு அவர் அஞ்சவில்லை. எதிர்காலத்தைப்பற்றி யோசிக்கவில்லை. செய்யவேண்டியது என்னவென்று தெரியும். அது கடமை என்ற உணர்வு இருந்தது. திட்டப்படி ஒழுங்காக அனைத்துக் காரியங்களையும் செய்து முடித்தார். வெற்றி பெற்றார்.

இன்று புத்தி மந்தமாக இருக்கிறது. சமாளிக்கவேண்டிய பிரச்னை முன்னதைவிடக் கடுமையானது. திறமை குறைந்திருக்கிறது. உற்சாகத்தை உருவாக்கிக்கொள்ள முடியவில்லை. பல வருஷங்களுக்கு முன், தம் முன்னே தோன்றிய நீண்ட பாதையின் இறுதியிடம் தலைமைக் காரியதரிசியின் இந்த இருப்பிடந்தான். குறிக்கோளை அடைந்துவிட்டார். தமக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை விரும்பியவர்கள் சுட்டிக் காட்டியது இந்த இருப்பிடத்தைத்தான். அபிலாஷை முற்றுப் பெற்றதா? மேற்கொண்டு பார்வை முன்னே செல்லவேண்டாமா? அது அல்லவா உற்சாகம், வீரம் ஆகியவற்றின் மூலகாரணம்?

கார்த்தியாயினி, நிறுத்தாமல் கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்தாள். கேசவபிள்ளை எதற்கும் பதில் அளிக்கவில்லை. அந்தக் கேள்விகள் தொந்தரவாகக்கூட அவருக்குப் படவில்லை. சுதந்தரத் திருவாங்கூர் என்றால் என்ன என்பது அவளுக்குத் தெரியவேண்டும். இந்த ஜனங்கள் எல்லாம் ஏன் இப்படிக் கூச்சல் போடுகிறார்கள்? இதெல்லாம் அவளுக்குத் தெரிந்திருந்தால், அவருக்குப் பெருமளவில் ஆறுதல் கிடைக்க வழி ஏற்பட்டிருக்கும்.

தமக்குத் துணையாக யாரும் இல்லை என்ற எண்ணம் இன்றுள்ளதுபோல் என்றுமே அவருக்கு ஏற்பட்டதில்லை. இதயச் சுமையை இன்னொருவரிடம் சொல்லித் தணிப்பதற்கு எந்த வழியும் இல்லை. இவ்வளவு நாள் வாழ்ந்தார். ஒரு நண்பனையாவது சம்பாதித்துக் கொள்ளவில்லை. என்ன வாழ்க்கை! எல்லாவற்றையும் திறந்துசொன்னால்காதுகொடுத்துக்கேட்டு யோசனைகள் கூற அல்லது ஆறுதல் அளிக்க உற்ற நண்பன் ஒருவனைக் கூடச் சம்பாதிக்க முடியவில்லையே! உறவினர் இல்லையே? இத்தகைய ஒரு நிலைமை ஏற்பட்டுவிடுமென்று நினைத்துப் பார்த்ததேயில்லை. நெருங்கிப் பழக யாரும் இல்லை. மனைவி நம்பத் தகுந்தவள்தான். நெருங்கிப் பழகவும் செய்கிறாள். ஆனால், இந்த விஷயங்கள் ஒன்றும் அவளுக்குப்

புரியாது. புரிந்துகொள்ளும் திறமைகொண்டவளாக அவளை உருவாக்க வேண்டியிருந்தது. அதைச் செய்யாமல் விட்டுவிட்டது பெரும் தவறு. சந்தர்ப்பங்கள் வீணாகிவிட்டன. அவளை மதிக்காமல் இருந்தது தவறு என்று அவருக்கு இப்போதுதான் புரிந்தது. இனி ஒருபோதும் அந்தத் தவறைத் திருத்தவும் முடியாது.

மேஜைமீது இரகசிய தஸ்தாவேஜுகள் கிடக்கின்றன. அவற்றில் இருப்பவை யாரையும் திகைக்க வைக்கிற ரிப்போர்ட்டுக்கள்தாம். மேற் பரப்பிலே பார்க்கிற வேலை முறைகளைவிடத் தரைக்கடியில், தலைமறை வாகச் செய்கிற வேலை முறைகள் கூடுதலான பயத்தைத் தருகின்றன. இந்தக் கிளர்ச்சியின் மொத்த உருவத்தைக் கடந்த சில நாட்களாகக் கேசவபிள்ளை பார்த்து உணர்ந்து வருகிறார். உருப் பெற்ற அது பூதாகார மான ஒரு துஷ்ட உயிரினமாகக் கேசவபிள்ளை முன் தோன்றியது.

கார்த்தியாயினியின் ஆவலிலிருந்து ஒரு கேள்வி பிறந்தது:

''இவங்க எதுக்காக உங்களைத் தூக்கிலே போடணும்னு கத்தறாங்க?''

ஒரு மனைவி கேட்கிற கேள்வி இப்படித்தான் இருக்கும். அந்தக் கேள்வி யின் உண்மை உருவம் இதுதான்: ''அவர் உங்களைத் தூக்கில் போட்டுக் கொல்ல வேண்டும் என்கிறார்களே. அவ்வாறு நடந்துவிடுமா?''

கார்த்தியாயினியைப் போன்ற ஒரு மனைவியால் முதலில் சொன்னபடி தான் கேட்கமுடியும். வேறு முறையில் நாக்கு செயல்படாது.

கேள்வியின் உண்மை உருவத்தைப் புரிந்துகொண்ட கேசவபிள்ளை சொன்னார்: ''அதுவும் நிகழ்ந்துவிடலாம். மேற்கொண்டும் பல நடை பெறலாம்.''

அந்தப் பிரச்னையைப்பற்றிச் சொல்ல, கேசவபிள்ளை முதல் முதலில் வாய் திறந்தார்.

கார்த்தியாயினி கதறியழுதுவிட்டாள். அவள் வாடித் துவண்டு விட்டாள்.

''ச்சி! சத்தம் போடாதே! அதனால்தான் நான் முன்னமே சொன் னேன், உனக்கு ஒன்றும் புரியாதென்று; உன்னிடம் சொல்லக்கூடா தென்று.''

கார்த்தியாயினியின் மனத்திலே, தப்ப வழியொன்று தென்பட்டது: ''இந்த வேலை வேணும்னு விட்டுட்டு, நாம நம்ம ஊரிலே போயி இருந்துடலாம்.''

புன்னகையுடன் அவர் சொன்னார்: ''நீ பயப்படுவதுபோல் நடை பெறுவதாக இருந்தால், இந்த வேலை வேண்டாமென்று விட்டுவிட்டுச் செல்வதனாலோ, ஊரிலே சென்று ஒளிந்திருப்பதனாலோ தப்பித்துக் கொள்ள முடியாதம்மா.''

அது ஏன் என்று கேட்கும் முறையில் அவள், அவர் முகத்தைப் பார்த்தாள்.

''ஊரிலிருந்தபோது இந்த மாதிரி கூச்சல் போடறதையெல்லாம் நீ கேட்டதில்லையா?''

''ஜெயிலிலே போடணும்னு பிரசங்கம் பண்ணினுங்கன்னு சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''அதனால்தான் தப்பித்துக்கொள்ள முடியாதென்று நான் சொன்னேன்.''

எனவே, தப்பித்துக்கொள்ள முடியாதென்ற ஓர் எண்ணமே கார்த்தியாயினிக்கு ஏற்பட்டது.

கேசவபிள்ளை சொன்னார்: ''பயப்படவேண்டாம். அப்படியெல்லாம் நடந்துவிடுமென்று எண்ணவேண்டாம். அவர்கள் இப்படியெல்லாம் கூச்சல் போட்டுக்கொண்டுதான் இருப்பார்கள். என்னைத் தூக்கிலே போடுவதாயிருந்தால், என் போன்ற எத்தனையோ அதிகாரிகளைத் தூக்கிலேற்ற வேண்டியிருக்கும்! அதற்கு இந்தக் கூச்சல் போடுகிறவர்கள் கையிலே அதிகாரம் கிடைத்துவிடுமா? அது முடியுமா? எல்லாம் போகப் போகத்தான் சொல்லமுடியும்.''

கார்த்தியாயினிக்கு அவர் சொன்னது முழுதும் புரியவில்லை. ஒரு விஷயம் மட்டும் அவளுடைய மூளைக்கெட்டியது. தூக்கிலிடுவதாக இருந்தால், பல அதிகாரிகளைத் தூக்கிலேற்றவேண்டியிருக்கும்! அதனாலும் அவளுடைய பயம் தீரவில்லை. அவர் மனைவிக்கு அன்புடன் ஆறுதல் அளித்தார்: ''நீ இதையெல்லாம் பார்க்கவோ, கேட்கவோ வேண்டாம். எதைக் கண்டும் பயப்படவேண்டாம்.''

அவர் தொடர்ந்து பேசினார்: ''நீ அதிருஷ்டக்காரியல்லவா? அப்படியிருக்க, எனக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டுவிடுமா, என்ன?''

அவள் சொன்னாள்: ''நல்ல அதிருஷ்டம்! இப்படியும் ஓர் அதிருஷ்டக்காரி இருக்காளா? நல்லாருக்கு.''

அவர், அவளுக்குத் தைரியமூட்டினார்: ''நீ இவ்வளவு முட்டாளா என்ன? இவ்வளவு போட்டிகள் இருந்தும் அவற்றை எல்லாம் தோற்கடித்து முன்னுக்கு வர முடிந்த என்னைத் தூக்கில் ஏற்றிவிடுவார்களா? எவனோ கூச்சல் போட்டதைக் கேட்டதும் நீ நம்பிவிட்டாயா?''

தொடர்ந்து, அந்தக் கோஷம் நடைமுறைக்கு வராது என்பதற்கான காரணங்களை அவர் விபரமாக விளக்கிக் கூறினார். ஆனால், ஒரு விஷயம் மட்டும் உண்மை. காங்கிரஸ்காரர்களின் முதல் எதிரி அவரேதாம்! அவர்களை நேரடியாக எதிர்த்து நின்றவர் அவர்தாம். அதனால், சில கெடுதல்கள் நேர்ந்துவிடலாம்; வேலை போய்விடலாம்; சில நெருக்கடிகள் ஏற்படலாம். ஆனால், அதெல்லாம் கார்த்தியாயினிக்கு ஒரு பொருட்டாகவே தோன்றவில்லை. அவள் சொன்னாள்: ''எனக்கு இந்த மாதிரியான நெளிவுசுளிவுகள் ஒண்ணும் தெரியாது. நான் பயந்துட்டேன்.''

கேசவபிள்ளை அவளை ஆறுதலடையச் செய்தார். ஆனால் அவர் அமைதியற்றிருந்தார். போலீஸ் கமிஷனருக்குப் போன் செய்தார். பார்க் வியூ பந்தோபஸ்தை மேலும் விரிவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். சிறிது நேரத்துக்குள் ஆயுதப் படை ஒன்று அங்கே விரைந்து வந்தது.

வாழ்க்கையில் நன்முக விளையாடினர். இன்று வரையில் வெற்றியைத் தான் கண்டிருக்கிறார். அந்த விளையாட்டு இப்போது நெருப்புடன் விளையாடும் விளையாட்டாக மாறிக்கொண்டிருந்தது. கேசவபிள்ளை அதைப்பற்றிய உணர்வுடன்தான் இருந்துவந்தார்.

சம்ஸ்தான காங்கிரஸ் உருவானபோது அதன் ஆயுள் இவ்வளவு நாட்கள் வரை நீடிக்குமென்று அவர் எதிர்பார்க்கவில்லை. திடீரென்று அணையக்கூடிய, அணைக்கக்கூடிய, பற்றி யெரிகிற ஒரு நெருப்பு என்றே அவர் அதைக் கருதினர். அதைச் சமாளிப்பதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டபோது, அது மகிழ்ச்சி அளிக்கிற ஒரு வேலையாக இருந்தது. பணத்துக்குப் பஞ்சமில்லை, அதிகாரத்துக்குக் குறைச்சல் இல்லை. தம் சொந்த முன்னேற்றத்துக்கான அனைத்து வழிகளையும் அவர் அதனூடே பார்த்தார். காங்கிரஸ் அழிந்துவிடும் என்றே அவர் நம்பினர். அதனை அழிக்க முடியுமென்றும் நம்பினர். அந்த இயக்கத் தின்பால் வெறுப்பும் ஆத்திரமும் அவருக்கு இருந்துவந்தன. அதை அழிக்கும் பணியை அவர் இதய பூர்வமாகவே ஏற்றுக்கொண்டார். ஆனல், அந்த மதிப்பீடுகளெல்லாம் தவறுனவை என்பது வெகுகாலம் கழிந்தே அவருக்குத் தோன்றத் தொடங்கியது. வெகு நாட்களுக்குப் பிறகு! சமாளிக்க வழியேதும் இல்லாததாகிவிட்ட நிலைமை ஏற்பட்ட பிறகு!

வெள்ளையர் இந்தியாவைவிட்டு வெளியேறுவதென்று தீர்மானித்த போது, சுதந்தரத் திருவாங்கூர் என்ற கோஷம் கிளம்பியது. அது ஒரு நல்ல காரியம் என்றே அவர் நினைத்தார். காங்கிரஸ் வெற்றி பெற்றது. ஆனல் வெற்றி பெற்ற காங்கிரஸைத் தோற்கடித்து இணங்கச் செய்து விடுவதற்கான ஒரு திட்டமாக, கேசவபிள்ளை அந்தக் கோஷத்தைப் பயன் படுத்தப் பார்த்தார். சுதந்தரத் திருவாங்கூர் வெற்றி பெறும் என்றே அவர் நம்பினர். சம்ஸ்தான காங்கிரஸ் எந்தக் கொள்கைக்காக இயங்கி வந்ததோ, இந்தக் கோஷம் அந்தக் கொள்கைக்கு எதிரானது அல்ல. 'மகாராஜாவின் ஆதிக்க உரிமைக்குட்பட்ட பொறுப்பாட்சி.' இதுதான் சம்ஸ்தான காங்கிரஸின் குறிக்கோள். சுதந்தரத் திருவாங்கூர் அந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்கிறது. எனவே, காங்கிரஸ் சுதந்தரத் திருவாங்கூரை அங்கீகரிக்கவேண்டியதுதானே?

ஆனல், நாள் செல்லச் செல்லக் கேசவபிள்ளைக்குச் சந்தேகம் ஏற்படத் தொடங்கியது. சுதந்தரத் திருவாங்கூர் வெற்றி பெறுமா? இந்தக் கோஷத்துக்கு எதிராக மக்களிடையில் நிலவி வந்த கருத்து அவ்வளவு பலமானதாக இருந்தது. சுதந்தரத் திருவாங்கூர் என்ற கோஷத்தை எந்தக் கோணத்திலிருந்து ஆராய்ந்து பார்த்தாலும் அந்தக் கோஷம் சரிதானு என்ற சந்தேகம் கேசவபிள்ளைக்குக்கூட ஏற்பட்டது. 'இது சரியல்ல'வென்று மனத்துக்குள்ளிருந்து யாரோ சொல்வதுபோல் அவருக் குத் தோன்றியது. அந்தச் சந்தேகம் மேலும் மேலும் அதிகரிக்கவும் செய்தது.

ஆனால், அத்தகைய சந்தேகங்களை வெளிக் காட்டமுடியுமா? வெளிப் படுத்தினால் திவான்ஜியுடைய வெறுப்புக்கு ஆளாகிவிடுவார் அல்லவா? எதையும் ஆழமாகச் சோதித்துப் பார்க்கிற, மதிநுட்பம் படைத்த அந்த ஆட்சிப் பொறுப்பாளருடைய கழுகுப் பார்வையிலிருந்து தப்பித் துக் கொள்வதே பெரிய கெட்டிக்காரத்தனமாகும். இன்று வரையிலும் திவான்ஜிக்குக் கேசவபிள்ளைமீது அத்தகைய சந்தேகம் ஏதும் ஏற்பட்ட தில்லை.

வேறு சில அதிகாரிகளைப்பற்றிக்கூடக் கேசவபிள்ளை நினைத்துப் பார்த் தார். திவான்ஜிக்கு அவர்களில் பலர்மீதும் நம்பிக்கை இல்லை. அடிக்கடி பலரை இடம் மாற்றிப் பிரதிஷ்டை செய்து வருகிறார். அண்மையில் போலீஸ் கமிஷனர்கள் மாறி மாறி வந்திருக்கிறார்கள். நிரந்தரமாக ஒரே ஒருவரை மட்டுமே திவான்ஜி நம்பி வருகிறார். அது தம்மையே தான் என்று கேசவபிள்ளைக்குத் தெரியும்.

சம்ஸ்தான காங்கிரஸ் இயக்கம் சம்பந்தப்பட்ட பிரச்னையிலாகட்டும்; சுதந்தரத் திருவாங்கூர் கோஷத்தை அமலாக்குகிற பிரச்னையிலா கட்டும்—ஆட்சியாளரின் ஆக்கினைக்கு இணங்கிச் செயல்படுகிற ஓர் உத்தியோகஸ்தர் என்பதைக் காட்டிலும், தாம் ரொம்ப தூரம் முன்னேறிச் செல்லவில்லையா என்ற சந்தேகம் கேசவபிள்ளைக்கு ஏற்பட் டிருந்தது. அவ்வளவு தூரம் போகவேண்டியிருந்ததில்லை. எதிர்காலத் தைப்பற்றித் தீர்க்கதரிசனம் செய்தவாறு தந்திரமாக நடந்திருந்தால் போதுமாயிருந்தது. வேறு எந்த உத்தியோகஸ்தரும் இவ்வளவு தூரம் போகவில்லை. ஒரு காலகட்டத்துக்குப் பிறகு அவர்கள் தந்திரமாகவே செயல்பட்டார்கள். ஆனால், இன்னொரு விஷயம்—அவ்வளவு தூரம் முன்னேறிச் சென்றதனால்தானே, இவ்வளவு பெரிய பதவி கிடைத்தது?

பதில் சொல்லவேண்டிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது? மேலிடத்தின் உத்தரவுக்கு இணங்கச் செயல்பட்ட, முழுமை யான அரசாங்க இயந்திரத்தின் ஒரு பகுதியாகவே இயங்கிவந்ததாகச் சொன்னால், அது விலை போகுமா? சொந்த மனச்சான்றுகூட அந்தப் பதிலை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என்று கேசவபிள்ளைக்குத் தோன்றியது. அப்புறம் என்ன செய்வது?

படுக்கையறையிலிருந்து கார்த்தியாயினி வெளியே வந்தாள்:

''ரொம்ப நேரமாச்சே! தூங்கவில்லையா?''

''நிறைய வேலை இருந்தது'' என்றார் கேசவபிள்ளை.

அவருக்குப் பக்கத்திலுள்ள ஒரு நாற்காலியில் அமர்ந்து, கார்த்தியா யினி இனிய புன்னகையுடன் சொன்னாள்: ''ஒரு வேலையும் செய்யவில்லை. நான்தான் பார்த்துக்கிட்டிருந்தேன். கொஞ்சநேரம் யோசனை பண்ணிக் கிட்டிருப்பீங்க. அப்புறம் எழுந்து நின்னுக்கிட்டுப் பயத்தோட சுற்று முற்றும் பார்ப்பீங்க. அப்புறம் பின்னாலே கையைக் கட்டிக்கிட்டு உலாவிக்கிட்டிருப்பீங்க. இதுதான் வேலை.''

''நீ கூடத் தூங்கவில்லையா?''

''இல்லே. எனக்குத் தூக்கம் வரல்லே. என்னமோ பயமாவுது. ஏதேதோ யோசிச்சுக்கிட்டிருந்தேன்.''

''தூக்கிலேற்றி விடுவார்கள் என்று?''

''ஆ . . . பயம்.''

தொடர்ந்து கார்த்தியாயினி கூறினாள்: ''எனக்கு மட்டுமா பயம்? ஏங்க, சுற்றுமுற்றும் பார்த்தது பயந்துக்கிட்டுத்தானே?''

''எதுக்காகப் பயப்படவேண்டும்? இங்கே பலமான போலீஸ் பந்தோபஸ்து இருக்கே!''

கார்த்தியாயினி திடீரென்று பேசினாள்: ''போலீஸ்காரங்களிலே காங்கிரஸ்காரங்க இருக்கமாட்டாங்களா?''

அந்தத் திடீர்க் கேள்விக்குத் திடீர்ப் பதில் வரவில்லை. சிறிது நேரத்துக்குப் பின் சொன்னார்: ''அவர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள்.''

கார்த்தியாயினிக்குப் பார்க் விழுவிலிருந்து போலீஸ் போதும் என்று இருந்தது.

''அப்படியானால் நீ போயிடம்மா!''

''அது முடியாது. எல்லாரும் போகலாம்.''

அது முடியாதென்று பொருள்படும்படியாகக் கேசவபிள்ளை தலையாட்டினார். இந்தப் பதவியிலே ஸ்திரமாக அமர்ந்திருந்தால் மட்டுமே, இன்று மட்டுமின்றி என்றைக்குமே பாதுகாப்பாக இருக்கமுடியும்.

அவர் கேட்டார்: ''ஊரிலே சென்று தங்கினால் இப்படிப்பட்ட பாதுகாப்பு இருக்க முடியுமா? எதிர்காலத்திலும் இங்கேதானே பந்தோபஸ்து?''

ஊருக்குச் சென்றால் இரண்டு நாட்களுக்குள்ளே ஜனங்களின் விரோத மனப்பான்மையைப் போக்கிவிட முடியுமென்று கார்த்தியாயினி சொன்னாள். ஜனங்கள் எல்லாவற்றையும் மறந்துவிடுவார்கள்.

''அங்கே ரொம்ப நல்லவங்க, ஆம்புளேங்களும் பொம்புளேங்களும். இங்கே சிங்காரிச்சு நடக்கறவங்களைப் போல அல்ல. ஒரு மனுஷனையாவது நம்ப முடியுதா இங்கே?''

கேசவபிள்ளை ஒப்புக்கொண்டார். ஆனால் அவர் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார்: ''உன்னிடம் சந்தோஷமாக நடந்துகொள்வார்கள். என்னிடம் அப்படி இருக்காது.''

கார்த்தியாயினி அதை எதிர்த்தாள்: ''ஆமாமாம் . . . என்னை விரும்பறவங்க என்னோட வீட்டுக்காரரையும் விரும்புவாங்க. இல்லாட்டா, வந்து தங்கியிருந்துதான் பாருங்களேன்.''

அவர் சிரித்தவாறு கூறினார்: ''அப்போ, நான் என் மனைவியுடைய பாதுகாப்பிலே இருந்து வரணுமா?''

சூடான பதில்தான் அவளுடையது: ''யாருக்கும் எந்தக் கெடுதலும் பண்ணமே வாழறதாயிருந்தா அப்படித்தான்.''

அவர் சிரித்தார். அவளும் சிரித்தாள்.

சிறிது நேரம் அங்கே நிசப்தம் நிலை நிலவியது. ஒருவேளை, மனைவி சொன்னதைப்பற்றிக் கணவர் சிந்தித்துக்கொண் டிருந்தாரா? அது ஒரு மறுக்கமுடியாத உண்மைதானே? அவருடைய சிந்தனையிலே, அப்பா பப்புப்பிள்ளை ஒரு மின்னல்போல் நுழைந்தார். கார்த்தியாயினி சொன்ன அந்த உண்மைக்கு ஒரு மறுப்புத்தானே, அவருடைய மரணம்? யாருக் கும் எந்தவிதமான கெடுதலும் செய்யாமல் எல்லாருக்கும் நல்லவனுக அந்த நாட்டுப்புறத்து வயோதிகர் வாழ்ந்தார். அந்தக் கிழவரின் இறுதி முடிவு அப்படி ஆகக் காரணம் என்ன? கார்த்தியாயினியிடம் அந்தக் கேள்வியைக் கிளப்பினுல்? ஆனுல் கிளப்பவில்லை. ஏனென்றுல் அதற்குக் கிடைக்கும் பதில்கூடச் சூடானதாக இருக்கும். அந்தக் கிழவர் ஒரே ஒரு தவறுமட்டுமே செய்தார். அவருக்கு இத்தகைய ஒரு பிள்ளை பிறந்தது. இல்லாவிட்டால் அப்படி நடந்திருக்காது. இத்தகைய பிள்ளை பிறக்காமல் இருந்திருந்தால், அந்த முகுந்தன் என்பவன் அவரைக் கொலை செய்திருப்பானு?

நெருப்புக்குள் சிக்கியதுபோல் அவர் மனம் வெந்துருகியது. அப்பா வின் மரணத்தைப்பற்றி இந்த முறையில் அவர் இதுவரையில் சிந்தித்த தில்லை. வாழ்க்கையை மொத்தமாக மதிப்பீடு செய்து பரிசீலித்துப் பார்த்த அந்த இரவில், சிந்திக்கப்படவேண்டியிருந்த அந்த விஷயங்கூட அவருடைய சிந்தனை மண்டலத்துக்குள்ளே ஒரு மின்னல்போல் பாய்ந்து வந்தது. ஆனுல் அந்த விஷயத்தில் குற்றவாளி யார்? தாமா? கோபாலன் நாயருக்குத் தாம் எந்தத் தீங்கையும் இழைத்ததில்லையே? ஆயினும் குற்றத்திலிருந்து நழுவிவிட முடியாதென்று கேசவபிள்ளைக்குத் தோன்றி யது.

''இந்தச் சுதந்தரத் திருவாங்கூர் என்கிறீங்களே? அது என்ன? மகாராஜா வேணுங்கிறீங்களா?'' கார்த்தியாயினியின் இந்தக் கேள்வி தான் அங்கே நிலவிய நிசப்தத்தைத் தகர்த்தது.

கேசவபிள்ளை, சுதந்தரத் திருவாங்கூர் என்றுல் என்னவென்று அவளிடம் விளக்கிக் கூறினர். அவள் கவனத்துடன் கேட்டாள். அவளுக் குப் புரிந்ததும் கேட்டாள்: ''அப்போ . . . நாம்—திருவாங்கூர் சம்ஸ்தானத்திலுள்ளவங்க, தனியாப் பிரிஞ்சு வாழறது . . . அப்படித் தானே?''

''ஆமாம்.''

''அப்போ கொச்சிக்கும் குருவாயூர்க்கும் எல்லாம் போகமுடியாதே?''

''அதெல்லாம் அப்புறம். அந்த அந்த நாடுகளோடு கலந்து பேசி உடன் படிக்கைக்கு வருவதைப் பொருத்தது.''

''காசி ராமேசுவரம் போகணும்னு?''

''அதுவும் அப்படித்தான்.''

''ஐயோ, இதென்ன இப்படிச் சொல்றீங்க? நம்ம குருவாயூருக்கும் காசிக்கும் போகவேணும்னு, மற்றவங்களோடு கேட்டு அநுமதி பெற்றுத் தான் போகணுமா? அது நல்லால்ல. அப்பாவும் கிட்டு மாமாவும்

எப்பவும் சொல்லுவாங்க, கலிகாலம் வந்துடுச்சுன்னு! அதனாலேதான் இந்த ரகளை எல்லாம் நடக்குதுன்னு. பாகவதம் படிச்சுக்கிட்டு அதிலே சொல்றமாதிரி கலிகாலத்திலே நடக்கறதெல்லாம் இப்போ நடக்குதுன்னு. இந்த சுதந்தரத் திருவாங்கூர்ன்னு அது இப்படித்தான் இருக்கும்னு நமக்கு அது வேணுங்க. காங்கிரஸ்காரங்க சொல்றதுதான் சரி.''

''பேசாதே!'' என்று சமிக்ஞை செய்தார் கேசவபிள்ளை. கார்த்தியாயினி இரகசியம் பேசுவதுபோல் கூறினாள்: ''நம்ம மகள் விஜயாகூட இப்படித்தான் சொல்லறா, அப்பா மட்டுந்தான் இந்தச் சுதந்தரத் திருவாங்கூர்னு சொல்லிக்கிட்டுத் திரியிறார்ன்னு.''

சொல்லாமல் வேறு வழி? அவர் தலையில் அடித்துக்கொண்டார். தலை விதிதான் என்று கையை விரித்துக் காட்டினார்.

கார்த்தியாயினி கேட்டாள்: ''என்னங்க?''

கேசவபிள்ளை கேட்டார்: ''நான் எதுக்காக இந்த விளையாட்டெல்லாம் விளையாடினேன்?''

''எதுக்காக?''

''உனக்காகத்தான். வேறு யாருக்காக?''

அந்த விஷயத்தில் கார்த்தியாயினிக்குச் சந்தேகம் இல்லை. வேறு யாருக்காகவும் அல்ல. சிந்தனையில் மூழ்கியிருந்த அந்தப் பெண் இதயம் அநுதாப உணர்ச்சியால் உருகியது. தன் முன்னால் அமர்ந்திருக்கிற இந்த மனிதர் என்ன எல்லாம் செய்தாரோ, அதன் பலன் அனைத்தும் தனக்கும் தன் குடும்பத்துக்குமாகத்தான். ஈரம் கசிகிற கண்களுடன், அன்பு ததும்புகிற இதயத்துடன் அவள் அவர் அருகே சென்றாள். மோவாயைப் பிடித்து உயர்த்தியவாறு கூறினாள்:

''இதெல்லாம் இல்லாட்டாத்தான் என்ன? எனக்கு இதொண்ணும் வேணும். ஆழாக்கு அரிசி கொண்டாந்து தந்தா, அதை ஆக்கிச் சோற்றை உங்களுக்குப் போட்டுக் கஞ்சித் தண்ணியை நான் குடிச்சிடுவேன். அதுதான் சொகம்! அதுகூட இல்லாட்டிப் போனாத்தான் என்ன? ரெண்டு பேருமாச் சேர்ந்து பட்டினி கிடப்போமே! மனநிம்மதி கிடைக்குமல்ல? எனக்குச் சொத்து வேணும். எனக்கு அது வேணும் இது வேணும்னு எப்பவாவது உங்களைத் தொந்தரவு செஞ்சிருக்கிறேனா? பணக்காரியாயிருக்கலாம், இந்தப் பெரிய பங்களாவிலே வந்து குடியிருக்கலாம் என்று எல்லாம் எண்ணி அல்ல உங்களை நான் கலியாணம் செய்து கொண்டது. இதெல்லாம் நம்பக் கையிலேருந்து போனாக்கூட எனக்கு ஒண்ணும் இல்லை. எனக்கு என்னுடைய இந்தத் தெய்வமே போதும்; இது மட்டும்!''

அம்மா சொல்வதைக் கவனத்துடன் கேட்கிற ஒரு குழந்தைபோல், கேசவபிள்ளை கார்த்தியாயினி சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவள் தொடர்ந்து கூறினாள்: ''எல்லாம் போகட்டும். எனக்கு ஒண்ணுமே வேணும், நீங்க மட்டும் சந்தோஷமா இருந்தாப் போதும்.''

கேசவபிள்ளையின் கரம் கார்த்தியாயினியின் கழுத்தைச் சுற்றி வளைத்துக்கொண்டது. அவளுடைய வதனம் குனிந்து கொடுத்தது. இரு வதனங்கள் ஒருங்கே இணைந்தன.

எவ்வளவு நேரம் அவ்வாறு நின்றுகொண்டிருந்தனர் என்று அவர்களுக்குத் தெரியாது. அனைத்தையும் மறந்த நிலையில் ஆனந்த நிலையை எய்தினர் கேசவபிள்ளை.

கார்த்தியாயினி கணவரின் காதிலே முணுமுணுத்தாள்: ''இரவு வெகு நேரமாயிட்டதே; தூங்க வேணுமா?''

அவர் ஒரு சிறு குழந்தைபோல் சொன்னார்:

''எனக்குத் தூக்கம் வரமாட்டேங்குது.''

''வாங்க! படுத்துக்கலாம். நான் தூங்க வைக்கறேன்.''

அவள் அவரைப் பிடித்து எழுப்பினாள். அவர் சொன்னார்: ''கண்ணே, எல்லாவற்றையும் உன்னிடம் திறந்து சொல்லட்டுமா?''

''சொல்லுங்க! என்கிட்டே அல்லாமே வேறு யார் கிட்டே சொல்லப் போறீங்க?''

அவர் ஒப்புக்கொண்டார்: ''உன்னிடம் மட்டுந்தான். உன்னிடம் அல்லாமல் வேறு யாரிடமும் இல்லே.''

''அப்புறம் சொல்லுங்க!''

''சொன்னால் உனக்குப் பயமாகும்.''

''இல்லே. எனக்குப் பயமும் இல்லே.''

''எனக்கு எதிரிகள் தான் இருக்கிறார்கள்.''

''விட்டுத் தள்ளுங்க!''

அந்த ஆறுதலின் குளிர்ச்சியிலே கேசவபிள்ளை ஒரு கிளிப்பிள்ளைபோல் பேசலானார்: ''அதெல்லாம் இப்படி வந்து முடியுமென்று நான் எதிர் பார்க்கவில்லே.''

கணவர் சொல்லப் போவது என்ன என்று அறியாமலேயே அவள் சொன்னாள்: ''நமக்கு எந்தக் கெடுதலும் நேராது. அதையும் இதையும் யோசிச்சு மனசைப் புண்படுத்தாமே இருந்தாப் போதும்.''

கேசவபிள்ளை, தாம் செய்த முட்டாள்தனத்தைப்பற்றித்தான் சொல்லுகிறார்.

''நான்கூடத் திவான்ஜி முன்னிலையில் நல்ல பிள்ளையா நடித்துக் கொண்டு தந்திரமாக நழுவிச் செயல்பட்டு வந்திருந்தால் போதும். ஆத்மார்த்தமாக உழைத்தேன். அதுதான் தவறுக முடிந்திருக்கிறது.''

''ஒண்ணும் தவறுகப் போயிடலே. வந்து படுத்துத் தூங்குங்க!''

முல்லைப் பூக்களை விரித்துப் போட்டிருந்த மெத்தைமீது அவள் அவரைப் படுக்க வைத்தாள். அவளும் படுத்துக்கொண்டாள்.

அன்னையின் கைத்தழுவுதலுக்குக் கீழே அமைதியாகப் படுத்திருக்கிற ஒரு குழந்தைபோல், மனைவியுடைய தழுவுதலுக்குக் கீழே அந்தக் கணவர் படுத்துக் கிடந்தார். அவளுடைய கைவிரல்கள் மெள்ள மெள்ள

தட்டிக்கொண் டிருந்தன. பல வருஷங்களுக்கு முன்னல் அம்மாவின் அணைப்புக்குக் கீழே அவர் சுக நித்திரையில் மூழ்கிக் கிடந்ததுண்டு.

சிறிது நேரத்துக்குப் பின் கார்த்தியாயினி எழுந்து நின்று பார்த்தாள், கேசவபிள்ளை தூங்குவதை. அவளுடைய வதனத்திலே ஒளிமயமான மந்தகாசமும். கடமையை நிறைவேற்றிய ஆத்மதிருப்தியும் படர்ந்து காணப்பட்டன. சிந்தனைகளின் சூழலிலே அகப்பட்டுத் தவித்துக்கொண் டிருந்த கணவரைத் தூங்கவைத்து விட்டாள்.

தூக்கத்திலே அவர் என்ன என்னவோ உளறினர். திரும்பவும் கார்த்தி யாயினி எழுந்துவிட்ட குழந்தையைத் தட்டுவதுபோல அவர்மேல் விரல் களால் தட்டினாள். அவர் தூங்கிவிட்டார்.

அவரைப் போர்வையால் போர்த்திவிட்டு, அவள் படுக்கையறையி லுள்ள தீபத்தின் மங்கலான ஒளியில், சுக நித்திரை செய்கிற கணவரின் வதனத்தைப் பார்த்து மகிழ்ந்தாள்.

அத்தியாயம் 26

ஆசிரமம்

தன்னியானந்தாசிரமம், அநாதை விடுதி ஆகியவற்றின் துவக்கவிழா நாள் நெருங்கிவந்துகொண் டிருந்தது. பத்திரிகைகளில், தன்னியானந்த ஸ்வாமிகளின் அற்புதச் சாதனைகள்பற்றிய தொடர் கட்டுரைகள் வந்த வண்ணம் இருந்தன. ஆசிரமம், அநாதை விடுதி ஆகியவற்றின் இயங்கு முறைகள்பற்றிய விவரமான செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது. துவக்க விழா மிக ஆடம்பரமாக நடத்த விரிவான திட்டம் போடப்பட்டிருந்தது. தங்கம்மா உள்பட மூன்று பெண்கள், அன்றைய தினம் ஸ்வாமி திரு வடிகள் கையிலுலே அளிக்கப்படுகிற காவி வஸ்திரங்களை அணிந்து துறவறம் ஏற்றுக்கொள்ள இருக்கின்றனர். ஆனால் அதுபற்றி ஸ்வாமி திருப்பாதங்களின் வருகைக்குப் பின்பே இறுதி முடிவு செய்யப்படும்.

ஆசிரமம், அநாதை விடுதி ஆகியவற்றிற்கான நிதிவசூல் ஆரம்பமா யிருந்தது. திருவனந்தபுரத்திலுள்ள பெரிய பெரிய ஹிந்து உத்தியோ கஸ்தர்கள், அரசியல் தலைவர்கள் உட்பட்ட பொதுநலவாதிகளின் மனைவிமார்களும், புதல்விமார்களும் குழுக்கள் குழுக்களாக வீடுகள்தோறும் ஏறி இறங்கித் தீவிர வசூலைத் துவக்கியிருந்தார்கள். மனைவிமார்கள் ஒருங்கே இயங்கிச் செயல்படுவதற்கான ஓர் அரங்கம் தோன்றியிருந்தது. போலீஸ் கமிஷனருடைய தருமபத்தினியும், சம்ஸ்தான காங்கிரஸின் பிரமுகரான தலைவருடைய வாழ்க்கைத் துணைவி யும் ஒன்று சேர்ந்து பொதுஜனத் தொண்டில் ஈடுபட்டார்கள். அது ஒரு நல்ல அறிகுறி என்று நல்ல மனிதர்கள் நினைத்தனர்.

தங்கம்மா வீடுதான் ஆசிரமமாக மாறப் போகிறது. அங்கேதான் தாற்காலிகச் செயற்குழு இயங்கி வந்தது. வசூலுக்குச் செல்கிற குழுக்கள் தினசரி மாலையில் அங்கு வந்து கணக்கை ஒப்படைத்துவிட்டுச் செல்வார்கள். அதுதான் வழக்கம்.

அந்த நாட்களில் ஒரு நாள், பார்க் வியூ இருக்கிற பகுதிக்கு வசூலுக் காகச் சென்ற குழு, ஒரு முக்கியமான செய்தியுடன் திரும்பி வந்தது. இரண்டு அரசாங்கக் காரியதரிசிகளின் மனைவிமார்களும், ஒரு சம்ஸ்தான காங்கிரஸ் தலைவரின் மனைவியும் சேர்ந்ததே அந்தக் குழு. ஏனைய குழுக்கள் வந்து சேருவதற்குள் அந்தக் குழு திரும்பி வந்தது.

கல்வி இலாக்காக் காரியதரிசியின் மனைவியான விசாலாட்சியம்மா, இன்னும் மூன்று நான்கு வீடுகளுக்குக்கூடச் சென்று வந்திருக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்தாள். ரெவின்யூ இலாக்காக் காரியதரிசியின்

மனைவி பானுமதியம்மா சொன்னாள்: ''அந்த வீட்டுக்குச் சென்று திரும்பியதுமே என் மனம் அலுத்துப் போய் விட்டது. அப்பப்பா! என்ன உருவம் அது, விசாலாட்சியம்மா?''

''ஒரு பட்டிக்காடு. மனிதர்களைக் கண்டு பழகாதது. பழகத் தெரியாதது. ஓர் எருமை மாடு!''

பானுமதியம்மாவுக்கு மனவருத்தந்தான் ஏற்பட்டது. ''அந்தப் பங்களாவிலே எப்படிப்பட்டவங்க தங்கியிருந்தாங்க? மிஸ்டர் கிருஷ்ணன் நாயர் அவர்களுடைய மனைவி பகவதிக்குட்டியம்மா; அப்புறம் அந்தப் பாப்பாத்தியம்மா, இல்லையா? சைமன் அவர்களோட மனைவியைப் பார்த்தாலே சொக்கிப் போயிடும். அவங்கல்லாம் பெரிய பெரிய குடும்பங்களிலே பிறந்தவங்க. யார் பார்த்தாலும் மதிப்பாங்க. அவங்களைப் போன்றவங்க அல்லவா, அங்கே வாழ்ந்திடணும்? இந்த அசடையும் அங்கே கொண்டு போய் வாழ வச்சிருக்காங்களே! பத்மநாபக் கடவுளே!''

காங்கிரஸ் தலைவரின் வாழ்க்கைத் துணைவியான ஜானகியம்மா அதைப் பற்றி இன்னும் சில விஷயங்களைச் சொல்ல விரும்பினாள்: ''இல்லாட்டாக் கூட அந்தக் கிராமத்துக் கூட்டங்களெல்லாம் இப்படித்தான். பெண்களுக்குப் பண்பும் நாகரிகமும் தெரியாது. சமையற்கட்டிலிருந்து வெளியே வரமாட்டாங்க. பேசவோ பழகவோ தெரியாது.''

பானுமதியம்மாவுக்குச் சிறிது ஆத்திரம். ''இந்த மாதிரி உள்ளதுகளெல்லாம் அந்தப் பார்க் விழாவிலே எதுக்காக வந்து புகுந்திருக்கு? அந்த இடம் இப்படிப்பட்டதுகளுக்காகவா?''

விசாலாட்சியம்மா வேடிக்கையாகச் சொன்னாள்: ''அதுக்காக ஒரு சட்டத்தையே உருவாக்கணும்னு நாம் ஒரு கிளர்ச்சியை ஆரம்பிக்கலாமா?''

பானுமதியம்மா வேடிக்கையாகச் சொல்லவில்லை. அத்தகைய சட்டம் இயற்றப்பட வேண்டுமென்பதுதான் அவளுடைய பலமான கருத்து. அந்தப் பங்களாவின் உயர்தரமான அந்தஸ்தைப் பாதுகாக்க வேண்டியது அவசியம்.

அப்போதுதான் கன்சர்வேட்டர் மனைவி தலைமையிலுள்ள குழுவும், இன்னோர் அரசாங்கக் காரியதரிசியின் மனைவியான ருக்மிணியம்மாவின் தலைமையிலுள்ள குழுவும் அங்கே வந்து சேர்ந்தன. கன்சர்வேட்டர் மனைவி கேட்டாள்: ''பானுமதியம்மாவுக்கு இன்னைக்கு என்ன இவ்வளவு ஆத்திரம்?'

ருக்மிணியம்மா கூறினாள்: ''இன்னைக்கு வசூல் மோசமாயிருக்கலாம். சகுனம் நல்லால்லேன்னு சொல்லித்தான் இன்னைக்கு இங்கிருந்து கிளம்பினாங்க.''

அது சரிதான் என்று பானுமதியம்மா கூறினாள். இன்றைய அநுபவமும் அத்தகையதாகவே இருந்தது.

கன்சர்வேட்டர் மனைவி கேட்டாள்: ''இன்னைக்கு எவ்வளவு வசூல்?''

''அவ்வளவு மோசம் இல்லே'' என்று ஜானகியம்மா கூறினாள்.

''அப்புறம் என்ன?''

ருக்மிணி அம்மாதான் கேட்டாள்.

விசாலாட்சியம்மா கதை சொல்லத் தொடங்கினாள்: ''ருக்மிணியம்மா, இன்னைக்கு எங்களுக்கு ஓர் அநுபவம் உண்டாயிற்று.''

எல்லாரும் கதையை ஆவலுடன் கவனித்துக் கேட்டனர். விசாலாட்சியம்மா தொடர்ந்து கூறினாள்: ''நாங்க இன்னைக்குப் பார்க் வியூவுக்குப் போனோம். அங்குள்ள டிராயிங் ரூமிலே சிறிது நேரம் வரைக்கும் நின்னோம். ஒரு மனுஷ ஜீவியைக் காணலுமே. ஒருவேளை குடும்பத் தலைவி அங்கே இல்லையோ என்ற சந்தேகம் எங்களுக்கு ஏற்பட்டது. அப்போ ஒரு தோட்டக்காரன் அங்கு வந்தான். அவன்கிட்டே கேட்ட போது, எஜமானியம்மா உள்ளே இருப்பதாகச் சொன்னான். அவன் கெட்டிக்காரன். அவன் இன்னொன்னுகூடச் சொன்னான்; எஜமானியம்மா வீட்டுக்கு முன்பக்கமே வரமாட்டாள்னு. அவன் எஜமானியம்மாவை அழைச்சுக்கிட்டு வர்றதாகச் சொல்லிப் போனான். நாங்க காத்து நின்னோம். அப்போ வர்றாளே, ஒருத்தி!''

விசாலாட்சியம்மா பேசிச் சிறிது விநாடி நிறுத்தியபோது பானுமதி குறுக்கே வந்து புகுந்தாள்: ''நான் நெனச்சேன், சமையல் வேலைக் காரியாக இருக்கும்னு.''

விசாலாட்சியம்மாவுக்கு அந்தக் காட்சியை வருணித்துக் கூறச் சிறிது அவகாசம் தேவைப்பட்டது. பானுமதியம்மா ஆத்திரக்காரி. எனவே அவள் சொன்னால் நன்றாக இருக்காதென்று ருக்மிணியம்மாதான் தீர்ப்புக் கூறினாள், ''விசாலாட்சியம்மாவே சொல்லட்டும்'' என்று.

பானுமதியம்மா மனம் இல்லாமல் அந்தத் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டாள்.

வருணனையின் போக்குச் சிறிது தடைப்பட்டதால் சிறிது நேரம் வரையில் விசாலாட்சியம்மா பேசாமல் இருந்துவிட்டாள். எல்லாரும் ஆவலுடன் நின்றுகொண்டிருந்தனர். விசாலாட்சியம்மா பேசத் தொடங்கினாள்: ''எனக்குச் சமையல் வேலைக்காரின்னு தோணலே. சமையல் வேலைக்காரிக்கு இவ்வளவு தங்க நகைகளா? கையிலே கழுத்திலே எல்லாம் தங்க மயம். தங்கத்தைக் கட்டியாத் தட்டிப் போட்டிருக்காங்க. கழுத்திலே ருத்திராட்சக் கொட்டைகள் அளவிலுள்ள மணிகள் உள்ள பெரிய மாலை. அப்புறம் நாய்ச் சங்கிலிபோலுள்ள ஒரு தங்கச் சங்கிலி. கழுத்தை இறுக்கிக் கிடக்கிற அதிலே புளியிலைபோல் ஒரு சின்னத் தாலி. காதிலே தோட்டைப்போல் ஒரு கம்மல்!''

வடக்குத் திருவாங்கூரிலுள்ளவர்களுடைய நகைகளைப்பற்றி ஜானகி யம்மாவுக்கு நன்றாகத் தெரியும். அவள் அந்த இடங்களில் எல்லாம் சுற்றுப் பயணம் பண்ணியிருக்கிறாள்.

''அவங்ககிட்டே நிறையத் தங்கம் இருக்கும். ஆனா, கலையழகுடன் எந்த நகையும் செய்யத் தெரியாது.''

விசாலாட்சியம்மா சித்திரத்தை மேலும் தெளிவுபடுத்தினாள். ''ஒரு வெள்ளை வேஷ்டி கட்டியிருந்தாள். போட்டிருக்கிற ஜாக்கெட்டை

ஜாக்கெட்டுன்னு சொல்ல முடியாது. கை முட்டிவரையிலும் இறக்கித் தைச்சிருக்காங்க. அது இடுப்பை மூடி இறங்கிக் கிடந்தது. கையுள்ள பனியன்னு வேணும்னுச் சொல்லலாம். ஒரு மேல் வேஷ்டியாவது போட்டிருக்கணுமே?''

பானுமதியம்மா ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தாள். கார்த்தியாயினியைப் பார்த்தால் ஒரு சமையல் வேலைக்காரிபோலவே தோன்றும் என்பதை உறுதிப்படுத்துவதே அந்தத் திருத்தத்தின் நோக்கம்.

''வெள்ளை வேஷ்டின்னு எப்படிச் சொல்லறது? அழுக்கானது. கரி, மஞ்சள், அழுக்கு எல்லாம் ஆங்காங்கே படிஞ்சு கிடக்குது. கன்னத்திலே கூடக் கரி புரண்டிருக்கு.''

கன்சர்வேட்டர் மனைவி கேட்டாள்: ''அப்போ நீங்க ரொம்ப நல்லாப் பார்த்துக் கவனிச்சிருக்கீங்க.''

கதையை எல்லாரும் ரசித்துக் கேட்டனர்.

விசாலாட்சியம்மா தொடர்ந்து கூறினாள்: ''என்ன ஆனாலும் அவள் சமையற்கட்டிலே ஏதோ வேலை செய்துகொண் டிருந்தாள் என்பதுதான் உண்மை.''

ருக்மிணியம்மா கேட்டாள்: ''பருமனாயிருக்கிறாளா? அல்லது மெலிந்திருக்கிறாளா?''

பானுமதியம்மாதான் பதில் அளித்தாள்: ''அவ்வளவு பருமனாயிருக்கிறான்னு சொல்லமுடியாது. ஆனா, உடம்பு நல்ல கெட்டியா உறுதியாயிருக்கு. சும்மா சொல்லப்படாது, நல்ல இரத்தக் களை உண்டு.''

கூட்டத்திலிருந்த ஏதோ ஒருத்தி கேட்டாள்: ''சிவப்பா, கறுப்பா?''

ஜானகியம்மா சொன்னாள்: ''மாநிறம். அப்படித்தானே, விசாலாட்சியம்மா?''

''ஆமாம். ஆனால் நீண்ட அடர்த்தியான கருங்கூந்தல்! ஒரு சுமடு இருக்கும். அதைச் சும்மா சுருட்டிக் கட்டிப் பின்னுக்குப் போட்டிருக்கிறாள். எப்படி இவ்வளவு கூந்தல் வளர்ந்ததென்று நான் நினைத்தேன். சுமக்கக்கூட முடியாது. அழகான பற்கள்.''

கன்சர்வேட்டர் மனைவி கேட்டாள்: ''அதெல்லாம் இருக்கட்டும். உங்க அநுபவத்தைச் சொல்லுங்க!''

விசாலாட்சியம்மா தொடர்ந்து கூறினாள்: ''நாங்க அப்படியே நின்னுக்கிட்டிருந்தோம். எங்களைப் பார்த்தபோது அவள்கூட அசையாமல் நின்னுட்டாள். ஒரு வார்த்தை பேசலே. அதுவும் வேணும். சிரித்த முகத்தோட நிக்கலாம் அல்லவா? ஒரு தூண்போல வெளிறிப் போய் நின்னுட்டாள்.''

பானுமதியம்மா சொன்னாள்: ''அவள் மனிதர்களைப் பார்த்திருக்கிறாளோ என்னவோ? எங்களைப் பார்த்தபோது ஒரு காட்டு மிருகம்போல் திகைத்து நின்னுட்டாள். இன்னும் கொஞ்சநேரம் அங்கே நின்னுக்கிட்டிருந்தா, அவள் சமையற்கட்டை நோக்கி ஓடிப் போயிருப்பாள். அப்புறம் வெளியே வந்திருக்கவே மாட்டாள்.''

ஜானகியம்மா அத்துடன் சிறிது சேர்த்துக்கொண்டாள்: ''இந்தப் பட்டிக்காட்டு முட்டாளுங்கலே அப்படித்தான்.''

விசாலாட்சி மீண்டும் கதையைச் சொல்லத் தொடங்கினாள்: ''நாங்க கூடக் கொஞ்ச நேரம் வரைக்கும் பேசாமே நின்னுக்கிட்டிருந்தோம். அவள் அப்படியே எங்களை மிரண்டு பார்த்து நின்னாள். சற்றுநேரம் கழிந்தது. அப்படியே நின்னோம். அவள் திரும்பி ஓடி விடுவாள்ன்னு எங்களுக்குத் தோணிச்சு. அப்போது ஜானகியம்மா, நாங்க எதுக்காக வந்திருக்கிறோம்னு விபரமாகக் கூறினாள், நாங்க தன்னியானந்தா சிரமம், அநாதை விடுதி ஆகியவற்றுக்காக நிதிவசூல் செய்ய வந்திருக்கிறோம்ன்னு. அவளுக்கு அது புரிஞ்சுதான்னு எங்களுக்குப் புரியல்லே. சும்மா சிலைபோல நின்னுக்கிட்டிருந்தாள்.''

கூட்டத்திலிருந்து ஒரு பெண் கேள்வி கேட்டாள்: ''உட்காரக் கூடச் சொல்லலியா?''

''இல்லை.''

இன்னொருத்தி கேட்டாள்: ''நீங்களாக உட்காருவதுதானே?''

பானுமதியம்மாதான் அதற்குப் பதில் அளித்தாள்: ''நான் அப்படி நினைக்காமல் இல்லே.''

விசாலாட்சியம்மா கூறினாள்: ''ஒரு பெரிய மேலதிகாரியின் வீடு தானே? சொல்லாமே உட்காருவதான்னு உண்மையிலேயே எனக்குத் தோணித்து. ஓர் உதவிக் காரியதரிசியோட மனைவி, அல்லது ஒரு சூப்பிரண்டோட மனைவி நம்ப வீட்டுக்கு வந்தா நாம சொல்லாமே உட்கார்ந்திடுவாங்களா?''

கன்சர்வேட்டர் மனைவி கேட்டாள்: ''நீங்கல்லாம் யார் யார்னு அவளுக்குப் புரிஞ்சுதா?''

''நாங்க சொன்னோம். ஆனா அவ காதிலே அது விழுந்ததோ என்னவோ?'' என்றாள் ஜானகியம்மா.

''ஒண்ணு, அவளுக்குப் பகுத்தறிவில்லே, அல்லது திமிர் புடிச்சவளா இருப்பாள்.'' பானுமதியம்மா குறுக்கே புகுந்து கூறினாள்.

ஜானகியம்மா சொல்வது, அறிவீனம் என்றுதான்; கருவமாயிருக்க முடியாது! உறுதியாக எதையும் சொல்லிவிடக் கூடாதென்பது இன்னொரு பெண்ணின் கருத்து. ஏதாவது மலைப் பகுதியிலோ, அல்லது தவளைபோல் ஒரு நீர்க்குழியிலோ வாழ்ந்து வந்த ஒரு பெண் திடீரென்று இத்தனை பெரிய பங்களாவில் அதிகாரங்களோடு வாழ்ந்து வருவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும்போது கர்வம் தலைக்கேறி விடுவது இயற்கைதான். இல்லாவிட்டால் இவ்வளவு தங்கம் தட்டியுருட்டிப் போட்டு நடப்பாளா? பகவதிக்குட்டியம்மாவுக்கு ஏராளமான நகைகள் இருந்தன. ஆனால், அந்த அம்மா அதை எல்லாம் போட்டு நடந்தாங்களா? பகவதிக்குட்டியம்மாவைப்பற்றி எவ்வளவு புகழ்மாலை பாடினாலும் பானுமதியம்மாவுக்குத் திருப்தி வராது: ''உண்மையிலேயே அவங்களைப் போல வங்கதான் பார்க் வியூவிலே குடியிருக்கணும். அந்தப் பங்களாவுக்கே

பகவதிக்குட்டியம்மா அலங்காரமா இருந்தாங்க. நான் பல சமயங்களிலே அங்கே போயிருக்கிறேன். அடாடா, என்ன உபசாரம்! என்ன மரியாதி! அந்த அம்மாவுக்கு இருந்த அதிகார சக்திதான் என்னே!''

ருக்மிணியம்மா பெருமூச்சுடன் கூறினாள்: ''நீங்க என்ன சொன்னாலும், அந்தப் பட்டிக்காட்டு முட்டாளுக்குத்தான் அங்கே தங்கியிருக்க அதிர்ஷ்டம் ஏற்பட்டிருக்கு.''

''அதென்ன அவ்வளவு பெரிய அதிர்ஷ்டம்? நீங்களே சொல்லுங்க ருக்மிணியம்மா!'' பானுமதியம்மாவுக்குச் சற்று ஆத்திரம் வந்தது.

''உம்! ஏன் அதிர்ஷ்டம் இல்லையா?'' கூட்டத்திலிருந்த ஒருத்தி கேட்டாள்.

பானுமதியம்மா விட்டுக் கொடுக்கவில்லை: ''அந்த வடக்கத்தியான் எப்படியோ திவான்ஜிக்குப் பாதபூஜை நடத்திக்கிட்டு அங்கே புகுந்திட்டான். அல்லாமே என்ன? அதுவா அதிர்ஷ்டம்? பக்தி விலாச பூஜைன்னு சொல்லுங்க! இல்லாட்டா, அந்தப் பதவியிலே வேறு யாராவது வந்து அமர்ந்திருப்பாங்க. சீனியாரிட்டிகூடப் பார்க்கவில்லை. என்னோட ஹஸ்பன்ட் சூப்பிரண்டாயிருந்தப்போ இந்த வடக்கத்தியான் கேசவ பிள்ளை வெறும் பதினஞ்சு ரூபாய் சம்பளம் பெறும் ஒரு குமாஸ்தாவா இருந்தார். எத்தனை பேரோட தலைக்கு மேலே பறந்து போயி அங்கே இருக்கிறார்னு தெரியுமா?''

''இதுக்கெல்லாம் மூலகாரணம் யார்னு தெரியுமா? கிருஷ்ணன் நாயரும் பகவதிக்குட்டியம்மாவுந்தான்'' என்றாள் விசாலாட்சி.

கன்சர்வேட்டர் மனைவி தகுந்த கேள்வி கேட்டாள். ''இப்போது உண்மையிலே பார்க் வியூவிலே தங்கியிருக்க யாருக்குத்தான் தகுதின்னு சொல்லுங்க?''

மிக முக்கியமான கேள்வி! ஒரு நிமிடம்வரையில் அங்கே நிசப்தம் நிலவியது. அந்த ஒலியற்ற நிலையிலிருந்து ஒரு குரல் கிளம்பியது: ''தங்கம்மா!''

பானுமதியம்மாவுக்கு ஆத்திர உணர்ச்சி ஏற்பட்டது: ''ஆம். அவளுக்குப் பெரிய துரோகந்தான் பண்ணியிருக்காங்க. கல்யாணம் பண்ணுவதாக நம்ப வச்சாங்க. அப்படித்தான் பார்க் வியூவுக்கு உள்ளே நுழைஞ்சாங்க. அது வழியாத்தான் இந்தப் பெரிய பதவி கிடைச்சிருக்கு. கடைசிலே ஏமாற்றிட்டாங்க.''

அப்போது வேறு ஒரு பெண் குரலை அடக்கியவாறு கூறினாள்: ''அதனாலே தங்கம்மாவுக்கு எந்தக் கெடுதலும் நேர்ந்துடல்லே. ஒரு முறையிலே பார்த்தா அது ரொம்ப நல்லதாப் போச்சு. அவங்க ஆத்மாவுக்கு நல்ல வழி கிடைக்கிற திசையை நோக்கி அந்த அம்மா போயாச்சு. மனநிம்மதி இல்லாத இந்த உலகத்தின் வழியிலேருந்து அவங்க விடுபட்டுட்டாங்க.''

தங்கம்மா, இன்று அனைத்தையும் துறந்து இந்த வழியைக் கடைபிடித்ததற்குக் காரணம் வாழ்க்கையில் ஏற்பட்ட சோர்வுதான் என்று விசாலாட்

சியம்மா தன் கருத்தைத் தெரிவித்தாள். தகர்ந்துவிட்ட ஒரு காதல் உணர்ச்சியிலிருந்து உருவான வெறுப்பின் வெளித்தோற்றமே இது.

அப்போதுகூட அங்கே சிறிதுநேரம் வரையில் நிசப்தம் நிலவியிருந்தது. தோல்வியுற்ற காதலிலிருந்து உருப் பெற்ற சோர்வின் கதையல்லவா, அங்கே வருணிக்கப்பட்டது! உலகத்தை நன்கறிந்த கன்சர்வேட்டர் மனோவிதான் அந்த நிசப்த நிலையைக் குலைத்தாள்.

''இப்போதெல்லாம் இந்த வடக்கத்தியான்களை நம்ப முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கு. அவங்க ஏமாற்றத் தொடங்கி யிருக்காங்க. முன்பு வடக்கேயிருந்து இந்தத் திருவனந்தபுரத்திலே படிக்க வந்துக்கிட்டிருந்தவங்க நல்ல நன்றியுள்ளவங்களா இருந்தாங்க. இன்னைக்கு அதெல்லாம் மாறிப் போச்சு.''

எவளோ ஒருத்தி சொன்னாள்: ''இது பெரிய வஞ்சனையேதான்.''

பானுமதியம்மாவை வியப்புக்குள்ளாக்கியது இன்னொரு விஷயம். ''தங்கம்மாவைத் தள்ளிவிட்டு இந்தத் தவளையை ஏற்றுக்கொண்டாங்களே, அதுதான் எனக்கு ஆச்சரியமாயிருக்கு.''

எல்லாரையும் சிரிக்க வைக்கிற ஒரு கருத்து அங்கே வெளியிடப்பட்டது. ''அவர் ஓர் ஆண் தவளை போலிருக்கு. இனம் இனத்தோடு தானே சேரும்?''

''விசாலாட்சியம்மா சொல்லி வந்த கதை என்னாச்சு?'' என்று ஒரு கேள்வி பிறந்தது.

விசாலாட்சி கதை சொல்லத் தொடங்கினாள்: ''ஜானகியம்மாதான், நாங்க போன காரியத்தைப்பற்றி அவகிட்டே விரிவா எடுத்துரைச்சாங்க. 'அநாதை விடுதின்னு என்ன? தன்னியானந்த சுவாமிகள்னு யாரு?' என்கிறதெல்லாம் நல்லாத்தான் சொன்னுங்க. அவ முகத்திலே ஏதாவது ஓர் உணர்ச்சி தென்படணுமே. ஒரு வார்த்தையாவது அவகிட்டேருந்து வெளிவரணுமே! சும்மா மரக்கட்டைபோல் நின்னுக்கிட்டிருந்தாள். ஏதாவது நன்கொடை தரணும்னு ஜானகியம்மாதான் கேட்டாள்.''

''இப்படியெல்லாம் பேசிக்கிட்டிருந்தப்போ எல்லாம் நீங்க நின்னுக்கிட்டுத்தான் இருந்தீங்களா?'' கூட்டத்திலிருந்து யாரோ ஒருத்தி கேட்டாள்.

''ஆமாம். . . ஆ. . . அப்பவுங்கூட அவ ஒண்ணும் சொல்லலே. எங்களுக்கு மற்ற இடங்களுக்குப் போகவேணுமா? நிக்க நேரமில்லேன்னு ஜானகியம்மா சொன்னபோதுதான் அது வாய் திறந்தது. 'விஜயாவோட அப்பா வரட்டும்'னு ஒரே ஒரு குரல் மட்டுந்தான். நாங்க சிறிது நேரங்கூட அங்கே நின்னோம். அவ அசையவில்லே, பேசவில்லே. கடைசியிலே நாங்க போயி வர்றோம்னு சொல்லி வந்துட்டோம்.''

நகைச்சுவை உணர்ச்சியுள்ள ஒரு பெண் கூறினாள்: ''அப்படின்னு அது திருமதி சீஃப் செக்ரடரியா இருக்காது. சமையல் வேலைக்காரியாத்தான் இருப்பாள். துணிச்சலுள்ள சமையல் வேலைக்காரி!''

பானுமதியம்மாவுக்கு இன்னொரு புகார்கூட இருந்தது. மிகுந்த தாகத்துடன் அந்த வீட்டுக்குச் சென்றாள். ஒரு துளித் தண்ணீர் கூடக் கிடைக்கவில்லை.

கன்சர்வேட்டர் மனைவி சொன்னாள்: ''ஆ. . . அது கிடக்கட்டும். நாம் நம்ம வேலையைக் கவனிப்போம்.''

அப்போது, வெளியே சென்றிருந்த தங்கம்மா அங்கே வந்து சேர்ந்தாள். அவள்தான் வசூல் பணத்தையெல்லாம் வாங்கி வைப்பவள். ஒவ்வொரு குழுவினரும் தங்கள் தங்கள் வசூல் பணத்தை ஒப்படைத்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பார்க் வியூவில் நடைபெற்ற நிகழ்ச்சி என்ன வென்பதை அறியவேண்டாமா? அந்த மூன்று பெண்கள் வந்துபோன விஷயத்தைப்பற்றிக் கணவரிடம் சொல்லக் காத்திருந்தாள் கார்த்தியாயினி. கேசவபிள்ளை வந்தார். வந்ததும் அந்தச் செய்தியைப்பற்றிப் பேசத் தொடங்கினாள்: ''இன்னைக்கு இங்கே ஒரு நிகழ்ச்சி நடந்தது.''

கேசவபிள்ளை சொன்னார்: ''ஓ! உன்னோட நிகழ்ச்சி! அதெல்லாம் நான் டிரஸ் மாற்றிக் காபி சாப்பிட்டப்புறம் சொல்லு.''

''உண்மையிலே ஒரு நல்ல நிகழ்ச்சிங்க.''

கார்த்தியாயினியின் மனத்திலே சிறிது ஊசலாட்டமுண்டு. வசூலுக்கு வந்தவர்களிடம் நல்ல முறையில் நடந்துகொண்டோமா என்ற சந்தேகம் அவளுக்கு உண்டு. ஏதோ தவறு நடந்திருப்பதாக அவளது உள் மனம் கூறியது. நடந்துகொள்ள வேண்டிய முறை வேறு. கணவர் தன்னைக் குற்றம் சொல்லலாம். ஆனால், எப்படி நடந்துகொண்டிருக்க வேண்டுமென்று அவளுக்குத் தெரியாது.

கேசவபிள்ளைக்குக் காபி பகிர்ந்து கொடுத்துக்கொண்டிருந்தபோது, அவர்தாம் முதலில் சொன்னார்: ''சொல்லுங்க மனைவியாரே, இங்கு நடைபெற்ற நிகழ்ச்சியை!''

கார்த்தியாயினி சொன்னாள்: ''இல்லீங்க. உண்மைதாங்க. நான் சும்மா சொன்னதல்ல.''

அவள் பேசுகிற பாணியிலேயே அவர் பேசினார்: ''உண்மையான நிகழ்ச்சீன்னு சொல்லுங்க!''

அன்று கேசவபிள்ளைக்கு மனநிம்மதி இருந்தது. கார்த்தியாயினி சிறு குழந்தைபோல் கொஞ்சும் குரலில் கேட்டாள்: ''தவறு நேர்ந்திருந்தாக் கோவிச்சுடுவீங்களா?''

அந்த நாட்டுப்புறப் பெண்பிள்ளைக்குக்கூடக் கணவரைக் கவரும் வித்தை தெரியும். அதைப் பயன்படுத்தவும் தெரியும். அதை யாரும் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை. தற்காப்பு என்பது பிறவிக்குணம் அல்லவா?

''சொல்லிக் கேட்ட பின்புதானே, தவறு இல்லையான்னு சொல்ல முடியும்? அப்புறந்தானே, கோவிச்சுக்கணுமா வேணுமான்னு முடிவு செய்ய வேண்டும்?''

அவள் கன்னம் சிவந்தது. ''அப்படியானு நான் சொல்லப் போற தில்லே.''

''சொல்லு! நான் கோவிச்சுக்க மாட்டேன்; போதுமா?''

அவளுக்கு அப்போதுகூட நம்பிக்கை பிறக்கவில்லே. சந்தேகத்துடன் ஆரம்பித்தாள்: ''இன்னைக்கு இங்கே மூணு பொம்புளேங்க வந்திருந் தாங்க.''

கேசவபிள்ளே அதே குரலில் கேட்டார்: ''அப்புறம்?''

''கேலி பண்ணுதீங்க! நான் சொல்லி முடிக்கட்டும். ரெண்டு சிங்கா. களும், அப்புறம் ஒரு அம்மாவும்.''

''அந்த ஒரு அம்மா சிங்காரி இல்லேயா?''

''அவ்வளவா இல்லே. அவங்க ரெண்டு பேரோட முடி கொஞ்சம் கொஞ்சம் நரைச்சிருந்தது. தலேயில் நாலும் மூணும் ஏழு ரோமந்தான். இருந்தாக்கூட ஒரு பெரிய சுமைபோல் சவுரியை வச்சுக் கட்டியிருந்தாங்க. புருவம் எழுதியிருந்தாங்க. வாலேப் போட்டுக் கண் எழுதியிருந்தாங்க. மூஞ்சியிலெல்லாம் தூளே அள்ளிப் போட்டிருந்தாங்க. பெரிய சிந்தூரப் பொட்டு. மெல்லிய பட்டாடை உடுத்தியிருந்தாங்க, வெட்கமில்லாமல். அதைவிடத் துணி உடுத்தியிராமே வந்திருந்தாக்கூட நல்லா இருந் திருக்கும். அவ்வளவு மெல்லிசுங்க. ரவிக்கை அணிந்திருந்தாங்க. அந்தத் துணியும் ரொம்ப ரொம்ப மெல்லிசு. கை இல்லே. கக்கமெல்லாம் நல்லாத் தெரியுது. நான் அதிர்ந்து போயிட்டேன். உள்ளே உள்ளதெல்லாம் வெளியே நல்லாத் தெரிஞ்சுதுங்க. மார்பகங்கள் குத்திட்டு நிக்கறுப்பலே என்னத்தையோ உள்ளே வச்சுக் கட்டியிருந்தாங்க. அவங்க உடம்பிலே இரத்தம் கொஞ்சங்கூட இல்லே. உடம்பெல்லாம் வெளிறி வெள்ளே யாத் தெரிஞ்சுதுங்க. உதட்டிலே சிவப்புச் சாயம் பூசியிருந்தாப்பலே இருந்தது. கணுக்கால் மேலே தூக்கி நிறுத்தற மாதிரியுள்ள செருப்பு... ஆனு இன்னொருத்தி இருந்தாளே, அவ அப்படி அல்ல. கதர்த் துணிதான் உடுத்தியிருந்தாங்க.''

கேசவபிள்ளே அந்த வருணனேயைக் குதூகலத்துடன் கேட்டுக்கொண் டிருந்தார். ''அவங்க எதுக்காக வந்திருந்தாங்க?''

''என்னமோ ஆசிரமத்துக்குப் பணம் வேணுமாம்.''

''அப்புறம்?''

''விஜயாவோட அப்பா வந்தப்புறம் வந்து வாங்கிக்கிட்டுப் போகச் சொன்னேன்.''

''பேஷ்!''

''ஊம்? அதென்ன?''

''வந்தவங்க யார் யாரெல்லாம்?''

''ரெண்டு பேரு உத்தியோகஸ்தருங்களோட மனேவீங்களாம். அவங்க தான் சிங்காரிச்சுக்கிட்டு வந்திருந்தவங்க. அப்புறம் ஒரு அம்மா, இந்த நகரத்திலுள்ள ஒரு பிரமுகரோட மனேவியாம்.''

''உத்தியோகஸ்தர்களுடையவா? எந்த உத்தியோகஸ்தர்கள்?''

''செக்ரடரீங்களோட மனேவீங்களாம். அவங்களைப் பார்த்தபோதே எனக்கு ஆத்திரம் வந்ததுங்க.''

கேசவபிள்ளை சிறிது நேரம் வரையில் மௌனமாயிருந்தார். ஏதோ தவறு நேர்ந்திருக்கிறதென்று கார்த்தியாயினிக்குத் தோன்றியது. அவள் கேட்டாள்: ''ஏன், பேசாமல் இருக்கிறீங்க?''

அவர் சொன்னார்: ''என்னைப் போன்ற உத்தியோகஸ்தர்களோட மனேவிமார்கள்தான் அவர்கள். நீ ஏதாவது அவர்களிடம் மோசமாகப் பேசினியா?''

அவள் ஆணையிட்டுக் கூறினாள்: ''என் விஜயாமீது ஆணையாகச் சொல்லறேன். நான் அவங்கிட்டே ஒண்ணும் பேசல்லே. என்ன இப்படிக் கேக்கறீங்க? யாராவது ரெண்டு பொம்புளேங்க வீட்டிலே வந்தா அவங்களைத் திட்டியனுப்ப எனக்குப் பைத்தியமாப் புடிச்சுப் போச்சு? இது நல்ல கூத்து! விஜயாவோட அப்பா வரட்டும்னு ஒரே வார்த்தைதான் பேசினேனே அல்லாமே, ஒண்ணுமே பேசல்லே. சும்மா நின்னுக்கிட்டு அவங்க பேசறதைத்தான் கேட்டுக்கிட்டிருந்தேன்.''

''நீ அவங்களை உட்காரச் சொல்லலியா? காபி கொண்டு வந்து கொடுக்கலியா?''

''இல்லே. அவங்க அங்கே நின்னுங்க. நானும் நின்னுக்கிட்டிருந்தேன். அவங்க பேசினுங்க. நான் கடைசியிலே அதை மட்டும் சொன்னேன். அவங்க போனுங்க.''

கேசவபிள்ளைக்குச் சிரிப்புத்தான் வந்தது. கோபம் வரவில்லை.

கார்த்தியாயினி கேட்டாள்: ''ஊம்? ஏன் சிரிக்கிறீங்க?''

''சும்மா சிரிச்சேன். அவ்வளவுதான். வீட்டிலே யாராவது வந்தா நல்லா நடந்துக்க வேணுமா?''

''நான் மோசமா ஒண்ணும் நடந்துக்கல்லீங்களே! அப்புறம் பணம் கொடுக்கல்லே. அதுக்கு அதிகாரம் இருக்கிறவங்க வந்து கொடுக்கட்டும்னு விட்டுட்டேன்.''

''இங்கே பணம் இருக்கிறது. சாவி உன்னிடந்தான் இருக்கிறது. ஐந்து ரூபாயோ, பத்து ரூபாயோ, ஏன் நூறு ரூபாய் ஆனாலுங்கூட நீ எடுத்துக் கொடுத்துவிட்டால் நான் கோபப்படுவேனா?''

கார்த்தியாயினிக்குத் தனக்கே உரித்தான பதில் இருந்தது.

''நான் இது வரையிலும் பணமெடுத்துச் செலவு செஞ்சதில்லே. ஊரிலே பணம் காசெல்லாம் அப்பா கிட்டேதான் இருந்தது. அம்மாகூட அதிலேருந்து ஒரு துட்டைக்கூடத் தொடவே மாட்டங்க. அதுதான் எனக்குத் தெரியும். பொம்புளேங்கதானே, பணத்தையும் தானியத்தையும் எடுத்துச் செலவு செய்யவேண்டியவங்க? எனக்கு அதெல்லாம் தெரியாதுங்க. இதுவரைக்கும் நானுக எதுவும் செலவு செஞ்சதில்லீங்க. இனிமே செய்யவும் போறதில்லே. அதெல்லாம் ஆம்புளேங்களோட வேலே.''

கார்த்தியாயினி, தன்னுடைய கிராமத்து அநுபவத்திலிருந்து கற்றுக் கொண்ட விஞ்ஞானத்தையும் நம்பிக்கையையும் தெரிவித்தாள். அவள் அப்படித்தான் கண்டிருக்கிறாள்; கேள்விப்பட்டிருக்கிறாள். அதன்படி வாழ்ந்திருக்கிறாள். கேசவபிள்ளையால் அப்புறம் என்ன சொல்ல முடியும்? அவர் கேட்டார்:

''அவர்களை உட்காரச் சொல்லவில்லையா?''

''இல்லே. அவங்க நின்னே பேசிட்டுப் போனுங்க.''

கேசவபிள்ளை ஒரு பிரச்னையைக் கிளப்பினார். ''நீ இந்த மாதிரி ஓர் இடத்துக்குப் போறேன்னு வச்சுக்கோ! அவர்கள் உன்னிடம் உட்காரச் சொல்லாமல் இருந்தால் உனக்குக் கோபம் வராதா?''

''எதுக்கு? எனக்குக் கோபம் வாராது. நான் ஊரிலிருந்தபோது அக்கம்பக்கத்து வீடுங்களுக்கெல்லாம் போறதுண்டு. யாரும் என்கிட்டே உட்காரவோ படுக்கவோ சொன்னதில்லே. நம்ம வீட்டுக்கும் வருவாங்க. அம்மா யார் கிட்டேயும் உட்காரச் சொன்னதை நான் கேட்டதில்லே.''

கார்த்தியாயினியின் மனத்திலே, தன்னுடைய சிநேகிதிகளான நாணிக்குட்டியும், குஞ்ஞிக்குட்டியும்தான் இருந்திருப்பார்கள். அவர்கள் பெயர்களை அவள் உச்சரிக்கவில்லை என்பது மட்டுந்தான்.

சிறிது நேரத்துக்குப் பின் அவள் தன் கருத்தை வெளியிட்டாள்: ''இன்னெரு காரியம். பொம்புளேங்க நாற்காலியிலேகால்மீதுகாலேவச்சு உட்கார்ந்திருப்பது அந்த வீட்டுக்கே நாசம்தானுங்க. நல்ல குடும்பத்திலே பிறந்து வளர்ந்த பொம்புளேங்க அப்படி உட்காரமாட்டாங்க. அப்புறம் . . . இந்தப் பொம்புளேங்க அப்படித்தான் இருப்பாங்க போலிருக்கு. ரெண்டும் கெட்ட கூட்டம் போலிருக்கு.''

கேசவபிள்ளையால் சிரிக்கத்தான் முடிந்தது. அது அசட்டுத்தனமான சிரிப்பாக இருந்தது. ஒருவேளை அவர் தம்மிடமே ஒரு கேள்வியை எழுப்புகிறாரா?

'இந்த நிலைமைக்கு யார்தாம் பொறுப்பு?'

தம்மிடமே கோபம் கொள்வதுதான் சரியானதாக இருக்கும் அல்லவா?

அவளுடைய மனங்கூடச் சிறிது நிம்மதியற்றிருந்தது. தன்னுடைய விஞ்ஞானம், நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் அவள் வாதம் புரிந்தாள் என்றாலும், ஏதோ குற்றம் குறைகள் இருப்பதாகவே அவளுக்குத் தோன்றியது. கணவனுக்கு அவமானத்தைத் தேடிக் கொடுத்துவிட்டோமே என்ற சஞ்சலந்தான்.

''ஆமாம் . . . ஏதாவது தவறு நேர்ந்துட்டதுங்களா?'' அவள் கேட்டாள்.

''ஒன்றுமில்லை, ஒரு தவறுமில்லை. என்கூட வேலை செய்கிறவர்களுடைய மனைவிமார்கள்தானே? அவர்களுக்கு உன்னைப்பற்றிச் சிறிது கருத்து வேற்றுமை ஏற்பட்டிருக்கும்.''

''அவ்வளவுதானே? நான் நல்லால்லேன்னு அவங்க நினைச்சுக்கிட்டுப் போவட்டும். எனக்கு ஒரு பொடலங்காயுமில்லே. விஜயாவோட அப்பாவுக்கு ஒரு குற்றமும் இல்லையே?''

கேசவபிள்ளை சிரித்தார். அவ்வளவுதான். குற்றம் இருக்கிறதா, இல்லையா என்பதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

* * *

ஆசிரமம், அநாதை விடுதி ஆகியவற்றின் துவக்க விழாப் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் வந்த வண்ணமிருந்தன. அந்தச் செய்திகள் கேசவபிள்ளையின் கவனத்திற்கு வரத்தான் செய்தன. நகரத்தில் நடைபெறுகிற பெரியதொரு சம்பவமாக இருக்கும் அது. அதற்கு வேண்டிய நிதிவசூலுக்காகவே அந்த மூன்று பெண்களும் வந்தனரென்று கேசவபிள்ளை அறிந்துகொண்டார். அவமதிக்கப்பட்டோம் என்ற எண்ணத்துடன்தான் அந்தப் பெண்கள் வீட்டிலிருந்து சென்றிருக்கின்றனர் என்று அவர் அனுமானித்துக்கொண்டார்.

ஹிந்துக்களான எல்லா உத்தியோகஸ்தர்களும், நகரப் பிரமுகர்களும் இந்தப் பெருமுயற்சிக்குப் பின்னே அணிவகுத்து நின்றார்கள். சம்ஸ்தான காங்கிரஸின் பிரமுகர்கள் எல்லாரும் இந்த முயற்சிக்கு உறுதுணையாக இயங்கிவந்தனர். இதன் மத்தியிலே நுழைவது எப்படியென்ற சிந்தனைதான் கேசவபிள்ளையை அலைக்கழித்துக்கொண்டிருந்தது.

காங்கிரஸ் தலைவர்களில் எந்த ஒரு நபருடனும் தனிப்பட்ட முறையில் அவருக்குத் தொடர்பு இருக்கவில்லை. தொடர்பு கொள்வதற்கான சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.

காங்கிரஸ் வெற்றி பெற்றிருக்கிற சந்தர்ப்பம் இது. வெள்ளையர் வெளியேறுவதற்கான தேதி கூட நிர்ணயிக்கப்பட்டாகி விட்டது. திருவாங்கூர்ச் சம்ஸ்தானத்தில் மட்டுமே சுதந்தரத் திருவாங்கூர் என்ற கோஷம் பெயரளவில் முழங்கிக் கேட்கிறது. வெளியே சொல்லமுடியாவிட்டாலும் சிறிது காலத்திற்குள் அது காற்றிலே கரைந்துவிடும் என்பது திண்ணம். காங்கிரஸ்தான் ஆட்சிக் கட்டிலில் அமரப்போகிறது.

காங்கிரஸ், கேசவபிள்ளையைத்தான் தன் முதல் எதிரியாகக் காண்கிறது. அவரைத் தூக்கில் போடவேண்டுமென்பதுதான் அதன் கோஷம். அந்தக் கோஷத்தைப் பொருட்படுத்தாமல் விட்டுவிடக் கூடிய நிலைமை அல்ல இன்றுள்ளது. தூக்கில் போடாவிட்டாலும் மிகவும் ஆபத்தான ஒரு காலகட்டம்தான் அவரை எதிர்நோக்கி நின்றது. ஜோசியர்களும் அவ்வாறுதான் சொன்னார்கள். ஒரு சில காங்கிரஸ் தலைவர்களிடமாவது தனிப்பட்டமுறையில் நல்லுறவை ஏற்படுத்திக்கொள்ள முடிந்திருந்தால், தப்பிக்க முயன்று பார்த்திருக்கலாம். அதற்கு இசைவான ஒரு சந்தர்ப்பந்தான் இந்தத் துவக்க விழா.

ஆனால், இந்த முயற்சியில் எவ்வாறு நுழைந்துகொள்ளமுடியும்? தங்கம்மா வீட்டில்தான் அது நடைபெற இருந்தது. கேசவபிள்ளை கட்டிக்கொடுத்த கட்டடத்தில்! அதிலே பங்கெடுத்துக்கொள்வ தென்றால், அவளுடன் திரும்பவும் உறவு வைத்துக்கொள்வதென்று தானே பொருள்? இப்போது நன்றாக, இனிமையாக அமைந்திருக்கிற குடும்ப உறவு மீண்டும் கெட்டுப் போய் விடாதா? அவரை நேசிக்கிற ஒரே ஒரு உயிர்தான் இன்று உலகில் இருந்து வருகிறது. அதுதான் கார்த்தியாயினி! சுவலைகளின் முடிச்சுக்களை அவிழ்த்து விடுவதற்கான இடம் அந்தக் குடும்பம் ஒன்று மட்டுந்தான். அந்த குடும்பத் தலைவியின் அன்புக் கரங்களுக்குக் கீழே படுத்து ஆனந்த நித்திரை பெறலாம். இதயத்திலிருந்து ஒரு மந்தகாசம் பொங்கியெழுவது அவளிடம் செல்லும் போது மட்டுந்தான். விலை மதிப்பதற்கரிய ஒரு பொருள் சம்பாதிக்கப் பட்டது. அதைக் கைவிட்டு விடவேண்டுமா? உற்சாகமாக இருந்து வருகிற அவளை நிரந்தரமான கவலையின் ஆழக் குழிக்குள்ளே மீண்டும் தள்ளிவிட வேண்டுமா?

ஒரு நாள் மேற்சொன்ன விஷயங்களைப்பற்றியெல்லாம் கேசவபிள்ளை கார்த்தியாயினியிடம் எடுத்துரைத்தார். பேசிக்கொண் டிருந்தபோது நூறு தடவை அவர் ஆணையிட்டுக் கூறினார்: ''தங்கம்மாவுடன் மீண்டும் இணைந்து கொள்வதற்காக அல்ல நான் இப்படிச் சொல்வது. அந்த விருப்பம் எனக்கு இல்லை. அவளுடன் உள்ள எந்த நிகழ்ச்சியும் எனக்கு வேண்டாம். நமது நிலையைப் பாதுகாப்பதற்கான ஒரு தந்திரந்தான் இது.''

கார்த்தியாயினியின் முகம் வாட்டமடைந்தது. மரக்கட்டைபோல் படுத்துக் கிடந்தாள். ஒரு வார்த்தைகூட அவள் வாயிலிருந்து வெளிவர வில்லை. அவளால் பேசவும் முடியவில்லை. நாக்கு வரண்டு போயிற்று. வாய்க்குள்ளே நீர் இல்லை. சொல்லியிருக்கவேண்டாமென்று கேசவ பிள்ளைக்குத் தோன்றியது. அவளுடைய உற்சாகமும் ஆனந்தமும் இவ்வளவு துரிதமாக மறைந்து விடக்கூடியவை என்பதை அவர் அறிந் திருக்கவில்லை. அவருடைய குறிக்கோள் என்னவென்பதை அவளால் அறிந்துகொள்ள முடியாமல் இருக்கலாம். காங்கிரஸ் தலைவர்களுடன் தனிப்பட்ட முறையில் உறவை ஏற்படுத்திக்கொள்ள முடிந்தால், அதனால் ஏற்படக்கூடிய நன்மை என்ன வென்றும், எதற்காகவென்றும் அவளால் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கலாம். அல்லது தவறுகப் புரிந்திருக்கலாம்.

கார்த்தியாயினி வாடித் துவண்டு விட்டாள் என்பது மட்டுமின்றி அவளால் ஒரு வார்த்தைகூடப் பேசமுடியாமல் போய்விட்டது. அவ ளுடைய இதழ்கள் இறுக மூடிக் கிடந்தன. அவளிடம் அநுமதி கோரியதுகூட மிகப் பெரிய தவறுகி விட்டதென்று கேசவபிள்ளைக்குத் தோன்றியது.

இறுதியில் மிகுந்த பிரயாசையுடன் அவள் பேசினாள்: ''என்கிட்டே ஏன் கேட்கிறீங்க? உங்க இஷ்டம்போல் நடந்துகொள்ளுங்க! நான் இந்த வீட்டிலே ஒரு மூலையிலே அந்தக் கிழவியோடு சேர்ந்து படுத்துக் கிடந்துடறேன்.''

அறிவைப் பயன்படுத்தி நடந்துகொள்ள வேண்டுமென்று கேசவபிள்ளை அவளுக்கு உபதேசம் செய்தார். உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவரும் இத்தகைய நோக்கங்களோடுதான் அந்த நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். விலகி நிற்பதனால் கெடுதல் தானே தவிர நன்மை பிறக்காது. கேசவபிள்ளை மீண்டும் ஆணையிட்டுக் கூறினார்: ''எனக்கு அவளோடு எந்த விதமான உறவும் இல்லை. உறவை வைத்துக் கொள்ளவும் விரும்பவில்லை.''

கார்த்தியாயினி மேற்சொன்ன வாசகங்களைத்தான் திரும்பவும் சொன்னாள்.

கேசவபிள்ளை அந்த முயற்சியிலும் நிகழ்ச்சியிலும் பங்கெடுத்துக் கொள்வதில்லை என்று தீர்மானித்துவிட்டார். எதிர்காலம் எப்படி யிருக்குமோ, அப்படியே இருக்கட்டும். காங்கிரஸ் ஆட்சி பீடத்தில் ஏறும்போது, யாருமே துணையில்லாத நிலைமையில் தண்டிக்கப்படுவதாக இருந்தால் அதுவும் நடைபெறட்டுமே. கார்த்தியாயினியின் மன நிம்மதிக்குத்தான் அவர் முதலிடம் கொடுத்தார். இப்போதுகூட, தாம் அநுபவிக்கிற, அவளுடைய உபசரிப்புக்களுக்கும், அவளிட மிருந்து கிடைத்து வருகிற ஆறுதலுக்கும் மேலாக எதுவுமில்லை என்று அவருக்குத் தோன்றியது.

இனிமேல் கேசவபிள்ளை கார்த்தியாயினிக்கே உரியவர்; அவளுக்கு மட்டுமே சொந்தமானவர்.

அத்தியாயம் 27

அதிகாரத்தின் இறுதி மூச்சு!

சிறிது காலமாகக் கேசவபிள்ளையின் மூளை சரியாக இயங்கவில்லை. அது களைப்படைந்திருக்கிறது. எந்த இடத்திலும், எந்த விஷயத்திலும் முன் முயற்சி எடுத்துச் செயல்படுகிற திறமை குறைந்து வருவது போல் தோன்றியது. எந்நேரத்திலும் சிந்தனையில் மூழ்கியவாறு காணப்படு கிறார். சுறுசுறுப்பின்மை தெளிவாகவே புலப்பட்டது. தோல்வி யடைந்தவர்போல் காட்சியளிக்கிறார். எதிர்காலத்தைத் தயக்கத்துடன் பார்த்துப் பயப்படுகிறவராகத் தோற்றம் அளிக்கிறார்.

கணவரிடம் ஏற்பட்டிருக்கிற இந்த மாறுதல் மனைவியின் கவனத் திற்கு வராமல் இல்லை. அவள் கேட்பாள்: ''ஏன் இப்படி இருக்கிறீங்க?''

தெளிவான பதில் கார்த்தியாயினிக்குக் கிடைக்கவில்லை. விஷயம் என்ன வென்று தெரியாவிட்டாலும் அவள் அவருக்கு ஆறுதல் கூறுவதுண்டு: ''இவ்வளவு தூரம் கவலைப்படறதுக்கு என்ன இருக்கு? நான் பார்த்த வரைக்கும் ஒண்ணுமே இல்லையே.''

அவள் தொடர்ந்து கேட்பாள்: ''உத்தியோக விஷயமாவா? அப்படி யானுப் போவட்டுமே. கடவுள் கிருபையினாலே அது போயிட்டாக்கூட நமக்கு எந்தக் குறையும் ஏற்படப் போவதில்லை.''

ஆனால், அத்தகைய ஒரு நிலைமையோடு ஒன்றிணைந்து வாழ அவரால் முடியுமா? அவருடைய இயல்பு அப்படிப்பட்டது அல்ல.

தம்முடைய உத்தியோக வாழ்க்கை நெருக்கடியான கட்டத்தை நோக்கிச் செல்வதாக அவருக்கு ஓர் எண்ணம் ஏற்படத் தொடங்கியிருக்கிறது. எதிர்காலத்தைப்பற்றிய ஆவல் நிறைந்த சிந்தனை அவரை உலுக்கிக் கொண்டிருக்கிறது. நீண்டு நீண்டு நேராகத் தெளிவான முறையில் காட்சி தந்த அந்தப் பாதை வளைந்து சென்று இருளிலே முற்றுப் பெறுகிற நிலையை நெருங்கிக் கொண்டிருக்கிறதா? என்னவோ நிர்ணயிக்க முடியவில்லை. நிச்சயமற்ற நிலைமைதான் நிலவு கிறது.

காங்கிரஸ் அதிகார பீடத்திற்கு வரத்தான் செய்யும். இன்றைய அரசியல் அமைப்புத் தகர்ந்துவிடும். அது ஓர் உலுக்கு உலுக்கி விடும். பலம் வாய்ந்த அந்த உலுக்கிலே அமர்ந்திருக்கிற இடத்திலிருந்து பெயர்ந்து தொலைவிலே சென்று விழுவதற்கான சாத்தியக்கூறுதான் இருந்து வருகிறது. தம்மைப் பொறுத்தவரையில் எந்தப் பிடிமானமும் இல்லை. பிடித்து நிற்கவே முடியாது. மற்றவர்கள் எல்லாரும் தங்கள்

தங்கள் இடங்களை உறுதிப்படுத்துகிற பணியிலேதான் ஈடுபட்டிருக்கிறார்கள். தாம் மட்டும் எதையுமே செய்வதில்லை என்று கேசவபிள்ளைக்குத் தோன்றியது. யாராவது ஒரு காங்கிரஸ் பிரமுகரைப் பார்த்துச் சிரிப்பதுகூட இல்லை. எந்தக் காங்கிரஸ் தலைவருடனும் அறிமுகம் இல்லை. அவர்களை நேரடியாகச் சந்திப்பதற்கான வாய்ப்புக்கள் கூடக் கிடைப்பதில்லை. நிகழ இருக்கிற அரசியல் புனரமைப்பிலே தமக்காக ஒரு வார்த்தையாவது பேச யார் இருக்கிறார்கள்? யாருமில்லை.

கேசவபிள்ளை தம் சென்ற கால வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்தார். வேலை தேடித் திருவனந்தபுரத்திற்கு வந்து, நந்தன்கோட்டிலுள்ள 'ஓம் சிவமயம் லட்சுமி ஓட்டலி'ல் தங்கியிருந்து, சீஃப் செக்ரடரி மேனனின் பார்வையில் பட்ட நாள் முதல் இன்றுவரையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அத்தனையும் அவர் மனக் கண் முன்னே தோன்றின. அது ஒரு நல்ல காலத்தின் கதை, சந்தேகம் இல்லை. முன்பின் யோசியாமல் இதயபூர்வமாக உழைத்த உழைப்பின் கதை அது. இந்தக் கதையில் யாருக்காவது ஏதாவதொரு உதவியளித்த நிகழ்ச்சி வருவதுண்டா? அவர் நினைவுகூர்ந்து பார்த்தார். இல்லை! அப்புறம் எதற்காக, யாருக்காக உழைத்தார்? திவான்ஜிக்காக; திவான்ஜிக்கு மட்டுமாக!

யாராவது ஒரு மனிதனுடைய அன்பைப் பெற இதுவரை முடிந்ததில்லை. காங்கிரஸ்காரன் ஒரு பக்கம் இருக்கட்டும்; காங்கிரஸ் காரனல்லாத ஒருவனுவது தம்மிடம் அநுதாபம் காட்டுவதற்கு உண்டா? ஓர் உயிர்ப்பிராணியாவது அவருடைய நினைவுக்கு வருவதில்லை. ஏதாவது ஒரு விபத்து நேர்ந்துவிட்டால், ''ஐயோ பாவம்!'' என்று சும்மாவாவது, உயிரினங்கள்மீது பொதுவாக இருந்து வருகிற வெறும் அன்பினுலாவது செல்வதற்கு யாராவது இருக்கிறார்களா? அத்தகைய ஒரு மனிதனைப்பற்றி நினைத்துப் பார்க்க வெகு நாட்களாகக் கேசவபிள்ளை முயன்று வருகிறார். யாரும் தென்படவில்லை. என்ன கஷ்டம் இது! 'அவனுக்கு அப்படித்தான் வரணும்' என்றுதான் எல்லாரும் சொல்வார்கள்.

செய்யத் தகாதவை பல செய்யப்பட்டன என்ற எண்ணந்தான் கேசவ பிள்ளைக்கு ஏற்பட்டிருக்கிறது. அரசியல் இலாக்காக் காரியதரிசியாகச் செயலாற்றியிருந்த காலத்தைப்பற்றி அவர் நினைத்துப் பார்த்தார். அது ஒரு நீண்ட காலகட்டந்தான். எதிர்காலத்தைப்பற்றிய யோசனை என்பதே அந்தக் காலத்தில் இருந்ததில்லை: பின்கூட அது ஏற்பட்டதில்லை. காங்கிரஸிடம் இவ்வளவு பகைமை உணர்ச்சி ஏற்படுத்திக் கொண்டது சரிதானு? இனிமேல் அதைப்பற்றியெல்லாம் சிந்தித்துப் பயன் என்ன? இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற தனிமை அவரை நிலைகுலையச் செய்துவிட்டது.

அரசாங்கத் தலைமைச் செயலகத்திலுள்ளவர்கள் மட்டுமின்றிச் சம்ஸ்தானம் முழுவதிலுமுள்ள அதிகாரிகளும் சிப்பந்திகளும் புதிய நிலைமைக் கேற்றவாறு தங்களைத் தயார்ப்படுத்திக்கொண்டு வருகிறார்கள் என்று

கேசவபிள்ளைக்குத் தோன்றியது. தமக்கு அறிமுகமான அதிகாரிகளை எல்லாம் தனித்தனியாக அவர் நினைத்துப் பார்த்தார். அவர்களுக் கெல்லாம் காங்கிரஸுக்குள்ளே நண்பர்கள் இருந்து வருகிறார்கள்; உறவினர்கள் இருக்கிறார்கள்; வேண்டியவர்கள் இருக்கிறார்கள்! புதிது புதிதான உறவுகளை ஏற்படுத்திக்கொள்கின்றனர். தன்னியானந்தா சிரம அமைப்பு வேலைகளில் அரசாங்க அலுவலர்கள், காங்கிரஸ்காரர் களுடன் ஒத்துழைக்கக்கூடாதென்று அரசாங்கம் விடுத்த சுற்றறிக்கை யைக்கூட அவர்கள் புறக்கணித்துவிட்டு நடந்துகொண்டனர். கேசவ பிள்ளை அவற்றை எல்லாம் பார்க்கத்தான் செய்தார். சீஃப் செக்ரடரியைத் தவிர ஏனைய அரசாங்க அதிகாரிகள் எல்லாரும் புதிய அமைப்புக்கேற்ற முறையில் தங்களைத் தயாராக்கிக்கொண்டு வருகின்றனர். அவ்வளவுதான்.

நகரத்திலுள்ள உத்தியோகஸ்தர்களின் வீடுகளிலெல்லாம் சுவாமிஜி யின் பூஜைகளும், பிட்சைகளும் தினசரி நடைபெற்று வரு கின்றன. பதற்றம் அடைந்திருந்த அரசியல் சூழ்நிலையை மறந்து விட்டார்கள்போல் தோன்றியது. பெரிய படாடோபமான சடங்கு தான் இது. இந்தச் சடங்குகளில் அனைவரும் பங்கெடுத்து வருகின்றனர். சுவாமிஜி, கேட்ட வரங்களைக் கொடுப்பவர், முக்காலங்களையும் முன் கூட்டியே அறிகிறவர் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. நகரம் முழு வதும் அவருடைய ஆத்மிக ஒளியிலே மயங்கிக் கிடக்கிறது.

சுவாமிஜியின் அருள் அனைவருக்கும் வேண்டும். காங்கிரஸ் தலைவர் ஒருவர்கூட அதற்காகப் பிட்சை நடத்தினார். சிலரைச் சுவாமிஜி இதய பூர்வமாக ஆசீர்வதித்தார். அவர்களில் ஒருவர்தான் அரசாங்கக் காரியதரிசிகளில் ஒருவரான கோவிந்தபிள்ளை.

நினைத்த காரியம் கைகூடுவதற்காக, ஸ்வாமிஜியின் முன்னிலையில் வழிபாடுகளை நடத்துவோமென்று சில உத்தியோகஸ்தர்கள் மனத்தில் வேண்டியிருந்தனர்.

இவை அனைத்தும் கேசவபிள்ளைக்குத் தெரியாமல் இல்லை. சென்ற காலச் செயல்களிலிருந்து உருவான களங்கங்களைத் துடைத்தெறியத் தகுந்த சந்தர்ப்பம் இது. ஸ்வாமிஜியை அழைத்து வந்து பெரிய அளவில் ஒரு பூஜையும் பிட்சையும் நடத்தினால் என்ன என்று பல முறை அவர் யோசித்ததுண்டு. அவ்வாறு நடத்துவதனால் ஏற்படுகிற இலாப நஷ்டங் களையும் அவர் மதிப்பீடு செய்து பார்த்தார். ஆனால், அந்தப் பூஜையின் போதும் பிட்சையின்போதும் தங்கம்மாவும், தான் கடைசி முறையாகச் சேகரவிலாசத்திற்குச் சென்றிருந்தபோது அங்கே பார்த்த அந்த இளைஞனும் பங்கெடுத்துக்கொள்ள வருவார்களே.

தங்கம்மா இன்று தங்கம்மா அல்ல. காவியுடை தரித்து, மாதா ஜோதிர்மயீ தேவியாக மாறியிருக்கிறாள். அந்த இளைஞன் இன்று சிதானந்தன். தங்கம்மாவுக்கு ஒருவேளை மனமாறுதல் ஏற்பட்டிருக்க லாம். அவளுடைய சுபாவத்திலே மாறுதல் ஏற்பட்டிருக்கலாம்.

அத்தகைய ஒரு மாறுதலுக்கு அதிக நேரம் தேவையில்லை. பாகீரதியம்மா, தங்கம்மாவையும் அவ்விஷயத்தைப் பற்றிச் சொன்னதெல்லாம் உண்மைக்குப் புறம்பானதாக இருக்கலாம். அந்தக் கிழவி சொன்னதெல்லாம் உண்மையாக இருந்தால், அது விபசாரம், அதர்மம் ஆகியவற்றின் கதையாக இருந்தால், அந்த இயக்கத்தின்பால் இவ்வளவு ஜனங்களை ஈர்க்க முடிந்திருக்குமா?

ஆனால், இப்போது தங்கம்மாவை மாதாவாகப் பூஜிக்கவேண்டும். அது எங்ஙனம் சாத்தியமாகும்? தயக்கம் இருக்கவே செய்யும். உள்ளேயிருந்து ஓர் அறைகூவல் வெளிக் கிளம்புகிறது. அவளை அன்னையாக நினைத்து ஏன் பூஜிக்கக்கூடாது? அது வெறும் ஒரு நன்றி செலுத்துதல் மட்டுமல்லவா ஆகிவிடுகிறது? இன்று அடைந்திருக்கிற இந்த நிலைக்கு மூல காரணம் யார்? ஆனால் . . . இது ஒரு பெரிய ஆனால்தான். இன்று வரையில் அநுபவித்தறியாத ஓர் ஆனந்தமும் ஆறுதலும் அவருக்கு இன்று உண்டு. இன்று ஒருத்திக்குப் பயந்து நடக்கவேண்டியிருக்கிறது.

பூஜை, பிட்சை, ஆகிய சடங்குகளைப்பற்றிய சர்ச்சைகள் பள்ளிக்கூடங்களிலேகூட நடைபெற்று வந்தன. விஜயா படிக்கிற பள்ளியிலும் வகுப்பிலுமுள்ள பல மாணவர்களின் வீடுகளிலே அவை நடைபெற்றிருக்கின்றன. அவர்கள் எல்லாரும் பள்ளியில் வந்து அந்த விழாவைப்பற்றி வருணனை செய்வதுண்டு. விஜயாவின் வீட்டில் என்றைக்குப் பூஜை என்று கேட்டார்கள். அவளுக்குத் தெரியவில்லை.

ஒரு நாள் மகள், அப்பா அமர்ந்திருந்த நாற்காலிக்குப் பின்னால் நின்று முன்னே தலை நீட்டியவாறு தன்னுடைய அபிலாஷையைத் தெரிவித்தாள்:

''அப்பா, நம்ம வீட்டிலேகூட ஸ்வாமிஜியோட ஒரு பூஜையை நடத்தணும். அந்த ஸ்வாமிஜி ஒரு பெரிய மகான்.''

கேசவபிள்ளை முகத்தை உயர்த்தி, பின்னால் திரும்பிப் பார்த்தவாறு புன்னகையுடன் கேட்டார்: ''என் மகளுக்கு அதிலே விருப்பமுண்டா?''

விஜயா தலையாட்டினாள். கேசவபிள்ளை சொன்னார்: ''அம்மாவிடம் கேட்டு அநுமதியைப் பெற்று வா, நடத்தலாம்!''

விஜயா உள்ளே சென்றாள். அதிக நேரமாகவில்லை. தான் அமர்ந்திருக்குமிடம் குலுங்குவதுபோல் கேசவபிள்ளைக்குத் தோன்றியது. கார்த்தியாயினி, அவர் முன்னிலையில் பற்றியெரிந்தவாறு நிற்கிறாள். மனைவியை இந்தக் கோலத்தில் ஒருபோதும் அவர் பார்த்ததில்லை. உண்மையிலேயே கேசவபிள்ளை சுருங்கிவிட்டார். அவருக்கு ஒருவிதமான குற்ற உணர்ச்சி இருந்து வருகிறதல்லவா?

கேசவபிள்ளை அசடு வழியச் சிரித்தார்.

''காதலியை இங்கே அழைச்சுவர அம்மாவோட சம்மதத்தைப் பெற மகளை அனுப்பிவிட்டீங்களா?'' கார்த்தியாயினி கேட்டாள்.

கேசவபிள்ளை தந்திரத்தைக் கடைப்பிடித்தார். ''ஏன் இப்படி ஆத்திரப்படறே? இந்தமாதிரி காளிதேவியா குதித்து வந்து பூகம்பத்தை ஏற்படுத்திவிடறியே? உண்மையிலேயே நான் பயந்துட்டேன்.''

கார்த்தியாயினி அந்தத் தந்திரத்துக்கு மயங்கவில்லை. ''வேணும், வேணும்! இந்தப் பேச்செல்லாம் என்கிட்டே வேணும். என் உடம்பிலே உயிர் இருக்கிறவரைக்கும் அதெல்லாம் ஒண்ணும் நடக்காது. ஸ்வாமியும் சரி, மாதாவும் சரி, இங்கே மட்டும் காலெடுத்து வைக்கக் கூடாது. என்னைக் கொண்ணுப் போட்டப்புறம் பூப்போட்டுக் கும்பிடறதோ . . . என்ன வேணும்னாலும் செஞ்சிடுங்க!''

கேசவபிள்ளை கேட்டார்: ''நீ ஏம்மா இப்படிக் குதிக்கிறே?''

கார்த்தியாயினியால் இனிமேல் கொஞ்சங்கூட அமைதியாக நிற்க முடியாது. அவள் எந்த நிமிஷத்திலும் வெடித்துவிடலாம். தன்னை மறந்த நிலையில் அவள் கேட்டாள்.

''அவளை இங்கே அழைச்சுக்கிட்டு வரணும், அல்லவா? அப்புறம் நான் அவளோட காலைக் கழுவணும்; அப்படித்தானே? அந்தக் கிழவியம்மா சில இடங்களிலே பூஜைக்குப் போய் வந்து சொல்லியிருக்கிறுள். அந்தப் பெரிய மனுஷிங்கல்லாம் அவளோட காலைக் கழுவறுங்களாம். அப்புறம் அவளோட அந்த அவன் இருக்கானே, அவனோட காலையும் நான் கழுவிக் குடிக்கணுமாக்கும்; அப்படித்தானே?''

கார்த்தியாயினி மூச்சுத் திணறியவாறு ஒருகணம் நின்றுவிட்டாள்.

''என்னை ஊருக்குக் கொண்டு போய் விட்டுடுங்க?''

மறுகணம் அவள் கதறியழுதாள்.

''அங்கே எனக்கு யார் இருக்காங்க? இருந்தவங்க ரெண்டு பேரும் போயிட்டாங்க.''

அவள் தளர்ச்சியுற்றுப் பக்கத்தில் கிடந்த சோபாவுக்குள்ளே விழுந்துவிட்டாள். விசித்து விசித்து அழுதாள்.

கேசவபிள்ளை எழுந்து அந்த அறையிலே உலாவிக்கொண்டிருந்தார். கிளர்ச்சிகரமான ஓர் அரங்கம்தான் அங்கே ஏற்பட்டிருக்கிறது. கார்த்தியாயினிக்கு ஆறுதல் கூறலாமா? அல்லது அவளை அப்படியே விட்டுவிடுவதா? நிச்சயமற்ற ஒரு நிலைதான் கேசவபிள்ளையின் முகத்திலே தென்படுகிறது. அவர் காதுகளிலே கிட்டுமாமாவின் அந்தச் சொற்கள் முழங்குகின்றனவா?

''அவள் அதிருஷ்டக்காரிதாம்ப்பா!''

சிறிது நேரம் கழிந்தது. அவர் மனைவியிடம் சற்று அழுத்தமான குரலில் கேட்டார்: ''இதுக்கெல்லாம் இங்கே என்னதான் நடந்தது? எதுக்காக இப்படி அழறே?''

கார்த்தியாயினி பதில் சொல்லவில்லை. அவள் அழுதுகொண்டிருந்தாள். அழுகையை அடக்கிவிட அவளுக்குச் சக்தியில்லையோ என்னவோ?

அவர் அவள் அருகே சென்று அமர்ந்துகொண்டார். அவளைத் தேற்றுவதற்காகக் குப்புறக் கவிழ்ந்து படுத்திருந்த அவள் முகத்தைப் பிடித்து உயர்த்தினர். அது கண்ணீரில் குளித்திருந்தது. அவர் கேட்டார்: ''இப்படி அழுவதற்கு இங்கே என்ன நடந்தது?''

தன்னுடைய மனத்தில் தோன்றிய எண்ணத்தை மறைக்க அவளால் முடியவில்லை. அவள் அதைத் திறந்து கூறினாள்: ''அவளோடு கொண்டுள்ள காதல் இன்னும் அடங்கிடல்லே. அப்படித்தானே?''

என்ன பதில் அளிப்பது? ஆயினும் சொன்னார்: ''அந்தக் கதையெல்லாம் எந்தவிதமான ஒளிவு மறைவும் இல்லாமலேயே நான் உன்னிடம் சொல்லியிருக்கிறேன் அல்லவா? நீ நம்ப மாட்டேங்கிறியே? இதுதான் ரொம்பச் சங்கடம் அம்மா.''

''அப்புறம், ஏன் அவளைப் பூசிக்கணும்னு சொல்லறீங்க?''

''அது அவளோடு இருக்கிற காதலினால் என்று நீ நினைக்கிறே? நான் அதை விரும்பறேங்கிறியா? இது ரொம்பச் சங்கடமாயிருக்கிறதம்மா!''

கார்த்தியாயினியுடைய சந்தேகம், அவள் இதயத்திலே பதிந்து விட்ட ஒன்றாகும். அவள் சொன்னாள்: ''அப்புறம் என்ன? இந்தப் பூசை புனஸ்காரங்களெல்லாம் பொய்யானது. நடக்கிற காரியங்களெல்லாம் ரொம்பத் திருட்டுத்தனம். அந்தச் சாமியாரும், அவரோட சீடனும் இப்படியெல்லாம் வேஷம் போடாறது என்னத்துக்குன்னு நினைக்கிறீங்க? அந்த அம்மாகிட்டே கேட்டுப் பாருங்க! பாகீரதியம்மா பல இடங்களிலே நடந்த பூசைங்களுக்கெல்லாம் போய வந்திருக்காங்க. அவளை இங்கே அழைச்சுக் கொண்டாந்திடணும். அதுக்காகத்தானே இந்தப் பூசை கீசைன்னு சொல்லறீங்க?''

கேசவபிள்ளை கண்டிப்பான குரலில் கூறினார்: ''இல்லே! அவளுடன் எந்தவிதமான உறவும் எனக்கு இல்லே. அவளை நான் என்றோ மறந்துவிட்டேன். இதை நீ நம்பவேண்டும்!''

கார்த்தியாயினி கணவர் முகத்தை உற்று நோக்கினாள். அவள் அதை நம்பத் தயாராகத்தான் இருக்கிறாள். நம்புவதற்காக என்றுமே முயன்று கொண்டிருப்பவளுங்கூட. ஆனால் நம்பமுடியாத நிலைமையை உருவாக்குகிற, அறியப்படாத ஏதோ ஒன்று இருக்கிறது. அதைக் கண்டுபிடிக்க முயல்கிறவள் போல், கணவரின் முகத்தில் தன் பார்வையை ஆழமாகப் பதியவைத்திருக்கிறாள். கணவரின் இதயத்தின் உள்ளுக்குள்ளிருந்து அதைத் தோண்டியெடுத்து வெளிக் கொணர வேண்டும். ஒரு மனைவியால் மட்டுந்தான் அப்படிச் செய்யமுடியும்.

அண்மைக் காலமாகத் தம்மைச் சிந்தனையில் மூழ்கடித்துக்கொண்டிருக்கிற விஷயங்கள் அனைத்தையும் கேசவபிள்ளை கார்த்தியானியிடம் விளக்கமாக எடுத்துரைத்தார். திவான் ஆட்சி அஸ்தமித்துவிடும்; காங்கிரஸ் ஆட்சி உதயமாகும். திவானுக்குப் பிறகு காங்கிரஸாரின் முதல் எதிரி அவர்தாம். காங்கிரஸ்காரர்களில் ஒருவருடனுவது அவருக்கு நட்புறவு இல்லை... என்பன போன்ற அனைத்தையும் அவளிடம் விளக்கிக் கூறினார். உண்மைகளின் ஓர் உண்மைச் சித்திரத்தை அவர் தீட்டிக் காட்டினார். இறுதியில் அவர் சொன்னார்: ''எனக்கு ஏதாவதொரு கெடுதல் நேர்ந்துவிட்டால், 'ஐயோ! பாவம்!' என்று

சொல்வதற்குக்கூட இவ்வுலகில் யாரும் இல்லையென்று உனக்குத் தெரியுமா?''

அது அவ்வளவு பெரிய காரியமாக அவளுக்குத் தோன்றவில்லை. இவ்வளவுநேரம் வரையில் கேசவபிள்ளை உருக்கமாகப் பேசியதொன்றுமே அவள் காதில் விழவில்லைபோல் தோன்றியது. மரக்கட்டைபோல், உணர்ச்சியற்றவள்போல், கேசவபிள்ளையின் முகத்திலே பார்வையைச் செலுத்தியவாறு மல்லாக்காகப் படுத்துக் கிடந்தாள் கார்த்தியாயினி. அவர் கேட்டார்: ''நான் சொன்னது உனக்குப் புரியவில்லையா?''

அவர் சொல்ல இருப்பது முழுதும் தொடர்ந்து சொல்லட்டும் என்ற நோக்கத்தோடு அவள் ஒருமுறை முனகினாள். தன் மனத்தில் இருப்பதை மறைப்பதற்காக ஏதேதோ கதைகளைக் கணவர் கட்டியளக்கிறார் என்றே அந்தப் பெண் கருதுவதுபோல் தோன்றியது. தம் மனக் கவலைகளை அவர் எந்த மனிஷியிடம் திறந்து சொல்கிறாரோ, அவள் அவற்றை வேண்டாவெறுப்புடன்தான் காது கொடுத்துக் கேட்கிறாள் என்று கேசவபிள்ளைக்குத் தோன்றியது. அவர் சொல்லும் திறனை இழந்தார். தொடர்ந்து சொல்வதற்கு அவரிடம் ஒன்றும் இல்லாமற் போயிற்று. தம் கஷ்ட நஷ்டங்களைக் கொட்டியளந்திட ஓர் இடம் இருக்கிறதென்று அவர் நம்பியிருந்தார். அந்த இடத்திலே ஆறுதல் கிடைத்துவிடுமென்றும் நம்பியிருந்தார். அந்த இடமும் இப்போது இல்லாமற் போயிற்றென்று அவருக்குத் தோன்றியது. கேசவபிள்ளை பேசாமல் இருந்துவிட்டார்.

''அப்புறம்?'' கார்த்தியாயினியின் குரல்.

''அப்புறம் என்ன? நான் சொல்வதை நீ புரிந்துகொள்ள முயற்சி செய்வதில்லை. புரிந்துகொள்ள வேண்டுமென்ற அக்கறை இருந்தால் தானே? நான் சொல்வதை நீ நம்புவதும் இல்லை.''

அவள் அதற்குப் பதில் உரைக்கவில்லை. அவள் சொன்னது வேறு: ''அப்புறம்...ஆ...உங்ககிட்டே அன்பு செலுத்தறவங்க இந்த உலகத்திலே யாருமில்லே...அதுக்காக அன்பு செலுத்தறவங்களாப் பார்த்து இங்கே அழைச்சுக்கிட்டு வரலாம்னு யோசிக்கிறீங்க, அப்படித்தானே?''

அவர் மனம் அலுத்துக்கொண்டது: ''எப்படி வேண்டுமானாலும் சொல்லு! பேச எனக்கொன்றும் இல்லை.''

அவர் எழுந்து வெளியே கிளம்பினார். கார்த்தியாயினி அவரைப் பிடித்து நிறுத்திக் கேட்டாள்: ''உங்க மனசிலே என்ன கவலை? அதைச் சொல்லுங்க!''

அவர் மன வருத்தத்தோடு சொன்னார்: ''ஒன்றுமில்லை. எனக்கு ஒரு கவலையும் இல்லை.''

அவள் கணவரின் கரத்தை இறுகப் பிடித்துக்கொண்டாள். அவரை விடவில்லை.

''வேலை போயிடுங்கிறீங்களா? அப்படியானா அது போவட்டுமே. அதுக்காகவா கவலைப்படறீங்க? கடவுள் கிருபையினாலே வாழ்நாள்

முழுதும் உட்கார்ந்து சாப்பிட நமக்குச் சொத்து இருக்கு. ஒரே ஒரு குழந்தைமட்டுந்தான். நமக்கு இதுவே போதும்.''

சிறிது நேரத்துக்குப் பின் அவள் தொடர்ந்து கூறினாள்: ''ஏன் பேசாமலே இருக்கிறீங்க? இதெல்லாம் போதாதா என்ன? இனிமே எதுக்காக?''

விடையளிப்பதற்கில்லை. ஆனால் அந்தக் கேள்விக் கணைகள் ஆத்மாவையும் இதயத்தையும் துளைக்காமல் இருக்கவில்லை. அவள் இதய பூர்வமாகக் கேட்ட கேள்விகள்தான் அவை; களங்கமற்றவை. தொடர்ந்து கூறினாள்:

''அப்புறம், அந்தத் திருட்டுக் கூட்டங்களைக் கொண்டாந்து பூசை நடத்தணுங்கறது உங்க விருப்பம்னா, நடத்துங்க! நான் குறுக்கே நிற்கப் போவதில்லே.''

'தன்னுடைய தலையெழுத்து அப்படித்தான் என்றால் . . .' அந்த முறையில் கார்த்தியாயினி தொடர்ந்து கூறினாள்:

''நான் அவளோட காலைக் கழுவிக் குடிச்சுடறேன்; அவளோட காலையும்! ஆனா...ஆனா...மற்ற இடங்களிலே நடக்கறதுபோல, அந்தச் சாமியாருகிட்டேருந்து பிரசாதம் வாங்க நான் தனியாப் போவமாட்டேன். அவரு தனியறையிலே தனியா இருக்கிறப்போ நான் தனியாப் போவமாட்டேன். எனக்கு அவரோட பிரசாதமோ, ஆசீர்வாதமோ வேணுங்க.''

அவர் பொறுமை இழந்து கேட்டார்:

''நீ என்னம்மா சொல்லிக்கிட்டிருக்கே?''

''நான் மறைக்காமே சொல்லிக்கிட்டிருந்தேன். பூசை நடத்துணும்னா, நடத்துங்க! நான் குறுக்கே நிற்கப் போவதில்லே. விஜயாமீது ஆணையாச் சொல்லறேன்.''

அவர் ஆத்திரமடைந்தார்: ''போதும், நிறுத்து!''

அவள் விட்டுக் கொடுக்கவில்லை.

''சொன்னா ஆத்திரம் வரும்னு எனக்குத் தெரியும்.''

கேசவபிள்ளை எழுந்து அங்கிருந்து அலுவலக அறைக்குச் சென்றார்.

அந்தச் சதிபதிகளுடைய இல்லற வாழ்க்கையில் முதல் முதலாக ஏற்பட்ட மோதல் அது. இதுவரையில் சதிதான் கீழ்ப்படிந்து வந்தாள். இன்று அவள் எதிர்த்துத் தலைநிமிர்ந்து நிற்கிறாள், ஒரு மனிவியைப் போல்!

சிறிது நேரத்துக்குப் பின் அவள் அலுவலக அறைக்குள்ளே நுழைந்தாள். அப்போதுகூட அவள் சொன்னது இதுதான்: ''பூசை நடத்துங்க! நான் குறுக்கே நிற்கமாட்டேன்.''

''நீ என்னை நிம்மதியா விடமாட்டாய் போலிருக்கே?''

அதன் விடை: ''நான் என்னைக்குமே உங்களுக்கு நிம்மதியைத் தரல்லே! எனக்குத் தெரியுமே.''

இந்த முறையில் சண்டை சச்சரவுகளைக் கிளப்புவதற்கான ஆர்வம், கடந்த இரண்டு மூன்று நாட்களாக அவளிடம் காணப்பட்டு வந்தது.

அது ஒரு மனிவியின் இயல்புதானே? அந்தச் சுபாவம் இல்லாவிட்டால், அவளை ஒரு மனிவியென்று எவ்வாறு சொல்ல முடியும்?

அந்த நாட்களில், நம்பிக்கைக்குரிய சி.ஐ.டி. அதிகாரிகளிடமிருந்து மிக முக்கியமான சில தகவல்கள் கேசவபிள்ளைக்குக் கிடைத்து வந்தன. காங்கிரஸிலுள்ள ஒரு பகுதியினர், தலைமையின் அநுமதியன்றித் தெரியாமல் ஆயுதங்களைச் சேகரித்து வருகிறார்களாம். வேறு ஒரு பகுதியினர், சி.ஐ.டிக்களால்கூடப் புரிந்துகொள்ளமுடியாத ஏதோ சதியாலோசனைகளில் ஈடுபட்டிருக்கிறார்களாம். எவ்வளவோ முயன்று பார்த்தும் அறிய முடியவில்லையாம். தகவல்கள் நம்பத் தக்கவையாக இருந்தன.

கேசவபிள்ளையிடம் ஏற்பட்டுவிட்ட திடீர் மாறுதலைக் கார்த்தியாயினியால்கூடப் புரிந்துகொள்ள முடிந்தது. இன்று அவர் சிந்தனையில் மூழ்கிக் கிடக்கவில்லை. சுறுசுறுப்பு இல்லாதவராக இல்லை. அண்மையில், வேறு எந்த நாளிலும் அரசாங்க அலுவல்களில் அவர் இவ்வளவு அக்கறை செலுத்தி அவள் கண்டதில்லை. பிடரியை உதறிக்கொண்டு எழுந்த சிங்கம்போல் காட்சியளித்தார் அவர். செய்து முடிக்கவேண்டிய அவசர அலுவல்கள் பல!

* * *

நான்கைந்து நாட்களுக்குள் நாடெங்கிலுமுள்ள நூற்றுக்கணக்கான காங்கிரஸ் ஊழியர்கள் கைது செய்யப்பட்டார்கள். தலைவர்கள் பலர் விட்டு வைக்கப்பட்டனர். இந்தக் கைதுகளின் நோக்கம் என்னவென்று யாராலும் புரிந்துகொள்ளமுடியவில்லை. தன்னியானந்தாசிரமம் சம்பந்தமாக ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டிருந்த சுற்றறிக்கையை நினைவுபடுத்தி, மீண்டும் கடுமையான ஓர் அரசாங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பூஜை, பிட்சை ஆகிய சடங்குகளெல்லாம் திடீரென நின்றுவிட்டன. எந்த ஓர் அதிகாரிக்கும் அதைப் புறக்கணித்துச் செயல்படத் துணிச்சல் ஏற்படவில்லை.

அன்றொரு நாள் காரியாலயத்திலிருந்து வந்து ஓய்வெடுத்துக்கொண்டிருந்தபோது கேசவபிள்ளை கார்த்தியாயினியைக் கூப்பிட்டார்: ''இந்தா பார்! நான், நீ சொன்னதைக் கடைப்பிடித்து நடந்து வருகிறேன்.''

அவளுக்குப் புரியவில்லை. கடந்த சில நாட்களாக நடைபெற்று வருகிற நிகழ்ச்சிகளைப்பற்றி அவர், அவளிடம் விளக்கிக் கூறினார்: ''பயங்கரவாதிகளான நானூறு காங்கிரஸ்காரர்களைக் கைது செய்திருக்கிறோம். பலர் தலைமறைவாப் போயிருக்கிறாங்க. அவர்களைப் பிடிக்க முயற்சி செய்து வருகிறோம். தன்னியானந்தனின் பூஜையும், பிட்சையும் இரண்டு நாட்களாக நின்று போச்சு. அடுத்த நாட்களில் அதை மீண்டும் நடத்தவும் முடியாதென்று நினைக்கிறேன்.''

கார்த்தியாயினி கேட்டாள்: ''இதெல்லாம் செய்யணும்னு நான் சொன்னேனா?''

''இல்லே, நீ சொல்லவில்லே. ஆனால், ஒரு விஷயத்தைச் சொன்னயல்லவா? வேலையிலிருந்து நீக்கிவிடுவதாயிருந்தால் நீக்கிவிட்டும்; வாழ்நாள் முழுதும் சாப்பிட நமக்குச் சொத்து இருக்கிறது என்றெல்லாம்?''

அவள் தலையாட்டியவாறு ஒப்புக்கொண்டாள். அவள் சொன்னது தான் அது. கேசவபிள்ளை சொன்னார்: ''நீ சொன்னதுபோல் நிகழ்ந்து விடலாம். நான் அதற்கும் தயாராகிவிட்டேன்.''

எந்தவிதமான பதற்றமோ திகைப்போ இன்றி அவள் சொன்னாள்: ''அதுக்கு என்ன? வேலையிலேருந்து நீக்கிவிட்டுமே. நமக்கு எந்தக் கெடுதலும் வராது.''

அவள் தொடர்ந்து கேட்டாள்: ''அப்படியானா இவ்வளவு ஜனங்களோட படிக்க எதுக்காகச் சிறையிலே வச்சிருக்கீங்க?''

''அது என் கடமை.''

''நீக்கிடட்டும்னு விரும்பறீங்கன்னு, வேலையிலேருந்து நீங்கற நேரத்திலே எதுக்காக இப்படி நடந்துக்கிறீங்க?''

''காங்கிரஸ்காரர்களின் பலமை அதிகரித்திருக்கிறது. அவர்கள் ஆட்சிக் கட்டிலில் ஏறினால் என்னே வேலையிலிருந்து நீக்கி விடுவார்கள்.''

சூழ்ச்சி வழிகள் எதும் அறிந்திராத அந்தப் பேதைப் பெண் கேட்டாள்: ''பலமைன்னா என்ன, இவ்வளவு பேரைச் சிறையிலே போட்டிருங்க?''

விஷயத்தைச் சொல்லிப் புரியவைப்பது கடினமான வேலை என்று கேசவபிள்ளைக்குத் தோன்றியது. அவர் சொன்னார்: ''அப்படியே வைத்துக்கொள்!''

''ஐயோ! அப்படிச் செஞ்சிருக்கக் கூடாதுங்க. எதிரிங்களை உண்டு பண்ணிவிட்டுத்தான் வேலையிலேருந்து விலகிப் போகணுமா?''

எலியைக் கொல்ல வீட்டையே கூட்டெரித்ததாகச் சொல்வார்களே; அந்த முறையில் அல்ல கேசவபிள்ளை சொன்னது. உண்மையிலேயே வேலையிலிருந்து விலகிவிட்ட ஒரு சூழ்நிலைக்கு அவர் தம்மைத் தயார்ப் படுத்திக் கொண்டுவிட்டார். வாழ்க்கை எனும் நெடும்பாதையிலே இவ்விடம் வரையில் மட்டுந்தான் அவர் பார்வை சென்றிருந்தது. பாதேவன் பிள்ளை உள்பட, அவருடைய நல்ல எதிர்காலத்தை மட்டும் விரும்பியிருந்தவர்கள் எல்லாருமே இந்தத் தளம்வரையில் மட்டுமே கூட்டிக் கூட்டியிருந்தனர். இந்தத் தளத்திலே இன்னும் சிறிது நாட்கள்கூடத் தங்கியிருப்பது இன்பகரமாக இருக்கலாம். ஆனால், இவ்விடம் வரையில் வந்து விடுவதென்று எதிர்பார்த்து அல்லது வந்துவிட வேண்டுமென்ற குறிக்கோளை வைத்துக்கொண்டு வாழ்க்கைப் பயணம் துவக்கப்படவில்லை. ஏதோ வந்தடைந்தோம். அவ்வளவுதான். இன்னமும் இவ்விடத்திலேயே தங்கியிருக்கலாம் என்ற ஆசையை விட்டுவிடத் தீர்மானித்துக்கொண்டார்.

இந்தப் பதவியை நிலைநாட்ட, இந்த இடத்திலே தங்கியிருக்க, செய்ய வேண்டிய முயற்சிகளைக் கேசவபிள்ளை இந்த முறையிலேதான் கைவிட்டு விட்டார்.

காங்கிரஸை எதிர்த்துத்தான், அதை எதிர்த்ததன் மூலமாகத்தான் கேசவபிள்ளை பார்க் வியூவுக்குள்ளே நுழைந்து வந்தார். வாழ்ந்த நாள் முழுதும் அதன் எதிரியாகவே பணியாற்றி வந்திருக்கிறார். இவ்வியக்கம் சொன்னதொன்றுமே அவருக்கு விளங்கவில்லை. சரியா, தவறு என்று யோசனை செய்துகூடப் பார்க்கவில்லை. அதை அழித்திடவே முயன்றிருக்கிறார். இனிமேல் அதற்குப் பாத சேவை செய்வதா? பாத சேவை செய்வதென்றால் எத்தனை எத்தனை பாதங்களைக் கழுவிப் பானம் செய்ய வேண்டியிருக்கிறது? அது வேண்டாம். கார்த்தியாயினியம்மா சொன்னதைக் கேசவபிள்ளை நிபந்தனையின்றியே ஏற்றுக்கொண்டார்.

'வேலை போயிடுங்கிறீங்களா? அப்படியானா அது போவட்டுமே. அதுக்காகவா கவலைப்படறீங்க? கடவுள் கிருபையினாலே வாழ்நாள் பூராவும் உட்கார்ந்து சாப்பிட நமக்குச் சொத்து உண்டு. ஒரே ஒரு குழந்தை மட்டுந்தான். நமக்கு இதுவே போதும்.'

போதும், போதும், இதுவே போதும்!

அவர் எதிர்கால வாழ்க்கைபற்றி மனைவியிடம் கேட்டார்: ''இங்கிருந்து கிளம்பிச் சென்றால், எந்த இடத்தில் தங்கியிருக்கவேண்டுமென்று நீ விரும்புகிறாய்?''

அது யோசித்துச் செய்து முடிவெடுக்கவேண்டிய விஷயந்தான். மூவாற்றுப் புழையிலுள்ள தோட்டத்திலே தங்கியிருக்கலாமா? அல்லது நாஞ்சில் நாட்டுக்குப் போகலாமா? அல்லது சொந்த ஊரிலேயே வாழ்நாளைக் கழித்தால் போதுமா?

ஊருக்கேப் போய் விடலாமென்பதுதான் கார்த்தியாயினியின் விருப்பம். ஏனைய ஊர்களெல்லாம் அவளுக்கு அசலூர்களே.

அவள் கேட்டாள்: ''ஊருக்குப் போக விருப்பம் இல்லீங்களா?''

உண்மையிலேயே, ஊருக்குப் போகக் கேசவபிள்ளைக்கு விருப்பமில்லை. அதற்குக் காரணங்களும் இருக்கின்றன. அவர் சிரித்தவாறு கூறினார்: ''உனக்கு, உன்னுடைய நாணிக்குட்டியும் குஞ்ஞிக்குட்டியும் அங்கே இருக்கிறார்கள் அல்லவா? எனக்கு யார் இருக்கிறார்கள்?''

''ஆம்!'' கார்த்தியாயினி பெருமையுடன் ஒப்புக்கொண்டாள். ''அது பிறந்து வளர்ந்த ஊர் அல்லவா? அவ்வளவு நெருக்கமானவங்க மற்ற ஊர்களிலே இருப்பாங்களா?''

கேசவபிள்ளை சொன்னார்: ''உன்னைப் பொறுத்தவரையில் அதெல்லாம் சரி. என் விஷயமே வேறு அல்லவா?''

கார்த்தியாயினி சொந்த ஊருக்கே போகவேண்டுமென்று வலியுறுத்தவில்லை.

''எந்த ஊருக்கு வேணுமானாலும் நான் வந்துடறேன். இந்தத் திருவனந்தபுரத்தைத் தவிர வேறு எந்த ஊரிலே போனாலும் எனக்குச் சிநேகிதிங்க கிடைச்சிடுவாங்க.''

மூவாற்றுப்புழையிலுள்ள தோட்டத்திலே அருமையான ஒரு கட்டடம் கட்டுவதற்கான முயற்சிகள் ஆரம்பமாயின. கோட்டயம் பேஷ்கார், மூவாற்றுப்புழை தாசில்தார், கோட்டயம் டிவிஷனிலுள்ள என்ஜினீயர்கள் ஆகியோர் அதன் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தனர். கார்த்தியாயினி வாரவாரம் மூவாற்றுப்புழைக்குச் சென்று கட்டட வேலையைப் பார்வையிட்டு வருவது வழக்கமாயிற்று.

உத்தியோக வாழ்க்கை முடிவதற்கு முன்பே, இன்னொரு காரியத்தைக்கூடச் செய்து முடிக்கவேண்டுமென்ற விருப்பம் கேசவபிள்ளைக்கு இருந்தது. ஒரு நாள், அவர் அதை மனைவியிடம் கூறினார். தலைமைக் காரியதரிசியாக இருக்கிறபோதே விஜயாவின் விவாகத்தை நடத்த வேண்டுமென்பதுதான் அது. கார்த்தியாயினியை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திய யோசனைதான் இது.

''எனக்குக் கலியாணம் நடக்கிறபோது பதினேழு வயசு. விஜயாவுக்கு இப்போது பதினாறு வயசாச்சு. நானும் இதைப்பற்றி யோசிச்சுக்கிட்டுத்தான் இருந்தேன். ஆனா, அவளோட படிப்பு கெட்டுப் போயிடுமேன்னுதான் பேசாமே இருந்துட்டேன்.''

அவள் கேட்டாள்: ''ஆனா, மாப்பிள்ளை எங்கே?''

''ஒருவனைக் கண்டுபிடிக்கணும்.''

வெடி குண்டுபோன்ற ஒரு கேள்வி கேசவபிள்ளையின் காதுக்குள்ளே பாய்ந்து புகுந்தது.

''சர்க்கார் உத்தியோகம் பார்க்கிறவனையா கண்டுபிடிக்கப் போறீங்க?''

''ஊம்? அதென்ன? உத்தியோகம் பார்க்கிறவன்னா ஆகாதோ?''

அவள் அதற்கு விடையாக ஒரு மறு கேள்வியைக் கேட்டாள்:

''திருவனந்தபுரத்திலேருந்துதானா?''

''திருவனந்தபுரத்திலிருந்து ஆனால் என்ன? பையன் நல்லவனாக இருந்தாப் போதாதா?''

''வேணும், வேணும். திருவனந்தபுரத்துக்காரனும் வேணும்; உத்தியோகம் பார்க்கிறவனும் வேணும். என் மகளுக்கு, என்னோட அநுபவம் ஏற்படக்கூடாது.''

''உனக்கு என்ன அநுபவம் ஏற்பட்டது?''

கார்த்தியாயினி சிறிது மாறிவிட்டாள். ''அதெல்லாம் என்னை ஞாபகப் படுத்தாதீங்க. நான் ஒண்ணும் மறந்துடல்லே. சொல்லிடுவேன். சொல்ல வைக்காதீங்க.''

கேசவபிள்ளை சிரித்தபடி சொன்னார்: ''இல்லேயம்மா, தேவீ! நான் சொல்ல வைக்கமாட்டேன்! நான் ரொம்பக் கவனமா நடந்துக்கறேம்மா. ஆ . . . இருக்கட்டும். மருமகன் எப்படிப்பட்டவனாக இருக்கணும்னு நீ விரும்பறே? சொல்லு!''

கார்த்தியாயினி சிறிது நேரத்துக்குப் பேசவில்லை. அவள் அதைப்பற்றி யோசிப்பதுபோல் தோன்றியது. கேசவபிள்ளை கேட்டார்.

''நீ இதுவரையில் அதைப்பற்றி ஒன்றும் யோசிக்கவில்லையா?''

அவள் இனிய புன்னகையுடன் கூறினாள்: ''நான் யோசிக்காமே இருப்பேனா? ஒரு கொழந்தை பிறந்து, அந்தக் கொழந்தை பெண் கொழந்தைன்னு மருத்துவச்சி சொல்றபோதே, ஓர் அம்மாவுக்குத் தன்னோட மருமகன் எப்படி இருக்கணுங்கிற யோசனைதான் மொதமொதலிலே வந்திடும். அந்தக் கொழந்தை நடந்து விளையாடத் தொடங்கறபோது பொம்புளேங்க சொல்லுவாங்க, 'இப்போ எங்கோ ஓர் இடத்திலே ஒரு பையன் கில்லேட்டும் புத்தகமுமாப் பள்ளிக்கூடத்துக்குப் போய்க்கிட்டிருப்பான்னு.' தாயானவங்க அப்படித்தான் யோசிப்பாங்க. அப்போ எனக்கு மட்டும் அதிலேருந்து விலக்கு இருக்க முடியுங்களா?''

மலர்ந்து ஒளியிடுகிற கண்களுடன் தொலைதூரத்திலே பார்வையைச் செலுத்தியவாறு அந்தத் தாய் கூறினாள்: ''அவன் என் முன்னே நிற்கிறான்.''

அவர் சொன்னார்: ''என்னால் பார்க்க முடியவில்லையே. எங்கே அவன்?''

''உங்களாலே அவனைப் பார்க்க முடியாது.'' திடீர்ப் பதில்!

''ஏன்?''

''அப்படித்தான். அதுக்குச் சில பிரத்தியேகமான விஷயங்கள் இருக்கணும். நான் சொல்லட்டுமா? எம்மேலே வருத்தப்படக்கூடாது.''

''இல்லே, சொல்லு!''

கார்த்தியாயினி விரலை மடித்துக் கணக்கைப் போட்டுச் சொல்வது போல் சொல்லத் தொடங்கினாள்:

''அதுக்கு மொதலிலே கட்டின மனைவிமீது அன்பிருக்கணும். அப்படி அன்பா வாழ்ந்து வருகிறபோது ஒரு கொழந்தை வேணுங்கிற எண்ணம் ஏற்பட்டுடும். அது ஒரு பெரிய ஆசைதானுங்க. அப்படி ஒரு கொழந்தை பிறக்கிறபோது, அந்தக் கொழந்தை பெண் கொழந்தையாக இருந்தா, அந்தப் பெண்ணுக்கு வரக்கூடிய மாப்பிள்ளை எப்படியிருப்பான்னு பார்க்க அந்தத் தகப்பனாலேதான் முடியும்.''

இலக்கணமாக விளக்கம் கூறியதுபோலுள்ள ஓர் ஆத்ம திருப்தியால் அவளுடைய நாசிகூட மலர்ச்சியடைந்தது. தொடர்ந்து கூறினாள்: ''நம்ம விஷயம் அப்படித்தானுங்களா? கொஞ்சம் ஞாபகப்படுத்திப் பாருங்க. ஆண்டுக்கு ஒருமுறை வருவீங்க. அறையிலே ஒரு மூலையிலே ஒரு பெண் படுத்திருக்கிறு. . . அவளைத் தேடி வராவிட்டாக்கூட, ஒரு பெண்தானே படுத்துக்கிட்டக்கறு என்கிற . . . வேணும்; வேணும். அதைப் பற்றியெல்லாம் சொல்ல வைக்கவேணும். கொஞ்சம் நெனைச்சுப் பாருங்க!''

குற்றவாளியான கேசவபிள்ளை தயக்கமின்றிக் குற்றத்தை ஒப்புக் கொண்டார்:

''நீ என்ன வேண்டுமானாலும் சொல்லிக்கொள்! நான் கேட்கிறேன். உன் அடிமையாய்ப் போய்விட்டேன் அல்லவா, நான்?''

கார்த்தியாயினி விட்டுக் கொடுக்கவில்லை: ''அது வேண்டாம், அப்படியெல்லாம் சொல்லவேண்டாம். நான் சொன்னது சரியாயிட்டதல்ல? சில ஆம்புளேங்களுக்கு இரகசியமாக் கொழந்தை பிறக்குது. அவங்க அந்தக் கொழந்தைங்களேப்பற்றி நெனேச்சுப் பார்க்கறதுண்டுங்களா?''

அவள் எல்லே மீறிப் பேசுவதாக அவர் உணர்ந்துகொண்டார். அவளே அதிலிருந்து தடுத்து நிறுத்தவேண்டும். அவர் கேட்டார்:

''அதிருக்கட்டும். மருமகன் எப்படிப்பட்டவனுக இருக்க வேண்டுமென்று நீ விரும்புகிறாய்? அவன் உத்தியோகம் பார்க்கிறவனுக இருக்கக் கூடாது; திருவனந்தபுரத்துக்காரனுகவும் இருக்கக் கூடாது. அப்புறம் எப்படி இருக்கவேண்டும்? அதைச் சொல்லு!''

கார்த்தியாயினி சொன்னுள்: ''அவன் யாராக இருந்தாலும் பரவாயில்லே. அவளுக்கு, அவளோட அம்மாவுக்கு ஏற்பட்ட அநுபவம் ஏற்படக்கூடாது.''

ஒரு கணப் போதுக்குப் பிறகு அவள் தொடர்ந்து கூறினுள்: ''எனக்குத் தெரியும்; நீங்க கேட்பீங்க, அவளோட அம்மாவுக்கு எந்தக் கெடுதல் ஏற்பட்டதுன்னு? 'சொத்துக்கள் இருக்கு. அதுக்கெல்லாம் ஏதாவது குறையுண்டா? உன்னேட சேர்ந்து விளேயாடி நடந்த பொம்புளேங்களுக்கு இவ்வளவு சொத்து, சொகங்கள் உண்டா?'ன்னு! சங்கதி அது அல்ல. என் மகளே நேசிக்கிறவனுயிருக்கணும். அவன் யாராஞலும் பரவாயில்லே.''

கேசவபிள்ளே கேட்டார்: ''ஒரு விவசாயியாக இருந்தால் போதுமா?''

''ஊம்? அதனுல் என்ன? குடியானவன்னு உத்தியோகம் பார்க்கிறவனேவிட நல்லவனுயிருப்பான். உத்தியோகஸ்தனுங்களுக்கு அறநெறிகளோ மரியாதியோ இருக்காது. குடியானவனுக்கு அதெல்லாம் இருக்கும்.''

அவர் கேட்டார்: ''எழுதப் படிக்கத் தெரியாதவனுயிருந்தால்?''

''நாலு எழுத்துத் தெரியாதவங்க இந்தக் காலத்திலே இருக்க மாட்டாங்க.''

நெருக்கடிக்குள்ளே சிக்குண்டவர்போல் பிள்ளே கூறினர்: ''நேசிக்கிறவனு, இல்லேயா என்பதை ஆழமாகப் பார்த்து உணர்ந்து ஒருவனேக் கொண்டுவர முடியுமாம்மா? அப்படிப்பட்ட ஒரு விவசாயியை நான் எங்கே போய்க் கண்டுபிடிப்பது? உத்தியோகம் பார்க்கிறவனுப் பார்த்து ஏதாவது ஓர் இளேஞனே என்னுல் தேடிப் பிடிக்க முடியும்.''

இனிய புன்னகையுடன் கார்த்தியாயினி கூறினுள்: ''அதெல்லாம் இருக்கட்டுங்க. பையனே அழைச்சிட்டு வாங்க. நான் பார்த்துச் சொல்லறேன்.''

இவ்வாறுக, கேசவபிள்ளே வேலேயிலிருந்து நீங்கிச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டால், அதற்கான தயாரிப்புக்களேச் செய்துகொண்டிருந்தார். அப்போது மனச் சஞ்சலம் இருக்கக்கூடாது. பார்க்வியூவிலிருந்து வெளியேறிச் செல்கிறபோது எந்தவிதமான மனக் கவலேயும்

இருக்கக்கூடாது. பார்க் விழு போன்ற ஒரு பெரிய கட்டடத்திலேதான் எதிர்கால வாழ்வு இருந்துவர வேண்டும். புதல்வியின் திருமணங்கூட முடிந்துவிட்டால் தம் வாழ்க்கை நிறைவு பெற்றதாகி விடுமென்ற பூரிப்பு அவருக்கு ஏற்பட்டுவிட்டது.

இத்தகைய முடிவு அவருடைய உத்தியோக வாழ்க்கைக்குக் கூடுதலான நம்பிக்கையையும் உறுதியையும் அளித்தது. உத்தியோகச் சார்பு இல்லாத ஒரு வாழ்க்கை அவருடைய கற்பனையில் இருந்துவருகிறது. ஏறக்குறைய அத்தகைய வாழ்க்கையுடன் அவர் தம்மைக் கற்பனையில் பொருத்திப் பார்த்துக்கொண்டுவிட்டார். எஞ்சியிருக்கிற உத்தியோக வாழ்க்கையில் சுறுசுறுப்பாகச் செயல்பட அந்தக் கற்பனை பெரிதும் உதவியாக இருந்தது. காங்கிரஸின் எதிரியாகத்தான் உத்தியோக வாழ்க்கையைத் துவக்கினர். காங்கிரஸ் எதிரியாகவே அந்த வாழ்க்கையை முடிக்க வேண்டுமென்றும் நிச்சயித்துக்கொண்டார். காங்கிரஸுடன் கூடிக் குலாவியவாறு அதற்குப் பாத சேவை செய்யவேண்டாம். அப்படி நடந்துகொள்வதா, வேண்டாமா என்பதைப்பற்றி முன்னர் ஒரு சமயத்தில் யோசித்ததுண்டு. அது ஒரு பழைய நிகழ்ச்சியாகவே இருந்து விடட்டும்!

மீண்டும் காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். சிலர் சிறையிலே இறந்துவிட்டனர். அது பெரிய கூச்சலைக் கிளப்பிவிட்டது. அடித்துக் கொல்லப்பட்டனர் என்பதே குற்றச்சாட்டு. கேசவபிள்ளை சிறிதும் சஞ்சலம் அடையவில்லை. காங்கிரஸின் மிகப் பெரிய எதிரியாகிவிட வேண்டுமென்பதே அவருடைய உறுதியான முடிவு. எல்லாவற்றிற்கும் முன் முயற்சி எடுத்துச் செயல்பட்டார். அவர் எடுக்கிற ஒவ்வொரு முயற்சிக்கும் திவான்ஜியுடைய பூரணமான ஆசீர்வாதம் இருந்து வந்தது. உத்தியோக வாழ்வின் இறுதியிலுள்ள ஒரு சில நாட்களைப் பெருமையோடு, அபிமானத்தோடு, அந்தஸ்தோடு கழித்துவிடலாம். சிங்கமெனக் கர்ஜிக்கலாம்; நாய் போன்று வாலை ஆட்டியவாறு நாட்களைக் கழிக்க வேண்டியதில்லை. தலை நிமிர்ந்தபடியே வேலையிலிருந்து வெளியேறி வந்துவிடலாம். காங்கிரஸார் ஆட்சிக் கட்டிலில் அமர்கிறபோது, வேண்டுமானால் ஒரு சிங்கத்தைக் கட்டவிழ்த்து வெளியே தள்ளி விடட்டும்.

* * *

அது நிகழ்ந்து விட்டது. திவான்ஜியை யாரோ வெட்டிக் காயப்படுத்தினர்கள். கழுத்தைக் குறிவைத்துத்தான் வெட்டினர்கள். ஆனால் அந்த வெட்டு முகத்திலேதான் பட்டது. அது ஒரு பொதுச் சடங்கின்போது நடந்தது. வெட்டிய நபர் அகப்படவில்லை. இதைத் தொடர்ந்து சம்ஸ்தானம் முழுவதிலும் ஏராளமானவர்கள் கைது செய்யப்பட்டனர். ஏற்கெனவே புரியாமல் இருந்து வந்த சதியாலோசனை இதுவாகவே இருந்திருக்கவேண்டும்.

திவான்ஜி திருவாங்கூரைவிட்டு வெளியேறினர். இது கேசவபிள்ளையின் வாழ்விலே மிகப் பெரிய நிகழ்ச்சியாக இருந்தது. துணையற்றவன் என்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டுவிட்டது. கடைசி வெள்ளையன் இந்தியாவைவிட்டு வெளியேறுவதற்கு அதிக நாட்கள் இல்லை. இப்போது அரண்மனையிலிருந்து தாற்காலிக நடவடிக்கையாக ஒருவர் திவான்ஜியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஏறக்குறைய இந்தக் காலகட்டத்தைக்கூடத் தலைமைக் காரியதரிசியாகவே கழித்துவிடலாமென்று கேசவபிள்ளைக்குத் தோன்றியது. ஆனால் அதற்கப்புறம்?

அத்தியாயம் 28

பாவ மன்னிப்பு

திருவாங்கூர் இந்திய யூனியனில் சேர்ந்துகொண்டது. சுதந்தரத் திருவாங்கூர் கோஷம் நிரந்தரமாகக் குழி தோண்டிப் புதைக்கப்பட்டது. ஆகஸ்டு பதினைந்தாம் தேதியன்று அஸ்தமனத்துக்குப் பிறகு நள்ளிரவிலே வெள்ளையரின் கொடி இறக்கப்பட்டு, பாரதத்தின் தேசீயக் கொடி அரசாங்கத் தலைமைச் செயலகத்தின் மேலுள்ள கொடி மரத்தின்மீது ஏற இருக்கிறது. சம்ஸ்தானம் முழுதிலும் அந்தப் புனிதத் தினத்தை எவ்வாறு சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று விவாதித்து முடிவெடுக்க ஒரு மாநாடு நடைபெற்றது. பிரமுகர்களான காங்கிரஸ் தலைவர்கள், தாற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்த திவான்ஜி, தலைமைக் காரியதரிசி, இலாக்கா மேலதிகாரிகள், நகரப் பிரமுகர்கள்—ஆகியோர் அந்த மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டனர். கேசவபிள்ளைதான் அந்த மாநாட்டை நடத்துவதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டார். சம்ஸ்தானம் முழுவதிலும் அந்த விழாவை ஆடம்பரமாகக் கொண்டாடுவதற்கான பொறுப்பு அவரிடந்தான் ஒப்படைக்கப்பட்டது.

அன்று அவர் மிகுந்த உற்சாகத்துடன் பார்க் வியூவுக்கு வந்து சேர்ந்தார். மனைவியைக் கூப்பிட்டவாறுதான் பங்களாவுக்குள்ளே நுழைந்தார். கணவரை இவ்வளவு உற்சாகத்துடன் கார்த்தியாயினி ஒருபோதும் கண்டதில்லை. விஷயம் என்னவென்று அவளுக்குப் புரியவில்லை. ஆயினும் கணவருடைய உற்சாகத்திலும் மகிழ்ச்சியிலும் அவள் பங்கெடுத்துக் கொண்டாள். என்னமோ நல்ல காரியந்தான். அது இன்னது என்று அவளுக்குப் புரியவில்லை.

கேசவபிள்ளை கூறினார்: ''எல்லாக் காங்கிரஸ் பிரமுகர்களையும் நான் இன்று சந்தித்தேன்.''

ஆவலுடன் கேட்டாள் கார்த்தியாயினி: ''அப்புறம்?''

''அப்புறம் என்ன? ஒன்றும் இல்லை.''

''அவங்க சண்டைக்கு வந்தாங்களா?''

''வெற்றி பெற்றேன். இல்லை! வெற்றி பெற்றேன் என்று நம்புகிறேன்.''

கோட்டு, காலுறை, கழுத்துப்பட்டை ஆகியவற்றை மாற்றியணிவதிலே, கார்த்தியாயினி அவருக்கு உதவி புரிந்தாள். அவர் அப்போது அவளுடைய கன்னத்தின்மீது காதல் முத்திரையைப் பதித்தார். ஒருவேளை, கிட்டு மாமாவின் சொற்கள் அப்போது அவருடைய காதுகளிலே ரீங்காரித்துக்கொண்டிருந்திருக்கலாம்:

''அவள் அதிருஷ்டக்காரிதாம்பா!''

காபி அருந்திக்கொண் டிருந்தபோது அவர் சொன்னார்: ''ஓ! இன்று நடைபெற்ற மாநாட்டைப்பற்றி உன்னிடம் விவரமாகக் கூறலாம். ஆனால், உனக்குத்தான் புரியாதே.''

கார்த்தியாயினி அதை ஒப்புக்கொள்ளவில்லை.

''கொஞ்சம் சொல்லிப் பாருங்களேன்! எனக்குப் புரியுமான்னு பார்க்கலாமே. என்னை அவ்வளவு தூரம் கழுதைன்னு நினைச்சிடாதிங்க!''

அவர் மனம் நிம்மதியடைந்தது; சொன்னார்: ''நல்லாப் போச்சு! நீயா கழுதை? எல்லாரையும் நடுங்க வைக்கிற, எப்படிப்பட்டவன் என்று யாராலும் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிற, பெயர் பெற்ற சீஃப் செக்ரடரி கேசவபிள்ளையைச் சிறு விரலால் ஆட்டிப் படைக்கிற நீயா கழுதை?''

கேசவபிள்ளை இன்னும் சில சொல்லியிருப்பார். ஆனால், கார்த்தியாயினி விட்டுக் கொடுக்கவில்லை:

''வேணும், வேணும்! நிறுத்துங்க! இப்படியெல்லாம் சொல்லத் தொடங்கினா நானும் சொல்லுவேன். அப்புறம் இன்னொரு விஷயம். திருட்டுத்தனமெல்லாம் எனக்குத் தெரிஞ்சு போச்சு.''

பேச்சை அந்தத் திசைக்குத் திருப்பிவிட்டால், அது அப்போதைய ஆறுதலடைந்த தமது மனநிலையைக் கெடுத்துவிடுமென்று அவருக்குத் தோன்றியது. தமக்கு ஏற்பட்டிருக்கிற ஆறுதலின் கதையை அவர் சொல்லத் தொடங்கினார். அது வெற்றியின் கதைகூட!

ஆகஸ்டு பதினைந்தைக் கொண்டாட வேண்டுமென்று தாற்காலிகத் திவான்ஜியிடமிருந்து கட்டளை பிறந்தது. அந்தக் கட்டளையில் கூறப்பட்டிருந்த யோசனைகள் தலைமைக் காரியதரிசியைப் பெரிதும் சங்கடத்திற்குள்ளாக்கின. ஆலோசனைகளுக்காக அழைக்கப்பட வேண்டியவர்கள் மத்தியில் காங்கிரஸ் தலைவர்கள் இருக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு கூட்டப்பட்ட மாநாடாக இருந்தது அது. அப்போது கார்த்தியாயினி குறுக்கே புகுந்து கேட்டாள்:

''அப்போ, இனிமே சர்க்காருக்கும் காங்கிரசுக்கும் சண்டை இருக்காதுன்னு சொல்லறீங்களா?''

கேசவபிள்ளை அந்தக் கதையை விரிவாகச் சொல்லத் தொடங்கியவர் தாம். அறிவின்மையிலிருந்து அந்தக் கேள்வி எழுந்தபோது கதை சொல்லும் உற்சாகம் திடீரெனக் குன்றிவிட்டது. இவ்வளவு விரிவாக ஏன் அதைப் பேசவேண்டுமென்று அவருக்குத் தோன்றியது. கதையைப் புரிந்துகொள்ள முடிந்தாலும், அவளால் அதன் நுட்பங்களைப் புரிந்து கொள்ள இயலாது. சுருக்கமாகக் கூறிவிடுவதுதான் நல்லது. விஷயத்தை மட்டும் சொல்வது. ஆயினும் முந்தைய நாள் ஏற்பட்டிருந்த மிகப் பெரிய பீதி, இன்று ஒரு பிரச்னையாக மாறுவதைப்பற்றிச் சொல்லாமல் இருக்க முடியாதல்லவா? தாம் பார்த்தது ஒரு பெரிய பூதத்தை அல்ல; ஓர் ஓலைப் பாம்பு! காற்றில் அசைகிற ஒரு நிழல் மட்டுந்தான்! அவர் கதையைச் சுருக்கமாகச் சொன்னார்.

''நாம் சும்மா பயந்துகொண் டிருந்தோம், கார்த்தியாயினீ! சும்மா தான்.''

''ஊம்? அதென்ன, அப்படிச் சொல்லறீங்க?''

அவர் சொன்னார்: ''இந்தக் காங்கிரஸ் எனப்படுவது அவ்வளவு பயங் கரமான ஒன்று அல்ல.''

அவளுக்குப் புரியவில்லை. கண் விழித்தபடியே உட்கார்ந்துவிட்டாள்.

''உனக்கு ஒன்றும் புரியவில்லை, அல்லவா? பயப்படுவதற்கு ஒன்று மில்லை.''

''அவங்க ஆட்சிக்கு வந்தா நமக்கு எந்தக் கெடுதலும் நேராதுங்களா?'' என்று அவள் கேட்டாள்.

''ஒன்றும் நேர்ந்துவிடாது. நான் அவர்களில் ஒருவரைக்கூட நேரடி யாகப் பார்த்ததில்லை, பேசியதும் இல்லை. பெரிய பயங்கரவாதிகள் என்று தான் எண்ணிக்கொண் டிருந்தேன். இன்று அவர்கள் முன்னிலையில் பயத் துடன்தான் நான் நின்றுகொண் டிருந்தேன். 'எவ்வாறு வரவேற்பது, எவ்வாறு மகிழ வைப்பது?' என்ற சிந்தனைகளில் மூழ்கியிருந்தேன். உண்மையிலேயே பதற்றமடைந்திருந்தேன். அவர்கள் அமைச்சர்களாக ஆட்சிக்கு வரப்போகிறவர்கள். நான் அவர்களுடைய மிகப் பெரிய எதிரி! அவர்கள்தான் முதலில் வந்தார்கள் என் கண்களுக்குள் இருள் சூழ்ந்து கொண்டது. நான் கரம் கூப்பி வணங்கினேன். திவான்ஜி வந்தாற் போலத் திகைப்புற்றேன். கடைசியில் அல்லவா, காரியம் புரிந்தது. பாவம்! ரொம்பச் சாதுவானவர்கள்! பிரசங்கங்களும், வெளித்தோற்றங் களும் வெறும் வெளிவேஷங்களாகத்தான் இருந்திருக்கின்றன. அவர்களில் பலர் என்னருகே உட்காரக்கூடத் தயங்குகிறார்கள். அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்துக்கு நான் நடந்து சென்றால், அவர்கள் துள்ளிக் குதித்து எழுந்து நிற்கிறார்கள், சூப்பிரண்டுகள், உதவிக் காரியதரிசிகள் போன்று! காரியதரிசிகளின் துணிச்சலைக்கூட அவர்களிடம் நான் காண வில்லை. மேடைப் பேச்சுக்களின்போது கரகோஷங்கள் கேட்டுத் துள்ளிக் குதிக்கிறவர்கள். அவ்வளவுதான்.''

கார்த்தியாயினி கேட்டாள்: ''அப்புறம் என்ன ஆச்சு?''

''ஆகிறதுக்கு என்ன இருக்கு? அவர்களில் இருவரைத் தவிர அனைவரும் என்னைச் சூழ்ந்துகொண்டனர். எல்லாரும் என்னைச் சந்தித்துப் பேச இங்கே வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எல்லாருக்கும் அறிமுக மானேன். என்னிடம் அறிமுகமாக அவர்கள் சந்தர்ப்பத்தை எதிர்பார்த் திருந்தார்கள்போல் தோன்றியது.''

அவளுக்குக் கதை கேட்க ஆவல். அது இயற்கைதானே? கேட்டாள்: ''அந்த ரெண்டு பேரு யாருங்க?''

''காங்கிரஸ் பிரசிடெண்டு, வைஸ் பிரசிடெண்டு.''

அவள் கேட்டாள்: ''இந்தக் காங்கிரஸ்ன்னு சொல்லறது இவ்வளவு தானு?''

கேசவபிள்ளைக்குக்கூட அத்தகைய சந்தேகம் உண்டு. சொன்னார்: ''நான்கூட அப்படித்தான் சந்தேகப்படுகிறேன். இன்று அங்கே வந்தவர்களில் சிலரைப் பார்த்தபோது அத்தகைய எண்ணந்தான் ஏற்பட்டிருக்கிறது. பிரமுகர்களில் சிலர் தாம் சற்றுப் பெருமையுடன் நடந்துகொண்டனர். ஆயினும், எனக்கு ஒரு சந்தேகம் . . .''

கார்த்தியாயினி தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தை மனம் திறந்து கேட்டாள்: ''இந்தச் சம்ஸ்தானம் முழுதிலுமுள்ள ஜனங்கள் இவங்க சொல்வதைக் கேட்டுத் துள்ளிக் குதித்து எழுந்துட்டாங்களே?''

கேசவபிள்ளைக்குக்கூட அந்த விஷயத்திலே ஆச்சரியந்தான். பரம்பரை பரம்பரையாக மக்கள் மனத்திலே நிலவிவருகிற அரச பக்தி, அதிகாரிகளிடமுள்ள மதிப்பு, சட்டங்களுக்குக் கீழ்ப்படிதல்—ஆகிய அனைத்தையும் மறந்துவிட்டு, மக்கள் எவ்வாறு இந்தக் காங்கிரஸ்காரர்களைப் பின்பற்றிச் சென்றனர் என்ற விஷயம் உண்மையிலேயே கேசவபிள்ளையை வியப்பில் ஆழ்த்தியது. அதற்கு ஒரே ஒரு வியாக்கியானந்தான் அவரால் சொல்ல முடிந்தது. வெள்ளையர் இந்தியாவைவிட்டு வெளியேற வேண்டுமென்று அனைத்து இந்தியாவிலுள்ள மக்கள் விரும்பினர்கள். திருவாங்கூர் மக்களுக்கும் அந்த அபிலாஷை இருந்தது. இந்த அபிலாஷையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டனர், சம்ஸ்தான காங்கிரஸ்வாதிகள். கேசவபிள்ளை சொன்னார்:

''முதல் முதலில் திவான்ஜி சிறிது தீர்க்கதரிசனத்துடன் நடந்துகொண்டிருந்தால் இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்காது.''

கார்த்தியாயினி கேட்டாள்: ''திவான்ஜி பெரிய புத்திசாலி, தீர்க்கதரிசனம் உள்ளவர்ன்னு சொல்லிக்கிட்டிருந்தாங்களே?''

கேசவபிள்ளை அழுத்தமாகக் கூறினார்: ''ஆம், அதுக்குச் சந்தேகம் உண்டா? ஆனால், யாருக்குமே ஒரு சிறிய கவனக் குறைவு ஏற்படலாம் அல்லவா? அங்ஙனம் நிகழ்ந்துவிட்டது. இந்தத் தலைவர்களில் பலர் அரசாங்க வேலைகளுக்கு விண்ணப்பம் செய்திருந்தவர்கள். அன்று ஒவ்வொரு வேலை இவர்களுக்குக் கொடுத்திருந்தால், இந்தத் தொந்தரவு ஒன்றுமே இங்கே நிகழ்ந்திருக்காது.''

கார்த்தியாயினியின் பொது அறிவு அதற்கு விடையளித்தது. அது கேள்வியுருவத்தில் வெளிக் கிளம்பி வந்தது:

''அப்போ வேறு சிலவங்கக்கூடக் காங்கிரஸ்காரங்களாகிவிட்டிருப்பாங்க. எல்லாருக்கும் அரசாங்க வேலை கொடுக்க முடியுங்களா?''

அதற்குப் பதில் அளிக்க அவரால் முடியவில்லை. அவள் கேட்டாள்: ''என்னமோ ஆகட்டும். உங்க பயம் போய்விட்டதா?''

''பயமெல்லாம் ஒன்றும் இல்லை. ஆனால், இன்னும் சில நாட்களுக்குக் கடுமையான வேலை செய்யவேண்டியிருக்கிறது. பறவூரிலிருந்து குமரி வரையில் பயணம் செல்லவேண்டியிருக்கிறது. ஒவ்வோர் ஊரிலும் விழா நடத்துவது எப்படியென்று யோசனை சொல்லி, ஏற்பாடு செய்யப் போகவேண்டும்.''

சிறிது கேலி செய்வதுபோல் கார்த்தியாயினி கேட்டாள்: ''அன்னைக் கெல்லாம் காங்கிரசை ஒழித்துக் கட்டச் சுற்றுப் பயணம் பண்ணிக்கிட் டிருந்தீங்க. இப்போ காங்கிரசுக்கு விழா எடுக்க ஓடறீங்க. கேட்கிறவங்க கிட்டே என்ன பதில் சொல்வது?''

கேசவபிள்ளை பதில் அளித்தார்: ''இப்போது சுதந்தரத் தின விழாக் கொண்டாடுவதற்காகத்தான்.''

''ஆமாமாம். வெக்கமில்லே? சுதந்தரம் வேணும்னு சொல்லித்தானே காங்கிரசை எதிர்த்தீங்க?''

''ப்ப்பூ!'' அவருக்குப் பதில் இல்லை. ''போயிடு, இங்கிருந்து! உனக்கு இதைப்பற்றியெல்லாம் என்ன தெரியும்?''

''ஆமாமாம். வெக்கமில்லாமே பேசறீங்க. நாளையிருந்தா இந்த வேலை வேணும்னு சொல்லிப் போயிருப்பேன். மனுஷாளோட முகத்தை எப்படிப் பார்ப்பது? அன்னைக்கு அப்படிச் சொன்னீங்க, இன்னைக்கு இப்படிச் சொல்றீங்க!''

அன்று செய்ததற்கும் சொன்னதற்கும், இன்று செய்வதற்கும் சொல் வதற்குமிடையில் எந்தவிதமான முரண்பாடும் இல்லை என்று விவரமாகக் கூற அவர் முயன்று பார்த்தார். கார்த்தியாயினியிடம் அதெல்லாம் பலிக்காதென்று கேசவபிள்ளைக்குத் தெரியும். நியாயவாதங்கள் எதுவும் எடுபடுவதில்லை என்றும் அவர் உணர்ந்திருக்கிறார். இறுதியாக அவர் கேட்டார்:

''அப்படியானால் நான் இந்த வேலையை ராஜிநாமாச் செய்யட்டுமா?''

அதற்குப் பதில் அளிக்க அவளுக்கு எந்த யோசனையும் தேவையில்லை. ''என்ன வேணுமானாலும் செய்யுங்க! எனக்கு ஆட்சேபம் இல்லை. தகராறு ஏதும் ஏற்படாமே இருந்தாப் போதும்.''

அவர் சொன்னார்: ''தகராறு ஒன்றும் நேர்ந்துவிடப் போவதில்லை. அதைக் கருதி நீ பயப்படவேண்டாம். நீ பார்! நான் இன்னுமொரு விளை யாட்டு விளையாடப் போகிறேன்.''

அது என்னவென்று பொருள்படும்படியாக அவள் அவர் முகத்தைப் பார்த்தாள்.

''நான் கதர் வேஷ்டியுடுத்தப்போகிறேன்; சட்டை அணியப் போகிறேன்; காந்திக் குல்லாய் போடப்போகிறேன். பார்த்துக்கொண் டிரு! வருகிற வழியிலேயே கதர்த் துணி வாங்கிச் சட்டை தைக்கக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறேன்.''

கார்த்தியாயினி தயக்கமின்றிக் கூறிவிட்டாள்: ''அப்புறம் ஒரு கொடி யைக்கூடக் கையிலே வச்சுக்கிட்டு, 'கேசவபிள்ளையைத் தூக்கிலே போடுங் கள்!'ன்னு கோஷம் போட்டு நடந்திடுங்க! வெக்கமில்லேன்னு அப்புறம் என்னதான் செய்யக்கூடாது?''

''இதிலே வெட்கப்படறதுக்கு என்ன இருக்கு?''

''ஒண்ணுமில்லே. ஒண்ணுமில்லே.''

''நீ பார்த்துக்கொண் டிரு! இதைத்தான் இப்போது சொல்லி வைக்கிறேன்.''

இதற்குமுன் இருந்திராத துணிச்சலும், சுறுசுறுப்பும் கேசவபிள்ளை யிடம் காணப்பட்டன. அந்த நெடும்பாதை மீண்டும் தெளிவாகத் தென்படுகிறது. வளைவு இல்லை, திடீர்த் திருப்பம் இல்லை! நேரானது. அடிவைத்து அடிவைத்து முன்னேறிஞல் போதும். ஏற்ற இறக்கங்கள் இல்லை, தடைகள் இல்லை! ஆனல், அடையவேண்டிய தளம் எது?

அங்கே தொலைவில் ஒரு தளம் தென்படுகிறது. அந்தத் தளத்தின் பெயர் என்னவென்று தெரியாது. கற்பனையில் தெளிவாகக் கண்ட சீஃப் செக்ரடரிப் பதவிதான். அதற்கப்பால் திவான்ஜிப் பதவி என்ற ஒன்று உண்டு. அந்தப் பதவி முற்றுப் பெறப் போகிறது. இப்போது அமர்ந்திருக்கிற நாற்காலியிலிருந்து வேறு எந்த இடத்தை எட்டிப் பிடிக்க முடியும்? தெரியாது. ஆனல், முன்னே நீண்டு கிடக்கிற நெடும்பாதையில் பலவேறு துறைகள் இருக்கின்றன; பலவேறு படிக்கற்கள்! ஆனல், அவை பதவிக்கு இட்டுச் செல்கிற படிகள்தானு? செல்வச் செழிப்பின் ஏணிப் படிகளாக இருக்கலாம்!

சுதந்தரத் தினவிழாக்களை நடத்துவதற்காக, தலைமைக் காரியதரிசிகதர் வேஷ்டி, சட்டை, குல்லாய் அணிந்து சம்ஸ்தானம் பூராவும் சுற்றுப் பயணம் செய்துகொண் டிருக்கிறார். மாவட்டத் தலைநகர்கள், தாலுக்காக்கள், கிராமங்கள் என்று பிரயாணத்தில் ஈடுபட்டிருக்கிறார். ஏற்கெனவே வகுக்கப்பட்ட திட்டங்களுக்கேற்ப எங்கே சென்றலும், அங்கெல்லாம் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் மட்டுமின்றி, காங்கிரஸாரும், அல்லா தாரும் அவருடைய யோசனைகளுக்காகக் காத்திருந்தனர். ஒருசில நாட்களுக்குள் அவர் காங்கிரஸ்காரர்களிடம் அறிமுகமாகிவிட்டார். அவர்களுடைய பிரியத்தைப் பெற்றுவிட்டார். சீஃப் செக்ரட்ரியோடு நெருங்கிப் பழகவாய்ப்புக் கிடைத்ததை எண்ணி அவர்கள் மகிழ்ந்தனர்.

உண்மையிலேயே, தலைமைக் காரியதரிசியின் யோசனைகளை அமலுக்குக் கொண்டு வருவதில் உத்தியோகஸ்தர்களைவிட அதிகமான அக்கறை செலுத்தியவர்கள் காங்கிரஸ்காரர்கள்தாம். கேசவபிள்ளை அவர்களுடைய ஆளாக மாறிவிட்டார்.

இத்தகைய வரவேற்பு எதிர்பாராதது. கேசவபிள்ளை வியப்புற்றார். இதைப் புரிந்துகொள்ள அவருக்குக் கஷ்டமாயிருந்தது. காங்கிரஸ் காரர்கள் தலைமைக் காரியதரிசியைப் பெரிதும் மதித்தார்கள் என்றல் . . .? எவ்வளவோ சிந்தித்துப் பார்த்தார். புரிந்துகொள்ள முடியவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தை முடிந்த அளவு பயன்படுத்திக் கொள்ளத் தீர்மானித்துக் கொண்டார் கேசவபிள்ளை.

ஆயினும், சம்ஸ்தானம் முழுவதிலும் ஒருமுறை சுற்றுப் பிரயாணம் செய்து முடிந்தபோது, சில பத்திரிகைகளும், பிரசங்க மேடைகளும், குற்றச் சாட்டுக்களையும் எதிர்ப்புக் குரல்களையும் எழுப்பாமல் இல்லை பொறுப்பற்ற ஒரு சில குழுக்கள் எழுப்புகிற குரல் என்றுதான்

அவற்றைப்பற்றி முதல் முதலில் அவர் எண்ணினர். கம்யூனிஸ்டுகளும், சகப் பிரயாணிகளுமே இவ்வாறு செய்கிறார்கள். காங்கிரஸ்காரர்களின் ஒரு பகுதியினர்கூடத் தம்மீது ஆத்திரம் கொண்டிருக்கின்றனர் என்று பின்னல்தான் அவருக்குத் தெரிந்தது. கேசவபிள்ளை ஒரு ஜனத் துரோகியாம்! சுதந்தரப் போராட்டத்தில் இன்னுயிர்களை அர்ப்பித்த தியாகிகளின் இரத்தத்துக்கு யாராவது பதில் சொல்ல வேண்டியிருக்குமானால், அது கேசவபிள்ளை ஒருவர் மட்டுந்தானும்! சுதந்தரப் போராட்டத்தின் குறிப்பிடத்தக்க ஓர் எதிரி இருக்கிறார் என்றால் அது கேசவபிள்ளை ஒருவரே என்றுகூட அவர்கள் பேசிக் கொண்டனர். சுதந்தரப் போராட்ட சகாப்தத்தில் திக்கெட்டும் அதிர முழங்கி வந்த அந்தக் கோஷத்தை நினைவுபடுத்திக் காட்டினார்கள்:

'கேசவபிள்ளையைச் சிறையிலடை!
கேசவபிள்ளையைத் தூக்கிலே போடு!'

இந்த நாட்டிலே பிறந்து வளர்ந்த சந்ததி என்கிற உண்மையை மறந்து விட்டு, இந்த நாட்டை விடுதலையடையச் செய்ய நடந்த போராட்டத்தைக் கொடூர அடக்கு முறைகளால் அடக்கிவிடக் கங்கணம் கட்டிய நபர் இன்று சுதந்தரத் தின விழாக்களை நடத்த ஊர் ஊராகச் சுற்றுப் பயணம் செய்வதை அவர்கள் ஏளனம் செய்தனர். இந்தப் பயணத்தின் நோக்கங்கூடப் பணம் சம்பாதிப்பதுதான் என்று சென்ற காலத்திய கணக்குகளை எடுத்துக்காட்டியவாறு அவர்கள் நிரூபித்தார்கள்.

வேறு எந்த ஒரு நபரையும்விட இந்த நியாயவாதங்களை மிகவும் நன்றாகப் புரிந்துகொள்ளக் கூடியவர் கேசவபிள்ளையேதான். அவர்கள் சொல்வதெல்லாம் உண்மை என்று உணர்ந்து கொண்டவரும் அவரேதாம். அதனால்தான் அவருக்குப் பயம் ஏற்பட்டது. அவர்களுடைய வாதங்களை மறுத்துக் கூற அல்லது தவறெனச் சொல்லி வாதம் புரிய யாராவது கேசவபிள்ளையிடம் கூறினால் என்ன பதில் சொல்வது? எதிராக வாதம் புரிய அவர் மூளையில் ஏதாவது இருந்தால்தானே? தற்காப்புக்காக ஏதேனும் ஒரு நியாயவாதத்தைக் கண்டுபிடிக்க அவர் பல நாட்களாக முயன்று வருகிறார். இந்தக் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலாக யாராவது ஒரு வார்த்தையாவது சொல்வதில்லை. ஒரு பிரசங்கம் அல்லது ஒரு கட்டுரை அவருக்கு அநுகூலமாகப் பேசப்படுவதோ எழுதப் படுவதோ இல்லை. எதிரிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அவர்களுடைய நியாயவாதங்கள் உறுதிப்பட்டு வருகின்றன. இது ஒரு பெரிய இளர்ச்சியாக மாறிவிடுமோ என்று கேசவபிள்ளை ஐயமுற்றார்.

ஒரு நாள், அவர் மனைவியிடம் எல்லாவற்றையும் தெளிவாகக் கூறினார். வேறு யாரிடம் சொல்லமுடியும்? அந்தப் பெண்மணிக்கு எந்தவிதமான மனக்கலக்கமும் ஏற்படவில்லை. இந்த வேலை போவதாக இருந்தால் போகட்டுமே; திகைப்படைய வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? அவள் வழக்கமாகச் சொல்லி வருகிற வாதங்களையே அப்போதுகூடச் சொன்னாள்.

''கடவுள் கிருபையினாலே நமக்குத் தேவையான சொத்துக்கள் இருக்கு. இந்த வேலையில் ஒட்டிப் புடிச்சிண்டிருக்கணுங்கிற அவசியம் என்ன இருக்கு? போவதாயிருந்தாப் போவட்டுமே.''

அந்த முறையைக் கடைபிடிப்பதனால் தப்பு ஒன்றுமில்லை. அது நல்லது கூடத்தான். ஆனால், அந்தப் பதில் அவருக்குத் திருப்தி அளிக்கவில்லை.

கார்த்தியாயினி கேட்டாள்: ''நீங்க சொன்ன காரணங்களால் உங்களை வேலையிலிருந்து நீக்கிடறதாக வச்சுக்குவோம். அப்படி ஏற்பட்டு விட்டா, அதுக்காகச் சாகமுடியுமா?''

சாகமுடியாது என்பது உறுதிதான். ஆயினும்—

கார்த்தியாயினி சொன்னாள்: ''அப்படியெல்லாம் எண்ணிப் பார்க்க என்ன இருக்கு?''

அந்த மனநிலையில், முன்பு எப்போதுமே ஏற்பட்டிருக்கிற துணிச்சல் மீண்டும் அவருக்கு ஏற்பட்டுவிட்டது. இந்த விளையாட்டையும் களத்திலே சந்தித்துவிடுவோம். வாழ்க்கையிலே ஆத்ம திருப்தியடைய ஏராளமான விஷயங்கள் இருந்து வருகின்றன. இவ்விடம் வரையில் வந்து விட்டோம் அல்லவா? இதுவே போதும். மனநிம்மதி யடையக் காரணம் உண்டு. ஆனால் ஓய்வு பெறுவதற்கான காலம் வருமுன்பே விலகி விடுவதென்றால் அது அவமானமாகும்.

தமக்கு எதிராக ஒன்றுபட்ட முயற்சி நடக்கிறதென்ற விஷயத்தில் கேசவபிள்ளைக்குச் சந்தேகமே இல்லை. இல்லாவிட்டால் இத்தகைய நிரந்தரமான குற்றச்சாட்டுக்களுக்கு இடமே இருக்காது. காரியதரிசி பிலிப்பு உட்படப் பலர் காங்கிரஸுக்குள்ளே செல்வாக்குப் பெற்றவர்கள். கிளர்ச்சி நடந்தபோது, வேண்டுமானால் பிலிப்புக்குப் படிப்பினையைக் கற்றுக் கொடுப்பதற்கான சந்தர்ப்பம் இருந்தது. எதற்காக அந்த மனிதனுக்குத் தொந்தரவைக் கொடுக்கவேண்டுமென்று கேசவபிள்ளை பேசாமல் இருந்துவிட்டார். அது பெரிய தவறுகிவிட்டது என்று அவருக்கு இப்போது தோன்றியது.

தலைமைச் செயலகத்திலிருந்துதான் இந்தத் தொந்தரவுகள் தொடங்குகின்றன. கேசவபிள்ளையை அவமதித்து வெளியேற்றினால் தங்களுக்கெல்லாம் நன்மை பயக்குமென்று அவர்கள் நினைக்கிறார்கள். ஒருமுறை இத்தகைய முயற்சி எடுத்துத் தோல்வியைக் கண்டவர்கள்தான். வாய்த்திருக்கிற சந்தர்ப்பத்தைத் திரும்பவும் பயன்படுத்திப் பார்க்கின்றனர். இதுவும் அருமையான சந்தர்ப்பம்!

இந்தச் சூழலிலிருந்து நழுவுவது எப்படியென்ற சிந்தனைதான் அவருக்கு. வேலையிலிருந்து பிரிந்து செல்வதில் கவலையில்லை. நீக்கிவிடப் பட்டார் அல்லது சொல்லியனுப்பிவிடப்பட்டார் என்ற நிலை வரக் கூடாது. கார்த்தியாயினி காரியங்கள் அனைத்தையும் இப்போது சரிவரப் புரிந்துகொண்டிருக்கிறாள். சிறிது நாட்களுக்குள்ளே அவளுக்கு எல்லா விஷயங்களையும் அவர் கற்றுக் கொடுத்திருக்கிறார். இருந்தும் அவளிடம்

ஒரு பிடிவாத குணம்! வேலையிலிருந்து அனுப்பிவிட்டால் என்னவென்று அவள் கேட்கிறாள். அது ஒரு பெரிய பிரச்னையா?

வாழ்க்கையில் தனிமைப்பட்டு விட்டேன் என்ற எண்ணம் திரும்பவும் அவருடைய மனத்தை அலைக்கழிக்கத் தொடங்கியிருந்தது. அநுதாபத்துடன் சிந்திக்கவோ, சொல்லவோ ஒருவர்கூட இல்லை. அவரைப் போல் சிந்திக்க மனைவியால்கூட முடிவதில்லை. அவர் அத்தகைய ஒரு நபரைக் கண்டுபிடிக்க முயன்று பார்க்கிறார். கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் இப்போது ஓர் ஆறுதல் உண்டு. சுமையை இறக்கி வைக்க ஓர் இடம் உண்டு. கண்டிப்பாக அது அமைதியைத் தரக்கூடியதுதான். ஆனால், அந்த மனைவியிடமிருந்து அவர் இதைவிடக் கூடுதலான விஷயங்களை எதிர்பார்க்கிறார்; விரும்புகிறார், கோருகிறார்! கார்த்தியாயினிக்கு, அவருடைய இந்த இக்கட்டான நிலையிலேகூடச் சுறுசுறுப்புக்குக் குறைவு இல்லை; உற்சாகத்துக்குக் குறைவு இல்லை. அவள் இதயத்திலே சுமை இல்லை. அவளால் நன்றாகத் தூங்கமுடிகிறது. அவர் தூக்கமின்றி உருண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாலும் கார்த்தியாயினி தூங்குவாள். ஆனால் திடீர்த் திடீரெனக் கண் விழித்து எழுந்திருந்து கேட்பாள்:

"தூங்கலையா? இவ்வளவு தூரம் யோசிச்சுக் கவலைப்பட என்ன இருக்கு?"

மறுகணத்திலேயே அந்தப் பெண் ஆழ்ந்த தூக்கத்திலே மூழ்கி விடுவாள். ஹூம்! தூங்குகிறாள் பார்த்தீர்களா? . . . கேசவபிள்ளைக்கு ஆத்திரமில்லை. புகார்தான்!

கார்த்தியாயினி கேட்டாள்: "என்னை என்ன பண்ணச் சொல்லறீங்க? நான் கூட விழிச்சுக்கிட்டிருக்கட்டுமா? அப்படின்னு நம்ம காரியம் கைகூடிடுமா? அவங்க வாயை மூடிக் கட்டறது எப்படின்னு சொல்ல எனக்குத் தெரியாது. அப்புறம் நான் தூங்காமே யோசிச்சுக்கிட்டிருந்து என்ன பிரயோசனம்?"

அந்த நியாயத்தைப் புறக்கணிக்க அவரால் முடியவில்லை. ஆயினும், அவள் நன்றாகப் படுத்துத் தூங்கட்டும் என்று திருப்தியடையவும் அவரால் முடியவில்லை.

கார்த்தியாயினி பிரச்னைக்கே வந்து விட்டாள்.

"இப்போ அவங்க என்னதான் சொல்லிக்கிட்டிருக்காங்க?"

"என்னை வேலையிலிருந்து நீக்கிவிடவேண்டுமென்று!"

அறிவுத் திறனுள்ள ஒருத்தியைப் போல் கார்த்தியாயினி இப்போது கேட்கிறாள். அவளுடைய முகத் தோற்றமும் குரலும் அவ்வாறாக இருந்தன. யோசனைகளை எதிர்நோக்குகிற ஒருவரைப் போன்றே தலைமைக் கார்யதரிசி பதில் சொல்கிறார்.

அப்போது, கார்த்தியாயினியின் பொது அறிவிலிருந்து ஒரு விஷயம் கேள்வியுருவத்தில் திடீரென வெளிக் கிளம்பியது:

"அப்படின்னு, இந்தப் போலீஸ்காரங்களும் வேறு அதிகாரிங்களும் காங்கிரசை எதிர்த்தாங்களே, அவங்களையெல்லாம் வேலையிலேருந்து நீக்கிடவேண்டியதுதானே?"

கேசவபிள்ளை கூறினார்: ''செய்யவேண்டியது அப்படித்தான். ஆனால் என்னை மட்டும் நீக்கிவிட்டால் போதும் என்றல்லவா அவர்கள் கூறுகிறார்கள்!''

''இதென்ன கூத்து! இதென்ன நியாயம்?''

''நியாயம் அல்லதான்.''

''நியாயம் இல்லாத விஷயத்துக்காக நாம்ப ஏன் பயந்துக்கணும்?''

''சொல்லியனுப்பிவிட்டால் என்ன செய்வது?''

கார்த்தியாயினி பழைய விடைக்கே வந்துவிட்டாள்: ''நியாயம் இல்லாமே வேலையிலேருந்து நீக்கிட்டா, அப்படியே செய்யட்டும்னு நெனைச்சுக்கவேண்டியதுதான். அல்லாமே என்ன செய்யறது?''

ஒரு விநாடிக்குப் பிறகு அவள் தொடர்ந்து கேட்டாள்: ''அன்னைக்குச் சொன்னீங்க, திவான்ஜி போயிடுவார், காங்கிரஸ்காரங்க வருவாங்கன்னு! காங்கிரஸ்காரங்களோட எதிரீங்க கம்யூனிஸ்டுகள்ன்னு. காங்கிரஸ் ஆட்சி நடத்தறபோது கம்யூனிஸ்டுகள் இந்த மாதிரி சண்டை புடிச்சுக்குவாங்கன்னு. அப்படி வர்றப்போ, இனிமே கம்யூனிஸ்டுக் காரங்க ஆட்சிக்கு வந்தா, காங்கிரஸ்காரங்க ஆட்சி நடத்தற காலத்திலே கம்யூனிஸ்டுக்காரங்களை எதிர்த்து வந்த அதிகாரிங்களையெல்லாம் வேலையிலேருந்து நீக்கிடவேண்டியதுதானே? அப்படித் தானுங்களா? இந்த முறையிலே பார்த்தா எந்த அதிகாரிக்கும் பென்ஷன் கிடைக்காது. அப்படித்தான் வரப் போவுதா?''

கேசவபிள்ளை சொன்னார்: ''இது அப்படி அல்ல.''

''அப்புறம் எப்படி?''

கேசவபிள்ளையின் மூளைக்குள்ளே ஓர் ஒளி பரவியது. அவர் சொன்னார்: ''ஆனால், இதைப்பற்றி வாதம் புரிவதற்காக நமக்கு யார் இருக்கிறார்கள்?''

கார்த்தியாயினி கேட்டாள்: ''இதைப்பற்றி யாராவது வாதம் புரியணுமா? இதென்ன கூத்து! சிலர், உங்களை வேலையிலேருந்து நீக்கிடம்னு கூச்சல் போட்டு நடக்கிறப்போ, வேறு சிலர் அது கூடாதுன்னு சத்தம் போட்டு நடக்கணுமா?''

''அதுதான் இந்தக் காலம்!''

''நல்ல காலத்தான். நம்மகிட்டே நியாயமுண்டு. நாம் திவான்ஜி சொன்னதைக் கேட்டு நடந்தோம். இப்போ காங்கிரஸ்காரங்க சொல்றதைக் கேட்டு நடக்கிறோம். அப்புறம் என்ன? பேசாமே படுத்துத் தூங்க வழி பாருங்க!''

கார்த்தியாயினி நன்றாகப் போர்த்திப் படுத்துக்கொண்டாள். படுத்ததும் தூங்கிவிட்டாள். கேசவபிள்ளைக்குத் தூக்கம் வரவில்லை. அவருக்கு வாதாட ஒரு நியாயம் கிடைத்திருக்கிறது. அருமையான நியாய வாதம். அதைப்பற்றி அவர் யோசித்தார். அன்றைக்குத் திவான்ஜி ஆட்சி புரிந்த காலத்தில் அந்த ஆட்சிக்குச் சேவை புரிந்தோம். இன்றைய தினம் காங்கிரஸ் ஆட்சிக்குத் தொண்டு புரிகிறோம். எதிர்காலத்தில்

வேறு ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தால் அதற்குக்கூடச் சேவை செய்வோம். இப்படிப் பார்க்கும்போது, தாம் இழைத்த தவறுதான் என்ன?

நாற்றிசைகளிலும் அலைமோதுகிற வாதப் பிரதிவாதங்களுக்கு எல்லாம் அணைபோடுகிற சூடான பதிலாகும் இது. அந்தக் கோஷங்களெல்லாம் இந்த அணைமீது மோதித் தகர்ந்து போக வேண்டியதுதான். எந்தவிதமான கவலையுமின்றிக் கார்த்தியாயினி படுத்துத் தூங்குகிறாள். இந்தப் பெண்மணி தனக்குத் தெரிந்த முறையில் இந்த நியாயவாதத்தைக் கற்றுத் தந்தாள். கல்வியறிவு படைத்த தமக்கு இத்தகையதொரு யோசனை உதிக்கவில்லையே என்று கேசவ பிள்ளை சிந்தித்துப் பார்த்தார்.

அவர் அவளைப் பார்த்தவாறு அமர்ந்துகொண்டார். அவருடைய கண்களில் வியப்புப் பளிச்சிட்டது. அன்று, கல்யாணப் பந்தலில் கறுத்து, க்ஷயரோகத்தால் பாதிக்கப்பட்டவள்போல் மெலிந்து, பற்கள் சிறிது முன்னே தள்ளி, முடியைப் பின்னல் ஓர் எலுமிச்சம்பழ அளவிலே கட்டி வைத்துக் காட்சி தந்த அந்தப் பெண்தானா, இவள்? அன்று இவளுடைய கரத்தைப் பிடிக்கக்கூடத் தயக்கமாயிருந்தது. என்ன என்ன அற்புத சக்திகள் இவளிடம் இன்று காணப்படுகின்றன? இத்தகைய சித்திகள் இவளிடம் அன்று இருந்து வந்தனவா? கேசவபிள்ளையால் நம்ப முடியவில்லை. அந்தப் பெண்தானா இவள்? நிமிஷங்கள்தோறும் அவருடைய வியப்பு அதிகரித்து வந்தது. இந்தப் பெண் புரிந்துகொள்ள முடியாத ஓர் அற்புதப் பொருளாக உருமாறிக்கொண்டிருக்கிறாள்!

கார்த்தியாயினி தூங்குகிறாள், கவலையின்றித் தூங்குகிறாள். இன்று இவளுடைய வண்ணம் கறுப்பு அல்ல; பற்கள் முன்னே தள்ளி நிற்கவில்லை; மெலிந்த மேனி அல்ல. வதனத்திலே ஒளி படர்ந்திருக்கிறது. மொத்தத்தில் தம்முடைய மனைவி ஓர் அழகிதான்!

இவளுடைய கூந்தல் இவ்வளவு செழிப்பாக வளர்ந்திருக்கிறதென்றால், இவளுடைய மேனி இவ்வளவு வசீகரவண்ணம் கொண்டிருக்கிறதென்றால், வதனத்திலே பளிச்சிடுகிற ஒளி படர்ந்திருக்கிறதென்றால், உடல் வாளிப்பான அமைப்பைப் பெற்றிருக்கிறதென்றால் தனக்காகமட்டுந்தான்! வேறு யாருக்காகவும் அல்ல! கேசவபிள்ளைக்காக மட்டுமே இவள், இவற்றை எல்லாம் பாதுகாத்து வருகிறாள்.

இங்கே ஆறுதல் உண்டு. இவளுடைய அணைப்பிலே படுத்துத் தூங்கி விட்டால் கெட்ட கனவுகள் கிட்டே நெருங்காது. இவள் யோசனைகளைக் கூறுகிறாள்; அவை பின்பற்றப்படுகின்றன. உபதேசிக்கிறாள்; அதட்டுகிறாள்; திட்டுகிறாள்; ஏளனம் செய்கிறாள்; தொந்தரவு செய்கிறாள்; மகிழ்ச்சியைத் தருகிறாள்; மனத்தைத் துன்புறுத்துகிறாள்; சொன்னதைப் பின்பற்றி நடக்கிறாள்; கட்டளையிடுகிறாள்!

இவள் அடிமை! ஆனால் ஆட்சி நடத்துகிறாள்! இவளுக்கு மன நிம்மதி உண்டு. அதே சமயத்தில் ஆவல் நிறைந்து காணப்படுகிறாள்.

இவள் தம்முடையவள்தான்! தம்முடையவள் மட்டுந்தான்!

கேசவபிள்ளை எல்லாக் கவலைகளையும் மறந்துவிட்டார். அவர் சிரம் குனிந்தது. களங்கமற்ற அந்த வதனத்துடன் அவர் முகம் இணைந்து கொண்டது. கார்த்தியாயினி கண் விழித்தாள். ஆகா! இனிமையான, பிரகாசமான அந்தப் புன்னகைதான் என்னே! மனைவியின் புன்னகை! அவளுடைய கரங்கள் அவருடைய கழுத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டன. உடல்கள் ஒன்றிணைந்து படுத்துக்கொண்டபோது அவள் உறுதி தொனிக்கிற குரலில் அவர் காதருகே முணுமுணுத்தாள்: ''எதுக்கும் அஞ்சவேணும்! நிம்மதியாப் படுத்துத் தூங்குங்க!''

அவருடைய புறமுதுகுமீது, தாய் தன் குழந்தையைத் தட்டுவதுபோல அவள் தட்டிக் கொடுத்தாள். அவர் காதில் சொன்னாள்: ''நமக்கு எந்தக் கெடுதலும் நேராது. நிம்மதியாப் படுத்துத் தூங்குங்க!''

ஈருடலும் ஓர் உயிருமாகிவிட்டனர். ஆவல் இல்லை; கவலை இல்லை; துக்கம் இல்லை.

* * *

பல நாட்களாக இல்லாத சுறுசுறுப்போடுதான் மறுநாள் காலையில் கேசவபிள்ளை கண்விழித்தார். எதிர்காலத் தன்னம்பிக்கை அவரிடம் இருந்தது. கார்த்தியாயினி உறுதியாகச் சொல்கிறாள், நல்வழி பிறக்குமென்று. அவளுக்குத் தெய்வநம்பிக்கைதான்.

கேசவபிள்ளைக்கு எதிரான கட்டுரைகளும், பிரசங்கங்களும் அன்றைய பத்திரிகைகளிலேகூடப் பிரசுரிக்கப்பட்டிருந்தன. தலையங்கங்கள்கூடத் தீட்டப்பட்டிருந்தன. ஆனால், இன்று கேசவபிள்ளைக்கு வியாகுலம் ஏற்படவில்லை.

படிவாசலில் காவல் நின்ற போலீஸ் ஜவான் கூறினான், காங்கிரஸ் செயற்குழுவின் உபதலைவர் சந்திக்க வந்திருக்கிறார் என்று. அழைத்து வந்து உபசரித்து வரவேற்பு அறையில் உட்காரவைக்கச் சொல்லிவிட்டு அவர் உள்ளே சென்று உடைகளை மாற்றிக்கொண்டார்.

மதிப்புக்குரிய அந்த விருந்தினர், ஸ்தாபனத்தில் இரண்டாவது அந்தஸ்தைப் பெற்றிருப்பவராக இருந்தபோதிலும் மிகுந்த செல்வாக் குடையவர். சிறிது நேரத்துக்குப் பிறகு கேசவபிள்ளை கதர் உடையில் தோன்றினார். உபதலைவரை வரவேற்றார். நலன்களை விசாரித்த பிறகு இருவரும் ஆகஸ்டு பதினைந்து விழாச் சம்பந்தமான பிரச்னைகளைப்பற்றிப் பேசத் தொடங்கினார்கள். கேசவபிள்ளை, தாம் நிறைவேற்றியிருக்கிற வேலைத் திட்டங்களைப்பற்றி விரிவாக எடுத்துரைத்தார். அவர் இவ்வாறு சொல்லி முடித்தார்:

''ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் கிராமம் கிராமமாக, வீடு வீடாக விழா மிகச் சிறப்பாக நடைபெறுமென்று நம்புகிறேன். விழாப்பற்றிய பொறுப்புக்கள் அநேகமாக உத்தியோகச் சார்பு இல்லாதவர்க ளிடந்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. நமது குழுக் கூட்டம் மேலும்

இருமுறை கூட வேண்டியிருக்கிறது. வேலைத் திட்டங்களை நமது குழு அங்கீகரிக்கவேண்டும் அல்லவா?''

விழாவுக்கான தயாரிப்புக்கள் மிக்க விரிவாகச் செய்யப்பட்டிருக் கின்றன என்ற தகவலே உபதலைவருக்குக் கிடைத்திருக்கிறது. அவர் சொன்னார்: ''கன்வீனரான தாங்கள் பட்டி தொட்டி எங்கும் சென்றிருக்கிறீர்கள் என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.''

கேசவபிள்ளைக்குக் கிடைத்திருக்கிற பாராட்டுதல்தான் அது. அவர் தான் கன்வீனர். கன்வீனர் சொன்னார்: ''கடந்த சில நாட்களாகப் பயணத்திலேதான் இருந்து வந்தேன். முடிந்த அளவு எல்லா இடங் களுக்கும் சென்றிருக்கிறேன்.''

இவ்வாறாக அந்தப் பிரச்னை பேசி முடிக்கப்பட்டது. இனி என்ன பேசுவது? சிறிதுநேரம் அங்கே மௌனம் நிலவியது. மேற்கொண்டு பேச வேண்டிய பிரச்னைகள் இருவருக்கும் உண்டு. உபதலைவர் தலைமைக் காரியதரிசி வீட்டுக்குத்தானே வந்திருக்கிறார்!

கேசவபிள்ளை கேட்டார்: ''இங்கே வரக் குறிப்பாக ஏதாவது . . .?''

காங்கிரஸ் பிரமுகர் சிரித்தவாறு பதிலுரைத்தார். எதையோ சாதிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன்தான் வந்திருக்கிறார் என்பது அந்தச் சிரிப்பிலிருந்து தெளிவாகியது.

''சொந்தமா ஒரு சின்ன விஷயம் உண்டு. அப்புறம் பல பொதுவான விஷயங்களைக் குறித்துப் பேசவேண்டியிருக்கிறது.''

அதை அறிந்துகொள்ள கேசவபிள்ளை மிகுந்த அக்கறை காட்டினார். பிரமுகர் தொடர்ந்து கூறினார்: ''பொதுவான பிரச்னைகளைப்பற்றிப் பேசுவதாக இருந்தால் ஏராளமான விஷயங்கள் பேசவேண்டியிருக்கு. போராட்டக் காலத்திலே ஏராளமான காங்கிரஸ் ஊழியர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன அல்லவா? சர்க்காரி லிருந்து கிடைக்கவேண்டிய தொகைகள் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன அல்லவா? சுதந்தரத் தின விழாவன்று அந்தச் சொத்துக்களும் பணமும் கிடைக்கவேண்டியவர்களுக்குக் கிடைக்கும் முறையில் அந்தப் பிரச்னைகள் பற்றி ஒரு முடிவெடுத்தால் நன்றாக இருக்கும். எங்களிடையில் நிலவி வரும் பொதுவான கருத்துத்தான் இது.''

கேசவபிள்ளை சிறிது நேரம்வரையில் யோசித்துக்கொண் டிருந்தார். காங்கிரஸ் தலைவர் திரும்பவும் பேசத் தொடங்கினார்: ''கொஞ்சம் சிரமமான வேலைதான். ஏராளமான வழக்குகள் இருக்கின்றன. பென்ஷன்கூடக் கொடுக்கப்படாமல் நிறுத்திவைத்திருக்கிற கேஸ்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஒரேயடியாகப் பார்த்து முடிவெடுப்ப தென்றால் மிகவும் சிரமமான காரியந்தான். அது தெரியாமல் இல்லை. ஆனால் முதலிலே சொன்ன அந்த விஷயத்தை நிறைவேற்றித் தரவேண்டு மென்பதே எங்கள் ஒருமித்த கருத்து.''

கேசவபிள்ளை அந்த விஷயத்தில் மிகுந்த அக்கறை உள்ளவர்போல் கேட்டார்: ''இது சம்பந்தமாகத் தாற்காலிகத் திவான்ஜியிடம் கேட்டீர்களா?''

''இல்லை. அதை நீங்கள் இருவரும் முதலில் ஒருமுறை கலந்து ஆலோசிப்பது நல்லதல்லவா? இந்த அரசாங்கமே அக்கறை எடுத்துக் கொண்டு அதைச் செய்தது என்றாகிவிடும்! அந்தப் பெருமை உங்களுக்குத் தான் இருக்கட்டுமே.''

தலைமைக் காரியதரிசி அதை மறுக்கவில்லை. ''நல்ல காரியந்தான். சந்தேகமில்லை.''

அவர் சிரித்தவாறு தொடர்ந்து கூறினார்: ''அநேகமாக அந்தக் கேஸ்களெல்லாம் என் உத்தரவு மூலமாக நடைபெற்றவையாக இருக்கலாம். எனவே, அந்த ஃபைல்களை நானே அவிழ்ப்பதென்றால் அது எனக்குப் பிரத்தியேகமான மகிழ்ச்சிக்குரிய விஷயந்தான். என் கரங்களை நானே கழுவிச் சுத்தம் செய்வதுபோன்ற, நான் செய்த பாவங் களுக்கெல்லாம் நானே பரிகாரம் தேடிக்கொள்வது போன்ற ஓர் ஆறுதல் எனக்கு ஏற்பட்டுவிடும். நான் ஓர் உண்மையைச் சொல்லிவிடுகிறேன். நான் மன நிம்மதியற்றிருக்கிறேன். இதை யாருமே நம்பமாட்டார்கள். நானும் இந்த மண்ணிலே பிறந்து வளர்ந்தவன் தான். இங்கே ஆறு அடி நிலத்துக்குள்ளே இறுதி ஓய்வு பெறவேண்டு மென்று விரும்புகிறவன்தான். ஆனால், ஓர் அரசாங்க அதிகாரி தமது கடமையைச் செய்தாகவேண்டும். இனிக் காங்கிரஸ் ஆட்சிபீடத்தில் ஏறப்போகிறது. அந்தச் சர்க்காரின் கொள்கைத் திட்டங்களை அம லாக்கக் கடமைப்பட்டவர்கள்தான் அரசாங்க அதிகாரிகள். அவர் களுக்கு ஊசலாட்டமென்பது இருக்கவேகூடாது. அதுதான் என்னுடைய விஞ்ஞான ரீதியான கொள்கை. சரியாஞலும் சரி, தவருஞலும் சரி, அரசாங்க அதிகாரிகளுக்கு ஊசலாட்டம் என்பது ஏற்பட்டுவிட்டால் அப்புறம் அவ்வளவுதான். அரசாங்க இயந்திரம் உறுதி படைத்ததாக இருக்கவேண்டும். ஆனால், இந்தத் தத்துவத்தை யார்தான் புரிந்து கொள்ளப் போகிறார்கள்? என்னுடைய உண்மை நிலையைப் புரிந்து கொள்வதும் இல்லை.''

கேசவபிள்ளை பிரசங்க பாணியிலே நிகழ்த்திய அந்த விஞ்ஞான உரையைக் காங்கிரஸ் பிரமுகர் ஏற்றுக்கொண்டார்; அது முற்றும் உண்மையென்று அவர் தலையாட்டியவாறு ஒப்புக்கொண்டார்.

கேசவபிள்ளை தொடர்ந்து கூறினார்: ''பாருங்கள்! அண்மைக் காலமாகப் பத்திரிகைகளில் என்ன என்ன எழுதப்படுகின்றன? மேடைகளில் எப்படிப் பிரசங்கங்கள் நிகழ்த்தப்படுகின்றன? இன்றைய பத்திரிகை களிலேகூட வந்திருக்கின்றன.''

பிரமுகர் பத்திரிகைகளை வாசிப்பவர்தான். அவர் சொன்னார்: ''கம்யூனிஸ்டுகள்தானே இதெல்லாம் செய்கிறார்கள்?''

''இல்லை; கம்யூனிஸ்டுகள் மட்டும் அல்ல. காங்கிரஸ்காரர்கள்கூட அவ்வாறு செய்கிறார்கள். பிரமுகரான தலைவர்கள் பேசுகிறார்கள்.''

அவ்வாறு பேசிய நான்கைந்து தலைவர்களின் பெயர்ப் பட்டியலைக் கேசவபிள்ளை உபதலைவர் முன் வைத்தார். பிரமுகருக்குச் சொல்லப் பதில் இல்லை.

கேசவபிள்ளை தொடர்ந்து பேசலானார்: ''நான் அதைப்பற்றியெல்லாம் கவனிப்பதில்லை. நான் என் வேலையைக் கறாராகக் கவனித்து வருகிறேன். ஆனால் இப்போது தாங்கள் என் கவனத்துக்குக் கொண்டுவந்திருக்கிற விஷயம் இருக்கே, அது எனக்கு மிகவும் ஆறுதல் அளிக்கிற ஒன்றுதான். முடிந்த அளவு விரைவில் அதைச் செய்து முடித்துத் தருகிறேன். அதற்கு முன் தாங்கள் ஒரு காரியம் செய்வதாயிருந்தால் நன்றாக இருக்கும். தாற்காலிகத் திவான்ஜியை இது விஷயமாக ஒரு முறை அணுகுவது நல்லது. அப்புறம் உத்தியோக முறையில் நாங்கள் கலந்து பேசிக் கொள்வோம்.''

அப்பாடா! கேசவபிள்ளைக்கு ஏற்பட்ட ஆறுதல்தான் என்னே! இத்தகைய மனநிம்மதி அவருக்கு ஒருபோதும் ஏற்பட்டதில்லை.

பிரமுகர் திவான்ஜியை அணுக ஒப்புக்கொண்டார்.

கேசவபிள்ளை குறைந்துவிட்ட இதயச் சுமையுடன் கேட்டார்: ''சொந்த விஷயம் என்னவோ?''

''அதுவும் இத்துடன் சம்பந்தப்பட்டதுதான். என்னுடைய மைத்துனருக்கு ஒரு வனம் காண்டிராக்டு இருந்தது. அளந்து கொடுக்கப்பட்ட பகுதிக்கும் அப்பால் சென்று மரத்தடிகளை வெட்டி எடுத்தாரென்று சொல்லி, பாரஸ்டு கன்சர்வேட்டர் ஒரு குழப்பத்தை உண்டுபண்ணினார். அதனால் பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அந்த மரங்களை அங்கிருந்து இறக்கிக் கொண்டுவர முடியவில்லை. ஒரு விண்ணப்பத்தைத் தயார் செய்துகொண்டு வந்திருக்கிறேன். இதைக் கொஞ்சம் துரிதமாகச் செய்து தந்தால் பேருதவியாக இருக்கும். அரசியலில் ஈடுபட்ட என் குடும்பத்தைப் பாதுகாத்து வருகிறவர் என் மைத்துனரேதான். எனவே இது என் சாப்பாட்டுப் பிரச்னையாகக் கூட ஆகிவிடுகிறது.''

கேசவபிள்ளை விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டார். உடனடியாக அந்த ஃபைலை அனுப்பி வைக்க அந்த விண்ணப்பத்திலேயே எழுதி உத்தரவு போட்டார். அவர் சொன்னார்: ''இது என்னால் ஆகக்கூடிய பிரச்னைதான். கவலை ஏதும் வேண்டாம். ஒரு வாரத்துக்குள் பிரச்னை சாதகமாக முடிந்துவிடும்.''

அதைத் தொடர்ந்து, கேசவபிள்ளை இலாக்கா மேலதிகாரிகளைப் பொதுவாகவும், கன்சர்வேட்டரைக் குறிப்பாகவும் கடுமையாக விமர்சனம் செய்தார்.

''உங்களையெல்லாம் இப்படிப்பட்ட தொந்தரவுகளுக்கு உள்ளாக்குவது மதிகெட்ட செயலாகும். ஏதோ சில தவறுகள் உங்களிடம் இருந்

தெல்லாம் ஏற்பட்டபோதிலும் இந்த அதிகாரிகள் இவ்விதம் நடந்து கொள்வது முறை அல்ல.''

பிரமுகர் நன்றி கூறிவிட்டுக் கிளம்ப ஆயத்தமானார். பயனுள்ள ஒரு விஷயம் கேசவபிள்ளையின் மூளையில் திடீரென உதயமாயிற்று. அவர் உள்ளூறத் தம்மைப் பாராட்டிக்கொண்டார்:

''முதலிலே கூறிய பிரச்னை இருக்கே, பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்கள் பணம் முதலியவைப்பற்றியது, அது சம்பந்தமாக ஒரு சின்னக் காரியத்தைச் செய்தால் உதவியாக இருக்கும். காங்கிரஸ் அலுவலகத்திலிருந்து கிளை ஸ்தாபனங்களுக்கு ஒரு யோசனை தெரிவிக்க வேண்டும். போராட்டக் காலத்திலே அரசாங்க நடவடிக்கைகளால் சொத்துக்களை இழந்துவிட்டவர்கள் தலைமைக் காரியதரிசிக்கு நேரடியாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்கும்படியான யோசனைதான் அது. அந்த விண்ணப்பங்களில் சரியான புள்ளி விவரங்களைக் குறிப்பிட வேண்டும். ஸ்தாவரச் சொத்துக்களையோ, பெரிய தொகைகளையோ இழந்துவிட்டவர்கள் தலைமைக் காரியதரிசியை நேரடியாகச் சந்தித்து விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதுதான் நல்லது. விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டு, விவரங்களை எல்லாம் நேரடியாகக் கேட்டறிந்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கலாம் அல்லவா? கொஞ்ச நாட்களை இதுக்காக ஒதுக்கி வைப்பதிலேகூட எனக்கு ஆட்சேபம் இல்லை. இதை ஒருமுறைகூட வலியுறுத்திச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்—அதாவது—நான் செய்த பாவச் செயல்களுக்குப் பரிகாரம் தேடிக்கொள்வதற்காகச் செலவு செய்கிற நாட்கள் இவை. தவிரவும், எண்ணற்ற விண்ணப்பங்கள் என் முன்னிலையில் வந்து குவிகிறபோது, அது ஒரு பெரிய பிரச்னையாகி விடுகிறதல்லவா? திவான்ஜியிடமோ, அரண்மனையிலோ கொண்டு செல்வதற்கான ஒரு பிரச்னையாகி விடுகிறதல்லவா?''

இது ஒரு மதிநுட்பம் வாய்ந்த நடவடிக்கையாக இருக்குமென்று உபதலைவர் ஒப்புக்கொண்டு அன்றைய தினமே சுற்றறிக்கையை அனுப்பி விடுவதாக ஏற்றுக்கொண்டார்.

சம்ஸ்தானம் முழுதிலுமுள்ள பிரமுகர்களான காங்கிரஸ்காரர்கள் அத்தனை பேருக்கும், ஒரு முறையில் அல்லது இன்னொரு முறையில் இழப்புக்கள் ஏற்பட்டிருந்தன. வேறு எந்த நபரையும்விட அந்த விஷயத்தைப்பற்றிக் கேசவபிள்ளைக்கு மிக நன்முகத் தெரியும். ஸ்தாவரச் சொத்துக்களை இழந்தவர்கள், ஜங்கமச் சொத்துக்கள் கைநழுவிப் போனவர்கள், நீதி மன்றங்களில் வழக்காடுவதற்காகப் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்களை இழந்துவிட்ட வழக்கறிஞர்கள்—இவ்வாறுக எண்ணற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாரும் விண்ணப்பங்களுடன் தலைமைக் காரியதரிசி முன்னிலையில் ஆஜராக வேண்டியிருக்கிறது. ஆஜராவார்கள் என்பதில் கேசவபிள்ளைக்கு எந்தவிதமான ஐயமும் இல்லை. அவ்வாறு அவர் முன்னுல் வரவேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்படுகிறபோது—இன்று சம்ஸ்தானம் முழுதும் மோதிக்கொண்டிருக்கிற விமர்சன

அலைகள் தாமாகத் தணிந்துவிடாதா? கேசவபிள்ளையின் பேனா முனையிலே தான், நிலம், மனை, பணம், நாற்காலி, சான்றிதழ்—இத்தியாதி அத்தனைக்கும் பரிகாரம் இருந்து வருகிறது. அப்புறம் யார் பேசுவார்கள்? எழுதுவார்கள்? யாருக்குத்தான் துணிச்சல் ஏற்படும்? இந்த வலையில் அகப்படாமல் தப்பித்துக்கொள்ள யாரால்தான் முடியும்?

காங்கிரஸ் பிரமுகர் சென்றுவிட்டார். ஒரு சிறுவன் போன்று துள்ளிக் குதித்தவாறு கேசவபிள்ளை கார்த்தியாயினியை நோக்கி ஓடினார்.

''கார்த்தியாயினீ, உனது நல்ல நாக்கினால் கூறப்பட்டதெல்லாம் குறி தவறவில்லை. நமக்கு எந்தக் கெடுதலும் நேராது.''

* * *

1947 ஆகஸ்டு 15: அந்தப் புனித தின விழா, அனேத்து நகரங்களிலும், கிராமங்களிலும், வீடுகளிலும் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. கேசவபிள்ளை செய்திருந்த ஏற்பாடுகளெல்லாம் நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றன. தலைமைக் காரியதரிசிக்கு அவை மிகப் பெரிய வெற்றியைத் தேடிக் கொடுத்தனவென்று உறுதியாகச் சொல்லமுடியும்.

திருவனந்தபுரத்திலே அம்பீஷியேட்டிங் திவான்ஜி தலைமையில் நடைபெற்ற அந்த மகா சம்மேளனத்தில் காங்கிரஸ் தலைவர் உருக்கமான பிரசங்கத்தை நிகழ்த்தினார். சுதந்தரப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்த அந்தத் தளபதியின் பிரசங்கம் மிகவும் ஆவேசம் அளிப்பதாக இருந்ததென்று சொன்னால், அதிலே ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அது அப்படித்தானே இருக்க முடியும்? அந்தப் பிரசங்கத்துக்கு இவற்றிற்கெல்லாம் மேலாக ஒரு பொருளும் மதிப்பும் இருந்தன. இனிமேல் நாட்டை ஆளப்போவது காங்கிரஸ்தான் என்ற காரியத்தில் கருத்து வேறுபாடில்லை. அந்த ஸ்தாபனத்தின் தலைமைப் பீடத்தை அலங்கரிப்பவர், அந்த மகத்தான நாளில் புரிகிற பிரசங்கத்துக்கு ஒரு கொள்கைப் பிரகடன அறிக்கையின் தன்மைகூட ஏற்படுவது இயற்கைதான். அவ்வாறு அது ஒரு கொள்கைப் பிரகடன அறிக்கையாகவும் அமைந்தது.

சென்ற காலப் போராட்ட வரலாற்றை நினைவுபடுத்தியவாறு, இந்தப் புனித தினத்தின் அதிமுக்கியத்துவத்தை விளக்கிக் கூறிவிட்டு எதிர் காலத்தைப்பற்றிச் சமிக்ஞை செய்து காட்ட அவர் தவறவில்லை. வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை என்ற அடிப்படையில் ஓர் அரசியல் நிர்ணய சபையைத் திருவாங்கூர் தேர்ந்தெடுக்குமென்று அவர் கூறினார். திருவாங்கூரில் அமைய இருக்கிற அரசாங்கம் எத்தகையதாக இருக்க வேண்டுமென்று அந்தச் சபை தீர்மானித்துக்கொள்ளும். அதை விவரமாக விளக்கிக் கூறுகையில் இதைக்கூட அவர் பிரகடனம் செய்தார்: ''பண்டையக் காலம் முதற்கொண்டே நமக்குப் பலம் வாய்ந்ததோர் அரசாங்க இயந்திரம் இருந்து வருகிறது. இன்றுகூட அந்த இயந்திரம் உறுதி மிக்கதாகவே இருக்கிறது. அது நமக்குக் கிடைத்திருக்கிற

ஒரு வரப்பிரசாதமேதான். சென்ற திவான்ஜியின் காட்டுமிராண்டித் தனமான ஆட்சிக் காலத்தில், அந்த ஆட்சியின் கொள்கைத் திட்டங்களை அமல்படுத்தக் கடமைப்பட்ட அதிகாரிகளைத்தான், சுதந்தரப் போரில் நமது எதிரிகளைப்போல் நாம் சமாளிக்க வேண்டியிருந்தது. நம்முடன் தோளோடு தோள் சேர்ந்து நின்று போராடிய வீரர்களை அன்று போலீஸார் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றிருக்கின்றனர்; தடியடி செய்து தலை மண்டைகளைத் தகர்த்திருக்கின்றனர்; கை கால்களை உடைத்து நொறுக்கியிருக்கின்றனர். இந்த நாட்டிலுள்ள அரசாங்க அதிகாரிகளைத்தான் நமது எதிரிகளாக நம்முன் அணிவகுத்து நிற்பதைக் கண்டோம். 'அவர்கள் அவ்வாறு அணிவகுத்து நிற்காவிடில். . .' என்று நாம் ஆசைப்பட்டதுண்டு. அவர்கள்மீது வெறுப்படைந்தோம். அந்த வெறுப்பினால் அவர்களுக்கு எதிரான கோஷங்களை முழக்கினோம். ஆனால், இன்று நாம் ஆர அமர உட்கார்ந்து யோசிக்க வேண்டியிருக்கிறது. அன்று நமக்கு ஏற்பட்ட வெறுப்பு, சில சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட, பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்ற வெஞ்சின எண்ணம்—ஆகியவற்றை விடாமல் பிடித்துக்கொண்டிருக்க வேண்டுமா? அந்தப் போலீஸாரையும், அதிகாரிகளையும் வேலையிலிருந்து நீக்கிவிட வேண்டுமா? அவர்கள் செய்தது கொடுஞ் செயல்கள்தாம் என்ற எண்ணம் நமக்கு இல்லாமல் இல்லை. அது மனித இயல்புதான். ஆனால், அத்தகைய எண்ணத்தை மேற்கொண்டும் வைத்துக்கொண்டிருக்க வேண்டுமா? அதுதான் இன்றைய பிரச்னை. நாம் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.''

''நமது பகுத்தறிவும், நடைமுறை அனுபவமும் நமக்குத் துணைபுரிய வேண்டியிருக்கின்றன. உணர்ச்சிகளுக்கு அடிமைபட்டுச் செயல்படலாமா? அது சரியல்ல என்பதுதான் என் கருத்து. நாளைய தினம் காங்கிரஸ் ஆட்சிச் செங்கோலைக் கையிலேந்தப் போகிறது. திருவாங்கூரிலுள்ள உத்தியோகஸ்தர்களுக்கு நீண்ட நெடுநாளையப் பாரம்பரியம் ஒன்று இருந்து வருகிறது. அவர்கள் திறமைசாலிகள், புத்திசாலிகள்! ராமையன் தளவாய், ராஜா கேசவதாஸன், வேலுத்தம்பி தளவாய் முதலியோரின் பாரம்பரியத்தைப்பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்! செயல்திறனும், அனுபவச் சம்பத்துமுள்ள இன்றைய உத்தியோகஸ்தர்களின் சேவையை, இவர்கள் திவானுடைய காட்டுமிராண்டித்தனமான கொள்கைத் திட்டங்களுக்காகப் பணிபுரிந்தனர் என்பதனால் காங்கிரஸினால் உதறித் தள்ளிவிட முடியுமா? அது சரிதானா? காங்கிரஸ் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறபோது, அதன் ஜனநாயகத் திட்டங்களைத் தகர்த்திட சர்வாதிகாரத்தில் நம்பிக்கை வைத்திருக்கிற ஒரு கும்பல் செயல்படுகிறதென்றே வைத்துக்கொள்வோம். உத்தியோகஸ்தர்கள்தானே, அந்தக் கும்பலை அடக்க வேண்டியவர்கள்? அவ்வாறு செயலாற்ற வேண்டியிருக்கும். நிரந்தரமான இந்த அரசு இயந்திரத்தைப் பலவீனப்படுத்தலாகாது! இவர்களுடைய திறமையை அழித்துவிடலாகாது! எந்த ஒரு நாட்டுக்கும் நிரந்தரமாக இருந்து வருவது அதன் அரசு இயந்திரந்தான்.

ஜனநாயகத்தில் அமைச்சரவைகள் மாறி மாறி வருகின்றன. ஆனால் அரசு இயந்திரம் நிரந்தரமாக நிலை பெறும். நிலை பெறவேண்டும்.

''நான் இதைச் சொல்லக் காரணம் உண்டு. நமது சம்ஸ்தானத்திலுள்ள உத்தியோகஸ்தர்களிடம் நாம் பகைமை கொள்ளலாகாது. 'தூக்கிலே போடு! சிறையிலடை!' என்பனபோன்ற கோஷங்களை நாம் எழுப்பியிருக்கிறோம்; கோஷிக்கச் செய்திருக்கிறோம். ஆனால் அதெல்லாம் உணர்ச்சி மிகுதியினால் ஏற்பட்டவை. இன்றுகூட ஆங்காங்கு இத்தகைய கோஷங்கள் முழங்குகின்றன. அதற்காக வருந்துகிறேன். நாம் எந்த உத்தியோகஸ்தரையும் தூக்கில் போட வேண்டியதில்லை; யாரையும் சிறையில் அடைக்க வேண்டாம். பகுத்தறிவுடன் நடைமுறைக்கு ஏற்றவாறு முன்னேறுவோம்.''

நீடித்த கரகோஷம் வானைப் பிளந்தது.

கேசவபிள்ளை மலர்ந்த முகத்துடன் மேடைமீது அமர்ந்திருந்தார். பிலிப்பு உட்படச் சில காரியதரிசிகளின் தலை குனிந்து போவதைக் காண முடிந்தது.

அத்தியாயம் 29

துறவிப் பெண்

டேதார் அச்சிட்ட ஒரு துண்டுக் காகிதத்தைத் தலைமைக் காரியதரிசியின் மேஜைமீது வைத்தார். அது ஒரு 'விஸிட்டிங் கார்டு.' கேசவபிள்ளையின் கண்கள் அதன்மீது பதிந்துவிட்டன.

''தேவி ஜோதிர்மயீ மாதா.''

அவருடைய இதயத்திலே ஒரு மின்னல் பாய்ந்தது. தேவி ஜோதிர்மயீ மாதா சந்திக்க வந்திருக்கிறாள்!

ஒரு நிமிஷநேரம் வரையில், என்ன செய்வதென்று தலைமைக் காரியதரிசிக்கு விளங்கவில்லை. இப்போது சந்திக்க இயலாது என்று சொல்லி அனுப்பினால் என்ன? அல்லது உள்ளே வரச் சொல்லி அனுப்புவதா? அது ஒரு பலவீனமான நிலை; செயல்திறன் அற்றுப் போன நிலை; முடிவெடுக்கச் சக்தியற்ற நிலை!

''தேவி ஜோதிர்மயீ மாதா!''

அவள் எவ்வாறு இருப்பாள்? அவர் ஒரு விநாடி சிந்தித்துப் பார்த்தார். இப்போது அவளுடைய கண்களில் அந்தப் பழைய நெருப்புச் சுடர் இருக்குமா? கன்னங்களில் அதே குழிவு தென்படுமா? மயக்கம் ஏற்படுத்துகிற அந்த வசியம் வதனத்திலே பளிச்சிடுமா? எல்லாம் காவித் துணிக்குள்ளே மறைந்திருக்கலாம்.

இனி ஒருபோதாவது அவளைச் சந்திக்கவேண்டிய நிலைமை ஏற்படுமென்று அவர் நினைத்திருக்கவில்லை. அந்த அத்தியாயம் அத்துடன் முற்றுப் பெற்றுவிட்டதென்று எண்ணியிருந்தார். எதற்காக அவள் வந்திருக்கிறாள்? அவர் மனநிம்மதியுடன் இருக்க அவள் விடப் போவதில்லையா? பெண் துறவியான அவளுக்கு அரசாங்கத் தலைமைக் காரியாலயத்துக்குள் வரவேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டிருக்கிறது? வந்தால்கூடத் தம்மைச் சந்திக்கவேண்டிய அவசியம் என்ன? ஆத்மாவுக்கு வெளிச்சம் கிடைத்த ஒரு பெண் துறவியாகிவிட்ட நிலையில், மாறுதலடைந்த ஒருத்தியாகிவிட்ட நிலையில், தான் எவ்வாறு இருக்கிறோம் என்பதைத் தெரியப்படுத்த வந்திருக்கிறாளா? ஆயின், கேசவபிள்ளை அவளுடைய விசுவரூபத்தைப் பார்த்திருப்பவர்தாம் அல்லது வேறு வழியின்றித் திரும்பவும் தம்மிடமே வந்திருக்கிறாளா? அவளுக்குத் தலைமைக் காரியாலயத்தில் இவ்வாறு வர வெட்கம் இல்லையா? பழைய நிகழ்ச்சிகளை அனைவருக்கும் நினைவுபடுத்தி, அதன்மூலம் தமக்கு அவமானத்தை ஏற்படுத்திவிட யாரோ தீட்டிய ஒரு திட்டத்தின் பகுதி

தானு இது? கேசவபிள்ளைக்குச் சந்தேகம் ஏற்பட்டது. தங்கம்மா சீஃப் செக்ரடரி கேசவபிள்ளையைச் சந்திக்க வந்திருக்கிறாள். அது ஒரு செய்தி யாக இருக்கும். பேச்சுக்கு விஷயமாகிவிடும். பழைய கதைகளைப்பற்றித் தெரிந்தவர்கள் அவ்வாறு பேசுவார்கள். விஷயம் புரியாத புதிய மனிதர்கள் அதைக் கவனித்துக் கேட்பார்கள். அப்புறம், எதிராளி களுக்குப் பல நாட்கள் வரைக்கும் பேசுவதற்கான விஷயம் கிடைத்து விடும்.

எதற்காக வந்திருக்கிறாள் என்று கேட்டுவர டபேதாரிடம் சொல்ல முனைந்தார் கேசவபிள்ளை. உத்தியோக நிலையை வைத்துப் பார்க்கிற போது சந்திக்க வந்ததன் நோக்கத்தை முன்னதாகவே அறிந்து கொள் வதில் தவறு ஒன்றும் இல்லை. அப்போது உள்ளுக்குள்ளிருந்து யாரோ உபதேசிப்பதாகக் கேசவபிள்ளைக்குத் தோன்றியது. அது வேண்டாம். மறந்துவிடக்கூடியவளா, அவள்? அந்த நாற்காலியிலே அமர்ந்தவாறு வந்ததன் நோக்கத்தை அறிந்த பிறகுதான் சந்திப்பது என்று சொல்வது சரிதானு? அவள் ஓர் அந்நியப் பெண்ணு? வாழ்நாளில் அவளை மறந்துவிட முடியுமா? அவள்மீது ஒருவிதமான வெறி இருந்ததில்லை என்று சொல்ல முடியுமா? அந்தப் பழைய கால நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றுக அவரது மனக் கண் முன்னே தோன்றின. மாறுபட்ட, முரண்பட்ட அநுபவங்கள்!

எவ்வாறு அவளைச் சந்திப்பது? என்ன பெயர் சொல்லி அவளை அழைப்பது? மாதா என்று? அது முடியாது. தங்கம்மா என்று அழைக்க லாமா? இன்று அவள் பழைய தங்கம்மாவா? அவளிடம் எப்படி நடந்து கொள்வது? இவ்வகையான சந்தர்ப்பம் வாழ்நாளில் ஏற்படும் என்று கேசவபிள்ளை எதிர்பார்த்திருக்கவில்லை.

உத்தரவை எதிர்பார்த்தவாறு டபேதார் நின்றார். அவர் தன்னி யானந்த ஸ்வாமிகளுடைய பக்தர் என்றே தோன்றியது.

கேசவபிள்ளை உத்தரவு போட்டார்:

''சிறிது நேரம் கழியட்டும்!''

''உத்தரவு!''

டபேதார் தகவல் கொடுக்கக் கிளம்பினார். எதற்காகச் சிறிது நேரம் கழியவேண்டுமென்று கேசவபிள்ளை யோசித்தார். அவள் எதற் காக அவ்வளவு நேரம் வரையில் காத்திருக்கவேண்டும்? அது சரிதானு?

கேசவபிள்ளை டபேதாரை அழைத்தார். ''வேண்டாம் நில்லு!''

ஆனால் வரச் சொல்லிக் கட்டளையிடவில்லை. டபேதார் கடைகளையை எதிர்பார்த்தவாறு நின்றார். அவர் காரியதரிசியின் திகைப்பை—ஆம். அது திகைப்பேதான்—பார்த்தாரோ, என்னவோ?

எதற்காக இப்படித் திகைக்கவேண்டும்? சந்திக்க இயலாதென்று சொல்லிவிட்டால் என்ன? இல்லாவிட்டால், வரச் சொல்லியனுப்ப லாமா? சந்திக்க இயலாதெனச் சொல்ல மனம் ஒப்பவில்லை. சந்திக்க வேண்டுமென்று முடிவெடுக்கச் சக்தியும் இல்லை. இந்தத் தளர்ச்சிக்குக் காரணம் என்னவென்று தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை.

அப்போது ஒரு கேள்வி எழுந்தது. இந்த நிலைக்குக் காரணம் யார்? அவள்தானே? அவள் தானென்று உறுதிப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் கேசவபிள்ளைக்கு உண்டு. தான் திருமணம் செய்திராவிட்டால் கூட இந்த முறையில் அல்லது இதைவிட மோசமான முறையில்தான் காரியங்கள் நடைபெற்றிருக்குமென்று அவர் சுயமாக வாதம் புரிந்தார். அவளுடைய செயல்களை ஒட்டுமொத்தமாக யோசித்துப் பார்த்தால், அவளே தவறு இழைத்தவள் என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. ஆனால், தான் தவறு செய்யாதவன் அல்ல என்று வாதிக்கவும் அவரால் முடியவில்லை.

ஓ! இந்த டபேதார் எல்லாவற்றையும் புரிந்துகொள்கிறார். தலைமைக் காரியதரிசி உத்தரவு போட்டார்: ''வரச் சொல்!''

கேசவபிள்ளை நாற்காலியில் அமர்ந்துவிட்டார். சுவரில் படிந்திருந்த ஒரு கறைமீது பார்வையைச் செலுத்தியவாறு அமர்ந்திருந்தார். சிந்தனைகளின் மோதலை முகத்திலிருந்து மறைத்து விடுவதற்கான ஒரு முயற்சியாகவே அவ்வாறு செய்துகொண்டிருந்தார். அது பலன் அளித்ததென்றே தோன்றுகிறது.

அவளுக்கு இப்போதுகூடச் செழிப்பான கூந்தல் இருக்கிறது. சில இழைகள் நரைத்திருக்கின்றன. அவ்வளவுதான். முகத்தில் அவ்வளவாக மாறுதல் ஏதும் ஏற்பட்டுவிடவில்லை. வேஷ்டியும், ரவிக்கையும், மேல்வேஷ்டியும் எல்லாம் காவித் துணிகள்தான். கழுத்திலும் கைகளிலும் நகைகள் இல்லை.

அவர் ஒரு நாற்காலியைச் சுட்டிக் காட்டியவாறு அவளை உட்காரச் சொன்னார். ஜோதிர்மயீ மாதா அமர்ந்துகொண்டாள். கேசவபிள்ளையின் முகம் உணர்ச்சியற்றிருந்தது. சில நிமிஷங்கள் மௌனமாக நகர்ந்தன.

ஜோதிர்மயீ மாதாவுக்கு எவ்விதமான பதற்றமும் இல்லை. அறிமுகமே இல்லாத ஒரு மனிதரின் முன்னிலையில் தான் அமர்ந்திருப்பதாக அவள் எண்ணுவதுபோன்ற தோற்றமும் இல்லை. ஓர் அதிகாரியைப் பார்க்க வந்தால், வந்த காரியத்தைச் சொல்லத் தொடங்கவேண்டும் அல்லவா? அதுதானே செய்யவேண்டியது? எதற்காக வந்திருக்கிறீர்கள் என்று அந்த அதிகாரி கேட்கவேண்டுமா? வந்தவர்தான் பேச்சைத் துவக்க வேண்டும். ஆனால், கேசவபிள்ளை தான் கேட்க வேண்டுமென்ற பாணியிலேதான் அவள் அமர்ந்திருந்தாள்.

அவ்வாறு நீண்டநேரம் வரையில் சுவர்மீதுள்ள கறைமீது பார்வையைச் செலுத்திக்கொண்டிருக்கக் கேசவபிள்ளையால் முடியவில்லை. எதற்காக வந்தீர்கள் என்று, வந்ததன் நோக்கத்தை முதலில் கேட்காமலேயே முன்னிலையில் வர அனுமதியளித்த பார்வையாளரிடமே கேட்டுவிடலாம். கேட்கவேண்டியதுங்கூட. ஆனால் அந்தக் கேள்வியை அவரால் கேட்கமுடியவில்லை. அவர் ஒரு பேனாவைக் கையிலெடுத்து ஏதோ ஒரு காகிதத்தில் கிறுக்கிக்கொண்டிருந்தார். அவருக்குத்தான்

ஏதோ புகார் இருந்து வருவதாகத் தோன்றியது. அவர்தாம் அதைச் சொல்லத் தொடங்கவேண்டும்.

மௌனத்தைக் கலைத்தது ஜோதிர்மயீதேவிதான். அவள் சொன்னாள்: ''ஆசிரம விஷயமாகப் பேச வந்திருக்கிறேன்.''

கேசவபிள்ளை தலை உயர்த்திப் பார்த்தார். அவர் மூச்சுவிட்டார். ஓ! ஒரு விஷயமாகப் பேச வந்திருக்கிறாள்.

ஜோதிர்மயீ மாதா தொடர்ந்து கூறினாள்: ''கரைகுளத்திலுள்ள கொஞ்சம் நிலத்தை ஆசிரமத்துக்காகப் பதிவு செய்து தரவேண்டும். அங்கேதான் ஆசிரமத்தை நிறுவத் திட்டமிட்டிருக்கிறோம். இலவமாகப் பதிவு செய்து தந்தால் பேருதவியாக இருக்கும்.''

கேசவபிள்ளை, சிறிது முயற்சி எடுக்கவேண்டி இருந்ததென்றாலும், ஓர் அதிகாரியாக மாறிவிட்டார்.

''ப்ராப்பர் சானல்' வழியாக விண்ணப்பித்துக்கொண்டால், அதைப்பற்றி யோசிப்போம்.''

அந்த வாசகம் தம்மையே பார்த்து ஏளனம் செய்வதாகக் கேசவபிள்ளைக்குத் தோன்றியது. அவரது பதற்றம் முழுவதும் வெளிக்கிளம்பியது. அசட்டுத்தனமாகப் பேசியதாக அவர் எண்ணிக்கொண்டார். அப்படிப் பேசியிருக்கக்கூடாது. அப்புறம் எப்படி? அதுவும் தெரியாது. ஆனால், எடுத்துக்கொண்ட நிலையிலேயே நிற்க முடிவு செய்தார். உத்தியோக அந்தஸ்து நிலையைக் கைவிடவேண்டாம்.

ஜோதிர்மயீ மாதா ஒருமுறை புன்னகை செய்தாள். ஒரு நீர்க்குமிழி உடைவதுபோல் தமது உத்தியோக அந்தஸ்து தகர்ந்துவிட்டதாகக் கேசவபிள்ளைக்குத் தோன்றியது. இழந்ததைத் திருப்பி எடுக்க வேண்டும். திருப்பி எடுத்தேயாகவேண்டும்.

ஜோதிர்மயீ மாதா கூறினாள்: ''ப்ராப்பர் சானல்' எனக்குத் தெரியும். அவ்வாறே மனுச் செய்யவும் செய்வோம்.''

'ஆகட்டும், அப்போது அதைப்பற்றி யோசிப்போம்' என்றுதான் உடனடியாகச் சொல்லவேண்டியது, அவ்வாறு சொல்லக் கேசவபிள்ளை முற்படவும் செய்தார். அது தம்மை மீண்டும் முட்டாளாக்கி விடுமென்று அவருக்குத் தோன்றியது. அவ்வாறு சொல்லிவிட்டால் அவள் குலுங்கிக் குலுங்கி நகைத்துவிடுவாள் என்று அவர் பயந்தார். அவளுடைய அந்தச் சிரிப்பு, அவள் சிரிக்காமலேயே, அவர் காதுக்குள்ளே முழங்கத் தொடங்கியது.

இப்போது இந்த விஷயத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைபற்றி ஜோதிர்மயீ மாதா எதையும் பேசவில்லை. ''ஆகட்டும்; அதைப்பற்றி யோசிப்போம்'' என்று கேசவபிள்ளை பேசவும் இல்லை. இருவரில் யாராவது மேற்சொன்னவாறு பேசியிருந்தால் ஒருவேளை அந்த விஷயம் அவ்வாறு முற்றுப் பெற்றிருக்கும். இப்போது அது முற்றுப் பெறாமல் இருந்து வருகிறது. ஜோதிர்மயீ மாதாவுக்கு வேறு ஏதோ நோக்கங்கூட இருப்பதாகத் தோன்றியது.

அவள் கூறினாள்: ''ஹிந்துக்களுக்கு மட்டுமின்றி, அனைத்துச் சமூகத் தினரின் ஆத்மிக முன்னேற்றத்துக்கான ஒரு ஸ்தாபனந்தான் இந்த ஆசிரமம்.''

அவர் சுய நினைவின்றி ஏளனமாகத் திடீரெனச் சொல்லிவிட்டார்: ''ஆமாமாம். ஆத்மிக முன்னேற்றத்துக்காகவேதான். எனக்குப் பல்வேறு விஷயங்கள் தெரியும்.''

அவள் கேட்டாள்: ''ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்?''

அவர் அழுத்தமாகச் சொன்னார்: ''எனக்கு நன்றாகத் தெரியும்.''

''ஒருமுறை ஆசிரமத்தை வந்து பாருங்கள். ஒரு நாள் அங்கே நடை பெறும் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துப் பாருங்கள். அப்போது தெரியும், யாரோ பொறுமைக்காரர்கள் கட்டிவிட்ட கதைகளை நம்பிக்கொண் டிருக்கிறீர்கள் என்று.''

கேசவபிள்ளைக்கு இப்போது சொல்ல விஷயங்கள் கிடைத்துவிட்டன. ''என்னைக்கூட, மனமாறுதலை உண்டுபண்ணி அந்தக் கும்பலுக்குள்ளே சேர்த்துவிடலாமென்று நினைக்கிறயா?''

''இல்லை.'' அவள் அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள். அவருக்கு ஆசிரமத்தில் குருட்டு நம்பிக்கை ஏற்படுத்தவோ, ஒரு பக்தராக மாற்றி விடுவதற்கோ அவள் வரவில்லை. ஒரு நல்ல காரியத்துக்காக உதவி யளிக்கக் கோரி வந்திருக்கிறாள். அது நல்லதுதான் என்று உணர்த்துவதற் காகவே அவ்வாறு கூறினாள்.

கேசவபிள்ளை ஒருமுறை ஏளனப் புன்னகையுடன் சொன்னார்: ''அந்தக் கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டியது ஒரு நல்ல முகூர்த்தத்தில் அல்லாமல் போய்விட்டது. அங்கேதானே இதெல்லாம் நடைபெறுகிறது?''

தொடர்ந்து சிறிது அதிகாரம் தொனிக்கிற குரலில் கூறினார்: ''அந்தக் கட்டடத்தை நான் கட்டித் தந்தது உன்னுடைய போக்கிரித்தனமான காரியங்களை அங்கே நடத்துவதற்காக அல்ல. அந்தக் கிழவி, உன்னுடைய தாயார் தங்கியிருப்பதற்காகவும் கூடத்தான். அதுவோ போய்விட்டது. இனிக் கொஞ்சம் சர்க்கார் நிலத்தைக்கூட உனக்கும், உன்னைப்போல் நடத்தை கெட்டுவிட்ட சிலருக்கும் போக்கிரித்தனங்கள் நடத்த விட்டுத் தரவேண்டுமென்று கேட்கிறாய்?''

ஜோதிர்மயீ இத்தகைய பேச்சை அவரிடமிருந்து எதிர்பார்த்திருக்க வில்லை. இவ்வாறு 'வெட்டு ஒன்று, துண்டு இரண்டு' என்ற முறையில் அவர் கேட்டுவிடுவார் என்ற ஓர் எண்ணங்கூட அவளுக்கு ஏற்பட் டிருக்கவில்லை. ஜோதிர்மயீ நேரடியாகச் சென்று வேண்டிக்கொண்டால், அந்த வேண்டுகோளைத் தலைமைக் காரியதரிசி மறுக்கமாட்டார் என்றே ஆசிரமத்தில் உள்ளவர்கள் எல்லாரும் நம்பியிருந்தனர். அந்தப் பழைய காதல் கதையை அறியாதார் யார் இருக்கிறார்கள்? ஜோதிர் மயீக்குக்கூட அத்தகைய நம்பிக்கை இருந்தது. அந்த மனிதரைத் தங்கம் மாவுக்கு நன்றாகத் தெரியுமல்லவா? அவர், வெறுப்படைந்து பிடிவாத குணத்துக்குள்ளாகி ஒருபோதும் அவள் பார்த்ததில்லை. காலால் மிதித்து

வீட்டிலிருந்து வெளியே துரத்தியனுப்பியபோதுகூட, அவளே தவறு செய்துவிட்டபோதுகூட, அவர்மீது சிறிதும் அக்கறை காட்டாமல் இருந்து வந்தபோதுகூட, அவரை அவமதித்தபோதுகூட ஏனென்று ஒரு வார்த்தை கேட்காமல் இருந்தவர்தாம். இன்று அந்தப் பழைய தங்கம்மா உருமாறி வந்திருக்கிறாள். இந்த மாறுதலை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? ஒரு நிமிஷம் வரையில் அவள் வாய் திறக்கவில்லை.

கேசவபிள்ளை, ஜோதிர்மயீ மாதாவின் முகத்திலேயே பார்வையைச் செலுத்தியவாறு கேட்டார்: ''உன் பெயரில்தான் அந்தக் கட்டடம் இருந்து வருகிறதென்றாலும், அது உனக்கு மட்டுந்தான் சொந்தமென்று நினைக்கிறாயா?''

ஜோதிர்மயீ பதில் சொல்லவில்லை. ஒருவிவேளை அந்தக் கேள்வியை அவள் புரிந்துகொண்டாளோ என்னவோ?

''நான் அதைக் கட்டியது உன்னுடைய தாயாருக்காகவும் கூடத் தான்.''

மாதா பதில் உரைத்தாள்: ''அம்மா அங்கிருந்து கிளம்பிச் சென்றாள். நான் சொல்லிப் போகவில்லை. இறக்கிவிடவும் இல்லை.''

''ஆமாம். அவரால் அங்கே எப்படித் தங்கியிருக்கமுடியும்? பொறுக்க முடியாமல் கிளம்பிப் போனார். அதிருக்கட்டும். யாரிடம் அநுமதி பெற்று அதை நீ ஆசிரமமாக்கினாய்?''

''என்னுடைய. . . என்னுடைய . . . ஆத்மிக விமோசனத்துக்காக!''

''ஆத்மிக விமோசனத்துக்காக! ஆகா! என்ன விமோசனத்தை நீ அடையப்போகிறாய்? அதெல்லாம் நானே நேரடியாகப் பார்த்தது தானே? அன்று அங்கே பார்த்த அந்த இளைஞன் அல்லவா, உனக்கு விமோசனத்தைத் தேடித் தருகிறவன்!''

மாதா ஒருமுறை கேசவபிள்ளையை உற்றுப் பார்த்தாள். அவருக்கு இத்தகைய ஒரு தன்மைகூட இருக்கிறதென்று அந்தப் பெண் அறிந்திருக்க வில்லை. ஒருவேளை, அதனால்தான் அவள் அப்படிப் பார்த்திருக்கவேண்டும். முன்னால் அமர்ந்திருப்பவர் முன் நாட்களில் தனது காதலனை இருந்த கேசவபிள்ளைதானா என்று மாதாஜிக்கு இப்போது சந்தேகம் ஏற்பட்டிருக்க வேண்டும். அந்தக் கேசவபிள்ளை எதற்கும் ஆத்திரமடையாதவராக இருந்தார். அந்தஸ்தைப் பார்ப்பவராக இருக்கவில்லை. அதிகாரத்தைப் பற்றிய உணர்வு அவருக்கு இருக்கவில்லை. அதட்டிப் பேசத் தெரியாதவராக இருந்தார். பொறுமைசாலி, சாதுவானவர்!

மீண்டும் ஜோதிர்மயீக்குப் பதில் இல்லாமற் போய்விட்டது. கேசவ பிள்ளை விட்டுக் கொடுக்கவில்லை. குரலைச் சிறிது அடக்கியவாறு அவர் கேட்டார்: ''அந்த மகா சாமியார் இருக்கிறாரே, உன்னுடைய குருநாதர், அவரைச் சந்தித்தபோது உன்னுடைய ஆத்மாவுக்குச் சாந்தி கிடைத்ததா? அது திருப்தியடைந்து விட்டதா?''

அந்தக் கேள்வி மாதாவுக்குப் பிடிக்கவில்லை: ''இதெல்லாம் என்ன, இப்படிப் பேசுகிறீர்கள்?''

கொடூரமான ஒரு திருப்தி அவருக்கு ஏற்பட்டது. அத்துடன் பற்களைக் கடித்தவாறு கேட்டார்: ''ஆம். அதுதான். உண்மையிலேயே அதுவேதான். நீ திருப்தியடைந்து விட்டாயா?''

''ஓம்! சாந்தம், பாபம்! சாந்தம், பாபம்!'' மாதா காதுகள் இரண்டையும் பொத்திக்கொண்டாள். ''நான் இங்கே வந்திருக்கக்கூடாது.''

கேசவபிள்ளை திருப்தியடைந்தவராக, ''ஆம், அது சரிதான். நீ இங்கே வந்திருக்கக்கூடாதுதான். உன்னுடைய அனைத்து இரகசியங்களையும் தெரிந்து வைத்திருக்கிற ஒருவனிடம்! மிகப் பெரிய தவறுகிவிட்டது!'' என்றார்.

மாதாவினால் பொறுக்க முடியவில்லை. அவள் அத்தனைக் கட்டுப்பாடுகளையும் விட்டெறிந்தவாறு கூறினாள்: ''என்னை நீங்கள்தான் அழித்தீர்கள். நீங்கள் ஒருவர்தாம் என்னைக் கெடுத்துவிட்டீர்கள்.''

கேசவபிள்ளை அவளுடைய உணர்ச்சி மாறுதலைப் பொருட்படுத்தாதவர்போல் கூறினார்: ''ஓஹோ! இப்போது இப்படிச் சொல்கிறாயா?''

''இல்லையா? நினைவுகூர்ந்து பாருங்கள்!''

''நானும் அதைத்தான் சொல்லுகிறேன் மாதாஜீ!''

''நீங்கள் என்னைக் கெடுத்துவிட்டீர்கள். என் காரணமாக நீங்கள் நல்ல நிலைமைக்கு வந்துவிட்டீர்கள்.''

கேசவபிள்ளை ஏளனமாகக் கூறினார்: ''நூறு தடவை அதையே பேசு. அதற்காக?''

''நீங்கள் நன்றி இல்லாதவர்.''

''அப்புறம்?''

''நீங்கள் என்னை அழித்துவிட்டீர்கள்.''

கேசவபிள்ளை அடக்கமான குரலில் குலுங்கிச் சிரித்தார். திரும்பவும் அதை நூறு தடவைகூடப் பேசச் சொன்னார். அவர் கடுமையான குரலில் கேட்டார்: ''நான் அழித்துவிட்டேன்; கெடுத்துவிட்டேன் என்றல்லாமல், எப்போது கெடுத்துவிட்டேன், எவ்வாறு அழித்து விட்டேன் என்று உன்னால் சொல்லமுடியுமா?''

''நீங்கள் இந்தப் பதவியில் அமர்ந்திருக்கிறீர்கள். அது எப்படிச் சாத்தியமாயிற்றென்று நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்.''

''அது உன் காரணமாக அல்ல. உன்னுடைய தகப்பனார் காரணமாகத்தான். உன்னுடைய அன்னை காரணமாகத்தான். அவர்களிடம் எனக்கு நன்றி உண்டு. அந்த மனிதரைப் பொறுத்தவரையில் நான் என் கடமையை நிறைவேற்றிவிட்டேன். அந்தத் தாயார் இப்போது கவலையில்லாமல் வாழ்ந்து வருகிறார். அவரை இறுதிவரையில் காப்பாற்றவும் செய்வேன்.''

கேசவபிள்ளைக்குத் திருப்தி ஏற்பட்டுவிட்டதாகத் தோன்றவில்லை. இன்னும் சில கேள்விகள் கூடக் கேட்கவேண்டியிருந்தன; சில விஷயங்கள்கூடச் சொல்லவேண்டியிருந்தன. அது இயற்கைதானே? முதல் முதலாக ஒரு முத்தம் கிடைத்தது அவளிடமிருந்துதான். அவள்

அவருகாகாகத் தூக்கமின்றிக் காத்திருந்திருக்கிறுள். அவற்றிற்கெல்லாம் வாழ்க்கையில் ஒரு பொருளும் இல்லையா? அவையெல்லாம் சில உரிமைகளை உறுதிப்படுத்தாதா? அவள்கூடப் பதில் அளிக்கக் கடமைப்பட்டவள் தான்.

கேசவபிள்ளை சொன்னதற்கு விடையளிக்க அவளுக்கு நான்கைந்து நிமிஷங்கள் வரையில் யோசிக்க வேண்டியிருந்தது.

''அது . . . அது . . . அப்பா உங்களுக்கு வேலை வாங்கித் தந்தார் என்றுல், அது நான் உங்களை நேசித்ததனுல் தானே?''

கேசவபிள்ளை கேட்டார்: ''நேசித்தாயா? உனக்குப் பைத்தியமா?''

'ஆம்; நேசித்தேன்' என்று சொல்ல ஜோதிர்மயிக்குத் தைரியமில்லை. அவள் விழித்தபடியே அமர்ந்துவிட்டாள். இமை அசைந்துவிட்டால் கண்ணீர் உதிர்ந்து விழுந்துவிடும்.

''உனக்கு அழவும் தெரியுமா? உன் கண்ணில் நீர் சுரக்குமா?''

அவள் காவித் துணியின் தலைப்பினுல் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். அவள் மீண்டும் சொன்னது, அவர் தன்னைக் கெடுத்துவிட்டாரென்றுதான். அது எங்ஙனமென்று கேசவபிள்ளை கேட்டார்.

''நீ சுயமாகக் கெட்டுப் போனுய் என்று சொல். கெடுத்துவிட்டேன் என்று சொல்லாதே. இல்லாவிட்டால், நான் உன்னை எங்ஙனம் கெடுத்துவிட்டேன் என்று தெளிவாகச் சொல்லு.''

''எனக்கொன்றும் சொல்வதற்கில்லை.''

''அது சரி. ஆனுல் நீயும், உன்னுடைய சாமியார் நண்பர்களும் சேர்ந்து இந்தப் புனிதமான துணிக்கு ஏன் அவமானத்தைத் தேடி வைக்கிறீர்கள்? வேண்டாம், அதை நான் சொல்லவேண்டியதில்லை. மனிதர்கள் ஒவ்வொரு விதமாக வாழ்ந்து வருகிறார்கள். உனது எதிர் காலத்தைப்பற்றி நீ சிந்தித்திருக்கிறுயா? நன்றுகச் சிந்தனை செய்த பிறகே நீ இந்தத் துணியை உடுத்திக்கொண்டாயா? உனக்கு இருந்து வந்த அனைத்தையும் குப்பைத் தொட்டியில் வீசியெறிந்துவிட்டாயே!''

ஜோதிர்மயி மாதா ஒரு வார்த்தைகூடப் பதில் சொல்லவில்லை. கற்சிலைபோல் அமர்ந்திருந்தாள். இவ்விதம் கொடூரமாகப் பேசுவது கேசவபிள்ளைக்கு வேடிக்கையாக இருந்தது. எத்தனையோ சொல்லியும் திருப்தி ஏற்படவில்லை. அவளைப் புண்படுத்தியது போதுமென்று தோன்றவில்லை. அவள் இதயத்தைப் புண்படுத்துவதிலே அவர் பேரின்பம் அடைந்தார்.

கேசவபிள்ளை தொடர்ந்து கேட்டார். அந்தக் கேள்வியின் தொனியும் உருவமும் ஜோதிர்மயியின் நிலையில் அக்கறையுள்ள ஒரு மனிதனுடையதாக இருந்தன: ''உண்மையைச் சொல்! சக்களத்திப் போரின் கசப்பான அநுபவங்கள் உனக்கு இப்போது ஏற்படத் தொடங்கவில்லையா?''

ஜோதிர்மயி மாதாவுக்கு அந்தக் கேள்வி சரிவரப் புரியவில்லைபோல் தோன்றியது. அதைத் திரும்பவும் கூறவேண்டுமென்பதுபோல் அவள் அவருடைய முகத்தை நோக்கினுள்.

அநுதாபமுடைய ஒரு மனிதர் தகவல்களை அறிவதற்காகக் கேட்பது போல், கேசவபிள்ளை அந்தக் கேள்வியை விளக்கிக் கூறினர்: ''உன்னோடு சேர்ந்து ராஜிநாமாச் செய்து வந்தவர்களும் அல்லாதவர்களுமான பெண் துறவிகள் இருக்கிறார்களே, உங்களுக்கிடையில் போட்டியும் பொறுமையும் ஏற்படுவதில்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி.''

ஜோதிர்மயீ பதிலளித்தாள்: ''நான்தான் மாதா. மற்றவர்கள் எல்லாரும் எனக்குக் கீழுள்ளவர்கள்தான்.''

''ஆம், அதனால்தான் கேட்டேன், போராட்டம் ஆரம்பமாகவில்லையா என்று? ராஜிநாமாச் செய்துவந்த உத்தியோகஸ்தப் பெண்களுக்குள்ளே உன்னைவிட உயர்ந்த அந்தஸ்தை வகித்து வந்தவர்கள் இருக்கிறார்களே? அவர்களுக்கு நீ மாதாவாகக் காட்சியளிப்பது பொறுக்குமா?''

ஜோதிர்மயீ தன்னையும் அறியாமலேயே திறந்து சொல்லிவிட்டாள்: ''அதெல்லாம் நன்றாகக் கவனித்துப் பார்த்துத்தான் நான் செயலாற்றி வருகிறேன். அவர்களில் யாருக்குமே இதுவரையில் காவித் துணி கொடுக்கப்படவில்லை. என்னோடு போட்டி போட அவர்களால் முடியாது.''

''ஆயினும், நீ மாதாஜியாக இருப்பதை முன்னிட்டு அவர்கள் மனத்துக்குள்ளே முணுமுணுப்பு இருந்து வராதா? அது பெண்களுடைய இயல்புதானே?''

மந்திர சக்தியால் ஈர்க்கப்பட்டவள்போல் மாதாஜி கூறினாள்: ''இருக்கலாம். ஆயினும், நான்தான் மாதா.''

கேசவபிள்ளை தந்திரத்தை மாற்றிக்கொண்டார். அவளைப் புண்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு மட்டும் கேட்ட கேள்விக்கணைகளை மாற்றி அவர் இப்போது அவளிடம் அநுதாபம் கொண்டவர்போல் நடிக்கலானார். இனி அவள் எல்லாவற்றையும் ஒளிவுமறைவின்றித் திறந்து சொல்லிவிடுவாள். உண்மையிலேயே அவள் சாதுவானவள்; விவரம் தெரியாதவள்.

மூன்று நான்கு நிமிடங்களுக்குப் பிறகு அவர் சொன்னார்: ''நான் உன்னிடம் சிறிது கடுமையாகப் பேசிவிட்டேன் அல்லவா? அவ்வாறு நீ நினைக்கிறாயா?''

மாதாஜி பேசவில்லை. அவள் சிரம் குனிந்து அமர்ந்தவாறு ஒரு கைவிரல் நகத்தைப் பெருவிரலால் தேய்த்துக்கொண்டிருந்தாள். அவள் அழப் போகிறாளா? கேசவபிள்ளைக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அவர் தொடர்ந்து கூறினர்: ''இவ்விதமாகச் சிறிது அதிகாரத்துடன் உன்னிடம் கேட்கவும், உபதேசம் புரிகிற முறையில் பேசவும் எனக்கு உரிமை இருக்கிறதென்று கருதியே நான் அவ்விதம் பேசினேன். உபதேசம் என்பது என்னவென்று அறியாதவள்தான் நீ. அதனால் ஏற்பட்ட கெடுதல்களையும் நீ அநுபவித்துக்கொண்டாய். உனது தலைவிதியை எண்ணி அநுதாபம் கொள்கிறேன், அம்மா!''

''எல்லாரும் என்னை ஏமாற்றிவிட்டார்கள்.''

ஓர் அசரீரி போன்று அந்த வார்த்தைகள் அவர் காதுக்குள்ளே வந்து விழுந்தன. அதற்கான பதில் அவருடைய உள்ளத்திலிருந்து கிளம்பி நாக்கின் நுனிவரையில் வந்துவிட்டது. ஆனால் அவர் அதை அடக்கி விட்டார். அது வெளிவரவில்லை. அந்தப் பதில் இதுவாக இருந்தது: 'நீ எல்லாரையும் ஏமாற்றிவிட்டாய்!'

கேசவபிள்ளை சொன்னார்: ''சரிதான்; உண்மைதான். எல்லாரும் உன்னை வஞ்சித்தனர்.''

''எந்த இடத்திலிருந்தும் எனக்கு அன்பு கிடைக்கவில்லை.''

அதற்கான பதிலை அடக்கிவிட அவரால் முடியவில்லை. அப்போது நடித்து வந்த உணர்ச்சித் தோற்றத்தின் தன்மையை மாற்றுவதாக இருந்தது அந்தப் பதில். சந்தேகமே இல்லை. ஆயினும் கேசவபிள்ளை சொன்னார்: ''அது சரிதான்; உண்மைதான்! நீ அன்பைத் தேடி நடந்தாய். உம்! அதிருக்கட்டும்.''

அவர் தொடர்ந்து கேட்டார்: ''திறந்து சொல்லவேண்டும். எதையும் என்னிடமிருந்து மறைத்துவிடக்கூடாது. உலகம் இன்று உன்னை மாதாவாக அங்கீகரிக்கிறது. நீ அந்த வெகுமதியைப் பெற்று வருகிறாய். நீ ஒரு தெய்விக மூர்த்தியாக மாறினாலும் மாறிவிடலாம். எதிர்காலத்தில் உலகம் உன்னைப் பூஜித்து வணங்கலாம். உனக்கு மன நிறைவும் உலகத்துக்கு நன்மையும் கிடைக்கலாம். நீ ஏற்றுக்கொண்டிருக்கிற இந்த வாழ்க்கையில் ஏற்படக்கூடிய எதிர்காலப் பலன்கள் மிகப் பெரியவை. இவை அனைத்தும் எனக்குத் தெரியும். ஆனால் உன்னை நான் அறிந்திருப்பதுபோல், இந்த உலகத்தில் வேறு யாருமே அறிய மாட்டார் என்பதை நீ உணரவேண்டும். இந்தக் காவித் துணிக்குள்ளே மறைந்திருக்கிற தங்கம்மாவை எனக்குத் தெரியும். இந்தக் காவித் துணியால் என்னை ஏமாற்றிவிட முடியாது. தேவி ஜோதிர்மயீ மாதாவுடன் இவ்வாறு பேச வேறு யாராலும் முடியாதென்று எண்ணுகிறேன். அதற்கான துணிச்சல் யாருக்கும் வராதென்றே நம்புகிறேன். அத்தகைய நிலையிலே நின்று நான் கேட்கிறேன், எல்லாவற்றையும் அதனதன் உண்மையான வண்ணத் தோற்றங்களுடன் நான் அறியவேண்டும். எதையும் மறைக்காமல் நீ சொல்லிவிடுவாயா?''

மாதாஜி சிரமுயர்த்திக் கேட்டாள்: ''எதை அறியவேண்டும்?''

தேவி ஜோதிர்மயீ மாதாவின் கண்களின் ஆழப்பகுதியில் அந்த நெருப்பு ஒரு விநாடி சுடர் விட்டுப் பிரகாசித்ததாகக் கேசவபிள்ளைக்குத் தோன்றியது. ஜோதிர்மயீ தொடர்ந்து கூறினாள்: ''எல்லாம் விளைப் பயன்தான்.''

அந்த வாசகத்திலே, குரலிலே, ஒருவிதமான பரிதாப உணர்ச்சியும் சோக உணர்ச்சியும் இல்லையா? உண்டு. நிச்சயமாக உண்டு! இந்தக் காவித் துணிகூட விளைப்பயன்தான் என்றல்லவா, அந்தச் சொல்லின் பொருள்? கேசவபிள்ளை வியப்படையவில்லை.

அவர் கேட்டார்: ''வீடு, வேலை ஆகிய அனைத்தையும் உதறித் தள்ளிவிட்டு, இத்தகைய வேஷத்தைப் போடத் தீர்மானித்துக் கொண்டது, நன்முகச் சிந்தித்த பிறகுதானு? எதிர்காலத்தைப்பற்றி நன்முக எண்ணிப் பார்த்த பிறகுதானு?''

அந்தக் கேள்விக்கு விடையளிக்க அவளுக்குக் கஷ்டம் ஏற்படவில்லை.

''அவ்வாறு நான் வேலை பார்த்து, மாதமாதம் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு, நன்முக உண்டு களித்து, நல்லுடைகள் அணிந்து, நாட்கள் வாரங்கள் மாதங்கள் வருடங்கள் என்று தள்ளி நகர்த்தி வாழ்ந்து வருவதனுல் என்ன பிரயோஜனம்? சும்மா உயிர் வாழ்ந்து வரலாம். அவ்வளவுதான். அப்புறம் ஒரு நாள் உயிர் பிரிந்து செல்லும். அந்த வாழ்க்கை எத்தகைய மதிப்பும் இல்லாமல் போய்விடுகிறது.''

சிறிது நேரம் வரையில் கேசவபிள்ளை தடுமாறினர். ஜோதிர்மயி தேவிக்கு வாழ்க்கையின் பயனற்ற தன்மையைக் குறித்து இன்னும் சொல்லவேண்டியிருக்கிறது.

''எனக்குச் சொந்தமாக ஒரு வீடு இருக்கிறது, வேலை இருக்கிறது, பணம் இருக்கிறது—இவற்றினுல் எல்லாம் என்ன பயன்?'' என்று அவள் மறுகேள்வி கேட்டாள்.

கேசவபிள்ளை கேட்டார்: ''எனவே வாழ்க்கை பயனற்றுப் போகிறதென்ற எண்ணத்தினுல்தானு, இந்தக் காவித் துணியைக் கட்டிக் கொண்டாய்?''

ஜோதிர்மயி மீண்டும் ஒரு மறுகேள்வி கேட்டாள்: ''வாழ்க்கை பயனற்றதாகத்தானே இருந்திருக்கிறது?''

கேசவபிள்ளை அதற்குப் பதில் அளிக்கவில்லை. மாறுக வேறொரு கேள்விக் கணையைத் தொடுத்துவிட்டார்: ''பார்! எனக்கு உன்னைத் தெரியும். நன்முகத் தெரியும். நீ உன்னையே மறந்துவிடுகிறவளாக இருந்திருக்கிறாய். எதைப்பற்றி நான் சொல்கிறேன் என்பது புரிகிறதல்லவா? திறந்து சொல்கிறேன், உனக்கு வெறிதான். அந்த வெறியிலே நீ எங்கெங்கேயோ தத்தித் தத்திச் சென்றுவிட்டாய். இத்தகைய ஒரு பெண் வாழ்க்கை வீணுகி விட்டதென்று சொல்வதை என்னுல் புரிந்துகொள்ள முடியவில்லை. நீ எதை இழந்துவிட்டாயென்று நினைக்கிறாய்?''

அந்தக் கேள்விக்கு அவள் நேரடியான பதில் கூறவில்லை. ஒருவேளை அந்தக் கேள்வி அவளுக்குப் புரிந்திருக்காது அல்லது கூறவேண்டிய விடையைப்பற்றித் தெளிவில்லாமல் இருக்கலாம். ஜோதிர்மயி பேசினுள்: ''சேகரவிலாசத்தை எனக்காகக் கட்டினீர்கள். நிபந்தனைகளின்றி என்னிடமே ஒப்படைத்தீர்கள். அது ஒரு நல்ல கட்டடம். அவ்வளவு அருமையான கட்டடம் சொந்தமாகக் கிடைப்பதென்றுல், அது யாருக்குமே மகிழ்ச்சியளிப்பதுதான். ஆனுல், உங்களுக்கு நினைவு இருக்குமோ, என்னவோ? எனக்கு அந்த மகிழ்ச்சியோ உற்சாகமோ ஏற்படவில்லை. அந்தக் கட்டடத்தின் மாதிரியைக் கொண்டு வந்த நாள் நினைவில் இருக்கிறதா? பிறகு என்னிடம் யோசனைகளைக் கேட்டுக்கொண்

டிருந்தீர்களே? நான் ஏதாவது ஒரு கருத்தைத் தெரிவித்தேனு? அது எனக்குக் கிடைத்துவிட்டதனுல் எவ்விதமான உற்சாகமும் ஏற்பட வில்லே. கிடைத்ததும் கிடைக்காததும் எல்லாம் எனக்கு ஒன்றுபோல் தான் இருந்தது. சும்மா சொல்வதல்ல, இது உண்மை. ஆனுல் யாரும் இதை நம்பமாட்டார்கள்.''

ஒரு விநாடி மூச்சைவிட எடுத்துக்கொண்டவள்போல் நிறுத்திவிட்டு ஜோதிர்மயீ தொடர்ந்து கூறினுள்: ''அங்கே வாழ்க்கை என்றுல் சகிக்க முடியாததாக இருந்தது; அலுத்துவிட்டது. காலேயில் எழுந்திருப்பது, ஆபீசுக்குப் போகத் தயாராவது, போவது, திரும்பி வருவது—அப்புறம் நீங்கள் வந்து போய்விட்டால் அனேத்தும் தீர்ந்தது. பிறகு தூங்கலாம். தூங்குவதுகூட ஒரு வேலேயாக இருந்தது. தூக்கம்! எதற்காக உயிர் வாழ்கிறேன் என்று தோன்றிக்கொண் டிருந்தது. உண்மையைச் சொல்லட்டுமா? தற்கொலே செய்துகொள்ளப் பலமுறை முனேந்தவள் நான்.''

கேசவபிள்ளே கவனமாகக் கேட்டுக்கொண் டிருந்தார். அவள் சொல்வ தெல்லாம் உண்மைதான். அந்தக் காலத்தில் சிறிதும் உற்சாகம் அவளிடம் காணப்பட்டதில்லே. சிரிக்கக்கூட இல்லே. அவளிடமுள்ள பெண்மை உணர்ந்து செயல்படுவதாகக்கூடக் கண்டதில்லே. அலுப்புத் தட்டிக் கொட்டாவி விட்டுக்கொண்டு தமக்காகக் காத்திருந்த நாட்கள் கேசவபிள்ளேயின் நினேவுக்கு வந்தன. ஒரு காரியம் செய்து தீர்க்க வேண்டிய பாக்கி என்பதுபோல் அந்தக் கதை—பழைய தங்கம்மாவின் வாழ்க்கையின், இதுவரையில் யாராலும் காணப்படாத, அறியப்படாத பகுதிகளுக்கு வெளிச்சத்தைப் பாய்ச்சுவதுபோல் இருந்தது.

அவள் முற்றும் தகர்ந்துவிட்ட ஒரு பெண்ணுக இருந்தாள். அவளுக்கு உற்சாகம் அளிக்கத் தக்க எந்த ஒரு பொருளும் இருக்கவில்லே. யாருமே அவளே ஒருமுறை கிசுகிசுக்கச் செய்து சிரிக்க வைக்கக்கூட இல்லே. அவள் சிரிக்கவேண்டுமென்று யாருமே விரும்பியது இல்லே. அத்தகைய விருப்ப முடையவர்கள் யார் இருந்தார்கள்? எல்லேயற்ற காம உணர்ச்சியின் உலேக்களமாகத் திகழ்ந்திருந்தாள் தங்கம்மா. அது கிளர்ந்தெழுந்து விட்டால் அனேத்து எல்லேகளேயும் தகர்த்துவிடும். அவளுடைய அந்த உணர்ச்சிக்குத் திருப்தி ஏற்படவேண்டாமா? ஆனுல் அவளுடைய அந்தத் திருப்திபற்றி யாருக்கும் கவலேயில்லே. அந்த நிலேமையில் அவள் தற்கொலே செய்யத் துணிந்தாளென்றுல் அது இயற்கையானதுதான். பாவம் பெண்! அவளேப் படைப்பதற்கான மண்ணிலே இவ்வளவு கூடுதலான உணர்ச்சியைப் பிரம்ம தேவன் ஏன் பிசைந்து சேர்த்துக் கொண்டான்?

உண்மையான அநுதாப உணர்ச்சியுடன் கேசவபிள்ளே கேட்டார்: ''ஒரு குழந்தை வேண்டுமென்ற எண்ணம் உனக்கு எப்போதாவது உதித்ததுண்டா?''

''அதுகூட எனக்கு வேண்டியதில்லை என்பதுதான் பிரம்ம தேவனுடைய கட்டளை.''

அடுத்தபடியாக ஒளிவு மறைவின்றித் துணிச்சலுடன் கேசவபிள்ளை கேட்டுவிட்ட அந்தக் கேள்வி அவளை நடுங்க வைக்கவில்லை. உணர்ச்சிப் புயலை உருவாக்கி விடவில்லை. அவர் கேட்டார்: ''அந்த நிலைமையில் உன்னைப் பாதுகாத்தது அன்று நான் அங்கே பார்த்த அந்த இளைஞன் தானே? அவனுடைய பெயர் என்ன? சிதானந்தன் என்றே?''

தயக்கமின்றியே பதில் அளித்தாள் ஜோதிர்மயீ: ''ஆம். என் வாழ்க்கைப் படகை இன்னொரு திசைக்குத் திருப்பிவிட்டார் அவர். தடம் தெரியாமல் நின்றுகொண்டிருந்த நான் ஒரு புதிய துறையில் இறங்கினேன்; என்னை இறக்கிவிட்டார்.''

''அந்தப் புதிய துறையில்—வாழ்க்கையில்—எவ்வாறுதான் திருப்தியடைந்தாய்? அடையப் போகிறாய்?''

இந்தக் கேள்விகளுக்கான விடைகள் அனைத்தையும் தங்கம்மா என்ற அந்தப் பெண் ஏற்கெனவே யோசித்து வைத்திருந்தாற்போல் தோன்றியது. ஏனென்றால் அவளால் அதற்கு உடனே பதிலளிக்க முடிந்தது.

''ஈசுவர பூஜை செய்யலாம். என்னைப் போல் விதவைப்பெண்கள் துரதிர்ஷ்டக்காரிகளாகி விட்டவர்களின் சகவாசம் எனக்குக் கிடைத்து வருகிறது. அநாதைகளாகிவிட்ட பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் அபயம் அளிக்க முடிகிறது. என் வாழ்க்கையை மற்றொரு முறையில் பயன்படுத்த முடியாதென்று எனக்குத் தோன்றியது.''

''அப்போ . . . அப்போ . . . நான் கேட்கட்டுமா? வருத்தப்படமாட்டாயே?''

''கேளுங்கள்! சும்மா கேளுங்கள்! எதை வேண்டுமானாலும் கேளுங்கள்!''

அந்தக் கேள்வி சரியான உருவத்துக்கு வராததால் கேசவபிள்ளை சிறிது தடுமாறினார். அவள் அதற்காகக் காத்திருந்தாள். அவர் என்ன கேட்கப் போகிறார், எதை அறிய விரும்புகிறார் என்பது ஜோதிர்மயீக்குத் தெரியும். அவர் தடுமாறுவதைக் கண்ட அவள் சொன்னாள்: ''நான் சொல்கிறேன். நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். அந்த விஷயத்தைப் பொதுவாக நான் சொல்லி வைக்கிறேன். ஆண்டவன், மந்திர சக்தியால் என்னைத் திடீரென மாற்றிவிடவில்லை. ஆனால், அவர் என்னைப் புரிந்துகொண்டு பாதுகாத்தார்; எனக்குப் பாதையைக் காட்டித் தந்தார்.''

கேசவபிள்ளை கூறினார்: ''அதை நான் புரிந்துகொண்டேன். புரிய வேண்டியது அது அல்ல. உன்னை இவ்வாறு மாற்றியமைக்கக் கையாண்ட தந்திரம் உபதேசமா? அல்லது திருப்தியடையாத உனது பெண்மை யுணர்ச்சிகளைப் பயன்படுத்திக்கொண்டா?''

அவள் வதனம் சிவந்துவிட்டது. அதற்கான விடை கிடைக்க வேண்டியதில்லை என்று அவருக்குத் தோன்றியது. அந்த வினாவையே கேட்

டிருக்கக்கூடாது. குற்றம் இழைத்த ஒரு மனைவி கணவன் முன் அதை ஒப்புக்கொண்டாள். இருந்தும் கணவனுக்குத் திருப்தி ஏற்படுவதில்லை. அவனுக்கு அந்தக் குற்றத்தின் அனைத்து விவரங்களையும் விளக்கமாக அறியவேண்டுமாம். அத்தகைய ஒரு நிலையைத்தான் கேசவபிள்ளை கடைப்பிடிக்கிறார்.

அவள் கேட்டாள்: ''இன்னும் என்னை அழித்துவிடவேண்டுமா? இவற்றிலுல் எல்லாம் உங்களுக்குத் திருப்தி ஏற்படவில்லையா?''

அவளை அழித்துவிட்டார்! கேசவபிள்ளைக்கும் புரியாதது அதுதான். ''நான் உன்னை அழித்துவிட்டேன் என்கிறாயா?''

''ஆம். நீங்கள் ஒரு மனிதரே அல்ல. என்னைக் கெடுத்து அழித்து விட்டீர்கள்.'' உணர்ச்சிப் பெருக்கிலுல் பரவசமடைந்த ஜோதிர்மயீ அது எவ்வாறு என்று விளக்கிக் கூறினாள்: ''என்னை நீங்கள் ஒருபோதும் கட்டுப் படுத்தியதில்லை; அதட்டி நிலைக்கு நிறுத்தியதில்லை. நான் உங்களுக்குக் கீழ்ப்படிந்தவளாகத்தான் இருந்தேன். ஆனால், நீங்கள் உபதேசிக்கவோ, அதட்டவோ, கட்டுப்படுத்தவோ செய்து உங்கள் பாதுகாப்பிலே என்னை வைத்துக்கொள்ளவில்லை. எனக்குத் தேவையாயிருந்தது அதுதான். ஒருவருடைய பாதுகாப்பிலே வாழ்க்கை நடத்த வேண்டுமென்ற எண்ணந்தான் எனக்கு இருந்து வந்தது. அதாவது, நீங்கள் என்னை நேசிக்கவில்லை, என்னிடம் அநுதாபம் காட்டவில்லை. சரிதானா? நினைவுகூர்ந்து பாருங்கள்.''

அவள் சொல்வதில் உண்மை இருக்கலாம் என்ற சந்தேகம் அவருக்கு ஏற்பட்டுவிட்டது. ஜோதிர்மயீ தொடர்ந்து கூறலானாள்: ''அவ்வாறு நேசித்திருந்தால், என்னிடம் அநுதாபம் கொண்டிருந்தால் நான் இந்த நிலைமைக்கெல்லாம் ஆளாகியிருக்கமாட்டேன். எனக்கு ஓர் எஜமானர்தான் தேவையாக இருந்தார். தண்டனை அளிக்கிற ஓர் எஜமானர்! என்னிடம் ஒருபோதாவது நீங்கள் கோபித்ததுண்டா? என்னைக் கட்டுப்படுத்தியிருக்கிறீர்களா? நினைத்துப் பாருங்கள்! ஒரு பேதைப் பெண் அல்லவா, நான்? என்னை நேசிக்கவில்லை. நேசத்துக்காகத் தாகம் கொண்டு நின்றேன் நான். நீங்கள் சிறிது நேரத்துக்கு முன்பு சொன்னதுபோல் அன்புக்காக நான் அலைந்து நடந்தேன்; என்னை ஆள நல்ல மனம் கொண்ட ஒருவனைத் தேடியலைந்தேன்.''

கேசவபிள்ளைக்கு ஒரு விஷயம் புரியவில்லை. அவர் கேட்டார்: ''அப்போ . . . நேசிப்பதென்று சொன்னால், தண்டிப்பதும் அதட்டுவதும் ஆள்வதுந்தானா?'

ஜோதிர்மயீக்கு அந்த விஷயத்தில் சந்தேகம் இல்லை. ''ஆம். நேசிப்பதாக இருந்தால்தானே, உபதேசிக்க முடியும்? அதட்ட முடியும்? தண்டிக்க முடியும்?''

இருவரும் சிறிதுநேரம் வரையில் பேசாமல் இருந்தனர். கேசவபிள்ளை, நிகழ்ந்துவிட்ட அந்தக் காலத்திய நிகழ்ச்சிகளைப்பற்றி இப்போது கிடைத்திருக்கிற புதிய உணர்வின் அடிப்படையில் தம் நிலையைக் குறித்து

யோசித்துக்கொண் டிருந்தார். ஜோதிர்மயீ மாதா தன் நிலையைப் பற்றிய சிந்தனையில் மூழ்கியிருந்தாள்.

அந்தப் பெண் புரிந்துகொள்ள முடியாத ஒரு புதிராக மீண்டும் தன் முன்னால் தோன்றியிருக்கிறாள். அவள் பாதுகாப்பைக் கோருகிறாள். அந்த நாட்களில் அவளை உபதேசித்து, அதட்டிக் கட்டுப்படுத்தி வைத் திருக்க வேண்டுமாம்! அவளைத் தண்டித்திருக்க வேண்டுமாம்! அவள் மீது ஆதிக்கத்தைத் திணித்திருக்கவேண்டுமாம்! இளமைப் பருவத்திலே பலவீனமான கரங்களுக்குள்ளே சென்று விழுந்து, வாழ்க்கையே சீரழிந்து போய்விட்டதென்ற சிந்தனைதான் இப்போது அவளைத் துன் புறுத்திக் கொண்டிருக்கிறதா?

ஒரு நெடுமூச்சுக்குப் பிறகு கேசவபிள்ளை கூறினார்: ''நாம் ரொம்ப நேரமாகப் பேசிக்கொண் டிருக்கிறோம் அல்லவா?''

''ஆம்.''

''இந்தத் தலைமைக் காரியாலயத்திலுள்ள அத்தனைப் பேருக்கும் நமது பழைய கதை தெரியும். இப்போது இங்கே என்ன நடைபெறுகிறதென்று அனைவரும் ஆவலுடன் கவனித்துக்கொண் டிருப்பார்கள்.''

''ஆம். புதியதோர் அவதூறுக்கு விஷயம் கிடைத்துவிடலாம்.''

அது சரியெனக் கேசவபிள்ளை ஒப்புக்கொண்டார். ஜோதிர்மயீ அங்கிருந்து கிளம்பிச் செல்ல எழுந்தாள். அப்போது, அவர் உள்ளம் நிறைந்த உணர்ச்சியுடன் கூறினார்: ''இவ்வளவு தூரம் நான் அறிந் திருக்கவில்லை தங்கம்மா. உன்னைத் தங்கம்மா என்றே அழைக்கட்டுமா? இப்போதுகூட உன்னைச் சரிவரப் புரிந்துகொள்ள என்னால் முடியவில்லை. அது எப்படியோ இருந்துவிட்டுப் போகட்டும். ஒரே ஒரு விஷயத்தை மட்டுந்தான் உன்னிடம் நான் சொல்ல விரும்புகிறேன். நீ ஆசைப்படுகிற திருப்தியும் சுகமும் வாழ்க்கையில் எந்நாளும் உனக்கு உண்டாகட்டும்! எனது மனம் கனிந்த வாழ்த்துக்கள் உனக்கு உரித்தாகுக! உனக்காகச் செய்யவேண்டியதை எல்லாம் செய்துவிட்டேன் என்ற எண்ணந்தான் எனக்கு இருந்துவந்தது. அன்றைய நிலையில் எனது கடமையைச் செய்து முடித்தேன் என்றுதான் நம்பியிருந்தேன். அந்தக் கடமை பூர்த்தியாக வில்லை என்று எனக்கு இப்போது தோன்றுகிறது. நான் உன் விஷயத்தில் தவறு செய்துவிட்டேன் என்றும் எனக்குத் தோன்றுகிறது. உனக்காக இன்னும் சிலதுகூடச் செய்யவேண்டியிருக்கிறதென்று நினைக்கிறேன். உனக்கு நல்லது வரட்டும்!''

ஜோதிர்மயீ கிளம்பிச் சென்றாள். அவள் நடந்துபோவதை ஜன்னல் அருகே நின்றவாறு கேசவபிள்ளை பார்த்துக்கொண் டிருந்தார். வாழ்க் கையில் தோல்வியுற்று, காவித் துணிக்குள்ளே புகுந்துவிட்ட ஓர் உருவம் நகர்ந்து செல்கிறது. ரொம்ப நேரம் வரை அவர் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவாறு நின்றுகொண் டிருந்தார்.

அதிக நாட்கள் கழிந்துவிடவில்லை. ஒரு நாள் பாரதியம்மா திடீ ரென மயக்கமடைந்து விழுந்துவிட்டாள். அப்புறம் அந்தப் படுக்கையி

லிருந்து அந்தக் கிழவி எழுந்திருக்கவில்லை. தனயர்கள் வந்து தாயாரைப் பார்க் வியூவிலிருந்து எடுத்துச் சென்றனர்.

மறுநாள் பாகீரதியம்மா இறந்துவிட்டாள். கேசவபிள்ளையும் கார்த்தியாயினியம்மாவும் ஈமச்சடங்குகளில் பங்கெடுத்துக் கொண்டனர்.

ஜோதிர்மயீ தேவி, இறக்கும் தருவாயிலோ, ஈமக்கிரியைகளின் போதோ வந்து சேரவில்லை. ஆசிரம அலுவல்கள் நிமித்தமாக அவள் வெளியூருக்குச் சென்றிருந்தாளாம்.

அத்தியாயம் 30

காய்கள் நகர்த்தப்படுகின்றன

காங்கிரஸ் தலைவருக்குத் தலைமைக் காரியதரிசியிடம் மிகவும் நெருங்கிப் பழகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. வயது வந்தவர்களுக் கெல்லாம் ஓட்டுரிமை வழங்கும் பிரகடனம் வெளியிடப்பட் டிருந்தது. சம்ஸ்தானம் பொதுத் தேர்தலை நோக்கிச் சென்றுகொண் டிருந்தது. தினசரி தலைவரும் காரியதரிசியும் சேர்ந்து சர்ச்சைகள் நடத்தவேண்டி யிருந்தது. தலைமைக் காரியதரிசி கல்வியறிவும் செயல்திறனும் கொண் டவர் என்பதைக் காங்கிரஸ் தலைவர் நன்முகப் புரிந்துகொண்டார். தலை மைச் செயலாளர் நம்பிக்கைக்குரியவர் என்ற விஷயத்திலும் காங்கிரஸ் தலைவருக்குச் சந்தேகமில்லை. தேர்தலின்போது காங்கிரஸ் கடைப் பிடிக்கவேண்டிய திட்டங்களைப்பற்றிப் பேச்சுவாக்கில் தலைவர், தலைமைக் காரியதரிசியின் கருத்துக்களை ஆராய்ந்து பார்த்தார். தீவிரமான கருத்து மோதல்கள், காங்கிரஸ் மேல்மட்டத்தில் நடைபெற்று வந்த கால கட்டம் அது. தலைவரைச் சிறிது சுருங்கச் செய்தவாறு தாழ்மையுடன் தலைமைச் செயலாளர் பதிலுரைத்தார்:

''நான் ஓர் அரசாங்க அதிகாரி. என் கருத்தை வெளியிடுவது. . .''

கேசவபிள்ளை நிறுத்தினார். காங்கிரஸ் தலைவர் சிறிது சுருங்கினார். தலைமைக் காரியதரிசி அதைக் கவனிக்காமல் இல்லை. ஒருவேளை, தலை வரைச் சிறிது சுருங்கச் செய்வது காரியதரிசியின் நோக்கமாகவும் இருக்க லாம். தலைவர் கூறினார்:

''அதிகாரிமட்டும் அல்லவே. இந்தச் சம்ஸ்தானத்தின் பிரதான பிரஜையும் அல்லவா? அந்தக் கருத்தில் அல்ல நான் கேட்பது. நண்பர்கள் என்ற முறையில் என் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்னை சம்பந்தமாகத் தங்களிடம் யோசனை கேட்கலாம் என்றிருக்கிறேன்.''

கேசவபிள்ளை புன்னகையுடன் கூறினார்: ''காங்கிரஸ் செயற்குழு கூடி விவாதித்து முடிவெடுக்கவேண்டிய விஷயத்தில் நான் என்ன யோசனை கூறுவது?''

''ஆயினும் அரசியல் நிர்வாக விஷயங்களில் அநுபவமிக்க உங்கள் யோசனையும் மிகவும் முக்கியம் என்று நான் நம்புகிறேன்.''

ஏதோ காகிதத்தில் எதையோ கிறுக்கிவிட்டுக் கேசவபிள்ளை சொன் னார்: ''பொதுவான சில விஷயங்களைப்பற்றித் தங்களிடம் சொல்லலா மென்றிருக்கிறேன். எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரும் அரசாங்கம் எத்த கையதாக இருக்கவேண்டு மென்பதைப்பற்றி எனக்குச் சில கருத்துக்கள்

இருந்துவருகின்றன. என் மனத்தில் எழுந்த கருத்துக்கள்தான். சொல்வதில் தவறு இல்லை அல்லவா?''

தலைவர் குறுக்கே புகுந்து கூறினார்: ''அதைப்பற்றி மட்டும் என்ன? வேறு எதைப்பற்றியும் நீங்கள் தெளிவாகத் திறந்து சொல்லலாம்.''

''தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்தப்படவேண்டியவர்கள் இந்தச் சம்ஸ்தானத்திலுள்ள முதல்தரப் பிரஜைகளாக இருந்தால் நல்லது. நல்ல குடும்பங்களில் பிறந்தவர்கள், அந்தஸ்துள்ளவர்கள், உலக அநுபவம் வாய்ந்தவர்கள்—இப்படிப்பட்டவர்களாக இருந்தால் நல்லது. அவர்களிலிருந்து பொறுக்கியெடுத்தவர்களைக் கொண்டதாக அமைச்சரவை இருக்கவேண்டும் என்ற கருத்துத்தான் எனக்கு.''

தலைவருக்குக்கூட இதே கருத்துத்தான். அவர் தலையாட்டி ஒப்புக் கொண்டார்.

கேசவபிள்ளை தொடர்ந்து பேசினார்: ''நான் இப்படிச் சொல்வதற்குப் பிரத்தியேகமான ஒரு பொருள் உண்டு. ஒளிவுமறைவின்றியே சொல்லுகிறேன். தவறு இருந்தால் மன்னிக்கவேண்டும்.''

எதையும் சொல்ல அநுமதி அளித்தார் தலைவர்.

கேசவபிள்ளை அச்சமின்றியே தம் கருத்தை வெளியிட்டார்.

''போராட்டத்தின்போது உதை பட்டவர்கள், நீண்ட நாட்கள் சிறைவாசம் அநுபவித்தவர்கள், மக்களைக் கிளர்ந்தெழச் செய்கிற மைதானப் பிரசங்கிகள் ஆகியோரெல்லாம் காங்கிரஸின் மேல் மட்டத்தில் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இருக்கலாம். ஆனால், ஆட்சி நடத்துவதென்றால் அது முற்றும் மாறுபட்ட பிரச்னை. அதற்கு, நான் ஏற்கெனவே சொன்ன குணம்சங்கள் எல்லாம் இருக்கவேண்டும்.''

இந்த விஷயத்தில் தலைவருக்குக் கருத்து வேறுபாடு இல்லை. கேசவபிள்ளை அழுத்தமாகக் கூறினார்.

''குடும்ப அந்தஸ்து இல்லாதவன், ஒரு காசுக்குக்கூட வழியின்றித் தெருவிலே அலைந்தவன், பள்ளிப் படிப்பை முடித்துக்கொண்டு வேலை தேடி நடந்தவன், ஆவேசமிகுதியால் கிளர்ச்சியில் வந்து குதித்துக் கொண்டவன்—இங்ஙனமாகப் பல்வேறு பகுதியினர் காங்கிரஸுக்குள்ளே நுழைந்திருக்கிறார்கள்.''

குரலைச் சிறிது அடக்கியவாறு கேசவபிள்ளை கேட்டார்:

''திறந்து சொல்லக் கூடாததுதான். இந்தப் பறையனும் புலையனும் எப்படி ஆட்சி நடத்துவான்?''

காங்கிரஸ் தலைவர், அதையும் ஒப்புக்கொண்டார்: ''உண்மைதான். அவர்களுக்கு என்ன தெரியும்?''

''ஆம். அப்போது, நேற்றுவரையில் தெருக்களில் அலைந்து திரிந்தவனை, எந்தவிதமான அடிப்படையும் இல்லாதவனை அமைச்சர் பதவியில் அமர வைத்தால், அரசாங்க இயந்திரம் சுக்குநூறாகத் தகர்ந்து விடும். வேண்டியது அது அல்ல.''

கேசவபிள்ளை தம் யோசனைகளை ஒவ்வொன்றுகச் சமர்ப்பித்தார்: ''இந்தச் சம்ஸ்தானத்தில் பரந்த நோக்கம் கொண்ட, யோக்கியப் பொறுப்புள்ள மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் குலப் பெருமையும் உண்டு, குடும்பப் பெருமையும் உண்டு, பாரம்பரியமும் உண்டு. காங்கிரஸ் இயக்கத்தில் அவர்கள் காங்கிரஸுடன் மானசிகமான ஒருமைப்பாடு கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். இந்த மண்ணிலே பிறந்து வளர்ந்தவர்களால் வேறுமாதிரியாக இருந்திருக்க முடியுமா? இந்த நாட்டை நாமே ஆளவேண்டும். அரசாங்க அதிகாரிகளான எங்கள் விஷயத்தை எடுத்துக்கொள்ளுங்கள்! உண்மையிலேயே, காங்கிரஸ் ஊழியர்கள்மீது தடியடி நடத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டபோது, துப்பாக்கியால் சுட நேர்ந்தபோது சாதாரணப் போலீஸ்காரன் முதல் பெரிய அதிகாரிகள் வரையிலுள்ளவர்கள் அநுபவித்த மனவேதனை இவ்வளவு அவ்வளவெனச் சொல்லமுடியாது. சொன்னால் நீங்கள் எல்லாம் நம்பமாட்டீர்கள். ஒவ்வொன்றையும் செய்ய நேர்ந்தபோதெல்லாம் எங்கள் இதயம் தகர்ந்துகொண்டிருந்தது. கை நடுங்கிக்கொண்டிருந்தது. கடவுளிடம் மன்னிப்பைக் கேட்டுக்கொண்டிருந்தோம். இந்தச் சோறு வேண்டாமென்றுகூடப் பல்வேறு சந்தர்ப்பங்களில் எண்ணியதுண்டு. பிறந்த நாட்டுக்காக எந்தவிதமான சேவையும் செய்யமுடியவில்லை என்பது ஒரு புறம் இருக்க, எதிராகச் செயல்பட வேண்டியிருக்கிறதே என்று நெஞ்சம் பதறியதுண்டு. எங்களுக்கு நாட்டுப் பற்று இல்லாமற் போய்விடவில்லை. ஆனால், பிறர் கட்டளைகளுக்குட்பட்டுச் செயல்படவேண்டிய சூழ்நிலைகளுக்கு அடிமைகளாகி விட்டோம்.''

இந்தச் சந்தர்ப்பத்தில் தலைவர்கூடப் பிரசங்க தோரணையைக் கடைப்பிடித்தார்:

''நீங்கள்கூட நாட்டுக்குத் தொண்டாற்றியிருக்கிறீர்கள். ஜனங்கள் தங்கள் அரசாங்கத்தை உருவாக்குகிறபோது உறுதியானதோர் அரசாங்க இயந்திரத்தை நீங்கள் காத்துக் காப்பாற்றி வந்திருக்கிறீர்கள். அதுவும் தேச சேவையேதான். கொடி பிடிப்பதும், கோஷங்களைக் கோஷிப்பதும் மட்டுமல்ல தேச சேவை என்பது. நான் செல்லும் இடங்களில் எல்லாம் இதைப்பற்றிப் பேசுவதுண்டு.''

கேசவபிள்ளை முக்கியப் பிரச்னைக்குத் திரும்பி வந்தார்:

''அப்போ... நான் சொல்லிவருவது என்னவென்றால், அன்றைய தினம் இந்தச் சம்ஸ்தானத்திலுள்ள கனவான்கள் காங்கிரஸ் அணிகளை நோக்கிச் செல்லவில்லை என்றால், தங்களுக்குச் சில நலன்கள் பாதுகாக்கப்படவேண்டியிருந்தன என்பதனால்தான். வேறு பலரைப்போல் எல்லாவற்றையும் விட்டு விட்டு எட்டிக் குதித்துச் செல்ல அவர்களால் முடியவில்லை. எஸ்டேட் இருக்கும், பணத்தை முதலீடு செய்து நடத்துகிற பிஸினஸ் இருக்கும் அல்லது தொழில் இருக்கும். அவர்கள் தங்கள் நலன்களைப் பாதுகாக்கச் சில சந்தர்ப்பங்களில் எங்கள் பயமுறுத்தலுக்குப்

பணிந்து மனமில்லாமல் எதையெல்லாமோ செய்திருப்பார்கள். அன்று கூட எங்களுக்கு இதெல்லாம் தெரியும். அவர்களை நீங்கள் தேசத் துரோகிகள் என்று சொல்லி ஏளனம் செய்யக்கூடாது.''

காங்கிரஸ் தலைவருக்கு அந்த விஷயத்தில் எதிர்ப்பு இல்லை என்று தோன்றியது. கேசவபிள்ளை அவருடைய முகத்தோற்றங்களைக் கவனித்தவாறுதான் பேசிக்கொண்டிருந்தார். தொடர்ந்து பேசலானார்:

''கிளர்ச்சி முடிவுக்கு வந்திருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிபீடத்தில் ஏறுவதற்கான தயாரிப்புக்களைச் செய்து வருகிறது. சென்ற காலத்தில் ஏற்பட்ட குரோத எண்ணங்களை மனத்திலிருந்து மாய்த்துவிடவேண்டும். காங்கிரஸின் பெரிய கதவைத் திறந்து வைக்க வேண்டும். அந்தஸ்தும் அபிமானமுமுடைய பிரஜைகள் அதற்குள்ளே வந்து சேரட்டும். அவர்களை வரவேற்கவேண்டும். அவர்கள் வருகிறபோது சுப்பனும் குப்பனும் இயல்பாகவே வெளியேறிவிடுவார்கள். அந்தஸ்தும் அபிமானமுமுடைய பெருந்தகையர் இன்று அதற்குள்ளே வரத் தயங்குகிறார்கள் என்றால், அது ஒருவிதமான வெட்கத்தினாலேதான். அதற்காக அவர்களைக் குற்றம் சொல்லிப் பிரயோஜனம் இல்லை. என்னுடைய கருத்துப்படி காங்கிரஸுக்குள்ளே களையெடுப்பு இன்று இன்றியமையாததாகும். அழுக்கையும் நாற்றத்தையும் களைந்தெறிந்து அந்தஸ்தும் அபிமானமும் கொண்டவர்களுடைய ஸ்தாபனமாக அதை மாற்றியமைக்கவேண்டும். அத்தகைய ஓர் அரசியல் கட்சியினால்தான் நாட்டை ஆளமுடியும்.''

கேசவபிள்ளை தம் கருத்துக்களை ஒளிவுமறைவின்றியே சொல்லிவிட்டார். அந்தக் கருத்துக்களை மறுத்துரைக்கவேண்டுமென்று தலைவருக்குத் தோன்றவில்லை. ஆனால் நெருக்கடிகள் பல உள்ளன. வாழ்நாள் முழுவதும் காங்கிரஸுக்காகவே உழைத்தவர்கள் எண்ணற்றவர்கள். அவர்கள் எல்லாரும் எந்நாளும் அவருடன் இருந்து வந்திருக்கிறார்கள். அவர்களை எல்லாம் மறந்துவிட்டு, வாழ்நாள் முழுவதும் காங்கிரஸை எதிர்த்துச் செயல்பட்டவர்களின் தோள்மீது எவ்வாறு கைபோடமுடியும்? காங்கிரஸுக்குள்ளேயே இப்போது நடைபெறுகிற கருத்துப் போராட்டத்தின் எதிர்கால உருவம் எவ்வாறு இருக்குமோ? தலைவர் சொன்னார்:

''வீரமும் துணிச்சலுமுடைய கணிசமான ஒரு பகுதியினர் காங்கிரஸிலிருந்து விலகிச் சென்றுவிடுவார்கள். அவர்கள் ஜனங்கள் மத்தியிலே செயலாற்றி வருபவர்கள்.''

அது ஒரு பெரிய பிரச்னையாகக் கேசவபிள்ளைக்குத் தோன்றவில்லை. அவர் சொன்னார்: ''போகட்டும்! விலகிப் போகடும். காங்கிரஸின் புனிதத் தன்மைக்கு அது இன்றியமையாதது. நெல்லையும் பதரையும் பிரித்தே ஆகவேண்டும். அதிலே பயப்பட என்ன இருக்கிறது?''

''தேர்தல் ஒரு பெரிய போட்டியாக மாறிவிடும்.''

அந்தப் பிரச்னையிலேகூடக் கேசவபிள்ளைக்குப் பயம் இல்லை.

''போட்டி வரட்டுமே. காங்கிரஸ் வெற்றி பெறுமென்று நினைக்கிறீர்களா? அத்தகைய பயம் உண்டா?''

''அந்தப் பயம் இல்லே.''

கேசவபிள்ளே உறுதியாகச் சொன்னர்:

''எல்லாக் காங்கிரஸ் வேட்பாளர்களும் வெற்றிவாகை சூடுவார்கள். வெற்றிபெறச் செய்வேன் நான். எனக்குத் தெரியாத தேர்தல் தந்திரமா?''

தலேவர் சிரித்தவாறு கூறினர்: ''அது எங்களுக்குத் தெரியுமே.''

''ஆம். எனக்குப் பயமே கிடையாது. மாறுக, என். எஸ். எஸ்.; எஸ். என். டி. பி. ஆகிய ஸ்தாபனங்களேயும், சம்ஸ்தானத்திலுள்ள பெரியதனக் காரர்களேயும் விலக்கி வைத்துவிட்டுக் காங்கிரஸ் தேர்தல் களத்தை நோக்கிச் செல்வதென்ருல், காரியம் ஆபத்தாக முடிந்துவிடும். அதற்குத் தான் நான் பயப்படுகிறேன்.''

அமலில் இருந்து வருகிற கருத்துப்படி கேசவபிள்ளேயின் யோசனேகளே ஏற்றுக்கொள்வதாக இருந்தால் ஸ்தாபனத்தின் எதிர்காலம் எவ்வாறு இருக்குமென்று தலேவர் சிறிது நேரம் சிந்தித்துக்கொண் டிருந்தார். காங்கிரஸுக்குள்ளே புதிதாக நுழைபவர்கள் யார் யாரெல்லாம்? ஒரு விநாடிப் பொழுதில் சில பிரமுகர்கள் அவர் மனக்கண் முன்னே தோன்றினர்கள். காங்கிரஸின் துவக்கக் காலத்திலிருந்தே திவான்ஜியோடு சேர்ந்து நின்று சொந்தக் காரியங்கள் பலவற்றைச் சாதித்துக்கொண்ட சிலர், கதர் உடையணிந்து குல்லாய் வைத்துக்கொண்டு அவர் முன்னுல் நடந்து சென்றார்கள். ஜாதிகளேச் சொல்லிக் காங்கிரஸைப் பிளவுபடுத்து வதற்காகச் செய்த முயற்சிகள் பல அவர் நினேவுக்கு வந்தன. அதற்காக வகுப்பு ஸ்தாபனங்கள் கிராமம் கிராமமாக, வீடு வீடாகச் சென்று செயலாற்றிய வரலாறு மறக்கக் கூடியதல்ல. வகுப்பு ஸ்தாபனங்கள் காங்கிரஸுக்குள்ளே நுழைந்துவிட்டால், அங்கே என்.எஸ்.எஸ்.; எஸ்.என்.டி.பி.; கத்தோலிக்கர் காங்கிரஸ் ஆகியவற்றின் கோஷங்கள் எதிரொலிக்கவே செய்யும். அவர்களுக்கெல்லாம் தங்கள் தங்கள் காரியங்களே முதலில் சாதித்துக்கொள்ளவேண்டி யிருக்கும்.

துணேயற்றவர்போல் தலேவர் கூறினர்:

''நீங்கள் சொல்வதை ஏற்றுக்கொள்வதாக இருந்தால், காங்கிரஸ் என்பது, முரண்பட்ட நலன்கள் ஒன்றேடொன்று போட்டி போடுகிற ஒரு மன்றமாக அமைந்துவிடாதா?''

அதற்குப் பதில் அளிக்கக் கேசவபிள்ளேக்குச் சிரமம் ஏற்படவில்லே.

''எல்லாரையும் அரவணேத்துக்கொண்டு செல்லவேண்டும். அது உங்கள் பொறுப்பு. அந்த விஷயத்திலே எனக்குத் திடநம்பிக்கை உண்டு. அந்தத் திறமை உங்களுக்கு உண்டு. உங்கள் தனி நபர் அந்தஸ்து அவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறது.''

கேசவபிள்ளே தொடர்ந்து கூறினர்: ''இதன் மறுபக்கத்தையும் பார்ப் போமே. இந்த நாட்டிலுள்ள மக்கள் என்ருல், நாயர்கள், கிறிஸ்தவர் கள், ஈழவர்கள், முஸ்லிம்கள் ஆகியோரெல்லாம் உட்பட்டவர்கள்தாம். அவர்களுடைய ஸ்தாபனங்களின் நலன்களேப் புறக்கணிப்பதென்ருல்

இந்த நாட்டிலுள்ள மக்களின் நலன்களைப் புறக்கணிப்பது என்றல்லவா அதன் பொருள்?''

ஏனோ தெரியவில்லை. இதைப்பற்றிய நியாயவாதங்கள் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாகத் தோன்றவில்லை. இந்த விஷயத்தில் மட்டும் ஏதோ கோளாறு இருப்பதாக அவருக்குத் தோன்றியது. அவருக்கு இத்தகைய எண்ணம் உருவானதற்குக் காரணம், ஒரு வேளை, அவருடைய நீண்ட நாளைய அரசியல் அநுபவங்களாக இருக்கலாம். அவருடைய அரசியல் வரலாறுகூட அத்தகையதே. எங்கே கோளாறு என்று அவருக்குத் தெளிவாக விளங்கவில்லை. அது சரியில்லை என்று மட்டும் தெரியும். பிரச்னையை அணுகும் முறை இது அல்ல என்று அவருக்குத் தோன்றியது.

தலைவரின் மனப் போராட்டத்தைக் கேசவபிள்ளை புரிந்துகொண்டார். தம் நியாயவாதங்கள் குறிக்கோளைத் தாண்டிச் சென்றுவிட்டனவோ என்ற சந்தேகம் அவருக்கு ஏற்பட்டுவிட்டது. அவர் தந்திரத்தைச் சிறிது மாற்றிக்கொண்டார்.

''இல்லை. உயரிய ஆதர்சத்திலிருந்து பார்க்கும்போது இது சரியில்லை தான். ஜாதிகள் இருக்கக் கூடாது. அழிந்தேதான் தீரவேண்டும். ஆனால் ஒரேயடியாக அவற்றை அழித்துவிட முடியுமா? நான் இன்றைய காலகட்டத்துக்கு உதவுகிற ஒரு நடைமுறைத் தந்திரத்தைப்பற்றிச் சொன்னேன். அவ்வளவுதான்.''

இந்தச் சந்தர்ப்பத்தில், தலைவர் அவர்கள் தமது பழைய கால அநுபவங்களை மனத்தில் வைத்துக் கொண்டு ஓர் உண்மையை வெளியிட்டார்: ''ஸ்தாபனத்துக்குள்ளே எப்போதுமே வகுப்புவாரியாகப் பிரிந்து நின்று கொண்டு சிலர் சண்டை சச்சரவுகளைக் கிளப்பி வந்தனர். ஸ்தாபனத் தேர்தல்களிலும், கொள்கைப் பிரச்னைகளிலும் அவற்றின் பிரதிபலிப்புக்கள் ஏற்பட்டு வந்தன. அது தவிர்க்கமுடியாதது. ஆனால், ஒரு விஷயத்தைச் சொல்லாமல் இருக்க முடியாது. இன்று இங்கே சொல்லப்பட்ட கருத்துக்களை ஏற்றுக்கொள்வதாக இருந்தால், ஸ்தாபனத்திலிருந்து வெளியேறிச் செல்ல இருக்கிறார்களே, அவர்கள்தான் என்றென்றும் வகுப்புவாதத்தின் படுமோசமான கெடுதல்களை ஸ்தாபனத்துக்குள் இருந்தவாறு கடுமையாக எதிர்த்து வந்தவர்கள். அவர்கள் நடைமுறைத் தந்திரங்களை அறியாத ஆதர்சவாதிகளாக இருக்கலாம். ஆயினும் அத்தகைய புனிதத் தன்மையை நிலைநாட்டி வந்தவர்கள் அவர்கள்தாம். அவர்களே பிரிந்து செல்ல இருக்கிறார்கள்.''

ஒரு விநாடிக்குப் பிறகு கனவிலிருந்து விழித்தெழுந்தவர்போல் அவர் கூறினார்: ''அவர்கள் விடைபெற்றுச் செல்வதை நான் பார்க்கிறேன்.''

கேசவபிள்ளை உள்ளுறச் சிரித்துக் கொண்டார்: ''நடைமுறை அரசியல் தந்திரம் அறியாதவர்கள் பிரிந்து சென்றுவிடட்டும். பின்னர் கற்றுக்கொண்டு வந்து சேருவார்கள்.''

அவர் தொடர்ந்து கூறினார்: ''உங்கள் கவலையைப் புரிந்துகொள்வது கஷ்டமாயில்லை. துன்பங்களும் துயர்களும் நிறைந்த நீண்டதொரு சகாப்தம் முழுவதும் உங்களைப் பின்பற்றி, உங்கள் கருத்துக்களையும் யோசனைகளையும் சிரமேற்கொண்டு அமலாக்கி வந்த ஊழியர்களில் சிலர் இன்று பிரிந்து செல்கின்றனர். அவர்களில் பலர் உங்கள் அன்புக்குப் பாத்திரமானவர்களாக இருக்கலாம். புதிதாக வருகிறவர்கள் உங்களை எதிர்த்தவர்களாக இருக்கலாம். அவர்களை நம்பிவிட உங்களுக்குத் தயக்கமும் ஏற்படலாம். புதிய அமைப்பைப்பற்றி, 'அது வெற்றி பெறுமா, தோல்வியுறுமா? எங்ஙனம் முன்னுக்குக் கொண்டு செல்ல முடியும்?' என்பன போன்ற கவலைகள் உங்களைத் துன்புறுத்திக் கொண்டிருக்கலாம். எத்தகைய ஒரு மனிதரும் இத்தகைய ஒரு நிலைக்கு வந்துவிடும்போது தளர்ச்சியுற்றுப் போய்விடலாம்.''

தலைவருடைய உண்மை நிலையைப் புரிந்துகொண்டு செய்த அந்த உரை அவருடைய உள்ளத்தைச் சென்று தொட்டது. அவரிடம் அநுதாபம் கொண்டிருக்கிற ஒருவருடைய குரலும் மொழியுந்தான் அது. அந்நியரான ஒருவருடையதுபோல் தோன்றவில்லை. தலைவர் மொழிந்தார்: ''ஆமாம், ஆமாம்! அது கவலையளிப்பதுதான். நான் தளர்ந்து விடுகிறேன்.''

கேசவபிள்ளை ஆறுதல் அளித்தார்.

''நீங்கள் எத்தனையோ நெருக்கடிகளைச் சமாளித்து வந்திருக்கிறீர்கள். ஒருபோதும் தளர்ந்ததே இல்லீங்களே? துணிந்து முன்னேறிச் செல்ல வேண்டும். முடிவெடுப்பதற்கான தங்கள் திறமை பெயர் பெற்றது.''

சிறிது நேரம்வரையில் இருவரும் பேசவில்லை. தலைவர் சிந்தனையில் மூழ்கியிருந்தார். கேசவபிள்ளை அவரைக் கூர்ந்து கவனித்தவாறு அமர்ந்திருந்தார்.

தலைவர் சிந்தனையிலிருந்து மீண்டுவிட்டார்: ''ஓ! நேரம் அதிகமாகி விட்டதே! நான் உங்கள் நேரத்தை வீணுக்கிவிட்டேன் என்று நினைக்கிறேன்.''

கேசவபிள்ளை சொன்னார்: ''இல்லை. நாட்டின் நலன்களைப்பற்றித் தானே பேசிக்கொண்டிருந்தோம்? அது என் வேலையல்லவா? ஒருவேளை இந்த நேரத்தில் நான் சில ஃபைல்களைப் பார்த்து முடித்திருப்பேன். ஆனால் இப்போது, அதைவிட முக்கியமான ஒரு வேலையை அல்லவா, நான் செய்து முடித்திருக்கிறேன்.''

தலைவர் நன்றி தெரிவித்தார்: ''ஆம். தங்களிடம் தனிப்பட்ட முறையில் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு வெளிச்சம் கிடைத்ததுபோல் தோன்றுகிறது. இதுவரையில் இந்த விஷயத்தைப் பற்றி நான் இவ்வளவு தூரம் சிந்தித்ததே இல்லை. நான் சிந்தித்துப் பார்க்க இருந்த ஒரு விஷயந்தான் இது. இந்தப் பிரச்னையை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நான் ஒத்திப் போட்டு வந்திருக்கிறேன். ஒரு பெரிய நெருக்கடி உருவாகி வருகிறதென்ற திகைப்புத்தான் எனக்கு இருந்து வந்தது. அந்த இரும்புத் திரையைத் தகர்த்தெறிந்தது நீங்கள்தாம்.

இனிமேல் இந்த விஷயத்தைப்பற்றி நான் சிந்திப்பேன். பாதை திறந்து கிடக்கிறது.''

ஒரு விநாடிக்குப் பிறகு அவர் சொன்னார்: ''முகத்தைப் பார்த்துத் துதிப்பதாக நீங்கள் நினைக்கக்கூடாது. எல்லாப் பிரச்னைகளையும்பற்றிய தெளிவான அறிவு உங்களுக்கு உண்டு. நான், ஒருவேளை உங்களிடம் சில காரியங்களைப்பற்றி யோசனை கேட்காமல் இருந்துவிடலாம். ஆயினும் எந்நேரத்திலும் என்னுடைய ஆலோசகராக நீங்கள் இருந்து வரவேண்டுமென்ற விருப்பந்தான் எனக்கு.''

கேசவபிள்ளை பதிலுரைக்கவில்லை. வினயத்தின் நிசப்த நிலையை அவர் கடைப்பிடித்தார்.

காங்கிரஸ் தலைவர் விடைபெற்றுச் சென்றுவிட்டார். முன் எப்போதும் ஏற்பட்டிராத ஆத்மத் திருப்தி அவருக்கு உண்டாயிற்று. வெற்றி பெற்றுவிட்டேன் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. திவான்ஜி போய்விட்டார். காங்கிரஸ் ஆட்சி பீடத்துக்கு வரப்போகிறது. அதனால் என்ன? இந்த இடைவேளையில் கவலைப்பட்டுக்கொண்டிருந்ததை எண்ணி அவர் தமக்குத் தாமே சிரித்துவிட்டார். எத்தனை பயமாயிருந்தது? இன்னுமோர் ஆட்டத்தை ஆடிப் பார்க்கலாமே. அத்தகைய உறுதி கேசவபிள்ளைக்கு ஏற்பட்டுவிட்டது.

* * *

தேர்தலுக்கு முன்பே அரசியல் கைதிகளை எல்லாம் விடுதலை செய்ய வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தைக் காங்கிரஸ் தலைமைக் குழு நிறைவேற்றியது. சர்க்காருக்கு இந்த விஷயத்தில் ஆட்சேபம் இல்லை. ஆனால், தலைமைக் காரியதரிசி ஒரு சந்தேகத்தைக் கிளப்பினார். கொலைக் குற்றம் போன்றவற்றுக்காகத் தண்டிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களை அரசியல் கைதிகளாக மதிக்கலாமா என்பதுதான் அவருடைய சந்தேகம். எனவே, ஒவ்வொருவருடைய வழக்குகளையும் தனித் தனியாகப் பரிசீலித்துப் பார்க்கவேண்டியிருந்தது. இது பெரியதொரு முட்டுக்கட்டையாகிவிட்டது. சீஃப் செக்ரடரி மனப்பூர்வமாகச் சிருஷ்டித்த முட்டுக்கட்டைதான் இது என்று காங்கிரஸுக்குள்ளே கணிசமான பகுதியினர் கருத்தைத் தெரிவித்தனர்.

எந்த ஒரு இலட்சியத்தை முன்னிட்டு எண்ணற்ற மனிதர்கள் அனைத்தையும் தியாகம் செய்தார்களோ, சிறைக்கூடத்தின் இரும்புக் கதவுகளுக்குப் பின்னால் அடைபட்டுக் கிடக்கிறார்களோ, அந்த இலட்சியத்தின் பலனை அநுபவிப்பதற்கான உரிமை அவர்களுக்கு மறுக்கப்படுகிறது என்று அவர்கள் வாதித்தார்கள். திவான்ஜி போய்விட்டதனாலோ, சுதந்தரம் வந்துவிட்டதனாலோ என்ன பலன் என்று அவர்கள் கேட்டார்கள். நிலைமையில் எந்தவிதமான மாறுதலும் இல்லை. எதிர்காலத்தைப்பற்றிய முன் அறிவிப்புத்தான் இது என்று தீவிரவாதிகள் எச்சரித்தனர்.

தலைமைக் காரியதரிசி இத்தகைய ஒரு நிலையைக் கடைப்பிடிக்கிறார் என்றால், இதில் ஏதோ ஓர் உள்நோக்கம் இருக்குமென்று காங்கிரஸ் தலைவர் கருதினர். ஏதாவது உள்நோக்கம் இல்லாமல் அவர் இந்த முட்டுக் கட்டையைப் போட்டிருக்கமாட்டார் என்று தலைவர் நம்பினர். தலைமைக் காரியதரிசியின் மதிநுட்பத்தையும், தீர்க்கதரிசனத்தையும்பற்றிக் காங்கிரஸ் தலைவருக்குப் பெரும் மதிப்புத்தான். எனவே இந்த விஷயத்தைப்பற்றித் தலைவருக்கும் காரியதரிசிக்குமிடையில் உத்தியோகப் பற்றற்ற நிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இத்தகைய கொள்கையைக் கடைப்பிடித்ததன் நியாயத்தை எடுத்துரைத்துத் தலைவருக்குப் புரியவைப்பதில் கேசவபிள்ளைக்குக் கஷ்டம் இருக்கவில்லை. ''அந்தஸ்தும் உறுதியும் மிக்க ஓர் அரசாங்க இயந்திரத்தைத்தான் ஜனப் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கவேண்டும். பலவீனமான, சட்டம் ஒழுங்கு ஆகியவற்றிற்கு மதிப்பைத் தராத ஓர் அரசு இயந்திரம் ஜனப் பிரதிநிதிகளுக்கு ஒரு சுமையாகத்தான் இருக்கும். அது தகர்ந்து விழக்கூடிய அபாயமும் இருந்து வருகிறது. பீனல் கோட் ஷரத்துக்கள்படி தண்டிக்கப்பட்டவர்களை அரசியல் கைதிகள் என்ற பெயரால் விடுதலை செய்வதென்றால், அது சட்டத்தையும் ஒழுங்கையும் பராமரிக்கும் அரசாங்கக் கொள்கைக்கு உகந்ததுதானா என்று தலைமைக் காரியதரிசி கேட்டார். சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கிற, நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டுகிற பொறுப்பு சர்க்காருக்கு எதிர்காலத்திலும் இருக்கவேண்டியதுதானே? சரி, இருக்கட்டும்! ஒரு விஷயத்தை ஏற்றுக்கொள்கிறேம். இயக்கக் காலத்தில் ஒரு சில பொய் வழக்குகள் ஜோடிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, ஒவ்வொரு வழக்கையும் அதனதன் தன்மைகளுக்கேற்ற முறையில் பரிசீலித்து நடவடிக்கையை மேற்கொள்ளலாம் அல்லவா?''

கேசவபிள்ளை கூறினார்: ''காங்கிரஸ் ஆட்சிக்கு வரும்போது அந்தஸ்துடைய ஓர் அரசாங்கத்தின் பரம்பரையாக அது அமையவேண்டும். காங்கிரஸை மனத்திலே வைத்துக்கொண்டுதான் இத்தகைய ஒரு திட்டத்தை நான் உருவாக்கினேன். இப்போது என்மீது பலருக்கு ஆத்திரம் ஏற்படலாம். எதிர்காலத்தில் என்னைப் பாராட்டத்தான் போகிறார்கள். அது எனக்குத் தெரியும். கிளர்ச்சி நடத்துவதுபோல் அல்ல ஆட்சி நடத்துவது.''

இது மட்டும் அல்ல; இதற்கு ஒரு மறுபக்கங்கூட உண்டு. கேசவபிள்ளை அடக்கமான குரலில் கூறினார். ''காங்கிரஸுக்கு ஏற்படக்கூடிய பல நெருக்கடிகளைச் சமாளிப்பதற்குக்கூட இந்தக் கொள்கை உதவும். காங்கிரஸை எதிர்க்கிற சிலர், தேர்தலின்போது சிறையிலேயே இருப்பார்கள்; அவர்கள் தீவிரவாதிகள்.''

கைதிகளின் பட்டியலைக் கேசவபிள்ளை பரிசீலித்துப் பார்த்தார். ''சத்தியம், அகிம்ஸை ஆகிய அறநெறிகளிலிருந்து நழுவாதவர்கள், சட்டத்தையும் ஒழுங்கையும் மதிக்கின்றவர்கள், சட்டத்தைத் தம்

கையிலெடுக்காதவர்கள்—இவ்வாறு பிரஜா உரிமைகளைப்பற்றிய உணர்வுடையவர்கள் சிறைக்கூடத்திலிருந்து வெளியே வருவார்கள்.'' கேசவபிள்ளை இவ்வாறு சொல்லி முடித்தார்.

''நன்றாக யோசனை செய்த பின்பே நான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். தேர்தல் முடியட்டும். புதிய சர்க்காரின் நல்ல மனப்பான்மைக்கு அறிகுறியாக எல்லாரையும் விடுதலை செய்வோம். எதற்காக அந்தத் தொந்தரவை இப்போது விலைக்கு வாங்கவேண்டும்?''

''தொந்தரவு செய்வார்கள் என்று சொல்கிறீர்களே, அப்படிப்பட்டவர்கள் ரொம்பப் பேர் இருக்கிறார்களா?'' என்று தலைவர் கேட்டார்.

''ஆம். சில பேர் இருக்கிறார்கள். பெரிய தொந்தரவு ஒன்றும் ஏற்படப் போவதில்லை. ஆயினும் அவர்களைத் தூக்கி வைத்து ஊர்வலமாக நடத்திச் செல்லவும் ஆட்கள் இருப்பார்கள். எல்லாரும் கம்யூனிஸ்டுகள். கெட்ட எண்ணத்துடன் மனப்பூர்வமாகக் குற்றம் புரிந்திருக்கிறார்கள்.''

கேசவபிள்ளை சொல்வது நியாயந்தான் என்ற உணர்வோடு தலைவர் விடைபெற்றுச் சென்றார்.

* * *

அடுத்த நாளிலிருந்து அரசியல் கைதிகளைக் குழுக்கள் குழுக்களாக விடுதலை செய்து வந்தது அரசாங்கம். சிறையிலிருந்து விடுதலை பெற்ற தலைவர்களுக்கு எங்கும் ஆவேசமிக்க வரவேற்புகள் அளிக்கப்பட்டன. ஒவ்வொரு நாளும் நான்கைந்து பேர்கள் வீதமாக விடுவிக்கப்பட்டனர். சிறையிலிருந்து வெளியே வந்தவர்களை வரவேற்ற முயற்சியில் ஈடுபட்டவர்கள் சிறைக்குள் எஞ்சியிருப்பவர்களை மறந்து விட்டனர். ஆனால் ஆங்காங்கு ஏராளமான குடும்பங்கள், தமது பிரியமானவர்கள் சிறையிலிருந்து விடுபட்டு இன்று வருவார்கள், நாளை வருவார்கள் என்று எதிர் பார்த்தவண்ணம் இருந்தன. அவர்கள் சுதந்தரப் போராட்டத்தில் தீவிரத் தன்மையுடன் பங்கெடுத்துக்கொண்டவர்களாக இருக்கலாம் அல்லது இன்னமும் அதே தீவிரத்தன்மையுடன் இருந்து வருபவர்களாக இருக்கலாம். அதுவும் இல்லாவிட்டால், எதிர்காலத்தில் அமையவிருக்கிற அரசாங்கத்தின் நல்ல மனப்பான்மைக்குப் பலியாடுகளாக்கி விட வைத்திருப்பவர்களாக இருக்கலாம்.

கோபி, நாராயணன் நாயர் ஆகியோரை இன்னமும் விடுதலை செய்யவில்லை. தலைமைக் காரியதரிசிக்கு நேரடியான அறிமுகமுள்ளவர்கள்தாம் அவர்கள். மாத்யூவின் மனச்சாட்சி அந்தப் பிரச்னையினால் சிறிது துன்புற்றுக்கொண்டிருந்தது. அவர் லூக்கோஸிடம் அது விஷயமாகப் பேசினார். கெட்ட நடத்தை சம்பந்தமான சில கிரிமினல் குற்றங்களுக்காக அவர்கள் தண்டிக்கப்பட்டிருந்தனர். எனவே அவர்கள்

விடுதலை சந்தேகத்துக்குரியதாக இருந்தது. ஏதாவது முயற்சி எடுத்தாலன்றி அவர்களை விடுவிக்கமுடியாதென்று லூக்கோஸ் சொன்னார்.

''சிறிது முயற்சி எடுத்துப் பார்ப்போமா?''

''பார்க்கலாம்.'' லூக்கோஸ் சொன்னார்: ஆனா . . .''

''ஊம்? அதென்ன, ஆனா . . .?''

''அவர்கள் நெருப்புப் பொறிகள் அல்லவா? அவர்களை நமக்குத் தெரியாதா?''

''அதுக்கு என்ன லூக்கோஸ்? அவர்களும் நாமும் ஒருங்கே நின்று செயலாற்றியவர்கள். அவர்கள் பணம் நம்மிடம் இல்லையா? ஒருமுறையிலே பார்த்தால், நாம் வெளியே அவர்களுடைய பிரதிநிதிகளாகத் தானே இருந்தோம்? நம்முடைய பிரதிநிதிகளாக அவர்கள் சிறைக்குச் சென்றார்கள் என்றும் நினைக்கக்கூடாதா?''

புத்திசாலியான லூக்கோஸ் கூறினார்:

''அதெல்லாம் உண்மைதான். ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஒரு விஷயத்தை நான் திறந்து சொல்ல விரும்புகிறேன். அவர்கள் இப்போது வேறு இனமாகிவிட்டனர். வேண்டுமானால் அவர்கள் வெளியே வரும் போது பார்த்துக்கொள்ளுங்கள்.''

''அப்படியென்றால் அப்படியே இருக்கட்டுமே. அதற்கு என்ன? இந்தப் பணத்தை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டுப் பிரியலாமே.''

லூக்கோஸ் ஒப்புக்கொண்டார். காங்கிரஸ் தலைவரைப் பார்த்துப் பிரயோஜனம் இல்லை. அரசாங்கத் தலைமைச் செயலாளர்தான் வழக்குகளைப் பரிசீலித்து விடுதலை செய்கிறார். அவரைத்தான் சென்று பார்க்க வேண்டும். ஆனால் அங்கே ஒரு பிரச்னை வந்து குறுக்கிடுகிறது. வெறுங் கையுடன் அவரைச் சென்று பார்க்கமுடியாது. ஏதாவது காணிக்கையுடன்தான் போகவேண்டும். லூக்கோஸ் சொன்னார்:

''அந்தப் பேர்வழியைத்தான் நமக்குத் தெரியுமே.''

''வேண்டுமானால் அதையும் செய்வோம்.''

''அவர்கள் பணத்திலிருந்து கொடுக்கலாம் அல்லவா?''

''ஆம்.''

* * *

மாத்யூவும் லூக்கோஸும் தலைமைக் காரியதரிசியைச் சென்று பார்த்தனர். வழக்கத்துக்கும் அதிகப்படியான அன்புடன் அவர் அவர்களை வரவேற்றார். அவர் மிகவும் உற்சாகத்துடன் காணப்பட்டார். க்ஷேம விசாரணைக்குப் பிறகு வந்த நோக்கத்தைப்பற்றி அவர்களிடம் விசாரித்தார். லூக்கோஸ்தான் முதலில் சொன்னார். காரியதரிசி கவனத்துடன் எல்லாவற்றையும் கேட்டபின் கேட்டார்:

''அது இப்போது வேண்டுமா?''

லூக்கோஸ் மாத்யூவின் முகத்தைப் பார்த்தார். வேண்டுமென்பதே மாத்யூவின் விருப்பம். அவர் சொன்னார்:

''எங்களுக்குள் சில கணக்குகள் பைசல் பண்ணவேண்டியிருக்கின்றன. அவற்றைப் பேசி முடித்துவிடலாம் அல்லவா?''

''சரி, ஆகட்டும். ஆனால் தொந்தரவாக முடியும். முன்கூட்டியே சொல்லிவைக்கிறேன்.'' கேசவபிள்ளை தம் கருத்தைத் தெரிவித்தார். மேலும் பொருள்படக் கூறினார்: ''மாத்யூவுக்குத்தான் அது தொந்தரவாக முடியலாம்.''

ஆயினும் அது வேண்டுமென்பதுதான் மாத்யூவின் கருத்து. ஒரு கோரிக்கை—அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும்—கேட்டதும் ஒப்புக் கொள்வதென்பது கேசவபிள்ளையின் வரலாற்றிலேயே நடைபெறுத விஷயம். இன்று நேர்மாறாக நடைபெற்றிருக்கிறதென்றால், அதற்குக் காரணமாயிருப்பது, ஒருவேளை மாறிவிட்ட சூழ்நிலைதான் என்று மாத்யூவுக்கும், லூக்கோஸுக்கும் தோன்றியது.

பின்பு அவர்கள் பல்வேறு பிரச்னைகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். பேச்சு, மாத்யூ, லூக்கோஸ் ஆகியோரின் தொழில் விஷயத்துக்கு வந்தது. அவர்களுக்குப் புதிய தொழில்கள் இல்லை. புதிய அமைச்சரவை உருவாகும் வரையில் எதையும் எதிர்பார்க்கவேண்டியதில்லை. நீர் மின் திட்டத்தில் இதுவரையில் செய்து முடித்த வேலைகள் கவனிப்பாரற்று நிர்மூலமாகிவிட்டன. எல்லாவற்றையும் இழந்திருக்கிறார்கள். இனிமேல் அவற்றை ஆரம்பத்திலிருந்தே செய்யத் தொடங்க வேண்டியதுதான். அவ்விடம் இப்போது மீண்டும் வனப் பிரதேசமாக மாறியிருக்கிறது என்று லூக்கோஸ் கூறினார். பெரிய தொகை வீணாகி விட்டது. என்ன செய்வது?

கேசவபிள்ளை: ''என்ன செய்வது? சர்க்கார் காரியமாயிற்றே?''

இனிமேல் அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதுபற்றி மாத்யூ, லூக்கோஸ் இருவருக்கும் சில கருத்துக்கள் இருந்துவந்தன. இடத்தைச் சிறிது மாற்றவேண்டியிருந்தது. முதலாவதாகவும் இரண்டாவதாகவும் மாதிரிகளைத் தயார் செய்த பொறியியலாளர்கள் சில தவறுகள் செய்திருக்கிறார்கள். நிபுணர்களை வரவழைத்து முதலிலிருந்தே வேலையைத் துவக்கவேண்டும்.

கேசவபிள்ளை குறுநகையுடன் கூறினார்:

''அதைப்பற்றியெல்லாம், மாத்யூ சட்டசபை உறுப்பினரான பின் யோசிப்போம். ஏன்? அல்லது அந்த இலாக்கா அமைச்சராகவே இருந்து கொண்டு நடத்திவைக்கட்டுமே!''

மாத்யூவும் லூக்கோஸும் பேசவில்லை. தலைமைச் செயலாளரின் வேடிக்கைப் பேச்சுக்கு வேடிக்கையாக ஒரு பதில் சொல்லக்கூட அவர்களால் இயலவில்லை.

கேசவபிள்ளை தொடர்ந்து கூறினார்: ''இல்லை. நான் வேடிக்கையாகச் சொல்லவில்லை. எம்.எல்.ஏ. ஆயிடணும். மந்திரிகூட ஆயிடலாம்.''

மாத்யூ நினைத்திராத ஒரு விஷயம் அது. அவருடைய ஆசைகள் அவ்வளவு தூரம் வளர்ந்துவிடவில்லை. கேசவபிள்ளை அழுத்தமாகக் கூறினார்: ''ஏன் முடியாது? உங்களுக்கு அதுக்கான தகுதியில்லையா? ஒரு மந்திரியாகத் தகுதியில்லையா?''

மாத்யூ அசடு வழியக் கூறினார்:

''ஹி . . ஹி . . ஹி. நான் இதைப்பற்றி நினைக்கவே இல்லீங்களே. காங்கிரஸ் ஊழியனாக இருந்தேன். ஸ்தாபனத்தில் வரும்போது எந்த விதமான குறிக்கோளும் இருக்கவில்லை.''

அது உண்மையாக இருந்திருக்கலாமென்று கேசவபிள்ளை சொன்னார். அதனால் இப்போது எம்.எல்.ஏ. ஆகக்கூடாதென்று இருக்கிறதா?

''எம்.எல்.ஏ.க்களும் மந்திரிகளுமாக ஆகக்கூடியவர்களில் பெருவாரியானவர்கள், மாத்யூவுக்கு இருக்கிற தகுதியுள்ளவர்கள் அல்ல. இப்போது சில நபர்களின் பெயர்கள் அடிபடுகின்றன. அவர்கள்தாம் வேட்பாளர்கள் என்றால், மாத்யூ அவர்களைவிட எவ்வளவோ பரவாயில்லைதான்.'' லூக்கோஸ் தம் கருத்தை வெளியிட்டார்.

அது உண்மை என்றார் கேசவபிள்ளை. ஒரு சிறு கிருமிபோல் மாத்யூவின் உள்ளத்தினுள் ஆசை ஊர்ந்து சென்றது என்று தோன்றியது. துணையற்றவர்போல் மாத்யூ கூறினார்:

''காங்கிரஸ் என் போன்றவர்களை வேட்பாளர்களாக நிறுத்துமா? நான் அரசாங்கத்தின் கைக்கூலிதானே? என் பெயரைப் பிரேரேபிக்க யார் இருக்கிறார்கள்?''

கேசவபிள்ளை குலுங்கக் குலுங்க நகைத்தார். அவர் கேட்டார்: ''உங்களுக்கு இருக்கிற கவலை அதுமட்டுந்தானே? காங்கிரஸ் உங்களை ஒரு வேட்பாளராக நிறுத்த விரும்புகிறதென்று வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் அதை அங்கீகரிக்கத் தயாராவீர்களா?''

மாத்யூவால் நம்பமுடியவில்லை. கேலி செய்கிறாரா? கேசவபிள்ளையின் இப்போதைய சுறுசுறுப்படைந்த மனநிலையிலிருந்து உருப்பெற்ற சில கேலிகள்தான் இதெல்லாம். மாத்யூ சொன்னார்:

''ஓ! அதெல்லாம் நடக்காதுங்க.''

''மிஸ்டர், நான் காரியமாகத்தான் கேட்கிறேன்.''

லூக்கோஸ் மாத்யூவுக்குத் தைரியமூட்டினார்: ''உங்களுக்குச் சம்மதமென்றால் சொல்லிவிடுங்கள். எஜமானர் சும்மா வேடிக்கை பேசுவாரா? எஜமானருக்கு அப்படிப்பட்ட இயல்பு இல்லையே.''

சிறிது வெளிறிவிட்ட சிரிப்புடன், இன்னமும் நம்பிக்கை பிறக்காமல் மாத்யூ சொன்னார்:

''எனக்குச் சம்மதந்தான்.''

''ஆயின், நிச்சயமாக வெற்றி கிடைக்கக்கூடிய ஒரு தொகுதியில் நீங்கள் காங்கிரஸ் வேட்பாளராகப் போகிறீர்கள்!''

மாத்யூவும் லூக்கோஸும் பேசவில்லை. கேசவபிள்ளை தொடர்ந்து கேட்டார்: ''என்ன? நம்பிக்கை இல்லையா?''

''நம்பிக்கைதானுங்க.''

கேசவபிள்ளை அழுத்தந்திருத்தமான குரலில் கூறினார்: ''தயாராகி விடுங்கள்! கொஞ்சம் பணத்தையும் சேர்த்து வையுங்கள்! அவ்வளவு தான்.''

லூக்கோஸ் கேட்டார்:

''எவ்வளவு வேண்டியிருக்குமோ?''

மாத்யூவுக்குத் தைரியம் பிறந்தது.

''எவ்வளவானால் என்ன? உண்டாக்கி விடுகிறேன்.''

லூக்கோஸுக்குத் திட்டவட்டமான கணக்கு வேண்டியிருக்கிறது. கேசவபிள்ளை கூறினார்:

''லூக்கோஸ் பணமென்று கேட்டால் பின்தங்கி விடுகிறார். பரவாயில்லை. பணம் இல்லாவிட்டால் நான் தருகிறேன்.''

லூக்கோஸுக்கும் மாத்யூவுக்கும் உண்மையிலேயே ஒன்றுமே புரியவில்லை. காங்கிரஸ் வேட்பாளர்களைத் தலைமைக் காரியதரிசி நிர்ணயிக்கிறார்! இதெல்லாம் என்ன மாயையோ?

கேசவபிள்ளை கேட்டார்: ''உறுதிதானே?''

மாத்யூவும் லூக்கோஸும் ஒருமித்த குரலில் கூறினார்கள்: ''உறுதி தானுங்க.''

கேசவபிள்ளை சொன்னார்: ''ஆனால், இதை ஒரு பெரிய இரகசியமாகக் காப்பாற்றி வைக்கவேண்டும்.''

இருவரும் அப்படியே சபதம் எடுத்தனர்.

மாத்யூவும் லூக்கோஸும் அங்கிருந்து விடை பெற்றுக்கொண்டு நடந்து செல்ல அடியெடுத்து வைத்தனர். கேசவபிள்ளை கூறினார்: ''மிஸ்டர் மாத்யூ, ஒருவேளை மந்திரியாகிவிடலாம். மிஸ்டர் லூக்கோஸ் திருவாங்கூர் காங்கிரஸ் பிரசிடெண்டு ஆகலாம்.''

நடந்து போய்க்கொண்டிருந்த மாத்யூவும் லூக்கோஸும் சிறிதுநேரம் வரையில் பரஸ்பரம் பேசவில்லை. மாத்யூ மந்திரிப் பதவியையும், லூக்கோஸ் காங்கிரஸ் தலைமைப் பதவியையும் கனவு கண்டவாறு நடந்து செல்கிறார்களா?

கேசவபிள்ளைக்குக் காணிக்கை செலுத்தக் கொண்டு வந்ததைத் திருப்பிக் கொண்டு செல்வது அன்றுதான் முதல் முதலாக நடை பெற்றது.

சிறிது நேரத்துக்குப் பின் லூக்கோஸ் கேட்டார்: ''கோபிக்கும் நாராயணன் நாயருக்கும் சேர்ந்து எவ்வளவு பணம் கொடுக்கவேண்டியிருக்கிறது?''

''இருபத்தையாயிரம்.''

''ஊம் . . .!'' லூக்கோஸ் ஒருமுறை அழுத்தமாக முனகினார்.

அத்தியாயம் 31

அமைச்சரவை

மாதங்கள் சில கடந்து சென்றன. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் பல நடைபெற்றன. திருவாங்கூரில் வயது வந்தவர்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனர். முதல் முதலாக, மக்கள் மந்திரி சபை ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. மிஸ்டர் மாத்யூ பொதுப் பணித்துறை, அபிவிருத்தி ஆகிய இலாக்காக்களின் பொறுப்பை வகிக்கிற மந்திரியானார். தலைமைக் காரியதரிசி ஏற்றுக்கொண்ட காரியத்தை நிறைவேற்றி விட்டார்.

மிஸ்டர் மாத்யூ வசித்து வருகிற மந்திரி பங்களாவை நோக்கி, அவரைச் சந்திக்க ஒருவன் வந்தான். அந்தரங்கக் காரியதரிசியிடம், ''மந்திரியைச் சந்திக்க வாய்ப்பு கிடைக்குமா?'' என்று கேட்டான். காரியதரிசி ஒரு குறிப்பை எழுதித் தரச் சொன்னார். சந்திக்க வந்தவன் ஒரு துண்டுக் காகிதத்தில் தம் பெயரை எழுதிக் கொடுத்தான்: ''கோபி!''

டபேதார் மேல்மாடிக்குச் சென்றார். மந்திரி அப்போது ஒரு கோப்பை காபி பருகிக்கொண்டிருந்தார். நாற்காலியின் ஒரு கைமீது அமர்ந்த வாறு, அவருடைய வாழ்க்கைத் துணைவி காபி பகிர்ந்து கொடுத்துக் கொண்டிருந்தாள். இந்த நிலையில் உள்ளே செல்வது சரியல்ல என்று டபேதாருக்குத் தோன்றியது. அவர் கீழிறங்கி வந்து, சிறிதுநேரம் போகட்டுமென்று வந்தவனிடம் கூறினார்.

கோபி காத்திருந்தான். அப்போது கதராடை அணிந்த நான்கைந்து பிரமுகர்கள் அங்கே காரில் வந்து இறங்கினார்கள். அலுவலகத்தில் இருந்த வர்களெல்லாம் அவர்களைக் கண்டதும் எழுந்து நின்றனர். அவர்கள் ஆட்சி சம்பந்தமாக மிக முக்கியத்துவம் பெற்றவர்கள் என்றே தோன்றியது. அவர்களில் ஒருவர் கேட்டார்: ''மேலே மாடியில் இருக் கிறாரா?''

அந்தரங்கக் காரியதரிசி தாழ்மையுடன் பதில் அளித்தார், ''இருக்கிறார்'' என்று.

விசிட்டிங் கார்டு கொடுக்கப்படவில்லை. துண்டுக் காகிதத்தில் பெயர்களை எழுதிக் கொடுக்கவில்லை. நேரடியாக மேல்மாடிக்குச் சென்றுவிட்டனர்.

ஆத்திரத்தினால் கோபியின் உடம்பெல்லாம் நடுங்கியது. சந்தர்ப் பத்துக்கேற்றவாறு இரண்டு கோஷங்கள் அவன் தொண்டையை நோக்கி உருண்டெழுந்து வந்தன. ஆயினும் அவன் அவற்றைக் கட்டுப்படுத்தி

அடக்கிக்கொண்டான். சிறிது நேரத்துக்குள் அந்த ஆத்திரத்தைச் சிறிது அடக்கிவிட்டுக் கோபி கேட்டான்: ''யார் அவர்கள்?''

மன்னிப்புக் கோருகிற குரலில் அந்தரங்கக் காரியதரிசி பதில் அளித்தார்: ''அவர்களில் ஒருவர் இப்போதைய காங்கிரஸ் பிரசிடெண்டு! உலஹன்ஞன்! முன்னர் கத்தோலிக்கர் காங்கிரஸ் தலைவராக இருந்தவர்.''

''உலஹன்ஞன்!'' அந்தப் பெயரைக் கோபி கேள்விப்பட்டிருக்கிறான். ஒரு பெரிய எஸ்டேட் முதலாளி! போராட்டம் நடந்துகொண்டிருந்த போது பீருமேட்டில் நடந்த ஒரு காங்கிரஸ் கூட்டத்தைக் கலைத்து விட்டவர் இவர்தாம். எஸ்டேட்டில் வேலை செய்கிற சில தமிழ்த் தொழிலாளிகளை ஏவிவிட்டுக் கற்களை வீசியெறியச் செய்தவர். அன்று கோபிகூடக் கல்லடி பட்டிருந்தான். மேற்கொண்டு அவரைப்பற்றிய பல்வேறு விஷயங்கள் கோபிக்குத் தெரியும். சுதந்தரத் திருவாங்கூர் வேண்டுமென்று அன்று அவ்வளவு வீறுடன் வாதித்தவர் வேறு யாரும் இல்லை.

மீண்டும் சில நிமிடங்கள் நகர்ந்தன. கோபி அந்தரங்கக் காரிய தரிசியை அணுகியவாறு சொன்னான்: ''அந்தத் துண்டுக் காகிதத்தை அவரிடம் கொடுத்தால் பரவாயில்லை.''

அந்தரங்கக் காரியதரிசி வினயத்துடன்தான் பதிலளித்தார்: ''போனவர்கள் திரும்பி வரவில்லை. அவர்கள் வந்த பிறகுதான் இன்னொருவர் வந்திருப்பதைத் தெரிவிக்க முடியும்.''

டபேதார் கோபிக்கு உபதேசித்தார்: ''இனி இன்னொக்குக் காத்திருக்க வேணும்ப்பா! அவங்க வந்தா அவ்வளவு சீக்கிரம் திரும்பிப் போக மாட்டாங்க. நாளைக்குக் காலையில் வந்துடுங்க! அதுதான் நல்லது.''

அந்தரங்கக் காரியதரிசிகூட அந்த யோசனையைத்தான் கூறினார். எவ்வளவு நேரம் வரையிலும் காத்திருந்தாலும் பரவாயில்லை, இன்று மந்திரியைச் சந்தித்த பிறகுதான் திரும்புவது என்ற தீர்மானமான முடிவுதான் கோபியுடையது. அப்போது டபேதார் அலட்சியமாகக் கூறினார்: ''அப்படியானு உட்கார்ந்துக்கோப்பா!''

பிரமுகர்கள் வழக்கம்போல் ரொம்ப நேரம் வரையில் மேல்மாடியில் தங்கவில்லை. அவர்கள் கீழிறங்கி வந்தார்கள். டபேதார் கோபியின் துண்டுக் காகிதத்தை எடுத்துக்கொண்டு மாடிக்குச் சென்றார்.

''கோபி!''

மந்திரியின் உள்ளம் ஒருமுறை நடுங்கியது. பயத்தின் நடுக்கமா? இனிமேல் ஒருபோதாவது கோபியைச் சந்திக்கவோ சமாளிக்கவோ சந்தர்ப்பம் வருமென்று மந்திரி சிந்தித்திருக்கவில்லை. அவர்கள் இருவரும் முற்றும் முரண்பட்ட இரு பாதைகளினூடேதான் பிரயாணம் செய்கின்றனர். இதோ! அந்த மனிதர் மந்திரி மாத்யூவின் முன்னே வரக் கீழே காத்துக்கொண்டிருக்கிறார்.

சிறையிலிருந்து விடுதலையடைந்த பின்னர், நாராயணன் நாயரையும் கோபியையும் மாத்யூ சந்திக்கவில்லை. சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. சிறையிலிருந்து வெளியே வந்த அன்றைய தினமே அவர்கள் தங்கள் உண்மை உருவத்தை வெளிக்காட்டினர். அவர்கள் காங்கிரஸைக் கடுமையாக விமர்சித்தனர். பின்பு தேர்தலின்போது, காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்ற தீவிரவாதிகளுடன் சேர்ந்துகொண்டு வேட்பாளர்களாக நின்று போட்டி போட்டனர். மிஸ்டர் மாத்யூவின் தொகுதியில் கோபி பெரிய தொந்தரவாகத்தான் இருந்தான். அவரைத் தனிப்பட்ட முறையிலேயே விமர்சனம் செய்தவாறு பல்வேறு பிரசங்கங்களை நிகழ்த்தியிருக்கிறான். துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டான். மாத்யூவை முடிந்த அளவு படுமோசமாகச் சித்திரித்துக் காட்டினான். மாத்யூவிடம் தனிப்பட்ட விரோதம் இருப்பதால்தான் கோபி இவ்வாறெல்லாம் செய்கிறான் என்ற எண்ணம் ஜனங்கள் மத்தியில் பரவலாக ஏற்பட்டது. வெறுப்பின் விஷத்தை அவ்வளவு தூரம் கக்கியது நிமித்தமாகவே இத்தகைய கருத்து பரவியது. அது மாத்யூவுக்குச் சாதகமாகப் பரிணமித்தது. ஆயினும் அவர் மிகவும் மனம் நொந்தார். அழுதுகூட இருக்கிறார். மாத்யூவைத் தோற்கடிப்பது கோபியின் வாழ்க்கைக் குறிக்கோள் அல்லது விரதமாக இருந்ததென்று தோன்றியது. எவ்வளவுதான் சிந்தித்துப் பார்த்த போதிலும் அந்தத் தனிப்பட்ட விரோதத்தின் மூலகாரணத்தைக் கண்டு பிடிக்க யாராலும் முடியவில்லை.

நாயருக்கும் கோபிக்குமாகப் பாதுகாத்து வைத்திருந்த பணம் கொடுக்கப்படவில்லை. அதைக் கொடுக்கக்கூடாதென்று லூக்கோஸ் தீர்மானித்தார். லூக்கோஸின் வார்த்தைகளிலேயே சொல்வதாக இருந்தால், 'கொடுக்கக்கூடிய அந்தப் பணம் மாத்யூ, லூக்கோஸ் இருவருடைய கழுத்தை அறுப்பதற்கான கத்தியை வாங்கவே பயன்படுத்தப்படும்' என்பதே. நேரடியாகப் பார்த்து அந்தப் பணம் கொடுக்கப்பட்டிருந்தால், ஒருவேளை, அவர்களுடைய விரோத மனப்பான்மை தணிந்திருக்கலாம் என்று பன்முறை மாத்யூவுக்குத் தோன்றிய துண்டு. கோபி வெளியிட்ட துண்டுப் பிரசுரங்களிலும், நிகழ்த்திய பிரசங்கங்களிலும் அதை ஒரு திருட்டாகச் சித்திரித்திருந்தான்.

மிஸ்டர் மாத்யூவுக்கு முதலில் ஏற்பட்ட நடுக்கம் நின்றுவிட்டது. அந்தப் பழைய நண்பனை இருகரங்களையும் நீட்டி வரவேற்றால் என்ன என்று அவருக்குத் தோன்றியது. ஓர் அரவணைப்பிலே அத்தனை விரோதங்களும் ஒருவேளை கரைந்து போய்விடலாமென்றுகூடத் தோன்றியது. அரசியல் துறையில் எதிர்ப்புக்களும் கருத்து வேறுபாடுகளும் இருந்துவிட்டுப் போகட்டுமே. அதனால் என்ன? அந்தப் பணத்தைக் கொடுத்துவிடுவதுதான் நல்லது. அவ்வளவு பணம் இப்போது கையிலே இல்லாவிட்டாலும் முடிந்த அளவு காலதாமதமின்றி அதைச் சேர்த்துக் கொடுத்துவிட வேண்டியதுதான் . . . திடீரென இன்னொரு சிந்தனை அவர் மனத்திலே

தோன்றியது. அது அவரைக் கீழ்ப்படுத்திவிட்டது. அது தேர்தலின் போது ஏற்பட்ட அநுபவங்களிலிருந்து உருவானதாகும். அந்தப் பகைமை எண்ணம் அரசியல் கருத்து வேறுபாடுகளால் ஏற்பட்டதல்ல. கோபியே அதைச் சொல்லியிருக்கிறான். சுதந்தரத்துக்குப் பிறகு காங்கிரஸுக்குள்ளே நுழைந்துவிட்ட சந்தர்ப்பவாதம், சுயநல எண்ணங்கள் ஆகிய இரண்டின் உதாரணந்தான் மாத்யூ என்றல்லவா கோபி சொல்லியிருக்கிறான்? இந்த விரோதங்கூடத் தனிப்பட்ட முறையில் ஏற்பட்டதுதானும்! அரசியல் கருத்து வேறுபாடுகளையும் தனிப்பட்ட விரோத எண்ணங்களையும் தலைநார் இழையால் பிரித்து வைத்துப் பார்க்கத் தன்னால் இயலாதென்று பலதடவை பிரகடனம் செய்திருக்கிறான் கோபி. அந்த நிலைமையில் இப்போது நம்பிக்கையுடன் கோபியை அரவணைக்க முடியுமா? ஒருவேளை அந்த ஆலிங்கனத்தின் போது, ஷேர்க்கானுக்கு நேர்ந்துவிட்டதுபோல் தம்முடைய புறமுதுகிலே கத்தியைக் குத்தியிறக்கிவிட்டால்? . . . சந்திக்க வந்த ஒரு பார்வையாளனை, அதுவும் நீண்ட நெடுநாளைய நட்புறவுகொண்டிருந்த ஒருவனைப் பார்க்க முடியாதென்று சொல்லியனுப்புவது சரிதானா?

டபேதார் உத்தரவை எதிர்பார்த்து நின்றார். லூக்கோஸ் ஓர் ஓட்டலிலேதான் தங்கியிருக்கிறார். போனிலே கூப்பிட்டுக் கேட்டால் என்ன? கூப்பிட்டார், லூக்கோஸ் அங்கில்லை. கோபியை அனுப்பிவிடவேண்டுமா; வேண்டாமா? உடனடியாகத் தீர்மானிக்கவேண்டும். எதற்காக அவன் வந்திருக்கிறான்? பணத்துக்காகத்தானா? கெட்ட நோக்குடனா? சட்டைக்கடியில் ஏதாவது ஆயுதத்தை மறைத்து வைத்திருக்கிறானா? யாருக்குத்தான் தெரியும்? அவனுக்கு அரசியல் கொள்கை வெறி தலைக்கேறியிருக்கலாம். பைத்தியம் பிடித்திருக்கலாம். பணத்திற்காகத்தான் வந்திருக்கிறான் என்றால் உடனடியாக அவ்வளவு பணத்தைக் கொடுப்பது கடினந்தான். அது மட்டும் அல்ல; அதைக் கொடுக்கவேண்டாமென்ற தீர்மானந்தான் லூக்கோஸினுடையது. மாத்யூகூட அந்தத் தீர்மானத்தை ஆமோதித்தவர்தாம்.

''இப்போது சந்திக்கச் சந்தர்ப்பம் இல்லை.''

மந்திரியின் திருவாயிலிருந்து உதிர்ந்த வாசகம் இதுதான்.

அந்த வாசகம் வெளியே வந்துவிட்டது. அப்படிச் சொல்லியிருக்க வேண்டாமென்று மறுகணம் மந்திரிக்குத் தோன்றியது. இது சரியல்ல, தவறு! . . . ஏன் இப்படிச் சிந்திக்கவேண்டும்? ஒருகாலும் மறக்கமுடியாத நிலையிலேதான் கோபி நடந்துகொண்டிருக்கிறான். எப்போதாவது சந்திக்கவேண்டியிருக்குமென்ற எண்ணங்கூட அவருக்கு ஏற்படவில்லைபோல் தோன்றியது. எதிர்கால உறவுகூட அப்படியே இருந்து வந்தால் போதும். பணத்தின் கணக்கைத் தீர்க்கவேண்டியிருக்கலாம் . . . இல்லை! அவனிடம் எந்தக் கணக்கையும் சொல்லித் தீர்க்கவேண்டியதில்லை. எந்த முறையில் அவனுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது? சட்டப்படி ஒரு தம்பிடிகூடக் கொடுக்கவேண்டிய

தில்லை. அன்பின் பெயரால் கொடுக்கவேண்டியிருக்கிறதென்றால் அந்தத் தகுதியைக்கூட இழந்து விட்டிருக்கிறான். சந்திக்கச் சந்தர்ப்பமில்லை என்று தைரியமாகவே சொல்லிவிடலாம். ஆனால் ஒரு முக்கியமான பிரச்னையை மறப்பதற்கில்லை. கோபி ஒரு பொல்லாத பேர்வழி. பிடிவாத குணம் கொண்டவன்; சாகஸ எண்ணம் கொண்டவன். இந்தப் பகைமை எண்ணம் எந்தத் திசையை நோக்கிப் பாய்ந்து செல்லும் என்று சொல்லமுடியாது. எதிர்பாராத வழிமுறைகளைக் கையாண்டுவிடலாம். ஒரு கருநாகப் பாம்பைத் துன்புறுத்தி விட்டு விடுகிறோம் . . .

மந்திரியின் மன அமைதி குலைந்தது. லூக்கோஸைச் சந்தித்துப் பேசினால்தான் அந்த மன நிம்மதியைத் திரும்பப் பெறமுடியும். நீர் மின்திட்டத்துக்கான இடத்தை மாற்றி வேறு ஓர் இடத்தில் அமைப்பதற்கான யோசனை அநுமதிக்காகக் காத்துக் கிடக்கிறது. அது விஷயமாக வேறு ஒன்றும் செய்யவேண்டியிருந்ததில்லை. அமைச்சரவையின் அநுமதிகூடக் கிடைத்துவிட்டது. ஒரு கையெழுத்தைப் போடுவது மட்டுந்தான் பாக்கி. அதைக்கூடச் செய்யமுடியாமல் தவிக்கிறார் மந்திரி.

மாலையில் லூக்கோஸ் மந்திரி பங்களாவுக்கு வந்தார். மந்திரி சொன்னதை எல்லாம் கவனத்துடன் கேட்டார். மந்திரி இவ்வாறு சொல்லி முடித்தார்:

''சொன்னேனே, இன்றைய தினம் மனத்துக்குக் கொஞ்சங்கூட நிம்மதியிருந்ததில்லை. சிதைந்த சிந்தனைகளுடன் பகல் வேளையைப் போக்கினேன். என்ன செய்வது? என் நிம்மதி பூராவும் கெட்டுவிட்டது மிஸ்டர் லூக்கோஸ்!''

இவ்வளவுதானா? இதெல்லாம் ஒரு பிரச்னையே அல்ல என்ற முறையில் தான் லூக்கோஸ் சொன்னார்: ''என்ன வேண்டும் என்கிறீர்கள்? எனக் கொன்றும் புரியவில்லை. கோபி வந்தது பணத்துக்காக இருக்கலாம் அல்லது வேறு ஏதாவதொரு காரியத்துக்காக இருக்கலாம். இன்று சந்திக்கச் சந்தர்ப்பமில்லை என்று மட்டுந்தானே சொல்லியனுப்பினீர்கள்? அதைப்பற்றி இவ்வளவு தூரம் சிந்திக்க என்ன இருக்கிறது? ஒன்றுமே கிடையாது. நாளைக்குக்கூட வருவான் என்று வைத்துக் கொள்ளுங்கள். சௌகரியமிருந்தால் சந்தியுங்கள். பணத்தைப்பற்றிக் கேட்டால், எந்தப் பணம் என்று தைரியமாகத் திருப்பிக் கேட்க வேண்டும். ஏதாவது காரியத்தைச் சாதிப்பதற்காக வருகிறான் என்றால், செய்துவிட்ட துரோகங்கள் அனைத்தையும் மறந்து, செய்யக்கூடியதாக இருந்தால் சாதித்துக் கொடுங்கள்! அவ்வளவுதான்.''

மிஸ்டர் மாத்யூவுக்குத் தைரியமூட்டத் தன்னால் முடிவில்லையென்று லூக்கோஸுக்குத் தோன்றியது. லூக்கோஸ் சொன்னதெல்லாம் சரி. அதன்படி நடந்துகொள்ளலாம். ஆனால் மன அமைதி? தம்மைத் துன்புறுத்திக்கொண்டிருப்பது என்னவென்று மந்திரிக்குப் புரியவில்லை. பயமா? அல்லது மனச்சாட்சியின் உறுத்தலா?

* * *

அடுத்த சில நாட்களில் வெளிவந்த சில பத்திரிகைகளில் மிஸ்டர் மாத்யூவின் சென்ற கால ஊழல்களைப்பற்றிய ஒரு கட்டுரை பிரசுரிக்கப் பட்டிருந்தது. கோபியே அதை எழுதித் தன் பெயரை வைத்தே பிரசுரித்திருந்தான். பல வருஷங்களாக நிர்மாணிக்கப்பட்டு வந்த நீர் மின் திட்டத்தை உடைத்தெறிந்து புதிதாக ஒன்றைத் துவக்க இருப்பது பற்றிக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அது ஒரு பகிரங்கமான ஊழலேதான் என்று அரசுக்குச் சவால் விட்டுக் கூறியது, அந்தக் கட்டுரை. மிஸ்டர் மாத்யூ அந்தக் காலத்தில் சுதந்தரத் திருவாங்கூருக்காக வாதித்துக்கொண் டிருந்தார். நாராயணன் நாயருக்கும் கோபிக்குமாகச் சேரவேண்டிய பணத்தைப் போலியான தஸ்தாவேஜுகளைத் தயாரித்து அரசாங்கத்திடமிருந்து வாங்கிக்கொண்டார். இவையனைத்தும் தகுந்த ருசுக்களுடன் நிரூபிக்கப்படத் தயார் என்றும், அரசுக்குத் தைரியம் இருந்தால் முன் வந்து பதில் சொல்ல வேண்டுமென்றும் அந்தக் கட்டுரை அறை கூவி அழைத்திருந்தது.

அது அரசு மட்டத்தில் மிகுந்த பரபரப்பைச் சிருஷ்டித்தது. நாட்டில் லஞ்சமும் ஊழல்களும் புதிதாக நடைபெறுவதல்ல. ஆனால், தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் ஊழல் புரிகிறது என்று ஜனங்கள் அறிந்துகொண்டனர். இதுவரையில் மக்கள் அரசாங்கம் ஏற்பட்ட தில்லை. ஊழலைக் களைந்தெறிவதற்காகத்தான் மக்கள் பிரதிநிதிகள். அத்தகைய பிரதிநிதிகள் ஆட்சி புரிகிற சந்தர்ப்பத்தில் முதல் முதலாகத் தோன்றிய ஊழல் குற்றச்சாட்டுத்தான் இது. எனவே, முதல் ஊழலுக்கு முக்கியத்துவம் இல்லையா? பெரிய பிரச்னை அல்ல வென்று கூறித் தள்ளிவிடமுடியாது.

விமர்சனங்கள் தொடர்ந்தாற்போல் பத்திரிகைகளில் வந்த வண்ணம் இருந்தன. அரசாங்கம் பதில் சொல்லித்தான் ஆகவேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. பதில் வந்தது. கோபி ஒரு கம்யூனிஸ்டு. அவன் புரிந்திருக்கிற பலாத்காரச் செயல்கள் எண்ணற்றவை. மக்கள் சர்க்கார்மேல் கரி பூசிக் காட்டுவதற்காகச் செய்திருக்கிற கீழ்த்தர மான முயற்சி இது!

ஆனால் மக்கள் இந்தப் பதிலை அவ்வளவாக நம்பவில்லை.

மாத்யூவின் மந்திரி பங்களாவிலே ஆலோசனைக் கூட்டம் நடை பெற்றது. லூக்கோஸ், மிஸ்டர் மாத்யூ, தலைமைக் காரியதரிசி ஆகியோர் அதிலே பங்கெடுத்துக்கொண்டனர். இந்தக் குற்றச்சாட்டின் கூர்மையை மழுங்கடிக்க ஒரே ஒரு வழிதான் உண்டு. சீஃப் செக்ரடரிதான் யோசனை கூறினார். நாராயணன் நாயரைக் கண்டுபிடிக்கவேண்டும், நாயர் இந்தக் குற்றச்சாட்டை மறுக்கவேண்டும்.

ஆனால், நாயர் இப்போது எந்த நிலைமையிலிருந்து வருகிறார்? அதை அறியவேண்டும் அல்லவா?

மாத்யூ சொன்னார்: ''நாயர் தேர்தலில் போட்டி போட்டார். தீவிர வாதிகள் அவருக்கு உதவி செய்தார்கள். அவர்கள் எல்லாரும் ஒரே அணியில்தான் இருப்பார்கள் எனக் கருதுகிறேன்.''

ஆனால், லூக்கோஸுக்கு நாராயணன் நாயர்மீது நம்பிக்கையுண்டு. நாயர், கோபியைப் போன்று கம்யூனிஸ்டாகிவிடமாட்டார்.

அப்படியானால், அவரைக் கண்டுபிடித்து முயன்று பார்க்கவேண்டியது தான் என்று அந்தக் கூட்டம் முடிவெடுத்தது. அந்த முயற்சி பலன் அளிக்கு மென்ற நம்பிக்கை இல்லாவிட்டாலும் முயன்று பார்க்கவேண்டியது தான். அந்தப் பொறுப்பு லூக்கோஸிடம் ஒப்படைக்கப்பட்டது.

கோபி முன் வைத்திருக்கிற ஆதாரங்கள் சந்தேகத்துக்கு இடமில்லா தவை. அந்த ஆதாரங்களின் அடிப்படையில் வெளியிட்டிருந்த அறிக்கைகள் முற்றும் உண்மையானவை. இந்தத் தகவல்கள் எல்லாம் கோபியிடம் எங்ஙனம் வந்து சேர்ந்தன? ஆலோசனைக்குரிய விஷயந்தான். அரசாங்க ரகசியங்கள் இவ்வாறு தெருக்களிலே வந்துவிடுவதென்றால்?

''நாளை நடக்கவிருக்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தப் பிரச்னையை எழுப்பமுடியுமா?'' கேசவபிள்ளை மாத்யூவிடம் கேட்டார்.

''கண்டிப்பாக. இரகசியங்கள் இப்படி வெளியே போவதென்றால் ஆட்சிப் பொறுப்பை எப்படி நிறைவேற்றிச் செல்லமுடியும்?'' மந்திரி மாத்யூ சொன்னார்.

சிறிது நேரம் வரையில் யாருமே பேசவில்லை. நண்பர்களைப் பாது காக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் அன்று லூக்கோஸ் செய்த ஒரு நல்ல காரியந்தான் இது. யாருக்காக இதைச் செய்தார்களோ, அந்த நபர்தான் இன்று எதிர்த்து நிற்கிறான். இதன் பலன் அவனுக்குக் கிடைக்கவில்லை என்பது உண்மைதான். அன்று செய்த காரியங்களைப்பற்றி இப்போது லூக்கோஸ் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தார். கேசவபிள்ளையின் முகம் வழக்கத்தைவிடக் கடுமையாகக் காட்சியளித்தது. ஒரு நாகசர்ப்பத்தின் கண்கள்போல், இரு கண்மணிகள் ஒன்றிணையும் முயற்சியில் தீட்சண்யம் அடைந்துவிட்டன. அவருடைய சிந்தனை ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் ஆழமாக ஊன்றி நின்றது.

மிஸ்டர் மாத்யூ கேட்டார்: ''ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்?''

லூக்கோஸ் சிரித்தவாறு கூறினார்: ''இந்த விஷயத்தில் நான் என்ன சொல்வது? நீங்கள் இருவரும் சேர்ந்து தீர்மானிக்கவேண்டிய விஷயந் தானே?''

கேசவபிள்ளை அதிகார தோரணையில் அழுத்தமாகக் கூறினார்: ''இந்த இரகசியத் தஸ்தாவேஜுகள் எங்ஙனம் வெளியே போகின்றன என்று எனக்குத் தெரியும். முன்பு இந்த மாதிரி ஏதாவது நடந்துவிட்டால், குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டனை கொடுக்க யாரிடமும் கேட்காமல் நானே நடவடிக்கை எடுத்ததுண்டு. இப்போதுகூட எனக்கு அதிகாரம் இல்லாமல் இல்லை. ஆனால், இந்தப் புதிய அமைப்பிலே நான் அதைப் பயன்படுத்த விரும்புவதில்லை.''

மிஸ்டர் மாத்யூ கேட்டார்: ''ஏன் அப்படிப் பின் வாங்குகிறீர்கள்?''

கேசவபிள்ளை ஒரு புன்னகையுடன் கூறினார்: ''நான் பின் வாங்க வில்லை; எனது அதிகாரத்தைப் பயன்படுத்தினால் அது எங்கே சென்று முடியுமென்று . . . இல்லை, அதைச் சொல்லவேண்டியதில்லை.''

மிஸ்டர் மாத்யூ கேட்டார்: ''நானைய அமைச்சரவைக் கூட்டத்தில் அதற்கான முடிவை எடுத்துக்கொண்டால்?''

''நான் அதற்கேற்ற முறையில் நடந்துகொள்ளக் கடமைப் பட்டவன். நடவடிக்கை எடுக்கத் தொடங்குவேன். குற்றம் இழைத்த வன் தண்டனைக்குள்ளாவான்.''

லூக்கோஸ் கேட்டார்: ''எஜமானரே, அது யார்?''

''என்னமோ, எனக்குத் தெரியாது. யாராவால் என்ன?''

அன்றைய தினத்திலிருந்தே லூக்கோஸ், தமக்கு அளிக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்ற ஆரம்பித்தார்.

காங்கிரஸுடன் கருத்து வேறுபாடு கொண்டு பிரிந்து சென்ற தீவிர வாதிகளுடன் ஒன்றுபட்டுத்தான் நாராயணன் நாயர் தேர்தலுக்கு நின்றார். காங்கிரஸின் மிக முக்கியமான ஒரு பிரமுகரை எதிர்த்தே அவர் போட்டியிட்டார். போட்டியில் நாயர் பரிதாபத்துக்குரிய வகையில் தோல்வியுற்றார். வெறும் ஐம்பத்தைந்து ஓட்டுகளே அவருக்குக் கிடைத்தன. அந்தத் தோல்வி அவரைப் பொறுத்த வரையில் ஒரு பேரிடியாகத்தான் இருந்தது. அவர் திடீரெனச் செயலற்றுப் போனார். கோபிக்குப் பிடிவாதந்தான் அதிகரித்தது. தேர்தல் முடிந்தபோது இன்னொரு விஷயத்தை நாராயணன் நாயர் தெளிவாகக் கண்டார். காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்ற தீவிரவாதிகள் கம்யூ னிஸ்டு கட்சியை நோக்கிச் சென்றுகொண் டிருந்தார்கள். அது, நாயர் விரும்பாத காரியம். அவரைப் பொறுத்தவரையில் அதற்கான காரணங்கள் இருக்கின்றன. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தி ரண்டு ஆகஸ்டு மாதத்தில் அனைத்தையும் மறந்து வீறுகொண்டு போர்க் களத்தில் குதித்தவர்தான் நாயர். வாழ்க்கையில் மறக்கவோ, மன்னிப் பளிக்கவோ முடியாத வகையில், இயக்கத்திலே தம்முடன் சேர்ந்து நின்றிருந்த இருவர், அவரையும் சகாக்களையும் போலீசுக்குக் காட்டிக் கொடுத்தனர். அதனால், போராட்டக் குழு முடிவெடுத்த திட்டத்தை அவரால் அமல் நடத்த முடியாமல் போய்விட்டதாம்! காட்டிக் கொடுத் தவர்கள் கம்யூனிஸ்டுகளாம்! அதைப்பற்றி நினைக்கும்போது இன்றுகூட நாயருடைய நெஞ்சம் தகர்ந்துவிடுகிறது. கம்யூனிஸ்டுகளுக்கு ஒரு போதும் மன்னிப்பு அளிக்க முடியாதென்றே அவர் சொல்கிறார். இந்தியா சுதந்தரத்துக்காகப் போராடிக்கொண் டிருந்தபோது, இரண் டாவது உலகயுத்தத்தை மக்கள் யுத்தமெனக் கம்யூனிஸ்டுகள் பிரசாரம் செய்க வந்ததன் நியாயத்தை இன்றுகூட அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. கம்யூனிஸ்டுகள் அந்தக் காலத்தில் வெள்ளையருடன் சேர்ந்து நின்றார்களாம். எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு பொதுக் கூட்

டத்தில், கம்யூனிஸ்டுப் பேச்சாளர்கள் சுபாஷ் சந்திர போஸை நாய் என்றும், பன்றி என்றும் திட்டிப் பேசியபோது நாயர் ஆத்திர மடைந்து கலவரத்தை உண்டு பண்ணினார். அதற்காக அவருக்கு ஆறு மாதக் காலச் சிறைத் தண்டனை கிடைத்தது. கம்யூனிஸ்டுகள் இந்த நாட்டைச் சுவர்க்கமாக்கிவிடுவார்கள் என்று சொன்னதில்லை கூட, தாம் அவர்களை நம்பப் போவதில்லை என்று நாயர் சொல்கிறார். அவர்களிடம் ஓட்டும் வேண்டாம், உறவும் வேண்டாம்!

இவ்வாறாக, தம்முடன் இருந்து வந்தவர்களெல்லாம் அந்தப் பிரவாகத்திலே அகப்பட்டுக் கம்யூனிஸ்டு கட்சியை நோக்கிச் செல்வதைப் பார்த்தவாறு நின்றார் நாராயணன் நாயர். அந்தக் காட்சியைப் பார்க்கின்ற அந்த மனிதர், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணி நேரமும், ஒவ்வொரு நிமிஷமும் களைப்படைந்து தளர்ந்து நிற்கிறார். பார்த்துச் சகிக்கமுடியாத காட்சிதான் அது. அவர்கள் எங்கே செல்கிறார்கள்? பழைய நிகழ்ச்சியை எண்ணிப் பார்க்கிறபோது நாயர் பயப்படுகிறார். அந்த வலையை நோக்கித்தானே, இந்தக் கிளிகள் பறந்து செல்கின்றன? கோபியும் அங்கேதானே போகிறான்?

எங்கிருந்து வந்தாரோ, அந்த இடத்துக்கே செல்லலாமென்றால், அதுவும் கம்யூனிஸ்டுக் கூடுபோலவே பயங்கரமாக இருக்கிறது. அதற்குள்ளே இப்போது எல்லாத் துஷ்ட மிருகங்களும் நுழைந்திருக்கின்றன. அங்கேயே சென்றுவிடலாமென்றால், அது மிகவும் வெட்கமான விஷயம்.

நாட்டின் அரசியல் வாழ்க்கையுடன் ஒன்றிணைந்து செல்ல நாயரால் முடியவில்லை. சுதந்தரப் போராட்டத்தையும், காந்திஜியையும் பகிரங்கமாக எதிர்த்து நின்றவர்கள் இன்று கதராடை அணிகின்றனர்; காந்திக்குல்லாய் தரிக்கின்றனர். அப்புறம் காங்கிரஸ்காரர்கள் எனச் சொல்லி நடக்கின்றனர். அவர்கள் காங்கிரசின் உன்னதப் பண்பாடுகளைப் பகிரங்கமாக வருணனை செய்கின்றனர். இன்று நாடே காங்கிரஸ் மயம். பயமுறுத்துகிற வகையில் மறுபக்கத்தில் கம்யூனிஸ்டுகள் தங்கள் ஸ்தாபன பலத்தைப் பெருக்கிக் கொள்கின்றனர். நாயரால் எந்த இடத்திலும் சென்று இணைந்துகொள்ள முடியாது.

நண்பர்கள் அனைவரையும் இழந்து தளர்ந்த நெஞ்சினரான அந்த மனிதர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் அலைந்து திரிந்து களைத்துக் காணப்பட்டார். அவருக்குச் செயல்பட ஒன்றுமில்லை. நண்பர்களாக யாரும் இல்லை. எல்லாரையும், எல்லாவற்றையும் அவர் வெறுக்கத் தொடங்கினார். ஒரு வேளை உணவுகூட அவருக்குப் பிரச்னையாகி விட்டது. ஒருவேளை, வாழ்க்கையிலே வீணாகி விட்ட ஒரு காலகட்டத்தை அவர் திரும்பிப் பார்க்கிறாரா? அதற்காகத்தானே எல்லாவற்றையும் இழந்துவிட்டார்? என்ன பலனைக் கண்டோம் என்று கூட அவர் எண்ணுகிறாரா? இனிமேல் தன்னால் என்ன செய்யமுடியும்? செயல்திறன் அனைத்தும் அஸ்தமித்துவிட்டதாக அவருக்குத் தோன்

நியது. ஓர் இடத்துக்குச் சென்று ஒரு வேளை உணவைக் கேட்டு வாங்கிச் சாப்பிடக்கூட அவரால் முடியவில்லை.

லூக்கோஸ் அவரைத் தேடித் தேடியலைந்தார். இறுதியில் பெரும் பாலூரிலே அவரைக் கண்டுபிடித்தார். ''இந்த ஊருக்கு எதற்காக வந்தீர்கள்?'' என்று கேட்டால் அதற்குத் தெளிவான பதில் இல்லை. ஆனால், நாயருக்கு மூளைக்கோளாறு ஏற்படவில்லை. கெட்டிக்காரரான லூக்கோஸ் அவரைத் தகுந்த முறையில் பயன்படுத்தினார்.

ஒரு சில நாட்களுக்குள், நாராயணன் நாயருடைய பெயரிலே, பத்திரிகைகளில் கோபிக்குப் பதில் அளிக்கும் வகையில் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன. கம்யூனிஸ்டு முகாமுக்குள்ளே தஞ்சமடைந்திருக்கும் கோபி, கம்யூனிஸ்டுத் தந்திரங்களுக்குத் தம்மை ஒரு கருவியாக்கிக்கொண்டிருக்க வேண்டியதில்லை என்று நாயர் அந்தக் கட்டுரைகளில் தெளிவுபடுத்தியிருந்தார். கோபிமீதும், கம்யூனிஸ்டு கட்சி மீதும் நாயருக்கு இருந்த ஆத்திரத்தையும், வெறுப்பையும் மாத்யூ, லூக்கோஸ், கேசவபிள்ளை ஆகியோர் சரிவரப் பயன்படுத்தினர்.

சம்ஸ்தானம் முழுவதும் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. பொதுமக்களின் பெயரில் கம்யூனிஸ்டுக் கட்சி பொதுக்கூட்டங்களை நடத்தியது. காங்கிரஸ்காரர்களும் விட்டுக் கொடுக்காமல் கூட்டங்களை நடத்தினர். மந்திரிகளும் பிரமுகர்களும் காங்கிரஸ் கூட்டங்களில் பேசினார்கள். ஆனால், கம்யூனிஸ்டு கட்சிக் கூட்டங்களுக்குத்தான் அதிகமான விறுவிறுப்பு இருந்தது. அவர்கள் கூட்டங்களை ஓட்டிக் கலை நிகழ்ச்சிகளை நடத்தினர். நாடகம், ஓட்டம், துள்ளல் முதலியன. மந்திரிகளைப்பற்றிக் கதாகாலக்ஷேபங்களை நடத்தினர். மந்திரி பத்தினிமார்களைக் கதாபாத்திரங்களாக்கினர். ஓட்டுமொத்தமாக ஒரு நேர்தலின் பரபரப்பு சம்ஸ்தானம் முழுவதும் நிலவியது.

* * *

அரசாங்க இரகசியங்கள் பகிரங்கமாகிவிட்டதைப்பற்றி ஓர் இரகசிய விசாரணை நடத்தவேண்டுமென்று அமைச்சரவை முடிவெடுத்தது. அந்தப் பொறுப்பு முழுதும் தலைமைக் காரியதரிசியிடம் ஒப்படைக்கப்பட்டது. இரகசிய விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது இன்னொரு மந்திரிமீது ஊழல் குற்றச்சாட்டு ஒன்று கூறப்பட்டது. மந்திரி குருப்பு அவர்கள் உணவு, போக்குவரத்து ஆகிய இலாக்காக்களின் பொறுப்புக்களை வகித்து வந்தார்கள். சம்ஸ்தானத்துக்குத் தேவையான உரம் வரவழைக்கப்பட்ட இனத்தில் ஒரு பெரிய தொகையை அவர் கையாடினாராம். அதைப் போலவே பஸ்களை வாங்கிய இனத்தில் ஒரு பெரிய தொகையைக் கமிஷனாகப் பெற்றுக்கொண்டாராம். இந்தக் குற்றச்சாட்டைக் கிளப்பிவிட்டவர் வேறு யாரும் அல்ல. சட்டசபை உறுப்பினரான ஒரு காங்கிரஸ் பிரமுகரேதான். அவருக்குப் பின்னால் ஏழெட்டுச் சட்டசபை உறுப்பினர்கள் இருக்கிறார்கள். குற்றச்சாட்டைக்

கிளப்பியவர் சில காரியங்களைச் சாதிப்பதற்காக நியதிகளைப் புறக்கணித்துத் தம்மிடம் வந்தாரென்றும், அந்தக் காரியங்கள் கை கூடாமற்போன ஆத்திரத்திலே இத்தகைய ஊழல் குற்றச்சாட்டுக்களைக் கூறியிருக்கிறாரென்றும் மந்திரி மிஸ்டர் குருப்பு பதில் அளித்தார். அப்போது மந்திரியின் இந்த ஊழலைப் பகிரங்க விசாரணைக்கு விட வேண்டுமென்று கம்யூனிஸ்டு கட்சி கிளர்ச்சி செய்தது.

பாவம், ஜனங்கள்! அவர்களுக்கு இந்தப் பகிரங்க விசாரணை என்றால் என்னவென்று தெரியாது. பகிரங்க விசாரணை வேண்டுமென்ற கோஷம் எல்லாச் சுவர்கள் மீதும் தோன்றியது.

அரசாங்க இரகசியங்கள் பகிரங்கமாகிவிட்டதைப் பற்றிய இரகசிய விசாரணையின் பூர்வாங்க அறிக்கை மந்திரிசபை முன்னால் சமர்ப்பிக்கப் பட்டது. காரியதரிசி மிஸ்டர் பிலிப்புதான் குற்றவாளி என்று பூர்வாங்க விசாரணையிலிருந்து நிரூபணமாகியிருக்கிறது. விரிவான விசாரணையின் முடிவு தெரியும் வரையில் அந்த உத்தியோகஸ்தரைத் தாற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கிவிடவேண்டுமென்று அந்த அறிக்கையில் யோசனை கூறப்பட்டிருந்தது. இன்னோர் அதிகாரிகூட இந்த விஷயத்தில் குற்றவாளியாம். நீர்மின் திட்டத்தின் பொறுப்பை வகித்து வந்த பொறியாளர் மிஸ்டர் கைமள்கூட அரசாங்க இரகசி யங்களை இரகசியமாக வெளியே கொடுப்பதில் பங்காளியாக இருந்திருக் கிறாராம். அவரையும் தாற்காலிகமாக வேலையிலிருந்து விலக்கிவைக்க வேண்டும். புதிய திட்டத்தை உருவாக்க வேறோர் எஞ்சினீர்கூட நியமிக்கப்பட்டபோது, கைமள் அவர்களுக்குச் சம்பந்தப்பட்ட மந்திரி மீது இயல்பாகவே ஆத்திரம் ஏற்பட்டிருக்கலாமென்றும், அந்த ஆத்திரத் திலே உந்தப்பட்டு அரசாங்க இரகசியங்களை எதிராளிகளிடம் ஒப்படைத் திருக்கலாம் என்ற முடிவுக்கு வந்துவிடுவதற்கான ஆதாரங்கள் இருக் கின்றன என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

மந்திரி சபைக்கு நெருக்கடியான ஒரு நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆழமான பிளவை நோக்கி அது சென்றுகொண்டிருந்தது. மந்திரி உம்மன், மிஸ்டர் பிலிப்புக்கு மிகவும் வேண்டியவர். மந்திரி சபைக்குள்ளே பிரபலமானவர். அது மட்டும் அல்ல; மிஸ்டர் பிலிப்பு காங்கிரஸ் தலைவர் மிஸ்டர் உலஹன்னுன் அவர்களுடைய நெருங்கிய உறவினர் ஆவார். எனவே, காங்கிரஸ் ஸ்தாபனமே மிஸ்டர் பிலிப்புக்காக வாதாடும். திரு கைமள், நாயர் சர்வீஸ் சொஸைட்டிக்கு மிகவும் வேண்டியவர். மந்திரி சபையிலுள்ள, சொஸைட்டியின் பிரதிநிதி, திரு கைமளை ஆதரித்து நிற்பார். சொஸைட்டியும், அதன் சார்பிலுள்ள சட்டசபை உறுப்பினர் களும் திரு கைமள் அவர்களைக் கைவிடமாட்டார்கள். என்ன ஆனாலும் சரியே! இந்த விஷயத்தில் உறுதியாக நிற்கவேண்டுமென்பதுதான் முதல்வருடைய வாதம். மந்திரி சபையும், காங்கிரஸ் சட்டசபைக் கட்சியும் பிளவுபட்டுத் தகர்ந்துவிடுகிற ஒரு நெருக்கடி நிலைமையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தன.

லூக்கோஸுக்கு மனநிம்மதி இல்லை. அவர் கற்பனைக் கோட்டைகள் பலவற்றைக் கட்டி முடித்து வைத்திருந்தார். எல்லாமே தகர்ந்து விடுகிற ஒரு நிலைமைதான். அவர் கேசவபிள்ளையிடம் தஞ்சமடைந்தார்.

''ஏஜமானரே, என்ன செய்வது? பெரிய நெருக்கடி வந்து விட்டதே!'' லூக்கோஸ் சொன்னார்.

கேசவபிள்ளை கைவிரித்தார். அவருக்கு ஒன்றுமே தெரியாதாம். லூக்கோஸுக்குத் தெரியவேண்டிய விஷயம் ஒன்றே ஒன்றுதான். மாத்யூ மந்திரி சபையிலிருந்து நீக்கப்படுவாரா?

கேசவபிள்ளை கூறினார்: ''மந்திரி சபை விழுந்துவிட்டால் அவரும் வெளியேறவேண்டியவர்தானே?''

சோர்வடைந்த லூக்கோஸ் உதவியற்றவர்போல் கூறினார்: ''அது சங்கடமான காரியமாச்சே! மிஸ்டர் மாத்யூவுக்கு, தம் திறமையைக் காட்டச் சந்தர்ப்பம் கிடைக்காமல் போவதே! மத்திய சர்க்கார் ஐந்தாண்டுத் திட்டத்துக்கு வடிவம் கொடுத்தாகி விட்டதாமே.''

''ஆம்.'' கேசவபிள்ளை கூறினார். கோடிக்கணக்காகப் பணம் செலவு செய்யப்பட இருக்கிறது. ஏதோ தாங்கமுடியாத ஓர் இழப்பின் பளு தலைக்கேறிவிட்டவர்போல் லூக்கோஸ் தவித்தார்.

லூக்கோஸ் சொன்னார்: ''எசமானர் மனசு வச்சா எல்லாம் சரியாய்ப் போயிடும்.''

கேசவபிள்ளை கேட்டார்: ''நான் மனசு வைத்தால் என்ன நடக்கும் என்கிறீர்கள்?''

''பிலிப்பு அவர்களும் கைமள் அவர்களும் யாருக்கும் எந்த விதமான நஷ்டமும் ஏற்படாமல் காரியத்தைச் சாதித்துத் தந்தவர்கள் தானே? இப்போது அவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.''

ஒரு விநாடிக்குப் பிறகு லூக்கோஸ் தொடர்ந்து கூறினார்: ''எசமானர் மனசு வச்சா எல்லாம் சரியாய்ப் போயிடும். இந்த ஆபத்தான நிலைமையைச் சமாளித்துவிடலாங்க.''

கேசவபிள்ளைக்கு ஒரு விதக் கொடூரமான மனத்திருப்தி ஏற்பட்டது. பிலிப்புக்குச் சரியான படிப்பினையைக் கற்றுக்கொடுக்கவேண்டுமென்று அவர் பல நாட்களாக எண்ணிக்கொண்டிருந்தார். பிலிப்பு எப்போதுமே கேசவபிள்ளைக்குத் தீங்கிழைக்க முயற்சி செய்தவர்தாம். தேர்தலுக்கு முன் நடைபெற்ற அந்த மாபெரும் கிளர்ச்சியின் பின்னணியில் செயல்பட்ட மூளை மிஸ்டர் பிலிப்புடையதுதான். இப்போதுகூடக் கோபியைத் தூண்டிவிட்டு இந்த ஊழல் குற்றச்சாட்டைக் கிளப்பி, நாடு முழுவதும் ஒரு புயலை எழுப்பிவிட்டவர் பிலிப்பைத் தவிர வேறு யாரும் அல்ல. தாற்காலிகமாக ஏற்பட்ட மனவருத்தம் நிமித்தமாக பொறியாளரான மிஸ்டர் கைமள் அவரோடு சேர்ந்துகொண்டார். இவர்களைத்தான் கேசவபிள்ளை பழி வாங்கியிருக்கிறார். அந்தப் பழி வாங்குதலால் உண்டான ஒரு மனத்திருப்தியை அவர் அனுபவிக்கிறார்.

ஆனால், அத்துடன் ஒரு பயம் அல்லது ஒரு பதற்றம் . . . ஏதோ ஒன்று அவரை ஆட்டிப் படைத்துக்கொண் டிருக்கிறது. மனத் திருப்தி இன்பமளிப்பதாகத் தோன்றவில்லை. ஒருவனைப் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணம் வாழ்க்கையில் முதல் முதலாக அவருக்கு இப்போதுதான் ஏற்பட்டிருக்கிறது. குற்றவாளிகளான உத்தியோகஸ் தர்களை வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்திருக்கிறார். சிலரைத் தாற்காலிக வேலை நீக்கம் செய்வது, சிலருடைய 'பிரமோஷன்'களை நிறுத்தி வைப்பது போன்ற விஷயங்களில் முடிவெடுக்க வேண்டியிருந்த சந்தர்ப் பங்களில் ஒருபோதும் பகைமை உணர்ச்சி அவருக்கு ஏற்பட்டதே இல்லை. 'ஐயோ, பாவம்' என்ற எண்ணந்தான் ஏற்படுவது சகஜம். அதிலெல் லாம் சுகமோ மனத்திருப்தியோ ஏற்படவில்லை. ஆனால் மிஸ்டர் பிலிப்புப் பற்றிய பூர்வாங்க அறிக்கையைத் தயார் செய்தபோது நிலைமை அவ்வாறு இருக்கவில்லை. அந்த ரிப்போர்ட்டை எழுதியபோது ஒரு விதமான மகிழ்ச்சியே உண்டாயிற்று. அதுதான் இன்று கேசவ பிள்ளையைத் துன்புறுத்தியது. அந்த மகிழ்ச்சி தவறானது. யாரோ தம் உள்ளத்திலிருந்து அதட்டுவதுபோல் தோன்றியது:

'ஏண்டா, நீ அவ்வளவு பெரிய மனுஷனாயிட்டியா?'

ஆனால், அதற்குக் கேசவபிள்ளையிடம் விடை உண்டு. 'பிலிப்பு எனக்கு எப்போதுமே துரோகம் இழைத்து வந்தவர்.' அந்த விடை சரி யானதல்ல.

மந்திரிசபை தகர்ந்துவிடுவது, காங்கிரஸ் கட்சி பிளவுபட்டுப் போவது ஆகியவை ஒன்றும் கேசவபிள்ளைக்குப் பிரச்னையே அல்ல. அவற்றைப்பற்றி யெல்லாம் அவர் கவலைப்படுவதும் இல்லை. இந்த மந்திரி சபை கவிழ்ந் தால் இன்னொரு மந்திரி சபை அதிகாரத்துக்கு வரத்தான் செய்யும்.

* * *

அன்று மாலை, கேசவபிள்ளை கார்த்தியாயினியை அழைத்து அருகே உட்காரவைத்துப் பிரச்னைகளைக் கூற தொடங்கினார். அரசாங்க இரகசியம் என்றோ, அது பகிரங்கமாகிவிட்டதென்றோ, இரகசிய விசாரணை என்றோ சொன்னால், அவற்றை அந்தப் பெண்ணால் புரிந்து கொள்ளமுடியாது. ஆயினும், எல்லாவற்றையும் தெளிவாக எடுத்துரைத் தார் கேசவபிள்ளை. எதற்காக? என்ன செய்யவேண்டுமென்ற யோசனையை அவளிடமிருந்து பெறுவதற்காக! அதற்காக மட்டுந்தான். வேறு யாரிடம் கேட்பது? எல்லாவற்றையும் கவனித்துக் கேட்ட கார்த்தி யாயினி கேட்டாள்: ''அவருடைய வேலை போகிற வகையிலதான் எழுதி வச்சிருக்கீங்களா?''

''நான் மந்திரிகளுக்கு எழுதிக் கொடுத்திருப்பது, அவரைத் தாற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கிவிடவேண்டுமென்று தான்.''

''அதுமாதிரி அவங்க செஞ்சிடுவாங்களா?''

''நானே சுயமாக இன்று வரையில் வேறு யாரையும் வேலையிலிருந்து நீக்கிவிடவேண்டுமென்று எழுதியது கிடையாது.''

''அப்புறம் இவரைப் பற்றி மட்டும் இப்படி எழுதக் காரணம்?''

''அவர் என்றுமே என்னுடைய எதிரியாக இருந்து வருகிறார்.''

கார்த்தியாயினி கேட்டாள்: ''அதுக்குத் தண்டனை அளிப்பது நாம் தானே?''

கேசவபிள்ளை பதில் கூறவில்லை. அதே கேள்வியை அவரது உள்ளத் திலிருந்து யாரோ கேட்டுக்கொண் டிருந்தார்கள். அதற்கு ஒரே ஒரு விடைதான் சொல்ல இருந்தது. ஒரு நீதிபதியின் முன்னிலையில் நிற்கும் குற்றவாளிபோல் அந்தப் பதிலை அளித்தார் கேசவபிள்ளை: ''இது சர்க்கார் காரியம். நான் அதைச் செய்து முடிக்கவேண்டும். அது என் கடமை, கடமையை நிறைவேற்றினேன்.''

அந்தப் பெண் நீதிபதிக்கு அந்த விடை திருப்தியளிக்கவில்லை. ''சர்க்கார் காரியம், அது மற்றவங்களைக் கஷ்டப்படுத்தறதுக்கு இல்லை. கொஞ்சம் நெனைச்சுப் பாருங்க! உங்களுக்கு ஒரு வேலை கிடைச்சது. அதிலே நீங்க ஒசந்து வந்தீங்க. அப்போ . . . எப்படியாவது நல்லபடியா வேலையைச் செஞ்சுக்கிட்டு, யாருக்கும் தொந்தரவு பண்ணுமே முடிச்சுக் கிட்டு வந்திடணும். அப்படித்தான் நடந்துக்கணும். அல்லாமே மற்ற வங்க சாபத்தை வாங்கிக் கட்டிக்கிட்டு வரக்கூடாதுங்க.''

மௌனமாக அமர்ந்திருந்த கணவரை நோக்கி அவள் ஒரு கேள்விக் கணையைத் தொடுத்துவிட்டாள்: ''இதுவரைக்கும் நீங்க செஞ்சதெல் லாம் சரியாயிருந்ததுங்களா?''

கேசவபிள்ளை சிரமுயர்த்திப் பார்த்தார். அவர் அத்தகைய கேள்வியை எதிர்பார்த்திருக்கவில்லை. கார்த்தியாயினியே விடையளித்தாள்: ''நிச்சயமாச் சொல்லறேன், நீங்க அப்படியொண்ணும் சரியா நடந்துக் கலை. அப்படியிருக்க இன்னொருவன் தப்புச் செஞ்சா நம்மாலே எப்படித் தண்டிக்க முடியும்?''

கேசவபிள்ளை சொன்னார்: ''நான் இந்தச் சம்ஸ்தானத்தின் பிரதான அதிகாரி. எனக்குப் பொறுப்புக்கள் உண்டு. குற்றம் செய்தவர்களைத் தண்டிக்கவேண்டியிருக்கிறது. எந்த மனிதர் என்ற பிரச்னையே இல்லை.''

படீரென வந்து விட்டது கார்த்தியாயினியின் பதில்: ''அதுக்கு நீங்க குற்றம் செய்யாமே இருந்திருக்கணும்.''

அவள் ஒரு விஷயத்தை அழுத்திக் கூறினாள்: ''மற்றவங்க சாபத்தை வாங்கிக் கட்டிக்கொள்ளக் கூடாதுங்க!''

ஆனால் கேசவபிள்ளையின் அந்தரங்கத்திலே மறைந்து கிடந்த, பழி வாங்கவேண்டுமென்ற எண்ணம் அடிக்கடி தலைதூக்கிக்கொண் டிருந்தது.

* * *

மறுநாள் மிஸ்டர் பிலிப்பு, அவரை வந்து சந்தித்தார். லூக்கோஸின் தந்திரத்தினால் நடைபெற்ற நிகழ்ச்சி அது. பிலிப்பு மிகவும் கலைப்புற்றுக் காணப்பட்டார். அவர் தோல்வி கண்ட மனிதர். ஆயினும், அவரை மிக்கப் பெருந்தன்மையுடன்தான் வரவேற்றார் கேசவ பிள்ளை. மிஸ்டர் பிலிப்பு, தான் புரிந்த குற்றத்துக்கு நிபந்தனையற்ற மன்னிப்பைக் கேட்கத் தயாராக இருந்தார். ஆனால், அப்படிச் செய்யக் கேசவபிள்ளை ஒப்புக்கொள்ளவில்லை. அவர் சொன்னார்: ''மிஸ்டர் பிலிப்பு, நான் இந்த இடத்துக்கு அகஸ்மாத்தாகவே வந்து சேர்ந்திருக்கிறேன். வேண்டுமானால் நீங்கள் இதை அதிருஷ்டமென்று சொல்லுங்கள். எனவே இதன் காரணமாக யாருமே யாரிடத்திலும் மன்னிப்புக் கேட்கவேண்டிய அவசியமில்லை.''

கதவோரமாக மறைந்து நின்றிருந்த கார்த்தியாயினி இதைக் கேட்டுத் தலையாட்டினாள். அந்தப் பேச்சு அவளுக்கு மிகவும் பிடித்தது.

பிலிப்பு எதையோ சொல்ல விரும்பினார்: ''நான் சில தவறுகளைச் செய்துவிட்டேன் . . .''

கேசவபிள்ளை குறுக்கிட்டுக் கூறினார்: ''நீங்கள் அப்படியெல்லாம் செய்துவிட்டதாக எண்ணவேண்டாம். ஏதாவது செய்திருந்தால்கூட எனக்கு எந்தக் கெடுதலும் நேர்ந்துவிடவில்லையே. எனவே கவலைப்பட ஒன்றுமில்லை.''

எல்லாவற்றையும் மறந்துவிடவேண்டுமென்று பிலிப்பு மன்றாடிக் கேட்டுக்கொண்டார். 'நினைவிலே வைத்துக்கொள்ள ஒன்றுமில்லை, எனவே மறந்துவிடவும் ஒன்றுமில்லை' என்று கேசவபிள்ளை கூறினார். இவ்வாறாக அவர்களிடையில் இருந்து வந்த சச்சரவைப் பேசி முடித்துக் கொண்டனர்.

உண்மையிலேயே கேசவபிள்ளை ஆறுதலடைந்தார். மனச்சுமை குறைந்துவிட்டது. அவ்வாறு நடந்து கொண்டதைக் குறித்துக் கார்த்தியாயினி கணவரைப் பாராட்டினாள்.

நடைபெற இருந்த அமைச்சரவைக் கூட்டம் ஒற்றுமையுடனும் சகஜமாகவும் நடைபெறுவதற்கான அறிகுறிகள் இல்லை. சற்றுப் பொறுத்திருந்துவிட்டு அந்தக் கூட்டத்தை நடத்தினால் போதுமென்று கேசவ பிள்ளைக்குத் தோன்றியது. அவர் அமைச்சரவையின் செயலாளருமாவார். மந்திரிகளுடைய விருப்பமும் அவ்வாறுதான் இருந்தது. இதனிடையில் லூக்கோஸ் அங்குமிங்குமாக அலைந்ததற்குக் கணக்கே இல்லை.

காங்கிரஸ் தலைவர், கத்தோலிக்கர் காங்கிரஸினுடைய தலைவராகவும் இருந்தார். அவர் தொட்டும் தொடாமலும் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அந்த அறிக்கையில் சிறிது பயமுறுத்தலின் நிழல் வீசியது. அது அவ்வளவு பெரிய பிரச்னையாகத் தோன்றவில்லை. நாயர் சர்வீஸ் சொஸைட்டியின் பிரசிடெண்டாக இருந்தவர், அந்தப் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டுத்தான் காங்கிரஸ் செயலாளராக வந்திருக்கிறார்.

அவரும் பயமுறுத்துகிற பாணியிலே ஓர் அறிக்கையை வெளியிட்டார். நாயர் மந்திரிகளும் உத்தியோகஸ்தர்களும் நாதியற்றவர்கள் என்று யாருமே எண்ண வேண்டாமென்ற பொருள் அந்த அறிக்கையில் அடங்கியிருந்தது. ஆனால், அதைத் தொடர்ந்து அதற்குப் பதிலோ மறுப்போ வெளியிடப்படவில்லை. பிலிப்புக்கும் கேசவபிள்ளைக்கும் இடையில் ஒற்றுமை ஏற்பட்ட பின், காங்கிரஸ் தலைவரும் செயலாளரும் தனித்தனியாகவும் கூட்டாகவும் அரசாங்கத் தலைமைச் செயலாளரைப் பலமுறை சென்று சந்தித்தனர். சச்சரவுகளெல்லாம் முடிந்து சகஜ நிலைமை நிலவத் தொடங்கியது. மந்திரி குருப்புவுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களைக் கிளப்பிவிட்ட எம். எல். ஏக்களும் சற்றுப் பின் வாங்கிக்கொண்டனர். குருப்புவுக்கும் அவர்களுக்குமிடையில் ஒற்றுமை நிலவத் தொடங்கியது. குற்றச்சாட்டுக்களைக் கிளப்பிய சட்டசபை உறுப்பினரின் மைத்துனருக்கு ஒரு பஸ் ரூட்டின் ஏகபோகம் கிடைக்க வேண்டுமென்ற நோக்கந்தான் இருந்தது.

ஆனால், முதல்வர் பிடிவாதத்திலே திடமாக இருந்தார். ஊழல் நடை பெற்றிருக்கிறதென்றால் அதைப் பற்றி விசாரணை நடத்தியே தீர வேண்டுமென்பதுதான் அவருடைய கருத்து. குற்றம் புரிந்த அதிகாரி களை, அவர்கள் யாராக இருந்தபோதிலும் தண்டிக்கவும் வேண்டும். அது நிமித்தமாகச் சட்டசபைக் கட்சியில் பிளவு ஏற்பட்டாலும், மந்திரி சபை கவிழ்ந்துவிடுவதாக இருந்தால்கூட, அவருக்குக் கவலையில்லை.

முதல்வரின் மனத்தில் இருப்பதை யாராலும் கண்டுகொள்ள முடிய வில்லை. அவரைக்கூட ஒன்றுபடுத்துவதற்காகக் கூட்டாகவும் தனித்தனி யாகவும் பலர் முயன்று பார்த்தனர். எந்த முயற்சியும் பலன் அளிக்க வில்லை. இறுதியாக, தலைமைக் காரியதரிசி, ஏனைய மந்திரிகள், காங்கிரஸ் தலைவர் ஆகியோர் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தனர். முதல்வர் அங்கீகரிப்ப தில்லை என்றால் வேண்டாம். அவர் ராஜிநாமாச் செய்வதாயிருந்தால் செய்யட்டும்; புதிய ஒரு முதல்வரைத் தேர்ந்தெடுக்கலாம். அந்த முதல்வர் சக மந்திரிகளைத் தேர்ந்தெடுக்கட்டும். இப்போது மந்திரி சபையிலுள்ளவர்கள் எல்லாரும் அந்த மந்திரி சபையிலும் இருக்க வேண்டும்.

தலையெழுத்தை நிர்ணயிக்கிற அந்த மந்திரி சபைக் கூட்டத்தை மிக்கத் தந்திரமாகச் சமாளித்தார் தலைமைக் காரியதரிசி. எந்த இடத்திலாவது சென்று முட்டி மோதித் தகர்ந்துவிடாமல் இருக்க அவர் பெருமுயற்சி செய்தார். தலைமைக் காரியதரிசி பாரபட்சமற்றவர்; ஹரிச்சந்திரர் என்றெல்லாம் எல்லாரும் போற்றிப் புகழ்ந்தனர். ஆனால், முதல்வர் ராஜிநாமாச் செய்துவிட்டார்.

மறுநாள் பத்திரிகைகளில் அந்தச் செய்தி கொட்டை எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காகச் சட்ட சபை அங்கத்தினர்களின் கூட்டம் உடனடியாகக் கூட்டப்பட்டது. ஒரு சில அங்கத்தினர்கள் முதல்வருடன் சென்றுவிட்டனர். ஆயினும், சட்ட

சபையில் காங்கிரஸ் கட்சியின் பெரும்பான்மை குறையவில்லை. அவர்கள் புதிய தலைவரைத் தேர்ந்தெடுத்தார்கள். மீண்டும் உட்கட்சிப் போராட்டம் நடந்தது. ஒரு சிலர் மந்திரிப் பதவிக்காக முயற்சி எடுத்துப் பார்த்தனர். உண்மையோ, பொய்யோ, ஊழல் குற்றச்சாட்டுக்களுக்குப் பாத்திரமானவர்களை மந்திரிப் பதவியில் அமர்த்தக்கூடாதென்ற ஒரு கருத்து பத்திரிகைகளிலேகூடப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. புதிதாக நியமிக்க இருந்த சில மந்திரிகளின் பெயர்கள்கூட அவற்றில் வெளியிடப் பட்டிருந்தன.

புதிய தலைவர், தமது மந்திரி சபைச் சகாக்களின் பெயர்ப் பட்டியலை வெளியிட்டார். ஏற்கெனவே இருந்த முதல்வர் பெயர் மட்டும் அல்ல, ஏனைய மந்திரிகள் எல்லாருமே புதிய மந்திரி சபையில் இடம் பெற்றிருந்தனர்.

லூக்கோஸ் மன நிம்மதியடைந்தார். இனிச் சிறிது காலத்துக்கு ஓய்வெடுத்துக்கொள்ளலாம் அல்லவா?

அத்தியாயம் 32

ஊழல் தடுப்பு

எங்கே பார்த்தாலும் ஊழல்கள்பற்றியுள்ள புகார்களேதான், ஏதோ ஒரு புதிய விஷயமென்பதுபோல், இன்று வரையில் இல்லாமல் இருந்த ஒன்றைத் திருவாங்கூர் மக்கள் புதிதாக அநுபவிக்கத் தொடங்கியுள்ளது போல்! அரசாங்க உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் இவ்வாறுதான் கூறினர்கள்.

ஏதாவதொரு நடவடிக்கை எடுத்தே தீரவேண்டுமென்ற நிலைமைக்கு அரசாங்கம் வந்துவிட்டது. அரசாங்கம் கோரியதற்கிணங்க ஊழல் தடுப்பு நடவடிக்கை ஒன்றைக் கேசவபிள்ளை உருவாக்கினர். அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் அதை அமலாக்கவும் செய்தார்.

மூன்று மாதத்துக்கு ஒருமுறை, ஊழல் புரிகிற அரசாங்க ஊழியரிடம் எந்தவிதமான ஈவிரக்கமும் காட்டப்படமாட்டாதென்று முன்னெச்சரிக்கை செய்கிற அரசாங்கச் சுற்றறிக்கை வெளியிடுவது பல வருஷங்களாக நடைபெற்று வருகிற நிகழ்ச்சியாகும். அவ்வகையைச் சேர்ந்ததுதான் இந்த நடவடிக்கையும் என்றே பெருவாரியான உத்தியோகஸ்தர்கள் கருதினர்கள். மிக முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையாக அதை யாரும் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை.

இந்த நடவடிக்கைபற்றி மனைவிக்குத் தெளிவுபடுத்தினர் கேசவபிள்ளை. எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டுவிட்டு அவள் சொன்னாள்: ''அப்போ . . . நம்முடைய தேவிகுளத்திலுள்ள ஏலத் தோட்டம் இருக்கே, அதற்கு இனிமேல் நாமே பண முதலீடு செய்யவேண்டி வரும் போலிருக்கே?''

அப்படித்தான் செய்ய வேண்டியிருக்குமென்று கேசவபிள்ளை சொன்னர். கணவருக்குச் சிறிது புத்திக்கோளாறு வந்துவிட்டதுபோல் கார்த்தியாயினி கூறினாள்: ''அந்த ஏலத் தோட்ட ஏற்பாட்டைச் சரி பண்ணினதுக்கப்புறம் இந்த நடவடிக்கை எல்லாம் எடுத்திருந்தாப் போதாதுங்களா?''

கேசவபிள்ளைக்குத் திருப்பித் தாக்குவதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது:

''இருக்கிற சொத்துக்களே போதும்னு நீ அடிக்கடி சொல்லி வந்தாயல்லவா? இப்போ மட்டும் மனசுக்கு இப்படியொரு மாறுதல் ஏற்படக் காரணம் என்ன?''

கார்த்தியாயினியைப் பொறுத்தவரையில் அந்தக் கேள்வி அவளுடைய வாயை மூடுவதாக இருக்கவில்லை, அவள் சொன்னாள்: ''அது உண்மை

தான். எனக்கு எப்போதுமே திருப்திதான். உள்ளதைக் கொண்டு உயிர் வாழறதிலே மகிழ்ச்சியுங்கூட. இப்படிச் சொல்லறதனாலே உள்ளதைவிட அதிகமாக் கெடைச்சா வேணும்னுதான் அதுக்கு அர்த்தமா? நானும் ஒரு மனிதப் பிறவிதானே? ஏலத் தோட்டமும் கூட இருந்தா ரொம்பச் சந்தோஷந்தான். இல்லாட்டாக் கவலையுமில்லே. அவ்வளவுதான்.''

ஆனால், ஒரு விஷயத்தைப்பற்றிக் கேட்கவேண்டியிருந்தது. அது இந்த ஊழல் தடுப்பு நடவடிக்கைபற்றியதாக இருந்தது. ஊழல் ஊழல் என்று சொல்கிறார்களே, அதிலே நியாய விரோதமாக, சட்ட விரோத மாக என்ன இருக்கிறது? இதை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவள் சொன்னாள்:

''கடற்கரையிலே போயி அலைகளை எண்ணுகிற ஒரு வேலை, அதுக்குச் சம்பளம் இல்லாட்டாக்கூட, சர்க்காரு வேலையாக் கிடைச்சாப் போதும், சாப்பிட்டுக் காலம் தள்ளலாம்னு அப்பா அடிக்கடி சொல்லுவாரு. நான் ஒண்ணு கேக்கட்டுமா? ஒருவருக்கு ஒரு காரியத்தைச் சாதிச்சுக் கொடுக்க ணும்; அதுக்காக நாலு பணம் அவரு தந்திட்டா, அதை வாங்கறதிலே என்ன தப்புங்கறேன்? காரியத்தைச் சாதிச்சுக் கொடுக்கறதனாலே தானே, அவரு நாலு பணத்தைத் தர்ருரு? சும்மா இல்லியே?''

உண்மையிலேயே கேசவபிள்ளையால் அந்தக் கேள்விக்குப் பதிலளிக்க முடியவில்லை. ஒரு சம்ஸ்தானத்தின் பிரதான அதிகாரியாகத் திகழ்கிறார் அவர். அந்தக் கேள்விக்கான பதில் அவருக்குத் தெரியாததல்ல. 'எங்கே லஞ்சம் இருக்கிறது? எங்கே ஊழல் இருக்கிறது?' போன்றவை அவ ருக்குத் தெரியும். ஊழலின் அனைத்து உருவங்களைப்பற்றியும் அவருக்குத் தெரியும். ஆனால், அதை எவ்வாறு விளக்கிக் கூறுவதென்று அவருக்குத் தெரியாது. சொல்லத் தொடங்கினால், நீதியைப்பற்றி, நியாயத்தைப் பற்றி, நிர்வாகத்தைப்பற்றி எல்லாமே சொல்ல வேண்டியிருக்கும். அது சமுத்திரத்தைவிடப் பரந்த விஷயம்.

கார்த்தியாயினி கேட்டாள்: ''ஏன் பேசாமே இருக்கிறீங்க? நான் சொன்னது உண்மைதானே?''

அல்லவென்று சொல்லமுடியுமா? நூற்றாண்டுகளாகவென்றே சொல்ல வேண்டும்—அமலிலிருக்கிற ஒரு சமூக அமைப்பின் படைப்பான அர சாங்க இயந்திரத்தின் வழிவழியாக வந்த பிரதிநிதிதான் கேசவபிள்ளை. லஞ்ச ஊழல்களெல்லாம் தவறு என்றோ, பாபமென்றோ கண்டிப்பான முறையில் மறுத்துக் கூற அவரால் முடியாது. இந்த மாறுதலை உள்ள படியே அங்கீகரிக்கவும் முடியவில்லை. ஊழல் பாபகரமானது என்ற எண்ணம் உருவாயிருக்கவில்லை. அதற்கான பயிற்சியும் அளிக்கப்பட வில்லை. லஞ்சம் வாங்குவதை யாரும் பார்க்கக்கூடாது என்ற எண்ணந் தான் இப்போது ஏற்பட்டிருக்கிறது. கேசவபிள்ளை, அன்றும் இன்று முள்ள எந்த ஓர் உத்தியோகஸ்தரையும் போலவேதான். பதினைந்து ரூபாய் சம்பளம் பெறுகிற ஒரு சர்க்கார் ஊழியனாக வேலையில் அமர்ந்தது உயிர் வாழ்வதற்காக மட்டுந்தான். ஸ்ரீபத்மநாபனுடைய 'பத்து

சக்கிரம்' கிடைப்பதற்காகத்தான். மாதமாதம் கிடைத்து வந்த பதினைந்து ரூபாய் சம்பளமும், அப்புறம் கொஞ்சம் 'கிம்பள'மும் சேர்த்துக் கிடைத்துவிட்டால் ஓரளவு சுகமாக வாழலாமென்ற நோக்கு. அந்தக் 'கிம்பள'த்துக்காகவே போட்டிதானே எல்லாப் படிகளிலும் நடைபெறுகிறது? கை மணியடிப்பதும், 'ஆமாம் சாமி' போடுவதுமெல்லாம் எதற்காக? அத்தகைய பரம்பரையின் பிரதிநிதியான கேசவபிள்ளையால் ஊழலைப்பற்றி அந்த முறையில் தானே பார்க்கமுடியும்? வேறு வழியின்றிப் புதிய அமைப்புடன் பொருந்திவிட்டவர்போல் கூறினார் கேசவபிள்ளை: ''எல்லாருக்கும் ஓட்டுரிமை இருக்கிறதல்லவா? சுப்பனும் குப்பனும் தேர்ந்தெடுத்து அனுப்புகிறவர்கள்தானே ஆட்சி நடத்துகிறார்கள்? சுப்பனும் குப்பனும் பிச்சைக்காரனும் திருடனும் இந்நாட்டு மன்னர்கள்தானே?''

அந்தப் பதில் சரியானதெனத் தோன்றியது. மானமும் அபிமானமும், அந்தஸ்தும் பணமும், பிரதாபமும் உடையவர்களின் காலம் மலையேறிப் போய்விட்டது.

கார்த்தியாயினி கேட்டாள்: ''அப்படீன்னு நான் ஒண்ணு கேக்கறேன், விலைவாசியோ விஷம்போல் ஏறிப் போச்சு. வெளியிலேருந்து வேறு ஏதாவது கிடைக்காட்டிப் போனா, இந்த உத்தியோகஸ்தனுங்கெல்லாம் எப்படி வாழ்க்கை நடத்துவாங்க?''

தலைமைக் காரியதரிசி சொன்னார்: ''உத்தியோகம் வேண்டுமானால் அப்படித்தான் வாழ்க்கை நடத்தவேண்டும்.''

''நல்லாப் போச்சு!''

கார்த்தியாயினி இன்னொரு விஷயத்தைக்கூடக் கேட்க விரும்பினாள்: ''இந்த மாதிரி ஏதோ வாங்கியாச்சுன்னு சொல்லி ஒவ்வொருத்தனையா வேலையிலேருந்து நீக்கிட்டா, அந்தக் கொழந்தைக் குட்டிகளோட சாபத்தையெல்லாம் எங்கே கொண்டுபோய் வைக்கப் போறீங்க?''

கேசவபிள்ளை கூறினார்: ''கடமை என்று வந்தால் செய்யாமல் இருக்க முடியுமா?''

கார்த்தியாயினி அழுத்தமாகச் சொன்னாள்: ''வேணுங்க. அது வேணுங்க. அப்படீன்னா, அது நமக்கு ஆகாதுங்க.''

அந்த வகையில் வேலையிழந்தவர்களின் நுயரங்களைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க அவள் கணவரிடம் கூறினாள்.

* * *

புதிய ஊழல் ஒழிப்பு நடவடிக்கையில் முதல் பலியாகியவர் நாணு நாயர் என்ற பெயருடைய, பெரும்பாவூர்ப் பதிவகச் சிப்பாய் ஒருவர் ஆவார். அவர் ஒரு பட்டையத்தைத் திருப்பிக் கொடுக்கப் பத்து 'சக்கிரம்' லஞ்சம் வாங்கினார். சக்கிரம் கொடுத்துப் பட்டையத்தைப் பெற்றுக்கொண்டவர் பெரிய பணக்காரரான ஒரு காங்கிரஸ்காரர்.

அவருக்கு அந்தப் பத்து சக்கிரம் போனதைப்பற்றிக் கவலையில்லை யாம். காந்திஜியைப் பின்பற்றுகிற ஒரு காங்கிரஸ்காரர் என்ற முறையில் ஊழலில்லாத நிர்வாகம் நடைபெற வேண்டுமென்ற நிர்ப்பந்தம் அவருக்கு இருந்து வருகிறது. காங்கிரஸின் நற்பெயரை நிலைநாட்டவேண்டும். அவர், புகாரை நேரடியாக மந்திரிக்கு அனுப்பி வைத்தார்.

நாணு நாயர் ஓய்வுபெற இரண்டு வருடங்கள்தான் இருந்தன. அப்போதுதான் இந்தத் தகராறு நேர்ந்துவிட்டது. சாதாரண மாக ஒரு பட்டையத்தைப் பதிவகத்திலிருந்து திரும்பப் பெறுவதற்காக, அன்றைய நிலவரப்படி பதினைந்து சக்கிரம் கொடுத்திருக்கவேண்டும். நாணு நாயர் பதினெட்டாவது வயதிலே வேலையில் சேர்ந்தவர். அவர் மாவட்டப் பதிவாளருடைய சமையற்காரராக இருந்து வந்தவர். எஜமானர் மனம் கனிந்து கொடுத்த வேலை அது. வேலைக்குச் சேர்ந்த அந்தக் காலத்தில் ஒரு பட்டையத்துக்குத் தனது வீதமாகப் பதிவகச் சிப்பாய் வாங்கி வந்தது இரண்டு சக்கிரந்தான். அது கொஞ்சம் கொஞ்ச மாக உயர்ந்து பதினைந்து சக்கிரமாகிவிட்டது. அந்தத் துட்டைப் பெறுவது தப்பு என்று நாணு நாயருக்குப் படவில்லை. பதிவுக்காகக் கட்டணம் செலுத்துவதுபோல் பதிவகத்திலே செய்யப்படவேண்டிய ஒரு செலவு ஆகும் இது. அந்த ஏழை மனிதர் அந்த எண்ணத்துடன்தான் அதைப் பெற்றுக்கொண்டார்.

பெரும்பாலூர்ப் பதிவகச் சிப்பாய் நாணு நாயருடைய கழுத்திலே அரசாங்க நீதிமுறை என்ற இரும்புச் சங்கிலியை இறுகச் சுற்றி அவர் மூச்சைத் திணறடித்தபோது, அவரைப் போன்ற ஏழை ஊழியர்கள் பலர் அதே முறையில் தவித்துக்கொண்டிருந்தனர். ஏனைத்துக் கிராம மணியகாரர் வர்க்கீஸ், தாழந்திக்கோடு ஹெட்கான்ஸ்டபிள் குட்டன் பிள்ளை, சேர்த்தலை முன்சிப் கோர்ட்டுச் சிப்பாய் பப்பு . . . இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம், அந்தப் பட்டியலை. பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் அந்தச் செய்திகள் பிரசுரமாயிருந்தன. அரசாங்கத்தின் ஊழல் ஒழிப்பு நடவடிக்கை என்ற ஈவிரக்கமற்ற 'ஸ்டீம் ரோலர்' அவ்வாறு உருண்டுகொண்டிருந்தது. ஆங்காங்கு நடைபெற்று வந்த பொதுக்கூட்டங்களில் மந்திரிகள் உரத்த குரலில் கூறி வந்தனர்:

''இந்த 'ஸ்டீம் ரோலர்' இயங்கத் தொடங்கியிருக்கிறது. இது இயங்கிக்கொண்டே இருக்கும். இன்னும் சில வருடங்களுக்குள் இந்த நாட்டிலிருந்து ஊழல் முழுதும் துடைத்தெறியப்பட்டுவிடும்.''

கீழ்ச் சிப்பந்திகள் மட்டுமின்றி ஒரு சில நடுத்தரச் சிப்பந்திகள்கூட அந்த ரோலருக்கடியில் அகப்பட்டுக்கொண்டனர். விவசாய இலாக்காவிலுள்ள இரண்டு சூபர்வைஸர்கள், ஒரு ஃபாரஸ்ட் ரேஞ்சர், ஓர் எக்ஸைஸ் இன்ஸ் பெக்டர், ஒரு ஹவில்தார் முதலிய பலர் அந்தப் பட்டியலிலே இடம் பெற்றுக்கொண்டனர். லஞ்சம் மட்டுமல்ல, உறவினர்களுக்கு ஆதாயத் தைத் தேடிக் கொடுப்பது, சர்க்காருக்கு நஷ்டத்தை உண்டுபண்ணுவது—

இப்படிப் பல ஊழல்கள் உள்ளன. அவற்றிலேகூடப் பலர் சிக்கியிருந்தனர். அவர்களில் பலர் 'சஸ்பென்ஷ'னில் இருந்து வந்தனர்.

அன்றைய மந்திரி சபை நெருக்கடிக்கு முன், கோபியின் குற்றச் சாட்டுக்களுக்குப் பதில் எழுதிக் கொடுத்த பிறகு நாராயணன் நாயர் வெளியே எங்கும் வராமல் இருந்துவிட்டார். அது அவசியமா என்ற கேள்வியை நாராயணன் நாயர் தம்மையே கேட்டுக்கொண்டார். கோபி சொன்னதெல்லாம் உண்மைதான். ஆனல், அதற்குத் தஸ்தாவேஜுகளே அடிப்படையாகக் கொண்ட ஆதாரங்கள் இல்லை. நாயருடைய அறிக்கையை நிரூபிக்கத் தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றன. ஆயினும் உண்மை என்பது நாயரைப் பார்த்து விசும்பியழுவதுபோல் தோன்றியது. நெடுநாளையக் கறையற்ற அரசியல் தொண்டின் மரபு எந்த ஒரு மனிதருடைய மனச்சான்றையும் நீதியின் பாதைக்குச் சிறிய அளவிலாவது இழுத்துக்கொண்டு வராதா?

நாயருக்கு மற்றவர்கள் முகத்தைப் பார்க்கவே ஒரு வெட்கம். செய்யத் தகாததைச் செய்துவிட்டேன் என்ற எண்ணம். அது ஒரு விதமான வெட்கத்தைச் சிருஷ்டிக்காதா? எதையும் செய்யாமல், யாரையும் பார்க்காமல் அவர் தம் குகைக்குள்ளேயே பதுங்கி அடைப்பட்டுக் கிடந்தார். ஆயினும் நாயருக்கு ஓர் ஆத்ம திருப்தியுண்டு; கம்யூனிஸ்டுகளின் தனி நிறத்தைத் தோலுரித்துக் காட்ட அந்தக் கட்டுரை பயன்பட்டது என்பதே அந்தத் திருப்தி. அன்று அதற்காகச் சிறிது பணத்தைப் பெற்றுக்கொண்டார். வேறு வழி இல்லாததஞல்தான் அவர் அதை வாங்கிக்கொண்டார். சிறையிலிருந்து வெளியே வந்துபோது கட்டத் துணிகூட இருந்ததில்லை. ஒருவேளை உணவுக்கு வழியில்லாமல் இருந்தது. போராட்டக் காலத்தில் அதெல்லாம் ஒரு பிரச்னையாகவே இல்லாமல் இருந்தது. சுதந்தரம் கிடைத்த பின் எங்கே சென்ருலும் ஒருவேளை உணவு தரமட்டார்கள். போராட்டக் காலத்தைப்பற்றிக் குடும்பத் தலைவன் கேள்விகளை அடுக்கிக்கொண்டிருப்பான். ''சாப்பிட்டீர்களா?'' என்று கேட்கமாட்டான். சாப்பாடு வேண்டுமென்று திறந்து கேட்க அந்த அருமைத் தொண்டனுக்குத் தயக்கமாயிருந்தது. அவ்வாறு கேட்க உரிமையில்லை என்று மனம் கூறியது.

அது உண்மைதானே? பல சந்தர்ப்பங்களில் நாராயணன் நாயர் இவ்வாறு சிந்தித்திருக்கிறார். போர்க்களத்திலே ஏன் குதித்தேன்? 'நானுச்சு, என் வேலையாச்சு!' என்று இருந்திருக்கலாம் அல்லவா? வாழ்நாள் முழுவதும் வீணுகிவிட்டது. எதையும் சம்பாதிக்க முடியவில்லை. இனி மேல் பத்து பணம் சம்பாதிக்க என்ன வழி? ஒன்றுமில்லை . . . உண்மையிலேயே நாயருடைய மூளை செயலற்றுப் போய்விட்டது. அன்றுடன் லூக்கோஸ் தந்த பணம் தீர்ந்துவிடப் போகிறது. ஒவ்வொரு ரூபாயாகச் செலவு செய்துவந்தார்.

இப்படி இருக்கையிலேதான் ஆபத்தில் அகப்பட்டுக்கொண்ட அந்தத் தாசீல்தார், எப்படியோ தகவல் அறிந்து நாராயணன் நாயரை அணுகினர். தாசீல்தார்மீது சுமத்தப்பட்ட ஊழலைப்பற்றிப் பேஷ்கார் விசாரணை நடத்தி முடித்திருக்கிறார். அறிக்கை சர்க்காருக்குச் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. அந்த விஷயத்தில் தம்மால் என்ன செய்யமுடியுமென்று நாராயணன் நாயருக்குத் தெரியவில்லை. ஆனால் தாசீல்தார் அங்ஙனம் அவரை விட்டுவிடத் தயாரில்லை.

''நீங்கள் மனம் வைத்தால் என்னைக் காப்பாற்றமுடியும். இல்லாவிட்டால் நானும் என் குடும்பமும் பட்டினியாய்ச் சாகவேண்டியதுதான். எந்தக் குற்றமும் நான் செய்யவில்லை. நிரபராதியான நான் தண்டிக்கப் படுவேன்.''

சங்கதி என்னவென்றறிய ஆவல் கொண்டார் நாராயணன் நாயர். நிரபராதி தண்டனைக்குள்ளாகக் கூடாதல்லவா? அவருடைய தர்மச் சிந்தனை விழித்துக்கொண்டது. தாசீல்தார், தம்மீது சுமத்தப்பட்டிருந்த ஊழல் குற்றச்சாட்டின் வரலாற்றை விரித்துரைத்தார். நாயர் கவனமாக அதைக் காது கொடுத்துக் கேட்டார்.

சட்ட சபை உறுப்பினரின் தம்பிக்கு ஒரு மலைப் பிரதேசம் வேண்டும். குறைந்த தொகையில் அதைப் பட்டாச் செய்து அவனுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும். அவன் கோரியிருந்த தொகையைவிடக் கூடுதலான தொகைக்கு அந்த மலையைப் பட்டாச் செய்து கொடுக்கலாம். எனவே, தாசீல்தார் எம்.எல்.ஏ. தம்பியின் மனுவை நிராகரித்தார். கூடுதலான தொகைக்கு இன்னொருவருக்கு அந்த மலையைப் பதிவு செய்து கொடுத்தார். இது விஷயமாகப் பேசத் தாசீல்தாரிடம் எம். எல். ஏ வந்தார். 'உமக்கு நல்ல படிப்பினையைக் கற்றுத் தருவோம்' என்று அவரைப் பயமுறுத்தி விட்டு எம்.எல். ஏ. போனார். இப்போது, தாசீல்தார் லஞ்சம் வாங்கியிருக்கிறார் என்று சிலரை ஏவிவிட்டுச் சர்க்காருக்குப் புகார்களை அனுப்பி வைக்கச் செய்திருக்கிறார். தாசீல்தார் அந்த எம்.எல்.ஏ. வைப்பற்றிச் சில கதைகளையும் சொன்னார்: ''தாம் சொல்கிறபடி எல்லா அதிகாரிகளும் நடந்துகொள்ளவேண்டும். இல்லாவிட்டால் வேறு இடத்துக்கு மாற்றப்படும்; பிரமோஷனைக் கட் பண்ணுவோம்; புகார் களைக் கிளப்பிவிடுவோம்'' என்றெல்லாம் அந்த எம்.எல்.ஏ. சொல் கிறார். இப்போது ஊழல் ஒழிப்பு நடவடிக்கை அமலாக்கப்பட்ட பின் வேலையும் காலியாகி விடுகிறது.

ஏதாவது ஒரு வழக்கில் சம்பந்தப்பட்ட ஒரு நபரைக் கைது செய்தால், அந்தக் கைது செய்த நபர்மீது எம். எல். ஏ.க்கு அக்கறை இருந்தால் அந்த நபரை எம்.எல்.ஏ.யிடம் ஒப்படைக்கவேண்டும். அவருக்கு விரோதமானவர்கள்மீது வழக்கைத் தொடுக்கவேண்டும். அவருக்குப் பிரியமில்லாத யாருக்கும் நீதியும் தர்மமும் கிடைக்கக் கூடாது. இந்த மாதிரி விஷயங்களே வழக்கத்தில் இருந்து வருகின்றன. அவர் உள்நாட்டு இலாக்கா மந்திரிக்குச் சொந்தக்காரராம்! மந்திரி

அவ்வழியே வந்தால் அந்த எம். எல். ஏ. வீட்டில் தங்கியிருந்து விட்டுத் தான் போவார்.

நாராயணன் நாயர் கேட்டார்: ''உங்கள் வழக்கின் ருசுக்கள் எப்படி?''

தாசில்தார் சொன்னார்: ''ருசுக்களெல்லாம் கட்டுக் கதைகள். சாட்சிகள் எல்லாரும் எம்.எல். ஏ.யால் தயாரிக்கப்பட்டவர்கள்.''

கேட்டது வரைக்கும் யோசித்துப் பார்த்தால் அந்தப் பிரச்னையில் தலையிடவேண்டுமென்று நாராயணன் நாயருக்குத் தோன்றியது. நாராயணன் நாயருக்குள்ளே அடங்கிக் கிடந்த கிளர்ச்சிக்காரன் ஒருமுறை தலை தூக்கிப் பார்க்கவில்லை எனச் சொல்லமுடியாது. ஜனப் பிரதிநிதிகள் பலரைப்பற்றி இத்தகைய கதைகளைக் கேட்டிருக்கிறார். சில கதைகளை நேரடியாகக் கண்டறியவும் முடிந்திருக்கிறது. இப்படியிருக்க, தாசில்தார் சொன்ன கதைகளும் பொய்யானவையாக இருக்கமுடியாது. நாயர் கேட்டார்: ''இவற்றையெல்லாம் அடிப்படையாக வைத்துக் கொண்டு நான் ஒரு கட்டுரை எழுதட்டுமா? அது எல்லாப் பிரமுகர்களையும் ஓர் உலுக்கு உலுக்கிவிடும். நான் சிந்தித்துக்கொண்டிருக்கிற விஷயம் இது.''

தாசில்தார் திகைப்புடன் கூறினார்: ''ஐயய்யோ . . . அது வேண்டாம்!''

புரியாமல் கேட்டார், நாராயணன் நாயர்: ''அப்புறம் என்னை என்ன பண்ணச் சொல்லுகிறீர்கள்?''

தாசில்தார் சொன்னார்: ''நீங்கள் என்னுடன் ஒருமுறை திருவனந்தபுரத்துக்கு வந்தால் போதும். அப்புறம் இரண்டொருவரைச் சந்தித்துப் பேசவேண்டும்.''

யாரைச் சந்திக்க வேண்டும் என்பதை அறியாத நாயர் கேட்டார்: ''நான் யாரைச் சந்தித்துப் பேசவேண்டும்?''

''தலைமைக் காரியதரிசி அவர்களை. அவர்தாம் இந்த விஷயத்திலே முடிவெடுப்பவர்.''

நாயர் நடுங்கியவாறு கூறினார்: ''தலைமைக் காரியதரிசியா? சரிதான், அவர் பெரிய கொம்பன் யானை*யாச்சே!''

தாசில்தார் சொன்னார்: ''பெரிய கெட்டிக்காரர். பெயர் பெற்ற விஷயம் அது. அதனால்தான் அவரைச் சந்திக்க வேண்டுமென்கிறேன். இந்தச் சுருக்கை அவிழ்க்க அவரால்தான் முடியும். எப்படிப்பட்ட எம். எல். ஏ.யாக இருந்தாலும் அவரிடம் பாச்சா பலிக்காது. எம். எல். ஏ.யையே பொம்மையாக்கிவிடுவார்.''

பழைய அநுபவங்கள் நாயர் நினைவுக்கு வந்தன. அவர் சொன்னார்: ''அவர்தான் பெரிய லஞ்சப் பேர்வழியாச்சே? இப்போது ஒரு கோரிக்கையுடன் நாம் அவரை அணுகினால், காலம் மாறியிருக்கிறதென்று நினைக்காதீர்கள், உடனே கை நீட்டுவாரே?''

* யானைக் கூட்டத்தின் தலைவன்.

அந்த விஷயத்தில் தாசீல்தாருக்குத் தயக்கமில்லை. அவர் சொன்னார்: ''அதுக்கென்ன? அவருடைய அந்தஸ்துக்கேற்ற முறையில் கையிலே வைத்துக் கொடுத்திடலாம்.''

இவ்வாறு இருவரும் முடிவுக்கு வந்தனர்.

* * *

கேசவபிள்ளை நாராயணன் நாயரை ஆதரவுடன் வரவேற்றார். ஏளனமோ வெறுப்போ அவரிடம் காணப்படலாமென்று நாயர் எதிர் பார்த்திருந்தார். அப்படி ஒன்றுமே காணப்படவில்லை. வந்த காரியத் தைப்பற்றித் தலைமைக் காரியதரிசி நாயரிடம் கேட்டார். எந்தவிதமான தயக்கமுமின்றி நாயர் விஷயத்தை எடுத்துரைத்தார்.

''இந்த விஷயத்தில் என்னால் ஏதாவது செய்ய முடியுமென்று தோன்றவில்லை. மிஸ்டர் நாயர், இந்த மாதிரி காரியங்களில் ஈவிரக்க மின்றி நடந்துகொள்ள வேண்டுமென்பதுதான் கோட்பாடு. நான் இந்த விஷயத்திலே தலையிடுவதாக இருந்தால், உண்மையிலேயே அது நீதிக்கும் தருமத்துக்குமாக இருந்தால்கூடத் தவறாக எடுத்துக்கொள் வார்கள். தலைமைக் காரியதரிசியே ஊழல் பேர்வழியென்று சட்ட சபையிலே கூச்சல் போட்டால் என்ன செய்வது? அவ்விதம் நடக்கா தென்று நினைக்கிறீர்களா?''

நாயர் ஒப்புக்கொண்டார்: ''அதுவும் சம்பவிக்கலாம்.''

கேசவபிள்ளை தொடர்ந்து கூறினார்: ''இனி அதை எல்லாம் விட்டு டுங்க! ஊழல் ஒழிப்பு நடவடிக்கைக்குப் பொறுப்பான அதிகாரி நான் தான். நானே விட்டுக் கொடுக்கும் தன்மையுடன் நடந்துகொண்டால் அது நியாயந்தானே?''

நியாயமென்று நாயரால் சொல்லமுடியாது. ஆயினும் அவர் சொன்னார்: ''உண்மையிலேயே இந்தத் தாசீல்தார் குற்றவாளி அல்ல. அவரிடம் பகைமை கொண்ட எம்.எல்.ஏ. படைத்துவிட்ட பொய் வழக்கு இது. ஒரு நிரபராதியைத் தண்டிப்பதென்றால் . . .''

நாராயணன் நாயர் சொல்லி முடிக்கு முன்பே கேசவபிள்ளை அதை ஒப்புக்கொண்டவாறு கூறினார்: ''வருத்தப்படவேண்டிய விஷயந் தான். தவறுதான். நீங்கள் சொல்வதுபோல் எல்லாமே பொய்யாக இருக்கலாம். ஆனால், ருசுக்கள் தஸ்தாவேஜுகளில் காணப்படுபவை யாக இருந்தால், அந்தப் பொய்யெல்லாம் உண்மையாகிவிடுமே. புகார்களெல்லாம் உண்மை என்றல்லவா ஆகிவிடுகின்றன?''

ஒரு விநாடிக்குப் பிறகு தலைமைக் காரியதரிசி கேட்டார்: ''இப்படித் தான் பல சம்பவங்கள் நடக்கின்றன. கோபி கூறிய குற்றச்சாட்டுக் கள் என்ன? எல்லாமே உண்மையானவை. அப்படித்தானே? அவை எல்லாம் எப்படிப் பொய்யாகிவிட்டன?''

நாராயணன் நாயர் சுருங்கிவிட்டார். தலைமைக் காரியதரிசி தொடர்ந்து கூறினார்:

''ஆனால், நான் ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பல புதிய வலைகளைக் கிழித்த ஒரு மீன் பழைய வலையில் இறுதியில் சென்று விழுந்துவிடும். இந்தத் தாசில்தார் இந்த விஷயத்தில் நிரபராதியாக இருக்கலாம். ஆனால் முன்னர் ஏராளமான தவறுகளைச் செய்திருப்பார்.''

அதுவும் உண்மையாக இருக்கலாமென்று நாயர் ஒப்புக்கொண்டார். ஆனால், ''இந்தப் பிரச்னையைத் தீர்க்க என்னால் முடியாது'' என்று தாசில்தாரிடம் சொல்லி நழுவிவிட அவர் மனம் ஒப்புக்கொள்ளவில்லை. அது ஒரு குறை என்பதனால் அல்ல. வேறு பல விஷயங்களும் இருக்கின்றன. அன்று தம்முடன் சேர்ந்து செயலாற்றியவர்களும், காங்கிரஸை நேரடியாக எதிர்த்தவர்களும் இன்று எம்.எல்.ஏ.க்களாகவும் காங்கிரஸ் தலைவர்களாகவும் விளங்கி, ஒவ்வொரு வகையில் பணம் சேர்ப்பதை நாராயணன் நாயர் பார்க்கிறார். ஏன் அந்த வழியைத் தாமும் பின்பற்றக்கூடாதென்ற சிந்தனை நாயருடைய மனத்திலே உருவெடுத்தது என்றால் அதைத் தவறெனச் சொல்லமுடியுமா? அவ்வாறின்றி எவ்வாறு வாழ்வது? நாட்டுக்காக உழைத்தோம், அந்த நாடே எதிர்காலத்தில் உணவு அளிக்கவேண்டும். நாயர் துணையற்றவர்போல் கேட்டார்:

''அப்புறம் வேறு வழி என்ன? எப்படியாவது நீங்கள் இந்தக் காரியத்தை நிறைவேற்றித் தரவேண்டும். நான் உங்களையே சரணடைகிறேன். வேறு வழியில்லை.''

அந்தத் தாசில்தாரின் குடும்பத்தினுடைய பரிதாப நிலைமையைத் தெளிவுபடுத்திப் பேசினார் நாயர். பொறுமையுடன் அதைக் கேட்ட கேசவபிள்ளை சொன்னார்:

''நான் என்ன செய்வது? இன்னதைச் செய்யவேண்டுமென்று சொல்லுங்கள், செய்கிறேன். எனக்கு எந்தவிதமான ஆபத்தும் நேர்ந்துவிடக்கூடாது. இப்படிப்பட்ட வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களின் குடும்பங்களை நான் பார்க்கிறேன். யாருக்கும் தீங்கிழைக்காமல், என் மனைவியின் வார்த்தைகளிலேயே சொல்வதாக இருந்தால், யாருடைய சாபத்தையும் வாங்கிக் கட்டிக்கொள்ளாமல் இந்த வேலையிலிருந்து ஓய்வுபெற வேண்டுமென்பதே என் விருப்பம். எனவே அந்தத் தாசில்தாருக்கு உதவி செய்வதில் எனக்கும் சந்தோஷந்தான்.''

பிடி கொடுக்காமல்தான் பேசினார் தலைமைக் காரியதரிசி. இங்ஙனம் விலகி நின்றவாறு பேசுவதன் காரணத்தைப் பழைய அநுபவங்களின் அடிப்படையில் கண்டுபிடிக்க முயன்றார் நாராயணன் நாயர். பிடி கிடைக்க வேண்டுமென்றால் கையை நீட்டினால்தான் முடியும். மடியில் இருப்பதை எடுத்து மேஜைமீது வைத்தால்தான் முடியும். நாயர் தம்

மடியிலே இரகசியமாக வைத்திருந்த ஒரு கவரை எடுத்து மேஜைமீது வைத்துவிட்டார். கேசவபிள்ளை கேட்டார்: ''இது என்ன?''

முகத்திலே அசடு வழிய உட்கார்ந்திருந்தார் நாயர். பதில் சொல்ல வில்லை. கேசவபிள்ளை சொன்னார்:

''வேண்டாம். இதற்காக நான் பேரம் பேசிக்கொண்டிருக்கவில்லை. இந்த ஏற்பாட்டை நான் நிறுத்தி விட்டேன். ஊழல் ஒழிப்புக்குப் பொறுப்பு அதிகாரியாக இருந்து வருகிறேன். நீங்களாக இருப்பதால் இந்தக் கவரை மன்னித்து விடுகிறேன்.''

சிறிது கட்டளையிடுகிற குரலில் சொன்னார்: ''இதை எடுங்கள் மிஸ்டர் நாயர்!''

நாயர் தயங்கினார். கேசவபிள்ளை அதே குரலில் கட்டளையிட்டார்: ''உம்! எடுத்துவிடுங்கள்!''

நாயர் அந்தக் கவரை எடுத்தே விட்டார். கேசவபிள்ளை தொடர்ந்து கூறினார்: ''அதை எங்கிருந்து எடுத்தீர்களோ, அதே இடத்தில் காப் பாற்றி வையுங்கள்.''

நாயர் அவ்விதம் செய்தார். ஒரு நிமிஷத்துக்குப் பிறகு கேசவ பிள்ளை புன்சிரிப்புடன் தொடர்ந்து கூறினார்: ''வருத்தப்படவேண்டாம். இது சரியல்லவென்று எனக்குத் தோன்றியது, அவ்வளவுதான். இனி பழைய முறையிலேயே பேசுவோம்.''

பேசக்கூடிய நிலைக்கு வர நாயருக்குச் சிறிதுநேரம் பிடித்தது. அப்போதுகூடச் சொல்லவேண்டியிருந்தது அது ஒன்று மட்டுந்தான்:

''அதுக்கு ஒரு வழி சொல்லுங்க! சொல்லத்தான் வேண்டும்.''

புன்னகையுடன் கேசவபிள்ளை கூறினார். ''நான் எந்த வழியைச் சொல்லித் தருவது?''

''சொல்லித் தராவிட்டால் நான் இங்கிருந்து போகமாட்டேன். நீங்கள் மனம் வைத்தால் ஒரு வழி பிறக்கத்தான் செய்யும்.''

கேசவபிள்ளை சிறிது நேரம் யோசித்தார். பிறகு குரலைத் தாழ்த்திய வாறு கூறினார்: ''நான் ஒரு வழி சொல்லித் தருகிறேன். முயற்சி செய்து பாருங்கள்!''

''கண்டிப்பாக. வேறு என்ன செய்வது?''

''இருக்கட்டும். மந்திரி உம்மனிடம் நெருங்கிப் பழகியதுண்டா?''

நாயர் அந்த மந்திரியிடம் நெருங்கிப் பழகியதில்லை. மிஸ்டர் உம்மன் போராட்டக் காலத்தில் காங்கிரஸில் இருந்தவர் அல்ல. தலைமைக் காரியதரிசி தொடர்ந்து கூறினார்:

''அப்படியானால் மிஸ்டர் மாத்யூவை அணுகுங்கள்! விடாப்பிடியாகப் பிடித்துவிடுங்கள்! மாத்யூவை உம்மனிடம் சொல்லவைக்கவேண்டும். மிஸ்டர் உம்மன், இந்த வழக்கை அநுதாபத்துடன் கவனிக்கவேண்டு மென்று ஒரு வார்த்தை என்னிடம் சொன்னால் போதும்.''

நாயர் கேட்டார்: ''மாத்யூ சொல்வாரா?''

''அது எனக்குத் தெரியாது. நீங்கள் சொன்னால் ஒப்புக்கொள்வார் என்று நினைக்கிறேன்.''

நாயர் யோசித்துவிட்டுக் கேட்டார்: ''ஒப்புக்கொள்ளாவிட்டால்?''

''ஒப்புக்கொள்ளாமல் இருப்பாரா? இல்லாவிட்டால் லூக்கோஸைப் பிடியுங்கள்!''

நாயர் கேட்டார்: ''இவ்வளவெல்லாம் செய்தாலுங்கூட இறுதி முடிவு உங்களிடந்தானே இருக்கிறது?''

''மந்திரி சொன்னால் செய்யாமல் இருக்க முடியுமா? நீங்கள் அதெல்லாம் செய்து முடியுங்கள்.''

நாராயணன் நாயர் தமக்கு ஒரு வழி கிடைத்துவிட்டதென்ற பூரிப் போடுதான் அங்கிருந்து கிளம்பிச் சென்றார்.

பதிவகச் சிப்பாய் நாணு நாயர் வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்யப் பட்டார். ரெஜிஸ்டிரேஷன் டைரக்டரிடந்தான் அந்த அதிகாரம் இருக் கிறது. அந்தச் செய்தி பெரிய எழுத்துக்களில் பத்திரிகைகளில் வெளி வந்தது. மணியகாரர் வர்க்கீஸுக்குக் கட்டாய ஓய்வு கொடுத்து வேலை நீக்கம் செய்யப்பட்டதாக நிலவரிக் கமிஷனர் அலுவலகத்திலிருந்து உத்தரவு வந்தது. பப்புவின் விசாரணை நடைபெற்றுக்கொண் டிருந்தது. எக்ஸைஸ் இன்ஸ்பெக்டருக்கு ஆபத்து ஒன்றும் வராதென்றே தோன்றுகிறது. அவர் திருவனந்தபுரத்துக்காரர். அங்கே அவருக்குச் சில பெரிய புள்ளிகளெல்லாம் உதவ இருக்கின்றனர் என்று சொல்லப் படுகிறது.

உத்தியோகஸ்தர் உலகம் மொத்தமாகப் பயந்து நடுங்கிக்கொண் டிருந்தது. ஆனால் ஒரு மாறுதல் ஏற்பட்டது. எந்த அலுவலகத்தி லிருந்தும் யாருக்கும் எந்தக் காரியமும் நடப்பதில்லை என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. சர்க்கார் காரியமெல்லாம் அதன் முறை போல்தான் நடக்கும். ஓர் அவசரத் தேவைக்காக எந்த அலுவலகத் துக்கும் யாரும் சென்று பிரயோஜனம் இல்லை. இப்போது இதன்மீதுதான் புகார் கிளம்பியிருக்கிறது. ஆயினும், காங்கிரஸ் தலைவர்களும மந்திரி களும் எங்கெல்லாம் பேசுகிறார்களோ அங்கெல்லாம் இந்த ஊழல் ஒழிப்பு நடவடிக்கையைப்பற்றியே டமாரமடிக்கிறார்கள்.

* * *

நாராயணன் நாயர் மந்திரி மிஸ்டர் மாத்யூவைச் சென்று பார்த்தார். அவரால் நாயரை மறக்க முடியாதல்லவா? ஆயினும் உம்மனிடம் அந்த விஷயத்தைப்பற்றி எப்படிப் பேசுவது? உம்மோடு நட்புறவுதான். ஆனால், ஊழல் ஒழிப்பை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணம் எல்லாருக்கும் உண்டு. வேறு எந்தப் பிரச்னையாக இருந்தாலும் பேசலாம். இதை எப்படிச் சொல்வதென்று மாத்யூ யோசித்தார். நாராயணன் நாயர் விடாப்பிடியாக நின்றார்.

நாட்கள் இரண்டு மூன்று கழிந்தன. பிரச்னை எவ்விடம் வரைக்கும் சென்றிருக்கிறதென்று கேசவபிள்ளை, நாயரிடம் விசாரித்தார். நடந்ததெல்லாம் நாயர் அவரிடம் சொன்னார்.

''விடாமே பிடிச்சிடுங்க. இறுகப் பிடிக்கமாட்டேங்கிறீங்களே?'' தலைமைக் காரியதரிசி சொன்னார் பதிலுக்கு.

இன்னும் இறுக்கமாகப் பிடிப்பது எப்படி? திருமதி மாத்யூகூட இது விஷயமாக மந்திரிமீது நிர்ப்பந்தம் செலுத்தி வருகிறாள். இதுவரையிலும் எந்த அரசாங்க விஷயத்திலும் அந்தப் பெண்மணி தலையிட்டதில்லை என்று சொல்லப்படுகிறது.

நான்காம் நாள் தலைமைக் காரியதரிசி கடுமையான முன்னெச்சரிக்கை செய்தார்:

''இந்த ஃபைலைப் பொறுத்தவரையில் இனிமேல் காலதாமதம் செய்ய முடியாது மிஸ்டர் நாயர்!''

பாவம்! நாயர் என்ன செய்வார்? அவர் சொன்னார்: ''அப்படி யொன்றும் செய்து விடாதீர்கள். ஒரு வாரம் தவணை கொடுங்கள். நான் சாதித்துவிடுகிறேன்.''

''காலதாமதமாவதற்குக் காரணம் கேட்டால் நான் என்ன சொல்வது?''

''அப்படியெல்லாம் கேட்கமாட்டார்கள்.''

நாயர் இந்தப் பிரச்னையில் வெற்றி பெறவேண்டுமென்ற நிர்ப்பந்தம் காரியதரிசிக்கு இருப்பதுபோல் தோன்றியது.

* * *

மறுநாள் தலைமைக் காரியதரிசியிடம் சொல்ல ஒரு நல்ல செய்தி நாராயணன் நாயருக்கு இருந்தது. நாயருக்கு நல்ல ஒரு பாதை கிடைத்தது. பயன்படுத்த முடிந்தால் நல்லது. அது ஒரு பரம இரகசியம். தாசில்தாரைப் போலவே ஆபத்தில் அகப்பட்டுத் தவிக்கும் ஒரு ரேஞ்சர் இருக்கிறார். லஞ்சத்தைப் பெற்றுக்கொண்டு வனத்திலிருந்து மரங்களை வெட்டிக் கொடுத்தார் என்பது குற்றச்சாட்டு. நன்றாக நிரூபிக்கப் பட்டிருக்கிறது. குற்றச்சாட்டு உண்மைபோல் தோன்றுகிறது. மந்திரி மிஸ்டர் உம்மன் அவர்கள், அந்த ரேஞ்சரை எப்படியும் காப்பாற்ற வேண்டுமென்று சீஃப் செக்ரடரியிடம் சொல்லியிருக்கிறார்.

''ஒரு பத்து நிமிஷத்துக்கு முன்பே சொல்லிவிட்டுப் போகிறார். நான் பார்த்தவரையில், உங்கள் கேஸ் போலவே தப்பிவிட ஒரு வழியும் இல்லாத கேஸ்தான் அது. அதைப்பற்றி மந்திரியிடம் ஒளிக்காமலேயே சொல்லிவிட்டேன். எப்படியும் காப்பாற்றியே தீரவேண்டுமென்று மந்திரி நிர்ப்பந்தமாகச் சொல்லுகிறார்.''

நாராயணன் நாயருக்கு உயிர் வந்தது. அவர் சொன்னார்: ''உம்ம னிடம் தாசில்தார் கேஸைப்பற்றி எப்படிச் சொல்வது என்று மிஸ்டர்

மாத்யூ தயங்கிக்கொண் டிருக்கிறார். சங்கதி இப்படியென்றால் என் விஷயமாக ஏன் உம்மனிடம் பேசக்கூடாது?''

தலைமைக் காரியதரிசி அது சரிதான் என்றார்.

''ஆம். அதைத்தான் நானும் கேட்கிறேன்.''

நாராயணன் நாயர் கிளம்பிச் சென்றபோது சீஃப் செக்ரடரி கண்டிப்பான ஒரு முன்னெச்சரிக்கை செய்தார்:

''இதை நான் சொல்லி நீங்கள் தெரிந்துகொண்டதாக மிஸ்டர் உம்மனுக்குத் தெரியக்கூடாது. இந்த விஷயம் நீங்களோ, மிஸ்டர் மாத்யூவோ அறிந்ததாகவே காட்டிக்கொள்ளக்கூடாது. அப்படி. இந்த இரகசியம் வெளியாகிவிட்டால் எனது தற்காப்புக்காகத் தாசில்தார் தண்டிக்கப்படுவார். சொல்லி வைக்கிறேன். ஈவிரக்கமே இருக்காது.''

நாராயணன் நாயருக்கு உதவ வேண்டுமென்ற விருப்பம் மந்திரி மாத்யூவுக்கு இருந்தது. கடமைப்பட்டிருக்கிறவர்களை அவ்வளவு எளிதில் மறக்கக்கூடியவர் அல்ல மாத்யூ. முதலில் சிறிது தயங்கினார்; அவ்வளவுதான். இந்தத் தகவல் கிடைத்தபோது அவருக்குத் தைரியம் பிறந்தது. நாராயணன் நாயர் சொன்னதுபோலவே அவரும் சொன்னார்: ''ஆயின் நமது காரியங்கூட நிறைவேறவேண்டியதுதானே?''

ஆனால், இந்த விஷயத்தில் இன்னொரு பிரச்னையுண்டு. தாசில்தார் வழக்கில் வாதியாயிருப்பவர் ஒரு எம்.எல்.ஏ.! அவரைச் சொல்லிச் சமாளிக்கவேண்டி யிருந்தது. இல்லாவிட்டால் சட்ட சபையில் மட்டுமின்றி நாடு முழுதிலும் அவர் கிளர்ச்சியைக் கிளப்பிவிடுவார். இந்தச் சமாசாரத்தைச் சீஃப் செக்ரடரிதான் மந்திரிகளான உம்மனிடமும் மாத்யூவிடமும் சொன்னது. அதைச் சமாளிப்பதற்கான ஒரு யோசனையையும் அவரே சொல்லிக் கொடுத்தார்.

தாசில்தார் எம்.எல்.ஏ.யிடம் சரணடையவேண்டும். ஒருவேளை, அவர் எம்.எல்.ஏ.யிடம் மன்னிப்பைக் கோருவதனால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடாது. இன்று அவருடைய தம்பிக்கு மலைப் பிரதேச நிலம் கிடைக்காமல் இருக்கிறது. பத்தனம் திட்டாவிலுள்ள அருமையான கொஞ்சம் நிலத்தை அவருக்குப் பதிவு செய்துகொடுக்கவேண்டி இருக்கும். தாமே அந்த வேலையைச் செய்து முடித்துக் கொடுப்பதாகக் காரியதரிசி வாக்குறுதி அளித்தார். கேஸ் ஓரளவு நன்றாகவே நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டு பாயின்டுகளுக்குக்கூட ருசுக்கள் தேவை. அதற்கான விசாரணை நடத்த கேஸ் தஸ்தாவேஜுகளைக் கீழே அனுப்பி வைக்கலாம். ரேஞ்சர் விஷயமாகவும் இத்தகைய நடவடிக்கைதான் எடுக்கப்பட்டிருந்தது. தஸ்தாவேஜுகள் திரும்ப மேலே வரும்போது இலைக்கும் முள்ளுக்கும் கெடுதல் நேர்ந்துவிடாதபடி பிரச்னைகளைச் சரிக்கட்டிவிடலாம்.

பாதை தெளிவாகிவிட்டது. ஒரு மாதத்துக்குள் பிரச்னைகள் அனைத்தும் இனிது முடிந்தன. ரேஞ்சரும் தாசில்தாரும் நிரபராதிகள் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. தாசில்தாருக்கு ஐயாயிரம் ரூபாய் செலவாகி

விட்டது. அது அவருக்கு ஒரு பெரிய பிரச்னை அல்ல. இவ்வளவு செலவு பண்ணியிருக்கிறார் என்று அறிந்துகொண்டுதான் அவர் தேவிகுளத்துக்கு மாற்றப்பட்டார். இரண்டு மாதத்துக்குள் அந்தத் தொகையைப் புகார் ஏதும் கிளம்பாமலேயே திரும்பப் பெற்றுவிடுவார்.

நாராயணன் நாயருக்கு வாழ்நாள் முழுதும் தேசத் தொண்டாற்றிய தற்கான முதல் பலன் கிடைத்துவிட்டது.

கேசவபிள்ளைக்கு அவருடைய நோக்கமும் நிறைவேறிவிட்டது. ஊழல் ஒழிப்பு நடவடிக்கையைத் தொடர்ந்து மந்திரிகளே அவரிடம் சென்றார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக மந்திரி மிஸ்டர் உம்மன் அவர்களுக்குக் கேசவபிள்ளைமீது நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டது.

எம்.எல்.ஏ. அவர்களுக்கு அருமையான ஐந்நூறு ஏக்கரா நிலம் குறைந்த விலையில் கிடைத்துவிட்டது. அவரும் தலைமைக் காரியதரிசிக்குத் தம் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டவரானார்.

அத்தியாயம் 33

கொச்சிக்காரன்

சுகேசினி என்ற ஒரு பெண் டைப்பிஸ்டை (தட்டெழுத்தாளர்)ப் பத்மாவதி என்ற ஒரு பெண் குமாஸ்தா அடித்தாள். கன்னம் பொத்தி இரண்டு தடவை அறைந்தாள். அரசாங்கத் தலைமைச் செயலகத்தின் படிவாசலிலேதான் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. மத்தியான்ன வேளையில் சுகேசினி வந்தபோது, அவளுக்காகவே காத்து நின்றிருந்த பத்மாவதி அடித்துவிட்டாளாம்! நினைத்திராத சந்தர்ப்பத்திலே அடி விழுந்தது.

இருந்தும் பத்மாவதி ஒன்றுமே நிகழாததுபோல் நடந்து சென்றாள். ஒரு நிமிஷத்திற்குள் எல்லாம் முடிந்து விட்டதாம். சுகேசினியின் கன்னத்திலே விரல்கள் பதிந்து தடித்த கோடுகள் காணப்பட்டன.

சுகேசினி ஐந்தாண்டுத் திட்ட இலாக்காவில் வேலை செய்கிறாள். பத்மாவதி 'பல பட்டறை' இலாக்காவில் வேலை பார்க்கிறாள். முதலில் அவள்கூட ஐந்தாண்டுத் திட்ட இலாக்காவிலேதான் பணிபுரிந்து வந்தாள்.

அன்று மதியத்துக்குப் பின் தலைமைச் செயலகத்திலுள்ள எந்த இலாக்காவிலும் எந்த வேலையும் நடைபெறவில்லை. இதென்ன, ஒரு சாதாரண நிகழ்ச்சியா? ஒரு பெண் இன்னொரு பெண்ணை அடிப்பதா? அதுவும் கன்னத்தில் அறைவதா? எல்லாரும் அதைப்பற்றியே பேசினார்கள். என்ன காரணமென்ற கேள்விதான் முதலில் எழுந்தது. திட்ட இலாக்காவிலுள்ளவர்களுக்கு மட்டும் காரணத்தைப்பற்றிய சில அனுமானங்கள் இருந்தன. கருணாகரன் நாயர் என்ற ஒரு குமாஸ்தா திட்ட இலாக்காவில் உண்டு. அவன் பத்மாவதியின் காதலனாக இருந்தானும்! பத்மாவதி வேறு இலாக்காவுக்கு மாற்றப்பட்டபோது அவள் சுகேசினியைக் காதலித்தான். திருச்சூர்ப் பாணியில் நல்ல முறையில் உடுத்தி வருகிறவள் சுகேசினி. முன்பு ஒரு சந்தர்ப்பத்தில் இந்தப் பெண்களிடையில் ஒரு வாய்ச் சண்டை நடைபெற்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது. காரணம் அதுவாக இருக்கவேண்டும். செயலகத்திலுள்ள குமாஸ்தாக்கள் எல்லாருமே இவ்விரண்டு இலாக்காக்களுக்கும் வந்து போய்க்கொண்டிருந்தனர்.

சுகேசினி கொச்சிக்காரி. ஊர், திருவில்வாமலையோ, தேசமங்கலமோ என்னவோ? திட்ட இலாக்காவிலுள்ள கொச்சி சம்ஸ்தானத்துக் காரர்கள் எல்லாரும் சேர்ந்து விவாதித்தனர். திருவனந்தபுரத்தில் தங்களுக்கு ஒருவிதப் பாதுகாப்பின்மை இருந்து வருகிறது என்பதை

அவர்களுடைய முக்கியமான புகார். இப்போது பலாத்காரமும் நடைபெற்றிருக்கிறது. 'பலபட்டறை' இலாக்காவிலுள்ள திருவாங்கூர்ச் சம்ஸ்தானத்தவர்களும் சேர்ந்து விவாதித்தனர். கொச்சிக்காரர்கள் சுகேசினியைத் தூண்டிவிட்டுப் புகார் எழுதிக் கொடுக்கச் செய்துவிட்டால் பத்மாவதியை எப்படிப் பாதுகாப்பது என்பதே அவர்கள் விவாதத்துக்கு எடுத்துக்கொண்ட பிரச்னை. இத்தகைய விவாதங்கள் அந்த இரண்டு இலாக்காக்களில் மட்டும் நடைபெறவில்லை. தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்து இலாக்காக்களிலும் நடைபெற்றன.

கொச்சிக்காரர்களும் வாழவேண்டாமா? கொச்சி ராஜா, தம் சம்ஸ்தானத்தைத் திருவனந்தபுரத்துக்குக் காணிக்கை வைத்தார். அதை அவர்களால் நினைத்துப் பார்க்கவும் முடியாது. எத்தனை ஒழுங்காக, அழகாகக் காரியங்கள் நடைபெற்று வந்த நாடு அது? திருவாங்கூர்ச் சம்ஸ்தானத்தவர்களின் புகார் அதுவல்ல; தங்களிடம் குறைவான சம்பளங்களைப் பெற்று, வந்தவர்கள் இப்போது சுதந்தரச் சூழ்நிலையில், தங்களோடு சரி நிகர் சமானமாகவோ அல்லது தங்களைவிட சீனியர்களாகவோ வந்திருக்கிறார்கள். இவர்கள் வந்து நுழைந்ததன் விளைவாகத் தங்களுக்குக் கிடைத்திருக்கவேண்டிய பிரமோஷன்கள்கூடத் தடைபட்டு விட்டன. அந்தச் சின்னத் துண்டு நிலம் திருவாங்கூருடன் எதற்காக இணைக்கப்பட்டது? ஆண்கள் உருவத்திலுள்ள பெண்கள்தான் வந்து புகுந்திருக்கிறார்கள்! இரு பகுதியினருடைய பிரமோஷன், சம்பள ஸ்கேல் ஆகியவைபற்றிய புகார்கள் அன்றுடம் அரசாங்கத்துக்குச் சென்று கொண்டிருந்தன. சில சந்தர்ப்பங்களில் இரு பகுதியினருக்குமிடையே சச்சரவுகள் தோன்றுவதுண்டு. கொச்சிக்காரர்கள் கவைக்குதவாதவர்கள் என்பதே திருவாங்கூர் உத்தியோகஸ்தர்களின் கருத்து! திருவாங்கூர்க் காரர்கள் லஞ்சம் வாங்குகிறவர்கள், ஏமாற்றுகிறவர்கள், திருடர்கள் என்பது கொச்சிக்காரர்களின் கருத்து! இந்தக் கெடுபிடிப் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேதான் சுகேசினி அடி வாங்கினாள்.

திட்ட இலாக்காவிலுள்ள குஞ்ஞிப்பாலு என்ன சொல்லுகிறான் தெரியுமா? அன்று மாலையிலேயே சுகேசினி, பத்மாவதியின் கன்னத்தில் அடிக்கவேண்டும்; அடிக்க வைக்கவேண்டும். அடி அழுத்தமானதாக இருக்கவேண்டும் என்பதில்லை. அடிக்கு அடி கொடுக்கவேண்டும். அவ்வளவுதான். அரவிந்தாட்சன் அந்தக் கருத்தை ஆமோதிக்கவில்லை. அவன் சொன்னான்: ''நாம் இங்கே வாழவேண்டாமா? திருவனந்தபுரம் நகரமே கிளர்ந்தெழும். நம்மைத் தனித் தனியாக அடித்து நொறுக்கி விடுவார்கள்.''

காட்டு இலாக்காவிலுள்ள சேதுமாதவ மேனன் சொன்னான், புகார் மனு கொடுக்கவேண்டுமென்று. உணிக்கண்ட வாரியர், அப்புக்குட்டிப் பொதுவாள் ஆகியோர் இந்தப் பிரச்னையைக் கிளப்பி அவ்வளவாகப் பெரிது படுத்தவேண்டாமென்று கூறினர். ஆனால் பொதுவாள் ஒரு யோசனை கூறினான்:

''இது ஒரு நல்ல சந்தர்ப்பந்தான். கொச்சிக்காரர்களுக்கென்றே ஒரு ஸ்தாபனம் அமைக்கப்படவேண்டும். நான் என்றென்றும் இதைச் சொல்லி வந்திருக்கிறேன். இன்று எல்லாரும் விழித்தெழுந்திருக் கிறார்கள். என்ன வாரியர்வாள்?''

வாரியருக்கும் அதே கருத்துதான். அப்படியொன்று அமையா விட்டால் கொச்சியினரால் வாழ்க்கை நடத்தமுடியாது.

குஞ்ஞிப்பாலு அந்த யோசனையை வரவேற்றான். ஆனால், அவன் கேட்பது இதுதான்: ''இப்போ நடந்ததுக்கு என்ன நடவடிக்கை?''

பொதுவாள் சொன்னான்: ''நீ அவகிட்டேயே கேட்டுப் பார்!''

குஞ்ஞிப்பாலு சுகேசினியை அணுகினான். சுகேசினி எந்த முடிவுக்கும் வரவில்லை.

உணிக்கண்ட வாரியருக்கு அதன் காரணம் என்னவென்று தெரியும்.

''கருணாகரன் நாயருக்கு இன்று லீவு. அவன்தானே, இதுக்கெல்லாம் மூல காரணம்? அவன் வரட்டும்னு இருக்கிறாள் சுகேசினி.''

சுகேசினி புகார் செய்யாமல் இருந்தால்கூட, தான் புகார் செய்ய போவதாகக் குஞ்ஞிப்பாலு கூறினான். எல்லாரும் அதை எதிர்த்தனர். புகார் செய்தால் சீஃப் செக்ரட்டரி இருவரையும் வீட்டுக்கு அனுப்பி விடுவார்.

சேதுமாதவ மேனன் கருத்தைத் தெரிவித்தான்:

''சீஃப் செக்ரடரி ஒரு சரியான திருவாங்கூர்ப் போலீயாக்கும்.''

குஞ்ஞிப்பாலு, திறமையில்லாத கொச்சி மந்திரியை நூறு முறை திட்டினான்.

திட்ட இலாக்காக் காரியதரிசியாக இருப்பவர் குஞ்ஞிசங்கர மேனன். அவர் கொச்சியின் நான்காம் வாரிசுத் தம்பிரானின் தனயராவார்.

இலாக்காவில் நடைபெற்று வந்த அமளிதுமளிகள்ஒன்றும் அவருக்குத் தெரியவில்லை. மதிய உணவை முடித்த பிறகு சிறிது நேரம் உறங்குவது அவருடைய வழக்கம். அது இன்று நேற்று ஆரம்பமானதல்ல. எர்ணாகுளத்திலிருந்தபோது அவரை யாரும் அந்தச் சமயத்தில் தொந்தரவு செய்யமாட்டார்கள். ஆனால் தமக்குப் பாதுகாப்புக்கு ஆள் இல்லாமல் போய்விட்ட திருவனந்தபுரத்திலே இப்போது அவருக்கு அந்த நித்திரைச் சுகம் கிடைப்பதில்லை. இலாக்காவிலுள்ளவர்கள் யாருமே தொந்தரவு செய்யாமலிருந்தபோதிலும், மற்ற இலாக்காக்களிலிருந்தும், சில சந்தர்ப் பங்களில் தலைமைக் காரியதரிசி, மந்திரி ஆகியோரிடமிருந்தும் அவருக்குத் தொலைபேசி வழியாக அழைப்புக்கள் வரும். அன்றைய தினமும் அது நடைபெற்றது. பொதுப் பணித்துறை இலாக்காக் காரியதரிசி அவரைப் போனில் கூப்பிட்டார். 'மறுநாள் மந்திரி சபைக் கூட்டம் நடைபெற இருக்கிறது. நீர்மின் திட்டம் சம்பந்தமான ஃபைலை மந்திரிசபைக் கூட் டத்தில் சமர்ப்பிக்கும் வகையில் தயாராகி விட்டதா?' என்ற கேள்வி வந்தது. மேனன் ஒரு முறை நடுங்கினார். ஒரு சில தினங்களுக்கு முன் மிஸ்டர் மாத்யூ அதைப்பற்றி அவரிடம் நேரடியாகச் சொல்லி

யிருந்தார். ஐந்தாண்டுத் திட்டமும், பொதுப்பணித் துறையும் மிஸ்டர் மாத்யூவின் இலாக்காக்கள். மேனன் அந்த விஷயத்தை மறந்து விட்டிருந்தார்.

தூக்க மயக்கம் கலைந்துவிட்டது. அவர் உதவிக் காரியதரிசியை அழைத்தார்; சூப்பிரண்டைக் கூப்பிட்டார்; குமாஸ்தாவான வாரியரையும் வரவழைத்தார். எல்லாரும் மறந்துவிட்ட ஃபைல்தான் அது.

மேனன் நிலை குலைந்தார். அவர் ஓர் அரச புத்திரனின் அதிகாரத்துடன் கர்ஜித்தார்:

''ஃபைல் எங்கே?''

வாரியர் ஃபைலைத் தேடியெடுக்கப் பாய்ந்து சென்றார். அப்போது அங்கே சுகேசினிப் பிரச்னையை எல்லாரும் மறந்து விட்டனர். உதவிக் காரியதரிசி பர்ஸனல் ரெஜிஸ்டர்களைப் பரிசீலித்துக்கொண்டிருந்தார். சிறிது யோசனைக்குப் பிறகு சூப்பிரண்டுக்கு ஞாபகம் வந்தது. அவர் குஞ்ஞிசங்கர மேனனிடம் சற்றுப் பயத்துடன் கூறினார்: ''அதை வீட்டுக்கு அனுப்பிவிட்டதாக ஞாபகம்.''

ரெஜிஸ்டரிலும் அப்படித்தான் இருக்கிறது. உதவிக் காரியதரிசி அதை உணர்த்தினார். வாரியருக்கு அப்போதுதான் ஆறுதல் பிறந்தது. இருந்தும் மேனன் விடவில்லை:

''இவங்களுக்கெல்லாம் என்ன பொறுப்புணர்ச்சி பாருங்க!''

ஆயினும் மேனனுக்குப் பயம், ஃபைல் வீட்டில் இருக்குமா என்று. ஃபைல்கள் அங்கே குன்றெனக் குவிந்து கிடக்கின்றன. இந்த ஃபைல் அங்கிருப்பதாக ஞாபகமில்லை. ஒருவேளை அங்கிருந்தால்கூட, நாளைய தினம் அதைப் பொதுப் பணித் துறையினருக்குக் கொடுக்க முடியுமா என்பது சந்தேகம். அந்தத் திட்டம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாக மட்டும் அவருக்குத் தெரியும். அதன் கடந்த கால வரலாற்றைப்பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது. ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தத் திட்டத்துக்காக ஒரு பெரும் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. என்ன செய்வதென்றே தெரியவில்லை. நாசமாப் போச்சு! இன்றிரவு தூங்க முடியாது.

திரு மேனன் மனநிம்மதி இழந்தார். தம் உத்தியோக விஷயத்திலே ஏதோ ஒரு நெருக்கடி ஏற்பட இருப்பதுபோல் அவருக்குத் தோன்றியது. தலைமைக் காரியதரிசி இரண்டு தடவை எச்சரிக்கை செய்திருந்தார். மூன்றாவது எச்சரிக்கையும் வர இருக்கிறது. இனி வருவது எச்சரிக்கையாக இருக்குமா? அதுதான் பயம்.

எர்ணாகுளத்திலே நிம்மதியாக இருந்தார். அங்கே சர்க்கார் காரியங்கள் முறையாக நடந்து வந்தன. வேலை ஒரு சுமையாகத் தோன்றவில்லை. ஏதாவது தவறு நேர்ந்துவிட்டால்கூட, அது தேய்ந்து மாய்ந்து போய்விடும். அங்குள்ள அமைப்பு அத்தகையது! அப்பா உயிரோடு இருந்து வருகிறார்... ஆனால், இங்கே அவரால் என்ன செய்ய

முடியும்? அங்கே தந்தையாரின் தனயர் என்ற நினைப்பு எல்லாருக்கும் இருந்து வந்தது. *இங்கே அவரைத் தாங்கி நிற்க யார் இருக்கிறார்கள்?

தலைமைக் காரியதரிசி எப்போது போனில் கூப்பிடுவார் என்று பயந்து செத்தார் மேனன். எந்த நிமிடத்திலும் அது நடைபெறலாம். கேட்டால் என்ன பதில் சொல்வது?

சுகேசினி சம்பந்தமான பிரச்னை இப்போது சிறிது அடங்கியிருந்தது. அந்தப் பிரச்னைபற்றிய சர்ச்சையை நிறுத்திவிட்டு அரசாங்க வேலைகளைச் செய்யச் சொல்லிக் கட்டளையிட்டார் சூப்பிரண்டு மிஸ்டர் பத்மநாபன். சுகேசினி டைப் செய்யத் தொடங்கினாள். குஞ்ஞிப்பாலு அப்போதுகூட முணுமுணுத்துக்கொண் டிருந்தான். பொதுவாள் ஸ்தாபன அமைப் பைப்பற்றிச் சிந்தித்துக்கொண் டிருந்தான். வாரியர் ஆறுதல் அடைந் திருந்த போதிலும் ரெஜிஸ்டரைப் பார்த்துப் படித்துக்கொண் டிருந் தான். எப்படியும் ஓர் 'எக்ஸ்பிளனேஷன்' கொடுக்கவேண்டியிருக்கும் என்ற பயமும் அவனுக்கு உண்டு.

மேனன் அவர்கள் உதவிக் காரியதரிசியைக் கூப்பிட்டார். திருவாங் கூர் ஸர்வீஸிலேயே இருந்தவாறு, பதவி உயர்வு பெற்று உதவிக் காரிய தரிசியாகிவிட்டவர் திரு ராமகிருஷ்ண நாயர். திருவாங்கூர்க் காரர்களை நம்பமுடியாது என்ற கருத்துந்தான் மேனன் அவர்களுக்கு. ஆயினும் யோசனையைக் கேட்டறியலாம் என்று அவர் கருதினார்:

''என்ன மிஸ்டர் நாயர், எனக்கு இந்தப் பிராஜக்டைப்பற்றி ஒன்றும் தெரியாது. அதன் கதை என்ன?''

ராமகிருஷ்ணன் நாயர் அந்தப் பெரிய கதையை விரிவாக எடுத்துரைத் தார். மேனன் மிகுந்த கவனத்துடன் அதைக் கேட்டார். அவருக்கு ஓர் ஆறுதல் ஏற்பட்டது:

''அப்போ... அந்தப் பழைய ஸைபல் ஒன்றும் பார்க்கவேண்டாம் போலிருக்கே?''

''அது இப்போது பொதுப்பணித் துறை இலாக்காவில் இருக்கிறது.''

''அப்பப்பா! என்ன ஆறுதல்!''

அவ்வளவு தூரம் ஆறுதலடைய வேண்டாமென்ற முறையில் ராம கிருஷ்ணன் நாயர் சொன்னார்:

---

* இக்கதை நடைபெற்ற காலகட்டத்தில்தான் திரு—கொச்சி இரண்டு சம்ஸ்தானங் களும் சேர்ந்து ஒரே மாநிலமாகின. இரு அரச சம்ஸ்தானங்களும் ஒன்றிணைந்தன. இரண்டு சர்க்கார் சர்வீஸ்களைச் சேர்ந்தவர்கள் தலைமைச் செயலகத்தில் வேலை செய்தார் கள். கொச்சியில் அரசவம்சம் மிகப் பெரியது. அரசர்களின் குமாரர்கள் அரசாங்க சர்வீஸில் ஆதிக்கம் பெற்றிருந்தார்கள். அரசர்களின் குமாரர்கள் என்ற அந்தஸ்து இருந்து வந்ததனால் அவர்களை யாரும் தட்டிக் கேட்கமாட்டார்கள். குஞ்ஞிசங்கர மேனன் அந்தச் சுகத்தை அநுபவித்து வந்தவர். ஆனால் சம்ஸ்தானங்களின் இணைப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து அவர் திருவனந்தபுரத்திற்கு வந்த பின்னர், அந்தப் பழைய சுகமில்லை என்பது மட்டுமின்றி, பழைய செல்வாக்கையும் இழந்து தவிக்கிறார். இரண்டு சம்ஸ்தான சர்வீஸ்களைச் சேர்ந்த ஊழியர்களிடையில் இருந்து வந்த முரண்பாடுகளை நகைச்சுவையுடன் திரு தகழி சித்திரிக்கிறார். (மொ—ர்.)

''இப்போது வேண்டாந்தான். ஆனால் அப்புறம் நிதி இலாக்காவினர் அந்த ஃபைலைக் குறிப்பிட்டு நமக்குத் தொந்தரவைக் கொடுக்கலாம்.''

''அவர்களுக்கென்ன? உம்! இருந்தாலும் அது அப்போதுதானே?''

ஒரு விநாடிக்குப் பிறகு மேனன் தொடர்ந்து கூறினார்: ''அப்போ... அந்த ஃபைலை நாளைக்குப் பொதுப்பணித் துறைக்கு அனுப்பிவைக்கணும் அல்லவா?''

''ஆமாம்.''

சிறிது நேரம் சிந்தித்துவிட்டு மேனன் சொன்னார்: ''அவர்களுக்கு இப்போது வேண்டியது என்ன என்பதைக் கொஞ்சம் இரகசியமாக விசாரித்து அறியமுடியுமா? அதுக்கு வழியுண்டா?''

ராமகிருஷ்ணன் நாயர் சொன்னார்:

''அந்தத் திட்டத்துக்கான அநுமதியைப் பெறுவதற்காக இருக்கலாம்.''

குஞ்ஞிசங்கர மேனன் நம்பவில்லை. அவர் மறுப்பைத் தெரிவிக்கும் முறையில் தலையாட்டினார்.

''அப்படி இருக்காது. பெரிய தொகை முதலீடு செய்யவேண்டிய திட்டந்தானே அது? இதுக்கு முன்னால் சின்னச் சின்ன நீர்ப்பாசனத் திட்டங்களைப்பற்றி எழுதி அனுப்பி வைத்ததற்குக்கூட இன்னும் அநுமதி கிடைக்கவில்லையே? அப்புறமா இது? இதிலே ஏதோ சூக்குமம் இருக்கிறது.'

மேனன் சொன்னார்: ''எப்படியோ போகட்டும். எனக்கு இன்றைக்குத் தூக்கம் கெட்டுவிடும். அவ்வளவுதானே? எப்படியும் நாளை ஃபைலை அனுப்பி வைப்போம்.''

ராமகிருஷ்ணன் நாயர் அங்கிருந்து நேரடியாகப் பொதுப் பணித் துறைக்குத்தான் சென்றார். அந்த இலாக்காவின் உதவிக் காரியதரிசியாக இருப்பவர் மிஸ்டர் சுகதன். குஞ்ஞிசங்கர மேனன் உள்ளூறச் சில முடிவுகள் எடுத்தார். அன்றுடம் பார்த்து முடிக்கவேண்டிய ஃபைல்களை ஒழுங்காகத் திட்டவட்டமாகச் செய்து முடிப்பது. பழைய சுபாவத்தை மாற்றிக்கொள்ளாவிட்டால் வேலையே போய்விடலாம். மணிக்கணக்கு வைத்து அன்றுடக் கடமைகளை நிறைவேற்ற வேண்டும். நாளைய தினத்திலிருந்து அவற்றைக் கண்டிப்பாக அமலாக்கவேண்டும்.

சிறிது நேரத்துக்குள் ராமகிருஷ்ணன் நாயர் திரும்பி வந்தார். பொதுப் பணித் துறையிலிருந்து அவர் சில தகவல்களை அறிந்து வந்தார்.

அவர் மேனனிடம் அவற்றைப்பற்றிக் கூறினார்: ''ஃபைல் பூராவையும் பார்த்துச் சரி செய்யவேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன்.''

இது ஒரு நல்ல செய்தி! மேனன் விவரங்கள் அறிய ஆவல் கொண்டார். உதவிக் காரியதரிசி தொடர்ந்து கூறினார்: ''இங்கிருந்து நாம் எழுதியனுப்பி வைத்திருக்கும் திட்ட வேலைகளில் சிலவற்றை நிறுத்தி வைத்துவிட்டு நீர்மின் திட்டத்தின் முதற் கட்டத்தைத் துவக்கி வைப்பதே அவர்களுடைய நோக்கம்.''

மேனனுக்குத் தெளிவாகப் புரியவில்லை. உதவிக் காரியதரிசி விளக்க மாகக் கூறினார்: ''நீர்மின் திட்டத்தின் முதற்கட்டமானது, புதிய இடத்துக்குப் போக்குவரத்து வசதி அமைப்பதுதான். அதைத்தான் இப்போது துவக்க இருக்கிறது.''

அந்த விஷயத்தில் தம் அறியாமையை வெளிப்படுத்தினர் மிஸ்டர் மேனன்.

''என்னவோ அந்த ஸ்கீமில நான் பார்க்கவில்லை.''

''நான் எல்லாவற்றையும் பார்த்துக் குறிப்புக்களுடன் அனுப்பி வைத் திருக்கிறேன்.''

நிறுத்திவைக்க முடிவெடுத்திருக்கிற திட்டங்கள் என்ன என்ன வென்று மேனன் கேட்டார். உணவு உற்பத்தி சம்பந்தப்பட்ட சில திட்டங்களே என்று நாயர் சொன்னார். நீர்மின் திட்டத்தைப்பற்றி யும் ராமகிருஷ்ணன் நாயர் சிறிதளவு அறிந்து வந்திருந்தார். அவர் அதைப்பற்றியும் தம் மேலதிகாரியிடம் கூறினர். புதிய இடத்திலே தான் அந்தத் திட்டம் துவக்கப்பட இருக்கிறது. அந்த இடத்தோடு சேர்ந்துகிடக்கிறது ஊட்டிக்காடு மலை. அந்த மலையினூடே ஒரு பாதையை நிர்மாணிக்க வேண்டியிருக்கிறது. காங்கிரஸ் போராட்டக் காலத்திலே துன்பத் துயர்களுக்குப் பாத்திரமாகிவிட்டவர்களுக்கு ஐந்து ஏக்கரா வீதமாக அந்த மலையைப் பங்கு போட்டுக் கொடுப்பதென்றும் முடிவாகி யிருக்கிறது. அதனால்தான் திட்டத்தின் முதல் கட்டமாகப் பாதை நிர்மாணம் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

மேனன் அவர்கள் தம்மை அறியாமலேயே சொல்லிவிட்டார்கள்: ''ஐயோ! இது பெரிய தந்திரந்தான் மிஸ்டர் நாயர்!''

ராமகிருஷ்ணன் நாயர் சிரித்தார். அவ்வளவுதான். அது அப்படி யென்றோ, இப்படியென்றோ அவர் சொல்லவில்லை. மனத்திலே பட்ட தைத் திறந்து சொல்லும் சுபாவமுடையவர் மிஸ்டர் மேனன். காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு மலையைப் பங்கு போட்டுக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள் என்று சொல்லிக் கேட்டபோது, அவருக்குத் திடீரென ஏற்பட்ட தரும ரோஷத்தின் பகிரங்கமான பிரதிபலிப்பாக இருந்தன அந்த வார்த்தைகள்:

''நாட்டைக் குட்டிச்சுவராக்கினவர்களுக்கா இப்படிக் கொடுப்பது? இதென்ன கூத்து? திட்டத்தின் பெயரால் அவர்களுக்குப் பாதைகூட நிர்மாணித்துக் கொடுக்கவேண்டுமா? இது நன்றாயிருக்கிறது கதை!''

ராமகிருஷ்ணன் நாயர் தந்திர பூர்வமாகச் சொன்னார்: ''இதை அமலாக்காமல் இருக்க ஒரு வழி உண்டு.''

மேனனுக்கு ஆவலேதான்: ''என்ன?''

''நிறுத்தி வைக்கப்பட்ட பணிகளை உடனடியாகத் துவக்கவேண்டு மென்றும், இல்லாவிட்டால் விவசாய முன்னேற்றத்தை அது தடுத்து விடுமென்றும் சொல்ல நமக்கு உரிமை இருக்கிறது.''

மேனன் கேட்டார்: ''மந்திரி சபை அதை மறுத்து விட்டால்? அந்தத் திட்டத்தையே ஏற்றுக்கொள்வதாக இருந்தால்?''

ராமகிருஷ்ணன் நாயரிடம் வேறு தந்திரங்களும் இருந்தன: ''அவசியம் ஏற்பட்டால் நிதி இலாக்காவினரைக் குறுக்கிடவைக்கலாம்.''

மேனன் அவர்கள் சிறிது நேரம் யோசித்தார். அவருடைய மனம் மாறுதலடைந்ததுபோல் தோன்றியது.

''அவர்கள் எப்படி வேண்டுமானலும் செய்துகொள்ளட்டும். நாம் எதுக்காக அதிலெல்லாம் சென்று தலையிடவேண்டும்?''

நடைமுறைகளைப் பற்றிய உறுதியான அறிவு படைத்த ராமகிருஷ்ணன் நாயர் கூறினர்: ''அதுக்காக நாம் அவர்களுக்கு வழி சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்போது பிரச்னை எளிதாகிவிடும்.''

மேனனின் மனம் மாறியது.

''போகட்டும் மிஸ்டர் நாயர்! எல்லாம் நாசமாய்ப் போகட்டும். நாம் எதுக்காக இந்தப் புலி வாலைப் பிடிக்கவேண்டும்? எது வேண்டுமானலும் நடக்கட்டும்.''

ராமகிருஷ்ணன் நாயர் முகத்திலே அசடு வழிந்தது. அவர் அசட்டுச் சிரிப்புச் சிரித்தார். தம்முடைய காரியதரிசி பிடியிலிருந்து நழுவினர். சகதியிலே கால் வைத்ததுபோல் அவருக்குத் தோன்றியது. தம் உதவிக் காரியதரிசி ஊட்டிக்காடு மலைப் பாதை நிர்மாணத்தைத் தடுத்து நிறுத்தத் தமக்கு வழிமுறைகளைச் சொல்லித் தந்தார் என்று ஒருவேளை மிஸ்டர் மேனன் ஏனைய காரியதரிசிகளிடம் கூறினலும் கூறலாம். அப்படிக் கூறினல் அது ஆபத்தாக வந்து முடியும். எனவே காரியதரிசி மிஸ்டர் மேனன் மூலமாக இந்த விஷயத்தில் ஏதாவது செய்தே தீரவேண்டுமென்று ராமகிருஷ்ணன் நாயருக்குத் தோன்றியது. இன்னொரு புதிய காரியத்தைக்கூட அவர் சொல்ல விரும்பினர்.

மேனன் கேட்டார்: ''என்ன அது?''

''அந்தத் திட்டம் நீண்ட நாளைக்கு அமலாகாமல் இருந்துவிடும்.''

அதனல் என்ன என்று பொருள்படும்படியாக, மேனன் அவர்கள் ராம கிருஷ்ணன் நாயர் முகத்தையே பார்த்தார். ராமகிருஷ்ணன் நாயர் கூறினர்: ''ஏராளமான மரங்கள் உள்ள மலை அது. அந்த மரங்களை வெட்டி ஆற்று வழியாகத்தான் இறக்கிக்கொண்டு வரமுடியும். மரங்களை வெட்டத் தொடங்கினல் அது முடியும் வரையில் அணையைக் கட்ட முடியாது. மரங்களை வெட்டியெடுக்கும் கான்டிராக்டைப் பெற்றிருப் பவர்கள் பெரிய காங்கிரஸ் பிரமுகர்களாக இருப்பார்கள். தண்ணீர் இல்லாமல் ஆற்றை விட்டுவைக்க அவர்கள் ஒப்புக்கொள்வார்களா? எனவே திட்டம் அமலாகாமல் போய்விடும்.''

அது அவ்வளவு பெரிய பிரச்னை அல்ல என்ற முறையில் மேனன் சொன்னார்:

''வேண்டாம், அமலாகவேண்டாம், நமக்கு என்ன நஷ்டம்? எவ்வளவு காலமாக, அது அமலாகாமல் இருக்கிறது? இன்னும் ஒரு நூற்றாண்டு இப்படியே இருந்துவிட்டுப் போகட்டுமே.''

ராமகிருஷ்ணன் நாயருக்கு இனிச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. மேனன் தொடர்ந்து கூறினார்: ''நீங்கள் எதுக்காக இப்படிக் கவலைப்படுகிறீர்கள்? நம்முடைய குடும்பப் பிரச்னையா, இது? நம்முடைய கஞ்சியில் மண் விழாமல் பார்த்துக்கொண்டால் போதும். அதைப் பாருங்கள்! அதுவே போதும்.''

ஒரு பெரிய தவறு செய்துவிட்ட மனப்பான்மையுடன் ராமகிருஷ்ணன் நாயர் அலுவலகத்திலிருந்து வெளியே வந்தார். அப்படித் திறந்து சொல்லியிருக்கக்கூடாது. காரியதரிசி மேனன் தவறுகப் புரிந்துகொண்டிருப்பார். சிறுகச் சிறுகச் சொல்லக் கூடாதனதையெல்லாம் சொல்லியாகி விட்டது. இன்னொரு வகையில் சிந்தித்துப் பார்த்தால் அதெல்லாம் சொல்லக்கூடாதவையா? இத்தகைய ஊழல்களைத் தொடர்ந்து செய்ய அனுமதிப்பது சரிதானே? ஓர் உத்தியோகஸ்தர் என்ற முறையில் இந்தத் தேசத்திடம், தேச மக்களிடம் தமக்கு எந்த விதமான பொறுப்பும் இல்லையா? ஆனால், இந்த அமைப்பிலே அத்தகைய பொறுப்பைப்பற்றிய உணர்வு அபாயகரமானது. இதனால் பல ஆபத்துக்கள் தம்மை வந்தடையலாம். இனிமேல் இந்தக் காரியதரிசியிடம் உறவாடும் சந்தர்ப்பங்களில் சரியான முன்னெச்சரிக்கையுடன் இருந்துவரவேண்டும்.

அலுவலகத்திலிருந்து வெளிக் கிளம்பினால் மிஸ்டர் மேனன் சிறிது தூரம் நடந்து செல்வார். இது அவருடைய ஒரு வழக்கம். அன்றைய தினமும் அவ்வாறு நடந்து வந்தார். அன்று இரவு முழுதும் தூக்கமின்றி வேலை செய்யவேண்டியிருந்தது. நடையைப் போக! அதுதான் அன்றைய கவலை. திடீரென அன்று ராமகிருஷ்ணன் நாயர் பேசியதெல்லாம் அவர் நினைவுக்கு வந்தது. வேண்டுமானால் தடுத்து நிறுத்தமுடியுமென்று நாயர் கூறினார்; அதற்கான வழிமுறைகளைப்பற்றியும் சமிக்ஞை செய்து காட்டினார். ராமகிருஷ்ணன் நாயர் எதற்காக அப்படிக் கூறினார்? தடுத்து நிறுத்தவேண்டுமென்ற நோக்கம் ஏற்படக் காரணம் என்ன? . . . அவர் திருவாங்கூரைச் சேர்ந்தவர். அப்படித் திடீரென அவரை நம்பமுடியுமா? தம்மை ஆபத்துக்குள்ளாக்கும் நோக்கம் அவருக்கு இல்லை என்று எப்படி நம்பமுடியும்? மேனனின் சிந்தனை இவ்வாறுதான் செயல்பட்டது. திருவாங்கூர் உத்தியோகஸ்தர்கள் ஏமாற்றும் பேர்வழிகள்! அவர்களுடைய நோக்கம்பற்றி அறிந்து கொள்ள முடியாது. ஒருவேளை இது ஒரு நீண்ட கயிறாக இருக்கலாம்.

மேனனுக்குக் காங்கிரஸ்மீது வந்த ஆரம்பப் பற்று தூல் இருந்ததில்லை. கொச்சி ராஜ வம்சத்தினர் சம்ஸ்தானத்தை இழந்தது காங்கிரஸினால்தான்.

மேனனின் தந்தையார் *இரண்டு வருடமாவது ஆட்சியை நடத்து வார் என்று அன்னை அடிக்கடி சொல்லி வந்தாள். மேனன் அந்தக் காலத் தைப்பற்றிய இன்பக் கனவைக்கூடக் கண்டிருக்கிறார். காங்கிரஸ்காரர்கள் செய்வதற்கெல்லாம் முட்டுக்கட்டை போடுவதென்றால், அது அவருக்குப் பிரியமான காரியந்தான். ஆயினும் அதுதானே இப்போது ஆட்சி நடத்துகிறது? அவர்களே ஆத்திரமூட்டாமல் இருப்பதுதான் நல்லது.

மேனன் வீட்டை அடைந்தபோது குழந்தைகள் பொறுமை இழந்து காத்திருப்பதைக் கண்டார். புதல்வி சொன்னாள்:

''அப்பாவுக்கு ஞாபகமே இல்லே.''

''ஊம்? அதென்ன?''

''சினிமாவுக்குப் போகச் சீக்கிரமா வந்துடறேன்னு சொல்லித்தானே போனீங்க?''

''சினிமா! சினிமா! இன்னைக்குச் சினிமா கினிமா எதுவும் கிடையாது. வேலே இருக்கு. செய்யாட்டிப் போனு வேலே போயிடும்.''

பாருக்குட்டியம்மா வாசலுக்கு வந்து கேட்டாள்: ''தினசரி வீட்டுக்கு வரும்போது இப்படி வேலே போயிடும், வேலே போயிடும்னு சொல்றீங்களே; என்ன இது?''

மேனன் சற்றுக் கடுமையான குரலில் கூறினார்: ''இன்னைக்குத் தினசரி சொல்லற மாதிரியல்ல. வேலே போயிடும்னு, இன்னைக்கு வேலே போயிடும்னுதான் பொருள். இப்போ இங்கே என்னைத் தாங்கி நிற்க தேசமங்கலம் நம்பூதிரிப்பாடு இல்லே. அதுதான், உங்க அப்பா! தெரியுமோல்லியோ?''

''எதுக்காக எங்கப்பாவைப்பற்றிச் சொல்லறீங்க?''

''ஆ . . . அது அப்படித்தான். இன்னைக்கு லைவல்களைப் பார்த்துத் தான் திரணும். மிக முக்கியமான விஷயம். இல்லாவிட்டால் வேலே போய் விடும்.'' மேனன் விஷயங்களை விளக்கிக் கூறினார். அப்போது இன்னொரு விஷயம் பாருக்குட்டியம்மாவுக்கு நினைவு வந்தது.

''இப்போ இங்கே அந்தப் பொதுவாளும், வாரியரும், குஞ்ஞிப்பாலு வும் சேர்ந்து வந்திருந்தாங்க. உங்க இலாக்காவிலே ஒரு டைபிஸ்டு இருக்காளே—என்ன அவ பேரு?—ஆமாம் சுகேசினி! . . . அவளைத் திருமணஞ் புரத்துக்காரியான ஒரு லேடி கிளார்க்கு அடிச்சாளாம்!''

மேனன் சிறிது திகைப்புடன் கேட்டார்: ''எப்போ? எங்கே?''

''மத்தியானத்தில் கேட்டிலே . . .''

''அவங்க ஏன் என்கிட்டே சொல்லலே?''

''தூங்கிக்கிட்டிருந்தீங்க.''

---

*கொச்சி ராஜ குடும்பம் மிகப் பெரியது. வயதிலே முதிர்ந்தவர்தான் அங்கே ஆட்சி நடத்துவார். அறுபது வயதுக்குக் குறைந்தவர்கள் அங்கே ஆட்சி நடத்தவில்லே என்றே சொல்லலாம். ஆடவர்கள் நூறுக்குமேல் இருந்திருக்கிறார்கள். ஆட்சி பீடத்தில் ஏறும் போதே வயோதிகர்களாக இரண்டு வருடம் மூன்று வருடமென்றுதான் ஆட்சியில் இருப் பார்கள். (மொ—ர்.)

''காரணம்?''

''என்னமோ காதலாம்!''

குஞ்ஞிசங்கர மேனன் சிறிது நேரம் யோசித்துவிட்டுக் கூறினர்: ''அதெல்லாம் நடக்கும். நடக்காமல் இருக்கமுடியாது. இந்தத் திருவனந்தபுரத்துக்கு வந்தா கொச்சிக்காரங்களான ஆண்கள் பெண்க ளாயிடுவாங்க. அடிவாங்குவாங்க. சந்தேகம் இல்லே. கொச்சி மகாராஜா துரோகம் பண்ணினார். இந்தக் காங்கிரஸ்காரங்கதான் இதுக்கெல்லாம் காரணம். இது ஆரம்பந்தான். இனி ஒவ்வொருத்தருக்கா வேலேகூடப் போயிடும்.''

பாருக்குட்டியம்மா கேட்டாள்: ''அதென்ன?''

''அது அப்படித்தான். இதோ இப்பத்தான், எங்க உதவிக் காரியதரிசி இருக்கானே, அவன் எனக்கே வேட்டு வைக்கப் பார்த்தான். அவன் ரொம்பவும் கெட்டிக்காரன். எல்லா விஷயங்களும் அவனுக்குத் தெரி யும். அடாடாடா! அவன் தந்திரம் எப்படி இருக்கிறதுங்கறே? சிவசிவ சிவா! *வடக்குந்நாதன்தான் நேரான பாதையைக் காட்டித் தந்து காப் பாற்றினான். இன்னேக்கு ஸ்நானமும் சாப்பாடும் சீக்கிரம் முடியணும். இன்னேக்குத் தூக்கமில்லே பாருக்குட்டீ, தூக்கமில்லே!''

சினிமாவுக்கு மறுநாள் போகலாமென்று பாருக்குட்டியம்மா குழந்தை களிடம் கூறி ஆறுதலளித்தாள்.

கண்டுபிடிக்கச் சிறிது நேரம் பிடித்ததென்றாலும், ஃபைல் வீட்டிலே தான் இருந்தது. அதைக் கட்டவிழ்த்து வைத்துவிட்டுக் கண்டிப்பான குரலிலே அவர் மனைவியிடம் கூறினர்: ''கேட்டியா, பாருக்குட்டீ, ராத்திரி ரொம்ப நேரமாயிட்டாக்கூட என்னே வந்து தொந்தரவு பண்ணக்கூடாது. சொல்லி வைக்கிறேன். இன்னேக்கு இந்த ஃபைல் மட்டுமல்ல; முடிந்த அளவு எல்லாவற்றையும் பார்த்துத் தீர்த்திடணும்னு நினேக்கிறேன். வந்து படுத்திடுங்கன்னு சொல்லி என்கிட்டே வரக் கூடாது. நீ நல்லாப் படுத்துத் தூங்கிடு!''

* * *

மேனன் அவர்களுடைய, சாஸ்தமங்கலத்திலுள்ள வீட்டின் மேல் மாடியில் அன்று இரவு முழுவதும் விளக்கு வெளிச்சம் காணப்பட்டது. அன்று அவர் ஃபைலைக் கட்டவிழ்த்து முன்னால் வைத்துத் தூங்கவில்லே. தூக்க மயக்கத்திலே பாதி மூடிய கண்களுடன் இருக்கவில்லே. கண்ணிலே எண்ணெய் ஊற்றிக்கொண்டு விழிப்புடன் பணியாற்றிக்கொண் டிருந்தார். பல ஃபைல்களே அவர் பார்த்து முடித்தார்.

---

* வடக்குந்நாதன்—திருச்சூர் பெரிய கோவில் தேவன். கொச்சி ராஜ குடும்பத்தின் குல தெய்வங்களில் ஒன்று. (மொ—ர்.)

பிரத்தியேகமான மகிழ்ச்சியுடன்தான் அவர் மறுநாள் அலுவலகத்துக்குச் சென்றார். பல்வேறு ஃபைல்களோ அந்த அந்த இடங்களுக்குத் தள்ளிவிட அவரால் முடிந்தது. ராமகிருஷ்ண நாயரையும் சூப்பிரண்டையும் வரவழைத்து, பெரிய சாதனைகளைப் புரிந்துவிட்ட தோரணையில் கூறினார்:

''நாயர், இதெல்லாம் அவ்வளவு பெரிய பிரச்னைகளே அல்ல. இரண்டு நாள் பல்லைக் கடித்து உட்கார்ந்துவிட்டால் செய்து முடிக்கக்கூடிய காரியங்களேதான். ஆனால் ஒரு விஷயம் . . . ச்சோ . . . கண்கரிக்குது. . . நேற்றைக்கு இமையே கூட்டல்லே.''

ஏதாவதொன்று சொல்லவேண்டுமே, அதற்காக ராமகிருஷ்ணன் நாயர் சொன்னார்: ''பாக்கியிருக்கிறதெல்லாம் பார்த்து முடிக்கணும்னு முடிவெடுத்துவிட்டால் அப்புறம் அது முடிந்துவிட்டதுபோலத்தான்.''

மேனன் அதை ஒப்புக்கொண்டார். ''பார்த்து முடிக்கவேண்டிய ஃபைல்கள் உங்க வீட்டில் உண்டா?''

''அதிகம் இல்லை.''

மேனன் அவர்கள், தம் இலாக்காவைக் கண்டிப்பான முறையில் நடத்திச் செல்லத் தீர்மானித்துவிட்டார்.

''அவற்றை எல்லாம் இன்றிரவே பார்த்து முடித்துக் கொண்டு வாருங்கள். எந்த ஒரு ஃபைலும் பார்த்து முடிக்கவில்லை என்று நம் முடைய இலாக்காவில் இருக்கக்கூடாது. 'ஐடியல், அப் டு டேட்' என்று இருக்கவேண்டும். பாக்கியிருப்பதைத் தீர்த்துவிட்டால் அப்புறம் என்ன இருக்கிறது? எல்லாரிடமும் சொல்லுங்கள், ஒரு காகிதமாவது பார்த்து முடிக்காமலிருப்பது கூடாதென்று. நான் ரெஜிஸ்டரைச் 'செக்' பண்ணப் போகிறேன். ஃபைல்கள் ஏதேனும் பார்த்து முடிக்காமல் இருப்பதாக என் கண்ணுக்குப் பட்டால், அப்புறம் . . . அவ்வளவுதான், சும்மா விடமாட்டேன்.''

இவ்வாறு கண்டிப்பான ஒரு நடைமுறைக்கு அவர் ஏற்பாடு செய்து விட்டார்.

இதயச் சுமை இறங்கிவிட்டது. புதிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. பிராஜக்டு ஃபைலை எடுத்துக்கொண்டு தலைமைக் காரியதரிசியைச் சென்று பார்த்தால் என்ன? அப்புறம் அதைப் பொதுப்பணித் துறைக்கு அனுப்பிவைப்பது. அடுத்த விநாடியிலேயே 'சென்று பார்' என்று மனம் தூண்டியது.

ஆனால் தலைமைக் காரியதரிசியின் முன் வந்து நின்றபோது, வந்திருக்கவேண்டியதில்லை என்று மேனனுக்குத் தோன்றியது. குறிப்பிடத்தக்க வகையில் சீஃப் அவர்களுடைய முகத் தோற்றத்திலோ நடத்தையிலோ, மேனனுக்கு அத்தகைய ஓர் எண்ணத்தை ஏற்படுத்தும்படியான மாறுதல் ஏதும் காணப்படவில்லை. ஆயினும் மேனனுக்கு அப்படித் தோன்றியது. எதற்காக வந்தோம்? தலைமைக் காரியதரிசி அதைத்தான் கேட்டார்:

''என்ன மிஸ்டர் மேனன்?''

''. . . குறிப்பிட்டுச் சொல்ல ஒன்றுமில்லை . . . ஒரு சந்தேகம்... அந்தப் பிராஜக்டு சம்பந்தமாக . . . ''

''சம்பந்தமாக . . .?''

தாம் அறிவுத் திறமையுடன் ஒரு காரியத்தைச் செய்து முடித்திருக்கிறோம் என்ற முறையில் மேனன் கூறினார்: ''ஏராளமான பணத்தை முதலீடு செய்யவேண்டிய திட்டம் இது. நான் இதை நான்கு கட்டங்களாகப் பிரித்திருக்கிறேன். முதற்கட்டம் மலைமீதுள்ள போக்குவரத்துப் பாதை நிர்மாணம். அப்புறம் மற்றவை. தனித்தனியாக அவற்றைச் சிபாரிசு செய்யவில்லை . . . ''

இதிலே அவ்வளவு தூரம் அறிவுத் திறமை என்னதான் செயல் பட்டிருக்கிறதென்று தோனிக்கும் முறையில் ரிஃப் செக்ரடரி சொன்னார்: ''ஆமாம். அப்படித்தானே செய்யவேண்டியிருக்கிறது? போக்குவரத்தைச் சரி செய்யாமல் அந்த மலைமீது, வனந்தரத்தில் ஏதாவது செய்ய முடியுமா?''

மேனன் சிறிது முட்டாளாகி விட்டார். அவர் ஒரு விளக்கம் கொடுக்கத் தயாராகிவிட்டார்.

''இல்லை. அதை ஒட்டு மொத்தமாகச் சிபாரிசு செய்யவேண்டுமா என்பதுதான்.''

''அதற்கு என்ன? முதற்கட்டத்திலிருந்து செய்து தீர்க்கப்படும். நீங்கள் ஒட்டு மொத்தமாகச் சிபாரிசு செய்துவிடுங்கள்!''

முந்திய நாள் ராமகிருஷ்ணன் நாயர் சொன்னதில் ஏதோ ஒரு தந்திரம் இருந்திருக்கவேண்டுமென்று மேனனுக்குத் தோன்றியது. தம்மை வஞ்சிக்கவே அவ்வாறு சொல்லியிருக்கவேண்டும். தம் அதிருஷ்டத்தை அவர் பெரிதும் பாராட்டிக் கொண்டார். அப்புறம் சொன்னார்: ''நான் இங்கே வந்ததன் நோக்கம் அது மட்டுமல்ல. ஐந்தாண்டுத் திட்டம், பொதுப்பணித் துறை, நிதி ஆகிய இலாக்காக்களின் தலைவர்களும் தலைமைக் காரியதரிசி அவர்களும் பங்கெடுத்துக்கொள்கிற சம்மேளனங்களைத் தேவையானபோது நடத்துவதாயிருந்தால்—ஒருமித்த கருத்துடன் செயலாற்றிட முடியும் அல்லவா?''

தலைமைக் காரியதரிசி சொன்னார்: ''நல்ல யோசனைதான் மிஸ்டர் மேனன்! அந்தமாதிரி நடத்த வேண்டுமென்று சர்க்கார் ஏற்கனவே தீர்மானித்திருக்கிறது.''

காங்கிரஸ்காரர்களுக்கு ஊட்டிக்காடு மலையைப் பதிவு செய்து கொடுப்பது விஷயமாகக் கேட்டிருக்கலாமென்று திரும்பி வந்தபோது தான் மேனனுக்குத் தோன்றியது. ஐந்தாண்டுத் திட்ட இலாக்காக் காரிய தரிசி அதைப்பற்றி அறிந்திருக்க வேண்டியவர்தான். பதிவு செய்து கொடுத்துவிட்டால், அப்புறம் திட்டத்தை நிறைவேற்றும்போது சில இடையூறுகள் ஏற்படலாம். அதைக் கேட்காமல் வந்தது நன்றுகிவிட்ட தென்று பிறகு திடீரென ஓர் எண்ணம் அவருக்குத் தோன்றியது. என்ன ஆனாலும், ராமகிருஷ்ணன் நாயருக்கு ஏதோ ஒரு கெட்ட நோக்கம் இருந்

திருக்கிறதென்ற விஷயத்தில் மேனனுக்கு இப்போது சந்தேகமே கிடையாது. அவர் சொன்னதெல்லாம் சரிதான் என்று வைத்துக்கொண்டாலும் அரசாங்கத்துக்கு இடையூறு விளைவிக்கலாமென்று சொன்னதன் நோக்கம் என்ன? இடையூறுகளை விளைவிக்கிற கேள்விகளை எழுப்பினால், அத்தகைய குறிப்புக்களை எழுதியனுப்பிவிட்டால், சிபாரிசுகளைச் செய்தால், அவற்றின் விளைவுதான் என்ன? அரசாங்கத்தின் கோபத்துக்கு இலக்காகிவிடுவது தானே? அந்தக் கோபத்தை உருவாக்கிவிடுவது தானே, அவருடைய நோக்கம்? என்ன ஆனாலும் சரி, ராமகிருஷ்ணன் நாயரை நம்பவேண்டாமென்ற முடிவுக்கு வந்துவிட்டார் மிஸ்டர் மேனன்.

மேனன் தலைமைக் காரியதரிசியைச் சந்திக்கப் போன சமயத்திலிருந்தே நாயருக்குப் பகீரென்றிருந்தது. எந்த ஒரு விஷயத்திலாவது உறுதியோ, நிர்ணயமோ இல்லாத, வெறும் மாயாடியான அந்த மனிதர், முந்திய நாள் தாம் சொன்ன விஷயங்களை யெல்லாம் காரியதரிசியிடம் கொட்டி யளந்திருப்பாரோ? இல்லாவிட்டால் எதற்காக இப்போது காரியதரிசியிடம் போனார்? அந்தப் பயந்தான் நாயருக்கு. அவர் தமக்கு ஏற்பட்ட பலவீனத்தைச் சபித்துக்கொண்டார். மன நிர்மதிக்காகப் பொதுப்பணித் துறை இலாக்கா உதவிக் காரியதரிசியான சுகதனை நோக்கி விரைந்து சென்றார். சுகதன், ராமகிருஷ்ணன் நாயரைக் குறை கூறினார்:

''நீங்கள் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காகவே அந்தத் தகவல்களை நான் உங்களிடம் கூறினேன். நீங்கள் அதையெல்லாம் அந்த அறிவு கெட்ட முட்டாளிடம் எதுக்காகச் சொன்னீர்கள்?''

ராமகிருஷ்ணன் நாயர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

''அப்படி நேர்ந்துவிட்டது. மிக முக்கியமான ஒர் அறிவிருந்திருந்திட்டம் குட்டிச் சுவராக வேண்டாம் என்று எண்ணினேன்.''

''நாட்டுப் பற்றுதல் அல்லவா?''

ராமகிருஷ்ணன் நாயர் சொன்னார்: ''ஒரு விஷயத்தைச் சொல்லாமல் விட்டுவிட்டது, பெரிய அதிருஷ்டந்தான். அவர்கள் எல்லாருமாகச் சேர்ந்து ஊட்டிக்காடு மலையைத் தேயிலைத் தோட்டமாக மாற்றிவிடப் போகிறார்கள் என்பதைப்பற்றி நான் அவரிடம் சொல்லவில்லை. அதைக் கூடச் சொல்லியிருந்தால் தகராறுதான். அவர் அவசியம் நல்லமைக் காரியதரிசியிடம் சொல்லியிருப்பார்.''

சுகதன் ஆறுதல் அளித்தார்: ''நீங்கள் நினைப்பதுபோல் ஒன்றுமில்லை. வஞ்சிக்கவேண்டுமென்று மனப்பூர்வமாகப் பொய் சொல்லமாட்டார். அவர் ஒரு முட்டாள். அதனால் இன்னதைச் சொல்லலாம், இன்னதைச் சொல்லக்கூடாது என்று பகுத்துப் பார்க்கும் திறமையற்றவர் என்றே சொல்லவேண்டும். அந்தக் கூலியில் நம் திருவாங்கூர்க்காரர்கள்தான் வல்லுநர்கள். அவர்களுக்குப் பயப்படுவதுபோல் அவருக்குப் பயப்பட வேண்டாம். என்ன நடக்கிறதென்று பார்ப்போமே.''

சுகதன் சொன்னது சரிதான். ஆயினும் ராமகிருஷ்ணன் நாயர் சொன்னார்: ''முட்டாளான இந்தக் கொச்சிக்காரன் கீழே உத்தியோகம் பார்ப்பதைவிடச் சும்மா இருந்துவிடலாம்போல் தோன்றுகிறது. செக்ஷனில் ஒரே களேபரந்தான். குமாஸ்தாக்கள் எந்த வேலையும் செய்வதில்லை.''

சுகதன் கேட்டார்: ''எந்தச் செக்ஷனில்தான் வேலை நடக்கிறது? எல்லாம் ஒன்றுதான். கொச்சிக்காரன் கிடைத்தது உங்கள் அதிருஷ்டம் என்று எண்ணிக்கொள்ளுங்கள். மனப்பூர்வமாகத் துரோகம் செய்ய மாட்டான். அதற்கான திறமை இல்லாததனால்தான். நம்மவர்கள் விஷயத்தைப்பற்றிச் சிறிது சிந்தித்துப் பாருங்கள்! அப்புறம் குமாஸ்தாக்களைப் பற்றித்தானே? அரட்டையடிக்கத்தான் அவர்களுக்கு நேரம் சரியாயிருக்கும்.''

சுகதன் தொடர்ந்து கூறினார்: ''பொறுத்திருங்கள். காரியதரிசி மேனன் தலைமைக் காரியதரிசியிடம் ஏதாவது சொல்லியிருப்பார் என்று எண்ணிப் பயந்து சாகறீங்களே?''

ராமகிருஷ்ணன் நாயர் ஒரு விஷயத்தை நன்றாகச் சிந்தித்து முடிவு கட்டி வைத்திருந்தார்.

''அவர் ஏதாவது தொந்தரவைக் கொடுத்தால், நான் அவரைத் தப்பியோடிவிட முடியாத சுருக்கிலே மாட்டி வைப்பேன். அது மட்டும் உறுதி.''

அத்தியாயம் 34

தியாகிகளுக்கு மானியம்

காங்கிரஸின் கோட்டயம் மாவட்டக் குழு அலுவலகம். பெரிய கட்டடம். அங்கணத்திலே பத்துப் பதினைந்து கார்கள். அலுவலகத்துக்குள் அசாதாரணமான ஜனக்கூட்டம். அலுவல்களோ அனந்தம். ஜனங்கள் வருவதும் போவதுமாக இருந்தனர்.

போராட்டக் காலத்தில் அடக்குமுறைக்கு இரையானவர்களுக்கும், சிறை சென்றவர்களுக்கும், பல்வேறு துன்பங்களுக்கு உள்ளானவர்களுக்கும் உதவிகள் வழங்க அரசாங்கம் ஒரு திட்டத்தைத் தீட்டியிருந்தது. ஊட்டிக்காடு மலையில் ஒவ்வொருவருக்கும் ஐந்து ஏக்கரா வீதமாக நிலத்தைப் பதிவு செய்து கொடுப்பதுதான் அந்தத் திட்டம். அதற்கான மனுக்களை மாவட்டக் குழு அலுவலகத்தில் சமர்ப்பிக்கவேண்டும். அந்த மனுக்கள்மீது மாவட்டக் குழுத் தலைவர் தம் கருத்தை எழுதி வைக்க வேண்டும். அந்தக் காரியத்தைச் சாதிப்பதற்காக மனுதார்கள் வருகிறார்கள், போகிறார்கள்.

மிகவும் களைப்படைந்த ஒரு மனுதாரர் இருமியவாறு அந்த அங்கணத்துக்கு வந்து சேர்ந்தார். அங்கே நின்ற கார்களைக் கண்டு அவர் திகைப்படைந்தார். உள்ளே சென்றார். அங்குள்ள அத்தனை பேர்களும் கதராடை அணிந்தவர்கள். ஒருவர்கூட அவருக்கு அறிமுகம் இல்லை. எல்லாரும் காங்கிரஸ்காரர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. சிலர் காந்திக் குல்லாய் அணிந்திருந்தனர்.

சம்ஸ்தான காங்கிரஸின் ஆரம்பக் காலத்திலிருந்தே தொண்டனாகப் பணியாற்றி வந்தவர் இந்த மனுதாரர். காங்கிரஸ் கொடியை உயரத் தூக்கிப் பிடித்தவாறு கோஷங்களைக் கோஷித்துக்கொண்டு நடக்கிற ஒரு தொண்டனாக மட்டும் இருந்தார். அவர் பெயர் சங்கரப்பிள்ளை. மீனச்சில் தாலுக்காவிலுள்ள ஒரு கிராமந்தான் சொந்த ஊர். பலமுறை சிறை சென்றிருக்கிறார். சிறைக்குள்ளும் வெளியிலும் அடி உதை பட்டிருக்கிறார். எவ்வளவுதான் அடிபட்டாலும் கண்ணீர் சிந்துவது அவர் பழக்கம் அல்ல. 'பாரதமாதாகீ ஜய்' என்று கோஷிப்பதுதான் வழக்கம். இப்போது உடம்புக்குத் தள்ளாமை ஏற்பட்டிருக்கிறது. ஒரு சிறு கூரை வீடும், அந்த வீடு நிற்கிற மனையுமே அவரது சொத்து. ஒரு வயோதிகத் தாயும், தம்மைப் பின்பற்றி அரசியல் இயக்கத்திலே குதித்து விட்ட தம் தம்பியும் மட்டுந்தான் அவருக்கு உற்றவர்களாக இருந்து வந்தனர். எம்முறையில் பார்த்தாலும் உதவிக்குத் தகுதியுள்ளவர் சங்கரப்பிள்ளை.

வரவேற்பு அறையின் மூலையிலுள்ள ஒரு பெஞ்சிமீது அமர்ந்தவாறு, அங்கு வருவோர் போவோரைக் கவனமாகப் பார்த்துக்கொண் டிருந் தார் சங்கரப்பிள்ளை. அவர்களில் ஒருவனுவது சிறையில் வாடி வதங்கிய வனுகத் தோற்றம் அளிக்கவில்லை. ஒருவனையாவது அடி உதைபட்டு நலிந்தவனென்று சொல்ல முடியாது. ஒவ்வொருவனுக்கும் என்ன சுறு சுறுப்பு! சிரிப்பும் விளையாட்டுந்தான். காரியம் கைகூடிவிட்ட களை தான் முகத்திலே. துயரம் என்னவென்று தெரியாதவர்கள்தான் அவர்கள். சிறிது நேரத்துக்குப் பிறகு பழைய நண்பர் ஒருவர் அங்கே வந்து சேர்ந் தார். ராமன் *இளையது என்று ஒருவர். மூவாற்றுப்புழைக்காரர். அவருங்கூடப் போராட்டத்தின் துவக்கம் முதற்கொண்டே தொண்டனுக மட்டும் இருந்து செயலாற்றி வந்தவர். சங்கரப்பிள்ளையுடன் சிறையில் இருந்திருக்கிறார். இளையது சங்கரப்பிள்ளையை நோக்கி வந்தார்.

இளையதுவின் உடம்பு சங்கரப்பிள்ளையுடையதுபோல் தளர்ந்திருக்க வில்லை. உபயக்ஷேமங்களை விசாரித்த பின் சங்கரப்பிள்ளை கேட்டார்:

''இவங்கல்லாம் யாரு?''

இளையது சொன்னுர்: ''இவங்கல்லாம் மனுதாரர்களும், மனுதாரர் களுக்குச் சிபாரிசு செய்ய வந்தவர்களுந்தான். முன்பு ஒருமுறை, நமது நாராயணன் நாயர்சாரின் சிபாரிசுக் கடிதத்துடன் நான் இங்கு வந் திருந்தேன். அன்றும் இங்கே பெரிய கூட்டமாயிருந்தது. மாலை வரைக்கும் காத்திருந்த பிறகே தலைவரைக் காண முடிந்தது.''

ஒரு சிறு இருமலுடன் சங்கரப்பிள்ளை கேட்டார்: ''அப்புறம், இவங்கல்லாம் உள்ளே போய்ப் பார்க்கருங்களே?''

''அவர்களுக்கெல்லாம் சிபாரிசும் செல்வாக்கும் உண்டு. காரியம் சாதிக்கவேண்டியது நமக்குத்தானே?''

சங்கரப்பிள்ளை எதைப் பார்த்து வியப்புற்றிருந்தாரோ, அந்த விஷயம் கேள்வியுருவாக அவரிடமிருந்து வெளிக் கிளம்பி வந்தது:

''இவங்களிலே ஒருத்தனையாவது ஊர்வலங்களிலோ சிறையிலோ நீங்க பார்த்ததுண்டா?''

இளையதுகூட அதைப்பற்றிச் சிந்தித்தவர்தான். ஒருவனையாவது அந்த நிலையிலே பார்த்ததில்லை.

''அப்புறம் இவங்க எப்படித் தியாகிகளாகருங்க?''

இளையது வாழ்க்கை நடைமுறைகளை நன்கு தெரிந்துகொண்டவராகப் பதிலுரைத்தார்:

''நண்பனே, அதைப்பற்றி ஒன்றும் கேட்க வேண்டாம். வாய் திறக்க வேண்டாம். நம்முடைய காரியம் பலிக்குமா என்று மட்டும் பார்த்தால் போதும்.''

---

* இளையது: நாயர் வகுப்பினரின் புரோகிதர். நம்பூதிரி பிராமண வகுப்பிலிருந்து தரம் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்தவர். (மொ–ர்.)

இளையது அடக்கமான குரலில் சங்கரப்பிள்ளையின் காதருகே முணு முணுத்தார்: ''இந்தத் தலைவர்கூடப் போராட்டக் காலத்தில் எங்கிருந் தார்? அதைப்பற்றி நமக்கெல்லாம் தெரியுமே. இன்றைக்குக் காந்திக் குல்லாய் அணிந்து நடக்கிறார். அன்றைக்குக் கள்ளுக்கடை கான்டிராக்ட ராக இருந்தவர்தானே? குண்டர்களுக்குக் கள்ளைக் கொடுத்துக் கற்களை வீச வைத்துப் பொதுக்கூட்டங்களைக் கலைத்தவர்தானே? அப்படிப்பட்ட ஒரு பொதுக்கூட்டத்திலே தடியடிபட்டல்லவா, என் கை ஒடிந்து விட்டது?''

இளையதுவின் நடைமுறை வழியைப் பின்பற்ற சங்கரப்பிள்ளையால் முடியவில்லை. அவருடைய இரத்தத்துக்குச் சூடேறிவிட்டது. யாருட னைவது மோதினால் என்ன? அப்புறம் நான்கு சொற்களை அள்ளி வீச வேண்டும். . . இந்தச் சிந்தனையின் விளைவு நீண்ட இருமல்தான். அந்த இருமல் அங்கே குழுமியிருந்தவர்களின் கவனத்தை ஈர்த்தது. மனக் கனிவு கொண்டவராய் இளையது சங்கரப்பிள்ளையின் புறமுதுகைத் தடவிக் கொடுத்தார்.

அப்போதுகூட ஆட்கள் வந்தவண்ணம் இருந்தனர். தலைவரின், மேல் மாடியிலுள்ள அறையை நோக்கிச் சென்றனர்; காரியம் கைகூடிய மகிழ்ச்சியுடன் திரும்பி வந்தனர்.

காங்கிரஸின் மாவட்டக் குழு அலுவலகம் ஜனசந்தடியற்றுக் கிடந்த நாட்கள் சங்கரப்பிள்ளையின் நினைவுக்கு வந்தன. தனிமையிலேயே அங்கே பல நாட்கள் தங்கியிருந்திருக்கிறார். அன்று அங்கே நேரடியாகப் புகுந்து வர மக்கள் பயந்திருந்தனர்.

இளையது கேட்டார்: ''நீங்கள் விண்ணப்பம் செய்துகொள்ள வில்லையா?''

''கொடுத்திருக்கிறேன். தலைவர், அன்னைக்கு ஒரு நாள் பாலாய்க்கு வந்திருந்தபோது நேரடியாய்ப் பார்த்துப் பேசவும் செஞ்சிருக்கிறேன். ஆனாலும் என் விஷயத்திலே ஒரு கோளாறு இருக்கு.''

இளையது வியப்புடன் கேட்டார்: ''கோளாறு? உங்கள் விஷயத்திலா? உங்கள் விஷயத்தில் கோளாறு என்றால், அப்புறம் யார் விஷயத்திலே கோளாறு இல்லாமல் இருக்கும்?''

சங்கரப்பிள்ளை சொன்னார்: ''அது . . . அப்படித்தான் ஏற்பட் டிருக்கு.''

''எப்படி?''

சங்கரப்பிள்ளை அந்த விஷயத்தைப்பற்றிச் சொல்லத் தொடங்கினார்:

''எனக்கு ஒரு தம்பியுண்டு. சந்திரன். அவனை நீங்க பார்த்திருப் பீங்க. காங்கிரஸில் இருந்தவன்தான். இப்போ அவன் கம்யூனிஸ்டாயிட் டான். ஒரு பிரசங்கிகூட. கம்யூனிஸ்டுகள் மத்தியிலே நல்லா உழைக்கிறவனுங்கூட.''

இளையது கேட்டார்: ''அதற்கு நீங்கள் என்ன செய்வது?''

சங்கரப்பிள்ளை மேற்கொண்டு கூறினார்.

''என்றுதானே நீங்க கேக்கறீங்க? அன்னைக்கு மாவட்டத் தலைவரைப் பார்த்தபோது அவர் என்ன கேட்டார் தெரியுமா?''

இளையது தம் கருத்தைத் தெரிவித்தார்:

''இப்போது அவர்கள் பெரிய தொந்தரவைக் கொடுக்கிறார்கள். மறைந்திருந்து தாக்குதலைத் தொடுக்கப் போகிறார்களாம்!''

சங்கரப்பிள்ளை கூறினார்:

''அதுக்கு நான் என்ன பண்ணித் தொலைக்கறது? அவன்கிட்டே சொல்லிப் பார்த்தேன்; சண்டை போட்டுப் பார்த்தேன்; வீட்டைவிட்டு வெளியேறிடுன்னுகூடச் சொல்லிவிட்டேன்.''

சங்கரப்பிள்ளையின், அவர் தம்பியின் உண்மை நிலையை இளையதுவால் புரிந்துகொள்ள முடிந்தது. அவர் சொன்னார்: ''ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு லட்சியம் இருக்கும். அதிலிருந்து அவனை மாற்றிவிட, யார் தான் முனைந்து பார்த்தாலும் முடியுமா? நம் பிரச்னையையே எடுத்துக் கொள்வோம். அன்றைக்கு நான் காங்கிரஸிலே சேர்ந்தேன். *இல்லத்துக்கு வந்தேன். அப்பா என்னை அங்கிருந்து துரத்திவிட்டார். இல்லத்துக்குச் செல்ல முடியுமா? எனக்கு ஒரு வாத்தியார் வேலை தருவதாகப் பல தடவை வாக்குறுதி தந்திருந்தனர்! உங்களுக்கும் வேலை தருவதாக வாக்குறுதி தந்தார்கள் அல்லவா? அந்த வாக்குறுதிகளால் நம்மை மாற்றி விட முடிந்ததா? நாம் ஏன் மாறுமல் நின்றோம்? நமது லட்சியம்!''

சங்கரப்பிள்ளை ஒப்புக்கொண்டார். சந்திரன் தன்னுடைய லட்சியத்தில் உறுதியாக நிற்கிறான். போராட்டக் காலத்தில் தாய் அநுபவித்து வந்த துன்பங்கள்கூடச் சங்கரப்பிள்ளைக்கு அவ்வளவு பெரிய பிரச்னையாகப்படவில்லை.

''அதைப்பற்றி நினைக்கிறபோது இன்னைக்கு நான் படற அவஸ்தையைப் பார்த்து அவன் கவலைப்படறதில்லேன்னு, அதுக்கு அவனைச் சொல்லிக் குற்றம் இல்லே. சில சமயங்களிலே என்னோட பழைய காலங்களை நெனைச்சுப் பார்ப்பேன்.''

சங்கரப்பிள்ளை தம்பி விஷயமாக இவ்வாறு சொல்லி முடித்தார்.

''. . . அப்புறம். . . அன்றைக்குப் பாலாயிலே பிரசிடண்டைப் பார்த்தீர்களே, என்ன சொன்னார்? முடியாதென்று சொன்னார்?''

சங்கரப்பிள்ளை தெளிவாக்கினார்:

''அப்படிச் சொல்லலே. தம்பி கம்யூனிஸ்டாயிருப்பது ஒரு பெரிய தடைதான்னு சொன்னார். ஆனாக்கூட, 'ஆகட்டும், பார்க்கலாம்'னுதான் சொன்னார்.''

இந்தப் பிரச்னையில் சங்கரப்பிள்ளையின் தம்பியின் கொள்கைகளை எதற்காகப் பரிசீலித்துப் பார்க்கிறார்கள் என்பதுதான் இளையதுவின்

---

* நம்பூதிரிகள், இளையதுகள் முதலிய மேற்குடிகளின் வீடுகளுக்கு இல்லம் என்று சற்று அந்தஸ்தோடு கூறுவார்கள். (மொ–ர்.)

கேள்வி. அவரால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. சங்கரப்பிள்ளை சொன்னார்: ''அதைப்பற்றி யார் கேக்கறுங்க? யாரிடம் கேக்கறுங்க?''

சங்கரப்பிள்ளை இப்போது வந்திருப்பது, தம்முடைய பிரச்னை சம்பந்தமாக ஏதாவது முடிவெடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறியத்தான். இதுவரையில் அத்தகைய முடிவேதும் எடுக்கப்படவில்லை என்றால், இப்போது அப்படிச் செய்யத் தகுந்த சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கண்களில் கண்ணீர் மல்கச் சங்கரப்பிள்ளை கூறினார்: ''நான் . . . நான் . . . என் தம்பியை வீட்டிலேருந்து துரத்தி அனுப்பிச்சுட்டேன்.''

அவர் விசும்பி விசும்பி அழுதார்: தொடர்ந்து இருமிக்கொண்டிருந்தார்.

அந்த மனிதனுக்குத் தம் வாழ்க்கையில் உற்ற உறவினன் என்று சொல்ல அந்தத் தம்பி ஒருவன் மட்டுந்தான் இருக்கிறான். அவனை வளர்த்து வாலிபனுக்கியது அவரேதான். இந்த ஐந்து ஏக்கர் நிலத்துக்காக அவர் அவனை வெளியேற்ற வேண்டியதாகிவிட்டது. இப்போது நோயாளியாகிவிட்ட அந்த மனிதனின் இதயம் வெடித்துக் கொண்டிருக்கிறது.

சங்கரப்பிள்ளை அந்தச் சம்பவத்தை எடுத்துரைக்கத் தொடங்கினார். ஆனால் தொடர்ச்சியாக வெடித்தெழுகிற அழுகையின் விசும்பல் களினூடே அவரால் பேசமுடியவில்லை. ''நண்பனே, வேண்டாம்; வேண்டாம். என்னால் அதைப் புரிந்துகொள்ளமுடியும்.'' இளையது குறுக்கிட்டார்.

ஆயினும், சங்கரப்பிள்ளைக்கு அதைப்பற்றிச் சொல்லியே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருந்தது.

''அவன் கம்யூனிஸ்டு ஆனால் என்ன? அன்பு சுரக்கும் மனம் கொண்டவன். எனக்கு முன்னால் நின்னு பேசமாட்டான். ஒரு நாளைக்கு அவன் வீட்டுக்கு வந்தபோது, 'போடா வெளியே?'ன்னேன்; அந்த வீட்டுக்குள்ளே காலெடுத்து வைக்கப்படாதுன்னேன். என்னோட நாக்கு அப்படிச் சொல்ல எப்படி இசைந்ததுன்னு எனக்குத் தெரியாது. ஏதாவதொரு காரணம் வேணுமே. அப்படிச் சொல்லணும்னு நான் நெனைச்சுக்குவே இல்லே. திடீர்னு சொல்லிட்டேன். அவன் அழுது அழுன்னு அழுதுக்கிட்டு வெளியே போய்விட்டான். என் அருமை இளையதுவே, என்னாலே நெனைச்சுப் பார்க்கவே முடியலியே? நான் என் குழந்தையை வீட்டிலேருந்து துரத்திட்டேன்.''

சங்கரப்பிள்ளைக்குச் சொல்ல இன்னும் விஷயங்கள் இருந்தன. ஆனால் சொல்ல முடியவில்லை. அவரை எங்ஙனம் ஆறுதலடையச் செய்வதென்று இளையது துன்புற்றார்.

சங்கரப்பிள்ளை மேலும் தொடர்ந்து பேசினார்: ''இப்போ யாரும் இல்லே; தனியாளா இருக்கிறேன். எனக்குப் பயமாயிட்டது. கம்யூனிஸ்டு கட்சி ஆபீசுக்கு ரெண்டு தடவை போனேன். உண்மையோ பொய்யோ,

அவன் எங்கிருக்கான்னு அவங்களுக்குத் தெரியாதாம். சர்க்கார் கொடுக்கிற இந்த நிலம் என்னத்துக்குன்னு நான் யோசிச்சேன்.''

''அப்படி நினைத்தால் முடியுமா? சாகிறவரைக்கும் வாழவேண்டாமா? இது ஒரு பிச்சைதான். உண்மையில் வருந்தத் தக்கதுகூட. இருந்தாலும் நம் போன்றோருக்கு வேறு வழி?''

சங்கரப்பிள்ளை மற்றொரு முடிவுக்குத்தான் வந்து சேர்ந்தார்.

''இந்தப் போராட்டத்துக்கும், அழகான பொதுவுடைமைக்கும் உழைத்துவிட்டு என் தம்பி ஒரு நாளைக்கு இருமியவாறு வெறும் கையோடு கட்டிய வேஷ்டியுடன் வீட்டுக்குத் திரும்பி வந்துடுவான். அன்றைக்கு அவனுக்கு உதவியளிக்க யாருமே இருக்கமாட்டாங்க. சுதந்தரத்துக்காக உழைத்துவிட்டு நாம் இப்போ இருக்கிறோம் இல்லையா, அதுபோல! அன்னைக்கு அவன் வரும்போது நான் சம்பாதிச்சு வச்சதாக ஏதாவது இருக்கிறதை அவன் பார்க்கணும். அதுக்காகத்தான் உடம்பு சரியில்லேன்னுகூட இங்கே வந்திருக்கிறேன்.''

ஒரு விநாடிக்குப் பிறகு சங்கரப்பிள்ளை உணர்ச்சி வசப்பட்டுக் கூறினார்: ''நான் என் தம்பியை விரட்டினேன். ஆனா அவன் ரொம்பமும் பிடிவாதக்காரன். சிறுசிலிருந்தே அப்படித்தான். அவனை ஒருமுறை பார்த்தாலே போதும்னு இருக்கிறேன்.''

ராமன் இளையதுவால் என்ன சொல்ல முடியும்? அந்த அன்புச் சகோதரனுடைய சோகத்தைக் கண்டு அப்படியே அமர்ந்துவிட்டார். ஆறுதலுக்காகச் சொன்னார்: ''இப்படிச் சோர்வடைய வேண்டாம். அவன் வந்துவிடுவான்!''

''வருவதாயிருந்தா வரட்டும். அவன் வரும்போது நான் சம்பாதிச்சதா ஏதாவது இருக்கணும். நான் இப்போ இங்கே வந்திருக்கிறது எதுக்குன்னு தெரியுமா? கம்யூனிஸ்டான என் தம்பியை வீட்டை விட்டு விரட்டினேன்னு சொல்லறதுக்காக. அப்படிப்பட்ட ஒரு தம்பி எனக்கு இல்லேன்னு இந்த நாக்கினாலே சொல்றதுக்காக. இப்படிச் சொல்ல என்னை எப்படி முடியுங்கிறீங்களா? மனச்சாட்சிக்கு வஞ்சனை செய்து இந்த நாள் வரையில் ஒரு வார்த்தைகூட உச்சரித்ததில்லே. இந்தக் கதராடை அணிஞ்சுக்கிட்டே நான் அதைச் சொல்லவேண்டியிருக்கு. இவங்க என்னை இப்படிச் சொல்ல வைக்கறாங்க, நண்பரே, சொல்ல வைக்கறாங்க!''

அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வந்தது. சிறிது நேரம் வரையில் நண்பர்கள் பேசாமல் இருந்தனர். அப்போது கூட அங்கே தியாகிகளும், அவர்களை அழைத்து வந்திருந்த பிரமுகர்களும் வந்து போய்க்கொண்டிருந்தனர். ஒட்டு மொத்தமாக அது ஒரு பெரிய ஊழல் கூட்டம்போல் இளையதுவுக்குக்கூடத் தோன்றியது.

கண்களைத் துடைத்துவிட்டுச் சங்கரப்பிள்ளை கேட்டார்: ''நீங்க விண்ணப்பம் கொடுத்திருக்கிறீங்களா?''

''கொடுத்திருக்கிறேன்.''

''தடை எதாச்சும் இருக்கா?''

''இல்லேன்னு நினைக்கிறேன். அந்த நாராயணன் நாயர் சார் இருக்காரே, உங்களுக்கு நினைவிருக்கா, அவரை? ஒரு சந்தர்ப்பத்திலே சண்டை போட்டுக் கான்டிராக்டு வேலை செய்யப் போனாரே, அவரை? அப்புறம் சுதந்தரத் திருவாங்கூர் இயக்கத்தை எதிர்த்து மீண்டும் காங்கிரசுக்கு வந்தாரே—அவரை நினைவிருக்கா?''

சங்கரப்பிள்ளைக்கு அவரைப்பற்றிய நினைவு இருந்தது.

இளையது தொடர்ந்து கூறினார்: ''அவரை அழைத்து வந்து நான் ஒரு முறை சிபாரிசு செய்ய வைத்தேன்.''

சோர்வடைந்த சங்கரப்பிள்ளை கூறினார்: ''அப்படி ஒரு மூணும் மனுஷனைக் கண்டுபிடிக்க என்னாலே முடியலை.''

இளையது சொன்னார்: ''நாராயணன் சாரை வைத்து ஒரு காரியத்தைச் சாதிக்க வேண்டுமென்றால், பெரிய செலவு செய்ய வேண்டியிருக்கும். முதலில் ஆளைக் கண்டுபிடிப்பதே பெரிய கஷ்டமான காரியம். பெரிய பெரிய கான்டிராக்டர்கள், அதிகாரிகள் எல்லாம் அவரை அழைத்துச் செல்ல கார்களை வரிசையாகக் கொண்டு வந்து நிறுத்துகிறார்கள். அவர் யாரிடம் போய்ச் சொன்னாலும் அந்தக் காரியம் கைகூடிவிடும். அதுதான் அவருடைய இப்போதைய நிலை. சரியான சுக்கிரதசைதான். இத்தனை ரூபாய் வேண்டுமென்று அவர் சொல்வார். ஒளிவுமறைவே கிடையாது. அதைக் கொடுத்துவிட வேண்டும். பிரச்னையைச் சமாளித்துத் தருவார். பெரிய பணக்காரராகி விட்டார்.''

சங்கரப்பிள்ளை கேட்டார்: ''நீங்க எதாச்சும் கொடுத்தீங்களா?''

''கொடுக்காமல் முடியாது. நானுக இருந்ததனால், என் நிலைமை அவருக்கு நன்றாகத் தெரிந்திருந்ததனால் கொஞ்சம் சலுகை செய்து தந்தார். ஐம்பது ரூபாய். இந்த விஷயத்துக்கு வழக்கமாக வாங்கும் தொகை இருநூறு ரூபாயும், கார்ச் செலவும். ஆனால் எனக்கு மொத்தம் எழுபத்தைந்து ரூபாய்தான் செலவாயிற்று.''

சங்கரப்பிள்ளை நெடுமூச்சுடன் கூறினார்: ''அருமையான காங்கிரஸ்! அதைவிட அருமையாயிருக்கு காங்கிரஸ் ஆட்சி!''

இளையதுவுக்கு நாராயணன் நாயரைப்பற்றி இன்னும் சில சொல்லத் தோன்றிற்று.

''கேட்டீங்களா சங்கரப்பிள்ளை, ஒரு முறையிலே பார்த்தால் நாராயணன் நாயர் சார் சொல்வதிலே தவறு இல்லை. எல்லாருமே கிடைத்த சந்தர்ப்பத்தையும், பதவியையும் 'பயன்படுத்திக் கொண்டு பணத்தை அள்ளியெடுக்கிறார்கள். ஆதர்சம், கொள்கை என்றெல்லாம் சொல்லி நடப்பது மடத்தனம் என்கிறார்கள். நினைத்துப் பார்த்தால் அது சரிதானே? சிலர் மட்டும் சும்மா ஆதர்சத்தைப்பற்றிக் கோஷிப்ப தனால் என்ன பிரயோஜனம்?''

சங்கரப்பிள்ளை கேட்டார்: ''நாராயணன் நாயருக்கு அவ்வளவு பெரிய செல்வாக்கு வந்துவிட்டதா?''

''ஹும்! எங்கே போனாலும் பெரிய செல்வாக்குத்தான். திரு—கொச்சி காங்கிரஸ் தலைவரான மிஸ்டர் லூக்கோஸினுடைய வலதுகை அல்லவா?''

இளையது அடக்கமான குரலில் கூறினார்: ''அவர் இந்தப் பதவியில் இருப்பதற்கு மூலகாரணம் யாரென்று நினைக்கிறீர்கள்? லூக்கோஸ் சார், காங்கிரஸ் தலைவராக வேண்டும் என்பதற்காக நாடு முழுதும் நடந்து உழைத்தவர் யார் என்கிறீர்கள்?''

இளையது மேற்கொண்டு தொடர்ந்து கூறினார்: ''எல்லா இடங்களிலும் சரியான செல்வாக்குத்தான். இப்போது சீஃப் செக்ரடரியின் குமாரத்திக்கு மாப்பிள்ளையைத் தேடி நடக்கிறார்.''

நாராயணன் நாயர் விஷயத்தில் இளையது சிறிது வாயாடியாகவே மாறினார். தவிரவும், அவருடைய செயல்களை நியாயமானதெனக் கூறவும் செய்தார். சங்கரப்பிள்ளை இந்தப் போக்கைக் கவனியாமல் இல்லை. நிலத்தைப் பெறுகிற விஷயத்தில் நாயர் அளித்திருக்கிற உதவி மட்டுந்தானா இதற்குக் காரணமென்று சங்கரப்பிள்ளை சந்தேகப் பட்டுக் கேட்டார்:

''உங்களுக்கும் அவருக்கும் நெருங்கிய நட்பு இருக்கும் போலிருக்கே?''

''அவ்வளவு நெருங்கிய உறவு கிடையாது. ஆனால் இல்லை என்று சொல்லவும் முடியாது. சில நபர்கள் சில சில்லறைக் காரியங்களைச் சாதித்துத் தரவேண்டுமென்று என்னிடம் வந்து சொன்னார்கள். திருவனந்தபுரத்துக்குச் சென்று அல்ல. இங்கே பேஷ்காரிடமும், போலீஸ் சூப்பிரண்டிடமும் . . . நான் அதைச் செய்து கொடுத்தேன். அதிகாரிகள் கேட்ட பணத்தை அவர்கள் கொடுத்தார்கள்.''

இளையதுவிடம், சங்கரப்பிள்ளைக்கு இருந்து வந்த மதிப்பு சிறிது குறைந்துவிட்டது. சிபாரிசு, லஞ்சம், ஊழல் என்ற சுழற் சக்கரத்தின் முக்கியமல்லாத ஒரு பகுதியாக அவரும் இருந்து வருகிறார். சங்கரப் பிள்ளை சற்று ஏளனத்துடன் கேட்டார்:

''இந்த ஏற்பாட்டில் உங்களுக்கும் ஏதாவது கிடைச்சுதா?''

இந்த மாதிரி கேட்கலாமா? இளையது சொன்னார்:

''ஐயா! சங்கரப்பிள்ளை, இப்படிக் கேட்கிறீர்களே? வாழ்நாள் முழுவதும் கதர் அணிந்து வந்தவன் நான். இந்த நாவினால் 'மகாத்மா காந்திகி ஜய்' என்றும், 'வந்தே மாதரம்' என்றும் கோஷித்தவன் நான்.''

''இல்லை. சும்மா கேட்டேன். அவ்வளவுதான்.''

''கேளுங்கள், சங்கரப்பிள்ளை! அவர்கள் இரண்டு மூன்று பேர்கள் என்னுடைய உதவியை நாடி வந்தனர். நான் அவர்களை அதிகாரிகளுக்கு அறிமுகப்படுத்திக் கொடுத்தேன். பிரதிபலனை எண்ணி அப்படிச் செய்யவில்லை. என்னால் இயன்ற உதவி என்ற முறையிலேதான். இந்த அதிகாரிகளிடம் நேரான வழியினூடே போனால் ஏதாவது காரியம் கைகூடுமா? ஒரு மனுவை நேரான பாதையினூடே அனுப்பிவைத்தால்

பலன் கிடைக்குமா? இந்தக் கோட்டிலிருந்து அந்தக் கோடுவரையில் நிலைமை அப்படியிருக்கிறது. எனவே, தத்துவங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தால் எந்தப் பிரச்னையும் நடக்காது. உலகமே அப்படித் தான்.'' ஒரு நெடுமூச்சு விட்ட பின்னர் அவர் மேலும் தொடர்ந்து கூறினார்: ''ஆனால், எனக்கு எந்த விதமான பலனும் ஏற்படவில்லை எனச் சொல்லமுடியாது. ஐம்பது ரூபாய்க்கு என்னுடைய பிரச்னையைச் சமாளித்துத் தருவதாகச் சொன்னது ஏன் என்று நினைக்கிறீர்கள்? என் மீதுள்ள அன்பினால்தான் என்று எண்ணி விடாதீர்கள். நான் பலமுறை சிறை சென்றதனாலோ, லாக்கப்பிலே சித்திரவதைக்குள்ளாயிருக் கிறேன் என்பதனாலோ மட்டும் அல்ல. என் காரணமாக நாயருக்குப் பணம் கிடைத்தது. அதனால்கூடத்தான். அந்த முறையிலே பார்த்தால் எனக்குக்கூட ஒரு பங்கு கிடைத்துவிட்டது என்று சொல்லிவிடலாம்.''

இளையது ஒரு முறை சிரித்தார். சங்கரப்பிள்ளை சிரிக்கவில்லை. அவர் தம் பரிதாபத்துக்குரிய நிலைமையைத் தெளிவுபடுத்தினார்:

''எழுபத்தைந்து ரூபாய் இருக்கட்டும், எழுபத்தைந்து காசுகூட என்னால் முடியாது. ஆனால், நான் ரொம்பப் பாடுபட்டவன். எனக்குக் கிடைக்குமா இல்லையான்னு தெரியணும். இல்லாட்டா வேணும்.''

பாவம்! இளையதுவால் என்ன சொல்ல முடியும்? சங்கரப்பிள்ளை ஒரு சவாலை எழுப்பியிருக்கிறார். அதற்கு இளையது என்ன பதில் சொல்வது? சங்கரப்பிள்ளைக்கு நிலம் கிடைப்பதென்றால் இளையதுவுக்கு மகிழ்ச்சியே தான்.

வந்து கொஞ்ச நேரமாகிவிட்டது. பேசிக்கொண் டிருந்தால் நேரம் போவது தெரியாது. பொழுது சாய்வதற்கு முன் சங்கரப்பிள்ளை ஊருக்குப் போய்ச் சேரவேண்டும். தலைவர் அறைக்குச் செல்வ தென்று அவர் தீர்மானித்துவிட்டார். அவசியம் ஏற்பட்டால், கோட்டயத்திலேயே தங்கிவிடுவதென்ற முடிவோடுதான் இளையது வந்திருக்கிறார். தலைவரைச் சௌகரியமாகப் பார்ப்பதுதான் காரியம் கைகூடுவதற்கு உகந்த வழியென்று அவருக்குத் தெரியும். சங்கரப்பிள்ளை அங்கே நுழைந்து சென்று சண்டையைக் கிளப்பிக் காரியத்தைக் கெடுத்துவிடுவாரோ என்று இளையது பயந்தார். சங்கரப்பிள்ளையின் நிலையைப் பார்த்தால் அப்படிப் பயப்பட வேண்டியிருந்தது.

''இப்போதே சென்று பார்க்கவேண்டுமா, சங்கரப்பிள்ளை? கூட்டம் கொஞ்சம் ஓயட்டுமே.''

''இப்போதைக்கு இந்தக் கூட்டம் ஓயறதாத் தெரியலே. எப்போதாச்சும் பார்க்கத்தானே வேண்டியிருக்கு? அது இப்போதே ஆகட்டுமே.''

சங்கரப்பிள்ளை மாடிப் படிகளில் ஏறிவிட்டார்.

* * *

தலைவருக்கு ஏராளமான அலுவல்கள். மேஜையைச் சுற்றியுள்ள நான்கைந்து நாற்காலிகளில் பிரமுகர்கள் வீற்றிருந்தார்கள். அவர்களுக்குப் பின்னல் பலர் நின்றுகொண்டிருந்தனர். அறை வாசலுக்கு வந்தபோது, சங்கரப்பிள்ளை தம் அழுக்கேறிய காந்திக் குல்லாயை எடுத்துத் தலையில் அணிந்தார். உண்மையான தொண்டனுடைய உடையிலேயே தலைவர் முன்னிலையில் நிற்கவேண்டுமென்று அவர் கருதினார்.

சங்கரப்பிள்ளை அங்கே நுழைந்தபோது, தலைவரைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் அவரை உற்று நோக்கினர். தலைவர் ஒரு மனுமீது தம் அபிப்பிராயத்தைக் குறித்துக்கொண்டிருந்தார்.

சிறிது நேரத்துக்குப் பிறகு அவர் சிரமுயர்த்திப் பார்த்தார். சங்கரப்பிள்ளை கரம் கூப்பி வணங்கிய பின் சொன்னார்:

''ஜய் ஹிந்த்!''

தலைவர் பதிலுக்கு வணக்கம் தெரிவிக்கவில்லை. ''ஜய் ஹிந்த்'' என்று உச்சரிக்க அவர் தயங்குவதுபோல் தோன்றியது. ஒருவேளை, ஒருபோதாவது, அந்தக் கோஷத்தை உச்சரிக்க அவருடைய நாக்கு இசையாமல் இருந்திருக்கலாம்.

சங்கரப்பிள்ளை மேஜையின் பக்கமாக நெருங்கிச் சென்றார். தலைவருக்குச் சங்கரப்பிள்ளை யாரென்று புரியவில்லை. அதிலே சங்கரப்பிள்ளைக்கு வருத்தம் இல்லை. அவர் தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டார்.

''நான் மீனாட்சிபுரம் சேர்ந்தவன். ஓர் அரசியல் தியாகி. காங்கிரஸின் ஆரம்பத்திலேருந்தே தொண்டனாக உழைச்சு வந்திருக்கிறேன். பதினேழு தடவை சிறை சென்றிருக்கிறேன். அடி உதைபட்டதன் காரணமாக ஒன்பது தடவை ஆஸ்பத்திரியிலே படுத்திருக்கிறேன். பெயர் சங்கரப்பிள்ளை.''

ஒரே மூச்சாகப் பேசி முடித்தார். சொல்லவேண்டியது எல்லாம் சொல்லித் தீர்க்கவேண்டும் அல்லவா?

தலைவர் கேட்டார்: ''மனுச் செய்திருக்கிறியா?''

''அனுப்பியிருக்கிறேன். முதலிலே அனுப்பியிருந்தேன். அப்புறம் பாலாயிலே ஒருமுறை சாரைப் பார்த்துப் பேசவும் செஞ்சிருக்கிறேன்.''

தலைவருக்கு ஞாபகம் வந்தது. அவர் கேட்டார்: ''ஆமாமாம், ஞாபகம் வந்தது. உன் தம்பி ஒரு கம்யூனிஸ்டு இல்லியா?''

''ஆமாம்.''

அப்போது, அங்கே கூடியிருந்தவர்களுக்கெல்லாம் ஆர்வம் பிறந்தது. அவர்கள் சங்கரப்பிள்ளையை மீண்டும் உற்றுப் பார்த்தனர். அன்றுவரை ஒரு கம்யூனிஸ்டை அவர்கள் பார்த்தது கிடையாது. ஒரு கம்யூனிஸ்டின் உடன் பிற்ப்பு அவர்கள் முன்னல் வந்து நிற்கிறது! ஆர்வத்துக்குரிய பொருள்தானே, அது?

தலைவர் உதவியற்றவர்போல் கூறினார்: ''நான் என்ன செய்வது? உனக்கு உதவவேண்டும் என்பதுதான் என் விருப்பம். ஆனால், என்ன செய்வது?''

சங்கரப்பிள்ளை சொன்னார்: ''அவனை நான் வீட்டிலேருந்து விரட்டி விட்டேன்.''

இந்த வாசகம் தம் வாயிலிருந்து வந்தபோது இதயத்தில் நெருப்புப் பற்றி எரிந்ததுபோல் அவர் துடித்தார்.

தலைவர் தமது உதவியற்ற தன்மையை மீண்டும் தெளிவாக்கினார்: ''தவறுகப் புரிந்துகொள்ளவேண்டாம். நான் உனக்கு எதிராக நிற்பதாக எண்ணவேண்டாம்.''

''அந்த நம்பிக்கையால்தான் நான் இங்கு வந்தேன்.''

தலைவர் சொன்னார்: ''உன்னுடைய மனுவை என் குறிப்புடன் அனுப்பி வைக்கிறேன். ஆனால், அதனால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடாது. போலீஸார் வந்து விசாரித்து ரிப்போர்ட் அனுப்பும்போது உன் தம்பி கம்யூனிஸ்டென்று எழுதிப் போடுவாங்க. இதோ பார்! நேற்றுக்கூட அவன் பேசி இருக்கிறான், 'மந்திரிகளின் இரத்தத்தினால் திலகமிடுவேன்' என்று.''

சங்கரப்பிள்ளை வியப்புடன் கேட்டார்:

''போலீஸ் ரிப்போர்ட்டா?''

தலைவர் பதில் உரைத்தார்: ''ஆம். இந்த மனுவைப் போலீஸ் ரிப்போர்ட்டுக்காக அனுப்பி வைப்போம். அவர்கள் வந்து விசாரிப்பார்கள். அப்போது உன் தம்பியைப்பற்றிக் குறிப்பிடுவார்கள். இங்கிருந்து அனுப்பி வைக்கிற ரிப்போர்ட்டும், போலீஸ் விசாரணை நடத்திவிட்டு அனுப்புகிற ரிப்போர்ட்டும் பரஸ்பரம் முரண்படுவதாயிருந்தால் அது நன்றாயிருக்குமா?''

சங்கரப்பிள்ளை வெறுப்பு, ஆத்திரம், சோர்வு ஆகிய உணர்ச்சிகளால் துடித்தவாறு கேட்டார்: ''இன்னமும் எங்களைப்பற்றிப் போலீஸ் விசாரணையும், சி. ஐ. டி. ரிப்போர்ட்டும் இருக்குமென்று சொல்றீங்க?''

இந்தக் கேள்வியில் அடங்கியிருந்த உணர்ச்சிகளைப்பற்றித் தலைவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏனென்றால், போலீஸ் விசாரணை, சி.ஐ.டி ரிப்போர்ட் என்றெல்லாம் சொல்லப்படுவது என்னவென்று அவருக்குத் தெரியாது. போராட்டக் காலத்தில் அவருக்கு அத்தகைய அநுபவங்கள் ஏற்பட்டிருக்கக் காரணம் இல்லை. அவர் சொன்னார்: ''சர்க்கார் காரியம் அல்லவா? அதற்குச் சில நியதிகளும், சடங்குகளும் இருந்து வருகின்றன.''

''அந்தச் சடங்கு முறைகளெல்லாம் இப்பவும் வேணுமா? இந்த விஷயத்திலேகூட வேணுமா?''

ஒரு சிறிய தாக்குதலைப்போல்தான், அந்தக் கேள்விக் கணையைத் தொடுத்துவிட்டார் சங்கரப்பிள்ளை. தலைவர் அவரை உற்றுப் பார்த்தார். அவர் கேட்டார்: ''வாதம் புரிய வந்திருக்கிறயா?''

சங்கரப்பிள்ளை விட்டுக் கொடுக்கவில்லை: ''ஆம்! அப்படி இருந்தாத்தான் என்ன? என்னைத் தவிர என் பிரச்னை குறித்து வாதிக்க யாரும் இல்லை. லஞ்சம் கொடுக்க என் கிட்டே பணம் இல்லை. சிபாரிசு செய்யவும் யாரும் இல்லை.''

ஒரு விநாடிக்குப் பிறகு மூச்சை விட்டவாறு அவர் மேலும் கூறினார்: ''அந்த முறைகளையெல்லாம் தகர்த்து எறியணுங்கறதுக்காகவே ஆரோக்கியமான உடம்பும் நல்ல மனப்பான்மையும் கொண்ட, என்னைப் போன்ற ஆயிரக்கணக்கானவங்க வாழ்க்கையையே தொலைத்துவிட்டு இன்னைக்கு இப்படி இருமி இருமிச் சாகிற நிலைக்கு வந்திருக்கிறோம். அதனால்தான் அந்த முறைகளெல்லாம் இன்னமும் இருக்கணுமான்னு உரிமையோடு கேட்டேன்.''

தலைவர் ஆணவத்தோடு சொன்னார்: ''அதெல்லாம் கேட்கவேண்டிய இடத்திலே போய்க் கேள்! இங்கே அதெல்லாம் கேட்க வேண்டாம்.''

கடுமையான ஏளனத்தின் அறிகுறியாக உதடுகளைக் கோணலாக்கிய வாறு சங்கரப்பிள்ளை பதில் அளித்தார்:

''ஆம். உங்களைப் போலவங்களாலே இப்படி ஞஞ்ஞமிஞ்ஞான்னு சொல்லத்தான் முடியும். இந்த ஸ்தாபனத்தைக் கட்டியுயர்த்த ஒரு வேர்வைத் துளியாவது நீங்க சிந்தியிருக்கிறீங்களா? இப்போது காற்று வாங்க ஒரு மின் விசிறி கிடைத்தபோது அதுக்குக் கீழே வந்து உட்கார்ந்திருக்கிறீங்க.''

அந்தப் பேச்சு சற்று அதிகமாகத்தான் இருந்தது. தலைவரால் தாங்கக் கூடியதாக இருக்கவில்லை. அவர் நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளி விட்டுத் துள்ளி எழுந்தார்: ''ச்சி! வெளியே போ!''

அந்த அறையிலிருந்தவர்கள் தயாராகிவிட்டார்கள். சங்கரப்பிள்ளை சொன்னார்: ''நீங்க கள்ளுக்கடைக் கான்டிராக்டராக இருந்தபோது குண்டர்களை ஏவிவிட்டுக் காங்கிரஸ் கூட்டங்களைக் கலைத்திருக்கிறீங்க. எனக்கு அது தெரியும். உங்களுக்கு இப்போதுகூடக் குண்டர்களைத் தயார் செய்ய முடியும்னு எனக்குத் தெரியும்.''

அங்கிருந்தவர்களில் ஒருவன் அவர்மீது முத்திரையைப் பதித்தான்: ''இவன் ஒரு கம்யூனிஸ்டு!''

சங்கரப்பிள்ளை அவனை நோக்கித் திரும்பினார்: ''நீயும் தியாகத்துக்கு மானியம் வாங்க வந்திருக்கிறியா?''

அவன் அணிந்திருப்பதும் கதராடைகள். அவன் முகம் சிறிது வெளி றிற்று. சங்கரப்பிள்ளை கேட்டார்: ''நீ சிறைக்குப் போயிருக்கிறியா? உதை வாங்கியிருக்கிறியா? என்ன தியாகம் பண்ணியிருக்கிறே?''

அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

''நான் . . . நான் . . . தலைமறைவு வாழ்க்கை நடத்தியிருக்கிறேன்.''

சங்கரப்பிள்ளை: ''ஓஹோ!''.

தலைவர் மீண்டும் சங்கரப்பிள்ளையிடம் வெளியே போகச் சொன்னார்: ''நீ இங்கே இப்படி ரகளை பண்ணிக்கொண் டிருந்தால் நான் போலீஸை வரவழைப்பேன். ஆமாம் . . . சொல்லிவிட்டேன்.''

சங்கரப்பிள்ளைக்குச் சிறிதும் சஞ்சலம் இல்லை.

''அதைக்கூடச் செஞ்சிடுங்க! அப்படிச் செஞ்சாத்தான் எல்லா மாச்சு! அப்போ என்னோட அஞ்சு ஏக்கரைக்கூடத் தலைமறைவா வாழ்ந்த வங்களுக்குக் கொடுத்திடலாம்.''

அவருக்கு உணர்ச்சி வேகந்தான். அதைத் தாங்கி நிற்கச் சக்தியில்லா மல் சொன்னார்: ''நீங்க போலீஸை அழைக்க வேணும். நானே போயிடறேன். ஆனா ஒரு விஷயத்தை மட்டும் உங்களிடம் சொல்லிட றேன். நான் கம்யூனிஸ்டு அல்ல. கம்யூனிஸ்டு ஆகவும் என்னால் முடியாது.''

சங்கரப்பிள்ளை கிளம்பினார். அறைவாசலை அடைந்தபோது ஏதையோ சொல்லத் திரும்பி நின்றார். அப்போது தலைவர் சொன்னார்: ''ரொம்ப ஜாக்கிரதையா நடந்துக்கோ! ஆமாம்!''

ஓர் அலட்சியத் தன்மையுடன் பதில் அளித்தார் சங்கரப்பிள்ளை: ''இனிமே என்ன ஜாக்கிரதை வேண்டிக் கிடக்குது, சார்?''

வாழ வழியின்றி ஏங்கித் தவிக்கிற அந்த மனிதர் ஒரு சில நிமிஷங் களில் தம் சென்ற கால வாழ்க்கை முழுதும் மதிப்பீடு செய்து பார்த்தார். வாழ வழியில்லை என்பது ஒருபுறம் இருக்கட்டும்; பயமுறுத் தல்களும் எச்சரிக்கைகளும் இன்னமும் தன்னைத் தொடர்ந்து வரு கின்றன. அதற்கு இவர்களை எல்லாம் ஏன் குறை கூறவேண்டும்? இவர்கள் ஏதேனும் தவறு இழைத்திருக்கிறார்களா? வாழ்க்கை முழுவதுமே ஒரு கடும் போட்டிதானே? சந்தர்ப்பங்களை நழுவ விடாதவர்கள் கெட்டிக் காரர்கள். நாட்டின் சுதந்தரத்துக்காக உழைத்தோம். இந்த ஐந்து ஏக்கர் நிலம் கிடைத்து விடுமென்று நினைத்துத்தானே, போர்களத்தை நோக்கிக் குதித்துச் சென்றோம்? ஏதாவது லாபத்தை அடைய முடியு மென்ற எண்ணம் இருந்ததுண்டா? அன்று அது ஆத்மாவின் அறைகூவல்! திரும்பப் பெற்றுவிடலாமென்றோ, முதலீட்டலாமென்றோ அன்று கருத வில்லை. கடமைகளைத்தான் நிறைவேற்றினோம். காங்கிரஸ் தலைவர் களுக்கும் தொண்டர்களுக்கும் மட்டுமாகவா காங்கிரஸ் போராடியது? நாடு முழுவதையும் தங்கள் கைகளுக்குள்ளே அடக்கி வைக்கலாமென்ற எண்ணம் இருந்ததா? . . . இந்தத் தலைவரும், இங்கே தியாகிகள் உடை யிலே வந்திருப்பவர்களும் எல்லாருமே இந்த நாட்டின் சந்ததிகள்தான். தங்களை மட்டும் பிரத்தியேகமாக மதிக்கவேண்டுமென்று கோருவதெல் லாம், புனிதமான இந்தக் குல்லாயிடமும், இந்தக் கதராடை யிடமும் காட்டுகிற அவமதிப்புதானே? அநியாயந்தானே? போராட் டத்தில் பங்கெடுத்தவர்கள் தனி மதிப்புக்குத் தகுதியுடைய ஒரு வர்க்க மாக மாறிவிடவேண்டுமா? சுதந்தரம் என்பது இந்த நாட்டின் எல்லாச் சந்ததியினருக்கும் உரிமையுள்ளதுதானே? அதற்காகப் போராடியவர் களுக்கு மட்டும் அல்ல, எதிர்த்தவனுக்கும் அதன் பலனை அடைய உரிமை உண்டு. தாம் சொன்னதெல்லாம் தவறாகி விட்டதென்று சங்கரப் பிள்ளைக்குத் தோன்றியது.

சிறிது தூரம் நடந்து சென்ற பின் அவர் திரும்பிப் பார்த்தார். காங்கிரஸ் அலுவலகத்தின்மீது அந்தக் கொடி பட்டொளி வீசிப்

பறந்தது. அவர் அதைத்தான் உயரத் தூக்கிப் பிடித்தவாறு நடந்திருக் கிறார். ஆனால், இன்று அதன் நிறம் சிறிது மாறிவிட்டிருக்கிறதென்று அவருக்குத் தோன்றியது.

சந்திரனை எங்கே சென்றுவது தேடிக் கண்டுபிடிக்க வேண்டுமென்று சங்கரப்பிள்ளைக்குத் தோன்றியது. ஒரு கம்யூனிஸ்டாகிவிட வேண்டு மென்பதற்காக அல்ல. சகோதர உறவை நிலைநாட்ட! அவனுடைய உரத்த குரலிலுள்ள கர்ணகடூரமான அந்த அலறல் தம் காதுகளுக் குள்ளே முழங்குவதாக அவருக்குத் தோன்றியது.

''இன்குலாப் ஜிந்தாபாத்!''

அவர்கூடச் சில கோஷங்களை முழக்கியிருக்கிறார். அன்று பலருக்கு அவை கர்ண கடூரமானவையாகவே இருந்திருக்கின்றன.

சங்கரப்பிள்ளை நடந்து நடந்து தூரப் போய் விட்டார்.

தலைவர் அந்த அறையிலிருந்தவர்களிடம் சொன்னார்: ''பாருங்கள்! என்னென்ன தொந்தரவுகள்! எத்தனை பேர்களுடைய திட்டுகளைக் கேட்க வேண்டியிருக்கிறது!''

ஒருவர் அனுதாபத்துடன் கூறினார்: ''பாவம்! ரொம்பமும் கஷ்டப்பட்ட வர்போல் தோன்றுகிறது. உடல் நலம் குன்றிவிட்டதனால்தான் ஆத்திரம் ஏற்படுகிறது.''

இன்னொருவன் சொன்னான்: ''பழகத் தெரியவில்லை. அவன் உதை பட்டிருந்தாலும், சிறை சென்றிருந்தாலும் ஆச்சரிப்படுவதற்கில்லை.''

வேறொருவனுடைய கருத்து முற்றும் மாறுபட்டது: ''இவன் உதை பட்டிருக்கிறான் என்றால் அது காங்கிரசுக்கு உழைத்ததனால் இருக்காது. வாயிலிருந்து விழுகிறதே, அந்தப் போக்கிரித்தனத்துக்காகத்தான் வாங்கிக் கட்டிக்கொண்டிருப்பான். அந்த நிலையிலே பார்த்தால் இவன் ஒரு தியாகியே அல்ல.''

எல்லாரும் சிரித்தனர். அதையடுத்துத் தலைவர் தம் கருத்தைத் தெரிவித்தார்: ''தியாகிகள் என்று சொல்லி வருகிற பழைய காங்கிரஸ் காரர்களெல்லாம் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள். மரியாதை இல்லாத வர்கள். அவர்கள் சொல்லிக் காட்டுகிற உரிமையோ . . . அப்பப்பா? நாலு உதை பட்டிருக்கிறார்கள் என்ற ஹோதாவிலேதான், இந்த மாதிரி திமிராகப் பேசுகிறார்கள். உதை வாங்குவதற்கு லாயக்கானவர்கள் தாம்.''

மற்றொருவன் கூறினான்: ''ரவுடிகள், போக்கிரிகள், மரியாதையில்லாத வர்கள், முட்டாள்கள் ஆகிய ரகங்களைச் சேர்ந்தவர்கள் அல்லவா, அன்றைய காங்கிரஸ்காரர்கள்? அந்தஸ்தும் அபிமானமும்உள்ளவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவுதானே? அப்புறம் இரத்தச் சூடுள்ள பையன்களும் . . .''

இவர்கள் எல்லாரும் கம்யூனிஸ்டுகள்தான் என்ற கருத்து தலைவருக்கு. அவர் சொன்னார்: ''இந்தப் பிச்சைக்காரர்களையெல்லாம் களைந்தெறிந்து விட்டு ஸ்தாபனத்தைச் சுத்தம் செய்யவேண்டும்.''

அத்தியாயம் 35

நெடுமூச்சுக்கள்

ஆசிரமத்தில் நான்கு பெண் துறவிகள்தான் இருக்கிறார்கள்; அவர்கள் தலைவி ஜோதிர்மயீ தேவிதான். பிரபாவதி, நித்தியானந்தமயீ, தேஜஸ்வரூபிணி ஆகியோர்தாம் ஏனைய மூன்று பேர்கள்.

பூஜை, பஜனை ஆகியவை தினசரி நடக்கிற சடங்குகள். மாலை வேளை பஜனைக்கு ஏராளமான ஜனங்கள் வருவார்கள். வாரத்தில் சில நாட்களில் பிரத்தியேகமான ஆத்மிகப் பிரசங்கங்கள், வேதாந்த சர்ச்சைகள், அகண்டநாம ஜப யக்ஞங்கள், கீதா விரிவுரைகள் ஆகிய ஏதாவது நடைபெறுவது வழக்கம். அடிக்கடி துறவிகள் வந்து ஆசிரமத்தைப் பார்வையிட்டுச் சென்றுகொண்டிருந்தனர். ஆசிரமத்தின் சார்பாக மத மாநாடுகளும் நடைபெற்றன. மொத்தமாகப் பார்த்தால், திருவனந்தபுரத்திலுள்ள அதிகார–பணக்கார வர்க்கத்தினுடைய ஆன்மிக வாழ்க்கையின் கேந்திரமாக அந்த ஆசிரமம் திகழ்ந்ததென்றே சொல்லலாம்.

தோத்திரங்களும், பக்தியுணர்ச்சியை ஊட்டுகிற கீர்த்தனைகளும் அங்கிருந்து கிளம்பி அக்கம்பக்கமெங்கும் ஆத்மிக ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தன. ஆனால், சற்று விலகி நின்று உற்றுப் பார்த்தால் அந்தப் பெரிய கட்டடம் நெடுமூச்சுக்கள் விடுவதாகத் தோன்றும். அது இத்தகைய நிலைமையிலிருந்து வரவேண்டியதல்லவென்று தழுதழுத்த குரலில் கூறுவதாகத் தோன்றும். ஓர் ஆசிரமமாக ஆக்கி விடுவதற்காக அது கட்டப்பட்டது அல்ல. அதற்கான அடிக்கல் நாட்டியது இன்னொன்றுக இருப்பதற்காகவும், ஒரு நல்ல மனிதரின் நினைவை நிலை பெறச் செய்வதற்காகவுமே. அவ்வழியே செல்கிறவர்களில் சிலராவது அந்தக் கதையைச் சொல்லியிருக்கக்கூடும். அவர்கள் இவ்வாறு ஆரம்பிப்பார்கள்: ''இந்தக் கட்டடத்தைக் கட்டியது யார் தெரியுமா? சொல்கிறேன் . . .'' அப்புறம் அந்தக் கதையைச் சொல்வார்கள். எந்த ஒரு மனிதனுடைய நினைவை நிலை பெறச் செய்ய அந்தக் கட்டடத்துக்குச் சேகரவிலாசம் என்ற பெயர் சூட்டப்பட்டதோ, அந்த நல்ல மனிதரான சேகரபிள்ளையின் ஆன்மா, அதன் இன்றைய நிலையைக் கண்டு சந்தோஷப்படுமா?

அது ஒரு வீடாக அமைவதற்காக எழுப்பப்பட்ட கட்டடம். சரியான தொரு வீடாக அமைவதற்காகத்தானே? சதியும் பதியும் அமர்ந்து அல்லது காதலியும் காதலனும் உட்கார்ந்து சல்லாப உரையாடல்களை

நிகழ்த்தத் திறந்த மாடியிருக்கிறது. அந்தக் கட்டடத்தில் அருமையான படுக்கையறைகள் உள்ளன. குழந்தைகள் அமர்ந்து வீட்டுப் பாடம் செய்யவும், படிக்கவும் தனித்தனியான அறைகளும் உள்ளன. அங்கே குழந்தைகள் பிறக்கவேண்டுமென்ற நோக்கம் அதை நிர்மாணித்த வருக்கு இருந்ததா? சாதாரண வீடுகளில் காணப்படாத வசதிகள், தேவையில்லாத வசதிகள் என்றே சொல்லவேண்டும், அந்த வீட்டில் இருக்கின்றன. கொல்லைப்புற வழியாக வரவும் போகவும் ஒரு வாசல் உண்டு. அந்தக் கட்டடத்தை உருவாக்கிய மனிதர் தம் சொந்த தேவைக்காகப் பிரத்தியேகமாகக் கட்டியதுதான் அந்த வாசல். கேசவபிள்ளை, யாரும் பாராமல், யாருக்கும் தெரியாமல் அவ்வழியே தான் வந்து போய்க்கொண்டிருந்தார். அவ்வீட்டு முன்னுலுள்ள பாதை வழியாகச் செல்பவர்களில் பத்துப் பேர்களாவது அந்தக் கதையைச் சொல்லாமல் இருக்கமாட்டார்கள்.

ஒரு கணவன் தன் மனைவிக்குக் கட்டிக் கொடுத்த வீடுதானு, அது? காதலன் காதலிக்கு அர்ப்பித்த வீடுதானு அது? வேண்டாம்; ஒரு வைப்பாட்டியின் அந்தஸ்தையாவது அந்த வீட்டின் சொந்தக் காரிக்கு அளிக்கமுடியுமா? அதுவும் வேண்டாம்; லஞ்சம் என்ற முறையில் கொடுக்கப்பட்டதென்றே, உதவிக்குப் பிரதிபலனுக அன்பளிப்பாக அளிக்கப்பட்டதென்றே சொல்லமுடியுமா? இவை அனைத்துமாக உருவெடுத்ததுதான் அந்தக் கட்டடம். இப்போது அதற்குத் தெளிவான ஒரு பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. ஆசிரமம்! பழைய தங்கம்மாவின் வாழ்க்கைக்கு இன்று துறவறம் என்று இலக்கணம் கூறப்பட்டதுபோல்!

இந்த மாறுதல் போற்றத்தக்கதுதான் என்று சொல்கிறவர்கள் இருக்கிறார்கள். அந்த வீட்டுக்கு அருள் வரப்பிரசாதம் கிடைத்திருக்கிறதென்றும், தங்கம்மா, மாதா ஜோதிர்மயீ தேவியாகிவிட்டாள் என்பது முன்பிறவியில் புரிந்த புனித தவத்தின் பயனுகத்தான் என்றும் நம்புகிறவர்கள் இருக்கிறார்கள். இவற்றுக்கெல்லாம் முரணுக அந்தப் பழைய கதையைச் சொல்லியவாறு நடந்து செல்கிற யாத்திரீகர் களும் இருக்கிறார்கள். அப்போதெல்லாம் அந்தக் கட்டடம் நெடு மூச்சுக்களை உதிர்த்துக்கொண்டிருந்தது. அந்தக் கட்டடத்துக்காக முதல் முதலாக நாட்டப்பட்ட அடிக்கல் வேர்வைத் துளிகளைச் சொட்டிக்கொண்டிருந்தது.

* * *

தேவி நித்தியானந்தமயீக்கு 'அழுகின்ற அன்னை' என்ற ஒரு பெயர் கூட இருந்தது. அந்தப் பெயர் சும்மா வந்துவிடவில்லை. மந்திர உச்சாரணத்தைக் கேட்கிறபோது அவளுடைய கண்களில் கண்ணீர் ததும்பி நிற்கும். பக்திப் பரவசத்தை அளிக்கிற கீர்த்தனை

கீளப் பாடத் தொடங்கும்போது அவளுடைய கன்னங்கள் வழியாகக் கண்ணீர் தாரை தாரையாகப் பிரவகிக்கும். பஜனையின் மேள தாளங்கள் உச்சகட்டத்தை அடையும்போது சிரத்தைக் குனிந்து, இரு கரங்களாலும் வதனத்தைப் பொத்தியவாறு விசும்பி விசும்பி அழுவாள். பஜனை அல்லது அகண்ட நாம யக்ஞம்—எதுவாக இருந்தாலும்—அது முற்றுப் பெறும்போது அவள் அப்படியே அமர்ந்து அழுதுகொண்டிருப்பாள். அந்தக் கண்ணீருக்கிடையிலே, விசும்பல்களின் மத்தியிலே அவள் எதை எதையோ வேண்டிக்கொண்டிருப்பாள். அந்த வேண்டுதல்களும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும். அவளுக்குத் தனியாகச் சொல்லவேண்டி இருந்த விஷயங்களைத்தான் அவ்வாறு வேண்டியிருக்கக்கூடும். அவை என்னவென்று இன்றுவரையில் யாருக்குமே தெரியாது. பகவானுடைய பாதாரவிந்தங்களில் எல்லாவற்றையும் சுயமாகச் சமர்ப்பணம் செய்வதாக இருக்கலாம். மண்டபம் ஜன சூன்னியமாகிவிட்டாலும் அவளுக்குத் தெரியாது. தேஜஸ்வரூபிணி அல்லது பிரபாவதி வந்து அவளைத் தட்டியெழுப்ப வேண்டியிருக்கும். அப்போது முகத்தைத் துடைத்துக்கொண்டு அவள் எழுந்து நிற்பாள். அந்தச் சந்தர்ப்பத்தில் இரத்த வண்ணம படர்ந்திருக்கிற அவள் வதனத்தைப் பார்த்து யாருமே அசந்துவிடுவார்கள்.

வேதாந்த பாடங்கள், மதப் பிரசங்கங்கள் ஆகியவை நடைபெறும் போதுகூட அவளுடைய கண்கள் நிறைந்துவிடுவது வழக்கம். அந்தக் கண்ணீர் அவளுடைய சோபையை அதிகரிப்பதாகவே தோன்றியது. பிரபாவதி தேவி என்ன சொல்கிறாள் தெரியுமா? கண்ணீர் விடுவது சற்று அதிகமாகப் போய்விடுகிறதென்று. அவளுடைய அந்தக் கண்ணீரையும், முகத்தைப் பொத்தி அமர்ந்து செய்கிற பிரார்த்தனையையும் பார்க்கும்போது, அதெல்லாம் நடிப்புத்தான் என்ற கருத்துக்கூடப் பிரபாவதி தேவிக்கு ஏற்படுவதுண்டு. பற்கள் வெளியே நீண்டு கறுத்து விகாரமான உருவமுடைய தேஜஸ்வரூபிணிக்கு மட்டும் நித்தியானந்தமயீயிடம் அநுதாபம் உண்டு. அவளுடைய கண்ணீரைப் பார்க்கும்போது, பிரார்த்தனை வேளையிலே லயித்து இறுகக் கடித்துப் பிடிக்கப்பட்ட பற்களினூடே அவள் சொல்லவேண்டியதைச் சொல்லும்போது, தேஜஸ்வரூபிணியின் கவனமெல்லாம் தோத்திரங்களிலோ, பாட்டிலோ, வேதாந்தப் பிரச்னைகளிலோ இருக்காது. மாறுக நித்தியானந்தமயீ மீதுதான் பதிந்து நிற்கும், தேஜஸ்வரூபிணி தன்னையே பார்த்தவாறு அமர்ந்துவிடுவாள். தேஜஸ்வரூபிணியின் கண்கள்கூட நனைந்து போய்விடுவதுண்டு. ஒருவேளை, அது அநுதாபத்தின் கண்ணீராக இருக்கலாம்.

இவ்வாறு, 'அழுகிற அன்னை'க்கு, தேஜஸ்வரூபிணி ஒரு தோழியாக இருந்தாள். மாதா ஜோதிர்மயீ தேவிகூட நித்தியானந்தமயீயைக் கவனித்து வந்தாள். ஆனால் மாதாஜி ஆனந்தமயீமீது அநுதாபம் கொண்டவளாகக் காணப்படவில்லை.

நித்தியானந்தமயீ அழகான பெண். இளமைப் பருவத்திலே அவள் கட்டழகியாக இருந்திருக்கவேண்டும். அவளுக்குப் பொருத்தமான ஒரு கணவரும் கிடைத்திருந்தார். இன்பம் கொஞ்சுகிற ஓர் இல் வாழ்வின் அனைத்துச் சூழ்நிலைகளும் இருந்தன. வாழ்க்கை இன்பத் தின் ருசி கண்டறிந்தவள்தான் அவள். அந்த ருசியைப் பருகத் துவங்கிய போதே விதி அதை மறுத்தது. கணவன் அனைத்தையும் துறந்துவிட்டுத் துறவியானான்.

இந்தக் கதையைப்பற்றிச் சிலருக்குக் கொஞ்சம் தெரியும். மாதா ஜோதிர்மயீ தேவி, பிரபாவதி தேவி ஆகியோருக்கு அந்தக் கதை யின் சில அம்சங்களைப்பற்றித் தெரியும். ஆனால், அவர்கள் அதைப் பற்றி அவளிடம் எதையும் கேட்டதில்லை. அந்தக் கணவன் அனைத்தை யும் துறந்து சென்றது, நித்தியானந்தமயீ ஏதோ தவறு இழைத்ததனால் தான் என்ற சந்தேகங்கூட அவர்களுக்கு இருந்து வருகிறது. அவர்கள் அதைப்பற்றி ஒன்றும் அவளிடம் கேட்காமல் இருப்பது அந்தக் காரணத்தினாலேயே இருக்கலாம். அந்தக் கரியநிழல் அப்படியே இருந்துவிட்டுமென்று எண்ணியிருப்பார்கள். அந்த வகையிலே பிரபாவதி தேவிக்கு ஆனந்தமயீயிடம் சற்று அநுதாபக் குறைவு உண்டா என்ற சந்தேகங்கூட இருந்துவருகிறது.

ஆனால் தேஜஸ்வரூபிணியின் கதை அது அல்ல. அவளை யாருமே ஒரு போதும் நேசித்ததில்லை. அவள் நேசிக்கத் தயாராக இருந்தாள் என்ற போதிலும், ஓர் ஆடவன்கூட அவளைத் திரும்பிப் பார்த்ததில்லை. சஞ்சலப்படுத்த முடியாத அவள் கண்களும், சிரிக்கத் திராணியற்ற அவள் இதழ்களும் சென்ற காலத்தில் சில சந்தர்ப்பங்களில் சஞ்சலப் படுத்தவும், புன்சிரிப்புச் சிரிக்கவும் முயன்றிருக்கலாமோ, என்னவோ! பிரபாவதி தேவிக்கு அவளைப்பற்றி மனத்திலே ஏளனந்தான். கடவுள் படைப்பின் பெருமை பாடும் உருவ அழகு இல்லாவிட்டாலும், கலை என்ற ஒன்று, சைதன்னியம் என்ற ஒன்று இருக்கவேண்டாமா? இது தான் அவளுடைய கருத்து.

தேஜஸ்வரூபிணியும், நித்தியானந்தமயீயும் ஆரம்பத்திலிருந்தே சிநேகிதிகளாகிவிட்டனர். குறிப்பிடத் தக்கக் காரணம் இருப்பதால் அப்படி ஆகிவிடவில்லை. வாழ்க்கை இரகசியத்தை இருவரும் பரஸ்பரம் பகிர்ந்துகொண்டனர். பகிர்ந்துகொள்வதற்கான பிரச்னைகள் இரு வருக்கும் இருக்கத்தானே செய்கின்றன? அவ்விருவரும் அவற்றை ஒருவரோடொருவர் பகிர்ந்துகொண்டனர்; ஒருவரை ஒருவர் நம்பினர்; சிறு விஷயங்களைக்கூட அறிந்துகொண்டனர். தேஜஸ்வரூபிணியால் நேசிக்கமுடியவில்லை என்கிற சோகமயமான உண்மையை, அதன் உண்மை உருவத்திலேயே ஆனந்தமயீயால் புரிந்துகொள்ள முடிந்தது. பெண்ணுக்குப் பிறவி எடுத்தது வீணாகிவிட்டது. நித்தியானந்தமயீ குற்ற வாளியல்ல என்பதைத் தேஜஸ்வரூபிணி முற்றும் உணர்ந்திருந்தாள். கணவன் துறவியாகியது மனைவிமீது வெறுப்பு ஏற்பட்டதனால் அல்ல

என்பதையும் அவள் அறிவாள். ஆனால், இன்னொருவர் அதை நம்பாமல் இருக்கலாம். அந்தத் துறவுபற்றிப் பலர் பல கதைகளைக் கூறினர்.

நித்தியானந்தமயீ அவ்வாறு லயித்துப் பிரார்த்தனை செய்வது எதற்காக என்று தேஜஸ்வரூபிணிக்குத் தெரியும். மறுபிறவியிலாவது இத்தகையதோர் அநுபவம் தனக்கு ஏற்படக்கூடாதென்று வேண்டுகிறாள் அவள். தேஜஸ்வரூபிணி பிரார்த்திப்பது எதற்காக என்றும் ஆனந்தமயீக்குத் தெரியும். மறுபிறவியில் இத்தகையதோர் அநுபவம் தனக்கும் ஏற்படக்கூடாதென்பதற்காகவே.

* * *

ஒரு நாள் இரவு. கெட்டிதட்டி நிற்கிறது இருள். அதைத் துளைத்துக் கொண்டு ஒரு கேள்வி தேஜஸ்வரூபிணியின் காதை நோக்கிச் சென்றது. அது ஆனந்தமயீயின் ஆன்மாவிலிருந்து கிளம்பியதுதான்.

''புருஷன் மனைவி இருவரும் சேர்ந்து துறவற வாழ்க்கையை நடத்தினால் என்ன?''

மறுகணத்திலேயே மற்றொரு வாசகம் அந்தக் கேள்வியைப் பூர்த்தியாக்கியது: ''துறவிகளாகவே இருந்தவாறு, ஒருவரை ஒருவர் நேசித்தவாறு, மனைவி, கணவனுக்குப் பாதபூஜை செய்தவாறு உணர்ச்சிகளுக்கு அடிமைப்படாமல்...''

ஒரு மணியோசை உருவம் பூண்டதுபோல், அந்தக் கேள்வி தேஜஸ்வரூபிணியின் இதயத்தினுடைய அடித்தளத்தில் அசைவுகளை ஏற்படுத்தியது. அவளால் உடனடியாகப் பதில் அளிக்க முடியவில்லை. ஆனந்தமயீ விடையை எதிர்பார்த்தாள். தேஜஸ்வரூபிணியின் மூளையிலே, அவள் அறியாமலேயே ஒரு பதில் உதித்தது. அவள் சொன்னாள்: ''நடத்தலாம். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரும், சாரதாமணி தேவியும் எங்ஙனம் வாழ்ந்தார்கள்?''

ஆனந்தமயீயின் ஆன்மா சிறிது குளிர்ந்தது. அங்ஙனம் வாழ்க்கையை நடத்தலாம். அவள் சொன்னாள்: ''நான் அதற்காகப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன். துறவற ஒழுக்கத்தை ஒருபோதும் மீற மாட்டேன்.''

அதன் பின்பே தேஜஸ்வரூபிணியின் எண்ணங்களும் அபிலாஷைகளும் உருவம் கொள்ள விரைந்தன. 'ஒரு பெண் துறவியை ஓர் ஆண் துறவி மணம் செய்துகொள்ளலாமா?' என்ற வினாவாகத்தான் அந்த அபிலாஷைகள் உருவம் கொண்டன. ஆனால், இன்னொருத்தி அந்த வினாவுக்கு விடையளிக்க வேண்டிய நிலைமை ஏற்படவில்லை. அவளாலேயே சொல்லிவிட முடியும்:

''கூடாது!''

துறவறமும் இல்லறமும் வெவ்வேறு. துறவற வாழ்க்கையில் திருமணம் கூடாது. ஆனால் இல்லறத்தில் துறவறம் இருக்கலாம் என்ற விஷயம் அவளுக்குத் தெளிவாயிற்று. இவ்வாறுதான், மறுபிறவியில் நிகழ

வேண்டிய வாழ்வுக்காக அவள் பிரார்த்திக்கத் தொடங்கினாள். ஆனந்தமயீ சிலநாட்கள் வரையில், அது இந்தப் பிறவியிலேயே நடைபெற வேண்டும் என்று வேண்டினாள். அப்புறந்தான் அடுத்த ஜனனத்துக்காக வேண்டிப் பிரார்த்திக்கத் தொடங்கியிருக்கிறாள்.

அது ஒரு பழைய கதை.

சர்க்கார் சர்வீஸிலே உதவிக் காரியதரிசி என்கிற அந்தஸ்து வரைக்கும் உயர்ந்துவிட்ட பிரபாவதி தேவி ஒரு சாதாரணப் பெண்ணாக இருக்கவில்லை. அவளுக்கு எல்லா விஷயங்களையும் பற்றிய அறிவு உண்டு. எந்தப் பதவியில் இருந்தாளோ, அந்தப் பதவியின் அந்தஸ்தையும் கௌரவத்தையும் காப்பாற்றிக்கொண்டு செல்ல அவளுக்குத் தெரியும். செய்வது எல்லாவற்றிலும் கணிசமான ஒழுங்கு முறையைக் கடைப்பிடித்து வந்தாள். கட்டளையிடுவதற்கான வல்லமையும், கட்டுப் பாட்டை அமலாக்குகிற வலிமையும் அவளிடம் காணப்பட்டன. ஒரு வேளை, தன் அந்தஸ்துக்கும், பதவிக்கும் ஏற்ற முறையில் ஒரு சிநேகிதி அங்கே இருந்திருப்பாள் என்றால், அவள் எதை விரும்பி வேண்டுகிறாள் என்று சொல்லியிருப்பாள். இன்று அதைப்பற்றி யாருக்கும் தெரியாது.

மாதா ஜோதிர்மயீ தேவி அங்கே உண்டு. ஆனால், சர்க்கார் உத்தியோக மட்டத்தில் அவள் ஒருபடி கீழே இருந்தவள்தான். பட்டதாரிணி அல்ல. பிரபாவதி தேவி பி.ஏ. படித்தவள். அவளுக்குக் கீழே செயலாற்ற வேண்டியிருந்ததில்லை என்றாலும், அந்தக் காலக் கட்டத்தில் அவ்வாறு நேர்ந்திருந்தால், ஜோதிர்மயீ மாதா, பிரபாவதி தேவியின் கட்டளைகளுக்கு இணங்கச் செயலாற்றவேண்டி இருந்திருக்கும். உத்தியோக வாழ்க்கைக்கு வெளியிலேகூட உண்மையில் அந்தப் பாகுபாடு இருக்கத்தானே செய்யும்?

பழைய தங்கம்மாவை அனைவருக்கும் தெரியும். உயர்மட்டம், கீழ் மட்டம் ஆகிய உத்தியோக வட்டாரங்களில் எல்லாம் பல தடவை அவள் பேச்சுக் கருவாக இருந்திருக்கிறாள். இன்றுகூடச் சிலர், சில சமயங்களில் அதைப்பற்றியெல்லாம் நினைக்கவும் செய்கிறார்கள். பிரபாவதி தேவி எப்போதுமே நினைத்து வருகிறாள். அதற்குக் காரணம் இருக்கிறது. ஆசிரம மாதாவாக இயங்கி வருபவள் மாதா ஜோதிர்மயீ தேவிதான். எல்லாவற்றையும் தீர்மானிக்கக் கூடியவள் அவளேதான். மற்றவர் களுக்கெல்லாம் யோசனை கூறும் உரிமைதான் உண்டு. முடிவெடுப்பவள் ஜோதிர்மயீ. உணவு விஷயத்திலிருந்து எல்லாவற்றுக்குமே அவள்தான் பெரிய அதிகாரி. சுவாமித் திருவடிகள் அந்தச் சின்ன சுவாமியுடைய யோசனைக்கிணங்க அவளை அந்தப் பதவியில் அமர்த்தியிருந்தார்கள். அந்தக் கட்டடத்தையும், மனையையும் நன்கொடையாக அளித்ததன் பேரில் அப்படி நிகழ்ந்திருக்கலாம்; அவளை அதிகாரியாக்கியிருக்கலாம். ஆயினும், அவளுடைய அதிகாரத்தை மறுத்துச் செயல்பட்டால் என்ன வென்று பிரபாவதி தேவி பலமுறை சிந்தித்ததுண்டு. அதற்கான காரண மும் உண்டு. சொந்த முயற்சியினால் சம்பாதித்த பன்னிரண்டாயிரம் ரூபாயை ரொக்கமாக எண்ணிக் கொடுத்திருக்கிறாள் பிரபாவதி தேவி.

அந்தப் பணம் எந்தத் தகாத முறையையும் பயன்படுத்திச் சம்பாதிக்கப் பட்டது அல்ல. நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஒரு தம்பிடிகூட யாரிடமிருந்தும் கைப்பற்றியதில்லை. இவ்வாறு, தனக்குக்கூட இந்த ஆசிரமத்திலே உரிமை உண்டு என்ற உணர்வு அவளிடம் அடிக்கடி ஏற்படுவதுண்டு. ஆயினும், ஆசிரமத்தின் நல்ல பெயருக்குக் களங்கம் ஏற்படக் கூடாதென்பதற்காக அவள் அவ்வுணர்வுகளையெல்லாம் கட்டுப் படுத்தி வந்தாள். சில சமயங்களில் இந்த மாதிரியான ஓர் இடத்திலே வந்து அகப்பட்டுக்கொண்டோமே என்று நினைத்து வருந்துவதும் உண்டு.

ஆசிரம மாதா என்றென்றும் இந்த அந்தஸ்திலேயே இருந்து வருவாள் என்ற நம்பிக்கை பிரபாவதி தேவிக்கு இல்லை. பழைய சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள அனுமானத்தினால் ஏற்பட்ட நம்பிக்கை அல்ல இது. மாதாஜி அத்தகையவள். ஒரு துறவியான பின்னருங்கூட அந்தக் காவித் துணியின் புனிதத் தன்மைக்கேற்ற முறையில் மாதாஜி நடந்துகொள்வதில்லை என்று பலமுறை பிரபாவதி தேவிக்குத் தோன்றியதுண்டு. தவிரவும், மாதாஜி தன்னையே மறந்துவிடுகிறாள் என்பது நிச்சயம்.

பிரபாவதி, மாதாஜியின் பழக்கவழக்கங்களைக் கூர்ந்து கவனித்து வந்தாள். காரணமின்றிக் கவனிப்பதல்ல. அதற்கான சந்தேகங்கள் பிரபாவதியின் மனத்திலே எழுவதுண்டு. அடிப்படையற்ற சந்தேகங்கள் அல்ல. இன்றுகூட அடங்காத மாமிச தாகத்தின் அறைகூவல் அவளது அந்தரங்கத்தில் அலை மோதுகிறதாம்! ஆசிரம மாதா உடுத்தியிருப்பது காவி நிறமுடைய பட்டுத் துணிகள்தான். அவ்வாறு அணிந்துகொள்ள லாம். ஆனால், அது எதற்காக என்ற கேள்விதான் எழுகிறது. மாதாஜி இன்று பவுடர் பூசுவதில்லை, சாந்துத் திலகம் அணிவதில்லை என்பதெல்லாம் உண்மைதான். விடியுமுன்னரே குளித்துவிட்டு, மற்றவர்களைப்போல் விபூதி அணிகிறாள். ஆனால், அங்ஙனம் விபூதி அணிய ஆசிரம மாதாவுக்கு அரைமணி நேரமாகிவிடுகிறது. அந்த விபூதி பிரத்தியேகமாக வடிக்கட்டி எடுத்து உலர வைத்திருப்பதுதான். பெரிய நிலைக்கண்ணாடியின் முன்னால் நின்று அந்த விபூதி அணியும் படலம் நடைபெறுகிறது. விபூதி அணிய இவ்வளவு நேரம் எதற்காகவென்று ஆத்திரம் மேலிட்டுப் பற் களைக் கடித்தவாறு பிரபாவதி தேவி தனக்குத்தானே கேட்டுக்கொள்வ துண்டு. அவ்வாறு கேட்பதில் வியப்படைவதற்கு ஒன்றுமில்லை.

அதிகாலையிலேயே குளித்து, ஈரம் கசிகிற கூந்தலின் நுனியைப் பின்னால் கட்டிப் போட்டு, அருமையான பட்டுத் துணிகளை அணிந்து, நெற்றி நிறைய விபூதி பூசியவாறு வந்து நிற்கையிலே ஆசிரம மாதா வுக்குப் பிரத்தியேகமான களை இருக்கும். அவள் எதற்காகப் படி வாசலில் வந்து நிற்கிறாள்? பாதையிலே வருவோர் போவோரை ஆகர்ஷிப் பதற்காகவா?

நாசமாய்ப் போக. ஒரு பெண்ணுக்கு இவ்வளவு அடர்த்தியான நீளக் கூந்தலா? கூந்தலை வளர்க்க ஏதோ மருந்தை மாதாஜி இரகசியமாகப்

பயன்படுத்தி வருகிறாள் என்று பிரபாவதி நம்பினாள். இல்லாவிட்டால் கூந்தல் இவ்வளவு தூரம் வளர்ந்துவிடாது. கூந்தலைச் சிக்கெடுத்துக் கட்ட ஒருமணி நேரமாகிவிடுகிறது. ஒரு பெண் துறவி தனது தலைமுடியைக் கட்டுவதற்கு ஒருமணி நேரத்தைச் செலவு செய்வது சரிதானா? ஒரு பெண் துறவியைப் பொறுத்தவரையில் கூந்தல் என்பது இவ்வளவு தூரம் ஆறுதல் அளிக்கிற ஒரு பொருள்தானா? அதை இவ்வளவு தூரம் பாதுகாத்துக் காப்பாற்ற வேண்டுமா?

மாதா ஜோதிர்மயீ தேவி மனப்பூர்வமாகத் தன்னைச் சிங்காரித்துக் கொள்வதில்லை என்றுதான் தோன்றும். கூந்தலை அலட்சியமாகக் கட்டி வைத்திருப்பதாகத்தான் தோன்றும். ஆனால், அந்த அலட்சிய மனப்பான்மையே ஓர் அலங்காரந்தான். கட்டிலிருந்து ஒரு சில இழைகள் பெயர்ந்து காற்றிலே ஆலோலமாடுவது ஓர் அழகல்லவா? மெல்ல மலரத் தொடங்கும் ஒரு பூவின் புதுமையும் தூய்மையும்போன்ற ஓர் அழகே காலையில் அவளுடைய வதனத்திலே விளையாடுவது. காலைப் பிரார்த்தனையில் பங்கெடுத்துவிட்டு வெளியே கிளம்பி வரும் போதோ, மற்றொரு விதமான ஒளி அவளிடம் காணப்படுகிறது. ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்த பெண்ணுக அவள் தோற்றம் அளிக்கிறாள். மதிய வேளையில் அவளுடைய முகத்திலே ஒரு விதமான கம்பீரத் தோற்றம் காணப்படுகிறது. மாலையில் பூஜை முடியும் தறுவாயில் அவளுடைய வதனம் மிகக் கவர்ச்சியாக இருக்கும். பக்தகோடிகளில் ஆடவர்கள் அனைவரும் அவளையே கவனிப்பார்கள். அப்போது பிரபாவதி தேவி ஆடவர்களின் முகத் தோற்றங்களையும் இங்கித சமிக்ஞைகளையுமே கவனிப்பாள். அவர்கள் மாதாஜியை எவ்வாறு பார்க்கிறார்கள் என்பது அவளுக்குத் தெரியவேண்டும்.

ஓர் ஆசிரம மாதா இவ்வாறு இருக்கக் கூடாது என்பதே பிரபாவதி தேவியின் கருத்து. இது தவறானது. ஆடவர்கள் தன்னை நோக்குவதற்காக, தன்னை நோக்கி நீரை இழுத்து உறிஞ்சி இறக்குவதற்காக ஆசிரம மாதா வேண்டுமென்றே முயன்று வருகிறாள் என்பது வெளிப்படை. இதனைச் சரியான முறையில் நிரூபிக்கப் பிரபாவதியால் முடியும். ஆடவர்கள் அதிக எண்ணிக்கையில் பங்கெடுத்துக்கொள்கிற முறையிலேதான் அங்கே நடத்தப்படுகிற நிகழ்ச்சிகளுக்குத் திட்டம் வகுக்கிறாள் மாதாஜி என்பதே பிரபாவதி தேவியின் மனத்திலுள்ள குற்றச்சாட்டு. இன்று அல்லது நாளை இந்த ஆசிரம மாதா துறவறப் பாதையிலிருந்து சறுக்கி விழுந்துவிடுவாள். அடைக்கப்பட்டு வைத்திருந்த, ஆசிரமத்தின் கொல்லைப்புற வாசலை இரவு வேளைகளிலே பிரபாவதி நன்கு கவனித்து வந்தாள். அந்த வேலையை அவள் மேற்கொண்டு பல நாட்களாகி விட்டன. ஆயினும், அவள் சோர்வடையவில்லை. என்றைக்காவது ஒரு நாள் அந்த வாசல் திறக்கப்படுமென்றும், அது கண்டுபிடிக்கப்படுமென்றும் அவள் நம்பிக்கொண்டிருந்தாள். அந்தக் கட்டடத்தின் முக்கியமான நுழைவாசல்கூட அந்தக் கொல்லைப்புற வாசலேதான்.

ஆசிரம மாதாவின் உண்மையான உருவத்தை மக்களுக்குப் பகிரங்க மாகக் காட்டிக் கொடுப்பதற்காக அந்தக் கொல்லைப்புற வாசலைத் திறக் கும் நாளை எதிர்பார்த்துக்கொண் டிருந்தாள் பிரபாவதி தேவி. அந்த வீடு கட்டப்பட்டதே அந்தக் கொல்லைப்புற வாசலுக்காகத்தானே? அது ஒரு நாள் திறக்கப்படவே செய்யும்.

''பஜனை, பிரார்த்தனை, புராண பாராயணம் ஆகிய ஆசிரமச் சடங்கு களில் பங்கெடுத்துக்கொள்ளும் போதெல்லாம் மாதா ஜோதிர்மயீ தேவி யின் மனமும் கவனமும் அவற்றில் லயித்திருப்பதில்லை என்பது தெளிவு. பார்வை மட்டுந்தான் அவற்றிலே படிந்திருக்கும். ஓய்வு வேளைகளில் ஒரு புத்தகத்தைக் கையிலெடுத்து விரித்தவாறு எதைப்பற்றியோ யோசித்துக்கொண் டிருப்பாள். அவளுடைய மனம் எங்கே எங்ஙனம் சென்றுகொண் டிருக்கிறதென்று யாருக்குத் தெரியும்? அந்த ஆசிரமத்தின் தலைவியாக அவள் இருந்திராவிட்டால், வேறு யாராவது அவளுடைய இந்த நடைமுறைகளைப்பற்றிக் கேட்பதற்கு இருந்திருந் தால், அந்த நபர் கேட்டிருப்பார்: 'எதைப்பற்றி இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள்?' என்று.

அவளிடம் அதைக் கேட்பதற்கு யாருமில்லை, யாரும் கேட்கவும் இல்லை.

நிலைமை இப்படியிருக்கையில், ஒரு நாள் ஒரு பிச்சைக்காரி ஆசிரம வாசலிலே வந்து நின்று பிச்சை கேட்டாள். அப்போது மாதாஜி அங்கே நின்றுகொண் டிருந்தாள். இளமைப் பருவத்தைத் தாண்டிவிடவில்லை அந்தப் பிச்சைக்காரி. அவளிடம் கவர்ச்சி இருந்தது. முதற்பார்வை யிலேயே அது தென்பட்டது. மாதாஜி அந்தக் கவர்ச்சியால் ஈர்க்கப் பட்டாள். அவள் பிச்சைக்காரியை ஆசிரமத்துக்குள்ளே வரச் சொன்னாள்.

அந்தப் பெண்ணின் பெயர் சாவித்திரி. ஆசிரம மாதா அவளைக் குளிக்கச் சொன்னாள்; மாற்றி உடுத்த வேற்றுடைகளைக் கொடுத்தாள். அருமையான உணவை வழங்கினாள். இதனிடையில் அந்தப் பெண்ணிடம் குறிப்பிடத்தக்க மாறுதல் தென்பட்டது. அந்தப் பிச்சைக்காரியிடம் காணப்பட்ட மாறுதல்தான் என்னே! அவளை ஓர் அழகியென்று நிச்சய மாகச் சொல்லமுடியும். அவள் ஒரு பிச்சைக்காரியே அல்ல. மாதா ஜோதிர்மயீ தேவி அவளுடைய வரலாற்றைக் கேட்டாள்.

சாவித்திரி தப்பித் தடுமாறி ஒரு கதையைச் சொன்னாள். அது உண்மையான வரலாறு அல்லவென்று யாராலுமே சொல்லமுடியும். சில விஷயங்களை அவள் மறைத்து வைத்தாள். சிலவற்றைச் சொல்லாமலேயே விட்டுவிட்டாள்; மற்றும் சிலவற்றைத் திரித்துக் கூறினாள்; வேறு சில பகுதிகளை உண்மைக்குப் புறம்பான முறையில் விளக்கினாள். மாதா ஜோதிர்மயீ தேவி பகிரங்கமாகவே கூறிவிட்டாள்: ''நீ பொய் சொல்கிறாய். உன் கதை இது அல்ல. அந்த முறையிலே ஒரு கணவன் தள்ளிவிட்டுப் போகமாட்டான்.''

ஆணையிட்டு, சொன்ன கதையை ருசுப்பிக்கச் சாவித்திரி பெரிதும் முயன்றாள். ஆனால் ஜோதிர்மயீ அதையெல்லாம் நம்பத் தயாராக இருக்கவில்லை. சாவித்திரியின் வாழ்க்கை இரகசியத்தை முழுதும் அறிந்துவிட்டவள்போல் அவள் ஒரு கேள்வி கேட்டாள்:

''உண்மையைச் சொல்லுவியா, என்ன? உண்மையைச் சொன்னால் உனக்கு நல்லது. புரிந்ததா?''

''நான் உண்மையைத்தான் சொல்கிறேன் அம்மா.''

'அல்ல' எனப் பொருள்படும்படியாக மாதாஜி தலையசைத்தாள். பிறகு உண்மையை அறிந்துகொண்டதாக உணர்த்தும் ஒரு புன்சிரிப் புடன் கேட்டாள்: ''உன் கணவன் ஒரு சாதுவாக இருந்திருக் கிறான். ரொம்பச் சாது! அவனுக்கு உன்மீது அளவு கடந்த அன்பு இருந்தது. ஒரு கெட்டிக்கார வாலிபன் உன்னை ஏமாற்றியிருக்கிறான். நீ உன் கணவனை விட்டு விட்டு அவனுடன் சென்றுவிட்டாய். அதுதானே உண்மை?''

சாவித்திரியின் வதனம் வெளிறியது. தனது உண்மை வெளியாகி விட்டதுபோல் அவள் தடுமாறினாள். அவளுடைய இதழ்கள் சிறிது துடித்தன.

மாதாஜி சொன்னாள்: ''சொல், சொல்! உண்மையைச் சொல்லிவிடு! அதுதான் உனக்கு நல்லது.''

சாவித்திரியால் எதையும் சொல்ல முடியவில்லை. எல்லாவற்றையும் தெரிந்து கொண்டவள்போல், அந்தக் கதையை நன்றாக அறிந்திருந்தவள் போல் மாதாஜி அதை விளக்கத் தொடங்கினாள்: ''அந்தக் கெட்டிக்கார வாலிபன் உன்னை ஏமாற்றினான். நீ நாதியற்றவளாகிவிட்டாய். அப்புறம் தெருவிலே வந்து பிச்சை எடுக்கத் தொடங்கினாய். அப்படித் தானே?''

சாவித்திரி முகத்தைப் பொத்தியவாறு அழுதுகொண் டிருந்தாள். வாழ்க்கையில், தான் இழைத்துவிட்ட தவறுகளின் கதையை முதல் முதலாக இன்னொருத்தி ஈவிரக்கமற்ற முறையில் அவள் முகத்தைப் பார்த்துக் கேட்கிறாள். மாதா ஜோதிர்மயீ தேவி ஆறுதல் அளிக்கும் முறையில் சொன்னாள்: ''நீ எதுக்காக அழுகிறாய்? அழவேண்டிய அவசியம் இல்லை. இது உண்மைதானே?''

சாவித்திரி ஒப்புக்கொண்டாள்: ''ஆமாம்மா! என் கணவன் என்னை அருமையாகக் காப்பாற்றி வந்தானம்மா! ஆயினும் அவன்மீது எனக்கு வெறுப்புத்தான் இருந்து வந்தது. ஏளனத்துடன் பார்த்து வந்தேன். அவன் முகத்திலே காறி உமிழவும் செய்திருக்கிறேன். அதையெல்லாம் பொறுத்துக்கொண்டான். அப்புறம் நான் தேடிச் சென்றபோது என் கணவன் இறந்துவிட்டான் அம்மா! நான் பெரிய குற்றத்தைச் செய்திருக்கிறேன்.''

ஆவலுடன் கேட்டாள் ஜோதிர்மயீ: ''உன்னை ஏமாற்றி அழைத்துச் சென்றவன் . . . ?''

சிறிது நேரத்துக்குப் பிறகே சாவித்திரி பதில் உரைத்தாள்.

''முதலில் அவன் என்மீது மிகவும் அன்பு செலுத்தினான். அப்புறம் அடிக்கவும் இடிக்கவும் தொடங்கினான். அவற்றையெல்லாம் நான் பொறுத்துக்கொண்டேன். உண்மையைச் சொல்கிறேனே . . . நான் அவனை மனப்பூர்வமாகக் காதலித்தேன். அவன் என்னை விட்டு விட்டுச் சென்றான். இப்போது எங்கே இருக்கிறானென்று தெரியாது.''

அவள் தன் தலையெழுத்தைக் கண்டறிந்தவள் என்ற முறையில் தொடர்ந்து கூறினாள்: ''இதையெல்லாம் அநுபவிக்க வேண்டியவள் தான் அம்மா, நான்! அந்த நல்ல மனிதனுக்குத் துரோகம் இழைத்தேன். அதன் பயனை அநுபவிக்க வேண்டாமா? செய்யத் தகாததைச் செய்து விட்டேன்.''

ஜோதிர்மயீயிக்கு அவள்மீது அநுதாபம் அல்ல, ஆவல்தான். அந்தக் கதையின் ஒவ்வொரு பகுதியைப் பற்றியும் தெளிவாகக் கேட்டறிய வேண்டுமென்ற ஆவல்தான். சாவித்திரி சொன்னதெல்லாம் தெளி வாகவே இருந்ததென்றாலும் தேவிக்குத் திருப்தியாகவில்லை. அவள் கேட்டாள்: ''உன் கணவர், மனைவியை விரும்பாதவராக இருந்தாரா?''

சாவித்திரி சொன்னாள்: ''விரும்புபவராக இருந்தார் அம்மா. விஷயம் அது அல்ல. என்னுடைய இளமையின் உணர்ச்சி வேகம் என்னை எல்லை மீறச் செய்துவிட்டது.''

''பலா பலன்களைப்பற்றி ஒன்றும் நீ எண்ணிப் பார்க்கவில்லையா?''

''அன்றைக்கு அதைப்பற்றியெல்லாம் சிந்தித்துப் பார்க்கவில்லை அம்மா! இளமைப் பருவம் அல்லவா?''

''அந்த இரண்டாவது ஆளோ?''

''அவனை நான் நேசித்தேன் அம்மா... நேசித்தேன்.''

வினு விடைகள் இவ்வாறு நடைபெற்றுக்கொண் டிருந்தன. அந்தப் பெண் துறவியின் வினுக்கள் சாவித்திரியைத் துன்புறச் செய்யவில்லை. ஆனால் கூச்சமடையவும் செய்யவில்லை. தன் வரலாற்றை அறிந்து கொண்ட ஒருவர் கேட்பதுபோல் இருந்ததனால் சாவித்திரி பெரிதும் வியப்புற்றாள்.

சாவித்திரி தன் வரலாற்றைச் சுருக்கமாகவே சொன்னபோதிலும், மாதாஜியால் அதைத் தெளிவுபட அறிந்துகொள்ள முடிந்ததில் ஆச்சரிய மில்லை. ஒரு பெண் துறவிக்குப் பொருந்தாத முறையில் கேள்விகளை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக்கொண் டிருந்ததும் ஆச்சரியம் இல்லை.

சில வருஷங்களுக்கு முன் தங்கம்மா என்ற தலைமைச் செயலகப் பெண் குமாஸ்தா ஒருத்தி சறுக்கித் தவறி விழுந்திருக்கிறாள். அவளுடைய சுற்றுச் சார்புகள், சாவித்திரியின் சுற்றுச் சார்புகளிலிருந்து மாறு பட்டவையாக இருந்திருக்கின்றன என்ற வித்தியாசம் மட்டுந்தான். அவள் தெருவுக்கு வீசியெறியப்படவில்லை. அவளுக்குப் பிச்சை கேட்டுச் சுற்றியலைய வேண்டிய நிலைமை ஏற்படவில்லை. தெருவுக்குப் பதிலாக அவள் ஓர் ஆசிரமத்தை வந்தடைந்தாள். ஓர் ஆசிரமத்தை

உருவாக்க அவளால் முடிந்தது; அதன் மாதாவாகவும் முடிந்தது. தன் முன் நிற்கும் இந்தப் பெண்ணின் வாழ்க்கை அநுபவங்கள் தானே, ஆசிரம மாதாவுக்கும் ஏற்பட்டிருக்கின்றன? இருவருடைய மானசீகமான அநுபவங்களைப் பொறுத்தவரையில் என்ன வித்தியாசம் இருக்கமுடியும்?

ஒப்பிட்டுப் பார்த்தாள் ஜோதிர்மயீ. சிறிது நேரம் வரையில் அவள் அப்படியே அமர்ந்துவிட்டாள். சாவித்திரியும் சிந்தனையில் மூழ்கியிருந்தாள். முதலிலேயே உண்மையைச் சொல்லத் தயங்கியது தவறுகி விட்டது. அந்தக் குற்ற உணர்வுதான் அவளுக்கு. பொய் யைச் சொன்னாள். அதை நினைத்து அவள் வருந்தினாள். இவ்வாறுக இரு வரும் தங்கள் தங்கள் வழிகளிலேயே சிந்தித்தவாறு மௌனமாயிருந் தனர். சாவித்திரிதான் முதலில் மௌனத்தைக் கலைத்தாள். அவள் மன்னிப்பைக் கோரினாள்:

''நான் முதலில் பொய் சொன்னேன். என்னை மன்னித்துவிடுங்கம்மா. நான் ஒரு மாபாவி. பெரிய குற்றம் புரிந்தவள். உண்மையைச் சொல்லி யிருந்தால் நீங்கள் என்னை அடித்துத் துரத்தி வெளியே அனுப்பிவிட்டிருப் பீர்கள் என்று எண்ணினேன் அம்மா. உண்மையைச் சொன்னால் தாகத்துக்குத் தண்ணீர் கூட யாரும் தரமாட்டார்கள் என்று எண்ணினேன் அம்மா. அப்படிப்பட்ட அநுபவங்கூட எனக்கு ஏற்பட் டிருக்கிறதம்மா. அப்படிப்பட்ட துரோகி நான்.''

அவள் சொன்னது ஆசிரம மாதாவைச் சிறிது நடுங்கத்தான் வைத்தது. இந்த நிலையும் அந்தஸ்தும் இல்லாமல் இருந்திருந்தால் தனக்கும் தாகத்துக்குத் தண்ணீர்கூட யாருமே தந்திருக்கமாட்டார்கள் என்ற சிந்தனைதான் மாதாஜிக்கு ஏற்பட்டது. அன்பு காட்டவோ ஆதரவளிக்கவோ தகுதி பெற்றவள்தானு, அவள்? இன்று அவளைக் காப்பது எது? அந்தச் சுற்றுச் சார்புகள்தானே?

முதல் முதலாகத் தன் வாழ்க்கையின் உண்மை நிலையைப்பற்றிய உணர்வு மாதாஜிக்கு உருவாகத் தொடங்கியது. தனக்கு ஆதரவாக யார் இருக்கிறார்கள்? தனக்கு அறிமுகமுள்ள அனைவருக்கும் அந்தப் பழைய காலக் கதைகள் தெரியும். ஒருவனுவது அநுதாபம் கொள்ள மாட்டான். ஒருவேளை, தன் முன்னால் நிற்கிற துரதிர்ஷ்டசாலியான இந்தப் பெண், தன் கதையை அறிந்துவிட்டால் அநுதாபம் கொள்ளலாம்.

மாதாஜி கேட்டாள்: ''என்கூட இங்கே தங்கியிருக்க உனக்குச் சம்மதமா?''

சாவித்திரிக்குச் சிந்தித்துப் பார்க்க என்ன இருக்கிறது?

''எனக்குச் சம்மதந்தான்.''

மாதாஜி இன்னும் சில கேள்விகளைக் கேட்பாள் அல்லது ஏதாவது சில நிபந்தனைகளைக் கோருவாள் என்று எதிர்பார்த்துச் சாவித்திரி நின்றுகொண்டிருந்தாள். 'மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும், பழைய வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்தக்கூடாது. இது ஓர்

ஆசிரமம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்' என்பன போன்ற அறிவுரைகளை எதிர்பார்க்கலாம் அல்லவா? இல்லை, அத்தகைய எதையும் சொல்லவில்லை. ஆயினும் சாவித்திரி சொன்னாள்: ''ஒழுங்காக நடந்து கொள்ளுகிறேன்.''

மாதாஜி அதை அங்கீகரித்தாள்: ''சரி. அப்படியானால் இங்கேயே தங்கியிருந்து கொள்!''

மாதாஜி அன்றைய தினம் முழுவதும் சிந்தனையில் மூழ்கியவாறு, மன நிம்மதியற்ற நிலைமையில் காணப்பட்டாள். இந்த உலகத்தில் இப்படிப் பட்ட அல்லது கொஞ்சநஞ்சம் மாறுபட்டிருக்கிற எத்தனையோ தங்கம்மாக்கள், சாவித்திரிகள் இருந்து வருகிறார்கள். அவர்கள் எல்லாரும் பிச்சையோட்டை ஏந்தி நடக்கின்றனர். இந்த வீட்டை அத்தகைய அதிருஷ்டம் கெட்ட பெண்களின் புகலிடமாக்கினால் என்ன வென்று ஆசிரம மாதா சிந்தித்துப் பார்த்தாள்.

ஒரு பிச்சைக்காரப் பெண்ணை அங்கே தங்க வைப்பது பிரபாவதி தேவிக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. நித்தியானந்தமயிக்கும் தேஜஸ் வரூபிணிக்கும் அதைப்பற்றிய எந்தவிதமான அபிப்பிராயமும் இல்லை. ஆசிரம மாதாவின் முடிவு அது. தவிரவும், ஒரு பேதைப் பெண் அங்கே தங்கியிருந்தால் தங்களுக்கு என்ன? இருந்து விட்டுப் போகட்டும்.

* * *

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு, மாதாஜி வெளியில் போய் வந்தபோது இன்னொரு பிச்சைக்காரப் பெண்ணைக் கூட்டி வந்தாள். அவளுக்குக்கூட ஒரு கதை இருக்கும் என்பது திண்ணம். ஒருவேளை சாவித்திரியின் கதையிலிருந்து சிறிது மாறுபட்டதாக இருக்கலாம்.

அதன் பிறகு மீண்டும் இன்னொருத்தியைக்கூட அழைத்து வந்தாள். பிரபாவதி தேவி ஏனைய பெண் துறவிகளிடம் கூறினாள்: ''இப்படி ஒவ்வொன்றாகப் பிடித்து இழுத்துக்கொண்டு வருகிறாளே, யாரிடமாவது சொல்கிறாளா? கேட்கிறாளா?''

ஏனைய பெண் துறவிகள் என்ன சொல்வார்கள்? பிரபாவதிமட்டும் முணுமுணுத்துக்கொண்டிருந்தாள். ஆனால் அவள் மாதாஜியிடம் எதையும் கேட்கவில்லை, எதிர்ப்பைத் தெரிவிக்கவும் இல்லை.

ஒரு சில நாட்களுக்குள் ஏழு அநாதைப் பெண்கள் அந்த ஆசிரமத்தில் வந்து சேர்ந்தனர். ஆத்திரத்தைத் தாங்க முடியாமல் பிரபாவதி தேவி தேஜஸ்வரூபிணியிடம் கூறினாள்: ''இனம் இனத்தோடுதான் வந்து சேரும்.''

இந்த நிலை தொடர்ந்து நீடிக்குமானால், இந்த ஆசிரமம் விபசாரிகளின், பிச்சைக்காரிகளின் புகலிடமாக அமைந்துவிடும். ஆசிரமத்தின் புனிதத் தன்மை கெட்டுப் போய்விடும். ஒருவேளை, 'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை' என்பதுபோல், இங்கே அந்தப் பெண்கள் தங்கள் பழைய வழக்கங்களையே கடைப்பிடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சாவித்திரி! புதிய வாழ்க்கையில் ஆளே மாறிவிட்டாள். அழகியாகி விட்டாள், களை சொட்டுகிறது. மற்ற எந்தப் பெண்ணையும்விட அவளைத் தான் ஆசிரமத்துக்கு வருகிற பக்தர்களான ஆடவர்கள் அதிகமாகக் கவனிக்கிறார்கள். அவளைப்பற்றி விசாரிக்கிறார்கள். அங்குள்ள வசதி களுக்கேற்ற வகையில் அவள் தன்னை அலங்கரித்துக் கொள்ளவும் செய்கிறாள்.

அத்தியாயம் 36

வைராக்கியம்

ஆசிரமத்தில், எதிர்பாராதவாறுதான் அத்தகைய பிரச்னைகள் தோன்றலாயின. பிரபாவதிக்கு ஆசிரம மாதாமீது இருந்து வந்த வெறுப்பு வெளிப்படையாகவே தென்படத் தொடங்கியது. அந்தப் பொருத்தமின்மை மௌன நிலையிலேதான் இருந்து வந்தது. இப்போதே நடத்தை கெட்ட பெண்கள் பலர் ஆசிரமத்துக்குள்ளே புகுந்தாகிவிட்டது. மாதாஜிதான் அவர்களைப் புகவிட்டது. இன்னும் எத்தனை பேர்களை அழைத்து வருவாளோ? அழைத்து வருவாள் என்பது திண்ணம். எதிர்பாராதவிதமாக அவளிடம் காணப்பட்ட மாறுதல் தான் இது. யாரிடமாவது ஒரு வார்த்தை கேட்கவேண்டுமே. மற்ற வர்களுக்குக்கூட உரிமை இருக்கிறது என்பது ஒரு பக்கம் இருக்கட்டும்; இங்கே வேறு பலர்கூடத் தங்கியிருக்கிறார்கள் என்றுவது சிந்திக்க வேண்டாமா? அந்த மரியாதைகூடக் கிடையாது. ஆசிரமச் செலவுகள் அதிகரித்து வருகின்றன. இத்தனை பேர்களுக்கு உணவளிக்கப் பணம் எங்கே? முன் யோசனையற்ற இந்தச் செயலைப்பற்றிப் பிரபாவதிக்குக் கடுமையான ஆட்சேபந்தான்.

இருவரும் நேரடியாக மோதாத குறைதான். பக்தகோடிகளின் மத்தியில் இது ஏற்கெனவே பேச்சுக்கு விஷயமாகிவிட்டது. என்றாலும் மாதாஜிக்கு எந்தவிதமான தயக்கமும் இருக்கவில்லை. அவள் யாரிடமும் கேட்கவோ சொல்லவோ இல்லை. ஆனால், பிரபாவதி தேவி, ஆளையும் சந்தர்ப்பத்தையும் பார்த்துப் பல பக்தர்களிடம் சொல்லவேண்டிய வற்றைச் சொல்லியே விட்டாள். சிலரிடம் புகார் கூறும் முறையில், வேறு சிலரிடம் உரிமையை நிலைநாட்டும் வகையில், இன்னும் சிலரிடம் மாதாஜியைப்பற்றிக் குறைகூறும் விதத்தில்—சந்தர்ப்பத்திற்கேற்ற வாறு கூறினாள். இனி ஒரு பெண்ணை அங்கே அழைத்து வந்தால், எல்லாரையும் அங்கிருந்து அடித்துத் துரத்தி வெளியேற்றிவிடுவேன் என்று ஓர் உதவிக் காரியதரிசியின் மனைவியிடம் அவள் சொன்னாள். அந்த மாது சில நாட்களுக்குப் பிறகு அதை மாதாவிடம் தெரிவித்தாள். சிறிது ஆத்திரமடைந்தவாறு மாதாஜி அந்த மாதிடம் கேட்டாள்:

''இங்கிருந்தா? நான் அழைத்து வந்து தங்க வைத்திருப்பவர்களையா?''

பவானியம்மா, அந்த மாதுவின் பெயர் அதுதான், கூறினாள்: ''அப்படித்தான் சொன்னீங்க.''

மாதாவுக்கு ஆத்திரம் அதிகரித்துவிட்டது. ''ஆயின், நீங்களே அவளிடம் சொல்லிவிடுங்கள். இது என் வீடு. நான் விரும்புகிறவர்களை இங்கே தங்க வைப்பேன்.''

மேலும் சில விஷயங்களைக்கூடச் சொல்ல விரும்பினாள் மாதா:

''அந்த உரிமையெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். நான் இந்த ஆசிரமத்தின் மாதா. அந்த வகையிலேகூட எனக்குச் சில அதிகாரங்கள் இருக்கின்றன.''

பிரபாவதி தேவிக்கு மேற்சொன்ன தகவலும் கிடைத்துவிட்டது. அப்போது அவள் என்ன சொன்னாள் தெரியுமா?

''அந்த உரிமை எல்லாம் பழைய கதை. இப்போது இது ஒரு பொது ஸ்தாபனம். நான்கூட இங்கே சும்மா வந்து நுழைந்துவிடவில்லை. சொந்த முயற்சியால் சம்பாதித்த பன்னிரண்டாயிரம் ரூபாயை இதிலே போட்டிருக்கிறேன். யாரும் பெரிய அதிகாரத்தைச் செலுத்தவேண்டாம். அப்படியானால் அதைக் கொஞ்சம் பார்க்கத்தான் போகிறேன்.''

பூமாதேவிபோல் யாவற்றையும் பொறுத்துக்கொண்டிருந்ததாகச் சொன்னாள் பிரபாவதி. அதுவும் இந்த ஸ்தாபனத்தின் நலனைக் கருதித்தான்.

ஆசிரம மாதா அழைத்து வந்து தங்க வைத்திருந்த பெண்கள் கூடிப் பேசிக்கொண்டிருந்தனர். அதன் மத்தியில் ஒருத்தி ஒரு வேடிக்கை சொன்னாள். எல்லாரும் கொல்லெனச் சிரித்துவிட்டனர். உரத்த சிரிப்பு அல்ல, அடக்கமானதுதான். ஆயினும் ஏழெட்டுப் பெண்கள் ஓர் அறையில் அமர்ந்து சிரிக்கிறபோது சிறிது ஓசை எழத்தானே செய்யும். அப்படிச் சிரிக்க முடியாத துரதிருஷ்டசாலிகள்தானே, அவர்கள்? பிரபாவதி தேவியின் இதயத்துக்குள்ளே புகைந்துகொண்டிருந்த ஆத்திர நெருப்பு பற்றி எரிந்தது. சிவந்த கண்களுடன் அவள் அவ்வறைக்குச் சென்றாள். அவர்களைத் திட்டினாள். பாவம்! அந்தப் பெண்கள் தவறு இழைத்தவர்களாகிவிட்டனர். திரும்பவும் தெருவுக்குப் போகவேண்டியிருக்குமோ என்று அஞ்சினர்.

பிரபாவதி தேவி சொன்னாள்: ''இங்கே வந்து உண்டு கொழுத்து விட்டீர்கள். தன்னை மறந்து துள்ளிக் குதிக்கவேண்டாம். மாதாவின் செல்லப் பெண்கள் என்றெண்ணி ஆர்ப்பரிக்கிறீர்களா? இங்கே மாதா மட்டும் அல்ல. சொல்லி வைக்கிறேன். எல்லாரையும் அடித்துத் துரத்தி வெளியேற்றி விடுவேன்.''

யாருமே பேசவில்லை. வேடிக்கை சொன்னவள்தான் மிகவும் கவலையடைந்தாள். சாவித்திரி! அவள் நிமித்தமாக மற்றவர்களும் குற்றவாளிகளாகிவிட்டார்கள். ஒரு விசாரணை நடைபெறுவதாக இருந்தால், அவள்மீது குற்றம் நிரூபிக்கப்பட்டுவிடும்.

சாவித்திரி குற்ற உணர்வுடன் கூறினாள்: ''இனிமேல் நாங்கள் சிரிக்கமாட்டோம் அம்மா. மன்னிக்க வேண்டும்.''

பிரபாவதியின் ஆத்திரமெல்லாம் சாவித்திரியை நோக்கித் திரும்பியது:

''ப்ப்பூ! நடத்தை கெட்டவளே! நீதான் இந்த ஆசிரமத்தைக் கெடுக்கிறாய். உன்னுடைய அலங்காரத்தையும், சிங்காரத்தையும், கடைக்கண் பார்வையையும், புன்சிரிப்பையும் நான் பார்க்கவில்லை என்று நினைக்கிறாய்? இங்கிருந்து ஒருவனை இழுத்துக்கொண்டு போகலாமென்று எண்ணுகிறாயா?''

சாவித்திரி நடுங்கிவிட்டாள். அந்தப் பெண்ணுக்கு அத்தகைய எண்ணம் ஏதும் இருக்கவில்லை. ஒருவேளை, அவளுக்கு அத்தன்மை இருந்தாலும், அதை வெளிக்காட்டுவதற்கான நேரமாகிவிடவில்லை அல்லவா? அவள் கண்கள் நிறைந்துவிட்டன.

மாதாஜி திடீரென அங்கே தோன்றிக் கேட்டாள்: ''ஊம்? இங்கே என்ன நடந்தது?''

பிரபாவதி சிறிது தடுமாறினவள்போல் தோன்றியது. அவள் ஒரு விநாடிக்குப் பின் கூறினாள்:

''இங்கே எப்போதும் சிரிப்பும் ஆர்ப்பாட்டமுந்தான்.''

மாதாஜி கேட்டாள்: ''ஏன்? இவர்கள் சிரிக்கக்கூடாதா?''

பிரபாவதி, தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்வதைப் பார்க்க முடிந்தது. அந்த முயற்சிக்கிடையில் அவளிடமிருந்து ஒரு வாசகம் வெளிக் கிளம்பி வந்தது: ''எனக்குப் பிடிப்பதில்லை.''

மாதாவின் பதில் நாமுனையிலிருந்து விழுந்தது: ''நமக்குப் பிடித்துத் தான் ஆகவேண்டும்.''

''யார் முடிவு?''

''என் முடிவேதான்.''

''அப்படிச் சுயமாக முடிவெடுக்கலாமா?''

பதில் இல்லாததனாலோ, அத்தகைய ஒரு சர்ச்சை அங்கே நடைபெற வேண்டாம் என்பதனாலோ என்னவோ, மாதாஜி பதில் அளிக்கவில்லை. அவள் சாவித்திரியிடம் கேட்டாள்: ''நீ எதற்காக அழுகிறாய்?''

பிரபாவதி தேவியால் அதைக் கொஞ்சங்கூடச் சகிக்கமுடியவில்லை. அவள் தரையையே அதிரவைத்தவாறு அங்கிருந்து நடந்து சென்றாள். ஆத்திரமடைந்து செல்கிற அவளை மாதாஜி உற்று நோக்கினாள். அவள் திரும்பவும் சாவித்திரியிடம் கேட்டாள்: ''நீ எதுக்காக அழுகிறாய்?''

பிரபாவதி சொன்னதையெல்லாம் சாவித்திரி ஆசிரம மாதாவிடம் சொல்லவில்லை. சாவித்திரி சொன்னாள்: ''நான்தான் தவறு செய்தேன்.''

மாதா அநுதாபத்துடன் கேட்டாள்: ''சிரிக்கத்தானே செய்தீர்கள்?''

''ஆமாம். அவ்வளவு தானுங்க.''

வேறு சில விஷயங்களைப் பற்றிக்கூடச் சொல்லவேண்டும் என்றிருந்தாள் மாதா. ஆனால் சொல்லவில்லை, ஒருவேளை அவள் எண்ணியது இப்படிச் சொல்வதற்காகத்தானோ, என்னவோ? ''சிரியுங்கள்! உங்கள் இஷ்டம்போல் சிரியுங்கள்! போதும் போதும் என்கிறவரையில் சிரியுங்கள்! அவ்வாறு மனமகிழ்ச்சி அடையுங்கள்!''

அப்போது மாதாஜியின் வதனத்திலே நிழல் வீசிய சோகச் சாயலிலிருந்து, இத்தகைய ஒரு சிந்தனைப் போக்கு அவள் இதயத்திலே குமுறுவதுபோல் தோன்றியது.

'என்னால் இவ்வாறு சிரிக்க முடியாவிட்டாலும், நீங்களாவது அகமகிழச் சிரித்துக் காண நான் விரும்புகிறேன்.'

பிடிவாதம் என்பதுபோல் மறுநாள் வேறொரு சம்பவம் நிகழ்ந்தது. ஆசிரம மாதா எங்கிருந்தோ ஒரு பிச்சைக்காரியை அழைத்து வந்தாள்.

பிரபாவதி தேவியால் இனிமேல் தாங்கவே முடியாது. இரண்டில் ஒன்றைத் தெளிவாக அறிந்த பிறகுதான் மறுவேலை. ஆசிரமம் முழுவதற்கும் சர்வாதிகாரியாகத் திகழ்கிறார் ஸ்வாமித் திருவடிகள். அவரிடம் சென்று புகார் சொல்லவேண்டியதுதான். அவரே முடிவெடுக்கட்டும்.

பிரபாவதி தேவிக்கு ஆதரவு அளிக்காமல் விலகி நின்றாள் நித்தியானந்தமயீ தேவி. அவள் பிரபாவதி சொல்வதை ஏற்றுக்கொள்ளவோ மறுக்கவோ செய்யவில்லை; எதிர்க்கவும் இல்லை; ஆமோதிக்கவும் இல்லை. இந்த நிலையைத்தான் அவள் கடைப்பிடித்தாள்.

அவள் சொன்னாள்: ''அம்மா, நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான். ஆனால் . . .''

ஒரு சார்பிலே நிற்க அவளுக்குத் தயக்கம். தேஜஸ்வரூபிணியும் ஆனந்தமயீயைப் பின்பற்றினாள். ஆசிரமத்தின் ஆட்சிப் பொறுப்பிலே அவளுக்கு எந்த விதமான பங்கும் தேவையில்லை. பகவானைப் பூஜை செய்து காலத்தைக் கடத்தவேண்டும் என்ற ஒரே நோக்கந்தான் அவளுக்கு இருந்தது.

பக்தகோடிகளில் கணிசமான ஒரு பகுதியினர் பிரபாவதி தேவியை ஆதரித்து நின்றனர். அவள் அந்த ஆதரவை எங்ஙனம் பெற்றுவிட்டாள் என்று யாருக்கும் தெரியாது. ஒரு பகுதியினர் ஆசிரம மாதாவை ஆதரித்து நின்றனர். அவர்கள் சிறுபான்மையினராக இருந்தனர். அநாதைப் பெண்களுக்கான ஆலயம் என்பது ஆசிரமத்தின் குறிக்கோள்களில் ஒன்று. அதை என்றைக்காவது ஒரு நாள் துவக்கியே ஆகவேண்டும். அந்த ஏழைப் பெண்கள்கூட ஆசிரமத்திலேயே தங்கியிருப்பதனால் என்ன கெடுதல்? அந்த நாட்களில் பக்தர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போதெல்லாம் இத்தகைய விவாதங்கள் நடைபெற்று வந்தன.

* * *

சில நாட்களுக்குள் நித்தியானந்த ஸ்வாமித் திருவடிகள் எழுந்தருளப் போகிறார்கள் என்ற செய்தி கிடைத்துவிட்டது. அன்று முதல் பக்த கோடிகளுக்கிடையில் பேச்சுக்கு விஷயமாகிவிட்டது அதுவேதான். திருவனந்தபுரத்திலே அது ஒரு மாபெரும் நிகழ்ச்சியாகும். தேவி பிரபாவதிக்கு அதிலே பிரத்தியேகமான மகிழ்ச்சியே தான். அவள்

எழுதியனுப்பிய புகாருக்குப் பலன் கிடைத்தது என்பது மட்டும் அல்ல, ஸ்வாமித் திருவடிகளே எழுந்தருளப் போகிறார்கள். திருவடிகளின் விஜயம் தனக்கு வெற்றியைத் தேடித் தருமென்று நம்பினாள் பிரபாவதி. அண்மைக் காலமாக அவளுடைய பிரார்த்தனையெல்லாம் திருவடிகள் விஜயம் செய்யவேண்டும் என்பதாகவே இருந்தது. அதற்குக் காரணம் உண்டு. சின்னச் சாமியார் தான் வருகிறேன்றால், அவர் மாதாவுக்கு ஆதரவாகத்தான் நிற்பார்; மாதாவுக்குச் சாதகமான முடிவுக்குத்தான் வருவார் என்று பிரபாவதி எண்ணியிருந்தாள். சின்னச் சாமியாருக்கும் மாதாஜிக்குமிடையில் நெடுநாளைய நெருங்கிய நட்புறவு இருந்து வருகிறது. திருவடிகள் அப்படி அல்ல. அவருக்குப் பிரபாவதி தேவியிடம் பிரத்தியேகமான பாசம் இருந்து வருகிறது.

ஆசிரம மாதா சிறிது வாட்டமடைந்தாள். திருவடிகளுக்குப் பிரபாவதியிடந்தான் அதிகப் பிரியம் என்பதை மாதாஜி அறிவாள். ஆனால் அவள் வாடித் தளர்ந்துவிடவில்லை. உறுதியான ஒரு முடிவுக்கு வந்து விட்டவள்போல் தோன்றியது. பக்தர்களில் சிலரிடம் மாதாஜி சொன்னாளாம்:

''திருவடிகள் நியாயமான முடிவெடுக்காவிட்டால், நான் தங்கவைத்திருக்கும் பெண்களே வெளியேற்றவேண்டுமென்று சொல்லிவிட்டால் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று எனக்குத் தெரியும்.''

அவள் ஸ்வாமிகளையே நிராகரிக்கக்கூடும். அத்தகைய ஒரு முடிவுக்குத்தான் மாதாஜி வந்திருக்கிறாற்போல் தோன்றியது.

ஸ்வாமித் திருவடிகளுடைய விஜயத்தை முன்னிட்டுப் பெரிய அளவில் ஏற்பாடுகள் நடைபெற்றன. ஆசிரமத்தை அமைத்தபின் முதல் முதலாக ஸ்வாமித் திருவடிகள் எழுந்தருளுகிறார்கள். திருவனந்தபுரத்திலே அவர் தங்கியிருக்கும்போது ஏராளமான நிகழ்ச்சிகளிலே பங்கெடுக்கப் போகிறார். பக்தகோடிகள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வீடுகளிலே ஸ்வாமிஜிக்குப் பூஜை நடத்தக் காத்திருக்கிறார்கள். ஐந்நூறு குழந்தைகளுக்கு ஸ்வாமித் திருப்பாதங்களின் கையினால் *'சாதமூட்ட' வேண்டியிருக்கிறது. இலாக்கா மேலதிகாரிகளில் சிலர் புதிதாகக் கட்டியிருக்கிற மாளிகைகளின் திறப்பு விழாக்களைத் திருப்பாதங்களின் கையினாலேயே நடத்தவேண்டியிருக்கிறது. சில வர்த்தக ஸ்தாபனங்களைத் திறந்து வைக்க வேண்டிய பொறுப்பும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நிகழ்ச்சி நிரல் இவ்வாறு நீண்டு போகிறது. இவை முழுதும் நிறைவேற்றி வைக்க வேண்டுமென்றால், ஸ்வாமிஜி திருவனந்தபுரத்திலே ஒரு வருஷம் முழுவதும் தங்கியிருந்தால்கூட முடியாதுபோல் தோன்றியது.

* கேரளாவில் ஐந்தாம் குழந்தைகளுக்கு முதல் முதலாகச் சாதமூட்டுவது ஒரு புனிதச் சடங்காக நடைபெற்று வருகிறது. குருவாயூர் போன்ற முக்கியமான கோவில்களிலே, நைவேத்தியச் சோற்றை ஊட்டுவது உண்டு. பெரிய புனிதவான்களின் கையினாலே ஊட்டுவதும் உண்டு. (மொ—ர்.)

ஸ்வாமிகள் திருவனந்தபுரத்துக்கு விஜயம் செய்த தினத்தன்று சர்க்கார் அலுவலகங்களில் வேலை செய்பவர்களில் பாதிப் பேர் 'கேஷுவல் லீவு' எடுத்தனர். அன்று எந்த அலுவலகத்திலும் அலுவல்கள் சரியாக நடைபெறவில்லை.

ஸ்வாமித் திருவடிகள் ஆசிரமத்துக்குள்ளே திருப்பாதங்களை ஊன்றிய போது பூரணகும்பத்துடன் வரவேற்கப் பெண் துறவிகள் வரிசையாக நின்றுகொண்டிருந்தனர். பக்த கோடிகளின் கவனத்தைக் கவர்ந்த ஒரு நிகழ்ச்சி அப்போது அங்கே நடைபெற்றது. பிரபாவதி தேவி திருவடிகளைக் கண்டவுடனேயே கதறியழுதுவிட்டாளாம். ஆசிரம மாதா ஏதோ ஒருவிதமான உறுதியில், செவ்வண்ணம் படர்ந்திருந்த வதனத்துடன், உணர்ச்சி எதையும் வெளிக்காட்டாமல் இதழ்களை இறுக மூடிக்கொண்டு நின்றாளாம். ஸ்வாமிகள் பிரபாவதியின் சிரத்தின்மீது கைவைத்தவாறு மெல்லிய குரலில் அருள் புரிந்தார்கள். ''குழந்தாய், அழாதே!'' என்றுதான் திருவடிகள் சொன்னார்களென்று அருகிலே நின்றிருந்த ரெவின்யூ இலாக்காக் காரியதரிசியின் மனைவி சொன்னாள். அடிகள், மாதாஜிமீது செலுத்திய பார்வை பொருள் படைத்ததாக இருந்ததாம். அடிகளாரின் அந்தப் பார்வையைக் கவனியாதவள்போல் நின்றுவிட்டாளாம், தேவி ஜோதிர்மயீ. பக்தகோடிகளின் அன்றைய பேச்சுக்கு இவை அனைத்தும் விஷயங்களாகிவிட்டன.

பிரபாவதி தேவி வெற்றி பெறுவாள். திருவடிகளின் கருத்து அதற்கேற்றதாகத்தான் இருக்கும். ஜோதிர்மயீயை ஆசிரம மாதாவின் பொறுப்பிலிருந்து விலக்கி வைத்துவிட்டால் அப்புறம் என்ன நடக்கும்? அந்தப் பெண்களை வெளியேற்றிவிட வேண்டுமென்று அடிகளார் கட்டளையிடுவாரா? ஆயின், மாதாஜி அவர்களுடன் சேர்ந்து வெளியேறிவிடுவாள். அது உறுதி. ஆனால் மாதாஜி ஏதோ உறுதியான தீர்மானத்திலேதான் நின்றுகொண்டிருந்தாள் . . . இவ்வாறுகப் பல யூகங்களும் அனுமானங்களும் பக்த கோடிகளின் மத்தியில் உருவெடுத்தன. மாதாஜியின் பதற்றமற்ற நிலை பக்தர்களை ஆவலுக்கு உள்ளாக்கியது. ஆயினும், ஸ்வாமித் திருப்பாதங்கள் அனைத்துப் பிரச்னைகளையும் தீர்த்து வைத்துவிடுமென்ற நம்பிக்கை பரவலாக இருந்தது.

குழந்தைகளிலிருந்து முதியோர்வரையிலுள்ள பக்தர்கள் அன்றைய பஜனையில் பங்கெடுத்துக்கொண்டனர். பஜனைக்குப் பின் திருவடிகள் பேசுவார்கள். திருவடிகளின் முன்னிலையில் நடைபெறுகிற பஜனைக்குப் பிரத்தியேகமான குணும்சங்கள் உள்ளன. ஜனத்திரளை ஆசிரமத்துக்கு இழுத்து வந்ததற்குக் காரணம் அது மட்டும் அல்ல. ஆசிரமப் பிரச்னைகளில் ஸ்வாமித் திருப்பாதங்களின் சார்பு எந்தப் பக்கம் இருக்கும் என்பதைப் பற்றிய ரூகங்கள் ஏதாவது கிடைத்துவிடும். பக்தகோடிகள் அதைப் பற்றி அறிய ஆவலுற்றனர்.

பஜனையின்போது அங்கெல்லாம் ஆன்மிக ஒளி அலைமோதிக்கொண்டிருந்தது. குழுமியிருந்த பக்தர்களின் கூட்டம் ஆன்மிக, பரமானந்த லஹரியிலே லயித்துவிட்டது. இதற்கு முன் எப்பொழுதுமே அநுபவித்தறியாத பிரத்தியேகத் தன்மை அந்த ஆனந்தத்துக்கு இருந்தது.

பின்னர் திருவடிகள் பிரசங்கம் நிகழ்த்தத் தொடங்கினார்கள். முன்னுரையாகச் சில விஷயங்களைச் சொல்லிவிட்டு ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தவேண்டியதன் அவசியத்தைப்பற்றி விளக்கமாகக் கூறினார்கள். காமம், குரோதம் முதலிய ஆறுவிதமான உணர்ச்சிகளைப்பற்றியும் விரிவுரை செய்தார்கள். அந்த உணர்ச்சிகளுக்குச் சாமானிய மனிதர்கள் மட்டுமின்றி மகரிஷிகள்கூட அடிமைப்பட்டுப் போன கதைகளை விரிவாகச் சொன்னார்கள். துறவறத்தை ஏற்றுக்கொள்கிறார்கள் என்றால், ஆறுவித உணர்ச்சிகளை வென்றார்கள் என்று பொருள் கொள்ளக்கூடாது. அவற்றை வெல்வதற்கான முயற்சி துவக்கப்பட்டிருக்கிறது என்றுதான் பொருள். காவியுடைகளை ஏற்றுக்கொள்ளும்போது செய்கிற சபதத்தை அவர் நினைவுபடுத்தினார். ஆறுவிதமான உணர்ச்சிகளுக்குக் கீழ்ப்பணிய மாட்டோம் என்று சபதம் எடுப்பதன் மூலமாக ஆணவம் இழந்துவிட்டதாகக் கருதவேண்டாமென்று திருவடிகள் உதாரணங்களுடன் விளக்கினார்கள். பேச்சின் மத்தியிலே ஏதோ சந்தர்ப்பத்தில் சொல்லப்பட்ட ஒரு வாசகம் பொருள் படைத்ததாக இருந்தது.

''ஏழைகளுக்குத் தொண்டு செய்வதும், நாமஜபம், வேதாந்த சிந்தனை ஆகியவைபோல் கடவுளுக்கு ஆற்றுகிற சேவையேதான்.''

பிரபாவதி தேவிக்கும் அவள் குழுவினருக்கும், அந்த வாசகம் எதிர்பாராமல் விழுந்த ஓர் அடியாக அமைந்தது. ஸ்வாமிகள் எந்தப் பக்கம் சார்ந்து நிற்கிறார்கள் என்பதன் சமிக்ஞை அல்லவா இது?

பிரசங்கம் முடிவுற்றபோது பிரபாவதி தேவி தளர்ந்துவிட்டாள்.

அவள் அன்றிரவு திருவடிகளின் சந்நிதானத்துக்குச் சென்று திருப்பாதங்களைக் கட்டித் தழுவியவாறு கதறியழுதாள் என்று சொல்லப்படுகிறது. உணர்த்தப்படவேண்டிய புகார்கள் எண்ணற்றவை. யாவற்றையும் அவள் திருவடிகளிடம் தெரிவித்தாளாம்.

மாதாஜி அலட்சியமாகவே இருந்து வந்தாள். எந்த முடிவை மேற்கொள்வதாக இருந்தாலும் அவளுக்கு ஒன்றுமில்லை என்ற அலட்சிய மனப்பான்மைதான் காணப்பட்டது. தன்னைச் சார்ந்து நிற்கிற ஒரு பெண் துறவியிடம் அவள் இவ்வாறு கூறினாளாம்!

''திருவடிகளுடைய கருத்து நமக்குச் சாதகமாக இருந்தால் அது மாறிவிடப் போகிறது. அதை மாற்றத்தான் செய்வாள் பிரபாவதி.''

திருப்பாதங்களைப் பொறுத்தவரையில் பிரபாவதி தேவி மிகப் பெரிய பலவீனமான அம்சமாகத்தான் இருந்து வருகிறாள். அப்படியென்றால், துறவறத்துக்கு விரோதமான எதைப்பற்றியும் சந்தேகம் கொள்ளவேண்டியதில்லை.

மாதாஜி அழைத்து வந்து அங்கே தங்க வைத்திருக்கிற அந்தப் பேதைப் பெண்கள் நிலவிய நெருக்கடி நிலைமையை அறிந்து கொண்டனர். அவர்கள் கூட்டமாக அமர்ந்து அதைப்பற்றி விவாதம் நடத்துவது உண்டு. யாருக்கும் தெரியாமல் எல்லாருமாகச் சேர்ந்து அந்த ஆசிரமத்திலிருந்து வெளியேறிவிட வேண்டுமென்ற கருத்துத்தான் சாவித்திரிக்கு.

''ஆசிரம மாதா ரொம்ப நல்லவர். நமக்காக அவர் ஏன் நெருக்கடிக்கு உள்ளாகணும்? ஒரு குடிசையிலாவது நாம் ஸ்திரமாக வாழக்கூடாதென்றும், ஒரு சட்டியிலே சமைத்துச் சாப்பிடக்கூடாதென்றும் நம் தலையிலே எழுதி வச்சிருங்காங்க. அந்தத் தலையெழுத்துப்படி எல்லாவற்றையும் அநுபவிப்போம். அந்தம்மா ரொம்ப நல்லவர். அவருக்குச் சங்கடத்தை உண்டாக்கக் கூடாது.''

கௌரிக் குட்டியும் சின்னம்மாவும் ஒருமுறை நெடுமூச்சை விட்டு விட்டுக் கூறினர்:

''தலையெழுத்தை மாய்த்துவிடமுடியாது.''

பார்வதி என்ற பெண்ணுக்கு மாறுபட்ட கருத்து இருந்தது.

''இந்தச் சண்டை சச்சரவுகளை எல்லாம் நாம் அறிந்து கொண்டோம்னு எதுக்காகக் காட்டிக்கணும்? நாம்ப சொல்லியா, நம்மை இங்கே அழைச்சுக்கிட்டு வந்தாங்க? ஒண்ணுமே தெரியாதவங்க மாதிரி இங்கே தங்கிடுவோம். இங்கிருந்து போகச் சொன்னால் போயிட வேண்டியதுதானே?''

அதே கருத்துடைய இன்னொரு பெண்கூட இருந்தாள். வேறொருத்தி சாவித்திரியின் கருத்தை ஆமோதித்தாள். ஆனால் ஒன்று மட்டும் சரி அல்ல என்று அவள் சொன்னாள்:

''யாருக்கும் தெரியாமே கொள்ளாமே இங்கிருந்து போவது சரியல்ல. எல்லாரிடத்திலும் விடைபெற்றுக் கொண்டுதான் போகணும்.''

சின்னம்மாவின் சின்னப் புத்தியிலே ஒரு கேள்வி உருவாகிவிட்டது:

''மாதா அறிந்தே நம்மை அப்படி அனுப்பிடுவாங்களா?''

சாவித்திரிக்கு அந்த விஷயத்தில் சந்தேகம் இல்லை. சொன்னாள்: ''அம்மா சம்மதித்து நம்மை அனுப்பிவிடுவாங்கன்னு எண்ண வேண்டாம்.''

பழைய துணிகளையும், ஓட்டை உடைசல் பிச்சைப் பாத்திரங்களையும் வீசியெறிந்தவர்கள்தான் அந்தப் பெண்கள். இனி அவற்றையெல்லாம் தேடிப் பிடிக்க வேண்டியிருக்கிறது. இதுவரையில் நடந்து வந்த நீண்ட நெடும்பாதையிலேயே குறிக்கோளின்றி அவர்கள் மேலும் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. அந்தப் பிச்சைக்காரிகள் அதைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தனர்.

ஒருத்தி சொன்னாள்: ''இங்கே வந்து தங்கியிருந்திருக்கக்கூடாது.''

எல்லாரும் அதை ஆமோதித்தனர். நடந்து வந்த அதே பாதையிலேயே நடந்து சென்றிருக்கவேண்டும்.

இந்த ஆசிரமத்திலே, தான் வந்து நுழைந்த நாளிலிருந்துதான் இந்த நெருக்கடிகள் எல்லாம் ஆரம்பமாயின என்ற உணர்வு சாவித்திரியை மிகவும் வியாகுலமடையச் செய்தது. அவள் தன்னையே சபித்துக் கொண்டாள். நல்ல உள்ளம் கொண்ட ஆசிரம மாதாகூட நெருக்கடிக் குள்ளாக்கப்பட்டிருக்கிறாள். இந்த நெருக்கடியிலிருந்து மாதாஜியை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்ற ஒரே எண்ணந்தான் சாவித்திரிக்கு.

ஜோதிர்மயீ தேவிக்கு, ஏனைய பெண்களிடம் இல்லாத நெருக்கமான நட்புறவு சாவித்திரியிடம் இருந்தது. அந்தப் பெண்ணுக்கும் மாதாஜியிடம் அப்படித்தான். மாதாஜி அவளுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் அழுத்தமாகக் கூறினாள்: ''நீங்கள் இங்கே இல்லாவிட்டால் இந்த ஆசிரமமே இருக்காது.''

* * *

நாட்கள் சில கழிந்தன. ஸ்வாமிகள் எந்த முடிவையும் சொல்லவில்லை. இந்தக் குறுகிய காலத்துக்குள்ளே பிரபாவதி தேவி, பக்த கோடிகளில் கணிசமான ஒரு பகுதியினரின் ஆதரவைச் சம்பாதித்துக்கொண்டாள். மாதாஜியின் அந்த அலட்சியப் போக்கு பலரை ஆத்திரப்படுத்தியது. ஸ்வாமிகள் திருப்பாதங்களைக்கூட மாதாஜி அவ்வளவாக மதிப்பதில்லை. நடந்துகொள்ளும் முறை யாருக்கும் பிடிக்கவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

ஓய்வு வேளை. ஸ்வாமிகளின் அறை வாசல் வழியாக ஆசிரமத்தில் தங்கி டருந்த பார்வதி என்ற பெண் நடந்து சென்றாள். அறைக்குள்ளே அடக்கமான சிரிப்பொலி. பார்வதி மறைந்து நின்று பார்த்தாள். திருவடிகள் கைமீது சிரத்தைத் தாங்கியவாறு சோபாமீது படுத்துக் கொண்டிருந்தார்கள். அறைக்குள்ளே பிரபாவதி தேவி இருந்தாள். பார்வதி தன் சொந்த வார்த்தைகளில் அந்தக் காட்சியை மாதாஜியிடம் வருணனை செய்தாள்:

''குற்றமாகச் சொல்லப்படாதம்மா! பிரபாவதியம்மா கதவோரமாகத்தான் நின்னுக்கிட்டிருந்தா. தலை குனிஞ்சிருந்தது. கைவிரல்களை நெறிச்சுக் கிட்டிருந்தா. வெட்கம் வந்தாச் சிரிக்கிறப்பலே சிரிக்கிறா. ஒரு சின்னப் பொண்ணு மாதிரி. திருவடிகள் அப்படியே படுத்துக்கிட்டு என்னவோ வேடிக்கை பேசினாரு. எனக்கு வெக்கமாப் போச்சு.''

அந்தச் செய்தி மாதா ஜோதிர்மயீ தேவியை நடுங்க வைக்கவில்லை. முகத்தோற்றத்திலே மாறுதல் இல்லாமல், கேள்வி ஏதும் கேட்காமல் பார்வதி சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தாள். இத்தகைய ஒரு நிகழ்ச்சி நடைபெறும் என்று மாதாஜி ஏற்கெனவே தெரிந்து வைத்திருந்தாள்போல் தோன்றியது.

* * *

ஸ்வாமிகள் அந்தப் பிரச்னையின் அனைத்து அம்சங்களைக் குறித்தும் பக்த கோடிகளிடம் கேட்டு அவர்கள் கருத்துக்களை ஆராய்ந்தார்கள். ஒரு நாள் வழக்கமான பஜனை நடந்து முடிந்த பின் நடைபெற்ற அவருடைய பிரசங்கத்திலே இன்னும் தெளிவான ஒரு சமிக்ஞை இருந்தது.

அன்றும் துறவறத்தைப்பற்றியே திருவடிகள் பேசினார்கள். அந்தப் பிரசங்கத்தின் குறிப்பிடத் தகுந்த பகுதி இதோ!

''துறவறம் என்றால் செயலற்றிருப்பது என்பது அல்ல. ஓய்வெடுத்துக் கொள்கிற வாழ்க்கையும் அல்ல. இந்த உலகத்திலேயே பல கடமைகளை நிறைவேற்றவேண்டியவர்கள்தான் துறவிகள். அவர்களுடைய இயல்புக்கும் நிறமைக்கும் ஏற்ற வகையில் சமூகத்துக்கு ஆற்ற வேண்டிய தொண்டினை ஒவ்வொரு துறவியும் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆசிரமத்திலே பிரார்த்தனையில் மூழ்கியவாறு வேதாந்த சிந்தனையுடன் நாட்களைக் கழிக்கிற துறவிக்கு அதற்கான வசதிகள் இருக்கவேண்டும். அதுவும் சமூகத்துக்குச் செய்யவேண்டிய சேவைதான். ஓர் ஆசிரமத்தை அநாதை விடுதியாக்குவதிலே காணப்படுகிற எதிர்ப்பை இந்த அடிப் படையிலேதான் பார்க்கவேண்டும்.''

பிரபாவதி தேவி வெற்றி பெற்றாள். ஆனால், அடுத்தபடியாக அடிகள் கூறினார்கள்:

''அநாதைகளுக்கு அபயம் அளிப்பதை வாழ்க்கை விரதமாக அங்கீகரித் திருக்கிற துறவிகளுக்கு அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அவர்களைச் சோர்வடைய விடக்கூடாது.''

ஸ்வாமித் திருவடிகளின் அந்தரங்க நோக்கம் என்னவென்று தெளிவாகி விட்டது. அநாதை மந்திரம் வேறுகத்தான் இருக்கவேண்டும் என்பதே அது. அது ஒரு சரியான முடிவுதான் என்று அனைவரும் கூறினர். ஆசிரமம் ஆசிரமமாகவே இருந்துவர வேண்டும். அநாதை விடுதி அநாதை விடுதியாக இருக்கவேண்டும்.

ஆனால் ஆசிரம மாதா இந்த யோசனையை ஏற்றுக்கொள்வாளா?

இந்த நிலைமையில் மாதாஜி தனிமைப்பட்டுவிட்டாள். திருவடிகளின் முடிவை அனைவரும் ஏற்றுக்கொண்டனர். பிரபாவதி தேவி வெற்றி பெற்றாள். அங்கே அடைபட்டுக் கிடந்த அந்த அநாதைப் பெண்கள் மட்டும், ஒருவேளை, தங்களைப் பாதுகாக்கிறவள் என்ற வகையிலே மாதாஜியுடன் சேர்ந்து நிற்கலாம்.

வாழ்க்கையில் திரும்பவும் தனிமைப்பட்டுவிட்டதாக ஜோதிர்மயீ தேவிக்குத் தோன்றியது. அப்போது அவளுடைய உரிமை உணர்வு தலை தூக்கியது என்றால் அது இயற்கைதானே? உரிமையைப்பற்றிய உணர்வு மட்டும் அல்ல, அந்த ஆசிரமமே அவளுடையதுதானே? அதை அமைத் தவள் அவள்தானே? அந்த உரிமையை மறுக்க யாருக்கு உரிமை இருக் கிறது?

அவளைத் தனியாக வரழைத்துத் திருவடிகள் தமது கருத்தைத் தெரிவித்தார்கள். அநாதை விடுதியைப் பழைய திட்டத்தின் அடிப்படையில் வட்டியூர்க்காவிலே அமைக்கவேண்டும். விரைவிலே அது நடைபெற வேண்டும். ஆசிரமம் ஆசிரமமாகவே நிலை நிற்கவேண்டும். திருவடிகள் சொன்னார்கள்:

''இது ஜோதிர்மயீ தேவிக்கு அவ்வளவு கஷ்டமான ஒரு காரியமாக இருக்காது. இன்று முதற்கொண்டு இதிலேயே கவனம் செலுத்துங்கள். பக்த கோடிகளின் மனப்பூர்வமான ஒத்துழைப்பு உங்களுக்குக் கிடைக்கத் தான் செய்யும்.''

அந்த இறுதி வாசகத்தைச் சொன்னபோது, அவநம்பிக்கை, ஏளனம் ஆகியவற்றின் ஒரு புன்னகை ஒரு விநாடி அவள் வதனத்திலே தவழ்ந்ததை ஸ்வாமிகள் பார்க்காமல் இல்லை. அவர் கேட்டார்:

''ஊம்? என்ன?''

அதற்குத் திடீரென்று பதில் அளித்தாள். மனத்துக்குள்ளே கெட்டி தட்டிக் கிடந்திருந்ததெல்லாம் சேர்ந்து வெடித்துக் கிளம்பி வருவது போல் இருந்தது அது. அந்தக் குரலில் மறுத்துக் கூறுகிற ஒரு துணிச்சலும் இருந்தது.

''அநாதை மந்திரத்தை அமைக்க யாருடைய யோசனையும் தேவையில்லை. அதை நானே அமைக்கிறேன். மேற்கொண்டு நடத்திச் செல்லவும் தயாராக இருக்கிறேன். பக்தர்களின் ஒத்துழைப்பைப்பற்றியும் கூறினீர்கள்.''

மடாதிபதியிடம் பேசவேண்டியது அவ்விதம் அல்ல என்பது நிச்சயம். மாதாஜிக்கு அது தெரியாததல்ல. ஆனால், அப்படிப் பேசியிருக்கக் கூடாது என்று அவள் கருதவில்லை.

திருவடிகள் அதைத் தெரிந்துகொண்டார்களோ, என்னவோ? அவர் சொன்னார்: ''நன்று, குழந்தாய் நன்று. ரொம்பமும் நல்லது. அந்த ஸ்தாபனம் விரைவில் வளர்ச்சி பெறட்டும்!''

அந்த வாழ்த்துக்கூட அவளுக்குப் பிடிக்கவில்லை. எதையெல்லாமோ சொல்ல விரும்பிக் கேட்டாள்:

''ஆசிரமம் ஆசிரமமாகவே இருக்க வேண்டுமென்றால், என்னை நம்பி இங்கே வாழ்ந்து வருகிற இந்த ஏழைப் பெண்களை நான் எங்கே அனுப்புவது?''

கேட்டு முடித்த உடனேயே அந்தக் கேள்வி அவளுக்குத் தவறெனப் பட்டது. தேவையில்லாத ஒரு விடையைச் சொல்ல வைக்கிற கேள்வியாகிவிட்டது அது. ஆயினும் அதையும் சமாளிக்க ஆயத்தமானாள் ஜோதிர்மயீ.

திருவடிகள் கூறினார்கள்: ''ஆம், குழந்தாய்! ஆசிரமம், அதன் அனைத்துப் புனிதத் தன்மைகளுடன் கூடிய ஆசிரமமாகவே இருந்த வர வேண்டும். ஒரு புதிய இடத்தைக் கண்டுபிடித்து அநாதை மந்திரத்தை

அவ்விடத்துக்கு மாற்றவேண்டும். உடனடியாக அதைச் செய்ய வேண்டும். அநாதை மந்தி . . .''

ஸ்வாமிகள் முடிக்கு முன்பே வெடி குண்டுபோல் ஒரு கேள்விக் கணை அவர் முகத்தை நோக்கிப் பாய்ந்து சென்றது: ''நான் இங்கிருந்து வெளியேறிவிட வேண்டும் அல்லவா?''

திருவடிகள் சற்று அழுத்தமாகக் கேட்டார்கள்: ''என்ன குழந்தாய், நம்மிடம் கேட்கின்றாய்?''

ஜோதிர்மயீக்கு விளக்கவுரை அளிக்க அவர் தயாராக இல்லை. அவள் சொன்னாள்: ''அதுதான் நோக்கம். அது மட்டுந்தான்! ஆனால் நான் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். அந்த ஏழைப் பெண்களோடு சேர்ந்து நானும் இங்கிருந்து வெளியேறிவிடுவேன். அப்போது எல்லாருடைய நோக்கமும் நடந்தேறிவிடும். அதுவே நடக்கட்டும்!''

திருவடிகள் அதற்குப் பதில் அளித்திருப்பார். ஆனால், அதைக் காது கொடுத்துக் கேட்க அவள் அங்கே நிற்கவேண்டுமே. ஜோதிர்மயீ தொழுது வணங்கிவிட்டுச் சென்றாள்.

அப்படிப் பேசி வந்திருக்கக்கூடாதென்று ஜோதிர்மயீ தேவிக்குத் தோன்றியது. எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது என்பது சரிதான். ஆனால், அந்த எதிர்ப்பின் தன்மை தவறுகப் போய்விட்டது. அது அவர்களுக்கு வெற்றி அளிக்கிற எதிர்ப்பாகிவிட்டதே.

உரிமை உணர்வு மீண்டும் தலைதூக்கியது. இங்கிருந்து வெளியேறிவிட வேண்டியது யார்? ஜோதிர்மயீ மாதாவா? அல்லது பிரபாவதியும் திருவடிகளுமா? வெளியேறி விடுவேன் என்று சொல்லியிருக்கக்கூடாது. மாறுக, வெளியேற வேண்டுமென்று சொல்லியிருக்கலாம். சொன்னவை எல்லாம் தவறுகிவிட்டது. வாழ்க்கை முழுவதுமே இத்தகைய தவறுகளே ஏற்பட்டிருக்கின்றன.

வாழ்க்கையிலே நிகழ்ந்துவிட்ட முக்கிய சந்தர்ப்பங்களை எல்லாம் ஜோதிர்மயீ சிந்தித்துப் பார்த்தாள். கேசவபிள்ளையைக் காலால் மிதித்து வெளியேற்றிய அன்று, ஒன்றுக்குமாகாத அந்த மனிதன் தேவையில்லை என்றுதான் எண்ணினாள். அன்று வெளியே அனுப்பாமல் வைத்துவிட்டு, மறுநாளும் வரவேண்டுமென்று சொல்லியனுப்பியிருக்கலாம். ராமசந்திரன் நாயருடன் இருந்து வந்த உறவு விஷயத்திலேகூட அப்படித்தான் நடைபெற்றது. அவர் அவளை வேண்டாமென்று சொன்னபோது தங்கம்மா தன் உரிமையை நிலைநாட்ட முயற்சி செய்யவில்லை. அவ்வாறு வேண்டாமென்று சொன்னதை ஏற்றுக்கொள்ள முடியாதென்று சொல்லவில்லை. திரும்பவும் கேசவபிள்ளை வந்திருந்தார். அவளுக்குச் சொந்தமாகி விட்டிருப்பார். உரிமையை ஒருபோதும் உணர்வு பூர்வமாக நிலைநாட்ட முயற்சி செய்யாமல், திறமையைப் பயன்படுத்தாமல், செய்வதன் பலாபலன்களைப் புரிந்துகொள்ளாமல் வாழ்க்கையே தட்டுத் தடுமாறியவாறு ஓடிக்கொண்டிருந்தது. உத்தியோகத்தை ராஜினாமாச் செய்தது சரிதானா என்று நினைவுகூர்ந்து பார்த்தாள். அந்த நினைவு ஒரு

மின்னல்போல் கிளம்பி அவளது நிலையையே ஓர் உலுக்கு உலுக்கியது. எதற்காக இந்தக் காவித் துணியைக் கட்டினேன்? இந்த வாழ்க்கையிலே என்ன பூரிப்பு ஏற்பட்டிருக்கிறது? இப்படிப் பார்க்கையில் 'எதற்காக?' 'எதற்காக?' என்று பன்முறை கேட்டுப் பல கேள்விகளை எழுப்ப வேண்டியிருந்தது.

வாழ்க்கையை முழுமையாக ஆராய்ந்து பார்க்க முற்பட்டபோது ஒரு விஷயம் தெளிவாகவே தென்பட்டது. மறக்கவும் பொறுத்துக்கொள்ளவும் என்றென்றும் தயாரான ஒரு மனிதர் இருந்து வருகிறார்; கேசவபிள்ளை! வேறு யார் இருக்கிறார்கள்? அவளுடைய இதயத்தின் அடித்தளத்திலிருந்து ஒரு கேள்வி எழுந்தது: 'உனக்கு வேறு யார்தான் இருக்கிறார்கள்?' எந்த நேரத்திலும் ஒரே ஒருவர்தான் இருந்திருக்கிறார். இன்னமும் அவரிடமே செல்லலாம். அவரை அணுகினால் அவர் எல்லாவற்றையும் மறந்துவிடுவார்; பொறுத்துக்கொள்வார்; எந்த ஆபத்தையும் தாங்கிச் சமாளித்துவிடுவார்.

பக்த கோடிகள் சிலரிடம் சிறிது எல்லை மீறியே பேசினாள் ஜோதிர்மயீ. இந்தக் காவித் துணியையெல்லாம் கழற்றிக் கிழித்தெறிந்துவிடத் தயங்க மாட்டாளாம்! அதற்கு அவ்வளவு புனிதத் தன்மை ஒன்றும் கிடையாதாம்! ஏழைப் பெண்கள் பலர் அங்கே அபயம் அடைந்திருக்கிறார்கள். அவசியம் ஏற்பட்டால் அவர்களுடன் சேர்ந்து வெளியேறி விடுவதற்குக் கூடத் தயாராக இருக்கிறாளாம்! காவித் துணியைக் கழற்றி வீசியெறிந்து விட்டால், ஆசிரம மாதா என்ற பதவி போய்விடுமென்று அறியாதவள் அல்ல அவள்.

* * *

மாதாஜி இப்போது பஜனை போன்ற சடங்குகளில் ஒழுங்காக வேளாவேளைக்குப் பங்கெடுப்பதில்லை. இரண்டிலொரு முடிவுக்காகக் காத்திருப்பவள்போல் தோன்றியது. பிரபாவதி தேவி வெற்றி பெற்றாள். பாதை தெளிவாகத் தெரிந்தது. அதிலே அவளுக்கு மிகுந்த சந்தோஷந்தான். ஜோதிர்மயீ மாதா அதை எல்லாம் கவனித்து வந்தாள்.

ஜோதிர்மயீயும் சாவித்திரியும் தனிமையிலே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

சாவித்திரி சிறிது வியப்புடன் கேட்டாள்: ''நடக்கிற காரியமா அம்மா?''

ஜோதிர்மயீ தேவி திடநம்பிக்கையுடன் கூறினாள்: ''நீ பாரம்மா! என்ன நடக்கிறதென்பதைப் பார்! நான்தான் அவரை வேண்டாம் என்றேன். என்னை வேண்டாமென்று அவர் ஒருபோதும் சொல்லவில்லை.''

அவள் ஒரு விநாடிக்குப் பின் கூறினாள்: ''கடவுள் செயல் அது.''

சாவித்திரியால் அதை அப்படியே நம்ப முடியவில்லை. அவள் கேட்டாள்: ''அவருக்கு மனைவியும் ஒரு மகளும் இருக்கிறார்களே? அப்போ . . . அது...எப்படி நடக்கும் அம்மா?''

ஜோதிர்மயீ தேவி கூறினாள்: ''நான் பிறந்ததே அவருக்காகத்தான். நான் பலமுறை அவரை நிராகரித்திருக்கிறேன். ஆனால் விதி அதை ஒப்புக்கொள்வதில்லை. இனிமேல் நான் அவருக்கு மட்டும் சொந்தமாயிருக்கத் தீர்மானித்து விட்டேன்.''

இந்த முடிவை அவர் ஏற்றுக்கொள்வாரா என்ற விஷயத்தில் சாவித்திரிக்குச் சந்தேகந்தான். எந்த ஒரு புருஷனுவது அப்படி ஏற்றுக் கொண்டிருக்கிறானு? ஆனால் ஜோதிர்மயீக்குச் சந்தேகமே இல்லை. மாதாஜி சொல்ல வந்ததைச் சொல்லி முடித்தாள்:

''அவர் எனக்குச் சொந்தமாயிருக்க வேண்டுமென்றே விதி தீர்மானித்திருக்கிறது.''

ஆசிரமத்தில் நடைபெற்ற இந்தப் பேராட்டிப் பொருமைகளைப் பற்றிப் பக்த கோடிகள் பரவலாகப் பேசிக்கொண்டார்கள். ஸ்வாமித் திருப்பாதங்களால்கூடப் பலன் அளிக்கும் முறையில் தீர்மானமான ஒரு கட்டளையைப் பிறப்பிக்க முடியவில்லை என்ற கருத்து நிலவியது. அதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. பிரபாவதி தேவியிடம் ஸ்வாமித் திருப்பாதங்களுக்குப் பிரத்தியேகமான அன்பு இருக்கிறது என்ற கருத்துடையவர்கள் இருக்கிறார்கள். ஆசிரம மாதா தன்னிஷ்டம் போல் நடந்துகொள்பவள், வேண்டியதும் வேண்டாததுமான பிரச்னைகளில் தலையிட்டு எதிரிகளை உண்டாக்கி விடுவாள் என்ற கருத்துடையவர்களும் இருக்கிறார்கள். அநாதைப் பெண்களுக்கான விடுதி ஒன்றை அமைப்பது மிக மிக அவசியம் என்று ஒரு சிலர் வாதித்தனர். நாம ஜபம், பஜனை ஆகியவை மட்டும் போதாது; இத்தகைய சமூக சேவை கூட அவசியம் அனுஷ்டிக்கப்பட வேண்டியதுதான். இன்னொரு பகுதியினருக்கு முற்றும் மாறுபட்ட கருத்துத்தான். இந்தப் பெண் துறவிகள் வாழ்க்கையின் மதிய வேளையில் துறவறத்தை ஏற்றுக்கொண்டவர்கள். அவர்களுக்கு, முந்தைய வாழ்க்கையின் அநுபவங்கள் பல. எவ்வளவு கட்டுப்படுத்தினாலும் பழைய பொருமைகளும் பேராசைகளும் தலை தூக்கத்தான் செய்யும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வரலாறு இருக்கிறது. நினைவுகள், எண்ணங்கள் ஆயிரம் இருக்கின்றன. நெடுமூச்சுக்கள் சில சந்தர்ப்பங்களில் வெளிக் கிளம்பி விடலாம் அல்லவா? குமுறி எழுகிற உணர்ச்சிகளைப் பல்லைக் கடித்துக் கட்டுப்படுத்தி வைப்பவர்களாக இருக்கலாம். இவ்வாருகப் பக்த கோடிகளுடைய ஆன்மிக வாழ்க்கையின் பாதையிலே ஒரு சில முட்கள் பரவிக் கிடந்தன.

ராமசந்திரன் நாயருடைய மனைவி பக்த கோடிகளில் ஒருத்தி. ஒரு பக்தரின் குடும்பத்திலே பிறந்து வளர்ந்தவள். விமலாவுக்குத் தன்னியானந்தாசிரமம் என்றால் அவ்வளவாகப் பிடிக்காததுதான். ஆயினும்

ஆன்மிக உணர்ச்சியின் வளர்ச்சிக்கு எந்தவிதமான வசதியும் இல்லாத வாழ்க்கையை அவளால் சகித்துக்கொண்டிருக்க முடியாது. எனவே தான் அவள் இந்த ஆசிரமத்துக்கு வந்து போகிறாள். தன்னியானந்தாசிரமத்தில் நடைபெற்று வந்த சடங்குகளும் நிகழ்ச்சிகளும் மிகவும் விரசமானவையாக அவளுக்குத் தோன்றின. விமலாவுக்குச் சங்கீதத்திலும் நடனத்திலும் ஆர்வம் உண்டு. அவள் பிறந்த ஊரிலுள்ள ஓர் ஆசிரமத்துடன் இருந்து வந்த தொடர்பு நிமித்தமாக அவை ஏற்பட்டதாம்!

விமலாவுக்கு ஓர் எண்ணம் உதித்தது. ஆன்மிக விஷயங்களுக்கான ஒரு மையம் பலருக்கும் இன்றியமையாததாகும். தன்னியானந்தாசிரமமோ ஏனோதானோ என்றிருக்கிறது. மலபாரிலிருந்து உமாதேவியை வரவழைத்து ஓர் ஆசிரமத்தை நிறுவினால் என்ன? அவள் திருவனந்தபுரத்துக்கு வந்த நாள் முதற்கொண்டு உமாதேவியைப் புகழ்ந்துகொண்டிருக்கிறாள். ஆனால், திருவனந்தபுரத்துவாசிகள் அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் அளித்ததாகத் தெரியவில்லை. அந்த ஆசிரமம் பெண்களுடையது மட்டுமாக இருக்கவேண்டும். அங்கே பக்தர்களாக ஆடவர்கள் வரலாம். ஆனாலும், மடாதிபதி ஒரு பெண்ணாகத்தான் இருக்கவேண்டும். பஜனை, கீதா பிரவசனம் ஆகியவற்றுடன் இசை நடன நிகழ்ச்சிகள்கூட இடம்பெற வேண்டும்.

ஒரு சில பெண்மணிகள் சேர்ந்து உமாதேவியின் ஓர் ஆசிரமத்தைத் திருவனந்தபுரத்திலே நிறுவ முடிவெடுத்தனர்.

அத்தியாயம் 37

ஓர் இரவு

மாதா ஜோதிர்மயீ தேவி, தனது வாழ்க்கையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சில நாட்களைக் கடத்திக்கொண்டிருந்தாள். இரண்டிலொன்று முடிவெடுக்கப்பட வேண்டியிருந்தது. உண்மையிலேயே, அந்தப் பிச்சைக்காரப் பெண்களிடம் கொண்டிருந்த பிரத்தியேகமான பரிவு சில நாட்களுக்குப் பிறகு குறைந்தது. அவர்களோடு சேர்ந்து கொண்டு, ஆசிரமத்திலிருந்து வெளியேறி வந்து தெருவிலே பிச்சை எடுக்கத் தயார் என்று சொன்னவள்தான். மனம் அறிந்தே அவள் அவ்வாறு கூறினாள். இன்றுகூட அவர்கள் பிரச்னையில் சிரத்தை கொண்டவளாகத்தான் இருந்தாள். ஆனால் அவளுடைய இலட்சியம் மாறியிருக்கிறது. வெகு விரைவிலே ஓர் அநாதை ஆசிரமத்தை நிர்மாணிப்பதற்கான திட்டங்களைப் பற்றி அல்ல இன்று அவள் யோசிப்பது. மாதா ஜோதிர்மயீ தேவி தற்போதைய தன் வாழ்க்கைமீது வெறுப்படைந்தாள். தான் இத்தகைய வாழ்க்கை வாழப் பிறந்தவள் அல்ல என்று அவளுக்குத் தோன்றியிருக்கிறது. இந்தத் துறவற வாழ்க்கையை ஏற்றுக்கொண்டதே தவறுகிவிட்டது. பின் எத்தகைய வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்திருக்கவேண்டும்? வேறு விதமான வாழ்க்கையை நடத்தப் போதுமான வசதிகள் அனைத்தும் அவளுக்கு இருந்திருக்கின்றன.

உடமையுரிமையைப்பற்றிய உணர்வு, தடுத்து நிறுத்த முடியாத தன்னிச்சைப் போக்கு, ஏற்பட்டுவிட்ட பெரிய இழப்பைப் பற்றிய கவலை கலந்த உணர்ச்சி, தற்போதைய நிலைமை—எல்லாமாகச் சேர்ந்து சென்ற கால அநுபவங்களின் நெருப்புச் சூளையில் உருகியபோது—மாதா ஜோதிர்மயீ தேவி தங்கம்மாவாக மாறிவிட்டாள். பழைய தங்கம்மாவுக்கு அறிவு இருக்கவில்லை. பலாபலன்களைப்பற்றிய அலட்சியப் போக்குத் தான் இருந்திருக்கிறது. அந்தத் தங்கம்மா கேசவபிள்ளையைச் சும்மா ஊதிப் பறக்கவிட்டுக்கொண்டிருந்தாள். அவர் பறந்து சென்றபோது தங்கம்மா எதையும் இழந்துவிட்டதாகக் கருதவில்லை. அந்த மதிமோசத்தை அவள் அறிந்ததாகக்கூடத் தோன்றவில்லை. ராமசந்திரன் நாயர் அவளைக் கரும்பைப்போல் சுவைத்துவிட்டுச் சக்கையைப்போல் வெளியே துப்பிவிட்டபோதுகூடத் தங்கம்மாவுக்கு அது ஒரு பிரச்னையாகவே தோன்றவில்லை. பின், பறந்து சென்ற அந்தப் பறவை தன் கரத்தின்மீது வந்து அமர்ந்து அரவமிட்டபோதுகூட அவள் அதைப்

பிடித்துக் கூட்டுக்குள்ளே அடைந்து வைக்கவில்லை. அதைப்பற்றிக் கவனிக்கவே இல்லை. அது அவளைச் சுற்றியே வட்டமிட்டுப் பறந்து கொண்டிருந்தது. சேகர விலாஸம் என்பது ஒரு சொத்து என்று ஒருபோதும் அவள் கருதவில்லை. வேலையைக் காற்றிலே பறக்கவிட்டாள்; அது சின்னச் சாமியாரின் சொற்படி நடந்தது. பின் துறவறம் பூண்டாள். தற்போதைக்கு இந்தக் காவித் துணிக்குக்கூடப் பொருள் இல்லாமற் போய்விட்டது.

இனி என்ன செய்வது? சாவித்திரி வந்தாள். அவளுடைய கதையைத் தங்கம்மா கேட்டாள். தன் கதைக்கும் சாவித்திரியின் கதைக்கும் ஒற்றுமை உண்டு. இரண்டும் சமமானவை. இழந்த வாழ்க்கையைப்பற்றிய உணர்வு தங்கம்மாவுக்கு ஏற்பட்டது, அதனால் இருக்கலாம். நிகழ்ந்ததெல்லாம் மடத்தனம்; பெரிய மடத்தனம். ஒரு சாவித்திரியாக மாறிவிடாதது அதிருஷ்டத்தினால்தான் என்றே சொல்ல வேண்டும்.

தங்கம்மாவுக்கு, தான் இழந்ததையெல்லாம் திரும்பப் பெறவேண்டுமென்ற எண்ணம் உதித்திருக்கலாம். உடைமையுரிமைபற்றிய உணர்வு வாழ்க்கையின் ஒரு சக்தியாக மாறியிருக்கலாம். கேசவபிள்ளையாரிடம் கடமைப்பட்டிருக்கிறார்? வேறு எந்த ஒரு மனிதனுக்காவது, வாழ்க்கையில் அவள் ஏதேனும் உதவியளித்திருக்கிறாளா? கேசவபிள்ளை என்ற குமாஸ்தா அவள் கையில் தானே வந்து விழுந்தான்! சுயமாக அவள் அவனை நாடிப் போகவில்லை. ராமசந்திரன் நாயரின் கைக்குள்ளே தங்கம்மா அகப்பட்டுக்கொண்டாள்; அதை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். ஆயினும் கேசவபிள்ளை அவளுக்கு மட்டும் உரித்தானவர் தாமே? அவளுக்கு மட்டும்! ஒரு வீட்டைக் கட்டிக்கொடுத்து விட்டதனால் மட்டும் அந்தக் கடன் தீர்ந்துவிட்டதா? என்றென்றும் கேசவபிள்ளை அவளுக்குச் சொந்தந்தான். இன்றுவரை அவரிடமிருந்து அவளுக்கு ஒன்றுமே கிடைத்ததில்லை. எவ்வகையிலும் அவரிடம் கூச்சமடையவேண்டிய அவசியம் இல்லை. எஞ்சியிருக்கும் வாழ்க்கையையாவது வாழவேண்டும். வாழ்க்கையின் வசந்த காலம் வீணாகிவிட்டது, போகட்டும்! எதற்காகப் பிறந்தேன் என்பதுபற்றித் தெளிவான பார்வை தற்போது தனக்கு ஏற்பட்டுவிட்டதாகத் தங்கம்மாவுக்குத் தோன்றியது. இந்தக் காவித் துணியைக் கட்டி நடப்பதற்காக அல்ல. தற்போதைக்கு ஏற்பட்டிருக்கிற பார்வையின் வெளிச்சத்திலே நிகழ்ந்த காலத்தைப்பற்றி அவள் ஆராய்ந்து பார்த்தாள். அவள் முன்னாலுள்ள பாதையிலேகூட அந்த வெளிச்சம் பரவி நின்றது.

* * *

கேசவபிள்ளையைப் பொறுத்தவரையில் பொறுத்துக்கொள்ள முடியாத தவறுகளே இழைத்திருக்கிறாள் தங்கம்மா. அதைப்பற்றிய உணர்வுடன்தான் தங்கம்மா இருந்து வருகிறாள். அந்த நாட்டுப் புறத்து வாலிபன்

அவளே நேசித்திருந்தான். அவன் ஏதாவது தவறு செய்திருக்கிறானு? நினைவுபடுத்திக்கொள்ளக்கூட ஒன்றுமில்லை. அவள் ஏதேனும் தவறைச் செய்துவிட்டுச் சென்றுல்கூட, அவன் ஏன் என்று கேட்டதில்லை. அவளே எப்போதாவது துன்புறுத்தியிருக்கிறானு? நினைவுகூர்ந்து பார்த்தாள். இல்லை! என்றுமே அநுதாபத்தைத்தான் காட்டியிருக்கிறான். ஆனால், அந்த அன்பைப் புரிந்துகொள்ளத் தன்னால் இயலாமற் போயிற்றே என்று தங்கம்மா மனம் வருந்தினாள்.

கடன்பட்டிருக்கிறார் என்பதனால் தானு, தகாதவற்றைச் செய்துவிட்டேன்? கடன்பட்டிருப்பதனால் தானு, அவர் தனக்கு உதவி புரிந்தார்.

தங்கம்மா தற்போதைக்குத் தனிமைப்பட்டிருக்கிறாள். அவளுக்கு யார் இருக்கிறார்கள்? என்ன இருக்கிறது? ஒன்றுமே இல்லை. அங்கேயே போகலாமே! போகலாம். ஆனால் இனிமேல் அங்கே போவதென்றால், அது சாசுவதமாக இருக்கவேண்டும். அங்கிருந்து ஒருபோதும் பிரிந்து போகக்கூடாது.

அதற்குக்கூடத் தனக்கு உரிமையுண்டு என்றே அவளுடைய மனம் வாதம் புரிந்தது. அவளுடைய பெண்மையை முதல் முதலாக மதித்த ஆடவர் கேசவபிள்ளைதான். முதல் முதலாக அவளை முத்தமிட்டவர் கேசவபிள்ளைதான். முதல் முதலாக ஓர் ஆடவரின் அள்ளியணைப்புக்காக அவள் நின்று கொடுத்தது கேசவபிள்ளையின் முன்னால்தான். வாழ்க்கை எனும் நடனத்திலே தாளம் தவறிக் கால் சறுக்கி எங்கேயோ சென்று விழுந்துவிட்டது யார் காரணமாக? தங்கம்மா அந்த நாட்களைப் பற்றித் தெளிவாகவே சிந்தித்துப் பார்த்தாள். ஊசலாட்டம் கொண்டதொரு பெண்ணின் சபலச் செயல்களுக்குத் தடை போடுவது அன்புடைய ஆடவரின் கடமை அல்லவா? அவள் இழைத்த தவறைப்பற்றி அவர் ஒரு முறையாவது விசாரித்ததில்லை. தவறுகளைக் கண்டு மன வருத்தம் காட்டியதில்லை. தவறு இழைத்தவளைக் கடுமையாக அதட்டியிருந்தால், ஒருவேளை, அன்றே நல்வழியில் நடந்திருப்பேன் என்று தங்கம்மா வாதாடலாம். ஒருமுறை முகம் சிவந்து ஒரு வார்த்தையாவது பேசியதில்லை . . . அந்தக் காதலன் அத்தகைய ஒருவனாக இருந்திருந்தால் . . .? காதலியை அடக்கி வைக்க முடியாதவன்; எனவே அவன் கணவனாகவில்லை.

தவறுகள் எத்தனை, எத்தனை? அவரிடம் சென்று ஒப்புக்கொள்ள வேண்டும். காலைப் பிடித்து மன்னிப்பைக் கோரவேண்டும். அவ்வாறு காலைக் கட்டிப் பிடிக்கும்போது, தவறுகளை ஒவ்வொன்றாகக் கேட்டுக் கேட்டு அவர் அந்தக் காலால் மிதித்து எறிந்துவிட்டால்? அது ஓர் ஆனந்தம். இனிமேல் தவறுகள் ஒன்றும் செய்யக்கூடாதென்று சொல்லவேண்டும். கிழித்த கோட்டைத் தாண்டி நகரக்கூடாதென்று கட்டளையிட்டால் அதைச் சிரமேல் தாங்கி நடப்பாள் தங்கம்மா. அவள் தனது அனைத்து உணர்ச்சிகளையும் கேசவபிள்ளையின் திருப்பாதங்களிலே சமர்ப்பிக்கத் தயாராகிவிட்டாள்.

ஆனால், இந்தப் பாவக் குவியலைச் சுமந்தவாறு எங்ஙனம் அங்கே சென்று நிற்பது? அவளுடைய தெய்வம் வாழ்க்கையிலே வழி மாறி வெகு தூரம் சென்றுகிவிட்டதே! அவர் இன்று ஒரு மனைவியின் கணவர். ஒரு மகளுடைய தந்தை. ஒரு குடும்பத்தின் தலைவர். அவருடைய அந்த வாழ்க்கையிலே அவளுக்கு எந்த இடம் கிடைக்கும்?

இந்தப் பூவின் அழகு மாய்ந்துவிட்டது. இனிமேலும் இது கவர்ச்சியாக இருக்குமா? அன்பு நிறைந்த இந்த இதயத்தை அர்ப் பித்தால் அதை நம்புவாரா? நீர் நிறைந்த கண்களால் நோக்கினால், அதை நம்ப யார் இருக்கிறார்கள்? இந்தக் கண்களுக்கு இனிமேல் அந்தத் திறமை இருக்குமா? இந்த இதழ்களில் தவழ்கிற புன்னகை இனிமேலும் கவர்ச்சியாக இருக்குமா? எந்தத் திறமைதான் எஞ்சியிருக்கிறது? ஒன்றுமே இல்லை. இந்தத் தூணியிலுள்ள பாணங்கள் எல்லாம் பழையவை, துருப் பிடித்தவை. ஒன்று மட்டும் இருக்கிறது. உண்மை யைத் திறந்து சொல்வது. சொல்ல உரிமை உண்டு என்பது மட்டுமே நற்போதைக்கு இருக்கிற பலம்.

* * *

ஒரு நாள் மாதா ஜோதிர்மயீ தேவி குமாரிஷனையிலுள்ள அரசாங்க விடுதியில் தங்கியிருந்த தலைமைக் காரியதரிசியின் முன் சென்று நின்றாள். மொழிவாரி மாநிலப் பிரிவினை சம்பந்தமான தஸ்தாவேஜு களைப் பார்வையிட அவர், மனைவியின் அநுமதியைப் பெற்றுக்கொண்டு அங்கே வந்து தங்கியிருந்தார். ஒருவேளை அதுதான் சந்திப்புக்குத் தகுந்த இட மென்றுக் கருதி அவள் அங்கே சென்றிருக்கவேண்டும்.

அழுகிற தங்கம்மாவைக் கேசவபிள்ளை ஒருபோதும் கண்டதில்லை. அவள் விசும்பி விசும்பி அழுதாள். கேசவபிள்ளை எழுந்து நின்றார்.

''உம்! என்ன? என்ன? ஏன் அழுகிறாய்?''

சொல்ல நாவெழுவில்லை தங்கம்மாவுக்கு. அது நடிப்பாக இருக்க வில்லை. அழவேண்டுமென்று முன்னதாகவே யோசித்துத் தயார் செய்து அழுகையை ஒரு தந்திரமாகப் பயன்படுத்திக்கொண்டு நிற்கவில்லை அவள். வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்விகளைப்பற்றிய உணர்வு முழுவதுமாகக் கண்ணீராக வெளிக் கிளம்பி வந்தது. அந்த வேகத்தில் ஏற்பட்டவைதான் அந்த விசும்பல்கள். கேசவபிள்ளை பிரமித்தார். இத்தகைய தோற்றத்தை அவளிடம் ஒருபோதும் கண்டதே இல்லை அல்லவா?

ஒரு பெண் தூரவி தன் முன் வந்து நிற்கிறாள் என்பதைக் கேசவபிள்ளை மறந்துவிட்டார். அது தங்கம்மா!

''என்ன இது? சொல்!''

அவர் மாதாஜியை நோக்கி நடந்து சென்றார். முகத்தைப் பொத்தி யிருந்த கைகளை விலக்கினார்.

கண்ணீர் தோய்ந்திருந்தது முகம். கண்ணீர்த் துளிகளை உதிர்த்துக் கொண்டிருந்த கண்கள் சிவந்திருந்தன. இதழ்கள் துடித்தன. ஏதோ பெரிய சோகந்தான். என்னவென்று அவருக்குப் புரியவில்லை. ஆவலுடன் கேட்டார்: ''என்ன? விஷயத்தைச் சொல்! என்ன இருந்தாலும் சரி, சொல்!''

அவளுடைய தோள்மீது கழுத்தைச் சுற்றிக் கை போட்டார் கேசவ பிள்ளை. அந்த ஸ்பரிசத்துக்கு மின்சாரத்தின் தன்மை இருந்தது. அவருடைய நரம்புகள் சிறிது முறுக்கேறின. அது ஒரு பலவீனம் என்றே எண்ணலாம். அவர் திரும்பவும் கேட்டார்:

''சொல்லம்மா!''

மாதா ஜோதிர்மயீ தேவி தலையை உயர்த்தினாள். நீர் நிறைந்த நயனங்களை அவர் முகத்தின்மீது நாட்டிச் சொன்னாள்:

''எனக்கு யாரும் இல்லை; ஒன்றும் இல்லை.''

ஜோதிர்மயீ உடனடியான ஒரு பதிலை எதிர்பார்த்தாள். மறு விநாடியிலேயே அந்தப் பதில் அவர் முகத்திலிருந்து கிளம்பி வெளியே வரவேண்டும், இல்லாவிட்டால் அதற்கடுத்த விநாடியிலாவது. அந்தப் பதில் இதுவாக இருக்கவேண்டும்: 'நான் இருக்கிறேன்; என்னுடைய தெல்லாமே இருக்கின்றன.'

அது வெளிக் கிளம்பி வரவில்லை. நிமிடங்கள் நகர்ந்து சென்றன. அவர், அவள் தோள்மீதிருந்து கையை எடுத்துக்கொண்டார். கைகளைப் பின்னல் கட்டியவாறு நடந்துசென்று ஆசனத்தில் அமர்ந்துகொண்டார்.

நேரம் ஊர்ந்து சென்றது. அவருடைய சிந்தனை கலையவில்லை. மாதாஜி அழுதவாறு நின்றாள்.

சிந்தித்தார், திரும்பத் திரும்பச் சிந்தித்தார். எல்லாவற்றைப் பற்றியும் சிந்தித்தார். காரிய காரணங்கள் அனைத்தும் தெளிவானவை தான். நிகழ்ச்சிகளை வரிசையாக, ஒழுங்காக நினைவுபடுத்திக் கொண்டாலே போதும். சங்கிலித் தொடர்போன்று ஒன்றோடொன்று தொடர்ந்து காட்சிகள்போல் தோன்றும். ஆதிக்க உரிமை படைத்த ஓர் அதிகாரியின் அல்லது ஒரு ரட்சகரின் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற கௌரவத்துடன் கேசவபிள்ளை கேட்டார்:

''இப்போது புரிந்துகொண்டாயா?''

மாதா ஜோதிர்மயீ தேவி விரைந்து சென்று அவர் பாதங்களிலே விழுந்து அவற்றைக் கட்டிப் பிடித்தாள். அவர் கால்களைப் பின்னுக்கு இழுத்தார். ஆனால் அவள் விடவில்லை.

''என் தலையிலே மிதியுங்கள்! என்னை மன்னியுங்கள்!''

அவர் அவளைப் பிடித்து எழுந்து நிற்கச் செய்தார். அவள் நாற்காலியோடு ஒட்டிச் சேர்ந்து நின்றாள்.

அவர் ஆறுதலான குரலிலே கேட்டார்: ''ஊ...ம்? இப்போது என்ன நேர்ந்தது? அதைச் சொல்!''

அது ஒரு நீண்ட கதை அல்லவா? திடீரெனச் சொல்லி முடிக்க முடியுமா? தற்போதைய நிலைமையைப்பற்றி மட்டும் சொன்னால் போதுமா? அப்படியானால், அன்றொரு நாள் வட்டியூர்ப் பகுதியில் அநாதை விடுதியை அமைக்க நிலத்தைப் பதிவு செய்துதர வேண்டுமென்று தலைமைக் காரியதரிசியான கேசவபிள்ளையை அணுகியபோது, அவர் தன்னிடம் கூறியதெல்லாம் சரியாகிவிட்டதென்று இப்போது சொன்னால் போதும். ஆனால், ஜோதிர்மயீ விரும்பியது அது அல்ல. 'என்னை ஏற்றுக் கொள்ளவேண்டு'மென்று சொல்லவே அவள் விரும்பினாள். அப்போது அந்தக் கருத்து தெளிவானதாக இருக்கவில்லை. அதைச் சொல்ல நாக்கு இசையவும் இல்லை.

அவள் திரும்பவும் அதையே கூறினாள்: ''எனக்கு யாரும் இல்லை; ஒன்றும் இல்லை.''

சற்று இரக்கமற்றதாகவே படலாம், அவர் இதழ்களை விரித்து ஒருமுறை புன்னகை செய்தார். அவர் சிறிது நேரம்வரையில் நாற்காலியின் கைமீது ஏதோ தாளத்தைத் தட்டிக்கொண்டிருந்தார். பிறகு கேட்டார்: ''நான் இப்போது என்ன செய்யவேண்டுமென்று சொல்கிறாய்?''

அதற்குப் பதில் வரவில்லை. அவருடைய கன்னத்தின்மீது ஒரு துளிக் கண்ணீர் உதிர்ந்து விழுந்தது. அவர் தலை தூக்கிப் பார்த்தார்.

''ஊம்?''

தழுதழுத்த குரலில் ஜோதிர்மயீ கூறினாள்: ''எனக்கு மன்னிப்பு அளியுங்கள்!'' அப்புறம் அவள் கோரினாள்: ''மன்னித்தேன் என்று ஒரு முறை சொல்லுங்கள்!''

அநுதாபத்துக்குரிய அந்த வேண்டுகோள் கேசவபிள்ளையின் இதயத்தில் எங்கோ சென்று பதிந்தது. கண்ணீரிலே தோய்ந்திருந்த அந்த வதனத்திலிருந்து வெளிக் கிளம்பிய அந்த வேண்டுகோளில் அசாதாரணமான சக்தி ஒன்று இருந்தது. கேசவபிள்ளை கடந்து விட்ட வருடங்கள் பலவற்றைத் தாண்டிச் சென்று பார்த்தார். அரசாங்கத் தலைமையலுவலகத்திலே ரெவின்யூ இலாக்காவிலே பதினைந்து ரூபாய் சம்பளம் பெற்றுக்கொண்டிருந்த குமாஸ்தாவாக இருந்த காலை கட்டம்! இன்று இந்த நிலைக்கு வந்து சேர மூலகாரணமாக இருந்தவள் இவள்தானே? இவள் யாருக்குத்தான் தவறு இழைத்திருக்கிறாள்? தனக்குத் தவறு ஏதும் இழைத்திருப்பதாகக் கேசவபிள்ளைக்குத் தோன்றவில்லை. நினைவில் இருக்கக்கூடியதாக ஒன்றுமில்லை. தனக்குத் தானே தவறு இழைத்துக்கொண்டிருக்கிறாள் இவள். அதற்காக மன்னிப்பு அளிக்க வேண்டுமென்று கோருகிறாள்.

அவள் திரும்பவும் கேட்டாள்:

''என்னை மன்னிக்கமாட்டீர்களா?''

கேசவபிள்ளையின் கரம் அவளுடைய இடுப்பைச் சுற்றி வளைத்துக் கொண்டது. அவளை அங்ஙனம் அணைத்துப் பிடித்தபடி புன்னகை யுடன் கூறினார்: ''உன்னை மன்னித்திருக்கிறேன்.''

வெறும் பேச்சுக்காகச் சொல்லப்பட்ட வாசகம் அது. ஆனால், மாதா ஜோதிர்மயீ ஆறுதல் அடைந்துவிட்டாள் என்று தோன்றியது. அவள் ஒரு படி ஏறிவிட்டாள்.

மாதாஜி காவி வேஷ்டியின் தலைப்பினால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். கேசவபிள்ளையின் கரம் அவள் இடுப்பைச் சுற்றி இரண்டு மூன்று முறை இறுக்கிக்கொண்டது. ஜோதிர்மயீ அதற்கு இசைந்தவாறு நின்று கொடுத்தாள்.

சிறிது நேரத்துக்கு முன் கண்ணீர் ததும்ப நின்றிருந்த அந்தக் கண்கள் இப்போது உணர்ச்சியால் ஈரமாகிவிட்டதாகக் கேசவபிள்ளைக்குத் தோன்றியது. அழுகை காரணமாக முகமும் கண்களும் சிவந்திருந்தன. அந்தச் சிவப்பு அவற்றைக் கூடுதலாக வசீகரமாக்கியிருந்தது. அவளுக்கு ஏதோ ஒரு தேவை. அவளுக்கு ஒரு முத்தம் தேவையாக இருக்கிறபோது அந்த முகத்தோற்றம் எப்படி இருக்குமென்று கேசவ பிள்ளைக்குத் தெரியும்.

அவர் கேட்டார்: ''ஓஹோ! இதற்காகத்தானா, இந்தக் கண்ணீரும் கம்பலையும்? இதுக்கென்ன, ஏதாவது கஷ்டம் இருக்கா?''

கேசவபிள்ளை தன் முகத்தை நீட்டிக் காட்டினார். மாதா ஜோதிர்மயீ தேவியின் வதனம் அவர் முகத்தை நோக்கிச் சென்று ஒட்டிக் கொண்டது.

கேசவபிள்ளை சிறிது நகைச்சுவையுடன் கூறினார்: ''அந்தக் காவித் துணியின் புனிதத் தன்மையைக் கெடுத்துடாதே அம்மா!''

''ஓ! காவித் துணி! மண்ணுங்கட்டி! இது ஒரு பெரிய போலி.''

அது கேசவபிள்ளைக்குச் சிரிக்கச் சந்தர்ப்பம் அளித்த விடையாக அமைந்தது.

கேசவபிள்ளையைப் பொறுத்தவரையில் அந்தச் சந்திப்புக்குச் சில குறிப்பிடத்தக்க விசேஷம் இருந்தாலும் மிதமிஞ்சிய முக்கியத்துவம் இருப்பதாக அவர் நினைக்கவில்லை. தங்கம்மா ஒரு துறவியாக மாறினாள். அது தன்னைப் பொறுத்தமட்டில் நல்ல காரியமென்றுதான் அவர் எண்ணியிருந்தார். அவள் தடம் மாறி நடந்து சென்றாள். அந்தத் தடத்தை விட்டுவிட்டுத் திரும்பி வருவாள் என்றோ, அவ்வழியே அவள் எங்கே சென்று நிற்பாள் என்றோ அவர் யோசித்ததே இல்லை. ஆனால், திரும்பி வந்து சேர்ந்ததைப்பற்றி அவருக்கு வியப்பும் ஏற்படவில்லை. அது நிகழக்கூடிய ஒன்றுதான். அவள் எந்த எந்தப் பாதைகளிலோ சஞ்சரித் திருக்கிறாள். திரும்பி வந்திருக்கிறாள்!

ஆனால், அந்த அழுகை உண்மையானதென்றே கேசவபிள்ளைக்குத் தோன்றியது. வரவழைக்கப்பட்ட அழுகை அல்ல. அவளால் அழுகையை வரவழைக்க முடியுமென்று அவருக்குத் தோன்றவில்லை.

அவளால் முடியாது. அவளால் நடித்திருக்க முடியுமென்றால், அவள் வாழ்க்கை இத்தகைய நிலைக்கு வந்திருக்கமுடியாது. அழ வேண்டிய, சிரிக்கவேண்டிய, மனத்திலுள்ளதை மாற்றிக் காட்ட வேண்டிய, நன்றி கூறவேண்டிய, எதிர்ப்பைத் தெரிவிக்கவேண்டிய எத்தனை எத்தனை சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன! அழுதால் பலன் அடைய முடியுமென்ற சந்தர்ப்பத்தில் அவள் அழுததில்லை. சிரிப்பு வராத சந்தர்ப்பத்தில் சிரித்ததில்லை. மனத்தில் உள்ளதை மறைத்து வைத்ததில்லை. நன்றி கெட்டவளெனக் காட்டியிருக்கிறாள். ஆத்திரம், சங்கடம், கோபம் ஆகியவற்றைப் பலாபலன்களை நினைத்துப் பார்க்காமல் வெளியே கொட்டியிருக்கிறாள். அதுதான் தங்கம்மாவின் வாழ்க்கை. எனவே அவள் அழுதது தானாக வந்த அழுகைதான். அவள் அவர் பாதங்களைப் பிடித்தது நடிப்பு அல்ல. மன்னிப்பைக் கேட்க வேண்டிய சந்தர்ப்பங்கள் பல நேர்ந்திருந்தபோதிலும், இன்று வந்து மன்னிப்பைக் கேட்டது மன்னிப்பைப் பெறவேண்டுமென்று கருதியே தான். ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்கலாம். 'எனக்கு யாரும் இல்லை; ஒன்றுமில்லை' என்றல்லவா சொன்னாள்? அந்தச் சாமியார் அவளை அங்கிருந்து வெளியே துரத்தியிருப்பார் என்று கேசவபிள்ளை அனுமானித்தார். அவர் அவ்வாறு ஏற்கனவே முன்னெச்சரிக்கை செய்திருந்தார் அல்லவா? இப்போது ராஜபாதையே துணை என்றுகிவிட்டிருக்கலாம். ஒருவேளை, இந்தக் காவித் துணிக்குப் பொருந்தாத வகையில் ஆசிரமத்திலே நடந்துகொண்டிருக்கலாம். காவித் துணியிடம் அவளுக்குச் சற்றேனும் மதிப்புக் கிடையாதென்று சற்று முன்பு தெளிவாக்கிவிட்டாள் அல்லவா?

அவர் அநுபவித்த ஒரு பொருள் அது. மனத்துக்குள்ளே கிடந்தது. இப்போது அகஸ்மாத்தாகக் கையிலே வந்து விழுந்திருக்கிறது. அந்த ருசி இன்னமும் மாய்ந்துவிடவில்லை. அது எங்கேயோ மறைந்து கிடந்தது. அந்த ருசி மீண்டும் கிளர்ந்தெழுந்தது. அது ஆசையாக மலர்ந்தது. கேசவபிள்ளை, மாதா ஜோதிர்மயீ தேவியைத் தன்னோடு சேர்த்துப் பிடித்துக்கொண்டார். அவளுடைய கரங்கள் அவருடைய உடலை இறுகச் சுற்றி வளைத்துக்கொண்டன. கேசவபிள்ளை புன்சிரிப்புச் சிரித்தவாறு அவள் காதருகே முணுமுணுத்தார்:

''இன்னும் மிதித்துத் துரத்தியனுப்பவா? அது நடக்காதம்மா.''

மாதா ஜோதிர்மயீ தேவி அதற்குப் பதில் கூறவில்லை. அவள், உடல் எங்கிலும் வெறி கொண்டு முத்தமாரி பொழிந்துகொண்டிருந்தாள்.

மாதா ஜோதிர்மயீயைப் பொறுத்தவரையில், மன்னிப்பைக் கோரியதும், கண்ணீரைச் சிந்தியதும் ஒரு தந்திரமாக இருந்தது என்று சொல்லலாமா? இல்லை என்று சொல்லிவிடமுடியாது. வாழ்க்கைப் படகை இன்னொரு பிரவாகத்தின் திசை நோக்கித் திருப்பவேண்டுமென்று எண்ணி அதை அடைய அவற்றை ஒரு தந்திரமாகப் பயன்படுத்தினாள் என்று ஏன் சொல்லக்கூடாது?

அவ்வாறு திசை திருப்ப மிகப் பெரிய தந்திரம் தேவை. அத்தகைய தந்திரமாக அவற்றை ஏன் எடுத்துக்கொள்ளக்கூடாது? அழாமல், மன்னிப்பைக் கேட்காமல் கேசவபிள்ளையிடம் சென்றிருந்தால்? இதற்கு முன் மாதா ஜோதிர்மயீ தேவியாக அவரிடம் செல்லவில்லையா? அக்கறையுடைய ஒரு நபர் என்ற முறையில் அவள் சொல்வதை எல்லாம் கேட்டுக்கொண்டிருக்கக் கூடும். செய்துவிட்ட தவறுகள் ஒவ்வொன்றுக்கு மாக மன்னிப்பைக் கோரும்போது, ஒருவேளை, அனுதாபத்துடன் அவற்றையெல்லாம் கேட்டபின், ''எல்லாவற்றிற்கும் மன்னிப்பு அளித் திருக்கிறேன்'' என்று சொன்னாலும் சொல்லக்கூடும். அப்புறம் தேவை ஏற்படும்போதெல்லாம் உதவி அளிக்கவும் செய்வார். சந்தேகம் இல்லை. ஒரு ரட்சகர் இருக்கிறார் என்ற உணர்வு அவளுடைய வாழ்க்கைக்குப் பாதுகாப்பாகவும் அமைந்துவிடும். ஆனால், அது மட்டுந்தானா, ஜோதிர்மயீயின் குறிக்கோள்? கையிலிருந்து பறந்து சென்றது கைக் குள்ளேயே வந்து சேரவேண்டும் என்பதும் அவளுடைய குறிக் கோள். அது முன்காலத்தில் ஒரு முத்தத்திலிருந்துதான் ஆரம்பித்தது. முத்தங்கள் வழியாகத்தான் அதைத் திரும்பப் பெற முடியும். விரைந்து சென்று கட்டித் தழுவி முத்தமிட முடியுமா? அந்த வகையிலே பார்த்தால் அது ஒரு தந்திரம் அல்லவா? நடிப்பு என்று சொல்ல முடியா விட்டாலும், முன்னதாகவே யோசித்துத் தயாரித்த ஒரு திட்டம் அல்லவா?

தான் அளிக்கும் முத்தத்தை அவர் தட்டியகற்றமாட்டார் என்று அவளுக்குத் தெரியும். ஒரு முத்தம் முத்தமாரியாகப் பெருகிவிடும் என்பதையும் அவள் அறிவாள். அவள் விரித்த வலையில் முதலிலேயே அவர் அகப்பட்டுவிட்டார்.

வாட்டமும், சோகச் சாயலும் அவளுடைய வதனத்திலிருந்து மறைந்து விட்டன. பூரிப்படைந்த மாதா ஜோதிர்மயீ தேவி ஆசிரம சம்பந்த மான காரியங்களை எல்லாம் கேசவபிள்ளையிடம் விபரமாகக் கூறினாள். இந்த முறையில் அல்லது இன்னொரு முறையில் அதெல்லாம் நிகழ்ந்து விடுமென்பதை அவர் முன்கூட்டியே அறிந்திருந்தார். எனவே அந்தக் கதைகளைக் கேட்க அவர் அவ்வளவாக ஆவல் கொள்ளவில்லை. கேசவ பிள்ளை சொன்னார்:

''உனக்கு எக்காலமும் சுகமாக வாழ ஏற்பாடு செய்து தருகிறேன். போதும் அல்லவா?''

மாதா ஜோதிர்மயீ தேவி கொஞ்சியவாறு சொன்னாள்: ''எனக்கு அப்படி ஒன்னும் நீங்க செஞ்சு வைக்கவேணும். நானே வாழ்ந்து கொள்கிறேன்.''

அதன் பொருள் அவருக்கு விளங்கவில்லை.

''அப்புறம் உன்னோட அந்தப் பிச்சைக்காரிகளையும் நானே காப்பாற்றணுமா?''

மாதாஜி சொன்னாள்: ''என்ன ஆனாலும் அவங்களை நான் விட்டுட மாட்டேன்.''

காரியமாக, ஆனால், அவளுக்கு வருத்தம் ஏற்படாத வகையில் கேசவ பிள்ளை கூறினார்: ''அது ரொம்பமும் சிரமம்தாம்மா. நான் அவங்களையும் காப்பாற்றணுமா?'' ஒரு விநாடிக்குப் பின் மீண்டும் கேட்டார்: ''ஆமாம்...அந்த ஆசிரமத்தைத் திரும்பப் பெறணும்னு விரும்பறியா?''

அது ஓர் அநாதைகளின் விடுதியாக இருந்தால் போதும் என்பதே ஜோதிர்மயீ தேவியின் விருப்பம். அப்படிச் செய்வதற்கான வழிமுறைகளைக் கண்டுபிடிக்கலாம் என்று கேசவபிள்ளை கூறினார். ''போதும் அல்லவா? இப்போ உன்னோட சங்கடங்கள் எல்லாம் தீர்ந்துவிட்டன அல்லவா?''

ஒரு காதலியின் புன்னகையுடன் மாதா ஜோதிர்மயீ தேவி, 'தீர்ந்துவிட வில்லை' என்று பொருள் படும்படியாகத் தலையசைத்தாள்.

''எனக்கு நிறையச் சொல்ல வேண்டி யிருக்கு.''

அவர் ஒரு சிறு குழந்தையிடம் கேட்பதுபோல் கேட்டார்:

''ங்ஆ...ஹா... நிறைய இருக்கா? அதுக்கு எத்தனை ராத்திரி, எத்தனை பகல் வேணும்?''

''ஒரு வாழ்நாள் முழுவதும்...'' இந்தப் பதில் ஜோதிர்மயீயின் நாவுனை வரை வந்தது. ஆனால், அது வெளியே வரவில்லை. அவ்வளவு தூரம் உறுதியாகச் சொல்வதற்கான சந்தர்ப்பம் இல்லை என்று அவள் எண்ணியிருக்கலாம். மணியோசை போன்று ஒருமுறை சிரித்தாள். திடீரென எதையோ நினைவுபடுத்திக் கொண்டவள்போல் ஆழமான சிந்தனையில் மூழ்கிவிட்டாள். எல்லாவற்றையும் திறந்து சொல்வதற்கான தருணம் வந்து விடவில்லை. அவ்வாறு ஒரேயடியாகச் சொல்லி முடிக்கவும் முடியாது.

கேசவபிள்ளையின் முகத்தைத் தடவியவாறு அவள் கேட்டாள்: ''இவ்வளவு மன ஒற்றுமையா நாம் இதுக்கு முன் எப்போதாவது கொஞ்ச நேரமாவது இருந்திருக்கிறோமா?''

அது ஓர் உண்மைதான். நீண்ட நெடுநாளைய அந்த உறவுக்கிடையிலே இத்தகைய ஒற்றுமை ஏற்பட்டதே இல்லை. அவர் சொன்னார்: ''அது எப்படி முடிந்திருக்கும்? நீ ஒரு ராட்சஸியைப் போலல்லவா, இருந்திருக்கிறாய்? அப்பப்பா! அன்னைக்கு நானே கோழையான ஓர் ஏழைக் குமாஸ்தா. அப்படித்தானே?''

பின் அவர் சற்றுக் கடுமையான குரலிலே கேட்டார்: ''நீ இவ்வளவு மன ஒற்றுமையா வேறு எங்காவது யாருடனாவது இருந்ததுண்டா?''

கேசவபிள்ளை அதற்கான பதிலுக்காக மாதா ஜோதிர்மயீயை ஆவலுடன் உற்றுப் பார்த்தார். அவள் வெளிறிவிடவில்லை. மாறாக ஓர் இனிய புன்னகைதான் அவள் முகத்திலே தவழ்ந்தது. 'இல்லை' என்று

பொருள்படும்படியாக அவள் தலையசைத்தாள். கேசவபிள்ளை விடவில்லை: ''ராமசந்திர நாயருடனும்?''

அப்போதுகூட மறுப்பைத் தெரிவிக்கும் முறையில் தலையாட்டினாள்.

"அந்தச் சின்னச் சாமியார் என்று சொல்லுகிற இளைஞனுடனுமா...?"

அதற்கும் அவள் தலையசைத்து மறுப்பைத் தெரிவித்தாள். கேசவபிள்ளை தெளிவாகவே சொன்னார்: ''நீ சொல்வது பொய்.''

மாதா ஜோதிர்மயீ தேவி நிச்சயமாக உண்மையைச் சொல்வதுபோல் கூறினாள்: ''இல்லை. அது உண்மை.''

''அப்புறம் நீ உன் தாய் தந்தையர்களை விட்டுவிட்டுச் சில காலம் வரையில் ராமசந்திரன் நாயருடன் வாழ்ந்தது?''

கேசவபிள்ளை அறிந்து கொள்வதற்கான ஆவேசத்துடனும், ஆசையுடனும் கேட்டார். இந்த ஆவேசமும் ஆசையும் எத்தனையோ வருடங்களாக அவருடைய மனத்தின், அறியப்படாத ஏதோ ஒரு மூலையிலே மறைந்திருந்திருக்க வேண்டும். ஏணிப் படிகளை ஒவ்வொன்றாக மிதித்து மேலே ஏறி வருவதற்கான தீவிரமான சிந்தனைகளுக்கிடையில், ஒரு மனிதன் என்ற நிலையிலுள்ள இத்தகைய சிந்தனைகள் தலை தூக்க முடியாமற் போயிருக்கலாம். இப்போது அவையெல்லாம் தலை தூக்கி எட்டிப் பார்க்கின்றன. சாமானியனை ஓர் இளைஞனின் மனைவி அல்லது காதலி இன்னொருவனிடம் நட்பு கொண்டு போய்விட்டால், அது எவ்வாறு நிகழ்ந்தது என்று அறிவதற்கான ஆவல் ஏற்படுவது இயற்கை தானே? அந்த முறையிலுள்ள ஓர் ஆராய்ச்சியைக் கேசவபிள்ளை இன்று வரை நடத்தியதில்லை. இன்றுதான் அதை நடத்தினார்.

மாதா ஜோதிர்மயீ தேவி ஒரு மறு கேள்வியைத்தான் கிளப்பினாள். ஒரு விதமான மனவருத்தத்தின் சாயல் அந்தக் கேள்வியிலே படர்ந்திருந்தது.

''அதைப்பற்றியெல்லாம் என்னிடம் இப்பத்தானே கேட்கறீங்க?''

"அன்று நான் கேட்டிருந்தால் நீ என் கன்னத்திலே அறைந்திருப்பாய்."

ஒருவிதச் சிருங்காரச் சிரிப்புடன் அவள் அவருடைய கன்னத்திலே கிள்ளிவிட்டுக் கூறினாள்:

''அதைவிடப் பலமாக என் கன்னத்திலே நீங்கள் அறைந்திருக்க வேண்டும்.''

''பரவாயில்லையே—அது சரி...''

ஜோதிர்மயீ கேட்டாள்: ''ஊம்? என்ன? என்னை உதைச்சுக் கீழே போட்டிருக்கணும். அப்புறம் நல்லா மிதி மிதின்னு மிதிச்சிருக்கணும். அப்படிச் செய்திருந்தீங்கன்னு நான் கெட்டுப் போயிருக்க மாட்டேன்.''

கெட்டியான ஒரு பூட்டின் சாவி கையில் கிடைத்துவிட்டதுபோல் கேசவபிள்ளைக்குத் தோன்றியது. அவள் சொன்னது பொய் அல்ல. உண்மையின் மெல்லியதோர் ஒளி அதிலே படர்ந்திருந்தது. வழி தவறிப் போன அவளைத் துணிச்சலுடன், தைரியத்துடன் கட்டுப்படுத்தி நேரான

பாதைக்கு இட்டு வர யாருமே முயன்றதில்லை. அவர்கூட முயற்சி செய்ய வில்லை. அவள் சொன்னாள்:

''யாருமே தடுக்கவில்லை. நான் ஒரு பாதையில் சஞ்சரித்தேன். என்னை அந்தப் பாதையிலே செல்ல எல்லாரும் அநுமதித்தனர்.''

அந்த 'எல்லாரும்' என்பது யாரைக் குறித்துச் சொல்லப்பட்டதென்று கேசவபிள்ளைக்குப் புரிந்தது. மாதா ஜோதிர்மயீ தேவி தொடர்ந்து கூறினாள்: ''என்மீது கொஞ்சங்கூட அன்பு இருந்ததில்லை. நான் எப்படிப் போனால் என்ன என்று எண்ணினீர்கள். நான் பாதை தவறிச் செல் வதைப் பார்த்து நின்றீர்கள். 'அங்கே நில்!' என்று சொல்லவில்லை; என்னைப் பிடித்து நிறுத்தவில்லை. நான் என் பாட்டுக்கு நடந்து சென்றேன், அழிந்துவிட்டேன்.''

மாதா ஜோதிர்மயீ தேவியால் அடக்க முடியவில்லை. அவள் கதறியழு தாள். உண்மையை உணர்ந்து கொள்பவர்போல் கேசவபிள்ளை ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிவிட்டார். அவர் அசைவின்றி அமர்ந்திருந்தார். விசும்பல்களுக்கிடையில் ஜோதிர்மயீ கூறினாள்:

''தட்டிக் கேட்க ஆள் இல்லாமல் போனவள் கெட்டுக் குட்டிச் சுவராகி விட்டாள்.''

ஒருவிதக் குற்ற உணர்வு கேசவபிள்ளையை ஆட்கொண்டது. தமக்கு ஏற்பட்டிருக்கிற அனைத்து முன்னேற்றங்களுக்கும் மூலகாரணம் இவள்தானே? ஆம், சந்தேகமே இல்லை. இவளிடம் எல்லையற்ற கடமைகள் தமக்கு உண்டு. இவள், தன் முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்தவேண்டியதை எல்லாம், தம் முன்னேற்றத்துக்காகப் பயன் படுத்தியிருக்கிறாள். அவை எல்லாம் பலன் அளிக்கவும் செய்திருக்கின்றன.

தங்கம்மா கேசவபிள்ளைக்குக் கீழ்ப்படிந்துதான் நடந்திருக்கிறாள். அதை மறுக்க முடியாது. அங்ஙனம் கீழ்ப்படிந்து நடந்துகொண்ட ஒருத்திக்காக, அவள் வழிதவறி நடந்து சென்றபோது அதிகாரத்துடன், உரிமையுடன் என்ன நடவடிக்கை எடுத்தார்? ஒரு விரலாவது அசைந்ததா? 'இதென்ன செய்கிறாய்?' என்று ஒரு போதாவது கேட்ட தில்லை. காரியம் கைகூடி விட்டது. பாதை தவறி நடந்துசெல்வதைப் பாதையோரத்திலே நின்று பார்த்துக்கொண்டிருந்தார். அந்தச் செயல் சரியானதா? தர்மமானதா? நெஞ்சாழத்திலிருந்து இந்தக் கேள்விகளை யாரோ கேட்கிறான். அதற்குப் பதிலைக் கண்டுபிடிக்கக் குற்ற உணர்வு கொண்ட கேசவபிள்ளையின் மனம் துடிக்கிறது. அதட்ட வேண்டாம்; தண்டிக்க வேண்டாம். 'நீ வழி தவறிப் போகிறாய்' என்று ஏன் அன்று சொல்லவில்லை? அவர் தம்மிடமே அந்தக் கேள்வியைக் கேட்டுப் பார்த் தார். அது ஒரு துரோகம் அல்லவா?

மாதா ஜோதிர்மயீ தேவி வெடித்துக் குமுறியவாறு மீண்டும் கூறினாள்: ''என்னை ஒரு பெண் என்று அழைத்தது நீங்கள்தான்.''

அதுவும் உண்மைதான். தம்மையும் அறியாமலேயே ஒரு வாசகம் அவர் வாயிலிருந்து உதிர்ந்து விழுந்தது: ''நான் உனக்குத் தவறு இழைத்திருக்கிறேன்.''

அவருடைய சிந்தனை வேறொரு திசையை நோக்கித் திரும்பியது. இவளுக்குப் பெரிய தவறு இழைத்திருக்கிறேன் அல்லவா? திருமணமானதை மறைத்து வைத்தேன். இருந்தும் காரியம் கைகூடுவதற்காக இவளை நேசிப்பதாகக் காட்டிக் கொண்டேன். அது ஓர வஞ்சனை!

கேசவபிள்ளை அந்தத் தவறின் கடுமையைப் பார்க்கிறார். ஆனால், அவளுக்கு அது தெரியாது. திருமணமான விஷயத்தை அவள் அறிந்திருந்தால்—அப்போது, தம் வாழ்க்கை எத்தகையதாக இருந்திருக்கும் என்பதைப் பல வருடங்களுக்குப் பிறகு கேசவபிள்ளை இன்று யோசனை செய்து பார்த்தார். அன்று அதிருஷ்டம் தமக்குச் சாதகமாகவே இருந்திருக்கிறது. ஏணிப் படிகளில் ஒன்றை மிதித்தேறியபோது, பின் இவளுடைய உதவித் தேவையில்லை என்ற நிலைமை ஏற்பட்டபோது, அந்த விஷயத்தை மறந்துவிட்டார். பிறகு இதுவரையில் நினைத்துப் பார்த்ததே இல்லை.

அந்த விஷயத்தை அவளிடம் மனம் திறந்து சொல்லி மன்னிப்பு கேட்டால் என்னவென்று கேசவபிள்ளைக்குத் தோன்றியது. உள்ளிருந்து அதற்கான ஒரு வகைத் தூண்டுதலும் வந்தது. இருக்கட்டும்! அதைச் சொல்ல இன்னும் சிலகாலம் கழியட்டும்!

அசைவின்றி மல்லாக்கப் படுத்துக் கிடந்த அவருடைய கன்னங்களிலே கைகளால் அழுத்தமாகப் பொத்தி, முகத்தை உற்றுப் பார்த்தவாறு அவள் கேட்டாள்:

''ஒன்றைக் கேட்கட்டுமா? உண்மையைச் சொல்லணும்.''

கேசவபிள்ளை பேசவில்லை. ஆனால் உண்மையைச் சொல்லச் சம்மதிப்பது போலிருந்தது முகத் தோற்றம்.

''என்னை நீங்கள் நேசிக்கவில்லை. உண்மைதானே?''

கேசவபிள்ளை கேட்டார்: ''ஏன் இப்படிக் கேட்கிறாய்?''

திடமாக நம்புவதுபோல் ஜோதிர்மயீ தேவி கூறினாள்: ''இல்லை, என்னை நேசிக்கவில்லை. நினைவு கூர்ந்து பாருங்கள்! எனக்குச் சூடான ஒரு முத்தம் தந்திருக்கிறீர்களா? இன்று என்னைக் கட்டித் தழுவியதுபோல் ஒரு முறையாவது இறுகக் கட்டியணைத்ததுண்டா? என்னை நேசிக்கவில்லை. சும்மா சொல்லவேண்டாம்.''

கேசவபிள்ளை கேட்டார்: ''இன்று நான் உன்னை நேசிப்பதாக நினைக்கிறாயா?''

வெட்கப் புன்னகையுடன் அவள் தலையாட்டினாள். அவர் நேசிப்பதாக அவள் தெளிவாகச் சொல்லவில்லை.

அவருக்குப் பிடிக்காத இன்னொரு கேள்வியை அவள் கேட்டாள்: ''என்னை மணந்து கொள்வதாக ஒரு முறையாவது என்னிடம் சொன்னதுண்டா?''

கேசவபிள்ளையால் பதில் அளிக்க முடியாத கேள்வி அது. ஒரு மறு கேள்வி கேட்டுத் தப்பித்துக் கொள்ள முயன்றார் அவர்:

''அப்படி நான் சொன்னதில்லையா?''

''இல்லை, ஒருபோதும் சொன்னதில்லை.''

''அதைப்பற்றி நீயே கேட்டிருக்கலாம் அல்லவா?''

இத்தகைய கேள்விகளுக்குத் திடீரெனப் பதில் அளிக்க மாதாஜியால் இயலும். அதற்குச் சிரமப்பட வேண்டியதே இல்லை.

''ஒன்றும் தெரியாத ஒரு பேதைப் பெண்ணாக இருந்தேன். என்னைக் கட்டுப்படுத்த யாருமே இருக்கவில்லை. நீங்கள்தாம் என்னைத் தொட்டு வெறியூட்டினீர்கள். அந்த வெறியிலே, முக்கியமான பிரச்னைகளைப் பற்றி நான் சிந்திக்கவில்லை, உங்களிடம் கேட்கவும் இல்லை.''

அந்த விளக்கம் மறுக்கப்படக்கூடியதல்ல. ஆனால், அந்த விளக்கத்தில் என்னவோ குறை இருப்பதாகக் கேசவபிள்ளைக்குத் தோன்றியது. ஜோதிர்மயீ தேவி தன் கதையைத் தொடர்ந்து கூறத் தொடங்கினாள்: ''நான் குற்றவாளி. மன்னிக்க முடியாத குற்றத்தைப் புரிந்திருக்கிறேன். என் அறிவீனத்தினால் உங்களிடம் எனக்கு வெறுப்புத் தோன்றியது. நீங்கள் கிளப்பிவிட்ட வெறிகூட அதற்குக் காரணமாகும். நான் இன்னொருவனுடன் கிளம்பிச் சென்றேன்.''

கடுமையான வெறுப்புடன் கேசவபிள்ளை கேட்டார்: ''அவன் உனக்குத் திருப்தி அளித்தானா?''

அந்தக் கேள்வியிலே, குரலிலே கலந்திருந்த வெறுப்பை ஜோதிர்மயீ தேவியால் புரிந்துகொள்ள முடியவில்லை என்று தோன்றியது. ராம சந்திரன் நாயருடன் இருந்து வந்த உறவு குறித்துக் கேசவபிள்ளைக்கு வெறுப்பு ஏற்படுவது இதுவே முதல் தடவை. கோவிந்தன் நாயரிடமிருந்தும், பிறகு சேகரபிள்ளை, பாகீரதியம்மா ஆகியோரிடமிருந்தும் அந்த உறவைக் குறித்து அறிந்தபோதெல்லாம் அவருக்கு வெறுப்போ விரோதமோ தோன்றியது கிடையாது. அது பயனுள்ள ஒரு வார்த்தை யாகவே அவருக்குத் தோன்றியது. கோவிந்தன் நாயர், அவர் மீது வருத்தங்கூட அடைந்திருக்கிறார். இன்று மட்டும் இந்த வெறுப்புக்குக் காரணம் என்ன? அந்த உறவு கேசவபிள்ளைக்குப் பிடிக்கவில்லை என்பது திண்ணம். ஆனால், அவருடைய இந்த மனப்பான்மையைப் புரிந்து கொள்ளாமலேயே ஜோதிர்மயீ பதில் உரைத்தாள்.

''எல்லாம் சரியாகத்தான் இருந்தது. அந்த மனிதனுடைய ஒரு கருவியாக இருந்தேன். அவரும் என்னை நேசிக்கவில்லை. நீங்கள் கிளப்பி விட்ட அந்த வெறி என் வாழ்க்கையையே சீர்குலைத்து விட்டது. யாருமே என்னை நேசிக்கவில்லை.''

கேசவபிள்ளையின் வெறுப்புக்குத் திருப்தி ஏற்படவில்லை. அவர் கேட்டார்: ''அவர் திருமணம் செய்துகொள்வதாகச் சொல்ல வில்லையா?''

தேவி திடீரெனப் பதில் அளித்தாள்: ''இல்லை. இன்று வரையில் யாருமே அப்படிச் சொன்னதில்லை.''

''நீ அவரிடம் கேட்கவும் இல்லையா?''

அதைப்பற்றி ஒரு நீண்ட கதையைச் சொல்ல வேண்டியிருந்தது. அதற்குள்ளே வாழ்க்கையைப்பற்றி அவளால் சிறிது கற்றுக்கொள்ள முடிந்திருந்ததாம். அவள் கல்யாணத்தைப்பற்றிக் கேட்கத் தொடங்கினாள். அவை ராமசந்திரன் நாயருக்குப் பிடிக்காத கேள்விகளாக இருந்தன. பதில் அளிக்காமல் அவர் நழுவிச் சென்றார். ஜோதிர்மயீ தேவி அந்தக் கதையை இவ்வாறு சொல்லி முடித்தாள்: ''நான் வற்புறுத்திக் கூறிய போது அவர் அந்த உறவையே முறித்துக்கொண்டார். ஆட்டமும் பாட்டும் தெரிந்த ஒரு பெண்ணை மணந்து கொண்டார்.''

இப்போது கேசவபிள்ளைக்குத் திருப்தி ஏற்பட்டுவிட்டது. போதுமான தகவல்கள் எல்லாம் கிடைத்துவிட்டன. அவருடைய சிந்தனை மண்டலம் மட்டுமின்றி, உணர்ச்சி மண்டலங்கூடக் கலக்கமடைந்தது. அங்கே கிளர்ச்சியும் தடுமாற்றமும் காணப்பட்டன. வாழ்க்கைக்கு இன்றியமையாத அடிப்படையாக இருந்து வந்த மானசிக அமைப்புக்கூட ஆட்டம் கண்டுவிட்டதாகத் தோன்றியது. எல்லாம் மொத்தமாக ஒருங்கே குலுங்கியது.

நிசப்த நிலை நீண்ட நேரம் நீடித்தது. ஜோதிர்மயீ தேவிக்கு ஒரு கோரிக்கை உண்டு. ''இந்தக் கரத்தின் கீழ் தங்க உரிமை உண்டு என்ற உணர்ச்சியுடன் இன்றிரவு படுத்துத் தூங்கட்டுமா?''

அவளைத் தன்னுடன் சேர்த்து இறுக அணைத்தவாறு முத்தம் அளித்துக் கொண்டே கேசவபிள்ளை கூறினார்:

''தூங்கவிட மாட்டேன்.''

அத்தியாயம் 38

மறுபிறவி

இவ்வாறு பரஸ்பர அன்பு, நம்பிக்கை ஆகியவை கொண்ட ஒரு குடும்ப வாழ்க்கை பார்க் வியூவில் இதுகாறும் நடந்ததில்லை. கவலை இல்லாத வாழ்க்கை. எல்லாவற்றிலும் ஓர் அமைதி. எப்போதும் சிரிப்பும் விளையாட்டுந்தான். வெறும் மலிவான சிரிப்பு அல்ல, பரஸ்பர அன்பின், ஆவேசத்தின் சிரிப்பு! உண்மையிலேயே அங்கே வாழ்ந்து வந்த சதிபதி களின் தேனிலவுக் காலமாக இருந்தது அது.

நடுத்தரப் பருவத்துக்கு வந்துவிட்டனர். ஆயினும் அந்தத் தம்பதி களின் ஆவேசத்துக்கு எல்லை இல்லை. ஒரு பிரத்தியேகக் குளுமை மட்டும் இருந்து வந்தது. இளம் தம்பதிகளின் தேனிலவுக் காலமென்னும் அது காற்றிலே பறக்கவிட்ட பஞ்சுபோல்தான். ஆனால் அந்தப் பஞ்சுவற்ற நிலை இந்தத் தம்பதிகளின் வாழ்க்கையில் இல்லை. இன்று அல்லது நாளை ஒரு முட்டுக்கட்டைமீது முட்டி மோதிப் பரஸ்பரம் குறை கூறி விலகிச் செல்கிற தன்மை இந்தத் தம்பதிகளின் ஆவேசத்துக்கு இல்லை. திருமணம் முடிந்து பல வருடங்களாவிட்டன. ஒரு குழந்தை பிறந்து பல வருடங்க ளாகிவிட்டன. இப்போதா தேனிலவு? ஆம், தேனிலவேதான். வெறும் காமவெறியின் தேனிலவு அல்ல. ஓர் ஆணுக்கு ஒரு பெண் கிடைத்து, அவளுக்கும் ஓர் ஆண் கிடைத்து, அதைத் தொடர்ந்து நடைபெறுகிற தேனிலவு அல்ல இது.

அப்புறம் இன்னொரு விசேஷம். இவர்களுக்கு அமைதியின்மை ஏற்படக் காரணமே இல்லை. இவர்களுக்கு எல்லாம் இருந்தன. பணம், பிரதாபம், செல்வாக்கு, அதிகாரம் எல்லாம் இருந்தன. பூரணமான ஆத்மதிருப்திக்குத் தேவையானவை அத்தனையும் உண்டு. கல்யாணம் முடிந்து வருடங்கள் பல கடந்து குழந்தைகள் பிறந்து குடும்பப் பளு ஏற்பட்டு வாழ்க்கைப் பிரச்னைகள் ஒவ்வொன்றாக வந்து நெருக்கும்போது கணவன் மனைவியையும், மனைவி கணவனையும் குறை கூறத் தொடங்குவார்கள். அவர்கள் தேனிலவை நன்றாகப் பருகியவர் கள்தான்; வாக்குறுதிகள் பலவற்றைப் பரிமாறிக்கொண்டவர்கள்தான். ஆயினும் அவர்கள் குறை கூறத் தொடங்கிவிடுவார்கள். இங்கே அதற்குக் காரணம் இல்லை. கார்த்தியாயினிக்குத் தேவையானது ஒன்று மட்டுந்தான். அவளை நேசிக்கவேண்டும். அதை அவள் வேண்டினாள். அது அவளுக்குக் கிடைத்துவிட்டது. கேசவபிள்ளை கார்த்தியாயினியை நன்கு புரிந்துகொண்டுவிட்டார். அந்த இல்லத்தில் ஆனந்தம் இல்லாமல் வேறு என்னதான் உண்டாகமுடியும்?

ஆனால், அந்த இல்லத்தில் ஒளி பரப்பி வந்த ஆனந்த சந்திரனைத் திடீரென்று ஒரு கார்முகில் வந்து மறைத்துக்கொண்டது. நினைத்திராத சந்தர்ப்பத்தில், எதிர்பாராவிதமாக அது நிகழ்ந்தது. கடுமையான, முரண்பட்ட எத்தனையோ சோதனைக் கட்டங்களைக் கடந்து வந்ததுதான் அந்த இல்லற உறவு. எந்த ஒரு முட்டுக்கட்டையும் அதற்குப் புதிதான தல்ல. அந்தக் கரிய நிழல் திடீரென வந்து படர்ந்தது. ஒருவேளை, கேசவபிள்ளையின் இதயத்தின் அடித்தளத்தில் அறியப்படாத ஒரு பகுதியில், இத்தனை காலமாக யாருக்கும் தெரியாமல், முளைத்துப் படரச் சாதகமான காலநிலையை எதிர்பார்த்து ஏதோ ஒன்று ஒட்டியிணைந்து மறைந்திருந்திருக்கவேண்டும். வாழ்க்கையிலே முதல் முறையாகக் கார்த்தியாயினி ஒரு முத்தத்தை வேண்டியபோது, அதற்காக அவள் முகத்தை நீட்டியபோது, அதைக் கொடுக்கக் கேசவபிள்ளை தயாரான போது, அவர் அந்த முகத்திலே இன்னொருத்தியினுடைய முகத்தையே பார்த்தார். அந்த முகம் மாய்ந்து கார்த்தியாயினியின் முகத்தையே காண்பதற்காக அவர் கண்களை மூடிப் பிறகு திறந்து பார்த்தார். அப்படி நேர்ந்துவிடக் காரணம் என்ன? தங்கம்மாவை அவர் மறக்கவில்லையா? ஒருவேளை கேசவபிள்ளை தம் மனைவியைப் புரிந்துகொண்டதும், புதைந்து மறைந்து கிடந்த அந்த அபிலாஷை, முளைத்துத் துளிர்த்து வருவதற்கான கால நிலையை இழந்துவிட்டிருக்கலாம். பின்பு அவர் அன்புடன் அளித்த முத்தங்கள் எல்லாம் அன்பு மனைவிக்காகவே இருந்து வந்தன. இப்போது அந்த ஆசை முளைக்கத் தக்க காலநிலை ஏற்பட்டிருக்கலாம்.

கேசவபிள்ளை மாறிய ஒரு மனிதராகத்தான் குமரிமுனையிலிருந்து திரும்பி வந்தார். ஒளி பரப்புகிற ஒரு சிரிப்புடன், குளித்து ஈரமாகி விட்ட கூந்தலைச் சிக்கெடுத்தவாறு கார்த்தியாயினி படிவாசலிலே வந்து நின்றாள். காரிலிருந்து இறங்கிய கேசவபிள்ளை ஒரு சிரிப்பை வரைத்தார். ஆம், வரவழைக்கத்தான் செய்தார்! எல்லாவற்றையும் மறைத்து வைப்பதற்கான முயற்சி. ஆனால், அது பலவீனமான ஒரு முயற்சிதான். அந்தச் சிரிப்பிலே அசடு வழிந்தது. ஏனென தெரியவில்லை, கார்த்தியாயினியின் முகம் வாட்டமடைந்தது. அவளுடைய முகத்திலிருந்து அந்தச் சிரிப்பு மாய்ந்துவிட்டது. அவளுக்கு ஒருவிதமான தளர்ச்சி ஏற்பட்டது. கேசவபிள்ளையிடம் அத்தகைய முகத் தோற்றத்தை, ஒரு வேளை, ஒரு போதும் கார்த்தியாயினி பார்த்திருக்க மாட்டாள்.

'ஒரு நாள் அதிகமாகத் தங்கிவிட்டேன்' என்று சொல்ல நினைத்தார். ஆனால் அந்த வாசகம் உள்ளேயே திரும்பிச் சென்றது. கேசவபிள்ளை களைப்புற்றவர்போல் காட்டிக்கொண்டார். உண்மையிலேயே சிறிது களைப்பு இருக்கத்தான் இருந்தது.

''நினைத்திருந்ததைவிடக் கூடுதலாக ஒரு நாள் கூடத் தங்கவேண்டிய தாயிற்று.''

இதுவும் மறைப்பதற்கான ஒரு முயற்சியேதான்.

ஒருவிதமான தளர்ச்சியுடன் கார்த்தியாயினி அவரைத் தொடர்ந்து நடந்து வந்தாள்.

அவர் உள்ளே வந்து உடைகளை மாற்றிக்கொண்டார். கார்த்தியாயினி அங்கேயே நின்று விட்டாள்.

''காபி இல்லையா?''

இந்தக் கேள்வியிலே ஓர் அதட்டலின் சாயல் இல்லையா? இந்தக் குரலில் குறை கூறும் தன்மை கலந்திருக்கிறதே! அவள் மனத்தில் ஒரு வித வேதனை ஏற்பட்டது. அது சரிதானே? உடைகளை மாற்றி வருவதற்குள்ளே காபி கொண்டு வந்து கொடுத்திருக்கவேண்டியது தானே? இன்றுவரையில் நடைபெற்றுக்கொண் டிருந்த வழக்கமும் அது தான். முதல் முறையாக ஏற்பட்ட தவறுதான் அது. அது எங்ஙனம் ஏற்பட்டதென்று அவளுக்குத் தெரியவில்லை. அவள் தன்னையே குறை கூறிக்கொண்டாள். அது ஒரு தவருகிவிட்டது.

கேசவபிள்ளை அப்போதுகூடப் புன்னகை பூத்தவாறு, நேசத்தை நடித்துக்கொண்டு சொன்னார்:

''போய் ஒரு கப்பு காபி எடுத்துக் கொண்டு வந்து தா!''

அந்தப் புன்னகையும் முகத் தோற்றங்களும் நடிப்பாகத்தான் இருந்தன. அகத்தில் ஒன்றை வைத்துக்கொண்டு புறத்தில் இன்னொன்றை நடித்துக் காட்டும் வழக்கத்தை அவரிடம் அவள் கண்டதில்லை.

கார்த்தியாயினி, ஒரு பொம்மைபோல் காபி எடுத்துவர நடந்து சென்றாள். தம் நடிப்பு தம்மையே கூட ஏமாற்றிவிட்டதோ என்ற சந்தேகம் கேசவபிள்ளைக்கு ஏற்பட்டது. மிகவும் கலைப்புற்றவர் போன்ற நடிப்பு, சிறிய அளவிலுள்ள அந்த அதட்டல், பின் நேசத்தை வெளிக் காட்டுகிற போலி நடிப்பு—ஆகிய எல்லாமே போலித் தன்மையை எடுத்துக்காட்டுவனவாகவே இருந்திருக்கின்றன என்று அவருக்குத் தோன்றியது. மூன்று நாட்களுக்கு முன் எவ்வாறு இருந்தாரோ, அவ்வாறு சுறுசுறுப்பாகச் சிரித்து விளையாடியவாறு அவளுக்குக் காட்சியளிக்க முடிந்திருந்தால்? ஏன் அவ்வாறு முடியவில்லை? கார்த்தியாயினி திரும்பி வருவதற்குள் இனியாவது அப்படிக் காட்சி கொடுக்கவேண்டும். அவள்கூட வெளிறிவிட்டாள். முகத்திலிருந்த மகிழ்ச்சித் தோற்றம் மறைந்து போயிற்று. கிச்சுக்கிச்சு மூட்டி, முத்தங் களை வாரி இறைத்தவாறு அள்ளித் தூக்கியெடுத்து அவளைச் சிரிக்கவைத்து விடலாம்.

கார்த்தியாயினி காபியுடன் வந்து சேர்ந்தாள். காபி அருந்திக் கொண்டிருந்தபோது கேசவபிள்ளை முக்கியமான ஒரு செய்தியைப் பற்றிச் சொன்னார்:

''மாநிலங்களின் புனரமைப்பு ஏற்படும்போது நமக்குக் கொஞ்சம் நெருக்கடி ஏற்படலாம். இப்போ அந்த ஃபஸலைப் பார்த்தப்போதான் எனக்குத் தெரிந்தது.''

பெரிய அக்கறை எதையும் காட்டிக் கொள்ளாமல், ஆனல் இயற்கையான மனத் தூண்டுதலால் கேட்பதுபோல் கார்த்தியாயினி கேட்டாள்: ''ஊம், என்ன?''

கேசவபிள்ளை அந்தப் பிரச்னையைப்பற்றி விளக்கிக் கூறினர்:

''திருவாங்கூர்—கொச்சியுடன் இப்போது மலபார் கூடச் சேரப் போகிறது. மலபாரைச் சேர்ந்த ஏராளமான உத்தியோகஸ்தர்கள், மதராஸ் மாநிலத்தில் வேலை செய்கிறார்கள். அவர்கள் இங்கே வருவார்கள். அவர்களில் இருவர் குறிப்பாக, ஒருவர் என்னைவிடக் கூடுதலான சம்பளத்தைப் பெற்றுவருகிறார். ஆனல் அவருக்குக் காரியதரிசி என்ற அந்தஸ்து மட்டும் இருக்கிறது. ஆனல் சர்வீஸ் விஷயத்தில் அவர்கள் என் அளவு இல்லை. அவர்கள் இங்கே வரத் தீர்மானித்திருக்கிறார்கள். சீஃப் செக்ரடரிப் பதவியைக் கேட்டாலும் கேட்கலாம். அப்படிக் கேட்க அவர்களுக்கு உரிமை உண்டு. ஃபைல்களை எல்லாம் கவனமாகப் பார்த்தபோதுதான் எனக்குத் தெரிந்தது.''

கார்த்தியாயினிக்கு அது ஒரு புதிய செய்தியாக இருக்கவில்லை. ''இதைத்தானே அன்னைக்கும் சொன்னீங்க?''

ஏதோ ஒரு புதிய செய்தியைச் சொல்வதுபோல் சொல்லத் தொடங்கினர். ஆனல் கார்த்தியாயினியின் கேள்வி அவருடைய உத்தேசத்துக்கு மதிப்பில்லாமல் அடித்துவிட்டது. அந்தப் பிரச்னை, அவர் நடித்துக் காட்டுவதுபோல் அவ்வளவு முக்கியம் அல்ல என்பதைக் கார்த்தியாயினியின் குரல் காட்டியது. ஆனல், அதை அப்படியே விட்டுவிடமுடியுமா?

''ஃபைலைப் பார்த்தபோதுதான் நெருக்கடியின் ஆழத்தைப் புரிந்து கொண்டேன். சீஃப் செக்ரடரியாக இருந்துகொண்டே கீழே இறங்கிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னல்? அது என்னைப் பெரிதும் துன்புறுத்துகிறது. மனமும் உடம்பும் அலுத்துப் போச்சு.''

திடீர்ப் பிரதிபலிப்பு கார்த்தியாயினியிடம் காணப்பட்டது.

''அப்படி வந்தாப் பென்ஷன் வாங்கி விலகிப் போனைப் போவதுன்னு தானே, அன்னைக்குச் சொன்னீங்க? அப்படியே செய்ஞ்சுட்டாப் போச்சு! அதுக்காக மனசையும் ஒடம்பையும் எதுக்காக இப்படி அலைக்கழிச்சுக்கணும்? அன்னைக்கு மனவருத்தம் ஒண்ணும் இருந்ததாத் தெரியலையே?''

கேசவபிள்ளை பதில் சொல்லவில்லை. மனக்கவலைக்குச் சொல்லப்பட்ட காரணம் பொருத்தமற்றதென்று தெளிவாகியது.

''அப்படி இருந்தால்கூட வருத்தம் ஏற்படாதா?''

கார்த்தியாயினி ஒன்றும் பேசவில்லை. கணவர் கூறிய காரணங்கள்மீது அவளுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை என்பதே அந்த மோனநிலையின் பொருள். சிறிது நேரத்துக்குப் பின் அவள் கூறினள்: ''அன்னைக்கு இதைப்பற்றிச் சொன்னப்போ எந்த மனவருத்தத்தையும் காணலையே. இப்போ அப்படி வருத்தப்பட என்ன நடந்தது?''

அந்தக் கேள்விக்கு என்ன பதில் கூறுவதென்று முதலில் அவருக்கு ஒன்றுமே தோன்றவில்லை. பின்னர் ஒன்றைக் கண்டுபிடித்தார்:

''இருந்தாலும் மனக் கவலைதான்.''

கார்த்தியாயினி தனக்குப் பட்டதைப் பகிரங்கமாகக் கூறினாள். ''நானே நேரடியாச் சொல்லறேனே. நீங்க சொல்லற காரணம் அல்ல. அது வேறு என்னவோதான்.''

ஒரு விநாடி நிறுத்திவிட்டு அவள் வருத்தத்துடன் கூறினாள்: ''அல்லாட்டாக்கூட அதைப்பற்றியெல்லாம் என்கிட்டே ஏன் சொல்லப் போறீங்க? எனக்கு என்ன தெரியும்?''

வருத்தம் தோய்ந்த அந்தக் குரல் கேசவபிள்ளைக்குப் பிடிக்கவில்லை.

மெல்லியதொரு சோகச் சாயல் அந்தக் குடும்பத்தை மூடி மறைத்துக் கொண்டு நின்றது. மனைவி மேஜைமீது ஏதோ கோடுகளைக் கிழித்தவாறு நின்றுகொண் டிருந்தாள். கணவர் சிந்தனையில் மூழ்கியிருந்தார். இவ்வாறு கொஞ்ச நேரம் வரை பரஸ்பரம் பேசாமல் இருப்பது என்பது பல நாட்களுக்கப்புறம் இப்போதுதான் ஏற்பட்டது. இருவருடைய சிந்தனை மண்டலங்களிலும் பளு ஏறியிருந்தது.

கேசவபிள்ளையைப் பொறுத்தவரையில் தவறு இழைத்தோம் என்ற உணர்வுதான் அந்தக் கவலைக்குக் காரணமா? அல்லது கடந்த இரண்டு மூன்று நாட்களாக நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறித்துக் கார்த்தியாயினிக்கு ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டிருக்கலாம் என்ற பயமா? அந்த நிகழ்ச்சிகளைப்பற்றி அறிய அவளுக்குச் சந்தர்ப்பம் இல்லை. யாராவது வந்து சொல்லியிருப்பார்களோ? இவற்றைத்தவிர வேறொரு முக்கியமான காரணம் இருக்கிறது. குறிப்பிடத்தக்கப் புது அநுபவமே கடந்த நாட்களில் அவருக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்பப்பா! இப்படியும் ஓர் உலகம் உண்டா? அநுபவம் உண்டா? நாடி நரம்புகள் எங்குமே, என்றுமே நிலை பெற்று நிற்கின்ற விறுவிறுப்பு! இரத்த ஓட்டத்தின் சுபாவமே அப்படி மாறியிருக்கிறது. இந்த அநுபவம் இதுவரையில் எங்கே ஒளிந்திருந்தது? புதிய சொர்க்கத்தின் வாசல் திறக்கப்பட்டுக் கிடைத்ததுபோல் தோன்றியது. இப்படிப்பட்ட அநுபவங்கள் வாழ்க்கையில் அவசியம் ஏற்படத்தான் வேண்டும். அத்தகை அநுபவத்தை நுகர்வதிலே ஒரே தடையாகக் குறுக்கே வந்து விழுவது மனிதிதான். முன்னால் நிற்கிறாளே, இவள்தான். அந்தத் தடை மனித உருவம் பூண்டு முன்னால் வந்து நிற்பதைப் பார்த்தபோது ஏற்பட்ட வெறுப்புத்தானே, அந்த மன வருத்தம்?

கேசவபிள்ளை முன்னெல்லாம் வெகுநேரம் வரை இவ்வாறு பேச்சு மூச்சில்லாமல் இருந்ததே இல்லை. ஃபைல்களைப் பார்க்கும்பொழுதாகட்டும், எதையாவது எழுதிக்கொண்டிருக்கும் பொழுதாகட்டும்— அருகிலே கார்த்தியாயினி இருக்கவேண்டும். அடிக்கடி எழுந்து நின்று அவளுக்கு முத்தம் கொடுப்பார் அல்லது விரலினால் விளையாட்

டாகக் கன்னத்திலே குத்திக்கொண் டிருப்பார் அல்லது அலாக்காகத் தூக்கி எடுத்துச் சுற்றி நடப்பார் அல்லது பொக்காணி காட்டிக் கொண்டிருப்பார் அல்லது ஏதாவது பேச்சுக் கொடுத்துக்கொண் டிருப்பார். ஆனால், இந்தமாதிரி சலனமற்று அவர் ஒருபோதும் இருந்ததே இல்லை.

கார்த்தியாயினி கதறி அழுதவாறு அவ்விடத்திலிருந்து கிளம்பிச் சென்றாள். அப்படி அழக் காரணம் என்ன? கணவர் எதையோ சிந்தித்த வாறு சிறிதுநேரம் பேசாமல் இருந்தார், அவ்வளவுதானே? அதற்காக இப்படி அழுவதா? என்ன நேர்ந்தது? மனைவிக்கு ஏதோ தகவல் கிடைத் திருக்கவேண்டும். அதுதான் கேசவபிள்ளையின் பயம். அது சந்தேகம் என்ற நிலையிலிருந்து பயமாக மாறியது. அவர் தொடர்ந்து சென்று கார்த்தியாயினியை அள்ளியணைத்துக்கொண்டார்: ''இதென்ன பைத்தியக்காரத்தனம்?''

அவளால் ஒன்றுமே பேச முடியவில்லை.

அவர் தொடர்ந்து கூறினார்: ''இதுக்குமுன் இப்படி நடக்கலையே! இந்த மாதிரி நீ நடந்துகொண்டதை நான் பார்த்ததே இல்லையே? என்ன இது? நீ ஊரில் இருந்தபோது, நான் ஊருக்கு வராமல் இருந்தபோது நீ இப்படி அழுததில்லையே? இப்படி அழ இப்போது என்ன நடந்து விட்டது?''

கேசவபிள்ளை, முகத்தைப் பொத்தியிருந்த அவளுடைய கைகளைப் பிடித்து மாற்றிவிட்டுக் கண்ணீரைத் துடைத்தார். ஒரே ஒரு முத்தம் கொடுத்தார். அவருடைய முகத்திலும் இதழ்களிலும் கண்ணீர் ஒட்டிக்கொண்டது. அவர் அறியாமலேயே முகத்தைத் துடைத்தார். அது ஒரு தவறுகிவிட்டதெனத் தோன்றியது. ஒரு திடீர்த் தந்திரத்தைக் கையாண்டார். வரவழைக்கப்பட்ட சிரிப்புடன் கூறினார்:

''ஹா! உப்புக் கரிக்கிறது!''

அவர் மனைவியை அழைத்து வந்து உட்கார வைத்தார். அவர், அவள் அருகில் அமர்ந்துகொண்டார். அவள் புறமுதுகைத் தடவிக் கொடுத்த வாறு கேட்டார்: ''நான் கேட்கிறேன், இதென்ன பைத்தியக்காரத் தனம்? ஏன் அப்படி அழுதாய்?''

ஏன் அழுதாளென்று அவளுக்கே தெரியாது. அவள் சொன்னாள்: ''அழுகை வந்தது. அழுதிட்டேன்.''

''அது ஏன் என்றுதான் கேட்கிறேன்?''

அவள் சொன்னாள்: ''எனக்கென்னவோ ஒரு பயம்.''

''பயமா? எதுக்கு?''

''.....''

அவர் அவளைக் கட்டித் தழுவினார். அது இறுகவில்லை என்பது உறுதி. இறுக்கம் கார்த்தியாயினிக்கு அநுபவப்படவில்லை.

* * *

அன்றிரவு பார்க் வியூவிலுள்ள படுக்கையறையில், அந்தக் குடும்பத்தை மறைத்து நின்ற கரிய நிழலை மாய்த்தெறியும் முயற்சிதான் நடை பெற்றது. மனத்துக்குள்ளே சலசலப்பை ஏற்படுத்திக்கொண் டிருந்த பயத்தை அகற்றிவிடக் கார்த்தியாயினி முயன்றுகொண் டிருந்தாள். ஆனால், அது அகன்று போகவில்லை. அவள் குமரி நிகழ்ச்சியைப் பற்றி அறியவில்லை என்பது உறுதியாகிவிட்டது. அறிந்திருந்தால் இதற்குள் வெளியே வராமல் இருக்குமா? அப்புறம் ஏன் இந்தப் பெண் இப்படித் தளர்ந்து விடுகிறாள் என்றுதான் கேசவபிள்ளை தம்மையே கேட்டுக்கொண் டார். அந்தக் கேள்விக்கு அவளிடமிருந்து ஒரு பதில் வந்தது.

''ஏதோ ஒரு மாறுதல் காணப்படுகிறது என்பது மட்டும் உறுதி.''

கேசவபிள்ளையிடம் ஏற்பட்டுள்ள அந்த மாறுதல் என்னவென்று கார்த்தியாயினியால் சொல்ல முடியவில்லை. அவர் பழைய கணவராகி விடத் தீவிரமாக முனைந்து பார்த்தார். ஆனால் அந்த முயற்சி பலிக்க வில்லை என்று அவரே உணர்ந்தார். எப்படி அப்படி ஆகமுடியும்? அவளைச் சிரிக்க வைக்கவும், உற்சாகப்படுத்தவும் செய்கிற அத்தனை முயற்சிகளும் படுதோல்வியிலேதான் முடிந்தன.

ஏதாவதொரு காரணத்தைக் கண்டுபிடித்துத்தான் ஆகவேண்டும். மொழிவாரி மாநிலப் பிரிவினைக்குப் பின் தம் பதவிக்கு ஏற்படக்கூடிய நெருக்கடியை ஒரு காரணமாக எடுத்துக் காட்டுவதென்ற முடிவுக்கு வந்துவிட்டார் கேசவபிள்ளை. அதைத் தவிர வேறு எந்தக் காரணத்தை யும் அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதிலே சிறிது உண்மைகூட இருந்தது. மலபாரைச் சேர்ந்த ஒருவர் சீஃப் செக்ரடரியாக வரவேண்டு மென்று அங்குள்ளவர்கள் நிர்ப்பந்தங்களைக் கொண்டு வரலாம். மலபார் உத்தியோகஸ்தர்கள் மதராஸிலிருந்து வருகிறவர்கள். வெள்ளைத்துரை யிடம் வேலை செய்தவர்கள் என்ற கர்வம் இருக்கும். அவர்கள் மோதிப் பார்க்காமல் இருக்க மாட்டார்கள். இன்றுவரை பிரச்னையாகாத ஒரு கதையைக் கட்டிவிட்டு விளக்க உரை நிகழ்த்தினார் கேசவபிள்ளை. சொன்னார்: ''சுதந்தரம் கிடைத்தபோது ஏற்பட்ட நெருக்கடி இருக்கே, அதைவிடப் பெரிய நெருக்கடிதான் இப்போது நம்மை எதிர்நோக்கு கிறது. மலபாரைச் சேர்ந்தவர்கள் ஒன்றுபட்டு நிற்பார்கள். அங்குள்ள காங்கிரஸ் பிரமுகர்களாகட்டும், கம்யூனிஸ்டுகளாகட்டும், பி.எஸ்.பிக் காரர்களாகட்டும்—அந்தப் பகுதியிலுள்ள ஓர் உத்தியோகஸ்தர் பாதிக் கப்படுகிறார் என்றால் அவர் சார்பாக ஒன்றுபட்டு நிற்பார்கள். திருவாங்கூர்—கொச்சிக்காரர்கள்போல் அல்ல அவர்கள்.''

கார்த்தியாயினி சொன்னாள்: ''வருவது வரட்டும் என்றுதானே அன்னைக்குச் சொன்னீங்க? இந்தப் பயம் இருந்ததில்லையே?''

''இப்போது பிரச்னை இன்னும் கொஞ்சம் ஆழமாப் போச்சு. அவங்க பெரிய பட்டணத்திலிருந்து வர்றவங்க என்கிற ஹோதாவிலே நம்மை ஏளனப்படுத்துவாங்க.''

அவள் கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள்: ''நீங்க என்னென்னவோ சொல்றீங்க. பிரச்னை அது அல்லேன்னு எனக்குப் படுது. வேறு என்னவோதான். அப்படி இந்தப் பதவியிலேருந்து மாற்றுவதாயிருந்தா மாற்றிடட்டுமே. இருக்கிறதை வச்சுக்கிட்டு வாழலாமல்ல?''

கேசவபிள்ளை கேட்டார்: ''அப்போ நம்ம மகளோட கல்யாணக் காரியம்? பதவியில் இருக்கிறபோது ஒரு நல்ல மாப்பிள்ளை கிடைக்கும். விலகிவிட்டால் ஒருவேளை அப்படிக் கிடைக்காமல் போயிடும்.''

கார்த்தியாயினிக்கு ஒரு நம்பிக்கை இருந்தது.

''தலைவிதிபோல் நடக்கும். அல்லாமே என்ன?''

கேசவபிள்ளை ஸீபல்களைப் பார்க்கும்போது வழக்கம்போல் அவள் அருகிலே இருந்து வருகிறாள். ஆனால் மௌனந்தான் நிலவுகிறது. அவர்களுக்கிடையில் ஆத்திரமோ, வெறுப்போ, மனவருத்தமோ, எதுவும் கிடையாது. ஆனால் என்னவோ மிக முக்கியமான ஒன்றை இழந்திருக்கிறார்கள். இந்த நிலையாவது தொடர்ந்து நீடித்தால் போது மென்ற ஒரு கருத்து கேசவபிள்ளைக்கு இருந்தது. நாள் செல்லச் செல்ல இந்த நிலை இணங்கிப் போய்விடும். அப்போது மனநிறைவு மீண்டும் ஏற்பட்டுவிடும். சிரிப்பும் விளையாட்டும் உற்சாகமாக நடைபெறுது என்பது மட்டுந்தான். நான்கைந்து நாட்கள் இவ்வாறு நகர்ந்து சென்றன.

ஒரு நாள் சதிபதிகள் இருவரும் பார்க் வியூவிலுள்ள பூங்காவில் உலாவிக்கொண் டிருந்தனர். கார்த்தியாயினி கேசவபிள்ளையின் நிழல் போல் நடந்துகொண் டிருந்தாள். இருவருக்குமிடையில் மௌனந்தான் நிலவியது.

இதயம் வெடித்துக் கிளம்பியதுபோல் சொன்னாள் கார்த்தியாயினி:

''அன்னைக்கு நாம் நடந்துக்கிட்டிருந்தது இப்படி அல்ல.''

கேசவபிள்ளையின் இதயமும் சிறிது வேதனையுற்றது. அன்றெல்லாம் எவ்வளவுதான் பேசினாலும் முடிவே இருக்காது. அவர், தற்போதைக்கு நிலை பெற்றுவிட்ட நிலையை உறுதிப்படுத்துவதற்காகக் கூறினார்: ''அந்தப் பருவத்தை எல்லாம் தாண்டி விட்டோம் அல்லவா? சிறிது கட்டுப்பாடு தேவை அல்லவா? நாம் என்ன இளைஞர்களா?''

கண்ணீரிலே தோய்ந்த ஒரு பதில்தான் திடீரென வந்தது: ''என்னுடை இளமைப் பருவத்திலே அதெல்லாம் நடந்ததில்லே.''

வரவழைக்கப்பட்ட ஒரு புன்னகையுடன் கேசவபிள்ளை சொன்னார்: ''அதுக்கு நீ நன்றாக அநுபவிக்கவில்லையா? இன்னமும் திருப்தி ஏற்பட வில்லையா?''

அவர், அவள் தோள்மீது கைபோட்டு ஒருமுறை அவளைப் பிடித்துக் குலுக்கிச் சொன்னார்: ''கார்த்தியாயினீ, கேள்! கேரளம் என்ற ஒரு மாநிலம் உருவாகப் போகிறது. வேலை நிறையச் செய்ய வேண்டியிருக் கிறது. திருவாங்கூர், திரு–கொச்சி. . . அன்றெல்லாம் இவ்வளவு கஷ்டம் இருந்ததில்லை. என்னைப் பொறுத்த வரையில் திருப்தி நிறைந்த

சந்தர்ப்பம் இது. மைபல்களெல்லாம் சேர்ந்து தலைக்குள்ளே நெருப்பைக் கிளப்பிவிடுகிறது. விஷயம் என்னவென்று புரியாமல் குழந்தைத்தனமாக விளையாடாதே!''

முற்றும் உண்மையையே பேசுவதுபோல் நடித்தவாறு அதே குரலில் கேசவபிள்ளை தொடர்ந்து கூறினார்: ''குமரியிலேதான் அதன் முக்கியத்துவத்தை நான் பூரணமாக உணர்ந்து கொண்டேன். அதன் பின் மனம் ஒரு நிலையில் இல்லை. இப்போதுகூட அந்த மைபலைப்பற்றித்தான் யோசித்துக்கொண்டிருந்தேன். மலபாரைச் சேர்ந்த அந்த மேனன் மார்கள் இருக்கிறுங்களே, அவங்களெல்லாம் இங்கே வந்து குவிகிறபோது ஒரே குழப்பமாகத்தான் இருக்கும். அவங்க சொல்ற பேச்சைக்கூடப்புரிந்து கொள்றது கஷ்டந்தான். நாசமாப் போன அந்த ஏரியாவிலே ஒன்றும் கிடையாது. போதுமான அளவு பள்ளிக்கூடங்கள் கிடையாது. அது ஒரு புறம் இருக்கட்டும். மதராஸிலிருந்து வருகிற இந்த உத்தியோகஸ்தர்கள் இருக்கிறுங்களே, அவங்க நம்ம திருவாங்கூர் உத்தியோகஸ்தர்களோட தலைக்குமேலே ஏறி உட்கார்ந்திடுவாங்கன்னுதான் தோணுது. அதுதான் பெரிய கவலை அளிக்கிற விஷயம். இப்பவே அடுத்த சனிக்கிழமையிலிருந்து அந்த மைபல்களுடன் போக வேண்டியிருக்கு. நாலஞ்சு நாட்கள் அந்த வேலை இருக்கும்.''

கார்த்தியாயினி கேட்டாள்: ''எங்கே?''

கேசவபிள்ளையின் பதில் தெளிவாக இருக்கவில்லை என்பது தெளிவு.

''அது. . .ஆ. . . அப்புறம் பீருமேடு அல்லது தேக்கடியாத்தான் இருக்கும்.''

''இங்கே திருவனந்தபுரத்திலே உட்கார்ந்து வேலை செஞ்சாப் போதாதுங்களா?''

கேசவபிள்ளைக்குச் சற்று ஆத்திரம் வந்தது: ''இதெல்லாம் சர்க்கார் காரியம்!''

கார்த்தியாயினி சிறிது அடங்கிக் கொண்டாள். கேசவபிள்ளை தொடர்ந்து கேட்டார்: ''நீ ஏன் இப்படியிருக்கிறாய்?''

''எப்படி?''

''வேலை விஷயத்தில் நீ ஒருகாலும் குறுக்கிட்டதில்லையே?''

நிறைந்த கண்களுடன் கார்த்தியாயினி கூறினாள்: ''நான் எதுக்கும் குறுக்கே நிற்கப் போவதில்லே. எதுக்கும் குறுக்கே நிற்கவும் இல்லையே. நான் நிக்கறதில்லே. போறேன்.''

அழுதவாறு அவள் வீட்டுக்குள்ளே சென்றாள்.

* * *

மூன்று சமுத்திரங்கள் ஒன்று சேருகிற, உலகிலேயே அபூர்வமான அந்த அழகுத் தலத்திலேதான் அன்று அந்தக் காதலர்கள் சந்தித்தார்கள் என்றால், இன்று ஸஹ்யமலைச் சாரலிலுள்ள ஒரு தோட்டத்தைத்தான்

மீண்டும் சந்திப்பதற்காகத் தேர்ந்தெடுத்திருந்தார்கள். ''வர நாலஞ்சு நாட்களாகும்'' என்று அவள் முகத்தைப் பாராமல், முகத்தைப் பார்த்துச் சொல்லத் தைரியம் இல்லாமல் சொல்லிவிட்டுக் கேசவபிள்ளை காரிலே ஏறிக்கொண்டார். படிவாசலிலே, கண்ணீர் தோய்ந்த முகத்துடன் கார்த்தியாயினி அந்தக் கார் கிளம்பிப் போவதைப் பார்த்து நின்றாள். எங்கோ பிரிந்து செல்வதுபோலவே அவளுக்குத் தோன்றியது. அவள் பிடியிலிருந்து அந்தக் கார் பாய்ந்து சென்றது. கேசவபிள்ளை மனைவி நிற்பதைக் கண்டார். திரும்பிப் பார்க்க வேண்டுமென்று பலமுறை விரும்பினார். ஆனால் முகம் திரும்ப மறுத்துவிட்டது. தூரப் பிரயாணத்தின்போது இதுபோல் ஒரு போதும் நிகழ்ந்ததில்லை. கார் வளைவைக் கடந்து மறைந்துவிட்டது. கார்த்தியாயினி மேல் வேஷ்டியால் முகத்தைத் துடைத்தவாறு உள்ளே சென்றாள். வாழ்க்கையிலே முதல் முறையாக நிரந்தரமான ஒரு பிரிவு ஏற்பட்டுவிட்டதுபோல் அவளுக்குத் தோன்றியது.

கேசவபிள்ளைக்குக்கூட மனநிம்மதி இருக்கவில்லை. ஆனால், ஆங்கே, தொலைவிலுள்ள பச்சிலைக் காட்டிலிருந்து கிளம்பி வந்த அழைப்பு அவரை இழுத்துச் சென்றுகொண்டிருந்தது. கார், அதன் அனைத்துச் சக்திகளையும் பயன்படுத்தியவாறு பாய்ந்து சென்றது. அங்கே சென்று சேர மனம் விரைந்தது.

* * *

லக்கோலின் தேயிலைத் தோட்டத்தின் மத்தியில், பாறைக் கூட்டங்களைச் சென்று மோதி, இடைவெளிகளினூடே பாய்ந்து, கலகலவென்று இசைத்தவாறு, ஆங்காங்கு வளைந்தரங்களிலே தோன்றியும் மறைந்தும் ஓடும் காட்டாறு ஒன்று உண்டு. அந்தக் காட்டாற்றின் மத்தியிலுள்ள பாறை ஒன்றின்மீது, அன்று மாலை கேசவபிள்ளையும் தங்கம்மாவும் அமர்ந்து சல்லாபம் செய்துகொண்டிருந்தனர். அவள் காவித் துணிகளை எல்லாம் கழற்றி எறிந்திருந்தாள். அவளுடைய செழுமையான கூந்தலிலிட முல்லை மலர் மாலைதான் தலைக்குக் கூடுதல் சுமையைக் கொடுத்துக்கொண்டிருந்தது. முல்லைப் பூ, போன்று வெண்மையான ஆடைகளை அணிந்திருந்தாள். கவர்ச்சியாகத் திலகமிட்டிருந்தாள். தலையோடு கால் வரையில் அழகாகச் சிங்காரித்திருந்தாள். ஒரு காதல் காரிகையாகவே வந்திருந்தாள்.

ஆற்றின் அக்கரையிலே, செம்பூக்களால் நெருப்புச் சுடரைப் பரப்புகிற ஒரு மரத்தின் கிளையிலே இரண்டு கிளிகள் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்தன. மூக்குகள் உராய்ந்தன. படபடவென்று ஓசை எழுப்பிய இறக்கைகள் ஒருங்கிணைந்தன. அப்பப்பா! என்ன வெறி அது! தங்கம்மா அதைக் கேசவபிள்ளைக்குச் சுட்டிக் காட்டினாள். அவளுக்கு

நாணம் வந்துவிடடது. சிரம் குனிந்தது. குலுங்கக் குலுங்கச் சிரித்தாள். அப்போது அவர்களுடைய இதழ்களும் பரஸ்பரம் உராய்ந்தன.

''ஐயய்யோ! யாராவது வந்து பார்த்திடப் போறுங்க!'' அவள்தான் சொன்னுள்.

கேசவபிள்ளை ஃபல்கள் பலவற்றை எடுத்துக்கொண்டு வந்திருந்தார். ஆனுல் அவற்றில் ஒன்றையாவது அவிழ்க்கக்கூட இல்லை. அவர் தோட்டத்திலுள்ள பங்களாவிலே ஒரு பிரம்புச் சாய்வு நாற்காலியிலே அமர்ந்திருந்தார். அதன் ஒரு கைமீது அவர் பக்கமாகச் சாய்ந்தவாறு தங்கம்மா அமர்ந்திருந்தாள். அவருடைய கை அவளுடைய இடுப்பைச் சுற்றி வளைத்திருந்தது. அப்போது அவர்கள் மிக முக்கியமான விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தனர். ஆசிரமப் பிரச்னைகள்! அவர் கேட்டார்: ''நீ இப்போது ஆசிரம மாதாஜி அல்லவே?''

கீழிதழை முன்னே நீட்டியவாறு அல்ல வென்று முனகினுள்.

''நான் அந்தப் பதவியை விட்டுவிட்டேன். பிரபாவதி தேவிக்கு அதன் மீது ரொம்ப ஆசை. அவளே எடுத்துக் கொள்ளட்டுமென்று விட்டு விட்டேன். ஆனுல், அநாதை மந்திரத்தை அமைக்கும் வரையில் என்னுடைய பெண்களை அங்கேயே தங்க வைக்கவேண்டும்.''

கேசவபிள்ளை தங்கம்மாவின் அறிவீனத்தைக் கண்டு நகைத்தார். ஒன்றுமறியாத ஒரு பேதைப் பெண்போல் அவள் தொடர்ந்து கூறினுள்:

''அதெப்படி ஆசிரம மாதாவாக இருக்க முடியும்? நல்லாக் கேட்டீங்க. அடிக்கடி உங்களுடன் இப்படி வரவேண்டாமா? இனி மதராஸுக்குப் போகணும். அப்புறம் எப்படி ஆசிரம மாதாவாக இருக்க முடியும்? பஞ்சனையில் இருக்கும்போதுகூடக் 'குமரி'யைப்பற்றித்தான் நினைவு.''

தங்கம்மா இவ்வாறு சொல்லிக்கொண்டிருந்தாள். பொருளற்ற அந்தப் பேச்சு அவரைச் சிந்தனையில் ஆழ்த்தியது. எவ்வளவு வயதாகி விட்டது! வாழ்க்கையிலே பல்வேறு நெருக்கடிகள் ஏற்படவும் செய்திருக்கின்றன. இருந்தும் இவளுக்கு ஒரு தனனடக்கம் ஏற்படவில்லை. பகுத்தறிவு ஏற்படவில்லை. அவை எல்லாம் இனி என்றைக்குத்தான் ஏற்படப் போகின்றனவோ?

தங்கம்மா ஒரு மிகப் பெரிய சமாசாரத்தைப்பற்றிக் கூறினுள்: ''இப்போ ஆசிரமத்திலே நிலைமை எப்படி இருக்கிறதுன்னு தெரியுமா? ரொம்ப வேடிக்கைதான். பிரபாவதியின் பிரார்த்தனை அறையின் மத்தியில் திருவடிகளோட உருவப்படத்தை வச்சிருக்கிறுள். அதுக்குப் பக்கத்திலேயே பிரபாவதியின் படம் இருக்கு. அவற்றுக்கு இரு பக்கத்திலுந்தான் கிருஷ்ணன் லட்சுமிப் படங்களை வச்சிருக்காங்க. அவள் தன்னையே பூஜிக்கிறுள். தன்னோட படத்துக்கே தீபாராதனை பண்றதைப் பார்த்திருக்கிறேன். என்ன பக்தி! சிரிப்புத்தான் வரும்.''

ஆசிரம விஷயங்களைக் கூடுதலாக அறிந்து கொள்ள கேசவபிள்ளைக்கு ஆவல் பிறந்தது. அவர் கேட்டார்: ''இந்தப் பிரபாவதி தேவிக்கும் திருவடிகளுக்கும் இடையிலே எப்படி. . .?''

தங்கம்மா சொன்னாள்: ''ஸ்வாமிகளுக்கு முன்னால் சென்று கொஞ்சம் ஆடிக் காட்டினால் போதும். பிரபாவதி தேவிக்கு அந்த விஷயத்திலே ரொம்பத் திறமை. என்ன ஆட்டம் ஆடறாள் தெரியுமா? என்னாலே அப்படி யொண்ணும் செய்ய முடியாது.''

கேசவபிள்ளை பொருள்படும்படியாகக் கூறினார்: ''முடியாது முடியாது! அதல்லவே, நம்ப சுபாவம்.''

அந்தப் பேச்சு அவளுக்குப் பிடிக்கவில்லை.

இவ்வாறாக இரண்டு நாட்கள் கழிந்துவிட்டன. ஒவ்வொரு நாளும் புதிது புதிதான அநுபவங்களைத் தங்கம்மா கேசவபிள்ளைக்கு வழங்கிக் கொண்டிருந்தாள். மேலும் புதிய அநுபவங்களைப் பெறுவதற்காக மதராஸிலே தங்குவதற்கான தேதியைக்கூட நிர்ணயித்துக் கொண்டனர். கடற்கரையிலே தங்கியிருந்தார்கள். வஸந்தரத்திலே தங்கியிருந் தார்கள். இனிமேல் ஒரு பெரிய நகரத்திலே தங்கியிருக்க வேண்டும்.

அலை உடைந்து பெருகி வருகிற பெரு வெள்ளத்திலே அகப்பட்ட வாறு கேசவபிள்ளை இழுபட்டுப் போய்க்கொண் டிருந்தார். ஆனால் தம்மையறியாமல் அவர் அப்படிப் போகவில்லை. இடையிடையில் அந்தப் போக்கைப்பற்றி அவர் பயப்பட்டுக்கொண் டிருந்தார்.

அவர் மடிமீது தலை வைத்துப் படுத்திருந்த அவளிடம் ஒரு நாள் கேட்டு விட்டார்: ''உன் குறிக்கோள் என்ன?''

யோசித்து முடிவெடுத்துக் கேட்கப்பட்ட கேள்வி அல்ல அது. கவலை யற்றுப் படுத்துக்கொண் டிருந்த அவள் வதனத்தை உற்றுப் பார்த்த போது தம்மையறியாமலேயே கிளம்பி வந்த கேள்விதான். கேட்டு முடித்தபோதுதான் கேட்க வேண்டாத கேள்வி என்று அவருக்குத் தோன்றியது. கேசவபிள்ளை பதிலை எதிர்பார்த்தார்.

அதற்கான பதில் ஒரு மறுகேள்வியாக இருந்தது. அவர் கேள்வி அவள் காதிலே விழவில்லைபோல் தோன்றியது.

''ஊம்? என்ன?''

தொடர்ந்து தம் நோக்கத்தைத் தெளிவுபடுத்த அவர் யத்தனிக்க வில்லை. அந்தப் பிரச்னையிலிருந்து அவர் நழுவிக்கொண்டார். இந்தப் புத்துலக அநுபவத்திலே அவருக்கு வெறுப்பு ஏற்படத் தொடங்கவில்லை. அவர் சொன்னார்: ''சும்மாத்தான் கேட்டேன்.''

''என்ன கேட்டீங்க?''

''ஒன்றுமில்லை. ஒன்றுமில்லை.''

இவ்வாறு அந்த உறவைத் தெளிவுபடுத்துவதற்கான சந்தர்ப்பம் நழுவிப் போய்விட்டது. பின்பு, பனி மூட்டமுள்ள ஒரு மாலைப் பொழுதில் தோட்டத்திலுள்ள ஒரு பாதையினூடே அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள். கேசவபிள்ளை கேட்டார்: ''இதெல்லாம் மற்றவர் களுக்குத் தெரிந்து விட்டால். . . ?''

''தெரிந்துவிட்டால்? நான் ஆசிரம மாதாவாக இருப்பதனால் கேக்கறீங்களா?''

அவர் சொன்னார்: ''அது மட்டுமா? என்னைப்பற்றிக்கூடக் கொஞ்சம் எண்ணிப் பார்! நான் ஒரு கணவன், ஒரு பெண்ணுக்குத் தகப்பன்!''

தங்கம்மா சிறிது சுருங்கி விட்டாள். அந்த விஷயத்தைப்பற்றி அவள் யோசித்திருக்கவில்லை. அவள் நாக்கு அசையவில்லை. இப்படிப் பேசாமல் இருந்துவிடுவது அந்த வாயாடிப் பெண்ணின் சுபாவம் அல்ல. அவர் தொடர்ந்து கேட்டார்: ''நீ அதைப்பற்றி யோசிக்கவே இல்லையா?''

தங்கம்மாவின் சுறுசுறுப்பு மறைந்துவிட்டது. அந்த உண்மையைப் பார்க்கத்தான் வேண்டியிருந்தது. கேசவபிள்ளை அந்தக் கேள்வியுடன் நிறுத்திக் கொள்ளவில்லை.

"என் மனைவிக்குத் தெரிந்துவிட்டால் என்ன ஆகுமென்பதை நினைத்துப் பார்!. . . அல்லாவிட்டால், உனக்கு அதைப்பற்றி எப்படித் தெரியப் போவது?''

அந்தப் பிரச்னையை, அதன் முழுமையான உருவத்திலேயே அவள் அறியவேண்டுமென்பதற்காக அவர் தொடர்ந்து கூறினார்:

''நீ ஒரு மனைவியாக இருந்தால் மட்டுந்தான் உன்னால் அதை அறிந்து கொள்ள முடியும். கணவன் இன்னொருத்தியோடு கூடிக் குலாவி உல்லாசமாயிருந்தால் என்ன என்பதைப்பற்றி. . .''

தங்கம்மாவுக்கு உற்சாகம் குன்றிவிட்டது. அவள் தளர்ந்து விட்டாள். அநுதாபத்துக்குரிய முறையில் கேட்டாள்:

''என்மீது அன்பு இல்லையா?''

கேசவபிள்ளையைத் தடுமாறவைத்த கேள்வி அது. அவர் அதை எதிர் பார்க்கவில்லை. தங்கம்மா அதற்கு நேரடியான பதிலை எதிர்பார்க்க வில்லை என்று தோன்றியது. அவள் கூறினாள்: ''நான்தான் முதலில் உங்களை நேசித்தேன். நீங்கள் என்னைத்தான் முதலில் நேசித்தீர்கள்.''

''அது உண்மைதான் தங்கம்மா. ஆனால் நீ அந்த அன்பை மதிக்காமல் சில காலம் நடந்து கொண்டாய். இப்போதைய நிலைமை. . .''

கேசவபிள்ளை பூர்த்தியாக்காமல் நிறுத்திக்கொண்டார். தங்கம்மா கேட்டாள்:

''இப்போதைய நிலைமை . . .?''

''மாறுபட்டது. நீ மாறுபட்டதொரு வாழ்க்கை முறையைக் கடைப் பிடித்தாய். ஒரு துறவியானாய். நான் ஒருத்தியை மணம் புரிந்தேன். அவள் என்னை நேசித்தாள், நேசிக்கிறாள். நான் இப்போது அவளுக்குச் சொந்தம். அவளுக்கு மட்டும் சொந்தம். எனவே இந்த நிலையிலிருந்து கொண்டுதான் பிரச்னைகளை அணுகவேண்டும்.''

தங்கம்மா பரிதாபமான முறையில் திரும்பவும் கேட்டாள்: ''அப்போ. . . உங்களுக்கு என்மீது அன்பு இல்லையா?''

அநுதாபத்துடன் பதில் அளித்தார் கேசவபிள்ளை: ''உண்டு. உன்மீது அன்பு உண்டு. உன்னை நான் மறக்க மாட்டேன். நிராகரிக்கமாட்டேன். நமது உறவு நெருக்கடி மிகுந்தது என்பதைப்பற்றி மட்டும் நீ அறிந்து கொண்டால் போதும்.''

அன்றிரவு பங்களாவுக்குள்ளே அந்தப் பேச்சு வார்த்தை தொடர்ந்து நடைபெற்றது. ஆனால் குணும்சத்தில் மாறுதல் இருந்தது. தங்கம்மாவின் இதயத்திலே உரிமை உணர்வு தலை தூக்கியிருந்தது. வாதம் புரிவதற்கான மனத் துணிச்சலும் இருந்தது.

அவள் கேட்டாள்: ''என்னை நேசித்திருந்தீர்கள். நானும் நேசித் திருந்தேன். அப்படித்தானே?''

''எப்போதும் இதே கேள்வியைக் கேட்டுக்கொண் டிருக்கிறயே?'' கேசவபிள்ளை புன்னகை செய்தவாறு மறுகேள்வியைக் கேட்டார்.

''ஆம். திரும்பத் திரும்ப இதே கேள்வியைத்தான் கேட்க விரும்பு கிறன். வேறு கேள்வியே இல்லை.''

''என் பதில் என்ன தெரியுமா? நீ அந்த நேசத்தைக் காற்றிலே பறக்க விட்டாய் என்பது.''

இப்படிச் சொல்லும்போது தம் திருமண விஷயம் அவர் மனத்தில் தோன்றியது.

தங்கம்மா இதற்கு முன் கண்டிராத கடுமையுடன் கூறினாள்: ''நான் சில விஷயங்களைத் திறந்து சொல்லப் போகிறேன். தவருக நினைக்கா தீர்கள்.''

''நினைக்கமாட்டேன்'' என்று அவர் சொன்னார். அவள் எதை வேண்டு மானாலும் சொல்லலாம்.

''நான் ஒன்று கேட்கிறேன்; அன்றைக்கு எப்போதாவது நான் எண்ணி யிருந்தால், இன்று உங்கள் மனைவி பார்க் வியூவில் குடியிருப்பாளா?''

விஷமயமான கேள்வி அது. அதற்கு அவர் ஓர் இலக்கணம் கூறினார்: ''என் மனைவிமீதுதான் உனக்கு ஆத்திரம். பார்க் வியூவுக்குக் குடிவந் திருப்பாளா என்றுதான் நீ கேட்டிருக்கவேண்டும். இருக்கட்டும்! ஒப்புக் கொண்டேன். நான் பதில் அளிக்கிறேன். என் மனைவி குடியிருக்கமாட் டாள். உம்! அப்புறம்?''

அப்புறம் தங்கம்மாவுக்குக் கேட்பதற்கான கேள்வி ஒன்றும் இல்லை போல் தோன்றியது.

கேசவபிள்ளை மேலும் கூறினார்: ''என் மனைவிக்குப் பார்க் வியூவிலே குடியிருக்க விருப்பமும் இல்லை; விரும்பியதும் இல்லை.''

அவளுக்குப் பதில் இல்லாமற் போய்விட்டது. வருத்தத்துடன் கூறினாள்: ''நீங்கதான் என்னைக் கெடுத்தீங்க.''

அவர் அமைதியான குரலில் கூறினார்: ''இல்லை, நான் அப்படிச் செய்யவில்லை தங்கம்மா.''

தங்கம்மா அந்தப் பழைய வாதங்களையே திரும்பவும் கூறினாள். கேசவபிள்ளை அவளைக் கட்டுப்படுத்தவில்லை, அதட்டி நிறுத்தவில்லை, தண்டிக்கவில்லை. இத்தியாதி.....

''நான் எப்படியாவது தொலைஞ்சு போவட்டும்னு கருதினீங்க.''

அவளுடைய அத்தகைய பேச்சு அப்போதைக்கு நிற்காது என்று அவர் உணர்ந்துகொண்டார். அந்த உறவைப்பற்றித் தெளிவான ஒரு கருத்து

அவளுக்கு ஏற்படவேண்டியிருக்கிறது. அது இன்றியமையாதது. அவர் கேட்டார்:

''எல்லாம் சரிதான். உனது நோக்கந்தான் என்ன?''

''நீங்கள் எனக்குச் சொந்தமானவர்.''

கேசவபிள்ளைக்குச் சற்றுத் துணிச்சலை உருவாக்கிக்கொள்ள வேண்டியிருந்தது. சொன்னார்:

''அல்ல, நான் கார்த்தியாயினிக்குத்தான் சொந்தம்.'' அப்புறம் அவர் கேட்டார்: ''நீ கூட அதை மறுக்க முடியுமா?''

உதவியற்றவள் போல் அவள் கேட்டாள்: ''அப்புறம் நான்.....?''

கேசவபிள்ளை அநுதாபம் தொனிக்கின்ற குரலில் கூறினார்: ''சொல்கிறேன்; 'எனக்கு யாருமில்லை, ஒன்றுமில்லை' என்று சொல்லியல்லவா, குமரிமுனையிலே நீ என்னை அணுகினாய்? அந்தக் கவலை உனக்கு வேண்டாம். உனக்கு நான் இருக்கிறேன். உனக்குச் செய்யவேண்டிய சில கடமைகளும் உண்டு. எனவே உனக்கு ஒன்றுமில்லை என்ற நிலைமை ஏற்பட்டுவிடாது.''

தாம் சொன்னதைத் தங்கம்மாவுக்கு இன்னும் தெளிவாக்க வேண்டியிருந்தது. கேசவபிள்ளை தெளிவாக்கினார்: ''ஊட்டிக்காடு மலையிலுள்ள தேயிலைத் தோட்டத்திலே எனக்குச் சுமார் முந்நூறு ஏக்கர் நிலம் இருக்கிறது. அது உனக்காக உள்ளதுதான். ஆனால், ஒரு விஷயத்தைச் சொல்லிவைக்கிறேன். அதை விற்கவோ, இன்னொருவருக்கு எழுதிக் கொடுக்கவோ உனக்கு உரிமை இருக்காது. அதிலிருந்து கிடைக்கிற வருமானத்திலே நீயும், உன் சிநேகிதிகளும் சௌக்கியமாக வாழலாம்.''

இப்போது தங்கம்மாவுக்கு விஷயம் தெளிவாயிற்று: ''அப்போ, நான் ஓய்வுப் பணம் பெற்று வாழணும்னு சொல்றீங்களா?''

''அப்படியே வைத்துக்கொள். ஆனால், அந்த நிலையிலே அல்ல. உனக்குக் கவலையோ, தெருக்கடியோ ஏற்படுகிற சந்தர்ப்பங்களில் எல்லாம் உதவியளிக்க நான் ஓடோடி வருவேன்.''

''அப்போ.....'' தங்கம்மா மேற்கொண்டு பேசவில்லை. கேசவபிள்ளை அவளுடைய மனத்தில் இருப்பதைப் புரிந்து கொண்டவர்போல் கூறினார்: ''ஆம், அதுதான் நமது உறவு. குமரியிலே இருந்தபோது நீ ஏதோ தேவையுள்ளவளாக வந்தாய்.''

அவர் சிரிப்புடன் தொடர்ந்து சொன்னார்:

''இன்னும் என்னை நீ காலால் மிதித்து வெளியேற்றி விடுவாய். என் மனைவியைப் பற்றிய நினைவு எனக்கு ஏற்படும்போது நான் உன் முன்னால் எதற்கும் உதவாதவனாகி விடுவேன். நீ என்னை இகழ்வாய்.''

உண்மையான சந்தேகத்துடன் தங்கம்மா கேட்டாள்: ''அப்போ, குமரியிலும் இங்கும்.....?''

கேசவபிள்ளை சொன்னார்: ''அது ஒரு பலவீனம்.''

''நீங்கள் என்னை மீண்டும் வெறியூட்டினீர்கள்.''

''நீ என்னையும். அதிருக்கட்டும். பருவமும் பக்குவமும் ஆகிவிட்ட பிறகு விலக்கப்பட்ட கனியை நீடித்த நாள் வரைக்கும் சாப்பிட்டுக் கொண்டிருக்க முடியாது.''

அளவுக்கு மீறிய உணர்ச்சி வெறியுடன் தங்கம்மா சொன்னாள்: ''கடவுளே! உங்களை என்னோடு இணைத்துக் கட்டிவிட ஒரு சரடு இருந் திருக்குமானால்.....?''

''சரடா?''

வேதனையுடன் சொன்னாள் தங்கம்மா: ''ஆம், சரடு! எனக்கு ஒரு குழந்தை பிறந்திருந்தால் . . .!''

அத்தியாயம் 39

அசைகின்ற நம்பிக்கைகள்

சுதந்தரப் போராட்டத்தில் கலந்துகொண்டு துயரடைந்தவர்களின் பெயரில் ஊட்டிக்காடு மலையின் பகுதிகள் பதிவு செய்து கொடுக்கப் பட்டன. ராமன் இளையதுவின் பெயரிலேகூட ஐந்து ஏக்கர் நிலம் பதிவு செய்யப்பட்டது. ஆனால், அவருக்கு நிலம் கிடைக்கவில்லை. நானூறு ரூபாய் கிடைத்தது. நாராயணன் நாயர் மூலமாகத்தான் அது கிடைத்தது. இந்த முறையில் வேறு சிலருக்கும் தொகை கிடைத்தது.

ஊட்டிக்காடு மலையிலுள்ள மரங்கள் அத்தனையையும் வெட்டி இறக்கிக் கொண்டு போகும் வரையில் நீர்மின் திட்டத்தின் எந்தப் பணியும் துவக்கப்படவில்லை. அது நாட்டுக்குப் பெரிய அளவிலே வருவாய் தருகிற ஒரு திட்டமாயிருந்ததனால் இருக்கலாம். அந்தப் பகுதி முழுதும் சேர்ந்து ஒரு பெரிய தேயிலைத் தோட்டமாக உருப்பெற்று விட்டது. காங்கிரஸ் பிரசிடெண்டு மிஸ்டர் லூக்கோஸ், மந்திரி மிஸ்டர் மாத்யூ, சீஃப் செக்ரடரி மிஸ்டர் கேசவபிள்ளை, இன்னும் இரு செல் வந்தர்கள் ஆகியோர்தாம் அந்தத் தோட்டத்தின் முதலாளிகள்.

சங்கரப்பிள்ளைக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. அவரைப்போல் ஒன்றும் கிடைக்காதவர்கள் பலர். அவர்கள் எல்லாரும் அடி பட்டவர்களும் சிறை சென்றவர்களுந்தாம். விசாரித்தபோது, சுதந்தரப் போராட்டத்தில் எந்த விதத்திலும் பங்கு பெறுத பலருடைய பெயரிலே நிலப்பதிவு நடைபெற்று வந்ததாகத் தெரிந்தது.

சங்கரப்பிள்ளையால் இதைச் சகிக்க முடியவில்லை. அவர் பைத்தியம் பிடித்தவர்போல் ஆகிவிட்டார். என்ன செய்வதென்றே அவருக்குத் தெரியவில்லை. தினசரி ஒவ்வொரு மனுவைச் சர்க்காருக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். அது அவருக்கு ஆறுதலாக இருந்தது. இன்று, தம் துயரங்களைச் சித்திரிக்கும் மனுவாக இருந்தால், நாளை நாட்டில் நடைபெறுகிற ஊழல்களைச் சித்திரிப்பதாக இருக்கும். ஆனால் ஒரு மனுவுக்காவது பதில் கிடைக்கவில்லை.

இந்த அவல நிலையை வெகு நாட்கள் வரையில் அவரால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. ஆத்திரம் அதிகரித்து வந்தது. பார்ப் பவர்களிடம் எல்லாம் அநியாயங்களையும் அட்டூழியங்களையும் பற்றியே கூறினார். யாரால் என்ன செய்யமுடியும்? என்ன யோசனை கூற முடியும்? திருவனந்தபுரத்துக்குச் சென்று தெரிவிக்கும்படி சிலர் உபதேசித் தனர். தலைமைச் செயலக வாசலிலே உண்ணாவிரதம் இருக்கும்படி

சிலர் யோசனை கூறினர். அந்தத் தேசத் தொண்டனுக்கு ஏதாவது ஓர் உதவி கிடைத்துத் தானாகவேண்டும். இல்லாவிட்டால் அந்த ஏழை மனிதனின் இதயம் தகர்ந்துவிடும்.

மிகவும் சிரமப்பட்டு மூன்று நான்கு ரூபாய் சம்பாதித்தார். திருவனந்தபுரத்துக்குப் போகவேண்டுமென்பதுதான் முடிவு. இத்தகைய ஊழல்களுக்கு ஏதாவதொரு தீர்வு காணுமல் அங்கிருந்து திரும்பிவர மாட்டேன் என்று சங்கரப்பிள்ளை அனைவரிடமும் கூறினார். ராமன் இளையது மட்டும் அவரை உபதேசித்தார்:

''என்ன சங்கரப்பிள்ளை, உங்களால் எப்படி இதுக்கெல்லாம் தீர்வு காண முடியும்?''

சங்கரப்பிள்ளைக்கு ஆத்திரந்தான் வந்தது. ''நீங்க சொல்லுவீங்க. நீங்கதான் கிடைச்ச பிச்சைக் காசையும் வாங்கிக்கிட்டு உட்கார்ந்திட்டீங்க.''

இளையதுவுக்கு ஆத்திரம் வரவில்லை. ''நீங்கள் போய்ப் பாருங்கள். வெற்றி பெற்றுல் எனக்கும் சந்தோஷந்தான்.''

முகத்தினில் பொக்காணி காட்டியவாறு சங்கரப்பிள்ளை பரிகாசம் பண்ணினார். ''ரொம்பச் சந்தோஷம்!''

சங்கரப்பிள்ளை, திருவனந்தபுரப் பயணத்தின் துவக்கமாகக் கோட்டயத்துக்குக் கிளம்பினார். கட்டியிருக்கிற வேஷ்டியைத் தவிர இரண்டு வேஷ்டிகளும், ஒரு சட்டையும், ஒரு போர்வையும், ஒரு துண்டும் கொண்ட ஒரு சிறு மூட்டையும் மருந்துப் புட்டியும் எடுத்துக் கொண்டார். பெரியதொரு அநீதியை அழித்தொழிக்கும்படியான ஒரு மாபெரும் போராட்டத்தை நடத்த அந்த மனிதர் தனியாகக் கிளம்பினார். விடை கொடுத்தனுப்ப யாரும் இல்லை. தம் புனிதப் பயணத்தை வருணித்துப் பேருரை நிகழ்த்தவில்லை. அந்தச் சுதந்தரப் போர் வீரருக்கு அவரைப்போல் வீரராகப் போர் புரிந்த மந்தாய் மட்டும் ஒரு மாலை அணிவித்தார். மந்தாய்க்கு ஒரு கால் மட்டுந்தான். எல்லாரிடமும் ஏற்கனவே சொல்லி வைத்திருந்தபோதிலும் பயணத்தைத் துவக்கியபோது யாரும் வரவில்லை. அவர் வீட்டிலுள்ள, தோலும் எலும்புக் கூடும் மட்டுமாகிவிட்ட நாய்மட்டும் சிறிது தூரம் வரையில் பின்தொடர்ந்து வந்து, ஒரு மைல்கல்மீது காலைத் தூக்கிச் சிறுநீர் ஊற்றிவிட்டு எங்கேயோ ஓடிச் சென்றது. இவ்வாறு, அந்தச் சுதந்தரப் போர் வீரர் உறுதி எனும் ஆயுதத்தைத் தூக்கிப் பிடித்தவாறு தருமப் போருக்காகக் கிளம்பினார்.

கோட்டயத்திலிருந்து கொல்லத்துக்குக் கிளம்பத் தயாராக இருந்த இயந்திரப் படகிலே ஏறிக்கொண்டார். கருமாடியூரிலிருந்து ஒருவர் அந்தப் படகில் ஏறினார். அவருக்கு ஐம்பத்தைந்து வயதுக்கு மேல் இருக்கும். அவர்களுக்குள் பேச்சு துவங்க அதிக நேரமாகவில்லை.

சங்கரப்பிள்ளைதான் துவக்கினார்:

''ரொம்பத் தூரங்களா?''

''திருவனந்தபுரத்துக்கு. நீங்க?''

''நானும் திருவனந்தபுரத்துக்குத்தான்.''

''அப்போ நாம்ப ரெண்டு பேரும் ஒரே ஊருக்குத்தானே போறோம்?''

அதிலே சங்கரப் பிள்ளைக்குச் சிறிது மகிழ்ச்சிதான். கிருஷ்ணன்—அந்தச் சகப் பிரயாணியின் பெயர் அதுதான்—மடியிலிருந்து வெற்றிலைப் பாக்குப் பொட்டலத்தை வெளியில் எடுத்தார். ''வெற்றிலை போடுவீங்களா?'' என்று அவர் கேட்டார்.

சங்கரப்பிள்ளை சொன்னார்: ''நான் வெற்றிலை, பீடி, பொடி ஒண்ணுமே உபயோகிக்கமாட்டேன்.''

''ஒரு முறையிலே பார்த்தா அது நல்லதுதான்.''

வெற்றிலை போட்டுக்கொண்ட கிருஷ்ணன் கேட்டார்: ''திருவனந்தபுரத்துக்கு எதுக்காகப் போறீங்க? சொந்தக்காரங்க யாராச்சும் அங்கே இருக்காங்களா?''

தம் பயணத்தின் நோக்கத்தை எடுத்துரைக்கச்சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக்கொண் டிருந்தார் சங்கரப்பிள்ளை. அப்போதுதான் அந்தக் கேள்வி பிறந்தது. அவர் சொன்னார்: ''அங்கே எனக்கு யாருமில்லை. ஒரு மனுஷன்கூட இல்லை. ஒருவேளை திருவனந்தபுரம் சென்டர் ஜெயிலிலுள்ள வார்டருங்க யாராவது அறிமுகமானவங்களா இருக்கலாம் அல்லாமே யாரும் இல்லை. நான் ஓர் அறப் போருக்காகக் கிளம்பியிருக்கிறேன்.''

கிருஷ்ணனுக்கு ஆவல் பெருகியது. அறப் போருக்குப் போகிறாராம். என்ன விஷயமென்று கேட்கவேண்டிய அவசியம் கிருஷ்ணனுக்கு ஏற்படவில்லை. சங்கரப்பிள்ளை எல்லாவற்றையும் நீர் பாய்வதைப்போல் சொல்லிவிட்டார். எத்தனையோ பேர்களிடம் எத்தனையோ தடவை சொல்லி முடித்த விஷயம் அது! இத்தனையையும் கேட்டபோது கிருஷ்ணனுல்கூடத் தன் பயண நோக்கத்தைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை, எதற்காகப் போகிறீர்கள் என்று சங்கரப்பிள்ளை கேட்கவில்லை என்றுல்கூட.

''என் மகன்கூட ஒரு காங்கிரஸ்காரனுயிருந்தான். அப்படீன்னு எங்க ஊரிலுள்ள காங்கிரஸ் தொண்டனுங்களோட தலைவன். அவன் ஒரு விசிலடிச்சா அவங்கல்லாம் ஓடியாரணும். ஆலப்புழையிலேருந்து கொஞ்சம் தெற்கேதான் வீடு, பரூர்னு சொல்லுவாங்க. அவன் கயிறு கம்பெனிலே வேலை செஞ்சுக்கிட்டிருந்தான். நாப்பத்தாரும் வருஷத்திலே கயிறு கம்பெனீங்களிலே வேலை செய்யறவங்கெல்லாம் சேர்ந்து ஒரு மூங்கில் ஈட்டி ஊர்வலம் நடத்தணும்னு தீர்மானிச்சாங்க. போலீஸ் காரங்க வந்தா அந்த ஈட்டியினலே குத்தணும்னுகூடத் தீர்மானிச்சிருந்தாங்க. அது வேணும்னு ரகசியமாச் சொன்னது காங்கிரஸ் காரங்கதான். பத்திரிகைங்களிலே படிச்சிருப்பீங்க. அதோட பேரு தான் புன்னப்ரா—வயலார்.''

சங்கரப்பிள்ளைக்குப் புரிந்துவிட்டது. அதைப்பற்றிச் சங்கரப்பிள்ளையால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. ''மகாத்மாஜியோட அஹிம்ஸைப் போராட்டம் வேணும்னு சொல்லி நடத்திய போராட்டந்தானே? அது தவறுப் போச்சு.''

கிருஷ்ணனுக்குக்கூடக் கருத்து வேற்றுமை கிடையாது. அவர் தொடர்ந்து கூறினார்: ''தவறுதான். தவறுதான். ஆனா அன்னைக்குக் காங்கிரஸ்காரங்க தவறுன்னு ஒரு வார்த்தைகூடச் சொல்லலே..... அப்புறம் என் பையன் புன்னப்ராவிலே துப்பாக்கிச் சூடிலே செத்துப் போயிட்டான்.''

அவர் திருவனந்தபுரத்துக்கு எதற்காகப் போகிறாரென்ற கதை இனி மேல்தான் வருகிறது. ''எனக்கு ரெண்டு கொழந்தைகள். ஒண்ணு அவன். இன்னொண்ணு ஒரு பொண்ணு. அம்மா ரொம்ப நாளைக்கு முன்னாலேயே செத்துப் போயிட்டா. நாற்பத்திரண்டிலே ஒரு காலரா வந்ததே, அன்னைக்கு! பையன் கொஞ்சம் காசு—ஐந்நூறு ரூபாய்—கஜானாவிலே கட்டி வச்சிருந்தான். அவன் காங்கிரஸ்காரனாயிருந்தப்போ அந்தப் பணத்தைச் சர்க்கார் பறிமுதல் செய்தது. இப்படி ஏராளமான காங்கிரஸ்காரங்களோட வீட்டிலேருந்த சட்டிப் பானைங்களைக் கூடத் தூக்கிக்கிட்டுப் போனாங்க. அப்புறம் சுதந்தரம் வந்தப்போ அதெல்லாம் திருப்பிக் கொடுக்கணும்னு சர்க்கார் உத்தரவு போட்டது. அப்போ என் பையன் இல்லே. அவன்தான் செத்துப் போயிட்டானே. நான் ஒரு மனுக் கொடுத்தேன், அந்தப் பணம் எங்களுக்கு உரிமைப்பட்டதுன்னு. அஞ்சு வருஷத்துக்கப்புறம் ஒரு சர்டிபிகேட்டை ஆஜர் படுத்தணும்னு சொல்லிச் சர்க்காரிலேருந்து கடிதம் வந்தது. அதோட பேரு, 'சக்ஸேசன் சர்டிபிகேட்'டுன்னு. நாங்க கோர்ட்டிலேருந்து அந்தச் சர்டிபிகேட்டை வாங்கினோம். அது கிடைக்கறதுக்குள்ளே ஒரு வருஷம் போயிடுச்சு. அதை வச்சுக்கிட்டு மீண்டும் மனுப் போட்டோம். இப்போ அதுக்காக மூணு வருஷமா நடந்துக்கிட்டிருக்கேன். நான் அனுப்பிய மனுவும், அந்தச் சர்டிபிகேட்டும் இப்போ இல்லே. எந்த ஆபீசிலும் காணலையாம். அப்போ உங்களைப்போல ஒரு மனுஷன் சொன்னாரு, மீண்டும் மனுச் செஞ்சு பாருங்கோன்னு. அப்புறம் கோர்ட்டிலேருந்து அந்தச் சர்டிபிகேட்டின் நகலையும் ஆஜர் படுத்துங்கன்னு. அதையும் செஞ்சோம். இப்போ சொல்லறாங்க, என்னமோ தெரியலே, ஒரு ஆடிட்டுக்குப் போய் வரணும்னு. இப்போ சிலவங்க சொல்றாங்க, அது தவறுப் போயிடுச்சுன்னு. ஏன்னா, அந்த 'ஸ்ப்ரீ ஆடிட்'டுக்குப் போயிடுச்சுன்னா, அந்த ஆபீசிலிருக்கிறவங்க, இந்தப் பிறவியிலே அந்தப் பணத்தைத் தரமாட்டாங்கன்னு. இன்னும் சிலவங்க சொல்றாங்க, இந்த 'ஸ்ப்ரீ ஆடிட்டு'ன்னு சொல்லறதே குடியானவங்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்காமல் ஏமாற்றுகிற ஒரு தந்திரந்தான்னு.''

கிருஷ்ணன் தொடர்ந்து கூறினார்: ''பொண்ணே பருவத்துக்கு வந்து நிக்குது. ரெண்டு மூணு வரன் வந்தாச்சு. கையிலே எதாச்சும் நாலு காசு இருந்தாத்தானே அனுப்பி வைக்கமுடியும்? வர்றவங்கல்லாம் நகை நட்டு வேணும், பணம் வேணும்னு கேக்குறாங்க. பருவத்துக்கு வந்த பொண்ணு, அம்மா இல்லே. அவளையே பார்த்துக்கிட்டிருக்க என்னாலே முடியுங்களா? பாத்துக்கிட்டிருந்தாக்கூட ஒரு பொண்ணு நிக்கிற இடத்திலே எதாச்சும் தகராறு உண்டாகலாம் அல்லவா? என் வயிற்றிலே நெருப்புத் தான் பற்றியெரியுது. இப்போகூட ஒரு வரன் வந்திருக்கு. நாலு காசு கிடைச்சப்புறந்தான் கலியாணம் நடத்த முடியும். அதுக்காகத் தான் திருவனந்தபுரத்துக்குப் போயிக்கிட்டிருக்கேன். அவளை அவளோட சின்னம்மா வீட்டிலே ஒப்படைச்சுட்டுத்தான் கிளம்பி வந்தேன். அந்தப் பணம் கையிலே வாங்காமே நான் திரும்பி வரமாட்டேன்.''

இவ்வாறு, நினைத்ததை நடத்தியே முடித்துவிட்டுத்தான் திரும்புவேன் என்ற உறுதி கொண்ட ஒருவரைப் பயணத்தின் முதல் கட்டத்திலேயே சங்கரப்பிள்ளை துணையாகப் பெற்றார். பல்வேறு பாதைகளினூடே இந்தமாதிரி உறுதி கொண்ட பலர் திருவனந்தபுரத்தை நோக்கிச் சென்றுகொண் டிருப்பார்கள்போல் தோன்றியது அவருக்கு.

கிருஷ்ணன் கேட்டார்: ''ஏதாவதொரு காரியத்துக்காக நீங்க கோர்ட்டுக்கோ, ஆபீசுக்கோ போயிருக்கீங்களா?''

சங்கரப்பிள்ளைக்கு அத்தகைய அநுபவம் ஏற்பட்டதில்லை. ஒரு புனித யுத்தத்தில் ஒரு சாதாரண வீரராக மட்டும் செயலாற்றிய மனிதர் அவர். கிருஷ்ணன் தொடர்ந்து கூறினார்: ''அப்படீன்னு நீங்க அங்கெல்லாம் ஒரு தடவை போயிப் பார்க்கணும். நாம்ப ஏதாவதொரு தகவல் அறிய, அல்லது யாரையாவது ஒருவரைப் பார்க்க அங்கே போறோம். அப்படி இப்படி லேசானவங்கல்லாம் அங்கே போயி ஒண்ணும் சாதிச்சிட முடியாது. அப்புறம் கையிலே காசிருந்தா போகலாம். அவங்க, உத்தியோகஸ்தனுங்க, ஆண்களும் பெண்களுமா நாற்காலியிலே உட்கார்ந் திருப்பாங்க. மேலே மின்சார விசிறி சுற்றிக்கிட்டிருக்கும். அதை நிறுத்தவே மாட்டாங்க. அவை தானாக நிக்கவும் மாட்டா. காகிதங் களெல்லாம் பறந்து போய்க்கொண் டிருக்கும். நாம்ப எப்படியோ அதுக் குள்ளே நொழஞ்சோம்னு வச்சுக்குங்க. அவங்க பார்வை எப்படி இருக்குங்கிறீங்க? சிலவங்க கேலி செய்வாங்க; சிலவங்க அதட்டுவாங்க; சிலவங்க பயமுறுத்துவாங்க; வேறு சிலவங்களுக்குத் திமிர். நான் நினைக் கிறதென்ன தெரியுமா? இவங்கல்லாம் இந்த நாட்டைச் சேர்ந்தவங்க தான். நம்ப அண்ணன் தம்பி மாமன் மச்சான்களா இருக்கிறவங்க தான். ஆனா உத்தியோகம் கையிலே கிடைச்சுட்டா அப்புறம் அவங்கல் லாம் ஆளே மாறிடறாங்க. உங்களுக்கு ஒரு கதை கேக்கணுங்களா?'' என்று கேட்டுவிட்டு, கிருஷ்ணன் அந்தக் கதையைச் சொன்னார். பரூரிலே அவருடைய அயல்வாசியான ஒரு நபருடைய கதைதான். அயல்வாசி ஏதோ ஒரு ஆபீசிலே குமாஸ்தாவாகப் பணி புரிகிறான்.

''நான் இடுப்பிலே வச்சுத் தூக்கிக்கிட்டு நடந்த பையன்தான். என்னோடு ரொம்பப் பிரியமாயிருந்தவன். நான் ஆபீசுக்குப் போனப்போ அவனோட நண்பனுங்க என்னைக் கேலி பண்ணி அனுப்பிச்சுட்டாங்க.'' கதை இது மட்டும் அல்ல. ஒருவனுக்கு இரண்டு ரூபாய் லஞ்சம் கொடுக்க வேண்டியதாயிற்று. பின்னர் ஒருமுறை அங்கிருந்து வெளியே போகச் சொன்னான் இன்னொருவன்.

''நாம்ப பட்டிக்காட்டானுங்களுக்கு என்ன தெரியும்? அங்கே யாராவது ஒருத்தரைத் தெரியும்னு ஓர் உதவியைத் தேடிப்போறோம். அங்கே போனா நமக்கு ஏற்படற அநுபவங்கதான் இவை எல்லாம்.''

அவர்களை எல்லாம் நன்றாகக் கற்றுணர்ந்தவர்போல் கிருஷ்ணன் சொன்னார். ''அவங்களைச் சொல்லிக் குற்றமில்லை. என் வீட்டுக்குப் பக்கத்திலே கோவிந்தன்னு ஒருத்தன் இருக்கிறான். நாங்க இரண்டு பேருமாச் சேர்ந்து ஒரு சின்னக்கடையை நடத்திக்கிட்டிருந்தோம். என்னோட மனைவியை முதலிலே அவன் கல்யாணம் பண்ணணும்னு கேட்டிருந்தான். அது நடக்கலை. ஆனா அதிருஷ்டமும் நல்ல காலமும் அவனுக்கு வந்தது. இப்போ அவன் மூணு கம்பெனிங்களுக்குச் சொந்தக்காரன். அறுவடைக் காலத்தில் ஐம்பாதாயிரம் தேங்காய் கிடைக்குது. நஞ்சை புஞ்சை ஏராளமான நிலமிருக்கு. காரிலேதான் சவாரி. அவனைப்பார்க்கணும்னா ரொம்ப நேரம் காத்துக்கிடடிருக்கணும், பார்த்தாக்கூடப் பேசமாட்டான். வேலைதான் காரணம்னு வச்சுக்குங்க. ஒரு குடியானவனாயிருந்தவனே இப்படீன்னா அதிகாரமுள்ள அரசாங்க வேலை கிடைச்சா எப்படி இருக்குங்கிறீங்க? சமாசாரம் அதுதான். நாளைக்கு நம்ப பசங்ககூட அப்படித்தான் நடந்துக்குவாங்க.''

கிருஷ்ணனுக்கு ஒரே ஒரு புகார்தான் இருந்து வந்தது. இந்தப் பணம் கிடைக்க இவ்வளவு காலதாமதமாவதும், 'ஸ்ப்ரீ ஆடிட்' காரணமாகக் கிடைக்காமல் போவதும் எல்லாம் ஆலப்புழைக்காரனை ஒரு குமாஸ்தாவினால்தான் என்று அவர் சொல்லுகிறார். அந்தக் குமாஸ்தாவுக்குக் கிருஷ்ணன் மிகவும் அறிமுகமானவர். ஒரு தேங்காய் நார் மெத்தை வேண்டுமென்று கேட்டாராம். கிருஷ்ணனால் அதைக் கொடுக்கமுடியவில்லை.

கிருஷ்ணன் தொடர்ந்து கூறினார்: ''இன்னும் நாம்ப மனுக்களை அனுப்பப் போறோம்னே வச்சுக்குங்க. ஆபீசிலிருக்கிறவங்களுக்கு அதைப் பற்றியெல்லாம் கவனிக்க நேரம் எங்கே இருக்கப் போவுது? பக்கத்திலே உட்கார்ந்திருக்கிற பொம்புளேங்களோடு கூடிக் குலாவறதுக்கே அவங்களுக்கு நேரம் பத்தாது. ஆபீசிலே அவங்கல்லாம் கூடிக் கூடிப் பேசிக்கிட்டிருப்பாங்க. காபி குடிக்கப் போவாங்க, வருவாங்க. அதுக்குள்ளே சாயங்காலம் அஞ்சு மணியாப் போயிடும். நம்ப மனு அங்கேயே கிடந்துடும். கொஞ்ச நாளைக்கப்புறம் எல்லாவற்றையும் சேர்த்து எங்கேயாவது கட்டிப் போட்டிடுவாங்க.''

தாம் கொடுத்த மனுக்களுக்குக்கூட இந்தக் கதிதான் நேர்ந்திருக்குமா? சங்கரப்பிள்ளை சிந்தித்துப் பார்த்தார். கிருஷ்ணன் சொன்ன முறையிலேதான் காரியங்கள் நடப்பதாக இருந்தால், எப்படித் தம் காரியம் கைகூடமுடியும்? முறைகளைப்பற்றி நன்கு தெரிந்து வைத்திருந்த கிருஷ்ணன் கூறினார்: ''ஆனா ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்லாமல் இருக்க முடியாது. இந்த அரசாங்க உத்தியோகஸ்தனுங்க இருக்கிறுங்களே, அவங்க சொல்றதிலேகூடக் கொஞ்சம் உண்மையிருக்கு. இந்தக் குமாஸ்தாக்களுக்குக்கூட இப்போது சங்கம் இருக்கு. என்னன்னா அவங்களுக்கு வசதியாச் சாப்பிடணும். அவங்க பொண்டாட்டீங்களுக்கு நல்ல பொடவை வேணும். சொகுசா வாழணும். அவங்க கொழந்தைங்க நல்லாப் படிக்கணும். இதுக்கெல்லாம் சம்பளம் பத்தாதுங்கறுங்க. அவங்களுக்குக் காபி சாப்பிட வேணுமா? சிகரட் வேணுமா? சினிமாவுக்குப் போகவேணுமா? வீட்டு வாடகை கொடுக்கவேண்டாமா? அதுக்கெல்லாம் இப்போ கொடுக்கிற சம்பளம் பத்தாது.''

இந்த வாதங்கள் போதும். சங்கரப்பிள்ளை பொறுமை இழந்தார்: ''வேணும், வேணும்! நெய்யும் பருப்பும் போட்டுச் சாப்பிடணும்; அப்புறம் காரிலேதான் சவாரி பண்ணணும்; பட்டுப் புடைவையிலே, தங்க நகைகளிலே மூடித்தான் பொண்டாட்டீங்களைக் குஷிப்படுத்தணும். அவங்க கொழந்தைங்களைப் பெரிய உத்தியோகஸ்தர்களாக்கிடணும். இதுக்கெல்லாம் மக்கள்மீது வரி போட்டுக் கசக்கிப் பிழிந்தெடுக்கணும். அப்புறம் அவங்க தலை மண்டையிலே ஒங்கியடிக்கணும்.''

சங்கரப்பிள்ளை ஆத்திரத்துடன்தான் சொன்னார். கிருஷ்ணன் வியப்புடன் சொன்னார்: ''சர்க்கார் உத்தியோகஸ்தனுங்க அல்லவா? அவங்களுக்குக் கொஞ்சம் அபிமானமும் அந்தஸ்தும் வேணுமா?''

சங்கரப்பிள்ளைக்கு ஆத்திரம் தணியவில்லை: ''ஆமாமாம். வேணும், வேணும்! அவங்களும், அவங்களோட சந்ததிங்களும், சந்ததிங்களோட சந்ததிங்களும் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு வாழணும், அரசனுங்களும் அவங்களோட உத்தியோகஸ்தனுங்களும் வாழ்ந்தது போல. அரசனின் மகன் அரசன், அல்லது மருமகன் அரசன். உத்தியோகஸ்தனோட மகன், அல்லாட்டா மருமகன் உத்தியோகஸ்தன். இப்போகூட உத்தியோஸ்தனோட மகனுக்குப் பள்ளிச் சம்பளம் கொடுக்க வேண்டாம். அவங்ககூடப் பிராமணனுங்கன்னு சொல்றதுபோல ஒரு ஜாதியாயிடறுங்க. அப்படியே ஆகட்டுமே. என்ன?''

சங்கரப்பிள்ளையின் உணர்ச்சியைக் கண்ட கிருஷ்ணன் கேட்டுவிட்டார்: ''நீங்க என்ன, கம்யூனிஸ்டா?''

சங்கரப்பிள்ளையால் அது சகிக்கக்கூடியதா? அவரும் பத்திரிகைகள் படிப்பவர்தானே?

''நானா? சர்க்கார் உத்தியோகஸ்தனுங்களுக்குச் சங்கத்தை வச்சுக் கொடுக்கறவங்க அல்லவா, கம்யூனிஸ்டுகள்? அவங்களோட ஓட்டுக்களை வாங்கறதுக்காக, அவங்க கேக்கறதெல்லாம் கொடுக்கணும்னு தானே,

கம்யூனிஸ்டுகள் பேசிக்கிட்டு நடக்கறுங்க? அவங்க, கஷ்டப்படற தொழிலாளி, விவசாயி, உத்தியோகஸ்தன்—இப்படீன்னுதானே ஆணையிட்டுப் பேசறுங்க?''

அது உண்மைதான் என்று கிருஷ்ணன் சொன்னார். சங்கரப்பிள்ளையின் ஆவேசம் தணியவில்லை. அவர் தொடர்ந்து கூறினார்: ''இந்தப் பொது மக்கள் எப்படி வாழறுங்க? அவங்களைப்போல இந்த உத்தியோகஸ்தனுங்களும் வாழ்ந்தாப் போதாதா?''

கிருஷ்ணன் அதை ஒப்புக்கொண்டார்.

சங்கரப்பிள்ளை தொடர்ந்து கூறினார்: ''அவங்களுக்குப் பணக்காரங்களைப்போல வாழ்க்கை நடத்தணும். அல்லாமே அவங்க சாதாரணப் பொது மக்களைப் பார்க்கறதில்லே. ஒரு சர்க்காரு வேலே கிடைச்சாப் போச்சு! அப்புறம் அவன், நம்ப மகனுயிருக்கட்டும், மருமகனுயிருக்கட்டும், ஆளே மாறிடுவான். அப்புறம் சாமானிய மக்களைப் பார்க்க மாட்டான். இன்னேக்குக்கூட ஜனங்க என்ன பேசறுங்க தெரியுமா? பையனுக்கு ஒரு சர்க்கார் வேலே கெடைச்சாப் போதும்னு . . .''

எல்லாவற்றையும் காது கொடுத்துக் கேட்டுவிட்டுக் கிருஷ்ணன் கூறினார்: ''இப்படியெல்லாம் பேசிக்கிட்டு நம்ப ஆபீசுக்குப் போனு எந்த ஒரு காரியத்தையும் சாதிக்க முடியாதுங்க.''

சங்கரப்பிள்ளை விட்டுக் கொடுக்கவில்லை: ''வேணும், விஷயத்தைப் புரிஞ்சுக்கலாம் அல்லவா?''

கிருஷ்ணன் பெரிய உத்தியோகஸ்தர்களின் நிலைமையைப்பற்றி விளக்கினார்: ''இப்போ நியமிக்கப்பட்டிருக்கிற பெரிய உத்தியோகஸ்தனுங்க எல்லாம் சிறு பையன்கள் தான். மூஞ்சீலே ரோமங்கூடச் சரியா வந்திடல்லே. சின்னப் பையன்கள் தானே? அவங்களுக்கு ஜனங்களின் பிரச்னே பற்றி என்ன தெரியும்? உற்சாகமா நடந்துக்கிட்டிருப்பாங்க. அவங்களைப் போயிப் பார்க்கமுடியும்னு நினேக்கிறீங்க? பார்த்தாக்கூட இங்கிலீசிலேதான் பேசுவாங்க. நம்ப தேசத்தவங்களைப் போலவா நடந்துக்கறுங்க? வெள்ளைக்காரத் தொரைங்களைப் போல! சுதந்தரம் கிடைச்சு வெள்ளைக்காரங்கல்லாம் போயிட்டா அப்புறம் எல்லாம் சரியாப் போயிடும்னு நினேச்சோம். ஆனு இப்போ அன்னேக்கிருந்ததைவிடப் படுமோசம் தான்.''

சங்கரப்பிள்ளை சொன்னார்: ''நானும் என்னைப் போல ஆயிரக்கணக்கானவங்களும் பாடுபட்டதெல்லாம் இதுக்காக அல்ல!''

கிருஷ்ணன் ஆற்றிய பங்கினைக் குறித்தும் சொல்லவேண்டியிருந்தது.

''சதாசிவன், துப்பாக்கிச் சூட்டிலே செத்துப் போனதும் . . .''

இந்த நிலையிலேகூடச் சங்கரப்பிள்ளையால் அதை அங்கீகரிக்க முடியவில்லை. இருதரப்பினருடைய உரிமைகள் பறிக்கப்பட்டிருந்தபோதிலும், அவர் கூறினார்.

''இந்தக் கம்யூனிஸ்டுக்காரங்க ஏழை ஜனங்களை ஏமாற்றிறுங்க. நுப் பாக்கிச் சூடு நடக்காதுன்னுதானே, அவங்க பொது ஜனங்களிடம்

கூறினுங்க? ஜனங்க சும்மா செத்து மடிஞ்சுட்டாங்க. அதனுலேதானு சுதந்தரம் வந்தது?''

கிருஷ்ணனும் விட்டுக் கொடுக்கவில்லே. தன் புதல்வனின் தியாகத்தை நிராகரிக்கிற, அவமதிக்கிற பேச்சு அல்லவா சங்கரப்பிள்ளே கூறியது.

''அல்லாமே, குல்லாய் போட்டுக் கொடியைப் புடிச்சுக் கோஷங்களைக் கோஷிச்சதனுலே சுதந்தரம் வந்துதுன்னு சொல்றீங்களா? அப்புறம் —உங்களுக்கெல்லாம் தெரியாத ஒரு விஷயமிருக்கு. புன்னப்பராவிலும் வயலாறிலும் செத்தவங்க கம்யூனிஸ்டுக்காரங்க இல்லே. அவங்க உண்மையான காங்கிரஸ்காரங்க. அல்லாமே ஒண்ணுமே தெரியாத ஆட்டுமந்தைக் கூட்டங்கள் அல்ல. சாவதாயிருந்தா சாவோம்னு சொல்லிப் போனவங்கதான். அன்னைக்குக் காங்கிரஸ்காரங்க அவங்களுக்குத் துரோகம் செஞ்சாங்க. புன்னப்பராவிலும் வயலாறிலும் தயாரிப்புக்கள் நடந்ததெல்லாம் அவங்களுக்குக்கூடத் தெரியும். அவங்க அதையெல்லாம் மௌனமா ஒப்புக்கொண்டாங்க. சில காங்கிரஸ் தலேவனுங்க ஆதரவளிக்கவும் செஞ்சாங்க. துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததுக்கப்புறம், சர்க்கார் செஞ்சது சரிதான்னு காங்கிரஸ்காரனுங்க பேசினுங்க. அதுதான் ஒரவஞ்சனே!''

சிறிது நேரம் வரையில் இருவரும் பேசவில்லே. தங்கள் தங்கள் சிந்தனேகளிலே மூழ்கியிருந்தனர். படகிலுள்ள ஏனேய பிரயாணிகளெல்லாம் தூங்கிவிட்டனர். அவர்களுக்கு மட்டும் தூக்கம் வரவில்லே. புன்னப்பராவிலும் வயலாறிலும் இறந்து போன நூற்றுக்கணக்கானவர்களேப் பற்றி யோசித்துக்கொண் டிருந்தார் சங்கரப்பிள்ளே. அங்கே திவானுடைய இராணுவம் சுட்டது மட்டுமின்றி அதற்குப் பிறகு அங்கே புரிந்திருக்கிற அட்டூழியங்களேப் பற்றிக்கூடக் கேள்விப்பட்டிருக்கிறார் சங்கரப்பிள்ளே. உயிர் பீதிகொண்டு ஓடி ஒரு வீட்டின் நிலவறையிலே மறைந்திருந்த இருபது பேர்களே, இராணுவம் எலிகளேப்போல் சுட்டுக் கொன்று விட்டதாம். குளத்திலே எட்டிக் குதித்து மூக்கை மட்டும் வெளியே நீட்டி மூழ்கிக் கிடந்தவர்களே, மீன்களேப்போல் குறி பார்த்துச் சுட்டுக் கொன்றதாம்; பிணங்களேக் குவித்து அதன்மீது மண்ணேப் போட்டு மூடியது ஒரு குன்றுபோல் ஆகிவிட்டது இப்போதுகூடக் காணப்படுகிறதாம். அவர்கள் எல்லாம் எதற்காக இறந்தார்கள்? சில நபர்களின் தூண்டுதலால் மரணத்தை ஏற்றுக்கொண்டவர்கள்தானு? சங்கரப்பிள்ளேயால் அதை நம்பமுடியவில்லே. அவர்களுக்குக்கூடத் தேச பக்தி இருக்கவில்லேயா? அவர்களுடைய இன்னுயிர்கள் தேச சுதந்தரத்துக்காக அர்ப்பிக்கப்பட்டவை அல்லவா?

கம்யூனிஸ்டுகளின் பேச்சைக் கேட்டு ஆட்டுமந்தைக் கூட்டங்கள்போல், துப்பாக்கியிலிருந்து குண்டுகள் சீறிப் பாய்ந்து வராதெனக் கருதி அதன் முன்னுல் சென்று நின்றவர்களா? சங்கரப்பிள்ளேயால் அந்தத் தியாகிகளே மதிக்காமல் இருக்கமுடியவில்லே. புன்னப்பராவிலும் வயலாறிலும் நடைபெற்ற அந்தப் போராட்டத்தின் சித்திரத்தை, அவருடைய கற்பனே, அவர்

மனக்கண் முன் தீட்டிக் காட்டியது. வரிசை வரிசையாக அணி வகுத்து நின்ற அந்த மனிதர்களின் கண்கள் தேசபக்தியால் ஜொலிக் கின்றன...இல்லை அவர்களை மறப்பது தேசத் துரோகம். பெரிய பாவம்!

சங்கரப்பிள்ளை, அருகிலே சிந்தனையில் மூழ்கியிருந்த கிருஷ்ணனை ஓரக்கண்ணால் பார்த்தார். அந்த மனிதர்கூடச் சுதந்தரத்துக்காகத் தம் கடமையை ஆற்றியிருக்கிறார். விலை மதிப்பதற்கரிய ஒன்றை அவர் சுதந்தரத்தின் பலிபீடத்திலே சமர்ப்பித்திருக்கிறார். அவருடைய ஒரே ஒரு புதல்வனை! அவன் விவரம் தெரிந்தவனுகத்தான் இருந்திருக் கிறான். சந்தேகமில்லை. அவனுக்குக்கூட எதிர்கால வாழ்க்கைபற்றிய எண் ணங்கள் ஆயிரம் இருந்திருக்கவேண்டும். ஆயிரம் திட்டங்களை அவன் உருவாக்கியிருந்திருக்கவேண்டும். சந்தேகம் இருக்க முடியாது. இளமையிலேயே ஐந்நூறு ரூபாய் சம்பாதித்திருக்கிறான். இனிய கனவுகள் பல அவனுக்கு இருந்திருக்கவேண்டும். சுதந்தரமடைந்த பிறகு செழுமை யுடன் விளங்க இருக்கின்ற இந்த நாட்டிலே வாழவேண்டுமென்ற எண்ணம் கொண்டவனுக இருந்திருப்பான். அவன் இன்று உயிரோடு வாழ்ந்திருந்தால் இந்த மனிதருக்கு இப்படிச் சுற்றியலைய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்குமா? சதாசிவன் உயிரோடு இருந்திருந்தால் இன்று மகளுடைய திருமணம் நடந்து முடிந்திருக்கும். பேரக்குழந்தைகளை மடிமீது படுக்கவைத்துக் கொஞ்சிக் குலாவியவாறு மன நிம்மதியுடன் காலத்தைக் கழித்திருக்கலாம். காயங்குளம் காயலிலே காற்றடியேற்ற வாறு தூக்கமின்றிப் பிரயாணம் செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக் காது. அப்பப்பா! இவர் சுதந்தரத்துக்காக எவ்வளவோ விலை மதிப் பற்ற காணிக்கையைத்தான் செலுத்தியிருக்கிறார்.

சங்கரப்பிள்ளை இவ்வாறு சிந்தித்துக்கொண்டிருந்தபோது, கிருஷ்ணன் யோசித்துக்கொண்டிருந்தது வேறு அல்ல. கிருஷ்ணன், சங்கரப் பிள்ளைக்குத் தெரியாமலேயே அந்தத் தேசத் தொண்டனை உற்றுப் பார்த் தார். காந்திக் குல்லாயணிந்து, மூவண்ணக் கொடியேந்தி, உணர்ச்சி யால் ஜொலிக்கின்ற கண்களுடன் தொண்டனுகவே முன்னேறிச் சென்றுகொண்டிருந்த அந்தச் சித்திரத்தைக் கிருஷ்ணன் பார்த்தார். பாவம்! இந்த மனிதருக்குத் துணையாக யாரும் இல்லை; ஒன்றுமில்லை! சுதந்தரம் கிடைக்கப் பெற்றது. சுதந்தரம் என்றால் என்னவென்று இந்த மனிதருக்குத் தெரியாது. இப்போதுகூட அறப்போர் வீரனுகக் கிளம்பியிருக்கிறார்! எதனுடு போர் தொடுக்க? அநியாயத்தோடு! அக்கிரமத்தோடு! அதருமத்தோடு! அவற்றோடு போர் புரிய இவரால் முடியுமா? ஒருவேளை, இத்தகைய பல சங்கரப்பிள்ளைமார்கள் திருவனந்தபுரத்துக்கு வந்து போய்க்கொண்டிருப்பார்கள். ஆனால், இவர்கள் எல்லாரும் எங்காவது, என்றைக்காவது ஒருமுறை ஒன்று சேருவார்களா?

இந்த ஏழை மனிதருக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய ஐந்து ஏக்கர் நிலம் கிடைத்துவிடுமா? நெஞ்சத்துக்குள்ளே ஜீரணமாகாத ஒரு சில

திட்டங்களையும், மனத்திலே குமுறியெழுகிற ஆத்திரத்தையும் சுமந்த வாறு பிரயாணத்தில் ஈடுபட்டிருந்தார். இப்படியே செல்வதென்றால், எந்த ஓர் அலுவலகத்திலிருந்தாவது எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியாதென்பது திண்ணம். இவருடைய எதிர்காலந்தான் என்ன? அதைப் பற்றித்தான் கிருஷ்ணன் யோசித்தார். உடல் முழுவதிலும் தருமரோஷத்துடன் ஓடி நடந்தவாறு, ஒவ்வொரு நாற்சந்திகளிலும், முச்சந்திகளிலும் நின்று நின்று உரத்த குரலில் ''ஊழலை ஒழிப்பேன்'' என்று பைத்தியக்காரன் போன்று கத்தலாம். ''பைத்தியம்'' ''பைத்தியம்'' என்று சிறுவர்கள் கைதட்டிச் சிரிப்பார்கள். பயணிகள் பார்த்து நிற்பார்கள். அவர்களுடைய காதுகளினூடே நுழைந்து இந்த ஊழல் விஷயம் மூளைக்குள்ளே புகுந்து விடுமா? வாழ்நாள் முழுவதையும் தருமத்துக்கும் நீதிக்குமாக வீணுக்கிவிட்ட மனிதர் இவர். சதாசிவன் உயிரை அர்ப்பணித்தான். இந்த மனிதர் உயிரை மட்டும் சுமந்தவாறு நடக்கிறார்.

கிருஷ்ணனுடைய மனம் இரக்கம் கொண்டது. இந்தக் கிறுக்கிலிருந்து சங்கரப்பிள்ளையைக் காப்பாற்ற வேண்டுமென்று அவர் விரும்பினார். இந்த ஊழல்களின் காலம் மாறிவிடும்; நியாயமும் தருமமும் நிலைபெறும். அதன் குளிர் நிழலிலே, சமஉரிமையுடன், சமசந்தர்ப்பங்களுடன் சுக மாக வாழ்கிற ஒரு நிலை வந்தே தீரும்—என்பதைப் புரிய வைத்தால் போதுமாயிருந்தது.

மௌனத்தைக் கலைத்தார் கிருஷ்ணன். அவர் சங்கரப்பிள்ளையைத் தட்டியழைத்துக் கூறினார்:

''ஆனா, ஒண்ணு தெரியவேண்டியிருக்கு.''

''ஊம்?'' சங்கரப்பிள்ளை முனகியவாறு கேட்டார்.

''அதைச் சொல்லி முடிக்கக் கொஞ்ச நேரம் பிடிக்கும். கொஞ்சம் சொல்லவேண்டியிருக்கு. இப்போ எங்க ஊரிலே கயிறு கம்பெனீங்களிலே தொழிலாளிங்களுக்கு வேலையில்லே, கூலியில்லே. வேலையில் இருக்கிறவங் களுக்குப் போனஸ் இல்லே. குட்ட நாட்டிலே விவசாயக் கூலிங்களுக்குப் பழைய கூலிதான் கொடுத்து வர்றுங்க. அப்புறம் இந்த மாதிரியான ஊழலும் லஞ்சமும் நிறைஞ்சிருக்கு. என்ன வேணும்னாலும் பணக்கார னுக்குத்தான் கிடைக்கும். எந்த ஆபீசிலே போனாலும் அவங்க காரியம் நடந்திடும். எல்லாம் அவங்க சொற்படித்தான் நடக்கிறது.''

தம் ஊர் நிலைமைகூட மாறுபட்டது அல்ல என்று சங்கரப்பிள்ளை கூறினார். தோட்டங்களிலே தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய் திருக்கிறார்கள். அவர்களுடைய கூலியை வெட்டிக் குறைத்திருக்கிறார் கள். கம்பிளி கொடுக்கப்படுவதில்லை. இப்படி என்றும் தகராறுகளே தான்.

கிருஷ்ணன் கூறினார்: ''கொஞ்ச நாளைக்கு முன்னாலே ஆலப்புழையிலே ஒரு கூட்டம் நடந்தது. இந்த மாநிலத்திலுள்ள தோட்டித் தொழிலா ளிங்களுக்கு ஒரு சங்கம் உண்டு. அவங்களோட கூட்டந்தான் நடந்தது.

அவங்களோட ஒரு பெரிய தலைவன் பேசினான். அவன் வேறு பல தொழிலாளி சங்கங்களுக்குக்கூடத் தலைவன்தான். முன்னாலே அந்தத் தோட்டித் தொழிலாளிங்களுக்கு ஒரு வாரத்திலே இத்தனை சோப்பு கொடுக்கணும், அப்புறம் என்னமோ ஒரு பேரிலே இத்தனை காசு கொடுக்கணும்னு எல்லாம் இருந்தது. ஒரு வேலை நிறுத்தத்துக்கப்புறமே அதை எல்லாம் ஒப்புக்கொண்டாங்க. அது நடைமுறைக்கு வரலே. சோப்பு கொடுக்கல்லே, காசு கொடுக்கல்லே. இப்போ தொழிலாளிங்க கிளம்பியிருக்காங்க. அதுக்கான கூட்டந்தான் அது. அப்புறம் அந்தத் தலைவன் பேசினான் . . .''

என்ன பேசினான் என்பதைச் சொல்ல கிருஷ்ணனுக்குத் தயக்கம். சங்கரப்பிள்ளை கேட்டார்: ''என்ன பேசினான்?''

''அவ்வளவு பெரிசா ஒண்ணும் சொல்லிடல்லே. ஒண்ணுமில்லேன்னும் சொல்லமுடியாது. ஏழைங்களுக்குத்தானே எதுக்கும் கஷ்டம்? அவங்களோடதானே இந்தச் சங்கங்களும்?''

அந்த விஷயத்தில் சங்கரப்பிள்ளைக்குச் சந்தேகம் இல்லை.

கிருஷ்ணன் மேலும் பேசினார்: ''அவங்களோட சர்க்கார் வந்தா இந்த லஞ்ச ஊழல்களையெல்லாம் ஒழித்துக் கட்டுவாங்களாம். லஞ்சம் வாங்குற பேர்வழிங்களையெல்லாம் தண்டிப்பாங்களாம். தோட்டிங்களுக்குச் சோப்பு, போனஸ் எல்லாம் கொடுப்பாங்களாம். அல்லாமே அவ்வளவு பெரிசா ஒண்ணும் பேசிடல்லே.''

சங்கரப்பிள்ளைக்குப் பிடி கிடைத்துவிட்டது. கேட்டார்: ''அவன், அந்தத் தலைவன் கம்யூனிஸ்டுதானே? அவங்க ஒண்ணும் இங்கே ஆட்சி நடத்தப் போறதில்லை. அவங்க ஆட்சி நடத்தினா இந்த நாடு குட்டிச் சுவராயிடும்.''

கிருஷ்ணன் எதிர்த்துப் பேச முற்படவில்லை. அவர் சொன்னார்: ''ஆனா, அவன் ரொம்ப உறுதியாத்தான் சொன்னான். இந்த அநியாயங்களையெல்லாம் ஒழித்திடுவோம்னு, ஒண்ணுமில்லாட்டிப் போனாக்கூட அவங்க ஏழைங்களுக்காக நிக்கறதாத்தானே சொல்லறாங்க?''

சங்கரப்பிள்ளை மனநிம்மதி இழந்து காணப்பட்டார். கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வருவதென்றால்! அவரால் அதைப்பற்றி நினைக்கவே முடியவில்லை. சொன்னார்: ''அது நடக்காது.''

கிருஷ்ணன் சொல்வது என்னவென்றால் அந்த வட்டார மக்கள் அனைவரும் அதற்குத் தயாராக நிற்கிறார்கள் என்றுதான். அவர் மேலும் கூறினார்: ''என்னைப் பொறுத்தமட்டிலும் சொல்றேனே. என் பணம் கிடைக்க நான் வழி பார்ப்பேன். அவங்க ஆட்சிக்கு வந்தா என் பணம் கால தாமதம் இல்லாமலேயே கிடைக்கும்னு நான் உறுதியா நம்பறேன். அப்புறம் உங்களுக்கு நிலமும் கிடைச்சுடும்.''

சங்கரப்பிள்ளை சொன்னார்: ''உங்களுக்குக் கிடைக்கிறதுன்னா, உங்க பையன் துப்பாக்கிச் சூட்டிலே இறந்ததனால்தான்.''

கிருஷ்ணன் உறுதியான குரலிலே கூறினர்: ''அப்படியானு உங்களுக்கு இந்த அஞ்சு ஏக்கர் நிலமும் கிடைச்சுடும். அதுக்கு நான்தான் பொறுப்பு.''

சங்கரப்பிள்ளைக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. எனினும் அவர் கேட்டார்: ''அவங்க என்னைக்குத்தான் ஆட்சிக்கு வரப்போறுங்க?''

''அடுத்த தேர்தலிலே. இல்லாட்டாப் பாருங்க!''

சங்கரப்பிள்ளை பதில் கூறவில்லை. ஐந்து ஏக்கர் நிலம் என்ற ஆசையின் ஒரு கதிர் அவர் இதயத்திற்குள்ளே ஊடுருவிப் பாய்ந்ததுபோல் தோன்றியது. அது அவரை அச்சுறுத்தியதுபோலவும் தோன்றியது.

சங்கரப்பிள்ளை கூறினர்: ''நான் ஒரு நாளும் கம்யூனிஸ்டாக மாட்டேன்.''

கிருஷ்ணன் கூறினர்: ''நான்கூட கம்யூனிஸ்டு அல்ல; ஆகவும் போறதில்லே.''

ஒரு விநாடிக்குப் பிறகு அவர் மேலும் சொன்னர்:

''அவங்க இப்படியெல்லாம் சொல்லறுங்க. ஏழைங்களுக்காக நிக்கறதாகச் சொல்லறுங்க. அவங்களுக்கூடக் கொஞ்சம் பார்ப்போமேன்னு கருதினுப் போதும்.''

ஒருவகையிலே பார்த்தால் அதுவும் சரிதான். ஆயினும் கம்யூனிஸ்டாகி விடமுடியாது.

பிறகு ரொம்ப நேரம் வரையில் அவர்கள் இருவரும் பேசவில்லை. கிருஷ்ணனுக்குக் கொஞ்ச நேரமாவது தலை சாய்க்கவேண்டுமென்றிருந்தது. மூட்டையை அவிழ்த்து ஒரு போர்வையை எடுத்துப் போர்த்தியவாறு கிருஷ்ணன் படுத்துக்கொண்டார். சங்கரப்பிள்ளை பெஞ்சுமீது சுருண்டு படுத்துக்கொண்டார்.

• • •

பொழுது விடிந்தது. ஆவிப்படகு அஷ்டமுடிக்காயலினூடே ஓடிக் கொண்டிருந்தது. கொல்லத்திலிருந்து பத்து மணிக்குப் புகை வண்டி கிளம்புகிறது. அதைப் பிடிக்கலாமென்றும், அது ஒரு மணிக்குத் திருவனந்தபுரத்திலே போய்ச் சேருமென்றும் கிருஷ்ணன் கூறினர். அவர் கேட்டார்: ''திருவனந்தபுரத்திலே எங்கே தங்கியிருக்கப் போறீங்க?''

சங்கரப்பிள்ளைக்கு அங்ஙனம் அங்கே தங்கியிருக்க எந்த இடமும் இல்லை. அதைப்பற்றி இதுவரையிலும் அவர் நினைத்துப் பார்த்ததும் இல்லை. கிருஷ்ணனிடம் கேட்டார்: ''நீங்க எங்கே தங்கப் போறீங்க?''

''நான் திருவனந்தபுரமும் ஆலப்புழையுமாகச் சுற்றியலையத் தொடங்கிக் கொஞ்ச காலமாச்சு. திருவனந்தபுரத்திலே நான் ஒரு தளத்தைப் புடிச்சு வச்சிருக்கிறேன்.''

அது எங்கே என்றறிய சங்கரப்பிள்ளை கிருஷ்ணனைப் பார்த்தார். கிருஷ்ணன் சொன்னர்: ''நந்தன்கோடு என்ற ஓர் இடமுண்டு. திருவ

னந்தபுரத்திலேதான். அங்கே ஒரு சோற்றுக்கடை உண்டு. சிவமயம்—லட்சுமி ஓட்டல்னுதான் அதுக்குப் பேரு. ஒரு சின்னப் பொண்ணுதான் அந்த ஓட்டலே இப்போ நடத்திக் கிட்டுவர்ரு. முன்னமே நான் அங்கே போறபோது ஒரு கிழவியம்மாதான் அதை நடத்திக்கிட்டிருந்தாங்க. செலவு சுருக்கமாத்தான் இருந்தது. நல்ல சாப்பாடு. காலேயிலே ரெண்டணு கொடுத்தா கஞ்சி தருவா. சாப்பாட்டுக்கு நாலு அணு. ராத்திரீலே ரெண்டணு கொடுத்தா கஞ்சியும் மரவள்ளிக்கிழங்கு கூட்டும் தருவாங்க. அங்கேயே சுருண்டு படுக்கவும் செய்யலாம்.''

அப்படியானுல்கூடத் தினசரி எட்டணு வேண்டுமே. மூன்று நாளைக்குத் தங்கியிருக்கலாம். அப்புறம்? சங்கரப்பிள்ளே யோசித்தார். அப்புறம் என்ன? அவருக்குப் பயம் இல்லே. போராட்டத்துக்குத்தானே போகிறார்?

கிருஷ்ணன் சொன்னர்: ''அந்தக் கிழவியம்மா ரொம்ப நல்லவளா இருந்தாங்க. இப்போ சீஃப் செக்ரடரியாயிருக்காரே, அவர் முதலிலே அங்கேதான் சாப்பிட்டுக்கிட்டிருந்தார். அப்போ அவருக்கு வேலே யில்லே. ஆனு அந்தக் கிழவியம்மா, சீஃப் செக்ரடரிக்கு நல்ல காலம் வந்தப்போகூட அவரைப் பார்க்கப் போகல்லே. அந்தம்மா அப்படிப் பட்டவங்க.''

சங்கரப்பிள்ளே கேட்டார்: ''சீஃப் செக்ரடரி வந்து பார்த்திருக்காரா?''

''ரொம்ப நல்லாப் போச்சு! அவங்களுக்கெல்லாம் அதைப்பற்றி நினேவு இருக்குங்களா?''

அத்தியாயம் 40

பிசாசு

ஒரு கடிதம், அல்லது சித்திர வேலைப்பாடுடைய ஒரு கைத்துண்டு—இவ் வகையான ஏதாவது ஒன்று கேசவபிள்ளையின் மன அமைதியைக் கெடுப் பதற்காகத் தினசரி கிடைத்துக் கொண்டிருக்கும். சில நாட்களில் காரியாலயத்துக்கே வந்து 'விசிட்டிங் கார்டை'க் கொடுத்தனுப்பி விடுவாள். இரு சந்தர்ப்பங்களில் சந்திப்பதற்கான வாய்ப்பும் வழங்கப்பட்டது. வந்துவிட்டால் பிறகு திரும்பிப் போக மறந்தே போய் விடுவாள். சில வாக்குறுதிகள் அவளுக்குக் கிடைக்க வேண்டும். பின்னர் சந்திப்புக்கு அநுமதியளிக்கப்படவில்லை. அது கடுமையான நடவடிக்கை தான். மனத்துக்குச் சிறிது வேதனையளிப்பதும்கூட. ஆனால் ஓர் ஆறுதல். தங்கம்மா பார்க் விழுவுக்கு மட்டும் வரவில்லை. என்றைக்காவது ஒரு நாள் அங்கேகூட வந்துவிடுவாள் என்பதுதான் கேசவபிள்ளையின் பயம். அவள் சாகஸக்காரி, அங்கேகூட வந்துவிடலாம். வெறி கொண்ட வளாகத்தான் வருவாள். அல்லது மிகவும் அமைதியான தோற்றத்தை வெளிக் காட்டியவாறு வந்தாலும் வரலாம். ஒவ்வொரு நாளும் அது நிகழப்போகிறதென்ற பயத்துடன் இருந்து வந்தார் கேசவபிள்ளை. அவர் அங்கே இருக்கிறபோது வந்தால் சமாளித்துவிடலாம். இல்லாத போது வந்தால்? அதைப்பற்றிச் சிந்திக்கவே முடியாது. எதுவும் நிகழ்ந்துவிடலாம்! அந்த இரண்டு பெண்களுக்குள்ளே வாய்ச்சண்டை நடைபெறலாம். யாருக்குத்தான் உரிமை என்ற பிரச்னை எழுந்துவிடும். ஒருவேளை பலப் பரீட்சையே நடைபெறலாம் அல்லவா? நடைபெறுது.

மனைவிமீது கேசவபிள்ளைக்கு நம்பிக்கை உண்டு. கார்த்தியாயினி அத்தகைய ஒரு சூழ்நிலையை உருவாக்கி விடமாட்டாள். ஆனால், அந்தப் பெண்மணி எத்தகைய வேதனைக்குள்ளாவாள் என்பதே வேதனை தருகிற நிகழ்ச்சி. பழைய கதைகளையெல்லாம் அவர் மனைவியிடம் சொல்லத்தான் செய்திருக்கிறார்; மன்னிப்பைக் கோரியிருக்கிறார். கார்த்தியாயினி மன்னிப்பு அளித்திருக்கிறாள். அதெல்லாம் உண்மை தான். ஆனால் அதெல்லாம் நடந்து முடிந்த பின்னர்கூட அவர் அதே பாதையில் சஞ்சரித்திருக்கிறார். அது மனைவிக்குத் தெரியக்கூடாது. குமரிமுனையும், பீருமேடும், பலவீனமான ஒரு நிமிடத்திலே சென்னைப் பட்டணத்துக்கு உல்லாசப் பயணம் நடத்துவதாகக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியும்! எல்லாவற்றையும் கார்த்தியாயினி அறிந்துவிடுவாளே. தெரிந்துவிட்டால், அந்த நிமிடத்திலிருந்து அவளுடைய அடிவயிற்றிலே

நெருப்புப் பற்றியெரியத் தொடங்கிவிடும். ஆறுதல் அளிக்க எந்த வார்த்தையும் போதாது. வாழ்நாள் முழுவதும் நீடித்து நிற்கிற ஓர் இதய வேதனையாக இருக்கும் அது. வயோதிகப் பருவத்திலே மனநிம்மதியைக் கெடுத்துவிடும் அது. கார்த்தியாயினியால் அதைத் தாங்கி நிற்க முடியாதென்பது திண்ணம்.

கேசவபிள்ளை பங்களாவிலிருந்து அலுவலகத்துக்கு வந்துவிட்டால் தினசரி பதினைந்து தடவையாவது கார்த்தியாயினிக்குப் போன் செய்யாமல் இருக்கமாட்டார். தங்கம்மா அங்கே சென்றிருப்பாளோ என்ற பயம் தான். போனில் அழைக்கும் போதெல்லாம் ஒரே ஒரு கேள்விதான்: ''விசேஷமா ஒண்ணும் இல்லையே?''

அது கேசவபிள்ளையின் சுபாவமாக மாறிவிட்டிருந்தது.

இன்னொரு பயங்கூடக் கேசவபிள்ளையை விழுங்கியிருந்ததென்றே சொல்லலாம். அந்தப் பெண் மீது தமக்கு இருக்கிற வெறி தணியவில்லையா? பகுத்தறிவின் குளிர்ச்சியிலேகூட அந்தச் சூடு ஆறித் தணிந்து விடுவதில்லை. எதிர்காலப் பலன்களைக் கண்டறியும் திறமை படைத்தவர்தாம் அவர். அந்த வெறி தமக்குத் தகுந்ததல்ல என்பதையும் அவர் அறிவார். எல்லாவற்றிற்கும் மேலாக அதை மாய்த்துவிடவும் அவரால் முடியும். ஆனால் அப்படிச் செய்ய வெகுவாகப் பாடுபட வேண்டியிருந்தது. சைடல்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறபோது, தூங்குவதற்காகப் படுத்துக் கொண்டிருக்கிறபோது, கார்த்தியாயினி பக்கத்திலே வந்து அமர்ந்திருக்கிறபோது—ஏன்?—முக்கியமான பிரச்னைகளைப்பற்றி விவாதிக்கிற சம்மேளனங்கள் நடக்கிறபோதுகூட—அவர் தம்மையறியாமலேயே குமரிமுனைக்கும் பீருமேடுக்கும் மிதந்து சென்று கொண்டிருப்பார். அப்புறம் பகல் முழுவதுமே கனவு கண்டு கொண்டிருப்பார். அந்தக் கனவுகளிலிருந்து, நினைவுகளிலிருந்து திரும்பி வருவதென்றால், அது செங்குத்தானதொரு மலையேற்றம்போல் கடுமையாக இருக்கும். அவற்றிலேயே கட்டி நிறுத்தப்பட்டிருப்பதுபோல் தோன்றும்.

குறிக்கோளை அடையக்கூடிய வகையில் எந்தக் காரியத்தையும் செய்துமுடிக்க முடிவதில்லை. ஒருமித்த மனப்போக்கை இழந்து விட்டதாகக் கேசவபிள்ளைக்குத் தோன்றியது. அன்று, சீஃப் செக்ரடரி கிருஷ்ணன் நாயர் பதற்றமடைந்து நின்றபோது, சம்ஸ்தான காங்கிரசுடன் நடந்த வேண்டிய போராட்டத்துக்கு அடிப்படையாகச் சில திட்டங்களை நான்கைந்து வாசகங்களிலேயே தெளிவுபடுத்திக் கொடுக்கக் கேசவபிள்ளையால் முடிந்தது. அதன்பின் தம் அதிருஷ்டத்துக்கு அடிக்கல்லாகிவிட்ட ரிப்போர்ட்டை எழுதித் திவானுக்குச் சமர்ப்பிக்க அவரால் முடிந்தது. அவை எல்லாம் ஆழமான சிந்தனை, ஆராய்ச்சி ஆகியவற்றிலிருந்து உருவானவை. இன்று மூளையின் கூர்மை மழுங்கியிருக்கிறது. உத்தியோக அலுவல்களை ஒழுங்காகச் செய்து முடித்தோம் என்ற ஆத்ம திருப்தியே இல்லை. செய்த காரியங்களில்

எல்லாம் ஏதோ தவறு இருப்பதாக ஓர் எண்ணம் எப்போதும் மனத்தை உறுத்தியது. எந்நேரமும் ஒரே சோம்பல்தான்.

குமாரிமுனையிலே, அவள் கதறியழுதவாறு கால்களைக் கட்டியணைத்தாள். அவளுடைய கண்ணீரை அதுகாறும் கண்டிராத அவருக்கு ஒரு துளிக்கண்ணீரே போதுமாயிருந்தது. அவளை ஒரு முறை தொட்ட போது அவர் அப்படியே சறுக்கி விழுந்துவிட்டார். அந்த ஸ்பரிசத்துக்கு அத்தகைய ஈர்க்கும் சக்தி இருந்தது. பின்னர் அவர் எல்லாவற்றையும் மறந்து விட்டார். பீருமேட்டிலேதான் மதிமயக்கம் ஏற்படுத்திய அந்த மந்திர சக்தியின் மூடுபனியை விலக்கிப் பார்த்தார். மூளைக்குள்ளே ஒரு வெளிச்சம் ஊடுருவிப் பாய்ந்தது. அந்த வெளிச்சம் தமக்கு விமோசனம் அளிப்பதாக அவருக்குத் தோன்றியது.

கிடைத்து வந்த ஒவ்வொரு கடிதத்தையும் கைத்துண்டினையும் அவர் சாம்பலாக்கிவிடுவார். அதன் பின்பே அவர் வீட்டுக்குத் திரும்புவார். ஆனால், அவளுடைய இந்தத் தந்திரம் இன்னொரு தந்திரத்துக்குத் தாவிச் செல்லுமென்று அவருக்கு நன்றாகத் தெரியும். அது என்னவாக இருக்குமென்றே அவர் யோசித்துக் கொண்டிருந்தார். எவ்வளவுதான் யோசித்துப் பார்த்தபோதிலும், அவள் இனிமேல் தம் மீது தொடுக்கிற தாக்குதல் எத்தகையதாக இருக்குமென்பதை அவரால் அறிந்துகொள்ள முடியவில்லை. பயமுறுத்துவாளோ? பாதையிலே, பார்க் வியூவிலே, அல்லது வேறு எங்காவது வைத்துத் தம்மைப் பகிரங்கமாகப் பலவந்தமாகப் பிடித்து விடுவாளோ? மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள கீழ்ப்படிந்து விடுவேன் என்று அவள் நினைத்து விடுவாளோ? தற்கொலை செய்துகொள்ளப் போவதாக எச்சரிக்கை செய்வாளோ? இனிமேல் கண்ணீர் பலன் அளிக்காதென்று அவளுக்குத் தெரியும். தங்கம்மா எதிர்காலத்தில் கடைப்பிடிக்க இருக்கிற தந்திரத்தைக் கேசவபிள்ளை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்.

பார்க் வியூவிலேகூட இழந்துபோன மகிழ்ச்சி நிலை திரும்ப வந்து சேரவில்லை. இனிமேல் அது திரும்பி வராதா? என்றென்றைக்குமாக அது மறைந்து போய்விட்டதாகத் தோன்றியது. அதைத் திரும்பப் பெறுவதற்காகத் தீவிரமாக முயன்று பார்த்தார் கேசவபிள்ளை. களையுடன் காட்சி தந்த, விறுவிறுப்புடன் இருந்து வந்த அந்த வீட்டைத் திரும்பப் பெற அவர் மிகவும் விரும்பினார். எப்படித் திரும்பப் பெற முடியும்? அதற்கான ஒரு பாதையும் முன்னே தோன்றவில்லை. அந்த வீட்டை ஒளிமயமாக்கிக் கொண்டிருந்த தீபத்தை அணைத்துவிட்ட புயல் எது என்பதைக் கார்த்தியாயினி அறிந்திருக்கவில்லை. அந்தப் புயலுக்கு இரையான கேசவபிள்ளைக்கு மனத்தாங்கலும் பச்சாத்தாபமும் உண்டு.

வீட்டிலே பழைய வாழ்க்கை முறைகளெல்லாம் எவ்வித மாறுதலுமின்றி நடைபெற்று வருகின்றன. படிவாசலிலே வந்து நின்று தினசரி கணவருக்கு விடையளிக்கவும், திரும்பிவருகிற அவரை வரவேற்கவும் கார்த்தியாயினி தவறுவதில்லை. அவர் வீட்டிலிருந்து ஸைபல்களைப்

பார்க்கும்போது அவள் அருகிலேயே இருந்துவருகிறாள். ஆனால் தூங்கிப் போய் விடுகிறாள். வீட்டுப் பூங்காவிலே அவர் உலாவிக்கொண் டிருக்கும்போது அவள் தொடர்ந்து செல்கிறாள். ஆனால் தன்னுடைய மனம் எங்கெல்லாமோ அலைந்து செல்வதாக அவளுக்குத் தோன்றுகிறது. அவருடைய மனத்திலே எப்போதும் பெரும் சுமை. இரவிலே அவர் மார்பு மீது கை வைத்துத்தான் அவள் படுத்துக் கிடக்கிறாள். ஆனால், பேச்சு மூச்சின்றி இருவரும் தூங்காமல் தூங்குவதுபோல் நடித்தவாறு படுத்துக் கிடப்பார்கள். முன்பெல்லாம் இந்திர ஜாலத்தினால் என்பது போன்று அங்கே குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கிற சிரிப்புக்கள் முழங்கிக் கொண்டிருக்கும். உற்சாகம் கரை புரண்டோடிக் கொண்டிருக்கும். அவை எல்லாம் இப்போது அவர் கற்பனையில் காண்கிறார்; கேட்கிறார். என்ன பயன்?

உற்சாகம் இல்லாமல் காட்சியளிப்பது தவறுதான் என்று கார்த்தி யாயினிக்குக்கூடத் தெரியும். அலுவலக வேலைகள் முடிந்து வீட்டுக்குத் திரும்பி வருகிற கணவரை வாட்டமடைந்த வதனத்துடன் வரவேற்பது தவறு. அவருக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் ஊட்ட வேண்டியது தன் கடமை. விரும்புகிற உணவை அளிப்பது மட்டுந்தானே, உபசரிப்பு? கடமையாற்றுவதில் தவறு நேர்ந்து விடுகிறதென்று கார்த்தியாயினிக்குத் தெரியும். அவளைப் பொறுத்தவரையில் அது கவலையாக மாறி விடுகிறது. வெறும் மண்ணில் தண்ணீர் ஊற்றித் தட்டியுருட்டிக் குடத்தை உண்டாக்கித் தண்ணீர் சேந்தியெடுக்கிற திறமையை இழந்துவிட்ட பதிவிரதை அவள். ஆனால், தண்ணீரிலேகூட இன்னொரு புருஷனுடைய உருவத்தை அவள் பார்த்ததில்லை. அறத்துக்குப் புறம்பான ஒரு கனவைக்கூடக் கண்டதில்லை. ஏதனால், எங்ஙனம் இந்த நிலைமை ஏற்பட்டு விட்டது? அவளுடைய நெஞ்சம் துடிக்கிறது. இங்கே சதிபதிகளுக்குள்ளே பேச்சு வார்த்தைகள்கூடக் குறைந்துவிட்டன. தேவை ஏற்பட்டால் ஏதாவது பேசுவதோடு சரி!

ஒரு நாள் கார்த்தியாயினி கேட்டாள்: ''மணிக்கு முப்பது முறை ஆபீசி லேருந்து 'விசேஷமா ஒண்ணுமில்லியே'ன்னு டெலிபோன் பண்ணிக் கேக்க றீங்களே, என்னத்தையோ கண்டு பயப்படறீங்கபோல் தோணுதே.''

அதற்குத் திடீரெனப் பதிலளிக்கக் கேசவபிள்ளையால் முடியவில்லை. மூளைக்கே ஒரு மந்தநிலை ஏற்பட்டிருந்த போதிலும், ஒரு நிமிஷத்துக் குள்ளேயே அது கூர்மையாகிவிட்டது. சிறிது தடுமாறியவாறு அவர் பதில் அளித்தார்:

''உன்னை வாடிய வதனத்துடன் பார்த்துத்தான் நான் இங்கிருந்து கிளம்பிச் செல்கிறேன். அதனாலே எப்போதுமே ஒருவிதமான பயந்தான். அதனால்தான் அடிக்கடி அழைத்துப் பேசிக் கொண்டிருக்கிறேன்.''

அப்பப்பா! வெற்றிதான்! சரியான பதில் வந்துவிட்டது! இத்தகைய பதில் எப்படி வந்தது என்று கேசவபிள்ளை வியப்புற்றார். தம்மையே பாராட்டிக் கொண்டார். அந்தப் பதில் அவளுக்குச் சரியெனப்பட்டதா

என்பதை மட்டும் அறிய வேண்டும். சரியில்லை என்று சொல்லமுடியாது. ஆனால் அவள் பேசாமல் இருந்துவிட்டாள். அவர் சொன்ன பதிலை அவள் உணர்ந்து கொண்டாளோ, என்னவோ? தெரியாது.

அவர் கேட்டார்: ''எப்போ பார்த்தாலும் இப்போ அழுதுவிடுவாய் என்ற முறையிலே நீ இருக்கக் காரணம் என்ன? என்ன நடந்து விட்டது?''

அவள் ஒரு மறுகேள்வியைத்தான் கேட்டாள்: ''உங்களுக்கு எப்போ பார்த்தாலும் உற்சாகமில்லே. எதைப்பற்றியோ யோசிச்சுக் கவலைப் படறப்பலே, பயப்படறப்பலே, என்னை வேணும்ங்கிற நிலைமையிலே நினைக்கிறப்பலே தோணுதே? நான் பக்கத்திலே வந்து உட்கார்ந்தா, இப்படி ஒருத்தி உட்கார்ந்திருக்கிறளேன்னுகூட நினைக்கிறதில்லீங்களே? அதைப் பார்க்கிறபோது என் மனசு என்னென்னமோ ஆவுது. முன்னலே ஊரிலிருந்தபோது எனக்கு இதைப்பற்றி ஒண்ணும் தெரியாது. இப்போ எனக்கு எல்லாம் தெரியும். என்னை உற்சாகமாயிருக்கக் கற்றுத் தந்து விட்டு இப்போ திடீர்னு நான் வேணும்ங்கிற நிலைமையிலே நீங்க இருக்கிறதா தோணுது. நான் உங்களை மகிழவைக்கிறேன்னு நெனைச்சுக் கிட்டிருந்தேன். இப்போ ஏன் இப்படி நடந்துக்கிறீங்க?''

கேசவபிள்ளையால் அதை முழுவதுமாக மறுத்துவிட முடியவில்லை. சொன்னார்: ''இப்போது எனக்கு வேலையிலே ரொம்பவும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி உனக்குத் தெரியுமா?''

''ஹும்? என்ன?''

''மலபார்கூடச் சேர்ந்துவிட்ட கேரள மாநிலம் உருவான பிறகு அமைதியே இல்லை. சென்னையிலிருந்து வந்திருக்கிற உத்தியோகஸ்தர்கள் ரொம்பத் தொந்தரவுகள் கொடுத்து வருகிறார்கள். வேலையிலே திறமை, அறிவு எல்லாம் அவர்களுக்குத்தான் அதிகமென்ற முறையிலேதான் நடந்து கொள்கிறார்கள். இங்குள்ள உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் லஞ்சப் பேர்வழிகளும் அறிவிலிகளும் முட்டாள்களும்தான் என்று அவர்கள் கருதுகிறார்கள். மதராஸிலிருந்து வந்திருக்கிற அந்த மலபார் உத்தியோகஸ்தர்கள் இங்குள்ளவர்களுக்கு ஒரு பட்டப் பெயரைக்கூட வழங்கியிருக்கிறார்கள். என்ன தெரியுமா? 'ஈயடிச்சான் காப்பியெழுது பவர்கள்'!''

அந்த விஷயத்தில் கார்த்தியாயினிக்கு அதிக அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. இருக்க வேண்டிய அவசியமும் இல்லை. அவள் சொன்னாள்: ''அதெல்லாம் அன்னைக்கே சொல்லீட்டீங்களே.''

தாம் சொல்லுகிற விஷயத்திலே கார்த்தியாயினிக்கு அக்கறை ஏற்பட வேண்டுமென்று கேசவபிள்ளை விரும்பினார். அவ்வாறு ஏற்பட்டால் தானே, தம் உற்சாகக் குறைவுக்கான காரணத்தை அவளுக்கு உணர்த்த முடியும்? நியாயப்படுத்தமுடியும்? அவர் சொன்னார்:

''அன்று நான் வெறும் யூகத்தின் அடிப்படையிலேதான் சொன்னேன். இப்போது அந்த யூகம் சரியாகிவிட்டதைக் காண்கிறேன். அதன்

அனைத்துப் பளுவையும் தாங்கி நிற்பது நானேதான். அந்தப் பளுவைத் தாங்கி நிற்பதன் கஷ்டத்தை உன்னால் உணர்ந்துகொள்ள முடியாது.''

கேசவபிள்ளை, மனைவியைச் சமாதானப்படுத்துவதற்காகப் படைத்த கதை அல்ல அது. மதராஸ் நிர்வாகத்திலிருந்து அதிகாரிகள் கேரள நிர்வாகத்துக்கு மாறி வந்தபோது பிரச்னைகள் மேலும் குழம்பிவிட்டன. உத்தியோக வாழ்க்கையிலே ஏற்படுகிற நெருக்கடிகளைப்பற்றி மனைவியால் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் கணவருக்கு ஏற்படுகிற நெருக்கடிகள் நெருக்கடிகள்தானே? அந்த விஷயத்திலே சிறிது அக்கறை காட்டத் தலைப்பட்டாள் கார்த்தியாயினி. அவள் கவனிப்பது போல் தோன்றியது. கேசவபிள்ளை தொடர்ந்து கூறினார்: ''அவர்கள் என்ன நினைக்கிறார்கள் தெரியுமா? தாங்கள் பெரிய மதராஸிலிருந்து வந்தவர்கள்; பெரிய பெரிய துரைகளிடம், ஐ.ஸி.எஸ். அதிகாரிகளிடம் வேலை செய்து அநுபவம் பெற்றவர்கள் என்ற கர்வம் அவர்களுக்கு. நம் நாட்டினருக்கோ அவர்களைக் கண்டால் துச்சம். மதராஸிலிருந்து வந்தவர்களைக் கொஞ்சம் கீழே இறக்கிக் கட்டி நிறுத்த வேண்டுமென்பது இங்குள்ள மாப்பிள்ளைகளின் நோக்கம். இதெல்லாம் ஃபைல்களைப் பார்க்கும்போது காணமுடிகிறது. இதனிடையில் இன்னொரு குழப்பம். மதராஸிலிருந்து வந்தவர்களுக்கு இங்குள்ளவர்களைவிடக் கூடுதலான சம்பளம். ஆனால் சர்வீஸ் குறைவு. அவர்களுக்கு உயர்ந்த கிரேடு வேண்டும். இங்கே அதிகப்படியான சர்வீஸ் உள்ளவர்கள் முணுமுணுக்கிறார்கள். மதராஸிலிருந்து வந்திருக்கிறானே, அவன் தங்கள் தலைமீது வந்து உட்கார்ந்திருக்கப் போகிறான். அவனைத் தங்கள் தலைமீது ஏற்றி வைக்கப் போகிறார்கள். . . என்றெல்லாம்! தலைமைச் செயலகம் எங்கும் இந்தத் தகராறு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பரஸ்பரமுள்ள இந்த அவநம்பிக்கை, ஏளனம், கீழிறக்கிக் கட்டுவதற்கான முயற்சி ஆகியவற்றால் எனக்குத்தான் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. எனக்கு மட்டும் ஓர் ஆபத்துக் கூட இருந்து வருகிறது.''

கார்த்தியாயினி கேட்டாள்: ''உங்களைவிட அதிகமாச் சம்பளம் வாங்கிற ஒருத்தர் வரப்போறார்ன்னு சொன்னீங்களே, அதுவா?''

கேசவபிள்ளை சொன்னார்: ''ஆம். அதுவேதான். அவருக்கு என்னை விடச் சர்வீஸ் குறைவு. சம்பளம் ஜாஸ்தி. அவர் ஒரு வெறும் செக்ரடரி, இது ஒன்று! இன்னொன்று, அவருக்கு மத்திய சர்க்காரிலே அபரிமிதமான செல்வாக்கு இருக்கிறதாம். எனக்குப் புதுடில்லியில் யார் இருக்கிறார்கள்? எனக்கு நானேதான். வேறு யார் இருக்கிறார்கள்? மத்தியிலுள்ள சில மந்திரிகள் அவருடைய சொந்தக்காரர்களாம். பாராளுமன்றத்திலே காங்கிரஸ், கம்யூனிஸ்டு, பி.எஸ்.பி. ஆகிய கட்சிகளும், சொந்தக்காரர்களும் அவருக்கு ஆதரவளிக்க இருக்கிறார்களாம்.''

கேசவபிள்ளை தம்மிடமே சொல்வதுபோல் தொடர்ந்து பேசினார்: ''இந்த மேனன்மார்கள், நம்பியார்மார்கள், பொதுவாள்மார்கள் எல்லாரும், மலபாரைச் சேர்ந்த ஒருவருடைய பிரச்னை என்று வரும்போது

ஒன்று சேர்ந்துவிடுகிறார்கள். எனக்கு ஐ.ஏ.ஏஸ். தருவதிலேகூட மத்தியி லுள்ள மலபார்க்காரன் இடையூறு விளைவித்தான். அது விஷயமாகப் பார்க்கிறபோது காங்கிரஸ், கம்யூனிஸ்டு, பி.எஸ்.பி. என்ற பாகு பாட்டையே பார்க்க முடிகிறதில்லே. மலபார் விஷயம் வரும்போது அவர்கள் எல்லாரும் ஒன்று. அந்த ஒற்றுமை திருவாங்கூரைச் சேர்ந்தவர் களுக்கு இல்லே. இங்கே பரஸ்பரம் புறமுதுகிலே குத்துவதுதான் வழக்கில் இருந்து வருகிறது.''

கார்த்தியாயினி, பல வருடங்களுக்கு முன்பே நிர்மானித்து வைத் திருந்த அந்த முடிவைத்தான் மாற்றுக முன்வைத்தாள்.

''இப்படி ரொம்ப நெருக்கடியாயிருக்கிறதுன்னு, வேலேயிலேருந்து விலகி வரவேண்டியதுதானே? எதுக்காக இப்படி மனசைப் புண்படுத்திக் கிட்டிருக்கணும்?''

கேசவபிள்ளே அந்தப் பிரச்னேயை அவ்வளவு இலேசாகத் தள்ளிவிடத் தயாராக இல்லே.

''அப்படி எல்லாவற்றையும் விட்டுவிட்டு வரச் சொல்லறியா? வாழ்க் கையிலே நான் ஒரு விளேயாட்டைத் துவக்கிவைத்தேன். அந்த விளே யாட்டை நன்றுக விளேயாடித்தான் முடிக்கவேண்டும்.''

''குரல் நல்லாயிருக்கிறப்போ பாட்டை நிறுத்திடுங்க! இங்கிருந்து போவோம். ஆட்சி நடத்தியதெல்லாம் போதும். இந்த வீடு கலகல வென்று இருந்ததல்லவா? நமக்குள்ளே எவ்வளவு ஒற்றுமை இருந்தது! உயிர் வாழப் போதிய சொத்தெல்லாம் நமக்கு இருக்கு. எதுக்காக இங்கே தொங்கிக் கிடக்கணும்? இங்கே தங்கியிருக்க எனக்குக் கொஞ்சங் கூட விருப்பமில்லே. இங்கே குடியிருந்தா இன்னும் தகராறுதான். இந்த வேலேயிலேருந்து பிரிஞ்சு போவோம்.''

கேசவபிள்ளே அவளுடைய உணர்ச்சியை அறிந்தார். அதிலே பயத்தின் நிழல் வீசிக்கொண் டிருந்தது. அவர் சொன்னர்: ''அப்படிப் போவ தற்குச் சமயமாகிவிடவில்லே. ஆகிவிட்டதா? இந்தப் பதவியிலிருக்கிற போதே மகளுடைய திருமணத்தையும் நடத்தி முடிக்கணும். அப்போது தான் நல்ல மாப்பிள்ளே நமக்குக் கிடைக்கும். அதுகூட நடந்து முடிந்துவிட்டால் அப்புறம் எப்படிவேண்டுமானலும் ஆகலாம்.''

கேசவபிள்ளே ஒரு விநாடிக்குப் பிறகு மேலும் சொன்னர்:

''நாசமாப் போன அந்த நாராயணன் நாயரிடம் சொல்லி ஒரு பிரயோஜனமும் இல்லே. இனி வேறுயாரிடமாவது சொன்னல்தான் நடக் கும் போலிருக்கிறது.''

கார்த்தியாயினி கேட்டாள்: ''மலபாரைச் சேர்ந்த உத்தியோகஸ் தனேப்பற்றி அன்னேக்குச் சொன்னீங்களே. அப்புறம் அதைப்பற்றி யோசிக்கல்லீங்களா?''

''அது அவ்வளவு சுமாராகத் தெரியவில்லே. அவன் புத்திசாலிதான். ஐ.ஏ. எஸ்ஸாக்கி எடுக்கவும் முடியும். ஆனல்—''

''என்ன ஆனல்—?''

''அவன் பெரிய தந்திரசாலி என்று சொல்லுகிறார்கள்.''

கார்த்தியாயினி கேட்டாள்: ''அவனுடை சுபாவம்?''

''எலியைப் பிடிக்கும் பூனை பாம்பையைக்கூட உடைத்துத் தள்ளிவிடும். அதிலே உனக்குச் சம்மதமா?''

பதில் திடீரென்று வந்தது:

''ஐயோ! கடவுளே! வேணும்; வேணும்! எலியைப் பிடிக்க வேணும். எனக்கு ஏற்பட்ட அநுபவம் என் மகளுக்கும் ஏற்படாமல் இருந்தால் போதும்.''

பிள்ளை சிரித்தார். அவர் இன்னொரு விஷயத்தைப்பற்றிக்கூடச் சொன்னார்: ''இப்போது வேலையிலிருந்து பிரிந்து செல்வது தோல்வியை ஒப்புக் கொள்வது போலாகிவிடும். அப்படித் தோல்வியடைந்து ஆயுதத்தைக் கீழே போட்டு ஓடி விடுவது சரிதானா?''

''இது ஒரு தோல்விதானா? அல்லவே அல்ல. அவளுக்கு நல்ல ஒரு மாப்பிள்ளையும் கிடைத்துவிடும்.''

''நான் ஒரு விஷயத்தைப்பற்றிக் கேட்கட்டுமா, கார்த்தியாயினி? முக்கியமான விஷயம். நீ ஏன் இப்படி வாடித் தளர்ந்திருக்கிறாய்? யோசித்துப் பார்த்தால், எந்த ஒரு காரணத்தையும் என்னால் பார்க்க முடியவில்லை. உன்னை நான் திட்டுவதில்லை; அதட்டுவதில்லை; குறை கூறுவதில்லை; ஆத்திரப்படுவதில்லை. அப்புறம் என்ன இது?''

அவளுடைய திறந்த மனம் இவ்வாறு வெளிப்பட்டது:

''அப்படிச் செஞ்சிருந்தீங்கன்னுக்கூட நல்லாயிருந்திருக்கும். மனசிலே இவ்வளவு பெரிய சுமை இருந்திருக்காது. என்னை நீங்க திட்டினாலோ, அதட்டினாலோ நான் ஒண்ணும் நினைக்கமாட்டேன். உதைச்சிருந்தாக் கூடச் சந்தோஷமேதான்.''

''அப்புறம் என்னதான் வேண்டுமென்கிறாய்?'' புன்னகையுடன்தான் அவர் இதைக் கேட்டார்.

''இங்கே யாரோ மந்திரவாதம் செஞ்சிருக்காங்க. இந்த வீட்டிலே பேய் நுழைஞ்சிருக்கு. இங்கே பூராவும் நமக்குச் சத்துருக்கள்தான். யாரோ என்னத்தையோ செஞ்சு வச்சிருக்காங்க. நாம் சந்தோஷமா இருக்கிறதைப் பார்த்துப் பொறுமை கொண்டு செஞ்சதுதான். மகளுக்கு நல்ல ஒரு வரன்கூட வரமாட்டேங்குது. அப்பாவுக்கு அதைப்பற்றிய கவலைகூடக் கிடையாது.''

கேசவபிள்ளை சிரித்துவிட்டார். ஆனால், அந்தச் சிரிப்பை அவர் அடக்கிக்கொண்டார்.

கார்த்தியாயினி மேலும் கூறினாள்:

''எவ்வளவு சீக்கிரத்திலே அது வந்து நுழைஞ்சதுன்னு பாருங்க! நல்லாப் பலிக்கிற முறையிலேதான் செய்து வச்சிருக்காங்க. என் மன சறிஞ்சு நான் யாருக்குமே எந்தவிதமான கெடுதலையும் செஞ்சதில்லே. எனக்கு இந்தக் கதி வந்துவிட்டதே. அன்னைக்குக் குமரிமுனைக்குப் போயி வந்ததுக்கப்புறந்தான் இந்த நிலைமை ஏற்படத் தொடங்கியது.''

''என்ன தொடங்கியது?''

''அன்பில்லே, விருப்பமில்லே!''

''உன்னிடமா?''

''ஆமாம்.''

''எனக்கா?''

''ஆமாம்.''

''அது உனக்கு எப்படித் தெரியும்?''

''கைப்புண்ணுக்குக் கண்ணுடி வேணுங்களா? நான் சொல்லட்டுமா?''

கேசவபிள்ளே சொல்ல அனுமதி அளித்தார்.

''இங்கே எப்படியிருந்தது? இப்படி ஒருத்தருக்கொருத்தர் பேசாமே கொள்ளாமேதானு நாம்ப இங்கே இருந்திருக்கிறோம்? ஒரு மணிக்கு அறுபதுமுறை என்னேப் பேரைச் சொல்லியழைச்சுக்கிட்டிருந்தீங்களே? எந்த ஒரு வேலேயும் ஒரேயடியாச் செஞ்சு முடிக்க என்னே நீங்க விட்டதில்லே. அதுக்குள்ளே பத்துத் தடவை கூப்பிடுவீங்க. குரலேக் கேட்டு வந்தா ஒண்ணுமில்லேன்னு நீங்க சொல்லிடுவீங்க. நான் அருகிலே இருந்தாத்தான் வேலே நடக்கும்னுதானே சொல்லிக்கிட்டிருந்தீங்க? இப்போ, என்னே அப்படிக் கூப்பிடறதுண்டா?''

அவள் சொல்வது முற்றும் உண்மை. அவள் குளித்துக்கொண் டிருக் கிறபோதுகூடக் கூப்பாடுதான். அவள் அருகில் அமர்ந்திருக்கையிலே கூடத் தம்மை மறந்த நிலேயிலே உரத்த குரலிலே அழைத்திருக்கிறர், ''கார்த்தியாயினீ!'' என்று.

அப்போது அவள் கேட்பாள்: ''இதென்ன பைத்தியமா புடிச்சுப் போச்சு?''

''ஓ, நான் மறந்துவிட்டேன்.''

இவ்வாறு அந்த வீடு 'கார்த்தியாயினீ! கார்த்தியாயினீ!' என்ற அழைப்புக் குரல்களால் முழங்கிக்கொண் டிருந்தது. அவள் அவர் அருகிலேயே இருக்கவேண்டும். பெரிய நிர்ப்பந்தந்தான். அவள் எல்லா வற்றையும் எண்ணிக் கேட்டாள்:

''இப்போ?''

கேசவபிள்ளே பதில் சொல்லக் கடமைப்பட்டவர் தான்.

''மனநிம்மதி வேண்டாமா?''

''மனநிம்மதி இல்லாதபோது அல்லவா நான் உங்களுக்குக் கூடுதலாகத் தேவைப்படவேண்டும்? உங்களுக்கு மனக்கவலே ஏற்படும்போதெல்லாம் அப்படித்தானே இருந்து வந்தேன்?''

''என் கவலே என்னவென்று உன்னுல் புரிந்துகொள்ள முடியாது. என் முகம் வாட்டம் அடையும்போது உன் முகமும் வாட்டமடையும்.''

கார்த்தியாயினி, தன் பிரச்னேகளேப்பற்றிப் பேசத் தொடங்கினுள்:

''காலேயிலே தூங்கிக்கொண் டிருக்கிற என்னே எப்படி எழுப்பிக் கொண்டிருந்தீங்க? அப்படிக் கண்ணே விழித்து அந்த நாளேத் துவக்கினு, எனக்கு என்ன உற்சாகம்! என்ன தைரியம்! கவலேயே இருக்காது.

என்மீது அன்பும் விருப்பமும் இருந்தாப் போதுமாயிருந்தது. அதல்லாமே வேறு ஒண்ணுமே எனக்குத் தேவையில்லே.''

கார்த்தியாயினி சொன்ன நிகழ்ச்சிகள் சில நாட்களாக நடைபெறுவ தில்லேஎன்று நினைவுபடுத்திக்கொண்டார் கேசவபிள்ளே. மனப்பூர்வமாகச் செய்யாமல் விட்டு விட்டது அல்ல. மனப்பூர்வமாகவே ஒரு சடங்காகச் செய்யத் தொடங்கியதுமல்ல. கேசவபிள்ளே காலேயில் கண் விழிக்கும் போது கார்த்தியாயினி மல்லாக்காகவோ, ஒருக்களித்தோ படுத்துக் கொண்டிருப்பாள். குழந்தை விளேயாட்டுப்போல் ஏதாவது செய்து அவர் அவளேக் கண்விழிக்கச் செய்வார். அது ஒரு வேடிக்கையாகத் தினசரி நடந்து வந்தது. குமரியிலிருந்து திரும்பி வந்த நாளில் அவர் கண் விழித்துப் பார்த்தபோது அவள் அருகில் இருக்கவில்லே. வெளியே ஓர் இடத்திலே சிந்தனேயில் மூழ்கியவாறு தனிமையிலே உட்கார்ந்திருந்தாள். அதிலிருந்து அந்த வேடிக்கைச் சடங்கு நின்றுவிட்டது.

கேசவபிள்ளே சொன்னார்: ''நாளேய தினத்திலிருந்து அதைத் துவக்க லாமே.''

திடீரென்று பதில் வந்தது: ''அப்படித் துவக்க முடியாது. அதனுலே எந்தவிதமான மகிழ்ச்சியும் ஏற்படப் போவதில்லே. அந்தக் காலம் போய்விட்டது.''

கார்த்தியாயினி சொன்னது உண்மைதானே? ஆனுல், அவர் அதை வெளியே காட்டிக்கொள்ளவில்லே.

அவள் சொன்னுள்: ''என்மீது அன்பு இருந்தாப் போதும். அப்புறம் ஒண்ணும் வேணும். அது இப்போ இல்லேன்னுச்சு. ஏதோ துரோகிங்க மந்திரவாதம் செஞ்சிருக்காங்க. அது மட்டும் திண்ணம்.''

கேசவபிள்ளே என்ன சொல்வார்? கார்த்தியாயினி அந்த வீட்டிலே நடைபெற்று வந்த மகிழ்ச்சி தந்த காரியங்களேப்பற்றிக் கூறினுள்.

அவர் அருகிலே அவளும் அமர்ந்து சாப்பிடவேண்டுமென்று வலியுறுத்திக்கொண் டிருந்தார் அல்லவா? இப்போது?

* * *

மறுநாள் விடியற்காலேயில் அவர் கண் விழித்துப் பார்த்தபோது, அவள் அருகிலேயே கண் விழித்துப் படுத்துக் கிடப்பதைக் கண்டார். ஆயினும் அவர் ஒரு நாடகத்தை நடித்தார். ஆனுல் அது அவ்வளவாகப் பலன் அளித்ததென்று கேசவபிள்ளேக்குத் தோன்றவில்லே. அவளுடைய வதனத்திலே வெளிறிய ஒரு சிரிப்பைத்தான் அவர் கண்டார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு நாள் மாஜி மந்திரி மிஸ்டர் மாத்யூ, காங்கிரஸ் தலேவர் மிஸ்டர் ஜாக்கோஸ் ஆகியோர் பார்க் வியூவுக்கு வந்தனர். அது ஓர் இரகசியமான சந்திப்பு. மலபாரை இணேத்துக் கொண்டது அரசியல் ரீதியிலே ஓர் ஆபத்தை வரவழைத்திருக்கிற

தென்ற கருத்துத்தான் லூக்கோஸுக்கு. அடுத்தத் தேர்தலிலே சட்ட சபையில் காங்கிரஸ்காரர்களின் எண்ணிக்கை குறைந்துவிடும். மலபார், கம்யூனிஸ்டு செல்வாக்குள்ள மண்டலமாக மாறிவிடும் வாய்ப்புத்தான் இருந்து வருகிறது. அப்போது, மலபார் இணைப்பு, உத்தியோக மண்டலத்தில் தமக்கு ஏற்படுகிற நெருக்கடிகளைப்பற்றிக் கேசவபிள்ளை சொல்ல விரும்பினர்.

மாத்யூ புன்னகையுடன் ஒரு கருத்தை வெளியிட்டார்:

''இந்தத் தேர்தலில் எங்களுக்கு நீங்கள் கொஞ்சம் உதவியளிக்க வேண்டியிருக்கிறது.''

நெருப்புப் பட்டதுபோல் கேசவபிள்ளை ஒருமுறை துடித்துவிட்டார்.

''அதைப்பற்றியெல்லாம் பேசாதீர்கள். அந்தக் காலம் மலையேறி விட்டது. அன்று தாங்கிக்கொள்ள ஆட்கள் இருந்தார்கள். அதனாலே பல காரியங்களைச் செய்ய முடிந்தது. எதிர்காலம் அப்படிப்பட்டதல்ல. நீங்கள் என்னை வந்து பார்த்தீர்கள் என்று சொன்னாலே போதும். அட்வைசர் 'எக்ஸ்பிளனேஷன்' கேட்டு விடுவார். கம்யூனிஸ்டுகளுக்குச் சக்தி இருக்கிற காலம் இது.''

லூக்கோஸ் சந்திக்க வந்ததன் நோக்கத்தைத் திறந்து சொல்லி விட்டார்:

''தேர்தலை நடத்தத் தெரிந்தவர்கள் வேறு யாரும் இல்லை. சற்றுக் கவனமாகச் செயல்படாவிட்டால் பெருவாரியான இடங்களைக் கம்யூனிஸ்டுகள் கைப்பற்றிவிடுவார்கள். நல்ல முறையில் பிரசார வேலை செய்து ஒழுங்காகச் செயல்படவில்லை என்றால் காங்கிரஸ் சரிந்து விழும் என்பதில் சந்தேகமில்லை.''

அது உண்மைதான் என்று கேசவபிள்ளை தம் கருத்தைத் தெரிவித்தார். அதற்கு மேலும் சிலவற்றைச் சொல்ல அவர் விரும்பினர். பொதுவாகக் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு மேலோங்கி இருக்கிறதென்றே சொல்ல வேண்டும். ஆனால் மாத்யூவுக்கு அந்த அபிப்பிராயம் இல்லை.

லூக்கோஸ் மேலும் சொன்னார்:

''நாங்கள் வந்ததை இன்னும் தெளிவாகச் சொல்லிடறேனே! நாங்கள் எல்லாரும் சேர்ந்து இந்த விஷயத்தைப்பற்றி விவாதித்தோம். ஒரு மித்த கருத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறோம். நிர்வாகத் துறையிலும் அரசியல் துறையிலும் நீங்கள் பெற்றிருக்கிற திறமையை நன்கு பயன் படுத்தவேண்டுமென்பதுதான் அந்தக் கருத்து. அதைத் தெரிவிக்கத் தான் . . .''

மாத்யூவும் லூக்கோஸும் பரஸ்பரம் பார்த்துப் புன்னகை செய் தனர். எப்படிப் பயன்படுத்துவதென்று கேசவபிள்ளையால் புரிந்து கொள்ள முடியவில்லை.

''என்ன சங்கதி? எப்படிப் பயன்படுத்துவது? திறந்து சொல்லுங்கள்!''

மாத்யூ சற்றுத் தடுமாறியவாறு சொன்னார்: ''கேரளக் காங்கிரஸின் பொறுப்பை நீங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும்.''

கேசவபிள்ளை சிரித்துவிட்டார்.

''அப்போ, நான் ஓர் அரசியல்வாதியாக மாறி உங்களோடு சேர்ந்து கோஷங்களைக் கோஷித்துக்கொண்டு நடக்கவேண்டுமென்று சொல்கிறீர்களா?''

லூக்கோஸ் அதற்குத் திருத்தத்தைக் கொடுத்தார்:

''என்று நாங்கள் சொல்லவில்லை. அப்படி நினைக்காதீர்கள். இந்த உத்தியோகத்திலிருந்து கிடைக்கக்கூடிய பென்ஷனையும் வாங்கிக் கொண்டு பிரிந்து வரவேண்டுமென்பதுதான் எங்கள் கோரிக்கை.''

கேசவபிள்ளை மரத்துப் போனார்.

''அப்புறம் தேர்தலிலே போட்டி போடவேண்டும்.''

''நான்?''

''ஆம், அதுவேதான். அதிலே இவ்வளவு தூரம் வியப்படைய என்ன இருக்கிறது?'' என்றார் மாத்யூ. அவருடைய கருத்தைப் பூர்த்தி செய்யும் முறையில் லூக்கோஸ் கூறினார்:

''அப்புறம் தேர்தலிலே வெற்றி பெற்றுக் கேரளத்தின் முதல் அமைச்சராகி விடவேண்டும்.''

கேசவபிள்ளை குலுங்கக் குலுங்கச் சிரித்தார்.

மாத்யூ கேட்டார்: ''ஏன் இப்படிக் குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கிறீர்கள்?''

கேசவபிள்ளை சொன்னார்: ''ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை!''

மாத்யூ மேலும் கூறினார்:

''காங்கிரஸ் ஆட்சியிலே ஏற்பட்ட கோளாறு பூராவுமே அமைச்சர்களுக்கு நிர்வாக அநுபவம் இல்லாமலிருந்தது என்பதுதான். இலாக்காக்கள் இன்னவை என்றுகூடத் தெரியாமல் இருந்திருக்கிறார்கள். அந்த நிலைமையை அடியோடு மாற்றவேண்டியிருக்கிறது.''

கேசவபிள்ளை இதுகாறும் எண்ணியிராத விஷயம் இது. அந்த யோசனை அவரை ஓர் உலுக்கு உலுக்கியது. மாநிலத்தின் முதல்வர் பதவியை ஒரு கணநேரம் அவர் கற்பனை செய்து பார்த்தார். ''ஏன் கூடாது?'' என்ற கேள்வியை தமக்குள்ளே இருந்து யாரோ கேட்பது போல் தோன்றியது. ஆசை கிளர்ந்தெழுந்தது. சில வருடங்களுக்கு முன்னால் சீஃப் செக்ரடரியின் உதவியாளராகத் தமக்குப் பதவியுயர்வு கிடைத்தபோது, ஹரிஹர ஐயர் என்ற அந்தப் பிராமணரும் கோவிந்தன் நாயரும் சேர்ந்து, மேற்கொண்டு தமக்கு ஏற்படக்கூடிய முன்னேற்றத்தைப்பற்றிச் சொல்லி அவரை வாழ்த்தியிருந்தார்கள். அந்த வயோதிகப் பிராமணரின் நல்ல நாக்கிலிருந்து உதிர்ந்த ஆசீர்வாதம் உண்மையாகி விடப் போகிறதா?

கேசவபிள்ளை தம்மை மறந்த நிலையில் கூறிவிட்டார்:

''இன்றைய அமைச்சர்களைவிட நன்றாக ஆட்சி நடத்த முடியுமென்று தோன்றுகிறது.''

மீன் தூண்டிலை விழுங்கிவிட்டதென்று லூக்கோஸுக்குத் தோன்றியது. அவர் சொன்னார்:

''நிச்சயமாக நடத்த முடியும். அதில் என்ன சந்தேகம்?''

மாத்யூ சொன்னார்: ''நாட்டுக்காகச் செய்கிற மகத்தான சேவை இது. இல்லாவிட்டால் இந்தக் கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வந்து நாட்டையே குட்டிச்சுவராக்கி விடுவார்கள்.''

லூக்கோஸின் நடைமுறை அநுபவம் பிறகு செயல்பட்டது.

''இனிமேல் இந்த உத்தியோகத்தை, இதன் கௌரவத்துடன் நடத்திச் செல்லமுடியாது. இப்போதே நிர்வாக இயந்திரம் கட்டவிழ்ந்த புத்தகம்போல் ஆகிவிட்டதென்று சொல்கிறார்கள். இனிமேல் வெட்கக் கேடுதான். உங்களுக்குச் சௌக்கியமாக வாழப் போதிய சொத்துக்கள் இருக்கின்றன. அடுத்ததாகப் பென்ஷன்கூடக் கிடைத்துவிடும். எனவே இந்த உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்துவிடுவது நல்லது.''

சிறிது நேரம்வரையில் பொருள் படைத்த மௌனம் அங்கே நிலவியது. பின்னர் அந்த மௌனத்தைக் கலைத்தவர் லூக்கோஸ்தான்.

''இன்னமும் யோசிக்க என்ன இருக்கிறது?''

கேசவபிள்ளை கேட்டார்: ''ஒரேயடியாக ராஜிநாமாச் செய்ய வைக்கலாமென்ற நோக்கோடுதான் நீங்கள் வந்திருக்கிறீர்களா?''

சற்று அவசரப்பட்டுவிட்டோமென்று இருவரும் உணர்ந்து கொண்டனர். லூக்கோஸ் கொஞ்சம் கீழே இறங்கினார்:

''அப்படி அல்ல! சொன்னேன், அவ்வளவுதான்.''

பின் அவர்கள் எஸ்டேட் முதலிய சொந்த விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். கேசவபிள்ளைக்கு விகிதாசாரமாகக் கிடைக்க வேண்டிய ஆதாயத்தை மாதா ஜோதிர்மயீ தேவிக்குக் கொடுப்பதற் கான ஏற்பாடுகள்கூட அங்கேயே பூர்த்தியாக்கப்பட்டன.

''காலம் கடத்தாமலேயே ஒரு முடிவுக்கு வரவேண்டும்'' என்ற வேண்டுகோளை விடுத்தவாறு மாத்யூவும் லூக்கோஸும் அங்கிருந்து கிளம்பிச் சென்றனர்.

கார்த்தியாயினி தூங்கிக்கொண் டிருந்தாள். கேசவபிள்ளை விரைந்து சென்று அவளைத் தட்டியெழுப்பினார். அவளைத் தூக்கியெடுத்து அவர் அந்த அறையிலே நடனமாடினார்.

கார்த்தியாயினிக்குத் தூக்க மயக்கந்தான். ஆயினும் அவள் வதனத் திலே களை சொட்டியது. சிரித்தாள். கேசவபிள்ளைக்கு ஒரே உற்சாகம். அவள் கேட்டாள்:

''இதென்ன கூத்து?''

''நான் முதலமைச்சராகிவிட்டால்?''

''ஓஹோ! இனி அதுவா?''

அவளைக் கட்டில்மீது உட்காரவைத்து விஷயங்களைத் தெளிவுபடுத்திப் பேசினார் கேசவபிள்ளை.

''இனி ஆட்சி நடத்தப் போறவங்க கம்யூனிஸ்டுகள்தான்னு சொன்னீங்கல்லவா?'' என்று கேட்டாள் அவள்.

கேசவபிள்ளை கேட்டார்: ''அதுவும் சரிதான். அப்படியானால் உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்துவிட்டு அவர்களோடு சேர்ந்து தேர்தலுக்கு நிற்கட்டுமா?''

கார்த்தியாயினிக்கு அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். திருவனந்த புரத்திலிருந்து போனால் போதும். விஜயாவின் திருமணமும் நடைபெற வேண்டும்.

அத்தியாயம் 41

ஆசிரமத்திலே ஒரு தாய்

குமரி முனை, பீருமேடு ஆகிய இடங்களிலே நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்குப் பிறகு மாதா ஜோதிர்மயீ தேவியிடம் பெரிய மாறுதல் காணப்பட்டது. அவள் அநேகமாகத் துறவறத்தை விட்டுவிட்ட மாதிரிதான். பிரார்த்தனையிலேகூடப் பங்கெடுத்துக்கொள்வதில்லை. பிரபாவதி தேவியின் ஆட்சியில், ஆசிரமத்தில் அண்டியிருந்த அநாதைப் பெண்கள் ஒவ்வொருவராக அங்கிருந்து சென்றுவிட்டனர். ஜோதிர்மயீ அதற்குக் கண்டனம் தெரிவிக்கவில்லை. அநாதை மந்திரத்தைப் பற்றிய நினைவுகூட இப்போது அவளுக்கு இல்லைபோல் தோன்றியது. அதைப்பற்றி யாரிடமும் சொல்வதுகூட இல்லை. அவள் ஆசிரமத்திலுள்ள பெண் துறவிகளிடம் எந்தவிதமான உறவுமின்றித் தனிமைப்பட்ட முறையிலே வாழ்ந்து வந்தாள்.

பீருமேடு நிகழ்ச்சி நடந்து ஒரு மாதமாகிவிட்டது. அவளிடம் கர்ப்பத்தின் அறிகுறிகள் தென்படத் தொடங்கின. வாந்தியெடுப்பது, அடிக்கடி உமிழ்வது! இவை எல்லாம் எதனால் உண்டாகிறது என்று அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் சாவித்திரியின் கண்களை மறைக்க முடியவில்லை. மாதாஜி மெலிந்து வருகிறாளே! அவளுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. ஒரு தாய் தன் மகளிடம் கேட்பதுபோல் சாவித்திரி மாதாஜியிடம் கேட்டாள்: ''என்னம்மா இது? வாந்தி எடுக்குதே.''

மாதாஜி தவறு இழைத்தவள்போல் பதில் அளித்தாள்: ''ஒண்ணுமில்லே.''

வாந்தியெடுப்பது போன்ற நிகழ்ச்சிகள் மீண்டும் நடைபெறுவதைக் கண்ட சாவித்திரி சொன்னாள்: ''இதிலே ஒண்ணுமில்லாமல் இல்லே. விஷயம் என்னன்னு சொல்லுங்கம்மா!''

ஜோதிர்மயீ தேவி சற்றுத் தயக்கத்துடன் கூறினாள்: ''ஒண்ணுமில்லேன்னு சொல்லலியா?''

சாவித்திரி வற்புறுத்திக் கேட்டுக்கொண்டிருந்தாள். ஜோதிர்மயீ தேவிக்கு இறுதியில் சொல்லவேண்டியதாயிற்று. குமரிமுனை, பீருமேடு சம்பவங்களைப்பற்றி அவள் விரிவாகச் சொன்னாள். சாவித்திரிக்குப் பயமாகிவிட்டது. அவள் திகைப்புடன் கேட்டாள்: ''இனி என்ன செய்யறதம்மா?''

சாவித்திரி நினைப்பதுபோல் அதை அவ்வளவு பெரிய காரியமாக மாதாஜி கருதவில்லை. அவள் மறுகேள்வி கேட்டாள்:

''ஊம்? என்ன செய்யணும்ங்கிறே?''

''இது ஆசிரமம் அல்லவா? நீங்க இதுக்கு முக்கியஸ்தரா இருந்திருக் கிறீங்க. அதைப்பற்றி நெனைச்சுப் பாருங்க.''

உலக அநுபவமுள்ள ஒரு பெண்ணின் குணதோஷ விமர்சனம் இது. ஆனால், எவ்வளவு முயன்றும், ஆசிரமத்திலே நடக்கக்கூடாத தவறு நடந்துவிட்டது என்பதை அவளுக்குப் புரியவைக்கச் சாவித்திரியால் முடியவில்லை. ஒரு சமயத்தில் மாதாஜி இவ்வாறு சொன்னாள்: ''பெண்க ளானால் கருத் தரிப்பார்கள், குழந்தைகளைப் பெற்றெடுப்பார்கள்.''

இதற்குச் சாவித்திரியால் என்ன பதில் அளிக்க முடியும்?

ஆனால் ஜோதிர்மயீ தேவி ஒரு விஷயத்தைப்பற்றி அறிய விரும்பினாள்: ''நாற்பத்தாறுவது வயதிலே ஒரு பெண் கருத் தரிப்பாளா, சாவித்திரி?'

அவளுக்கு அதைப்பற்றித் தெரியாது. சொன்னாள்: ''தரிக்கலாம் போலிருக்கு. தலைவிதி அப்படியிருக்குதுன்னா அதுவும் நடக்கும். விதியை வெல்ல முடியாதுங்க.''

பின் பலமுறை மாதாஜி அதே கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண் டிருந்தாள்: ''நாற்பத்தாறுவது வயதிலே ஒரு பெண் கருத் தரிப்பாளா?''

அந்தப் பெண் துறவிக்கு அந்தச் சந்தேகம் மட்டுந்தான் இருந்தது.

ஒரு நாள் பொறுமை இழந்தவள்போல் சாவித்திரி கேட்டாள்:

''நாற்பத்தாறுவது வயதிலே அப்படி வராதுன்னு நெனைச்சுத்தான் அப்படிப் பண்ணினீங்களா?''

''அப்படியொன்றும் நான் நினைக்கவில்லை சாவித்திரி. நான் ஒன்றுமே நினைக்கவில்லை.''

சாவித்திரி எதையோ முணுமுணுத்தாள். என்னவென்று கேட்டாள் ஜோதிர்மயீ. ஒன்றுமில்லை என்றாள் சாவித்திரி. உண்மையிலேயே அவளுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டுவிட்டதுபோல் தோன்றியது.

அந்த இரு பெண்களுடைய மனப்பாங்குகளும் வெவ்வேறானவை. அதை இருவரும் புரிந்துகொள்ளவில்லை. நாற்பத்தாறுவது வயதிலே ஒரு பெண் கருத் தரிப்பாளா என்று மாதாஜி ஏன் விசாரிக்கிறாள் என் பதைச் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை சாவித்திரி. மாதா ஜோதிர்மயீ தேவி ஒரு பெண். பெண் தாயாகவேண்டும். தாயாகிவிட அவளுடைய தனங்கள் துடிதுடிக்கும். இதயம் கிளர்ந்தெழும். அது ஒரு வெறி. பெண்ணைப் படைத்ததே தாயாவதற்குத்தான். பிரசவ வேதனை தான் அவளுக்குப் பேரானந்தம். ஒரு தாயாக முடியாதென்று எண்ணிக் கொண்டிருந்தபோது, வாந்தி எடுப்பதும் அடிக்கடி உமிழ்வதும் கர்ப்பத்தின் அறிகுறிகள் என்று சொன்னபோது, நாற்பத்தாறுவது வயதிலே அது நடக்குமா என்று விசாரித்தது அந்த ஆவலினால் தூண்டப்பட்டுத்தான். அந்தப் பெண் துறவிக்கு அது ஊர்ஜிதமாக வேண்டும். அந்தகைய ஊர்ஜிதமானது அவளைப் பொறுத்தவரையில் பிறவிப் பயனை அடைந்தது போன்றது.

நேர்மாறுகத்தான் சாவித்திரி நினைத்தாள். எந்த அபாயமும் ஏற்படாதெனக் கருதி விலகிய அந்தக் கனியை இந்தப் பெண் துறவி சாப்பிட்டாள். இப்போது அது ஓர் உண்மை அல்ல என்பதை ஊர்ஜிதம் செய்வதற்காகத்தான் கேட்கிறாள், ''நாற்பத்தாறுவது வயதிலே கருத் தரிப்பாளா?'' என்று. கருத் தரிக்கமாட்டாள் என்ற பதிலைப் பெறவே மாதாஜி விரும்புகிறாள் என்றே சாவித்திரி சிந்தித்தாள். பிறவிப் பயனை அடைய ஜோதிர்மயீ தேவி விரும்புகிறாள் என்று சாவித்திரி கருதவில்லை.

• • •

சில நாட்கள் சென்றன. இத்தகைய நிலைமையிலிருந்து தப்பித்துக் கொள்ள ஒரே ஒரு வழிதான் சாவித்திரிக்குத் தென்பட்டது. கேசவ பிள்ளைக்குத் தகவல் கொடுப்பது. இவ்வாறுக அந்தக் கடிதங்களை ஜோதிர்மயீ தேவி அவருக்கு அனுப்பி வைத்தாள்.

தினசரி எழுதிக்கொண் டிருந்தாள். ஆனால் அந்த மனிதர் பதில் எழுதவில்லை. அது ஆடவர்களின் சுபாவந்தான் என்பதைச் சாவித்திரி நன்கு அறிவாள். தெரிந்துகொண்டதாகக்கூடக் காட்டிக்கொள்ளமாட்டார்கள். அதற்கு முரணாக நடந்துவிட்டால்தானே ஆச்சரியப்பட வேண்டும். ஆனால், ஜோதிர்மயீ தேவிக்கு அத்தகைய ஆவலே இல்லை. அதுமட்டும் அல்ல. பிராணநாதன் தனக்கு அளித்துள்ள பரமானந்த சுகத்தைப்பற்றிப் பாடுகிறாள். அந்தப் பாட்டு இன்பம் தருகிறது; அது அருமையாயிருக்கிறது. ஆயினும் பிராணநாதன் அளித்தது பேரானந்தம் தான் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சிந்திக்க முடியுமா? அந்தப் பிராணநாதனைச் சபிக்கத்தானே செய்வார்கள்?

சாவித்திரி கேட்டாள்: ''ஆசிரமத்திலுள்ள மாதாவுக்குக் கர்ப்பம்னு மற்றவங்களுக்குத் தெரிஞ்சிட்டா, அது இந்த ஆசிரமத்துக்கும், இந்த நாட்டுக்கும், உங்களுக்கும் அவமானந்தானே?''

''ஓ! ஆசிரமம்! தொலைஞ்சு போகட்டும். யாருக்குத்தான் நஷ்டம்?''

சாவித்திரி மௌனியாகிவிட்டாள். மாதாஜி தொடர்ந்து பேசினாள்: ''சாவித்திரீ, என்னை எல்லாருக்கும் தெரியும். என் வரலாற்றையும் தெரியும். நான் தவறி நடந்தவள். நல்லவள் என்று பெருமை கொள்ளவில்லை சாவித்திரீ!''

''அப்புறம் ஏம்மா இந்த வேஷம் போட்டீங்க?''

முற்றும் ஜோதிர்மயீ தேவியின் தயவிலே வாழ்ந்து வருபவள்தான் சாவித்திரி. அப்படிப்பட்ட அவளுடைய அந்தக் கேள்வி சிறிது எல்லை மீறியதாகத்தான் இருந்தது. ஆனால் அந்தக் குரலில் தொனித்த ஏளனத்தையும் அதிகப்பிரசங்கித்தனத்தையும் ஜோதிர்மயீ கவனித்ததாகத் தெரியவில்லை. அவள் அந்தக் கேள்விக்கு விடையளித்தாள்: ''அந்தப் பாதையிலிருந்து சற்றுத் திரும்பிப் போகலாம் என்றெண்ணி

னேன். திரும்பிப் போகவும் செய்தேன் . . . நான் கருத் தரித்திருப்பது உண்மையென்றுல், அது அவரிடமிருந்துதான். அதிலே ஓர் ஆத்ம திருப்தி எனக்கு உண்டு.''

''இந்த மாதிரி அவர் நினைக்கலியே அம்மா?'' என்றுள் சாவித்திரி.

ஆனுல் ஜோதிர்மயீ அந்த நிலைமைக்குத் தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டு விட்டதாகத் தோன்றியது.

''அது என் தலைவிதி அல்லது என் கர்வத்தின் விளைப்பயன். நான் அதை அநுபவித்தேயாகவேண்டும். இளமைப் பருவத்திலே அறநெறி யற்ற ஒரு வாழ்க்கைதான் நான் வாழ்ந்தேன்.''

ஒரு நெடுமூச்சுடன் அவள் பேச்சை முடித்துக்கொண்டாள்:

''வாழ்க்கையையே வீசியெறிந்து நடந்து வந்தவள் நான். எந்தக் குறிக்கோளும் இல்லாத வாழ்க்கை.''

சிறிது நேரம் வரையில் அவர்கள் பேசாமல் இருந்தனர். ஜோதிர்மயீ தேவி தனது சென்ற கால வாழ்க்கையைப்பற்றிச் சிந்தித்துக்கொண் டிருந் தாளா? சாவித்திரிகூடத் தன் சென்ற காலத்தைப்பற்றிச் சிந்தித்துக் கொண் டிருந்திருக்கவேண்டும்.

அந்தச் சிந்தனையின் விளைவாகவோ என்னவோ, சாவித்திரி ஒரு யோசனையைக் கூறினுள்.

''நான் ஒண்ணு சொல்லட்டுமாம்மா? அது நல்லாயிருக்கும்னு எனக்குத் தோணுது. இதுவரைக்கும் நீங்க அவருக்குக் கடிதம் எழுதிக் கிட்டிருந்தீங்க. இனி ஒரு தடவை போய்ப் பாருங்க. கேளுங்க, இப்படி யெல்லாமாயிட்டது, இனி என்ன செய்யணும்னு! அவரே அதுக்கு ஒரு வழி கண்டு பிடிக்கட்டும்.''

அதற்கு விடையளிக்க ஜோதிர்மயிக்குக் கொஞ்சங்கூட யோசிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

அவள் கேட்டாள்: ''என்ன வழி?''

பதில் இல்லாது போய்விட்டதுபோல் சாவித்திரி தடுமாறியவாறு கூறினுள்: ''இல்லே . . . இப்படி . . . இதுக்குக் காரணமான ஆண் பிள்ளையை ஒரு முறை கேட்டுப் பார்க்க வேண்டாமா?''

ஒரு கணப்பொழுதுக்குப் பிறகு அவள் மேலும் சொன்னுள்: ''ஒண்ணு மில்லாட்டிப் போனுக்கூட இந்த அவமானமாவது இல்லாமே போயிடும் இல்லியா?''

கவலை தோய்ந்த புன்னகையுடன் ஜோதிர்மயீ தேவி கூறினுள்: ''அந்தச் சந்தர்ப்பமெல்லாம் முடிந்துவிட்டது சாவித்திரீ. நான் உன் னிடம் அதைப்பற்றிச் சொல்லவில்லையா? இனிமேல் பார்க்கக்கூடா தென்றும், எங்களுக்குள் எந்தவிதமான உறவும் இல்லையென்றும் அவர் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.''

சாவித்திரி கேட்டாள்: ''இப்படி ஓர் அபாயம் வந்திட்டதுன்னு தெரிஞ்சுக்கறதுக்கு முன்னுலேதானே அப்படிச் சொன்னுங்க? இப்போ இது இப்படியாயிட்டது. இதுக்கு ஏதாவதொரு வழியை அவர் கண்டு

பிடிச்சுச் சொல்ல வேணுமா? ஏமாற்றினதுக்கப்புறம் ஒட்டுமில்லே உறவு மில்லேன்னு சும்மா சொல்லிட்டாப் போதுமா?''

ஜோதிர்மயீ தேவி கேட்டாள்: ''அவர் என்ன செய்யவேண்டுமென்று தான் நீ சொல்கிறாய்?''

சாவித்திரிக்கு அதைப்பற்றி யோசனை செய்து சொல்லவேண்டிய அவசியமே இல்லை: ''அவர் ஏற்றுக்கொள்ளணும். அதுதான் செய்யணும். அப்புறம் என்ன?''

அது முடியாத காரியமென்ற முறையில் ஜோதிர்மயீ தேவி தலையாட்டினாள்.

''நான் இனிமேல் ஒருகாலும் அவர் மனநிம்மதியைக் கெடுக்க மாட்டேன்.''

''அப்புறம்?''

''அப்புறம் என்ன? நான் கருத் தரித்திருப்பது சத்தியமென்றால், ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பேன். அப்போது என் பிறவி பயனடைந்தது என்று எண்ணுவேன். அந்தக் குழந்தையைச் செல்லமாக வளர்ப்பேன். அவ்வளவுதான். இந்த வீடு என்னுடையது. நான் இங்கேயே தங்கியிருப்பேன்.''

ஜோதிர்மயீயின் நிலையைப் புரிந்துகொண்டாள் சாவித்திரி. ஆனால் அவள் மனத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

* * *

''பிராணநாதன் எனக்களித்த பேரானந்த சுகத்தை எளிதிலே சொல்லமுடியுமா, பெண்ணே சொல்லமுடியுமா எளிதில்? . . .''

ஜோதிர்மயீ தேவி பாடினாள். உச்சஸ்தாயியிலே அல்ல பாடுவது. ஆயினும் ஆசிரம மாதாவான பிரபாவதி தேவியும் ஏனையோரும் அந்தப் பாடலைக் கேட்டனர்.

சாவித்திரி அந்தப் பாடலிலே லயித்துப் போய்விட்டாள். அவள் ஒரு கற்சிலைபோல் அமர்ந்துவிட்டாள். நினைவுகளிலே மனத்தைப் பறி கொடுத்தவாறு ஜோதிர்மயீ தேவி பாடிக்கொண்டிருந்தாள். அந்தப் பாடலிலே அடங்கியிருந்த இன்ப சுகானுபவங்களைப் பருகியவள் அல்லவா, அவள்?

அந்தப் பாடலின் சரணங்களைப் பாடி முடித்தபோது சாவித்திரி கேட்டாள்: ''அம்மா, இந்தப் பாட்டின் பொருள் என்னம்மா?''

ஜோதிர்மயீ தேவி பொருள்படும்படியாக ஒருமுறை சிரித்தாள்.

அவள் கேட்டாள்: ''ஊம்? என்ன, பாட்டைக் கேட்டபிறகு இதற்கு ஏதாவது பொருள் இருக்கிறதென்று தோன்றுகிறதா?''

சிரித்தவாறு சாவித்திரி, ''என்னமோ பொருள் இருப்பதாகத்தான் தோணுது. எல்லாப் பொருளும் புரிஞ்சுக்க முடியலே'' என்றாள்.

அதன் பொருளை விளக்கிக் கூற ஜோதிர்மயீதேவிக்கு நேரமும் இல்லை, பொறுமையும் இல்லை. அந்தப் பாடலால் ஏற்பட்ட உணர்ச்சியிலே அவள் மிதந்தாள். இசையின் இடையறாத மெல்லிழைகளை அறுத்து அறுத்துப் பொருள் விளக்கம் கூற அவள் மனம் இசையவில்லை. அவள் சொன்னாள்: ''நீ பாட்டைக் கேள்! பொருளைப்பற்றி நினைக்க வேண்டாம். சந்தர்ப்பம் வரும்போது சொல்லுகிறேன்.''

ஜோதிர்மயீ தேவி திரும்பவும் பாடத் தொடங்கினாள். சாவித்திரி கண்களைப் பாதியளவிலே மூடியவாறு பாட்டிலே லயித்திருந்தாள்.

நித்தியானந்தமயீயும் தேஜஸ்வரூபிணியும் ஜன்னலோரமாக மறைந்து நின்று அந்தக் காட்சியைப் பார்த்தனர். அறைக்குள்ளே அந்த இரண்டு பெண்கள் இசையிலே லயித்திருக்கிற அந்தக் காட்சியை அவர்கள் கண்டனர். காதுகளைப் பொத்தியவாறு பரஸ்பரம் நோக்கினர். ஆசிரமமாதாவான பிரபாவதி தேவிக்குத் தெரிவிக்கவோ என்னவோ, அவர்கள் அங்கிருந்து விரைந்து சென்றனர்.

பாட்டு முடிந்தது. சாவித்திரி அப்படியே அதே நிலையில் அமர்ந்திருந்தாள். ஜோதிர்மயீ தேவி அவளை அந்த ஆனந்த நிலையிலிருந்து உலுக்கி எழுப்பினாள். ஜோதிர்மயீ கேட்டாள்: ''இதெல்லாம் உனக்கு அநுபவமானது உண்டா?''

''இல்லேம்மா. எனக்குப் பூராவும் புரியல்லே.'' ஒரு விநாடி மெய்ம் மறந்த நிலையில் இருந்த சாவித்திரி கேட்டாள்: ''அம்மாவுக்கு?''

"நான் உன்னிடம் சொல்லியிருக்கிறேனே . . . ஒரு முறை . . . அல்ல . . . இரு முறை.''

''அதுவா இது?'' என்றாள் சாவித்திரி.

''ஆம், அதுவேதான்!'' என்று ஜோதிர்மயீ தலையசைத்தாள்.

பாவச் செயல் கண்டு அங்கிருந்து ஓடிச் சென்ற நித்தியானந்தமயீயும் தேஜஸ்வரூபிணியும் இன்னொரிடத்திலே சென்று நின்றவாறு ஆலோசனை நடத்தினர். தோத்திரங்கள் பாடவேண்டிய இடம் இது. இங்கே பாடியது என்ன? தேஜஸ்வரூபிணி சொன்னாள்:

''என்னாலே அதைக் கேட்கமுடியவில்லை. காது வெடித்துவிடும் போலிருந்தது.''

நித்தியானந்தமயீ கூறினாள்: ''அதைக் கேட்டு நிற்பதே பாவம்.''

''பாவம் மட்டுமா?''

''மனங்கூட இளகத் தொடங்கிடும். அப்படிப்பட்ட இடத்திலிருந்து தூர விலகி நிக்கணும்.''

தேஜஸ்வரூபிணி ஒரு விஷயத்தை ஒளிவு மறைவின்றி ஒப்புக் கொண்டாள்:

''உண்மையைச் சொல்லுகிறேனே, அதைக் கேட்டுக்கொண்டு நின்ற போது என்னுடைய உடம்பு கிறுகிறுத்துப் போச்சு. எனக்கு என்னமோ போல இருந்தது. அதனால்தான் நான் காதுகளைப் பொத்திக் கொண்டேன்.''

''இருந்தாலும், இப்போதுகூட அது என் காதுகளிலே ரீங்கரிப்பது போல் தோன்றுகிறது'' என்றுள் நித்தியானந்தமயீ.

தேஜஸ்வரூபிணி சொன்னுள்: ''நாம் இப்போதே இதை மாதாவிடம் சொன்னுல் என்ன? இன்று பாட்டு மட்டுந்தான் நடந்தது. நாளை இவர்கள் அறைக்குள்ளே ஆண்களை வரவேற்கமாட்டார்கள் என்று எப்படிச் சொல்லமுடியும்?''

நித்தியானந்தமயீ அதற்குப் பதிலளிக்கவில்லை. ஆனுல், அவளுக்கு ஒரு கருத்து இருந்தது. ஜோதிர்மயீ தேவி துறவறத்தையெல்லாம் காற்றிலே பறக்கவிட்டுப் பல நாட்களாகிவிட்டன. ஆனந்தமயீ இதைத் தான் சொன்னுள்: ''இனிமேல் இங்கே பல காரியங்கள் நடைபெறலாம்.''

அந்தப் பக்கத்து அறைக்குள்ளே ஜோதிர்மயீ தேவி சாவித்திரிக்கு அந்தப் பாட்டின் பொருளைச் சொல்லிக் கொடுத்துக்கொண் டிருந்தாள். சாவித்திரி அதைக் கவனமாகக் கேட்டுக்கொண் டிருந்தாள். சொல்லி முடித்தபோது அவள் தன் கருத்தைத் தெரிவித்தாள்: ''இருந்தாக்கூட இது கொஞ்சம் ஜாஸ்திதாம்மா.''

அந்தப் பாட்டின் பின்னணியாக ஒரு கதை இருந்தது. ஜோதிர் மயீ தேவி அந்தக் கதையை விளக்கிக் கூறினுள்.

''பல வருடங்களுக்கு முன்னுல் இங்கே ஒரு மகாராஜா இருந்தார். அவருக்கும் தரும பத்தினிக்குமிடையில் பிணக்கு ஏற்பட்டது. பரஸ்பரம் சந்திக்காமல் வசித்து வந்தனர். அந்தத் தருமபத்தினியின் சகோதரர் ஒரு கவிஞர். அவர் சகோதரிக்கு எழுதிக் கொடுத்த பாட்டு இது.''

சாவித்திரியால் நம்பமுடியவில்லை. அவள் திகைத்துப் போனுள்.

''சகோதரன் சகோதரிக்கு இந்த மாதிரியான காதல் பாட்டு எழுதிக் கொடுப்பதா?''

''ஆம். அப்படியேதான். அப்புறம் அந்த ராணியம்மா வீணை வாசிப் பதிலும் பாட்டுப் பாடுவதிலும் மிகவும் கெட்டிக்காரியாக இருந்தாள். ஒரு நாள் மாலைப் பொழுதிலே, சங்கு முகத்திலுள்ள சிங்காரமாளிகை யில் அமர்ந்து வீணை வாசித்தவாறு இந்தப் பாட்டைப் பாடினுள் ராணி யம்மா. ராஜா கடற்கரையிலே காற்று வாங்கிக்கொண் டிருந்தார். அந்தப் பாட்டைக் கேட்டு அரசன் பிணக்கையும் வழக்கையும் மறந்து அந்த மாளிகைக்கு வந்து விட்டாராம்!''

நடைபெறக்கூடிய கதைதான் இது. சாவித்திரிக்கு அந்த விஷயத்தில் சந்தேகம் இல்லை. அந்தக் கீதம் ஒரு வசீகர மந்திரமேதான். ஆணைப் பிறந்தவனை இருந்தால், இந்தக் கீதத்தைக் கேட்டால், அனைத்துப் பிணக்குகளையும் மறந்து ஓடோடிச் செல்வான் என்ற விஷயத்திலேகூட அவளுக்குச் சந்தேகம் இல்லை. அவள் சொன்னுள்: ''ஆனுக்கூட அம்மா இந்தப் பாட்டைப் பாடறதை எஜமானர் ஒருமுறை கேட்டிருந் தால் . . .''

சிறிது நேரம் அவர்கள் மௌனிகளாக இருந்தனர். ஒருவேளை, இருவரும் அதைப் பற்றி யோசித்துக் கொண் டிருந்திருக்கவேண்டும்.

ஆனால், சாவித்திரி அந்த யோசனையிலிருந்து மற்றொன்றுக்குச் சென்று விட்டாள். அவள் சொன்னாள்:

''எஜமானர் இப்போதாவது வந்திருந்தார்னு, அம்மா . . .'' சாவித்திரி ஒரு விநாடி நேரம் நிறுத்திவிட்டுக் கூறினாள்:

''எத்தனை கடிதங்கள் அனுப்பியாச்சு. ஒரு கடிதத்துக்காவது பதில் வரலையே.''

பதில் கிடைக்கவேண்டுமென்பதற்காக, தான் எழுதவில்லை என ஜோதிர்மயீ கூறினாள். அவருக்கு அந்தப் பெரிய காரியத்தைத் தெரிவிக்கவேதான் எழுதினாளாம். சாவித்திரி, நூறாவது தடவையாகத் தன்னுடைய அதே கேள்வியை அப்போதுகூடக் கேட்டுவிட்டாள்.

''அம்மா, நீங்க எப்பவுமே இதைத்தான் சொல்லிக்கிட்டிருக்கிறீங்க. இதைக் கேட்டு என்னாலே ஒண்ணுமே புரிஞ்சுக்க முடியல்லே. எஜமானர் இதைத் தெரிஞ்சுண்டதனாலே மட்டும் என்ன பிரயோஜனம்?''

வழக்கமான பதிலைத்தான் ஜோதிர்மயீ தேவி சொன்னாள்: ''அவர் இதை அறிந்துகொண்டால் போதும்.''

''இருந்தாக்கூடப் பரவாயில்லே. நீங்க இதை நேரடியா எழுதியிருக்கிறீங்களாம்மா? அதுவும் இல்லே.''

ஜோதிர்மயீ புன்னகையுடன் கேட்டாள்: ''இது உண்மையானதுதான் என்று எப்படித் தெரிந்துகொள்ளமுடியும்?''

''இன்னுமா உங்களுக்குச் சந்தேகம்? இது எனக்கு நல்லாத் தெரியும். எல்லா அறிகுறிகளும் தெள்ளத் தெளிவாயிருக்குதம்மா.''

ஜோதிர்மயீ தேவி தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் காரணத்தைத் தெளிவுபடுத்தினாள்:

''நாற்பத்தாறுவது வயதிலே கருத் தரிப்பார்களா? இப்படிச் சம்பவிக்குமா?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. இது அதேதான்.'' சாவித்திரி தொடர்ந்து கேட்டாள்: ''நீங்க போயி அவரைப் பார்த்து விஷயத்தை நேரடியாச் சொன்னால் என்ன?'' ஒரு விநாடிக்குப் பிறகு அவள் தன் யோசனையைக் கூறினாள்: ''அவரே பார்த்து இதுக்கு ஒரு வழி கண்டு பிடிக்கட்டும். உங்களுக்கு இது என்னமோ வேடிக்கையும் விளையாட்டு மாத்தான் இருக்குது.''

சாவித்திரி சொல்லி முடிக்கவில்லை.

''நாதியற்ற எனக்குக்கூட இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டப்போ வயிறு பகீர்னு எரிஞ்சு போச்சம்மா!''

ஜோதிர்மயிக்குச் சிறிதும் சஞ்சலமில்லை. சாவித்திரி சொல்வதுபோல் இந்த விஷயத்தில் இவ்வளவு தூரம் பதற்றமடையவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? ஒருசிறு புன்னகை அவள் வதனத்திலே தோன்றியது. அந்தக் குணதோஷ விமர்சனத்தை அவள் எதிர்க்கவில்லை. அசாதாரணமான ஒரு நிலைமை அங்கே சூழ்ந்திருந்தது.

நீண்ட நாட்கள் ஆவதற்குமுன் ஆசிரமவாசிகளும் இந்த விஷயத்தை அறிந்துகொண்டனர். அந்தப் பெண்கள் பேசுவதை மறைந்து நின்று கேட்டார்களோ அல்லது ஜோதிர்மயீ தேவியிடம் ஏற்பட்ட மாறுதல்களைக் கண்டறிந்தார்களோ என்னமோ? நித்தியானந்தமயீக்கும் தேஜஸ்வரூபிணிக்கும் பலமான சந்தேகம் ஏற்பட்டது. அவர்களைப் பொறுத்தவரையில் அது ஒரு பேரிடியாகத்தான் இருந்தது.

அதன் பொருள் என்ன? ஆசிரமம் தகர்ந்துவிடும் என்பதுதான். இனி மேல் இங்கே ஜனங்கள் வருவார்களா? ஒரு பெண் நடத்தை கெட்டுப் போனதை வைத்துக்கொண்டு, மக்கள் ஆசிரமத்தை விபச்சார விடுதியாகச் சித்திரிப்பார்கள். எந்தவிதமான தவறையும் செய்யாத நித்தியானந்தமயீயையும் தேஜஸ்வரூபிணியையும் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பார்கள். அவர்களுக்கு வேறு புகலிடம் ஏது? ஜனங்கள் முகத்திலே எப்படி விழிப்பார்கள்? பிரபாவதிதேவிகூடத் தன் சொத்துக்களையெல்லாம் ஆசிரமத்திலே முதலீடு செய்திருக்கிறாள். வாழ்க்கைப் போராட்டத்தில் தோல்வியுற்றவர்களுக்குப் பாதுகாப்பான புகலிடம் என்று கருதி இந்த ஆசிரமத்தை அமைத்தனர். இப்போது இந்த மூதேவியால் அதெல்லாம் தகர்ந்து படுசூரணமாக்கப் பட்டுவிட்டது. அந்தப் பெண் துறவிகளைப் பொறுத்தவரையில் இது வாழ்க்கைப் பிரச்னைதான்.

இன்னொரு விஷயங்கூட உண்டு. விமலாம்மா மலபாரிலிருந்து உமாதேவியை வரவழைத்து இருந்தாள். உமாதேவி சதனம் என்ற ஓர் ஆசிரமங்கூடத் துவக்கப்பட்டிருந்தது. உமாதேவி ஆந்திர தேசத்தவள். வாலிபப் பருவம், அழகி, பொன்னிற மேனி உடையவள். காலைத் தொட்டுத் தழுவுகிற கருங்கூந்தல்; கரிய விழிகள். அவளுடைய புன்னகைக்குத் தெய்விக வசியசக்தி இருந்து வருகிறதாம். திருவனந்தபுர நகர மாந்தர் எல்லாருமே உமாதேவி சதனத்தை நோக்கியே இப்போது செல்கின்றனர்.

எல்லாரும் பரஸ்பரம் குறை கூறிப் பேசிக்கொண்டனர். இத்தகைய நிலைமை ஏற்பட்டதற்குப் பிரபாவதிதேவிதான் பொறுப்பு என்பதே தேஜஸ்வரூபிணியின் கருத்து. அந்தப் பிச்சைக்காரப் பெண்களை ஜோதிர்மயீ தேவி வரவழைத்தாள் என்றாலும், சில நாட்களுக்குப் பிறகு அவர்கள் வந்தபடியே போயிருப்பார்கள். பிரபாவதிதேவிக்கு ஆசிரம மாதாவாக வேண்டியிருந்தது. அவள் பெரிய உத்தியோகம் பார்த்தவள். நிறையப் பணத்தைக் கொண்டு வந்திருந்தாள். அவ்வாறுதான் அவள் ஜோதிர்மயீ தேவியைத் தோற்கடித்தாள். ஜோதிர்மயீ பழைய பாதைக்குத் திரும்பிச் சென்றாள். இதுதான் தேஜஸ்வரூபிணியின் வாதம்.

நித்தியானந்தமயீயின் இப்போதைய கருத்து வேறு. ஜோதிர்மயீ தேவி ஆசிரம மாதாவாக இருந்திருந்தால்கூட இதெல்லாம் நிகழ்ந்திருக்கும். அவள் அடிப்படையிலேயே அத்தகைய குணங்களைக் கொண்டவள்.

ஆனால், ஆனந்தமயீக்குக்கூட எதிர்காலத்தைப்பற்றிய சந்தேகம் இருந்து வந்தது. இந்த இரகசியம் பகிரங்கமாகிவிட்டால் எப்படி வாழ்வது?

மூன்று பெண் துறவிகள் சேர்ந்து ஆலோசனை நடத்தினார்கள். விஷயத்தின் முக்கியத்துவத்தை அனைவரும் புரிந்துகொண்டிருந்தனர். மிகவும் பாதுகாப்பான இத்தகைய ஓர் அபய ஆசிரமம் இந்த நிலைக்குள்ளாகி விடுமென்று யாருமே நினைக்கவில்லை. யாருமே பரஸ்பரம் குறை கூறிப் பேசவில்லை. ஆயினும் அந்த மூவரும் ஒரு விஷயத்தை வலியுறுத்திக் கூறினர். ஓர் அபய மையத்தைத் தேடி வருகிறபோதுகூட வருகிறவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைப் பார்த்திருக்கவேண்டும். அப்படிப் பார்க்க முடிந்திருந்தால் ஜோதிர்மயீயின் வாழ்க்கையை ஆசிரம வாழ்க்கையுடன் பிணைத்திருக்க மாட்டார்கள். பிரபாவதிதேவி சொன்னாள்: ''என்ன செய்வது? நமது தலைவிதி. ஜோதிர்மயீயுடைய பழைய சுபாவங்கள் எல்லாம் மாறிவிட்டதென்றே கருதியிருந்தேன். வயோதிகப் பருவத்திலே அந்தக் குருநாகம் தலை தூக்குமென்று அறிந்திருக்கவில்லை.''

அந்தக் கருத்தை எல்லாரும் ஆமோதித்தனர். தேஜஸ்வரூபிணி கேட்டாள்: ''இதுக்கு ஏதாவதொரு மாற்று வழியைக் கண்டுபிடிக்கணுமே. பழைய முட்டாள்தனத்தைப்பற்றி இப்போது சிந்திப்பதனால் என்ன பயன்? இந்த ஆசிரமத்துக்கு இப்போ ஜனங்கள் வராமல் இருக்கிறார்களே?''

ஆனந்தமயீ கூறினாள்: ''அம்மா, நீங்களே ஒரு முறை கேட்டுப் பாருங்கள்!''

பிரபாவதி ஒப்புக்கொண்டாள்.

''கேட்கிறேன். கேட்காமல் இருக்க முடியுமா? அது மட்டுமின்றி, இந்த ஆசிரமத்திலிருந்து வெளியேறும்படியும் சொல்ல வேண்டும். ஆசிரம வாழ்க்கைக்குப் பொருந்தாத வகையில் நடந்துகொண்டதற்காக ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கவேண்டும்.''

தேஜஸ்வரூபிணி கூறினாள்: ''வெளியேறிடணும்னு சொன்னப் போயிடுவாளா? இது அவளோட வீடுதானே? அவள் இதை ஆசிரமத்துக்காகத் தந்தாள் என்பதற்காக இங்கிருந்து வெளியேறச் சொல்ல முடியுமா?''

அங்ஙனம் சொல்வதாகப் பிரபாவதிதேவி ஒப்புக்கொண்டாள். ஆனால், ஜோதிர்மயீ வெளியேறிவிடமாட்டாள். அப்போது கேஸ், வழக்கு எல்லாம் ஏற்படும். இலை முள்மீது விழுந்தாலும், முள் இலைமீது விழுந்தாலும் இலைக்குத்தான் ஆபத்து.

''தகராறு ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும் ஆசிரமத்தின் நல்ல பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுவிட்டது.''

தேஜஸ்வரூபிணி ஒரு யோசனை கூறினாள்: ''நாம் எல்லாரும் சேர்ந்து அவளுடைய காலைப் பிடித்துக் கெஞ்சிக் கேட்போம்: 'இங்கிருந்து போக வேண்டும், நம்மை நாசப்படுகுழியில் தள்ளிவிடக் கூடாது'என்று.''

பிரபாவதி சொன்னாள்: ''அவள் அவ்வளவு பெரிய மனம் படைத்தவள் அல்ல. எப்படிக் கெஞ்சினாலும் வெளியேறி விடமாட்டாள்.''

ஒரு விநாடிக்குப் பிறகு அவள் மேலும் கூறினாள்: ''அந்தப் பிச்சைக்காரப் பெண்களை இழுத்துக்கொண்டு வந்தபோதே நான் நினைத்ததுதான், ஏதோ பெரிய கோளாறு ஏற்படப் போகிறதென்று. அன்றைய தினமே இந்த ஆசிரமத்தின் புனிதத் தன்மை போய்விட்டது.''

அன்றைய தினத்திலிருந்து ஆசிரமத்தின் புனிதத்தன்மை போய்விட்டது என்பதை எல்லாரும் ஏற்றுக்கொண்டனர்.

நீண்ட நேரம் வரையிலும் அந்தப் பெண் துறவிகள் ஆலோசனை நடத்தினர். எந்த ஒரு முடிவுக்கும் வரவில்லை. ஆனால் அந்த மூவருடைய மனத்திலும் ஒரு கருத்து இருந்து வருவதுபோல் தோன்றியது. அதை வெளியிடத் தயக்கந்தான். அந்த வழிமுறை பலன் அளிக்குமா என்ற சந்தேகமும் உண்டு. ஆயினும் அந்த முறை அவர்கள் மூளையில் உதித்தது. அது அவர்களுடைய பிரத்தியேக குணம்சம் என்று சொல்லமுடியாது. எந்தப் பெண்ணின் பார்வையிலும் முதல் முதலாகத் தோன்றும் பரிகாரந்தான் அது.

ஒரு குடும்பத்தில் கணவனின்றி ஒரு கன்னிப் பெண் கருத்தரித்தாள் என்று வைத்துக்கொள்வோம். அதை மிகப் பெரிய இரகசியமாகக் காப்பாற்றி வைப்பார்கள். அவர்கள் முதலில் யோசிப்பது கடித்த பாம்பைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்து விஷத்தை இறக்கவைக்கிற பரிகாரத்தைத்தான். அது நடக்காது என்றுகிவிட்டால் அப்புறம், குடும்பம், அந்தப் பெண் இருவர் மானத்தையும் காப்பாற்ற யாருக்கும் தெரியாமல் கருவைக் கலைத்துவிடும் முயற்சியில் ஈடுபடுவார்கள்.

பிரபாவதிதேவி குரலை அடக்கியவாறு கூறினாள்: ''அது தவறு, பாவம்! ஆனாலும் என்ன செய்வது?''

ஆனந்தமயீ கேட்டாள்: ''அவள் அதுக்குச் சம்மதிப்பாளா?''

தேஜஸ்வரூபிணி கேட்டாள்: ''ஐயோ! ஆசிரமத்திலேயே? அது எவ்வாறு சாத்தியம்?''

பிரபாவதி சொன்னாள்: ''இல்லாவிட்டால் யாருக்கும் தெரியாமல் மூட்டை முடிச்சுக்களை எடுத்துக்கொண்டு நாமே இங்கிருந்து வெளியேறிவிடுவோமே.''

ஆனந்தமயீக்கு வேறொரு சந்தேகம்:

''நாம் இதைப்பற்றி அவளிடம் சொன்னால், நாம் இப்படிச் சொன்னோமென்று அவள் ஊர் முழுவதிலும் நடந்து பறைசாற்றினால் . . .?''

''அப்படிச் செய்வதாயிருந்தால் செய்துவிட்டுப் போகட்டும். இதுக்கு ஏதாவது செய்தே தீரவேண்டும். நான் அவளிடம் சொல்லத்தான் போகிறேன்'' என்றாள் பிரபாவதிதேவி.

அத்தியாயம் 42

உமாதேவி சதனம்

உமாதேவி சதனம் தன்னியானந்தாசிரமத்தைப் போல் அல்ல. அங்கே ஆராதனைக்குப் பாத்திரமாகிற மூர்த்தி ஆசிரம மாதாவேதான். கண்ணன்—ராதைக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் வேறு கடவுள் சிலை எதுவும் அங்கே இல்லை. உமாதேவி தன் வண்ணச் சித்திரத்துக்கு முன்னால் சப்பணம் கட்டி அமர்ந்துவிடுவாள்; சித்திரத்துக்குப் பூஜை செய்வாள்.

திருவனந்தபுரத்திலுள்ள மேல் வீட்டுக் குடியினர் தங்கியிருக்கிற பகுதியிலே உள்ளது அந்தச் சதனம். ஒரு பெரிய மனையிலே, திறந்த மாடியுள்ள ஓர் இருமாடி வீடு; அத்துடன் சில சிறிய கட்டடங்கள்!

தன்னியானந்த ஆசிரமத்துக்குக் கிடைத்திராத பொது ஜன ஆதரவு அந்தச் சதனத்துக்குக் கிடைத்தது. சந்தேகமே இல்லை. அதற்குக் காரணம் உண்டு. தன்னியானந்தாசிரமம் வறட்சியான ஆத்மிக சிந்தனை, தத்துவ விசாரணைகள் ஆகியவற்றிற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. அங்குள்ள நிகழ்ச்சிகளிலே வயோதிகர்கள்தான் அதிகமான அக்கறை செலுத்தி வந்தனர். ஆனால் சதனத்தின் கதையே வேறு. அங்குள்ள சூழ்நிலையே வேறு. தன்னியானந்தாசிரமத்திலே தூபம், சாம்பிராணி, நெய் ஆகியவற்றின் சுகந்தந்தான் பரவி நின்றதென்றால், சதனத்திலே மலர்ந்து வருகிற முல்லை, பன்னீர், செம்பகம் ஆகிய மலர்கள், அத்தர் ஆகியவற்றின் பரிமளமே கமகமவெனக் கமழ்ந்தது. கீதகோவிந்தத்தின் ஈரடிவரிசைகள் வீணைநாதத்துடன் ஒருங்கிணைந்து காதுகளுக்கு இன்பமளித்தவாறு அங்கே முழங்கின. புல்லாங்குழலின் இன்னிசை மனிதர்களின் நாடி நரம்புகளைக் கிறுகிறுக்கச் செய்து, அங்குள்ள மரக்கிளைகளின் பச்சிலைகளிலே எதிரொலித்துப் பரவியது. சதங்கைகளின் தாள லயத்துக்கேற்ற சலசல ஒலிகள் மயிர்க்கூச் செறியச் செய்கின்றன. அங்கே வயோதிகன் வாலிபனாகி விடுவான். எந்தக் கிழவியும் நெடுமூச்சுடன் 'கண்ணா!' எனக் குரலெழுப்பத்தான் செய்வாள். மயக்கம் ஏற்படுத்துகிற சூழ்நிலைதான் அங்கே நிலவியது.

அங்குள்ள ஆன்மிக உணர்விலே ரஜோகுணந்தான் மேலோங்கி நின்றது. அதன் மையப்புள்ளி உமாதேவியேதான். உமாதேவியென்றால் பெண்ணழகே உருப்பெற்று நிற்கிற தோற்றம்! பொன்வண்ண மேனியுடைய அந்தப் பெண்ணரசிக்குத் தன் அழகைப்பற்றிய முழுமையான உணர்வும் மதிப்பும் இருந்து வந்தது. அதில் என்ன தவறு? அவள்

தன் அடர்த்தியான நீண்ட சுருள் கூந்தலைக் கவனமாகக் காப்பாற்றி வந்தாள். அதைச் சடைப்பிடிக்கவோ, உதிர்ந்துபோகவோ ஒருகாலும் அநுமதிக்கமாட்டாள். சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு புதிய புதிய பாணிகளிலே அதை அலங்கரித்துக்கொள்வாள். ஏதோ மோட்டா ரகத் துணியைக் காவிச் சாயத்திலே தோய்த்தெடுத்து ஏனோதானோ என்று கட்டமாட்டாள். அவளுடைய பொன்வண்ண மேனிக்கும் சிங்காரக் கூந்தலுக்கும் ஏற்ற வகையில் பட்டுப் பீதாம்பரங்களே அணிந்து வந்தாள். அவளுடைய செவ்விதழ்களையும் அவற்றுக்குப் பொருத்தமான முல்லைப் பற்களையும் பிரம்மதேவன் சிருஷ்டித்ததே சிரிப்பதற்காகத்தான். அவ்விதம் அவளுடைய வதனத்திலே இனிய புன்னகை தவழ்ந்துகொண்டிருக்கும். பக்தகோடிகள் அதனால் ஈர்க்கப்பட்டனர். அழகிய விழிகள், கரிய புருவங்கள். எந்நேரமும் அலை பாய்ந்துகொண்டிருக்கும் விழிகள் அவை. தூண்டில் முள்ளினால் பிடித்திழுப்பதுபோன்று அவள் தன் கடைக்கண் பார்வையால் ஆட்களை இழுக்கிறாள் என்று சொல்லலாமா? இல்லை, அது பொருந்தாது. ஏனென்றால் அம்முறையிலே தான் அவளுக்குப் பார்க்கத் தெரியும். அவளுடைய உடலின் ஒவ்வோர் அங்கமும் கடைந்தெடுக்கப்பட்டதுபோன்று குற்றமற்றது. அது ஒரு நடனமாதின் உடலமைப்பு. உட்காருவது, சிரிப்பது, பேசுவது, நடப்பது போன்ற அவளுடைய ஒவ்வோர் அங்க அசைவுகளும் தனியழகு பொருந்தியவை. எல்லாவற்றிலும் இனிமையான தாள லயம் இருந்து வந்தது. இன்னிசை பொழியும் இனிய குரல். அழகு ஒரு பாவமா? அழகை அழியாது காப்பாற்றுவது தவறு? அழகைப்பற்றிய உணர்வு ஒரு குற்றமா? அதுவும் ஒரு பேறுதானே? சதனத்தின் ஆன்மிக பாவத்தில் ரஜோகுணம் முக்கியத்துவம் பெற்றிருப்பதற்குக் காரணமும், ஒருவேளை, அதுவாகவே இருக்கவேண்டும். ரஜோகுணம் முக்கியத்துவம் பெறும் போது ஆத்ம பூஜைகூட முக்கியத்துவம் பெறத்தானே வேண்டும்.

திருவனந்தபுரத்திலுள்ள உயர்ந்த மனிதர்கள் அத்தனை பேர்களும் அந்தச் சதனத்தின்பால் ஆகர்ஷிக்கப்பட்டனர். தன்னியானந்தாசிரமம் களையிழந்து உயிரற்றுப் போய்விட்டது. ஒரு மனிதப் பிராணிகூட அங்கே போவதில்லை. அங்கே பஜனைக்கு மூன்றே மூன்று பெண் துறவிகள் மட்டுந் தான் கூடுவார்கள்.

இளமையின் விறுவிறுப்பு வெற்றி கண்டது. சதனத்திலே கலகல வென்றிருந்தது.

திருவனந்தபுரத்திலுள்ள பாடத் தெரிந்த குழந்தைகள், இளம் பெண்கள் அத்தனை பேர்களும் சதனத்திற்கு வருவார்கள். நடனமாடத் தெரிந்தவர்களும் வருவார்கள். அங்கே இசை மண்டபம் உண்டு; நடன மண்டபமும் உண்டு. எனவே, தங்கள் குழந்தைகளுடைய பாட்டுக்களைக் கேட்கவும், நடனங்களைக் காணவும்—அந்தக் காரணங்களைச் சொல்லியாவது தாய் தந்தையர்கள் வராமல் இருப்பார்களா? ஒரு முறை

அங்கே சென்றுவிட்டால், அப்புறம் எவராலும் மீண்டும் அங்கே போகாமல் இருக்கமுடியாது.

தேவியின் முன்னிலையிலேதான் பாடவேண்டும், ஆடவேண்டும். சில சமயங்களில் உமாதேவி மணிக்கணக்காகச் சமாதியிலே ஆழ்ந்து விடுவாள். வேறு சில சந்தர்ப்பங்களில் நடனமாடுவாள். அவளுடைய அப்போதைய அழகை என்னென்பது?

சதனத்தின் துவக்க நாளிலிருந்தே விஜயா அங்கே போய் வருவதுண்டு. அவள் பல சந்தர்ப்பங்களில் அங்கே பாடியிருக்கிறாள். சதனத்துக்குத் தாயாரை அழைத்துச் செல்ல அவள் பலமுறை முயன்றிருக்கிறாள். அதற்கெல்லாம் கார்த்தியாயினியிடம் ஒரே ஒரு பதில்தான்:

''எனக்குச் சதனமும் வேணும், ஆசிரமமும் வேணும்.''

அம்மாவுக்கு ஆசிரமம் போன்ற அனைத்து ஸ்தாபனங்கள் மீதும் ஏற்பட்டிருந்த 'அலர்ஜி'யின் காரணம் மகளுக்கு எங்கே தெரியப் போகிறது? விஜயாவின் பாட்டு உண்டு என்று அறிந்தபோதிலும் கார்த்தியாயினி போவதில்லை. மகளை அன்றுடம் அங்கே போக அநுமதிப்பதும் இல்லை. எந்த ஆசிரமமானாலும் சதனமானாலும் சரி, அதெல்லாம் நடத்தை கெட்டவர்களின் கூட்டாக இருக்குமென்பதே கார்த்தியாயினியின் கருத்து.

அவள் அடிக்கடி சொல்லி வந்தாள்:

''ஆசிரமத்திலும் சதனத்திலும் தங்கியிருக்கிறவங்க எல்லாம் நடத்தை கெட்டவங்க. நல்லவள்னு சொல்ல ஒருத்தியைக்கூடப் பார்க்க முடியாது. கெட்டுக் குட்டிச்சுவராயிடறப்போ, காவித் துணியைக் கட்டிடுவாங்க. அதுதான் ஆசிரமம்னு சொல்லறது.''

கார்த்தியாயினியைச் சொல்லிக் குற்றம் இல்லை. அவளுடைய வாழ்க்கைப் பாதையிலே முட்கள் பரவிக் கிடந்ததற்கும் ஓர் ஆசிரமத்துக்கும் தொடர்பு இருக்கத்தானே செய்கிறது? ஒரு பெண் துறவி எவ்வளவுதான் புனிதவதியாக இருந்தாலும், கார்த்தியாயினி அவளை நம்பமாட்டாள்.

பல பாணிகளிலே விஜயா சிகையலங்காரம் செய்து கொள்கிறாள். அதைப் பார்க்கும்போதெல்லாம் கார்த்தியாயினிக்கு ஆத்திரந்தான். அவள் கேட்டாள்: ''என்னடி இது? முடியாலே நீ என்னென்ன பண்ணறே?''

விஜயா சிரிப்பதோடு நிறுத்திக்கொள்வாள். உண்மையிலேயே, சிகையலங்காரங்களின் புதுப் புதிதான மாதிரிகளெல்லாம் சதனத்திலே உமாதேவியிடமிருந்தே உதயமாகின்றன. அடர்த்தியான நீளக் கூந்தலை அவள் நேற்றுச் சிங்காரித்துக் கட்டிவைத்ததுபோல் இருக்காது இன்று. பக்தைகளான பெண்களும் அதையே பின்பற்றுகிறார்கள். கார்த்தியாயினிக்கு அந்தச் சமாசாரம் தெரிந்துவிட்டால், அப்புறம் உமாதேவியைப்பற்றிச் சொல்வது இன்னதென்று சொல்லமுடியாது.

துணிவகைகளைத் தேர்ந்தெடுப்பதிலும், அவற்றை அணிகிற மாதிரியிலும் விஜயாவுக்குத் திடீர் திடீரென ஆர்வம் ஏற்பட்டிருந்தது. சிறு வயதுதானே? திருவனந்தபுரம் நகரந்தானே? எனவே, இதெல்லாம் இயல்பானதெனக் கருதிஞள் கார்த்தியாயினி. ஆனல், அவள் அவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டாள் என்று பொருள் அல்ல. சில சந்தர்ப்பங்களில் அவள் கேட்பாள்:

''என்னடீ, இதெல்லாம்? பொம்புளேங்க சாரி கட்டறதும் ஜாக்கெட் போடறதும் எல்லாம் எதுக்கு? நீ போடற மாதிரியாயிருந்தா அதெல்லாம் தேவையே இல்லியே!''

இந்த ஃபாஷன்களெல்லாம் விஜயாவுக்குக் கிடைத்தது சதனத்திலிருந்துதான்.

பல சந்தர்ப்பங்களில் இதை ஒரு பிரச்னையாகவே கேசவபிள்ளையின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிருள் கார்த்தியாயினி. அவள் சொல்வதையெல்லாம் கேட்ட பிறகு அவர் சொல்லுவார்:

''காலம் மாறுகிறது கார்த்தியாயினி. இளைஞர்களின் நடை உடைகளிலெல்லாம் மாறுதல் ஏற்பட்டு வருகிறது. அதுக்கெல்லாம் நீ இப்படி ரகளை பண்ணத் தொடங்கிஞல் . . . ?''

''காலம் மாறுதுன்னு, அதுக்காக இப்படியா நடந்துக்கிறது?''

கேசவபிள்ளை நேரடியாக ஒரு கேள்வியைப் போட்டார்: ''நீ இளம் பெண்ணுயிருந்தபோது நடந்துகொண்டதுபோல் அல்லது இப்போது நடந்துகொள்வதுபோல் நமது மகள் நடந்துகொள்வதாயிருந்தால் இளைஞர்கள் யாராவது அவளைப் பார்ப்பார்களா? இளம் பெண்கள் இப்படியெல்லாம் நடந்துகொண்டால்தான் இளைஞர்களின் கவனத்தை ஈர்க்கமுடியும்.''

அவள் பதில் அளிக்கவில்லை. அங்கிருந்து போகக் கிளம்பிஞள். நான்கைந்து அடிகள் நடந்துவிட்டுத் திரும்பி நின்றவாறு கூறிஞள்:

''இப்படியெல்லாம் நடந்துக்கிட்டிருந்துங்கூட ஒருத்தனுவது திரும்பிப் பார்த்ததாகத் தெரியலியே.''

விஜயாவின் விவாக விஷயம் கார்த்தியாயினி மனத்திலே பசுமையாகப் பதிந்திருந்தது.

கேசவபிள்ளைக்கு அந்த விஷயத்தில் அக்கறை இல்லை என்று சொல்ல முடியாது. ஆனல், அதிலே போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்பது உண்மைதான். மனைவி அந்தப் பிரச்னையைக் கிளப்பியபோது மட்டும் கொஞ்சம் சுறுசுறுப்புடன் அதைப்பற்றி நினைப்பார். வேறு அலுவல்களுக்கிடையில் அதை மறந்துவிடுவார். கார்த்தியாயினி தினசரி இந்தப் பிரச்னையைக் கிளப்பிக்கொண் டிருப்பாள். ஆயினும் அந்தப் பிரச்னை தீர்க்கப்படாமல் இருந்து வந்தது.

இனி அதைக் கவனித்தே ஆகவேண்டும். முன்பே செய்திருக்க வேண்டியதுதான். அவர் மனைவியைக் கூப்பிட்டார். அவள் வந்தாள். அவர் கேட்டார்: ''இந்தாம்மா, இந்தப் பிரச்னையை உடனடியாக

எடுத்து மிக மும்முரமாகச் செயல்படப் போகிறேன். எத்தகைய மாப்பிள்ளையை நீ விரும்புகிறாய்?''

அந்தப் பிரச்னைபற்றிக்கூட அங்கே பலமுறை பேசியிருக்கிறார்கள். மகளுடைய கணவன் எப்படி இருக்கவேண்டும் என்பதுபற்றிய கற்பனை அந்த அன்னைக்கு உண்டு. தெளிவான கற்பனை! அவளுடைய உருவம், சுபாவம் ஆகியவைபற்றிய அந்தத் தாயின் கற்பனை மிக மிகத் தெளிவானது. அவள் சொன்னாள்:

''அவன் நல்லவனாயிருக்கணும். அப்படீன்னு அன்புள்ளவன். தந்திரக் காரனே, சாமர்த்தியக்காரனே ஆகணும்ங்கிறதில்லே. தாங்கமுடியாத சுமையைத் தாங்கிக்கிட்டுக் கஷ்டப்படறவனாயிருக்கவேணும். அவனுக்கு சர்க்கார் உத்தியோகம் வேண்டியதில்லே. குறிப்பா, இந்தத் திருவனந்த புரத்திலே. கடவுள் கிருபையினாலே அவளுக்கு வேண்டிய சொத்தெல் லாம் இருக்குது. அப்புறம் நல்ல சுபாவக்காரனாயிருக்கணும்.''

நொடிப்பொழுதுக்குப் பின் கார்த்தியாயினி மேலும் கூறினாள்:

''ஆனா, விஜயா இப்போ இந்த நகரத்திலுள்ள நாகரிகத்துக்குப் பின்னாலே ஓடி நடக்கறாள். கக்கத்தை வெளிக் காட்டற ஜாக்கெட்டும், தனங்களை முழுசா அப்படியே எடுத்துக் காட்டற என்னமோ ஒண்ணு மாத்தான் இருந்தது, நேற்றைய வேஷம். நான் சொல்லறதெல்லாம் அவளுக்குப் பிடிக்குமோ என்னமோ?''

கார்த்தியாயினியின் கற்பனையிலுள்ள மாப்பிள்ளை எப்படிப்பட்டவன் என்பதுபற்றிக் கேசவபிள்ளைக்குத் தெரியும். வெகு நாட்களாக அவள் அதைப்பற்றிச் சொல்லி வருகிறாள் என்பதனால் மட்டும் அல்ல. ஒரு மனைவி என்ற நிலையிலே, ஒரு பெண் என்ற வகையிலே அவளுக்கு ஏற்பட்டிருக் கிற கசப்பான அனுபவங்களைப்பற்றிய உணர்வு அவளுக்கு இருந்து வருகிறது. நாட்டுப்புறத்திலே பிறந்து வளர்ந்த, கள்ளம் கபடமற்ற ஒரு பெண்ணுக்கு, வாழையடி வாழையாகக் கிடைத்து வந்திருக்கிற வாழ்க்கையைப்பற்றிய அறிவு இதுதான். அறநெறிகளும் ஒழுங்கு முறை களும் இருந்து வருகின்றன. உண்மையையும் தவறையும் பகுத்துத் தெரிந்துகொள்வதற்கான இயற்கை இயல்பு இருக்கிறது. புக்ககம் புகுந்த பின் அவளுக்கு ஏற்பட்ட அனுபவங்களை, அவள் நிலையில் நின்று பார்த் தறிய அவரால் முடியும். கார்த்தியாயினி என்றைக்குமே சரியாகத் தானே இருந்திருக்கிறாள்?

ஒரு நிமிடத்துக்குள்ளேயே, கேசவபிள்ளை மனைவியுடைய வாழ்க்கை பற்றி மதிப்பீடு செய்து முடித்தார். அந்தப் பெண்மணியின் வாழ்க்கை ஆனந்தமயமாக இருந்திருக்கிறதா? ஒரு சந்தோஷமாவது இருந்த துண்டா? அடிப்படையாக ஆராய்ந்து பார்த்தால் இல்லை என்றே சொல்லத் தோன்றும். அவளுக்குச் சொத்துக்களும் பணமும் உண்டு; பிரதாபம் உண்டு. அவளுடைய சிநேகிதிகள் மட்டும் அல்ல, வேறு எந்த ஒரு பெண்ணும் அவளைப் பார்த்துப் பொறுமைப்படத்தான் செய்வாள். இந்த மாநிலத்தின் மிகப் பெரிய அதிகாரியின் மனைவி அவள். ஆனால்

வாழ்விலே இன்பமுண்டா? எந்நேரமும் ஆவலும் வியாகுலமுந்தானே? இதற்குப் பூரண பொறுப்பாளி தாமே என்று கேசவபிள்ளை சிந்தித்துப் பார்த்தார்.

உண்மைதான். தாம் ஒரு நாட்டுப்புறத்து விவசாயியாக இருந்திருந்தால் . . .? கார்த்தியாயினி ஒரு பறவைபோல் சுறுசுறுப்பாகப் பறந்து கொண்டிருந்திருப்பாள். அன்றுட வாழ்க்கையில் சிறிது கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆயினும் அது இன்பகர வாழ்க்கையாகவே இருந்திருக்கும். 'தாம் ஒரு நாட்டுப்புறத்து விவசாயியின் மனைவியாக இருந்திருந்தால்' என்று இப்போது சிந்திக்கிறாளா?

ஓர் அரசாங்க அதிகாரிக்கு ஏற்பட்டுள்ள, அநாவசியமாக மறுபக்கம் சிந்தித்துப் பார்க்கும் பழக்கந்தான் அவரை இவ்வாறு சிந்திக்கத் தூண்டியது. இல்லை, இன்னொருவனின் மனைவியாக இருந்திருந்தால் என்று கார்த்தியாயினி சிந்தித்திருக்கவேமாட்டாள்; கற்பனை செய்து கூடப் பார்த்திருக்கமாட்டாள். கரம் பிடித்த கணவர், சீஃப் செக்ரடரி என்ற உயரிய பதவிவரைக்கும் சென்றிருக்கவேண்டியதில்லை; அவர் திருவனந்தபுரத்திலே தங்கியிருந்திருக்கக்கூடாது; ஒரு நாட்டுப்புறத்து விவசாயியாக இருந்திருந்தால் போதுமாயிருந்தது. அப்படி இல்லாமல் இருந்ததனால் கசப்பு நீரை நிறையக் குடிக்கவேண்டியதாயிற்று . . . இப்படி எல்லாம் ஒருவேளை சிந்தித்திருப்பாள்.

இவ்வாறாக அந்த வாழ்க்கை சோகம் நிறைந்ததாகிவிட்டது. கிட்டு மாமாவின் தீர்க்கதரிசனமாகக் கார்த்தியாயினியே தம்மிடம் சொன்ன அந்த வார்த்தைகளைக் கேசவபிள்ளை நினைவு கூர்ந்து பார்த்தார்:

''அதிருஷ்டக்காரிதான். ஆனால் மனநிம்மதி இருக்காது.''

உண்மைதானே? இந்த வாழ்க்கை வசதிகள் அனைத்தும் கார்த்தியாயினியின் அதிருஷ்டத்தினால் ஏற்பட்டவைதானே? ஆனால், மனநிம்மதிதான் அவளுக்கு ஏற்படவில்லை. ஏற்பட்டதுண்டா? அவர் சிந்தித்துப் பார்த்தார். எந்நேரமும் கரிய நிழல் ஒன்று அவள் வாழ்க்கைமீது பரவியிருந்தது. ஏதோ ஒரு பயம் வாழ்க்கையின் ஆதாரத்தையே அசைத்துக் கொண்டிருந்தது.

கார்த்தியாயினிக்குக்கூடச் சிறிய தவறு ஏற்பட்டதில்லையா? உண்டு. தன்னைப் பூரணமாக நம்பவில்லை, புரிந்துகொள்ளவில்லை. மனைவியை நேசித்திருந்ததாகவே கேசவபிள்ளை தம்மைப்பற்றிக் கருதினார். எங்கே போனாலும் எப்படிப் போனாலும் இறுதியில் அவளிடந்தான் வந்து சேருவார். பீருமேட்டிலே இரக்கமின்றியே தங்கம்மாவைத் தள்ளிவிட முடிந்தது எதனால்? கார்த்தியாயினிமீது கொண்டுள்ள நேசத்தின் மிகப் பெரிய தெளிவான சான்று அல்லவா அது? அவளால் அதைப் புரிந்து கொள்ளமுடியவில்லை. ஒருவேளை, மனைவியானவள் அந்த நேசத்தினால் மட்டும் திருப்தியடைய மாட்டாள்போல் இருக்கிறது. தன்னை விட்டு வேறு எந்த இடத்துக்கும் போகக்கூடாதென்ற எண்ணம் அவளுக்கு இருக்கக் கூடும். அப்படிப் போவதையெல்லாம் தன்மீது நேசம் இல்லாததன்

அறிகுறியாகவே ஒரு மனைவி மதிப்பாள்போல் இருக்கிறது. இன்னொரு பெண்ணுடன் பேசுவதுகூட அவளுக்குப் பயத்தைக் கொடுக்கும்.

கேசவபிள்ளையின் சிந்தனை இன்னொரு திசையை நோக்கிச் சென்றது. மனைவியின் வாழ்க்கையோ மனநிம்மதியற்றதாகி விட்டது. தாய் தந்தையர்களுடையது? மகன் காரணமாக அவர்களுக்குக் கெட்ட மரணங்கூட நிகழ்ந்துவிட்டது. அவர்களுக்குக்கூட ஆவலும் வியாகூலமுந்தான் இருந்து வந்தன. இவற்றிற்கெல்லாம் நானு குற்றவாளி?

அடிப்படையிலேயே நான் தவறு செய்திருக்கிறேனு? குற்றம் இழைத்திருக்கிறேனு?

அந்தச் சிந்தனையில் மேன்மேலும் ஆழ்ந்து போனார் கேசவபிள்ளை. தாய் தந்தை, மனைவி ஆகியோரின் மனநிம்மதியைக் கெடுக்கும் முறையிலுள்ள எந்தக் குறை தம்மிடம் இருக்கிறது? கடந்தகால வாழ்க்கை முழுவதையும் அவர் ஆராய்ந்து பார்த்தார். முக்கியமான கட்டங்களை ஒவ்வொன்றாக எடுத்துத் துருவித் துருவிப் பார்த்தார். அடிப்படையிலே கெட்டதெனச் சொல்லும் அளவில் எந்தக் குணம் தம்முடைய சுபாவத்திலே இருக்கிறது? எத்தகைய கல்நெஞ்சம் படைத்த நீதிபதியின் முன்னிலையிலேகூட, குற்றம் இழைத்திருந்தால், தவறு புரிந்திருந்தால் அவற்றை நிரூபிக்க யாராவது முன்வந்தால், தாம் நிற்கத் தயார்! வாழ்க்கை இந்த வகையில் அமையவேண்டுமென்று முன்கூட்டியே திட்டம் எதுவும் தயாரித்து வாழ்க்கை நடத்தவில்லை. அசாதாரணமான மதிநுட்பமுடையவனென்று உரிமை கொண்டாடவும் இல்லை.

அது ஒரு காலகட்டம். அந்தக் கடினமான சூழ்நிலையில் அரசாங்கம் என்ற பெரிய இயந்திரத்தின் சக்கரங்களுக்கிடையிலே அகப்பட்டு நசுங்காமல் ஜாக்கிரதையாகக் காலம் கடத்தினார். சாதாரணமான அந்தப் புத்தியைத் தவிர உரிமை கொண்டாட தம்மிடம் என்ன இருக்கிறது? கேசவபிள்ளை வேறு எதையும் மூலதனமாகக் காணவில்லை. இது அல்லாமல் 'பொல்லாதவன்' என்று மற்றவர்கள் அழைக்கும் அளவில் தம்மிடம் எந்தப் பொல்லாப்பும் இருப்பதாக அவருக்குத் தோன்றவில்லை.

கேசவபிள்ளை மீண்டும் மனைவியைக் கூப்பிட்டார். அவள் நெருங்கி வந்தாள். விஜயாவின் விவாக விஷயமாக அவளிடம் நிறையப் பேச வேண்டியிருந்தது. அவளைப் பக்கத்து நாற்காலியில் அமரச் சொன்னார். கணவர் சொல்வதைக் கேட்க அவள் அமர்ந்துகொண்டாள்.

முக்கியமான ஏதோ விஷயத்தைப்பற்றித்தான் பேசப் போகிறாரென்று அவள் அறிந்துகொண்டாள். அதைக் கேட்க அவள் தயாராக அமர்ந்திருந்தாள்.

கேசவபிள்ளை பேச்சைத் துவக்கினார்: ''மாப்பிள்ளை எப்படி இருக்க வேண்டுமென்ற கற்பனை உனக்கு இருந்து வருகிறதல்லவா?''

'ஊம்' என்று ஒருமுறை முனகிவிட்டு அவள் சொன்னாள்:

''அதைப்பற்றி ரொம்ப நாளாச் சொல்லிக்கிட்டிருக்கிறேனே.''

''விஜயாகூட அதற்குச் சம்மதிக்கவேண்டாமா?'' என்றார் கேசவ பிள்ளை.

அந்த விஷயத்திலே கார்த்தியாயினிக்கு மாறுபட்ட கருத்து இல்லை.

''இல்லாட்டி, அப்பாவும் அம்மாவும் சேர்ந்து நிச்சயம் பண்ணி நடத்திய கல்யாணத்திலை எனக்கு ஏற்பட்ட அநுபவந்தான் அவளுக்கும் ஏற்பட்டுடும். என்னைப் பார்க்காமலேயே கல்யாணம் நடத்தினதால் . . .''

இடைமறித்துக் கூறினார் கேசவபிள்ளை:

''முக்கியமான விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறபோதுகூட என் தலையிலே சுத்தியால் அடிக்கணுமா?''

''நான் குறை கூறிப் பேசல்லே. நடந்த உண்மையைச் சொன்னேன், இனிமே அப்படி நடந்துடக்கூடாதுங்கிறதுக்காக'' என்றாள் கார்த்தியாயினி.

''நீகூடத் திருமணத்துக்கு முன்பு என்னைப் பார்த்ததில்லையே?''

''பார்க்கல்லேன்னுக்கூட எனக்கு இஷ்டமாத்தான் இருந்தது. எனக்குப் புருஷனை வரக்கூடியவர் அப்படியிருக்கணும், இப்படியிருக்கணுங்கற எந்தவித எண்ணமும் எனக்கு இருக்கல்லே. நான் என்ன, உலகம் பார்த்தவளா? இப்போ நம்ப பொண்ணு அப்படியா? படிச்சவ, நாகரிகம் படைச்சவ. அதனாலே அவளோட விருப்பத்தைக்கூடக் கேட்டறியணும்னுதான் நான் சொல்லறேன்.''

மகளுடைய மண விஷயமாகத் தாயாருக்கு இருந்த அபிப்பிராயம் மாறிவிட்டதைக் கண்ட கேசவபிள்ளை கேட்டார்:

''ஒருவேளை, விஜயா பெரிய நாகரிகமுள்ள ஓர் ஐ.ஏ.எஸ்காரன், ஓர் என்ஜினியர், ஒரு டாக்டர் என்று யாராவது ஒருவன் தனக்குக் கணவனாக வரவேண்டுமென்று விரும்பினால்? அவனுக்கு உத்தியோகம் இருக்கணும், கார் இருக்கணும் என்றெல்லாம் சொன்னால்?''

''அவளோட விருப்பமெல்லாம் அப்படித்தான் இருக்கும்னு தோணுது. நான் முன்னாலே சொல்லிக்கிட்டிருந்தேனே, அந்தமாதிரியான ஒரு விவசாயியை அவள் விரும்பமாட்டாள். இப்போ நான் விரும்பறதெல்லாம் என்ன தெரியுமா? அவன் அன்புள்ளவனா இருக்கணும், நல்லவனா இருக்கணும்.''

ஒரு விநாடிக்குப் பிறகு கார்த்தியாயினி மேலும் கூறினாள்:

''ஆனா உத்தியோகமும் நாகரிகமும் படிப்பும் எல்லாம் இருக்கிறவன் அப்படி இருக்கமாட்டான். அவன் அன்பா நடந்துக்கமாட்டான். என் பயமெல்லாம் அதுதாங்க.''

''அப்படி நீ சொல்வதாயிருந்தால் நாகரிகக்காரியான நம்முடைய பெண்கூட ஒரு நல்ல மனைவியாயிருக்கமாட்டாளே?'' சற்று வேடிக்கையாகக் கேட்டார் கேசவபிள்ளை.

அந்தச் சந்தேகம் கார்த்தியாயினிக்குக்கூட இருந்தது. அவள் ஒரு விநாடிக்குப் பிறகு சொன்னாள்:

''அதுவும் சரிதான். அவள் என் வயிற்றிலே பிறந்தவளாயிருந்தாக் கூட வளர்ந்தது வேறு முறையிலேதானே? என்னைப் பார்த்து நடப்பதா யிருந்தா அவள் அந்த வேஷம் கட்டி நடக்கமாட்டாள்.''

சிறிது யோசனைக்குப் பிறகு கார்த்தியாயினி கூறினாள்:

''இல்லே. அவள் அப்படியெல்லாம் ஆகமாட்டாள். நல்லவளாத் தான் இருப்பாள்.''

''எப்படிப்பட்டவனுக இருக்க வேண்டுமென்று நீ அவளிடம் ஒருமுறை கேட்டுப் பாக்க முடியுமா?'' என்றார் கேசவபிள்ளை.

''அப்படியா செய்யறது? வரன் ஏதாவது வரட்டும். அப்போ அவளோட விருப்பத்தைப்பற்றிக் கேட்டிடுவோம். அதல்லாமே எப்படிப் பட்டவனு இருக்கணும்னு சொல்லச் சொன்னு அவள் சொல்லிடுவாளா?''

தம்முடைய முட்டாள்தனத்தை நினைத்துக் கேசவபிள்ளை சிரித்து விட்டார்.

மகளுக்கு ஒரு மாப்பிள்ளையைத் தேடிப் பிடிக்க அவர் பலரிடம் சொல்லி ஏற்பாடு செய்தார்.

* * *

கார்த்தியாயினி ஒரு நாள் உமாதேவி சதனத்துக்குப் போனாள். விஜயா அவளை இழுத்துக்கொண்டு போனாள் என்று சொல்வதுதான் சரி. அந்தச் சதனத்தைப்பற்றி மகள் நிதம் பேசி வந்தாள். அது எப்படித் தான் இருக்கிறது என்று அறிய அந்த அன்னைக்குச் சற்று ஆவல் இருந்தது.

ஏதோ காணத் தகாத ஒன்றைக் கண்டு வந்த நிலைமையிலேதான் கார்த்தியாயினி அன்று மாலை வீடு திரும்பினாள். அவளுக்குத் தாங்க முடியாத வெறுப்புத்தான். இப்படிப்பட்ட படுமோசமான செயல்கள் தானு அங்கே நடக்கின்றன?

''என்ன? எப்படியிருக்கிறது, சதனம்?'' என்றார் கேசவபிள்ளை.

கலி ஆட்கொண்டவள்போல் அலறினாள் கார்த்தியாயினி:

''சதனமாம், சதனம்! அருமையான ஆசிரமம்தான்! படுமோசம், படுமோசம். கணவன் பற்றுத பொம்புளேங்கதான் அங்கே போறுங்க. அப்புறம் ஆம்புளேங்களைத் தேடி நடக்கிற பொம்புளேங்களும். அவங்களோட மொகரக் கட்டையைப் பார்த்து உமிழ்நீர் சுரக்கிற ஆம்பு ளேங்களும் சேர்ந்து கண்ணன் ராதை பேர்களைச் சொல்லிக்கிட்டு முட்டி மோதிக்கிட்டு நடக்கறுங்க. அவமானம், அவமானம்! அங்கே காலெடுத்து வைத்தபோதே முல்லைப்பூ மணம் மூக்கைத் துளைத்து விடும். அப்புறம் பாடறது என்ன? கண்ணன், ராதையோட பொடவை யைப் புடிச்சு இழுத்தானும், அவிழ்த்தானும்! படுக்கை யறையிலே அப்படிப் பண்ணினுங்களாம், இப்படிப் பண்ணினுங்களாம்!... அப்படித்தானே பாட்டு வரும்? வெறி தாங்க முடியாத பெண்கள் தானே அங்கே போறுங்க?''

கார்த்தியாயினியை இவ்வளவு தூரம் ஆத்திரமடைந்து, இதற்கு முன்பு ஒரு முறைதான் கேசவபிள்ளை பார்த்திருக்கிறார். அன்று தன்னியானந் தாசிரமத்துக்காக நிதி வசூல் செய்ய வந்த பெண்களைப்பற்றிப் பேசும் போது. கேசவபிள்ளைக்குச் சிரிப்புத்தான் வந்தது. அவர் சொன்னார்:

''கொஞ்சம் மெதுவாகச் சொல்லேன். விஜயா காதிலே விழுந்துடப் போவுது.''

''ஓ! அவள் என்ன, அங்கே நடக்கிறதெல்லாம் கேக்காதவளா; காணுதவளா? இனிமே தாமதம் செஞ்சிடாதீங்க. நல்ல ஆரோக்கிய முள்ளவனுப் பார்த்து ஒருவன் தலையிலே கட்டி வச்சிடுங்க!''

அப்புறம் அடக்கமான குரலில் அவள் மேலும் கூறினாள்:

''அங்கே போறவங்களுக்கெல்லாம் தவறு நடந்துடும்னு எனக்குத் தோணுது. குறிப்பா, கல்யாணமாகாத கன்னிப் பொம்புளேங்களுக்கு. கல்யாணமானவங்களுக்குக் கர்ப்பமானு பேரைச் சொல்லக் கணவன் என்கிற ஒரு முட்டாள் இருப்பான் இல்லேயா?''

''நீ ஆத்திரப்படாமல் விஷயத்தைச் சொல்'' என்றார் கேசவபிள்ளை,

''அதெல்லாம் அந்த இடத்திலே நடக்குது. அதுக்காகத்தான் அந்த இடம். நாங்க அங்கே போனபோது அந்தத் தேவீங்கறவள் மாடிப் படி மேலே ஏறி நின்னுக்கிட்டிருந்தாள். மெலீசுப் பொடவை, கக்கத்தைக் காட்டற ஜாக்கெட். அப்புறம் அவள் நின்னது எப்படீன்னு தெரியுமா. ஒரு காலே மேலே தூக்கி வச்சு. ஆம்புளேங்களே வசீகரிக்கிற சிரிப்பு. வேசி சிரிக்கிறப்பலே. தூண்டி முள்ளு போட்டு இழுக்கிறதுபோல கண்ணைக் காட்டறாள். அவளோட தொடை தெரியுது! பொம்பு ளேங்க அப்படி நிக்கக்கூடாது. அப்புறம் அவளோட முன்னிலையிலே தான் ஆட்டமும் பாட்டுமெல்லாம் நடக்குது. அவ சமாதியிலிருக் கிறாள்னு சொல்றதெல்லாம் பொய். பாட்டைக் கேட்டு ரசிச்சுக் கிட்டுப் பல்லைக் கடிச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்கிறாள். அவள்தான்? தேவி!''

விஜயா உடைகளை மாற்றிவிட்டு அங்கே வந்தாள். அவளுக்கும் அப்பாவிடம் ஒரு செய்தி சொல்ல வேண்டியிருந்தது.

''என் கெட்ட காலத்துக்கு நான் இன்னைக்கு அம்மாவைச் சதனத்துக்கு அழைத்துக்கொண்டு போனேன். அம்மா இப்படி அவசரப்படுத்தறதை நான் இதுக்கு முன்னால் பார்த்ததே இல்லேயப்பா! பூஜை தொடங்கியது. அம்மாவுக்கு உடனே அங்கிருந்து திரும்பி வரணும். . . இன்னைக்குப் பூஜையோ ரொம்பமும் பிரமாதமாக இருந்ததப்பா!'' என்றாள்.

கார்த்தியாயினி ஆத்திரத்தை அடக்கியவாறு கூறினாள்:

''ஆமாம். அவளோட பூஜை! அவள் தன்னையே தான் பூஜிக்கிறாள்.''

விஜயா குலுங்கக் குலுங்க நகைத்தபடி அப்பாவிடம் கேட்டாள்:

''அப்பா, அம்மாவுக்கு முல்லைப் பூக்களைக் கண்டால் வெறுப்பு. என்னப்பா, அப்படி? முல்லைப்பூ மணத்தைச் சகிக்க முடியாதென்று சொல்றாள் அம்மா.''

அதன் காரணம் என்னவென்று கேசவபிள்ளைக்குத் தெரியும்.

கார்த்தியாயினி ஆத்திரத்தோடு சொன்னாள்: ''ப்பூ! முல்லைப்பூ ஆசிரமத்துக்குப் பொருந்துமாடீ?''

அம்மாவின் அடங்காத ஆத்திரத்தைக் கண்டு விஜயா மீண்டும் சிரித்தாள்.

சதன நிகழ்ச்சிகள் சம்பந்தமான பல விஷயங்களைப்பற்றி மனைவி புருஷனிடம் கூறினாள். உமாதேவியின் வரலாறு என்னவாக இருக்குமோ? இன்று அங்கே வருகிற பக்தர்களான ஆடவர்களில் பலர் அவளுடைய காதலர்களாக இருப்பார்கள் என்று கார்த்தியாயினி சந்தேகப் பட்டாள்.

''அவங்களோ இப்படி நாசமாப் போறுங்க. சின்னஞ் சிறுசுகளைக்கூடக் கெடுத்துடறுங்களே!'' கார்த்தியாயினிக்கு இருந்த ஆத்திரமெல்லாம் அதுதான்.

* * *

இரவு வெகுநேரமாகி விட்டது. கேசவபிள்ளை ஃபைல்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். கார்த்தியாயினி தூங்கியிருப்பாள் என்றே அவர் எண்ணியிருந்தார். ஆனால், அவள் திடீரென அவர் முன்னிலையில் தோன்றினாள்.

''தூங்கவில்லையா?''

''இல்லே. தூக்கம் வரமாட்டேங்குது. ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்லலாம்னு வந்தேன். யோசிச்சுக்கிட்டே படுத்திருந்தேன். அப்போது தான் புத்தியிலே தோணிச்சு.''

கேசவபிள்ளை பேனாவைக் கீழே வைத்தார். அவள் சொல்வதைக் கேட்க ஆவலுள்ளவர்போல் அமர்ந்து கொண்டார்.

''நம்ப மகளுக்குக்கூட ஒரு காதலன் இருப்பதாத்தான் எனக்குத் தோணுது.''

கேசவபிள்ளை ஒருமுறை நடுங்கினார். உண்மையிலேயே செய்தியறிய ஆவல் கொண்டார்.

''நல்ல பையன்தான். பார்க்கிறதுக்கும் நல்லாத்தான் இருக்கிறான். சதனத்திலே அவன் எங்களையே சுற்றிச் சுற்றி நடந்துக்கிட்டிருந்தான். விஜயாவோடு பேசவும் செஞ்சான். அவள் தாய்ன்னு என்னை அறிமுகப் படுத்திக் கொடுத்தாள் மகள். அவன் கவிதை எழுதுவானும்; பாட்டுப் பாடுவானும்; அவன் சமைத்த கவிதைங்களைத்தான் அவள் பாடறாளாம். நல்ல ஒழுக்கமானவன் போலத்தான் எனக்குத் தோணிச்சு. அப்போ ஒண்ணும் எம்மனசிலே தோணலே. இப்போ படுத்துக்கிட்டு யோசிச்சப் போதான் எம்மூளையிலே தோணிச்சு.''

கேசவபிள்ளை சிரித்தே விட்டார்: ''இவ்வளவுதானே? நீ என்னைப் பயமுறுத்தினியே? அவள் கல்லூரியிலே படித்த பெண்தானே? நண்பர்கள்

இருப்பார்கள். அவர்கள் அவளைச் சுற்றி நடக்கவும் செய்திருப்பார்கள். சதனத்துக்குள்ளே சென்றபோது உனக்கு ஏற்பட்ட ஆத்திரப் பார்வையிலே சம்பந்தமில்லாத விஷயங்கள் உன் மனத்திலே தோன்றிய தாச இருக்கலாம்.''

கார்த்தியாயினி அதை மறுக்கும் முறையில் தலையாட்டினாள்.

''இல்லே. எனக்கு அப்படிப்பட்ட தவறு நேர்ந்துடாது. அவள் அவன் முன்னாலே நிக்கறபோதும், அவன்கிட்டே பேசறபோதும் ஏதோ ஒரு விதமான உணர்ச்சி அவள் குரலிலும், கண்ணிலும், தோற்றத்திலும் கலந்திருப்பதை நான் பார்த்தேன். இப்போதுகூட அவங்க ரெண்டு பேரும் என் கண்முன்னாலே அதே உணர்ச்சியோடு தென்படறாங்க.''

ஒரு விநாடிக்குப் பிறகு மருமகனையும் மகளையும் பார்த்துப் புரிந்து கொள்ள முயல்பவள்போல் கூறினாள்:

''என்ன வேணும்னாலும் சொல்லிடுங்க. இவங்களுக்குள்ளே ஏதோ உறவு இருக்கத்தான் செய்யுது. அது மட்டும் நிச்சயம்.''

''அப்படியானால் அவளிடமே கேக்கறதுதானே?'' கேசவபிள்ளை யோசனை கூறினார்.

''இதென்ன கூத்து! அவள்கிட்டேயா கேக்கறது? அது கூடாது. எங்காவது ஒரு மாப்பிள்ளையைக் கண்டு புடிச்சு கல்யாணம் நடத்தி வைக்கணும்.''

பிறகு அவள் தன்னிடமே பேசுவதுபோல் கூறிக்கொண்டாள்:

''நாசமாப் போன அந்தச் சதனத்துக்குப் போறதனால் ஏற்பட்ட வினை தான். அங்கே சந்து பொந்து இண்டு இடுக்கெல்லாம் மோசமான காரியங்கள்தான் நடக்குது. அங்கே முல்லை படர்ந்து கிடக்கிற மறைவான இடங்களும், பிச்சி வள்ளிப் பந்தல்களும் எல்லாம் இருக்கு. அந்த மறைவிலே அந்தப் பையனும் இவளும் சேர்ந்து. . . ஐயோ! கடவுளே, எண்ணிக்கூடப் பார்க்க முடியலையே?''

கேசவபிள்ளை, அவள் சொல்வதுபோல் நடந்து விடுமென்று நம்ப வில்லை. கார்த்தியாயினி சும்மா பயப்படுகிறாள் என்றுதான் கருதினார். ஆயினும், கல்யாண விஷயத்தில் இனிமேல் காலதாமதம் செய்யக்கூடா தென்ற முடிவுக்கு வந்தார்.

''அவனைப் பார்த்ததும் உனக்கு எப்படித் தோன்றியது?'' என்று கேட்டார்.

''ஒழுங்கானவன்னு தோணிச்சு. பார்வைக்கு அழகானவன். அப்புறம் எனக்கென்ன தெரியும்?''

* * *

மீண்டும் நாட்கள் சில சென்றன. பார்க் வியூவுக்கு ஒருவன் பெண் பார்க்க வந்தான். வடக்கே சாலக்குடியிலிருந்து ஒரு வாலிபன். என்ஜினீயர். மதராஸ் ஸ்டேட் சர்வீஸில் இருந்தான்.

மாலைப் பொழுதில் கார்த்தியாயினி இந்தத் தகவலை மகளிடம் கூறினாள். விஜயா சிறிது வெளிறிவிட்டாள்போல் தோன்றியது.

''ஏன் இப்படியாயிட்டே?'' என்று அம்மா கேட்டாள்.

ஒன்றுமில்லை என்று விஜயா சொன்னாள். முதல் முதலாக வருகிற கல்யாண ஆலோசனைதானே? அதனால் ஏற்பட்ட பதற்றமாக இருக்கலாம் அது என்று கார்த்தியாயினி கருதினாள்.

மறுநாள் கேசவபிள்ளை கேஷுவல் லீவு எடுத்தார். காலையிலேயே, பெண் பார்க்க வருபவர்கள் வந்து சேர்ந்தார்கள். அன்று விஜயா சோர்வுற்றவள்போல் காணப்பட்டாள். என்ஜினீயருக்கு விஜயாவுடன் பேச வேண்டும். தரகர் நாராயணன் நாயரேதான். அவர் கேசவபிள்ளையிடம் அதைப்பற்றிச் சொன்னார். கேசவபிள்ளைக்கு ஆட்சேபம் இல்லை. அது அவசியமானதுகூட என்ற கருத்தே அவருக்கு. கார்த்தியாயினி மட்டும் இவ்வாறு கூறினாள்:

''கடவுளே, இதென்ன கூத்து? கல்யாணத்துக்கு முன்பே பையனுக்குப் பொண்ணுகிட்டே பேசணுமாம். இப்படியும் உண்டா? அநியாயம். முன்பு இப்படியெல்லாம் நடந்ததுண்டா?''

தோட்டத்திலே பையனும் பெண்ணும் பேசிக்கொண்டிருந்தனர். கார்த்தியாயினி மாடியறையில் ஜன்னலோரமாக நின்றவாறு அந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தாள். ஒருவேளை, கல்யாணத்துக்கு முன்னர் அந்த விலக்கப்பட்ட கனியை அவர்கள் சாப்பிட்டு விடுவார்களோ என்ற பயம் அவளுக்கு ஏற்பட்டது. இல்லை. சிரிப்போ வேடிக்கையோ இல்லை. காரியமாகத்தான் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் முகத்திலே சிறு புன்னகைகூடக் காணப்படவில்லை.

அவர்கள் கரம் கூப்பியவாறுதான் பரஸ்பரம் விடைபெற்றுக் கொண்டனர். எனஜினீயர் நாராயணன் நாயரிடம் சிறிது நேரம் பேசினான். நாயர் கேசவபிள்ளையை அணுகினார். அவர் முகம் வாட்டம் அடைந்திருந்தது. கேசவபிள்ளை அருகிலேயே கார்த்தியாயினி நின்றிருந்தாள்

நாராயணன் நாயர் வருத்தத்துடன் கூறினார்:

''அவமானம், அவமானம்!''

''என்ன நாராயணன் நாயர்?''

''இந்தக் கல்யாணம் நடக்காது. மகள் ஒளிக்காமல் சொல்லிவிட்டாள், தன் கல்யாணம் நிச்சயமாகிவிட்டதென்று. அந்தக் கல்யாணம் அல்லாமல் வேறு கல்யாணம் இல்லையாம்!''

கேசவபிள்ளை தும்பித்துப் போய்விட்டார். அவருடைய நாடி நரம்புகளெல்லாம் தளர்ந்துவிட்டன. கார்த்தியாயினி கேட்டாள்:

''அது யாரு, நாராயணன் நாயர்?''

''ஒரு கம்யூனிஸ்டு, கம்யூனிஸ்டுகளுக்காகப் பாட்டும் கவிதையும் சமைத்துக் கொடுக்கிறவன். விசுவநாதன். சக மாணவனும். நேசமாகிவிட்டதாம்.''

''கம்யூனிஸ்டோ?'' கேசவபிள்ளையின் குரல் வெளியே வரவில்லை.

''ஆம்'' என்றூர் நாயர்.

கேசவபிள்ளை மேஜைமீது சிரத்தைச் சாய்த்தவாறு அமர்ந்துவிட்டார்.

''இது முன்னமே சொல்லியிருந்தால் நல்லா இருந்திருக்கும்.'' புகார் கூறும் வகையில் சொன்னூர் நாயர்.

''எங்களுக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்? ஏதாவது தகவல் தெரிஞ்சிருந்தாத்தானே?''

அது உண்மைதான் என்று நாராயணன் நாயர் ஒப்புக்கொண்டார். ஆயினும், இது பெரிய அவமானமாகிவிட்டதென்ற விஷயத்தில் சந்தேகமே இல்லை.

''மன்னிக்கணும்'' என்ற ஆசார வார்த்தையுடன் என்ஜினீயர் அவ்விடத்துக்கு வந்தான். தவறு இழைத்த கேசவபிள்ளை துள்ளியெழுந்து என்ஜினீயரை உட்கார வைத்துவிட்டு ஆயிரம் தடவை மன்னிப்புக் கேட்டார். உண்மையிலே கேசவபிள்ளை இந்த விஷயத்தில் குற்றவாளி அல்லவே. என்ஜினீயர்கூட வாட்டம் அடைந்திருந்தான். அவன் முதல் முதலிலே பெண் பார்க்க வந்த இடத்தில் அநுபவம் இப்படியாகி விட்டது.

அவன் சொன்னான்: ''ஒரு வகையிலே பார்த்தால் இது நல்லதாகி விட்டது. அந்த நேச உறவை மனத்திலே வைத்துக்கொண்டு விஜயா உங்கள் நிர்ப்பந்தத்துக்குக் கீழ்ப்படிந்திருந்தால்? எங்கள் வாழ்க்கை பரிதாபகரமாக முடிந்திருக்கும் அல்லவா?''

கேசவபிள்ளை அது உண்மைதான் என்று ஒப்புக்கொண்டார்.

பரஸ்பரம் மனவருத்தம் இன்றி, ஆனால் வெளிறிவிட்ட முகங்களுடன் விருந்தாளிகள் விடைபெற்றுச் சென்றனர்.

கார்த்தியாயினி சொன்னாள்: ''நான் நினைத்தது சரியாப் போச்சு. எனக்கு அப்படித் தவறு ஏற்படாது.''

* * *

அந்த நிலைமையை மனத்தில் ஏற்றுக்கொள்வதற்குக் கேசவபிள்ளை மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது. அதனுடைய எல்லா அம்சங்களையும் குறித்து அவர் யோசித்துப் பார்த்தார். அதை ஏற்றுப் போவதைத் தவிர வேறு வழி தென்படவில்லை. இருக்கிற நிலைமையை நன்முகப் பயன்படுத்திக் காரியத்தைக் கைகூடச் செய்வதுதான் புத்திசாலித் தனம் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்.

கார்த்தியாயினிகூட ஓரளவு ஆறுதலடைந்தாள். அந்த உறவு உமா தேவி சதனத்திலே ஏற்பட்டதல்ல என்பது ஓர் ஆறுதலாக இருந்தது. ''விசுவநாதன் நேசிப்பான், அவன் நல்லவன்தான்'' என்று விஜயா உறுதியாகச் சொன்னாள். கார்த்தியாயினிக்கு அதுவே போதும்.

ஆனாலும் கேசவபிள்ளை சொன்னார்:

''அவன் ஒரு கம்யூனிஸ்டு.''

கார்த்தியாயினி கேட்டாள்:

''அதனால் என்ன?''

அவளால் அவ்வளவுதான் புரிந்துகொள்ள முடியும் என்று அவர் விட்டுவிட்டார். அவர் மகளிடம் ஒரு கேள்வியை மட்டும் கேட்க விரும்பினார்:

''பாட்டும் கவிதையும் எழுதினால் வாழ்க்கை எப்படி நடக்கும் மகளே?''

வாழ்க்கைப் போராட்டம் கடுமையானது. அதை அறியாதவள்தான் விஜயா. அவள் அதைப்பற்றி யோசித்திருக்கமாட்டாள். பதிலளித்தாள்:

''எங்கள் வாழ்க்கை நன்றாக நடந்திடும் அப்பா!''

கேசவபிள்ளை சொத்துச் சேர்த்திருக்கிறார். அவளுக்காக! அவளுக்கு மட்டுமாக! அப்புறம் ஏன் கவலைப்படவேண்டும்?

திருவனந்தபுரத்திலே வைத்துத் திருமணத்தை நடத்த வேண்டாமென்று தீர்மானித்துக் கொண்டனர். ஆயினும், கேசவபிள்ளையின் மனத்திலே ஒரு யோசனை உதித்தது. கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வரப் போகிறார்கள். விசுவநாதன் ஒரு கம்யூனிஸ்டு. கல்யாணம் நடைபெறும் இடத்துக்குக் கம்யூனிஸ்டுகள் வருவார்கள். அப்போது அவர்களுடன் நட்புறவை நிலைநாட்டிக்கொள்ள முடியும். கம்யூனிஸ்டினுடைய உறவினன் என்று தம்மைச் சொல்லிக்கொள்ளலாம் அல்லவா?

ஆனால் கார்த்தியாயினியின் கருத்து இந்தக் கல்யாணத்தை ஊரிலே நடத்த வேண்டுமென்பதுதான்.

அத்தியாயம் 43

ஏழைகளின் அரசாங்கம்

சீஃப் செக்ரடரி கேசவபிள்ளை ராஜிநாமாச் செய்யவில்லை. தொடர்ந்து செயலாற்றத்தான் செய்தார். கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வருவார்கள் என்ற யூகம் உண்மையாகிவிட்டது. ஏனோ கேசவபிள்ளைக்கு விருப்பமுள்ள விஷயமாக இருக்கவில்லை அது. ஆனால் அதுதான் நிகழ்ந்தது.

அன்றைய மாநிலக் குழுச் செயலாளராக இருந்தவர் கோபி. அவர் தேர்தலுக்கு முன்பும், தேர்தலின்போதும், அதற்குப் பிறகும் பல கருத்துக்களை வெளியிட்டிருந்தார். கம்யூனிஸ்டு கட்சி ஆட்சிக்கு வந்தால் என்னென்ன காரியங்களைச் செய்யுமென்று அடித்துக் கூறியிருந்தார். ஒருவேளை, அந்தப் பிரசங்கங்கள் கேசவபிள்ளையை நிலைகுலையச் செய்திருக்கலாம். கம்யூனிஸ்டுகளின் ஆட்சிக் காலத்தில் காரியங்கள் ஒழுங்காக நடைபெறுதென்ற கருத்து அவருக்கு இருந்தது. தகராறுகள் ஏற்படுவதற்கான சூழ்நிலைகள்தான் இருந்தன. அவருக்குக் கோபிமீது சிறிது வெறுப்புக்கூட இருந்தது என்று சொல்லலாம். சீஃப் செக்ரடரி சில வருடங்களுக்கு முன் அவரை ஆலுவாயிலே சந்தித்ததுதான். அதன் பின் கோபியைச் சந்தித்ததே இல்லை. கோபி பிடிவாதக்காரர், தீவிரவாதி. கம்யூனிஸ்டுகளைப்பற்றித் தலைமைக் காரியதரிசிக்கு இன்னொரு கருத்துக் கூட இருந்தது. கட்சியின் கட்டளைக்குட்பட்டே ஆட்சி நடக்கும். எனவே, இனிமேல் கோபியின் ஆட்சியாகத்தான் இருக்கும். அரசாங்க இயந்திரத்திலேகூட அவர்கள் தலையிடுவார்கள்.

கேசவபிள்ளைக்குக் கோபியைத் தெரியும். மாத்யூ, லூக்கோஸ், நாராயணன் நாயர், கோபி ஆகியோரை ஒருமுறை தம்முடைய வலையிலே சிக்கவைத்தவர் அல்லவா, அவர்? கோபி அந்த வலையைக் கிழித்துத் தப்பித்துக்கொண்டார் என்பது உண்மைதான். ஆயினும் அறிந்த மனிதர்தான். ஆனால் அதற்குப் பிறகு இதுவரையில் அவர் கோபியைப் பார்த்ததில்லை. கோபி அவரைப் பார்க்கவும் வரவில்லை. புதிதானதோர் அமைப்பிலேதான் இனிமேல் செயலாற்றவேண்டும். அது எவ்வாறு அமையப் போகிறதென்றுகூடத் தெரியவில்லை. அமைச்சர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டன. பெயர்கள் எல்லாம் கேள்விப்பட்டவைதான். ஆனால் இருவரை மட்டுமே அவர் நேரடியாகப் பார்த்திருக்கிறார். மற்றவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றுகூடத் தெரியாது. எப்படி நடந்துகொள்வதென்று நிச்சயிக்கவும் முடியவில்லை. ஓர் உத்தியோகஸ்தர் என்ற முறையில் நடந்துகொள்வதுதான் நல்லதென்று

மனம் உபதேசித்தது. ஆனால், அங்ஙனம் அந்தப் பதவியிலே அமர்ந்த வாறு தொடர்ந்து செயலாற்ற அவருடைய தனி நபர் அந்தஸ்து இடம் கொடுக்கவில்லை. பூக்களை விற்பனை செய்த இடத்திலே புல்லை விற்பனை செய்வதென்றால்? அது அவமானம். வெறும் ஓர் உத்தியோகஸ்தராக மட்டும் அவர் எந்தக் காலத்திலும் அந்தப் பதவியில் அமர்ந்திருக்கவில்லை. திவான் ஆட்சி நடைபெற்ற காலத்திலாகட்டும், காங்கிரஸ் ஆட்சி நடை பெற்று வந்த காலத்திலாகட்டும், அவர் கேவலம் ஓர் உத்தியோகஸ் தராக மட்டும் இருக்கவில்லை. கீழ்ப்படிதலுள்ள ஓர் உத்தியோகஸ் தராக இருப்பதற்கு அவர் மனம் அநுமதிப்பதில்லை.

கார்த்தியாயினி முன்பே உபதேசித்தாள்:

''இந்த வேலை வேணும். இங்கிருந்து போவோம். இந்தத் தலைகால் தெரியாதவங்க முன்னாலே எதுக்காகத் தாளம் போடணும்?''

அண்மைக் காலமாக அவர் அதற்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதில்லை. அதைப்பற்றி ஆழமாக யோசித்து வந்தார். ஒருதடவை அவர் சொன்னார்:

''நான் அதைப்பற்றித்தான் யோசித்துக்கொண் டிருக்கிறேன்.''

''அதுக்கு இவ்வளவு பெரிய யோசனை என்னத்துக்கு?''

''யோசிப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனால், கார்த்தியாயினீ, அதுக்கு மனம் அநுமதிப்பதில்லை. அதுதான் அரசாங்க உத்தியோகத்தின் நிலை. ஒரு தடவை உத்தியோகஸ்தனாகிவிட்டால், அப்புறம் வயது ஐம்பத்தைந்து ஆகாமல் ஒருநாள் முன்புகூட வெளியே போக மனம் அநுமதிக்காது.''

அவளுக்கு அது புரியவில்லை. புரிந்துகொள்ள முடியாது. அவள் கேட்டாள்: ''இனிமே இந்தத் தலைகால் தெரியாதவங்க வந்து மிதித்து வீசியெறியணுமா? அப்படித்தான் வெளியே வரணுமா? குரல் நல்லா யிருக்கிறபோதே, பாட்டை நிறுத்தக்கூடாதா? என்ன ஆசை இது? இன்னும் அது தீரலையா?''

''ஊம் . . .'' ஒரு முடிவுக்கு வரமுடியாத நிலையைக் காட்டுகிற முனகலாக இருந்தது அது.

கார்த்தியாயினி கூறினாள்: ''அவங்க உங்களை வேலையிலேருந்து நீக்கிடுவாங்க. அவமானத்தை வரவழைக்கணுமா? மதராஸிலிருந்து இங்கே வருகிற அந்த மேனனை இந்தப் பதவியில் அமர்த்தணும்னு அவங்க நினைக்கிறுங்கன்னு அன்னைக்குச் சொன்னீங்களே. மேனனும் ஒரு கம்யூனிஸ்டுனுதானே சொன்னீங்க?''

''தலைமைக் காரியதரிசி பதவிமீது கண் வைத்திருக்கிற ஆர். டி. மேன னுடைய நெருங்கிய உறவினர்களாக இரண்டு கம்யூனிஸ்ட் எம். எல். ஏக்கள் இருக்கிறார்கள். அவர்மீது அக்கறையும், அவருக்குச் செல் வாக்குமுள்ள இரண்டு மந்திரிகளும் இருக்கிறார்கள். மலபார் பிரதேசத்தி லிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற, பி. எஸ். பி. அங்கத்தினர்கள் உள்ளிட்ட அத்தனை சட்டசபை உறுப்பினர்களும் அவருக்கு ஆதரவாக நிற்கிறார்கள். இன்றைய நிலைமை இதுதான்'' என்றார் கேசவபிள்ளை. அவர் மேலும் சொன்னார்: ''அன்று தலைமறைவாக இருந்த கம்யூனிஸ்டுகள்

மதருஸுக்குச் சென்றுல் தங்கியிருப்பது அவருடைய வீட்டிலேதான். அவர் ஒரு கம்யூனிஸ்டுதான். சந்தேகமே இல்லை.''

''அப்போ அவங்க அவரையே இந்தப் பதவியில் உட்காரவைப்பாங்க. சந்தேகமே இல்லே. இனிமே அவங்க செய்யப்போறதெல்லாம் உங்க ளோட குறைகளைக் கண்டுபிடிக்கிற வேலைதான். அதுக்கெல்லாம் நாம்ப ஏன் இடம் கொடுக்கணும்?'' என்றுள் கார்த்தியாயினி.

அப்படி ஆயுதத்தைக் கீழே போட்டுவிட்டுத் தோல்வியை ஏற்றுக் கொள்ள கேசவபிள்ளை தயாராயில்லை. ''அப்படிப் பயந்து ஓடிப் போக முடியுமா? நான்கூட இந்த நாட்டிலே பிறந்து வளர்ந்தவன்தானே? அது மட்டும் அல்ல, அப்படிப் போட்டுவிட்டுப் போகக்கூடாதென்று வற்புறுத்துகிறவர்களும் இருக்கிறார்கள்.''

''யார்? மாத்யூவும் லூக்கோஸும்தானே?'' என்றுள் அவள்.

''இல்லை. அவர்கள் மட்டும் அல்ல, ஏராளமான அதிகாரிகள்கூட எனக்குப் பக்கபலமாக நிற்கிறார்கள். அவர்கள் ஒன்றுபட்டுச் செய லாற்றவும் தயார். தலைகால் தெரியாத கிளர்ச்சிக்காரர்கள் ஆட்சி நடத்தி வந்திருக்கிறார்கள். இவர்களிடம் நாட்டைக் குட்டிச்சுவராக்கி விட்டுப் போகமுடியுமா? அது சரிதானு? இந்த நாட்டில் கம்யூனிஸ்டுகள் மட்டுந்தானு?''

எப்படியும் கணவர் வேலையிலிருந்து விலகி வரவேண்டுமென்பதுதான் கார்த்தியாயினியின் நோக்கம். அது ஒன்றுமட்டுந்தான். அவள் கேட்டாள்: ''இப்போ நீங்கல்லாம் சேர்ந்து நாட்டைக் காப்பாற்றப் போறீங்களா?''

''காப்பாற்றவேண்டும். காப்பாற்றுமல் இருக்க முடியுமா? அறிவு, மானம், மரியாதை ஒன்றும் இல்லாதவர்கள் ஆட்சிக்கு வந்துவிட்டனர். நாடு அபாயத்துக்குள்ளாகியிருக்கிறது. பிடித்து நிற்கத்தான் வேண்டும். அது தவிர்க்க முடியாதது'' என்று சொல்லிவிட்டு, எக்காரணத்தைக் கொண்டும் வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டு விலகிச் செல்லக் கூடாதென்று வற்புறுத்துகிறவர்களுடைய ஒரு பட்டியலையே மனைவி யிடம் கூறினர் கேசவபிள்ளை. அந்தப் பட்டியலில் அதிகாரிகள் இருக்கிறார்கள், அரசியல்வாதிகள் இருக்கிறார்கள், கட்சிச் சார்பு இல்லாத பிரமுகர்கள் இருக்கிறார்கள். அவர் மேலும் கூறினர்:

''அந்த மேனன் இங்குள்ள எல்லாவற்றையும் மலபாருக்குக் கடத்திக் கொண்டு போய்விடுவார். அதுதான் அவருடைய நோக்கம். மந்திரிகள் அதை ஒப்புக்கொள்வார்கள். அப்படி விட்டுக் கொடுக்கக் கூடாது.''

அவர் மனைவியிடம் உறுதியுடன்தான் பேசினர்.

* * *

புதிய மந்திரிசபை சத்தியவாசகம் சொல்லிப் பதவியேற்கும் நாள் வந்து விட்டது. கேசவபிள்ளைக்கு மனச்சஞ்சலத்துடன்தான் அன்றைய பொழுது விடிந்தது. இதற்குமுன் எப்போதுமே ஏற்பட்டிராத மனச்சஞ்சலம்,

கெட்ட காலம் உதயமாகியிருக்கிறதென்று அவருக்குத் தோன்றியது. ஏதேதோ ஆபத்துக்கள் தம்மை எதிர்நோக்குகின்றன. அவை என்னென்ன என்று அறிந்துவிட்டால், அது ஆறுதலாக இருக்கும். வேலை போவதாயிருந்தால் போகட்டுமென்று கருதுவதற்கான மனவலிமை அவருக்கு ஏற்பட்டது. நாடு குட்டிச்சுவராகப் போவதாயிருந்தால் . . . அது ஒரு பெரிய பிரச்னையாக அவருக்குத் தோன்றவே இல்லை. நாடு அழிவதாயிருந்தால் அழிந்து போகட்டும்! எல்லாவற்றையும் மலபாருக்குக் கடத்திக் கொண்டு போவார்கள் என்ற, திருவனந்தபுரவாசிகளுடைய பயங்கூட அவரைத் துன்புறுத்தவில்லை. திருவனந்தபுரம் நகரமே சூன்னியமாகி விட்டாலும் அவருக்கு ஒரு பொடலங்காயும் இல்லை. திருவனந்தபுரத்தின் மீது அவருக்கு அவ்வளவு அன்பு ஒன்றுமில்லை. கம்யூனிஸ்டுகளுடன் இரண்டறக் கலந்து வாழவேண்டுமென்பதுதான் தலைவிதி என்றால்—ஒரு சந்தர்ப்பத்தில் காங்கிரஸ்காரர்களை அவர் வெறுத்திருந்தவர்தாமே? பின்னர் அவர்களுடன் ஒத்துழைக்கவில்லையா? அவ்வாறு கம்யூனிஸ்டுகளுடன் ஒத்துழைக்கலாம் அல்லவா? அப்படியிருக்கையில் ஏன் இந்த மனச்சஞ்சலம்? இனிமேல் பணம் சேர்த்து வைப்பதற்கான வாய்ப்புகள் இல்லாதாகிவிடுமா? இனிமேல் உள்ளதை வைத்துக்கொண்டு உயிர் வாழ்ந்தால் போதும் அல்லவா?

இல்லை, இவற்றில் ஒன்றுகூட அவரை அலைக்கழிக்கிற பிரச்னை அல்ல. தேவையானதெல்லாம் அவரிடம் உண்டு. மேலும் கிடைப்பதாயிருந்தால் விட்டுவிடமாட்டார். நாடு சுதந்தரம் அடைந்தபோது இனிமேல் எதையும் எதிர்பார்க்கவேண்டாமென்று கருதியவர்தாமே? அதற்குப் பிறகுதானே, இருமடங்காகச் சம்பாதித்தார்? இன்னமும் அத்தகைய ஆசையிருந்தால், அந்த ஆசையைக் கைவிட வேண்டும் என்பதில்லை. கம்யூனிஸ்டுகள்கூட இந்த நாட்டிலே பிறந்தவர்கள்தானே? இந்த நாட்டின் தாய்ப்பாலைப் பருகி வளர்ந்தவர்கள். காங்கிரஸ்காரர்களைப் போன்று, நல்லதும் தீயதுமான அனைத்துப் பரம்பரைப் பழக்க வழக்கங்களுடைய வாரிசுகள்தான் கம்யூனிஸ்டுகளும். அண்ணன் தம்பிகள் என்றே வைத்துக்கொள்வோம். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேகூடப் பணம் சேர்க்கமுடியும். பணம் என்றால் அவர்களுக்கு என்ன, கசக்குமா? அவர்களுடைய வழி என்ன என்பதைக் கற்றறியச் சிறிது காலம் பிடிக்கும். அவ்வளவுதான். அதுகூடக் கேசவபிள்ளையைப் பொறுத்தவரையில் ஒரு பிரச்னையே அல்ல. அப்புறம் இந்தச் சஞ்சலத்துக்குக் காரணம் என்ன? தெளிவாகத் தெரியவில்லை. சில மணி நேரத்துக்குப் பிறகு அது ஒரு பதற்றமாக, பயமாக மாறியது. ஏதோ பெரிய விபத்து ஒன்று நெருங்கி வருகிறது. அது என்னவென்றுதான் புரிந்துகொள்ள முடியவில்லை.

அன்றைய தபால் மேஜைமீது வந்துவிட்டது. வழக்கத்துக்கு மாறாக அன்று அவரே கடிதங்களைப் பகுத்தெடுத்தார். ஏதோ ஒரு கடிதத்தை எதிர்பார்க்கிறாற்போல் தோன்றியது. அவருடைய கைவிரல்கள் நடுங்கிக்

கொண்டிருந்தன. கடிதங்களின் குவியலில் ஒன்று அவருடைய கவனத்தைக் கவர்ந்தது. விலாசத்தைப் படித்துப் பார்த்தார். கையெழுத்து நன்கு அறிமுகமானதுதான். திருவனந்தபுரம் முத்திரை தான் அதன்மீது பதிக்கப்பட்டிருந்தது. இதயத் துடிப்புடன் கேசவபிள்ளை அதைப் பிரித்துப் பார்த்தார்.

மிகவும் சிறிய கடிதம் அது. அறிமுகமான கையெழுத்து. தெளிவுபட எழுதப்பட்ட எழுத்துக்கள்.

தன்னியானந்தாசிரமம்,
4—4—1957

என் இதயேசுவரனுக்கு,

நான் தங்கள் ஆத்மாவைச் சிறைப்படுத்திவிட்டேன். நான் என் றென்றைக்குமாகத் தங்களுக்குச் சொந்தமாகிவிட்டேன். இனிமேல் அவ்வளவு எளிதிலே என்னை மிதித்துத் தள்ளிவிட முடியுமென்று எண்ண வேண்டாம். தாங்கள் எனக்குச் சொந்தமாகிவிட்டீர்கள். ஆயிரம் முத்தங்கள்!

இப்படிக்கு
தங்கள் அடிமை
தங்கம்.

கேசவபிள்ளைக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆத்மாவைச் சிறைப்படுத்தி விட்டாளா? இதன் பொருள் என்ன? அவருடைய ஆத்மா பறவைபோல் பூரண சுதந்தரமானது. அது எந்த இடத்திலும் காவலுக்குள்ளே அகப் பட்டுக்கொண்டதில்லை. கேசவபிள்ளைக்குப் புரியவில்லை. கார்த்தியாயினி யால்கூட அந்த ஆத்மாவைக் கூட்டிலடைத்து வைக்கமுடியவில்லை.

அவள் என்றென்றைக்குமாகக் கேசவபிள்ளைக்குச் சொந்தமாகியிருக் கிறாளாம்! அது ஒருவேளை உண்மையாக இருக்கலாம். என்று வேண்டு மானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் ஒரு சமிக்ஞை செய்தால் போதும்—அவள் வந்துவிடுவாள். சொல்கிறபடி எதை வேண்டுமானாலும் செய்து தருவாள். ஒரு பஞ்சுத் துகள்போல் பறந்து நடக்கிற அவள் அந்த அளவில் இருந்துவருகிறாள்.

அவ்வளவு எளிதிலே அவளை மிதித்துத் தள்ளிவிட முடியாதாம். அவளைத் தமக்கு வேண்டாமென்று தெளிவாகவே சொல்லியிருக்கிறார் கேசவபிள்ளை. அவளுடைய எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் அவர் செய்துவைத்திருக்கிறார். இருந்தும் தான் விலகிச் செல்லமாட்டேன் என்று சொல்கிறாள்? விட்டுத் தள்ளிவிட முடியுமென்று எண்ணவேண்டாமாம்! இதன் பொருள் என்ன? ஒரு சந்தர்ப்பத்தில் கண்டிப்பாகச் சொல்லிவிட்டதுதானே? ஆம், தெளிவா கத்தான் சொல்லியிருக்கிறார். சொல்லும்போது ஏதேனும் தவறு ஏற்பட் டிருக்குமா? சிந்தித்துப் பார்த்தார். ஒன்றுமே நினைவுக்கு வரவில்லை. என்ன ஆனாலும் இனிமேல் ஒருபோதும் அவளுடன் எந்தவிதமான

உறவினையும் வைத்துக்கொள்வதில்லை என்று உறுதியான முடிவுக்கு வந்து விட்டார்.

இன்னமும் இருக்கிறது . . . ''தாங்கள் எனக்குச் சொந்தமாகி விட்டீர்கள்.'' அவளுக்குச் சொந்தமா? எங்ஙனம்? அப்படி ஒருத்தியால் உரிமை கொள்ள முடியுமா? மிக முக்கியத்துவம் உள்ள வாசகம் அது தான். ''தாங்கள் எனக்குச் சொந்தமாகிவிட்டீர்கள்.'' கண்டிப்பான முறையிலே சொல்லியிருக்கிறாள்! அந்த வாசகத்துக்குக் கீழ்க்கோடு போடப்பட்டிருந்தது. அவளுடைய உரிமை வாதந்தான் என்ன?

இந்தப் புதிய தந்திரம் என்னவென்று கேசவபிள்ளைக்குப் புரியவில்லை. இதற்கு அடிப்படையான ஆதாரம் என்ன? இன்னமும் தம் வாழ்க்கை யிலே புகுந்து அதைக் கெடுக்கும் நோக்கமா? அவளுக்கு இப்போது தந்திரங்கள் பல தெரியும். எல்லாவற்றையும் கற்றுக்கொண்டிருக்கிறாள். முன்பெல்லாம் எந்தத் தந்திரத்தையும் அவள் அறிந்திருக்கவில்லை. இன்று அப்படி அல்ல. குமரி முனையிலே அவள் தம்மை அவளுடைய வலையிலே சிக்கவைத்தாள். அந்தத் தந்திரத்தை நினைவுகூர்ந்து பார்த்தார் கேசவ பிள்ளை. நன்முக உருவாக்கப்பட்ட ஒரு திட்டத்தின் பகுதியாகவே இருந் தது அது. அதன் பிரவாகத்திலே பட்டு அறிவிழந்து மதிமயங்கி வெகு தூரம் மிதந்து சென்றார். இனிமேல் இன்னொரு தந்திரத்தைக் கடைப் பிடிப்பாள். அவள் அதற்கான ஆயத்தம் செய்திருப்பாள். அது என்ன வாக இருக்கும் என்பதைப்பற்றியே கேசவபிள்ளை யோசித்தார். என்ன தான் ஆகட்டுமே. அதிலே மயங்கிவிடாமல் உறுதியாக நிற்கவேண்டும். ஆனால், அப்படித் தம்மால் நிற்கமுடியுமா என்பதுதான் அவருடைய பயம்.

கருமம்! இது மாறுத நோயாகிவிட்டிருக்கிறது. அடிக்கடி வந்து துன்புறுத்துகிறது. கடன் பட்டிருப்பது உண்மைதான். அதிலிருந்து எப்படி விடுவித்துக்கொள்வது? அது இப்படி நீடித்து வருகிற கடனாக இருக்கும் என்று அறிந்திருந்தால் அந்த உதவியை நிராகரித்திருக்கலாம். மனநிம்மதி கிடைத்திருக்கும். இந்த மாதிரியான புதிது புதிதான உரிமை வாதங்களின் உருவமும், உள்ளடக்கமும் அவரைப் பயமுறுத்தவே செய்தன. இதிலிருந்து தப்பித்துக்கொள்ள ஒரே ஒரு வழிதான் உண்டு. பாறைபோல் உறுதியாக நிற்கவேண்டும். நிர்ணயமான முடிவிலே உறுதியாக நிற்கவேண்டிய பிரச்னையுங்கூட!

கேசவபிள்ளை அந்தக் கடிதத்தை ஒரு முறைகூடப் படித்துப் பார்த் தார். அதற்குப் புதிதானதோர் உள்ளடக்கம் இருப்பதாகத் தோன்றி யது. எழுத்துக்களெல்லாம் வழக்கத்தைவிடத் தெளிவானவையாக இருந்தன. தயக்கம் இல்லாத அழைப்பு. 'இதயேசுவரன்!' எழுதுவது 'தங்கள் அடிமை!' அவருடைய உதடுகள் புன்னகையால் சிறிது கோணலாயின. இதயேசுவரன்! அவளுக்கு காதல் கடிதம் எழுதத் தெரியும். அவர், அவளுக்கு ஒருபோதும் காதல் கடிதம் எழுதியதில்லை. அந்த உறவு அத்தகையதாக இருக்கவில்லை. ஏதாவதொரு குறிக்

கோள் இல்லாத உறவாக இருந்திருக்கிறதா? அவளுக்குக் காதல் கடிதம் எழுதத் தெரியும். அது மட்டும் திண்ணம். ஒருவேளை அவள் ராம சந்திரன் நாயருக்குக் காதல் கடிதம் எழுதியிருப்பாள். அந்தப் பழக்கம் இருக்கும். அவளுடைய இதயத்திலே எந்தக் காலத்தில், ஒருவன் ஈசுவரனாக இருந்திருக்கிறான்? தாம் அந்த இதயத்தின் ஈசுவரனாக இருந்திருக்கிறோம் என்று கேசவபிள்ளை கருதியதில்லை. அவ்வாறு அவளுடைய இதயத்தைத் தனக்குச் சொந்தமாக்க முடிந்திருக்கிறதென்றோ, முடியுமென்றோ அவர் எண்ணியதில்லை. அவளுக்குத் தேவையாக இருந்தது அன்பு அல்ல, கணவன் அல்ல! வேறு என்னவென்பது அவருக்குத் தெரிந்த விஷயந்தான். அந்தச் சோதனையிலே தோல்வி கண்டவர்தாம் அவர். நிராகரிக்கப்பட்டவர்கூட. இவ்வாறு இருக்கையில் அவர் அவளுடைய இதயேசுவரனாகிவிடுவது எப்படி? இது ஒரு கபட தந்திரம். காதலை நடித்துக் காட்டுகிறாள்.

'தங்கள் அடிமை, தங்கமாம்!' இவ்வாறு அவள் தன் போலிக் காதலுக்குக் கிரீடம் அணிவித்திருக்கிறாள். அவளை ஒருபோதும் அவர் தங்கம் என்றழைத்த ஞாபகம் இல்லை. அப்படிப்பட்ட ஒரு செல்லப் பெயரை, அவர் சொல்லியழைக்கவேண்டுமெனக் கருதி அவளாகவே வைத்துக்கொண்டிருக்கிறாள் என்று கேசவபிள்ளைக்குத் தோன்றியது. தங்கமாம்! கலப்படமில்லாத தனித் தங்கம்! அப்பப்பா! என்ன வஞ்சனை இது?

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் அந்தக் கடித வாசகங்களிலே உற்சாகம் கரை புரண்டோடியது. அந்தக் கடிதத்தையே பார்த்தவாறு எவ்வளவு நேரம் அமர்ந்துவிட்டார் என்று அவருக்கே தெரியவில்லை. மூளையைக் குடைந்து யோசித்துப் பார்த்தபோதிலுங்கூட அதிலிருந்து ஒரு துப்பும் விளங்கவில்லை. புதியதொரு தாக்குதல் வரப் போகிறதென்று மட்டும் புரிந்துகொண்டார்.

உத்தியோக சம்பந்தமான தஸ்தாவேஜுகள், கடிதங்கள் ஆகியவற்றால் மேஜை மூடப்பட்டுக் கிடந்தது. அவர் கவனம் எதிலும் பதியவில்லை. அன்றைய தினம் எதிலும் கவனம் செல்லாது. இதற்குமுன் ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அது தலைமைக் காரியதரிசியாகப் பதவியேற்ற சந்தர்ப்பத்தில்தான். அந்தச் சந்தர்ப்பம் அவருடைய நினைவிலே இப்போதுகூடப் பசுமையாகவே இருந்து வருகிறது. அன்றைய தினத்திலே முதல் முதலாக மேஜைமீது பார்த்தது அவள் எழுதிய காகிதத்தைத்தான். ராஜிநாமாக் கடிதம். அதைப் படித்து முடித்தபின் எந்த வேலை செய்யவும் அவரால் இயலவில்லை. அனைத்து அலுவல்களையும் அடுத்த நாளைக்கு ஒத்திப் போட்டார். இன்றுகூட அதே நிலைமைதான். இரண்டாவது கடிதம் இது. இது வெறுப்பைத் தருகிற காதல் கடிதம். அழகாக எழுதப்பட்டிருக்கிறது! எதையும் புரிந்துகொள்ள முடியவில்லை.

மந்திரிகள் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்கிற நேரமாகிவிட்ட தென்று அலுவலகச் சிப்பாய் வந்து சொன்னான். அதைக்கூட சீஃப் செக்ரடரி மறந்திருந்தார்போல் தோன்றியது. அந்த வைபவங்களிலே கேசவபிள்ளை கலந்து கொண்டாரேயன்றி, உற்சாகத்துடன் காணப்பட வில்லை. அரசாங்கத் தலைமை அலுவலகத்திலே தம் அமைச்சரவை முழுவதற்குமாக முதலமைச்சர், உத்தியோகஸ்தர்களோடு ஒரு சிறு பிரசங்கம் செய்தார். அவர் உத்தியோகஸ்தர்களின் ஒத்துழைப்பைக் கோரினார். அரசாங்க ஊழியர்களும் அதிகாரிகளும் அமைச்சர்களும் ஒன்றுசேர்ந்து நடத்திச் செல்லவேண்டிய ஒன்றுதான் ஆட்சி என்பதை அவர் தெளிவுபடுத்தினார்.

அலுவலர்களின் சார்பில் பதில் அளிக்கவேண்டிய பொறுப்பு தலைமைச் செயலரைச் சார்ந்தது. ஆனால் அவர் வெறும் சடங்கை மட்டும் நிறைவேற்றினார். உயிர்த் துடிப்பில்லாத பிரசங்கம். இத்தகைய சந்தர்ப் பங்களில் தலைமைச் செயலர் பேசியிருக்கவேண்டியது இப்படியல்ல என்று எல்லாருக்கும் தோன்றியது. அந்தக் கட்சி ஆட்சிக்கு வருவதைக் கேசவ பிள்ளை விரும்பவில்லை என்றுகூடப் பரவலாகப் பேசப்பட்டது. மந்திரிகளும் தலைமைச் செயலரும் ஒன்றுபட்டுச் செயலாற்றுவார்கள் என்ற நம்பிக்கை தலைமைச் செயலக அதிகாரிகளிடம் காணப்படவில்லை. இதற்குமுன் இத்தகைய சந்தர்ப்பங்களில் அவர் நடந்துகொண்டதற்கும் இப்போது நடந்துகொள்வதற்குமிடையில் பெரிய வித்தியாசம் கற்பிக்கப்பட்டது. அதைப்பற்றிப் பலர் உதாரண பூர்வமாகப் பேசிக்கொண்டனர். மந்திரிகள்கூட சீஃப் செக்ரடரியின் சுறுசுறுப்பில்லாத நிலையைப்பற்றிப் புரிந்துகொண்டனராம்!

அவருடைய பிரசங்கம் மூன்றே மூன்று வாசகங்களில் முடிவடைந்தது. அவரால் பேசமுடிந்தது அவ்வளவுதான். மந்திரிகள்மீது, அல்லது வரலாற்றைப் படைத்து வோட்டுப் பெட்டியினூடே கம்யூனிஸ்டு கட்சி ஆட்சி பீடமேறிய சூழ்நிலையைக் குறித்து அவருக்கு வெறுப்போ எதிர்ப்போ ஏற்படவில்லை. மந்திரிகளில் இரண்டு மூன்று பேர் அவருக்கு அறிமுகமானவர்கள். சில சம்மேளனங்களில் அவர்களோடு பழகியிருக்கிறார். மற்றவர்களோடு நேரடியாகப் பழகியதில்லை. ஆயினும், அவர்களைப் பார்த்தபோது, முதல் பார்வையிலே சில நபர் களைப் பார்க்கும்போது சிலருக்கு ஒருவிதமான வெறுப்பு ஏற்படுவ தில்லையா?—அத்தகையதொன்றுமே அவர்கள்மீது ஏற்படவில்லை. ஏற்கனவே ஆட்சி நடத்திய மந்திரிகளைப் பார்த்தபோது என்ன தோன்றிற்றோ, அதுதான் இந்த மந்திரிகளைப் பார்த்தபோதும் கேசவ பிள்ளைக்கு ஏற்பட்டது. தங்கம்மாவின் கடிதம் சிருஷ்டித்த கலக்கந் தான் அவருடைய உற்சாகமின்மைக்குக் காரணம். அந்தக் கடிதம், முக்கியத்துவம் வாய்ந்த அந்த நாளில் அவர் மனத்திலே அத்தகைய பதற்ற நிலைமையை உருவாக்கியிருந்தது. வரக்கூடிய நாட்களில் அவரது வாழ்க்கைகூட அதனால் பாதிக்கப்படலாம்.

அரசாங்க உயர்மட்டத்தில் ஏற்பட்டிருக்கிற அந்தத் தவறான எண்ணத்தை எப்படிப் போக்குவது? எல்லாரும் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது திண்ணம். எதற்கும், தாம் ஒரு தடையாக நிற்கக்கூடாது; எந்தக் கருத்தையும் வெளியிடக்கூடாது. மந்திரிகள் என்ன சொல்கிறார்களோ அதைச் செய்வது; தம் சொந்தக் கருத்தையும், தனிநபர் பெருமையினையும் கொஞ்ச நாட்களுக்கு மறைத்துவைப்பது—இத்தகைய கொள்கைகளைக் கடைப்பிடிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார் கேசவபிள்ளை. வேறு எந்தப் பாதையும் அவருக்குத் தென்படவில்லை.

கணவர் முகவாட்டத்துடன் இருப்பதைக் கார்த்தியாயினி கவனிக்கத் தான் செய்தாள். உத்தியோகமே வேண்டாமென்று வலியுறுத்துகிற அந்தப் பெண்மணிக்குக் கணவருடைய கவலை தோய்ந்த தோற்றம் ஒரு பெரிய பிரச்னையாகத் தோன்றவே இல்லை.

திருவனந்தபுரம் நகர மாந்தர்களிடையில் அந்த விஷயங்களெல்லாம் பேச்சுக்கு விஷயமாகிவிட்டன. யூகங்களும் அனுமானங்களும் பரவலாக இருந்தன. எதிர்காலத்தைப்பற்றிய சர்ச்சைகளும் நடைபெறலாயின. பலர் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால், கவலையற்றவர்கள் யாரும் இல்லை. சொந்த நலன்களுக்குக் கெடுதல் ஏற்படுமெனக் கருதிக் கவலையடைந்தவர்கள்கூட இல்லை. ஆனால் கருத்து வேற்றுமையுள்ள ஒரு சிந்தனைப் போக்கு திருவனந்தபுரத்தில் பரவியது.

கம்யூனிஸ்டுகள் விரும்புவது திரு. ஆர். டி. மேனன் அவர்களைத்தான். அவர் சீஃப் செக்ரடரிப் பதவியில் அமர்த்தப்படுவாராஞல், அது திருவாங்கூர்—கொச்சிப் பகுதியினருக்கு மிகப் பெரிய கெடுதல்தான். மலபார் பகுதி நலன்களை மட்டுந்தான் அவர் கவனிப்பார். இந்த நிலைமையிலே இன்னெரு பகுதியினர், கேசவபிள்ளையால் திருவனந்தபுரத்துக்கு என்ன நன்மை ஏற்பட்டிருக்கிறதென்று கேட்டனர். அவர் தான் வடக்கத்தியானுச்சே! திருவனந்தபுரத்தின் எதிராளி. ஆனால், ஒரு விஷயத்தை அவர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். ஆர். டி. மேனனை விடப் பரவாயில்லை, கேசவபிள்ளை. கொச்சிக்காரர்கள்கூட இந்தச் சந்தர்ப்பத்தில் தங்கள் நலன்களைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தனர். குஞ்ஞி சங்கரமேனனை ஏன் சீஃப் செக்ரடரியாக்கக்கூடாது? அவர்கள்கூட ஆர். டி. மேனனைவிடக் கேசவபிள்ளை சீஃப் செக்ரடரியாயிருந்து வருவதையே விரும்புகிறார்கள். மந்திரி சபையில் மலபார் பகுதியினருடன் சேர்ந்து நிற்பதற்கான சாத்தியப்பாடுதான் இருந்துவருகிறது. திருவாங்கூர்—கொச்சிப் பகுதிகளிலிருந்து வந்திருக்கிற மந்திரிகள் பெரிய ஆதர்சவாதிகள். கேரளம் ஒன்றுபட்டு இயங்கவேண்டுமென்று மைதானப் பிரசங்கம் புரிகிறவர்கள்தான் அவர்கள். ஆனால், மலபார் பகுதியிலிருந்து வந்திருக்கிறவர்கள் அந்த ஏரியாவின் பிரச்னைகளைத் தீர்க்க வேண்டுமென்ற அக்கறையும் ஆவலும் கொண்டவர்கள்.

இந்தச் சூழ்நிலையிலேதான், மாநிலக் குழுச் செயலாளர் தோழர் கோபியுடைய ஒரு பிரசங்கம் பத்திரிகைகளிலே வெளியிடப்பட்டது. அந்தப் பிரசங்கம் மிகவும் பொருள் படைத்த ஒன்றெனப் பரவலான கருத்து நிலவியது. அரசாங்க அதிகாரிகளுக்கு, கட்சி, ஸ்தாபன ரீதியாகக் கொடுத்த முன்னெச்சரிக்கையாகும் அது. ஊழலைப்பற்றி வழக்கமாகச் சொல்வதையெல்லாம் சொல்லிவிட்டு, 'புதிய அமைச்சரவையின் முற்போக்கான திட்டங்களுக்கு இசைந்தவாறு செயல்பட முடியாதவர்கள்—அவர்கள் எவ்வளவு பெரிய பதவியில் இருப்பவர்களாயினும் சரியே—வேலையை விட்டு விலகிச் செல்வதுதான் நல்லது என்று சந்தேகத்துக்கு இடமின்றி அந்தப் பிரசங்கத்தில் தெளிவுபடுத்தியிருந்தது. சில அதிகாரிகளுக்கு இந்தச் சர்க்கார்மீது வெறுப்பு இருக்கலாம். பதவியேற்பு விழாவின்போது சிலர் நடந்துகொண்ட முறையைப் பார்த்தவர்கள் எல்லாரும் அதைப் புரிந்துகொண்டிருக்கின்றனர். கம்யூனிஸ்டுக் கட்சி இதையெல்லாம் பார்த்துப் புரிந்துகொண்டுதான் இருக்கிறது. மாறுபட்ட சூழ்நிலைக்குப் பொருத்தமாகச் செயல்படவும், அதற்காகத் தம்மைத் தயார்படுத்திக்கொள்ளவும் சிறிது அவகாசம் அளிக்கப்படுகிறது. அவர்கள் ஒழுங்காக நடந்துகொள்வார்களா என்பதை அறியவேண்டும் . . . பிரசங்கத் தோரணை இவ்வாறு இருந்தது. கேசவபிள்ளையை மனத்திலே வைத்துக்கொண்டு நிகழ்த்திய பிரசங்கம்தான் இது என்பதில் யாருக்குமே சந்தேகமில்லை. கேசவபிள்ளையை அறிந்தவர்தான் கோபி என்பது பலருக்குத் தெரியும். கேசவபிள்ளை கம்யூனிஸ்டுக் கட்சியின் பார்வைக்கு இலக்காகிவிட்டாரென்று பொது மக்கள் பேசிக்கொண்டனர். ஆயினும், இந்தச் சூழ்நிலையில், அவருக்கு ஆதரவாகத் திருவாங்கூர்—கொச்சிப் பகுதிகளைச் சேர்ந்த பல அதிகாரிகள் ஒன்றுபட்டு நின்றார்கள். அவருக்குத் தம் வாழ்க்கையிலே இத்தகைய அநுபவம் முதல் முதலாக ஏற்படுகிறது. நான்கு நபர்கள் தமக்கு ஆதரவாக ஒன்றுசேர்ந்து நிற்கிறார்கள்! ஆனால், கேசவபிள்ளை அவர்களை நம்பவில்லை.

தங்கம்மா தினசரி கடிதம் எழுதிக்கொண்டிருந்தாள். பிரச்னை ஒன்றுதான். வாசக அமைப்புக்கள்தான் மாறுபட்டிருந்தன. அவள் கேசவபிள்ளையைக் கூட்டில் அடைத்து விட்டாளாம்!

முதலில் சில நாட்களுக்கு அவர் அந்தக் கடிதங்களைக் குப்பைத் தொட்டிக்குள்ளே வீசியெறிந்தார். ஆனால், பின்னர் அவற்றை எல்லாம் பொறுக்கியெடுத்துக்கொண்டார். இரகசியம் வெளிப்பட்டு விடுமென்ற பயந்தான். இவளுக்கு என்ன பைத்தியமா? தினசரி எழுதிக் கொண்டிருக்கிறாளே?

அண்மைக் காலமாக அந்தக் கடிதங்களால் அவருக்குச் சஞ்சலம் ஏற்படுவதில்லை. ஒருமுறை பார்த்துவிட்டுக் கிழித்து வீசியெறிந்து விடுவார். மிக முக்கியத்துவம் வாய்ந்த அந்த நாளில், அவருடைய பிற்கால வாழ்க்கையைச் சீரழிக்கவே அவள் அந்தக் கடிதத்தை அனுப்பி

வைத்தாள். அன்றைக்கு அந்தக் கடிதம் அனுப்பப்படாமல் இருந்திருந்தால், சத்தியவாசகம் சொல்லப்பட்ட வேளையிலே மிகவும் கௌரவமாகத் தகுந்த முறையில் நடந்துகொண்டிருக்க முடியும். யாருக்குமே தவறான எண்ணம் ஏற்பட்டிருக்காது. எதற்காக இவ்வளவு தூரம் சஞ்சலமடைந்தோம் என்றுகூட அவர் சிந்தித்துப் பார்க்காமல் இல்லை. தம் வாழ்க்கையைத் தாமே சீரழித்துக்கொள்ளத்தான்!

அரசாங்கத் தலைமைச் செயலகத்தில் பல மாறுதல்கள் நடைபெறப்போகின்றன என்ற வதந்திகள் உலாவின. மந்திரி சபை மட்டத்திலும், கட்சியின் உயர்ந்த மட்டத்திலும் சர்ச்சைகள் நடைபெற்றன. இலாக்கா அதிகாரிகளையே மாற்றி நியமிப்பதற்கான யோசனைகளும் உள்ளன. புதிய அமைச்சரவையை ஆதரிப்பவர்களாகப் பார்த்து நியமிக்க இருக்கிறார்களாம். தொழிலாளர் கூட்டுறவுக் கழகங்கள் வழியாகவே நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் நடைபெறவேண்டுமாம். அத்தகைய கழகங்களை மாநிலம் எங்கும் கம்யூனிஸ்டுகள் அமைத்துப் பதிவு செய்திருக்கிறார்களாம். மதுவிலக்கு இல்லாத ஏரியாக்களில் ஏலம் இல்லாமலேயே கள்ளுக்கடைகளை நடத்துவதற்கான உரிமையை, கள் இறக்கும் தொழிலாளர் கூட்டுறவுக் கழகங்களுக்கு வழங்கப் போகிறார்களாம். இவை எல்லாம் கம்யூனிஸ்டுகள் பணம் சம்பாதிக்கும் வழிமுறைகளாம். நிலச் சீர்திருத்தச் சட்டம், கல்விச் சீர்திருத்தச் சட்டம் ஆகியவற்றை நிறைவேற்றப் போகிறார்கள். இத்தகைய சீர்திருத்தங்களை அமல்படுத்துவதற்காகவே மேற்சொன்ன மாறுதல்களைச் செய்கின்றனராம்.

காங்கிரஸ் பிரமுகர்களும், திருவனந்தபுரத்திலுள்ள உத்தியோகஸ்தப் பிரமுகர்களும் கேசவபிள்ளையை அடிக்கடி வந்து சந்தித்தனர். இப்போது அவர்களுக்கெல்லாம் ஆதரவளிக்கக்கூடிய ஒரே ஒரு நபர் தலைமைச் செயலகத்தில் இருந்து வருகிறார். அவர்தாம் கேசவபிள்ளை. அரசாங்கத்தின் இந்தத் திட்டங்களை முடிந்த அளவு சிதறடித்தே ஆக வேண்டும். கேசவபிள்ளையால் இந்தத் திட்டங்களை ஆமோதிக்க முடியவில்லை.

தலைமைச் செயலகத்திலுள்ள காரியதரிசிகளை மாற்றி நியமிக்க வேண்டிய பிரச்னை அமைச்சரவையின் சர்ச்சைக்கு வந்தது. ஆர். டி. மேனன் திறமையும், அனுபவமுமுள்ள ஓர் அதிகாரி. அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தின் பொறுப்பை வகிக்கிற காரியதரிசியாக அவரை நியமிக்கவேண்டுமென்பதே மந்திரி சபையின் கருத்து. தலைமைக் காரியதரிசிக்குக்கூட அவர்மீது எந்தவிதமான அதிகாரமும் இருக்கக்கூடாது. இந்த வகையில் அபிவிருத்தி இலாக்காவைப் புனரமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை வாய் மூடி மௌனியாக அங்கீகரிக்கக் கேசவபிள்ளையால் முடியவில்லை.

அவருடைய உத்தியோக வாழ்க்கையிலே அதிகாரிகளுடன் நடந்தப்படுகிற முதல் மோதல் இது. 'கேபினட் செக்ரடரி'கூட

ஆவார் அவர். 'கேபினட்'டின் இந்தக் கருத்துமீது தமக்குள்ள எதிர்ப்பை அவர் மறைத்து வைக்கவில்லை. மேனனைப்பற்றிய தம் கருத்தினைக் கேசவபிள்ளை பகிரங்கமாகவே கூறிவிட்டார். மேனன் திறமை மிக்கவர் அல்ல என்பது பிள்ளையின் அபிப்பிராயம். அபிவிருத்தித் திட்டங்கள் தலைமைக் காரியதரிசியைத் தாண்டிச் செல்வதனால் ஏற்படுகிற கோளாறுகளை அநுபவமிக்க ஓர் அதிகாரி என்ற முறையில் அவர் ஒவ்வொன்றாக விளக்கிக் கூறினார். திறமை மிக்க உத்தியோகஸ்தர்களைப் பதவிகளிலிருந்து நீக்கிவிட்டு, அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பதவிகளில் திறமையற்றவர்களை நியமிப்பதை அவர் கடுமையாக எதிர்த்தார். உத்தியோகஸ்தர்களைப்பற்றிய கருத்துக்களைத் தெரிவிக்க உரிமை படைத்தவர் அவர்தாமே? நிர்வாக அநுபவம் இல்லாதவர்கள்தானே, அமைச்சர்கள்? அமைச்சரவையின் திட்டங்கள் அனைத்தையும் அவர் கடுமையாக எதிர்த்தார். ஏனென்றால் இது முற்றும் நிர்வாகச் சம்பந்தமான விஷயமேதான். ஆனால், அமைச்சரவை தங்கள் திட்டத்தையே அங்கீகரித்தது. கேசவபிள்ளையின் கருத்துக்கள் நடவடிக்கைக் குறிப்புப் புத்தகத்தில் இடம் பெற்றன.

''இந்தா, பார் கார்த்தியாயினீ, நீ எப்போதும் சொல்றதில்லையா, இந்த வேலை வேண்டாம், விட்டுவிட்டுப் போகலாம் என்றெல்லாம்? அதுக்கான வேலையைச் செஞ்சுட்டுத்தான் வந்திருக்கேன்'' என்று சொல்லியவாறே கேசவபிள்ளை அன்று வீட்டுக்குத் திரும்பி வந்தார்.

புதிய அமைப்பு நடைமுறைக்கு வரக் காலதாமதம் ஏற்படவில்லை. காங்கிரஸை ஆதரிக்கிற பத்திரிகைகள் அவ்வமைப்பினைப்பற்றி மிகக் கடுமையாக விமர்சித்தன. கம்யூனிஸ்டுப் பத்திரிகைகள், 'எதிர்காலச் சமூக நலன்களுக்கான உறுதியான அடித்தளம்' என்று அதைப் பாராட்டி எழுதின.

தலைமைக் காரியதரிசி, தம் கருத்துக்களைத் தெரிவிக்காத எந்த ஓர் அமைச்சரவைக் கூட்டமும் அதன்பின் நடைபெறவில்லை. கேசவபிள்ளைக்கு அதற்கான துணிச்சல் உண்டாயிற்று, தைரியம் ஏற்பட்டது. எது வந்தால் என்ன என்ற வகையிலேதான் அவர் நடந்துகொண்டார். கள் இறக்கும் தொழிலாளர் கூட்டுறவுக் கழகங்களுக்குக் கள்ளுக்கடைகளை நடத்துவதற்கான உரிமையை வழங்குவதென்றால், அது மாநிலத்தின் வருமானத்தைப் பெரிதும் பாதிக்குமென்று அவர் முன்னெச்சரிக்கை செய்தார். தொழிலாளர் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குப் பொதுவாகப் பேசி முடித்த தொகைப் பிரகாரம் பொது மராமத்து வேலைகளைக் கொடுப்பது என்ற யோசனையை அவர் மிகக் கடுமையாக எதிர்த்தார்.

ஒரே ஒரு மந்திரி சபைக் கூட்டத்தினால் அந்த யோசனையை அமலுக்குக் கொண்டுவர முடியவில்லை. மந்திரிகள் ஒரே குரலில் தங்கள் கருத்தினைத் தெரிவித்தபோதிலும் தலைமைக் காரியதரிசி தன்னந்தனியாக நின்று இடையூறுகளைச் சிருஷ்டித்துக்கொண்டிருந்தார். சட்டபூர்வமான இடையூறுகள்! அவை அனைத்தும் கேசவபிள்ளையின் படைப்புக்கள்தான்

என்பதை மந்திரிகள் நன்றாக அறிவார்கள். ஆயினும், தலைமைச் செயலரின் சட்டங்களைப்பற்றிய நுண்ணறிவுக்கு முன்னால் அவர்கள் துணையற்றவர்களாகி விட்டார்கள்.

மாநிலக் குழுச் செயலாளரான கோபி கடுமையாக விமர்சித்தார். தலைமைக் காரியதரிசியை அவர் நேரடியாகவே விமர்சித்தார். இந்த மாநில மக்களுடைய நலன்களைக் கருதி உருவாக்கிய திட்டங்களைச் சீர்குலைக்கச் சட்டங்களின் பெயரைச் சொல்லி இடையூறுகளைத் தலைமைக் காரியதரிசி விளைவித்து வருவதாக நம்பகமான தகவல் கட்சிக்குக் கிடைத் திருக்கிறதென்று கோபி குற்றம் சாட்டினார். ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டுமென்றும் எச்சரித்தார்.

அடுத்த சில நாட்களுக்குள் காங்கிரஸ் பத்திரிகைகளில் ஓர் அறிக்கை வெளிவந்தது. தொழிலாளர் கூட்டுறவு ஸ்தாபனங்களைப்பற்றிய அறிக்கை அது. கம்யூனிஸ்டுக் கட்சியின் மாவட்ட மட்டத்திலுள்ள தலைவர்கள் கான்டிராக்டர்களாக மாறுவதற்கான ஒரு தந்திரந்தான் இந்த ஸ்தாபனங்கள் என்று அந்த அறிக்கையில் ருசுக்களுடன் நிரூபிக்கப் பட்டிருந்தது. இந்தக் குறைந்த அளவு காலத்துக்குள்ளே கோபி சம்பாதித்திருக்கிற சொத்துக்களின் கணக்குகள்கூட அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தன.

திவான் ஆட்சிக் காலத்தில் ஆரம்பமாகி, பிறகு தடைப்பட்டு விட்டு வைத்திருந்ததும், பின்னர் ஊட்டிக்காடு மலைச்சாரலுக்கு எட்டிவிட்டது மான நீர் மின் திட்டத்தைத் தாற்காலிகமாக ஒத்திவைப்பதுதான் நல்ல தென்று ஆர்.டி. மேனன், மந்திரி சபைக்கு ஆலோசனை கூறினார். மாநிலத்தின் அபிவிருத்தித் திட்டங்களைப் பூரணமாகப் பரிசீலனை செய்து புனரமைக்க வேண்டுமென்ற ஒரு யோசனையையும் அவர் கூறினார். விஞ்ஞான ரீதிக்குப் புறம்பான முறையிலேதான் இதற்கு முன் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் உள்ளன என்ற கருத்தையும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறுக எல்லாவிதமான அபிவிருத்தித் திட்டங்களும் தாற்காலிக மாக நிறுத்தி வைக்கப்பட்டன. 'விரிவான ஆராய்ச்சி நடத்திய பிறகே திட்டங்களைப் புதிதாக உருவாக்க வேண்டும்' என்று முடிவாயிற்று.

அத்தியாயம் 44

தியாகியின் தந்தை

ஏதோ ஒரு சில பத்திரிகைகளில் ஒரு செய்தி முக்கியத்துவம் அளிக்காமல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. தலைமைச் செயலக வாசலிலே ஓர் அரசியல் தியாகி சத்தியாக்கிரகம் நடத்தப் போகிறாராம்.

ஒரு நாள் காலையில் சங்கரப்பிள்ளை ஒரு விளம்பர அட்டையுடன் அங்கே தோன்றினார்; அங்கேயே அமர்ந்து கொண்டார். அவரை யாருமே ஊர்வலமாக அழைத்துவரவில்லை; கோஷங்களை எழுப்பிக் கூட்டத்தைச் சேர்க்கவில்லை, துவக்கவிழாப் பிரசங்கம் நடத்தவில்லை. பிரயாணிகள் சும்மா அவரைப் பார்த்தவாறு வருவதும் போவதுமாக இருந்தனர். யாருக்காவது அநுதாபம் ஏற்பட்டிருக்குமோ என்னமோ?

காங்கிரஸ்காரர்களோ, கம்யூனிஸ்டுகளோ அதைக் கவனிக்கவில்லை. காங்கிரஸ்காரனுடைய தியாகத்துக்குக் கூலி கொடுக்கிற விஷயத்தில் கம்யூனிஸ்டுகளுக்கு அக்கறை இருக்காதல்லவா? தங்களுக்கு அவமானத்தைத் தேடிக் கொடுக்க யாரோ ஒருவன் முயற்சி செய்கிறான் என்று காங்கிரஸ்காரர்கள் கருதினர். ஒரு நாள் அந்த அட்டை மீது உண்ணாவிரதம் என்ற வார்த்தை தென்பட்டது. மறுநாள் போலீஸ் வந்து சங்கரப்பிள்ளையை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தியது.

தம் காரியம் அநேகமாகக் கைகூடிவிடும் என்ற நம்பிக்கையோடு தான் கிருஷ்ணன் திருவனந்தபுரத்துக்கு வந்திருந்தார். தம் கட்சி ஆட்சிக்கு வந்தாகிவிட்டது. இனிமேல் காலதாமதமாகிவிடாது. லஞ்சம் கொடுக்க வேண்டியிராது. மகளுடைய திருமண நாளை தேதி குறிப்பிட்டுச் சொல்லிவிடலாம்.

ஆத்ம நம்பிக்கையோடு, தைரியமாகத்தான் அவர் தலைமைச் செயலகத்துக்குள்ளே நுழைந்தார். அரசாங்கத்தின் தன்மையிலேயே மாறுதல் ஏற்பட்டிருக்கிறதல்லவா? தம் பிரச்னையின் பரிகாரம் எந்த மேஜைமீது கிடக்கிறதென்பதையும் அவர் அறிவார். கடைக்கோடியிலே ஒரு குமாஸ்தா முன்பு இருந்தார். அவரிடந்தான் சென்று கேட்க வேண்டும்.

பகல் மணி பன்னிரண்டாகப் போகிறது. அநேகமாக நாற்காலிகள் அனைத்தும் காலியாகவே இருந்தன. முன்பு பார்த்தது போலவே ஆண்களும் பெண்களும் அரட்டைக் கச்சேரியில் ஈடுபட்டிருந்தனர். வராந்தாவிலே மூன்று பேர், நான்கு பேர் அடங்கிய குழுக்களாகக் கூடி நின்றவாறு பேசிக்கொண்டிருந்தனர். எந்தவிதமான மாறுதலும்

தென்படவில்லை. அந்த நாற்காலி காலியாகத்தான் இருந்தது. அதிலே அமர்ந்திருந்த நபரைக் காணவில்லை. ஏதோ ஒரு பிரத்தியேக நிகழ்ச்சி ஏற்பட்டிருப்பதுபோல்தான் கிருஷ்ணனுக்குத் தோன்றியது.

கிருஷ்ணன் சிறிது நேரம் வரையில் அங்கெல்லாம் சுற்றி நடந்து பார்த்தார். அனேத்து இலாக்காக்களிலும் நிலைமையில் எந்தவிதமான மாறுதலும் இல்லை. அவர் திரும்பவும் அந்த நாற்காலியை நோக்கி வந்தார். அப்போதுகூட அது காலியாகத்தான் கிடந்தது. பக்கத்து வாசலிலே ஒரு பியூன் ஒரு பீடத்தின் மீது அமர்ந்தவாறு தூங்கிக்கொண் டிருந்தார். கிருஷ்ணன் அவரிடம் சென்றார்.

''ஊம்? என்ன?'' பியூன் கேட்டார்.

''அந்த நாற்காலியிலே ஒருத்தர் இருந்துக்கிட்டிருந்தாரே, அவரைப் பார்க்கணும்.'' கிருஷ்ணன் தாழ்மையுடன் சொன்னார்.

பியூன் கிருஷ்ணனை ஒரு முறை தலையோடு கால் வரையில் பார்த்தார்.

''ஒண்ணு தெரிய வேண்டியிருக்கிறது. அதுக்காகத்தான்.''

சிறிது தூரத்தில் மூன்று நான்கு பேர்கள் கூட்டமாகக் கூடி நின்று பேசிக்கொண் டிருந்தனர். அந்தக் கூட்டத்தில் இருக்கிறார் என்றார் அந்தப் பியூன். கிருஷ்ணன் அவர்களை நோக்கிச் சென்றார். அவர்கள் ஏதோ முக்கியமான விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண் டிருந்தனர். கிருஷ்ணன் சிறிதுநேரம் வரையில் அங்கேயே நின்றார். அவர்கள் பேசுவது என்ன என்பதைப்பற்றி அறிய முடிந்தது.

இவ்வாறு கூட்டம் கூட்டமாக நின்று பேசிக்கொண் டிருக்க என்ன தான் நடந்திருக்கிறது? புதிய அரசாங்கம், காரியதரிசிகள், உதவிக் காரிய தரிசிகள் ஆகியோர் விஷயத்தில் பல மாறுதல்களைச் செய்திருக் கிறது. அதைப்பற்றிய யூகங்களும் அநுமானங்களுந்தான் பேச்சுக்கு விஷயங்கள். புதிய அரசாங்கத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களை முக்கியமான இலாக்காக்களுக்கு மாற்றியிருக்கிறது. நம்பமுடியாதவர் களை மாவட்டங்களுக்கு அனுப்பியிருக்கிறது. நிதி இலாக்காவிலே புதிதாக ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

''அவர் கம்யூனிஸ்டு அநுதாபியா?'' என்று ஒரு குமாஸ்தா கேட்டார்.

''மதராஸிலிருந்து வந்தவர் அல்லவா? அந்தப் பெரியகம்யூனிஸ்டு எம். பி. இருக்கிறாரே, அவருக்கு நெருங்கிய உறவினராவார். கம்யூனிஸ்டு அநுதாபியாகத்தான் இருக்கவேண்டும்.'' மற்றொரு குமாஸ்தா பதிலுரைத்தார்.

''காரியதரிசிகளை இப்படியெல்லாம் மாற்றறாங்களே, இதிலிருந்து அவங்களோட 'ட்ரூ கலர்' என்னன்னு தெரியுது. இல்லீங்களா?''

''நிலைமையைப் பார்த்தால் அப்படித்தான் தோணுது.''

''ஆமாம், நம்ப தலைமைக் காரியதரிசி இருக்காரே, அவரை என்ன பண்ணப் போறாங்க?'' வேறொரு குமாஸ்தா கேட்டார். புத்திசாலித் தனமான கேள்வி.

''அவர்தான் ஃபஸ்ட் கிளாஸ் காங்கிரஸ்காரராச்சே.'' விஷயம் தெரிந்த இரண்டாவது குமாஸ்தா சொன்னார்.

''ஆனால் கொஞ்சம் கொஞ்சமாகச் சிவந்து சிவந்து இப்போது கெட்டியான சிவப்பாக மாறியிருப்பார். மந்திரி சபைக்கு முன்னால் அவர் 'சப்மிட்' பண்ணின பட்டியலை அப்படியே ஏற்றுக்கொண்டதாகத் தகவல். மந்திரிகளுக்கு அவர் மீது நல்ல நம்பிக்கைதான். ஊழல் ஒழிப்பு இலாக்காவைத் திருத்தியமைப்பதற்கான பொறுப்புக்கூட அவரிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.''

''பலே, பலே, பேஷ்!'' மூன்றாவது நபர் திடீரெனச் சொல்லிவிட்டார். 'தலைமைக் காரியதரிசி ராஜினாமாச் செய்யப் போகிறார். தேர்தலுக்கு நின்று வெற்றி பெற்று மந்திரி சபையில் இடம் பெறப் போகிறார்' என்று ஏற்கெனவே நிலவி வந்த வதந்திகூட அங்கே சர்ச்சைக்குரியதான விஷயமாக இருந்தது.

''அவர் என்ன அவ்வளவு முட்டாளா? காங்கிரஸ் வெற்றி பெறுதென்று அறியாதவரா அவர்? சரியான குள்ளநரியாச்சே! இப்போ என்ன ஆச்சு? கம்யூனிஸ்டுகளுக்கு மிகவும் உற்றவராகிவிட்டார்!''

''கோவிந்தபிள்ளைக்கு இத்தகைய சாமர்த்தியம் இருக்காது.''

''ஆமாம். . .தலைமைக் காரியதரிசி பென்ஷன் வாங்கிச் செல்ல எத்தனை நாட்கள் இருக்கு?'' என்று ஒருவர் கேட்டார்.

''ஜாஸ்தி இருக்காதென்று நினைக்கிறேன். மீறிப்போனால் ஒரு வருஷம், அல்லது ஒன்றரை வருஷம். அவ்வளவுதான்.''

இந்தப் பேச்சு வார்த்தைகளை எல்லாம் கவனித்தவாறு ஒருவர் பக்கத்திலேயே நின்றுகொண்டிருந்ததை அவர்கள் இப்போதுதான் கவனித்தனர்.

ஒருவர் கிருஷ்ணனிடம் கேட்டார்: ''ஊம்? என்ன வேணும்?''

''இந்தாங்க, அந்த நாற்காலியிலே இருந்தாரே ஒருத்தரு, அவரைப் பார்க்கணும்.''

அந்த நாற்காலியில் அமர்ந்திருக்கும் குமாஸ்தா, அந்தக் கூட்டத்திலேயே இருந்தார். அவர் கேட்டார்:

''ஊம்? என்ன விஷயம்?''

கிருஷ்ணன் விஷயத்தை விளக்கமாகச் சொன்னார்.

''சீக்கிரம் போங்க! வேண்டியதைச் செய்து கொடுங்க! அதுதான் ஐயா, நல்லது.'' மற்றொரு குமாஸ்தா முன்னெச்சரிக்கை செய்தார்.

''ஊம்? அதென்ன?'' என்றார் அவர்.

''வேலை போயிடுமையா. 'ஷாப்பைக் குளோஸ்' பண்ணிடுவாங்க. இவர் ஒரு கம்யூனிஸ்ட் *'ஸெல்' ஆகும். புரிகிறதா?''

*கம்யூனிஸ்டுக் கட்சி கேரளாவில் ஆட்சிக்கு வந்தபோது, நிர்வாக விஷயங்களில் கட்சியின் கீழ்மட்டத்திலுள்ள ஸ்தாபனங்கள் தலையிட்டு வந்ததாக ஒரு பிரச்சாரம் இருந்து வந்தது. கீழ் ஸ்தாபன அமைப்புகளுக்கு 'கிளைகள்' என்ற பெயரை வைத்தபின்னும், ஆரம்ப காலத்தில் அடிப்படை ஸ்தாபனமாக இருந்த 'ஸெல்' (Cell) என்ற பெயரைப் பயன்படுத்திக் கேலி செய்து வந்தனர். (மொ–ர்.)

''ஓ! புரிகிறது. இதெல்லாம் எத்தனையோ பார்த்தாச்சு. ஒரு மண்ணுங்கட்டியும் என்னிடம் நடக்காது.'' அவருக்கு அந்த முன்னெச் சரிக்கை ஒரு பொருட்டாகவே படவில்லை.

''அப்படியானால் வந்து படறபோது தெரிஞ்சுக்குங்க!''

அந்தக் குமாஸ்தா தம் நாற்காலியை நோக்கி நடந்தார். கிருஷ்ணன் தொடர்ந்து சென்றார். சிறிது நேரம் வரையில் அந்தக் குமாஸ்தா பெரிய பருமனான ரெஜிஸ்டர் புத்தகங்களைப் புரட்டிப் பார்ப்பதும், ஷெல்ஃபிலுள்ள ஃபைல்களை ஒவ்வொன்றாகப் புரட்டிப் பார்ப்பதுமாக இருந்தார். அப்புறம் சொன்னார்:

''அந்த ஃபைல் இங்கில்லை. ரொம்ப நாளைக்கு முன்னால் உங்கள் மனு ஒன்று இங்கே வந்திருந்ததாக ரிக்கார்டு இருக்கு. அதை ரெவின்யூ போர்டுக்கு அனுப்பியிருக்கிறோம்.''

கிருஷ்ணன் மரத்துப் போய்விட்டார், சொன்னார்: ''அப்படி இல்லிங்க ஸார். முன்னாலே இங்கே இருந்த அந்த ஸார் சொன்னது, அதை ஆபீட்டுக்கு அனுப்பியிருப்பதாகத்தான்.''

''அப்படியானால் அந்த ஸார் கிட்டேயே போய்க் கேளுங்க.''

கிருஷ்ணன் தளர்ந்துபோய்க் கேட்டார்: ''நான் இனி என்ன செய்யறதுங்க? இந்த மந்திரிசபை அதிகாரத்துக்கு வந்தா எல்லாம் சீக்கிரம் நடக்கும்னுதான் சொன்னீங்க. இந்தப் பணம் கிடைத்தாத் தான் அந்தக் கல்யாணம் நடத்த முடியுமுங்க. பொண்ணு பருவத்துக்கு வந்து வருஷங்களாச்சுங்க. ரெண்டு மாசத்துக்குள்ளே நடத்திவைக்கிறதாக வாக்குறுதி கொடுத்து வச்சிருக்கேனுங்க.''

அந்தக் குமாஸ்தா வேடிக்கையாகக் கேட்டார்: ''யாருக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறீங்க? பொண்ணுக்கா?''

அந்தக் கேள்விக்குள்ளே அடங்கியிருந்த விஷத்தை அந்த ஏழை வயோதிகரால் கண்டுகொள்ள முடியவில்லை. அவர் கள்ளங்கபடம் தெரிந்துகொள்ள முடியாதவராகவே பதிலளித்தார்:

''இல்லிங்க. மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்திருந்தாங்க. அவங்க கிட்டேதானுங்க. இனி நான் என்ன செய்யறதுங்க?''

குமாஸ்தா ஒரு முறை தலையாட்டினார்: ''ஓஹோ . . . அப்படியா? ஆமாம் பெரியவரே, உங்க ஊரிலே ஸெல் இருக்கா?''

பெரியவருக்குப் புரியவில்லை. குமாஸ்தா புரியும்படியாகச் சொன்னார்: ''கம்யூனிஸ்டு ஸெல்?''

''இல்லிங்க. அங்கே பிராஞ்சு (Branch) மட்டுந்தான் இருக்குதுங்க. சந்திரேசுவன்தானுங்க அதோட ஆளு!''

''பெரியவர் யாருக்கு வோட்டுப் போட்டீங்க?'' குமாஸ்தா கேட்டார். இதனிடையில் நான்கைந்து குமாஸ்தாக்கள்கூட அங்கே வந்து சேர்ந்தனர்.

கிருஷ்ணன் சொன்னார்: ''கம்யூனிஸ்டுக் கட்சிக்குங்க.''

அப்போது அங்கே வந்திருந்த குமாஸ்தாக்களில் ஒருவருக்குக் கிருஷ்ணனிடம் அநுதாபம் தோன்றியது. அவர் சொன்னார்:

''விஷயத்தைச் சொல்லியனுப்பிடுங்க மிஸ்டர்!''

''அப்படியானு பெரியவர் ஒண்ணு செய்யுங்க. ரெவின்யூ போர்டு ஆபீசிலே போயி விசாரியுங்க. அப்புறம் அக்கவுண்டு ஆபீசிலே போய்த் தேடிப் பாருங்க . . . ஆ . . . இதெல்லாம் வேணுமையா, நான் ஒரு குறுக்கு வழி சொல்லித் தர்றேன். உங்க மகளோட பெயரில் ஆலப்புழை 'டிரஷரி'யில் டிபாசிட்டு செய்திருந்த பணத்தை விட்டுக்கொடுக்கணும்னு உத்தரவு போட்ட சர்க்கார் அறிக்கையைக் காட்டி, புதிதா ஒரு மனுவை அனுப்பிவையுங்க. நான் சரி பண்ணித் தர்றேன்.'' குமாஸ்தா யோசனை சொல்லிக் கொடுத்தார்.

''எனக்குத் தரச்சொல்லி உத்தரவு போட்டதுதானுங்க ஸார்! நான் உரிமை சர்டிபிகேட்டெல்லாம் ஆஜர்படுத்தியிருக்கிறேன், ஸார்! அன்னைக்கு இங்கிருந்த ஸார் சொன்னாரு, ஆடிட்டுக்கு அனுப்பியிருப்பதாக'' என்றார் கிருஷ்ணன்.

''அப்படியானு ஒண்ணு செய்யுங்க பெரியவரே. இப்போ நீங்க போங்க. மணி ஒண்ணுச்சு. நாங்க காபி சாப்பிடறதுக்கான நேரம் இது. அப்புறம் வேலை இருக்கு. 'ஃபிரீ ஆடிட்'டிலே போயி விசாரிச்சுப் பாருங்க. அப்புறம் வாங்க'' என்றார் குமாஸ்தா.

கிருஷ்ணன் சிறிது நேரம் வரையில் வாதம் புரிந்து பார்த்தார். குமாஸ்தா அமைதியாகவே பதிலுரைத்தார்:

''நீங்க கொஞ்சம் இங்கிருந்து போயிடுங்க. தொந்தரவு பண்ணுதீங்க.''

கிருஷ்ணன் அங்கிருந்து வெளியே வந்தார். இப்படிப்பட்ட ஓர் அநுபவம் இதற்குமுன் ஏற்பட்டதில்லை. அந்தக் குமாஸ்தா கேலி செய்து தம்மை வெளியேற்றினார் என்று அந்த வயோதிகருக்குத் தோன்றவில்லை. முன்னால் கிடைத்த தகவல் சரியானதா என்பதே அவருடைய சந்தேகம். புதிதாக விண்ணப்பிக்கச் சொல்கிறாரே. அப்போது பழைய நடவடிக்கை முறைகளை எல்லாம், உரிமைச் சர்டிபிகேட் உள்பட எல்லாம் ஆஜர்படுத்துவதுபோன்ற நடைமுறைகளை எல்லாம், திரும்பவும் கடைப்பிடிக்கவேண்டியிருக்கும். போர்டு ஆபீசுக்கும், வேறு ஏதோ ஓர் ஆபீசுக்கும் சென்று விசாரிக்கச் சொல்லியிருக்கிறார். அந்த ஆபீஸ்கள் எந்த எந்த இடங்களில் இருக்கின்றன என்று அவருக்குத் தெரியாது. நெருக்கடியான நிலைமைதான. இது வரையில் ஒரு விஷயம் தெளிவாகவே இருந்து வந்தது, அந்தக் காகிதம் 'ஃபிரீ ஆடிட்'டுக்குப் போயிருக்கிறதென்று. இப்போது அதுவும் நிச்சயம் இல்லையென்றாகி விட்டது.

முன்னால் அங்கிருந்த குமாஸ்தா இன்னும் கொஞ்சம் மனிதத்தன்மையுடையவராக இருந்தார். சற்று வயதானவர்; மனப்பக்குவமுடையவர்; விஷயங்களை விளக்கித் தந்து உதவுபவர். இப்போதோ, தெரியாத

விஷயங்களைக் கேட்டுப் புரிந்துகொள்வதற்குக்கூட அந்த நாற்காலியில் அமர்ந்திருக்கிற புதிய மனிதன் இடம் தருவதில்லை.

செயலகத்துக்குத் தென்புறமுள்ள மரத்தடியில், என்ன செய்வது என்றறியாமல் கிருஷ்ணன் உட்கார்ந்திருந்தார். போர்டு ஆபீசைக் கண்டுபிடிக்கவேண்டும். இந்த 'ஃபிரீ ஆடிட் ஆபீசு' எங்கே இருக்கிறது என்பதை அறியவேண்டும். யாரிடம் கேட்பது?

சிவமயம் லட்சுமி ஓட்டலிலே தங்கியிருந்து, தனக்கு அளித்துள்ள வேலை நீக்க உத்தரவை ரத்து செய்ய வைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்த ஒரு போலீஸ் கான்ஸ்டபிள், கிருஷ்ணனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துதருவதாகச் சொன்னார். ஆனால் கொஞ்சம் பணம் செலவு செய்யவேண்டியிருக்கும். ஜாஸ்தி வேண்டாம். நான்கைந்து ரூபாய் போதும். போலீஸ் கான்ஸ்டேபிள் ஓர் உண்மையைச் சொன்னார்.

''பெரியவரே, இப்போ நீங்க நினைப்பது, உங்க சர்க்கார் அதிகாரத்தில் இருப்பதால் லஞ்சம் கொடுக்கவேண்டி யிருக்காதுன்னுதானே? இப்போ மந்திரியாயிருக்கிற ஒருத்தர்கிட்டேருந்து நானே பணம் வாங்கியிருக் கிறேன். எனக்குத் தெரியும், ஒரு வேலை நிறுத்தம் நடந்தப்போ தனக்குச் சாதகமாக ஓர் ஒப்பந்தம் செய்து கொடுத்ததுக்காக, ஒரு முதலாளி, இன்னைக்கு இருக்கிற ஒரு மந்திரிக்கு அன்பளிப்பாகப் பணம் கொடுத்த விஷயம். அதனாலே, லஞ்சம் வாங்கமாட்டாங்க என்கிற பேச்சை விட்டுடுங்க!''

பிறகு கிருஷ்ணனுடைய முயற்சியெல்லாம் அந்தப் போலீஸ்காரன் வழியாகத்தான் நடந்தது. ரெவின்யூ போர்டு அலுவலகத்திலுள்ள ஒரு குமாஸ்தா மூலமாக முயற்சி செய்து பார்த்தபோது, பறிமுதல் செய்யப் பட்ட சொத்துக்களைத் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்ற சர்க்கார் உத்தரவின் நெம்பரையும் தேதியையும் எழுதியனுப்புமாறு எழுதப்பட்ட ஒரு கடிதத்தின் நகல்மட்டும் கிடைத்தது. அதற்குப் பதில்கூட அனுப்பி வைக்கப்படவில்லை. அந்த ஃபைல் எங்காவது இருக்கும். கண்டுபிடிக்க முடியாதென்று அந்தக் குமாஸ்தா சொன்னார். புதிதாக மனுச் செய்வது தான் நல்லது என்ற அபிப்பிராயத்தையே அவரும் வெளியிட்டார். இதுவரையில் செய்த முயற்சிகளெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். ஆனால், இன்னும் சிறிது காலதாமதம் எற்படத்தான் செய்யுமென்றுகூட அவர் சொன்னார்.

திரும்பவும் அக்கவுண்ட் ஆபீசுக்கே போவதென்று தீர்மானித்தார் கிருஷ்ணன். ஆனால் அந்த ஏழை வயோதிகரால் அந்தக் காரியாலயத் துக்குள்ளே காலெடுத்து வைக்கக்கூட முடியவில்லை. இதனிடையில், திருவனந்தபுரத்திலுள்ள கம்யூனிஸ்டுக் கட்சிக் காரியாலயத்துக்குச் சென்றால் ஏதாவது பலன் கிடைக்குமென்று யாரோ சொன்னார்கள். கிருஷ்ணன் அங்கே சென்றார். அங்கே அறிமுகமானவர்கள் யாரும் இல்லை. ஆயினும் செயலாளருக்கு முன்னால் சென்று நிற்கமுடிந்தது. செயலாளர் அவர் சொல்வதையெல்லாம் கவனமாகக் கேட்டுக் குறிப்புக்களை

எடுத்துக்கொண்டார். தம்மால் முடிந்த அளவு முயற்சி செய்வதாக வாக்குறுதி அளித்தார்.

கிருஷ்ணன் திருவனந்தபுரத்துக்கு வந்து ஏறத்தாழ ஒரு மாதமாகி விட்டது. தினசரி ஒருவேளை உணவுதான். கையிலிருந்த துட்டு தீர்ந்துவிட்டது. துவக்கக் காலத்தில் இருந்ததைவிடக் கூடுதலான குழப்பத்திலேதான் பிரச்னை இப்போது வந்து நிற்கிறது.

இந்தப் பிரச்னைக்காக முயன்றிருக்கக்கூடாது. இதற்காகச் செலவு செய்த பணத்தைச் சேர்த்து வைத்திருந்தால், மகளுடைய திருமணத்தை முன்பே நடத்தியிருக்கலாம். எத்தனை வருடங்கள் வீணுகியிருக்கின்றன? இந்த வருடங்களில், இதற்காக வீணுக்கிய நாட்களில் ஏதாவது கூலி வேலை செய்திருந்தால்கூட அந்தத் தொகையைச் சேர்த்திருக்க முடியும். கிருஷ்ணன் முதல் முதலாகக் காரிய காரணங்களுடன் பிரச்னையை ஆராய முற்பட்டார். இதற்கு முன் இந்த முறையில் சிந்தித்ததே இல்லை. அது ஒரு கானல் நீர்!

மிகவும் தகர்ந்துவிட்ட நிலையிலேதான் கிருஷ்ணன் ஊருக்குத் திரும்பினார். இனிமேல் என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஆலப் புழையிலுள்ள கம்யூனிஸ்டுக் கட்சி புன்னப்பரா—வயலாறு தினத்தைக் கொண்டாடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண் டிருந்த சந்தர்ப்பம் அது. கம்யூனிஸ்டு அரசாங்கம் ஏற்பட்ட பின் முதல் முதலாக நடைபெறுகிற புன்னப்பரா—வயலாறு தினக் கொண்டாட்டம் அது. அன்றைய சூழ்நிலையில் அந்த நிகழ்ச்சிக்கு அசாதாரணமான முக்கியத்துவம் இருக்கிறதல்லவா?

பையனுடைய உறவினர்கள், திருமண விஷயம் என்ன ஆயிற்றென்று விசாரித்தனர். கிருஷ்ணன் என்ன பதிலைச் சொல்வார்? அவர்களுக்கு அந்தத் தொடர்கதையைக் கேட்க விருப்பம் இல்லை. இப்படியே தொடர்ந்து நீடிப்பதென்றால், பையனுக்கு வேறு இடத்தில் பெண் பார்க்கவேண்டியிருக்குமென்று அவர்கள் எச்சரித்தனர். கிருஷ்ணனால் ஒரு வாய்தாகூடச் சொல்ல முடியவில்லை.

* * *

நியாயத்தைக் கேட்டுப் பெறுவதற்காகத் திருவனந்தபுரத்துக்கு வந்திருந்த சங்கரப்பிள்ளை தலைமைக் காரியாலய வாசலிலே அமர்ந் திருந்ததைக் கிருஷ்ணன் பார்த்தார். காங்கிரஸ்காரர்களின் நன்றி கெட்ட போக்கைப்பற்றி, கையாலாகாத்தனத்தைக் குறித்து அவர், சிவமயம் லட்சுமி ஓட்டலிலே வந்து பேசியிருக்கிறார். காங்கிரஸுக்காக வாழ்க்கையையே அர்ப்பித்துவிட்ட அந்த ஏழை மனிதரைத் திரும்பிப் பார்க்கக்கூட யாருமே இல்லை. ஆனால் தன் நிலைமை என்ன?

கிருஷ்ணன் அங்குள்ள வட்டக்குழுச் செயலாளரைச் சந்தித்துச் சங்கதிகளைப்பற்றிச் சாங்கோபாங்கமாகக் கூறினார். செயலாளர் அனுதாபத்துடன் அனைத்தையும் கேட்டுவிட்டுச் சொன்னார்:

''ஏதாவது பரிகாரம் காண்போம். இந்த புன்னப்பரா—வயலாறு தினம் முடியட்டும்.''

அந்தப் பதில் கிருஷ்ணனுக்குப் பிடிக்கவில்லை.

''நிலவு உதிக்கிறவரைக்கும் பன்றி காத்துக்கிட்டிருக்குமா, தோழரே? அவங்க வேறு பெண்ணைப் பார்த்து முடிச்சுடுவாங்க.''

செயலாளருக்கு அது ஒரு பிரச்னையாகவே தோன்றவில்லை.

''அப்படியானால் நாம்ப வேறு இடத்திலே பையனைப் பார்த்து ஏற்பாடு செய்வோமே? அவங்க போவட்டுமே.''

வயோதிகர் ஒருமுறை நடுங்கினார். உள்ளம் ஆத்திரம் மேலிட்டுக் குமுறி யெழுந்தது. ஆனால், அவர் அடக்கிக்கொண்டார். எதற்காக அடக்கினரென்று தெரியவில்லை.

அந்தச் சந்தர்ப்பத்தில்தான் இன்னோர் இயக்கங்கூட அங்கே உருப் பெற்றது. காங்கிரஸ்காரர்கள், தியாகிகள் தினத்தைக் கம்யூனிஸ்டு களின் துரோகத்தின் தினமாகக் கொண்டாடினார்கள். மூக்கடையிலே இருந்து அது என்னவென்று ஓரளவு புரிந்துகொண்டார் கிருஷ்ணன்.

''கம்யூனிஸ்டுத் தலைமை தமக்குத் தியாகிகளைச் சிருஷ்டிப்பதற்காகப் பல மனிதர்களைப் பலியிட்டனர். அதுதான் புன்னப்பரா—வயலாறு!'' என்றுதான் அங்கே பேசிக்கொண்டனர்.

அந்தப் பேச்சு அந்தத் தந்தையின் இதயத்தில் எங்கேயோ ஓரிடத்தில் வந்து மோதிக்கொண்டது. அது ஒரு நடுக்கமாக இருந்தது. அந்த நடுக்கத்திலிருந்து கடிவாளமற்ற ஒரு சிந்தனை உருப்பெற்றது. அவர் சுயமாகவே கேட்டுவிட்டார்.

''அது ஒரு துரோகச் செயலாக, வஞ்சனையாக இருந்ததா?''

அந்தக் கேள்வி கிருஷ்ணனைப் பின்தொடர்ந்துகொண் டிருந்தது. அல்லவென்ற பதிலைச் சொல்லவேண்டும் என்பதே அவருடைய விருப்பம். ஆனால் அந்தக் கேள்வி நான்கு பக்கங்களிலிருந்தும் முழங்கிக் கொண்டிருந்தது.

சதாசிவன் துப்பாக்கிக் குண்டு பட்டு இறந்துவிட்டான். அதனால் யாருக்குத்தான் பிரயோஜனம் ஏற்பட்டிருக்கிறது? அவனுடைய தந்தைக்கு? சகோதரிக்கு? கிருஷ்ணனுடைய சிந்தனை இவ்வாறுதான் இயங்கியது. அத்தகைய தியாகிகளின் பெயரால்தான் பத்தாயிரக் கணக்கானவர்கள் வோட்டளித்தார்கள். தேர்தல் நாள் அன்று அந்தக் காகிதத் துண்டைக் கிருஷ்ணன் வோட்டுப் பெட்டியிலே போட்டது தியாகியாகிவிட்ட தன் குமாரனை மனத்திலே நினைவுபடுத்தியவாறு தான். பொதுக் கூட்டங்களில் நிகழ்த்துகிற பிரசங்கங்களைக் கேட்ட போது, கோஷங்களை முழக்கிய வாறு ஊர்வலங்கள் முன்னேறிச் சென்றபோது கிருஷ்ணன் ஆவேசத்தினால் தன்னையே மறந்ததுண்டு. அதுவும் மகனைக் கருதித்தான். ஏதேதோ நன்மைகளுக்காக, சீற்றத் துடன் பாய்ந்து வந்த துப்பாக்கி ரவைகளுக்கு முன்னால் அவன் தன் மார்பினைத் திறந்து காட்டி நின்றான். அங்கே இடுகாட்டில் பரவிக்

கிடந்த கரிய நிறமுடைய மண்ணிலே அவனது இதயத்தைச் சுட்டெரித்த சாம்பல் கலந்திருக்கிறது. அந்தச் சாம்பலின் துகள்கள் இப்போது தன் தங்கையின் நிலை கண்டு, தந்தையின் அலைச்சலைப் பார்த்து விசும்பி விசும்பி அழுதுகொண்டிருக்கும். அல்லது, வீணுகி விட்ட உயிர்க் காணிக்கையிலே தவித்தவாறு மண்ணோடு ஒட்டி அமர்ந்திருக்கும்.

அந்த ஆத்மாவுக்குத் தன்னிடம் எதையோ சொல்லவேண்டியிருப்பது போல் கிருஷ்ணனுக்குத் தோன்றியது. அவருக்குக்கூட எதை எதையோ கேட்டு விசாரித்தறிய வேண்டியிருந்தது. ஒரு வேளை, அங்கே—புன்னப்பராவிலே—இளம் காற்றில் ஆலோலமாடுகிற தென்ன ஓலை நுனிகளிலிருந்து உதிர்கிற சலசலவென்ற ஓசைகளினூடே, அவன் சொல்ல விரும்புவது அனைத்தையும் சொல்லி விடுகிறானோ? அது புரிந்துகொள்ள முடியாத மொழி. எங்கே சென்றுதான் அவனைத் தேடிப் பிடிப்பது? எங்கிருந்து கூக்குரல் எழுப்பினால் பதில் குரல் கிடைக்கும்?

* * *

தியாகிகள் தினத்தை ஆடம்பரமாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகிக்கொண்டிருந்தன. யார் எல்லாமோ மந்திரிகள் வருகிறார்கள். வஞ்சனை தினத்தையும் அதே அளவு படாடோபமாக நடத்த ஏற்பாடுகள் மிகத் துரிதமாக நடைபெற்று வந்தன. யாரெல்லாமோ பெரிய பெரிய காங்கிரஸ் தலைவர்கள் வருகிறார்கள். சங்கரப் பிள்ளை போன்ற பலர் தலைமீது ஏறிச் சவாரி செய்த அவர்கள் பிரமுகர்களும் தலைவர்களுமாகிவிட்டனர். சதாசிவன்மார்களுடைய இரத்தத்திலிருந்து மற்றவர்கள் பிரமுகர்களும் மந்திரிகளுமாகிவிட்டனர். கிருஷ்ணனுடைய ஏழை நெஞ்சிலே எழுந்த எண்ணங்கள்தான் இவை.

வட்டக் குழுச் செயலாளரைப் பார்த்து நான்கு வார்த்தை பேசவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டார் கிருஷ்ணன். அதைப் பேசித் தீர்த்த பிறகே அவருக்கு மனநிம்மதி கிடைக்கும். ஆனால் தனியாகச் சந்தித்து அதைப் பேசித் தீர்ப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. செயலாளருக்கு அலுவல் இல்லாத நேரமே அரிதாகிவிட்டது. வட்டக் குழு அலுவலகத்திலேகூட அப்படித்தான். அங்கே எப்போதும் ஜனக் கும்பல்தான். சர்ச்சைகள் ஓய்ந்த நேரமே இல்லை.

புன்னப்பரா—வயலாறு தினத்தை ஒட்டி நடத்திய பிரம்மாண்டமான ஊர்வலத்துக்கு இந்தத் தடவை கிருஷ்ணன் பாதையோரத்தில் வெறும் பார்வையாளராகத்தான் இருந்தார். கிளர்ச்சிகரமான கோஷங்களை முழக்கியவாறு வரிசை வரிசையாக நகர்ந்து கொண்டிருந்தவர்களை, அவர் உற்றுப் பார்த்தவாறு நின்றார். இதற்கு முன் எப்போதுமே இவ்வளவு பெரிய ஊர்வலத்தை இந்தத் தினத்தில்

அவர் பார்த்ததில்லை. வண்ணமயத் தோற்றத்துடன் அழகு பொருந்திய ஊர்வலம். மகிழ்ச்சி நிறைந்த உற்சாகத்தின் தன்மை அதில் காணப்பட்டது. முன்பு அதன் தன்மை இத்தகையதாக இருக்கவில்லை. என்னவெல்லாமோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

கொடிகளின் சிவப்புக்குச் சிறிது மங்கல் ஏற்பட்டதுபோல் தோன்றியது. ஒய்யாரமாக வந்தவர்களின் ஊர்வலமாகத்தான் அது காட்சி தந்தது. அருமையான ஆடை அணிகலன்கள். ஆனால், முந்தைய ஆவேசம் காணப்படவில்லை. முன்பெல்லாம் இந்த ஊர்வலத்தில் பங்கெடுப்பவர்களிடம் ஒரு பிரத்தியேகத் தன்மை காணப்பட்டது. அவர்களுடைய கண்கள் நெருப்புப் பந்தங்கள்போல் ஜொலித்துக்கொண்டிருந்தன. அதற்குக் காரணம் இருந்தது. புன்னப்பரா எனுமிடத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தவர்களின் உற்றார்—உறவினர்கள் அனைவரையும் கிருஷ்ணனுக்குத் தெரியும். அவர்களில் பெருவாரியானவர்கள் இந்த ஊர்வலத்தில் இல்லை. கோவிந்தன் இல்லை. அந்தப்பனைக் கண்டுபிடிக்கக் கிருஷ்ணன் முயன்று பார்த்தார். கேசவனுடைய விதவையான மனைவி இல்லை. அலியுடைய நொண்டியான தந்தை, ஒவ்வொரு வருடமும் அந்த ஊர்வலத்தினுடைய உயிராக இருந்தார். அவர் உயிர் துறக்கவில்லை. ஆனால், இன்று அவரைக் காணவில்லை. அவர்கள் எல்லாரும் தரையையே குலுக்குகின்றவர்கள்.

இவ்வாறுக, அறிமுகமான ஒவ்வொருவரையும் அவர் பார்க்க முயன்றுகொண்டிருக்கையிலே, வேறு சிலரை அந்த ஊர்வலத்திலே பார்த்தார். சென்ற வருடம் இதே ஊர்வலத்தைக் கற்கள் வீசியெறிந்து தாக்கிக் கலைக்க முயன்ற ஓளசேப்பு செங்கொடி ஏந்தி நடந்து சென்றான். கம்யூனிஸ்டுக் கட்சிக் கூட்டங்களைக் கலைப்பது மட்டும் தொழிலாகக்கொண்டிருந்த பப்பு ஊர்வலத்தின் முன்வரிசையிலேயே காணப்பட்டான். கடந்த வருடங்களில் 'துரோகத் தின'த்தில் பங்கு கொண்டவர்கள் இன்று தியாகிகள் தினத்தில் பங்கு கொள்கிறார்கள். அதிகமாகச் சொல்லுவானேன்? கான்டிராக்டர் கொச்சுகோசி தியாகிகளுக்கு வணக்கம் தெரிவிக்க மலர்மாலையும் கையுமாகச் சென்றுகொண்டிருந்தார். கொச்சுகோசி நாற்பத்தாறுவது வருடத்திலே பட்டாளத்தில் சேர்ந்துகொண்டு வீடு வீடாக ஏறியிறங்கி வேட்டையாடியவன் தான். பாவம்! கிருஷ்ணனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அன்று நடைபெற்ற பொதுக்கூட்டம் மாபெரும் கூட்டமாக இருந்தது. ஒன்று அல்ல; இரண்டு அமைச்சர்கள் பேசினார்கள்.

ஆயினும், மறுநாள் நடைபெற்ற 'வஞ்சனைத் தின' ஆர்ப்பாட்டத்திலும் பொதுக்கூட்டத்திலும் அந்தப்பனும், நொண்டியான பரீதும் பங்கெடுத்துக்கொண்டதைக் கிருஷ்ணனால் சகிக்கமுடியவில்லை. அவர்கள் காங்கிரஸின், சர்க்காச் சின்னம் தாங்கிய கொடிகளைக் கையிலேந்தியிருந்தனர்; கோஷங்களை முழக்கினர். அது வேதனைக்குரிய விஷயமாயிற்று. பரீதையும் அந்தப்பனையும் பார்த்து அவர்கள் செய்தது

சரிதானு என்று கேட்கவேண்டுமென்று கிருஷ்ணனுக்குத் தோன்றியது. ஆனால், எவ்வாறு அவர்களிடம் முகத்தைக் கொடுத்துப் பேசமுடியும்?

மேலும் இரண்டு தினங்கள் கழிந்தன. செயலாளரைப் பார்த்து விஷயங்களை எடுத்துரைக்க வேண்டுமென்றே கிருஷ்ணன் எண்ணினார். பல விஷயங்கள் அவருக்குத் தெளிவுபடவேண்டியிருந்தன. சொந்தக் காரியமும் ஒன்று உண்டு. தியாகிகள் தினக் கொண்டாட்டம் முடியட்டும் என்று அல்லவா சொல்லியிருக்கிறார்? அவர் கட்சிக் காரியாலயத்துக்குச் சென்றார்.

அன்று அங்கே வழக்கத்துக்கும் அதிகமான ஜனக்கும்பல் குழுமியிருந்தது. கட்சிக் காரியாலயத்தில் இதுவரையில் காலெடுத்து வைக்காதவர்கள்கூட வந்திருந்தார்கள். மற்றத்து வீட்டுக் கிருஷ்ணக் கைமள், ஏறுத்து வீட்டு அந்தோணி மாப்பிள்ளை முதலிய சிலர். கிருஷ்ணனால் இதை ஒன்றும் புரிந்துகொள்ளவே முடியவில்லை. இவர்கள் கட்சிக் காரியாலயத்துக்கு வருவதென்றால் . . .? அவரால் நம்பவே முடியவில்லை. இவர்களும் கம்யூனிஸ்டுகளாகி விட்டார்களா? ஒட்டு மொத்தமாகக் கிருஷ்ணனுக்குப் பெரிய குழப்பந்தான் ஏற்பட்டது.

அவர் செயலாளரை அணுகினார். செயலாளர் ஏதோ காகிதங்களைத் தேடியெடுத்துக்கொண்டிருந்தார்.

''இனி என்னுடை விஷயத்திலே கொஞ்சம் கவனம் செலுத்துங்க!'' என்றார் கிருஷ்ணன்.

அது செயலாளருக்குப் பிடிக்கவில்லைபோல் தோன்றியது. அவர் அவ்வளவு தூரம் மிகப் பெரிய அலுவல்களிலே மூழ்கியிருந்தார். ஆனால், செயலாளர் அதை வெளியே காட்டிக்கொள்ளாமல் கேட்டார்:

''ஊம்? என்ன விஷயம்?''

''சதாசிவன் கஜானாவிலே போட்டிருந்த பண விஷயம் . . .''

செயலாளருக்கு நினைவு வந்தது. அவர் சொன்னார்: ''கொஞ்ச நாள் கூடப் பொறுத்திடுங்க. கொஞ்சம் உட்கார நேரம் கிடைக்கட்டும்.''

கிருஷ்ணன் தமக்கு இருந்துவருகிற நெருக்கடிகள் பற்றிச் சொல்லத் தொடங்கினார். நிச்சயம் செய்துவைத்திருந்த பையன் போய்விட்டான். வேறு யாரையாவது இனிமேல் கண்டுபிடிக்கவேண்டும். அதுவும் பணம் கையிலிருந்தால்தான் முடியும்.

''அதெல்லாம் நாம் சரி பண்ணிடலாம். கொஞ்ச நாளைக்குப் பொறுத்திடுங்க.''

கிருஷ்ணனுக்கு, கைமளும், அந்தோணி மாப்பிள்ளையும் என்றைக்குக் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார்கள் என்ற விபரம் தெரியவேண்டும். அவர் கேட்டார்: ''இந்தக் கைமளும் அந்தோணியும் எதுக்காக வந்தாங்க?''

''நோட்டீஸ் அனுப்பி வரவழைத்தோம். அவர்கள் தங்கள் மனையிலே குடியிருக்கிற சில புலையத் தோழர்களை வெளியேற்றப் போவதாகப் புகார் வந்தது.''

கிருஷ்ணன் வியப்புடன் கேட்டார்: ''நோட்டீஸ் கிடைச்சு அவங்க வந்திட்டாங்களா?''

''வராமல் இருக்க முடியுமா? நம்முடைய சர்க்கார்தானே? அன்றைக்குத் தேர்தல் காலத்திலே பாடுபட்டோமே, இப்போ அதன் பலன் கிடைத்துவிட்டதைப் பார்த்தீர்கள் அல்லவா?''

கிருஷ்ணக் கைமளும், அந்தோணி மாப்பிள்ளையும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தனர். கிருஷ்ணன் அவர்களை ஒரு முறை உற்றுப் பார்த்தார். அவர்களுடைய அந்த நிலை அவருக்கு வேடிக்கையாகப் பட்டது. செயலாளர் சொன்னது உண்மைதான். தேர்தல் காலத்தில் பாடுபட்டது வீணுகிப் போய்விடவில்லை. அந்தப் பிரமுகர்களைக் கட்சிக் காரியாலயத்துக்கு வரவழைக்க முடிந்திருக்கிறது. உண்மையானதோர் ஆத்மதிருப்தி கிருஷ்ணனுக்கு ஏற்பட்டது.

* * *

ஒரு கார் காரியாலய வாசலிலே வந்து நின்றது. ஆலப்புழை நகரத்திலுள்ள மிகப் பெரிய வியாபாரி ஒருவர் அதிலிருந்து கீழே இறங்கினர். அவர் நேரடியாகக் காரியாலயத்துக்குள்ளே வந்தார். கிருஷ்ணனுக்கு அவரை நன்றாகத் தெரியும். அந்தப் பெரிய முதலாளிகூடக் கட்சிக் காரியாலயத்துக்கு வருகிறார்! இது ஒரு சாதனையேதான். தியாகிகள் தினத்தன்று மந்திரி நிகழ்த்திய பிரசங்கத்திலுள்ள ஒரு வாசகம் கிருஷ்ணனுடைய நினைவுக்கு வந்தது.

'புன்னப்பராவிலும், வயலாற்றிலும் குண்டடிபட்டு உயிர் நீத்தவர்களின் இரத்தத்திலே முளைத்து வளர்ந்த கட்சி அடைந்திருக்கிற சக்தியின் முதல் கூட்டத்தை நாம் இப்போது பார்க்கிறோம் . . .'

அதுவும் உண்மைதான். கைமளும் மாப்பிள்ளையும் புளியமரத் தடியில் உட்கார்ந்திருக்கிறார்கள். ஆலப்புழையிலுள்ள பெரிய முதலாளிகூட இங்கே வந்திருக்கிறார். இன்னமும் என்னவெல்லாமோ நடக்க இருக்கிறது.

சிறிது நேரத்துக்குப் பின் அலுவலகத்துக்குள்ளிருந்து வெளியே வந்த ஒருவர் சொன்னார்:

''நோட்டீஸ் அனுப்பி வரவழைக்கப்பட்டவர்கள் எல்லாரும் ஞாயிற்றுக் கிழமையன்று வந்தால் போதும். விண்ணப்ப விஷயங்களை இன்றைக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதாயில்லை.''

சிறிது நேரம் வரையில் யாரும் பேசவில்லை. அந்தோணி மாப்பிள்ளை எழுந்து நின்று கூறினர்.

''ஞாயிற்றுக்கிழமை எங்களுக்குக் கோயிலுக்குப் போகவேண்டியிருக்கிறது. தியானம் ஆரம்பிக்கிற நாள் அன்று.''

''அதென்னமோ நமக்குத் தெரியாது. அன்றைக்கு வரத்தான் வேண்டும்.''

சிறிது நேரத்துக்குப் பின் செயலாளரும் பெரிய முதலாளியும் வெளியே வந்து காரில் ஏறிக்கொண்டனர். இருவரும் பின் இருப்பிடத்தில் ஒருங்கே அமர்ந்தனர். கார் கிளம்பிச் சென்றது.

கயிறு கம்பெனியில் ஒரு சாதாரணத் தொழிலாளியாக இருந்தவர் தான் செயலாளர். அவர் அந்த முதலாளியோடு சரிநிகர் சமானமாக அமர்ந்தவாறு காரிலே சவாரி செய்கிறார். நிச்சயமாகப் பெருமைப்பட வேண்டிய விஷயந்தான் இது. ஆனால், இது ஒரு பெரிய 'ஆனால்' தான். இதிலெல்லாம் ஏதோ கோளாறு இருப்பதாகக் கிருஷ்ணனுக்குத் தோன்றியது. அந்த முதலாளியோடு சேர்ந்து செயலாளர் அப்படிச் சென்றது சரிதானா? அவருடன் நிரந்தரமான போராட்டத்தை நடத்தி வந்தவர்தானே?

என்னமோ? கிருஷ்ணனுக்கு இந்தப் புதிய நடைமுறைகள் ஒன்றுமே சரியெனத் தோன்றவில்லை. தவறுனவை என்றுகூடத் தோன்றியது. பெருமைப்படத் தக்க அம்சங்கள் சில இருந்தபோதிலும் வெறுக்கத் தக்க அம்சங்கள் பக்கந்தான் தராசுத் தட்டு சாய்ந்து நின்றது.

மீண்டும் சில நாட்கள் கழிந்தன. செயலாளர், கிருஷ்ணன் சொன்னதை எல்லாம் குறித்தெடுத்தார். தேவையானதைச் செய்வதாக வாக்குறுதி அளித்தார். இனிமேல் எல்லாம் ஒழுங்காகிவிடுமென்ற ஒரு நம்பிக்கை பிறந்தது கிருஷ்ணனுக்கு.

ஒரு வாரத்துக்குள் ஆலப்புழையிலே மற்றொரு நிகழ்ச்சி நடைபெற்றது. தோட்டித் தொழிலாளிகள் தங்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர். அவர்கள் வேலை நிறுத்தம் செய்யப் போவதாகப் பயமுறுத்தினர். இது ஆலப்புழையில் மட்டும் இருக்கிற ஒரு பிரச்னை அல்ல. கேரளத்திலுள்ள அனைத்து நகரங்களிலும் இதே நிகழ்ச்சி நடைபெற்றது. செயலாளர் உடனடியாகக் கவனம் செலுத்தவேண்டிய பிரச்னைதானே இது?

கிருஷ்ணன் திரும்பவும் செயலாளரை வந்து பார்த்தார். தோட்டித் தொழிலாளர் பிரச்னைகளில் மூழ்கிக் கிடந்த செயலாளரால் கிருஷ்ணனுடைய பிரச்னையைக் கவனிக்க முடியவில்லை என்பது இயற்கைதானே? செயலாளர் இதைக் கிருஷ்ணனிடம் மனம் திறந்து கூறினார்: ''இன்னும் ஒரு சில நாட்கள்கூட. இந்த முனிஸிபல் தொழிலாளிகள் பிரச்னை தீரட்டும் . . .'' ஆம்! போதிய காரணங்கள் இருந்தன. எல்லாம் கிருஷ்ணன் அறிந்தவையாகவும் இருந்தன.

பின் ஒரு நாள் கிருஷ்ணன் வந்தார். திருவனந்தபுரத்துக்குப் போகாமல் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணமுடியாதென்றார், செயலாளர். கிருஷ்ணன் தம் நிலையைத் தெளிவுபடுத்தினர்.

''ஓர் அணுகூட என் கிட்டே இல்லை. பத்துக் காசு கையிலே கிடைச்சா, அதை எடுத்துக்கிட்டுத் திருவனந்தபுரம் போறதாயிருந்தது இந்தக் காலமெல்லாம். இனிமே ஒரு காசுக்குக்கூட வழியில்லே.''

செயலாளருக்கு அது புரிகிறது.

''அப்புறம் இந்தப் பிரச்னையை எப்படித் தீர்ப்பது?''

கிருஷ்ணன் பதில் சொல்லவில்லை. செயலாளர் மீண்டும் கேட்டார்:

''செலவு செய்யவேண்டிய பிரச்னைகளுக்கு அதைச் செய்யாமல் தீர்வு காணமுடியுமா?''

செலவு செய்யத் தயங்குபவன் அல்ல கிருஷ்ணன். கையிலே பணம் இருந்தால்தானே? அதுவும் செயலாளரால் உணரக்கூடிய பிரச்னை தான். அவருக்கும் வேறு வழியில்லை. அவர் சொன்னார்:

''அப்படியானால் நான் உங்கள் பிரச்னைகளை எல்லாம் விபரமாகக் குறிப்பிட்டு, உடனடியாகக் கவனிக்கவேண்டும் என்று வற்புறுத்திக் கட்சியின் மாநிலக் குழு அலுவலகத்துக்கு எழுதுகிறேன். அது எப்படியாகுமோ, அப்படியே நடக்கட்டும். ஆனால், ஒரு விஷயம் உங்கள் கவனத்துக்குக் கொண்டுவராமல் இருக்க முடியாது. மாநிலத்தின் நாற்பகுதிகளிலிருந்தும் இத்தகைய பல பிரச்னைகள் வந்து அங்கே குவிந்து கிடக்கின்றன.''

கிருஷ்ணன் வெடித்து விட்டார்.

''அதனால்?''

''காலதாமதமாயிடும்.''

கிருஷ்ணனால் அடக்க முடியவில்லை.

''அப்போ . . . என் மகன் சதாசிவன் குண்டடிபட்டு எதுக்காக உயிர் துறந்தான்?''

செயலாளர் சிறிது தடுமாறினார்.

''நீங்கல்லாம் பெரிய பெரிய முதலாளீங்களோட, வெடிகுண்டு போட்ட போலீஸ் அதிகாரீங்களோட காருகளிலே ஏறி பவனி வரவா?''

தம் கன்னத்திலே அறை விழுந்ததுபோல் தோன்றியது செயலாளருக்கு. அவர் சொன்னார்:

''கொஞ்சம் மரியாதையாப் பேசுங்க பெரியவரே.''

''இல்லாட்டா?''

''நீங்கள் ஒரு தியாகியுடைய தகப்பனாராயிருக்கிறீங்க . . . இல்லாவிட்டால் . . .''

''இல்லாட்டா நீ என்ன செய்வாய்டா?''

''வஞ்சனை, துரோகம்'' என்றெல்லாம் முணுமுணுத்தவாறு பெரியவர் கட்சிக் காரியாலயத்திலிருந்து வெளியேறினார்.

அத்தியாயம் 45

உத்தியோகப் பர்வத்தின் இறுதிக் கட்டம்

மீண்டும் மாதங்கள் சில கழிந்தன. ஆளும் கட்சித் தலைவர்களுக்குச் சீஃப் செக்ரடரியிடம் சிறிதும் திருப்தியில்லை. அது மட்டுமல்ல, நேரடியாகவே விரோதம். சர்க்காரின் முற்போக்கான திட்டங்களுக்குக் குழி பறிக்கிறார்; அவற்றை அமலாக்கும் விஷயத்தில் சட்ட நுணுக்கங்களைச் சுட்டிக் காட்டி இடையூறுகளை விளைவிக்கிறார் என்பன போன்ற குற்றச் சாட்டுக்கள் அவர்மீது கூறப்பட்டன.

ஆனால், கேசவபிள்ளையால் இந்தக் குற்றச்சாட்டுக்களின் தன்மைபற்றிப் புரிந்துகொள்ள முடியவில்லை. புதிய அமைச்சரவையுடன் இணைந்து செயலாற்ற அவர் முடிந்த அளவு முயன்று வந்தார். அதெல்லாம் அவருக்குக் கஷ்டமாகவும் தோன்றவில்லை. அபிவிருத்தி இலாக்கா, பொதுப்பணி இலாக்கா ஆகியவை அவருடன் எந்தவிதத் தொடர்புமின்றியே தான் இயங்கிவருகின்றன. ஆர். டி. மேனனும் இலாக்கா மந்திரியும் சேர்ந்து சர்ச்சை செய்கின்றனர், முடிவெடுக்கின்றனர். முடிவுகளை அமலாக்குகின்றனர். அவை எல்லாம் அமைச்சரவைச் செயலாளர் என்ற முறையில் அவர் பார்வைக்கு வரத்தான் வேண்டும். ஆனால், அவற்றைப்பற்றி அவர் தம் கருத்தைத் தெரிவிப்பதில்லை. அவருக்குக் கருத்து என்பதே இல்லாமற் போய்விட்டது.

அன்று ஒரு முக்கியமான நிகழ்ச்சி நடந்தது. முதலமைச்சர் தலைமைச் செயலாளரைத் தம் அறைக்கு வரவழைத்தார். அன்றுட விஷயங்கள் பற்றிச் சிறிது நேரம் பேச்சு நடந்தது. அவை எல்லாம் முக்கியமானவை அல்ல. அதைப்பற்றிப் பேசுவதற்காகத் தம்மை அழைக்க வில்லை என்று கேசவபிள்ளைக்குத் தெரியும். முதல்வரின் மனத்தில் என்னமோ ஒன்று இருக்கிறது. அது என்னவென்று புரிந்துகொள்ள முடியவில்லை. அப்படியும் இப்படியுமாகச் சிறிது நேரம் பேசிய பின்னரே விஷயம் வெளியே வந்தது.

முதல்வர் சொன்னார்: ''சீஃப் செக்ரடரியுடைய நீண்ட கால அநுபவங்களின் பலன்கள் இந்தச் சர்க்காருக்குக் கிடைப்பதில்லை என்று ஒரு புகார் இருக்கிறது.''

முதல்வரின் இதழ்களில் புன்னகை தவழ்ந்துகொண்டிருந்தது.

''புரிந்துகொள்ளமுடியவில்லையே'' என்றார் தலைமைக் காரியதரிசி.

முதல்வர் மேற்கொண்டு ஒரு படி முன்னேறினார்: ''இந்தச் சர்க்காருடன் நீங்கள் பூரணமாக ஒத்துழைப்பதில்லை என்ற புகார் கிளம்பியிருக்கிறது.''

அந்தக் குற்றச்சாட்டிலே கேசவபிள்ளைக்கு வியப்புத்தான்.

''எந்த விஷயத்தில், எப்படி நான் ஒத்துழைக்கவில்லை என்று சொன்னால் நன்றாயிருக்கும்.''

முதல்வர் அதற்கு நேரடியாகப் பதில் அளிக்கவில்லை. அவர் சொன்னார்: ''நீங்கள் எதைப்பற்றியும் உங்கள் கருத்தைத் தெரிவிக்காமல் இருக்கிறீர்கள். அதுதான் முக்கியமான புகார்.''

கேசவபிள்ளைக்குத் தம் புகாரைத் தெரிவிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது: ''என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுவதில்லை.''

முதல்வர் சிரித்தார். அவர் ஒரு விவாதத்துக்குத் தயாராக இருக்கவில்லை.

''எனவே ஒரு விஷயம் தெளிவாகிவிட்டது. தலைமைச் செயலாளருக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நல்லுறவு இல்லை.''

கேசவபிள்ளை இதை ஏற்றுக்கொள்ளவோ, மறுக்கவோ முயற்சி செய்யவில்லை. மௌனத்தைக் கடைப்பிடித்தார். ஆனால், கட்சியின் மாநிலச் செயலாளர் தம்மைப்பற்றி இடைவிடாமல் செய்து வருகிற விமர்சனங்களைப்பற்றிக் கொஞ்சம் பேசினால் என்ன என்று அவருக்குத் தோன்றியது. ஆனால் அதற்கு இது சமயமா?

கேசவபிள்ளையின் பரிசீலனைக்காக முதல்வர் ஒரு யோசனையை முன்வைத்தார்.

''நான் வற்புறுத்துவதாக நினைக்கக்கூடாது. தனிப்பட்ட முறையில் நான் சொல்லும் யோசனைதான். கட்சி, கேபினட் ஆகியவற்றின் கருத்து அல்ல. என்னுடைய கருத்தேதான். அதை உங்களிடம் நேரடியாகச் சொல்கிறேன், அவ்வளவுதான்.''

கேசவபிள்ளை அந்த யோசனைக்காக ஆவலுடன் காத்திருந்தார். ஏதோ ஒரு புதிய அமைப்புக்கான யோசனையாக இருக்குமென்றுதான் அவர் கருதினார்.

முதல்வர் சொன்னார்: ''சீஃப் செக்ரடரி கொஞ்ச காலத்துக்கு லீவு எடுத்துக்கொண்டால் என்ன?''

அவர் சீஃப் செக்ரடரியின் பதிலுக்காகக் காத்திராமல் தொடர்ந்து கூறினார்: ''நான் நிர்ப்பந்திப்பதல்ல, ஒரு யோசனைதான். கொஞ்சம் பிளவு இருக்கத்தான் செய்கிறது. அது ஓர் உண்மைதான். அந்தப் பிளவு இன்னும் விரிவடையுமுன் கொஞ்ச காலத்துக்குப் பிரிந்திருப்பது நல்லதென எனக்குத் தோன்றியது. அவ்வளவுதான்.''

கேசவபிள்ளை தம் உத்தியோக வாழ்க்கையை ஒட்டு மொத்தமாக ஒருமுறை ஆராய்ந்து பார்த்தார். பார்க் வியூவின் படிவாசலிலே காவல் காத்துப் பதினைந்து ரூபாய் சம்பளம் பெறுகிற ஓர் ஊழியனாக வேலைக்கு அமர்ந்த காலம் முதல் இன்றுவரையிலுள்ள காலகட்டத்தை நினைவு கூர்ந்து பார்த்தார். இந்த ஒரு நிமிடத்துக் கொடூரமான சுமை நிமித்தமாக அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. உடல் துவண்டுவிட்டது.

அவர் முகம் வெளிறிவிட்டது. முதல்வரின் பார்வை பட்டோ என்னவோ? உயிர் போவதும் உத்தியோகம் போவதும் ஒன்றுதானே?

சிறிது நேரம் வரையில் கேசவபிள்ளை அப்படியே அமர்ந்துவிட்டார். அவர் எதையுமே யோசிக்கவில்லை. கற்சிலைபோல் உட்கார்ந்திருந்தார்.

'இந்த வேலை இனிமேல் வேண்டாம்.' யாரோ சொல்கிறார். அது அவருடைய காதுகளுக்குள்ளே முழங்குகிறது.

'நமக்கு உயிர் வாழப் போதிய சொத்து இருக்கிறதல்லவா?' அடுத்த கேள்வி இது! கார்த்தியாயினிதான் கேட்கிறாள்.

அவருடைய தம்பித நிலை சிறிது தளர்ந்தது. மனத்துக்குள்ளே சிந்தனைகள் நுழைந்துகொண்டன. ஓய்வு பெற்று உபகாரச் சம்பளம் பெற இனி அதிக நாட்கள் இல்லை. இவ்வளவு காலம் கௌரவமாகவே வேலை பார்த்து வந்தார். இந்த அமைப்புக்குள்ளிருந்தவாறு இனிமேல் அவ்வாறு செயலாற்ற முடியவே முடியாது. அந்த நாற்காலியில் அமர்ந்திருப்பது இப்போதே வெட்கக் கேடான காரியமாயிருக்கிறது. அங்கிருந்து இறங்கிப் போனால் என்ன? கிடைக்கிற பென்ஷனைப் பெற்றுக் கொண்டு விலகிச் சென்றால் என்ன?

'கொஞ்சம் பொறுத்துச் செய்யுங்க!' உள்ளத்திலிருந்து இன்னொரு குரல் கிளம்பி வருகிறது. அப்படிப்பட்ட முடிவுக்கு வரலாமா? தாண்டி வந்திருக்கிற சோதனைக் கட்டங்கள் இதுபோல் எத்தனை, எத்தனை? தோல்வியை ஒப்புக்கொண்டு ஓடிப்போவதா? 'கொஞ்சம் பொறுத்து யோசித்துச் செய்யுங்க!' அந்தப் 'பொறுத்து' என்ற யோசனை மிகவும் சக்தி வாய்ந்தது.

கேசவபிள்ளை முதல்வரை ஒருமுறை தலையோடு கால் வரையில் உற்றுப் பார்த்தார். ஒரு விநாடிக்குள், அந்த மனிதனுடைய வாழ்க்கை வரலாறு முழுதையும், போலீஸ் ரிப்போர்ட்டுக்களில் உள்ளபடி அவர் நினைத்துப் பார்த்தார். இந்த மனிதன் சொல்வதனால் வேலையை விட்டு விலகிச் செல்லவேண்டுமா? அது ஒரு பெரிய குறையாகும் அல்லவா?

இதற்குள்ளே அரவமற்ற நிமிடங்கள் பல கடந்து சென்றன. கேசவ பிள்ளை எழுந்தார்.

முதல்வர் சொன்னார்: ''ஆகட்டும். நான் சொன்னதைப்பற்றி யோசியுங்கள்! வற்புறுத்தவில்லை.''

அவர் பதிலுரைக்கவில்லை. வணங்கிவிட்டு அறையிலிருந்து வெளியே வந்தார். வராந்தா வழியாகத் தம் அறையை நோக்கிச் சென்றபோது, ஆர். டி. மேனன் பைல்களை எடுத்துக்கொண்டு போவதை அவர் கண்டார். கண்ணினால் பார்த்தார், அவ்வளவுதான். அந்தக் காட்சி மூளையில் பதிய வில்லை.

ஒரு சில அடிகள் நடந்தார். பிள்ளை திரும்பிப் பார்த்தார். மேனனும் திரும்பிப் பார்த்தார். ஆர். டி. மேனன் முதல்வருடன் கலந்து யோசனை செய்யப் போகிறாரோ?

கேசவபிள்ளை நெடுமூச்சுவிடவில்லை. பற்களைக் கடித்தார். நாடி நரம்புகள் முறுக்கேறின. வாழ்நாளில் ஒருபோதும் ஏற்பட்டிராத அந்த உணர்ச்சி, எங்ஙனம், எங்கிருந்து என்று தெரியாது, அவருக்கு ஓர் உணர்வை அளித்தது. நடந்து செல்கிற ஆர். டி. மேனனை மீண்டும் ஒருமுறை திரும்பிப் பார்த்தார். வெற்றி நடை போடுகிறார் மேனன்.

கேசவபிள்ளையின் மன அமைதி குலைந்தது. இதுவரையில் அநுபவித்தறியாத அமைதியின்மை! நேரம் செல்லச் செல்ல அது அதிகரித்தது. தடுமாறிய நிலை. எதையோ செய்வதற்கான உத்வேகம் அவரை ஆட்டிப் படைக்கிறது. எதைச் செய்வதென்ற தெளிவு இல்லை. அவருக்கு இருந்து வந்த திறமைகள் அனைத்தும் உயிர் கொண்டு எழுகின்றன.

எந்த அலுவலையும் கவனிக்கவில்லை. விரைவாக வீட்டுக்குக் கிளம்பி வந்தார். அவருடைய மனநிலையை மனைவி புரிந்துகொண்டாள். அந்தப் பெண்மணிகூட நீண்டகால அநுபவத்திலிருந்து சில திறமைகளைப் பெற்றிருக்கிறாள். கணவருடைய மன அமைதி சிறிது குறைந்துவிட்டாலும் அதைப் புரிந்துகொள்ளும் திறமை இப்போது அவளுக்கு உண்டு. அமைதியின்மையின் காரணத்தைக்கூட அவளால் சொல்லமுடியும். கணவர் வருவதைப் பார்த்த உடனேயே கார்த்தியாயினி அதைப் புரிந்து கொண்டாள். அவள் அவரிடம் காரணம் கேட்கவில்லை. அவராகவே சொல்லிவிட்டார்.

''அவர்களுக்கு என்னை வேலையிலிருந்து நீக்கிவிடவேண்டும். நான் அங்கே இருப்பதனால் அவர்கள் நினைத்தபடி கொள்ளையடிக்க முடிவதில்லை. அவர்களுடைய லேபர் கான்டிராக்டு சொஸைட்டி, கடலிலே கல்லைப் போடுவது, கள் இறக்கும் தொழிலாளர் சொஸைட்டி—ஆகியவை ஒன்றும் சரியாகச் செயல்பட முடியாமல் இருக்கின்றன. நான் கொஞ்ச காலத்துக்கு லீவெடுத்துச் சும்மா இருந்துவிட்வேண்டுமாம்!''

முதல்வரின் யோசனை கார்த்தியாயினியை நடுங்க வைக்கவில்லை. அவளுடைய கருத்தை முதல்வர்கூட ஆமோதித்திருக்கிறார்! அந்த அளவிலே அவளுக்குத் திருப்திதான்.

''நான் எந்நேரமும் இதைத்தானே சொல்லிக்கிட்டிருக்கிறேன்!''

ஒரு விநாடிக்குப் பிறகு மேலும் தொடர்ந்து கூறினாள்:

''அதுதான் நமக்கு நல்லது. இந்தத் திருவனந்தபுரத்திலேருந்தே போயிடணும். போனாத்தான் மனசுக்கு நிம்மதி கிடைக்கும்.''

மறுக்கமுடியாத ஓர் உண்மையைச் சொல்பவள்போல் உணர்ச்சியற்ற வளாகக் கார்த்தியாயினி கூறினாள். கேசவபிள்ளை ஒருமுறை முனகினார்.

அன்று குறிப்பாக ஏதோ நடந்திருக்கிறது என்பதை அவள் புரிந்து கொண்டாள். அது என்னவென்று அறியத்தான் ஆவலுற்றாள். அவர் எல்லாவற்றையும் சொன்னார்.

''அந்த மலபார் நாய், எனக்குச் சவால் விட்டுக்கொண்டு நடந்து போகிறான்.''

மேற்சொன்ன வாசகத்துடன் அவர் தமது பேச்சை முடித்துக்கொண் டார். கார்த்தியாயினி தன் கருத்தைத் தெரிவித்தாள்: ''குரல் நல்லா யிருந்தபோதே பாட்டை நிறுத்தியிருக்கணும்.''

அமைதியின்றி உலாவிக்கொண் டிருந்த கேசவபிள்ளை சொன்னார்: ''ஆம், பாட்டை நிறுத்திடலாம். ஆனால், அப்படிப் பாட்டை நிறுத்தி விட்டுச் சும்மா ஓய்வெடுத்துக்கொண்டு வெளியேறிவிடமாட்டேன்.''

''அப்புறம் என்ன செய்யப் போறீங்க?''

அதற்குப் பதிலளிக்கவில்லை. ஒருமுறை முனகினார். அந்த முனகல் அவளுடைய ஆவலைச் சிறிதும் கிளப்பிவிடவில்லை. இந்த வேலையை விட்டு விட்டு எப்படியாவது திருவனந்தபுரத்திலிருந்து வெளியேறிவிட்டால் போதும் அவளுக்கு. அவர் வேறு எதையோ செய்யத் திட்டமிட்டிருக் கிறார்போல் தெரிகிறது. எது வேண்டுமானாலும் செய்யட்டும்!

கார்த்தியாயினியின் வாழ்நாளிலேயே மதிப்பிடற்கரிய ஒரு நிமிடமாக இருந்தது அது. இவ்வளவு முக்கியமானதொரு நிமிஷம் இருந்ததில்லை என்றே சொல்லலாம். அவள் வெகு நாட்களுக்குப் பிறகு அந்த நிமிஷத்திலேதான் ஒருமுறை புன்னகை செய்தாள். குமாரிமுனை நிகழ்ச்சிக் குப் பிறகு அந்தப் பெண்மணியின் இதழ்களிலே மந்தகாசம் தவழ்ந்ததே இல்லை. இந்தக் காலகட்டத்தில் அவளிடம் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. அவள் மெலிந்துவிட்டாள். வதனம் இரத்தக் களையை இழந்திருந்தது. அங்கே எலும்புகள் எழுந்து நின்றன. கூந்தல் இழைகள் சில நரைத்துவிட்டன. முக அழகின் வசீகரமும் களையும் துடைத்து நீக்கப்பட்டதுபோல் இருந்தன. நடைப்பிணமாகிவிட்டாள். ஆனால் இன்று அந்தகாரம் அகன்று விடுவதுபோல், பெரிய பாரம் கீழிறங்கி விடுவதுபோல் அவள் புன்சிரிப்புச் சிரித்தாள். ஒருவேளை இன்னுமொரு நல்ல காலத்தை அவள் எதிர்பார்ப்பதுபோல் தோன்றியது. அகமகிழ்ச்சி யுடன் நிகழ்ந்துவிட்ட அந்த நல்ல காலம் திருவனந்தபுரத்திலிருந்து வெளியேறினால் ஏற்படுமென்று அவள் நினைக்கிறாள் என்றே சொல்ல வேண்டும்.

அவள் கேட்டாள்: ''வேலையிலேருந்து விலகி வந்ததுக்கப்புறம் திருவனந்தபுரத்திலேயே இருக்கப் போறேமா?''

அந்தக் கேள்வி அவர் மனத்திலே வந்து பதியவில்லை. மனத்துக்குள்ளே பெரிய பெரிய திட்டங்கள் உருவெடுத்துக்கொண் டிருந்தன.

''ஹ்ஹும்! தெருவிலே கோஷம் போட்டுக்கிட்டுத் தெல்லவாரியாகச் சுற்றிக்கிட்டிருந்தவனுக்கு என்கிட்டே அதைச் சொல்றதுக்குத் துணிச்சல் வந்திட்டது பார்த்தியா? அவனை எல்லாம் அங்கிருந்து கீழே இறக்க முடியுமான்னுதான் யோசிச்சுக்கிட்டிருக்கிறேன்.''

அன்று ரெவின்யூ இலாக்காக் குமாஸ்தாக்களான ஹரிஹர ஐயர், கோவிந்தன் நாயர் ஆகியோர் அவருக்குச் சிறிய அளவில் ஒரு வழியனுப்புதல் விழாவை நடத்தினார்கள் அல்லவா? அப்போது அவர்கள் கேசவபிள்ளையை ஆசீர்வதித்தனர், மந்திரிப் பதவிகூடக் கேசவ

பிள்ளையை எதிர்நோக்கி நிற்கிறதென்று! உள்ளுக்குள்ளே பதிந்து கிடந்த அந்த ஆசீர்வாதச் சொற்கள் இப்போது செயல்பட்டுக்கொண் டிருந் தனவா? ஆனல் அந்த ஆசீர்வாத மொழிகளை அவர் மறந்திருந்தார் என்பது நிண்ணம். இப்போது முதலமைச்சர் அவரை அவமதித்தார். அதற்குப் பதிலடி கொடுக்கவேண்டும். இந்த மந்திரி சபையைத் தலைக் குப்புறக் கவிழ்த்துவிடவேண்டும்.

கார்த்தியாயினி அறிய விரும்பியது அது அல்ல. அவள் திரும்பவும் கேட்டாள்: ''எது வேணும்னு செய்யுங்க! இந்தத் திருவனந்தபுரத்திலே நாம் இருக்கப் போறோமா? அதைச் சொல்லுங்க!''

அந்தக் கேள்வி அவர் காதிலே விழுந்தது. அவர் கவனத்தை இழுத்தது:

''ஊம்? என்ன கேட்டாய்?''

கார்த்தியாயினி திரும்பவும் அதையே கேட்டாள். வேலையிலிருந்து விலகிவரக் கணவருக்குச் சம்மதம் என்றே தெரிகிறது. அது நல்லது தான். ஆனல் அவளுக்குத் தெரியவேண்டியது இன்னும் திருவனந்த புரத்திலேயே தங்கியிருக்கப் போறோமா என்பதுதான்.

கேசவபிள்ளை சொன்னர்: ''எங்கே தங்கியிருந்தால் என்ன? நான் நினைப்பதை நடத்தியே முடிக்கவேண்டும்.''

கார்த்தியாயினி அதை ஏற்றுக்கொள்ள முடியாதென்றே சொல்லி விட்டாள்: ''நான் சம்மதிக்கமாட்டேன். இங்கிருந்து போயிடுவேன். ஆனமட்டும் பொறுத்துப் பார்த்தேன். இனிமே கொஞ்சங்கூடப் பொறுத்துக்கொண் டிருக்க முடியாது.''

கேசவபிள்ளைக்கு ஆத்திரம் வந்தது. ''நான் பெரிய பெரிய காரியங் களைப் பற்றிப் பேசிக்கிட்டிருக்கிறேன். நீ குறுக்கே புகுந்து என்ன என்னமோ உளற்றியே? இதென்ன அறிவீனம்?''

கார்த்தியாயினிக்குக்கூட ஆத்திரம் வந்தது. இதற்கு முன்பெல்லாம் கணவர் சற்று உரத்த குரலில் பேசினுல், அவள் பதிலே பேசினதில்லை. கணவரின் விருப்பத்துக்குக் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளவோ, அல்லது அதிலே இணைந்துவிடவோதான் செய்தாள். இப்போது எதிர்க்கத் துணிந்துவிட்டாள்.

''ஊம்? எதை அறிவீனம் என்கிறீங்க? நானும் பொண்ணும் எங்க ஊருக்கே போயிடறோம்.''

கேசவபிள்ளை கடுமையானதொரு முன்னெச்சரிக்கை செய்தார்: ''பார், கார்த்தியாயினீ, நீ சொல்லறதையெல்லாம் கேட்கிறேன் என்கிறதை வைத்துக்கொண்டு, பாம்பின் பல்லைத் தொட்டுப் பதம் பார்த்திடலாம்னு எண்ணிடாதே!''

''நான் என்னேடே பிரச்னையைப் பற்றித்தான் சொன்னேன்.''

கேசவப்பிள்ளை கரத்தினை ஓங்கியவாறு கார்த்தியாயினியை நோக்கிப் பாய்ந்து சென்ருர். அவள் சிறிதும் சஞ்சலப்படவில்லை. நின்றுகொண் டிருந்த இடத்தைவிட்டு அசையவே இல்லை. அடிப்பதாக இருந்தால்

அடிக்கட்டுமே; அடி வாங்கத் தயார் என்ற முறையிலேதான் நின்றாள். கண்களில் நீர் ததும்பி நின்றது. அவள் சொன்னாள்: ''ஆம்! இனிமே நீங்க அந்தக் காரியத்தையும் செய்வீங்க. எனக்குத் தெரியும்.''

தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை அவளால். ''அப்படியானா நான் ஒரு குறுக்கு வழியைச் சொல்லித் தர்றேன். அதைக்கூடச் செஞ்சிடுங்க! என்னைக் கொன்னுடுங்க! யாருமே கேக்கமாட்டாங்க. தெரிஞ்சுக்கமாட்டாங்க. அப்புறம் தொந்தரவே இருக்காது. மந்திரியா கிறப்போ அவளோடு சேர்ந்து வாழ்ந்திடலாம்.''

அது எல்லை மீறிய பேச்சு. கேசவபிள்ளை அலறினார் ஆம், அலறவே செய்தார்.

''நீ என்ன சொன்னாய்?''

கார்த்தியாயினி விட்டுக் கொடுக்கவில்லை.

''ஆம், அதைத்தான் சொன்னேன். இந்தத் தொந்தரவை ஒழிச்சுக் கட்டிவிட்டு, அவளை அழைச்சுக்கிட்டு வந்து இங்கே தங்க வச்சுக்கிட்டு மந்திரியா சுகமா வாழ்ந்திடுங்க! என்னை ஒரே அடியாலே கொன்றுப் போடுங்க!''

அவள் தன்னையே மறந்துவிட்டாள்; கதறியழுதாள். உரத்த குரலிலே தான் பேசினாள். அந்த வீட்டிலே இவ்வளவு உரத்த குரலிலே இதுவரை யாருமே பேசியதில்லை.

கேசவபிள்ளையும் தம்மை மறந்த நிலையில் காணப்பட்டார். ஆத்திரத்தினால் வார்த்தைகள் வெளிவரவில்லை. கடித்துக்கொண்ட பற்களினூடே சில ஓசைகள் வெளியே கிளம்பி வந்தன. உணர்ச்சியைக் கட்டுப்படுத்துகிற முயற்சியிலே அவருடைய சதைப்பற்றுக்களும் நரம்புகளும் துடித்து நின்றன.

அந்தக் குடும்பத்தில் ஒரு பூகம்பமே வெடித்திருந்தது. இதற்கு முன் இத்தகையதொரு புயல் அங்கே வீசியடித்ததில்லை. கேசவபிள்ளை இந்த அளவு உணர்ச்சி வசப்பட்டதே கிடையாது. கார்த்தியாயினி இப்படிக் கணவருக்கு முன்னால் நின்றதும் இல்லை. எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு அடங்கி ஒதுங்கி வாழ்ந்துவந்தாள். இன்று கணவருக்குச் சவால் விடுத்தவாறு காட்சி தருகிறாள். கணவரின் சவாலை ஏற்றுக் கொண்டு நிற்கிறாள். அவள் கதறியழுதவாறே கூறினாள்:

''இது எனக்கு முன்னமே தெரியும். இப்படியெல்லாம் நடக்கப் போவதுன்னு தெரியும்.''

கேசவபிள்ளை கடுமையான குரலிலே கேட்டார்: ''எப்படியெல்லாம்?''

''என்னை அடிப்பீங்க, இடிப்பீங்க என்றெல்லாம். இன்னும் அது நடக்கும். எனக்குத் தெரியும்.''

உண்மைதான். கேசவபிள்ளை தம்மை மறந்த நிலையில் தம் கரத்தை ஒருமுறை அவளை அடிக்க ஓங்கினார். இத்தகைய ஒரு நிகழ்ச்சி அவர்களுடைய இல்லற வாழ்விலே முதல் முதலாக நடைபெறுகிறது.

ஆனால் அது நடைபெற்றுவிட்டது. அவர் கடுமையாகத்தான் கேட்டார்: ''நீ எனக்கு மன நிம்மதி தரமாட்டாயா?''

''நான் என்னைக்குமே உங்களுக்குத் தொந்தரவாத்தான் இருந்து வந்திருக்கிறேன். எனக்கு அது தெரியும்.'' அவள் உடனடியாகப் பதில் உரைத்தாள்.

மீண்டும் அவரால் தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை. உண்மையிலே தொந்தரவாகத்தான் பட்டது.

''நீ எதுக்காக இப்படிக் காளிமாதேவியைப் போல் குதிக்கிறே? இப்படிப்பட்ட நிலைமை உண்டாவதற்கு நான் என்ன சொன்னேன்? இங்கே என்ன நடந்தது?''

உடனுக்குடன் பதிலளித்தாள் கார்த்தியாயினி:

''இன்னைக்கு அல்ல நடந்தது. அன்னைக்குக் குமரிமுனைக்குப் போனீங்களே, அன்னையிலேருந்து நடக்குது. அதுக்கு முன்னே எப்படி இருந்தீங்கன்னு நல்லா யோசிச்சுப் பாருங்க!''

கேசவபிள்ளைக்குப் பதில் சொல்ல முடியவில்லை. பல்லைக் கடித்தார்; அலறினார்:

''நாசமாப் போக! எனக்கு மன நிம்மதியே தரமாட்டாயா?''

''நான் உங்களுக்கு மனநிம்மதி தராமே இருந்திருக்கிறேனா? இந்தத் தாலியை என் கழுத்திலே கட்டின அன்னையிலேருந்து யோசிச்சுப் பாருங்க. நான் ஏதாவது சொல்லியிருக்கிறேனா?''

தழுதழுத்த குரலில் அவள் மீண்டும் கூறினாள்: ''நான் ரொம்பப் பொறுமையாத்தான் இருந்துக்கிட்டிருந்தேன். எல்லாவற்றையும் சகிச்சிக்கிட்டிருந்தேன். நீங்களே நல்லா யோசிச்சுப் பாருங்க!''

பின்னர், அவர் குமரிமுனைக்குச் சென்று திரும்பிய பின்னர் அந்தக் குடும்பத்தில் ஏற்பட்ட மாறுதல்களைப்பற்றி ஒவ்வொன்றாகக் கேட்டாள். ''அந்தப் பழைய நல்லுறவையும் அன்பையும் அதன் பின் பார்த்ததே இல்லை. அந்தச் சிரிப்பொலிகளும் வேடிக்கைப் பேச்சுக்களும் அங்கே முழங்கிக் கேட்டதே இல்லை. தன்னையே மறந்தவர்போல் எதையோபற்றி யோசித்துக்கொண்டிருக்கிறீங்க. வாழ்க்கையிலே ஆனந்தம் துடைத்து விலக்கப்பட்டுவிட்டது என்பது உண்மைதான். அதை மறுக்க முடியுமா?'' என்று கார்த்தியாயினி சந்தேகத்துக்கு இடமின்றியே கேட்டுவிட்டாள்.

கேசவபிள்ளை மௌன நிலையைக் கடைப்பிடித்தார். இத்தகைய சந்தர்ப்பங்களில், ஏன், இதைவிட மிக்க நெருக்கடியான சந்தர்ப்பங்களிலேகூட, சரளமான மனத்துடனும், பகுத்தறிவுடனும் அவள் நடந்துகொண்டிருந்திருக்கிறாள். பிரச்னைகளை நளினமாகத் தீர்ப்பதற்கான யோசனைகள் தந்து உதவியிருக்கிறாள். எந்தப் பிரச்னையையும் தீர்க்க முடியாததாக அவள் கருதியதில்லை. மனத்துக்குச் சுமையாகத் தோன்றுகிற சந்தர்ப்பங்களில் எல்லாம் அதை எளிதாக்க அவள்

பெரிதும் முயன்றிருக்கிறாள். ஆனால் இன்று, அவள் மிகவும் நெருக்கடியான நிலைமையைத் தோற்றுவித்தாள்.

துணையற்றவர்போல், கேசவபிள்ளை பரிதாபத்துக்குரிய குரலிலே கூறினார்:

''நான் வீட்டுக்கு வரும்போதெல்லாம் எனக்கு ஆறுதல் கிடைத்து வந்தது. இப்போது அதுவும் இல்லாததாகிவிட்டதா?''

கார்த்தியாயினியும் உண்மையை மறைத்து வைத்துப் பேசவில்லை.

''என்னாலே சகிக்கமுடியாததாகிவிட்டது. நெருக்கடி நிலைமையைத் தோற்றுவிக்கறேன்னு நான்கூட நினைத்ததுண்டு. கெட்ட நோக்கோடு நான் நெருக்கடியை உண்டாக்கறதாக நினைக்கக்கூடாது.''

இருவரும் தளர்ந்துவிட்டனர். கட்டுப்பாட்டை மீறி வளர்ந்துவிட்ட ஆத்திர உணர்ச்சி, அதன் உச்சகட்டத்தை அடைந்துவிட்டது. அப்போது அறிவும், உணர்ச்சியும், நரம்புகளும் தளர்ந்துவிட்டன. அந்தத் தளர்ச்சியின் தன்மையே குற்ற உணர்வுதான். வாழ்நாள் முழுவதும் சேர்த்து வைத்துக் காப்பாற்றிய ஏதோ ஒன்று ஒரு நிமிஷ நேரத்துக்குள். தகர்ந்துப் படுசூரணமாகிவிட்டதென்று கார்த்தியாயினிக்குத் தோன்றியது. அவள் சொல்லக்கூடாததைச் சொல்லிவிட்டாள்; செய்யக்கூடாததைச் செய்துவிட்டாள். எல்லாமே நாசமாயிற்று. எத்தனை எத்தனை சோதனைக் கட்டங்கள் சமாளிக்கப்பட்டிருக்கின்றன! அன்றெல்லாம் இது மாதிரியான நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை. இளமையின் உணர்ச்சி வேகத்தைக்கூடக் கட்டுப்படுத்த முடிந்திருக்கிறது. இன்று, எல்லாவற்றையும் அநுபவித்துச் சுவைத்தாகிவிட்டபின் இந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. இத்தகைய குற்ற உணர்வு ஆட்டிப் படைத்த கார்த்தியாயினி அப்படியே நின்றவாறு அழுதாள்.

கேசவபிள்ளையின் மனமும் கலங்கியிருந்தது. அவரும் தளர்ந்து விட்டார். என்றைக்குமே, எந்தப் பிரச்னையிலும் தமக்குத் தொந்தரவைக் கொடுக்காமல் இருந்து வந்த வாழ்க்கைத் துணைவியை நோக்கிக் கரத்தை ஒங்கினார். அத்தகைய ஓர் அறிவீனம் தமக்கு ஏற்பட்டுவிட்டதே என நினைத்து அவர் வருந்தினார். மனைவியிடம் நன்முக நடந்துகொள்ள அவருக்குத் தெரியும். அதற்கென ஒரு பயிற்சியே தேவையில்லை. இப்போது அந்தத் திறமைகூட அழிந்து விட்டதா என்று அவர் பயப்பட்டார். ச்சீ! அப்படி நடந்திருக்கக்கூடாது. அதற்கு ஒரு நியாயத்தைக் கற்பிக்கக்கூட முடியவில்லை.

கார்த்தியாயினிக்கு அந்தத் தளர்ச்சியிலேகூடத் தன்னை நியாயப்படுத்த ஒரு பிடி கிடைத்துவிட்டது. அவ்வளவு பெரிய தவறு எதையும் தான் செய்யவில்லை எனச் சொல்ல அவளுக்கு ஒரு வழி தென்பட்டது. அகஸ்மாத்தாகத்தான் அது தென்பட்டது. அவளுடைய பிறந்தகத்திலும் புக்ககத்திலும் தாய் தந்தையர்கள் என்றும் எப்போதும் சண்டை போடுவதுண்டு. கார்த்தியாயினி அவற்றை நினைவுபடுத்திப் பார்த்தாள். அங்கே தாய்மார்கள் தகப்பன்மார்களைத் திட்டிப்

பேசியதுண்டு. அந்த வகையிலே பார்த்தால் இது ஒரு பொறுக்க முடியாத தவறு எனச் சொல்லமுடியுமா? பப்புப்பிள்ளை குட்டியம்மாவை நோக்கிக் கரத்தை ஓங்குவது மட்டுமல்ல; அடிக்கவும் செய்திருக்கிறார். சிறிது நேரத்துக்குள்ளேயே மாமியார் மாமனார் பக்கத்தில் அமர்ந்து நளினமாகப் பேசுவதைக் கேட்டிருக்கிறாள். அந்த அம்மையார் தன் கணவருக்கு வெற்றிலை சுண்ணாம்பு தடவி மடித்துக் கொடுப்பதைப் பார்த்திருக்கிறாள். பதியினுடைய நிழல் போன்று அந்த ஸதி நடந்து செல்வதைக் கண்டிருக்கிறாள். அப்படி இருக்கிறபோது அம்மாவுக்கு அப்பா கையிலிருந்து ஓர் அடி கிடைக்கவேண்டும். அது அம்மாவுக்கு உரிமைப்பட்டதாகும். உரிமைப்பட்டது கிடைக்கவேண்டும். அதற்காக, மனப்பூர்வமாகவே அம்மா ரகளையை உண்டுபண்ணி வந்திருக்கிறாள். அந்த முறையிலே பார்க்கும்போது இது தனக்கேற்பட்ட ஒரு பெரிய வீழ்ச்சியாகக் கார்த்தியாயினிக்குத் தோன்றவில்லை. ஆனால் அப்பா இன்னொருத்திக்குத் தன்னைப் பங்கு போட்டுக் கொடுக்கவில்லையே!

குமரிமுனை முதல் இதுவரை நடைபெற்ற அந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும், முன்பு, அந்த நாட்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தையும் மனைவியிடம் ஒளிவுமறைவின்றித் திறந்து சொன்னதுபோன்று இன்றும் அவளிடம் சொன்னால் என்னவென்று கேசவபிள்ளைக்குத் தோன்றியது. அன்று சுமை இறங்கிவிட்டதெனக் கருதி அவரால் ஆறுதலடைய முடிந்தது. எல்லாவற்றையும் அறிந்தபோது அவளும் ஆறுதலடைந்தாள். குமரிமுனை நிகழ்ச்சிக்குப் பின் அந்த வீட்டில் மகிழ்ச்சி என்பதே இல்லை. சதிபதிகளுக்குள் இருந்த மன நிறைவும் ஒற்றுமையும் சிதைந்துவிட்டன. இனிமேல் அவை திரும்ப வருமா? வேலையைவிட்டு விலகி வரும்போது மகிழ்ச்சியே இல்லாத ஒரு வீடுதானா, தம்மை வரவேற்கவேண்டும்? வாழ்க்கைக்குத் தேவையானவை எல்லாம் உண்டு. ஆனால், மன நிம்மதியில்லை, மகிழ்ச்சியில்லை. அத்தகைய ஒரு நிலையைக் கேசவபிள்ளை யோசித்துப் பார்த்தார்.

கார்த்தியாயினி எதையும் தாங்கக்கூடியவள்; பொறுக்கக் கூடியவள்; மறக்கக்கூடியவள். அவளுடைய அந்த இயல்பு கேசவபிள்ளைக்குத் தெரிந்ததுதான். குமரிமுனையினையும், பீருமேட்டினையும் அவள் பொறுத்துக் கொள்வாள்; மறக்கவும் செய்வாள்.

ஆனால் அவற்றைத் திறந்து சொல்ல கேசவபிள்ளைக்குத் துணிச்சல் தான் இல்லை. அவளிடம் எப்படிச் சொல்வது? இனிமேல் அப்படிப்பட்ட தவறுகள் நிகழாது என்று அன்று அவளிடம் ஆணையிட்டுச் சொன்னது தானே? அவள் அதை நம்பவும் செய்தாள். ஏதேதோ நடைபெற்றிருக் கிறதென்ற சந்தேகம் அவளுக்கு இல்லாமல் இருக்குமா? அவள் சுறுசுறுப் பான இயல்பை இழந்துவிட்டவளாகக் காணப்படுகிறாள். வாக்குறுதி யைக் காப்பாற்ற முடியாதவனுடைய வாக்குறுதியை இனிமேல் அவள் நம்புவாளா? குற்ற சம்மதத்தை ஏற்றுக்கொள்வாளா?

அவற்றை அவளிடம் சொல்லிவிடுங்கள் என்று உள்ளத்திலிருந்து யாரோ கூட்டுவது பிறப்பிப்பதுபோல் கேசவபிள்ளைக்குத் தோன்றியது. அந்தக் கூட்டுவளையை மறுத்து நிற்க அவரால் முடியவில்லை. எந்தத் தவற்றை வேண்டுமானாலும் செய்யுங்கள், அங்கே மன்னிப்பு கிடைக்கும்; ஆறுதலடையலாம். அப்புறம் ஏன் அப்படிச் செய்யக்கூடாது?

எப்படிச் சொல்வதென்று கேசவபிள்ளைக்குத் தெரியாது. 'நான் குமரி முனையிலே ஃபைல் பார்த்துக்கொண்டிருந்தபோது அவள் அங்கே வந்தாள்' என்று ஆரம்பிக்கலாமா? அல்லது, 'என் தவறுகளை மன்னிக்கவேண்டும்' என்று சொல்லி ஆரம்பிக்கலாமா? அப்படியில்லாமல், 'நீ ஏன் என் மனத்தைத் துன்புறுத்துகிறாய்? நான் எப்படித்தான் நடந்துகொண்டாலும் என்றென்றும் உனக்குத்தான் சொந்தமென்று நினைத்துக்கொள். இவ்வளவு காலத்துக்குப் பிறகு இதை நீ அறிந்துகொள்ளவில்லையா?' என்று இப்படி ஆரம்பித்தால் என்ன? . . . கேசவபிள்ளை இப்படிப் பலவாறுகச் சிந்தித்தார். எந்த முறையைக் கடைப்பிடித்தால் அவளை உணரவைக்க முடியும்? தவிரவும் பேசும்போது, 'அவளிடமிருந்து எதை எதையெல்லாம் மறைத்து வைக்கவேண்டும்? எதற்கெல்லாம் முக்கியம் அளித்துப் பேசவேண்டும்?' என்றெல்லாம் அவர் யோசித்துக்கொண்டிருந்தார். துவக்கத்துடன் பொருந்தியே கதை அமையவேண்டும். அவ்வாறு அமைக்க வேண்டும். இறுதியில் அவர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார். 'குமரி முனையிலே நான் ஃபைலைப் பார்த்துக்கொண்டிருந்தபோது . . .' என்றே துவக்கிவிடலாம் என்பதுதான் அந்த முடிவு. அதற்கேற்ற முறையில் மறைக்கவேண்டியதை மறைக்கவும் சொல்லவேண்டியதைச் சொல்லவும் இசைவான முறையில் அந்தக் கதை தயாராகிவிட்டது.

தனக்கு ஏற்பட்ட நிலையை குறித்து வருந்தியவாறு கார்த்தியாயினி உட்கார்ந்திருந்தாள்.

* * *

ஆஸ்பத்திரியிலுள்ள 'லேபர் வார்டு;' பிரசவத்தை எதிர்பார்த்துப் படுத்துக் கிடந்தாள் மாதா ஜோதிர்மயீதேவி. அவளை இவ்வளவு உற்சாகத்துடன் ஒருபோதும் பார்த்ததில்லை. சாவித்திரி மட்டும் அவளுக்குத் துணையாக இருந்தாள். ஆவல்களும் மனத்துயர்களும் சாவித்திரியைப் பெரிதும் வாட்டி வதைத்தன. அவள் மிகவும் களைப்படைந்திருந்தாள்.

ஜோதிர்மயீதேவி மணிக்கு முப்பது தடவை, ஆசிரமத்தையும் ஆசிரமத் துறவினிகளையும் சபித்துக்கொண்டிருந்தாள். வாழ்க்கையில் ஏற்பட்ட அந்த மிகப் பெரிய நடுக்கத்திலிருந்து, நாட்கள் பல சென்றபிறகுக் கூட, அவள் இதுகாறும் விடுதலை அடையவில்லை.

''அந்த மாபாவீங்க இதைச் சிதைத்திடணும்னு சொன்னுங்களே. . . அவங்க நாசமாப் போவ!''

இதுதான் மாதாஜியின் சாபம்! கர்ப்பத்தைச் சிதைத்துவிட வேண்டுமென்று சொன்னதிலிருந்து கிளம்பிய ஆத்திரத்தின் பகிரங்கத் தோற்றம்! இவை அனைத்தும் சாவித்திரியின் காதிலே விழுந்துகொண்டிருந்தன. அவளால் என்ன சொல்ல முடியும்? கரியநிழல் ஒன்று அவள் உள்ளத்திலே பரவியிருந்தது. ஒரு வேளை அந்தப் பெண் துறவிகளுடைய கருத்தே, அவளுக்குக்கூட இருந்து வந்ததா? அவள் எதையும் வாய்விட்டுச் சொல்லவில்லை. ஜோதிர்மயீதேவிக்கு இருந்த உற்சாகத்தின் சுறுசுறுப்பும், பெண் துறவிகள் மீது இருந்த தீராத பகைமை உணர்ச்சியும் சாவித்திரியைப் பொறுத்தவரையில் அவளைக் குழப்பத்துக்கு உள்ளாக்குகின்ற பிரச்னைகள்தான்.

ஒரு நாள் சாவித்திரி ஜோதிர்மயீதேவியிடம் கேட்டுவிட்டாள்: ''எதுக்கம்மா, அவங்களைத் திட்டறீங்க? ஆசிரமத்துக்குக் கெட்ட பெயர் வரக்கூடாதுன்னுதானே, அவங்க அப்படிச் சொன்னுங்க?''

சாவித்திரி சொன்னதன் நோக்கத்தைச் சரியாகப்புரிந்து கொள்ளாமல் ஜோதிர்மயீ பதிலளித்தாள்: ''ஹூம்! ஆசிரமத்துக்குக் கெட்ட பெயர்! அதுக்கு நல்ல பெயர் எப்படி ஏற்படமுடியும்? எனக்கு எல்லாம் தெரியும். நான் மட்டுந்தான் அங்கே மானம் மரியாதையாகக் காலத்தைக் கழிச்சிருக்கிறேன்.''

தொடர்ந்து ஆசிரமக் கதைகளை அவள் ஒவ்வொன்றாகக் கூறத் தொடங்கியபோது, அதைத் தடுப்பதற்காகச் சாவித்திரி சொன்னாள்: ''அதைப் பற்றி அல்ல நான் சொன்னது. அதைவிட்டால் அப்புறம் அவங்களுக்கு வேறு கதி? ஆசிரமத்துக்கு நல்ல பெயர் இருந்தாத்தானே, அவங்களால் அங்கே தங்கியிருக்க முடியும்? எல்லாவற்றையும் துறந்துவிட்டு அங்கே வந்தவங்கதானே, அவங்க? அந்த இடம் கெட்டுக் குட்டிச்சுவராஞ அப்புறம் அவங்களுக்குப் பொழைப்பு ஏது?''

''அவங்க, அவங்களோட காதலர்களோடு சேர்ந்து போகட்டும்'' என்று சொல்லி ஒருவிநாடி நிறுத்திவிட்டு ஜோதிர்மயீதேவி தொடர்ந்து கூறினாள்: ''எனக்கு எல்லாரையும் தெரியும். துறவியாவதற்கு முன்னும் பின்னுமுள்ள அவங்களோட கதைகள் அத்தனையும் எனக்குத் தெரியும்.''

அந்த ஆசிரமத்திலுள்ள அனைத்துத் துறவினிகளுடைய வாழ்க்கை தடைப்பட்டு நிற்கிற காட்சியையே சாவித்திரி பார்க்கிறாள். அவர்கள் எல்லாருமே ஏளனத்துக்குப் பாத்திரமாகி விட்டனர். அதன் படிவாசல் வழியாக வருவோர் போவோர் அத்தனை பேர்களும் இப்போது அதிகப் படியான கதைகள் சொல்வார்கள். அங்கே இனிமேல் மனிதர்கள் வருவார்களா? தன்னைப்பற்றிய நினைவிழந்த முறையில், முன் யோசனையின்றியே வளர்ந்து வந்த வெறுப்பும் ஆத்திரமும் சாவித்திரியை ஆச்சரியப் படுத்தியதோடு பயமுறுத்தவும் செய்துவிட்டன.

அவள் கேட்டாள்: ''அம்மா, பிரசவத்துக்குப் பிறகு நீங்க என்ன செய்யப் போறீங்க?''

சிறிது சோகம் தோய்ந்த சிரிப்புடன் ஜோதிர்மயீதேவி விடையளித்தாள்:

''நானு? என்னைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம்.''

''அதென்ன, அப்படிச் சொல்லறீங்க? உங்களை அவரு ஏற்றுக்கொள்வாருங்களா?''

''அவர் என்னை ஏற்றுக்கொள்ள வேண்டாம்.''

''அப்புறம்?''

ஜோதிர்மயீதேவி மௌனமாகிவிட்டாள். சாவித்திரி விடையை எதிர் பார்த்து நின்றாள். ஆசிரமவாசிகளுடையது மட்டுமின்றி ஜோதிர் மயீதேவியுடைய எதிர்காலத்தைக் குறித்தும் எவ்வளவோ யோசித்துப் பார்த்த போதிலும் சாவித்திரியால் எதையும் புரிந்துகொள்ள முடிய வில்லை.

ஜோதிர்மயீதேவி மறுக்கப்பட முடியாத கட்டளை ஒன்றைப் பிறப் பிப்பது போன்ற முறையிலே கூறினாள்: ''நீ எதையும் அறியவேண்டாம். ஒன்றை மட்டும் செய்தால் போதும். அந்தக் குழந்தையை அவர் முன்னிலையில் கொண்டு போய் வைக்கவேண்டும். பிறகு திரும்பி வந்துவிட வேண்டும். குழந்தை இறந்து விட்டதென்றால், அதன் தகப்பன் யார் என்ற விவரத்தை, இன்று வைத்திருப்பதுபோல் இரகசியமாகவே வைத்திருக்க வேண்டும். யாரிடமும் சொல்லக்கூடாது.''

ஒரு விநாடிக்குப் பின்னர் அவள் மேலும் கூறினாள்:

''அப்புறம் நீ முன்போலவே ராஜபாதையினூடே நடந்து நடந்து வாழ் நாளைக் கழிக்க வேண்டும்.''

சாவித்திரி கேட்டாள்: ''அப்போ. . . நீங்க. . .?''

அவள் கேள்வியைப் பூர்த்தியாக்கு முன்னரே ஜோதிர்மயீ கூறினாள்:

''ஓ. . .! என்னைப்பற்றி நீ யோசிக்க வேண்டாம். யாருமே யோசிக்க வேண்டாம்.''

''அப்புறம்?''

''நான் சொன்னதுபோல் நீ நடந்துகொண்டால் போதும். நீ செய்ய வேண்டியது ஒரே ஒரு காரியம் மட்டுந்தான். உனது சுமை ஒழிந்து போவதற்குக்கூடத்தான். அந்தக் குழந்தையைக் கையிலெடுத்துக் கொண்டு நீ எப்படியும் பார்க் வியூவுக்குள்ளே புகுந்துவிடவேண்டும். அப்புறம் அவருடைய பாதங்களிலே காணிக்கைபோல் வைத்துவிட்டுத் திரும்பி நடந்து செல்லவேண்டும். அவ்வளவுதான்.''

• • •

இரண்டு நாட்களுக்குப் பிறகு ஜோதிர்மயீதேவி, சாவித்திரியிடமிருந்து இரண்டு உறுதிமொழிகளைப் பெற்றுக்கொண்டாள். ஒன்று: ''அந்தக் குழந்தையின் தகப்பன் யாரென்று எந்த ஒரு மனிதப் பிராணியிடமும்

சொல்லமாட்டேன்.'' அப்படிச் சொல்லும்போதே சாவித்திரி அதற்கு ஒரு திருத்தத்தை ஜோதிர்மயீதேவியை ஒப்புக்கொள்ள வைத்தாள்: ''கேசவபிள்ளையிடமின்றி வேறு யாரிடமும் . . .!'' இரண்டு: ''பிறகு அந்தக் குழந்தையை ஒருபோதும் எட்டிப் பார்க்கமாட்டேன்.''

சாவித்திரிக்கு, தன் தலையெழுத்தைப்பற்றிப் புதியதொரு புகார் இருந்தது. ராஜபாதையினூடே நடந்து நடந்து வாழ்நாளைக் கழித்துக் கொண்டிருந்தபோது, விதி ஏன் அந்த ஆசிரமத்தின் படிவாசலிலே, அவளைக் கொண்டு வந்து நிறுத்தியது? அவள் எண்ணற்ற துயர்களை அநுபவித்தவள். இத்தகையதோர் அநுபவங்கூட அவளுக்கு ஏற்படவேண்டுமா? இந்தப் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தம் அவளுக்கு ஏற்பட்டிருக்கிறதென்றால் அதன் பொருள் என்ன?

அத்தியாயம் 46

பிரயாணம் முடிந்தது

பென்ஷனுடன் பதவியிலிருந்து விலக அனுமதியளிக்க வேண்டுமென்று சர்க்காருக்கு விண்ணப்பம் செய்துகொண்டார் கேசவபிள்ளை. அதைச் சர்க்கார் அனுமதித்து உத்தரவிடுமென்று அவர் பூரணமாக நம்பவில்லை. பல்வேறு மட்டங்களில் நீண்டகால அனுபவம் பெற்றிருக்கின்ற ஓர் ஊழியனுடைய தொண்டைத் திடீரென நிராகரிக்க அமைச்சரவை துணிந்துவிடுமா? இதனிடையில் கேசவபிள்ளைக்கு ஆதரவான கருத்துக்களை மக்களில் ஒரு பகுதியினர் பத்திரிகைகள் வாயிலாகத் தெரிவித்தனர். ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், தாம் பதவியிலிருந்து விலகிச் செல்லச் சம்மதிக்க மாட்டார்கள் என்ற நைப்பாசை அவருக்கு இருந்தது. முதல்வர் தம்மை அழைத்து விண்ணப்பத்தை வாபஸ் வாங்க வேண்டுமென்று சொல்வதற்கான வாய்ப்புக்கூட இருக்கிறது. கேசவபிள்ளையைப் பொறுத்தவரையில் பதவியை விட்டு விலகிச் செல்வதைப்பற்றி நினைப்பதே சங்கடமாக இருந்தது. ஒரு சில நாட்களுக்குள் அவரிடம் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் தென்பட்டன. வயோதிகப் பருவம் அவரை ஆக்கிரமித்துக் கொண்டதாகத் தோன்றியது. மந்தமும் களைப்பும் தள்ளாடச் செய்வதாகத் தோன்றின.

நிலைமை இவ்வாறு இருக்கையில்தான் ஒரு நாள் அந்த உத்தரவு கிடைத்தது. கேசவபிள்ளை பென்ஷன் பெற்றுப் பதவியை விட்டு விலகிச் செல்ல மிகுந்த தயக்கத்துடன் அனுமதி அளிக்கப்படுகிறதென்று அந்த அரசாங்க உத்தரவில் குறிப்பிட்டிருந்தது. தேதிகூட நிர்ணயிக்கப் பட்டிருந்தது மறுநாளிலேயே விலகிவிட வேண்டுமென்று.

எதிர் பார்க்கக்கூடியதுதான். எதிர் பார்த்ததுகூட. ஆயினும், அதனால் ஏற்பட்ட அதிர்ச்சி மிகக் கடுமையாக இருந்தது. என்றைக்காவது ஒரு நாள் விலகி வெளியேறி வரவேண்டியதுதானே? அந்த வகையிலே ஆறுதல் அடையலாம். இன்னொரு நாளைக்கு ஒத்திப் போட முடியுமா? அரசாங்கப் பதவியிலிருந்து கீழிறங்கித்தானே ஆகவேண்டும்? அதெல்லாம் உண்மைதான். உத்தியோக வாழ்க்கையை நினைத்து ஆறுதலடைய எவ்வளவோ இருக்கின்றன. இந்தப் பதவிவரையில் வந்துவிட முடியுமென்றே, வந்து சேர வேண்டுமென்றே அரசாங்க அலுவலத்துக்குள்ளே நுழைந்தபோது அவர் எண்ணியதில்லை. அத்தகைய குறிக்கோள் எதுவும் இருக்கவில்லை அந்த வாழ்க்கையே மிகப் பெரிய சாதனைதானே?

இப்போது வாழ்க்கையே முற்றுப் பெறப் போவதுபோல் கேசவபிள்ளைக்குத் தோன்றியது. அந்த நிலைமையில், கடந்தகால நினைவுகள்

தெளிவாகவே தோன்றின. ஓம் சிவமயம் லட்சுமி ஓட்டல் சொந்தக் காரியான லட்சுமியம்மா அவர் மனக்கண் முன்னே தோன்றினாள். மெலிந்தவள், காச நோயாளி. வேலை தேடித் திருவனந்தபுரத்துக்கு வந்து அலைந்த சந்தர்ப்பத்தில் அந்த ஓட்டல்காரி செய்த உதவிகளை எண்ணிப் பார்த்தார். கையிலே காசில்லாததால் கடனுக உணவளிக்க வேண்டுமென்று கோரினாள் முதலில் முணுமுணுப்புடன் மறுத்து விடுவாள். அப்புறம் கூப்பிட்டு உட்காரவைத்து உணவைப் பரிமாறுவாள். பல தடவைகளில் இவ்வாறு நடைபெற்றிருக்கின்றன. கடனைத் திருப்பிக் கொடுக்கிற வேளையில் அந்த அம்மா நிறைந்த மனத்துடன் அளிக்கிற ஆசீர்வாதங்களைக் கேசவபிள்ளையால் என்றென்றும் மறக்க முடியாது. லட்சுமியம்மா அனைவருக்கும் இரவு உணவை அளித்து விட்டு ஓய்வெடுக்க அமர்ந்துவிட்டால் இருமி இருமித் துவண்டுபோகிற பரிதாபக் காட்சியை மனத்திலிருந்து அழித்துவிட முடியாது. நல்லது வரட்டுமென்று ஆசீர்வதிக்கிறபொழுது, நல்லது வரும் வேளையில் தன்னைக் கவனிக்க வேண்டுமென்று அவள் ஒருபோதும் சொன்னதில்லை.

நல்லகாலம் ஏற்பட்டதிலிருந்து இன்று வரையில் கேசவபிள்ளை லட்சுமியம்மாவைச் சென்று பார்த்ததே இல்லை. இப்போதுகூட அந்த ஓட்டல் அங்கே இருந்து வருகிறதென்றே தோன்றுகிறது. அங்கே ஒருமுறை சென்று அவ்வம்மையாரைப் பார்த்து வரலாமென்று கேசவபிள்ளைக்குத் தோன்றியதில்லை. அந்தப் பெண்மணியைப்பற்றி விசாரித்தறியக்கூட முற்படவில்லை. மனச்சாட்சிக்கு முன்னால் இந்த மறதியை நியாயப்படுத்த முடியுமா? அவள், அவருக்கு ஏற்பட்டு வந்த அதிருஷ்டங்களைப்பற்றி விசாரித்து அறிந்திருப்பாள். ஒரு போதாவது ஏதாவதொரு பிரச்னையாகத் தம்மை அணுகியிருக்கிறாளா? அவளுக்கு அத்தகைய பிரச்னை எதுவும் ஏற்படவில்லை என்றே தோன்றுகிறது. ஆனால் தமக்கு ஏற்பட்ட ஞாபகமறதி குறித்து முதல் முதலாகக் கேசவபிள்ளை மனம் வருந்தினார்.

அவருடைய சிந்தனை பல வருடங்கள் பின்னேக்கிச் சென்றது. மிகச் சாதாரணமான நிகழ்ச்சிகள்கூட அவர் நினைவுக்கு வந்தன. மிருகக் காட்சிச் சாலைக்கு மேற்கேயுள்ள சாலைக்குச் சுறுக்கே ஓடுகிற சிற்றோடைக்கு மேலே அமைத்திருந்த பாலத்துக்கு அருகிலுள்ள மண் குடிசையிலே அமர்ந்தவாறு தடித்த, கறுப்பு நிறமுள்ள அழகிய பெண் ஒருத்தி புத்தகத்தை வாசித்துக்கொண்டிருப்பாள். அவளுடைய கறுப்பு வதனத்திலே பூக்கிற புன்னகைக்குக் கவர்ச்சியான ஓர் ஒளி இருந்தது. அவளோடு தமக்கு ஏதோ ஒருவிதமான உறவு இருந்து வந்ததாகக் கேசவபிள்ளைக்குத் தோன்றியது. அவர் அந்தச் சாலை வழியாகப் போகும்போதெல்லாம் அவள் சிரிப்பாள், அவரும் சிரிப்பார். ஏதாவதொரு வார்த்தைபேசியிருந்தால், அது வாழ்க்கையிலேயே பல பிரச்னைகளை உருவாக்குகிற ஒன்றுகப் பரிணமித்திருக்கும். கேசவபிள்ளை வாய் திறந்து ஒரு வார்த்தை கூற அவள் காத்திருந்தாள். அவள் ஏதையோ சொல்லத் துடிப்பதாக அவருக்குத் தோன்றியதுண்டு. அந்தப்

பெண் இப்போது எங்கிருக்கிறாள்? அவளுடைய இப்போதைய நிலை என்னவாக இருக்கும்? காலத்தின் துரிதப் பாய்ச்சலிலே அவள் இப்போது கிழவியாக, பாட்டியாக மாறியிருப்பாள். ஆனால், அவள் கேசவபிள்ளை யின் மனக்கண்ணுக்கு முன்னால் இப்போதும் குமரிப் பெண்ணாகவே காட்சி தருகிறாள். அவளிடம் எந்தவிதமான மாறுதலும் ஏற்படவில்லை.

குறிப்பாக அவளையே நினைவுகூர்ந்து பார்க்க என்ன காரணமென்று கேசவபிள்ளை வியந்தார். அவருடைய வாழ்க்கையின் இந்தக் கட்டத்திலே அந்தப் பெண், நினைவிலே தெளிவாகத் தோன்றுகிறாள். கார்த்தியாயினி, தங்கம்மா ஆகியவர்களைத் தவிர, அவருடைய ஆத்மாவிலே மாயாத சித்திரத்தைத் தீட்டி வைத்திருப்பவள் இவளாகத்தான் இருப்பாளோ?

பார்க் வியூவின் படிவாசலிலே சீஃப் செக்ரடரி மேனனுடைய பார் வைக்குப் பாத்திரமாவதற்காகக் காவல் காத்து நின்ற நாட்கள் ஒவ்வொன்றுக் கேசவபிள்ளையின் நினைவிலே தெளிவாகக் காட்சி யளித்தன. போலீஸார் அவரை விரட்டியிருக்கிறார்கள்; அவர்களில் சிலர் அநுதாபத்துடன் பேசியிருக்கிறார்கள். அது ஒரு பெரிய அதிருஷ்ட மாகவே இருந்தது. அவ்வாறு காவல் காத்து நின்ற சந்தர்ப்பங்களில் இந்த நிலைக்கு வந்து விடுவோமென்ற எண்ணம் ஏற்படவில்லை என்பது ஒருபுறம் இருக்க, ஒரு வேலை கிடைத்து விடுமென்பதுகூடச் சந்தேகமா யிருந்தது. அன்றிருந்த வாழ்க்கை வசதிகளிலே அவர் மனநிறைவு பெற்றிருந்தார். அந்த விஷயத்தில் அவருக்குச் சந்தேகமே இருக்க வில்லை. மேனன் மிகவும் நல்லவராக இருந்தார்; அன்பு உள்ளம் படைத்தவராக இருந்தார்; மற்றவர்களுடைய துன்பங்களைப் புரிந்து கொள்ளும் தன்மையுடையவராக இருந்தார். யாருக்குமே தெரியாமல் அவர் பதவியிலிருந்து வீசியெறியப்பட்டார். யாராவது—ஏன்? கேசவ பிள்ளைகூட—அவருடைய அந்த வீழ்ச்சியிலே வியாகூலம் அடைந்த துண்டா?

கேசவபிள்ளையின் சிந்தனை இன்னொரு விஷயத்துக்குத் தாவிச் சென்றது. அவர் நீண்ட நாட்கள் வரையில் சீஃப் செக்ரடரியாகப் பணியாற்றியிருக் கிறார். இந்தக் கால கட்டத்தில் எந்த ஒரு நபருக்காவது ஒரு வேலை கொடுப்பதன் மூலமாகவோ, வேறு ஏதாவது வகையிலோ அவர் உதவி யிருக்கிறாரா? அவர் சீஃப் செக்ரடரியாகிவிட்ட பிறகு ஏதாவதொரு வேலை கிடைக்க வேண்டுமென்ற நோக்கோடு எத்தனையோ பேர்கள் இந்தப் படிவாசலிலே காவல் காத்து நின்றிருப்பார்கள். இல்லை, காத்து நின்றிருக்கத்தான் வேண்டும். ஆனால், அவர் பார்வையில் யாரும் தென்படவில்லை.

* * *

மறுநாள் காலையில் தூக்க மயக்கத்துடன்தான் கேசவபிள்ளை கண் விழித்தார். சிறிது நேரமாகி விட்டது. தொலைபேசி மணியடித்தது. அவர் ரிசீவரைக் கையிலெடுத்தார். தலைமைச் செயலகத்திலிருந்து

தான் அங்கே இரண்டு மனிதர்கள் இறந்து கிடக்கிறார்களாம்! தற்கொலை எனச் சந்தேகிக்கப் படுகிறது.

கேசவபிள்ளை அசைவற்று நின்றுவிட்டார். கோபாலன் நாயர் மரக் கிளையிலே தொங்கிக் கிடந்த காட்சிதான் முதலில் அவர் மனக் கண்முன்னே தோன்றியது. கருமம்! இன்றைக்குத்தான் அவர்கள் தற்கொலை செய்ய வேண்டுமா? கோபாலன் நாயரோடு இருந்து வந்தது போன்ற தொடர்பு ஏதாவதொரு முறையில் அவர்களோடுகூட இருந் திருக்குமோ? ஒன்றுமே நினைவுக்கு வருவதில்லை. நீண்டகால உத்தியோக வாழ்க்கையிலே ஏதாவதொரு வகையிலுள்ள தொடர்பு ஏற்பட்டிருக் கலாம். எத்தனையோ விண்ணப்பங்கள், மனுக்கள் அவர் கையிலே வந்து போயிருக்கின்றன! எத்தனை எத்தனை உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டிருக் கின்றன! நீதிக்கும், நியாயத்துக்கும், உண்மைக்கும் பொருந்தாத உத்தரவுகள் கூடப் பிறப்பிக்கப் பட்டிருக்கலாம். அத்தகைய உத்தரவு களால் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பார்களோ? அப்படித்தான் இருக்க வேண்டுமென்று கேசவபிள்ளைக்குத் தோன்றியது.

அரசாங்கத் தலைமைச் செயலகத்துக்குத் தலைமைச் செயலாளராகக் கடைசியாகச் செல்லும் நாள்தான் அன்று. திரும்பி வருவது சீஃப் செக்ரடரியாக அல்ல. அன்று சிறிது சீக்கிரமாகவே அவர் வீட்டிலிருந்து கிளம்பிச் சென்றார்.

செயலகத்தின் முன்னாலுள்ள புல் தரையின் மத்தியிலே ஒரு பெரிய கொடி மரம் உண்டு. அதன் அடியிலேதான் அவர்கள் இறந்து கிடந் தார்கள். ஏராளமான ஜனங்கள் குழுமியிருந்தார்கள். போலீஸ் விசாரணை நடைபெற்றது.

இறந்தவர்கள் யாரென விசாரித்தார் கேசவபிள்ளை. ஒரு போலீஸ் அதிகாரி விவரங்களைக் கூறினார். மீனச்சில்காரரான சங்கரப்பிள்ளை என்ற ஒருவர்; காங்கிரஸ்காரராக இருந்தவர். ஐந்து ஏக்கர் பூமி அவருக்குக் கிடைக்கவில்லை. அதை யாரெல்லாமோ சேர்ந்து அபகரித்து விட்டார்களாம்! தலைமைச் செயலக வாசலிலே சத்தியாக்கிரகம் இருந்திருக்கிறாராம்!

இன்னொருவர் ஆலப்புழையைச் சேர்ந்த கிருஷ்ணன் என்ற ஒருவர். அவருடைய மகன் புன்னப்பரா துப்பாக்கிச் சூட்டிலே இறந்துவிட்ட னாம்! கொஞ்சம் பணம் கிடைக்க வேண்டியிருந்ததாம். அவருடைய மகள் திருமணமாகாமலே கர்ப்பிணியாகி விட்டாளாம்!

போலீஸ் அதிகாரி சொல்லி முடித்தார்: ''இருவரும் கடிதம் எழுதி வைத்திருக்கிறார்கள்.''

கேசவபிள்ளை அவ்விடத்தை நோக்கி நடந்தார். ஜனங்கள் விலகி நின்றனர். காற்றிலே பறக்கின்ற பெரிய தேசீயக் கொடியின் நிழல் அந்தப் பிணங்கள் மீது விழுந்து கொண்டிருந்தது.

கேசவபிள்ளை நடுக்கத்துடன் நினைத்துப் பார்த்தார்.

''ஊட்டிக் காட்டு மலைத் தேயிலைத் தோட்டம்!''

தலைமீது ஓர் அடி விழுந்ததுபோல் அவருக்குத் தோன்றியது.

* * *

கேசவபிள்ளை தம்மைப்பற்றியே சற்று விமர்சன ரீதியாக யோசித்துப் பார்த்தார். மற்றவர்களுக்கு உதவி ஏதும் செய்யவில்லை என்பது ஒருபுறம் இருக்கட்டும்; தமக்கு உதவி செய்தவர்களை நினைத்துப் பார்த்திருக்கிறாரா? மேனனின் கதி என்னவாயிற்றென்று விசாரித்தறிய முயற்சி செய்யவில்லை. கிருஷ்ணன் நாயரைப் பிறகு சந்திக்க முற்படவேயில்லை. அது சரிதானே? ஆனால், கேசவபிள்ளைக்குத் தம்மிடமே சொல்ல ஒரு பதில் இருந்தது. மேனன் அவர்களுக்கோ, கிருஷ்ணன் நாயருக்கோ ஏதாவதொரு தேவை இருந்திருக்குமானால், நிச்சயமாக அவர் அதை நிறைவேற்றிக் கொடுத்திருப்பார். அத்தகைய தேவை ஏதும் அவர்களுக்கு இருந்ததில்லை. அவர்களுக்காக எதையும் செய்யவில்லைதான். ஆயினும் அவர்களைச் சென்று பாராமல் இருந்தது சரியில்லை என்று அவருடைய அந்தரங்கம் சொல்லியது. சிறிது மன வேதனையும் அவருக்கு உண்டாயிற்று. அவர்கள் இருவரும் இறந்து மண்ணோடு சேர்ந்து விட்டனர்.

விலகிச் செல்லச் சொல்லி அவருக்கு அனுப்பி வைத்த உத்தரவு, கார்த்தியாயினியைப் பொறுத்தவரையில் ஒரே ஒரு பிரச்னையை மட்டுந்தான் கிளப்பிவிட்டிருந்தது. அவள் அந்தப் பிரச்னையைக் கிளப்பவும் செய்தாள்:

''இன்னமும் திருவனந்தபுரத்திலேதான் தங்கியிருக்க உத்தேசமா?''

''திருவனந்தபுரத்தை நீ ஏன் வெறுக்கிறாய்?'' கேசவபிள்ளை மறுகேள்வி கேட்டார். அவர் சொன்னார்: ''நமக்கு இன்றுள்ள எல்லாச் சொத்துச் சுகங்களும் கிடைத்திருப்பது இங்கிருந்துதான்.''

அவர் மீண்டும் கூறினார்: ''பென்ஷன் பெற்றுக்கொண்டு உயிரிழந்து வாழ நான் விரும்பவில்லை. இன்னும் சில காரியங்கள் செய்ய வேண்டியிருக்கின்றன.''

உறுதியான நிர்மானத்துடன்தான் அவர் அவ்வாறு சொன்னார். கார்த்தியாயினி அதைப் புரிந்துகொண்டாள். அவள் யோசிப்பதென்ன என்பதை அவர் அறிவார்.

அவள் தன்னை மறந்த நிலையில் கேட்டாள்: ''அவள் மீண்டும் உங்களைக் கைக்குள்ளே போட்டுவிட்டாளே?''

கேசவபிள்ளை உண்மையிலேயே நடுங்கிவிட்டார். அந்தக் கேள்வி அவருடைய இதயத்திலே, மூளையிலே எங்கெல்லாமோ சென்று துளைத்து நின்றது. கார்த்தியாயினி அதெல்லாம் அறிந்திருக்கிறாளா? அவள் நேரடியாகக் கேட்கிறாளே!

''அன்னைக்கு நீங்க என்கிட்டே எல்லாவற்றையும் ஒளிக்காமே மறைக்காமே சொன்னீங்க. எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டேன்.

இனிமே அப்படியெல்லாம் நடக்காதுன்னு நம்பினேன். அப்புறம் நாம்ப எவ்வளவு சந்தோஷமா வாழ்ந்து வந்தோம். அந்தச் சந்தோஷமும் சுகமும் எல்லாம் போச்சே! கொஞ்சம் நெனைச்சுப் பாருங்க!''

அந்த உண்மையை மறுக்க முடியாது. அந்தக் குடும்பத்தில் நிலவி வந்த மகிழ்ச்சி எல்லாம் காற்றிலே பறந்துவிட்டது. பென்ஷன் பெற்று வந்தபோது ஒளியிழந்து நின்ற ஒரு குடும்பந்தான் அவரை வர வேற்றது. ஆனால் ஒரு விஷயம் மட்டும் உண்மை. அந்த இதயத்திலே தங்கம்மா இல்லே. தங்கம்மாவுக்கு அங்கே இடமுமில்லே. ஆனால் பலவீன மடைந்துவிட்ட ஒரு தேவதை அங்கே இடத்தைப் பிடித்திருக்கிறாள். கார்த்தியாயினி அம்மா! அந்தத் தேவியின் சக்தி எப்படித் தேய்ந்து விட்டது?

அவள் கணவர் முகத்திலேயே பார்வையைச் செலுத்தியவாறு கூறினாள்: ''ஒண்ணுமே மறைக்காமே என்கிட்டே எல்லாவற்றையும் சொல்லிடுங்க! நான் எதையும் தாங்கிக்கொள்வேன். மறக்கவும் பொறுத்துக்கொள்ளவும் என்னாலே முடியும். அவளே நீங்க மீண்டும் சந்திச்சீங்களா? உண்மையைச் சொல்லிடுங்க!''

எல்லாவற்றையும் திறந்து சொல்லவேண்டுமென்ற ஓர் உத்வேகம் அவருக்குத் திடீரெனத் தோன்றியது. ஆனால் தோன்றியதுபோலவே அது திடீரென அடங்கிவிட்டது. அடுத்த விநாடியிலே ஆத்திரம் மேலிட்டவ ராக, இல்லாததெல்லாம் சொல்லுகிறாளென்று கார்த்தியாயினியைத் திட்டி அதட்டவேண்டுமெனத் தோன்றியது. ஆனால் கேசவபிள்ளை தவறு இழைத்தவர். அவருக்கு அதற்குத் தைரியம் இல்லே. நடந்ததை மனம் திறந்து சொல்லவேண்டுமென்று மீண்டும் உள்ளத்திலிருந்து யாரோ உபதேசம் செய்தார். அந்த உபதேசத்துக்கு உறுதியுள்ள நியாயங் களும் உண்டு. மகிழ்ச்சி நிலவுகிற ஒரு குடும்பத்தைத் திரும்பவும் பெற முடியும். கார்த்தியாயினியம்மா மன்னிப்பாள். சகித்துக்கொள்ளவும், பொறுத்துக்கொள்ளவும் அவளாலே முடியும்.

ஏன் உள்ளம் திறந்து சொல்லக்கூடாது? ஏற்பட்டது ஒரு பலவீனந் தான். அதனால்தான் அவ்வாறு நிகழ்ந்தது. கார்த்தியாயினிமீதுள்ள நேசத்தினாலேயே தங்கம்மாவைத் தள்ளிவிட்டிருக்கிறார். தவற்றை ஒப்புக் கொள்ளவும், ஆறுதலடையவும் வேறு எந்த இடம் இருக்கிறது? கேசவ பிள்ளை இன்னமும் சபதம் எடுக்கத் தயாராகத்தான் நின்றார். இனிமேல் எந்நாளும் அவர் அந்தச் சபதத்தை மீறவும் மாட்டார். ஆனால், அந்தத் தவற்றை எடுத்துச் சொல்ல அவரால் முடியவில்லே. வாழ்நாள் முழுவதி லுமே அவள் பால் தவறிழைத்து வந்தவர்தான் அவர்.

அவர் சொன்னார்: ''நீ அழாமல் இருப்பதாயிருந்தால் நான் சொல் லறேன். நீ நினைப்பதுபோல் ஒன்றுமில்லே. ஆனாலும் நான் சொல் லிடறேன்.''

கார்த்தியாயினியம்மா கேசவபிள்ளையோடு சேர்ந்து நின்றாள். அவ ருடைய தோள்மீது கைபோட்டாள்.

''இல்லே, நான் அழமாட்டேன்! கவலேப்படமாட்டேன், குறைகூற மாட்டேன்.''

அவள் அவ்வாறு சொன்னலும் கண்களில் நீர் நிறைந்திருந்தது.

''உன் கண்ணில் நீர் வழிகிறதே! நீ அழப் போகிறாய்.''

கார்த்தியாயினியம்மா புன்னகையுடன் மேல் வேஷ்டியால் கண்களேத் துடைத்து விட்டுக் கூறினுள்: ''இல்லே, இல்லே! நான் அழறதில்லே.'' சிரத்தை உயர்த்திக் கணவரின் முகத்தைப் பார்த்தவாறு கூறினுள்: ''சொல்லுங்களேன்!''

இரு வதனங்கள் ஒரு முத்தத்திலே ஒன்றிணேந்தன. ஒருவேளே அவளுக்கு அது தேவையாக இருந்திருக்கலாம்.

அவள், அவர் சொல்வதைக் கேட்கத் தயாராக நின்றுள். அவர் சொல்லட்டும்! ஆனல், எங்ஙனம் சொல்வது, எப்படித் துவக்குவது என்று அவருக்கு விளங்கவில்லே. சிறிது நேரம் வரையில் அவர்கள் அவ்வாறே நின்றுவிட்டார்கள்.

அந்தச் சமயத்தில் எங்கிருந்தோ தோன்றினுள் ஒரு பெண். வெள்ளேத் துணியினுல் பொதிந்த ஒரு குழந்தையை அவள் தன் மார்புடன் சேர்த்துப் பிடித்திருந்தாள். சாவித்திரிதான் அவள். கேசவபிள்ளேயும் கார்த்தியாயினியம்மாவும் திடீரெனச் சற்று விலகி நின்றனர்.

சாவித்திரி, கேசவபிள்ளேயின் பாதங்களிலே அந்தச் சிறிய சுமையை இறக்கி வைத்தாள்.

அது ஓர் ஆண் குழந்தை. பிரசவமாகி ஒரு நாள்கூட ஆகவில்லே. அந்தக் குழந்தை அழத் தொடங்கியது.

கேசவபிள்ளே வாய் திறக்காமல் நின்றார். ஆனல் அவர் எல்லாவற்றையும் புரிந்துகொண்டார்போல் தோன்றியது. கார்த்தியாயினியம்மா அசைவின்றியே நின்றுள்.

சாவித்திரி சொன்னுள்: ''ஜோதிர்மயீதேவி பெற்ற குழந்தை இது. இங்கே கொண்டு வந்து தரச் சொல்லி அந்தப் பொறுப்பை என்கிட்டே ஒப்படைச்சாங்க. பிரசவமான உடனே அம்மா குழந்தையை ஒரு தடவை பார்த்தாங்க. அப்பவே செத்துப் போயிட்டாங்க.''

அப்போது விஜயா அங்கே வந்து சேர்ந்தாள். ஒருவேளே குழந்தையின் அழுகைக் குரலேக் கேட்டு வந்ததாக இருக்கலாம். கேசவபிள்ளேயின் நிலேமை பரிதாபத்துக்கு உரியதாகிவிட்டது. அவர் மனேவியின் முகத்தைப் பார்த்தார். அவர் இழைத்த அத்தனே தவறுகளேயும் மனேவியிடம் மனம் திறந்து சொல்வதுபோல் இருந்தது அந்தப் பார்வை.

அவர், வாய் திறக்காமலேயே அந்தப் பார்வை வழியாக மனேவியிடம் ஒரு வேண்டுகோளே விடுத்தார். என்ன? அந்தக் குழந்தையை ஏற்றுக் கொள்! ஆனல், கார்த்தியாயினியம்மா ஒரு கற்சிலேபோல் நின்றுகொண்டிருந்தாள்.

'அந்தக் குழந்தையை எடுத்துக்கொள்!' என்று அதிகாரத்துடன் அவர் சொல்ல வேண்டுமா?

சிறுது நேரம் கழிந்தது. அந்தப் பச்சிளம் குழந்தை அழுதுகொண் டிருந்தது. விஜயா, எல்லாவற்றையும் அறிந்துகொண்டவள்போல், யாரிடமும் கேட்காமல் அந்தக் குழந்தையை அள்ளியெடுத்து மார்போடு அணைத்துக்கொண்டாள். குழந்தையின் அழுகை நின்றுவிட்டது.

சாவித்திரியிடம் பல விஷயங்களைக் கேட்டறிய விரும்பினர் கேசவ பிள்ளை. ஆனல் இதனிடையில் அவள் போய் மறைந்தாள்.

உத்தியோக வாழ்க்கையிலே புகுந்துவிட்ட நாள்போலவே பிரிந்து சென்ற நாளும் வாழ்நாளிலே மிக முக்கியமானது. கேசவபிள்ளை பதவியைவிட்டு விலகிச் சென்றது தலைமைச் செயலகத்திலே முக்கியமான தொரு நிகழ்ச்சியாகத்தான் இருந்தது. அவர் பதவியிலிருந்த வருடங்கள் எத்தனை! ஆனல், இதயம் திறந்து விடை பெற்றுக்கொள் வதற்காக எந்த ஒரு மனிதனும் அவருக்கு அங்கில்லை. அவர் யாரிடமும் நெருங்கிப் பழகியதில்லை. யாருமே அவரிடமும் நெருங்கிப் பழகியதில்லை. ஆனல், அவர் முதல்வரிடம் சிரித்தவாறு கூறினர்:

''ஒருவேளை நான் இங்கே மீண்டும் வந்து சேர்ந்திடலாம்.''

இவ்வாருகக் கேசவபிள்ளையின் உத்தியோக வாழ்க்கை திட்டவட்ட மாக முற்றுப் பெற்றது.

எதை அடைந்தார்? எதை இழந்தார்? தமக்கு மிகப் பெரிய அநியாயம் இழைக்கப்பட்டிருக்கிறதென்ற எண்ணத்துடன்தான் அவர் அரசாங்கத் தலைமைச் செயலகத்திலிருந்து வெளியே வந்தார்.

பார்க் விழுவிலிருந்து அவர் வெளியேறுகிறார். தங்கம்மா இறந்து விட்டாள் என்றலும் கார்த்தியாயினியம்மாவுக்குத் திருவனந்தபுரத்திலே தங்கியிருக்கப் பிரியம் இல்லை. ஊருக்கே திரும்பிவிடுவதென்று தீர்மான மாயிற்று.

விஜயா, அந்தப் பச்சிளம் குழந்தையை மார்போடு அணைத்துப் பிடித்தவாறு பார்க் விழுவின் பெரிய படிவாசல் வழியாக வெளியே வந்தாள். அவளைப் பின்தொடர்ந்து கார்த்தியாயினியம்மா வந்தாள். அவளுடைய முகத்திலே மிகப் பெரிய ஆறுதலின் அறிகுறி தென்பட்டது. கேசவபிள்ளை திரும்பி நின்றவாறு அந்தப் பெரிய மாளிகையை ஒருமுறை நோக்கினர். அவருடைய கண்கள் நனைந்துவிட்டனபோல் தோன்றின.

கார் அந்தக் குடும்பத்துடன் திருவனந்தபுரத்தை விட்டுக் கிளம்பிச் சென்றது.